# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-EIGHTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXIX (Nos. 1 to 5)

*21st to 25th July 1980.*

©

GOVERNMENT OF TAMIL NADU
1981

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

Price Rupee 1

D.
V211,32.N80
N81.169;2
121977

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

FIFTY-EIGHTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXIX (Nos. 1 to 5).

*21st to 25th July* 1980.

## TABLE OF CONTENTS

*Monday, 21st July* 1980.

| | PAGES. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu | i–v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council | vi |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies | vii–x |
| 1. Questions and Answers | 1–9 |
| 2. Announcements— | |
| (1) Despatch of Answers from Departments to Questions ... ... ... ... ... | 9–10 |
| (2) Decision of the Business Advisory Committee | 10–20 |
| 3. Adjournment motion *re*— | |
| Closure of the Annamalai University consequent on the boycott of Examinations by the University Teachers ... ... ... ... | 10–19 |
| 4. Call Attention Notice— | |
| Death of some children in South Arcot district due to Brain fever ... .. ... ... ... | 20–22 |
| 5. Government Motion— | |
| Discussion on the Policy Note on Education ... | 22–91 |
| 6. Papers laid on the table of the House ... | 91–95 |

PAGES.

*Tuesday, 22nd July 1980.*


1. Questions and Answers ... ... ... 183–185
2. Call Attention Notices—
   (1) Damage to huts o Cauvery river banks due to overflow from Mettur Dam ... ... ... 186–187
   (2) Separation of teacher-couples due to compulsory service as Warden for 3 years by Selection Grade Teachers in the Harijan Welfare Department Schools ... ... ... ... 187–188
3. Discussion on the Policy Note on Education—*cont.* ... ... ... ... ... 188–281
4. Papers laid on the table of the House ... 281–285


*Wednesday, 23rd July 1980.*


1. Questions and Answers ... ... ... ... 287–288
2. Announcement *re* Message from the Assembly ... 288
3. Call Attention Notices—
   (1) Reversion of Gazetted Headmasters posted as Headmasters of Government Higher Secondary Schools in July 1978 ... ... ... ... 289–290
   (2) Spread of "Parthenium" weed, causing skin diseases in many places in Madurai district ... 291–292
4. Government Bills—
   (1) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1980 (L.A. Bill No. 19 of 1980) ... ... 292–298
   (2) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 (L.A. Bill No. 20 of 1980) ... ... ... ... 298–334
   (3) The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 (L.A. Bill No. 17 of 1980) ... ... ... ... ... 335–355




PAGES.

*Wednesday, 23rd Juy 1980—cont*


5. Government Motion—
   Discussion on the Policy Note on Medical and Public Health ... ... ... 355–443
6. Papers laid on the table of the House ... 443


*Thursday, 24th July 1980.*


1. Questions and Answers ... ... ... .. 585–587
2. Adjournment motion *re* strike in, and indefinate closure of, Theagarrjar Engineering College at Madurai ... ... ... ... ... ... 587–590
3. Call Attention Notices—
   (1) Death of 5 members of a family in Veerappanpalayam near Erode–by setting to their dwelling house after locking it from outside ... ... ... ... ... 591–592
   (2) Removal of Instructors of bifurcated course in T. A. Ramalingam High School, Coimbatore 591–592
4. Government Motions—
   (1) Election of nine Members to the Committee of Privileges ... ... ... ... ... 592–593
   (2) Election of six Members to the House Committee ... ... ... ... ... 593–594
   (3) Discussion on the Policy Note on Food situation in Tamil Nadu ... ... ... ... 595–660
5. Papers laid on the table of the House ... 660–661


*Friday, 25th July 1980.*


1. Questions and Answers ... ... ... 695–702
2. Announcement *re* Answers to Council Questions 703
3. Information *re* Bus transport facilities from Legislators' Hostel ... [illegible]

PAGES

*Friday 25th July 1980*—cont.

4. Call Attention Notice—
Non-regularisation of services of Casual labourers working in the Government Hospital at Royapettah for the last 5 years and non-payment of wages for the last 4 months ... 706-707

5. Government Motion—
Discussion on the Policy Note on labour and Handlooms ... ... ... ... 708-772

6. Papers laid on the table of the House ... ... 773

Index ... ... ... ... ... 929-961

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU.

THIRU PRABHUDAS PATWARI.

### Members of the Council of Ministers.

1. The Honourable Thiru M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating to Public Works Department.

2. The Honourable Thiru V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Finance, Planning, Legislature, Election, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. The Honourable Thiru S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The Honourable Thiru K. A. KRISHNASAMY, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. The Honourable Thiru S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. The Honourable Thiru R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor

7. The Honourable Thiru C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education and Official Language.

8. The Honourable Thiru K. KALIMUTHU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. The Honourable Thiru C. PONNAIYAN, Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. The Honourable Thiru P. KOLANDAIVELU, Minister in-charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. The Honourable Thiru S. RAGAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The Honourable Dr. H. V. HANDE, Minister in-charge of Health.

13. The Honourable Thiru K. RAJAMOHAMED, Minister in-charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. The Honourable Thiru S. MUTHUSAMY, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. The Honourable Thiru S. THIRUNAVUKKARASU, Minister in-charge of Large Scale Industries, Mines, Textiles and Minerals.



16. The Honourable Thiru S. N. RAJENDRAN, Minister in-charge of Handlooms, Khadi, Prohibition excluding Grant of Liquor Permits and Passports.

17. The Honourable Thiru M. VIJAYASARATHI, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. The Honourable Thirumathi GOMATHI SRINIVASAN, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

**தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.**

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதல் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப் பணித் துறை மற்றும் பொதுப் பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, திட்டம், சட்ட மன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

கிராம, குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத்தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம் மற்றும் ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம் அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. கி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றிய சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம் மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும் மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. செ. நி. இராசேந்திரன் (கைத்தறி மற்றும் கதர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கைத்தறி, கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத்

18. மாண்புமிகு திருமதி கோமதி சினிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள்நலம் உள்ளிட்ட சமூகநலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

---

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**

டாக்டர் ம.பொ. சிவஞானம்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. புலவர் புலமைப்பித்தன்
2. திரு. சோ. ஆறுமுகம்.
3. திரு. பா. ரா. தாமஸ்.
4. திருமதி தாரா செரியன்.

**மேலவைச் செயலாளர்**

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

**சார்புச் செயலாளர்**

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

**விவாதப் பதிப்பாளர்**

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

**தலைமை நிருபர்**

திரு. ச. சுவாமிநாதன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அருணாசலம், திரு. கே. . . | நியமனம். |
| 2 | ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 | ஆறுமுகம், திரு. சோ. . . | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 | ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 | இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டன்றப் பேரவை. |
| 6 | இராசா முகமது, திரு. கா. (பாசனத்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 | இராதா, திரு. எஸ்.ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 | இராமமூர்த்தி, திரு. க. . . | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 | திரு. காடுவெட்டிகண்ணப்பன் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 | சங்கரலிங்கம் திரு. ம. எம்.ஏ. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 11 | சந்தோஷம், திரு. த. எம்.ஏ., பி.எல். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 12 | சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 13 | சிவஞானம், டாக்டர் ம.பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 14 | சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 15 | சித்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 16 | சுவாமிநாதன், திரு. ஜி. பி. பார்ம். | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 17 | தாமஸ், திரு. பா.ரா. | மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 18 | தாமோதரன், திரு. ஏ.ஆர். பி.எஸ்.ஸி. (ஹானர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 19 | தாரா செரியன், திருமதி | நியமனம். |
| 20 | தாஸ், திரு. ஏ.ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 21 துரைசாமி, திரு. ஓ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 22 நல்லசிவன், திரு. ஆ. .. | ஷை |
| 23 நீலநாராயணன், திரு. .. | ஷை |
| 24 ஜேப்பியார், திரு. .. | ஷை |
| 25 புலவர் புலமைப்பித்தன் | நியமனம் |
| 26 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி திருமதி. | நியமனம். |
| 27 மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 28 மியாகான், திரு. ஜே.எம். | ஷை |
| 29 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் - திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 30 முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 31 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |
| 32 முத்தையா செட்டியார், டாக்டர் ராஜா சர். எம்.ஏ. | நியமனம். |
| 33 முனுசாமி, திரு. பி. .. | ஷை |
| 34 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 35 லீலாவதி, செல்வி. எ. | சென்னை-செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வடஆற்காடு-தென்ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 வசந்த பை, திரு. ஜி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி |
| 38 வள்ளிமுத்து, திரு. .ஈவி.ஏ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 39 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்). | ஷை |



| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 40 வெங்கடேசன், திரு. ஈ.எஸ். | நியமனம். |
| 41 ஹண்டே, டாக்டர், எச்.வி. (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்). | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 42 வெற்றிடம் .. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 43 ஷை .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 ஷை .. | ஷை |
| 45 ஷை .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 ஷை .. | ஷை |
| 47 ஷை .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 ஷை .. | ஷை |
| 49 ஷை .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 ஷை .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 ஷை .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 ஷை .. | ஷை |
| 53 ஷை .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 ஷை .. | ஷை |
| 55 ஷை .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 ஷை .. | ஷை |
| 57 ஷை .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 ஷை .. | ஷை |
| 59 ஷை .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 ஷை .. | ஷை |
| 61 ஷை .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 ஷை .. | ஷை |
| 63 ஷை | |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

**திங்கட்கிழமை, 1980 ஜூலை 21.**

சென்னை. செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்–விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Levy Sugar for Pharmaceuctical Industry.*

* 1. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether it is a fact that the Pharmaceutical Manufacturers Association of Tamil Nadu has submitted a representation during the month of February, 1980, to the Government, regarding allotment of levy sugar for the Pharmaceutical industry; and

(*b*) if so, the action taken on this matter?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.*

*(இ) இக்கோரிக்கையை மைய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்தது. ஆனால் இதுவரை இப்பரிந்துரை மைய அரசால் ஏற்கப்படவில்லை.*

*திரு. ஜி. சுவாமிநாதன் : இக்கோரிக்கை மைய அரசினால் ஏற்கப்படாத காரணத்தால், மாநில அரசு அது குறித்து என்ன செய்வதாக உத்தேசித்துள்ளது ?*

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 16—8—1978 தேதி முதல் சர்க்கரை மீதான எல்லாக் கட்டுப்பாட்டையும் மைய அரசு நீக்கியபோது, மருந்து தயாரிக்கும் தொழிலுக்கு மாதம் ஒன்றுக்கு 195 மெட்ரிக் டன் லெவி*

சர்க்கரையை மாநில அரசின் மூலம் மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது.
இதன் காரணமாக மாநிலத்தில் மருந்து தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டோரின்
தேவை இந்த ஒதுக்கீட்டிலிருந்து நிறைவு செய்யப்பட்டது. ஆனால்
17—12—1978 நாளிலிருந்து மைய அரசு சர்க்கரை மீதான கட்டுப்பாட்டை
மீண்டும் அமுலுக்குக் கொண்டுவந்தபோது, பொது விநியோகத்திற்கான
சர்க்கரையை மட்டுமே மைய அரசு மாநில அரசுக்கு ஒதுக்கித் தந்தது. மருந்து
தயாரிப்பாளர்களுக்கான தேவையின் அடிப்படையில் தனியாக ஒதுக்கீடு
ஏதும் மைய அரசால் செய்யப்படவில்லை. அதனால் மருந்து தயாரிப்போர்
களுக்குத் தனியாக, எப்போதும்போல் ஒதுக்கீடு செய்து தரப்பட வேண்டும்
என்று மாநில அரசு மைய அரசுக்குப் பரிந்துரை செய்தது. ஆனால் மைய
அரசு இக்கோரிக்கையை மைய அரசின் ரசாயனம் மற்றும் உரம் அமைச்சகம்
பரிந்துரை செய்தால், இது குறித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னது.
இதனடிப்படையில் தமிழக அரசு மத்திய அரசின் ரசாயனம் மற்றும் உரம்
அமைச்சகத்திற்கு மருந்து தயாரிப்பாளர்களுக்குத் தனியாக ஒதுக்கீடு செய்து
தரவேண்டும் என்று சென்ற மார்ச் திங்களில் பரிந்துரை செய்தது. அது
குறித்து இதுவரையில் எந்தப் பதிலும் பெறப்படவில்லை. இதற்கிடையில்
வெளி மார்க்கெட்டில் கிடைக்கிற சர்க்கரையிலிருந்து ஓரளவுக்காவது மருந்து
தயாரிப்பாளர்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க ஆவன செய்ய வேண்டு
மென்று மாநில அரசு கருதி, தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்
மூலம் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 5 என்ற விலையில் சர்க்கரை கொடுக்க
ஏற்பாடு செய்யப்பட்டு அந்த விலையில் அவர்களுக்குச் சர்க்கரை விற்கப்பட்டு
வருகிறது. இந்த அளவுக்குத்தான் மாநில அரசால் அவர்களுக்குச் சர்க்கரை
கொடுக்க முடிகிறதே தவிர, லெவி சர்க்கரையின் விலைக்குச் சர்க்கரையைக்
கொடுக்க முடியவில்லை. லெவி சர்க்கரை விலை அளவுக்குக் கொடுக்க வேண்டு
மென்றால், மத்திய அரசின் அனுமதியுடன் அவர்களிடமிருந்து இதற்காக
ஒதுக்கீடு வந்தால்தான், அதைச் செய்ய இயலும். இப்போது நம்மால்
முடிந்தது இதுதான். மாநிலத்தில் வெளி மார்க்கெட்டில் விற்கும் சர்க்கரை
யின் விலையோடு அரசு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் மருந்து
தயாரிப்பாளர்களுக்குக் கொடுக்கும் சர்க்கரையின் விலையை ஒப்பிட்டுப்
பார்த்தால், இது மிகவும் குறைவு. அதாவது கிலோ ரூபாய் 5 என்ற
அளவுக்கு சர்க்கரை விலை இருப்பது மிகவும் குறைவு. தற்போது நமக்குக்
கொடுக்கப்படும் ஒதுக்கீட்டில் இந்த அளவுக்குத்தான் நம்மால் செய்ய
முடிகிறது. ஆனால் மத்திய அரசு இக்கோரிக்கைக்கு இணங்கி வந்தால்,
முன்புபோல் லெவி சர்க்கரையை மருந்து தயாரிப்பாளர்களுக்கு ஒதுக்கீடு
செய்து தர முடியும்.



திரு. ஜி. சுவாமிநாதன் : மத்திய அரசிலிருந்து பொது விநியோகத்திற்கான சர்க்கரை எவ்வளவு பெறப்படுகிறது ? அவ்வாறு பெறப்படும் சர்க்கரையில் மருந்து தயாரிப்பாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சர்க்கரையின் அளவு எவ்வளவு என்பதை அரசு அறியுமா ? அவர்களின் தேவை குறைவாக இருந்தால், அந்த அளவுக்குச் சர்க்கரையை அரசே லெவி சர்க்கரையின் விலையில் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழு விவரம் என்னிடம் இல்லை. ஏற்கெனவே மருந்து தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு 195 மெட்ரிக் டன் அளிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசிடமிருந்து சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட்டது. மருந்து தயாரிப்பவர்களின் முழுமையான தேவை எத்தனை டன் சர்க்கரை என்பது பற்றிய புள்ளி விவரம் என்னிடம் இல்லை. அதுபற்றிய சரியான கணக்கு என்னிடமில்லாத காரணத்தால், இதுகுறித்துத் தனிக் கேள்வி கேட்டால், பதில் அளிக்க இயலும்.

திரு. க. இராமமூர்த்தி : இதே காரணத்திற்காக மத்திய அரசு மற்ற மாநிலங்களுக்கு எந்த அளவுக்கு லெவி சர்க்கரையை ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை மாநில அரசு அறியுமா ? அதோடு, இவ்வாறு ஒதுக்கப்படும் லெவி சர்க்கரை, எத்தகைய மருந்துகளைத் தயாரிக்க அதிகமாகத் தேவைப்படுகிறது என்பதையும் மாநில அரசு அறியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மருந்து தயாரிப்பாளர்களுக்கு என்று தனியாக மத்திய அரசு மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்திருக்குமானால், அந்தக் காரணத்தைக் காட்டியே நமது மாநில அரசும் அதனடிப்படையில் நமது மாநிலத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று கேட்டிருக்க முடியும். முதலில் மத்திய அரசில் அப்படித் தனியாக ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால் மீண்டும் சர்க்கரை மீது கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தபோது, பொது விநியோகத்திற்கு மட்டும் தேவையான வகையில் சர்க்கரையை ஒதுக்கீடு செய்தார்களே தவிர, தனியாக மருந்து தயாரிப்பாளர்களுக்கு என்று ஒதுக்கீடு எதையும் செய்யவில்லை. இதனால்தான் நாம் மீண்டும் மத்திய அரசை இதற்காகத் தனி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டு எழுதினோம். அவர்கள் இதனை மத்திய அரசின் ரசாயன மற்றும் உரம் அமைச்சகத்தின் துறைக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். அதனடிப்படையில் கடந்த மார்ச் திங்களில் நாம் அந்தத் துறையை

அனுப்பினோம். அவர்களிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை. பதில் வந்தால் நாம் நடவடிக்கை எடுக்க முடியும். தற்போது மாநில நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் ஒரு கிலோ சர்க்கரை ரூபாய் 5 என்ற விலையில் இவர்களுக்குத் தரப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மத்திய அரசைப் பொறுத்தவரையில், எந்த மாநிலத்திற்கும் இந்தக் காரணத்திற்காகத் தனியாக லெவி சர்க்கரை கொடுப்பதில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். முதலில் ஒரு மூட்டை சர்க்கரையின் விலை ரூபாய் 210 என்ற அளவுக்கு விலைக் கட்டுப்பாடு வைத்திருந்தார்கள். அந்த விலையில்தான் ஆரம்பத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இப்போது ஒரு மூட்டை சர்க்கரை வெளி மார்க்கெட்டில் ரூபாய் 710 அளவுக்கு விற்கிறது. இன்னும் இரண்டு மாதங்களில் ரூபாய் 800 என்ற அளவுக்கு உயர்ந்துவிடும் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமை வருமானால், சாதாரண சிறு தொழில் வைத்திருப்பவர்களும்கூட மாதத்திற்கு ரூபாய் 5,000 முதல் 7,000 வரை அதிகமாகச் சர்க்கரைக்கு மட்டும் செலவு செய்ய வேண்டியிருக்கும். இதன் காரணமாக பல தொழில்கள் நடைபெற முடியாமற்போய் மூடப்பட வேண்டிய நிலைமைகூட வரும் என்று ஐயப்படுகிறார்கள் என்பதை அரசு அறியுமா? மருந்து தயாரிப்பாளர்களுக்கு லெவி சர்க்கரையில் கிட்டத்தட்ட 2,000 மூட்டை சர்க்கரை தேவைப்படுகிறது. அரசுக்கு தற்போது 1,20,000 மூட்டை சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனவே மாநில அரசு இந்தக் குறைந்தபட்சத் தேவையான 2,000 மூட்டை சர்க்கரையை லெவி விலையில் கொடுக்க முன்வருமா? அவ்வாறு இல்லாவிட்டாலும் தற்போது ஒரு கிலோ சர்க்கரை ரூபாய் 5 என்ற விலையில் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்த சர்க்கரையேகூட மருந்து தயாரிப்பாளர்களின் தேவை எவ்வளவோ அந்த அளவுக்குக் கொடுக்கப்படுவதில்லை. 25 மூட்டை தேவை என்றால் 5 மூட்டை அளவிற்குத்தான் கொடுக்கிறார்கள். எனவே, அவர்களுக்குத் தேவையான முழு அளவு சர்க்கரையையும் கிலோ ரூபாய் 5 என்ற விலையில் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மற்றவர்களும் இந்தப் பிரச்சினையை இந்த அளவுக்கு வலியுறுத்திச் சொன்னதால், இவைகளையெல்லாம் சேர்த்து பரிந்துரைக்காக இந்த அரசு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க முயலும்.



மருந்து தயாரிப்பாளர்களுக்குத் தேவைப்படும் அளவில் ஓரளவுக்குத்தான் ஒரு கிலோ சர்க்கரை ரூபாய் 5 என்ற விலையில் கொடுக்க முடிகிறது என்பதிலிருந்தே இதில் எவ்வளவு நெருக்கடி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள் என்று நம்புகிறேன். அவர்களுக்குத் தேவைப்படும் அளவு முழுவதையும்கூட ஒரு கிலோ சர்க்கரை ரூபாய் 5 விலையில்கூட கொடுக்க முடியாத நிலைமைதான் தற்போது இருக்கிறது. எனினும் மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி கேட்டால், இப்பிரச்சினை குறித்து முழுமையாக ஆராய்ந்து மாநில அரசு எந்த அளவுக்கு உதவி செய்ய முடியுமோ அதைச் செய்ய முடியும். பொது விநியோகத்திற்காக என்று தற்போது மத்திய அரசால் கொடுக்கப்படும் சர்க்கரையே நமது மாநிலத்தின் தேவைக்குப் போதுமானதாக இல்லை. நமது மாநிலத்தின் தேவை அதிகமாக இருக்கிறது. தற்போது கிடைக்கும் ஒரு லட்சம் மூட்டைக்கும் சற்று அதிகமான அளவு சர்க்கரை போதுமானதாக இல்லை என்பதால், தற்போது நெருக்கடி இருந்து வருகிறது. இருந்தாலும் இந்த நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் உரிய முயற்சிகளை அரசு மேற்கொண்டு இந்தக் குறைபாட்டைப் போக்கும் தன்மையில் ஈடுபடும்.

### மின்சாரத் தாக்குதலால் சிறுவர்கள் மரணம்.

* **திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1979 ஏப்ரல் மாதத்தில் திருத்தணி வட்டம், அடைக்கப்பட்டு கிராமத்தில், கிணற்றில் இறங்கியபோது ஆறு குழந்தைகள் மின்சாரம் தாக்கி இறந்து போனார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், மின்சாரத் தாக்குதலுக்குக் காரணம் யாது?

(உ) இத்தகைய நிலை வேறு எங்கும் ஏற்படாதவாறு தடுக்க, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

(எ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) நான்கு குழந்தைகள், இரண்டு பெரியவர்கள் ஆக ஆறு பேர் மின்சாரம் தாக்கி இறந்து போனார்கள்.

(இ) மின்சாரம் செல்லும் பேஸ் வயர்களில் இருந்த இணைப்புகளில் ஒன்று டேப். இல்லாமல் இருந்ததால், மின்சாரம், மெயின் சுவிட்சுக்கும் அதனோடு இணைக்கப்பட்டிருந்த நில இணைப்புக் கம்பியின் வழியாக மோட்டாருக்கும், கிணற்றில் இறக்கப்பட்டிருந்த தண்ணீர் பைப்புக்கும் பரவியுள்ளது. இத் தண்ணீர் பைப்பைப் பிடித்த ஆறு பேரும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர்.

(உ) & (எ) மின் நுகர்வோரின் மின் இணைப்புகள் 1956 ஆம் ஆண்டு இந்திய மின் விதிகளின் கீழ் தமிழ்நாடு மின்வாரியத்தால் ஆய்வு செய்யப்படுகின்றன. இத்தகைய மின் விபத்துக்களைத் தடுக்கும் நோக்கத்தோடு இந்த ஆய்வைத் தீவிரப்படுத்தும்படி மின் வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இறந்து போன அறுவரில் இருவர் பெரியவர்கள் என்றும் நால்வர் சிறு குழந்தைகள் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இறந்துபோன குழந்தைகள் அனைவரும் இறந்து போன பெரியவர்களின் குழந்தைகளா அல்லது இறந்து போன அந்தப் பெரியவர்களுக்கு எத்தனை குழந்தைகள் இருக்கின்றன? அவர்களுக்கெல்லாம் இந்த அரசு என்ன நிவாரணம் அளித்தது ? இந்த விபத்து மின்துறை பராமரிக்க வேண்டிய முறையில் ஏற்பட்ட கோளாறின் காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்பதனால், பாதிக்கப்பட்டவர்களுக்கு மின்துறை மூலம் எத்தகைய நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது ? இறந்து போன அந்தக் குழந்தைகளைப் பெற்ற பெரியவர்களிடமிருந்து நஷ்டஈடு கோரி கோரிக்கை வந்துள்ளதா, அது குறித்து அரசு பரிசீலனை செய்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நஷ்ட ஈடு வழங்குவது என்பது, மின்வாரியம் நிறுவியுள்ள மின் கம்பிகளில் அல்லது மின் இணைப்புகளில் ஏற்பட்ட தவறுகளின் காரணமாக இத்தகைய விபத்துக்கள் ஏற்பட்டால், அதற்கு மின்வாரியமே பொறுப்பு ஏற்றுக்கொண்டு, வழங்கப்படும். ஆனால் இது "கன்சியூமர்'ஸ் பிரிமிசஸ்" என்று சொல்லப்படும் மின் துய்ப்போரின் பகுதியில் ஏற்பட்ட விபத்து என்ற காரணத்தால், நஷ்ட ஈடு வேண்டுமென்று தனிப்பட்டவர்கள் அவர்கள் மீது வழக்கு தொடர்ந்துதான் பெற வேண்டும். இறந்துபோன பெரியவர்களுக்கும் இறந்துபோன சிறுவர்களுக்கும் என்ன குடும்ப உறவு என்பது பற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை.



**திரு. ம. சங்கரலிங்கம் :** மின் துய்ப்போரின் எல்லைக்குள் இவ் விபத்து ஏற்பட்டது என்று கூறப்பட்டாலும், இத்தகைய மின்சார இணைப்புகள் ச யாகவும் முறையாகவும் பொருத்தப்பட்டிருக்கின்றனவா என்று கண்காணிக்கட் பட வேண்டியது மின் வாரியத்தின் பொறுப்பாகும். அதோடு அங்கே தவறு ஏற்பட்டாலும், அதைத் திருத்தியமைக்க வேண்டியதும், அல்லது அதற்குரிய அறிவுரையை வழங்க வேண்டியதும் மின்துறையின் பொறுப்பாகும். இந்த விபத்து நடந்த இடத்தில் இத்தகைய கண்காணிப்பு செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியென்றால் அந்த இடத்தில் எத்தனை மாதத்திற்கு முன்பு பரிசோதனை செய்யப்பட்டது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இத்தகைய மின் இணைப்புகள் அல்லது அமைப்புகள் அவ்வப்போது பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்று இந்தியன் எலெக்ட்ரிசிடி ரூல்ஸ்-ல் இருக்கிறது. ஆனால், அப்படிச் செய்தாலும், செய்யப்படாவிட்டாலும், அதனால் ஏற்படுகிற விபத்துக்களுக்கோ மற்ற சேதங்களுக்கோ அந்த 'இன்ஸ்டலேஷன்களை' வைத்திருப்பவர்கள் தான் பொறுப்பாவார்கள். இந்த எலெக்ட்ரிக் இன்ஸ்டலேஷனை எப்போது 'இன்ஸ்பெக்ட்' செய்தார்கள் என்ற விவரம் தற்போது என்னிடம் இல்லை.

## முல்லை பெரியாறு அணைக்கட்டு.

* **திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முல்லை பெரியாறு அணைக்கட்டு வலுவிழந்து இருப்பதாகவும், அதனால் திடீரென பெரும் சேதம் விளைய வாய்ப்பு இருக்கிறது என்றும், அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** (அ) ஆம்.

(இ) மத்திய நீர்வளக் குழுவின் தலைவர் பெரியார் அணையை 1979 நவம்பர் திங்களில் பார்வையிட்டார். இதன் தொடர்ச்சியாக திருவனந்தபுரத்தில் நடைபெற்ற மத்திய நீர்வளக் குழுவின் தலைவர் மற்றும் கேரள, தமிழக அதிகாரிகளின் கூட்டத்தில் அணையைப் பலப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய

நடவடிக்கைகள் பற்றி கலந்து பேசி முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த முடிவுகளின்படி அணையைப் பலப்படுத்துவதற்கான பணிகள் தொடங்கப் பட்டு விட்டன.

(பிற்பகல் 4-10)

**திரு. ம. சங்கரலிங்கம் :** முல்லை பெரியாறு அணைக்கட்டு என்று சொல்லப்படுகின்ற தேக்கடி அணை 85 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. ஐம்பது ஆண்டுகள் வரையில் எந்தவிதமான கேடுகளும் வராமல் இருக்கு மென்றும் அதற்குப் பிறகு திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும் அந்த அணையைக் கட்டிய பொறியாளர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். 1934 ஆம் ஆண்டில் பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. 1961 முதல் 1964 வரை மூன்று முறை பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. போாபத்து வந்துவிடுமென்று, 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், முதலமைச்சராக இருந்த திரு. கோயா அவர்கள் அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து இப்போதும் அந்தப் பகுதியிலே பீதி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு இதைவிட துரிதமாக நடவடிக்கை எடுத்து பழுது பார்க்கிற பணியில் ஈடுபடுமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** பழுது பார்க்கிற பணிகள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன. குழுவின் பரிந்துரைகளில் மிக முக்கியமான "கிரேடில் ஃபவுண்டேஷன்" என்னும் நவீன முறையைப் பின் பற்றி இந்த வேலை துவக்கப்பட்டிருக்கிறது. 1980 ஆம் ஆண்டுக்குள் இந்தப் பணிகள் முடிக்கப்பட்டுவிடுமென்று எதிர்பார்க்கிறோம். எனவே பணிகள் இப்போதும் நடந்துகொண்டிருக்கின்றன.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 1976 ஆம் ஆண்டில் பரிசீலனை செய்த நீர்ப் பாசனப் பொறியாளர்கள், அந்த அணையின் முன் பகுதியில் தண்ணீர் தேக்கு கிற அளவு 145 அடி என்றும், அந்த அளவிற்குத் தண்ணீரைத் தேக்கினால் விரிசல் ஏற்படுமென்றும், ஆகவே அதற்கும் குறைவாகவே தேக்க வேண்டு மென்றும் கட்டளையிட்டிருக்கிறார்கள். இப்போது குறைந்த அளவிற்குத் தான் தண்ணீர் தேக்கப்பட்டு வருகிறது. அப்படியென்றால், எவ்வளவு குறைக்கப்பட்டிருக்கிறது ? இவ்வாறு குறைவாகத் தண்ணீரைத் தேக்குவதன் காரணமாக மழைக் காலங்களில் தண்ணீரை சேமிக்க முடியாமல் போனதால் எத்தனை ஏக்கர் பயிர் செய்ய முடியாத நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது?



**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தற்காலிகமாக 145 அடி என்று வைக்கப்பட்டுள்ளது. ஆனால் 136 அடிக்குத் தண்ணீர் தேக்கப்படுகிறது. ஆனால் பெரியாறு வைகை கால்வாய் சீரமைப்புப் பணி நடந்து வருவதால், பாசன வசதி பெற்று வருகிற எந்த நிலமும் பாதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### (1) வினாக்களுக்குத் துறையிலிருந்து விடைகள் அனுப்புவது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் சம்பந்தமாக ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அதாவது, அரசுத் துறைகள், அனுமதிக்கப்பட்ட வினாக்களுக்கான விடைகளை அனுப்புவதற்கு சட்டமன்ற மேலவை விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த கால அளவு முடியும் வரை காத்திராமல், உடனடியாக வினாக்களுக்கான விடைகளை அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்கள் ஆணையிட வேண்டுமென்று 26—6—1980 அன்று கேட்டுக் கொண்டிருந்தேன். ஆனால், இன்றுவரையில் மூன்று வினாக்களுக்கான விடைகள் மட்டுமே துறைக்கு வந்துள்ளது. அவை இன்றைய வினாப்பட்டியலில் சேர்க்கப்பட்டு விடையளிக்கப்பட்டு விட்டன.

தற்பொழுது துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட வினாக்களில், ஒருசிலவற்றைத் தவிர மீதமுள்ள பெரும்பாலான வினாக்கள், குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழ்நாட்டில் அமுல்படுத்தப்படுவதற்கு முன்பு, துறைகளுக்கு அனுப்பப்பட்ட வினாக்களேயாகும். ஆகவே ஏற்கெனவே அவைகளுக்கான தகவல்கள் துறைகளால் சேகரிக்கப்பட்டிருக்குமாதலால் அவைகளுக்கான விடைகளைத் தயாரிப்பதில் கடினம் ஏதும் இருக்க முடியாது. நிலைமை இவ்வாறு இருக்கையில், அதிகப்படியான விடைகள் துறைகளிலிருந்து வந்திருக்க வேண்டும். ஆனால் வரப்பெறவில்லை.

இந்த நிலைமையில் துறைகளிலிருந்து விடைகள் வரப்பெற்றாலும் இல்லையென்றாலும், வினாக்களை வினாப்பட்டியலில் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இரண்டு, மூன்று

நாட்களுக்குள் விடைகளை மேலவைத் துறைக்கு அனுப்ப மாண்புமிகு அமைச்சர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் தேர்வுகளைப் பகிஷ்கரித்திருப்பதன் காரணமாக அப்பல்கலைக் கழகம் மூடப்பட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் செ. முத்துசாமி, சி. ரா. லெட்சுமிகாந்தன், பா. ரா. தாமஸ், க; மீனாட்சிசுந்தரம், ஆ. நல்லசிவன், க. இராமமூர்த்தி, ம. சங்கரலிங்கம் ப. மாணிக்கம் மற்றும் செல்வி லீலாவதி ஆகியோர் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் தேர்வுகளை பகிஷ்கரித்திருப்பதைக் குறித்தும், அதன் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பட்டிருப்பது குறித்தும் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நீண்டதொரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகும். இங்கே உட்கார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அதில் பயின்ற பெருமையைப் பெற்றவர்கள். அப்படிப் பட்டதொரு பெரிய கல்லூரி இன்றைக்கு மூடப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று கோரிய நேரத்தில் கல்லூரி மூடப்பட்டிருப்பதால், ஆசிரியர்களும், மாணவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு சிறப்பு வாய்ந்த பல்கலைக் கழகம், ஆசிரியர்கள் அரசாங்கத்தின் சட்டத்திற்குட்பட்டு கோரியிருக்கக்கூடிய கோரிக்கைகளை நிறைவேற்றாமல், இன்றைக்கு கல்லூரியை மூடியிருக்கக் கூடிய நிலை பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. ஆகவே அரசு உடனடியாக தலையிட வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. ஒரு சிறந்த நோக்கத்தோடு, கொடையுள்ளத்தோடு திரு. அண்ணாமலை செட்டியார் அவர்கள் இதை ஆரம்பித்திருந்தாலும், இன்றைக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உள்ள ஆசிரியர்கள் அவல நிலையில் இருக்கிறார்கள். அக்கல்லூரி மூடப்பட்டிருப்பதால், மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது சாதாரண விஷய



மல்ல. கல்லூரி பற்றிய பிரச்சினை மட்டுமல்ல இது. கல்லூரி மூடப்பட்டிருப்பதால், ஏராளமான ஆசிரியர்களும், ஆயிரக்கணக்கான மாணவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையைக் குறித்து விவாதிக்கவேண்டிய அவசியம் இருப்பதால், அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதித்து நல்ல முடிவைத் தேட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கடந்த ஒரு வார காலமாகப் போராட்டம் நடைபெற்று வருகிறது. நாளைய தினம் சென்னையிலேகூட உண்ணாவிரதம் இருக்கவிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கல்லூரி மூடப்பட்டிருப்பதால், பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாகத் தேர்வுகள் இன்றைக்கு நடைபெறாமல் தடைப்பட்டிருக்கின்றன. அஞ்சல் வழியின் மூலம் படித்தவர்கள் பஞ்சாபிலிருந்து தேர்வு எழுத வந்திருக்கிறார்கள். இப்போது தேர்வு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு, தமிழகத்தைப்பற்றி நாடு பூராவும் பரவலாகப் பேசக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இப்பிரச்சினையில் தீர்வுகாண வேண்டிய வழிவகைகளைக் கண்டறிய இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீது நான் பேசியபோது, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டிருக்கிற தகராறைப்பற்றிக் குறிப்பிட்டு, அதை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினேன். இரண்டு வாரத்திற்குள் இந்தப் பிரச்சினை தெருவுக்கு வந்துவிட்டது. அரசு பிறப்பித்த ஆணையை அவர்கள் சரிவர நிறைவேற்றாதது மட்டுமல்லாமல், சர்வகலாசாலையின் நிதி விவகாரங்களிலும் ஒழுங்கீனங்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஒரு கோடியே 84 இலட்சம் ரூபாய் . . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பிரச்சினை எவ்வாறு விதிகளுக்குட்பட்டு வருகிறது என்பதைப்பற்றி மட்டும் சொல்ல வேண்டும். அதில் உள்ள விஷயத்தைப்பற்றி விவாதிக்கக் கூடாது.

திரு. ஆ. நல்லசிவன் : புள்ளிவிவரங்களில் நான் போகவில்லை, நிதி விவகாரங்களில் . . .

## அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் தேர்வுகளைப் பகிஷ்கரித்திருப்பதன் காரணமாக அப்பல்கலைக் கழகம் மூடப்பட்டிருப்பது குறித்து

[1980 ஜூலை 21

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது ஒரு காரணமாக இருக்கலாம். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தந்தால்தான், அதைச் செய்யலாம்.

திரு. ஆ. நல்லசிவன் : நிதியிலே மட்டுமல்லாமல் அங்கே எல்லாவிதமான சட்ட மீறல்களும் நடைபெற்றிருக்கின்றன. அந்த அளவிற்கு நிலைமைகள் மோசமாக இருப்பதால், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், பத்தாயிரக்கணக் கான மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தேர்வு நடத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று மாணவர்களும், ஆசிரியர்களும் கோருவதில் நியாயம் இருக்கிறது என்பதால் இதைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஓராண்டுக் காலக் கல்வி முடிந்தும் இன்னும் தேர்வு எழுத முடியாத நிலையிலே, இந்தியாவினுடைய வேறு எந்தப் பகுதிக்கும் சென்று மேற்கொண்டு கல்வியைத் தொடர முடியாத நிலை உருவாகியிருக்கிறது. ஆசிரியர்கள் தங்களுடைய சங்கடங்களைத் தெரிவித் திருக்கிறார்கள். மிகுந்த அனுதாபத்தோடு அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே மருத்துவத் துறையைத் துவக்கியிருக்கிற இந்நேரத்தில் அதன் வளர்ச்சியைப் பெருமளவிற்குப் பாதிக்கக்கூடிய வகையில் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. மாணவர்கள் தேர்வு எழுத முடியாத நிலையும், ஆசிரியர்கள் பல்கலைக் கழகத்திலே தங்களுடைய பணிகளை ஆற்ற முடியாத சூழ்நிலையும் உருவாகியிருக்கின்றன. இந்த நிலை தமிழகத்தினுடைய கல்விச் சூழ்நிலையை பெருமளவிற்குப் பாதிக்கக்கூடியதாக இருப்பதால், இதுபற்றி அவசரமாக ஒரு தீர்வு காண அரசு முன்வர வேண்டும். அந்தத் தீர்வு காணுவதற்கு ஏற்ற வகையிலே இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

திரு. ப. மாணிக்கம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் ஒரு சிறந்த பல்கலைக் கழகமாகத் திகழ்ந்தது அண்ணாமலைப் பல்கலைக் கழகம். அதனுடைய நிர்வாகத்திலே கோளாறு இருக்கிறது என்பதோடு அல்லாமல், கல்வித் துறையிலே பாதிப்புகளை ஏற்படுத்தியிருக் கிறது. இந்தப் பல்கலைக் கழகத்தில், 20 ஆண்டுகளாக தற்காலிக ஊழியர் களாகவே டாக்டரேட் பட்டம் பெற்ற சிறந்த பேராசிரியர்கள் இருக்கிறார்கள்



1980 ஜூலை 21] [திரு. ப. மாணிக்கம்]

இப்படிப்பட்ட நிலைமைகளின் காரணமாக, கொந்தளிப்புகள் அங்கு ஏற்பட்டு, எல்லாத் துறையிலும் உள்ள மாணவர்கள், அங்குள்ள ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்கள், மற்றும் உள்ளவர்கள் யாவருமே பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். எனவே இப்படிப்பட்ட நெருக்கடியான பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்கு இந்த மேலவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்துப் பேச வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

(பிற்பகல் 4-20)

* திரு. சி. சா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆளவையின் உறுப்பினன் என்ற வகையிலும், அந்தப் தொகுதி சட்டமன்ற மேலவை உறுப்பினர் என்ற முறை யிலும், அந்தப் பல்கலைக் கழகத்தின் மாணவன் என்ற வகையிலும், அந்தப் பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் சிதம்பரத்திலேயிருந்து வருகின்றவன் என்ற முறையிலும், அந்தப் பல்கலைக் கழகத்தின் நிலவரங்களைத் தெரிந் திருப்பவன் என்ற முறையிலும், என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அப்பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்கள் 7,000 பேர் இருக்கின்றார் கள், 500 ஆசிரியர்கள் இருக்கின்றார்கள், 500 ஊழியர்கள் இருக்கின்றார்கள். இத்தனை பேர்கள் அடங்கிய ஒரு பல்கலைக் கழகத்திற்கு ஒரு ஆண்டிற்கு, அரசு மக்களுடைய வரிப்பணத்திலிருந்து ரூ. 60 லட்சம் அளவுக்கு மானிய மாகத் தந்து கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கின்ற பல்கலைக் கழகம் அது. ஏழையெளிய மக்களின் வரிப்பணத்திலிருந்து ரூ. 60 லட்சம் ஒவ்வொரு ஆண்டிற்கும் அந்தப் பல்கலைக்கழகத்திற்குக் கொடுக்கப்படுகிறது. அந்தப் பல்கலைக்கழகத்தில் உள்ள ஆசிரியர்களுடைய (Service Conditions) வேலை நிலைமை சரியாக இல்லை என்ற காரணத்தை எனக்கு முன் பேசிய உறுப்பினரும் குறிப்பிட்டார்கள். அங்கு 20 ஆண்டுகளாக ஒரு பேராசிரியர் தற்காலிகமாக இருக்கின்றார். இறந்து போன பிறகு ஒருவருக்கு கன்பர்மேஷன் ஆர்டர் (Confirmation Order) வருகிறது. ஓய்வு பெற்ற பிறகு ஒருவருக்கு (Confirmation Order) வருகிறது. இப்படிப்பட்ட இழிவான நிலைமைகள் அங்கு இருக்குமானால், அந்த ஆசிரியர்கள் இந்தப் போராட்டத்திலே இறங்குவதில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது என்பதை நம் மாமன்றம் புரிந்து கொள்ள வேண்டும். தேர்வுகளை பகிஷ்கரிக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள்கூட இவர்கள் அதில் கலந்து கொண்டிருப்பதில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1980 ஜூலை 21

அவர்கள் உணராமல் இல்லை. அது மட்டுமல்ல. இந்தப் போராட்டத்திற்கு
ஆதரவு தெரிவித்து சிதம்பரம் பொதுமக்கள் இன்னும் ஓரிரு நாட்களில் ஒரு
பெரிய ஹர்த்தால் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை
யில் உள்ள அவசரத்தை முன்னிட்டுத்தான் சொல்கிறேன். குறிப்பாக 50,000
பொதுமக்கள் வாழும் அந்தப் பகுதியில் ஹர்த்தால் நடத்தவிருக்கிறார்கள்.
போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டமே நடத்த ஆயத்தம்
செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால், அது எந்த அளவுக்கு பதட்டமான
நிலையை உருவாக்குகிறது என்பதை மாண்புமிகு தலைவர் அவர்களும், இந்த
மாமன்ற உறுப்பினர்களும் உணருவார்கள் என்பதை நான் உணருகிறேன்.
இந்த நிலைமையிலே தேர்வுகளைப் பகிஷ்கரிப்பது என்ற பிரச்சினையைப்
பொறுத்தவரையிலே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் ஆலோசனை
களைக் கேட்டு நடப்பதற்கு அந்த ஆசிரியர்கள் தயாராக இருக்கிறார்கள்.
ஆனால் அவர்கள் நேரடி நடவடிக்கைகளைக் கைவிடத் தயாராக இல்லை
என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினைகளுக்கு விடிவு காண
வேண்டுமென்றால், இந்த மாமன்றத்தின் மூலமாகத்தான் காண வேண்டும்.
ஆகவே இந்த மேலவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்தப்
பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்ணா
மலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களும், மாணவர்களும் போராட்டத்தில்
ஈடுபட்டிருப்பதற்கான காரணத்தை எனக்கு முன்னால் பேசியவர்கள்
எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர்கள் அதைப்பற்றி
விளக்கமாகச் சொன்னார்கள். மற்ற ஆசிரியர்களும், மாணவர்களும் தொழில்
சங்கங்களைச் சேர்ந்தவர்களும் இதற்கு அனுதாபம் தெரிவிக்கின்ற வகையிலே,
இந்தப் போராட்டம் சென்னைக்கும் பரவலாகி இருப்பதையும் மேலும் விஞ்சிய
அளவில் சூழ்நிலைகள் இருப்பதையும் உணருகிறோம். இந்த நிலையால்
கல்விக்கும் அமைதிக்கும் பங்கம் விளைவதோடு நாட்டின் வளர்ச்சி நிலை
யிலும், கல்வி நிலையிலும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்தப்
பிரச்சினை மிகவும் அத்தியாவசியமான பொது முக்கியத்துவம் வாய்ந்தது
என்பதை இதற்கு மேல் அழுத்தமாகச் சொல்லத் தேவையில்லை என்று
கருதுகிறேன். மாண்புமிகு தலைவர் அவர்களும், நம் மாண்புமிகு கல்வி
அமைச்சர் அவர்களும் மரபு வழி பின்பற்றி வருகின்ற அளவில் இல்லாமல்
இந்தப் பிரச்சினையைப் பொறுத்த அளவில், அந்த மரபு வழி மறுக்கி,
முறையை விடுத்து, இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதைக் குறித்து
விவாதித்துத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.



1980 ஜூலை 21]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். ரத்து செய்வது என்பது மரபு என்று ஆகிவிடாது. எத்தனையோ தீர்மானங்களை விவாதத்திற்கு எடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி அறப்போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். மேற்படி சங்கம் 21 அம்சக் கோரிக்கைகளைத் தெரிவித்துள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் விடுத்துள்ள 21 அம்சக் கோரிக்கைகளில் அரசு ஆணை குறித்த கோரிக்கைகள் சம்பந்தமாகக் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது :

கோரிக்கை 1 : உரையாளர்களைப் பதவி உயர்வு செய்தல். பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்ற கல்லூரி உரையாளர்கள் 1—12—77 தேதியில் 3 ஆண்டுகள் பணி நிறைவேற்றியிருப்பின், அன்னார் தமது துறையில் 1—12—77 முதல் உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப்பெறுவர் என்று அரசாணை கல்வி எண் 613, கல்வி, நாள் 24—3—1978 ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இச்சலுகை வருங்காலங்களில் பட்ட மேற்படிப்பு தகுதி பெறும் உரையாளர்களுக்கும் பொருந்தும் என்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் மேற்படி ஆணைகள் சென்னை, மதுரை காமராசர் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களுக்கும் பொருந்தும் எனவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாணைப்படி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உரையாளர்களையும் விரிவுரையாளர்களாக நியமிப்பது அப்பல்கலைக் கழகத்தின் பரிசீலனையில் அடங்கும்.

கோரிக்கை 2 : பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர்களுக்கு ரூபாய் 700—1,600 என்ற ஊதிய விகிதத்தில் ரூ. 1,100-ல் அடிப்படைச் சம்பளம் வழங்குதல்.

கல்லூரியில் உள்ள பேராசிரியர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்களுக்கு ரூ. 700—40—1,100—50—1,300 இ.பி. 50—1,600 என்ற ஒரே சீரான ஊதிய விகிதம் முதற்கண் அளிக்கப்பட்டிருந்தது. ஆயின் உதவி பேராசிரியர்களைக் காட்டிலும் பேராசிரியர்கள் முன்பு அதிக ஊதிய விகிதம் பெற்றுள்ளனர் என்பதைக் கருத்தில் கொண்டு பேராசிரியரின் அடிப்படை ஊதியம் ரூ. 700—1,600 என்ற ஊதிய விகிதத்தில், ரூ. 1,100-ல் துவங்கப்பட வேண்டும்

[திரு. செ. அரங்கநாயகம்] [1980 ஜூலை 21

என்று ஆணை வெளியிடப் பட்டது. இதனைத் தொடர்ந்து பல்கலைக் கழக விரிவுரையாளர்களும் தங்களது ஊதியம் ரூ. 700—1,600 ஊதிய விகிதத்தில், ரூ. 1,100-ல் துவங்கப்பட்ட வேண்டுமென்று அரசுக்கு விண்ணப்பம் சமர்ப்பித் துள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம். சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக் கழகங்களிலுள்ள அனைத்து விரிவுரையாளர்களுக்கும் ரூ. 700—1,600 என்ற ஊதிய விகிதத்தில் ரூ. 1,100-ல் துவங்ப்பட வேண்டும் என்ற பரிந்துரையை நிதித் துறையுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப் படும்.

**கோரிக்கை 3.:** பல்கலைக் கழக மானியக் குழு ஊதிய நிர்ணயத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் சரி செய்தல்—பல்கலைக் கழக மானிய ஊதிய விகிதம் 1—4—1976 முதல் அமுல்படுத்தியும் 1—1—1977 முதல் பணப்பயன் வழங்கியும் 1977 செப்டம்பர் திங்களில் அரசு முதற்கண் ஆணைகள் பிறப் பித்தது. பின்னர் கல்லூரி ஆசிரியர் மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கையின்படி முதற்கண் வழங்கப்பட்ட ஆணைகள் மாற்றப்பட்டு இத்திருந்திய ஊதியங்கள் 1—1—1974 முதல் அமுல்படுத்தியும் 1—1—1977 முதல் பணப்பயன் வழங்கியும் 1978 மார்ச் திங்களில் ஆணைகள் வழங்கப்பட்டன. இத்திருந்திய ஆணைகள் அடுத்து அண்ணாமலைப் பல் கலைக் கழக ஆசிரியர் சங்கம் தமது சங்கத்தில் சிலருக்கு இத்திருந்திய ஆணையால் நட்டம் ஏற்படுவதால், அவர்களுக்கு 4—4—1976 முதல் இத் திருந்திய ஊதிய விகிதத்தினை அளிக்குமாறு கோரிக்கை விடுத்தது. இக் கோரிக்கைகளைத் தீவிரமாக ஆராய்ந்தபோது, 1—1—1974-ல் திருந்திய ஊதிய விகிதத்தினை அமுல்படுத்துவதால், இவ்வாசிரியர்கள் முந்திய ஊதிய விகிதத்தில் பெற்ற மொத்த ஊதியத்தைக் காட்டிலும் திருந்திய ஊதிய விகிதத்தின் கீழ் அதிகமாகவே பணப்பயன் பெற்றவர் என்பதாலும் 1—4—1976 தேதி முதல் புதிய ஊதியத்தின் கீழ் வர அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு சில ஆசிரியர்களுக்கு மட்டிலும் அரசு அனுமதி வழங்கினால், இத்தகைய கோரிக்கைள் பிற கல்லூரி ஆசிரியர்களிடமிருந்து வரக்கூடும் என்பதாலும், இக்கோரிக்கைகளை ஏற்பதில்லை என்று அரசு பல்கலைக் கழகத்திற்குத் தெளிவுபடுத்தியுள்ளது.



1980 ஜூலை 21] [திரு. செ. அரங்கநாயகம்]

(பிற்பகல் 4-30)

4, 5, 6 வீட்டு வாடகைப்படி வழங்குதல்—அரசு ஊழியர்களுக்கு வழங்கப் பட்டதைப் போன்று அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும் பஞ்சப்படி போன்ற படிகள் வழங்க அரசு அவ்வப்பொழுது மானியம் வழங்கி வந்துள்ளது. தற்பொழுது 1—10—1979 மற்றும் 1—2—1980 ஆகிய தேதி முதல் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பஞ்சப்படி அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும் வழங்கி அதற்கான கூடுதல் செலவினத் திற்கான மானியம் வழங்குவது குறித்து பல்கலைக் கழகத்தின் பரிந்துரை அப் பல்கலைக் கழகப் பதிவாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தான் இயங்கும் சட்டபூர்வமாக நியமிக்கப்பட்ட கல்விக் கேந்திரமாகும். இப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் பணியாளர்கள் நியமனம், அவ்வூழியர்களுக்கு ஊதியங்கள் நிர்ணயித்தல் போன்ற எஞ்சியுள்ள 15 கோரிக்கைகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வரம்பிற்கு உட்பட்டவையாகும். எனினும், பிற பல்கலைக் கழகங்களைப் போன்று இப் பல்கலைக் கழகம் செவ்வனே செயலாற்ற அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 24.59 இலட்சம் மொத்த மானியமாக வழங்கி வருகிறது. இது நாம் அவர்களுக்குத் தரும் மொத்த மானியமாகும். இது தவிர நாம் அவர் களுக்கு வேறுசில சிறப்பு மானியங்களையும் தருகிறோம். பல்கலைக் கழக ஊழியர்களுக்கு அரசு ஊழியரைப் போன்றே வீட்டு வாடகைப்படி போன்ற படிகள் அளிப்பதற்கும் பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த திருத்திய ஊதிய விகிதங்களை அளிப்பதனால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினம், இன்ன பிற திட்டங்களுக்காக மானியங்களும் அரசினால் அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தினைச் சீர்திருத்த அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இன்றைய தினம் ஆசிரியர்களும், மற்றவர்களும் அறப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிற காரணத்தால், மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படுகிறது. அவர்கள் தேர்வு எழுத முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஓராண்டுக் கல்வி முடித்து, அவர்கள் பரீட்சை இப்போது எழுதுவதாக மாண்புமிகு உறுப் பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்லுகிறார்கள். சென்ற ஆண்டு எத்தனை நாட்கள் அந்தப் பல்கலைக் கழகம் நடந்தது என்பதை நாம்

[திரு. செ. அரங்கநாயகம்] [1980 ஜூலை 21

பார்ப்போமானால், அது மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்றாக இருக்கிறது. மிகக் குறைந்த அளவிற்குத்தான் வேலை செய்திருக்கிறது. அரசு தரும் மானியத்திலே நடைபெறும் பல்கலைக் கழகம் சென்ற ஆண்டும் சரிவர இயங்கவில்லை. அப்படிப்பட்ட நிலைமையில் பரீட்சைகள் தள்ளிப் போடப்பட்டன. அந்தப் பரீட்சைகள் இன்றைக்கு நடைபெற முடியவில்லை என்பதைப் பார்க்கிறோம். பரீட்சைகள் மறுபடியும் நடைபெற முடியாமல் போனதால், மாளவர்கள் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் வேலைக்குப் போவதாக இருந்தாலும் சரி, அல்லது மேல் படிப்புக்குச் போவதாக இருந்தாலும் சரி, அவர்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் போராட்டம் செய்வதை யாரும் தடுக்க முடியாது. ஜனநாயகத்தில் அது இருக்க வேண்டியதுதான். இருந்தாலும் மற்றவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் அளவிற்கு போராட்டங்களை நடத்துவோமென்று அவர்கள் சொன்னால், அதனால் பாதிக்கப்படுவது மாணவர்கள்தான். ஒருவர் நடத்தும் போராட்டத்தினால் இன்னொருவர் பாதிக்கப்பட்டு, அவர் நடத்தும் போராட்டத்தினால் இன்னொருவர் பாதிக்கப்பட்டு, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பாதிக்கப்படுகின்ற காரியத்தைச் செய்வதால், சமுதாயத்தின் மொத்த நன்மைக்கு பெருமளவிற்குப் பாதகம் ஏற்படுகிறது. அதனால் நாம் எடுக்கும் முயற்சிகளுக்குக் குந்தகம் ஏற்படுமென்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆசிரியர்கள் அதை நன்றாக உணருவார்கள். 23 ஆண்டு காலமாகியும் ஒரு ஆசிரியருடைய பணி வரன்முறைப்படுத்தப்படவில்லை, ஓய்வு பெற்ற பின்னர்தான் வரன்முறைப்படுத்தினார்கள், இறந்ததற்குப் பின்னாலேதான் வரன்முறைப்படுத்தினார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். இப்படி பல ஆண்டுகளாக பல்கலைக் கழகத்திலே இருந்து வருகிற, அடிப்படையாக இருந்து வருகிற பெரு நோயைத்தான் இது சமுதாயத்திற்கு விளக்கிக் காட்டுகிறது. இன்றைய தினம் அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்ய இருக்கிறது. நாம் அடிப்படை மாறுதல்களைச் செய்தாலொழிய, அந்தப் பல்கலைக் கழகத்திலே காணப்படும் குறைபாடுகளை யாராலும் போக்க முடியாது. அந்த முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்களும் மற்றவர்களும் மாணவர்களுடைய எதிர் காலத்தைப் பாதிக்கக்கூடிய இந்தக் காரியத்தைக் கைவிட்டு, அவர்கள் தேர்வு எழுதவும், அவர்கள் மேற்கொண்டு படிக்கவோ அல்லது அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றிய முயற்சிகளை மேற்கொள்ளவோ ஆவன செய்ய வழி வகுக்க வேண்டும். அந்த வகையிலே பரீட்சை பகிஷ்கரிப்பை வாபஸ் வாங்க வேண்டுமென்று இந்த மன்றத்தின்



1980 ஜூலை 21] [திரு. செ. அரங்கநாயகம்]

மூலமாக, இந்த மன்றத்தின் உறுப்பினர்களின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.
அவர்கள் பரீட்சையை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றபடி
அவர்கள் சொல்லுகின்ற, அவர்கள் சார்பாக இன்னும் சொல்லப்படாமல்
இருக்கும் பல்வேறு கருத்துக்களை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள
வேண்டும், மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அங்கேதான் படித்தார்கள்,
மின்சாரத் துறை அமைச்சரவர்கள் அங்கே தான் படித்தார்கள் என்று
மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் சொல்லி, அத்தோடு
நிறுத்திக்கொண்டார்கள். இன்னும் பல பேர்கள் அங்கே படித்திருக்கிறார்கள்.
அவர்கள் பெயர்களைச் சொன்னால், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இந்த
வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறதோ (சிரிப்பு) என்று எண்ணத்
தோன்றும், விஞ்ஞானத் துறை, இன்னும் மற்ற பல துறைகளிலே படித்தவர்கள்
அங்கிருந்து வரவேண்டும். வெகு சிக்கிரத்திலே அப்படிப்பட்டவர்கள் வர
வேண்டும். அந்த எண்ணம் எல்லோருக்கும் இருக்கிறது. அங்கே படித்து,
இப்போது அமைச்சர்களாக இருப்பவர்களுக்கும் இருக்கிறது. எனவே அத்
தகைய எதிர்காலத்தை மாணவர்களுக்கு உருவாக்கும் விதத்தில் ஆசிரியப் பெரு
மக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஒத்தி வைப்புத் மாண்புமிகு
தள்ளுபடி செய்வதுதான் மரபு என்று சொன்னார்கள். தீர்மானத்தைத்
துறைக் கொள்கை விளக்கக் குறிப்பு வரும்போது, பொதுவாக கல்வித்
வைப்புத் தீர்மானங்களை எடுக்காமல் இருப்பதுதான் இப்படிப்பட்ட ஒத்தி
பார்க்கிறோம். இன்றைக்கு இந்த ஒத்தி வைப்புத் மரபு என்பதைத்தான்
கொண்டு வந்திருக்கிறார்கள். நான் சொன்ன பதில் தீர்மானத்தை அவையிலே
களுக்குத் திருப்தியைத் தருமென்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்
அவையை ஒத்தி வைத்து, இந்தப் பிரச்சினையைப்பற்றி எனவே மேற்கொண்டு
அவசியமில்லை. கல்விக் கொள்கைக் குறிப்பின்மீதான விவாதிக்க வேண்டிய
அவற்றைப் பற்றிப் பேசலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன். விவாதத்தில்

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, இப்பொருள் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி அனுமதி மறுக்கிறேன்.

## 2. அறிவிப்பு—தொடர்ச்சி.

(2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது.

21—7—80 & 22—7—80—கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

23—7—80 காலை 10 மணி—சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தல்,

மாலை 4 மணி—மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

24—7—80—உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.

25—7—80—தொழிலாளர் நலன் மற்றும் கைத்தறி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.

26—7—80—தொழில் மற்றும் கிராமத் தொழில் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.

27—7—80—ஞாயிறு—விடுமுறை.

28—7—80—வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.

29—7—80—பின் தங்கிய வகுப்பினர் நலன் மற்றும் பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது விவாதம்.

30—7—80—நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவினை ஆய்வு செய்தல்.

மேற்கொண்டு நிகழ்ச்சி விபரம் பின்னர் முடிவு செய்யப்படும். மேலவை வழக்கம்போல் மாலை 4 மணி முதல் 7 மணிவரை கூடும்.

## 4. கவன ஈர்ப்புத் தீர்மானம்.

### தென்னாற்காடு மாவட்டத்தில் மூளைக் காய்ச்சல் நோய் பரவியதன் காரணமாக சில குழந்தைகள் மரணமடைந்தது குறித்து.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"தென்னாற்காடு மாவட்டத்தில் மூளைக் காய்ச்சல் நோய் பரவியதன் காரணமாக சில குழந்தைகள் மரணமடைந்தது குறித்தும், நோய் பரவுவதனால் பல குழந்தைகள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்தும், அரசு எடுக்க வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும்".





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மேலவைத் தலைவரவர்களே, அவையின் முன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவரவர்களே, மூளைக் காய்ச்சல் நோய் என்ன காரணத்தாலே வருகிறது, மூளை வளர்ச்சி அதிகமாக இருப்பதால் வருகிறதா அல்லது குறைவாக இருப்பதாலா என்பதை அறிய விரும்புகிறேன். இந்த மூளைக் காய்ச்சல் பாதிப்பு குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்தில்தான் அதிகமாக இருக்கிறது. அதற்குத் தனிப்பட்ட காரணம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, மூளைக் காய்ச்சல் என்று சொல்லக்கூடிய நோய், குறிப்பாக 2 முதல் 13 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வருகிறது. அவர்கள்தான் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மூளை வளர்ச்சிக்கும், இந்த நோய்க்கும் சம்பந்தமில்லை. 'வைரஸ்' என்று சொல்லக்கூடிய நுண் கிருமிகள்தான் இந்த நோய்க்குக் காரணம். அவற்றை மைக்ராஸ் கோப்பின் மூலம் பார்க்கலாம். அந்தக் கிருமிகளின் மூலம் தொத்து நோயாக இது ஏற்படுகிறது. இதற்கு மூல காரணம் ஒரு வகையான கொசுதான். இந்த விஷயத்தைப்பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள பெங்களூரிலுள்ள நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் வைரோலாஜிக்கு இதுபற்றித் தெரிவித்திருக்கிறோம். அந்தப் பிரிவு சென்னையில் இல்லை. இது குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக பெங்களூருக்கு அனுப்பியிருக்கிறோம். அங்கிருந்து ஆராய்ச்சி முடிவு வந்ததற்குப் பிறகு, தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இப்போதும் அப்படிப்பட்ட கொசுக்கள் இல்லாத வகையிலே அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** 45 நாட்களிலே 52 குழந்தைகள் இறந்திருக்கிறார்களென்பது சாதாரண விஷயமல்ல. செய்தித் தாள்களில் 3, 4 குழந்தைகள் இறந்துவிட்டதாகத்தான் செய்திகள் வந்தன. இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் உண்மை வந்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், இந்த நிகழ்ச்சி வேதனை தரக்கூடியதாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல, தென் ஆற்காடு மாவட்டத்திலே இந்த நோய்க்கு கொசு ஒரு காரணமாக இருக்கிறதென்பது அறிக்கையின் மூலம் தெரிய வருகிறது. தென் ஆற்காடு மாவட்டம்

---

@ 96 ஆம் பக்கத்தில் இணைப்பு I அச்சிடப்பட்டுள்ளது.

## தென்னாற்காடு மாவட்டத்தில் மூளைக் காய்ச்சல் நோய் பரவியதன் காரணமாக சில குழந்தைகள் மரணமடைந்தது குறித்து

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1980 ஜூலை 21

முழுவதும் கொசுவால் அதிகமாகப் பாதிக்கப்பட்டு, மூளைக் காய்ச்சல்
தவிர வேறு பல நோய்களும் — ஃபைலேரியா போன்றவை — அதிகமாக
ஏற்பட்டிருக்கின்றன. எனவே, கொசு ஒழிப்புக்காக தென் ஆற்காடு
மாவட்டம் முழுவதையும் தீவிரப் பணிப் பகுதியாக எடுத்துக்கொண்டு, அது
குறித்து தீவிரமான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா? இதுபோன்ற
மூளைக் காய்ச்சல் நோய் திருநெல்வேலி மாவட்டம் போன்ற பல மாவட்டங்
களில் பரவி, அதனால் அங்கேயும் குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். அந்த
மாவட்டங்களிலும் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினர்
தெரிவித்ததுபோல, நான் இந்தப் பொறுப்பை ஏற்ற உடனேயே எத்தனை
குழந்தைகள் இறந்தன என்று பார்த்த நேரத்தில், எனக்கே எண்ணிக்கை
யைப் பார்த்து வியப்பு ஏற்பட்டது. இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை
அவ்வளவு பெரிய தொகையாக இருந்தது. அதற்குப் பிறகு உடனடியாக
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணையிட்டு, அதற்கேற்ப அந்த
மாவட்டம் பூராவும் "கொசு ஒழிப்பு" நடவடிக்கை விரைவுப்படுத்தப்
பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டத்திலும் அது வருவதற்கு முன்பே
எல்லாவிதமான தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

### 5. அரசின் தீர்மானம்.

### கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அடுத்து, அரசின் தீர்மானம்
விவாதத்திற்கு வர இருக்கிறது. அதிலே கல்வி பற்றிய கொள்கை
விளக்கக் குறிப்பின் மீது இன்றைக்கும் நாளைக்கும் விவாதம் தொடர்ந்து
நடைபெறவிருக்கிறது. ஆசிரியர் தொகுதியிலேயிருந்து வந்திருக்கக் கூடிய
உறுப்பினர்களை அதிகமாகக் கொண்ட விசேஷ மன்றம் இது ஆதலால்
அவர்கள் எல்லாம் பேச இருக்கிறார்கள். ஒன்று நான் தெரிவித்துக்
கொள்கிறேன். இந்த இரண்டு நாட்களுக்குள் எப்படியும் விவாதத்தை
முடித்தாக வேண்டும். ஆகவேதான் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தபோது கூட, நான் அனுமதித்தேன்.
திரு. சங்கரலிங்கம் கூட சொன்னார். நிராகரிப்பதே மரபு என்று
சொன்னார். மரபுக்கு மாறாகவே இன்றைக்கு அனுமதிக்கப்பட்டிருக்
கிறது. அந்தப் பிரச்சினையை கல்வி பற்றிய கொள்கை விளக்கக்



குறிப்பின்மீது விவாதம் நடைபெறவிருப்பதைக் காட்டி நான் நிராகரித்
திருக்க வேண்டும். ஆனால் அரசும் அதைச் செய்ய விரும்பவில்லை,
நானும் அதைச் செய்ய விரும்பவில்லை. ஆகவே அனுமதித்தோம்.
மேலும் இதே விஷயத்தைத் திரும்பத் திரும்ப கல்வி விளக்கக் குறிப்பிலே
பேசி நேரத்தை எடுக்க வேண்டாம், நேரத்தைச் சுருக்கலாமென்று அனுமதித்
தோம். மசோதாவுடன் இதைச் சேர்த்து விட்டால் இதற்கான நேரம்
குறைந்துவிடும் என்று கருதி, நாளை மறுநாள் சிறப்புக் கூட்டத்தை வேறு
கூட்டியிருக்கிறோம். இது இன்னொரு காரணம். ஆகவே உறுப்பினர்கள்
10-ல் இருந்து 15 நிமிடங்களுக்குள், பேசி முடித்து ஒத்துழைப்புத் தருமாறு
கேட்டுக்கொள்கிறேன். பட்ஜெட்டிலேயே ஒவ்வொருவரும் 15 நிமிடங்
களுக்குள் பேசியிருக்கிறார்கள். இது ஒரே ஒரு விஷயத்தைப் பற்றிய
தாதலால், இதிலே நான் கண்டிப்பாக அதற்கு மேல் நேரத்தை அனுமதிக்க
மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் கல்வி பற்றிய கொள்கை
விளக்கக் குறிப்பை முன்மொழிவார்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவரவர்களே,
"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்ட கல்வி பற்றிய கொள்கைக்
குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன். இதன்மீது உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்
களைத் தெரிவித்த பிறகு என்னுடைய விளக்கங்களைத் தருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—
"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்ட கல்வி பற்றிய கொள்கைக்
குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ் நாடு
அரசினுடைய கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு அவையிலே வைக்கப்
பட்டிருக்கிறது. அதன்மீது கருத்துக்களைச் சொல்லுவதற்கான வாய்ப்பை
முதன் முதலாக எனக்குத் தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன். 224 கோடி ரூபாய் கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கப்
பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள மொத்த வருவாயில் இது 23
சதவிகிதமாக இருக்கிறது. இது 25 சதவிகிதத்தைத் தாண்ட வேண்டு
மென்று நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வாயிலாக இந்த சந்தர்ப்
பத்தில் கேட்டுக்கொள்வேன். இப்போது இருக்கின்ற மாண்புமிகு

@97—181 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. செ. முத்துசாமி]

நிதியமைச்சர் அவர்கள் கல்வி அமைச்சராக நீண்ட காலம் இங்கே இருந்தவர்கள் என்பதால், அந்த உரிமையோடு நான் இதைக் கேட்டுக்கொள்கிறேன். ஒதுக்கியுள்ள நிதி போதாது. கல்விக்காக இன்னும் அதிக நிதியை அவர்கள் ஒதுக்க வேண்டும். பொதுவாக கல்விக்காக அரசின் மொத்த நாட்டு வருமானத்திலே கால் பங்கைச் செலவிடுகிறோம் என்று சாதாரணமாக எல்லோரும் இன்றையதினம் பேசுகிறார்கள். அப்படி நாட்டு வருமானத்தில் கால் பங்கை ஒதுக்கியும் கூட, இந்த நாட்டிலே கல்வி அறிவு பெற்றவர்களுடைய எண்ணிக்கை எப்படி இருக்கிறது என்று பார்ப்போமேயானால், மிகவும் பரிதாபமாக இருக்கிறது. இன்னும் 40 சதவிகிதத்தினரைக் கூட கல்வியறிவு சென்று எட்ட முடியாத அளவிலே தமிழ் நாட்டிலே கல்வியறிவு பெற்றவர்களுடைய எண்ணிக்கை பரிதாபமாக இருக்கிறது. ஆதலால் கல்விக்காக எவ்வளவு நிதியைச் செலவு செய்கிறோம் என்பதை எண்ணிப் பார்ப்பதிலே ஒரு பிரயோஜனமும் இல்லை. ஒரு ஜனநாயக அரசிலே. கல்வியை எல்லோருக்கும் கொடுத்திருக்கிறோமா, எவ்வளவு பேருக்குக் கொடுத்திருக்கிறோம் என்பதைத் தான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவேதான் இன்னும் கூடுதலாக கல்விக்காக நிதியை ஒதுக்கக் கூடிய ஒரு நல்ல சூழ்நிலை வர வேண்டுமென்று நான் கேட்கிறேன். அப்படி நிறைய நிதியை கல்விக்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒதுக்கினால் தான், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நல்ல பல திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்த முடியும். ஆகவே தான் கல்விக்காக ஒதுக்கிய நிதி போதாது. இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய மானியக் கோரிக்கையிலே ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குகின்ற திட்டம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற முறையே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைப்பற்றி இந்த அவையிலே அறிவித்தார்கள். இது குறித்து இன்னும் அரசாணை வெளியிடப்படவில்லை. ஒரு கருத்தை இந்த சந்தர்ப்பத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் நீண்ட காலமாகவே, 1962ஆம் ஆண்டிலிருந்தே ஒரு பொறுப்பிலே, ஒரு நிர்வாகத்திலே இருந்து வந்தவர்கள். இன்றைக்கு அவர்களை ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு மாற்றும்போது, அதிலே ஏற்படுகிற விளைவுகள் என்னென்ன என்பதைப்பற்றியும் அதை எப்படி எப்படித் தவிர்க்கலாம் என்பது பற்றியும் ஆசிரியர் பிரதிநிதிகளை, சங்கப் பிரதிநிதி





[திரு. செ. முத்துசாமி]

களைக் கலந்து பேசி முடிவு செய்தால் மிகவும் நலமாக இருக்கும். அதற்குத் தக்காற்போல் முடிவு எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். காரணம் சில உரிமைகள் பறிக்கப்படுவதுபோல், அவர்கள் பாதிக்கப்படுவது போல் ஆசிரியர்கள் அஞ்சுகிறார்கள். ஏற்கெனவே மாறுதல் பிரச்சினை இருந்து வருகிறது. இன்னும் இருந்து வருகிற சலுகைகள், உரிமைகள் இவைகளைக் கூட இழந்து விடுவோமோ என்கிற சந்தேகம் ஆசிரியர்களுக்கு இருக்கிறது. எந்த ஒரு முன்னேற்றத்தை, நன்மையைச் செய்தாலும், ஏற்கெனவே இருந்து வருகிற நன்மைகளை அவர்கள் இழந்துவிடாமல் இருக்கும் வகையில் ஒரு நல்ல அரசு மாற்றம் செய்ய வேண்டுமென்கிற என்னுடைய கருத்தை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது ஆசிரியப் பெருமக்களுடைய அச்ச உணர்வுகளின் வெளியீடுகள் என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு அரசு சில நன்மைகளைச் செய்யும்போது, அதேநேரத்தில் ஒரு சில பாதகங்களும் வாரதா என்று கேட்கலாம். ஊராட்சி ஒன்றிய எல்லையிலிருந்து இன்னொரு எல்லைக்கு ஆசிரியர்களை மாற்றுவதால், இன்ன பயன் இருக்கும் என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளலாம். பஞ்சாயத்து ஒன்றியத்திலிருந்து மற்ற இடங்களுக்கு மாற்றுவதால் கல்வியில் இன்னின்ன அபிவிருத்தி ஏற்படும், நன்மை ஏற்படும் என்று சொன்னால், ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அப்படி ஒன்றும் இல்லாதபோது, இப்போது இருக்கின்ற நிலையை தயவு செய்து மாற்ற வேண்டாம் என்று நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மற்ற பல்வேறு விஷயங்களைப்பற்றி நான் கடந்த கூட்டத்திலேயே எடுத்துச்சொல்லியிருக்கிறேன்.

அடுத்து, ஹையர் கிரேட் ஆசிரியர்களை செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக ஆக்குகின்ற திட்டத்தை, கரஸ்பான்டென்ஸ்-கம்-கான்டாக்ட் புரோக்ராம் என்கிற திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். ஆனால் பட்ஜெட்டிலே இதற்கான நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லை. ஒருவேளை இதற்காக நிதி ஒதுக்கம் பின்னால் கொண்டு வரப்படலாம். இந்த நிதி ஒதுக்கம் தரப்பட்டிருக்கிற குறிப்பிலே இடம் பெறவில்லை என்பதையும் நான் கவனமாகப் பார்த்திருக்கிறேன் என்பதையும் நான் கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தத் திட்டத்திற்காக எவ்வளவு செலவழிக்கப்படும் என்றும் சொல்லப்படவில்லை. இதற்கு முன்னாலேகூட ஒரு திட்டம் வகுக்கப்பட்டு அறிவித்தார்கள். அதிலே ஐந்து ஆயிரம் பேருக்கு ஒரு ஆண்டுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவழிப்பதாகவும், கரஸ்பான்டென்ஸ் கோர்சுக்காக அதைச் செலவிடுவதாகவும் அரசு அறிவித்தது. ஐந்து ஆயிரம் ஹையர் கிரேட் ஆசிரியர்களை செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக ஆக்க

கிறார்கள் என்றால், அப்படி ஆக்கும்போது 54 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குப் பயிற்சி அளித்தால், அவர்களுக்கு மூன்று ஆண்டுக் காலம் பயன் எதுவும் கிடைப்பதில்லை என்று குறிப்பிலே காணப்படுகிறது. இந்தப் பயிற்சியின் மூலம் செகன்டரி கிரேட் கல்வித் தகுதியை ஹையர் கிரேட் ஆசிரியர்கள் பெற்றால், மூன்று ஆண்டுகள் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை, எந்தவிதமான பயனும் பெறுவதில்லை என்கிற வாசகம் திட்டவட்டமாக தொனிக்கிறது. செகன்டரி கிரேட் கல்வித் தகுதியைப் பெற்ற பிறகு, மூன்று ஆண்டுக் காலம் அதனால் பயனில்லாமல் இருக்குமானால், அது எந்த வகையில் நியாயம் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தக் கல்விக் குறிப்பிலே இருக்கக்கூடிய இந்த வாசகம் எந்த அளவுக்கு சரியானது என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சருடைய கவனத்திற்கு நான் ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வருகிறேன். 12 ஆண்டுகளுக்குள் இப்போது இருக்கக்கூடிய ஹையர் கிரேட் ஆசிரியர்களையெல்லாம் செகன்டரி கிரேட் ஆசிரியர்களாக ஆக்குவதற்காக பயிற்சியளித்து சான்றிதழ் தர முயற்சி செய்து, அரசு அதற்காக திட்டமும் வகுத்திருக்கிறது. இந்த 12 ஆண்டுகளுக்குள் எல்லா ஆசிரியர்களையும் செகன்டரி கிரேட் ஆசிரியர்களுக்குரிய தகுதி பெற்றவர்களாக ஆக்குவதன் மூலம் எல்லோரும் செகன்டரி கிரேட் ஆசிரியர்களாக ஆக்கப்படுவார்கள் என்பது அரசின் திட்டம். அப்படி ஆக்கும் போது அவர்களுக்கு எந்தவிதமான பயனும் கிடைக்கப் போவதில்லை. ஏற்கெனவே செகன்டரி கிரேட் ஆசிரியர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். 13 ஆண்டுகள் ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள், செகன்டரி கிரேட் ஆசிரியர்களுக்கான ஊதியத்தைப் பெற்றுக்கொண்டிருப்பார்கள். அந்த நிலையிலே செகன்டரி கிரேட் சம்பளத்திற்கு அவர்களைக் கொண்டு போவதற்கான ஒரு உதவியாகத்தான் இந்த அரசு இதைச் செய்கிறது. அப்படிச் செய்யும்போது, இப்போது 13 ஆண்டுகள் சர்வீஸ் பெற்றிருக்கக்கூடிய ஹையர் கிரேட் ஆசிரியர்கள் அத்தனை பேரும் செகன்டரி கிரேட் ஆசிரியர்களாக ஆகும் போது, செகன்டரி கிரேட் ஆசிரியர்களுடைய ஊதிய விகிதத்தைத் தாண்டி விடுவார்கள். அப்படி ஊதிய விகிதத்தைத் தாண்டியவர்களை செகன்டரி கிரேட் ஆசிரியர்களாக ஆக்கும்போது, என்ன நிலைமை ஏற்படுகிறது என்றால், மாதம் ஐந்து ரூபாய் ஊதிய உயர்வைத்தான் ஒரு வருடத்திற்கு நன்மையாகப் பெறுகிறார்கள். செகன்டரி கிரேட் ஆசிரியர்களுடைய சம்பள விகிதம் வேறு, ஹையர் கிரேட் ஆசிரியர்களுடைய சம்பள விகிதம் வேறு. ஒரு ஆண்டுக்கு அந்த அடிப்படையில் பார்த்தால், 60 ரூபாய்தான் கூடுதலாகக் கிடைக்கிறது, தயவுசெய்து கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டும். அரசு



செலவழிக்க இருக்கக்கூடிய தொகை ரூபாய் 10 இலட்சம். ஒரு ஆண்டுக்கு ஐந்து ஆயிரம் பேருக்குப் பயிற்சி கொடுத்து செகன்டரி கிரேட் நிலைக்குக் கொண்டு வரப் போகிறார்கள். அதுவும் ஐந்து ஆயிரம் பேரைத்தான் அந்த நிலைக்குக் கொண்டுவர முடியும். கேரள மாநிலத்தில் 12 வருட சர்வீஸ் உள்ள வர்களையெல்லாம் செகன்டரி கிரேட் ஆசிரியர்களாக ஆக்குகின்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்கள். அந்த வகையில் நாமும் இங்கு நடவடிக்கை எடுத்து திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தால், 10 இலட்சம் ரூபாயைக் கொண்டு 16,620 நபர்களை செகன்டரி கிரேட் சம்பள விகிதத்திற்குக் கொண்டு வர முடியும். இதை இந்த அரசு செய்தால், அரசுக்கு ஒரு கிரடிட், ஆசிரியப் பெருமக்கள் மத்தியில் ஒரு நல்ல எண்ணத்தை நிச்சயம் உருவாக்கும். 10 இலட்சம் ரூபாயை அரசாங்கப் பணத்திலிருந்து ஒதுக்கி, ஐந்து ஆயிரம் பேருக்குப் பயிற்சி கொடுத்து செகன்டரி கிரேட் சான்றிதழ் கொடுப்பதால் மட்டும் எந்தவிதமான பிரயோஜனமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

(பிற்பகல் 4-50)

இன்றையதினம் கோத்தாரி கமிஷன்கூட சிபாரிசு செய்திருக்கிறது. அவர்களுடைய சிபாரிசிலேகூட எந்தவிதமான தேர்வும் வைக்கவேண்டுமென்று சிபாரிசு செய்யவில்லை. தயவு செய்து அரசு இதைப் பரிசீலிக்க வேண்டும். அரசு ஒரு திட்டத்தை அறிவித்தால், அறிவித்து விட்டதற்கு நியாயங்கள் சொல்ல வேண்டுமென்று கருத வேண்டாம். அதை ஒரு கௌரவப் பிரச்சினையாகக் கருத வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், ஆசிரியர்களுக்கு நன்மை அதிகம் கிடைக்கும். ஆகவே, இந்தக் கருத்துக்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் பரிசீலனைக்கு வைக்கிறேன், தயவுசெய்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாக இருந்தவர்கள் எந்த விதமான பயிற்சியோ தேர்வோ இல்லாமல் ஒரு குறிப்பிட்ட கால அனுபவம் ஆனவுடன், முதல் நிலைக்கு வரலாம் என்று நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கிறது. இளநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களை ஒரு நிலையில்தான், ஒரு குறிப்பிட்ட முறையில்தான் வைக்க வேண்டும் என்று கோத்தாரிக் கல்விக் கமிஷனிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலைக்கும், இந்த அரசு எடுத்திருக்கும் நிலைக்கும் மாறுபாடு இருக்கிறது. தயவுசெய்து இதையும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

செகன்டரி கிரேட் ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளிலும் தொடக்கப் பள்ளிகளிலும் ஒரு லட்சத்திற்குமேல் இருக்கிறார்கள். அவர்களுக்கு இருப்பது ஒரேயொரு வாய்ப்பு. இது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குத்

தெரியும். அவர்களும் ஆசிரியராக இருந்தவர்கள். பல தேர்வுகளில் வெற்றி பெற்று பல பட்டங்களைப் பெற்றவர்கள். அந்த முறையிலே நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன், செகன்டரி கிரேட் ஆசிரியர்கள் தேர்வு எழுதியதன் மூலம் எம்.ஏ., பி.எட். ஆசிரியர்களாக இன்றையதினம் தங்களது தகுதியை உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். "உயர்நிலைப் பள்ளியிலே இருக்கிற செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வே கிடையாது. ஒரு ஆசிரியர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் இருக்கும் வாசகத்தைப் படிக்க விரும்புகிறேன். "என் போன்ற இடைநிலை ஆசிரியர்கள் மேல்நிலை வகுப்புகளுக்குப் பணியாற்றும் வாய்ப்பு இந்தப் பிறவியில் கிடைக்குமா என்பதைத் தாங்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று எழுதியிருக்கிறார்கள். என்னை அவர் தெளிவுபடுத்தச் சொல்கிறார். நான் என்ன செய்வது? நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கோருகிறேன். என்னை அவர் கேட்கும்போது நான் அமைச்சரைதான் கேட்க வேண்டும். இந்தப் பிறவி முடியும்முன் கிடைக்குமா? இந்தப் பிறவி முழுவதும் அவர் ஆசிரியர் தொழிலில் இருக்கமாட்டார். இருந்தாலும் அவருக்கு இருக்கும் ஏக்கம் அப்படிக் கேட்கச் சொல்கிறது. அவர் உயிருடன் இருந்தாலும், 58 வயதுக்கு மேல் அவர் உத்தியோகத்தில் இருக்கப் போவதில்லை. அவர் தன்னுடைய இந்தப் பிறவியிலேயாவது கிடைக்குமா என்று கேட்கிறார். அதற்கு ஒரு வழிவகை செய்ய வேண்டும். எம்.ஏ., பி.எட். பட்டம்பெற்று விட்டு ஆரம்பப் பள்ளிகளிலும் செகன்டரி கிரேட் பதவியிலேயே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு திட்டம் வகுக்க வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு ஹையர் கிரேட் இடத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள் செகன்டரி கிரேடுக்குப் படிப்படியாக வரவேண்டுமென்று 5,000 இடங்களை ஏற்படுத்தினார்கள். அதைத் தொடர்ந்து இப்போது வந்திருக்கும் அரசு ஒவ்வொரு செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி 'செகன்ட்ரி கிரேட்'-ஆகத் தேர்வு எழுதி பாஸ் செய்பவர்களுக்குப் பதவி உயர்வு தருவதற்காக ஒரு நிரந்தர ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால், அத்தகைய நடைமுறை இப்போது செகன்டரி கிரேட் ஆசிரியர்களாக இருந்து தங்களது தகுதியை உயர்த்திக்கொண்டவர்களுக்கு, தமிழாசிரியர்களாக இருந்து தங்களுடைய தகுதியை உயர்த்திக் கொண்டவர்களுக்கு, பட்டதாரி ஆசிரியர்களாக இருந்து முதுகலைப் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு இல்லை. ஆகவே, இவர்களுக்கும் ஒரு வழிவகை செய்ய வேண்டும். இவர்களுக்கு ஒரு விதி வகுக்க வேண்டும். இப்போது பி-லிங் பள்ளிகளில் 1—4—1970-க்குப் பின்னால் 1—4—1972 வரை நியமிக்கப்பட்டவர்களைப் பணி வரன்முறை செய்து அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இந்தப் புது ஆணையின்படி 1—4—1972-க்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் பணி வரன்முறை



செய்யப்படாமல் அவர்கள் 'சிறப்பு சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு' செல்ல வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசு போட்ட ஆணைக்கு விரோதமாக இந்தப் போக்கு இருக்கிறது. ஒருவரை 'ரெகுலரைஸ' செய்துவிட்டு, பின்னர் ஏதாவது சிக்கல் ஏற்படுமானால், தேவையான ரிலாக்சேஷன் கொடுப்பது சர்விஸ் கமிஷனுக்குப் புதிதல்ல. இப்படி பல்வேறு முன் உதாரணங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது, ஏன் இந்தக் கல்வித் துறைக்கு ஒரு ரிலாக்சேஷன் கொடுக்கக் கூடாதா? அப்படிக் கொடுத்தால், சர்விஸ் கமிஷனின் தரம் குறைந்துவிடுமா? ஆகவே, ரிலாக்சேஷன் கொடுத்துவிட்டு அரசு வழங்கியிருக்கும் இந்த ஆணையைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளில் பல மைனாரிட்டி பெயரில் இருக்கின்றன. தனியார் பள்ளிகள் என்று சொன்னாலே, 'Several of them are business concerns என்று கோத்தாரி கல்விக் கமிஷன் கருத்து தெரிவித்திருக்கிறது. இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி போன்ற பல்வேறு முன்னேறிய நாடுகளிலே இருக்கின்றவர்கள் இந்தியா பூராவும் இரண்டாண்டு காலம் சுற்றி, நிலைமைகளை ஆராய்ந்து ஒரு ரிப்போர்ட் வழங்கியிருக்கிறார்கள். அந்தக் குழு மத்திய அரசு போட்ட குழு. அவர்கள் "Several of them are business concerns என்று தெளிவாக அறிக்கையில் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு இவர்கள் மேல் என்ன கோபம் இருக்கிறது? ஒரு கோபமும் இல்லை. அவர்கள் உண்மை நிலைமையை அறிந்தார்கள், சொல்கிறார்கள். இதைச் சொல்லும்போது சிலருக்குக் கோபம் வருகிறது. உண்மைகளைச் சொல்லும்போது, அதனால் பாதிக்கப்படுவதாக நினைப்பவர்கள் சில நேரங்களில் கோபமடைகிறார்கள். அதைப்பற்றி இந்த அரசு கவலைப்படக் கூடாது. ஒரு கல்விக் குழுவின் அறிக்கையில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, இதைக் கவனத்திலே கொண்டு மைனாரிட்டி பள்ளிகளிலே இருப்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இன்றையதினம் அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. பண்ணைகளிலே வேலை செய்கின்றவர்களுக்குக்கூட பாதுகாப்பு இருக்கிறது. இன்றையதினம் தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதற்கு நான் பின்னாலே வருகிறேன். அந்தமாதிரி வாக்குறுதி இந்த ஆசிரியர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மைனாரிட்டி தனியார் பள்ளிகளைப்பற்றி ஆந்திரா மாநில வழக்குகளில் சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில், மைனாரிட்டிப் பள்ளி ஆசிரியர்களுக்கான தனிச் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும் அல்லது இப்போது இருக்கும் சட்டத்தைத் திருத்துவது மிகவும் அவசியம் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே இந்த அரசு கொண்டு வந்த சட்டத்தில் சில பகுதிகளை, பகுதிவாரியாக 4-ல் இருந்து

8 வரை, 8-ல் இருந்து 22 வரை என்று, மொத்தமாக இதெல்லாம் செல்லாது என்றும், தனியார் பள்ளிகளில் அக்கிரமம் செய்ய இந்த நாட்டில் வழிவகை செய்யப்படுகிறது என்றும் சொல்கிறார்கள். இப்போது தனியார் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய திரு. குலாம் முகமது என்ற ஆசிரியருக்குப் பாதுகாப்பு இல்லை. திரு. அப்துல் வகாப் என்று சொல்லக்கூடியவர் அங்கே மானேஜராக இருந்தால், அவருக்குப் பாதுகாப்பு இருக்கிறது. ஏன் இந்த நிலை? இது என்ன நீதி? இப்படியும் ஒரு சட்டம் இருக்க வேண்டுமா? அப்படிப்பட்ட சட்டம் இருக்கக்கூடாது என்று இந்த அரசு ஒரு திருத்தத்தைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மைனாரிட்டியினருக்கு இருக்கக்கூடிய கல்விச் சலுகைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. பள்ளிகளை நடத்தக்கூடியவர்களை எடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இன்னும் இந்த நாட்டிலே முன்னேற்றம் ஏற்படும்போது, தாங்கள்தான் இந்தப் பள்ளிகளின் வாரிசு என்ற நிலைமை நிச்சயமாகத் தூக்கியெறியப்படும். அந்த நிலைமை ஏற்படும்போது, அதை எதிர்த்து அவர்கள் நிற்க முடியாது. ஆனால் இன்றைக்கு மைனாரிட்டி தன்மை என்ற பெயரால் அவர்கள் நினைத்தவுடனே ஆசிரியர்களை வெளியேற்றுகிறார்கள். அதை எதிர்த்து அப்பீல் செய்தால், தள்ளுபடியாகும். எங்களுக்குத் தலையிட வாய்ப்பில்லை என்று பதில் வருகிறது. இந்த நிலையை ஆசிரியர்கள் எங்கே போய்ச் சொல்வது? எப்படிச் சொல்வது? அந்த மைனாரிட்டி ஜாதியைச் சார்ந்த, மொழியைச் சார்ந்த, மதத்தைச் சார்ந்த ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. மேனேஜர்கள் அக்கிரமம் செய்கிறார்கள். இதற்கு ஒரு முடிவு வேண்டாமா? கல்லூரி ஆசிரியர்கள்கூட வரும் 26 ஆம் தேதி மத்திய அரசு அலுவலகங்களுக்கு முன்னால், மைனாரிட்டி உரிமைகளை வைத்துக்கொண்டு ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்காத சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று போராட திட்டம் வகுத்திருக்கிறார்கள். எல்லா ஆசிரியர்களும் ஒன்றுசேர்ந்து எங்களுடைய கருத்தை ஒட்டுமொத்தமாக எழுப்ப இருக்கிறோம். இந்த அரசின் கருத்தைத் தெளிவாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு அறிவிக்க வேண்டும். இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இந்த அரசு ஏற்கெனவே கொண்டுவந்த சட்டத்தைக் குற்றுயிரும் கொலையுயிருமாக ஆக்கிவிட்டார்கள். அந்தச் சட்டத்தினுடைய பல பிரிவுகள் தூக்கியெறியப்பட்டுவிட்டன. இன்றைக்கு ஒரு மாநில அரசு சுப்ரீம் கோர்ட்டிலே சென்று நின்றுகொண்டிருக்கிறது. கோர்ட்டுக்குப் போய் ஓராண்டுக்கு மேலாகிறது. இன்னும் அந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இது என்ன நியாயம்? என்ன சமுதாய நீதி? ஆசிரியர்களுக்கு வேலையில்லாத நிலைமை . . . . . .



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் நீதி மன்றத்தில் இருக்கும் பிரச்சினை பற்றி விரிவாகப் பேச வேண்டாம்.

**திரு. செ. முத்துசாமி :** நினைவு படுத்தவேண்டும் என்று . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இல்லை. வேண்டாம். விரிவாகப் போக வேண்டாம் என்று சொல்கிறேன். நீதிமன்றத்தில் இருக்கும் பிரச்சினை பற்றிப் பேசும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** பொதுவாக நீதிமன்றங்களைப்பற்றிப் பேசும்போது, தீர்ப்புகளுக்கு உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது. அதை நான் நன்றாக அறிவேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போது தீர்ப்பு ஆகாத நிலைமையிலே இருப்பதைப்பற்றி விவாதிக்கக் கூடாது.

**திரு. செ. முத்துசாமி :** அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் மனிதாபிமான அடிப்படையில் சில கேஸ்களை விரைவாகத் தீர்க்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டுக்கு ஒரு டிரெக்ஷன் கொடுத்து விரைந்து இத்தனை நாட்களுக்குள் தீர்க்க வேண்டும் என்று சொல்லும் அதிகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசுக்கு உண்டு. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இதற்கு ஒரு முடிவு காணுங்கள். இதுதான் நான் கேட்டுக்கொள்வது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுக்கு இந்த அதிகாரம் இல்லையென்று நான் சொல்லவில்லை. அப்படிச் செய்ய வேண்டாம் என்று நான் சொல்லவில்லை.

**திரு. செ. முத்துசாமி :** பாதிக்கப்பட்டவர்களின் வேதனையைப் பார்க்கும்போது, இந்த வேகம் வருகிறது. ஐயா அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் என்னுடைய அறைக்கு வரும்போது, அவர்கள் கண்ணீர் விட்டுப் பேசும்போது, எங்களால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இந்த இடத்தைத் தவிர எங்களுடைய உணர்ச்சிகளை வெளியிட வேறு வழியில்லை. அதனால்தான் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் இங்கே இருந்தால், எனக்கு இருக்கிற சங்கடத்தை உணர்வார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** தனியார் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்கள் இப்போது ஒரு பஞ்சாயத்திலிருந்து இன்னொரு பஞ்சாயத்துக்கு டிரான்ஸ்பர் ஆகி வர விரும்புகிறார்கள். கணவனும் மனைவியும் ஆசிரியர்களாக இருந்தால், அவர்கள் வெவ்வேறு இடத்திலே இருக்கிறார்கள். ஒரு பள்ளிக்கூடத்திலே இருப்பவர்கள் இன்னொரு பள்ளிக்கு வர விரும்புகிறார்கள். ஒரு பள்ளியில் இருந்து 'ரிசைன்' பண்ணிச் செல்லும்போது, அதே சம்பளம்தான் அவர்கள் அந்தப் பள்ளியிலும் பெறுகிறார்கள். ஆகவே, இரண்டு பள்ளிகளிலும் இருக்கும் ஆசிரியர்கள் விரும்பினால், அவர்களை மாற்றல் செய்ய ஒரு 'ப்ரொவிஷன்' ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வதில் ஒரு சிக்கலும் இல்லை. ஒரு பள்ளியில் இருக்கும் மானேஜர் எடுத்துக்கொள்ள விரும்புகிறார். இன்னொரு பள்ளியில் இருக்கும் மானேஜர் அனுப்ப விரும்புகிறார். ஆகவே, இந்தமாதிரி விஷயங்களில் அரசு தகுந்த உத்தரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-00)

தற்போது பள்ளிகளில் மணவர்களின் அட்மிஷன் நடந்து கொண்டிருக்கிற நேரம் என்பதால், இந்த நேரத்தில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். நாட்டுப்புறத்தில் பயிலும் மாணவர்களுக்கும், நகர்ப்புறத்தில் பயிலும் மாணவர்களுக்கும் இடையே இருக்கும் சூழ்நிலைகள் வேறு வேறானவை. நாட்டுப்புறத்தில் பயிலும் மாணவர்கள் தனியான சூழ்நிலையிலும், நகர்ப்புறத்தில் பயிலும் மாணவர்கள் வேறொரு சூழ்நிலையிலும் கல்வி கற்கிறார்கள். அவர்கள் இருவரும் ஒரே புத்தகத்தைப் படித்து, ஒரே சிலபசைப் படித்து வந்தாலும், இருவருக்கும் இடையில் இருக்கிற சூழ்நிலை மாறுபட்டதாகும். இந்த நிலையில் மாணவர்களுக்கு குறியீடுகளை 10, 20 என்று போடுவது எந்த வகையிலும் தர்மமில்லை. ஜனநாயக அரசு இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டுப்புறத்தில் படிக்கும் மாணவர்களுக்கு 10, 20 மார்க்குகள் குறைந்திருந்தாலும், அவர்களெல்லாம் பாலிடெக்னிக்குகளிலும், மற்ற கல்லூரிகளிலும், எஞ்சினீயரிங் கல்லூரிகளிலும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். 10, 20 மார்க்குகள் நாட்டுப்புறத்தில் பயின்ற மாணவர்கள் குறைவாக வாங்கியிருக்கிற காரணத்தால், அவர்களின் திறமையை மார்க்குகளை வைத்து மதிப்பிடக் கூடாது. முன்னாள் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்களேகூட இதைப்பற்றி ஆராய்ந்து, முன்னேறிய நாடுகளில் கூட இவ்வகையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறித்துப் புள்ளிவிவரத்தை வழங்கியிருக்கிறார்கள். நகர்ப்புறங்களில் இருக்கும் வாய்ப்புகளும் வசதிகளும் நாட்டுப்புறத்தில் பயிலும் மாணவர்களுக்கு இல்லை. போதிய அளவுக்கு 'எக்விப்மெண்ட்ஸ்' இல்லை, விஞ்ஞானக் கூட வசதிகள் இல்லை. இந்த





நிலையில் நாட்டுப்புற மாணவர்கள் நகர்ப்புற மாணவர்களோடு போட்டிபோட்டு முன்னேற முடியாது. இந்த வித்தியாசம் காரணமாக நாட்டுப்புறங்களில் பயிலும் மாணவர்களுக்கு தனிக் கோட்டா அமைத்தாவது, அல்லது அதற்காக அதிகப்படியான மார்க் அளித்தாவது அவர்களுக்குக் கூடுதலான இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அண்மையில் வெளியான எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் ஹையர் செகன்டரி தேர்வுகளைப் பார்த்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் கருத்து முழுவதும் சரியானதாகத் தோன்றவில்லை. பொதுவாக அந்தத் தேர்வுகளில் முதலிடம் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் பார்த்தால், தமிழ் நாட்டிலேயே முதல் மாவட்டமாக விருதுநகர் மாவட்டம் வந்திருக்கிறது. ஆக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற அளவுக்கு அல்லது நினைக்கிற அளவுக்கு வித்தியாசம் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்துக்களில் பல்வேறு கருத்துக்கள் உண்மையானவை என்றாலும், அப்படிப்பட்ட சிக்கலைத் தீர்க்க நாம் வேறு காரியங்களைத்தான் செய்ய வேண்டுமே தவிர, சட்ட பூர்வமாக கோட்டா ஒதுக்கீடு செய்ய சட்டத்தில் இடமில்லை. அடிப்படை உரிமை என்ற பெயரால், அனைவரையும் சமமாகத்தான் பார்க்கவேண்டும் என்றிருக்கிறது. இதற்கு முன்னாலிருந்த அரசேகூட இத்தகைய முயற்சி ஒன்றை மேற்கொண்டு கடைசியில் அது கோர்ட்டுக்குப் போய் அது செல்லுபடியாகாது என்று சொல்லப்பட்டுவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தற்போது மாணவர்களுக்கு இருக்கும் அல்லலைச் சொல்லிவிட்டேன். அதற்கு எந்த முறையில் தீர்வு காணப்பட வேண்டுமோ அதற்கான வழிவகைகளைத் தேட வேண்டியது அரசின் பொறுப்பு. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான வழிவகைகளைக் காண வேண்டும் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் இந்த அரசுக்கு அக்கறை இருக்கிறது என்பதையும் நான் அறிவேன். கடந்த காலத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இத்தகைய கோட்டா முறை கொண்டு வரப்பட்டு, அது கோர்ட்டுக்குப் போய் அடிபட்டது என்பது உண்மைதான். ஆனாலும், இருக்கிற சிக்கலுக்கு வேறு வகையில் தீர்வு காண வேண்டியது அரசின் பொறுப்பாகும். அந்த வழிமுறையை ஆராய்ந்து அதைக் கொண்டுவர வேண்டியது அரசின் கடமை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1980 ஜூலை 21

அடுத்து, எஸ்.எஸ்.எல்.சி. படித்து புலவர் பட்டம் பெற்றவர்கள் பட்டம் பெறுகிறார்கள். அத்தகைய ஆசிரியர்களுக்கு எந்தவிதமான இன்செண்டிவ்வும் கிடையாது. ஆனால் பி.டி. ஆசிரியர்கள் பாஸ் செய்தால், அவர்களுக்கு இந்த இன்செண்டிவ் வழங்கப்படுகிறது. பி. டி. ஆசிரியர்களுக்குச் சமமான புலவர் பட்டம் பெற்றால் அவர்களுக்கு இன்செண்டிவ் கிடையாது என்பது சரியல்ல. ஒரே சம்பளம், ஒரே மாதிரியான புரமோஷன் இருக்கும்போது, இந்த இன்செண்டிவ் மட்டும் கிடையாது என்பது சரியல்ல. எனவே புலவர் பட்டம் பெற்றால், அவர்களுக்கும் இன்செண்டிவ் வழங்க உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளில் அவர்கள் தலைமை ஆசிரியர்களுக்கு அசிஸ்டெண்டாகப் பணியாற்றும்போது, அவர்களுக்கு ரூபாய் 15 சிறப்பு ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அதே பட்டதாரி ஆசிரியர்கள் நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றும்போது, எந்தவிதமான சிறப்பு ஊதியமும் இல்லை என்பது எந்த வகையிலும் நியாயமில்லை. எனவே அவர்களுக்கும் சிறப்பு ஊதியமாக மாதம் ரூபாய் 15 அல்லது 25 வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசின் தொழிலாளர் நலன் குறித்த கொள்கையை விளக்கும்போது, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல கருத்தை இந்த அமைச்சரவையின் கருத்தாகச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது "வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு முதல் 90 நாட்களுக்கு 50 சதவீதம் ஊதியத்தையும், முதல் மூன்று முதல் ஆறு மாத காலம் வரையிலும் 75 சதவீதம் ஊதியத்தையும், ஆறு மாதங்களுக்கு மேல் முழுச் சம்பளத்தையும் பிழைப்பு அலவன்சாக வழங்குவதற்கு வழிவகை செய்யப்படும்" என்று தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களைக் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தொழிலாளர் நலனில் இந்த அமைச்சரவையின் இந்தக் கருத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால் கல்வித் துறையிலும் மற்ற துறைகளிலும் இருக்கிற நிலைமை என்ன? இங்கே இருக்கிற அதிகாரிகளில் பலர் பல நேரங்களில் ஊழியர்களை ஆறு மாதத்திற்கு மேலாகவும் தற்காலிக வேலைநீக்கத்தில் வைத்துவிடுகிறார்கள். அவர்களுக்கு எந்த விதமான அலவன்சும் தரப்படுவதில்லை. ஆண்டுக்கணக்கில் பல அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும், தற்காலிக வேலைநீக்கத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் காலத்திற்கு அவர்களுக்கு எந்தச் சம்பளமும் அலவன்சும் வழங்கப்படாத நிலை இருக்கிறது. தொழிலாளர்கள் நலனில் அக்கறைகொண்டு இந்த



1980 ஜூலை 21] [திரு. செ. முத்துசாமி]

அறிவிப்பைச் செய்திருக்கிற இந்த அரசு அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்தக் கொள்கையை அமுல்படுத்த வேண்டும், அந்த நல்லெண்ணத்தை இவர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலாளிகள் தொழிலாளர்களுக்கு இத்தகைய சலுகையைச் செய்ய வேண்டுமென்று அரசு கருதும்போது, அரசு தன் ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் இச்சலுகையை வழங்க முன்வரவில்லை என்றால், எப்படி நியாயமாகும்? தனியார் பள்ளியில் ஆசிரியர் ஒருவர் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டால், அதுபற்றிய வழக்கு டிரிப்யூனலுக்குப் போய் ஆசிரியருக்குச் சாதகமாக ஒரு தீர்ப்பு வழங்கப்படுகிறது என்றால், உடனே அந்த ஆசிரியர் பள்ளிக்குப் போய் பணம் வாங்கிக்கொள்ளலாம் என்று ஆர்வத்தோடு வருகிறார். ஆனால் அதற்குள் அந்த நிருவாகத்தினர் ஹைகோர்ட்டுக்குப் போய் 'ஸ்டே' வாங்கி வந்துவிடுகின்றனர். அந்த அளவுக்கு அவர்கள் மிகச் சுலபமாக 'ஸ்டே' வாங்கி விடுகிறார்கள். மாதக் கணக்கில் பட்டினியாகப் பரிதவிக்கும் அந்த ஆசிரியருக்குப் பணம் கொடுக்க யார் முன்வருவார்கள்? கடன் கொடுக்க யார் முன்வருவார்கள்? சாதாரணமாகச் சம்பளம் வாங்கும்போதே அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் டிரிப்யூனல் உத்தரவின்மீது ஹைகோர்ட்டில் 'ஸ்டே' வாங்கினால், ஏழை ஆசிரியர் என்ன செய்ய முடியும்? எனவே இத்தகைய நிலைமைகளில் 'ஸ்டே' வழங்கக்கூடாதென்று அரசாங்கத்திலிருந்து ஹைகோர்ட்டுக்கு ஒரு டைரெக்ஷன் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர்களுக்கு இந்த அரசு அறிவித்துள்ள இந்த நல்ல திட்டத்தை அரசு ஊழியர்கள் விஷயத்திலும் மற்றுமுள்ள ஆசிரியர்கள், தனியார் பள்ளி ஆசிரியர்கள், பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள், நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் விஷயத்திலும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன் அனுமதியில்லாமல் ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டால், ஆசிரியர்களின் முறையீடு கிடைத்த ஐந்து தினங்களில் நிருவாகத்தினரின் உத்தரவை ரத்து செய்து ஆசிரியர்கள் மீண்டும் பணியில் சேருவதற்கு உரிய உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்க வேண்டும் என்று விதிகளில் தெளிவாக இருக்கிறது. ஆனால் இந்த விதியை மதிக்காமல் ஆசிரியர்களுடைய பணியை இன்றையதினம் 'டெர்மினேட்' செய்கிறார்கள், அவர்களை 'சஸ்பெண்டு' செய்கிறார்கள். அதைப்பற்றி அப்பீல் செய்தால், மேனேஜ்மென்ட்டார் சதி செய்து, அதன்மீது மாதக்கணக்கில் உத்தரவு போடாமல் அதைக் கட்டிப்போட்டு வைத்துவிடுகிறார்கள். அது குறித்தும் அரசாங்கத்திலிருந்து ஒரு டைரெக்ஷன் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே தனியார் பள்ளி ஒன்றிலிருந்து இன்னொரு தனியார் பள்ளிக்கு மாறுதல் கொடுக்க வழிவகை செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தற்போது ஹரிஜன நலப் பள்ளி என்றும், குறவர் நலப் பள்ளி என்றும், மீனவர் நலப் பள்ளி என்றும், கள்ளர் நலப் பள்ளி என்றும் பல்வேறு பெயர்களில் நலப் பள்ளிகள் இருக்கின்றன. இவற்றின் பெயர்தான் நலப் பள்ளிகளே தவிர, அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு உரிய நலன்கள் எந்த வகையிலும் காப்பாற்றப்படுவதில்லை. அங்கே பணியாற்றும் ஆசிரியர்களின் நலன்கள் நாளுக்குநாள் கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. நல்ல பாம்பு என்று பெயர் உள்ள பாம்பு ஒருவரைக் கடித்தால், உடனே விஷம் தாக்கி செத்துவிடுகிறார். இவ்வளவு கொடிய விஷம் உள்ள பாம்புக்குப் பெயர் நல்ல பாம்பு. அதைப் போலவே தமிழில் மிகவும் கறுப்பாக உள்ள ஆட்டுக்குப் பெயர் வெள்ளாடு. இதைப்போல்தான் இருக்கிறது இந்த நலப் பள்ளி ஆசிரியர்களின் நிலைமை. நலப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் நலன் எல்லா வகையிலும் கெட்டுப் போயிருக்கிறது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இதைப்பற்றி நன்றாக அறிவார்கள் என்ற காரணத்தால், அந்த நலப் பள்ளிகள் அனைத்தும் ஒரே துறையின்கீழ் கொண்டுவரப்பட்டு அந்த ஆசிரியர்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இத்தகைய பள்ளிகளில் இன்றைய தினம் நிர்வாகச் சீர்கேடுகள் மிக அதிகமாக இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சைக்கிள் கடன்களைப் பொறுத்தவரையில், அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இந்தக் கடன் வசதி கிடைக்கவில்லை. கடன் கோரி விண்ணப்பம் போட்டாலும், ஏற்கெனவே நிதி தீர்ந்து விட்டது என்று சொல்லி விடுகிறார்கள். அங்கே அலுவலகத்தில் பணியாற்றும் சிலருக்கு மட்டும் இந்தக் கடன் வசதி கிடைக்கிறது. 100 ஆசிரியர்களுக்குமேல் பணியாற்றும் நாமக்கல் தெற்குப் பள்ளியிலும், ஆத்தூர் பள்ளியிலும், 90 ஆசிரியர்களுக்கு மேல் பணியாற்றும் பவானி பள்ளியிலும் இத்தகைய நிலைமை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இந்தக் குறையைப் போக்க வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது உடற்கல்வி இயக்குநர்கள் தங்கள் உரிமைகளைக் கோரி போராடப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். தற்போது உடற்கல்வி இயக்குநர்களுக்கு 200 இடங்களை அனுமதித்திருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் (மணி ஆறுத்தார்)** : மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும். மணியடித்த பிறகும் ஒவ்வொருவரும் பேசிக்கொண்டே போனால் எப்படி அவையை நடத்துவது? உறுப்பினர் மிக விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி** : நிதித் துறையின் அனுமதியைப் பெற்று சென்ற ஆண்டே ஒரு ஆணையை கல்வித் துறை பிறப்பித்தது.

"The Government accept the recommendation of the Director of School Education and accord sanction for upgrading of the 400 posts of Physical Education Teachers, to Physical Directors in the Higher Secondary Schools under all kinds of managements in the scale of Rs. 600-30-750-35-800-40-1,050 plus usual allowances admissible from time to time. The Government prescribe the following qualifications for the Physical Directors in the Higher Secondary Schools :—

B.A., B.Sc., B.Com. plus a Degree in Physical Education or equivalent Diploma. ".

மேலும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

" The Director of School Education is authorised to identify and to convert the post according to availability of the qualified persons in the School. "

இப்படி நிதித் துறையின் அனுமதியோடு பணம் வழங்கப்பட்ட இந்தப் பணியிடங்கள் நிரப்பப்படவே இல்லை. சென்ற ஆண்டு இவ்வாறு அனுமதிக்கப்பட்ட 400 இடங்களில் உடற் பயிற்சி இயக்குநர்கள் நியமிக்கப்படவில்லை. எனவே அந்த 400 இடங்களோடு தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 200 இடங்களையும் சேர்த்து ஆக மொத்தம் 600 இடங்களிலும் உடற்கல்வி இயக்குநர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு ஊதியக் குழு சிபாரிசு செய்து கல்வித் துறையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உடுமலைப்பேட்டையில் 2,900 மாணவர்கள் படிக்கும் ஹையர் செகண்டரி பள்ளி ஒன்று இருக்கிறது. அங்கே 935 மாணவிகள் படிக்கிறார்கள். ஒரு ஹையர் செகண்டரி பள்ளியில் இவ்வளவு அதிகமான பெண்கள் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு நடத்துவது என்பது மிகவும் கடினமான காரியமாகும். திரு. கிருஷ்ணசாமி என்ற தலைமை ஆசிரியர் மிகத் திறமையாக அதனை நிருவகித்து வருகிறார். அங்கே ஒரு ஸ்டிரைக்கூட இல்லை.

[திரு. செ. முத்துசாமி] [1980 ஜூலை 21

(பிற்பகல் 5-10)

ஆனால் அவர்கள் இன்றைக்கு டி.ஈ.ஓ.வாக ஆகிவிட்டார்கள். பெண்கள் பள்ளி ஒன்று வேண்டுமென்று கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். ஆகவே உடுமலைப்பேட்டையில் ஒரு பெண்கள் பள்ளியை உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்படவில்லை. இப்போது மேலும் ஒரு வகுப்பு கூடியிருக்கிறது. ஆகவே மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக நிதி ஒதுக்க வேண்டும்.

தமிழாசிரியர்கள் எம்.ஏ. பாஸ் பண்ண வழிவகை இருக்கிறது. ஆனால் மலையாளப் பண்டிதர்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லை. கூடலூரில் உள்ள மலையாளப் பண்டிதர்களின் சார்பாக நான் டெபுடி செகரட்டரி அவர்களைக்கூட பார்த்தேன். நான் ஒரு பிராது கொடுத்திருக்கிறேன். தமிழாசிரியர்கள் எம்.ஏ. தேர்வு எழுதலாம், ஆனால் மலையாளப் பண்டிதர்கள் எம்.ஏ. தேர்வு எழுத முடியாது என்ற நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கும் இந்தச் சலுகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழாசிரியர்களுக்கு எந்தச் சலுகையை வழங்குகிறார்களோ அதே சலுகைகளை தெலுங்கு பண்டிதர்களுக்கும், மலையாளம் பண்டிதர்களுக்கும், உருது முன்ஷிகளுக்கும்—இவர்கள் எல்லாம் சேலம், தர்மபுரி, நீலகிரி மாவட்டத்திலே இருக்கிறார்கள்—வழங்க வேண்டுமென்று கேட்டு பேச சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

Thirumathi TARA CHERIAN : Hon. Chairman. Sir, I hope I will not be out of place if I recall the day on the 18th of this month, when India was able to send up in space the satellite launching vehicle, SLV-3 and along with it, the indigenous satellite, 'Rohini', into the orbit. Our country is the sixth in the world to have successfully achieved such a feat. Thousands of technicians, scientists and others have co-operated and collaborated in this experiment and have made it a success. I am very happy to convey, through you, Mr. Chairman, our congratulations to those who took part in this great achievement of India. In this connection, I would like to state that while Tamil is to be given the most important place, the English language also has got to be given prominence. In the sending of the SLV-3, scientists from all over the country got together. Besides other things, this was possible because of the English lan-



1980 ஜூலை 21] [Thirumathi Tara Cherian]

guage also. In the Policy Note, the Hon. the Education Minister has stated that the Government are making use of the training institutions to train our teachers so that they could teach English in a better way. In this, the British Council is also being made use of. Everyday, we see in the papers news about taking up big schemes and projects. My desire is that the young people of Tamil Nadu should take part in all those things. That would be possible only if our standard of education is made to be on a par with that in other States.

Sir, I have always been interested in Education and particularly the education of women and children. I have had opportunities to watch closely, along with my husband, the education policy of Tamil Nadu, the composite State of Madras as it was known then. I have been able to know about the education policy of Maharashtra State also. I am glad that the Hon. the Education Minister has given us a Policy Note on Education which is more comprehensive and elaborate than even the Budget Speech. From the Policy Note, we are able to pinpoint and find out the schemes that we have and the amounts that are being given as Grants for various fields of education. While I congratulate the Government on their making the biggest allocation of funds for Education, I feel that there is still scope to increase that allocation.

Sir, I would like to bring one point to the notice of the Hon. Minister and I hope that it will be taken in the spirit in which I am saying it. I find that there is at present a reservation of 50 per cent for Backward Classes and 18 per cent for Scheduled Castes and Scheduled Tribes. This leaves only 32 per cent for other students of merit. This type of reservation, I feel, will result in an overall lowering of our educational standards with consequent deterioration in our overall progress. I feel that it would be desirable to provide special educational facilities for students belonging to the Backward Classes, Scheduled Castes and Scheduled Tribes. The Government are allotting a lot of money for opening new schools and for providing new buildings to schools. They can have at least one or two schools, perhaps up to the level of the middle school, where special educational facilities could be given to these students. Later on, they can join the

existing general schools after suitable eligibility tests. This system will be much better than having this 50 per cent reservation for Backward Classes.

Sir, the other day I happened to know that a girl who had secured very high marks and who was eligible for any group had gone to a City College for admission and her request had been turned down even in respect of History Group for the simple reason that irrespective of her high marks, she did not belong to the Backward Class and that 50 per cent of the seats had been reserved for candidates belonging to the Backward Class. Therefore, my humble opinion is that if possible, the economically backward people should also be included in the list of Backward Classes for the purpose of reservation of seats, and the percentage of seats kept for forward classes should be retained as in the olden days. They are classified as forward classes for no fault of theirs. Simply for the reason that they belong to forward classes, they are not given admission in the Colleges. I think it is very unfair. A very good number of students who are bright in their studies and who have done wonderfully well in the examinations have all been kept out because of reservation of 50 per cent for Backward Classes. May I ask the Hon. the Minister for Education to let us know whether the same kind of reservation is made in other States also and whether all the States follow a uniform policy in the matter?

The Hon. THIRU C. ARANGANAYAGAM: Sir, in all the other States, it is being followed.

THIRUMATHI TARA CHERIAN: Excuse me, Sir, I think the system of reservation is not uniform in all the States. It will be better if we have a uniform policy in the matter. If the Government want to increase the number of seats that will be available for the Backward Classes, the Government should increase the number available for forward communities also. I hope I will be forgiven; but only in this House after I became a Member of this House, I was able to hear Thiru A.R. Damodaran speaking and to appreciate his intellectual capacity. I do



not know whether he belongs to the Backward Class. There are very many people belonging to the Backward Class who are very rich, who are employed as Doctors and Engineers, and who have the wherewithal to educate their children in the best institutions.

Thiru G. SWAMINATHAN: My hon. Friend Thiru Damodaran belongs to the backward community.

திருமதி தாரா செரியன்: எனக்குத் தெரியாது. பார்த்தால் தெரிய வில்லை. எப்படிக் கண்டுபிடிப்பது என்பது தெரியவில்லை.

Thiru A. R. DAMODARAN: Sir, my community "Thuluva Vellala" has been classified as a backward community. Even in my speech the other day, I have mentioned that I do not believe in this 50 per cent reservation for backward communities and that although I belong to that community, that does not mean that the forward community should be suppressed.

Thirumathi TARA CHERIAN: Thank you. The same is the case with me also. I belonged to a backward community till I became a Christian. Once I became a Christian, I have not been given any reservation nor did my children get any reservation. Anyway, I have passed the innings and all my children have finished education and have become happily married. Only my grandchildren are there and there will be my great-grand children, if I get an opportunity. I appeal to the Hon. the Minister for Education not to have 50 per cent reservation for Backward Classes because, by doing so, the Government are blocking the progress of the talented and outstanding children. Ultimately we will not be able to get our proper place in the comity of different States and progress will not be possible if we adopt reservation on community basis.

I think everything is being done in a hotch-potch way and it will not be good for our progress. If the Government want, they may extend all facilities for the education of the people belonging to Scheduled Castes and Tribes and they may even give them clothing and food. At the same time, the Govern-

ment should not deny the opportunity for education to those who have done wonderfully well, simply because they are forward community people.

(பிற்பகல் 5-20)

The recruitment of teachers should be done both through applications received in response to advertisements and from among candidates sponsored by Employment Exchanges and only the best should be selected. The people who are unemployed may have registered their names with the Employment Exchanges. Whenever they get employment, their names should be struck off the lists in the Employment Exchanges. Government should try to give employment only to those whose names are in the lists in the Employment Exchanges. Besides, there may be many others who may not have registered their names with the Employment Exchanges but who have got the requisite qualifications. Therefore, I feel that in the matter of recruitment of teachers, the restriction of selection to only those who have registered their names with the Employment Exchanges should be withdrawn.

Sir, the other point which I would like to make is that aptitude tests should be held for admission both to the academic and vocational courses of study so as to streamline the admission to these courses. Now, we have got both the vocational and the academic courses of study. The candidates' marks alone would not be enough to decide upon the suitability for admission to the vocational courses. Just as there are other All-India examinations, we should also hold aptitude tests so that the candidates seeking admission to vocational courses could prove their ability and aptitude to study those subjects.

Similarly, admission to Graduate-level courses in professional colleges should also be made through entrance tests, as is being done by national institutions. This will ensure the more suitable being selected for these very costly courses. Now, to give medical education to a person costs nearly one lakh of rupees. We find from today's papers that nearly 80,000 doctors are surplus in our country. Therefore, I would appeal to the Hon. the Education Minister to have a kind of entrance examination



for admission to the professional courses. The admission to such courses should not be done keeping as criterion first-class marks in the Higher Secondary Examination. Instead, there should be an entrance test so as to choose the people with the correct aptitude for these professional courses. The S.S.L.C. Examination or the Higher Secondary Examination will only certify the completion of a phase in the candidate's education and will not serve as a qualifying Examination.

Sir, in the Policy Note it has been stated that the teacher—pupil ratio has been comparatively better. I have visited some schools and I think that the present ratio is somewhere around 1 :50 or 1 :60. I think that the best thing would be to have a teacher-pupil ratio of 1 :35. In that case, the teacher can bestow more attention on the students and the school equipments can also be put to proper use.

Sir, I now come to the subject of Special Education. Now that the Hon. the Education Minister is here, I would like to raise my voice a little on this subject. Special Education should be expanded so as to cover all types of neglected and handicapped children. Government in the Social Welfare Department are affording facilities to certain types of physically handicapped children. But, blind children and mentally retarded children are also part and parcel of society. It is no fault of theirs to have born as blind children or as mentally retarded children. Many people do not understand the fact that mentally retarded children are not insane people. They can be educated and rehabilitated and they can become part of society. Therefore, at least from the next year, the education policy of our State should have in it a school curriculum as well as Budget allotment for the education of handicapped children including blind and mentally retarded children. In some of the countries I have visited, I have found the teachers for handicapped children to be better trained, having better equipment and, above all, having the patience and the humanitarian attitude.

Sir, I could not follow what the hon. Member Thiru Muthusami mentioned about schools run by religious minorities. I could not fully understand it but I think that he mentioned something about discrimination and things like that. But, Sir, one

swallow does not make a summer. There are hundreds of schools which are run by different minority communities and which are run unaided by the Government. I know of a Medical College in another State which took a capitation fee of not less than Rs. 5,000/- per candidate. People flocked to that institution because we closed the doors of our medical colleges and nobody, at that time, started saying anything. If people could afford to pay, they pay and get their children admitted in medical colleges. Sir, I have never been parochial. But, the minority classes have done so much for education from the elementary school level to the college level. Should we not take our hats off and pay compliments to the different missionaries, the Ramakrishna Mission, the Protestant and Catholic institutions who have raised the level of education? If they do anything wrong, the Hon. the Education Minister can have them on the mat and see that the wrongs are rectified. If anything bad is done, they can be punished. But, to make a general statement about some institution run by a minority class having done something is not very fair.

Sir, I have a student in one of our Colleges in Madras City and at that time we did not have N.S.S. and the like but we had only the Social Service Organisation. In my opinion, for participation in social welfare, etc., the students should not be awarded marks or grades because they should be made to involve themselves in the work in a voluntary manner. Further, the evaluation of such work will not be possible. If I find a child involved in an accident on the road and I take him to the hospital for treatment, are the Government going to give me a medal? I do such service because it could have been my child tomorrow. How can such service be evaluated and marks or grades given? I feel it is not fair also and I hope the Hon. the Education Minister will see that humanitarian spirit is kindled in every student and that the student likes to involve himself or herself in social service, without any time to get marks or grades.

In the end, Sir, I have already pleaded for the inclusion of economically backward classes also in the list of Backward Classes and the retention of the former ratio of reservation for Backwared classes . . .



*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* அங்கத்தினர் அவர்கள் முடிக்க வேண்டிய நேரம் முடிந்துவிட்டது. சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும்.

THIRUMATHI TARA CHERIAN : Sir, I will take only two minutes more.

We still follow the old British system of education as well as administration and we want only Graduates for the white-collar jobs. Therefore, everybody who wants to take up Government service has to become a Graduate. I think such a stipulation should not be there. When a person completes his High School study, the course should be bifurcated and the student should be taken through the courses which will be useful. Those who wish to enter Government service could be given separate training for the same. By admitting a large number of students in the Colleges, we are only lowering the standard of education in our Colleges. If we admit those who have the aptitude for higher education, then the standard will be high. It will be much better than making everybody enter the College and having students who have no aptitude for College education. By adopting such a method, we can have better people in our Colleges and our Graduates will have a good standard.

During my Mayoralty, I was able to give good food to the children under the Midday Meals Programme. Everywhere there is a chance for improvement. Education is a continuous process and we can expand our work by opening more schools, giving free education and meals and everything. Voluntary organisations help us in a big way and they also run schools and colleges. If some more money is given to them as grants, they will be in a position to do the work in a much better way.

(பிற்பகல் 5-30)

Sir, I do not have many more points to make. In the Policy Note, mention has been made about drop-outs. There is a reason for poor parents taking their children off the schools. In such families, the mothers want the school-going children to look after the other small children. Therefore, they take the school-going children out of the school. If the elementary schools have a free playground or a 'Balwadi', the small children can

remain playing there while the elder children can study in the class-rooms. After the classes are over, the elder children can take the younger children along with them to their homes. If such an arrangement is there, I am sure the mothers will not take their school-going children out of the schools.

Sir, I hope that the suggestions made by me will be taken in the spirit in which I made them. Of course, the Hon. the Education Minister and the Education Department have taken a lot of trouble in preparing the Policy Note. Before concluding my speech, I would like to reitrate that having 50 per cent reservation for Backward Classes is very unfair and I do pray that something should be done for that.

Thank you.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவரவர்களே, கல்விக் கொள்கை மீதான விவாதத்தில் பங்குகொள்ள வாய்ப்பு கிடைத்தமைக்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் தலைமை)

224 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பெருந்தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பெருந்தொகையை ஒதுக்கியிருந்தும்கூட, இது போதுமானதாக இல்லை என்று சொல்லும் நிலைமை மறுபுறம் இருக்கிறது. காரணம், கல்வியின் தேவை அந்த அளவிற்கு அமைந்திருக்கிறது தமிழ் நாட்டிலே. கல்விக்குத் தேவை அதிகமாக அதிகமாக, கல்விக்கு நிதி ஒதுக்கீடும் அதிகமாக வேண்டுமென்பது பொது மக்களுடைய விருப்பம். அதை நிதி இலாக்காவினர் மனத்திலே கொண்டு நிதி ஒதுக்கீட்டில் அனுதாபத்துடன் செய்ய வேண்டுமென்று முன்பே நிதிக் கொள்கை விவாதத்தில் நான் குறிப்பிட்டுச் சொன்னதை, மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இந்த நாட்டிலே கல்விக்காக ஒதுக்கப்படும் தொகை எத்தனை கோடி ரூபாயாக இருந்தாலும், அது எதிர்கால சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்காகச் செலவு செய்யும் தொகை என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

Education is a national investment,

கல்விக்காகச் செலவு செய்யும் தொகை தேசிய முதலீடு என்பதை மனத்தில் கொண்டு, மேலும் கல்விக்காகப் பெருந்தன்மையுடன், தாராள மனப்பான்மை





யுடன் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். ஆக, தமிழகத்தின் எதிர்கால சமுதாயம் நல்ல முறையில் வளர வேண்டுமென்றால், இன்றைய சின்னஞ்சிறு குழந்தைகள் அவர்களது எதிர்காலத்தில் நாம் படும் இன்னல்களைத் தவிர்த்து, நல்ல முறையில் வாழ வேண்டுமென்றால், அவர்களுக்கு நல்ல கல்வி தர வேண்டும். அதற்காக எவ்வளவு செலவு செய்தாலும் தகுமென்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஒதுக்கிய தொகைக்காக நன்றி செலுத்தும் நேரத்திலே, இன்னும் அதிகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற மனப்பான்மை வளர வேண்டுமென்று இந்த சமயத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்விக் கொள்கைக் குறிப்பிலே, சாதனைகளைக் கோடிட்டுக் காட்டும் போது, 1 முதல் 3 ஆம் வகுப்புவரை மாணவர்களைத் தோல்வி அடையச் செய்யக்கூடாது என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலமாக பள்ளிக்கூடத்திற்கு வருகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை முன்பெல்லாம் குறைந்து கொண்டிருந்ததை, இப்போது தடுத்து நிறுத்தியிருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. Drop out குறைக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு கல்வியாளன் என்ற முறையில் சொல்கிறேன், தேர்வு முறை மாற்றி அமைக்கப்படலாமென்று சொல்லலாமே தவிர, அனைவரும் தேர்ச்சி பெறலாமென்று சொல்வது சரியா? இன்று 1 முதல் 3 ஆம் வகுப்பு வரை தேர்ச்சி பெறுகிறார்கள். சில மாநிலங்களில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை வைத்திருக்கிறார்கள். இன்னும் சில மாநிலங்களில் 1 முதல் 8 ஆம் வகுப்புவரை தேர்வு இல்லாமலே Promotion கொடுக்கலாமென்று பேசுகிறார்கள். அப்படி மத்திய அமைச்சர் பேசுகின்ற காலம் வந்திருக்கிறது. மாணவர்களின் Drop out -ஐக் குறைக்க தோல்வி இருக்கக்கூடாது என்று சொல்லி Mass Promotion —கூண்டோடு கைலாசம்— என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பது என்பது குறுக்கு வழியாகத்தான் இருக்கும் . . . .

**திருமதி தாரா செரியன் :** இது குறுக்கு வழியல்ல. பல வெளி நாடுகளில் தேர்வு இல்லாமல் இருக்கிறது. இங்கேகூட செமஸ்டர் முறை இருக்கிறது. எல்லாவற்றுக்கும் கட்டுப்பட்டுத்தான் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறோம். மூன்று வருடங்களுக்குத் தோல்வி இல்லை என்று சொல்லுவது சரிதான். பரீட்சையில்லாமல் பிரமோஷன் கொடுப்பதென்பது நம் நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் இருக்கிறது.

They have done good research work and found it useful.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மேலை நாடுகளிலே இருக்கின்ற சூழ்நிலை வேறு, தமிழ் நாட்டிலே இருக்கின்ற சூழ்நிலை வேறு. மேலை நாடுகளிலே கல்வி அற்புதமாக வளர்ச்சியடைந்து, Cent per cent Literacy என்று சொல்லக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறது. அந்த நாடுகளிலே . . .

**திரு. ஜேப்பியார் :** மாற்றுத் தலைவரவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் அழகான தமிழிலே பேசினார்கள். இனிமேல் அவர்கள் பேசுகிறபோது முழுவதுமாகத் தமிழிலேயே பேசுவதற்கு அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாற்றுத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) :** கூடுமான வரையில் உறுப்பினர்கள் குறுக்கீடு செய்யாமல் இருந்தால், உரையாற்றுகிறவர்கள் மிக எளிதாகத் தங்களுடைய கருத்துக்களை, சுருக்கமாகச் சொல்ல வாய்ப்பிருக்கும். எனவே குறுக்கீடு இல்லாமல் இருக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். " இருந்தாலும் நான் குறுக்கீடுகளை வரவேற்கிறவன். அதனால் எந்த வகையிலும் என் பேச்சு தடைப்படாது.

**மாற்றுத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) :** நேரம் வரவேற்கவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** Mass Promotion கொடுக்கின்ற முறையைப் பின்பற்றுகிற காரணத்தால், Foundation இல்லாமல், அஸ்திவாரம் இல்லாமல் குழந்தைகள் மேலே வருகிறார்கள். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், அவர்களை முன்னேற்றுவதற்கு எவ்வளவு கடினமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்ற அடிப்படையிலே சொல்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாற்றுத் தலைவரவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மூன்றாம் வகுப்பு வரை தோல்வியில்லாமல் மேல் வகுப்புகளுக்கு அனுப்புகிறோமென்று சொல்லும்போது, ஒரு தவறான கருத்து நிலவுகிறது. அதாவது, பரீட்சை இல்லை என்ற கருத்து இருக்கிறது. பரீட்சை இருக்கிறது. மாணவர்கள் தேர்வு எழுதுகிறார்கள். ஆனால் யாரையும் பரீட்சையில் தோல்வி அடையச் செய்வதில்லை. தேர்வு இருக்கிறது, மாணவர்கள் தேர்வு எழுதுகிறார்கள் என்ற நிலைமை இன்றைக்கு இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மாணவன் முதல் வகுப்பிலே அல்லது இரண்டாம் வகுப்பிலே ஓராண்டில் 100 அல்லது 105 நாட்கள் பள்ளிக்கு வந்ததற்குப் பிறகு, அவன் தோல்வி அடைகின்ற நிலையில் இருக்கிறான் என்றால்,





அதற்கு ஆசிரியர்கள்தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும், மாணவர்களல்ல. இந்த நிலைமைகள் கல்வித் துறையிலே வர வேண்டும். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களையும், கல்லூரி ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களையும் குறை சொல்லுகின்ற நிலைமைகளுக்கு மாறாக, மாணவர்கள் நல்ல முறையிலே படிக்கிறார்கள் என்ற நிலைமையை ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும். அதுதான் சமுதாயத்திற்கு நல்லது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாற்றுத் தலைவரவர்களே, கல்வி அமைச்சரவர்களுடைய கருத்துக்களுக்கு எப்போதும் அதிக மதிப்பு கொடுக்கிறவன் நான். எனவே அவரது கருத்துக்களை வரவேற்கிறேன். ஓர் ஆசிரியருக்கு 20 குழந்தைகள் என்று ஒப்படைத்து, அவர்களுடைய கல்வி அறிவை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று வாய்ப்பு கொடுத்தால், நிச்சயமாக முதல் வகுப்பிலிருந்து குழந்தைகள் முன்னேற்றம் நன்றாக இருக்கும். ஒரு வகுப்பில் 60 குழந்தைகள், 70 குழந்தைகள் என்று அடைத்து, ஒரு ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுக்கும் நிலைமை இருக்கும்போது, எந்த அளவிற்கு ஆசிரியர்கள் சோதனைகளை மேற்கொள்ளுகிறார்களென்பதை கல்வி அமைச்சரவர்கள் நன்றாக அறிவார்கள். Teacher-pupil ration -வை மாற்ற வேண்டிய அவசியம், அதை உணரக்கூடிய காலம் வந்து விட்டது. 20 குழந்தைகளுக்கு மேற்படாமல் ஒரு வகுப்பில் இருக்கும் நிலைமை ஏற்பட்டால், எந்த மார்க் வாங்கினாலும் தேர்ச்சி என்று சொல்லுகிறார்களே, அதுவல்ல; நிறைய மதிப்பெண்கள் வாங்கி தேர்ச்சி பெறும் நிலைமையை ஆசிரியர்கள் செய்வார்கள். எனவே, இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, கல்விக் கொள்கைக் குறிப்பிலே பள்ளித் துணை ஆய்வாளர்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தற்பொழுது 458 பள்ளித் துணை ஆய்வாளர்கள் உள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பள்ளித் துணை ஆய்வாளர்களின் பதவி, பள்ளித் தலைமை ஆசிரியர்களின் நிலைக்கு மாற்றப்படவேண்டுமென்பது கோரிக்கை. முன்பு இது Combined category ஆக இருந்தது. எனவே இப்போது தலைமை ஆசிரியர்களையும், பள்ளித் துணை ஆய்வாளர்களையும் Combined category ஆக்கி. தலைமை ஆசிரியர்களுடைய ஊதிய விகிதத்திற்கு இணையாக இவர்களுடைய ஊதிய விகிதத்தை மாற்றியமைக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து.

ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கப் போகிறோம். எனவே கல்வித் துறையின் பொறுப்பும் மேலும் அதிகமாகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் பள்ளித் துணை ஆய்வாளர் கட்டாயம் வேண்டும். அந்த அடிப்படையிலே புதிய பதவிகளை உருவாக்க வேண்டு

மென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, பள்ளித் துணை ஆய்வாளர்களை நியமிக்கும்போது, 10 ஆண்டு பணி புரிந்தவர்களை மட்டுமே, அந்தப் பதவிகளில் நியமிக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூர் கல்வி மாவட்டம் இருக்கிறது. அந்தக் கல்வி மாவட்டத்தில் மிக அதிகமான தனியார் உயர்நிலைப் பள்ளிகள், துவக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. எனவே மாவட்டக் கல்வி அதிகாரியின் அலுவலகத்தில் வேலை அதிகமாக இருக்கிறது. அதுபற்றி குறிப்புகள் கல்வித் துறைக்கும் வந்திருக்கும். அங்கே சிதம்பரம், காட்டு மன்னார்குடி, பன்ருட்டி, கடலூர் என்று நான்கு வட்டங்கள் இருக்கின்றன. எனவே இரண்டு வட்டங்களுக்கு ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி என்ற முறையில் இருக்க வேண்டும். கடலூரில் ஏற்கெனவே இருக்கிறது. மேலும் சிதம்பரத்தில் ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதைப் புள்ளி விவரத்தோடு அமைச்சரவர்கள் அறிந்து கொள்ளலாமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-40)

அடுத்து, நண்பகல் உணவுத் திட்டம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே ஏற்படுத்தப்பட்ட மிக அருமையான திட்டம் தான் நண்பகல் உணவுத் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் பல பிள்ளைகள் பள்ளிகளுக்கு வரக்கூடிய நிலைமை உருவாயிற்று. ஒரு நாளைக்கு ஒரு மாணவருக்கு 15 காசு என்ற விதத்தில் ஒதுக்கினால் போதுமா ? இந்தத் திட்டத்திற்கு இன்னும் சற்று அதிகமாகப் பணம் ஒதுக்க வேண்டும். அரசு 10 காசும் ஊராட்சி ஒன்றியம் 5 காசும் கொடுக்கின்றன. ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு 15 காசு ஒதுக்கப்படுகிறது. 15 காசுகளை வைத்துக்கொண்டு அந்தக் குழந்தைகளுக்கு எந்த அளவுக்கு நாம் உணவு வசதியை அளிக்க முடியும் என்பதை நாமே ஊகித்துக் கொள்ளலாம். ஊட்ட உணவு வழங்குவதற்காக 15 காசை இன்னும் கொஞ்சம் உயர்த்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி தாரா செரியன் :** அமைச்சரை நான் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். 15 காசு என்பது 'கேர்' (CARE) -ல் இருந்து வருகிற அரிசி எல்லாம் சேர்த்தா ?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அது இல்லை.





**திருமதி தாரா செரியன் :** என்னுடைய காலத்தில் 12 காசுக்கு நல்ல சாப்பாடு கொடுத்தோம். 12 காசைக் கொண்டு சிக்கனமாகவும் உபயோகமாகவும் கொடுத்தோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு உறுப்பினருடைய காலத்தில் 12 காசுக்கு நல்ல சாப்பாடு போட்டதாகச் சொன்னார்கள். இப்போது விலைவாசி என்ன நிலைமையில் இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு காலத்தில் 12 காசு போதுமானது தான். அப்போது விலைவாசி அவ்வளவு அதிகமாக இல்லை. இப்போது வழங்கப்படும் 15 காசு நண்பகல் உணவுத் திட்டத்திற்குப் போதுமானது தானா என்பது தான் கேள்விக்குரியது. நண்பகல் உணவுத் திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும். அங்கும் ஆயிரக் கணக்கான, இலட்சக் கணக்கான மாணவர்கள் ஒரு வேளை உணவுகூட சாப்பிட வசதியில்லாத காரணத்தால், பள்ளிகளுக்கு வராமல் வெளியிலே இருக்கிறார்கள். மாண்புமிகு கல்வியமைச்சருக்கு இது தெரியும். ஆகவே நண்பகல் உணவுத் திட்டத்தை அருள்கூர்ந்து உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குரிய நிதிவசதியை நாம் கண்டு பிடித்தாக வேண்டும்.

அடுத்து, இங்கே தமிழ் நாடு கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுடைய பணிகளைப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்த நிறுவனத்தின் அரிய பணிகளை நான் பாராட்டுகிறேன். நல்ல ஆராய்ச்சிகளை அது செய்து வருகிறது. ஆனால் இன்றுள்ள நிலையில் அதனுடைய பணிகளைப் பார்க்கும்போது, தேவைகள் மிக மிக அதிகமாக ஆகும்போது, அதற்கேற்றாற்போல் அதனுடைய பணிகளையும் அதிகப்படுத்த வேண்டும். ஆகவே அதற்காக என்று தனியாக ஒரு அதிகாரி இருப்பது அவசியம். இப்போது அது பள்ளிகள் சம்பந்தமான ஆராய்ச்சியை நடத்துகிறது. அது போதாது. கல்லூரி சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளையும் அது நடத்த வேண்டும். மறு பயிற்சி, கருத்தரங்கு இப்படிப்பட்டவைகளை நடத்த வேண்டும். அதற்கென்று தனியாக ஒரு இயக்குநர் அவசியம் வேண்டும். மேல்நிலைப் பள்ளிகள் ஆயிரத்திற்கு மேற்பட்டு வந்து விட்டன. உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும், ஒரேயிடத்தில் ஒன்றாக, ஒரே இயக்குநரின் கீழ் இருந்தாலும், அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய பணிப் ஒரு மிக அதிகமாக இருக்கிறது. அத்தனை பணிகளையும் ஒரே இயக்குநர் வைத்துக் கொண்டிருக்கிறார். அவருக்கே மிகவும் குழப்பமாக இருக்கிறது.

இரண்டையும் ஒரே இயக்குநர் பார்ப்பதால், அவருக்குப் பணி அதிகமாக இருக்கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால், மேல்நிலைப் பள்ளிகளுக்கென்று ஒரு இயக்குநர், இடைநிலைப் பள்ளிகளுக்கு என்று ஒரு இயக்குநர், Primary Education -க்கு என்று ஒரு இயக்குநர் என்று பிரிக்க வேண்டும். இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலே செய்தால், நாம் இன்னும் அதிகமான கல்வி வளர்ச்சியைக் காண முடியும். இதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்ற என்னுடைய பணிவான விண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவு செய்து பரிசிலனை செய்ய வேண்டும். ஒரே இயக்குநரிடம் இருந்தால், ஒரே பணியாக இருந்தால், சிக்கனமாகவும், எளிதாகவும் இருக்கும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்தார்கள். நான் சொல்கின்ற கருத்தை ஒரு நிர்வாகச் சீர்திருத்தம் என்ற முறையிலே அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1—4—1970 க்குப் பிறகு நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுடைய, தமிழ் ஆசிரியர்களுடைய பிரச்சினை இன்னும் தீரவில்லை. அதிலே ஒரு பிரச்சினை அவர்களுடைய பணி இன்னும் நிரந்தரப்படுத்தப் படவில்லை. தேர்வாணைக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிற ஆயிரத்து ஐநூறு ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், அவர்களுடைய பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. அவர்களுக்கு இன்னும் இன்டர்வியூ நடத்தப் படவில்லை. தேர்வாணைக் குழு அவர்களை இன்டர்வியூ நடத்தாமல் தாமதப்படுத்துவதால், அவர்கள் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகி யிருக்கிறார்கள் என்பதை வர்ணிக்க இயலாது. அவர்கள் அவ்வளவு சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அது அதிகாரிகளுக்கும் மிக நன்றாகத் தெரியும். நாங்களும் இதுபற்றி ஏற்கெனவே பல தடவை விளக்கியிருக் கிறோம். Casual leave தவிர எந்த லீவும் கடந்த 10 ஆண்டுகளாக அவர்களுக்குக் கிடையாது. இதற்குக் காரணம் தேர்வாணைக் குழு அவர் களை நிரந்தரப்படுத்தாததால்தான். அவர்களுக்குரிய விடுப்பு வசதிகள் மறுக்கப்படுகின்றன. தேர்வாணைக் குழு விரைவில் இண்டர்வியூ நடத்தி அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று அரசு வற்புறுத்த வேண்டும். இதைச் செய்ய வேண்டியது அரசினுடைய கடமை.

அடுத்து, இன்னும் Increment வழங்குவதற்கு நாம் பிரிட்டிஷ் முறையைப் பின்பற்றி வருகிறோம். Departmental Test என்று அரசாங்கம் வைத்திருக்கிறது. ஒரு ஆசிரியர் இரண்டாவது Increment பெற வேண்டுமென்றால் டிப்பார்ட்மெண்ட்டல் டெஸ்ட் பாஸ் (Pass)





வேண்டும். எப்போதோ பிரிட்டிஷ் காலத்திலே வகுக்கப்பட்ட ஒரு விதி அது. பதவி உயர்வுக்காக டிப்பார்ட்மெண்ட்டல் டெஸ்ட் இருக்கலாம். அது வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஒரு ஆண்டுப் பணி முடிந்தவுடன் ஒரு இன்கிரிமெண்ட் பெற ஊழியர்களுக்கு சட்டபூர்வமாக உரிமை இருக்கிறது. அப்படி இருக்கும்போது, டிப்பார்ட்மெண்ட்டல் டெஸ்ட் தேர்ச்சி அடையும் வரை இன்கிரிமென்ட் இல்லை—அப்படியே கொடுத்தாலும், நோஷனல் இன்கிரிமென்ட், அதாவது பேப்பர் இன்கிரிமெண்ட் தான் கொடுக்கிறார்கள் என்றால், அதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த விதி முறையை, மாற்ற வேண்டுமென்று முன் விரும்பினார்கள், இப்போதும் விரும்பிக்கொண்டிருக்கிறார்கள். அதனை அதிகாரிகள் விரைவாக நிறை வேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் எவ்வளவு ஆயிரக் கணக்கிலே எத்தனை ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் அதனால் எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். டிப்பார்ட்மென்டல் டெஸ்ட் பாஸ் செய்தால்தான் இன்கிரிமென்ட் என்று இருக்கக்கூடிய விதியை உடனேயே உடைத்தெறிய வேண்டும். புரமோஷனுக்கு டிப்பார்ட்மென்டல் டெஸ்ட் பாஸ் செய்ய வேண்டுமென்று வையுங்கள், அதை முழு மனதுடன் வரவேற்கிறேன்.

அடுத்து, எ. பி, சி பிரிவுகள் இணைப்பு பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'எ' 'பி' பிரிவுகள் இணைப்பு ஏற்கெனவே முடிந்து விட்டது. 17 நகர வைப் பள்ளிகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசு ஏற்று நடத்திவரும் நகராட்சிப் பள்ளிகள் 17ல் இருந்த 'சி' பிரிவாக இருந்தவர்களையும் ஒருங்கிணைக்க அரசு ஆணை யிட்டுள்ளது. அவர்கள் 'பி' பிரிவுப் பட்டியலின் இறுதியில் சேர்க்கப்பட்டு, 'பி' பிரிவு வழியாக பொதுவான ஒருங்கிணைந்த பணிமூப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என்று குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. மே மாத இறுதியிலே ஆளுநர் ஆட்சிக் காலத்திலே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது. ஆளுநர் எந்த விதமான கொள்கை ரீதியான முடிவையும் எடுக்க மாட்டேன் என்று சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் இந்த மிக முக்கியமான கொள்கைப் பிரச்சினை குறித்து அவசரமாக அவருடைய ஆட்சிக் காலத்திலே, மே மாத இறுதியிலே, முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. 17 நகரவைப் பள்ளிக் கூடங்களிலும் பணியாற்றிக் கொண்டிருந்த ஆசிரியர்களுடைய பணிக் காலம் முழுவதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் எழுத்து மூலம் தெளிவாக விளக்கி மனு கொடுத்திருந்தோம். இப்போது 'பி' பிரிவு ஆசிரியர்களுக்கு அடுத்தபடியாக 'சி' பிரிவு ஆசிரியர்களை வைத்து ஆணை

வெளியிடப்பட்டிருக்கிறது. இது சரிதானா? அவசரமாக ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதை மறு பரிசீலனை செய்து, 17 நகரவைப் பள்ளிக்கூடங்களிலும் பணியாற்றிக் கொண்டிருந்த ஆசிரியர்களையும் அவர்கள் பணியில் சேர்ந்த தேதியிலிருந்து கணக்கெடுத்து மறுபடியும் இந்த இணைப்பு ஆணையை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறைப் படுத்துதல் சட்டம் பற்றி நான் ஏற்கனவே பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதிலே பல குறைபாடுகள் இருக்கின்றன. குறிப்பாக 2 குறைபாடுகளை மட்டும் கூறுகிறேன். அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய ஆசிரியர்களை கல்வித் துறை அதிகாரிகளுடைய அனுமதியில்லாமல் பணியிலிருந்து தற்காலிக வேலை நீக்கம் (Suspension) அவர்களால் செய்ய முடியும். இது எப்படி சரியான முறை என்பது எனக்குத் தெரியவில்லை. Suspension செய்கின்ற உரிமையை அவர்களுக்குக் கொடுத்திருப்பதால், தனியார் பள்ளிக் கூடங்களில் உள்ள ஆசிரியர்கள் நிர்வாகத்தினரால் பழி வாங்கப்படுகிறார்கள்.

without the permission of the competent authority the Correspondent can suspend a teacher

இது ஒரு இடையூறான விதி. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அன்புகூர்ந்து இந்த விதியை மாற்ற வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு Subsistance Allowance கொடுக்க வேண்டுமென்ற நியதி இருக்கிறது. ஆனால் தனியார் பள்ளிகளில் இது கொடுக்கப்படவில்லை. அதையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

அடுத்து, டிரிபியூனலுக்கு அமுல்படுத்துகின்ற அதிகாரம் கிடையாது. தீர்ப்பு வழங்குகின்ற அதிகாரம் மட்டும் தான் உண்டு என்று சென்னை நீதி மன்றத்திலுள்ள நீதிபதியே தீர்ப்பு அளித்திருக்கிறார். மேலும் அந்த நீதிபதியே இந்த விதியை மாற்றியமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். இந்த ஒரு இடையூறான அம்சம் தனியார் பள்ளிகள் ஒழுங்கு முறை படுத்துதல் சட்டத்திலே இருப்பதால், உயர் நீதிமன்ற நீதிபதியே இதை மாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அரசு இது குறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. அரசு விரைவாக துரித நடவடிக்கை எடுத்து இதிலுள்ள குறைபாடுகளைப் போக்க வேண்டுமென்று பணிவன்புடன் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, தனியார் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு அரசுப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களைப் போல குழந்தைகள் படிக்கக் கல்விக் கடன், திருமண கடன், வீடு கட்ட கடன், விழாக் கால முன் பணம் போன்ற சலுகைகள் இப்போது கிடையாது. அவர்களுக்கும் இந்தச் சலுகைகளை அவசியம் தருவதற்காக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

மைனாரிட்டி பள்ளிகளைப்பற்றி எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசினார்கள். நான் அதைப்பற்றிக் குறிப்பிடும்போது, எஸ்.ஐ.இ.டி. கல்லூரியை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்தக் கல்லூரியில் என்ன நடந்தது என்பதை இந்த நாடு அறியும். ஆனால், இப்போது அங்கு என்ன நிலைமை இருக்கிறது? மறுபடியும் பூகம்பம் கிளம்ப ஆரம்பித்து விட்டது. அங்குள்ள நிலைமை எரியத் தொடங்கும் முன்பு அரசு தலையிட்டு ஒரு ' Check ' கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** குறுக்கிட்டைத் தடுப்பது தலைவருடைய வேலை. குறுக்கிடுவதே தவறு என்ற நிலைமையும் இல்லை, அதற்காக தாராளமாக அனுமதிக்கவும் இல்லை. சம்பந்தப்பட்ட உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, இன்னொரு உறுப்பினர் பேசிய பேச்சைத் தவறாக எடுத்துக்காட்டிப் பேசும்போது, அவர் குறுக்கிடலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அந்தக் கல்லூரியிலே 18—8—1979 ஆம் தேதியன்று ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. அது இப்போது மீறப் படுகிறது. The agreement has been broken to pieces. அப்படியானால் அங்கே ஒரு எரிமலை வெடிக்கும். அதை இந்த அரசு அனுமதிக்கிறதா? அந்தக் கல்லூரி ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் எங்களுடன் வந்து பேசினார்கள். மறுபடியும் அவர்கள் போராட விரும்பவில்லை. காரணம், அவர்களுடைய போராட்டத்தினால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. அந்தக் கல்லூரியிலே அண்மையில் 5 பேர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் ' Surplus ' என்று காட்டியிருக்கிறார்கள். ஒரு கல்லூரியில் ' Surplus ' என்ற நிலைமை வரும்போது, அவர்களை வேறு கல்லூரிக்கு அனுப்ப Deployment விதிகள் தெளிவாக இருக்கிறது. அந்த விதிகளின் கீழ் அவர்களை வேறு கல்லூரி

களுக்கு மாற்றலாம். அப்படி 'Surplus' வரும்போது அதை இயக்குநருக்குத் தெரியப்படுத்த வேண்டும். இந்தக் கல்லூரியில் அப்படிச் செய்யவில்லை. Provident Fund Account 50 சதவிதம் ஆசிரியர்களுக்கு இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. '10 ஆயிரம் திட்டம்' என்றால் அது என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை. எல்.ஐ.இ.டி. நிருவாகம் மீண்டும் பிரச்சினையைச் சந்திக்க விரும்புகிறதா? இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 'வருமுன் காப்போம்' என்ற அடிப்படையிலே தக்க நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். அரசியல் சட்டம் 30-வது பிரிவைக் காட்டி நம்மை பயமுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசியல் சட்டம் 30-வது பிரிவு என்ன சொல்கிறது?

All minorities whether based on religion or language shall have the right to establish and administer educational institutions of their choice.

என்று சொல்கிறது. அவர்கள் விரும்பியவாறு கல்வி நிறுவனங்களை நடத்த அந்தப் பிரிவு அவர்களுக்கு அனுமதி அளிக்கிறது. அந்த மைனாரிட்டி பள்ளிகளில் அல்லது கல்லூரிகளில் கூட, தமிழக அரசு என்ன பாடத்திட்டம் வைத்திருக்கிறதோ, அதைத்தான் பின்பற்றுகிறார்கள். அதோடு அரசின் கல்விக் கொள்கையையும், தேர்வு முறையையும் தான் அவர்களும் பின்பற்றுகிறார்கள். அவர்கள் பின்பற்றுவதை நாம் அனுமதிக்கவில்லை. நம்முடைய கல்விக் கொள்கையைத்தான் பின்பற்ற அனுமதிக்கிறோம். அவர்கள் விரும்பியபடி நடத்த வேண்டுமென்றால் அது மதப்பிரச்சாரத்தைத் தான் குறிப்பிடுகிறதே தவிர கல்வியை அல்ல என்று பலரும் கருத்தறிவித்திருக்கிறார்கள். அரசியல் சட்டம் 28-வது பிரிவிலே உட்பிரிவு 1.

"No religious instruction shall be provided in any educational institution wholly maintained out of State funds."

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு நிதியிலிருந்து உதவி பெறுகின்ற ஒரு கல்வி ஸ்தாபனம் மத போதனை செய்யக்கூடாது என்று இருக்கிறது. 30-வது பிரிவிலே இருக்கிற ஷரத்தைக் காட்டி அவர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். அது சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்திற்கு நாம் சென்றிருக்கிறோம். அது வேறு விஷயம். இப்படி சர்ச்சைக்கு இடமாக இருக்கிற இந்த அரசியல் பிரிவை மாற்றவேண்டும் என்று நாம் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துத் தீர வேண்டும். பேரவையிலும், மேலவையிலும் இது குறித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்க நாம் முயற்சி எடுக்கப் போகிறோமா என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மைனாரிட்டி கல்வி நிறுவனங்களில் எல்லாம் ஒழுங்-



கீனங்களும், முறைகேடுகளும் நிறைய நடைபெறுகின்றன. இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது. 30-வது பிரிவை வைத்துக்கொண்டு ஒரு மைனாரிட்டி கல்வி நிறுவனத்தின் உள்ளே நடைபெறும் அட்டூழியங்களைத் தடுக்க முடியவில்லையென்றால், அங்கே ஒரு ஆசிரியரை அடித்து அவர் மரணமடையும் நிலைமை ஏற்பட்டால், அப்போது இந்த அரசு அரசியல் சட்டம் 30-வது பிரிவைச் சொல்லிக் கொண்டிருக்குமா அல்லது Law and Order என்று சொல்லி நடவடிக்கை எடுக்குமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். ஆகவே, இது சம்பந்தமாக மிகவும் விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போது உடனடியாகப் போராட்டம் தொடங்கும் நிலைமை இருக்கிறது. போராட்டம் தொடங்கிய பிறகு நடவடிக்கை எடுக்கலாம் என்ற நிலைமை இல்லாமல், 'வருமுன் காப்போம்' என்ற நிலைமையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர் நலனுக்கான தேசீய நிதியிலிருந்து ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு மட்டும் படிப்பு உதவித்தொகை தரப்படுகிறது. ஆனால், அதற்கு வருமான வரம்பு 8 ஆயிரம் ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு என்று இந்த நிதி வைக்கப்பட்ட பிறகு, Income Ceiling தேவையில்லை என்பதையும் அதை எடுத்துவிட வேண்டும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேல்நிலைக் கல்வியைப் பொறுத்தவரையில், இந்த அரசின் கொள்கையை நான் வரவேற்கிறேன். இந்த அரசின் நிலையான உறுதியான கொள்கையைப் பாராட்டுகிறேன். இனிமேல் மேல்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கான பள்ளிக்கூடக் கட்டிடங்கள், நூலகங்கள், விஞ்ஞானக் கூடங்கள் போன்றவைகள் எல்லாப் பள்ளிகளுக்கும் போதுமான அளவுக்கு ஏற்படுத்த வேண்டும். இதற்கு பொதுமக்களுடைய ஒத்துழைப்பைப் பெறவேண்டும். மறைந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களின் காலத்தில் 'பள்ளி சீரமைப்பு மாநாடு' என்ற அளவிலே மாநாடு நடத்தி காரியங்கள் ஆற்றினார்கள். அந்த வகையிலே, பொதுமக்களின் ஆதரவு, ஒத்துழைப்பு, நிதியுதவி, நன்கொடை போன்றவைகளைப் பெற்று, இந்த மேல்நிலைப் பள்ளிக்கூடங்களை நல்ல முறையில் வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது 'Inducted Graduate Teachers' என்று 6 ஆயிரம் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களை முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்களாக மாற்ற வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு 25 ரூபாய் Special Allowance

என்று இருக்கிறது. இதை 50 ரூபாய் என்று ஆக்க வேண்டும் என்பது அவர்களுடைய நீண்ட நாளைய கோரிக்கை. இந்தக் கோரிக்கையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்று நாளைக்குப் பதில் சொல்லும்போது இந்த அவையில் அறிவித்தால், நிச்சயமாக இந்த அரசுக்கு எப்போதும்போல் நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். Post Graduate Teachers– க்கு FR 22–B அமுல்படுத்தாமல் இருப்பதால், பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அது குறித்தும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அரை மணி நேரம் ஆகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இதுவரை நான் கல்வி பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். இனிமேல்தான். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதற்கு என்ன செய்வது ?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இப்போது பகுதிநேர ஆசிரியர்கள் என்று 150 ரூபாய் சம்பளம் பெறும் ஆசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் பலவிதமான இடையூறுகளுக்காளாகியிருக்கிறார்கள். அவர்களை Full time Teachers– ஆக மாற்றி அவர்களுக்கு ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

அரசுத் தேர்வுத் துறையைப் பொறுத்தவரையில், பகிரங்கமாகச் சொல்ல வேண்டிய குற்றச்சாட்டுகள் பல இருக்கின்றன. தேர்வுத் துறையிலே Examiners Appointment -ல் பல ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன. இப்போது இருக்கும் நடைமுறையில் ஒரு நபர் பலமுறை திரும்பத் திரும்ப தொடர்ந்து Examinership பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதில் பல ஒழுங்கீனங்கள் இருக்கின்றன. ஐம்பது ரூபாய், அறுபது ரூபாய் கொடுத்து தொடர்ந்து அவர்கள் பெறுகிறார்கள். Assistant Examiners, Chief Examiners பதவிகள் இப்படித்தான் கொடுக்கப்படுகின்றன. ஆதாரங்கள் வேண்டுமானால் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆகவே. இதன்மீது தக்க நடவடிக்கை எடுத்து இந்த மாதிரி ஒழுங்கீனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக . . . . .



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கடைசியாக, கடைசியாக என்று முடிக்காமலே போனால் எப்படி ? இப்படியே போனால் என்ன செய்வது? நாளைக்குள் முடிக்க வேண்டும். சீக்கிரமாக முடியுங்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், பி. டி. பட்டம் பெற்று பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்த்த வேண்டும். இதற்கு ஒரு நல்ல அறிவிப்பை இந்த அரசு உடனடியாகச் செய்யவேண்டும்.

பயிற்சி மொழி பற்றி இந்த அரசின் தெளிவான கொள்கை என்ன ? தமிழ் தான் பயிற்சி மொழி என்ற கருத்தை நாம் ஆதரிக்கிறோமா ? அப்படியென்றால், ஆங்கிலத்திற்கு ஊக்கம் கொடுக்கிறோமே அது ஏன் ? மெட்ரிக்குலேஷன் பள்ளிகள், ஹையர் செகண்டரி பள்ளிகள், இவைகளில் ஆங்கில மீடியம் பள்ளிகள் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகின்றதே, இவற்றை நாம் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கிறோமே, அது சரிதானா ?

(பிற்பகல் 6-00)

அதுமட்டுமல்ல, மேல்நிலைப் பள்ளிகளில் பிளஸ் 2 படிப்பை தமிழ் மீடியத்தில் படித்த மாணவர்களுக்கு மிக முக்கியமான கல்லூரிகளில் பி. எஸ்ஸி. வகுப்பில் இடம் தர மறுத்துவிட்டார்கள். காரணம் அவர்கள் அங்கே தமிழ் மீடியத்தில் படித்தவர்களானதால் பி. எஸ்ஸி-யில் English Medium -த்தில் அட்மிஷன் மறுக்கப்பட்டது. இது நியாயம்தானா என்று தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழில் பிளஸ் 2 படித்த மாணவர்களுக்கு பி.எஸ்ஸியில் English Mediums -த்தில் இடம் இல்லை என்றால், தமிழ்ப் பயிற்சி மொழியைக் குறைவாக மதிப்பிடுவதாகாதா ? இந்த எண்ணம் இருப்பதால்தானே அவர்களுக்கு பி.எஸ்ஸியில் இடம் தர மறுத்திருக்கிறார்கள். இதனை அரசு கருத்தில் கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.

ஒருமுறை காந்தியடிகளே சொன்னார்கள். "நான் இந்த நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தால், இன்று இந்தியாவிலுள்ள அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தாய் மொழியே பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென்று ஆணையிடுவேன். அதற்காகப் போதிய வசதிகளும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் வர வேண்டும் என்று காத்திருக்க மாட்டேன்" என்று அப்போது அவர்கள் குறிப்பிட்டார்கள். இதைப்போன்று தமிழக அரசு பயிற்சிமொழி

குறித்து தன்னுடைய கொள்கை என்ன என்பதைப்பற்றி மிகத் தெளிவாகச் சொல்ல வேண்டும். அதுமட்டுமல்ல, பி. யு. சி. தமிழ் மீடியத்தில் படித்த மாணவர்களில் எத்தனை பேருக்கு கடந்த ஆண்டுகளில் பொறியியல் கல்லூரியிலும், மருத்துவக் கல்லூரியிலும் இடம் கிடைத்திருக்கிறது என்ற புள்ளி விவரத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவிக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் நாம் எந்த அளவுக்குத் தமிழ்ப் பயிற்சி மொழிக்கு இங்கே ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறோம் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். எனவே அரசு இது குறித்து தனது கொள்கையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நர்சரிப் பள்ளிகளை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிற காலகட்டத்திற்கு நாம் இப்போது வந்திருக்கிறோம். இப்போதே அவைகளையெல்லாம் தேச உடைமையாக்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தாவிட்டாலும், அவைகளையெல்லாம் சமூகக் கட்டுப்பாட்டுக்குள் Social Control கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குரிய சட்ட முன்வடிவை அரசு விரைவில் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பொதுவாக இந்தக் கல்விக் கொள்கையில் காணப்படும் சிறப்பான அம்சங்களை வரவேற்றுப் பாராட்டுவதோடு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கடுமையான முயற்சியின் காரணமாகவும், ஆழ்ந்த கண்ணோட்டத்தின் காரணமாகவும் கல்வித் துறையில் வளர்ச்சி ஏற்பட்டிருக் கிறது என்பதையும், ஆசிரியர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதையும் கூறி, அதற்கு அவருக்கு எங்களின் உளமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்து, அவருக்கு உறுதுணையாக இருக்கும் தமிழக அரசுக்கும் பாராட்டு தெரிவித்துக்கொண்டு, வாய்ப்பளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

* டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கைமீது, எனது கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் கல்வித் துறையை மிக நல்ல முறையில் நிர்வகித்து வருகிற மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கல்விக்காக மட்டும் இந்த அரசு இந்த ஆண்டு ரூபாய் 260 கோடி செலவு செய்ய இருப்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். அந்தத் தொகையைச் சரியான முறையில் செலவிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இப்போது நான் கல்வித் துறையின் எல்லா



அம்சங்களைப் பற்றியும் இங்கே பேசப்போவதில்லை. ஐந்து நிமிஷத்திலேயே இரண்டே இரண்டு விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று இருக்கிறேன்.

பொதுவாக, பல்வேறு உறுப்பினர்களும் மாணவர்களின் பரீட்சைகளைப் பற்றி இங்கே பேசினார்கள். இது குறித்து மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்தக் காலத்தில் எஸ்.எஸ்.எல்.சி-க்கு மட்டும் ஒரே ஒரு பரீட்சை இருந்தது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள்கூட அதைக் குறிப்பிட்டார்கள். அப்படி ஒரே ஒரு பரீட்சைதான் இருந்தது. மற்ற வகுப்புகளுக்கு கவர்ன்மெண்ட் பரிட்சை என்று எதுவுமில்லாமல் இருந்தது. அப்போது 3-வது, 4-வது, 5-வது வகுப்புகளில்கூட பெயில் போட்டுவிடுவார்கள். இப்போது பெயில் ஆக்காமல் மாணவர்களுக்குப் பாஸ் போடுகிறோம் என்று சொல்கிறார்கள். இதன் காரணமாக, மாணவர்களுக்குப் பரீட்சையே இல்லை என்று யாரும் அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டியதில்லை.

என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால். இப்படி அநேக பரீட்சைகள் இல்லாமல், எஸ். எஸ். எல். சி. போல் ஒரே ஒரு பரீட்சை வைத்துவிட்டால் போதும். நடுவில் கிளாஸ் பரீட்சைகளை வைத்துக்கொள்ள வேண்டும். அந்தக் காலத்தில இன்டர்மீடியட், பி. ஏ. என்று இருந்தபோதும் ஜூனியர் இன்டர்மீடியட் வகுப்புக்குப் பரீட்சை கிடையாது. அதைப் போலவே ஜூனியர் பி. ஏ. வகுப்புக்கும் பரீட்சை கிடையாது. இன்டர்மீடியட்டுக்கு ஒரு பரீட்சை, பி. ஏ. வுக்கு ஒரு பரீட்சை என்றுதான் இருந்தது. அப்போதெல்லாம் பிரசிடென்சி காலேஜில் 100 பையன்கள் படித்தால், 2 பேரைத்தான் மேல் வகுப்புக்குப் போகாமல் நிறுத்துவார்கள். அதுவே ஆச்சரியமாக இருக்கும். அநேகமாக யாரையும் நிறுத்தமாட்டார்கள். பிராக்டிகல் கிளாசில் சரியாகச் செய்யாவிட்டால், கெமிஸ்டிரி போன்ற வகுப்புகளில்தான் மாணவர்களை நிறுத்திவிடுவார்கள். ஆனால் பொதுவாக வேறு எங்கும் மாணவர்களை நிறுத்துவதில்லை. இப்போது மாணவர்கள் அதிகமாக இருப்பதால், நிறுத்தாமல் அனுப்புவதுதான் நலமாகத் தோன்றுகிறது. 11-வது கிளாசில் மட்டும் பரீட்சை வைத்தால் போதுமானது. ஒரே ஒரு பரீட்சையே போதும். இதன் காரணமாக சர்க்காருக்கும் சிரமம் குறையும் என்பது என் அபிப்பிராயம். இது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்கு தெரியும்.

இதோடு இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் வைஸ்-சேன்சலராக இருந்த காலத்தில் பி. யு. சி. வகுப்புகள் தொடங்கப்பட்டன. அப்போது அதை வேண்டாமென்று

எல்லாக் கட்சிகளும் சொல்லிற்று. இருந்தாலும் பி. யு. சி. வந்தது. அதை நம்மால் நிறுத்த முடியவில்லை. அதற்கு பிறகு பிளஸ் 2 வந்துவிட்டது. அதை அங்கீகரிக்க வேண்டியதுதான், ஆனால் இப்போது தமிழ்நாடு முழுவதுமாக மொத்தம் 2,900 பள்ளிகளுக்கு மேல் இருக்கின்றன. இவற்றில் 690 சொச்சம் பள்ளிகளுக்குத்தான் அரசாங்க மானியம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசும் மத்திய அரசுமாகச் சேர்ந்து ரூ. 20 கோடியை 603 பள்ளிகளுக்குக் கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே கல்வியமைச்சர் அவர்கள் இல்லையென்றாலும், மற்ற அமைச்சர்கள் இருப்பதால், ஒரு கருத்தைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். சில நாட்களுக்கு முன்பு குருசாமி முதலியார் நூற்றாண்டு விழாவை நான் தொடங்கி வைத்துப் பேசும்போது, பலரும் அங்கே வந்திருந்தார்கள். அப்போதே நான் ஒரு கேள்வியை எழுப்பினேன். அரசாங்க உதவி என்பது தமிழ்நாட்டில் சுமார் 603 பள்ளிகளுக்குத்தான் கிடைத்திருக்கிறது என்றால், மீதியிருக்கிற இரண்டாயிரத்துச் சொச்சம் பள்ளிகளின் நிலைமை என்ன என்று கேட்டேன். இப்போது மேலும் 150 பள்ளிகளுக்குக் கட்டிடம் போன்றவற்றிற்காக மானியம் கொடுக்க பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாய்ச் செல்லியிருக்கிறார்கள். அப்படியும் இன்னும் 2,000 பள்ளிகளுக்கு மேல் உதவி பெறாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பள்ளிகளில் படிப்பவர்கள் மேற்கொண்டு படிப்பதற்கு வசதியில்லாமல் இருக்கிறார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ராஜபாளையத்தில் சுமார் 1½ லட்சம் பேர் இருக்கிறார்கள். அங்கே எத்தனை பள்ளிகள் இருக்கின்றன ? எத்தனை பள்ளிகளில் பிளஸ் 2 இருக்கிறது ? அங்கே எத்தனை மாணவர்களைச் சேர்க்க இடம் இருக்கிறது ? அங்கே 10-வது படித்த எல்லா மாணவர்களையும் பிளஸ் 2-ல் சேர்க்க வசதியில்லை. அந்த ஊரில் படித்த பிள்ளைகளுக்கே இடமில்லை என்றால், சுற்றியுள்ள 10, 12 மைலில் உள்ள மாணவர்களின் கதி என்ன ? அந்த ஊரில்மட்டும்தான் இந்த நிலை என்பதில்லை. வேலூர், சேலம், திருச்செங்கோடு என்று எந்த இடத்தை எடுத்துக் கொண்டாலும் இந்த நிலைமைதான் இருக்கிறது. அங்கெல்லாமிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையில் இருக்கிறார்கள். அவர்கள் அதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்வார்கள். என்னுடைய அபிப்பிராயத்தில் இன்றைய தினம் 2,000 பள்ளிகளுக்கு மேல் வசதியில்லாமல் இருக்கின்றன. அரசாங்கம் எல்லாவற்றிற்கும் பணம் கொடுக்க வசதியில்லாமல் இருக்கலாம். இருக்கிற கட்டிட வசதி போதாமல் இருக்கலாம். ஆனால் இப்போதே என்ன நிலைமை என்றால், பிளாக் போர்டில் சாக் பீசை வைத்துக் கொண்டு படம் போட்டு, இதுதான் 'டெஸ்ட்' என்கிறார்கள். கல்வியைப்





பற்றி என்னைவிட அதிகமாக அனுபவம்பெற்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இருக்கிறார்கள். ஆனாலும் என்னுடைய அபிப்பிராயம் 2,900 பள்ளிகளிலும் உடனே பிளஸ் 2 வகுப்புகளைத் தொடங்க வேண்டும். இந்த வருஷமே பிளஸ் 2-வில் சேர முடியாமல் நிறையபேர் கஷ்டப்படுகிறார்கள். 10-வது பரிட்சையை 1½ லட்சம் பேர் பாஸ் செய்திருக்கிறார்கள். மேல்படிப்பிற்குப் போக பிளஸ் 2-வில் இடமில்லை என்ற நிலை இருக்கிறது.

அதோடு பாலிடெக்னிக்குகளைப் பொறுத்தவரையில், ஜூன் 15 ஆம் தேதிக்குள் அப்ளிகேஷன் போட்டிருக்க வேண்டும். இப்போது ஜூலை 21 தேதியாகிவிட்டது. 36 நாளுக்கு முன்பே அப்ளிகேஷன் போட்டிருக்க வேண்டும். பிளஸ் 2 தேறியவர்களும் அப்ளிகேஷன் போடலாம் என்று இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு ஜூலை 2 ஆம் தேதிதான் ரிசல்ட் வந்திருக்கிறது. ஜூலை 7, 8 தேதிகளில்தான் மார்க் லிஸ்ட் வந்திருக்கிறது. அவர்கள் எப்படி உரிய நேரத்தில் அப்ளிகேஷன் போட முடியும் ? எனவே அதற்கான தேதியை நீட்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேதியை நீட்டித்து எந்த அறிவிப்பும் இதுவரை வரவில்லை.

அடுத்து, கல்வியில் முக்கியமாக பள்ளிகளில் டைவர்சிபைடு கோர்ஸ் வேண்டும் என்று சொல்லுகிறோம். அதைப்போலவே 'ஜாப் ஓரியண்டட் எஜுகேஷன்' வேண்டுமென்றும் சொல்லுகிறோம். கவர்னர் உரையிலும் பட்ஜெட் உரையிலும் இதைச் சொல்லியிருக்கிறார்கள். முன்னாள் கல்வி அமைச்சர் அவர்களும், இப்போதைய கல்வியமைச்சர் அவர்களும்கூட இதைச் சொன்னார்கள். இதில் எல்லோருக்கும் ஒரே அபிப்பிராயம் இருப்பது குறித்துதான் பாராட்டுகிறேன். இருந்தாலும் இதற்கான வசதிகள் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது. இதைச் சில இடங்களில் 25 வருஷத்திற்கு முன்பு ஆரம்பித்தார்கள். அரசாங்கம் பத்து ரூபாயும் மேனேஜ்மெண்ட் 10 ரூபாயும் போட்டு மாணவருக்கு 20 ரூபாய் என்று போட்டு இந்த வகுப்புகள் தொடங்கப்பட்டன. நான்கு வருஷத்திற்கு அந்த வகுப்புகள் நடைபெற்றன. பிறகு மாணவர்கள் சரிவர வரவில்லை. இத்தகைய வகுப்புகள் 80 வருஷத்திற்கு முன்பே செங்கல்வராயன் இன்ஸ்டிடியூட்டில் தொடங்கப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களுக்குத் தெரியும். அவருடைய குடும்பத்தினர் அந்த டிரஸ்டில் இருந்தார்கள். நல்ல பள்ளிக்கூடம் அது. அங்கேதான் முதன் முதலில் எல்.எம்.ஈ., எல்.சி.ஈ. வகுப்புகள் தொடங்கப்பட்டன. அரசாங்கம் அந்த வகுப்புகளைத் தொடங்கி 40 வருஷங்கள்தான் ஆகிறது. ஆனால் செங்கல்வராயன் இன்ஸ்டிடியூட்டில் சி. பி. ராமசாமி ஐயர் காலத்திலேயே இந்த வகுப்புகள் தொடங்கப்பட்டன. 100 பிள்ளை

களோடு ஆரம்பித்து, பத்து பத்து மாணவர்களாக அதிகமாக்கிக்கொண்டு வந்தார்கள். அந்த இன்ஸ்டிடியூட்டில் ஆறு வகையான கோர்ஸ்கள் சொல்லித் தரப்பட்டன.

(பிற்பகல் 6-10)

மதுரையில், சென்னையில் பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், எல்லா ஊர்களிலும் பாலிடெக்னிக்குகளை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். 40 பேருக்கு ஒரு வாத்தியார் என்ற விகிதத்தில் சொல்லித்தர வேண்டும். இப்போது ஒரு வாத்தியார் 60 பேருக்கு, 100 பேருக்குச் சொல்லித் தருகிறார். 1942 வரையில் செங்கல்வ ராயன் பாலிடெக்னிக்கில் 100 பேருக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். பிரின்டிங், பவுண்டரி, கார்பென்டரி, மெக்கானிக்கல், சிவில், எலெக்ட்ரிக்கல் என்ஜினியரிங் போன்ற ஆறு கோர்ஸ்களில் ஒரு கோர்சுக்கு 300 பேர்கள் விதம் 1,800 பேருக்குச் சொல்லித் தருகிறார்கள். அதைப் போலவே அரசாங்கமும் ஆரம் பித்தால், பிளஸ்-2 பள்ளியில் இடம் கிடைக்கவில்லை என்ற சிரமம் இருக்காது. இப்போதுகூட அறிவிக்கலாம். வேண்டுமானால் ஆகஸ்ட், செப்டம்பர் மாதத் தில் கோர்ஸ்களை ஆரம்பிக்கலாம். பாலிடெக்னிக்குகளில் பாஸ் பண்ணினால் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 200, ரூபாய் 250 அளவுக்கு பெரம்பூர் இன்டகிரல் கோச் பேக்டரியில் வேலைக்குச் சேரலாம். பாலிடெக்னிக்கில் ஒரு கோர்ஸ் படித்து பாஸ் பண்ணிவிட்டால், அதுதான் முடிவு என்பதல்ல. வேலை பார்த்துக்கொண்டே கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ் படிக்கலாம். ஒர்க்ஷாப்பில் மூன்று வருஷம் வேலை பார்த்த பிறகு, மேற்கொண்டு படிக்கலாம். ஆகவே பாலிடெக்னிக்கில் படித்தால், நிச்சயமாக 250 ரூபாய், 300 ரூபாய் சம்பளம் கிடைக்கும். 80 வருஷத்திற்கு முன்பு 30 ரூபாய்தான் கிடைத்தது. இப்போது 200, 300 ரூபாய் சம்பளம் கிடைக்கும். காலேஜுக்குப் போகிற ரஷ்ஷும் குறையும். ஆகவே இதை கல்வி அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள். இதைப்பற்றி தொழில் அமைச்சர் அவர்களும் சேர்ந்து கவனித்துச் செய்யலாம். ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு பாலிடெக்னிக் வேண்டும்; ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஜூனியர் பாலி டெக்னிக் வேண்டும் என்ற விதத்தில் ஆரம்பித்தால், நன்றாக இருக்கும் என் பதைச் சொல்லி, கல்வியமைச்சர் அவர்கள் கல்வி இலாக்காவைத் திறமையாக நடத்தக்கூடியவர், ஆகவே முடிந்த வரையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





**திரு. க. மீனாட்சிசுந்தரம்**: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு வழங்கிய உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து சில கருத்துக்களைச் சொல்ல நான் முற்படுகிறேன்.

கல்வியமைச்சர் அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிய காரணத்தாலும் ஆசிரியர்களுடைய குறைபாடுகளையும், நிறைவுகளையும் அறிந்திருக்கிற காரணத்தாலும், கல்வித் துறையிலே என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவருக்குத் தொடக்க காலத்திலிருந்தே இருந்த காரணத்தாலும், பல்வேறு அரிய காரியங்களை அவருடைய பதவிக் காலத்திலே செய்து வருகிறார்கள். அந்த வகையிலே அவரை நான் மிகவும் அதிகமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வியமைச்சர் அவர்கள் இந்த அவையில் இருக்கின்றபோது பேச வேண்டு மென்ற எண்ணம் எனக்குண்டு. கல்வியமைச்சர் அவர்கள் இப்போது வந்து விடுவார்கள் என்று கருதுகிறேன். ஆசிரியர்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் ஆசிரியர்கள் பிரச்சினைகளைப்பற்றிப் பேசுகிற நேரத்தில் அவர் இருந்தால், சற்று மன நிறைவு ஏற்படும். அந்த வகையிலே இப்போது அவர்கள் வந்து விடுவார்கள் என்ற எண்ணத்திலே தொடங்குகிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையெல்லாம் அரசு ஆசிரியர்களாக மாற்ற இருப்பதாக கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்று முன்பே பேசியிருக்கிறேன். அதில் உள்ள குறைபாடுகள், நிறைவுகள் பற்றி முன்கூட்டியே சொல்லியிருக்கிறேன். ஏனென்றால், அனைத்துப் பள்ளி களையும் அரசே ஏற்க வேண்டும். குறிப்பாக தனியார் பள்ளி ஆசிரியர் களுக்கும் அந்த வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று அனைத்து இயக்கங் களும் தொடக்க காலம் முதல் வலியுறுத்தி வந்திருக்கின்றன. பட்டினியாகக் கிடப்பவனுக்குக் கஞ்சி ஊற்றுங்கள் என்று கேட்கிறபோது, மூன்று வேளையும் சாப்பிட்டுக்கொண்டிருப்பவனுக்கு அறுசுவை உணவு படைப்பதைப்போல ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அனைவரும் அரசு ஊழியர்களாக ஆக்கப்படு வார்கள் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றிய ஆசிரி யர்கள் ஏற்கெனவே அரசு ஊழியர்கள் பெற்று வரும் சலுகைகளில் பலவற்றைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அரசு ஊழியர்களாக ஆக்கப்பட வேண்டிய வர்கள் தனியார் பள்ளி ஆசிரியர்கள்தான். அதைத்தான் எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தோம். ஏதோ ஒரு குறிப்பிட்ட இயக்கம் கேட்டதற்காக

இப்போது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை மட்டுமே அரசு ஏற்கிற நிலை வந்திருக்கிறது. என்றாலும்கூட அறுசுவை உணவிலே சற்று உப்பு அதிகமாகப் போய்விட்டால் . . . . .

(கல்வியமைச்சர் அவர்கள் இருக்கையில் வந்து அமர்ந்தார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினருக்கு ஜோசியம் தெரியுமோ ?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஜோசியம் தெரியாவிட்டாலும், சில பெரியவர்களின் அடியொற்றி வருகிற காரணத்தாலே சொல்கிறேன். அப்படி உப்பு அதிகமாகப் போய்விடுமோ, அதனால் அறுசுவை உணவை அருந்த முடியாதோ என்ற அச்சம் எழுகிறது. சென்ற கூட்டத்திலே நான் சொன்னதைப் போல ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இதற்கு முன் நடந்த கூட்டத்தில் சொன்னதைப் போலவே இப்போதும் சொல்வதால், கொஞ்சம் வெளியே போய்விட்டு வந்தேன். (சிரிப்பு)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டும் அதை நிறைவேற்றாத காரணத்தாலே, மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்ல வேண்டிய நிலை வருகிறது. ஆகவேதான் அமைச்சர் அவர்கள் இருக்க வேண்டுமென்று வேண்டுகிறேன். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை மட்டும் அரசு ஊழியர்களாக ஆக்குகிறபோது, எல்லா ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம். அனைத்து ஆசிரியர் இயக்கங்களையும் அழைத்துப் பேசி, அந்தப் பிரச்சினையிலுள்ள சிக்கல்களையெல்லாம் போக்கி அனைவரையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

தனியார் பள்ளிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் அங்கே இருக்கிற ஊழியர்களுக்கும் எவ்வளவு அவலங்கள் இருக்கின்றன என்பதை கல்வி யமைச்சர் அவர்கள் என்னைவிட நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே உள்ள ஒரு பள்ளியைப்பற்றி ஏற்கெனவே பேசியிருக்கிறேன். தஞ்சாவூர் பி. வி. செல்வராஜ் உயர்நிலைப் பள்ளியிலே ஜாதியைச் சொல்லி ஒரு ஆசிரியரைச் செருப்பால் அடித்த நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஜாதியைச் சொன்னாலே, தாழ்த்தப்பட்டவன் என்று குறிப்பிட்டாலே, தண்டனை கொடுக்கப்படும் என்று சட்டம் இருக்கிற நேரத்திலே, அந்த ஆசிரியரைச் செருப்பால் அடித்தவருக்குத் தண்டனை வழங்க முடியவில்லை. அடுத்து ஒரு ஆசிரியரும் அடி வாங்கினார் என்ற சூழ்நிலையும் உருவாகியிருக்கிறது. அதற்குப் பின்னால் நிர்வாகமே கொட்டகையைக் கொளுத்திவிட்டு, 5 ஆசிரியர்கள், 6 மாணவர்கள் ஆகியவர்களின் மீது வழக்கைத் தொடரக்கூடிய சூழ்நிலையும், அவர்கள் கைது செய்யப்படக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகளையும், அங்கே நடந்த நிதி ஊழல்களையும் பற்றி அங்கே இருப்பவர்கள் எழுத்து மூலமாக நம்முடைய அமைச்சருக்கும் எனக்கும் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். இணை இயக்குநர் அவர்கள் அங்கு சென்று, நான்கு நாட்கள் உட்கார்ந்து விசாரணை நடத்தி, ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே அந்தப் பள்ளியை அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அறிக்கை வந்த பிறகும்கூட, அரசு அப்பள்ளியை ஏற்றிருக்கிறதா என்றால், இல்லை. அதற்குப் பதிலாக அந்த நிர்வாகம் மற்றொரு அதிகாரியாலே தூண்டிவிடப்பட்டு, குறிப்பு எழுதிய அந்த அதிகாரி மீது புகார் எழுதுகிற அளவிற்கு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அந்த நிர்வாகத்திற்கு அந்த அளவிற்கு இந்த அரசாங்கத்திடம் செல்வாக்கு இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இப்படி பள்ளியின் நிர்வாகத்திற்கு அனுசரணையாக அரசு இருக்கிறதென்று சொல்லவில்லை. அரசு அப்படி இருக்காது என்பது எனக்குத் தெரியும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் அப்படி இருக்க முடியாது. ஆனால் நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகளில் சிலர் தனியார் துறைக்கு உடந்தையாக இருக்கிறார்கள். தனியார் துறை ஆசிரியர்களால் அந்த அதிகாரிகளுக்கு எந்த வருமானமும் கிடையாது.

(பிற்பகல் 6-20)

ஆனால் தனியார் பள்ளி நிறுவனத்திலிருந்து எந்த அளவுக்கு வருமானம் வருகிறது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே அந்தக் கோர்வைகள், கோப்புகள் போய்க்கொண்டு வந்து கொண்டிருக்கின்றனவே தவிர, அந்தப் பள்ளியாசிரியர்கள் நிம்மதியாக வாழ முடியாத சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே மீண்டும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதனால் விரைவாக ஒரு முடிவுக்கு வர வேண்டும். இங்கேகூட கல்வித்துறை அதிகாரிகள் வந்திருக்கிறார்கள். அவர்களும் அதிலே கவனம் செலுத்த வேண்டும். இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவுக்கு அதைச்

செய்யவேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலையில் தனியார் பள்ளிகள் இருக்கின்றன. அவைகளிலே ஒரு சிலவற்றை யாவது எடுத்துக்கொள்வதற்கு அரசு முயற்சி செய்யக்கூடாதா? ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு என்ன இல்லை. எல்லா சௌகர்யமும் இருக்கிறது, சிலவற்றைத் தவிர! ஆக அவர்களை எடுத்துக் கொண்டது தவறு என்று நான் சொல்லவில்லை. என்றாலும்கூட, முதலிலே எடுக்க வேண்டியது தனியார் பள்ளி ஆசிரியர்களை. முதலில் இவர்களை எடுக்காமல் அடுத்ததை எடுத்திருக்கிறார்கள். தனியார் பள்ளிகள் கட்டிடம் இல்லாமல் எத்தனை இருக்கின்றன? சட்டப்படி நிர்வாகக் குழு அமைக்கப்படாத பள்ளிகள் எத்தனை இருக்கின்றன, 10 ஆயிரத்திற்குக் குறைவாக வைப்பு நிதி வைக்காதிருக்கின்ற பள்ளிகள் எத்தனை இருக்கின்றன? அரசு ஆணைகளை அமுல் படுத்தாதவை எத்தனை இருக்கின்றன? வசூலில் ஊழல் செய்பவை எத்தனை இருக்கின்றன? இப்படிப்பட்ட பள்ளிகள் எத்தனையோ இருக்கின்றன. ஏன் அவைகளையாவது முன்னாலே எடுப்போம் என்று திட்டமிட்டு அரசு செய்யவில்லை? அந்த முயற்சியைச் செய்யக் கூடாதா?

பேறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது, நுங்கம்பாக்கத்திலே அவர்கள் இல்லத்திலே ஆசிரியர்கள் அவர்களைப் பேட்டி கண்டு பேசினோம்! வேதாரண்யத்திலே சில பள்ளிகளில் ஊழல்கள் நடைபெற்றபோது, அதைச் சுட்டிக்காட்டியபோது, அவர்கள் சொன்னார்கள். அத்தனை பள்ளிகளையும் அரசு எடுக்க வேண்டுமென்று அவர்களிடம் வேண்டுகோள் விட்டபோது, அவர்கள் சொன்னார்கள், "பச்சையப்பன் கல்லூரியையுமா எடுக்கச் சொல்கிறீர்கள்? அல்லது பக்கத்திலேயிருக்கின்ற இராமகிருஷ்ணா மடம் நடத்துகின்ற கல்வி நிலையங்களையுமா எடுக்கச் சொல்கின்றீர்கள்? ஊழல் மலிந்து இருக்கும் குறிப்பிட்ட பள்ளிகளைக் கண்டுபிடித்து, அவைகளை எடுக்க முயற்சி எடுப்போம்" என்று சொன்னார்கள். இந்த அரசு அண்ணா அவர்கள் வழியில் வந்தது என்று கூறுவது உண்மையானால், அதை இந்த அரசு செய்வதற்கு முயற்சிக்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகள் இருக்கின்றனவே, அவைகளைப் பொறுத்த வரையிலே, என்னைக் காட்டிலும் தீவிரம் கொண்டவர் நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என்பதை ஒரு வாரம் முன்னதாக நான் படித்த அவருடைய பேச்சிலிருந்து தெரிந்துகொண்டேன் என்றாலும் கூட, இங்கே அருமை நண்பர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள்



சுட்டிக் காட்டியது போல், நானும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு அரசியல் சட்டத்திலேயே பாதுகாப்பு இருக்கின்றது என்று சட்டத்தையெல்லாம் படித்துக் காட்டினார்கள். மத்திய அரசு ஒத்துக்கொள்கிறதோ, ஒத்துக்கொள்ளவில்லையோ, மாநில அரசினுடைய உணர்வை அது புரிந்துகொள்ளட்டும். அன்றைக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, பட்டதாரிகளுக்கு ரூபாய் 50 உதவித் தொகை அளிப்பதை நாம் ஏன் செய்யவில்லை என்பதற்கு, அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். எங்களுக்கு உணர்வு இருக்கிறது. 'ஸ்பிரிட் பிகைன்ட் இட்' இருப்பதைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆகவே, இந்த அரசினுடைய உணர்வை மத்திய அரசு தெரிந்து கொள்ளட்டுமே. இந்த சட்டமன்ற மேலவையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி சட்டத்திலே திருத்தம் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தைப் பிரதிபலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளை, ஆசிரியர்களை பீகார் மாநிலத்திலே இன்றைக்கு இரண்டு கட்டத்திலே அரசு எடுக்கிறார்கள். தனியார் பள்ளிகள் அனைத்தையுமே காலப்போக்கில் அரசே எடுக்கிறார்கள். அந்த வகையிலே இந்த மைனாரிட்டி பள்ளிகளை எடுப்பதற்கு சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன எனக் கூறப்படுகிற காரணத்தினால், மற்ற பள்ளிகளையாவது எடுப்பதற்கு நாம் முயற்சிக்கலாம். அந்த முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்களின் பேச்சில் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கருத்தின்மீது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தனியார் பள்ளிகளை எடுக்கின்றபோது, மைனாரிட்டி பள்ளிகளை விட்டுவிட்டாவது எடுக்க வேண்டும் என்று சொல்கின்றபோது, பெரும்பான்மையினர் நடத்துகின்ற பள்ளிகளை அவர் சொல்வதுபோல் எடுக்கின்றபோது சிக்கல் ஏற்படும். ஒரு நாட்டில் அல்லது மாநிலத்தில், மைனாரிட்டி மக்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகூட பெரும்பான்மையான மக்களுக்கு இல்லையே என்ற நிலைமை தோன்றக்கூடும். அது வேறு பல பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்ற காரணத்தினாலேதான் நாம் அதைச் செய்ய முடியவில்லை. மொத்தமாக தனியார் பள்ளி என்று கூறினாலும், அது கோர்ட்டுக்குப் போனால் என்னவாகும் என்பது மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். அது மட்டுமல்ல. மத்திய அரசுக்கு உணர்வில்லை என்று சொல்ல முடியாது. அவர்களுக்கும் அந்த உணர்வு இருக்கிறது.

ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள், அரசு, மற்றவர்கள் எல்லாம் அந்த உணர்வை மேலும் பயன்படுத்திக்கொண்டு, வேண்டிய திருத்தங்களைச் செய்யப் பெறுவதற்கு முயற்சிக்கலாமே தவிர, நாம் அதற்கு முன்னாலேயே இது போன்ற நடவடிக்கைகள் எடுப்பது என்பது மக்கள் மத்தியிலே ஒரு குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கும், அந்த உணர்வு இருக்கிறது, மாநில அரசுக்கும் அந்த உணர்வு இருக்கிறது. ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும், நாம் எல்லோரும் சேர்ந்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையிலே அந்த முயற்சிகளுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் மைனாரிட்டி பள்ளிகளை நடத்துகிறார்களே அவர்கள் தான் மெஜாரிட்டி யினரை அழித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். நான் குறிப்பிட்டுக் காட்டியதைப் போல, கட்டிடம் இல்லாதவர்கள், வைப்பு நிதி வைக்காதவர்கள், ஊழல் மிகுந்தவர்கள் இப்படிப்பட்டவர்களின் பள்ளி களையாவது எடுப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை மீண்டும் நான் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு, இப்போது மற்ற பள்ளிகளிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்குள்ள சலுகைகள் எதுவுமே இல்லை. மிதி வண்டிக் கடன், மூக்குக் கண்ணாடிக் கடன் போன்றவையெல்லாம் இல்லை. அதையெல்லாம் தருவதற்கு வேண்டிய முயற்சியிலே ஈடுபட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளியிலே ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். அந்த ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற சலுகைகள் வழங்கப்படவில்லை. அதே நேரத்திலே அரசுப் பள்ளிகளிலே இருக்கின்றவர் களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற சலுகைகளும் இல்லை. அந்தச் சலுகைகள் வழங்கப்படாமல் இருக்கின்றன. தேர்வு நிலை இல்லை, ஊதிய உயர்வு இல்லை, குடும்ப நல நிதித்திட்டம் இல்லை, ஓய்வூதியம் இல்லை. ஆக, இப்படி எல்லாம் இல்லை, இல்லை என்ற சூழ்நிலைகள் இருக்கின்றனவே, அவைகளையெல்லாம் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கின்ற 'கன்டின்ஜெண்ட் ஊழியர்கள்' எல்லாம் கூட நீண்டகாலமாக நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள்,



அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பற்றி இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது பேசுகிறபோது, ஓய்வு பெற்ற பின்னர் ஒருவருக்கு கன்பர்மேஷன் ஆர்டர் அனுப்பியதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இங்கே இருக்கக்கூடிய 'கன்டின்ஜெண்ட் ஊழியர்கட்கும்' இருக்கிறது. அந்தக் குறைகளையெல்லாம் நீக்குவதற்கு முயற்சிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளி நூல்நிலையம், ஆய்வுக் கூடம், ஹோம் சயன்ஸ் பதிவுரு எழுத்தர்கள் என்று இருக்கின்றார்கள். அந்தப் பதிவுரு எழுத்தர் களிடம் 6 ஆண்டுக் காலமாக ரூ. 6 வீதம் பிடித்தம் செய்திருக்கிறார்கள். அப்படிப் பிடித்தம் செய்கின்ற நிலையை நான் அமைச்சருக்கும் மற்றவர் களுக்கும் தெரிவித்தும்கூட, அதைத் தவிர்த்திட வேண்டியும்கூட இதுநாள் வரை அது திருப்பித் தரப்படாமலே இருக்கிறது. அந்தச் சிக்கலையெல்லாம் நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்விக் கொள்கை விளக்கத்திலே ஒரு அறிவிப்பைப் பார்த்தேன். அதாவது தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு வரையிலே இலவசக் கல்வி வழங்க இருக்கிறார்கள். அதைப் பார்த்து நான் மகிழ்ந்தேன். மகிழ்ந்ததற்குப் பின்னாலே சற்று ஆழ்ந்து படித்தபோது, அதிலே ஆசிரியர்கள் நல நிதியிலிருந்து, நலநிதியின் துணையோடு அது வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆசிரியர் நல நிதியைப்பற்றி இங்கே இருக்கின்ற பெரியவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆசிரியர் நல நிதியிலேயிருந்து யார் யாருக்கு வழங்குகிறார்கள், எந்த அளவுக்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு தொடக்கப் பள்ளி ஆசிரியர் களுடைய குழந்தைகள் அத்தனை பேருக்கும் இலவசக் கல்வி வழங்கிவிட முடியுமா ? அது முடியாது. அதிலே உள்ள நிதியைக் கூட எப்படிப் பயன் படுத்துகிறார்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். புற்று நோய் வந்திருக்கிறது என்று ஒரு ஆசிரியர் அங்கே போய் நிதி கேட்கிறார். புற்று நோய் வந்து சாகக் கிடப்பவர் கேட்கிறார். புற்று நோய் என்று சொல்லும்போது, நம்முடைய இதயத்திலே இருக்கின்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவுக்கு வருகிறார்கள். ஆக புற்றுநோய் எவ்வளவு கொடுமையானது என்பதை அனுபவித்திருக்கிறோம். இந்தப் புற்று நோய் சிகிச்சைக்காக உதவி கேட்டு ஒரு ஆசிரியர், ஆசிரியர் நல நிதியிலிருந்து நிதி கேட்டிருக்கிறார். அந்த ஆசிரியர் தஞ்சை மாவட்டத்திலே, அம்மா பேட்டையிலே இருந்து நிதி கேட்டு விண்ணப்பித்திருக்கிறார்கள். அந்த மனிதரை மூன்று மாதங்கள் கழித்து ஜூன் மாதத்திற்கு மேல் அனுகுங்கள் என்று திருப்பி அனுப்புகிறார்கள் என்றால், இந்த ஆசிரியர்கள் நல நிதி

எதற்காகப் பயன்படுகிறது என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே இந்த ஆசிரியர் நல நிதியை ஆசிரியர்கள் அவசர உதவிக்கு மட்டும்தான் உபயோகப்படுத்த வேண்டும். இங்கேகூட சென்ற ஆண்டு ஒரு ஆசிரியை அவர்களுக்கு சிறுநீரகத்தை மாற்றவேண்டிய ஒரு சூழ்நிலை வந்தபோது, உதவிக்கு வந்தார்கள். அதை மாற்றினால்தான் அவர்கள் வாழ்வார்கள் என்ற நிலை இருந்தது. இந்தமாதிரி வியாதிகள் ஏழையெளிய ஆசிரியப் பெருமக்களுக்கு வரக் கூடாது. என்றாலும் வந்து விட்டது. வந்துவிட்ட பின்னாலே, அரசிடம் போய் உதவி பெற முடியுமா என்றால், அப்படிப் பெற முடியவில்லை. ரூபாய் 30 ஆயிரத்திற்கு மேலே செலவாகும் என்றார்கள். அந்த நிதியைப் பெற முடியவில்லை. அப்படி முடியாத சூழ்நிலையில், அரசிடம் தவிர்ப்பு பெற்று உதவி பெற, அமைச்சர் அவர்களிடம் நெருங்கி, அவரிடம் சொல்லி பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தில் நான் முயற்சி செய்தேன். அவர்களைக் கேட்டபோது, அவர்களும் விரைவாக அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்கள். வேலூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரியில்தான் அந்த வியாதிக்கு மருத்துவம் பார்க்கும் வாய்ப்பு இருந்தது. அந்த சிகிச்சையை அளிப்பதற்கு நம் அரசினர் மருத்துவ மனையில் வசதி இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில், அங்கே சென்று பணம் கட்டவேண்டிய நேரத்திலே, அது தேவை என்று கேட்டபோது, இங்கே இலாகாவில் ருட்டின் புரோசிஜரை அதிகாரிகள் மேற்கொண்டு, ஒரு வாரம், / பத்து நாட்கள் என்று காலம் ஆகிவிட்டது. அதற்குப் பின்னாலே ஜி.ஓ. போட்டார்கள். அந்த ஆணை வருகின்ற நேரத்தில் அவர்கள் இறந்தே விட்டார்கள். ஆக இந்த ஆசிரியர்கள் நல நிதி தேவையான காலத்தில் பயன்படுத்தப்படுகிறதா என்றால், அப்படி அந்த நிதி பயன்படுத்தப்படவில்லை. இந்த நிலையில், தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு வரை இலவசக் கல்விக்கு அதிலிருந்து எப்படி உதவி செய்ய முடியும்? ஆக எந்த நிபந்தனையும் இல்லாமல் அந்தக் குழந்தைகளுக்கு உதவி தர வேண்டுமே தவிர, இந்த நிதியிலிருந்து, அந்த நிதியிலிருந்து, 'அப்ளை' பண்ணினால் கிடைக்கும் என்று சொன்னால், அது பெயரளவுக்குத்தான் இருக்குமே தவிர, செயலளவுக்கு இருக்காது, உண்மையிலேயே வழங்குவதாக ஆகாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, பயிற்சி ஆசிரியர்கள்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் இங்கு கல்வி அமைச்சராக இருந்தபோது ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதாவது அவர்கள் கொஞ்ச காலம் கல்வி அமைச்சராக இருந்தார்கள். அப்போது அவர்கள் இதைக் கொண்டு





வந்தார்கள். பயிற்சி பெற்ற ஆசிரியர்களை ரூ. 125 மாதச் சம்பளத்தில் பயிற்சி ஆசிரியர்களாகப் போட்டார்கள். அவர்களைப் பணிவரன்முறை செய்கின்ற போது, சரியாகச் செய்யவில்லை. அவர்கள் 1970 ஆம் வருடத்தில் பணியில் சேர்ந்தவர்கள். அதற்குப் பின்னர் அவர்களைப் பணிவரன் முறை 1979 ஆம் ஆண்டில் தான் செய்தார்கள். அவர்கள் அந்தப் பணியில் எந்த நாளில் சேர்ந்தார்களோ அந்த நாளிலே இருந்தே செய்தார்களா என்றால், இல்லை. அது அரசினுடைய அல்லது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததா என்பதுபற்றி எனக்குத் தெரியாது. இப்போதாவது அதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதற்காக என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்போதுதான் அவர்களைப் பயிற்சி ஆசிரியர்கள் என்று போட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள். அவர்களுக்கு அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்தே பணி வரன்முறை செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய வேண்டுகோளை விடுவது என் கடமையாகும்.

(பிற்பகல் 6-30)

இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக்குவது குறித்து நாங்களெல்லாம் எடுத்துச் சொல்லி, கல்வி அமைச்சரவர்களும் அதற்காக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். போன ஆண்டு அந்தத் திட்டத்தைக் கல்வி அமைச்சரவர்கள் அறிவித்தபோது, ஓராண்டுக்கு 5,000 ஆசிரியர்கள் வீதம் இடைநிலை ஆசிரியர்களாக்குவோமென்று சொன்னார்கள். அப்படியென்றால் எல்லா ஆசிரியர்களையும் இடைநிலை ஆசிரியர்களாக்குவதற்கு 12 ஆண்டுகளாகுமென்று சொன்னேன். அதற்குள் பலர் இறந்து போவார்கள், எனவே விரைவாக முடிக்கும் திட்டத்தைக் கொண்டு வாருங்கள் என்று வேண்டிக்கொண்டேன். ஆனால் இப்போது ஆண்டுக்கு 2,500 ஆசிரியர்களைத் தான் எடுக்க முடியுமென்று அறிகிறேன். ஏனெனில் அந்தக் கோர்ஸ் 7 மாதம் 10 நாட்கள் நடைபெறுமென்று சொன்னால், ஓராண்டில் அதை இரண்டு முறை நடத்தும் நிலைமையில்லை. மேலும் இதிலே என்ன செய்திருக்கிறார்கள் என்றால், விண்ணப்பங்களை விரும்பியவர்களிடத்திலே பெற்று; அதற்குப் பின்னர் பதிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தில் அப்படி விண்ணப்பத்தைப் பெறாமலேயே, அதிகாரிகளே சில பேர்களைப் பொறுக்கி எடுத்து, அதற்குப் பின்னர் அவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கேட்டு வாங்கியிருக்கிறார்கள். அதில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன; எனவே இன்னொரு உத்தரவு போட்டு, விரும்புகிறவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று, முறைப்படி

அவர்களைப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே செகண்டரி கிரேட் பரீட்சைக்குத் தனியாகப் படித்து, பரீட்சை எழுத வாய்ப்பு இருந்தது. இப்போது அந்தத் திட்டமில்லை என்று சொல்லப்படுகிறது. ஏற்கெனவே பரீட்சை எழுதத் தயாராக இருக்கிறவர்களை அனுமதித்தால் தவறு என்ன? அவர்கள் இந்தப் பயிற்சியிலும் சேரவேண்டிய அவசியமென்ன? அவர்கள் இப்போது பரீட்சை எழுத முடியாத நிலை இருக்கிறது. இப்படிப் பட்ட நிலைமைகளைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் ஆசிரியர்களைப் பற்றிய ஒரு பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். ஒரே தகுதி பெற்ற தொழிலாசிரியர்கள், ஒரே படிப்பு அறிவுள்ளவர்கள், ஒரே மாதிரி பணியைத்தான் உயர்நிலைப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் பணியாற்றுகிறார்கள். உயர்நிலைப் பள்ளியிலே பணியாற்றும் பி.டி. ஆசிரியர் வாங்கும் ஊதியம், நடுநிலைப் பள்ளியில் பணியாற்றும் பி.டி. ஆசிரியருக்கு வழங்கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியருக்கு வழங்கப்படும் சம்பளம் நடுநிலைப் பள்ளியில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியருக்கு வழங்கப்படுகிறது. ஆனால் தொழிலாசிரியர்களுக்கு மட்டும் அப்படியல்ல. உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் தொழிலாசிரியர்களுக்கு ரூபாய் 350—10—420—15—600 என்ற சம்பள விகிதம் வழங்கப்படுகிறது. ஆனால் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தொழிலாசிரியர்களுக்கு ரூபாய் 280—5—320—10—450 என்ற சம்பள விகிதம் வழங்கப்படுகிறது. ஆக மற்ற பிரிவுகளிலே இருக்கிற ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகை இருக்கிறது. அதுமாதிரி இவர்களுக்கு வழங்கப் படவில்லை. இந்த வேறுபாட்டைக் களைய வேண்டும். உயர்நிலைப்பள்ளி தொழிலாசிரியர்கட்கு வழங்கப்படும் அதே ஊதியத்தை நடுநிலைப் பள்ளித் தொழிலாசிரியர்கட்கும் வழங்க வேண்டும்.

நம்முடைய கல்வி அமைச்சரவர்கள் பல்வேறு பதவிகளை ஏற்படுத்தி, பல்வேறு ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு தர திட்டமிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். இத்தகைய வாய்ப்பு இடைநிலை ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழாசிரியர்கள் என்ன பாவம் செய்தார்களோ! அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. அவர்களுக்கு ஏன் அளிக்கப்படவில்லை? தமிழாசிரியர்களில் வேலை இல்லாதவர்கள்





இல்லையா? மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 30—10—1977-ல் குடந்தையிலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். மூவாயிரம் தமிழாசிரியர்களுக்கு கோயில்களிலே வேலை அளிக்கப்படுமென்று சொன்னார்கள். அதற்குப் பின்னாலே, நீண்ட நாட்களுக்குப் பின்னாலே விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலருக்கு ஆங்காங்கு வேலை அளிக்கப்பட்டது. அந்த உறுதிமொழி இன்று வரை முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. இப்போது ஒதுக்கியிருக்கிறார்களே, அதிலேகூட தமிழாசிரியர்களை விட்டுவிட்டார்கள். அவர்களையும் அந்தப் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழில் பி.லிட். பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பயிற்சிக் கல்லூரிகளிலே இடம் கிடைப்பதில்லை. தமிழ் நாட்டில் தமிழுக்காக உள்ள பி.லிட். பட்டம் படித்தவர்கள் பயிற்சிக் கல்லூரியில் சேர வேண்டுமென்றால் முடியவில்லை. அங்கே என்ன விதி வகுக்கப்பட்டிருக்கிறது என்றால், முதலில் எம்.ஏ. முதல் வகுப்பு; பிறகு எம்.ஏ. இரண்டாம் வகுப்பு; அதற்குப் பிறகு பி.ஏ. முதல் வகுப்பு; பிறகு பி.ஏ. இரண்டாம் வகுப்பு படித்தவர்களுக்கு இடம் அளித்தது போக, மீதம் இடமிருந்தால் பி.லிட். தமிழ் படித்தவர்களுக்கு இடம் உண்டு. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டவர்கள் எத்தனை பேர்கள் எம்.பி.பி.எஸ். படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்? தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டவர்களுக்கு பொறியியல் கல்லூரியில் எத்தனை இடங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன? இதை ஆழமாகப் பார்க்க வேண்டும். அந்த வகையிலே தமிழுக்கு உண்மையிலேயே ஆக்கம் அளிப்பதாக இருந்தால், இதைச் செய்ய வேண்டும். தமிழ் படித்தவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தை பயிற்சிக் கல்லூரிகளில் ஒதுக்கி, இடம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சி என்ற தலைப்பிலே நம்முடைய கல்வி அமைச்சரவர்கள் பல்வேறு விதமான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். துறைதோறும், தமிழை ஆட்சி மொழியாக்கும் திட்டம் முழு வெற்றியடைய ஒரு அதிகாரியை நியமிக்கும் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் பி.ஈ., எம்.பி.பி.எஸ்., படிப்பிற்கு தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டவர்கள் எத்தனை பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்டேன். அதுபோல தேர்வாணைக் குழு தேர்ந்தெடுக்கும்போதுகூட, ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக எடுத்தவர்களுக்குக் கொடுக்கப்படும் 'வாய்ப்பு' தமிழில் படித்தவர்களுக்குத் தருவதில்லை. கம்யூனிட்டி அடிப்படையிலே பிற்பட்டவர்களுக்கு 50 சதவிகிதமும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதமும் ஒதுக்கி

யிருக்கிறார்கள். அதுபோல தமிழ் படித்தவர்களுக்கும் வேலை வாய்ப்பில் ஒரு குறிப்பிட்ட அளவு ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளிலே பெண் உடற்பயிற்சி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அங்கே பணி புரியும் ஆண் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு 25 ரூபாய் சிறப்பு ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பெண் உடற் கல்வி ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம் இல்லை. ஆகவே, அங்கே பெண் உடற்பயிற்சி ஆசிரியர்கள்—தாய்க்குலம்—பொருளிழப்புக்கு ஆளாகுகிறார்கள். அவர்களுக்கும் 25 ரூபாய் சிறப்பு ஊதியம் தந்து உதவுங்கள் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் 750 மாணவர்கள் இருந்தால், உதவித் தலைமை ஆசிரியரை நியமித்துக்கொள்ளலாம். அது மட்டுமல்ல, ஷிப்ட் முறையில் பள்ளி நடந்தால், இரண்டாவது உதவித் தலைமை ஆசிரியரை நியமித்துக் கொள்ளலாம் என்றும் இருக்கிறது. ஷிப்ட் முறையில் பள்ளி நடந்தால்தான் இரண்டாவது உதவித் தலைமை ஆசிரியரைப் போட்டுக்கொள்ளலாமென்ற நிலைமையை மாற்றி, 750 மாணவர்களுக்கு மேலே அடுத்த 750 மாணவர்கள் இருந்தால், அவர்களும் இரண்டாவது உதவித் தலைமை ஆசிரியர்களைப் போட்டுக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்துகிறார்கள். உயர்த்துகிறோம். அதுபோல ஊராட்சி ஒன்றியத்தில் பணி புரியும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கப் போகிறோம். இதன் காரணமாக கல்வித் துறையில் பணிப் பளு அதிகமாகும். எனவே அங்கு எஸ்டாபிளிஷ்மென்ட்டை அதிகரிக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும்போது, பழைய ஊழியர்கள்தான் இருக்கிறார்கள். அங்கேயுள்ள எழுத்தர்களுக்கு சிறப்பூதியம் தரப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. அப்படிப்பட்ட குறைபாடுகளையும் நீக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பணி புரியும் ஒரு இளநிலை ஆசிரியர் சென்னையிலுள்ள ஏ.ஜி. அலுவலகத்திற்கு வந்து, ஓய்வூதியம் பெறுவதற்கான காரியங்களை முடித்துக்கொண்டு செல்வதென்பது கடினமாக இருக்குமென்று அமைச்சரவர்கள் உள்ளபடியே உணர்ந்து எங்கள் வேண்டுகோளுக்





இணங்க சென்ற கூட்டத்தில் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். ஓய்வூதியத்தை, மாவட்டத் தலைநகரங்களிலுள்ள மாவட்டக் கல்வி அலுவலகத்திலேயே முடித்துக் தரும் திட்டத்தை அறிவித்தார்கள். அதை நாங்கள் வரவேற்றோம். ஆனால் அந்தத் திட்டம் இதுவரை செயல்படுத்தப்பட்டதா என்றால், இல்லை. ஏன் செயல்படுத்தப்படவில்லை? சென்ற ஆண்டு சொல்லப்பட்டது. இன்றுவரை செய்யப்படவில்லை. பறக்கும் படை என்று இயக்குநர் அவர்கள் அறிவித்தார்களே, அது இதைச் செய்து காட்டக் கூடாதா? கன்னியாகுமரி, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் பணியாற்றிய செகண்டரி கிரேட், ஹையர் கிரேட் ஆசிரியர்கள் ஓய்வூதியம் தொடர்பாக சென்னைக்கு வரும் சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்ற வேண்டும் . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருக்குரிய நேரமாகிவிட்டது. விரைவில் பேச்சை முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவித்தொகை அளிக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வருமான வரம்பு ஏன்? கணவன், மனைவி இருவரும் ஆசிரியர்களாகப் பணியாற்றிக்கொண்டிருந்தால், அவர்கள் வாங்கும் ஊதியத்தை வைத்து, வருமானத்தை வைத்து, உதவித் தொகை இல்லை என்று சொல்வது தவிர்க்கப்பட வேண்டும். ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு எந்தவித நிபந்தனையும் இல்லாமல் உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாணவர் உணவு விடுதிகளில் சேர்ப்பதற்குக்கூட 300 ரூபாய் ஆண்டு வருமானம் உள்ளவர்களின் குழந்தைகள்தான் சேர்த்துக்கொள்ளப்படுவார்களென்று இருக்கிறது. ஆண்டு வருமானம் 300 ரூபாய் என்றால், பிச்சைக்காரர்களுக்குக்கூட இன்றைய தினம் 300 ரூபாய் கிடைக்கும். ஆண்டு வருமானம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படிச் சொல்லி ஆசை காட்டாதீர்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். கடுமையான வார்த்தையைச் சொல்லிவிட்டேன். வீதிகளில் கை ஏந்துபவர்களுக்குக்கூட 300 ரூபாய் ஆண்டு வருமானம் வரும் சூழ்நிலை இருக்கிறது. எனவே இன்றைக்கு உதவித் தொகை வாங்குவதற்காக பொய்ச் சான்றுகள்தான் வாங்குகிறார்கள். இங்குள்ள விலைவாசிக்கேற்றவாறு அந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டும்.

இன்றையதினம் இலவச சிலேட்டுகள் வழங்குகிறார்கள், வரவேற்கிறேன். இலவசப் புத்தகங்கள் வழங்குகிறார்கள், வாழ்த்துகிறேன். அந்த இலவச சிலேட்டை எடுத்து வர இருந்தேன், தவறிவிட்டது. இலவச நகர சிலேட்டை வாங்கிப் பார்த்தால் தெரியும். ஒரு பள்ளியை விசிட் செய்து, பார்க்க வேண்டும். ப்ரூக் பான்ட் டீ, பிரிட்டானியா பிஸ்கட் டின்களை வெட்டி அந்த ஸ்லேட்டுகளைத் தயார் செய்திருக்கிறார்கள். அவற்றைப் 'பேக்' செய்யும் கள்ளிப் பெட்டியிலிருந்து சட்டம் தயாரித்து, அடித்திருக்கிறார்கள். அதில் எப்படி எழுத முடியும்? மேலும் அது காஸ்ட்லியாகவும் இருக்கிறது. ஆனால் இதனால் யாரோ ஒரு கான்ட்ராக்டர் பிழைத்துக் கொண்டிருக்கிறார். நிலைமைகள் இப்படி இருக்கின்றன. அதிலுள்ள எழுத்துக்கள் அப்படியே இருக்கின்றன. கருப்பு மை சரியாக அடிக்கப்படவில்லை. அந்த ஸ்லேட்டு களை அப்படியே பள்ளிகளில் பயன்படுத்த முடியாமல் கட்டி வைத்திருக்கிறார் கள். அதைப் பயனுள்ளதாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(பிற்பகல் 6-40)

ஆகவே மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு என்று நிதி ஒதுக்கி அங்கு இருக்கக்கூடிய சூப்பர் மார்க்கெட் மூலம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று ஆணையிட்டால், டிரான்ஸ்போர்ட் சார்ஜும் குறையும், தரமான சிலேட்டுகளாகவும் இருக்கும். ஆகவே இனிமே லாவது தரமான சிலேட்டுகளை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கு மாறு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசுப் பள்ளிகள் இருக்கின்றன. அரசுப் பள்ளிகளில் பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய அந்த ஆசிரியர்களை இந்த ஆண்டு பல இடங்களுக்கு பழி வாங்கும் நோக்கோடு மாற்றியிருக் கிறார்கள். மாற்றுதலின்போது பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அங்கே என்.ஜி.ஜி.ஓ. போராட்டம் ஒன்று 11—3—1978 முதல் 14—3—1978 வரை நடைபெற்றது. போராட்டத்தில் பங்கு கொண்ட ஆசிரியர்களுக்குச் சம்பளம் எல்லாம் கொடுத்தார்கள். வடக்கு தாமரைக் குளம் என்ற இடத்தில் இருக்கக்கூடிய பள்ளிக்கூட ஆசிரியர்கள் போராட்டத்தில் பங்கு பெறவில்லை. ஆனால் அவர்கள் சட்டப்படி உள்ளூர் விடுமுறை விட்டிருக்கி றார்கள். இன்றையதினம் கல்வியின் தரத்தைக் கெடுக்கக் கூடாது, போராட்டம் நடக்கக் கூடாது என்றெல்லாம் எல்லோரும் பேசுகிறார்கள். ஆனாலும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி என்ற முறையில் நான் சில விஷயங்





களை மட்டும் ஏற்றுக்கொள்கிறேன். சட்டப்படி உள்ளூர் விடுமுறை விட்டு விட்டு, போராட்டத்தில் ஈடுபடாது இருந்த அந்த ஆசிரியர்களுக்கு அந்த நாட்களுக்குரிய ஊதியத்தை வழங்குங்கள் என்று கேட்டபோது, அவர்களுக்கு அந்த ஊதியம் வழங்கப்படவில்லை. அதற்கு மாறாக அவர்களை திக்குக்கு ஒருவராக மாற்றியிருக்கிறார்கள். மாறுதல் வேண்டுமென்று கேட்டவர்களை மாற்றவில்லை. ஒருவர் பின் ஒருவராக அவர்களை மூலைக்கு ஒருவராக அவர்களை மாற்றியிருக்கிறார்கள். இது எந்தவிதத்தில் நியாயம்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் இரண்டு நிமிடத்திற்குள் முடித்துவிட வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** முடித்து விடுகிறேன். அங்கே இடைநிலை ஆசிரியர் பணியிடத்தில் இளநிலை ஆசிரியர்களை மாறுதல் செய்திருக் கிறார்கள். இளநிலை ஆசிரியர் பணியிடத்தில் இடைநிலை ஆசிரியர்களை மாறுதல் செய்திருக்கிறார்கள். ஓய்வு பெறாத ஆசிரியர் பணியிடத்தில் ஓய்வு பெற்றதாகச் சொல்லி ஆசிரியரை நியமித்திருக்கிறார்கள். மாறுதல் வேண்டுமென்று கேட்டவர்களுக்கு இல்லை. கேட்காதவர்கள் எல்லாம் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் போக்க வேண்டும்.

அடுத்து, பாடநூல் நிறுவனம்பற்றி ஒரு சில வார்த்தைகள் குறிப்பிட ஆசைப்படுகிறேன். தமிழ் நாடு பாடநூல் நிறுவனம் நோட்டுப் புத்தகங்களைச் சிறந்த முறையில் வெளியிடுவதிலும், விநியோகிப்பதிலும் நல்ல சீர்திருத்தத் தைச் செய்திருக்கிறது. சிறு தொழில் செய்பவர்களுக்கெல்லாம் ஆக்கமும் ஊக்கமும் தந்திருக்கிறார்கள். ஆனால், கொள்ளை லாபமடிக்கும் பெருமுதலாளி கள் மலிவு விலையில் கொடுக்கப்படும் நோட்டுப் புத்தகங்களை வாங்கி, எப்படி கள்ள நோட்டை மாற்றும்போது மேலேயும் அடியிலேயும் நல்ல நோட்டை வைத்து இடையில் கள்ள நோட்டை வைத்து மாற்றுவார்களோ—நாம் சினிமாக்களிலே பார்க்கிறோமே அதுபோல் வெள்ளை நோட்டுப் புத்தகங்களை மேலேயும் அடியிலேயும் வைத்து மலிவு விலையில் கிடைக்கும் நோட்டுப் புத்தகங்களை இடையிலே வைத்து, டிரான்ஸ்போர்ட் பண்ணி கேரளாவிற்குக் கொண்டு போய் விற்று கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் தான் நோட்டுப் புத்தகங்களுக்குத் தட்டுப்பாடு இருக்கிறது. இதனைக் கண்காணித்து அரசு நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்த வேண்டும். நோட்டுப் புத்தகங்களைத் தயாரிக்கும் தமிழ் நாடு பாடநூல் நிறுவனத்திற்கு மின்சார வெட்டு வரும்போது—இப்போது

மின்சார வெட்டு இல்லையென்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தாலும் கூட, இனிமேல் மின்சார வெட்டு வரும்போது விதி விலக்கு அளித்து, 'எக்செம்சன்' அளித்து, முழு நேரமும் மின்சார வசதி அளிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பாடநூலைப் பொறுத்தவரையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மாண்புமிகு திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் பிரதமராக இருந்த நேரத்திலே, இங்கே பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டபோது, நமது பிரதமர் மொரார்ஜி என்ற பாடத்தை தயாரித்தார்கள். பிறகு 5, 6 பாடங்களைச் சேர்த்தார்கள். அதன் பிறகு பாடத் திட்டம் பளுவாக இருக்கிறது, சிலபஸ் அதிகமாக இருக்கிறது என்று அரசு உணர்ந்து, பல ரெப்ரசென்டேஷன் வந்த பிறகு, 4, 5 பாடங்கள் ஒவ்வொரு புத்தகத்திலிருந்தும், ஒவ்வொரு வகுப்புப் புத்தகத்தி லிருந்தும் நீக்கப்பட்டன. இந்த ஆண்டு புதுப் புத்தகம் வந்திருக்கிறது. 'மொரார்ஜி' பாடம் மட்டும் தான் நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நிரந்தரமாக நீக்கப்பட்ட 5, 6 பாடங்கள் புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ளன. அந்த வகையில் மேலும் 10, 11 பக்கங்கள் ஒவ்வொரு புத்தகத்திலும் தேவையில்லாமல் கூடுதலாக வந்திருக்கின்றன. எந்தவிதமான தேவையும் இல்லாமல் நீக்கம் செய்யப்பட்ட பாடங்கள் இப்போது மறுபடியும் சேர்க்கப்பட்டிருக் கின்றன. அப்படி என்றால் எந்த அளவுக்கு இந்தப் பாடநூல் நிறுவனம் கவனக் குறைவாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிய முடியும். தேவையில்லாமல் ஒவ்வொரு புத்தகத்திலும் 10, 11 பக்கங்கள் அதிகமாகி, மாணவர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டு, பணச் செலவும் நேரச் செலவும் ஏற்பட்டுள்ளது. இதனால் அரசுக்கும் பேப்பர் நஷ்டம், இப்படிப் பட்ட குறைபாடுகள் நடந்திருக்கின்றன. இக் குறைபாடுகளையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். பெரியவர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் இறந்ததற்குப் பிறகு அவரது இறுதிச் சடங்கிலே திருத்துறைப்பூண்டிக்கு அருகிலுள்ள மணலியிலே ஒரு நிகழ்ச்சியிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள். அப்போது ஒரு அறிவிப்பைத் தந்தார்கள். அங்கு இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளிக்கூடம் மிகவும் மோசமாக இருக் கிறது, தலையிலே இடிந்து விழும்போல் இருக்கிறது. அந்தப் பள்ளிக் கூடத்தைக் செப்பனிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்க ளிடத்திலே அங்குள்ள பொதுமக்கள் குறிப்பிட்டபோது, அங்கு புதிய





கட்டிடம் கட்டி அந்தக் கட்டிடத்திற்கு மறைந்த பெரியவர் மணலி கந்தசாமி யின் பெயரை வைப்பேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித் தார்கள். அதை நாங்கள் பெரு மகிழ்ச்சியோடு வரவேற்றோம். அதை நாங்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்தோம். அதற்குப் பின்னால் வேலைகள் கூட நடைபெற்றன. எதுவும் அறிவிக்கப்படும்போது இருக்கக்கூடிய உணர்வுகள் முடிவுறும்போது இருப்பதில்லை. அதற்காக தான் இதை இங்கே சுட்டிக் காட்டுகிறேன். அந்த இடத்திலே ஒரு சின்ன கட்டிடம் கட்டினார்கள். 3 வகுப்புகள் மட்டுமே உள்ள கட்டிடம் கட்டினார்கள். மற்ற கட்டிடங்கள் அப்படியே இடிந்துள்ளபடியால், ஒரு சத்திரத்திலே மற்ற வகுப்புகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்த உறுதிமொழியினை முழுமையாக ஏற்று நிறைவேற்றும் வகையில், அங்கே அந்தப் பள்ளிக்கூடத்திலே எல்லா வகுப்புகளுக்கும் புதிதாகக் கட்டிடம் கட்டி. பெரியவர் மணலி கந்தசாமி அவர்களுடைய பெயரை வைத்து, மக்க ளுக்கு ஒரு நல்ல மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில், அரசு அதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு தலைவர் மணி அடித்தார்)

மாண்புமிகு தலைவரவர்கள் முடிக்க வேண்டுமென்று சொல்கிற காரணத்தால், இன்னும் ஒரே ஒரு வார்த்தையைச் சொல்லி என் உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முடித்து விடுகிறேன், முடித்து விடுகிறேன் என்று சொல்லிக் கொண்டே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் முடிக்க மாட்டேன் என்கிறார்கள். முடித்து விடுகிறேன், முடித்து விடுகிறேன் என்று சொல்லிக்கொண்டிருப்பதே ஒரு வியாஜமாகப் போய்விட்டது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆசிரியர் இல்லம் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் கட்ட வேண்டுமென்று இருக்கிறது. 10, 12 வருடங்களாக அதற்காக என்று தனியாக ஆசிரியர்களிடமிருந்து பணம் வசூலிக்கப் பட்டுள்ளது. ஆனால் அந்தப் பணம் யாருடைய நிர்வாகத்தில், யாரிடத்தில் இருக்கிறது என்பது பரம ரகசியமாக இருக்கிறது. அது திறந்த புத்தகமாக இல்லை. இதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கட்டிடங் களும் கட்டி முடிக்கப்படவில்லை. இதை விரைவுபடுத்த வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பு தந்தமைக்கு தலைவருக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

*** திரு. ப. மாணிக்கம் :** தலைவரவர்களே, கல்விக் கொள்கை சம்பந்தமான குறிப்பு மீது சில அம்சங்களை மட்டும் இங்கே இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன். சில ஆண்டுகளாக விவாதிக்கப்பட்ட 10 + 2 என்ற கல்வி முறை உயர்நிலைக் கல்வியிலே புகுத்தப்பட்டது. இதனுடைய பலாபலனை சில ஆண்டுகள் கழிந்துத்தான் பார்க்க வேண்டும். இருந்தாலும் நம்முடைய நாட்டிலே மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்பது மட்டு மல்ல, கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்கின்ற ஒரு குறைபாடும் மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது. மற்றொன்று படித்தவர்களுக்கு நாட்டிலே வேலைவாய்ப்பும் இல்லை. சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால், மனித சக்தி விரயம் ஆக்கப்படுகிறது. குறிப்பாக இளம் வயதில் மனித சக்தி விரயமாக்கப் படுகிறது. பன்னிரண்டு ஆண்டுகள் பள்ளிகளில் படித்தால், 17 வயதில் பள்ளிப் படிப்பு பூர்த்தியாகிறது. பதினேழு வயது வரை பள்ளிக்கூடத்தில் படித்து விட்டு வெளியே வந்த பிறகு, எந்த வேலைக்கு அவர்களுக்கு திறமை இருக்கிறது என்று பார்த்தால், அவர்களிடம் திறமை மிக மிகக் குறைவாக இருக்கிறது. அப்படி என்றால், இந்தத் திறமைக் குறைவு இப்போது மட்டும் தான் ஏற்பட்டதா என்று கேட்டால், இல்லை என்று சொல்வேன். இந்தக் கல்வி முறை ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்டது. ஆனால் ஐரோப்பாவில் இன்னும் வேறு பல நாடுகளில் எல்லாம் பல்வேறு கல்வி முறைகள் உள்ளன. நாம் ஆங்கிலேயக் கல்வி முறையை ஏற்றுக்கொண்டோம். நாடு விடுதலை பெற்ற பிறகு, பல முறைகளைக் கையாண்டு நாம் முயற்சித்துப் பார்த்தோம். இளைஞர்களின் மனித சக்திகளை வீணாக்காமலிருப்பதற்கு ஒரு மாறுதல் நிச்சயம் தேவை. இந்த ஆண்டுக்குள் இதைச் செய்ய முடியும் என்று நான் கருதவில்லை. இருந்தாலும் இதனை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த திசை வழியில் வரும் ஆண்டுகளில் இளைஞர்களின் மனித சக்திகளைத் திருப்ப வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்தில் விடுக்கிறேன். இந்தக் கொள்கையை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கருத்தினை நான் வலியுறுத்துகிறேன். எட்டு ஆண்டுகள் பொதுக் கல்வி என்று வைத்துக்கொண்டு பிறகு நான்கு ஆண்டுகள் சிறப்புப் பயிற்சி (ஸ்பெஷலைசேஷன்) அளிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த முறை ஐரோப்பாவில் சில நாடுகளில் இருக்கிறது. எட்டு ஆண்டுகள் பொதுக் கல்வியைப் பூர்த்தி செய்த பிறகு, நிறைவு செய்த பிறகு, சிறப்புக் கல்வியை பாலிடெக்னிக்கில் சொல்லிக் கொடுத்து அதில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். அதில் நான்கு ஆண்டுகள் சிறப்புப் பயிற்சி கொடுக்கலாம், அவசியமானால் அதை மூன்று ஆண்டுகள் என்று கூட ஆக்கலாம். ஆனால் நாம் ஏற்கெனவே 10 ப்ளஸ் 2 என்று கொண்டு வந்ததற்குப் பிறகு, 8 ப்ளஸ் 2 என்று போவது சற்று கடினமான காரியமாக இருக்கும். நான்கு ஆண்டுகள்





(பிற்பகல் 6-50.)

என்று சொல்லும்போது, பல்வேறு துறைகளில் சிறப்புப் பயிற்சி அவர்களுக்கு நாம் தர முடியும். காரணம் இப்போது எஸ்.எஸ்.எல்.சி. படித்த பிறகு 2 ஆண்டு அவர்கள் படிக்கிறார்கள். சிலர் இதற்குப் பிறகு 'டைப்பிங் ஷார்ட்ஹேண்ட்' தனியாகப் படிக்கிறார்கள். எட்டு ஆண்டுகள் படித்த பிறகு, 2 ஆண்டுகள் அவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சியும் அதற்குப் பிறகு இருக்கும் 2 ஆண்டுகளில் 'டைப்ரைட்டிங் ஷார்ட்ஹேண்ட்' பயிற்சியும் அளிக்கலாம். இப்போது பல பள்ளிகளில் 'கமர்ஷியல் சப்ஜெக்ட்' என்றும், 'செக்காட்டேரியல் சப்ஜெக்ட்' என்றும் பல பாடங்களைச் சொல்லிக்கொடுக்கிறார்கள். இந்த மாதிரி முன்னாலேயே கூட பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுடைய ஊரிலே கூட இருந்தது. இப்போது அவைகள் எடுக்கப்பட்டு விட்டன. இப்போது எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு ஒரு மாணவன் வெளியே வந்தால், அவனுக்குத் தமிழ் கூட சரியாக எழுதத் தெரியவில்லை, ஆங்கிலத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவர்களுடைய திறமை அப்படி இருக்கிறது. ஆகவே, மாணவர்களின் திறமை எத்தன்மை வாய்ந்தது என்பதைக் கண்டு, அது உழைப்புத் திறமையானாலும், அறிவுத் திறமை யானாலும், அதை அபிவிருத்தி செய்யும் வகையில் கல்வி இருக்க வேண்டும். அதன் மூலம் கிடைக்கும் சக்தியை நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்கு நாம் பயன்படுத்தலாம். பொதுவாக, இப்போது சமுதாயத்திலே உழைப்புக்குத் தரவேண்டிய மரியாதை தரப்படவில்லை. இப்போது, தொழில் நுட்பக் கல்விக் கூடங்களை எடுத்துக்கொண்டால், இந்த வருடம் அங்கு ஏராளமாக கூட்டம். பொதுக் கல்வியை எடுத்துக்கொண்டால், 10 ப்ளஸ் 2 என்பதும், பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம். என்பதும் எல்லா கிராமங்களிலும் பெருகி அநேகமாக ஒரு வீட்டுக்குக் குறைந்தது ஒருவர் என்ற நிலைமைக்கு வந்துவிட்டது. பி.ஏ., என்றால் முன்னால் ஏராளமான மதிப்பு. தென்னாற்காடு, தஞ்சை போன்ற மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், ஒரு கிராமத்தில் ஒரு ஆளைப் பார்ப்பது அதிகம். இப்போது யாரைப் பார்த்தாலும், பி.ஏ., பி.காம். என்று இருக்கிறார்கள். இந்த மாதிரி பெருகிக்கொண்டு போவதை நாம் தடுக்க

வேண்டும். தொழில் வளர்ச்சி என்று சொல்லும்போது, நாம் 'வொக்கேஷனல் டிரெய்னிங்' என்று தருகிறோம். இவ்வாறு தருவதன் மூலம் விவசாயத் துறையில் நாம் நல்ல முன்னேற்றத்தைக் காண முடியும். இப்போது விவசாயி களுக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன. டிராக்டர் ரிப்பேர், பம்பு ரிப்பேர் போன்ற வேலைகளைச் செய்ய டெக்னீஷியன்களை நாம் தயாரிக்க முடியும். இந்த மாதிரி ஒவ்வொருவரையும் 'ஸ்பெஷலைஸ்' பண்ண வேண்டும். எட்டு ஆண்டுகள் பொதுக் கல்வி கற்ற பிறகு, மீதியிருக்கும் நான்கு ஆண்டுகளில், இரண்டு ஆண்டுகள் பிரிப்பரேட்டரியாகவும், அடுத்த இரண்டு ஆண்டுகள் அந்தக் குறிப்பிட்ட கல்வியில் பயிற்சியும் நாம் அவர்களுக்கு அளிக்கலாம். இந்தக் கருத்தை விரிவாகப் பரிசீலித்து, கல்விக் கொள்கையை மாற்றி யமைப்பது மிகவும் இன்றியமையாததாகும். இன்றைக்கு இருக்கும் கல்வியால் ஏற்படும் திறமையும் குறைவாக இருக்கிறது, பயனும் குறைவாக இருக்கிறது. இப்போது கல்விக்காக மட்டும் 224 கோடி ரூபாய் நாம் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கிறோம். இதுவல்லாமல், கல்வி சம்பந்தமாக பல துறைகளிலே செல்வு செய்யும் பணத்தையும் சேர்த்தால், கல்விக்கென்று நாம் செலவு செய்யும் தொகை 290 கோடி ரூபாய் வருகிறது. இதனால் போதுமான பலனும் இல்லை. எனவே, அதிகப் பலன் பெற எட்டு ஆண்டுகள் பொதுக் கல்வியும், அடுத்த நான்கு ஆண்டுகள் சிறப்புப் பயிற்சியும் அளிப்பது மிகவும் இன்றியமையாததாகும். ஐரோப்பா போன்ற நாடுகளிலே 10, 14 வயதிலிருந்தே தொழில் கல்வி சொல்லிக்கொடுக்கிறார்கள். 19-வது வயதிலேயே மிகவும் நுணுக்கமான இயந்திரத்தை நிறுவக்கூடிய திறமை பெற்றவர்கள் இருக்கிறார்கள். பிரான்ஸ் நாட்டிலே இருந்து ஒரு எஞ்சினியர் வருகிறார். அவருக்கு ஒரு இயந்திரத்தை நிறுவக்கூடிய திறமை இருக்கிறது. நம்மிடம் அந்தத் திறமை இல்லை என்று நான் சொல்லவில்லை. நம்முடைய நாட்டிலேயும் திறமை இருக்கிறது. அந்தத் திறமையை நாம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. ஆகவே தான் அந்த வாய்ப்பு அளிக்கும் வகையிலே சிறப்புப் பயிற்சி நாம் அளிக்க வேண்டும். ஏ. எல். முதலியார் கமிஷன், ராதாகிருஷ்ணன் கமிஷன், கோத்தாரி கமிஷன் என்று மூன்று கமிஷன்கள் நம்முடைய கல்விக் கொள்கைபற்றி ஆராய்ந்திருக்கிறது. பல்வேறு நாடுகளின் அனுபவத்தை எடுத்துக்கொண்டு நாம் இந்தக் கல்விக் கொள்கையை வகுக்க வேண்டும். அப்படிச் செய்தால், திறமையையும் அதிகரிக்க முடியும், வேலை வாய்ப்பையும் அதிகரிக்க முடியும். இப்படிச் செய்வது உடனடியாக இந்த ஆண்டிலேயே செய்யக்கூடிய காரியமல்ல என்பதை நாம் ஒத்துக்கொண்டாலும், வருங்காலத்தில் இதை படிப்படியாக அமுல்படுத்த முயல வேண்டும்.



நம்முடைய மாநில அரசு இதற்கான முன்முயற்சி செய்தால், நிச்சயமாக வேறு பல மாநிலங்களும் இதற்கு ஒத்துழைப்பு தரும்; அல்லது ஒத்துழைப்பு தராவிட்டாலும், ஒத்துழைப்பைப் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்யலாம். ஆகவே, இந்தக் கொள்கையை நான் வலியுறுத்துகிறேன்.

எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரத்தைப்பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செட்டியார் அவர்கள் கூட சொன்னார்கள். இப்போது இருக்கும் ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம் உண்மையிலேயே பொருத்தமானதாக இல்லை. ஒரு ஆசிரியர் அதிகமாகப் போனால் எத்தனை மாணவர்களைக் கவனிக்கலாம் ? நல்லமுறையில் கவனிக்க வேண்டும் என்றால், ஆசிரியர்கள் எந்தக் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருக்க வேண்டும்? இது சம்பந்தமாக இப்போது பல்வேறு ஆராய்ச்சி முடிவுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த விகிதாச்சாரத்தை மாற்றியமைக்க வேண்டும். ஒரு ஆசிரியருக்கு 35-லிருந்து 40-க்கு மேல் மாணவர்களின் எண்ணிக்கை போவது சரியல்ல. இது மாணவர்களின் தரக் குறைவுக்கு ஒரு காரணம். மக்களின் ஏழ்மை நிலை படிப்பதற்கு போதிய வாய்ப்பு வசதி இல்லாமை, சுற்றுச் சார்பு சூழ்நிலை இவற்றோடு இந்த மாணவர்-ஆசிரியர் விகிதாச்சாரமும் தாக்குறைவுக்கு ஒரு காரணம். இவற்றையெல்லாம் இந்த அரசு கவனிக்க வேண்டும். வேண்டுமானால் இன்னும் அதிக நிதி ஒதுக்கீடு செய்யலாம். ஆசிரியர்களுக்கும் வேலைவாய்ப்பு ஏற்படும். அப்படிச் செய்தால் அதனால் நல்ல பலன் கிடைக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில் நுட்பக் கல்வி சம்பந்தமாகச் சில அம்சங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய பாலிடெக்னிக்குகளில் சிவில் எஞ்சினியரிங், எலக்ட்ரிக்கல் எஞ்சினியரிங், மெக்கானிக்கல் எஞ்சினியரிங் போன்ற படிப்பு படிப்பவர்களுக்கு அளிக்கப்படும் நடைமுறைப் பயிற்சி மிகவும் குறைவாக இருக்கிறது. இப்போதெல்லாம் செமஸ்ட்டர் சிஸ்டம் வந்திருக்கிறது. கோர்ஸ் முடிந்தபிறகு, அப்ரண்டிஸ் கிடைப்பதில்லை. அப்ரண்டிசுக்குப் போனால் தான் நடைமுறை அனுபவம் கிடைக்கும். ஆகவே, தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய தொழில்களோடு நம்முடைய பாலிடெக்னிக்குகளை சம்பந்தப்படுத்தி நடைமுறைப் பயிற்சி அளிக்க எல்லா விதமான முயர்சியும் எடுக்க வேண்டும். இன்றைக்கு அந்த வாய்ப்பு மிகவும்

குறைவாக இருக்கிறது. உதாரணமாக எடுத்துக்கொண்டால், தனியார் நடத்தும் பாலிடெக்னிக்குகள் தொழிலோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன. ராஜபாளையம், செட்டிநாடு பாலிடெக்னிக்குகள் தொழில்களோடு சம்பந்தப் பட்டிருக்கின்றன. பயிற்சி முடிந்த பிறகு தொழிற்சாலைகளோடு பயிற்சிக்கான வசதி மிகக்குறைவாக இருப்பதால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தொழில் நுட்பத்திற்கு 'இன்ஃப்ராஸ்ட்ரக்சர்' என்ற முறையிலே பல விஷயங்களை நாம் செய்கிறோம். நம் நாட்டில் இருக்கும் பல தொழிற் சாலைகளுக்கு நாம் உதவி செய்து அங்கு நம் மாணவர்களை அவர்கள் எடுத்து பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தொழிற்சாலைகளுக்கு நாம் உதவி செய்தால், நம்முடைய மாணவர்கள் அங்கு சென்று திறமை பெறுவதற்கு அது பயன்படும். உதாரணமாக டெக்ஸ்டைல் டெக்னாலஜி அடையாறு பாலிடெக்னிக்கிலே இருக்கிறது. டெக்ஸ்டைல்ஸ் தமிழ் நாட்டிலே பெயர்பெற்ற தொழில். இத்தொழிற்சாலைகளில் பயிற்சி தரலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பேச்சு முடியும்வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ப. மாணிக்கம் :** பிரிண்டிங் டெக்னாலஜி சொல்லிக்கொடுக்கிறார்கள். கோர்ஸ் முடிந்த பிறகு பல அச்சகங்களுக்கு மாணவர்கள் செல்கிறார்கள். ஆனால், அங்கு அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி போதுமானதாக இல்லை. நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்தேன். அங்கே ஒரு ஜெர்மன் மிஷின் இருக்கிறது. அது 'ப்ளானட்டா 1 அல்லது 2' என்ற நவீன இயந்திரம். ஜெர்மன் டெமாக்கிரேட்டிக் ரிப்பப்ளிக்-லே இருந்து வந்தது. அந்த இயந்திரம் வாங்கும்போது, அது பல ஆயிரம் ரூபாய் பெறுமான முள்ளது. இப்போது பல லட்சம் ரூபாய் பிடிக்கும். அந்த இயந்திரம் நான்கு ஐந்து ஆண்டுகளாகத் தூங்குகிறது. அந்த இயந்திரத்தை மாணவர்கள் பயன் படுத்தலாம். இப்போது அதை மூடி வைத்திருக்கிறார்கள். பிரிண்டிங் டெக்னாலஜி மூன்று ஆண்டுகள் படிக்கிறார்கள். ஆனால் அந்த இயந்திரம் தூங்கிக்கொண்டிருக்கிறது. இந்த மாதிரி நிலைமைதான் பல்வேறு துறை களிலேயும் இருக்கிறது. ஆகவே, இப்போது இருக்கும் இன்ஸ்ட்டிட்யூஷன்களை எல்லாம் தொழில்களோடு சம்பந்தப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் அபிவிருத்தி ஏற்படும். இன்றைக்கு அந்தத் துறையிலே மிகப் பெரிய பலஹீனம் இருக்கிறது. எலக்ட்ரானிக்ஸ் கோர்ஸ் என்று டிப்ளமோ கோர்ஸ் வைத்திருக்கிறார்கள். அதைச் சொல்லிக்கொடுக்க ஆசிரியர்கள் இல்லை. இந்த கோர்ஸை சில பேர் எடுப்பதற்குத் தயங்குகிறார்கள். எலக்ட்ரானிக்ஸ் என்பது





ஒரு நவீன தொழில் நுணுக்கப் பிரிவு. இதில் நம்முடைய மாணவர்கள் மிகவும் சிறப்பான திறமை பெற்றவர்கள் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான வாய்ப்புகள் இருந்தும் சரிவரப் பயன்படுத்தப்படாத முறையில் பல பலஹீனங்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் போக்கி அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 7-00)

மேலும் கல்வியாராய்ச்சி சம்பந்தமாக, இக்கொள்கைக் குறிப்பில் சொல்லப் பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிலும் மற்ற துறைகளிலும் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 ஆராய்ச்சிப் பணி ஊதியமாகக் கொடுத்து ஆராய்ச்சி தொடங்குவதற்கான திட்டம் வகுக்கப்பட்டு அதற்காக நிதி ஒதுக்கீடும் செய்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

கல்கத்தா பல்கலைக் கழகத்தில், கல்லூரிகளில் படித்துப் பட்டம் பெறாத நபர்கள், அதாவது 'நான்-யூனிவர்சிடி ஸ்காலர்ஸ்—நான்-டிகிரி ஹோல்டர்ஸ்—' சில துறைகளில் நிபுணத்துவம் மிக்கவர்களாக விளங்குபவர்கள் மேலும் தொடர்ந்து ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் வசதியும் அனுமதியும் செய்து தரப்பட்டிருக்கிறது. இதன் மூலம் அவர்களெல்லாம் பின்னால் டாக்டரேட் பட்டம் வாங்க முடியும். எம்.ஏ. படிக்காமலேயே இந்த டாக்டரேட் பட்டத்தைப் பெற இயலும். அப்படிப்பட்ட பல்வேறு அறிஞர்கள் தமிழகத்திலேயும் இருக்கிறார்கள். ஆனால் அந்த அறிஞர்களெல்லாம் ஆராய்ச்சியை மேற்கொண்டு டாக்டரேட் வாங்குவதற்குத் தமிழகத்தில் அத்தகைய வசதியில்லாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட அறிஞர்கள் பலரைப் பற்றி நான் கூறமுடியும் என்றாலும், ஒருவரைப்பற்றி மட்டும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர் தமிழ்நாட்டில் பலருக்கும் நன்கு அறிமுகமானவர். சிறந்த அறிஞர். மயிலை சீனி வேங்கடசாமி என்ற அந்தப் பெரியார் சமண இலக்கியத்தில் நல்ல அறிவும், ஆராய்ச்சித் திறனும், நிபுணத்துவமும் பெற்றிருந்தார். அவர் இப்படிப்பட்ட ஆராய்ச்சி ஒன்றை மேற்கொள்ள விரும்பியபோது, அவருக்கு எந்த வசதியும் இருக்கவில்லை என்பதால், ஒரு ரகசியமான ஏற்பாட்டை அவரே செய்து கொண்டார். வரலாற்று ஆராசிரியர் ஒருவரின் துணையோடு அவருடன் தொடர்பு கொண்டு அவருக்குச் செய்ய வேண்டிய உதவியைச் செய்து அவர் மூலமாகத் தனக்கு வேண்டிய ஆராய்ச்சிக்குரிய பொருள்களைத் தெரிந்து கொண்டார். அந்த ரகசியத்தை நான் வெளியிடவில்லை. இருந்தாலும் நான் எதற்கு அதைச் சொல்லுகிறேன் என்றால், நம் நாட்டில் பல்வேறு அறிஞர்கள், விற்பன்னர்கள் இப்படிப் பல துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு

[திரு. ப. மாணிக்கம்] [1980 ஜூலை 21

டாக்டரேட் பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகளோ வசதிகளோ நமது பல்கலைக் கழகங்களில் இன்றையதினம் இல்லை. இத்தகைய வசதிகள் நமது பல்கலைக் கழகங்களில் செய்து தரப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆராய்ச்சி என்பது முறையாகக் கல்லூரிகளில் படித்தவர்கள் தான் செய்ய முடியும் என்பது சரியல்ல. முறையான கல்வி பெறாமலேயே, தன்னுடைய சுய முயற்சியால் பல துறைகளிலும் நிபுணத்துவமும், சிறப்புத் தன்மையும் பெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள். எனவே அவர்களெல்லாம் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள கல்கத்தா பல்கலைக் கழகத்தில் வசதிகள் செய்து தரப்படுவதைப்போல் நமது பல்கலைக் கழகங்களிலும் வசதிகள் செய்து தரப்பட வேண்டும், அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆவணங்களைப்பற்றி இக்கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. சென்னையில் உள்ள நமது மாநில ஆவணம் தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகவும் பிரசித்தி பெற்ற ஆவணமாகும். இதற்கு முன்பெல்லாம் அந்த ஆவணத்தைப் பயன்படுத்தி, அறிஞர்களோ அல்லது பொது வாழ்க்கையில் சிறப்பு மிக்கவர்களோ ஆராய்ச்சி மேற்கொள்வது என்பது சாத்தியப்படாமல் இருந்தது. அதற்குக் காரணம் அப்போது அங்கிருந்த கெடுபிடி நிலைமை. இப்போது நிலைமை மாறியிருப்பதாகக் கேள்விப் படுகிறேன். ஒருவேளை என்னுடைய தகவல் சரியில்லாமல் இருந்தால், அதை மாற்றிக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அந்த ஆவணங்களைப் பயன் படுத்தி, முறையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஊக்கத்தை நாம் கொடுக்க வேண்டும். பல அறிஞர்களும் பொது வாழ்க்கையில் சிறப்பான பங்குபெற்றுள்ளவர்களும் இதனை முறையாகப் யயன்படுத்தி சிறந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியும் தமிழ் நாட்டில் குறிப்பாகக் கல்வி சம்பந்தமான ஆராய்ச்சியைச் செய்ய வேண்டும். இதுபோன்ற பல துறை களிலும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அதிலும் குறிப்பாக சோஷி யல் ஓர்க்கர்ஸ் என்பவர்கள் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட நிறைய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஆனால் அப்படிப்பட்டவர்கள் இந்த ஆவணங்களைப் பயன்படுத்திடும் முறையில் அதற்குத் தேவையான அத்தாட்சியைப் பெறு வதில் கஷ்டமில்லாத முறையை உருவாக்க வேண்டும். தற்போது அப்படிப் பட்ட அத்தாட்சியைப் பெறுவதில் மிகவும் கஷ்டம் இருக்கிறது. அதற்கு காரணம் அது குறித்த விதிகள் மிகவும் கடினமாக இருக்கின்றன. அவைகளை மாற்றும் முயற்சியில் அரசு ஈடுபடவேண்டும். காரணம் இந்த நல்ல பயன்மிக்க ஏடுகளையும் விவரங்களையும் கொண்டு இருக்கிறது. இதைச் சொல்வதற்குக் காரணம் கடந்த காலத்தில் காலஞ்சென்ற தொழிலாளர் தலைவர்—கம்யூனிஸ்ட்



1980 ஜூலை 21] [திரு. ப. மாணிக்கம்]

தலைவர் திரு. ஏ. எஸ். கே. ஐயங்கார் அவர்கள் அப்படிப்பட்ட முயற்சி ஒன்றை மேற்கொண்டார். கடுமையான முயற்சிக்குப் பிறகே அந்த ஆவணத் தைப் பயன்படுத்தும் அனுமதியை அவர் பெற்றார். ஆனால் துரதிருஷ்டவச மாக அந்த அனுமதியைப் பயன்படுத்துவதற்கு முன்பே அவர் காலமாகி விட்டார். அவர் தொழிலாளர் இயக்கத்தைப்பற்றிய ஒரு ஆராய்ச்சியை மேற் கொள்ள விரும்பினார். இந்த நூற்றாண்டில் தமிழகத்தில்தான் மிகப் பழமை யான தொழிலாளர் இயக்கம் தோன்றியது. இதுகுறித்த எல்லா விஷயங்களும் அந்த ஆவணத்தில் இருக்கின்றன. அந்த ஆவணங்களைப் பயன்படுத்தி அவர் ஆராய்ச்சியைச் செய்ய விரும்பினார். அதைப்போன்ற அனுபவம் மிக்கவர்கள், பொதுவாழ்வில் சிறப்பான இடத்தைப் பெற்றவர்கள் அங்குள்ள ஆவணங்களைப் பயன்படுத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்ள விரும்பினால், அவர்களுக்கு அனுமதி உடனடியாக வழங்கத்தக்க வகையில் அதனுடைய விதிமுறைகள் தளர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேறுபல ஐரோப்பிய நாடுகளில் இருப்பதைப்போல் நமது மாநிலத்திலும் "இன்ஸ்டிடியூட் ஆஃப் பாரின் லேங்குவேஜஸ்" ஒன்று துவங்கப்பட வேண்டும். நமது மாணவர்கள் தங்கள் கல்வியோடு பல்வேறு மொழிகளைக் கற்கவேண்டும். இப்போதே பல்கலைக் கழகத்தில் பிரெஞ்ச், ஜெர்மன் போன்ற மொழிகளைக் கற்க வாய்ப்பிருக்கிறது. இருந்தாலும் நமது நாட்டு மாணவர்கள் மொழித் துறையில் மேலும் பயிற்சிபெற இத்தகைய "இன்ஸ்டிடியூட் ஆஃப் பாரின் லேங்குவேஜஸ்" என்பது மிகவும் அவசிய மாகிறது. இப்போதே மாணவர்கள் நிறைய எண்ணிக்கையில் பிரெஞ்ச், ஜெர்மன் போன்ற மொழிகளைக் கற்க ஆர்வம் காட்டுகிறார்கள். இவ்வாறு மொழிகளைக் கற்க ஆர்வம் காட்டுவோருக்கு இத்தகைய வசதிகளை பல்கலைக் கழகத்திலேயே செய்து தரலாம். மேலை நாடுகளில் இத்தகைய முறைகள் இருக்கின்றன. அவற்றை நாம் அப்படியே காப்பியடிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. என்றாலும் இத்தகைய வசதிகளை நாம் செய்து தருவதன் மூலம் பிறநாட்டு மொழியறிவு பெற்றவர்களை அரசுத் துறையிலும் மற்ற பிற நிறுவனங்களிலும் நாம் பயன்படுத்த முடியும். இதை யும் அரசு ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் உடற்பயிற்சி, விளையாட்டுப் பயிற்சி ஆகியவற்றில் தமிழ் நாடு மிகவும் பின்தங்கியிருக்கிறது. உடற் பயிற்சிக் கல்லூரிகள் நமது மாநிலத்தில் மிகவும் குறைவான எண்ணிக்கையில்தான் இருக்கின்றன. இவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முயற்சிக்க வேண்டும். விளையாட்டுத்

துறையில் நாம் நிறைய முன்னேற வேண்டியிருக்கிறது. இத்துறையில் நாம் முன்னேற்றம் காணவேண்டும் என்றால், ஸ்போர்ட்ஸ்களுக்கான இன்ஸ்டிடியூட்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். சென்னை, திருச்சி, மதுரை, கோவை மற்றும் தென் மாவட்டங்களுக்காக திருநெல்வேலி-நாகர்கோயில் போன்ற பகுதிகளில் இத்தகைய இன்ஸ்டிடியூட்களைத் திறக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டில் அவற்றைத் தொடங்க இயலாவிட்டாலும், வரும் ஆண்டிலாவது இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப்பற்றி ஓரிரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். தற்போது அதுபற்றி நடந்துவரும் கிளர்ச்சியின் காரணமாக நான் அதைப்பற்றிப் பேச விரும்பவில்லை. அது ஒரு சிறப்பான பல்கலைக்கழகம். ஆனால் இன்றையதினம் அங்கே பல்வேறு பலகீனங்கள், குறைபாடுகள் அதனை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. இப்போது அங்கே நடக்கும் கிளர்ச்சி ஒருபுறம் இருந்தாலும், அந்தப் பல்கலைக் கழகத்தின் நடவடிக்கைகளைப்பற்றி நன்கு அறிய ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே தற்போது பல்வேறு குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் ஆதாரம் உண்டா இல்லையா என்பது வேறு பிரச்சினை. இதற்காக என்று ஒரு விசாரணைக் கமிஷன் போடுவது நல்லது என்று நான் கருதுகிறேன். இன்றைக்குள்ள நிர்வாகக் கோளாறுகள் சம்பந்தமாக அரசுக்கு 'பிரைமா பேசி' தகவல்கள் வந்திருக்கின்ற காரணத்தால், குறைந்தபட்சம் ஒரு ஸ்பெஷல் ஆபீசரையாவது அங்கே போட்டு நிலைமையைச் சீர் செய்ய முடியுமா என்று அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு அடுத்த கட்டமாகத்தான் டேக் ஓவர் பற்றி நினைக்க வேண்டும். அரசாங்கமே அந்தப் பல்கலைக் கழகத்தை ஏற்றுக்கொண்டால், நான் மகிழ்ச்சியடைவேன். ஆனால் அதை உடனடியாகச் செய்வதற்குச் சட்டச் சடங்குகள் குறுக்கிடலாம். எனவே, விசாரணைக் கமிஷன் போடுவதுபற்றியாவது அரசு யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, ஒரு வேண்டுகோளைத் தெரிவிக்க விரும்புகிறேன். பல்லாவரம்—குரோம்பேட்டை—நங்கநல்லூர் பகுதிகளில் தற்போது மூன்று உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. மிகவும் குறுகிய இடத்தில் நிறைய



மாணவர்கள் படிக்கிறார்கள். தற்போது சுமார் 4,000 மாணவர்கள் படிக்கிறார்கள். அந்தப் பகுதிக்கு ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஆரம்பிக்க அரசு அனுமதித்தால், ஆரம்பிப்பது என்பது சாத்தியம் என்பது மட்டுமல்ல, அங்குள்ள நெரிசலைக் கணிசமாகக் குறைக்கும். அதோடு கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும் அது உதவியாக இருக்கும். எனவே அரசு இதையும் ஆலோசித்து ஆவன செய்ய வேண்டும் என்று சொல்லி, இதோடு என் கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 22—7—1980 மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-07)

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

45. Notification issued with G.O. Ms. No. 226, Commercial Taxes and Religious Endowments, dated the 13th March 1980, in regard to an amendment to the Revenue Department's Notification II-1 No. 725 of 1965, dated the 15th February 1965, published at pages 287-290 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 17th February 1965. [Laid on the table of the House under section 73(5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

46. Notification issued with G.O. Ms. No. 149, Rural Development and Local Administration, dated the 28th January 1980, in regard to amendments to the Tamil Nadu Municipal Medical Service Rules, 1970. [Laid on the table of the House under section 304(*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

47. Notification issued with G.O. Ms. No. 1269, Home, dated the 23rd April 1980, in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

48. Notification issued with G.O. Ms. No. 1334, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 12th December 1979, in regard to inclusion of the post of Trade Instructor in the Employment and Training Subordinate Service within the Commission's purview. [Laid on the table of the House under Article 320(5) of the Constitution of India.)]

49. Notification issued with G.O. Ms. No. 1860, Rural Development and Local Administration, dated the 24th November 1979, in regard to amendments to the Tamil Nadu Municipal General Services Rules, 1970. [Laid on the table of the House under section 304(d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

50. Notification issued with G.O. Ps. No. 189, Commercial Taxes and Religious Endowments, dated the 3rd March 1980, in regard to reduction of rate of tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act on the sale of Chipboards manufactured by Thiruvalargal Madras Chipboards Limited, Rajapalayam. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

51. Notification issued with G.O. Ms. No. 1159, Home (Transport—I) dated the 11th April 1980, in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Taxation Rules, 1974. [Laid on the table of the House under section 25(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

*B. Reports, Notifications and Other Papers.*

* 17. Demand No. 4.—General Sales Tax and Other Taxes and Duties. (English and Tamil).

* 18. Demand No 5.—Stamps Administration. (English and Tamil).



* 19. Demand No. 12.—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, (English and Tamil).—

* 20. Policy Note relating to Cinchona Department for 1980–81. (English and Tamil).

* 21. Performance Budget on Cinchona Department, 1980–81. (English).

* 22. Commercial Budget on Cinchona Department, 1980-81. (English).

* 23. Demand No. 47.—Policy Note on Information, Tourism and Film Technology. 1980–81. (English and Tamil).

* 24. Detailed Demands for Grants for 1980-81—Demand Nos. 1, 5, 41, 46; 25, 45, 54; 2, 47; 4, 12 and 17. (English and Tamil).

@ 25. Policy Note on Education (English and Tamil).

@ 26. Performance Budgets on School Education, Collegiate Education and Technical Education, 1980–81. (English).

£ 27. Policy Note on Land Revenue, 1980–81. (English and Tamil).

£ 28. Performance Budget on Revenue Department, 1980–81. (English and Tamil).

£ 29. A Review of the activities of Home (Prohibition and Excise) Department during the year 1979–80. (English and Tamil).

£ 30. Booklets on the working of the Apex Co-operative Institution. (English and Tamil).

£ 31. Policy Note on Co-operation, 1980–81. (English and Tamil).

£ 32. Policy Note on Housing in Tamil Nadu, 1980–81. (English and Tamil).

£ 33. A Review of the Tamil Nadu Agro Industries Corporation Limited for the year 1979-80. (English and Tamil).

£ 34. A Review of the Tamil Nadu Agro-Engineering and Service Co-operative Federation Limited for the year 1979-80. (English and Tamil).

£ 35. A Review of the Tamil Nadu State Farms Corporation Limited for the year 1979-80. (English and Tamil).

£ 36. Policy and Programmes on Demand No. 27.—Tamil Nadu Khadi and Village Industries Board for the year 1980-81. (English and Tamil).

£ 37. Supplement to Demand No. 19.—Sewerage and Water Supply, 1980-81. (English and Tamil).

£ 38. Supplement to Demand No. 55.—Capital Outlay on Public Health Sanitation and Water Supply, 1980-81. (English and Tamil).

£ 39. Policy Note on Leprosy Beggars Rehabilitation Programme, 1980-81. (English and Tamil).

£ 40. Detailed Demands for Grants for 1980-81.—Demand Nos. 13, 14, 23 : 29 33 ; 18, 19 ; 24, 26, 27, 49 ; 36, 50 ; 6, 9, 10, 11, 15, 16; 20, 21, 22, 48; 7, 8, 35, 42, 43, 55, 56 (Debt Charges and Public Debt Repayment) (English and Tamil).

£ 41. Detailed Demands for Grants for 1980-81—Demand Nos. 37, 38, 51 ; 3, 40, 53 ; 39, 52 ; 28, 34, 44 ; 30, 31, 32 ; (English and Tamil).

£ 42. Statement of Posts and Scales of Pay for the year 1980-81. (English).

£ 43. Detailed Budget Estimates of Revenue for the year 1980-81. (English and Tamil).

£ 44. Details of Works for Demands 37.—Public Works—Buildings and 51.—Capital Outlay on Public Works—Buildings for the year 1980-81, (English and Tamil).



£ 45. Details of Works for Demands 39.—Roads and Bridges and 52.—Capital Outlay on Roads and Bridges, for the year 1980-81. (English).

£ 46. The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 (L.A. Bill No. 17 of 1980), as passed by the Assembly.

£ 47. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1980 (L.A. Bill No. 19 of 1980), as passed by the Assembly.

£ 48. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 (L.A. Bill No. 20 of 1980), as passed by the Assembly.

49. Notification issued with G.O. Ms. No. 1841, Commercial Taxes and Religious Endowments, dated the 18th December 1979, in regard to an amendment to the Tamil Nadu Copy Writers Licence Rules, 1971.

50. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Council on the 28th August 1969 ;

*Returns as on* 31-3-1979

Thiru G. Vasantha Pai

Returns as on 31-3-1980.

1. Thiru E. S. Venkatesan
2. Thirumathi Mandakini Krishnamurthi
3. Thiru P. Manickam
4. Thiru M. Sankaralingam
5. Hon. Thiru S. Raghavanandham, Minister for Labour.

---

* Laid on the Table of the House on 10-7-1980.

@ Sent by post to all M.L.Cs. on 14-7-1980.

£ Circulated to all M.L.Cs. on 19-7-1980.

## இணைப்பு I

(21 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தென் ஆற்காடு மாவட்டம், திருவெண்ணைநல்லூர், மூகையூர், சங்கராபுரம், காமபுரம் மற்றும் குறிஞ்சிப்பாடி பஞ்சாயத்து ஒன்றியப் பகுதிகளிலும், விருத்தாசலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலும் சந்தேகத்திற்கு உரிய மூளைக்காய்ச்சல் எனப்படும் நோயால் 3—5—1980 முதல் 18—6—1980 வரை இரண்டு வயதில் இருந்து 13 வயதுக்கு உட்பட்ட 75 குழந்தைகள் பாதிக்கப்பட்டார்கள். இவர்களில் 8 பேர் நீங்கலாக ஏனையோர் அரசாங்க மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். பாதிக்கப்பட்ட 75 பேரில் 52 பேர் இறந்துவிட்டனர். பாதிக்கப்பட்டவர்களின் உடலில் இருந்து சீரம் எடுக்கப்பட்டு தேசிய நுண்கிருமிகள் ஆராய்ச்சி நிலையத்தின் பெங்களூர் கிளைக்கு சோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட நல அலுவலரும், உதவி நல அலுவலரும், சம்பந்தப்பட்ட ஆரம்ப சுகாதார மருத்துவ நிலைய அலுவலர்களும், சுகாதார ஆய்வாளர்களும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்நோய் பற்றிய கணிப்பு செய்து கொண்டு இருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக அருகிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைக்கவும் பாதிக்கப்பட்டவர்களின் ரத்தம் எடுத்து சோதனைக்காக அனுப்பி வைக்குமாறும் பொது சுகாதாரத் துறை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நோய் கண்டோரை உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும், தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் பொது மக்களுக்கு அறிவிக்கும்படி பொது சுகாதாரத் துறை அனைத்து அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். பத்திரிக்கை மூலமும், வானொலி மூலமும் இதுபற்றிய அறிவிப்புகள் அவ்வப்போது வெளியிடப்படுகின்றன. நிலைமையை அரசு கவனித்துக்கொண்டு வருவதுடன் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும் கூறிக்



## இணைப்பு II.

.......23..........ம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

### I. தோற்றுவாய்.

### கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும்.

மாநில நிதி நிலை அறிக்கையில் மிகப் பெருமளவு நிதி ஒதுக்கத்தை கல்வியே தொடர்ந்து பெற்று வருகிறது. கல்விக்காக 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 224 கோடி ('' மானியக் கோரிக்கை 17—கல்வி ''ன் கீழ்) ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகை 1980–81-ல் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 967 கோடியில் 23 விழுக்காடாகும். வரவு-செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித்துறைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. கல்வி மானியத்தின் கீழ் 1975–76-ல் ரூ. 123 கோடியும், 1976–77-ல் ரூ. 143 கோடியும், 1977–78-ல் ரூ. 164 கோடியும், 1978–79-ல் ரூ. 186 கோடியும் செலவாயின. 1979–80-க்கான திருத்த மதிப்பீடு ரூ. 212 கோடியாகும். கல்விச் செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதை இது காட்டும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1980–81 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் பின்வருமாறு :—

| | 1980–81 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 259 அரசுப் பள்ளிகள் கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்பு செலவு. | 42 | .. | 42 |
| 277 கல்வி— | | | |
| 1 தொடக்கக் கல்வி | 1,04,06 | 1,53 | 1,05,59 |
| 2 உயர்நிலைப் பள்ளிக் கல்வி. | 59,48 | 1,02 | 60,50 |
| 3 மேல்நிலைப் பள்ளிக் கல்வி. | 10,36 | 6,94 | 17,30 |
| 4 கல்லூரிக் கல்வி | 22,58 | 69 | 23,27 |
| 5 சிறப்புக் கல்வி—முதியோர் கல்வி, தமிழ் வளர்ச்சி முதலியவை. | 1,45 | 1,73 | 3,18 |
| 6 தேசிய மாணவர் படை, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன். | 1,96 | 78 | 2,74 |
| 7 பிற இனங்கள் | 1 | 1 | 2 |
| 8 தொழில் நுட்பக் கல்வி. | 7,65 | 92 | 8,57 |
| மொத்தம்—"277 கல்வி" | 2,07,55 | 13,62 | 2,21,17 |



| | 1980–81 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 278. கலை, பண்பாடு | 28 | 26 | 54 |
| தொல் பொருள் ஆராய்ச்சி. | 14 | 6 | 20 |
| ஆவணக் காப்பகமும் அருங் காட்சியகங்களும். | 36 | 5 | 41 |
| பொது நூலகங்கள் | 1,45 | 5 | 1,50 |
| | 2,23 | 42 | 2,65 |
| 288. சமூகப் பாதுகாப்பும் நலனும். | 15 | .. | 15 |
| பலவகை .. .. | 2 | .. | 2 |
| மொத்தம்—மானியக் கோரிக்கை 17—கல்வி | 2,10,37 | 14,04 | 2,24,41 அல்லது 2,24,42 |

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர பள்ளி, கல்லூரிக் கட்டடங்கள். கடன்கள் முதலியவற்றிற்காக பிற மானியக் கோரிக்கைகளின் கீழ் 1980–81-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு—

| | திட்டத்தின் கீழ் வராத செலவு. | திட்டச் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பொதுக் கல்வி.— | | | |
| அ) வருவாய்க் கணக்கில் செலவு— | | | |
| "மானியக் கோரிக்கை 28" சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள். | .. | 5,50 | 5,50 |
| சமூகக் கல்வி .. | .. | 8 | 8 |

| (1) | திட்டத்தின் கீழ்வராத செலவு. (2) | திட்டச் செலவு. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| ...ரிக்கை 67—பொதுப் பணி—அரசுப் பள்ளிக் கட்டடங்கள். | 3 | 5 | 8 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம். | 7,57 | .. | 7 57 |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு— | | | |
| 459. அலுவலகக் கட்டடங்கள். | .. | 1 | 1 |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகளுக்குக் கட்டடங்கள். | 1 | 3,19 | 3,20 |
| 767. கடன்கள்— தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன். | 1 | .. | 1 |
| 677. தேசிய கடன் படிப்புதவித் தொகைகள். | .. | 4[illegible] | 4[illegible] |
| **மொத்தம்—பொதுக்கல்வி.** | **7,62** | **9,23** | **16,8[illegible]** |



V211,32 N80 N81.1695

21977

தொழில் நுட்பக் கல்வி.

| | | | |
|---|---|---|---|
| 477. அரசுத் தொழில் நுட்பக் கல்வி நிலையக் கட்டிடங்களுக்கான மூலதனச் செலவு. | 4 | 41 | 45 |
| 677. தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள். | 7 | .. | 7 |
| தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன். | .. | 4 | 4 |
| மொத்தம்—தொழிற் கல்வி | 11 | 45 | 56 |
| மொத்தம்—பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும். | 7,73 | 9,68 | 17,41 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1980–81-ல் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 241 கோடியாகும்.

4. (1) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடி வகுப்பினர் பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவும் சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்ற வற்றிற்கான செலவுகளும், மேற்படி செலவினங்களின கீழ் வாரா. இந்த இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ. 35 கோடியாகும்.

(2) மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்கு, அந்தந்தத் துறைகளின் கீழ் தனித்தனியாக ஒதுக்கியுள்ள நிதி மொத்தம் சுமார் ரூ. 14 கோடி. மேற்கண்ட இரு இனங்களுக்கும் ஆகும் செலவையும் (ரூ. 35 கோடியும் ரூ. 14 கோடியும்) கணக்கில் கொண்டால், 1980–81 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 290 கோடியாக இருக்கும்.

[1980 ஜூலை 21

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277 கல்வி, 477 கல்வி மூலதனச் செலவு, 677 கடன் முதலியன) கல்விக்கான 1980–81 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் செலவு விவரம் வருமாறு:—(கூட்டல் குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்.)

| | பொறுப்பேற்ற செலவினம். | 1980–81ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பொதுக்கல்வி | | | |
| 1. பள்ளிக் கல்வி .. | 7,02<br>+01 | 1,43<br>.. | 8,45<br>+01 |
| 2. மேல்நிலைப்பள்ளிக் கல்வி. | 2,47 | 4,47 | 6,94 |
| 3. கல்லூரிக் கல்வி .. | 74<br>+43 | 52<br>.. | 1,26<br>+40 |
| 4. முதியோர் கல்வி .. | 70<br>+72 | 20<br>.. | 90<br>+73 |
| 5. விளையாட்டு, இளைஞர் நலன். | 23<br>+23 | 48<br>.. | 71<br>+23 |
| 6. கட்டட வகையில் பொதுப் பணித் துறைச் செலவு. | 58 | .. | 58 |
| | 11,74<br>+1,39 | 7,10<br>.. | 18,84<br>+1,39 |
| தொழில் நுட்பக்கல்வி | 97<br>+7 | 44<br>.. | 1,41<br>+7 |
| கலைப்பணிகள் | 6 | 43 | 49 |
| பெரிரு மொத்தம் | 12,77<br>+1,46 | 7,97<br>.. | 20,74<br>+1,46 |



1980 ஜூலை 21]

கல்வி வளர்ச்சிக்குச் செய்துள்ள பணிகளும் செய்ய இருப்பவையும்.

6. 10+2+3 கல்வி முறையில் +2 நிலையைப் பள்ளிகளோடு சேர்த்திட இவ்வரசு செய்த முடிவின் புரட்சிகரமான விளைவாகத் தற்பொழுது எஸ்.எஸ்.எல்.சி-க்கு மேலான உயர் கல்வி வசதி முதல் முதலாக ஆயிரத்துக்கு மேற்பட்ட இடங்களில், அதுவும் பெரும்பாலானவை கிராமப்புறங்களில், எளிதில் கிடைக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் கல்வித் துறையின் பிற சாதனைகளில் முதன்மை வாய்ந்தவை:—எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை பாடம், பாடமாகத் தேற வகை செய்தது 1—3 வகுப்புகளில் யாரும் தோல்வியுறச் செய்யக் கூடாது என்ற ஏற்பாடு; கல்விநிலையங்களில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது பிற்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை 31 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தியது; பள்ளி கல்லூரி ஆசிரியர் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள்; இது வரை கண்டிராத பெரும் அளவில் முதியோர் கல்வித்திட்டத்தை செயல்படுத்தியமை; பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகத்தை தொடங்கியது; விளையாட்டு இளைஞர் நலனுக்காக தனித்துறை ஒன்று அமைத்தது; கலை வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் எண்ணிறந்த திட்டங்களைத் தொடங்கியது ஆகியவையாகும்.

7. 1980–81-லும் (பின் ஆண்டுகளிலும்) நமக்குள்ள கல்விப் பணிகளில் முக்கியமானவை:—பள்ளிகளின் மாணவர் சேரும் எண்ணிக்கையை அதிகரித்தல், சேருபவர்கள் இடையில் நின்று விடாதவாறு பார்த்துக் கொள்ளுதல், அனைத்து நிலைகளிலும் கல்வித்தர உயர்வு ஆகியவற்றுக்கான தொடரும் திட்டங்கள்: ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் 95,000 பேர்களை அரசு ஊழியர்களாக்குதல்; ஏற்கனவே அறிவித்துள்ளபடி தமிழ்நாட்டில் மேலும் புதிய பல்கலைக் கழகங்களைத் தொடங்குதல்; விளையாட்டு, உடற்பயிற்சிக்கான பல்வேறு புதிய திட்டங்களைச் செயல் படுத்துதல்; ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை சிறந்த முறையில் நடத்துதல் போன்றவையாகும்.

8. "மாநில கல்வி ஆலோசனைக் குழுவை" அரசு மீண்டும் புதுப்பிக்க இருக்கிறது. சட்டமன்றப் பேரவை மேலவை உறுப்பினர்கள் அக்குழுவில் இருப்பர். கல்விக்கொள்கை பற்றிய முதன்மை வாய்ந்த அனைத்து விஷயங்களைப் பற்றியும் அரசு அக்குழுவின் ஆலோசனையைப் பெறும்.

## II. பள்ளிக்கல்வி.

### (i) பொது.

1. கல்விக்காக அரசு ஒதுக்கும் தொகையில் பெரும் பகுதி பள்ளிக் கல்விக்குத்தான் ஆகிறது. 1980-81 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 224 கோடியில், பள்ளிக் கல்விக்கு

(மேல் நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூ. 183 கோடியாகும். 1—8—1979 அன்றைய நிலவரப் படி தமிழ்நாட்டில் மொத்தம் 36,573 பள்ளிகள் இருந்தன. அவற்றில் தொடக்கப் பள்ளிகள் 27,662 நடுநிலைப் பள்ளிகள் 5,685, உயர்நிலைப்பள்ளிகள் 3,226. உயர்நிலைப் பள்ளிகள் 3,226 என்ற எண்ணிக்கையில் 1,087 மேல்நிலைப்பள்ளிகளும் மைய அரசின் உயர்நிலைப் பள்ளிச் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்த 117 பள்ளிகள் ஆகியவையும் அடங்கும். அனைத்துப் பள்ளிகளிலும் பணி செய்து வந்த ஆசிரியர்கள் எண்ணிக்கை 2·58 இலட்சம், பயின்று வந்த மாணவர் எண்ணிக்கை 88.79 இலட்சம் (மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் இரண்டிலும் பயின்று வந்த 2·50 இலட்சம் மாணவர் உட்பட). இந்த 36,573 பள்ளிகள் மற்றும் வேறு சிறப்புப் பள்ளிகள் ஆகியவற்றின் நிருவாக வாரி விவரங்கள் ஆசிரியர் மாணவர் எண்ணிக்கை ஆகியவற்றை இணைப்பில் காணலாம்.

2. 1979–80-ல் 6—11 வயதுத் தொகுதிச் சிறுவர் சிறுமியருள் 94.64 சதவீதத்தினரும், 11—14 வயதினருள் 59.68 சதவீதத்தினரும், 14—16 வயதினருள் 38.44 சதவீதத்தினரும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு இருந்தனர். இவ் வயதுத் தொகுதிகள் முறையே 1—5 வகுப்புகள், 6—8 வகுப்புகள், 9—10 வகுப்புகள் ஆகியவற்றுக்கு இணையானவை. முன் ஆண்டுகளிலிருந்து மாணவர் சேர்க்கை விழுக்காடு வளர்ந்து வந்துள்ளது பற்றிய விவரங்களை இணைப்பில் காணலாம்.

3. 1980–81 ஆம் ஆண்டில் (6—11 மற்றும் 11—14 வயதுத் தொகுதிகளுக்காக) 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகளும் (உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் உயர் நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து) 200 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகளும், உயர் தொடக்கப்பள்ளிகளுக்கு 200 பி.எட். தர தலைமை ஆசிரியர் பதவிகளும், உயர்நிலைப்பள்ளிகளுக்கு 200 பி.எட். தரப்பதவிகளும் ஏற்படுத்தப்படும். உயர் தொடக்கப்பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 200 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும். மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஏற்படுத்தப்படும் கூடுதல் பதவிகளின் விவரம் பின் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளது.

### பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்.

4. பள்ளிகளில் உள்ள வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் மக்கள் முயற்சியையும் ஆர்வத்தையும் தூண்டும் வகையில் (1979 செப்டம்பர் முடிய) பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் 578 நடந்துள்ளன. பொது மக்களிடமிருந்து ரூ. 15.53 கோடி மதிப்புள்ள பொருள்கள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இப்பொழுது அறிவியல், நூல் நிலைய மேம்பாட்டிற்கான



வசதிகளைப் பெறுவதில் நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. பொது மக்களின் நன்கொடையைக் கொண்டு 1979 செப்டம்பர் வரை ரூ. 3.10 கோடி செலவில் சுமார் 41 இலட்சம் மாணவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

### கல்வித்துறை நிருவாகம்:

5. தற்பொழுது தலைமைக் கல்வி அலுவலர்கள் 14 : மாவட்டக்கல்வி அலுவலர்கள் 50; பெண்கள் பள்ளி ஆய்வாளர்கள் 7 ; பள்ளித் துணை ஆய்வாளர்கள் 458 ஆகியோர் உள்ளனர். கல்வித்துறை நிருவாகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1980–81 ஆம் ஆண்டில் மேலும் ஒரு தலைமைக் கல்வி அலுவலர் பதவி (புதுக்கோட்டை மாவட்டத்துக்கு) ; மேலும் ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் பதவி (அறந்தாங்கிக்கு) ; மேலும் 3 பெண்கள் பள்ளி ஆய்வாளர் பதவிகள் ஆகியவை புதிதாக ஏற்படுத்தப்படும்.

## II. தொடக்கக் கல்வி.

### மாணவர் சேர்க்கை :

1. 6—11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 94.64 விழுக்காட்டினரும், 11—14 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 59.68 விழுக்காட்டினரும், இதுவரை பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விரு வயதுத் தொகுதிகளின் கீழ் 1978–79 ஆம் ஆண்டில் 1.93 இலட்சம் மாணவ மாணவியரும் 1979–80 ஆம் ஆண்டில் 1.72 இலட்சம் பேரும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1979–80 ஆம் ஆண்டில் இருந்த 33,347 தொடக்கப்பள்ளிகளில்—தொடக்கப்பள்ளிகள் (1—5 வகுப்புகள்) 27,662 ; நடுநிலைப் பள்ளிகள் (1—8 அல்லது 6—8 வகுப்புகள்) 5,685—படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 68.35 இலட்சமாகும். வேலை பார்த்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,79,103 ஆகும். ஒட்டு மொத்தமான ஆசிரியர்-மாணவர் விகிதம் 1:38 ஆகும்.

2. தொடக்கப் பள்ளியில் சேரும் (6—11 வயது) மாணவ மாணவியர் தொடர்ந்து 5-வது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியிலிருந்து நின்றுவிடும் நிலைமை அண்மை ஆண்டுகளில் சீர்பட்டு வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. அவ்வாறு நின்றுவிடுவோர் விழுக்காடு 1973–74 ஆம் ஆண்டில் 51 சதவீதமாக இருந்தது. 1979–80-ல் 33 சதவீதமாகக் குறைந்துள்ளது. தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம், இலவசமாகப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்கும் திட்டம் போன்றவை மாணவ மாணவியர் பள்ளியை விட்டு இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டுமென்பதையும் நோக்கமாகக் கொண்டவை. இவற்றோடு 1977–78 முதல் இம் மாநிலத்தில் 1—3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்பிற்கனுப்பும் முறை செயல்படுத்தப்படுகிறது.

[1980 ஜூலை 21

<u>நண்பகல் உணவுத் திட்டம் :</u>

3. தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்துவதிலும் மாணவர் தொடர்ந்து பள்ளிக்கு வரும்படி செய்வதிலும் சிறந்த இடத்தைப் பெறுகிறது. தொடக்க—உயர் தொடக்கப் பள்ளிகளில் 1—8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 20.25 இலட்சம் மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. அரிசன நலத்துறையும் பிற்பட்டோர் நலத்துறையும் நடத்தி வரும் பள்ளிகளில் பயிலும் சுமார் 1.65 இலட்சம் மாணவரும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர். 1980—81 ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ ரூ. 5.29 கோடி செலவிடப்படும்.

4. மைய சமையற் கூடங்கள் இல்லாத பகுதிகளைப் பொறுத்த வரையில் மதிய உணவு மானியம் அந்தந்தத் தொடக்கப்பள்ளிக்கே நேரடியாகக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு மாநில அரசு ஒரு மாணவனுக்கு நாளைக்கு 10 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மானியம் அளிக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் ஒரு மாணவனுக்கு நாளைக்கு 5 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டும் என்று உள்ளது. எனினும் பெரும்பாலான உள்ளாட்சி மன்றங்கள் தங்கள் பங்குத் தொகையை, அதுவும் குறிப்பாக உள்ளாட்சி மன்றப் பள்ளிகள் அல்லாத பிற பள்ளிகளுக்கு ஒழுங்காகக் கொடுத்து வரவில்லை. அவை ஒழுங்காகக் கொடுத்து வருவதற்கு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1—10—1979 முதல் அந்த 5 காசு பங்குத் தொகையை உள்ளாட்சி மன்றங்கள் கட்டாயம் உள்ளாட்சிமன்றப் பள்ளிகள் அல்லாத பிற பள்ளிகளுக்கும் கொடுத்தாக வேண்டும் என்றும் இதற்காக ஆகும் செலவை ஏற்பளிக்கப்பட்டதாகக் கருதி தொடக்கப்பள்ளிக் கல்விக்கான அரசு மானியம் பெறும்பொழுது கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்றும் ஆணையிடப்பட்டு உள்ளது. இவ்வாறு பெறும் 15 காசு மானியத்தோடு கேர் நிறுவனத்திலிருந்து இலவசமாக ஆண்டுதோறும் கிட்டும் சுமார் 20,000 டன் உணவையும் தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் பயன்படுத்துகிறது. ஓர் ஆண்டுக்கு மதிய உணவு அளிக்கப்படும் 200 நாட்களில், 100 நாட்களுக்குத் தேவைப்படும் தானியமும் 200 நாட்களுக்குமே தேவைப்படும் எண்ணையும் கேர் இலவச உணவு மூலம் பெறப்படுகிறது. மீதி 100 நாட்களுக்கான தானியச் செலவுக்கும் 200 நாட்களுக்கு ஆகும் மசாலா சாமான்கள், விறகுச் செலவு முதலியவற்றுக்கும் அரசு மானியமாகவும் உள்ளாட்சிமன்றப் பங்குத் தொகையாகவும் பெறப்படும் ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு 15 காசு என்ற தொகை பயன்படுத்தப்படுகிறது.



1980 ஜூலை 21]

5. மைய சமையற்கூடத் திட்டம் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. அங்கு நவீன அடுப்புகளில் சுகாதார முறைப்படி சமைக்கப்பெற்ற உணவு சுற்றுப்புறங்களிலுள்ள பள்ளிகளுக்கு மூடப்பட்ட வண்டிகளில் எடுத்துச் சென்று வழங்கப்படுகிறது. இம்மாவட்டங்களில் இயங்கிவரும் 97 சமையற் கூடங்களும் கேர் நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். அவையும் பிற பகுதிகளைப் போல கேர் இலவச உணவு பெறுகின்றன. இம்மாவட்டங்களில் சுமார் இலட்சம் மாணவர்கட்கு அவை பகல் உணவு வழங்கி வருகின்றன. மைய சமையற் கூடங்களுக்கான முழுச் செலவும் நேரடியாக அரசுப் பணத்திலிருந்து செலவாவதால் இம்மாவட்டங்களில் 5 காசு உள்ளாட்சி மன்றப் பங்குத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்தப்படுகிறது.

6. மைய சமையற்கூடங்களைப் பற்றி 1979 ஜூன் — அக்டோபர் மாதங்களில் ஓர் ஆய்வு செய்தபொழுது அவற்றில் சமைத்த உணவை வட்டாரப் பள்ளிகளுக்கு உந்து வண்டிகளில் கொண்டு செல்வதால் பெட்ரோல் முதலிய வகையில் பெருமளவில் வீண் செலவு ஆவதால் உந்து வண்டிகளுக்குப் பதிலாக அப்பணிக்கு மாட்டு வண்டிகள், சைக்கிள்கள் போன்றவற்றைத் தக்க முறையில் பயன்படுத்துதல்; நெடுந்தொலைவு காரணமாக கண்டிப்பாக உந்து வண்டிகளைப் பயன்படுத்தித் தீர வேண்டிய இடங்களிலும் இன்றியமையாத் தேவை அளவில் உந்து வண்டியைப் பயன்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளால் சிக்கனம் ஏற்படுவதோடு செயல்திறனும் உயரும் என்று தெரிய வந்தது. இந்த ஆய்வினைச் செய்த குழுவின் கருத்தை அரசு ஏற்று அதன் பரிந்துரைகளைச் செயல்படுத்த 2—4—1980 அன்று ஆணையிட்டுள்ளது. மைய சமையற் கூடங்களிலிருந்த 193 உந்து வண்டிகளில் 93 திரும்பப்பெற ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் மைய சமையற் கூடங்களில் உணவல்லாத பிற இனங்களுக்காக ஆகும் செலவில் பெருமளவு சிக்கனம் ஏற்படும்.

7. மைய சமையற் கூடங்கள் தமக்குத் தேவையான அரிசியை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் ஒழுங்காகப் பெறுவதற்குரிய சீரான திட்டம் ஒன்றை அரசு வகுத்து உள்ளது.

8. மொத்தம் ரூ. 1.44 லட்சம் செலவில் தருமபுரி மாவட்டத்தில் (90,000 மாணவர்களுக்குப் பயனளிக்கத்தக்க) 16 மைய சமையற் கூடங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் (1,76,000 மாணவர்களுக்குப் பயனளிக்கத்தக்க) 32 மைய சமையற் கூடங்களும் ஏற்படுத்துவதற்காக அச்செலவில் 45 சத வீதத்தை கேர் நிறுவனத்திடமிருந்து நிதி உதவியாகப் பெற அனுமதி கோரி 1979 80-ல் மைய அரசின் சமுதாய நலத்

துறைக்கு எழுதப்பட்டது. எனினும் 1979–80-ல், 5 சமையற் கூடங்களுக்கு மட்டுமே கேர் உதவி பெற மைய அரசு அனுமதித்தது. அந்த 5 சமையற்கூடங்களையும் இராமநாதபுரம் மாவட்டத்தில் கட்ட அரசு ஏற்பளித்துள்ளது. 1980–81-ம் ஆண்டிலாவது அவ்விரண்டு மாவட்டங்களுக்கும் மேலும் தேவைப்படும் 43 சமையற் கூடங்களுக்கும் கேர் நிதி உதவியையும் இம் மாநிலத்திற்கு ஒதுக்கிடுமாறு இவ்வரசு மைய அரசை வேண்டி உள்ளது.

இலவசப் புத்தகங்கள் வழங்குதல்.

9. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவுபெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், இரண்டு, மூன்று வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டு தோறும் 13 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர். 1972–73ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் தருவதற்கு ஆகும் செலவினைத் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகிறது. இதற்காக அந்நிறுவனம் ஆண்டு தோறும் ரூ. 25 இலட்சம் செலவிடுகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்கு சிலேட்டுகள் இலவசமாக வழங்கும் வகையில் ஆண்டு தோறும் அரசு சுமார் ரூ. 5 இலட்சம் செலவிடுகிறது.

10. தொடக்கப்பள்ளிகளில், அறிவியல் போதனையை மேம்படுத்தும் பொருட்டு பாடத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டு உள்ளது. அறிவியல் சாதனங்கள் வாங்குதற்பொருட்டு ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முன்னூறு ரூபாயும் ஒவ்வொரு உயர் தொடக்கப் பள்ளிக்கும் ஆயிரம் ரூபாயும் உதவித்தொகையாக வழங்கப்படுகின்றன. இதுவரை இதன் மூலம் 12,620 தொடக்கப் பள்ளிகளும், 4,000 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயனடைந்துள்ளன. 1980–81-ல் மேலும் 200 நடுநிலைப் பள்ளிகள் பயனடையும். கோயம்புத்தூரிலுள்ள அவனாசிலிங்கம் மனையியற் கல்லூரி மூலம் செயல்படுத்தி வரும் ஒரு முன்னோடித் திட்டத்தின்கீழ், கடந்த சில ஆண்டுகளில் கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் 5,700 பேருக்கு சத்துணவு மற்றும் உடல்நலம் பற்றி புத்துணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

11. தொடக்கப்பள்ளி மாணவர்களிடையே உடல் நலக் கல்வி புகட்டுவதற்காக கேர் நிறுவன உதவியுடன் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அம் மாவட்டத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இது குறித்து



பயிற்சி அளித்து, பின் அவர்கள் மூலம் அப்பள்ளிகளில் பயிலும் சுமார் 5 இலட்சம் சிறுவர்–சிறுமியரும் இளமையிலிருந்தே உடல் நலம் பேணுவதில் நாட்டமுள்ளவர்களாக வளரச் செய்ய வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கம். இதற்காகும் மொத்தச் செலவான ரூபாய் 4 இலட்சத்தில் 1·80 இலட்சத்தை கேர் நிறுவனம் ஏற்கும்.

தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள்:

12. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதற் பொருட்டு உள்ளாட்சி நிறுவனங்கட்கும் தனியார் நிறுவனப் பள்ளிகட்கும் மானியம் வழங்கப்படுகிறது. 1974–75லிருந்து தொடக்கப் பள்ளி கட்டிட மானியம் ரூ. 10,000/17,000 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது. நிருவாகத்தினர் தர வேண்டிய குறைந்த பட்ச பங்குத் தொகையும் ரூ. 5,000/8,000 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது. 1980–81-ல் நகராட்சி மற்றும் தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டட மானியம் தர ரூ. 24 இலட்சமும் அரசுத் தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ 15 இலட்சமும் (முன் ஆண்டுகளில் ஏற்பளித்த கட்டட வேலைகளை முடித்திட ரூ. 3 இலட்சமும் புதிய வேலைகளுக்கு ரூ. 12 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. 1980–81-ல் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 5·5 கோடி சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் செலவிடப்படும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சரியான கட்டட வசதி இல்லாத 4,000-க்கு மேற்பட்ட தொடக்கப்பள்ளிகளுக்கு வரும் மூன்றாண்டுகளுக்குள் கட்டடம் கட்டித் தருவதற்காக வகுத்துள்ள சிறப்புத் திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்:

13. தமிழ்நாட்டிலுள்ள 33,347 தொடக்கப்பள்ளிகளுள் ஏறத்தாழ 29,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ளன. அந்த 29,000 பள்ளிகளில் 23,266 பள்ளி

களை (சுமார் 20,193 தொடக்கப்பள்ளிகளும், 3,073 நடு நிலைப் பள்ளிகளும்) ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தி வருகின்றன. தொடக்கக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்கட்கு மானியம் வழங்குவதற்கான திருத்திய முறைப்படி (ஒரு ரூபாய் நில வரிக்கு 45 காசு என்று வசூலிக்கப்படும்) உள்ளூர் வரியில் 4/9 பாகம் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்கு வழங்கப்படுகிறது. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப் படையில் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள மக்கள் தொகைக்கு தலைக்கு ரூ. 6 வீதம் கணக்கிட்டு வழங்கும் மானியமும், ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்குச் செல்கின்றது. தொடக்கக் கல்விக்காக ஆகும் செலவில் எஞ்சியதை வட்டார வகைப் பாட்டிற்கு ஏற்ப அரசும், ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து ஏற்கின்றன.

14. தொடக்கப் பள்ளிகள் 1,494ஐ (சுமார் 1,090தொடக்கப் பள்ளிகளும், சுமார் 400 நடுநிலைப் பள்ளிகளும்) நகராட்சி களும், சென்னை, மதுரை மாநகராட்சிகளும் நடத்தி வரு கின்றன. நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன் அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மதுரை மாநகராட்சி ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கில் துண்டுவிழும் முழுத் தொகையினையும் அரசே ஈடு செய்து வருகின்றது.

## (iii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி

1. 1979-80-ல் தமிழ்நாட்டில் 14-16 வயதுத் தொகுதி யினர் 16·51 இலட்சம் பேர்கள் இருந்தனர். இவர்களுள் 38·44 விழுக்காடாகிய 6·34 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளி களில் 9-10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1979-80-ல் மொத்தம் இருந்த உயர்நிலைப் பள்ளிகள் 3,109. அவற்றில் 1,087 பள்ளிகளில் மேல் நிலைப் பள்ளி வகுப்புகளும் இருந்தன. இந்தப் 3,109 பள்ளிகளுக்கு மேலாக மைய அரசின் உயர்நிலை



பள்ளிக் கல்வி வாரியத்தோடு இணைந்த 117 பள்ளிகளும் (மேல்நிலை வகுப்புகள் இருந்த 52 பள்ளிகள் உட்பட) இருந்தன. அப்பள்ளிகளில் மேல்நிலைப் பள்ளிகளில் 12·69 இலட்சம் பேரும், உயர்நிலைப் பள்ளிகளில் 7·75 லட்சம் பேரும் ஆக மொத்தம் 20·44 இலட்சம் பேர்கள் பயின்று வந்தனர். அந்த 20·44 இலட்சம் பேர்களுள் 8-ம் வகுப்பிலும், கீழ்வகுப்புகளிலும் பயின்று வந்தவர்கள் 11·60 இலட்சம் பேர்; 9—10 வகுப்புகளில் பயின்றவர்கள் 6·34 இலட்சம் பேர்; மேல்நிலைப் பள்ளி இரண் டாண்டு வகுப்புகளிலும் பயின்றவர்கள் 2·50 இலட்சம் பேர்.

2. 1980-81 இல் இதுவரை 62 உயர்நிலைப் பள்ளிகள் (அரசுப் பள்ளிகள் 42, தனியார் பள்ளிகள் 20) புதிதாகத் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

3. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட் டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அரசு உயர் நிலைப் பள்ளிக்கும் ரூ. 55,000 செலவிடப்படுகிறது. (ஆய்வுக் கூட கட்டிடத்திற்காக ரூபாய் 37,000-மும், கருவிகளுக்காக ரூ. 18,000-மும்.) தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றும் பெறும் மானியம் ரூ. 40,200 ஆகும். இதில் ரூ. 18,000 கருவிகளுக்காகும். இவற்றைப் பள்ளிக் கல்வி இயக்குநரே வாங்கி வழங்குகிறார். எஞ்சிய ரூ. 22,200 ஆய்வுக்கூட கட்டிடத்திற்காகும். கட்டிடத்திற் கான செலவில் 60 சதவிகிதம் அல்லது ரூ. 22,200 இதில் எது குறைவோ அது, என்ற அடிப்படையில் ஆய்வுக்கூடக் கட்டிட மானியம் வழங்கப்படுகிறது. 1979-80 முடிய 993 உயர்நிலைப் பள்ளிகள் ஆய்வுக்கூட நிதியுதவி பெற்றிருந்தன. (கடந்த மூன்று ஆண்டுகளில் பயன் பெற்ற 100 பள்ளிகள் உட்பட.) 1980-81-ல் மேலும் 25 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடம் அமைக்கப்படும்.

4. இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் தற்போது 50 கல்வி மாவட்

டங்களில் 42-ல், ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி உள்ளது. 1980-81-ல் மேலும் நான்கு வண்டிகள் வாங்கப்படும்.

5. மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை வளர்ப்பதற்காக மாநில அறிவியல் கண்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படு கின்றன.

6. உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன் பொருத்தமான நூலக புத்தகங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 9 இலட்சம் இதற்குச் செலவிடப்பட்டது. 1980–81–ல் இப் பணிக்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒலி-ஒளிக் கல்வி.

7. பெரும்பாலான பள்ளிகள் சுய முயற்சியின் மூலம் அல்லது வட்டார மக்களின் முயற்சியின் மூலம் வானொலிப் பெட்டிகளைப் பெற்றுள்ளதனால் அவை வானொலியின் கல்வி ஒலிபரப்பின் மூலம் பயன்பெறுகின்றன. மீதியுள்ள பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்கிட இயலும் வகையில் 4,000 வானொலிப் பெட்டிகளை இலவசமாகத் தர யூனிசெப் இசைந்துள்ளது. 700 உயர்நிலைப் பள்ளிகளில் 16 மி.மீ. திரைப்படம் காட்டும் கருவிகளும், 1,250 பள்ளிகளில் துண்டுப்படம் காட்டும் கருவிகளும் உள்ளன. அந்தந்தப் பள்ளிகள் ஒலி—ஒளிக் கல்விக்கென மாணவர்களிடம் வசூலிக்கும் சிறப்புக் கட்டணத் தொகையைக் கொண்டு ஒலி–ஒளிக் கருவிகள் வாங்கலாம். விலை உயர்ந்தனவும், மிகப் பயனுள்ளவையுமான திரைப்படங்களை அத்தொகையிலிருந்து வாங்க இயலாதாகையால் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் உள்ள 'மாநில திரைப்படச் சுருள் சேமிப்பகம்' பள்ளிகளுக்கு திரைப்படங்களையும் துண்டுப் படங்களையும் கடனாக வழங்கி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் அந்தச்



சேமிப்பு நிலையத்தை வலுப்படுத்த கல்வித் திரைப்படங்களும் துண்டுப்படங்களும் ரூ. 1·25 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன. 1980–81 இல் இவ்வகையில் மேலும் ரூ. 25,000 செலவிடப்படும்.

8. தொலைக் காட்சி கல்விப்பணிக்கு மிகவும் பயன்படும் ஒரு நவீன கருவியாகும். சென்னையிலும் அதன் அண்மையிலும் உள்ள பள்ளிகள் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் கல்வி ஒளிபரப்பின் மூலம் பயனடைகின்றன. பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் உள்ள 'தொழில் நுட்ப வளர்ச்சியைக் கல்விப் பணிக்குப் பயன்படுத்துவதற்கான அமைப்பு' பள்ளிகள் தொலைக் காட்சி கல்வி ஒளிபரப்பின் மூலம் நற்பயனை அடைய உதவி வருகிறது சென்னை நிலைய ஒளிப்பரப்புப் பகுதியில் உள்ள பள்ளிகள் தம் மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆண்டுக்கு ரூ. 2 வசூலித்து தொலைக் காட்சிப் பெட்டிகள் வாங்கவும் பராமரிக்கவும் பயன்படுத்திக்கொள்ள அரசு ஏற்கனவே அனுமதித்துள்ளது. கிராமப்புறங்களிலுள்ள பள்ளிகள் 15-க்குத் தொலைக் காட்சிப் பெட்டிகளை அரசே வாங்கி அளிக்க 1979–80 இல் ரூ. 75,000 ஒதுக்கப்பட்டது. அப்பள்ளிகள் வசூலிக்கும் தொலைக் காட்சிக் கட்டணத் தொகையைக் கொண்டு அப் பெட்டிகளின் விலை தவணை முறையில் அரசுக்கு திரும்பச் செலுத்தப்படும். இப் பணிக்காக 1980–81–லும் ரூ. 75,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

9. பள்ளிகளில் கல்வித் தர உயர்வுக்குப் பாடுபடவும் விளையாட்டுகள், பண்பாடு, இளைஞர் நலப் பணி ஆகியவற்றைப் பேணி வளர்க்கவும் ஒவ்வொரு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளியிலும் கல்விக் குழு, விளையாட்டுக் குழு, பண்பாட்டுக் குழு இளைஞர் நலப் பணிக் குழு என்ற நான்கு குழுக்களை அமைத்துச் செயல்பட அரசு ஆணையிட்டுள்ளது.

10. நகராட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிட மானியம் தர 1980–81–ல் ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு உயர்நிலைப் பள்ளிகளின் கட்டிடப் பணிகளுக்

காக 1980—81-ல் ரூ. 42 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது—(முன் ஆண்டுகளில் ஏற்பளித்த பணிகளுக்கு 1980—81 இல் ஆகும் செலவுக்காக ரூ. 25 இலட்சமும், புதிய கட்டிட வேலைகளுக்காக ரூ. 17 இலட்சமும்) கட்டிட வசதிகள் மிகக் குறைவாக உள்ள பள்ளிகளின் தேவைகளை வரும் ஆண்டுகளில் படிப்படியாக நிறைவு செய்யும் நோக்கத்துடன் அரசுப் பள்ளிகளில் உள்ள கட்டட வசதிகளைக் கணக்கெடுக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

படிப்பு உதவித் தொகைகள்.

11. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி எல்லா நிலைகளிலும் இலவசமாகும். கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களும் கல்வியில் சிறந்து விளங்குகிறவர்களுமான மாணவர்களுக்கு, 1971—72 முதல் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் 374 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் புதியதாக நான்கு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவித்தொகை வழங்கப்படுகிறது. ஒரு முறை உதவித் தொகை பெற்ற மாணவர் பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையைப் பெறுவார். இத்திட்டத்திற்கென ஏற்கப்பட்ட பள்ளிகளில் மாணவர் படிப்பதாய் இருந்தால், உணவு விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000-மும் விடுதியில் தங்காமல் பள்ளிக்கு வந்து சென்று படிக்கின்ற மாணவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 500-ம் உதவித் தொகை வழங்கப்படும். இவ்வுதவித் தொகை பெறும் மாணவர்கள் தம் விருப்பப்படி சாதாரணப் பள்ளிகளில் சேர்ந்து படிப்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.150 மட்டும் வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையைப் பெறும் மாணவர் எண்ணிக்கை 1980—81-ல் (புதியதாகப் பெறுவோர் உட்பட) சுமார் 3,000 ஆக இருக்கும். (1978—79-லிருந்து ஒவ்வொரு ஒன்றியத்திலும் இப்படிப்புதவித் தொகையைப் புதிதாகப் பெறும் மாணவர் எண்ணிக்கை இரட்டிக்கப்பட்டது—அதாவது 2-லிருந்து 4 ஆக உயர்த்தப்பட்டது).



12. இது தவிர, பர்மா, இலங்கை, அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், அரசியல் தியாகிகள் ஆகியோரது குழந்தைகளுக்கும் தாராளமாகக் கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

நடமாடும் மருத்துவ வண்டிகள்.

13. சென்னை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் மருத்துவ சோதனைக்கென நடமாடும் மருத்துவ வண்டிகள் இயங்கி வருகின்றன.

மெட்ரிக்குலேஷன் பள்ளிகள்.

14. தமிழ்நாட்டில் 33 மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயில்வோர் 30,000 மாணவர்கள். இவை மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கின்றன. பாடமொழி ஆங்கிலமாகும். இவை அரசு மானியம் பெறுவதில்லை. இவை முன்னர் சென்னை, மதுரைப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்திருந்தன. 1976 டிசம்பரிலிருந்து இவை பள்ளிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளன. மெட்ரிக்குலேஷன் பள்ளிகளுக்காகத் தனி ஆயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் தனி ஆய்வாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆங்கிலோ இந்திய பள்ளிகள்.

15. ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய மாணவர்களிடம் 1978—79-ம் ஆண்டிலிருந்து கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. அம்மாணவர்களின் பெற்றோர்களுடைய வருமானம் எவ்வளவாக இருந்தாலும் இச்சலுகை உண்டு. (அப்பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய

ரல்லாத பிற மாணவர்கள் அக்கட்டணம் செலுத்த வேண்டும்) இச்சலுகையால் ஆங்கிலோ இந்தியப் பள்ளி நிருவாகங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட மானியம் தரப்படுகிறது.

### (iv) பள்ளிப்பாடங்கள், பாடத்திட்டம், பள்ளிப் பாடநூல்கள் பாடத்திட்ட திருத்தம்.

1972–73-லிருந்து 1976–77-க்குள் படிப்படியாக 10 ஆண்டுப் பள்ளிப் படிப்புக்கான புதிய பாடத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. கல்வி வல்லுநர்களைக் கலந்து பல்வேறு பாடங்களில் அப்புதிய பாடத் திட்டத்தின் கீழ் உள்ள அதிகப்படிசுமை 1978–79 முதல் அனைத்து வகுப்புகளிலும் குறைக்கப்பட்டுள்ளது. கணிதத்தைப் பொறுத்தவரை 1978–79 முதல் அதிகப்படி சுமை குறைக்கப்பட்டதோடு கூட, கணிதப் பாடத்துக்கு 1—10 வகுப்புகளுக்கு முற்றிலும் திருத்திய பாடத் திட்டம் ஒன்றை அப்பாட வல்லுநர் குழு தயாரித்துத் தந்தது. அத்திருத்திய கணித பாடத் திட்டத்தை ஏற்று பின்வரும் கால அட்டவணைப்படி பள்ளிகளில் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

| ஆண்டு. | வகுப்புகள். |
|---|---|
| 1979–80 .. .. .. .. | 1–2 |
| 1980–81 .. .. .. .. | 3, 6 |
| 1981–82 .. .. .. .. | 4, 7, 9 |
| 1982–83 .. .. .. .. | 5, 8, 10 |

பள்ளிப்பாட நூல்கள்—

2. பள்ளிகளுக்கான அரசுப் பாட நூல்களை வெளியிட் வழங்கும் பொறுப்பு 1970-ல் நிறுவப்பட்ட தமிழ்நாட்டுப் பா நூல் நிறுவனத்துடையதாகும். 1980–81-ல் பயன்படுத்துவத, காக அந்நிறுவனம் ரூ. 5·39 கோடி விலையுள்ள சுமார் 2·3 கோடி எண்ணிக்கை பாட நூல் படிகளை அச்சிட்டது.



3. இந்நிறுவன புத்தகங்கள் 50 மொத்த விற்பனையாளர் (கூட்டுறவுச் சங்கங்கள்) மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட 2,200 சில்லறை வியாபாரிகள் மூலமாகவும் மாநில முழுவதும் விற்கப்படுகின்றன. பாட நூல்கள் உரிய காலத்தில் குறிப்பிட்ட விலையில் மாணவர்கட்குக் கிடைக்க இந்நிறுவனம் வகை செய்துள்ளது. தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக் கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் வேலையைத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்திடம் இவ்வரசு 1979 செப்டம்பரில் ஒப்படைத்தது. நோட்டுப் புத்தகங்கள் வகையில் இம்மாநிலத்துக்கு ஓராண்டுக்கு 8,000 டன் தாள் தேவை. மலிவு விலைத்தாள் வழங்குவதற்கான மைய அரசு திட்டத்தின் வரம்புகளின் கீழ் இத்தேவை முழுவதையும் நிறைவு செய்யும் அளவுக்கு மலிவு விலைத்தாள் பெற இயலாது. 1979 சூலை முதல் 1980 சூன் முடிய ஓராண்டுக்கு இம்மாநிலத்துக்கு 6,000 டன் மலிவு விலைத் தாள் ஒதுக்கப்பட்டது, எனினும் அதில் பாதி அளவுத் தாளே நோட்டுப் புத்தக உற்பத்திக்குக் கிடைத்தது. இதுவரை சுமார் ரூ. 2 கோடி மதிப்புள்ள நோட்டுப் புத்தகங்கள் விற்கப்பட்டுள்ளன. ஆலைகளிலிருந்து உரிய நேரத்தில் போதிய அளவு மலிவு விலைத் தாள் கிடைக்காத காரணத்தால் இவ்வாண்டு சில பற்றாக்குறைகள் ஏற்பட்டுள்ளன. ஆலைகளிலிருந்து மேலும் பேப்பர் வர, வர, நோட்டுப் புத்தகத் தயாரிப்பைத் தொடர்ந்து செய்து மேலும் நோட்டுப் புத்தகங்களை பாட நூல் நிறுவனம் விற்பனைக்கு அனுப்பி வரும்.

### (v) ஆசிரியர் பயிற்சி.

1. இடை நிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்களுக்குப்பயிற்சி அளித்திட, இம் மாநிலத்தில் தற்போது 79 ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. (இளஞ்சிறார் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நான்கு, ஆங்கிலோ-இந்திய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று, லேடி வில்லிங்டன் மற்றும் புனித கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் கல்லூரிக்கு ஒன்றாக உள்ள செகண்டரி கிரேடு பயிற்சி வகுப்புகள் இரண்டு ஆகியவை உட்பட) கடந்த பல ஆண்டுகளாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவில் நிலவி வருவதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஒரு ஆண்டு விட்டு மறு ஆண்டு தான் மாணவர்கள் அதுவும் குறைந்த எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். கடைசியாக 1979–80-ல் மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். 1980–81-ல் சேர்க்கப்படமாட்டார்கள்.

2. தற்போது இம்மாநிலத்தில் ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி கற்பிப்பதில் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஒன்பது செயல் பட்டு வருகின்றன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள மையங்கள் ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் 1,350 பேருக்கு

(30 தொகுதியினர்; மூன்று வாரப்பயிற்சி) ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் மறு பயிற்சி அளிக்கின்றன. கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, வேலூர், மேலூர் ஆகிய ஆறு இடங்களிலும் உள்ள மையங்கள் ஆண்டுதோறும் உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் 2,700 பேருக்கு (60 தொகுதியினர்; நான்கு வாரப் பயிற்சி) ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் மறு பயிற்சி அளிக்கின்றன. 1980—81-ம் ஆண்டில் மேலும் ஒரு மையம் தொடங்கப்படும். இம்மையங்களின் ஆசிரியர்கள் தொடக்கப்பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மறுபயிற்சி முகாம்கள் நடத்துகின்றனர்.

## (vi) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம்.

தமிழ்நாடு கல்வி நிறுவனம், தமிழ்நாடு அறிவியல் கல்வி நிறுவனம், மாணவர் கல்வித் தர மதிப்பீட்டிற்கான மாநிலப் பிரிவு ஆகிய மூன்றையும் இணைத்து 1975-ல் தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் உருவாக்கப்பட்டது. அது மேல் நிலைப் பள்ளிக் கல்வி நிலைவரை ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றைக் கவனித்து வருகிறது. இது பல ஆய்வுக் கருத்தரங்குகளையும், பயிற்சி வகுப்புகளையும், பணிப் பயிற்சிகளையும் நடத்தி வருகிறது. பள்ளிக் கல்வி இயக்குநரே இதற்கும் இயக்குநர் ஆவார்.

2. யுனிசெப் உதவியுடன் இக்குழு பின்வரும் சோதனைத் திட்டங்களை நடத்தி வருகின்றது.(1) ''தொடக்கக் கல்விப்பாடத் திட்டத்தைப் புதுப்பிக்கும் திட்டம்''. இதன்கீழ் கிராமப் புறங்களுக்கிசைந்த புதிய பாடத் திட்டம் ஒன்று ஆடுதுறை, இராணிப் பேட்டை, கரூர், ஆகிய இடங்களைச் சூழ்ந்த மொத்தம் 30 தொடக்கப் பள்ளிகளில் 1—5 வகுப்புகளில் செயல்படுகிறது. 1980—81 முதல் இத்திட்டம் மேலும் 100 பள்ளிகளுக்கு விரிவாக்கப்படும்.

(2) ''சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி'' சமுதாய மாற்றத்திற்கு பள்ளிக்கூடம் ஓர் தூண்டுகோலாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அனைத்து வயதினரின் கல்வி, சமுதாயத் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் கல்வி அளிப்பது இத்திட்டத்தின் நோக்கம். இது இப்பொழுது திரூரில் ஒன்றும், அம்மூரில் ஒன்றும், ஆக இரண்டு மையங்களில் செயல்படுகிறது. 1980—81—ல் மேலும் இரண்டு மையங்கள் தொடங்கப்படும்.

(3) (அனைவருக்கும் தொடக்கக்கல்வி அளிக்கும் திட்டத்தின் கீழ்) ''தொடக்கக்கல்வி வாய்ப்புகளை பரவலாக்குதல்'' பள்ளிகளில் சேராமல் இருக்கும் சிறுவர்களைக் குறிப்பாகக் கவனித்து அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்தவென்றே தனிவகையான தொடக்கக் கல்வி அளிப்பதற்கான பாடத் திட்டம், பாட நூல்கள் முதலியவற்றை தயாரிப்பது இத்திட்டத்தின் நோக்கம்.



3. யுனிசெப் உதவியுடன் ''இயற்கைச் சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல்'' பற்றிய பயிற்சி முகாம் ஒன்றை நடத்தி அதில் தயாரித்த திட்டங்களை இந்நிறுவனம் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் 50 ஊர்களிலுள்ள தொடக்கப்பள்ளிகளின் மூலம் செயல்படுத்திப் பார்த்து வருகிறது.

4. பிரிட்டிஷ் கவுன்சிலின் உதவியுடன் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இந்நிறுவனம் நடத்திவரும் ஆசிரியர் நிலையங்களில் ஆசிரியர்கள் கல்விப் பிரச்சினைகள் குறித்து ஒன்றாகக் கூடி விவாதித்து தங்கள் திறனை வளர்த்துக் கொள்கின்றனர். பரிமாற்றம் செய்து கொள்கின்றனர்.

5. தொடக்கப்பள்ளிகளுக்கான அறிவியல் சோதனைக் கருவிகள் அடங்கிய தொகுப்புகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்நிறுவனம் யுனிசெப்பின் உதவியுடன் பயிற்சி அளித்து வந்துள்ளது. இதுவரை அப்படிப்பட்ட பயிற்சிகள் 40 நடந்துள்ளன.

6. சென்னை, மதுரை, காரைக்குடி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஆசிரியர்களுக்கான ''தொடர் கல்வி மையங்கள்'' நன்கு நடைபெறுகின்றன. ஆசிரியர்களுக்கு ஆலோசனை தருகின்றன. ஆண்டுக்கு 4,800 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவற்றை நடத்தும் செலவில் பாதியை தேசிய கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனமும் பாதியை மாநில அரசும் ஏற்கின்றன. அனைத்து நிலை பள்ளி ஆசிரியர்களும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களும் ஆசிரியர்கள் என்ற முறையில் தங்கள் தகுதிகளை வளர்த்துக் கொள்ள இம்மையங்கள் உதவுகின்றன.

7. மைசூரில் உள்ள இந்திய மொழிகளுக்கான மைய அரசு நிறுவனம், சென்னையிலுள்ள அனைத்திந்திய வானொலி ஆகியவற்றோடு இணைந்து இந்நிறுவனம் 1979—80-ல் 8-ம் வகுப்புத் தமிழ் ஆசிரியர்களுக்கு அஞ்சல் பாட வகுப்புகளை நடத்தியது. ஆண்டுக்கு 1,500 ஆசிரியர் அதில் பயன்பெறுவர். 1980—81-ம் ஆண்டில் இத்திட்டம் 9-ஆம் வகுப்புத் தமிழ் ஆசிரியர்களுக்கு விரிவாக்கப்பட இருக்கிறது. இவைபோக 1979—80-ல் மொத்தம் ரூ. 2·20 இலட்சம் செலவில் மொத்தம் 6,000 ஆசிரியர்களுக்கு 156 பணியிருப்புப் பயிற்சிகளை இந்நிறுவனம் நடத்தியது. 1—3 வகுப்புக்களில் பயிற்றுவிக்கும் 15,000 ஆசிரியர்களுக்கு 1980—81-ல் மொத்தம் ரூ. 3·90 இலட்சம் செலவில் 300 மறுபயிற்சி வகுப்புக்களை இந்நிறுவனம் நடத்த இருக்கிறது.

8. 1980 செப்டம்பரில் தொடக்க நிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்களுக்காகத் தொடங்க இருக்கும் அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பாடமுறைகளையும் இந்நிறுவனமே நடத்தும். அப்பாட முறையின் விவரங்களை அடுத்த பிரிவில் காணலாம்.

9. 1980–81-ல் இந்நிறுவனத்துக்கு ரூ.3·50 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டவும் நிறுவன நூலகத்தை மேம்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

## (vii) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன்.

1. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் பணியாற்றி வரும் இரண்டரை இலட்சம் ஆசிரியர்களின் நலனில் அரசு இடைவிடாத நாட்டம் செலுத்தி வருகிறது.

2. ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் சுமார் 95,000 பேர்களையும் அரசுப் பணியாளர்களாக ஆக்குவதென்ற மகத்தான முடிவை அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. இந்தக் கொள்கை முடிவைச் செயலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

3. இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியருக்கான தகுதி இருந்தும் தொடக்க நிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்களாகத் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்களுக்கு இது வரை படிப்படியாக இடைநிலைப் பதவிகள் அளிக்கப்பட்டன. 1967–68 முதல் 1978–79 முடிய இவ்வாறு 42,950 தொடக்க நிலைப் பதவிகள் இடை நிலைப் பதவிகளாக உயர்த்தப்பட்டன. இனிமேல் இவ்வாறு இடைநிலைத் தகுதிபெறும் தொடக்க நிலை ஆசிரியர்களை தகுதி பெற்ற அடுத்த செப்டம்பர் 1-ம் தேதி முதல் உடனுக்குடன் (யாதொரு தனி ஆணையுமின்றி) இடைநிலைக்கு உயர்த்தி இடைநிலைச் சம்பளம் தரவேண்டும் என்ற நிலையான அரசாணை ஒன்று 1979 ஏப்ரலில் வெளியிடப்பட்டது.

4. மீதமுள்ள தொடக்கநிலை ஆசிரியர்களும் இடைநிலைத் தகுதிபெற்று இடைநிலைச் சம்பளம் பெற வகை செய்து தமிழ்நாட்டு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் மூலம் 5 மாத அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பாடமுறை ஒன்றை நடத்த அரசு ஆணையிட்டுள்ளது. 1980 செப்டம்பர், 1981 சனவரியில் நடக்கும் முதல் தொகுதி பயிற்சியில் 2,500 ஆசிரியர்கள் பயன் பெறுவர். 1981–82-லிருந்து ஆண்டுதோறும் ஏப்ரல்–ஆகஸ்டு, அக்டோபர்–பிப்ரவரி என்று இரண்டு தொகுதிகளில் 5,000 பேர் (2,500 × 2) பயன்பெறுவர். இப்பயிற்சி பெறுபவர்கள் அதன்பின் குறைந்தது 3 ஆண்டுகளாவது பணியிலிருந்தால் தான் பயன் உண்டாகையால் 54 வயதுக்குக் குறைந்த தொடக்க நிலை ஆசிரியர்களே இப்பயிற்சிக்குச் சேர்க்கப்படுவர். அந்தந்த வருவாய் மாவட்டத்திலுள்ள தொடக்க நிலை ஆசிரியர்கள் எண்ணிக்கைக்கேற்ப இப்பயிற்சியின் இடங்கள் பகிர்ந்தளிக்கப்படும்.





5. அரசுப் பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பி.டி. ஆசிரியர்கள், முதனிலைத் தமிழ் ஆசிரியர் ஆகியோருக்காகவென்றே தனியாக ஒரு தேர்வை அரசுப்பணியாளர் தேர்வாணைக்குழு நடத்தி வருகிறது. இவ்வாசிரியர்களுள் 31—3—1977 அன்றைய நிலவரப்படி ஓராண்டு தற்காலிகப் பணி (தொடர்ந்து அல்லது விட்டு விட்டு) முடித்திருந்து அந்நாளில் பணியிலிருந்தவர்களுக்கும், அந்நாளில் பணியில் இல்லாமலிருந்தால், அவ்வாறு ஓராண்டு பணி முடித்துவிட்டு, 1—4—1974 அன்று அல்லது அதற்குப் பின் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கும் ஆனது அத்தேர்வு. தேர்வு முடிந்ததும் இவர்களுடைய பணியை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## ஏ, பி, சி பிரிவுகள் இணைப்பு.

6. அரசுப் பள்ளிகளின் ஏ, பி பிரிவுகளை இணைத்து 2—11—1978 அன்று அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாணை செல்லுபடியாகக் கூடியது என டெல்லி தலைமை நீதி மன்றமும் தெரிவித்துள்ளது.

7. அரசு ஏற்று நடத்திவரும் நகராட்சிப் பள்ளிகள் 17-ன் ஆசிரியர்கள் இதுவரை சி பிரிவு ஆக இருந்தவர்களையும் ஒருங்கிணைக்க அரசு ஆணையிட்டுள்ளது. அவர்கள் பி பிரிவு பட்டியல் இறுதியில் சேர்க்கப்பட்டு பி பிரிவு வழியாக பொதுவான ஒருங்கிணைந்த பணிமூப்புப் பட்டியலில் சேர்வார்கள்.

## தனியார் பள்ளிகள்.

8. 1973 ஆம் ஆண்டு இயற்றிய தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டமும், அச்சட்டத்தின்கீழ் வகுத்த விதிகளும் 1—12—1974 முதல் அமுலுக்கு வந்தன. அந்தச் சட்டத்தையும் விதிகளையும் எதிர்த்து சிறுபான்மையினர் கல்வி நிலையங்கள் பல, உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு தொடுத்தன. அச்சட்டத்தின் பல பிரிவுகளும் விதிகளில் பலவும் சிறுபான்மையினர் கல்வி நிலையங்களுக்கு பொருந்தமாட்டா என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது குறித்து டெல்லி தலைமை நீதி மன்றத்தில் இவ்வரசு முறையீடுகள் செய்துள்ளது.

9. தனியார் பள்ளி நிருவாகங்களில் சிலவற்றால் பதவி நீக்கம் செயயப்பட்ட ஆசிரியர்களை மேல்முறையீட்டில் பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் திரும்பவும் பணியில் சேர்க்க வேண்டும் என்று ஆணையிடும்பொழுது இந்நிருவாகங்கள் அவ்

வாணையை செயல்படுத்த மறுக்கும் வருந்தத்தக்க நிலை இருக்கிறது. அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் இன்னலைக் களைந்து விதிகளைக் கண்டிப்பாக அமுல்படுத்தும் நோக்கத்துடன் அப்படிப்பட்ட பள்ளிகளின் பணியாளர்களுக்கு நேரடியாக சம்பளம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறை ஆய்வு அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியரை அல்லது பிறபணியாளரை அவர் பள்ளியிலிருந்து கூடுதல் ஆசிரியர் தேவையாக உள்ள பிற பள்ளிகளுக்கு அவர் பதவியோடு சேர்த்து மாற்றிவிடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

10. சிறுபான்மையினர் அல்லாத பிற தனியார் பள்ளிகள் எல்லாம் தங்கள் பணியாளர்களை வேலைவாய்ப்பகங்கள் மூலமாகத்தான் தேர்ந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பதவிகளில் 18 விழுக்காடு பதவிகளை தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலை சாதியினருக்கு ஒதுக்க வேண்டும் என்று ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது. பிற்பட்ட சாதியினருக்கும் அதுபோல இட ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

11. தனியார் பள்ளி ஆசிரியர்களும், அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் விடுப்பு நலன்கள் அனைத்தையும் பெறத் தகுதியுடையவர்களாவர்.

12. அரசுப் பணியாளர்கள் ஏற்கெனவே பெற்று வந்த பின்வரும் சலுகைகளை அரசு அண்மையில் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கியுள்ளது:

(1) கைத்தறி/கதர்த்துணி வாங்க அரசுப் பணத்திலிருந்து முன்பணம்;

(2) ஐந்தாண்டு பணி முடித்துள்ள முறையான பணியிலுள்ள ஆசிரியர்கள் புதிய சைக்கிள் வாங்க ரூ. 600 வரை அரசுப் பணத்திலிருந்து முன்பணம்;

(3) சி,டி, பிரிவின் கீழ் ஆசிரியர்களுள் கண்ணாடி தேவைப்படுபவர்கள் தங்கள் பணிக்காலத்தில் ஒரு முறை, கண்ணாடி வாங்கும் செலவை ரூ. 40-க்கு மேற்படாமல் அரசுப் பணத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் சலுகை;

13. உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு சைக்கிள் முன்பணம் முதலியவை இப்பொழுது உள்ளாட்சி மன்றங்களின் நிதியிலிருந்து தரப்படுகிறது. ஊராட்சி மன்ற ஆசிரியர்கள் அரசுப்பணியாளர்கள் ஆனபின் அவர்கள் அத்தகைய முன்பணங்களை அரசுப் பணத்திலிருந்தே பெறும் நிலைமை ஏற்படும்



14. உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்குரிய இலவச மருத்துவ வசதிகளை யாதொரு சிரமமின்றி அவர்கள் பெறுமாறு அரசின் உள்ளாட்சி ஊர்வளர்ச்சித்துறை தக்க கட்டளைகளை வெளியிட்டுள்ளது.

15. ஆசிரியர்களுக்கான தேசீய நலநிதியின் பண வசதியையும் பயன்படுத்தி தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வசதி தருவதற்கான திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

16. மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் தாராள ஓய்வூதிய விதிகள் தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் பணியாற்றி 1—6—1970 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிகளிலிருந்து 1—4—1972 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்கும், விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அவர்கள் ஓய்வூதியம் பணிக்கொடை முதலியவற்றை அரசுப் பணியாளர்களையொப்ப பெறுகின்றனர். ஓய்வுபெற்ற பிறகு ஓய்வூதியம் பெறுவதற்கான இறுதி ஆணை பிறப்பிக்கப்படுவதில் ஏற்படும் காலத்தாழ்வினால் அல்லலுறாமலிருக்க தற்காலிக ஓய்வூதியமும் பணிக்கொடையும் பெறவும் (அரசு ஊழியர்களைப் போலவே இவர்களுக்கும்) வழி செய்யப்பட்டுள்ளது.

17. அரசுக் கல்வி நிலையங்களல்லாத பிற கல்வி நிலையங்களில் பணி செய்பவர்களும் (அரசுப் பணியாளர்களைப் போல) தங்கள் பணிப் பதிவேட்டின் மறு பிரதி ஒன்றை தாங்களே வைத்து அந்த மறு பிரதியில் உள்ள பதிவுகளுக்கு தங்கள் மேலதிகாரிகளின் சான்றொப்பம் பெற்றுவர அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். மூலப் பணிப்பதிவேடு தொலைய நேர்ந்தால் ஓய்வூதியத்திற்கு உரிய பணிக்காலம் கணக்கிடுதல் போன்ற காரியங்களுக்காக பணிப் பதிவேட்டை மீண்டும் எளிதில் தயாரிக்க அந்த மறுபிரதி உதவும்.

18. அரசுக் கல்வி நிலையங்களல்லாத பிற (அதாவது உள்ளாட்சி மன்றம், மற்றும் தனியார்) கல்வி நிலையங்களில் பணி செய்வோருக்கு குடும்ப ஓய்வூதியச் சலுகை முன் ஆண்டுகளில் பல்வேறு கால கட்டங்களில் விரிவாக்கப்பட்டதாகும்—அரசு நிறுவனங்களல்லாத பள்ளிகள், கல்லூரிகளின் ஆசிரியர்களைப் பொறுத்தவரை 1—4—1962-லிருந்து ; தனியார் பள்ளிகளின் ஆசிரியரல்லாத பணியாளர்களைப் பொறுத்தவரை 1—4—1972-லிருந்து என்றவாறு. அவ்வாறு அவ்வப்பிரிவினருக்கு இச்சலுகை விரிவாக்கப்பட்ட நாட்களுக்கு முன்னர் இறந்துவிட்டவர்களின் குடும்பங்களுக்கும் குடும்ப ஓய்வூதியச்

சலுகையை அளித்து அரசு 13—3—1980 அன்று ஆணையிட்டுள்ளது. அரசுப் பணியாளர்களைப் பொறுத்த வரை—அரசுக் கல்வி நிலையப்பணியாளர் உட்பட—குடும்ப ஓய்வூதியத்தைப் பொறுத்த இத்தகைய சலுகை அளிக்கும் ஆணை 1979லேயே வெளியாகியுள்ளது.

19. பணியிலிருக்கும் போது ஒருவர் இறந்து விட்டால் அவரது குடும்பத்திற்கு ரூ. 10,000 வழங்குவதற்கான "குழு ஈட்டுறுதித் திட்டம்" தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துவதாகும்.

## ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி.

20. ஆசிரியர்களும் அவர்கள் குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும் பொழுது இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படுகிறது. ஆசிரியர் நாளன்று 1979–80-ல் கொடிகள் விற்பதன் மூலம் வசூல் ஆன தொகை ரூ. 5·30 இலட்சம் ஆகும். இப்பொழுது கையிருப்பில் உள்ள தொகை ரூ. 46 இலட்சம் ஆகும். 1979–80-ல் இந் நிதிப் பணத்திலிருந்து மொத்தம் ரூ. 1 இலட்சம் ஆசிரியர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் உதவித்தொகையாக வழங்கப்பட்டது.

21. 1977–78-லிருந்து ஆசிரியர்களின பிள்ளைகளுக்கு தொழில் படிப்ப படிக்க படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. பணியிலுள்ள, ஓய்வு பெற்ற, மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இப்படிப்புதவித் தொகைகள் கிட்டும். பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால் நடை மருத்துவம் ஆகிய படிப்புகளுக்கு மொத்தம் ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகள் புதிதாக அளிக்கப்படுகின்றன. இப்படிப்புதவித் தொகை ஆண்டுக்கு ரூ. 500 ஆகும். இதனைப் பெறும் மாணவர்களின் தாய், தந்தையரின் மொத்த வருமானம் ஆண்டுக்கு ரூ. 8,000-க்கு (வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப் படி போன்றவற்றை கணக்கிலெடுக்காமல்) மேல் போகக் கூடாது.

22. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் உள்ள உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், மாநில அரசு விருதுகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. விருது பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளிப் பதக்கமும், ஒரு சான்றிதழும் ரொக்கப் பணம் ரூ. 200-ம் அளிக்கப்படுகின்றன.



## III. மேல்நிலைப் பள்ளிக் கல்வி.

மேல்நிலைப் பள்ளிக் கல்வி (10+2+3 ஆண்டு முறைக் கல்வியின் +2 நிலை) தமிழ்நாட்டில் 1978–79 முதல் தொடங்கப்பட்டது. இரண்டாண்டு மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் முதலாண்டு வகுப்பு 1978–79-ல் தொடங்கப்பட்டது. இரண்டாம் ஆண்டு வகுப்பு 1979–80-ல் தொடங்கப் பட்டது.

2. பின்வரும் விவரப்படி 1979–80-ல் 1,087 மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வந்தன.

| பள்ளி வகை. | மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்ட ஆண்டு | | மொத்தம். |
|---|---|---|---|
| | 1978–79 | 1979–80 | |
| (1) | (2) | (3) | (4) |
| எஸ்.எஸ்.எல்.சி. .. | 870 | 152 | 1.022 |
| ஆங்கிலோ-இந்தியன் .. | 24 | 2 | 26 |
| மெட்ரிகுலேஷன் .. | 18 | 7 | 25 |
| தொழில்நுட்பப் பள்ளி | .. | 14 | 14 |
| | 912 | 175 | 1,087 |

1978–79-ல் உயர்த்தப்பட்ட 912 பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளி இரண்டாம் ஆண்டு வகுப்பு 1979–80 முதல் தொடங்கப்பட்டது.

3. 1980–81-ல் 150 மேல்நிலைப் பள்ளிகள் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு 5 மெட்டிரிகுலேசன் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த அனுமதிக்கப்பட்டுள்ளன.

4. 1979–80-ல் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை (நூற்றுக்கு திருத்தமாக) பின்வருமாறு இருந்தது.

| (1) | மாணவர். (2) | மாணவியர் (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| முதலாண்டு வகுப்பு . | 82,900 | 49,400 | 1,32 300 |
| இரண்டாம் ஆண்டு வகுப்பு. | 78,100 | 39,600 | 1,17.700 |
| | | | 2,50,000 |

கூடுதல் பணியாளர்கள் :

5. 1978–79'ல் மேல்நிலைப் பள்ளிகளில் கலை, அறிவியல் பாடங்களைக் கற்றுத்தருவதற்கு ஆன ஆசிரியர் தேவையில் பெரும் பகுதி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை (முழுத் தகுதி பெற்றவர்களும் பெறாதவர்களும்) மேல் நிலைப் பள்ளிகளில் நியமித்து பூர்த்தி செய்யப்பட்டது. மேற்கொண்டு தேவை யாயிருந்த அப்பாட ஆசிரியர்கள் தேவையைப் பூர்த்தி செய்ய அவ்வாண்டில் 1,300 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப் பட்டன. 1979–80-ல் மேல்நிலைப் பள்ளிகளுக்கான கூடுதல் ஆசிரியர் பதவிகள் 2,490 ஏற்படுத்தப்பட்டன. 1980–81-ல் கூடுதலாக மேலும் 1,000 பதவிகள் ஏற்படுத்தப்படும்.

6. உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளிகளிலும் உடற்பயிற்சியை கவனிக்க போதுமான ஆசிரியர்கள் இல்லாததால் 1980–81-ல் கூடுதலாக 200 உடற்பயிற்சி இயக்குநர் பதவிகள் ஏற்படுத்தப்படும்.

7. உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கல்வி விஷயங்களை நன்கு கவனிக்க வகை செய்து அன்றாட நிருவாக விஷயங்களை பகிர்ந்து கொள்வதற்காக மாணவர் எண்ணிக்கை 750 அல்லது அதற்கு மேலுள்ள உயர்நிலை/மேல் நிலைப்பள்ளி ஒவ்வொன்றிலும் ஒரு பணி மூப்புள்ள ஆசிரியரை உதவித் தலைமையாசிரியராக நியமித்து அவருக்கு மாதம் ரூ. 25 படி தர அனுமதிக்கப்பட்டுள்ளது. ஷிப்ட் முறைப்படி செயல்படும் பள்ளிகள் இரண்டாவதாக ஒரு உதவித் தலைமை யாசிரியரையும் நியமித்துக் கொள்ளலாம்.

8. 1978–79, 1979–80 ஆண்டுகளில் மேல்நிலைப் பள்ளி அறிவியல் ஆசிரியர்களில் பட்ட மேற்படிப்பு தகுதி பெற்றிராத வர்களுக்கு மொத்தம் ரூ. 18 இலட்சம் செலவில் பணியிருப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. அச்செலவை தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் ஏற்றுக்கொண்டது. பணியிருப்புப் பயிற்சிக்கு 1980–81-ல் அரசு நிதிநிலை அறிக்கையில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைக் கொண்டு முன் ஆண்டுகளில் பயிற்சி பெற்றவர்களுக்கு மீள்பார்வை வகுப்புகள் நடத்தப் படுவதோடு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களில் பட்ட மேற் படிப்பு தகுதி பெறாத பிற ஆசிரியர்களுக்கு பணியிருப்புப் பயிற்சியும் அளிக்கப்படும்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள் :

9. மொத்தம் 911 மேல்நிலைப் பள்ளிகளில் 1979–80 ஆம் ஆண்டில் தொழிற் பாடங்கள் கற்றுத்தரப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற்பாடங்கள் இருந்தன.



மேல்நிலைப்பள்ளி முதலாண்டு வகுப்பில் 1,296 தொழிற் பாடங் களும், இரண்டாம் ஆண்டு வகுப்பில் 1,143 தொழிற் பாடங் களும் கற்றுத் தரப்பட்டன.

10. மேல்நிலைப் பள்ளிகளில் 1979–80-ல் பயின்று வந்த 2½ இலட்சம் மாணவர்களில் 21 விழுக்காடு அதாவது, 51,855 பேர்கள் பின்வரும் விவரப்படி தொழிற் பாடங்களை பயின்று வந்தனர்;

| தொழிற் பாடம் எந்த பெரும்பிரிவை சார்ந்தது என்பது. | மேல்நிலைப் பள்ளி களில் 1979–80-ல் பயின்ற மாணவ மாணவியர். முதல் ஆண்டு. | இரண்டாம் ஆண்டு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. வேளாண்மை .. .. .. | 2,063 | 2,930 |
| 2. மனையியல் .. .. .. | 1,845 | 1,650 |
| 3. வாணிகத் துறை .. .. .. | 13,666 | 11,928 |
| 4. பொறியியலும் தொழில் நுட்பவியலும் | 6,624 | 6,830 |
| 5. உடல்நலம் .. .. .. | 2,589 | 1,566 |
| 6. பலவகை .. .. .. | 105 | 59 |
| | 26,892 | 24,963 |

சில உயர்நிலைப் பள்ளிகளில் 1974–75-லிருந்து 8—10 வகுப்புகளில் காம்பிரஹென்சிவ் உயர்நிலைப் பள்ளிப் பாடங்கள் என்ற பெயரில் கற்றுத் தரப்பட்ட சில தொழிற் பாடங்கள் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கே பொருத்தமானவை என்று தெரிய வந்ததால் 1980–81 முதல் அப்பாடங்களை (அவற்றின் ஆசிரியர்களுடனும், தளவாடங்களுடனும்) மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு மாற்றிவிட ஆணையிடப்பட்டுள்ளது.

11. மேல்நிலைப் பள்ளித் தொழிற் பாடங்களுக்கு ஆன ஆசிரியர் தேவையில் ஒரு பகுதி, முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுனைப் பாடங்களை கற்பித்து வந்த ஆசிரியர்களை மாற்றுவதன் மூலம் நிறைவேற்றப்பட்டது. மேற்கொண்டு தேவைக்கு மாதம் ரூ. 150 ஊதியத்தில் பகுதி நேர தொழிற் பாட ஆசிரியர்களை நியமிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இந்த பகுதி நேர ஆசிரியர்களுக்கு அவர்கள் நியமனம் ஆன முதலாண்டில் 10 மாதங்களும், இரண்டாம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் 12 மாதங்களும் ஊதியம் தரப்படும். அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலை செய்பவர்களில் பொருத்தமானவர்கள் இருக்குமிடங்களில் அவர்களும், பிற இடங்களில் வெளி நபர்களும் பகுதி நேர தொழிற்பாட ஆசிரியர்களாக நியமிக்கப் படுகின்றனர்.

12. '' படிக்கும்போதே பணம் ஈட்ட வகை செய்தல் '' என்ற கொள்கை அடிப்படையில் உருவாக்கபபட்ட '' தொழிற் பாட மானிட்டர்கள் '' திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மேல் நிலைப் பள்ளியிலும் ஒவ்வொரு தொழிற் பாடத்திற்கும் முதலாண்டு வகுப்புக்கு ஒருவரும், இரண்டாவது ஆண்டு வகுப்புக்கு ஒருவரும் ஆக இருவர் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு ஆளுக்கு மாதம் ரூ. 20 வீதம் 10 மாதங்களுக்கு ஊதியம் தரப்படுகிறது.

13. தொழிற்பாடங்களைக் கற்றுத்தர தேவையான தளவாடங்களை வாங்க 1979–80-ல் ஒவ்வொரு அரசு/அரசு அல்லாத மேல்நிலைப் பள்ளிக்கும் ரூ. 5,000/2,500 வீதம் செலவுக்கு/ மானியத்துக்கு அரசு ஏற்பளித்தது. கூடுதலாக தேவைப்பட்ட பணத்தை பள்ளிகள் தங்கள் வசதிக் கட்டண நிதியிலிருந்தும் சிறப்புக் கட்டண நிதியிலிருந்தும் எடுத்துச் செலவு செய்து கொள்ளலாம். 1979–80-லிருந்து புதிதாக தொழிற்பாடங்களை தொடங்கிய 152 மேல் நிலைப் பள்ளிகளுக்கு இதுபோன்று தளவாடச் செலவு/மானியத்திற்கு வகை செய்து 1980–81-ல் ரூ. 5.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

14. மேல்நிலைப் பள்ளியில் தொழிற்பாடங்களை எடுத்து தேறி வெளி வருபவர்கள்/ அவர்கள் பயின்ற பாடங்களின் தன்மைக்கேற்ப பட்ட வகுப்புகளிலும், பொறியியல் மற்றும் மருத்துவம் போன்ற வகுப்புகளிலும் சேர அனுமதிக்கப்படுவர்.

கட்டடங்களும் தளவாடங்களும் :

15. 1978–79-ல் தொடங்கிய 407 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வகுப்பறையும் ஒரு ஆய்வுக்கூடமும் கட்ட மொத்தத்தில் பெருந்தொகையாகிய ரூ. 6.40 கோடிக்கு அரசு ஏற்பளித்தது. 350 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு



விட்டன. மற்றவையும் விரைவில் கட்டி முடிக்கப்படும். 1979–80-ல் தொடங்கிய 70 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு இவ்வாறு கட்டடம் கட்டித்தர 1980–81-ல் ரூ. 1.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

16. மேற்சொன்ன 407 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தேவையான ஆய்வுக்கூட தளவாடங்களுக்காக மொத்தம் ரூ. 3.86 கோடி செலவுக்கு அரசு ஏற்பு அளித்துள்ளது. 1979–80-ல் புதிதாக தொடங்கிய 70 பள்ளிகளுக்கும் தளவாடங்கள் வழங்க 1980–81-ல் ரூ. 70 இலட்சம் ஏற்பளிக்கப்படும். சிறு தொழில்களை ஊக்குவிக்கும் தமிழ்நாடு அரசு நிறுவனமான '' தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் '' (சிப்காட்) மூலமாகவே இந்தத் தளவாடங்கள் வாங்கப்படுகின்றன.

17. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) மேல் நிலைப் பள்ளிகள் கட்டடங்கள் கட்டவும், தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை, பள்ளிக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்ற வரம்புக்குட்பட்டு, மானியமாகத் தரும் திட்டத்துக்கு அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் மானிய உதவிக்கு சுமார் 300 அரசல்லாத மேல்நிலைப் பள்ளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 1980–81-ல் இத் திட்டத்திற்கு ரூ. 1.57 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

18. அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு பெஞ்சு, நாற்காலி போன்ற மரச் சாமான்கள் வாங்க 40 விழுக்காடு இணை மானியம் கொடுப்பதற்காக 1980–81-ல் ரூ. 24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் போன்ற வகைகளில் பொது மக்களிடமிருந்து மீதி 60 விழுக்காடு தொகையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

19. கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக்கூட வசதிகளை மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்து '' கல்லூரி இணையங்களும் '' '' பாலிடெக்னிக் இணையங்களும் '' அமைக்க அரசு ஏற்பாடு செய்து உள்ளது.

நூலக வசதிகள் :

20. மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியைப் பெருக்க 1979–80-ல் மொத்தம் ரூ. 37 இலட்சம் செலவுக்கு ஏற்பளிக்கப் பட்டது. அரசு மேல்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 6,000 செலவுக்கும் அரசல்லாத மேல்நிலைப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் (ரூ. 2,400 என்னும் வரம்புக்குட்பட்டு) இணை மானியத்துக்கும் ஏற்பளிக்கப்பட்டது. பள்ளிகள் தரமான புத்தகங்களை தேர்ந்தெடுக்கவும், விரைவில் அவற்றை வாங்கவும், உதவி செய்யும் வகையில் இத்திட்டத்தின் கீழ் வாங்கக் கூடிய பொருத்தமான

புத்தகங்களின் பட்டியல் ஒன்று வல்லுநர் குழு ஒன்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டு பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1979-80-ம் ஆண்டு மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு நூலக புத்தகங்கள் வாங்க 1980-81ல் ரூபாய் 5·92 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## IV. அரசுத் தேர்வுகள்

அரசுத் தேர்வுத் துறை 1975 பிப்ரவரியில் ஒரு தனித் துறையாக அமைக்கப்பட்டது. அத்துறையின் வேலை அதிகரிக்கவே அன்மை ஆண்டுகளில் அது விரிவாக்கப்பட்டுள்ளது. அது ஆண்டு தோறும் சுமார் 37 பொதுத் தேர்வுகளை நடத்துகிறது. சுமார் 6 இலட்சம் பேர் அத்தேர்வுகளை எழுதுகின்றனர். உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) ஓரியண்டல் பள்ளி இறுதித் தேர்வு (ஓ.எஸ்.எல்.சி.), ஆங்கிலோ இந்திய பள்ளி இறுதித் தேர்வு (ஏ.ஐ.எஸ்.எல்.சி.), ஆசிரியர் பயிற்சி டிப்ளமோ போன்ற முக்கியமான தேர்வுகள் ஆண்டுக்கு இருமுறை நடைபெறுகின்றன. 1979-80-லிருந்து மேல் நிலை இறுதித் தேர்வையும் எட்டாம் வகுப்புத் தேர்வையும் நடத்தும் பொறுப்பும் இத்துறைக்கு தரப்பட்டுள்ளதால் அதன் பணி மேலும் விரிவாகியுள்ளது.

2. மேற்கண்ட தேர்வுகளோடு மைய அரசு தேர்வாணைக் குழு மைய அரசுப் பணிக்கு நபர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடத்தும் தேர்வுகளில் சென்னை மையத்தில் நடத்தும் தேர்வுகளையும் இத்துறையே நடத்திட உதவி வருகிறது.

<u>மேல் நிலைப் பள்ளித் தேர்வு</u> :—

3. மேல்நிலைப் பள்ளி இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான பொதுத் தேர்வை முதல் முறையாக இத்துறை 1980 ஏப்ரல்—மே மாதங்களில் நடத்த வேண்டி இருந்ததால் இவ்வாண்டு இத்துறைக்கு ஒரு முக்கியமான ஆண்டாக இருந்தது. அத்தேர்வை நல்ல முறையில் நடத்த எல்லா மட்டங்களிலும் மிகுந்த எச்சரிக்கையும் கவனமான யோசனையும் தேவைப்பட்டன.

4. மேல்நிலைப் பள்ளித்தேர்வு முறை பற்றி இயக்குநருக்கு மேல்நிலைப் பள்ளி தேர்வு வாரியம் அறிவுரை கூறுகிறது. கலை, அறிவியல் பாடங்களுக்கும், தொழிற் பாடங்களுக்கும் மாதிரி கேள்வித் தாள்களை தயாரிக்கவும் தேர்வு நடத்துவதற்கான வழிமுறைகளை வகுக்கவும், வல்லுநர் குழுக்கள் பல அமைக்கப்பட்டன. அறிவியல் பாடங்களுக்கும் தொழிற் பாடங்களுக்கும் தேர்வுத் திட்டத்தின்படி பரிசோதனைகள்





கட்டாயமாக மாணவர்கள் செய்ய வேண்டியவையாகும். அந்தந்தப் பள்ளிகளில் இருந்த ஆய்வுக் கூடத் தளவாடங்கள், பிற வசதிகள் ஆகியவற்றை மனதில் கொண்டு அந்தந்த பள்ளிக்கு ஏற்ற வகையில் அகமதிப்பீட்டு முறையில் இந்த பரிசோதனைகளுக்கான மதிப்பெண்கள் போடப்பட்டன. எழுத்துத்தேர்வுகள்-1980 ஏப்ரல்—மே மாதங்களில் நடந்தன. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வைப் போல விடைத் தாள்கள் பொது மையங்களில் மதிப்பிடப்பட்டன. மதிப்பெண்கள் மின் கணிப்பு (கம்ப்யூட்டர்) மூலம் பட்டியலிட்டு பதிவு செய்யப்பட்டு 30—6—1980 அன்று மேல்நிலைப் பள்ளித் தேர்வு முடிவுகள் வெளியாயின.

5. 1980 ஏப்ரலில் மேல்நிலைப் பள்ளித் தேர்வு எழுதியவர்கள், 1,17,013 பேர்களாவர். (தொழிற்பாட மாணவர்கள் 24,827 பேர் உட்பட). அவர்களுள் 59 விழுக்காட்டினரான 69,946 பேர்கள் தேறினர்.

6. 1980 மார்ச்-ஏப்ரலில் பத்தாண்டு எஸ்.எஸ்.எல்.சி தேர்வு எழுதிய 2,36,606 பேர்களுள் தேறியோர் எண்ணிக்கை 1,36,276, சதவீதம் 57;ஆகும். பழைய பதினோராண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை (முன் ஆண்டுகளில் எழுதிவெற்றிபெறாதவர்கள்) 1980 மார்ச்-ஏப்ரலில் எழுதியவர்கள் 14,740 பேர்களாவர்.

7. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை பாடம் பாடமாக எழுதித் தேர்ச்சி பெறலாம் என்ற பகுதி முறைத் தேர்வு அமுலுக்கு வந்துள்ளது, ஆயிரக்கணக்கான மாணவர்களுககு பயன் அளிக்கிறது. 16 வயது அடைந்தவர்களும் எட்டாவது தேர்ச்சி பெற்றவர்களும் தனியாக எஸ்.எஸ்.எல்.சி. எழுத அனுமதிக்கப்படுகின்றனர். அரசுத் தேர்வுத் துறை நடத்தும் தொழில் தேர்வுகளுக்கு 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி தேறியவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

<u>பிற தேர்வுகள்.</u>

8. இத்துறை நடத்தி வரும் பிற தேர்வுகளில் முக்கியமானவை ஆங்கிலோ-இந்திய பள்ளி இறுதித் தேர்வு (1976 ஏப்ரலில் இருந்து), மெட்ரிகுலேஷன் தேர்வு (1979 மார்ச்சில் இருந்து), ஆசிரியர் பயிற்சிப் பட்டயப்படிப்பு (டிப்ளமா), மரவேலை, நெசவு, தையல்வேலை போன்ற தொழில் நுட்ப தேர்வுகள் ஆகியவையாகும்.

<u>இ.எஸ்.எல்.சி தேர்வு.</u>

9. 14 வயது முடிந்தவர்கள் தனிப்பட்ட முறையில் கலந்து கொள்ளும் வகையில் தொடக்கப்பள்ளி இறுதி பொதுத் தேர்வு (இ.எஸ்.எல்.சி.) மீண்டும் நடத்தப்படுகிறது. 1980

பிப்ரவரியில் நடந்த இத்தேர்வில் சுமார் 2,60 பேர் கலந்து கொண்டனர். பள்ளிகளை விட்டு இடையில் நின்று விட்டவர்கள் தாமாகப் படித்தோ, தனிப் பயிற்சி பெற்றோ தங்கள் கல்வித் தகுதியை வளர்த்துக் கொள்ள இத்திட்டம் உதவும்.

## V முதியோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்

முதியோர் கல்விக்கும் பள்ளி சாராக் கல்விக்கும் 1980–81 நிதி நிலை அறிக்கையில் கூடுதல் நிதி ஒதுக்கம் அதாவது ரூ 164 இலட்சம் செய்யப்பட்டுள்ளது.

2. 1971 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி தமிழ்நாட்டில் 39.39 விழுக்காட்டினர் (ஆண்களில் 51.68 விழுக்காட்டினரும் பெண்களில் 26.83 விழுக்காட்டினரும், எழுதப்படிக்கத் தெரிந்து இருந்தனர். அக்கணக்கின்படி அனைத்திந்தியாவிலும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் விழுக்காடு 29.34 ஆகும் (ஆண்கள் 39.51 விழுக்காடு, பெண்கள் 18.44 விழுக்காடு) தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி இருந்த 4.12 கோடி மக்களுள் 1.6 கோடி பேரே எழுதப் படிக்கத் தெரிந்து இருந்தனர்.

3. மொத்த மக்கள் தொகையில் இருந்து 5 வயதுக்கு குறைந்த குழந்தைகள் எண்ணிக்கையை நீக்கிவிட்டு திருத்திய எழுத்தறிவு விகிதம் கணக்கிடப்படுகிறது. அப்படி கணக்கிட்டால் 1971 மக்கள் தொகை கணக்கின்படி தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றவர்கள் விழுக்காடு 45.40 சதவிகிதம் (ஆண்களில் 59.54 சதவிகிதம், பெண்களில் 3.92 சதவிகிதம் அனைத்திந்தியாவிலும் 34.55 சதவிகிதம் (ஆண்களில் 45.95 சதவிகிதம்) பெண்களில் 21·97 சதவிகிதம்) ஆகும்.

4. முதியோர் கல்வி முயற்சிகள் இதற்கு முன் எப்போதும் இராத அளவுக்கு மும்முரமாக இப்போது இம்மாநிலத்தில் நடைபெற்று வருகின்றன. பின்வரும் பலவகைத் திட்டங்களின் கீழ் மொத்தம் 13,000 மையங்களில் 4 இலட்சம் பேர்களுக்கு முதியோர் கல்வி அளிக்கப்படுகிறது.

### (1) கிராமப்புர (தொழிற்சார்ந்த) எழுத்தறிவுப்பு பணி.

தேசிய முதியோர் கல்வித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு மைய அரசு முழுப்பண உதவி அளிக்கிறது. இம் மாநிலத்தில் இத்திட்டத்தின் கிழ் 3.600 மையங்கள் செயல்படுகின்றன. சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, நீலகிரி தவிரப் பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 30





மையங்கள் வீதம் இம்மையங்களில் பயன்பெறும் முதியோர் சுமார் 1,07,000 ஆவர். ஒரு மாவட்டத்துக்கு ஆண்டுக்கு ரூ. 5.9 இலட்சம் வீதம் மைய அரசு மானியம் தருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புற பகுதிகளில் அருகருகே உள்ள மூன்று அல்லது (அபூர்வமாக) நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ளாக இந்த 300 மையங்களும் செயல்படுகின்றன. 30 மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளார். அந்தந்த வட்டாரத்திலுள்ள வேலைவாய்ப் பற்ற பட்டதாரி ஆசியர்கள் அல்லது பட்டதாரிகளிடையேயிருந்து மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் முதியோருக்கு கல்வி புகட்டுபவர்கள் அங்கு பகல் நேரத்தில் முறையான பள்ளி ஆசிரியர்களாக செயல்படுபவர்கள். வகுப்புகள் 10 மாதம் நடக்கின்றன. அந்தந்த இடத்துக்கு வசதியான நேரங்களில் இம்முதியோர் கல்வி வகுப்புகள் நடக்கின்றன.

### (2) மாநில அரசுத் திட்டம்.

இம்மாநிலத்தில் தன்நிறைவுத் திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட 61 ஊராட்சி ஒன்றியங்களிலும் 1980 சனவரி, பிப்ரவரி முதல் இவ்வரசு தன் பணத்திலிருந்து ஒரு முதியோர் கல்வித் திட்டத்தை அமுலாக்கி வருகிறது. ஒரு ஒன்றியத்திற்கு 100 மையஙகள் தொடங்கப்பட்டுள்ளன. நிருவாகம், மேற்பார்வைக்கு தனிப் பணியாளர் நியமிக்கப்பட்டுள்ளனர். பயிற்சிபெற்று வேலைவாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேறி வேலைவாய்ப்பின்றியுள்ள இளைஞர்கள், பால்வாடி ஆசிரியர்கள், சிவில் இராணுவ பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மகளிர் மன்ற உறுப்பினர்கள், முறையான பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரின்ருந்து நியமிக்கப்படுபவர்கள் இந்த 6,100 மையங்களிலும் முதியோருக்கு கல்வி புகட்டுகின்றனர். இம்மையங்களில் சுமார் 55 விழுக்காடு பெண்களுக்காகவென்றே தொடங்கப் பட்டுள்ளன. வேறு பலவற்றில் ஆண்களும் பெண்களும் பொதுவாக பயில்கின்றனர். இத்திட்டத்திற்கு ஒரு ஒன்றியத்துக்கு ரூ. 1.64 இலட்சம் செலவாகிறது. 61 ஒன்றியங்களுக்கும் சேர்த்து ரூ. 1.24 கோடி செலவாகும். மொத்தம் 2 இலட்சம் முதியோர் இதனால் பயன்பெறுவர்.

### (3) தனியார் அமைப்புகள்.

தமிழ்நாட்டில் தனியார் அமைப்புக்கள் 32 முதியோர் கல்விப் பணிக்காக மைய அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவை சுமார் 67,500 பேர் பயிலும் சுமார் 1,710 மையங்களை நடத்தி வருகின்றன. முதியோர் கல்வி புகட்டுவதற்கு என்று

ஆகும் செலவு முழுவதையும் நிருவாகச் செலவில் 75 விழுக்காட்டையும் மைய அரசு ஏற்க இசைந்துள்ளது. இதுவரை இந்தத் தனியார் அமைப்புகளுக்கு மைய அரசு ரூ. 31 இலட்சம் மானியம் தந்துள்ளது.

## (4) பிற திட்டங்கள்.

பிற திட்டங்களின்கீழ் நடக்கும் முதியோர் கல்விப் பணி பற்றிய தோராயமான விவரங்கள் வருமாறு:—

| திட்டம். | முதியோர் கல்வி மையங்கள். |
|---|---|
| கல்லூரி மாணவர்கள் .. .. | 1,220 |
| நேரு இளைஞர் நிலையங்கள் .. .. | 280 |
| குழந்தை நல நிலையங்கள் .. .. | 299 |

5. மைய அரசின் முழுப்பண உதவியோடு முதியோர் கல்விக்காக மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் கூடுதலாக பணியாளர்கள் நியமிக்கப்பட்டு முதியோர் கல்விப் பணி நிரு வாகம் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மாவட்டக் கல்வி அலுவலர் தரத்தில் மாவட்ட முதியோர் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மாநில அளவில் இணை இயக்குநர் ஒருவர், துணை இயக்குநர் ஒருவர் உதவி இயக்குநர் ஒருவர், அலுவலகப் பணியாளர்கள் ஆகி யோர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 1980–81-ல் செயல்படுத்தவிருக்கும் பிற திட்டங்கள்.

6. பல்வேறு எழுத்தறிவிப்புத் திட்டங்களின்கீழ் பலர் அண் மையில் எழுத்தறிவு பெற்றுள்ளனர். அவர்களுக்கு பயன் படத்தக்க எளிய நடையுள்ள வெளியீடுகளை தயாரித்து வெளி யிடுவது அவசியம். இப்பணியில் தேர்ந்தவர்களைக் கொண்டு வேளாண்மை, சிறு தொழில்கள், உடல் நலம் போன்ற பிறதுறை வல்லுநர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று வெளியீடுகளை பள்ளிசாராக் கல்வி இயக்குநர் தயா ரித்து வெளியிடுவார். இதற்காக ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. முதியோர் கல்வி மையங்கள் பயன் படுத்தத் தக்க பயிற்றும் கருவிகள், செயல்முறை விளக்க சாதனங்கள் போன்றவற்றை தயாரிக்க ஆசிரியர்களுக்கு



பயிற்சி முகாம்களும் கருத்தரங்குகளும் நடத்த கருதப்பட் டுள்ளது. இதற்காக 1980–81–ல் ரூ. 2.63 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. 1980–81–ல் 600 உயர்நிலைப் மேல்நிலைப் பள்ளிகளில் முதியோர் கல்வி/பள்ளிசாராக் கல்வி மையங்களை தொடங்க ஒரு திட்டம் உள்ளது. ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 500 அரசு மானியம் தரப்படும். அந்தந்தப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம் ரூ. 500 தர வேண்டும். பள்ளிகளில் உள்ள இட வசதிகளையும் பிறவசதிகளையும் பயன்படுத்திக் கொண்டு முதியோர் கல்வி/பள்ளிசாராக் கல்வி வழங்கப்படும்.

## பள்ளிசாராக் கல்வி.

8. பள்ளிசாராக் கல்வி மையங்கள் 1976–77–ல் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒன்றியத்திற்கு 1 வீதம் தொடங்கப் பட்டன. அவற்றின் எண்ணிக்கை 1977–78 முதல் 2 ஆகவும், 1978–79–ல் 4 ஆகவும் உயர்த்தப்பட்டது. இம்மையம் ஒவ் வொன்றும் 3 ஆண்டு வேலை செய்யும். 10 மாத வகுப்புகள் மூன்றை நடத்தும். ஒவ்வொன்றும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்காக, இத்திட்டத்தின்கீழ் 1976–77-ல்—தொடங்கிய மையம் 3 ஆண்டு பணி செய்து முடித்துவிட்டது. இம் மையங்கள் அனைத்திலும் இப்பொழுது பயில்வோர் சுமார் 49,488 பேர்கள் ஆவர். ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களில் இவ் வகுப்புகள் நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளிசாராக் கல்வி வகுப்புகளை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 மதிப்பூதியம் பெறுகின்றனர். (அரசு நடத்தும் மேற்சொன்ன பள்ளிசாராக் கல்வி மையங்களோடு ஊராட்சி ஒன்றியங்களும் தங்கள் பணத்திலிருந்து சுமார் 992 பள்ளிசாராக் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன).

9. 1980–81–ல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் புதிதாக இரண்டு பள்ளிசாராக் கல்வி மையங்கள் தொடங் கப்படும்.

10. நகர்ப்புறங்களில் பள்ளிசாராக் கல்வி திட்டங்கள் இன்னும் நல்ல முறையில் தொடங்கவில்லை. எனவே 1980–81-ல் மொத்தம் ரூ. 3 இலட்சம் செலவில் நகராட்சிப்பகுதிகளில் சுமார் 200 பள்ளிசாராக் கல்வி மையங்கள், தொடக்க முயற்சியாக துவங்கப்படவிருக்கின்றன.

[1980 ஜூலை 21

## VI கல்லூரிக் கல்வி.

தமிழ்நாட்டில் கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 1947ஆம் ஆண்டில் 24 ஆக இருந்தது தற்பொழுது 187 ஆக உயர்ந்துள்ளது. கல்லூரிகளில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை 1947-ல் 17,000 என இருந்தது. 1979–80-ல் 1,36,000 ஆக இருந்தது. 1978–79-ல் கல்லூரி மாணவர் எண்ணிக்கை 2 இலட்சம் ஆக இருந்தது. புகுமுக வகுப்பு நீங்கியதால் 1979–80 முதல் அவ்வெண்ணிக்கை 80,000 அளவுக்குக் குறைந்திருக்க வேண்டுமெனினும், கல்லூரிகளில் புதியதாகப் பல பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டு கூடுதலாக மாணவர்கள் பட்ட வகுப்புகளில் சேர்ந்ததால் 1979–80-ல் கல்லூரி மாணவர் எண்ணிக்கை முன் ஆண்டைவிட 65,000 அளவுக்கே குறைந்தது. பிறவகைக் கல்லூரிகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் 23-ம் வேறு கல்லூரிகள் 23-ம் உள்ளன. கல்லூரிகளில் படித்து வந்த மாணவர்கள், பணியாற்றிய ஆசிரியர்கள் எண்ணிக்கை ஆகியவை இணைப்பில் தரப்பட்டுள்ளன.

### புதிய பல்கலைக் கழகங்கள்.

2. தற்போது 187 கலை, அறிவியல் கல்லூரிகளில் 110 கல்லூரிகள் சென்னைப்பல்கலைக்கழகத்துடனும், 77 மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துடனும் இணைந்தவை. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒற்றை வகையைச் சார்ந்தது. பல்கலைக்கழகம் ஒன்றுடன் 30 அல்லது 40-க்கு மேற்பட்ட கல்லூரிகள் இணைக்கப் பெற்றிருத்தல் கூடாது என பல்கலைக் கழகங்கள் பற்றிய கசேந்திர கட்கர் குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே இம்மாநிலத்தில் மேலும் சில பல்கலைக் கழகங்களை நிறுவுவது இன்றியமையாதது என்பது தெளிவாகும்.

3. திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு புதிய பல்கலைக் கழகங்களை நிறுவ பல்கலைக் கழக மானியக் குழு இசைவு அளித்துள்ளது. இப்புதிய பல்கலைக் கழகங்களை அமைப்பதற்கான சட்ட வரைவு விரைவில் கொண்டு வரப்படும்.

4 இப்புதிய பல்கலைக் கழகங்கள் அமைவதன மூலம் கல்லூரிக் கல்வியின் தரம் உயர்வதோடு பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளும் ஊக்குவிக்கப்படும், இப்பல்கலைக் கழகங்களுக்கான தொடக்க நிதி ஒதுக்கமாக 1980–81ல் பல்கலைகழகத்துக்கு ரூபாய் 1 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.



1980 ஜூலை 21]

5. ஏற்கனவே அறிவித்துள்ளபடி காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவ இவ்வரசு பல்கலைக்கழக மானியக் குழுவின் ஒப்புதலைக்கோரும்.

6. அரசு முடிவு செய்துள்ளவாறு தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைப்பது பற்றி அரசுக்கு ஆலோசனை கூற வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படும்.

### தன்னுரிமையுள்ள கல்லூரிகள்.

7. கல்லூரிகள் சுய ஆட்சி உரிமைதரப் பட்டுள்ள முதல் மாநிலம் தமிழ்நாடு தான். சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள 6 கல்லூரிகளும், மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள 4 கல்லூரிகளும் ஆக மொத்தம் 10 கல்லூரிகளுக்கு இவ்வுரிமை தரப்பட்டு அதன் மூலம் கல்வித்தரம் உயர வகை செய்யப்பட்டுள்ளது. அக்கல்லூரிகளுக்கு தன்னுரிமை தர வகைசெய்து சென்னை மற்றும் மதுரை காமராஜ் பல்கலை கழகச் சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன. அக்கல்லூரிகள், தாமே பாடத் திட்டங்களை வகுக்கவும், தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை. எனினும் பட்டங்களை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே வழங்கும். உத்தரப் பிரதேச அரசுக் கல்வித்துறை அதிகாரிகள் நால்வரைக் கொண்ட குழு ஒன்று இவ்வாண்டு இங்கு வந்து இம்மாநிலத்தில் தன்னுரிமையுள்ள கல்லூரிகள் செயல்படும் முறையைக் கண்டறிந்து திரும்பியுள்ளனர்.

### தொடர் கல்வி.

8. பகல் நேர வகுப்புகளைத் தவிர 30 கல்லூரிகளில் மாலை நேர வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாலை நேர வகுப்புகளில் பயில்வோர்கள் சுமார் 6,000 பேராவர். மாலை நேரக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளுட் பட பல்வகைப் படிப்புகளும் கற்றுத்தரப்படுகின்றன. பட்ட மேற்படிப்பு வகுப்புகளுள்ள மூன்று அரசுக் கல்லூரிகளில் 1978–79லும், மேலும் ஒரு கல்லூரியில் 1980–81-லும் எம். எஸ். சி. செயல் முறை வகுப்புகளை மாலையில் நடத்த வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வசதியைப் பயன்படுத்தி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் எம். எஸ். சி. தேர்வு எழுத தகுதி பெற்றுக் கொள்ளலாம். 1979–80-லிருந்து மார்க்சிய சிந்தனையில் ஒன்றும், பகுத்தறிவு சிந்தனையில் ஒன்றுமாக இரண்டு சான்றிதழ்ப் படிப்புகளை மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது.

9. மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் புகுமுக வகுப்பு, பி.ஏ. பி.காம்., பி.ஜி.எல். பிஎட்., எம்.ஏ., எம்.காம்., வகுப்புகளுக்கு அஞ்சல் வழிப்பாட முறைகளை நடத்தி வருகிறது. இந்த அஞ்சல்முறை வகுப்புகளைப் பலரும் விரும்பிப் படிக்கின்றனர். இவற்றை நடத்தி வரும் இப்பல்கலைக் கழகத் துறையைத் தொடங்கி எட்டு ஆண்டுகள் ஆகின்றன. 1979–80-ல் 45,634 பேர்கள் இவ் வகுப்புகளில் படித்து வந்தனர்.

10. மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் "அனைவரும் படிக்கத்தக்க பல்கலைக் கழக வகுப்புகளையும்" தொடங்கியுள்ளது. இந்தியக் குடிமக்களுள் தமிழநாட்டிலும் பாண்டுச்சேரியிலும் வசிப்பவர்களும் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுமான எவர் வேண்டுமானாலும் இந்த வகுப்பில் சேரலாம். இவ்வகுப்பு தொடங்கி மூன்றாவது ஆண்டான 1979–80-ல் 9.685 பேர்கள் பயின்றனர்.

11. அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் 1979–80-ல் பி.எட். பி.காம்., சட்டப்படிப்பு ஆகிய அஞ்சல் முறைப் பாடங்களைத் தொடங்கியுள்ளது. அவ்வாண்டு அப்படிப்பில் சேர்ந்தவர்கள் 6.847 பேர்களாவர். 1980–81லிருந்து வேறு பல வகுப்புகளுக்கும் அப்பல்கலைக்கழகம் அஞ்சல் முறை வகுப்புகளைத் தொடங்கியுள்ளது.

12. இம்மாநிலத்தில் கலை, அறிவியல் கல்லூரிகளின் தேவைக்கு இப்பொழுது உள்ள 187 கல்லூரிகள் போதுமானவையாகும். சில குறிப்பிட்ட நகர்ப்புற கல்லூரிகளில் சேருவதற்கே மாணவர்கள நெருக்கி முன்வருகின்றனர். ஆனால் கிராமப் புறப் பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் இப்பொழுது பல இடங்கள் காலியாக இருந்து வருகின்றன. 1979–80-ம் ஆண்டில் இம்மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் 11,297 இடங்கள் (ஆங்கிலப் பாட மொழி 8,524, தமிழ்ப்பாடமொழி—2,773) காலியாக இருந்தன. எனவே மிகச் சிறப்பான காரணங்கள் இருந்தாலொழிய புதிய கல்லூரிகளைத் தொடங்க அனுமதிப்பதைவிட தற்போதுள்ள கல்லூரிகளில் உள்ள இடங்கள் அனைத்தையும் பயன்படுத்த வகை செய்வதே ஏற்புடைத்தாகும்.

## கல்வித் தரம் மேம்பாடு.

13. கடந்த சில ஆண்டுகளாக அரசுக் கலலூரிகளில் கல்வித் தர மேம்பாட்டுக்கே முதன்மை அளிக்கப்படுகிறது. அரசுக் கல்லூரிகளில் பட்ட, மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் கூடுதலாக 18 புதிய படிப்புகளைத் தொடங்க 1978–79-லும் 51 புதிய படிப்புகளை (46 பட்டப்படிப்புகளும் 5 பட்ட மேற்படிப்பு வகுப்புகளும்) தொடங்க 1979-80–லும் ஏற்பளிக்கப்



பட்டது. 1980 81–ல் புதிய பாட வகுப்புகளைத் துவக்க ரூ. 7 லட்சமும், புதிய பட்ட மேற்படிப்பு வகுப்புகளைத் துவக்க ரூ. 3 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரி ஒரு பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சி நிலையமாக உயர்த்தப்படும்

14. அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக் கல்லூரிகளில் ஆய்வுக்கூட வசதிகள் பெருக்கப்படுகின்றன. இதற்காக 1977–78-ம் ஆண்டில் ரூ. 5 லட்சமும் 1978–79-ல் ரூ. 6 லட்சமும் ஒதுக்கப்பட்டன. 1980–81-ல் ரூ. 10 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிகளில் மாணவர்கள் பயன்படுத்திட பாட புத்தகங்களைக் கொண்ட புத்தக நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

15. கல்லூரி மாணவர்கள் வசதிக்காக உணவருந்தும் இடம் சிற்றுண்டிச்சாலை, மிதி வண்டி நிறுத்துமிடம் ஆகியவை படிப்படியாக அமைக்கப்படுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் இவ்வகையில் அரசுக் கல்லூரிகளுக்கு ரூ. 13 லட்சமும் தனியார் கல்லூரிகளுக்கு ரூ. 5 லட்சமும் செலவிட ஏற்பளிக்கப்பட்டது. அரசுக் கல்லூரிகளில் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் விளையாட்டுக்கருவிகள் வாங்கவும் 1979-80-ல் ரூ. 2 லட்சம் ஏற்பளிக்கப்பட்டது.

16. அரசுக் கல்லூரிக் கட்டடங்கள், மாணவர் விடுதி கட்டடங்கள் ஆகியவற்றிற்காக 1980-81–ல் ரூ. 22 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. (புதிய வேலைகளுக்கான ரூ. 25 லட்சமும், முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1980–81–ல் ஆகும் செலவுக்காக ரூ. 7 லட்சமும்). அரசுக் கல்லூரிகளில் ஆசிரியைகளுக்கு குடியிருப்புகள் கட்டித்தர 1979–80-ல் ரூ. 2 லட்சம் ஏற்பளிக்கப்பட்டது.

17. கல்லூரிகளில் வசதிகளைப் பெருக்கிட ஆகும் செலவில் ஒரு பகுதியை கல்லூரி நிர்வாகம் ஏற்குமானால் மற்றப் பகுதியை ஈடுகட்ட பல்கலைக் கழக மானியக் குழு நிதி உதவி செய்கிறது. கட்டடச் செலவானால் 50 விழுக்காட்டையும், புத்தகம், தளவாடம் விளையாட்டுத் திடல் மேம்பாடு ஆகிய இனங்களானால் 25 விழுக்காட்டை நிருவாகம் ஏற்கவேண்டும். இத்திட்டத்தின்கீழ் பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து 43 அரசுக் கல்லூரிகள் பண உதவி பெற வகை செய்து அதற்கான மாநில அரசுப் பங்குத் தொகைக்கு அரசு ஏற்பளித்துள்ளது.

18. கல்லூரி ஆசிரியர் கல்வித்தர உயர்வுக்கான பல்கலைக் கழக மானியக் குழுவின் திட்டத்திற்கு இவ்வரசு ஏற்பளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆராய்ச்சிப் படிப்புக்குச் செல்லும் ஆசிரியர்களின் சம்பளச் செலவை மாநில அரசும் அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்படுபவர்களுடைய சம்பளச் செலவை பல்கலைக் கழக மானியக் குழுவும் ஏற்கின்றன.

19. இது தவிர மாநில அரசே செயல்படுத்தும் தர உயர்வுத் திட்டம் ஒன்றும் உள்ளது. கல்லூரிலிருந்து புகுமுக வகுப்பு நீங்கி விட்டதால் உபரியான ஆசிரியர்களுள் தெரிந்தெடுக்கப் பட்டவர்கள் எம். பில். படிப்புக்கு அனுப்பப்படுகின்றனர். அவர்களுக்கு அரசு சம்பளம் தருகிறது. 1979-80-ல் 494 ஆசிரியர்கள் இவ்வாறு எம். பில். படிப்புக்கு அனுப்பப்பட்டனர்.

20. பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி. எச். டி.) பட்டம் பெறுவதற்காக அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள் முகமையில் அனுப்பப்பட்டு வருகின்றனர். 1973-74 முதல் இத்திட்டத்தின் கீழ் 26 பேர் டாக்டர், நிலை ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்—1979-80-ல் அனுப்பிய எழுவர் உட்பட, கருத்தரங்குகளிலும் மறு பயிற்சி வகுப்புகளிலும் கலந்துகொள்ள ஆசியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

21. கல்லூரி ஆசிரியர்களுள் சிறந்த பணியாற்றுபவர்களை போற்றுவதற்காக 1979-80 முதல் கல்லூரி ஆசிரியர்களுக்கும் மாநில அரசு விருதளிக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் கல்லூரி ஆசிரியர்கள் 10 பேருக்கு விருதளிக்கப்படும். ஆளுக்கு ரூ. 1,000 ரொக்கப் பரிசு, வெள்ளிப்பதக்கம், சான்றிதழ் ஆகியவை அளிக்கப்படும்.

## படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப் பணமும்.

22. படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் மிக முக்கியமானவை வருமாறு.—

| திட்டம். | 1979-80 ம் ஆண்டில் புதிதாக தந்த படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை. | 1979-80 ம் ஆண்டில் (புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை) மொத்த எண்ணிக்கை. | 1980-81 ம் ஆண்டில் வரவு—செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள பணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் லட்சத்தில்) |
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம். | 1,524 | 3,880 | 3? |
| தேசியகடன் படிப்புதவித் தொகைத் திட்டம். | 1,445 | 6,719 | 40 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய தேசிய படிப்புதவித் தொகை. | 70 | 202 | 2 |



1978-79 முதல் தமிழ்நாட்டில் மேல்நிலைப்பள்ளிக் கல்வி முதலாண்டு வகுப்பு தொடக்கப்பட்டுள்ளதால் அவ்வாண்டு முதல் மேற்கண்ட திட்டங்கள் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

23. 1978—79-ம் ஆண்டின் இறுதியில் தேசியப் படிப்புதவித் தொகை, பள்ளி ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு வழங்கப்படும் தேசிய படிப்புதவித் தொகை ஆகிய இரண்டு திட்டங்களின் கீழ் என்ன அளவுக்குச் செலவாகி வந்ததோ அந்த அளவு செலவை மாநில அரசே 1979—80 முதல் ஏற்று வருகிறது. அந்த அளவுக்கு மேல் கூடுதலாக ஆகும் செலவை மட்டுமே 1979-80-லிருந்து மைய அரசு ஏற்று வருகிறது. தேசிய கடன் படிப்புதவித் தொகையின் செலவு முழுவதையும் அவ்வரசு ஏற்று வருகிறது. விடுதலைப் போர் வீரர்கள் குழந்தைகள், பணியிலிருக்கும் பொழுது இறந்துவிடும் அரசுப் பணியாளர் குழந்தைகள். மற்றும் பர்மா, இலங்கை, வியட்நாம், உகண்டா, ஜாயிரே அகதிகளின் குழந்தைகள், போன்றவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டங்களும் உள்ளன. தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடிகள் மற்றும் பின்தங்கிய வகுப்புகளைச் சார்ந்த மாணவர்கள் அரிசன நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை ஆகிய துறைகளிலிருந்து படிப்புதவித் தொகைகள் பெற்று வருகின்றனர்.

24. ஆண்டுதோறும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்களுள் மேல் நிலைப் பள்ளித் தேர்வில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அவர்கள் மேல் படிப்பில் சேர உதவுவதற்காக ரூ.300 உதவிப் பணம் வழங்கப்படுகிறது. அப்பிரிவினைச் சார்ந்த கிறிஸ்த்தவர்களுக்கும் இவ்வுதவிப் பணம் உண்டு. பெற்றோர் வருமானம் எவ்வளவாயிருப்பினும் இவ்வுதவிப் பணம் உண்டு. தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடிகள் என்ற வகையில் அவர்களுக்குக் கிட்டும் மற்றெல்லாச் சலுகைகளுக்கும் பண உதவிகளுக்கும் மேலாக இந்த உதவி கிட்டும்.

25. 1977-78-லிருந்து பட்ட வகுப்புகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் பழங்குடிகள் ஆகியோருக்கு அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் எவ்வளவாயிருப்பினும் முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

## கல்லூரிகளில் தமிழ்ப்பயிற்று மொழி.

26. 1966—67ஆம் ஆண்டிலிருந்து புதுமுக வகுப்பில் கலைப் பாடங்களில் * மிழும் பயிற்றுப் மொழியாக ஆனது. 1967-68ம் ஆண்டிலிருந்து பி.ஏ., வகுப்பிலும், 1968-69ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் அறிவியல் பாடங்களிலும், 1968—70 ஆம் ஆண்டிலிருந்து பி.எஸ்.சி., வகுப்பிலும் தமிழ் பாட மொழியாக

ஆனது 1979–80-லிருந்து மேலூரிலுள்ள அரசு கலைக்கல்லூரியில் வரலாறு எம். ஏ. வகுப்பில் தமிழ் பாட மொழி ஆக்கப் பட்டுள்ளது. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பி. ஏ., பி. எஸ்சி., வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப் பணம்/புத்தகப்படியாக ஆண்டுக்கு ரூ. 180 தரப்பட்டு வருகிறது. புதுமுக வகுப்பு மாணவர்களுக்கு புத்தகப்படியாக ஆண்டுக்கு ரூ. 50 தரப்பட்டு வந்தது. 1975–76 முதல் 1977–78 முடிய இந்த உதவிப் பணம் பாடப் புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள், எழுது பொருட்கள் ஆகியவைகளாகத் தரப்பட்டு வந்தது. 1978–79 முதல் இதை மாற்றி மீண்டும் பணமாகவே தரப்படுகிறது. 1979–80-ல் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு பட்ட வகுப்பில் பயின்ற 16,130 பேர்களுக்கு இவ்வுதவிப் பணவகையில் ரூ. 27 இலட்சம் செலவானது. 1980–81-ல் இப்பணிக்கு ரூ. 28 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

27. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இது வரை 899 பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. சிறப்புச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களைக் கொண்ட 13 தொகுப்பு களையும் அது வெளியிட்டுள்ளது. 899 பாட நூல்களில் 173 மொழிபெயர்ப்பு நூல்களும் 726 மூல நூல்களும் ஆகும். 31—3—1980 வரை இத் திட்டத்திற்கு ரூ. 1.13 கோடி செலவாகி யுள்ளது.

கல்லூரிக்கல்வி இயக்க வட்டார அலுவலகங்கள்.

28. தனியார் கல்லூரிகளுக்கு அரசு மானியம் தரும் முறை 1977 ஜூன் முதல் மாற்றிய மக்கப்பட்டுள்ளது. அதன்படி அக்கல்லூரிகளுக்கு, முன் மானியங்கள் தரப்பட்டு தணிக்கை பின்னர்ச் செய்யப்படுகிறது. இயக்குநர் அலுவலகம் சென்னை யிலிருந்து செயல்படும் நிலையில் மேற்கண்ட முறையை அமு லாக்குவதில் சில சிரமங்கள் ஏற்பட்டன. முறைகளைச் சீராக்கி, அதிகாரங்களை பரவலாக்கி அரசின் திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தும் நோக்கத்துடன் இயக்குநரகத்துக்கு வட்டார அலுவலகங்களைத் தொடங்குவது தேவையெனத் தெரிந்தது. அவ்வாறே 1979–80-ல் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஐந்து ஊர்களில் அந்தந்த வட்டாரத்துக்கு ஒன்று என்ற வகையில் கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அலுவலகங்கள் 5 ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு வட்டார அலுவலகத்திலும் ஒரு துணை இயக்குநர் பிற பணியாளர்களுடன் வேலை செய்து வருகிறார். அந்தந்த வட்டாரத்திலுள்ள அரசு மற்றும், தனியார், கல்லூரி கள் செயற்பாட்டை வட்டார துணை இயக்குநர்கள் மேற்பார்க் கின்றனர். தனியார் கல்லூரிப் பணியாளர்களுடைய மாதாந்திர



சம்பளப் பட்டியல்களுக்கு ஒப்புதலளித்தல், மானியத்திற்கு கணக்கிலெடுத்துக் கொள்ளக்கூடிய ஆசிரியரல்லாத பணி யாளர் எண்ணிக்கை போன்ற தனியார் கல்லூரிகளைப் பற்றிய அனைத்து விஷயங்களையும் அவர்கள் கவனிக்கின்றனர். அரசு மற்றும் தனியார் கல்லூரித் தணிக்கை, அரசுக் கல்லூரி களைப் பொறுத்த வேறு சில விஷயங்கள், ஆகியவற்றையும் வட்டார துணை இயக்குநர்கள் கவனிக்கின்றனர்.

கல்லூரி மாணவர் ஆசிரியர் நலக் குழுக்கள்.

29. பல்வேறு கோரிக்கைகளுக்காக மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்களில் மாணவர்கள், ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் ஆகியோர் அடிக்கடி கிளர்ச்சி நடத்தி வந்துள்ளனர். அக் கிளர்ச்சிகளால் ஏற்படும் கோளாறுகளைத் தவிப்பதற்கான அமைப்புகளை உருவாக்கி மாணவர்கள் நலனைக் காத்து அவர்கள் குறைகளைப் போக்கவும், ஆசிரியர் மற்றும் பணி யாளர் பற்றிய சிக்கல்களைத் தீர்க்கவும் வழிகாணும் நோக்கத் துடன் ஒவ்வொரு கல்லூரியிலும் பின்வரும் குழுக்களை அமைத்திட அரசு ஆணையிட்டுள்ளது.

1. ஆசிரியர் நலக் குழு
2. ஆசிரியரல்லாத பணியாளர் நலக் குழு.
3. மாணவர் நலக் குழு.

ஒழுங்கு நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் முன் போலவே உரிய விதிகளைப் பின்பற்றிச் செயல்பட வேண்டும். பிற விஷயங்களைப் பற்றி எழும் பிரச்சினைகளை உரிய குழுவின் முன் வைக்கவேண்டும். நிதிப் பிரச்சினைகளைத் தவிர பிற பிரச்சினைகளைக் குழுக்களே இறுதியாக முடிவு செய்யலாம். பிரச்னைகள் உடனுக்குடன் கல்லூரி முதல்வர் வட்டார கல்லூரிக் கல்வி துணை இயக்குநருக்குத் தெரிவிப்பார். துணை இயக்குநர் உரிய குழுவைக் கூட்டி பிரச்னையைத் தீர்ப்பார். நிதி பற்றிய பிரச்னைகளை மட்டும் குழு கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைக்கும். இயக்குநர் அவற்றை பல்கலைக் கழகங்களுடன் கலந்து ஆலோசித்து அரசின் இறுதி முடிவுக்கு அனுப்பி வைப்பார்.

கல்லூரி ஆசிரியர்கள் நலன்.

30. பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்கள் அரசு மற்றும் தனியார்கலை, அறிவியல் கல்லூரிகள், சட்டக்கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகளும், பல்தொழில் பயிலகங்களும்; மற்றும் சென்னை, மதுரை காமராஜ், அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் ஆகிய அனைத்தின் ஆசிரியர்களுக்கும் 1—4—1974

முதல் அமுலாக்கப்பட்டன. பணப்பயன் 1—1—1977 முதல் தரப்பட்டது, சமுதாயப் பணிப் பள்ளிகள், கீழ்த்திசைப் படிப்புக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவற்றுக்கும் அவை விரிவாக்கப்பட்டுள்ளன. ரூ. 700—40—1,100—50—1,300—இ.பி.—50—1,600 என்ற சம்பள விகிதத்தில் ரூ. 1,100 என்ற நிலையில் பேராசிரியர்களின் தொடக்க சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கல்லூரி முதல்வர்களுக்கு ரூ. 1,200—1,900 என்னும் சம்பள விகிதம் தரப்பட்டுள்ளது.

31. 1—12—1977 அன்று, மூன்றாண்டு அல்லது அதற்கு மேலும் பணி செய்திருந்த விளக்குநர்கள் (டெமான்ஸ்ரேட்டர்) பயிற்றுநர்கள் டியூட்டர்) ஆகியோருள் அவரவர் துறையில் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ., எம்.காம்., போன்றவை) தகுதி பெற்று இருந்தவர்களுக்கெல்லாம் 1—12—1977 முதல் துணைப் பேராசிரியர்கள் பதவி அளிக்கப்பட்டு அப்பதவிக்கான பல்கலைக் கழக மானிய குழு சம்பள விகிதம் தரப்பட்டுள்ளது. இனி மேல் இந்தத் தகுதிகளை 3 அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் பணியும், பட்ட மேற்படிப்புத் தகுதியும்) பெறுபவர்களுக்கும் இந்தச் சலுகை அவரவர் அத்தகுதியை அடையும் நாள் முதல் கிடைத்துவிடும், 1980 சனவரி முடிய இவ்வாறு 1,697 விளக்குநர்கள்/பயிற்றுநர்கள் உதவிப் பேராசிரியர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர்.

32. அதுபோல உதவிப் பேராசிரியர்களில் 1—4—1980 அன்றைய நிலவரப்படி 10 ஆண்டுகள் பணி செய்து முடித்து இருந்தவர்கள் அனைவரும் ரூ. 700—40—1,100—50—1,300 இ.பி. 50—1,600 சம்பள விகிதத்தில் பேராசிரியர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர். 1—4—1980-க்கு முன்னரே 10 ஆண்டு அல்லது அதற்கு அதிகமான காலம் பணி செய்திருந்த உதவிப் பேராசிரியர்கள் அன்றைய தேதியில் ரூ. 1,100-க்கு குறைவாகச் சம்பளம் பெற்று வந்தார்களானால் அவர்கள் சம்பளம் அந்நாள் முதல் ரூ. 1,100 ஆக நிர்ணயிக்கப்படும்—அவர்கள் உதவிப் பேராசிரியர் பதவியில் பணி செய்த காலம் என்னவாயிருந்தாலும் சரி பேராசிரியர்களாக உயர்த்தப்பட்ட பின்னரும் அவர்கள் உதவிப் பேராசிரியர்களாக இருக்கும்பொழுது விரிவுரையாற்றிய மணி நேர அளவுக்கே பணி நேரம் இருக்கும். இனிமேல் 10 ஆண்டு உதவிப் பேராசிரியாகப் பணி செய்து முடித்தவர்கள் மட்டுமே பேராசிரியராகப் பதவி உயர்வு பெறுவர். உதவிப் பேராசிரியர்கள் இவ்வாறு பேராசிரியர்களாவதால் ஒரே துறையில் பல பேராசிரியர்கள் இருக்கும் நிலை ஏற்பட்டால் அவர்களுள் பணி மூப்பு மற்றும் தகுதி இரண்டின் அடிப்படையில் துறைத் தலைவர் நியமிக்கப்படுவார். மேற்கண்ட அடிப்படையில் உதவிப் பேராசிரியர்களைப் பேராசிரியர்களாக உயர்த்தும் பணி நடைபெற்று வருகிறது.



## தனியார் கல்லூரிகள்.

33. தனியார் கல்லூரி ஆசிரியர்கள் முழுமையாகவும் காலத்தாழ்வின்றியும் சம்பளம் பெற்றுவர வகை செய்யும் நோக்கத்துடன் தனியார் கல்லூரிகளுக்கு மானியம் வழங்குவதில் புதிய முறையை 1—6—1977 முதல் அரசு செயல்படுத்தியுள்ளது. சம்பளம் வழங்கும் வகையில் அக்கல்லூரிகளுக்கு ஏற்படும் செலவில் நிகரப் பற்றாக்குறை முழுவதையும் அரசே ஏற்று வருகிறது. தனியார் கல்லூரி நிர்வாகங்களின் நிதிச் சிக்கல்களை இப்புதிய முறை பெருமளவுக்குத் தீர்த்துள்ளது. ஆசிரியர்களுக்கும் ஒழுங்காகக் காலத்தாழ்வின்றிச் சம்பளம் கிடைத்து வர வகை செய்யப்பட்டுள்ளது.

34. மேலும் கல்லூரிக் கல்வி இயக்கத்தின் வட்டார அலுவலகங்கள் ஐந்தின் மூலம் தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்கவும் அரசு ஆணையிட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு மாதமும் தனியார் கல்லூரி முதல்வர் பணியாளர் சம்பளப் பட்டியலை தயாரித்து வட்டார துணை இயக்குநருக்கு அனுப்புவார். அவர் விவரங்களைச் சரி பார்த்து தானும் கையொப்பமிட்டு கல்லூரிச் செயலருக்கு முழுத் தொகைக்கான மானியத் தொகை பில்லை அனுப்புவார். கல்லூரியின் பணியாளர் சம்பளத் தொகைக்கணக்கு எந்த வங்கியில் வைக்கப்பட்டுள்ளதோ அந்த வங்கியின் மூலமாக கல்லூரிச் செயலர் அந்த பில்லை கருவூலத்துக்கு அனுப்பிப் பணம் பெற்றுக் கொள்வார். ஒவ்வொரு மாதமும் கடைசி வேலை நாள் அன்று (அல்லது வேறு நாளில் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டால் அந்த நாளில்) அந்த வங்கி அக்கல்லூரிச் சம்பளத் தொகைக் கணக்கிலிருந்து ஒவ்வொரு பணியாளருடைய தனிப்பட்ட கணக்கிற்கும் அவரவர் அந்த மாதம் பணியிலிருந்த காலத்துக்கு சேர வேண்டிய சம்பளத் தொகையை மாற்றி அப்பணியாளர் கணக்கில் அத்தொகையை வரவு வைக்கும்.

35. மேற்கண்டவாறு சம்பளத்திற்காகத் தரும் மானியத்திற்கு மேலாக சம்பளம் அல்லாத பிற செலவினங்களில்—அதாவது பழுது பார்த்தல் சில்லரைச் செலவினம் எழுது பொருள் போன்றவற்றில்—அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களுக்கு 60 சத விதம் சம்பளமல்லாத செலவின மானியமும் தனியார் கல்லூரிகளுக்குத் தரப்படுகிறது.

36. தமிழ்நாட்டிலுள்ள தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஓய்வூதியம் போன்ற ஓய்வு காலப் பலன்களை 1—4—1962 முதல் பெற்று வருகின்றனர். 1—4—1976 முதல் அப்பலன்கள் ஆசிரியரல்லாத பணியாளருக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன. தனியார் கல்லூரிகளிலுள்ள ஆசிரியரல்லாத பணியாளர்கள் ஓய்வு பெறும் வயது 55-லிருந்து 58 ஆக உயர்க்கப்

பட்டுள்ளது. பணியிலிருக்கும்பொழுது ஒருவர் இறந்துவிட்டால் அவர், குடும்பத்துக்கு ரூ. 10 000 தர வகை செய்யும் ''குழு ஈட்டுறுதித் திட்டம்'' (ஏற்கெனவே தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளின் பணியாளர்களுக்கு விரிவாக்கியிருந்ததைப் பின்பற்றி) தனியார் கல்லூரிப் பணியாளர் அனைவருக்கும் 21—6—1979 முதல் விரிவாக்கப்பட்டுள்ளது.

37. ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1—4—1978 முதல் மூன்றாவது சம்பளக் குழுவின் சம்பள விகிதங்கள் அமுலாக்கப் பட்டுள்ளன. தனியார் கல்லூரிகளில் தேர்வு நிலைப் பதவி களை ஏற்படுத்தும் ஆணையும் வெளியாகியுள்ளது.

38. தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கான விடுப்பு வசதிகளும் தாராளமாக்கப்பட்டுள்ளன. மருத்துவ விடுப்பு முன்னர் 12 மாதங்கள் என்று இருந்தது. இப்பொழுது 18 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. 1—1—1980 முதல் அரசுப் பணியாளர் களுக்கு உயர்த்தப் பட்டுள்ளதுபோல் தனியார் கல்லூரிகளின் பணியாளர்களுக்கும் தற்செயல் விடுப்பு 20 நாட்களாக உயர்த்தப் பட்டுள்ளது.

39. 1976 ஆம் ஆண்டு நிறைவேறிய '' தனியார் கல்லூரிகள் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தில் '' செய்யவேண்டிய திருத்தங்கள் பற்றி ஆழ்ந்து பரிசீலனை செய்து அறிவிக்க ஒரு குழு அமைக்கப் பட்டுள்ளது. ஆசிரியர்கள், பிற பணியாளர்கள், நிருவாகங்கள் ஆகிய மூவகையினரின் சங்கங்களுக்கும் அக்குழுவில் பிரதிநிதித் துவம் தரப்பட்டுள்ளது.

40. தமிழ்நாடு தனியார் கல்லூரி (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் 38 (1) பிரிவின்கீழ் 1979–80ல் தீர்ப்பாயமாக ஒரு மாவட்ட செசன்ஸ் நீதிபதி (இரண்டாம் நிலை) நியமிக்கப் பட்டுள்ளார்.

## பணிப் பாதுகாப்பு.

41. கல்லூரிகளில் 31—3—1977 அன்று பணியிலிருந்த எந்த ஆசிரியராயினும் சரி, பிற பணியாளராயினும் சரி, பின்வரும் காரணங்களினால், அதாவது—

(1) 1979–80 முதல் புகுமுக வகுப்பு நீங்கி விடுவதால்; அல்லது

(2) கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கை குறைந்து ஆசிரியர் வேலைப் பளு குறைவதால்;

பதவியிழக்க நேராது என்று அரசு முதலிலேயே பாதுகாப்பு அளித்து இருந்தது. பாட வகுப்புகள் மூடப்படுவதாலும் புதிய கல்வித் திட்டத்தை அமுல்படுத்துவதாலும் ஏற்படக் கூடிய



வேலை நீக்கத்துக்கும் இப்பாதுகாப்பு பின்னர் விரிவாக்கப்பட்டது மேலும் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் 26—2—1979 அன்றும் அதுவரையிலும் நிரந்தரமான பணியிடங்களில் நியமிக்கப் பட்டவர்களுக்கும் அப்பாதுகாப்பு தரப்பட்டது. இப் பாதுகாப்பைச் செயல்படுத்த—பல்கலைக் கழகங்களுடன் கலந்து புதிய பாட வகுப்புகள் தொடங்குவது, மாணவர்களுக்கு சிறப்புத் தனிப் பயிற்சி வகுப்புகள், வகுப்புகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச மாணவர் எண்ணிக்கை குறைப்பு, கல்லூரி மையத் திட்டம், மேற்படிப்புக்கு கல்லூரி ஆசிரியர்களை அனுப்புதல், தனியார் கல்லூரிகளில் உபரியாக உள்ள ஆசிரியர்களை அவர்கள் பணியைப் பயன்படுத்தக் கூடிய தனியார் அல்லது அரசுக் கல்லூரி களுக்கு மாற்றம் செய்தல்—போன்ற பல வழிகளிலும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது, எடுத்து வருகிறது.

## சட்டக் கல்வி.

42. சென்னைச் சட்டக் கல்லூரி மாணவர் தொகை 1968–69-ல் 1,045 ஆக இருந்தது. 1979–80-ல் 2,161 ஆக (முழுநேரப் பட்டப் படிப்பு வகுப்புகளில் 1,183, மாலை நேர வகுப்புகளில் 942, எம்.எல். வகுப்புகளில் 36) உயர்ந்துள்ளது. குற்றவியல் சட்டம், ஒப்பந்தச் சட்டம், சொத்துரிமைச் சட்டம் ஆகிய பாடங்களில் எம்.எல். வகுப்புகள் நடைபெறுகின்றன. இக்கல்லூரியின் முழுநேரப்பட்டப் படிப்பின் மூன்றாண்டு வகுப்பு களிலும் ஒவ்வொரு பிரிவில் தமிழே பாடமொழியாக இருக்கிறது. அவ்வாறு 1979–80-ல் தமிழ் மூலம் சட்டம் பயின்றுவந்த மாண வர் மொத்த எண்ணிக்கை 107 ஆகும்.

43. மதுரையில் 1974–75-ல் ஒரு சட்டக் கல்லூரி தொடங் கப்பட்டது. 1979–80-ல் அக்கல்லூரியில் மொத்தம் 692 மாண வர் பயின்று வந்தனர்—முழுநேர வகுப்புகளில் 478 பேர்களும், மாலை நேர வகுப்புகளில் 214 பேர்களும், 1979–80-ல் திருச்சி யில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு சட்டக் கல் லூரிகள் தொடங்கப்பட்டன. அவற்றில் அவ்வாண்டு பி.ஜி.எல். முதலாண்டு வகுப்பில் கல்லூரிக்கு 120 பேர்கள் வீதம் மாணவர் சேர்க்கப்பட்டனர். 1980–81-ல் கோயம்புத்தூர் சட்டக் கல் லூரிக்குக் கட்டடம் கட்ட ரூ. 5 லட்சமும், மதுரை சட்டக் கல்லூரி மாணவியருக்கு விடுதி கட்ட ரூ. 1.50 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

## VII. தொழில் நுட்பக் கல்வி.

தொழில் நுட்பக் கல்விக்காக 1980–81-ல் சுமார் ரூ. 9.60 கோடி (கட்டடங்கள், கடன்கள் ஆகியவற்றுக்கான செலவுகள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ் 6 பொறியியல்

[1980 ஜூலை 21

கல்லூரிகளும் 40 தொழில் நுட்ப பயிலகங்களும் (மகளிர் பயிலகங்கள் மற்றும் தனித்தொழில் பட்டயம்—டிப்ளமா—கல்வியகங்கள் எட்டும் உள்பட). 14 (தொழிற்பாட) மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. 1979—80-க்கு முன் இந்த (தொழிற்பாட) மேல்நிலைப் பள்ளிகள் தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டு வந்தன.

2. 1980—81-ல் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை மேற்சொன்ன ஆறு பொறியியற் கல்லூரிகளிலும் திருச்சிராப்பள்ளி வட்டார பொறியியல் கல்லூரியில் தமிழ்நாட்டுக்குரிய பங்கிலும் சேர்த்து பட்ட வகுப்புகளில் 1,350 பேர்கள், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பட்டயப் படிப்புகளில் 6,500 பேர்கள் (தொழிற்பாட) மேல் நிலைப் பள்ளிகளில் 840 பேர்கள் என்பதாகும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின்கீழ் உள்ள பொறியியற் கல்லூரிகளில் பி.ஈ. பட்டப் படிப்பு முதலாண்டு வகுப்பில் உள்ள இடங்களில் 5 இடங்கள் கலப்பு மணத் தம்பதிகள் குழந்தைகளுக்கு ஒதுக்கப்படும். பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் சேர பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் மனுச் செய்வதைக் கருத்திற்கொண்டு 9 பல் தொழில் பயிலகங்களில் (அரசு 3, தனியார் 6) சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை ஒவ்வொன்றிலும் 120-லிருந்து 180 ஆக உயர்த்த அரசு ஏற்பளித்துள்ளது.

பிற பட்டயப் படிப்பு நிலையங்களைப் பொறுத்த வரை எத்தனை மாணவர் சேர்க்கலாமென முன்னர் ஏற்பளித்துள்ளதோ அதற்கு மேலாக 10 விழுக்காடு சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. 1979—80-ஐ விட 1980—81-ல் கூடுதலாகச் சேர்க்கப்படவிருக்கும் மாணவர்கள் பட்ட வகுப்புகளில் சுமார் 130-ம் பட்டய வகுப்புகளில் சுமார் 1,600-ம் ஆகும்.

3. இம்மாநிலத்திலுள்ள பிற 7 பொறியியற் கல்லூரிகளின் விவரம் வருமாறு :—

<u>பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் :</u>

1. பொறியியல் கல்லூரி, கிண்டி.

2. அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பவியல் கல்லூரி, கிண்டி.

3. கட்டடவியல் மற்றும் நகரமைப்புப் பள்ளி.

4. சென்னை தொழில் நுட்ப கல்வியகம்", குரோம்பேட்டை.



1980 ஜூலை 21]

<u>அண்ணாமலைப் பல்கலைக்கழகம்—</u>

5. பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை :

<u>தன்னுரிமையுள்ள நிறுவனங்கள்—</u>

6. வட்டார பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

7. இந்தியத் தொழில் நுட்பக் கல்வியகம், கிண்டி.

<u>பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம் :</u>

4. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் 4—9—1978 அன்று நிறுவப்பட்டது. இப் பல்கலைக் கழகத்துக்கு மானியங்கள் தருவதற்காக 1980—81-ல் ரூ. 1.80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>பிற புது நிலையங்கள்.</u>

5. 1979—80-ல் புதியதாக அரசு பல்தொழில் பயிலகம் ஒன்று கிருஷ்ணகிரியில் தொடங்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு பல்தொழில் பயிலகம் தொடங்குவதற்கான முன்னோடி நடவடிக்கை 1980—81-ல் எடுக்கப்படும்.

6. 1980—81-ல் பின்வரும் புதிய பட்டயப்படிப்பு நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்படும் :—

(1) சேலம் குமாரபாளையத்தில் நெசவுத் தொழில் நுட்பக் கல்வியகம். அதில் பட்டயம் மற்றும் சான்றிதழ் வகுப்புகளில் மொத்தம் சுமார் 70 மாணவர் சேர்க்கப்படுவர்.

(2) பெரியார் மணியம்மை கல்வி மற்றும் அறப்பணிக் கழகம், சென்னை என்னும் நிறுவனம் தஞ்சாவூரில் தொடங்கவிருக்கும் மகளிர் பல்தொழில் பயிலகம். இதில் வாணிக நடைமுறை, கட்டடவியல் உதவியாளர் படிப்பு, மின்னணுப் பொறியியல் ஆகிய மூன்று பாடங்களில் பாடத்துக்கு 30 பெண்கள் வீதம் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(3) கோயம்புத்தூரில் தனியார் பல்தொழில் பயிலகம் ஒன்று.

7. திருச்சிராப்பள்ளியில் உணவுத் தொழில் கல்வியகம் ஒன்றைத் தொடங்குவதென்ற மைய அரசு வேளாண்மை அமைச்சகத்தின் கோரிக்கைக்கு இவ்வரசு தன் இசைவை 1—2—1980 அன்று தெரிவித்துள்ளது. அக்கல்வியகம் தன்னுரிமையுள்ளதாக இருக்கும். அது தொடங்கி 5 ஆண்டுகளுக்கு பின்னர் இருந்து அதன் செலவை இவ்வரசு ஏற்க இசைந்துள்ளது.

பல்கலைக் பாடப் பிரிவுகளைத் தொடங்குதல்.

8. நான்காவது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் தொழில் நுட்பக் கல்விக்காக இருக்கும் வசதிகளை மேம்படுத்துவதிலும் தளவாடங்கள், நூலகங்கள், கட்டடங்கள் முதலிய வகைகளில் தர உயர்வு எய்துவதிலும் கவனம் செலுத்தப் பட்டது. தொழில் துறையின் தேவைகளுக்கேற்ப வேலை வாய்ப்பிற்கிசைந்த வகையில் பல்துறைப்படுத்தப்பட்ட புதிய பாடங்கள் பல தொடங்கப்பட்டுள்ளன. இப்பொழுது 17 பட்டப் படிப்புகளும் 52 பட்ட மேற்படிப்புகளும் அந்நிலையிலுள்ள பட்டயப் படிப்புகளும் உள்ளன. பல்தொழில் பயிலகங்களில் பட்டயம், பட்டய மேற்படிப்பு, சான்றிதழ் ஆகிய மூவகைப் படிப்புகளும் சேர்த்து 80 பாடமுறைகள் உள்ளன.

புதிய திட்டங்கள்.

9. 1980–81 பின்வரும் புதிய பாடமுறைகள் தொடங்கப் படவிருக்கின்றன :—

அதாவது, நாகர்கோவிலிலுள்ள அரசு பாலிடெக்னிக்கில் மின்னணுவியல் பட்டயப் படிப்பு, மதுரையிலும் கோயம்புத்தூரிலும் உள்ள மகளிர் பாலிடெக்னிக்குகளில் நவ நாகரீக ஆடைகளை உருவாக்குதலும் தைத்தலும் பற்றிய வகுப்புகள்; கோயம்புத்தூர் அரசு பாலிடெக்னிக்கில் வார்ப்படப் பொறியியல் பட்டய மேற்படிப்பு ; சென்னை ராமகிருஷ்ணா தொழிற் பயிற்சிக் கல்வியகத்தில் நவீன விவசாயக் கருவிகள் பற்றிய பட்டயப் படிப்பு ; இராசபாளையம் பி.ஏ.சி. இராமசாமி இராஜா பாலிடெக்னிக்கில் குளிர்பதனம் மற்றும் குளுமை வசதி பட்டயப் படிப்பு ; ஆகிய புதிய பாடமுறைகள் 1980–81-ல் தொடங்கப்படவிருக்கின்றன.

10. கோயம்புத்தூரிலுள்ள அரசு தொழில் நுட்பவியல் கல்லூரியில் பவர்சிஸ்டம் மற்றும் செய்தமுறை மின்னணுவியல் ஆய்வுக்கூடம், பையோ எஞ்சினியரிங் துறை, தொழில் முறை மின்னணுவியல் ஆய்வுக்கூடம், ஆகியவற்றை அமைத்தல் ; அங்குள்ள மகளிர் பாலிடெக்னிக்கில் காட்சி-கேள்வி சாதனம் மற்றும் படிபெருக்கும் தொழில் நுட்ப மையம் அமைத்தல், ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். மாமல்லபுரத்திலுள்ள கட்டடவியல் மற்றும் சிற்பப் பள்ளியின் உற்பத்திப் பிரிவுக்கு கூடுதல் பணியாளர் நியமிக்கப்படுவர். சீர்காழி ஸ்ரீநிவாசா சுப்பராயா பாலிடெக்னிக்கிற்கும் கும்பகோணம் கலை கைத்தொழில் கல்லூரிக்கும் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.



தன்னுரிமை

11. இதுவரை 4 பாலிடெக்னிக்குகளுக்கு முழுமையாகவும் 5-க்கு ஒரு சில பாடத்துறைகளிலும் தன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. மேலும் மூன்றுக்கு முழுமையாகவும் மேலும் ஒன்றுக்கு சில துறைகளைப் பொறுத்தவரையிலும் தன்னுரிமை வழங்கப் படும்.

பயிற்சிதுறை வளர்ச்சி.

12. ஆண்டு தோறும் பொறியியற் கல்லூரிகள், மற்றும் பாலிடெக்னிக்குகளின் ஆசிரியர்களில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அரசின் செலவில் உயர் படிப்பு, பயிற்சி ஆகியவற்றுக்கு அனுப்பப் பட்டு வருகின்றனர்.

வணிகவியல் பாடங்களில் தேர்வு.

13. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வரவு-செலவுக் கணக்கியல் வணிகவியல் பயிற்சி, வங்கியியல் போன்றவற்றிற்கு ஆண்டு தோறும் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் பேருக்குத் தேர்வு நடத்தும் அதிகாரியுமாவார்.

தன்னுரிமையுள்ள சில நிறுவனங்கள்.

14. தன்னுரிமையுள்ள வேறு சில நிறுவனங்களில் உள்ள தொழில் நுட்பக் கல்வி வசதிகளைப் பற்றிய விவரங்கள் வருமாறு :—

(1) வட்டாரப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி,— இப்பொழுது இக் கல்லூரியில் ஆண்டு தோறும் 200 மாணவர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதிலுள்ள இடங்களில் பாதி இம்மாநில மாணவர்களுக்கும் பாதி பிற மாநில மாணவர்களுக்கும் தரப்படுகிறது. தொடரும் செலவை மைய அரசும் மாநில அரசும் பாதி பாதியாக ஏற்றுக்கொள்கின்றன. தொடராச் செலவு முழுவதையும் மைய அரசே ஏற்கிறது. இக் கல்லூரியில் நடக்கும் பட்டமேற்படிப்பு வகுப்புகள் அனைத்துக்கும் சென்னைப் பல்கலைக் கழகம் தன்னுரிமை வழங்கியுள்ளது.

(2) மாநில கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிலையம், திருச்சிராப்பள்ளி—இது 42 மாதங்கள் கொண்ட (27 மாதம் நிலையப் பயிற்சியும், 15 மாதம் வேலை அனுபவமும்) பாடமுறைகளை நடத்தி வருகிறது. (1) கட்டடக் கலையும் உள் அமைப்பும், (2) மின் கருவிகளும் முறைகளும், (2) நெசவும்

நவீன அழகு வேலைப்பாடும் என்ற மூன்று பாடமுறைகள் அங்கு உள்ளன. ஒவ்வொரு பாடமுறைக்கும் 20 மாணவர் சேர்க்கப்படுகின்றனர். மாநில அரசு இந் நிறுவனத்துக்கு ஆண்டு தோறும் ரூ. 2.50 இலட்சம் மானியம் தருகிறது.

(3) கணித அறிவியல் நிறுவனம்—அடையாற்றில் உள்ள கணித அறிவியல் நிறுவனம் மாநில மைய அரசுகளின் உதவி யோடு செயல்படுகிறது. இதற்கு இவ்வரசு ஆண்டுதோறும் ரூ. 3.5 இலட்சம் மானியம் தருகிறது. இது அடிப்படைக் கணிதம், மற்றும் கணிதம் சார்ந்த இயல்பியல் துறைகளில் உள்ள ஆராய்ச்சி நடத்தி வருகிறது.

## அறிவியல் அருங்காட்சியகம்.

15. அடையாற்றில் பெரியார் பெயரில் அறிவியல் அருங்காட் சியகம் ஒன்றை நிறுவ அரசு ஏற்பளித்துள்ளது.

## VIII. விளையாட்டு உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

''277. கல்வி-ஜி. விளையாட்டும் இளைஞர் நலனும்'' என்ற தலைப்பின் கீழ் 1980—81-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பெரும் தொகையான ரூ. 2.74 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் தேசிய மாணவர் படைக்கு ரூ. 1.40 இலட்சமும், தேசிய பணிப் பிரிவுக்கு ரூ. 45 இலட்சமும், சாரண சாரணியருக்கு ரூ. 2 இலட்சமும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறைக்கு ரூ. 80 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் கவனத்திற்கு கொள்ள வேண்டியது பின்வருவதாகும். அதாவது : (i) கல்வி நிலையங்களில் உடற் பயிற்சி ஆசிரியர்கள், உடற்பயிற்சி இயக்கு நர்கள் ஆகியோர் சம்பள வகையிலும், (ii) கல்வி நிறுவனங்கள் தங்கள் பணத்திலிருந்தோ, அல்லது மாணவர்களிடமிருந்து வசு லிக்கும் விளையாட்டுக் கட்டணத்திலிருந்தோ, விளையாட்டு உடற் பயிற்சிக்கு ஆகும் செலவு வகையிலும் கணிசமான தொகைகள் செலவு ஆகின்றன. அத்தொகைகள் பட்ஜெட்டில் தனியாகக் காட்டப்படாமல் பணியாளர் சம்பளம் முதலிய பொதுத் தலைப்புகளின் கீழ் சேர்க்கப்பட்டு விடுகின்றன வாகையால் அவை மேற்சொன்ன ரூ. 2.74 இலட்சத்தில் அடங்கியவை அல்ல.

## விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி.

2. அனைத்துப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வி கட் டாயமாகும். எந்தெந்த நடுநிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனரோ அந்தந்த நடுநிலைப் பள்ளிகளில்



6—8 வகுப்புகளிலும், அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் 6—9 வகுப்புகளிலும் உடற்பயிற்சிக் கல்வி தேர்வுக்கான பாடங் களில் ஒன்றாகும். இந்தப் பள்ளிகள் அனைத்திலும் 6—9 வகுப் புகளில் படிக்கும் மாணவர்கள் உடற்பயிற்சிக் கல்வியில் பெறும் மதிப்பெண்கள், அடுத்த உயர் வகுப்பிற்கு அனுப்புவதற்கான கொள்கைகளை வகுக்கும் போது கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

மாணவர்களுக்கு உடற் பயிற்சி அளிப்பதற்கு என உடற் பயிற்சிக் களரிகளை சுமார் 15 பள்ளிகளில் தொடங்க ஏற் பளிக்கப்பட்டுள்ளது.

3. 1979 செப்டம்பரில் விளையாட்டு மற்றும் இளைஞர் நல னைக் கவனிப்பதற்காகத் தனித் துறை ஒன்று அமைக்கப்பட் டுள்ளது. மாணவர்களிடையேயும் பிற இளைஞர்களிடையே யும் விளையாட்டு, போட்டிப் பந்தயங்கள், இளைஞர் நலப் பணிகள் ஆகியவற்றை ஊக்குவிக்கப் பல்வேறு நடவடிக்கைகள் இத்துறையால் தொடங்கப்பட்டுள்ளன.

4. 1980—81-ல் இத்துறை இவ்வகையில் தொடங்கவிருக்கும் புதிய திட்டங்கள் பலவாகும்.

## விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்கு தனி விடுதிகளும்.

5. சென்னை (ஒய்.எம்.சி.ஏ. உடற் பயிற்சிக் கல்லூரி), கோயம்புத்தூர் (பெரிய நாய்க்கன் பாளையம் மாருதி உடற் பயிற்சிக் கல்லூரி), அண்ணாமலை நகர் (இராணி சீதை ஆச்சி மேல்நிலைப் பள்ளி) ஆகிய மூன்று இடங்களில் விளையாட்டுப் பள்ளிகள் தொடங்கப்படும். மாணவர் அங்கு தங்கிப் படிக்க படிப்புதவித் தொகைகள் வழங்கப்படும். விளையாட்டுக்கான உடை, உபகரணங்களுக்கான படியும் வழங்கப்படும். சென்னைப் பள்ளியில் 75 பேரும் மற்ற இரு பள்ளிகளில் பள்ளிக்கு 50 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

6. திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, போன்ற இடங்களில் அவ்வட்டாரத்திலுள்ள உயர்நிலைப்பள்ளி மாணவர் களில் விளையாட்டுக்களில் வல்லவர்களாக உள்ள மாணவர்கள் தங்க தனி விடுதிகள் அமைக்கப்படும். அவர்களுக்கு விளையாட் டுக்கான உடை, உபகரணங்களுக்கான படியும் தரப்படும். முழு நேர உடற்பயிற்சி இயக்குநர்/பயிற்றுனர் ஒருவரும் நியமிக்கப் படுவார். இவ்வாறு விளையாட்டுப் பள்ளிகளையும் விளை யாட்டு வீரர்களுக்கான விடுதிகளையும் தொடங்குவதன் மூலம் விளையாட்டுக்களில் திறமையுள்ளவர்களை முளையிலேயே அடை யாளம் கண்டு ஊக்குவிக்கலாம் என்று கருதப்படுகிறது.

7. பள்ளிகளில் விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகப் பின்வரும் திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன;

(1) நடுநிலைப் பள்ளிகளில் விளையாட்டுக்களை ஊக்குவிப்ப காக 50 கல்வி மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் நடுநிலைப்பள்ளி மாணவர்கள் கலந்துகொள்ளத்தக்க விளையாட்டுப் போட்டிகளை கல்வி மாவட்ட அளவில் நடத்துவதற்காக ரூ.1,000 தரப்படும்.

(2) ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தனி விளையாட்டுப் போட்டி: ஒவ்வொரு 10 பள்ளிகளுக்கும் தனியே ஒருவிளையாட்டுப் போட்டி நடத்த இத்துறை ரூ. 1,000 பண உதவி தரும். இப்போட்டிகளின் பயனாக குடியரசு நாளன்று மாவட்ட அளவில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வோரின் சாதனைத் திறன் உயரும்.

மாணவரல்லாத இளைஞர்களிடையே விளையாட்டுகளையும் இளைஞர் நலப் பணிகளையும் ஊக்குவித்தல்.

விளையாட்டு அரங்கங்கள், நீச்சல் குளம் ஆகியவை அமைக்க மானியங்கள்—

8. தஞ்சாவூர், தருமபுரி, புதுக்கோட்டை, பெரியார் மாவட்டத் தலைநகரங்களில் தற்பொழுது விளையாட்டு அரங்கங்கள் இல்லை. அவற்றில் விளையாட்டு அரங்கங்கள் கட்ட மானியம் தருவதற்காக 1980—81-ல் ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

9. ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் அந்தந்த வட்டாரத்தில் சிறு விளையாட்டரங்கங்கள் அமைக்க அரசு மானியம் தரப்படும். உள்ளாட்சி மன்றங்கள் தங்கள் நிதியிலிருந்தும் கொஞ்சம் பணம் போட்டு சிக்கனமாக விளையாட்டுத் திடல் அமைக்கும். இவ்வாறு 25 விளையாட்டரங்கங்கள் கட்ட மானியம் தருவதற்காக ரூ. 5·15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

10. 1980-81-ல் மாவட்ட தலைமை இடம் ஒன்றில் நீச்சல் குளம் அமைக்க ரூ. 2 இலட்சம் இணை மானியமாகத் தர நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற நடவடிக்கைகள்—

11. ஊராட்சி ஒன்றியங்கள் 374—ல் ஒவ்வொன்றுக்கும் கிராமப்புற (மாணவரல்லாத) இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டி நடத்த ரூ. 250 மானியம் தரப்படும். அவற்றுள் சுமார்



100 ஒன்றியங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள தனியார்கள் பண உதவியுடன் ஒன்றியத்துக்கு 3 விளையாட்டு வீரர் விருதுக் கோப்பைகளை நிறுவ முன்வரக்கூடும் என்று கருதப்பட்டு அவ்வாறு முன்வரும் ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் ரூ. 1000 கொடுத்து இரு விருதுக் கோப்பைகளை நிறுவ மொத்தம் ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. இளைஞர் நல வளர்ச்சிக்கான பின்வரும் திட்டங்களும் 1980—81-ல் மேற்கொள்ளப்படவிருக்கின்றன:—

(1) கிராமப்புற இளைஞர் மன்றங்கள் 300 தொடங்க நிதியுதவி தரப்படும். சீருடை, விளையாட்டுக் கருவிகள், சுவர்ச் செய்தித்தாள் ஆகியவற்றுக்காக ஒவ்வொன்றுக்கும் சுமார் ரூ. 880 உதவி அளிக்கப்படும்.

(2) மலைப் பகுதிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் பயணம் செய்வது போன்ற ஊக்கமிகு நடவடிக்கைகளுக்காக இளைஞர் களுக்கு உதவி செய்யக் கருதப்பட்டுள்ளது. மலைப் பகுதிகளுள் நான்கில், ஒரு பகுதிக்கு 30 பேர் வீதம் இவ்வாறு பயணம் செய்ய நிதி உதவி தரப்படும். ஒவ்வொரு குழுவும் 10 நாள் வழிநடைப் பயணம் மேற்கொள்ளும். இதற்கு உதவிப்பணம் தரப்படும்.

(3) இரண்டு இடங்களில் இளைஞர் விடுதிகள் தொடங்க 25 விழுக்காடு அரசு மானியம், ஒரு விடுதிக்கு ரூ. ஒரு இலட்சத் திற்கு மிகாமல் தரப்படும்.

சென்னையில் விளையாட்டுப் பயிற்றுநர்களுக்கான வட்டார மையம்.

13. சென்னையில் பெரியார் சாலை (பூந்தமல்லி நெடுஞ் சாலை) அருகில் சேத்துப்பட்டு நேரு பூங்காவை ஒட்டி ஒரு விளையாட்டுத் தலைமைக் கேந்திரத்தையும், விளையாட்டு பயிற்றுநர்களுக்கான வட்டார மையத்தையும் அமைக்க ஏற்கெனவே அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக 9 காணி (216 கிரவுண்டு) நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் விளையாட்டு பயிற்றுநர்கள் கேந்திரம், விளையாட்டு வீரர்கள் விடுதி, விளையாட்டு இளைஞர் நல இயக்குநரகத் தலைமை அலுவலகம், ஓட்டப் பந்தய மைதானம், கால்பந்து, ஹாக்கி, கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களுக்கான வசதிகள் ஆகியற்றை அமைப்பதற்காக ரூ. 15 லட்சம் 1980—81-ல் ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கும் இளைஞர் மன்றங்களுக்கும் இலவசமாக வழங்க ஒரு மாதாந்திர சஞ்சிகை ஒன்றை வெளியிடவும் இத்துறை கருதியுள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம்—

14. தமிழ்நாட்டைச் சேர்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோருள் முதுமைக் காலத்தில் வறுமையால் வாடுபவர்களுக்கும், அப்படிப்பட்டவர்கள் தங்கள் குடும்பங்களை வறுமையில் வாடவிட்டு மறைந்திருந்தால் அவர்கள் குடும்பங்களுக்கும், உதவிப் பணம் ஆக ஓய்வூதியம் தரும் திட்டம் ஒன்றுக்கு 1—4—1978 முதல் அரசு ஏற்பளித்துள்ளது. இந்த உதவிப் பணம் பெறத் தெரிந்தெடுப்பவர்களுக்கு அவர்கள் ஆயுட் காலம் முடிய மாதம் ரூ. 75 ஓய்வூதியம் தரப்படும். முதலில் 3 ஆண்டுகளுக்கு இவ்வுதவிப் பணம் வழங்கப்பட்டுப் பின்னர் அவ்வப்பொழுது புதுப்பிக்கப்படும். இதுவரை 25 விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

15. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையில் தற்பொழுது 22,000 மாணவர் மாணவியர்களைக் கொண்ட 50 முது நிலைப் பிரிவுகளும், 69,500 மாணவ-மாணவியர்களைக் கொண்ட 676 இளநிலை பிரிவுகளும் உள்ளன. இவற்றில் 4,000 மாணவியரைக் கொண்ட முதுநிலைப் பிரிவுகள் 5-ம், 5,400 மாணவியரை கொண்ட இளநிலைப் பிரிவுகள் 54-ம் அடங்கும். தேசிய மாணவர் படைக்கு இவ்வரசு 1980—81-ம் ஆண்டில் செலவிடவிருக்கும் தொகை ரூ 140 இலட்சமாகும். இத்துறையின்கீழ் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள் அமைச்சுப் பணியாளர்கள் ஓட்டுநர்கள், கடைநிலை ஊழியர்கள் முதலியோர் எண்ணிக்கை 1,100 ஆகும்.

16. ஆண்டுதோறும் டில்லியில் குடியரசு நாளில் வழங்கப்படும் தேசிய மாணவர் படை அனைத்திந்திய விருதை அது ஏற்படுத்தப்பட்ட 1962-ம் ஆண்டிலிருந்து இதுவரை எட்டு தடவை தமிழ்நாட்டு தேசிய மாணவர் படைப்பிரிவே பெற்றுவந்துள்ளது. 1979-ம் ஆண்டு குடியரசு தினவிழாவில் தமிழ்நாட்டு தேசிய மாணவர்படை முதுநிலையைச்சார்ந்த மாணவியே சிறந்த அனைத்திந்திய மாணவர் படை மாணவியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

## தேசிய பணித் திட்டம்.

17. மாணவர்களுள் விருப்பம் உள்ளவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தை நாட்டுப் பணியில், குறிப்பாக கல்விப் பணியில் செலவிட வாய்ப்பளிக்கும் நோக்கத்துடன் தேசிய பணித் திட்டம் தொடங்கப்பட்டது. இதைச் செயல்படுத்த ஒரு மாணவர்க்கு ஓராண்டுக்காகும் செலவாகிய ரூ. 60-ல் ரூ. 35-ஐ மைய அரசும் ரூ. 25-ஐ மாநில அரசும் ஏற்கின்றன. இத்திட்டத்தில் பங்கேற்ற கல்லூரி மாணவர் எண்ணிக்கை 1976—77-ல் 20,000 ஆக இருந்தது. 1979—80-ல் 40,000 ஆக உயர்ந்துள்ளது. 1980—81 முதல் மேல் நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்படுகிறது. அவ்வாறு மேல் நிலைப் பள்ளிகளில் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாணவர் எண்ணிக்கை 10,000 என்றும் சிறப்பு முகாம்களில் பங்குபெறுவோர் எண்ணிக்கை 5,000 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இத்திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்களில் பாதி பேர் விடுமுறைக் காலங்களில் சுமார் 10 நாள் அளவுக்கு கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தி கிராமப்புற வளர்ச்சிப் பணிகளை (குறிப்பாக எழுத்தறிவிக்கும் பணியை) செய்கின்றனர். இத்திட்டத்திற்கு 1980—81 ஆம் ஆண்டில் ரூ. 45 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



## IX கலைப் பணிகள்.

### (1) இசை, நடனம், நாடகம், ஓவியம் முதலியவை.

இயல் இசை நாடக மன்றம் :

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் அரசின் முழு நிதி உதவியுடன் இயங்கி வரும் தன்னாட்சி உரிமையுள்ள ஒரு நிறுவனமாகும். அது நடனம் நாடகம், இசை ஆகிய கலைகளைப் பேணி வருகின்றது.

2. இம் மன்றத்தின் பணிகளில் முக்கியமானவை—திறம் மிக்க சிறந்த கலைஞர்களை ஊக்குவிப்பது; சிறந்த கலைஞர்களுக்கு '' கலைமாமணி '' என்ற பட்டமளித்து சிறப்பிப்பது இம்மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கும், பிற மாநிலங்களிலிருந்து இம்மாநிலத்திற்கும் போய்வரும் கலைக்குழுக்களை கவனிப்பது போன்றவையாகும். 1980 ஆகஸ்டு மாதத்தில் இம்மன்றத்தின் வெள்ளி விழா கொண்டாடப்படும்.

நாடகப் பள்ளி :

3. இளம் மாணவர்களுக்கு நாடகக் கலையில் தனிப் பயிற்சி அளிக்கவும் அதனுடன் பொதுக் கல்வி கற்பிக்கும் வழிவகை செய்து நாடகத்தில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவிக்க நாடகப் பள்ளி ஒன்று தொடங்கப்பட இருக்கிறது. இப்பள்ளிக்கான பாடத்திட்டத்தை குழு வகுத்துத் தந்துள்ளது. அந்தப் பாடத்திட்டத்துக்கு அப்பள்ளியை அமைப்பதற்காக ஆலோசனை தர அமைத்துள்ள குழுவின் ஏற்பினைப்பெற்று பள்ளியை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## அரசுக் கலைஞர்கள்

### அரசுக் கலைஞர்கள் :

4. 1979 ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாளன்று சிறந்த கலைஞர்கள் எட்டு பேருக்கு ''அரசுக் கலைஞர்'' என்ற விருது வழங்கப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 1,000 வீதம் ஐந்தாண்டுகளுக்கு மதிப்பூதியம் வழங்கப்பெறும்.

### வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் :

5. வறுமையால் வாடும் ஏறத்தாழ 900 கலைஞர்கள் மாதந்தோறும் இத்திட்டத்தின் கீழ் ரூ. 75 ஓய்வூதியம் பெற்றுவருகின்றனர். இத்தொகை 1—4—1980 முதல் ரூ. 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஓய்வூதியம் முதற்கண் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகின்றது. ஓய்வூதியம் பெறும் கலைஞர்கள் வறுமை நிலையிலேயே தொடர்ந்திருந்தால், மீண்டும் மூன்று ஆண்டு, மூன்று ஆண்டாக புதுப்பிக்கப்படுகிறது. அவ்வாறு ஓய்வூதியம் பெறும் கலைஞர் இறந்துவிட்டால் அவரது மனைவிக்கும் அவர் நிதி நிலையை பொறுத்து, இறக்கும் வரை மூன்றாண்டுகளுக்கொருமுறை புதுப்பித்து இந்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 1980—81-ல் மேலும் 100 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஓவியம்—நுண் கலைக் குழு :

6. ஓவியம் முதலிய நுண்கலைகளைப் பேணி வளர்க்கும் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக்குழு தன்னாட்சியுரிமையுள்ள நிறுவனமாகும். அது ஆண்டு தோறும் ரூ. 2 லட்சம் மானியம் பெறுகிறது. இக்குழு ஆண்டுதோறும் கலைக் கண்காட்சிகள் நடத்தி சிறந்த ஓவியங்களுக்கும் சிற்பங்களுக்கும் ரொக்கப் பரிசு அளிக்கிறது. உதகமண்டலத்திலும் கோயம்புத்தூரிலும் அது ஓவியக்கண்காட்சிகளை நடத்தியுள்ளது. ''ஒரு நபர் ஓவியக் கண்காட்சி'' நடத்தவும் இது உதவி செய்கிறது. ஆண்டுதோறும் ஓவியர் முகாம்களையும் அது நடத்துகிறது.

7. திறம் மிக்க இளம் கலைஞர்களுக்கு 10 மாதங்களுக் மாதம் ரூ. 150 வீதம் உதவித் தொகை அளித்து அவர் ஓவியக் கலையில் பயிற்சி பெற உதவுகிறது. சிறந்த ஓவியக் கலைஞர்களுக்கு ரொக்கப் பரிசுகள் தந்து பாராட்டவும் அது கருதியுள்ளது.



8. திருச்சிராப்பள்ளி, வேலூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஓவியப் பயிற்சி மையங்களுக்கு இக்குழு மானியம் தருகிறது. பள்ளிகளில் ஓவிய ஆசிரியர்களாகப் பணி செய்பவர்களுக்கு ஓவியத்தில் மறுபயிற்சி வகுப்புகள் நடத்தியுள்ளது.

9. நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்தருகே நஞ்சநாட்டில் 67 ஏக்கர் நிலப் பகுதி ஒன்றில் ''ஓவியர் சிற்றூர்'' ஒன்றை நிறுவுவது ஆலோசனையிலுள்ளது.

10. டெல்லியிலுள்ள லலித கலை அகாடெமியும் இவ்வரசும் சேர்ந்து தொடங்கிய அந்த அகாடெமியின் வட்டார மையம்ஒன்று 1978 அக்டோபரிலிருந்து சென்னையில் செயல்படுகிறது. அந்த மையத்துடன் இணைந்து நுண்கலைக் குழு கண்காட்சிகளையும் வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

### ஜவகர்லால் நேரு பால பவன் :

11. ஜவகர்லால் நேரு பால பவன் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கலை, இசை, நடனம் முதலியவற்றில் இளஞ்சிறார்களிடம் மறைந்துள்ள திறமைகளை வளர்த்துக் கொள்ள வசதி அளிக்கும்படி, கல்வி மற்றும் மனமகிழ் மன்றமாக அது இருக்கும். 1978 டிசம்பரில் இதற்கு ஒரு தனி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். மற்றொரு பாலபவன் திருச்சியில் அமைக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள் :

12. சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 1979—80-ல் 327 பேர் பயின்றனர். அதில் முழுநேர ஆசிரியர்கள் 23 பேரும், பகுதி நேர ஆசிரியர்கள் 13 பேரும் உள்ளனர். இக் கல்லூரியில் வாய்ப்பாட்டு, கருவி இசை, பரதநாட்டியம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. நாதசுவரம், தவில் பயில்வோர் மாதம் ரூ. 60 வீதம் ஆண்டுக்கு 10 மாதம் பயிற்சி உதவிப் பணம் பெறுகின்றனர். வேறு வேலை செய்பவர்களுள் இசை பார்வமுள்ளோரை ஊக்குவிக்கும் வகையில் சென்னை நகரில் நான்கு மையங்களில் மாலை நேரங்களில் இசை வகுப்புகள் வாய்ப்பாட்டு, வயலின், வீணை) நடத்தப்படுகின்றன. அவற்றில் 42 பேர்கள் பயின்று வந்தனர்.

13. 1979 ஜனவரியில் மதுரையில் தொடங்கிய இசைக் ல்லூரியும், சென்னைக் கல்லூரியிலுள்ளது போன்ற பயிற்சிகளை ்ளிக்கிறது. அதில் இப்பொழுது 100 பேர்கள் பயின்று ருகின்றனர்.

## (2) ஆவணக் காப்பகமும் அருட்காட்சியகங்களும்.

1. தென் ஆசியாவில் வளமான அரசு ஆவணத் தொகுப்பைப் பெற்றுள்ளது, தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகமாகும். அது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன் அரசு ஆவணக் காப்பகமாகவும் செயல்படுகிறது 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல ஆவணங்கள் அதில் உள்ளன. கடந்த 30 ஆண்டுகளுக்கு முந்திய ஆவணங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வுக்குத் தரப்படுகின்றன. ஆராய்ச்சியாளர் கூடத்தில் ஆராய்ச்சியாளர்களுக்கு சிறந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2. ஆவணங்களை அறிவியல் முறையில் பாதுகாத்துப் பேண வைக்க நவீன கருவிகள் வாங்கித் தரப் பெற்றுள்ளன. 1978–79-ல் நுண் நிழற் படக் கருவி ஒன்று வாங்க ஏற்பளிக்கப் பட்டது. புகைப்பட முறையில் படிபெருக்கும் கருவி ஒன்றும் வாங்கப்பட்டுள்ளது.

3. 1973-ஆம் ஆண்டு அமைக்கப் பெற்ற "தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு" தென்னகத்தின் பல்வேறு வாழ்க்கை அம்சங்கள் குறித்து ஆராய்ச்சிகளை ஊக்குவிப் தற்காக இரண்டாண்டு கால ஆராய்ச்சி மாணவப் பணியிடங்களும் வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆராய்ச்சி மாணவருக்கும் ரூ. 5,000 சில்லறைச் செலவினங்களுக்காக ஆண்டு தோறும் அளிக்கப்படுகின்றது.

4. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தைச் சேர்ந்தவையான (17–18 ஆவது நூற்றாண்டுகளைச் சார்ந்த) முக்கியமான ஆவணங்களின் படிகள் அல்லது சுருக்கங்கள் அச்சிடப்பட்டு ஆர்வமுள்ள வரலாற்றாராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன்படும் புத்தகங்களாக வெளியிடப்பட்டு மிகக் குறைந்த விலையில் ஆவணக் காப்பகத்தில் ரொக்க விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

5. மாவட்ட விவரச் சுவடிகளை திருத்தியமைத்து மீண்டும் எழுதுவதற்கான மாவட்ட விவரச் சுவடிகள் பிரிவும் ஆவணக் காப்பக மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையரின் கட்டுப் பாட்டின் கீழ் தான் செயல்படுகின்றது.

அருங்காட்சியகங்கள்—

6. சென்னை, புதுக்கோட்டை, சேலம் ஆகிய இடங்களில் அரசு அருங்காட்சியகங்கள் உள்ளன. அவற்றில் சிறந்த சிற்பங்கள், மரச் செதுக்கு வேலைகள், வண்ண ஓவியங்கள் ஆகியவற்றோடு தொல் பொருளியல், மானிடவியல், இயற்கை அறிவியல் ஆகிய துறைகளைச் சார்ந்த பொருட்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன





7. மதுரையில் 1980–81-ல் வட்டார அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படும். சென்னையில் ரூ. 29 இலட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்று அமைக்க ஏற்பளிக்கப் பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியகத்தைச் சார்ந்துள்ள தேசீய கலைக்கூடத்துக்கு ரூ. 16.50 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட இருக்கிறது. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி மதுரையில் இத்துறை இலெமூரியா கண்டம் பற்றிய நிலையான காட்சி ஒன்றை அமைக்க இருக்கிறது.

## (3) பொது நூலகங்கள்.

1. இந்தியாவிலேயே பொது நூலகங்களுக்காக முதன் முதலாக (1948 லேயே) சட்டம் ஒன்று இயற்றிய மாநிலம் தமிழ்நாடுதான். அது தொடர்ந்து நூலகப் பணி வளர்ச்சிக்கு உதவி வருகிறது.

2. கன்னிமரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். அதில் 3.09 இலட்சம் புத்தகங்கள் உள்ளன. உறுப் பினர்கள் 12,300 பேராவர். இது தவிர அரசு நூலகம் மற்றொன்றும் இத்துறையின் கீழுள்ளது. 1977-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ம் நாள் முதல் இத்துறையின் கீழ் வந்த கவிமணி நிலைய நூலகம், நாகர்கோயில் ஆகும் அது.

3. புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு நூலக ஆணைக் குழு உள்ளது. மாவட்டத்திற்கு ஒரு நூலகம் வீதம் தற்போது 13 மாவட்ட மைய நூலகங்களும் 1,434 கிளை நூலகங்களும் உள்ளன.

4. இந் நூல் நிலையங்கள் அனைத்திலும் உள்ள புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை 73 இலட்சம். இவையனைத்தின் உறுப்பினர்களும் மொத்தம் 8 இலட்சம் பேர்கள். உறுப்பினர்களல்லாதவர்களும் நூல் நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள புத்தகங்களைப் பயன்படுத்தலாம். வளர்ந்து வரும் இந் நூலகப் பணியில் உள்ளவர்கள் எண்ணிக்கை சுமார் 3,284 ஆகும்.

5. 1978–79-ல் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல்வரியாக ரூ. 97 இலட்சம் பெற்றன (சென்னை மாவட்டக் குழு பெற்ற ரூ. 19 இலட்சம் உட்பட) சென்னை தவிர பிற மாவட்டங்களில் உள்ள நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல் வரி மூலம் வசூலிக்கப்படும் தொகைக்குச் சமமாக இணை மானியத்தையும் அரசிடமிருந்து பெறுகின்றன. 1973–74-ம் ஆண்டிலிருந்து அத்தகைய இணை மானியத்தில் 25 விழுக்காடு புத்தகங்களாகக் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு 1978–79-ம் ஆண்டில் கொடுத்த புத்தகங்கள் 1,484 ; மொத்தம் கொடுத்த படிகள் ,66,000 ; செலவு ரூ. 25 இலட்சம்.

6. சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவைப் பொறுத்த வரை அது 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் முதல் 1979-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் நாள் முடியவுள்ள காலத்தில் தனது நூலகங்களுக்கு வாங்கிய புத்தகங்கள் 4,870; மொத்த படிகள் 2,94,971 ; ஆன செலவு ரூ. 13.91 இலட்சம் ஆகும்.

7. நூலக சீரமைப்புக் குழு, அதன்பின் அமைக்கப்பட்ட அதிகாரிகள் குழு ஆகியவற்றின் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன. நூலக ஆணைக் குழுக்களின் பணியாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டாம் என்ற அதிகாரிகள் குழு பரிந்துரையை அரசு ஏற்றுள்ளது. எனினும் அக்குழு பரிந்துரைத்தபடி பின்வரும் சலுகைகள் அப்பணியாளர்களுக்கு அண்மையில் விரிவாக்கப்பட்டுள்ளன.—

(1) உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கு இருப்பது போன்ற ஓய்வூதியம்—குடும்ப ஓய்வூதியம்—சாவு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை சலுகை நூலக ஆணைக் குழுக்களின் பணியாளர்களுக்கு 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் முதல் விரிவாக்கப்பட்டுள்ளது. பணப்பயன் 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் முதல் கிடைக்கும். அதாவது 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் அன்று அல்லது அதற்குப் பின் ஓய்வு பெறுபவர்களுக்கு இச்சலுகைகள் உண்டு. ஆனால் 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் முதல் 1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் வரையுள்ள காலத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கு பணப்பயன் 1979 ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் முதல்தான் கணக்கிட்டுத் தரப்படும்.

(2) குடும்ப நலத்திற்கான '' குழு ஈட்டுறுதித் திட்டமும்'' 1979-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் நாள் முதல் விரிவாக்கப் பட்டுள்ளது

## (4) தொல் பொருளியல்

1. தொல் பொருள் ஆராய்ச்சித்துறை மாநிலத்தில் உள்ள முக்கியமான வரலாற்று நினைவுச் சின்னங்களை பேணிப் பாதுகாத்து வருகிறது. இதுவரை 71-க்கு மேற்பட்ட சின்னங்களை எடுத்துக் கொண்டு 1966-ம் ஆண்டு நிறைவேறிய தமிழ் நாடு பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் ஆய்வு இடங்கள் சட்டத்தின்கீழ் அவற்றைப் பாதுகாத்து வருகிறது. இவ்வாண்டு தஞ்சாவூர் அரண்மனை, சிவகங்கைக் கோட்டை, மருது சகோதரர்கள் சமாதி போன்றவற்றை சிறந்த முறையில் பழுது பார்க்கும் பணி நடைபெறும்.





2. 1979–80-ம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் பொன்னமராவதி அருகே ஒரு குன்றின் மேல் செதுக்கப்பட்டிருந்த வியக்கத் தகுந்த முக்கியம் வாய்ந்த தமிழ்க் கல்வெட்டு ஒன்றை இத்துறை கண்டு பிடித்தது. அது ஒரு பாறையின் மேல் சுமார் 15 மீட்டர் நீளம் 3 மீட்டர் உயரத்துக்கு செதுக்கப்பட்டுள்ளது. சுமார் கி.பி. 300 என்று சொல்லத் தகுந்த தமிழ் பிராமி எழுத்தில் உள்ளது. இதுவரைக் கண்டு பிடித்த பழந்தமிழ் கல்வெட்டுகளில் மிக நீண்டதும் மிக முக்கியம் வாய்ந்ததும் இதுவே. தமிழக வரலாற்றில் இதுவரை இருண்ட காலம் என்று அழைக்கப்பட்ட காலத்தைப்பற்றி அறிய ஒளி தருவதாக இக்கல்வெட்டு உள்ளது. சேந்தன் மகன் கூற்றன் என்பான் ஆட்சிக் காலத்தில் வெட்டப்பட்டதாகக் கல்வெட்டு கூறுகிறது. பலவழிகளிலும் முக்கியமானது இக்கல்வெட்டு. தொல்பொருள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இக்கல்வெட்டை இத்துறை பாதுகாப்புக்கு எடுத்துள்ளது.

3. மதுரையில் நடைபெறும் 5 ஆவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி ஒலி—ஒளிக் காட்சி ஒன்றை ரூ. 28 லட்சம் செலவில் இத்துறை மதுரை, திருமலைநாயக்கன் மகாலில் அமைத்து வருகிறது.

4. 1980–81-ல் மொத்தம் ரூ. 3.70 லட்சம் செலவில் (1) தஞ்சாவூர் மராட்டிய மன்னர் அரண்மனை, (2) இராமேசுவரம், (3) கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இத்துறை தொல்பொருள் தல அருங்காட்சியகங்களை அமைக்க இருக்கிறது. தஞ்சாவூர் அரண்மனையில் உள்ள சரஸ்வதி மகால் நூலகம் உள்ளிட்ட கட்டடத் தொகுதி முழுவதையும் பேணிச் சீரமைக்க ஒரு விரிவான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு தாராளமாக மைய அரசுப் பண உதவி கிட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.

5. இத்துறை 1980–81-ல் 6 மாணவர்களுக்கு, தொல் பொருளியல், பண்டைக் கால மற்றும், இடைக்கால வரலாறு, கல்வெட்டியல் ஆகியவற்றில் ஆராய்ச்சிப் பணியிடங்களை, மாதம் ஆளுக்கு ரூ. 1,000 ஆராய்ச்சிப் பணி ஊதியம் கொடுத்து, தொடங்க இருக்கிறது. இதற்கு ஆண்டுக்கு ரூ. 80,000 செலவாகும்.

6. கோயம்புத்தூர், சேலம், தென் ஆர்க்காடு, திருச்சிராப் பள்ளி, தஞ்சாவூர், செங்கல்பட்டு, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இத்துறை தொல் பொருளியல் பிரிவுகள் ஒன்பதை நிறுவியுள்ளது. பழைய கைப்பிரதிகள், ஓலைச் சுவடிகள், உதிரிச் சிற்பங்கள் ஆகியவற்றைச் சேகரித்துப் பாதுகாத்தல் கிராமப் புற கலைகளைக் கணக்கெடுத்தல் போன்ற பணிகளை இவை செய்கின்றன.

7. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி இதுவரை அச்சில் வெளிவராத தமிழ்ச் சுவடிகளை வெகு விரைவில் பெரும் எண்ணிக்கையில் அச்சிட்டு வெளியிடுவதற்கான திட்டத்தின்கீழ் தமிழ் ஓலைச் சுவடி நூல்களை வெளியிடும் பணியினை இத்துறை ஏற்றுள்ளது. அவ்வாறு வெளியிடத் தகுந்த நூல்களைப் பற்றி ஒரு வல்லுநர் குழுவைக் கலந்து தேர்ந்தெடுத்து அச்சிடும் பணியை இத்துறை இயக்குநர் மேற்கொண்டுள்ளார். நூல்களை தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் அச்சிடும். பண்டைப் கைப் பிரதிகளைப் படிப்பதில் பயிற்சி அளிப்பதற்காக வேலை வாய்ப்பு அற்ற தமிழ்ப் புலவர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் பல இடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னையிலுள்ள அரசு கீழ்த்திசைக் கையெழுத்துப் பிரதி நூலகம் கல்லூரிக் கல்வி இயக்குநர் நிர்வாகத்திலிருந்து தொல் பொருளியல் இயக்குநர் நிர்வாகத்துக்கு இப்பொழுது மாற்றப்பட்டுள்ளது.

8. கரூரிலும் வரலாற்றுத் தன்மைவாய்ந்த வேறு சில இடங்களிலும் இத்துறை அகழ்வாராய்ச்சி மேற்கொண்டுள்ளது. சோழர்களின் புகழ் பெற்ற தலைநகரமான கங்கை கொண்ட சோழபுரம்; மதுரையருகே கோவலன் பொட்டல், கோயம்புத்தூர் அருகே போலுமாம்பட்டி, இராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டி ஆகிய இடங்களில் இப்பொழுது அகழ்வாராய்ச்சி நடக்கிறது. மைய அரசின் தொல்பொருளியல் துறையின் ஒத்துழைப்பைப் பெற்று காவேரி பூம்பட்டினத்திலும் இத்துறை அகழ்வாரய்ச்சி நடத்தக் கருதியுள்ளது.

9. இத்துறை தொல் பொருளியல் ஆய்வுக்கூடம் ஒன்று அமைத்துள்ளது. அது மேலும் விரிவாக்கப்படும். இத்துறையின் நூல் அச்சிடும் பிரிவை விரிவாக்கி தொல்பொருளியல் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகளைப் பெரும் எண்ணிக்கையில் வெளியிடவும் ஓவிய அஞ்சல் அட்டைகளை அச்சிட்டு விற்கவும் இத்துறை எண்ணியுள்ளது.

## X தமிழ் வளர்ச்சி.

1980–81 ஆம ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் தமிழ் வளர்ச்சிக்காக ஒதுக்கியுள்ள தொகை ரூ. 136 இலட்சமாகும். பள்ளிகள், கல்லூரிகளில் பணியாற்றும் தமிழாசிரியர்கள் வகையிலும், கல்வி நிலையங்களில் பொதுவாக மேற் கொள்ளப்படும் தமிழ் வளர்ச்சிப்பணிகள் வகையிலும் ஆகும் கணிசமான செலவு இதில் சேர்ந்ததல்ல. இத்தொகையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டுக்காக ரூ. 73 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கான புத்தகப்படி வழங்கிட ரூ.28 இலட்சம் செலவிடப்படும். கல்லூரிப் பாடப் புத்தகங்களைத் தமிழில் கொணர்வதற்காக ரூ. 3 இலட்சம் செலவிடப்படும். தமிழ் வளர்ச்சித் துறைக்கும் அதன் பணிகளுக்கும் ரூ. 18 இலட்சம் செலவிடப்படும். வேறு தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ. 14 இலட்சம் செலவிடப்படும்.



### தமிழ் வளர்ச்சி இயக்ககம்.

2. அனைத்து நிலைகளிலும் தமிழை மாநில அரசின் ஆட்சி மொழியாகக் கொள்ளும் அரசுக் கொள்கையைப் பின்பற்றி சட்டங்கள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள் ஆகியவற்றுள் பலவற்றின் தமிழ் வடிவங்களும், அரசுத்துறைகள் பயன்படுத்திட ஆட்சிச் சொல்லகராதிகளும் சிறப்புச் சொல்லகராதிகளும் வெளியிடப்பட்டுள்ளன. மாவட்ட மட்டத்தில் தமிழை ஆட்சி மொழியாகக் கொள்ளும் பணியில் ஏற்படும் வளர்ச்சி தனி ஆய்வுப் பணியாளர்களைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தலைமைச செயலகத் துறை ஒவ்வொன்றிலும் ஒரு அதிகாரியும், துறைத் தலைவர்கள் அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அதிகாரியும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அதிகாரியும் தமிழ் வளர்ச்சி இயக்குநருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழை ஆட்சி மொழியாக்கும் திட்டம் முழு வெற்றி அடையப் பணியாற்ற வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

3. 1867 ஆம் ஆண்டு முதல் வெளியிடப் பெற்றுள்ள தமிழ் நூல்களின் விவர அட்டவணை ஒன்று தொகுக்கப்பட்டு வருகிறது. 1867 முதல் 1925 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு 13 தொகுதிகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சிய தொகுதிகளுக்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

4. தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும் தமிழ் வளர்ச்சித் துறை செயல்படுத்தி வருகிறது. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பு வெளிவருவதற்கு வேண்டிய உதவிகளையும் அரசு செய்யும்.

### தமிழ் நாட்டு வரலாறு.

5. தமிழ் நாட்டு வரலாற்றை எழுதுவதற்காக வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆறு தொகுதிகளுடைய இவ் வரலாற்றில் இரண்டு தொகுதிகள் எழுதி முடிக்கப்பெற்றுள்ளன. தொல் பழங்காலத்தைப் பற்றிய முதல் தொகுதி ஏற்கெனவே வெளியிடப்பட்டுவிட்டது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி விரைவில் வெளியிடப்படும்.

[1980 ஜூலை 21

## பிற மாநிலங்களில் தமிழ்க் கல்வியையும் தமிழாராய்ச்சியையும் ஊக்குவித்தல்.

6. மற்ற மாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்களும், பிற நிறுவனங்களும் தமிழ்ப் பேராசிரியர் பதவிகளை ஏற்படுத்தவும், தமிழில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், தமிழில் பகுதி நேரப் பட்டப்படிப்பு வகுப்புகளை நடத்தவும் ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் ரூ. 15,000 வீதம் இவ்வரசு தாராளமாக மானிய உதவி செய்து வருகிறது. தமிழில் பகுதி நேரப் பட்டயப் படிப்பு வகுப்புகளை தொடங்குவதற்காக பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள் நிறுவனங்கள் ஆகியவை 15-க்கு 1978-79 லும் 8-க்கு 1979—80-லும் இம்மானியம் ஏற்பளிக்கப்பட்டது.

திருவனந்தபுரத்திலுள்ள " திராவிட மொழிகளின் மொழியியல் ஆராய்ச்சிக்கான பன்னாட்டுப் பள்ளி " யின் ஆராய்ச்சிப் பணிகளுக்காக ஆண்டுக்கு ரூ. 1,36,000 வீதம் 1978—79 முதல் 5 ஆண்டுகளுக்கு இவ்வரசு மானியம் தர ஏற்பளித்துள்ளது. இப் பள்ளிக்கான அலுவலகக் கட்டடமும் அரங்கமும் கட்ட ரூ. 4,51,000 மானியம் தரவும் இவ்வரசு இசைந்து முதல் தவணையாக ரூ. 1 இலட்சம் ஏற்கெனவே தரப்பட்டு விட்டது.

## மொழி பெயர்ப்புப் பணி.

7. பிறமொழி நூல்களில் சிறந்தவற்றை தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்குமான ,திட்டம் நன்கு நடைபெற்று வருகிறது. ஆங்கில நூல்கள் நான்கின் தமிழ் வடிவமும், " பதிற்றுப் பத்து ' " ஞான ரதம் " ஆகியவற்றின் ஆங்கில வடிவங்களும் தயாரிக்கப் பட்டு அச்சிற்குக் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு மொழி பெயர்க்க வேண்டிய நூல்களின் பட்டியலும் முடிவு செய்யப் பட்டுள்ளது. தமிழாக்கம் செய்யவிருக்கும் நூல்களில் பெர்ட் ராண்ட் ரசல், ஜின்பால் சார்டர், கிப்பன் போன்றோர் நூல்களும் அடங்கும்.

## தமிழ்க் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் பாராட்டு.

8. இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உமறுப் புலவர் பெயரில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்றையும், பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளையும் இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது.



1980 ஜூலை 21]

பாவேந்தர் பாரதிதாசன் 'விருது' ஒன்றையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்பட்டு அவருக்கு பதக்கம் ஒன்றும், ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பரிசும் அளிக்கப்படும். 1978-க்கான விருது கவிஞர் சுரதாவுக்கு அளிக்கப்பட்டது. 1979-க்கான விருது ஆளுக்கு ரூ. 10 ஆயிரம் வீதம் இருவருக்கு அதாவது இறந்துவிட்ட கவிஞர்கள வாணிதாசன், எஸ். டி. சுந்தரம் ஆகியோர் குடும்பத்தினருக்கு அளிக்கப்பட்டது.

## வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம்.

9. வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டம் ஒன்று 1978 ஆம் ஆண்டு சனவரியில் தொடங்கப்பட்டது. மாத வருமானம் ரூ. 400-க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழறிஞர்களுக்கு இந்த ஓய்வூதியம் இப்பொழுது தரப்படுகிறது. இதுவரை 33 அறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது. ஓய்வூதியத் தொகை இப்பொழுது மாதம் ரூ. 250 ஆக உள்ளது. தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் அரும்பணியாற்றியுள்ள அறிஞர்களுக்கும், அத்தகையோர் தங்கள் குடும்பங்களை வறுமை நிலையில் விட்டு விட்டு மாண்டு போய் இருந்தால் அவர்கள் குடும்பங்களுக்கும் இந்த ஓய்வூதியம் தரப்படும், ஓய்வூதியம் பெறத் தகுதி வாய்ந்தவர்களை வல்லுநர்க் குழு ஒன்று தேர்ந்தெடுக்கிறது. ஓய்வூதியம் முதலில் மூன்று ஆண்டுகளுக்குத் தரப்படுகிறது. மூன்றாண்டு, மூன்றாண்டாகப் புதுப்பித்துக் கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது,

## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

10. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் இயக்குநர் தமிழிலும், திராவிட மொழிகளிலும் சிறந்த அறிஞரான திரு. ஞா. தேவநேயப் பாவாணர் ஆவார். அவர் இந்த அகரமுதலியைத் தொகுக்கும் பணியில் அவர் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார். முழு விரிவு வாய்ந்ததாகவும் திட்டவட்டமானதாகவும் அமையும் அந்நூல் 13 தொகுதிகளாக வெளிவரும். முதல் தொகுதியின் முதல் பகுதி விரைவில் வெளியிடப்படும்.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

11. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தன்னுடைய தமிழ் வளர்ச்சிப் பணிகளைத் தொடர்கிறது. அதாவது தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழை வெளியிடுதல்; மொழிப் பயிற்சிக்கூடம் ஆகியவற்றின் உதவியுடன் வெளிநாட்டு மாணவர்களுக்கு தமிழ் கற்றுத் தருதல்: தமிழ் இலக்கியக் கொள்கைகள் பற்றிய மாதாந்திர கருத்தரங்குகளை நடத்துகல்·

இலக்கியம், பண்பாடு போன்ற துறைகளில் தமிழரின் மரபுச் செல்வம் பற்றிய கருத்தரங்குகளை நடத்துதல்; தமிழ் இலக்கியம், வரலாறு பற்றிய சிறந்த நூல்களை வெளியிடுதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

12. தமிழிலிருந்து பிறமொழிகளிலும், பிறமொழிகளிலிருந்து தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்ட இலக்கியங்களின் பட்டியலை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. 'உலகத் தமிழ் எழுத்தாளர்' என்ற தொகுப்பு நூலை 5-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது வெளியிட இருக்கிறது. இந்நிறுவனம் வெளியிட இருக்கும் நூல்களில் இதுவரை அச்சில் வெளிவராத கூவநூல் குளுவ நாடகம், பிரபந்தத் திரட்டு, திருவேங்கடவன் பிள்ளைத் தமிழ், தந்திவனபுராணம் போன்ற அரிய ஓலைச் சுவடிகளும் உள்ளன.

13. ''தஞ்சை மாவட்டத் தொல்பொருளியல் நாட்டுப் படம்'' தயாரித்து வெளியிடுதல், தமிழ் நாட்டின் இடப் பெயர் பற்றிய ஆராய்ச்சி நூல் வெளியிடுதல் ஆகியவற்றை இந்நிறுவனம் செயல்படுத்தும்.

14. இந்நிறுவனத்தில் 'சுவடியியல்', 'மொழி பெயர்ப்பியல்' எனும் பட்டமேற்படிப்புத் துறைகள் நடைபெற்று வருகின்றன. ''சுவடியியலில்'' தேறும் மாணவர்கள் தாமாகவே பழஞ்சுவடிகளைப் பார்த்துப் பதிப்பிக்கும் ஆற்றல் பெறுவர்.

ஐந்தாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு—கருத்தரங்கு.

15. இதுவரை நடந்துள்ள உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு கருத்தரங்குகள் நான்கில் முதல் மாநாடு 1966-ல் கோலாலம்பூரிலும், இரண்டாவது 1968-ல் சென்னையிலும், மூன்றாவது 1970-ல் பாரிசிலும், நான்காவது 1973-ல் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன. ஐந்தாவது மாநாடு மதுரையில் நடைபெறும். மாநாடு நடக்கும் காலம் பற்றி விரைவில் முடிவாகும்.

16. மாநாட்டுப் பணியின் ஒரு கூறாக மதுரையில் பல வளர்ச்சிப் பணிகள் சாலைமேம்பாடு, தெருவிளக்குகள், குடிநீர், குடிசை சீரமைப்பு போன்றவை நடந்துள்ளன. திருமலை நாயக்கர் மகாலில் ரூ. 28 லட்சம் செலவில் ஒலி-ஒளிக் காட்சி ஒன்று அமைக்கப்படும்.

17. தஞ்சாவூர் சரசுவதிமகால் நூலகம், சென்னையிலுள்ள அரசு கீழ்த் திசைச் சுவடிகள் நூலகம் அவற்றில் உள்ள இதுவரை வெளியிடப்படாத தமிழ் ஓலைச் சுவடிகளை வெளியிடும் பணி தொடங்கியுள்ளது.



18. மாநில அரசு பொறுப்பேற்று நடத்தும் இம்மாநாட்டில் நம்நாட்டிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் பெரும் அளவில் அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் கலந்து கொள்வர்.

19. முதன்மையான ஆராய்ச்சி மாநாடு-கருத்தரங்கு உடன் பின்வரும் சிறப்பான நடவடிக்கைகளும் மாநாட்டை ஒட்டி எடுக்கப்படும்:—

(1) முறையான மாநாடு-கருத்தரங்கோடு சேர்ந்து அல்லாமல், தனியாக பொதுமக்கள் கலந்து கொள்ளக் கூடிய வகையில் பட்டி மன்றம், கவியரங்கம், சிறப்புச் சொற்பொழிவுகள் ஆகியவை நடக்கும் பொதுமாநாடு நடத்துதல்.

(2) பண்டைத் தமிழ் பண்பாடு, இலக்கியக் காட்சிகள், தொன்று தொட்டு இன்று வரை தமிழர் நாகரிக வளர்ச்சி போன்றவற்றைக் காட்டும் கலைக் கண்காட்சி.

(3) வரலாறு, இலக்கியம், இரண்டு வகையிலும் தமிழ்ப் பண்பாட்டை விளக்கும் அலங்கார ஊர்திகளைக் கொண்ட ஊர்வலம்.

(4) கலை நிகழ்ச்சிகளும், கிராமப் புற நடனங்களும் போன்றவையும்.

(5) மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு கலைச் சுற்றுலா.

(6) மலர் வெளியீடு.

## இணைப்பு I—தொடர்ச்சி

### பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

| (1) | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு.) (2) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு). (3) | 1976–77 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (4) | 1977–78 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (5) | 1978–79 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (6) | 1979–80 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | (மாணவர்கள் இலட்சத்தில்). | | | |
| அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை— | | | | | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | | | |
| சிறுவர் .. | 25·85 | 30·45 | 31·93 | 32·39 | 32·84 | 33·27 |
| சிறுமியர் .. | 25·64 | 29·79 | 31·23 | 31·68 | 32·11 | 32·54 |
| மொத்தம் .. | 51·49 | 60·24 | 63·16 | 64·07 | 64·95 | 65·81 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | | | |
| சிறுவர் .. | 11·31 | 13·71 | 14·37 | 14·58 | 14·78 | 14·97 |
| சிறுமியர் .. | 11·23 | 13·40 | 14·05 | 14·25 | 14·45 | 14·64 |
| மொத்தம் .. | 22·54 | 27·11 | 28·42 | 28·83 | 29·23 | 29·61 |



## இணைப்பு I—தொடர்ச்சி

### பள்ளிக்கல்வி பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி 14—17— | | | | | | |
| சிறுவர் .. | 9·33 | 11·31 | 11·86 | 12·03 | .. | .. |
| சிறுமியர் .. | 9·26 | 11·07 | 11·60 | 11·77 | .. | .. |
| மொத்தம் .. | 18·59 | 22·38 | 23·46 | 23·80 | .. | .. |
| வயதுத் தொகுதி 14—16— | .. | .. | .. | .. | 16·32 | 16·51 |
| ஆ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை— | | | | | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | | | |
| சிறுவர் .. | 26·37 | 30·64 | 32·02 | 33·11 | 33·83 | 34·34 |
| சிறுமியர் .. | 18·74 | 23·74 | 25·50 | 26·74 | 27·38 | 27·94 |
| மொத்தம் .. | 45·11 | 54·38 | 57·52 | 59·85 | 61·21 | 62·28 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | | | |
| சிறுவர் .. | 7.21 | 9.10 | 9.74 | 10.26 | 10.73 | 11.02 |
| சிறுமியர் .. | 3.45 | 5.09 | 5.76 | 6.12 | 6.29 | 6.65 |
| மொத்தம் .. | 10.66 | 14.19 | 15.50 | 16.38 | 17.02 | 17.67 |

## இணைப்பு 1—தொடர்ச்சி.

### பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | 1955–66 (மூன்றாவது திட்ட முடிவு.) (2) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு.) (3) | 1976–77 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி.) (4) | 1977–78 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி.) (5) | 1978–79 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி.) (6) | 1979–80 (ஆகஸ்டு முதல்நாள் உள்ளபடி.) (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | (மாணவர்கள் இலட்சத்தில்.) | | | |
| வயதுத் தொகுதி 14–17 | | | | | | |
| சிறுவர் .. .. | 3.86 | 4.97 | 5.34 | 5.24 | .. | .. |
| சிறுமியர் .. | 1.65 | 2.42 | 2.68 | 2.69 | .. | .. |
| மொத்தம் .. | 5.51 | 7.39 | 8.02 | 7.93 | .. | .. |
| வயதுத் தொகுதி 14–16 .. .. | .. | .. | .. | .. | 6.28 | 6.34 |
| இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்— | | | | | | |
| வயதுத் தொகுதி 6–11 | | | | | | |
| சிறுவர் .. .. | 102.03 | 100.6 | 100.3 | 102.2 | 103.21 | 103.21 |
| சிறுமியர் .. | 73.08 | 79.6 | 81.7 | 84.4 | 85.27 | 85.87 |
| மொத்தம் .. | 87.61 | 90.2 | 91.7 | 93.4 | 94.25 | 94.64 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி 11–14 | | | | | | |
| சிறுவர் .. .. | 63.78 | 66.3 | 67.7 | 70.3 | 72.26 | 73.60 |
| சிறுமியர் .. | 30.72 | 37.9 | 41.0 | 42.9 | 43.39 | 45.44 |
| மொத்தம் .. | 47.31 | 52.3 | 54.4 | 56.8 | 58.25 | 59.68 |
| வயதுத் தொகுதி 14–17— | | | | | | |
| சிறுவர் .. .. | 41.38 | 43.0 | 44.9 | 43.7 | .. | .. |
| சிறுமியர் .. | 17.83 | 21.8 | 23.1 | 22.9 | .. | .. |
| மொத்தம் .. | 29.65 | 33.0 | 34.1 | 33.4 | .. | .. |
| வயதுத் தொகுதி 14–16 .. .. | .. | .. | .. | .. | 38.46 | 38.44 |
| இ. பள்ளிகளின் எண்ணிக்கை— | | | | | | |
| தொடக்கப்பள்ளிகள். | 24,641 | 26,726 | 27,306 | 27,395 | 27,425 | 27,662 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் .. | 6,065 | 5,773 | 5,730 | 5,709 | 5,705 | 5,685 |

இணைப்பு I—தொடர்ச்சி.

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு). (2) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு). (3) | 1976–77 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (4) | 1977–78 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (5) | 1978–79 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி). (6) | 1979–8 (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி) (7) |
|---|---|---|---|---|---|---|
| | | (மாணவர்கள் இலட்சத்தில்) | | | | |
| உயர்நிலைப் பள்ளிகள் | 2,234 | 2,823 | 3,030 | 3,058 | 2,196 | 2,088 |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | .. | .. | .. | 912 | 1,138 |
| மொத்தம் .. | 32,940 | 35,322 | 36,066 | 36,162 | 36,238 | 36,573 |

மேல் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர்–மாணவர் விகிதம் போன்ற வகையில் பின்தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள், உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் (10–ம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்.

உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் .. | 88,173 | 1,06,332 | 1,11,033 | 1,11,184 | 1,11,808 | 1,12,535 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் .. | 59,943 | 66,843 | 67,846 | 68,794 | 69,279 | 66,568 |
| உயர் நிலைப் பள்ளிகள் .. | 48,574 | 65,959 | 72,838 | 73,039 | 75,136 | 34,102. |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மேல் நிலைப் பள்ளிகள் .. | .. | .. | .. | .. | .. | 45,257 |
| மொத்தம் .. .. | 1,96,690 | 2,39,134 | 2,51,717 | 2,53,017 | 2,56,223 | 2,58,462 |

ஊ. ஆசிரியர்—மாணவர் விகிதம்—(ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி)—

(1) பள்ளிவாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகையில் சேர்த்து)—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 27 | 35 | 36 | 37 | 38 | 39 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் .. | 35 | 33 | 33 | 33 | 36 | 37 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 31 | 24 | 24 | 24 | 24 | 23 |
| மேல் நிலைப் பள்ளிகள் .. | .. | .. | .. | .. | .. | 28 |

(2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களை, ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி வகுப்புத் தொகுதி | 37 | 37 | 36 | 37 | 39 | 38 |
| உயர் தொடக்கப் பள்ளி வகுப்புத் தொகுதி .. | 32 | 33 | 33 | 33 | 33 | 32 |
| உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி | 32 | 29 | 30 | 27 | 26 | 26 |
| மேல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி | .. | .. | .. | .. | .. | 22 |

## இணைப்பு I—தொடர்ச்சி.

### 1979-80-ல் (1—8—1979-ல் இருந்தவாறு) பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய பள்ளி விவரங்கள்.

| பள்ளிக்கூடங்கள். (1) | எண்ணிக்கை. (2) | | மாணவர்கள் (லட்சத்தில்.) (3) | ஆசிரியர்கள் (4) |
|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளிகள்— | | | | |
| அரசு | 1,422 | | | |
| நகராட்சி | 1,094 | | | |
| ஊராட்சி ஒன்றியம் | 20,193 | | | |
| தனியார் | 4,953 | 27,662 | 43.52 | 1,12,53[illegible] |
| உயர் தொடக்கப் பள்ளிகள்— | | | | |
| அரசு | 250 | | | |
| நகராட்சி | 400 | | | |
| ஊராட்சி ஒன்றியம் | 3,073 | | | |
| தனியார் | 1,962 | 5,685 | 24·83 | 66,568 |



## இணைப்பு I.

### பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளிகள்—சாதாரணப் பள்ளிகள்— | | | | | |
| அரசு | 1,500 | | | | |
| நகராட்சி | 73 | | | | |
| தனியார் | 426 | | | | |
| | | 1,999 | | | |
| ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள். | 15 | | | | |
| மெட்ரிகுலேஷன் | 8 | | | | |
| C.B.S.E. பள்ளிகள் முதலியவை. | 65 | | | | |
| மொத்தம் | 88 | 2,087 | | 7.75 | 34,102 |
| மேல்நிலைப் பள்ளிகள், சாதாரணப் பள்ளிகள்— | | | | | |
| அரசு | 485 | | | | |
| அரசு தொழில் நுட்பம்) | | | | | |

## இணைப்பு I—தொடர்ச்சி.

### 1979-80-ல் (1—8—1979-ல் இருந்தவாறு) பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய பள்ளி விவரங்கள்—தொடர்ச்சி

| பள்ளிக்கூடங்கள். (1) | | எண்ணிக்கை. (2) | | மாணவர்கள் (லட்சத்தில்). (3) | ஆசிரியர்கள். (4) |
|---|---|---|---|---|---|
| நகராட்சி .. .. | 54 | | | | |
| னியார் .. .. | 483 | | | | |
| | 1,036 | | | | |
| ஆங்கிலோ இந்தியன் .. | 26 | | | | |
| மெட்ரிகுலேஷன் .. | 25 | | | | |
| | | 1,087 | | | |
| C.B.S.C. முதலியவை .. .. | | 52* | | | |
| .. .. | | | 1,139 | 12.69 | 45.257 |
| .. | | | 36,573 | 88.79 | 2,58,462 |
| மொத்தம் .. | | | சிறுவர் | 51.13 | |
| | | | சிறுமியர் | 37.66 | |

* தமிழ்நாடு அரசு 1978-79 முதல் மேல் நிலைப் பள்ளி வகுப்புகளைத் தொடங்கியது. அதற்கு முன்பிருந்தே இந்த 52 C.B.S.E. பள்ளிகளில் மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் இருந்தன.



| | எண்ணிக்கை. | மாணவர்கள். | ஆசிரியர்கள். |
|---|---|---|---|
| ஏனைய நிறுவனங்கள் . .. .. .. | 40 (தனியார்) | 5,100 | 127 |
| கீழ்த்திசை பள்ளிகள் .. .. .. | 18 | 3,700 | 209 |
| ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் .. .. .. | 79 | 2,080 | 319 |
| கைத்தொழில் பயிற்சி மையங்கள் .. .. | 7 | 500 | 40 |

ஊனமுற்றோருக்கான 45 பள்ளிகள் சமுதாய நல இயக்குநரின் கீழ் மாற்றப்பட்டு விட்டன.

## இணைப்பு II.

### கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். | 1965–66 மூன்றாவது திட்ட முடிவு. | 1973–74 நான்காவது திட்ட முடிவு. | 1976–77. | 1977–78. | 1978–79. | 1979–80. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | | | |
| (1) புகுமுக வகுப்பு. | 39,507 | 72,646 | 84,257 | 89,423 | 77,802 | .. |
| (2) பி.ஏ. .. | 11,349 | 51,698 | 44,697 | 43,077 | 42,871 | 47,872 |
| (3) பி.எஸ்சி. .. | 22,381 | 49,057 | 48,110 | 48,948 | 51,622 | 56,847 |
| (4) பி.காம். .. | 3,050 | 14,859 | 19,195 | 20,451 | 20,725 | 21,744 |
| (5) பட்ட மேற் படிப்பு. | 2,607 | 6,993 | 7,043 | 7,012 | 7,509 | 9,263 |
| மொத்தம் .. | 78,894 | 1,95,253 | 2,08,302 | 2,03,911 | 2,00,529 | 1,35,726 |
| 2. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் | .. | 2,969 | 3,733 | 3,812 | 3,813 | 3,752 |
| (2) தனியார் கல்லூரிகள். | .. | 7,090 | 7,883 | 8,394 | 3,329 | 8,438 |
| | 4,932 | 10,059 | 11,616 | 12,206 | 12,142 | 12,190 |
| 3. கல்லூரிகள் எண்ணிக்கை— | | | | | | |
| (1) அரசு .. | 21 | 51 | 51 | 51 | 51 | 51 |
| (2) தனியார் .. | 71 | 127 | 138 | 137 | 137 | 136* |
| | 92 | 178 | 189 | 188 | 188 | 187 |

*அண்ணாமலைப்பல்கலைக் கழக புகுமுகக் கல்லூரி 1979–80 முதல் மூடப்பட்டு விட்டது.

பிற கல்லூரிகளுக்கான 1979—80 ஆண்டு விவரங்கள்

| வகை. | கல்லூரிகள் எண்ணிக்கை. அரசு. | தனியார். | மாணவர்களின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் .. | 7 | 16 | 3,265 | 246 |
| (2) உடற்பயிற்சிக் கல்லூரிகள் .. | .. | 3 | 366 | 36 |
| (3) புலவர் கல்லூரிகள் .. | .. | 15 | 1,784 | 133 |
| (4) சமுதாயப் பணிப்பள்ளி .. | .. | 2 | 174 | 16 |
| (5) கிராமப்புற உயர் கல்வி நிலையம் .. | .. | 1 | 443 | 70 |
| (6) இசைக்கல்லூரிகள் .. | 2 | .. | 426 | 35 |
| மொத்தம் .. | 9 | 37 | 6,458 | 536 |

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1980 ஜூலை 22.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினா.

### இறால் ஏற்றுமதி.

*4. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகக் கடலிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு கிடைக்கும் இறால் மீன் அளவு எவ்வளவு ?

(இ) தமிழ் நாட்டுத் துறைமுகங்களிலிருந்து எவ்வளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழகக் கடலிலிருந்து கடந்த மூன்றாண்டுகளில் கிடைத்த இறால் மீன் அளவு பின்வருமாறு :

1977-78 ஆம் ஆண்டில் 7,166 டன்.

1978-79 ஆம் ஆண்டில் 7,873 டன்.

1979-80 ஆம் ஆண்டில் 7,121 டன்.

(இ) தூத்துக்குடி, மற்றும் சென்னை துறைமுகங்களிலிருந்து 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 2,507.87 இலட்சம் மதிப்புள்ள 4,100 டன் எடையுள்ள இறால் மீன் ஏற்றுமதி செய்யப்பட்டது.

திரு. ம. சங்கரலிங்கம் : இறால் மீன் வாணிபம் அதிகமான அளவிற்கு வெளிநாட்டுச் செலவாணியைக் கொண்டு சேர்க்கிற வாணிபமாக இருப்பதாலும், அது சத்துணவை அளிப்பதாக இருப்பதாலும், இறால் மீனை அதிகமாக வளர்க்கவும், அதன் உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவும் ஏதேனும் திட்டத்தை அரசு வகுத்திருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : அது பற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. ம. சங்கரலிங்கம்** : அண்மையில் வெளிநாட்டுச் சந்தையில் இரால் ஏற்றுமதியின் அளவு குறைந்திருப்பதாகவும், அதனால் இங்கே ஊக்கம் குன்றியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அதுபற்றி அரசுக்குத் தகவல் உண்டா ? அப்படியானால் அதை நிவர்த்தி செய்ய வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : 1975-76 ஆம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 8,616 டன்னாக இருந்தது. 1976-77-ல் 3,666 டன்னாகவும், 1977-78ல் 7,166 டன்னாகவும், 1978-79ல் 7,873 டன்னாகவும், 1979-80ல் 7,121 டன்னாகவும் ஓரளவிற்குக் குறைந்திருக்கிறது. அதை மிகுதிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேலும் அதிகமாகப் பிடிப்பதற்கு "டிராலர்" என்று சொல்லப்படும் மேல்நாட்டுப் படகுகள் பயன்படுமென்று கருதுகிறார்கள். அதுபற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்** : தமிழ் நாட்டில் எந்தக் கடற்கரைப் பகுதியில் ருசியுள்ள இரால் மீன்கள் கிடைக்கின்றன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : ஏற்றுமதி செய்யப்பட்ட இடங்கள்தான் இந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இரால் மீன் அதிகமாகப் பிடிக்கப்பட்ட இடங்கள் குறிப்பிடப்படவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி** : இரால் மீனைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்கிறோமா அல்லது அப்படியே ஏற்றுமதி செய்கிறோமா ? பதப்படுத்துவதற்கான இயந்திரத் தொழிற்சாலைகள் தமிழகத்திலே இருக்கின்றனவா ? இவையெல்லாம் கேரளத்தில்தான் இருப்பதாக தகவல்கள் இருக்கின்றன. இது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : இரால் மீனை பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போது பக்குவப்படுத்தித்தான் அனுப்ப வேண்டும். இரால் மீன்கள் பக்குவப்படுத்தப்பட்டுத்தான் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மீன் உடம் பொருள்கள் என்ற வகையிலும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தம் 7,581 டன்களில் 4,100 டன்கள் இரால் மீனும், உபப்பொருள் என்ற வகையில் 3,841 டன்களும் ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



**திரு. ஜி. சுவாமிநாதன்** : வெவ்வேறு வகையான இரால்கள் இருப்பதாகவும் அதில் ஒரு சில வகைகள் ருசியுள்ளதாக இருப்பதால் அவற்றை வெளிநாட்டினர் விரும்பி வாங்கி உண்பதாகவும் சொல்கிறார்கள். அது மாதிரியான ருசியான இரால்களை வளர்க்கத் தகுந்த முயற்சியை அரசு எடுக்க இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மீன்துறை இதுபற்றிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. அதுபற்றிய ஆராய்ச்சி தனியாக நடைபெற்று வருகிறது. தூத்துக்குடியில் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. கிழக்குக் கடற்கரையில், குறிப்பாக நம்முடைய கடற்கரையில் ருசியுள்ள இரால் கிடைப்பதால்தான், 29 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிற நிலை இருக்கிறது. மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு, வசதிகள் இருக்கின்றன. இராமேஸ்வரம் பகுதியிலே இருக்கிற கச்சத் தீவில் ஏராளமாகக் கிடைக்க வழியுண்டு. ஆனால் அங்கே நம்முடைய மீனவர்கள் மீன் பிடிப்பதில் சங்கடங்கள் ஏற்பட்டுவிட்டன. கச்சத்தீவு பகுதியிலே ஏராளமான மீன் இருக்கிறதென்றாலும், இந்திய அரசுக்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி மீன் வலையை மட்டும் உலர்த்தலாம், ஆனால் மீன் பிடிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இருக்கிறது. ஆகவே அங்கே இருக்கின்ற மீன்களைப் பிடிக்க வசதியில்லை. ஆனால் வேறு பல வாய்ப்புகள் இருக்கின்றன. அதை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : வினா-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி ( * ) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு.

**(1) மேட்டூர் அணை வெள்ள மிகுதியால் காவிரி ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடி கரையின் அருகேயுள்ள குடிசைகள் நாசமாகியுள்ளது குறித்து.**

**திரு. ஆ. நல்லசிவன்** : மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"மேட்டூர் அணை வெள்ள மிகுதியால் காவிரி ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடி, கரையின் அருகேயுள்ள குடிசைகள் நாசமாகி குடிசைவாழ் மக்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளதால் சேலம், திருச்சி மாவட்டங்களில் உள்ள பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, சேலம், பெரியார் மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு நூறு ரூபாய் மானியம் கொடுத்திருப்பது போதாது. ஆகவே அவர்களுடைய குடிசைகளைக் கட்டத் தேவைப்படும் கட்டுமான சாமான்களைக் கொடுத்துதவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற நிலைமையின்படி, நிதிநிலைமைகளை யோசித்துப் பார்க்கிறபோது, நூறு ரூபாய்தான் இன்றைக்குக் கொடுக்க முடிகிறது. இதைப்பற்றி அரசு யோசிக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, 4—7—1980-ல் அபாய அறிவிப்புக் கொடுத்த பின்னரும், தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுத்த பின்னரும் 785 குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய நிலை அடிக்கடி ஏற்படுகிறது. எனவே பெரியார் மாவட்டத்தில் உள்ள பள்ளிப் பாளையம், அம்மாபேட்டை முதலிய இடங்களில் இருக்கின்ற குடிசைவாழ் மக்களுக்கு மற்ற உயர்ந்த இடங்களில் வீடு கட்டித் தருகிற திட்டத்தை அரசு வகுத்திருக்கிறதா? ஏனென்றால் 100 ரூபாய் கொடுத்தால், அதைக் கொண்டு ஓலைக் கீற்றைக்கூட வாங்க முடியாத நிலையில் அவர்கள் பிச்சை எடுப்பதை விட அவர்களை வீடுகளில் அமர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, எவ்வளவு அதிகம் கொடுத்தாலும், சில நேரங்களில் அவர்கள் தங்களுடைய குடிசைகளை ஆற்றுப்படுகையில் அமைத்துவிடுகிறார்கள். ஆகவேதான் இந்த ஆபத்து நேர்கிறது. இனிமேல் ஆற்றுப் படுகையில் குடிசைகளைப் போடாமல் இருக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கிற நிலையைப் பற்றிச் சொல்லுகிறேன். இன்று 3.50 மணிக்கு எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன். மெர்க்காரா பகுதியில் மழை பெய்ய வில்லை. ஆகவே எந்தவிதமான ஆபத்தும் இல்லை. அதே போல கிருஷ்ண ராஜசாகர் அணையின் மொத்தத் தேக்க அளவு 124 அடி அல்லது 124.8 அடி வரை உயரலாம். ஆனால் இன்றைக்கு அங்கே இருக்கிற தண்ணீரின் அளவு 122.02 அடி. மேட்டூரினுடைய தேக்க அளவு 120 அடி. மேலும் 128 அடி வரை வைக்கலாம். ஆனால் இன்றைக்கு இருக்கிற தண்ணீரின் அளவு 117.6 அடிதான். அங்கே இன்றைக்கு உள்ளே வரும் தண்ணீரின் அளவு ஆறாயிரம்

@ 102-103 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



கன அடி, அதில் வெளியே விடுவது 28 ஆயிரம் கன அடி. ஆகவே எந்தவிதமான பதட்ட நிலையும் இல்லை, ஆபத்தும் இல்லை. மிகவும் பாதுகாப்பாக இருக்கிறது என்பதைத் தெரிவித்து, இவற்றையெல்லாம் இன்றைக்கு 3-50 மணிக்கு தொலைபேசியின் மூலமாகச் சேகரித்துக் கொடுத்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

**(2) 1980 ஆம் ஆண்டு அரசு ஆணையால் அரிசன நலத்துறையில் பணிபுரியும் தேர்வுநிலை ஆசிரியர்கள் கட்டயாமாக மூன்று ஆண்டுக் காலம் இல்லக் காப்பாளர்களாகப் பணி புரிய வேண்டியுள்ளதால் கணவன் மனைவியாக உள்ள ஆசிரியர்கள் பல்வேறு பகுதிகளில் பிரிக்கப்பட்டுள்ளது குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"1980 ஆம் ஆண்டு தொடக்கத்தில் அரசு பிறப்பித்த ஒரு ஆணையால் அரிசன நலத்துறையில் பணிபுரியும் தேர்வுநிலை ஆசிரியர்கள் கட்டாயமாக மூன்று ஆண்டுக் காலம் இல்லக் காப்பாளர்களாகப் பணி புரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் கணவன் மனைவியாக உள்ள ஆசிரியர்கள் பல்வேறு பகுதிகளில் பிரிக்கப்பட்டு தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் நிலையால் ஆசிரியர்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து."

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆணையிலே கணவன் மனைவி இருவரையும் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் வேறு இடத்திற்கு மாற்றலாம் அல்லது அதே இடத்தில் இருக்கும்படியாக ஆணையிடலாம் அல்லது அந்த அதிகாரியினுடைய உசிதம் போல் அவர்கள் மாற்றத்தை அனுமதிக்கலாம் என்பது போல ஆணை இருப்பதால், அதிகாரிகள் அரசினுடைய நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் அவர்கள் உசிதம் போல் செய்துவிடுகிறார்கள். அப்படி ஆணையிடலாம், அனுமதிக்கலாம் என்பது போல இல்லாமல் அதற்கு என்று வரையறை செய்து ஆணை பிறப்பிக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

@ 103-104 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1-8-1970 ஆம் ஆண்டு அரசு ஆணையால் அரிசன நலத்துறையில் பணி புரியும் தேர்வு நிலை ஆசிரியர்கள் கட்டாயமாக 5 ஆண்டு காலம் இல்லக் காப்பாளர்களாக பணிபுரிய வேண்டியுள்ளதால் கணவன் மனைவியாக உள்ள ஆசிரியர்கள் பல்வேறு பகுதிகளில் பிரிக்கப்பட்டுள்ளது குறித்து

[1980 ஜூலை 22

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று அரசு இது பற்றிப் பரிசீலித்து ஆவன செய்யும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நீலநாராயணன் : 'ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்' நம்முடைய சட்டமன்ற மேலவைக்கு உறுப்பினர்கள் வருகின்ற வழியில், குறிப்பாக 4-ஆம் நெம்பர் கேட்டில், உறுப்பினர்கள் உள்ளே நுழைய முடியாத அளவுக்கு பெஞ்சுகளும், பலகைகளும் போட்டு அடைத்து வைத்திருக்கிறார்கள். அதற்குரிய காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒன்றுமில்லை. அவைகளை எடுக்க ஆவன செய்யச் சொல்கிறேன்.

3. கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, as indicated by you in your Chambers, I wish to make my comments very short and to finish my speech within ten minutes. Therefore, I request you to permit me to speak in an almost telegraphic language.

Sir, the first point which I wish to raise is this. As has been mentioned by the hon. Member Thiru Meenakshisundaram just now, a constant complaint made by teachers is that they are being freqently transferred from one place to another. Frequently, teachers come to us and say that while they have not been allowed to continue in one place for one year, some other teachers have been allowed to continue in one place for ten or fifteen years. They consider some places to be good places and some other places to be bad places. They are not able to lead a peaceful family life because their wives are being posted to some other places. So, I have been wondering why this system of transfers should exist in the case of teachers of Government schools and colleges alone. I think this system is continuing right from the British days. The teachers working in private schools and colleges are not being transferred from one place to another. The progress of education is not affected because of their not being transferred. I would only request the Hon. Minister to consider whether this system of general transfers of teachers in Government institutions could be abolished. I personally feel that these transfers are also made a



1980 ஜூலை 22] [Thiru G. Swaminathan]

form of punishment. If the teachers do not perform their duties, the officers of the Education Department can go into the details of each case and take action for non-performance of duties. Then, why should they resort to the transfer of these people? There seems to be virtually no control over these transfers. Some teachers are posted to places very far away from their own towns. In Thanjavur and Tiruchirappalli which come in my Constituency, I know many teachers who have been posted to places miles away from their own towns. They work in distant places for 25 or 30 years and then retire from service. Some of the teachers who do not have the necessary influence or who are not able to carry on with the officers of the Education Department are being posted to places 30 or 40 miles away from their towns. They are not being transferred back even after several representations to the Departmental Officers. Recently, I heard about a system that the West Bengal Government had taken up as a policy measure. There, if the Departmental Officers make different kinds of transfers in the case of different people and if those transfers are found to be not very fair, the persons affected can represent to a Committee which has been formed by the Government. That Committee will go into the details of all such transfers effected by the officers. In our State, I myself know of some officers who wantonly order transfers and who do not allow the husband and the wife to work in the same place in spite of repeated representations. I would also mention that some corruption is prevalent at the lower levels in such matters. I think the Hon. Minister might think of two policies : whether any transfer at all is necessary in the case of teachers and whether it could be abolished once and for all or whether frequent transfers could be avoided. There are very frequent transfers and I know of a case where a person has been transferred five times within a period of three years, and such transfers are made only as a sort of punishment for the reason that he has not been carrying on well with the officers of the department. I would, therefore, request the Government to consider the proposal to have a Committee as in West Bengal Government so that such cases of injustice in the form of transfers could be sent to the Committee and the Hon. Minister for review.

Referring to the Education Department, I personally feel that the department is being over-centralised in recent times. Formerly we had the C. E.Os'. and the D.E.Os'. at various places and they were located in close proximity to the people. Many problems of the teachers and managements were solved by them. But, nowadays, I find many people coming all the way to Madras on various errands

and to see the Joint Director or Director on similar matters. I only wish that the functions of the Education Department should be more decentralised.

Another thing I want to stress here is in regard to the Educational Directorate. I personally feel and I have also read a report some time back that about 1.25 lakh employees are either employed in the Directorate or employed under the supervision of the Directorate and there seems to be no man capable of professional management of the personnel problems. The same officials like C. E. Os'., D. E. O's. and others come on promotion and occupy the positions of Director or Joint Director. Sir, there is a new course of Professional Management of Personnel and the Hon. Minister is well aware of the degrees—M. B. A., B. B. A.—personnel and they are fully qualified in dealing with Personnel matters. The Hon. Minister may kindly consider whether he can have professional men in the Directorates of School Education and Collegiate Education to be in charge of personnel matters. I also wish to point out that in regard to the students to be admitted in English medium sections in the Higher Secondary Schools, a directive has been given during the last year that it need not be limited to 30 but any number of students up to 50 or 75 could be admitted. Consequently a large number of them are kept in class-rooms, and they look like Colleges and not like Schools. I request that the number of students in English medium sections should be reduced to 30 or 40 so that the proper norms may be kept. Since there is a lot of demand for English medium education, the schools, particularly private institutions, may be allowed to have one more section instead of having more than seventy or eighty students in a single section. Such a course will also relieve the unemployment problem among the teachers. Regarding the results of the Higher Secondary Examination, I am very happy that nearly 60 per cent of the candidates have passed the Examination. My personal feeling is that in urban areas, the students have done well but in rural areas, in some of the schools I heard that the result was not encouraging. There are some schools in rural areas where there is not even 20 per cent pass, while in the urban areas, the percentage of passes is about 70 or 80. There is a lot of inequality among the students in capacity between urban and rural areas. The Higher Secondary syllabus seems to be very heavy and I would request the Hon. Minister to appoint as many Post-Graduate Teachers as possible in the Schools in rural areas. I find that the inducted teachers are finding it difficult to coach the students, in spite of the orientation course given to them. They say that the syllabus is so heavy that they are not able to absorb them and teach the pupils. Some more orientation courses





should be given to the inducted teachers so that they may be able to absorb and teach the pupils. The results were announced last month end and the mark sheets were obtained only by the 7th or 8th of this month. Before that, the Central Board of Secondary Education had announced the results of its examination and 30 per cent of the seats in the colleges have been filled by the students who had come out successful in the examination conducted by the Central Board of Secondary Education. I would request the Hon. Minister to see that these colleges select candidates for admission after the results of the Higher Secondary Examination of our State are published. From the next year onwards, the results of the Higher Secondary Examination of our State may also be published quite early instead of dragging it on till the 7th of July, in order to avoid cropping up of problems.

[பிற்பகல் 4-20]

Out of a total of 2.50 lakhs of students studying in the Higher Secondary Schools, nearly 20 per cent have taken to vocational courses. Many of those students who took vocational courses in the plus 2 stage now seek admissions to Colleges. But, because they have taken vocational courses, they are not able to get admission in the Colleges. Originally, they had a temptation to join the vocational courses. But, now, many of them want to go to the Colleges. I am informed that these students are not being admitted in Colleges on the ground that they are not suitable to study in the Colleges. Incidentally, I may also point out that these students find it very difficult to get admission in the polytechnics also. Naturally, they get highly frustrated. According to the policy evolved by the Government of India in the matter of the vocational stream, we should not remain content with 20 per cent of students in the vocational courses and we should aim at increasing it to 50 per cent. Now, in our State, we are having only 20 per cent of the plus 2 students in the vocational courses. If this percentage interest to 50 per cent after some years, I do not know what we are going to do to admit all those students in colleges.

Sir, I am thankul to the Hon. Minister for having increased the number of seats in the polytechnics. Still, a number of people seek admission in the polytechnics but they are not able to get admission. These people get a sense of frustration that their qualification is not sufficient to get full employment and that they have not attained enough skill to get employment. Therefore, the Government should see that these people who take to vocational courses and pass out of the Secondary Schools are provided

employment opportunities in Government service. If it is not possible, Government should recommend such persons for appointment in appropriate branches in private concerns.

Sir, in Karnataka State, I find that private individuals are starting many colleges and especially engineering colleges. In such engineering colleges, they collect capitation fees ranging from Rs. 25,000 to 50,000. I also heard that a student paid even one lakh of rupees to get admission in the engineering course. Besides students from the Karnataka State, student, from other States including our town State pay capitation fees and get admission in such colleges. People who are wealthy can pay Rs. 25,000 or Rs. 50,000 and get their children admitted in such colleges. I feel that there is nothing wrong in having private colleges which collect capitation fees. If somebody who belongs to a wealthy family is able to pay Rs. 25,000 or Rs. 50,000 and get admission in an engineering college, why should he be prevented? If we prohibit the opening of such colleges, ultimately, our students would go to colleges in Karnataka. Moreover, people in our State would be paying money to colleges in other States. Therefore, I request the Hon. Minister to consider, the question why we also should not have such colleges in our State.

Sir, the Secondary School-Leaving Certificate students who qualified for the National Merit Certificate have not received their certificates even after two years. My daughter stood within the 25th rank in the State and thus qualified herself for the National Merit Certificate. But even after two years she has not received the certificate. The students lose enthusiasm if they do not get the certificates in time. Some such students told me that they hoped to get the certificates only during their grand children's time. If the certificates are given in time, the students would feel happy about their achievement. Similarly, the scholarship amounts also are not being paid promptly. I received some representations from teachers and others in my Constituency to the effect that because the scholarship amounts were received belatedly, they could not educate their children.

Sir, we find that some students pass their examinations meritoriously. But, I am told that a particular boy who passed the Higher Secondary Examination with the first rank in the State is not able to get admission in a particular course which he wants to join. We can imagine to what amount of frustration that boy would be put if he is unable to join a course in a particular college



of his choice. What we do it is to publish the photograph of such students in the newspapers and we congratulate those students. But the parents of such students complain that they are not able to get admission for such students in particular courses. Therefore, the Government should come forward to see that such students get admission in the courses and colleges which they want to join.

Sir, I have got one more point to mention and with that I will conclude. Regarding elections in Colleges, I find now that there is a lot of propaganda activity going on in the colleges. In Thanjavur, where I had been two days back, a lot of scribbling in the form of propaganda has been done even in the Railway Station. Formerly the election activities were confined to the College campus. I now find that the slogans are written throughout the town and it appears as if an election to the Legislature is about to take place and this seems to be unwarranted. After such an election, the person who gets elected in the College election feels himself as a politician. Those persons spoil themselves and also spoil the career of their fellow students, because when they indulge in Union activities, principals and lecturers have to talk to them on various matters. I feel that the Government may kindly think about the matter and it would be better if the elections in colleges are abolished altogether.

* THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I want to be very short, because I know the limitation of time that has been imposed by you. There is one point on which I wish to place my views before this House, though, I know, it will be very unpalatable. I feel it is my duty to bring to the notice of the Government the provisions in the Constitution. Sir, Article 15 of the Constitution says that the State shall not discriminate against any citizen on grounds only of religion, race, caste, sex, place of birth or any of them and that no citizen shall, on grounds only of religion, race, caste, sex, place of birth or any of them, be subject to any disability, liability, restriction or condition with regard to access to shops. . . . etc. Finally, Article 15 (4) says that nothing in this article or in clause (2) of article 29 shall prevent the State from making any special provision for the advancement of any socially and educationally backward classes of citizens or for the Scheduled Castes and the Scheduled Tribes. Sir, this is a healthy provision. Sir, Articles 341 and 342 of the Constitution make provision for notifying the Scheduled Castes and Scheduled Tribes. These Constitutional provisions enable the

(Thiru G. Vasantha Pai) [1980 ஜூலை 22

Government to make reservations for Scheduled Castes and Tribes and Backward Classes in employment. The Policy Note mentions that in this year about 1,17,000 candidates have appeared for the XII Standard Examination out of whom 59 per cent, namely, about 70,000 have come out successful and all of them become eligible for collegiate education. Nearly 50 to 75 per cent of them alone can be admitted into the colleges. According to the Note given to us, out of the seats available, 50 per cent have been reserved for Backward Classes and 18 per cent for Scheduled Castes and Tribes. If 68 per cent of the seats have been reserved for them, there remain only 32 per cent available for the other forward communities. I do not know what is the distinction between forward and backward communities. For example, the Hon. the Finance Minister Thiru Nedunchezhian belongs to the forward class and I am told that the family of Arcot Mudaliars belongs to the backward class.

Thiru G. SWAMINATHAN : I would like to remind my hon. Friend Thiru Vasantha Pai that the remaining 32 per cent is not reserved for the Forward Classes, since the Backward Class and Scheduled Caste and Tribe students can also get a seat out of the 32 per cent seats.

Thiru G. VASANTHA PAI : I am also aware of that and I am coming to that point a little later. I find that in all educational institutions even the students belonging to Backward Class, Scheduled Castes and Tribes who have passed the qualifying examination in their third attempt have been admitted, while the really brilliant efficient students belonging to the forward communities have been refused admission. The student who has got very high marks is refused admission merely because he or she belongs to the forward class. I would like to mention here who the forward classes are. The Brahmins, the Karnarthars, the Mudaliyars, the Nattukkottai Chettiars, the non-vegetarian Pillais, Reddiars, some of the Muslims and Christians who are converts from the forward classes,—these are the persons belonging to forward classes and the

(பிற்பகல் 4-30)

others are all backward classes. As I pointed out earlier, how can Thiru A. R. Damodaran or his family be considered backward ?

* Thiru A. R. DAMODARAN : I wish to point out one thing to the hon. Member. I may be forward or even Dr. Karunanidhi who was the Chief Minister of Tamil Nadu may be forward. That does not mean that the communities become forward.



1980 ஜூலை 22]

Thiru G. VASANTHA PAI : Sir, I am only asking whether there is any line of distinction. Even in the community which my hon. Friend claims to be backward, there are brilliant people. That is an indication that that community is no longer backward. As far as Arcot Mudaliars are concerned, I have got the greatest respect for them. Dr. Lakshmanaswami Mudaliar was the Vice-Chancellor of the Madras University and he has made an enormous contribution to education. I can never consider Arcot Mudaliars backward at all.

Thiru A. R. DAMODARAN : Sir, I wish to point out one more thing to the hon. Member. There is no such thing as Arcot Mudaliar. The name of the community is Thuluva Vellala. He should at least speak with proper knowledge of the caste.

Thiru G. VASANTHA PAI : They are well-known only as Thiru Arcot Damodaran, Thiru Arcot Lakshmanaswami Mudaliar, Thiru Arcot Ramaswami Mudaliar and Thiru Arcot Krishnaswami Mudaliar. They are all Arcot Mudaliars.

[பிற்பகல் 4-30]

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* ஆற்காடில் பிறந்தவர்கள் எல்லாம் பார்வர்டா ?

*திரு. ஜி. வசந்த பை :* அப்படிச் சொல்லவில்லை. முதலியார் பற்றிப் பேசும்போது நாவலருடைய முதலியார் பிரிவினரை பார்வர்ட் என்றும், ஆற்காடு முதலியார் பிரிவினரை பேக்வர்ட் என்றும் சொல்லுகிறார்கள். இரண்டு பிரிவினரையும் ஒப்பிடுவதற்காக அப்படிச் சொன்னேன்.
In the same community, how can one be backward and another forward ? I am only mentioning this to say that there is no yardstick by which one can be distinguished from the other. There is no reasonable differentia by which you can differentiate a forward community from a backward community. A backward community changes like Equity with the foot of the Chancellor and here it is the foot of the Government. Government can make persons backward or forward as they like and there is no proper differentia or yardstick for measuring who is backward and who is forward. Article 15 (4) of the Constitution which I read out says only that provision shall be made for them. That does not mean that they can be a majority enjoying a reservation of 68 per cent. To reserve 68 per cent of seats in a college to Backward Classes and to say that the remaining 32 per cent is open for all including Back-

ward Classes makes education a farce. If today the educational institutions are not prospering, it is because 90 per cent of the candidates belonging to the forward classes are denied admissions. They have to go somewhere else, get into some college after spending a lot of money and learn something. Sometimes they even go abroad to study. Some of them get so frustrated that they sit at home and that leads to further frustration. So, the Government have to do something about this at an early point of time. In this connection, I would like to make a suggestion. There may be evening classes run exclusively either for the Backward Classes, Scheduled Castes and Scheduled Tribes or for the forward communities. The morning classes may be thrown open to everybody according to merit. Unless this is done, there will be a lot of frustration generating in this country and people who belong to the forward classes, but who are really an oppressed minority, will have a reason to grouse about. I would request the Hon. Minister to consider this in the larger angle and not think of temporary measures of amelioration or pacification for some group and try to create more and more backward people. We must proceed forward and not come backward. I thought that in the 33 years since our Constitution came into being, the ratio between the Backward Classes and the forward classes would have narrowed. But, it is now 68 per cent for Backward Classes and Scheduled Castes as against 32 per cent for forward classes. I would make an honest request to the Hon. the Education Minister to revise this policy and not to increase the percentage of representation to Backward Classes in schools and colleges and even in employment. Instead, he should slowly and gradually reduce it till everybody becomes equal, vies with each other and becomes able to hold posts or get admissions into educational institutions purely based on merit. Sir, in the Governor's Address, it has been stated thus :—

"Government proposes to set up a Centre for Appropriate Technology to develop employment opportunities. This Centre utilising the scientific knowledge available in India and abroad will suggest measures to improve the existing industries, to start new industries, and to promote research and adaptation of technology. This Centre will include scientists and technologists. With the aid of this Institution, Government hopes to open new vistas of Industrial development in the State."

Sir, the Government have opened a University called Perarignar Anna University of Technology and there is a Centre in this University looking into problems connected with scientific advancement and technology. The Government should give all possible encouragement to that Centre instead of creating a new Centre. I could understand a Centre being created about four or five years later. The Government could have a nucleus in the Technological University itself so that it could attract the Experts from other Universities abroad. I am referring to one Mr. Rama Iyengar who came from the University of Montreal and who had discussions with the previous Government on the question of technological assistance. But nothing seems to have come out of it. I met this gentleman at Montreal and also when he came to Madras to hold discussions with the Government. I do not know what the result of the discussion is. When persons who are in the teaching profession elsewhere come here, it will be better to utilise them in our Universities. If a nucleus is started in the Perarignar Anna University of Technology, we could get much technological assistance from abroad. I can tell you that there are a number of Madrasis abroad. Thiru Abimanyu Buch was an employee of Sheik Mohammed Rowther firm in Madras on a salary of Rs. 400 p.m. and he is getting now 3,000 dollars every month and he is associated with American Technology in Space Flights and he was responsible for the middle position of Apollo—8, Saturn mission launched in December 1968. When I returned to India in 1971, I wrote about him to the Hon. Prime Minister and he was also offered a job by late Vikram Sarabhai at the instance of the Prime Minister ; but the salary offered to him was very low. He had married an American woman and it is costly to maintain foreign wives. In those circumstances, he was not able to come back to India. Therefore, I would request the Government to see whether our Universities could attract the Professors from foreign Universities and utilise them to ensure our technological advancement.

I think I have only two minutes more and I am coming to the end of my speech. I am only mentioning this in passing to enable the Government to take steps to keep their technological capacity perfect—and, at the same time, to avoid spending more on account of the creation of new Centre, when the old Centre in the Perarignar Anna University of Technology could be used. The work that is being done there could be watched at least for five years and thereafter a separate Centre could be started for industrial and other purposes, if it is not satisfactory. With these words, I thank you for the opportunity given and close my speech.

* Thirumathi MANDAKINI KRISHNAMURTHI: Hon. Chairman, it gives me great pleasure to offer my remarks on the Policy Note on Education. These remarks are made from out of my own experience with certain institutions I am connected with. As we go through this Policy Note on Education, it starts with pre-Primary Education. We have seen that there are only 40 pre-primary schools recognised by the Government in this State. But now pre-primary education has come to stay and if a survey is taken even in the villages, many of the villagers want pre-primary school or Balwadi in the villages. Several Commissions have decided that pre-primary education should be the responsibility of voluntary organisations and the funds that are available will have to be used for elementary, secondary and higher education. The Central Social Welfare Board started many Balwadis in different parts of the country and our own State has more than 500 Balwadis. When we say that women's education should be improved, it is necessary that in rural areas we must have a larger number of Balwadis. If the Government are not able to open Balwadis, they could entrust the work of opening these Balwadis to the Panchayats. Every Girls' School should have a Balwadi attached to it so that the elder children are not dragged to homes to look after the little ones and on that account, kept at home without proper education. The other day I read a report which said a survey showed there was 75 per cent illiteracy in India and 50 per cent of the 25 per cent women who went for education turned out to be

(பிற்பகல் 4-40)

drop-outs. Therefore, we have to think of having a special programme for women's education. I am sorry to note that no mention has been made in the Policy Note about women's education. The other day also I made mention that a State Branch of National Council of Women's Education should be in existence. This Council is a body appointed by Government at the Centre and not in the States I hope that the Council will be revived and if it is in existence it will be made more realistic, so that more attention may be paid to women's education.

While going through the Policy Note, I found that there were only three Physical Education Teachers' Training Colleges in this State. They are not enough. We need more Physical Education Teachers' Training Colleges. Again and again, women come and tell me that it is a myth that we can any longer depend upon men. The days of Robin Hood have gone and women have to depend only on self-defence. Therefore, women need to know self-defence



methods. Such methods should be taught under the Physical Education programme. Therefore, I request the Government to examine the question of opening a Physical Education Training College exclusively for women. There is a provision of Rs. 70 lakhs for Youth Welfare and other special programmes. In Gwalior, they have a College of Physical Education for Women, named after Rani Lakshmibai. In the same way, we can also have a Rani Mangamma Physical Education College for Women in our State. If such an institution is opened, women will join in large numbers.

Sir, I find from the Policy Note that we have now only 78 teachers training institutes. More than half of them are Government institutions and the rest are run by voluntary organisations. Recently, two sections have been abolished in the teachers' training institutes. Most of the teachers appointed by voluntary organisations to these training institutes are only skeleton staff as they do not get full Government scale of salaries. The high school sans its shape, does not get full Government aid. The management has to bear nearly 50 per cent. The number of such teachers employed by voluntary organisations would be very few. Therefore, I feel that a 100 per cent grant on their salaries may also be given as is being done in the case of primary school teachers and high school teachers. Now, the teachers' training programme has assumed much importance. With the introduction of C.A.Pt and PECR programmes, there is a change of curriculum and a Headmistress becomes a very important person to carry out these programmes. Therefore, I feel that if a 100 per cent grant is given, these schools could function in a better manner.

Sir, I would like to say a few words about the programme for Higher Secondary Schools. My understanding of the Matching Grants for building and equipment is that if we pay 50 per cent, we will get 50 per cent from the Government. Now, we are being given 50 per cent contribution for scientific equipment for the vocational courses. I feel that it will be of great help to voluntary organisations if they are given 50 per cent contributions in respect of buildings and other equipments also. The programme of vocational courses is one of the wonderful programmes that we are having in our State and the system of vocational courses is making much headway. I think that I can speak with some authority on this because I am associated with an institution where we run a vocational course in Nursing. Recently, many girls from the backward district of Dharmapuri came to our institution seeking admission to that course. When I asked them why they had come all the way to Madras when they might be having

they said that there was no hostel there. Therefore, hostels are very necessary and the existence of hostels would be an incentive for enrolling more girl-students. Now the Government of India are giving liberal loans for construction of hostels. If we take advantage of this, we can open hostels and attach them to all the Higher Secondary Schools so as to benefit the girl-students.

Sir, we have recently introduced a scheme by which the children will not be detained in classes I to III. When this rule came, a number of teachers working in the institution with which I am associated came running to me and said, 'Oh, the parents will have no fear and the children will not study'. I told them, 'Are you not interested in more enrolment? Do you want stagnation to continue? Don't you think that the number of drop-outs should be reduced?' This is a measure to encourage better enrolment, lesser drop-outs and lesser stagnation. So, I told those teachers, "If you are really interested in the children, you teach each child in such a way that not a single child fails when you hold your own internal examination. If you do so, you will not feel that you have given a pass to all the children."

That is the attitude that we have to take. But, at the same time, I would like to suggest that we can have this system only in the I and II Standards. Since we have introduced Science, English and many other subjects in the III Standard, if we adopt the same practice of allowing all children to be promoted, without any examination, they will find it difficult to study the subjects in the higher Standards—IV, V Standards. It will be good to have no tests in I and II Standards and we can start having the regular tests from the III Standard.

Sir, one word about reservations and other things. I have my own opinion and I am a Gandhian and I have always believed that there is no difference on account of caste, class, creed or colour. When this ceiling of income at Rs. 9,000 was fixed, a very important highly educated political lady came to me and asked: "Isn't it an injustice to the backward communities? How many of our children are still very much behind? All the forward communities will again go to the front leaving us behind." I think there is some meaning in what she said. Having seen very closely the functioning of educational institutions, I find that we are in a peculiar situation. Our country has many problems and we still have to do something about the people who are not so very well off and who are not able to compete with others due to many disadvantages. But, at the same time, we have to stand close to the people of other countries and show our talents. Why not we have, at least at the professional education stage, instead of talking of selection and reservation of seats, separate Professional Colleges where the students will be admitted only on the basis of merit, without any consideration of caste, creed, etc.? There are many children who do not belong to any caste, being above it. Late Thiru Ambedkar was one such person. We have many more among the backward communities and in other communities. Why not we start such Talent Colleges—Professional Colleges where admission will be only on the basis of merit and talent and not on the basis of reservation for backward class, etc.? If such Colleges were thrown open to talented students, we will be able to solve the problem of frustration that exists in our country. With these words, I thank the Hon. Chairman for giving me so much time. Thank you.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழில் பேசினால் கூட விரைவில் முடிக்க முடியும்.

**புலவர் புலமைப்பித்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் நிதி நிலை அறிக்கை மீது பேசுவதற்காக வாய்ப்பினை இழந்துவிட்டேன் என்ற அடிப்படையில், ஒன்றிரண்டு மணித் துளிகள் அதிகமாகப் போனாலும்,—தமிழிலே மிகச் சுருக்கமாகப் பேச முடியும் என்பதை ஒத்துக்கொண்டிருந்தாலும்—பொறுத்தருள வேண்டும் என்று முன்கூட்டியே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படியென்றால் நேற்றையதினம் பேசியிருக்கலாமே.

**புலவர் புலமைப்பித்தன் :** கல்வித் துறையினுடைய மேம்பாட்டிற்காக தமிழக அரசு எடுத்துக்கொள்கிற முயற்சிகள்—நிதிநிலை ஒதுக்கத்தில் ஏறத்தாழ கால் பங்கு நிதி கல்வித் துறைக்காகச் செலவிடப்படுவது தமிழகத்தின் எதிர்காலத்தினுடைய மிக வெளிச்சமான ஒரு கால கட்டத்தை விளக்கிக் காட்டுகிறது என்பதைக் குறித்து நான் மனப்பூர்வமாக மகிழ்ச்சியுடன் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புறப்பொருட்டாக இருக்கிற துறைகளுக்குச் செலவிடுவதைக் காட்டிலும் அகப்பொருட்டாக விளங்குகிற அறிவு வளர்ச்சிக்கு செலவிடும் தொகை ஒரு சமுதாயத்தின் எதிர்காலத்தை மிகவும் உன்னதமான நிலைக்கு இட்டுச்செல்கிற முயற்சி என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்தத் துறையிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்வித்

[புலவர் புலமைப்பித்தன்] [1980 ஜூலை 22

துறையிலே கால்மெல்லாம் ஈடுபட்டு அதற்குப் பின்னாலே வழக்கறிஞராக மாறி மீண்டும் இந்தத் துறையிலே மகத்தான பணிகளை ஆற்றி வருவதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலிலே நான் மிகவும் அதிகமாக நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிற செய்தி தமிழகத்திலே—சரியாகச் சொல்லப்போனால் தமிழ் வளர்ச்சிக்குச் சங்கடமாக இருக்கிற தமிழ் நாட்டில்—தமிழ் பல்கலைக் கழகம் ஒன்று உருவாக்குவது என்பது மிகவும் தாமதமான முயற்சி என்றாலும், இப்போதாவது வர இருக்கிறதே! வர இருக்கிறதே! என்பதில் நான் மிகுதியான மகிழ்ச்சியடைகிறேன்.

(பிற்பகல் 4-50)

தமிழகத்தில் தமிழ் மொழியை வளர்ப்பதிலேதான் சங்கடம் இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்டினேன். அதுபற்றி நான் அதிகமாக விளக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். ஆகவே தமிழ்ப் பல்கலைக் கழகம் எப்படியெல்லாம் உருவாகப் போகிறது என்பதை நான் கற்பனை செய்து பார்க்கிறேன். பெரும்பாலும் கவிஞர்கள் என்பவர்களின் வாழ்க்கை கற்பனையிலேயே முடிந்துவிடுகிற வாழ்க்கையாக இருப்பதால் நிச்சயமாக இந்த முயற்சி நிறைவேறப் போகிறது என்ற அடிப்படையில் என்னுடைய வாழ்க்கையில், இயற்கையான நியதிக்கு மாறாக இது நடக்க இருப்பது குறித்து நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் எப்படியெல்லாம் உருவாகும் என்பதைப்பற்றி ஆய்ந்து அறிந்து, தெளிந்து ஒரு அறிக்கை உருவாக்குவதற்காக ஒரு குழு அமைக்கப்பட இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியினைப் படிக்கிறபோது, உள்ளம் பூரித்துப் போனேன். அது மிக விரைவில் நடைபெற வேண்டும்.

அடுத்து, வறுமையில் வாடுகிற தமிழாசிரியர்களை—தமிழ் ஆசிரியர்கள் பெரும்பாலும் வறுமையிலும் செம்மையாகத்தான் இருப்பார்கள்—இருந்தாலும், அவர்களையும் தங்களுடைய நெஞ்சத்தில் வைத்து, தமிழ் படித்தவர்களுக்கெல்லாம் ஊக்கம் தருகிற நமது புரட்சித் தலைவரின் இந்த அரசு மாதந்தோறும் ஓய்வு ஊதியமாக ரூ. 250 கொடுக்க முடிவு செய்திருப்பது என்பது உண்மையிலேயே அவருடைய வள்ளல் மனப்பான்மைக்குச் சிறந்த சான்றாக அமைந்திருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு எண்ணிப் பார்த்து பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்



1980 ஜூலை 22] [புலவர் புலமைப்பித்தன்]

கல்விக் கொள்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசியிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும், பொதுவாக நடைமுறைச் சிக்கலில் இருக்கும் ஒரு சில செய்திகளை மட்டுமே பேசியிருக்கிறார்கள். ஆசிரியர்களின் ஊதிய உயர்வு குறித்தும், அவர்களுக்குரிய வீட்டு வாடகைப்படி போன்றவை குறித்தே அடிக்கடி பேசியிருக்கிறார்கள். நாமும் பேசுகிறோம். ஆனாலும், நானே ஒரு தமிழாசிரியனாக இருந்து, தமிழால் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கிற காரணத்தால், ஒரு சில செய்திகளை இந்த அமைச்சரவைக்கும், இந்த மன்றத்திற்கும் தெரிவிக்கலாம் என்று கருதி, அந்த முயற்சியில் ஈடுபடுகிறேன்.

தமிழகத்தில் 'அகாமுதலி' ஒன்று உருவாகிக்கொண்டிருக்கிறது. இந்த 'அகரமுதலி' பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர் 'மொழி ஞாயிறான தேவநேயப் பாவாணர் அவர்கள்'. அவருக்குப் பின்னாலே அவரைப்போன்ற ஒரு தமிழறிஞரை ஒரு ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கு நாம் பெற முடியுமா என்று நாமெல்லாம் ஐயப்படுகிற அளவுக்குச் சிறந்த தமிழறிஞர். அவரிடத்திலே இன்றையதினம் 'அகரமுதலி' தயாரிக்கும் பணி ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. தகுதியானவரிடம் தகுதியான துறை ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பணியை விரைவுபடுத்தியாக வேண்டும். அதைக்கூட கடந்த வாரம் சென்னை நடுவண் நூலகக் கட்டிடத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசும்போது, நான் அவருடைய வாயாலேயே கேட்க முடிந்தது. "நான் உயிரோடு இருக்கிற காலத்திலேயே இதை முடிக்க முடியுமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது, அதுபற்றி நான் கவலைப்படுகிறேன்" என்று அவரே குறிப்பிட்டார். இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், மற்றைய மொழிகளில் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டபோது, இந்தப் பணிக்காக எத்தனை பேர் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதை எண்ணிப் நாம் பார்க்க வேண்டும். 1950-ஆம் ஆண்டில் தொடங்கிய மலையாள மொழி அகர முதலிக்காக 36 பேர் இன்றைக்கும் பணியாற்றி வருகிறார்கள். பூனாவில் இருக்கிற வடமொழிக்காகவென்று உருவாக்கப் பட்டிருக்கிற அந்த மொழிக் குழுவில் 22 பேர் இருந்து பணியாற்றி வருகிறார்கள். கன்னட அகராதியைத் தயாரிக்கும் முயற்சியில் 18 பேர் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆக்ஸ்போர்டு டிக்ஷனரி உருவாக்குவதற்காக 400 அறிஞர்கள் ஈடுபடுத்தப்பட்டு அவர்கள் 113 தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் அகர முதலிக்கோ மொத்தமாக ஈடுபடுத்தப்பட்டிருப்பவர்கள் இருவர்தான் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை நான் பணிந்து கேட்டுக்கொள்வது இந்த முயற்சியில் இன்னும் அதிகமான உறுப்பினர்களை இடம்பெறச் செய்து, இந்த 'அகர

முதலியை' நம்முடைய காலத்தில்தான் செய்ய முடியும் என்று நான் நம்புகிற காரணத்தால்—அதை வலுப்படுத்த, வளப்படுத்த, விரைவுபடுத்த, தமிழ் மொழியை மேலும் மேலும் வளம் பெறச் செய்ய, முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான்.

'அகரம்' மட்டுமே தற்போது முடிவுற்றிருக்கிறது. ஆனால் அதுகூட இன்னும் வெளியிடப்படவில்லை என்று சொன்னால், இந்த முயற்சி முழுமையாக முடிவடைய இன்னும் எத்தனையாண்டுக் காலம் ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே இன்னும் 10 அல்லது 15 உறுப்பினர்களை அதிகப்படுத்தி இந்த மொழி வளத்தை உருவாக்கும் அந்தப் பணியை—அந்தச் சிறிய தொண்டினை—செவ்வனே முடித்துத் தரும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இடைக்காலத்தில் ஒரு இரண்டு மாத காலம் "போனவன் போனாண்டி, இனிமேல் வரமாட்டாண்டி" என்று கருதப்பட்டதன் அடிப்படையில் நடைபெற்ற ஒருசில காரியங்களை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். நான் அதில் முதன்மையாகக் குறிப்பிட விரும்புவது "பாவேந்தர் பாரதிதாசன்" பெயரால் விருது வழங்கும் விழாபற்றியதாகும். தமிழுக்காகவே வாழ்ந்து தமிழ்ச் சமுதாயத்தைத் திருத்திச் செப்பனிட, ஒரு புரட்சிக் கவிஞராக, ஒரு புரட்சிக் கனவாகக் காலமெல்லாம் பணியாற்றிய, காலமெல்லாம் பாடித் திரிந்த அந்தப் பூங்குயிலுக்கு விழா நடத்தும் பொறுப்பைக் கடந்த 2½ ஆண்டுக் காலமாக நமது புரட்சித் தலைவரின் தலைமையில் அமைந்த ஆட்சிதான் மேற்கொண்டிருந்தது. ஆனால் இடைக் காலத்தில் ஒரு இரண்டரை மாத காலம் இருண்ட காலமாக இருந்துவிட்ட காரணத்தால், அப்போது ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் ஏதேதோ பணிகளுக்கெல்லாமோ செலவிட்டாலும், இந்த விழாவை நடத்த முன்வரவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு வந்துதான் பாவேந்தர் நினைவு விழா நடத்தப்பட வேண்டும், அவ்விழாவை ஒட்டி தரப்பட வேண்டிய விருதை வழங்க வேண்டும் என்று கருதியோ என்னவோ அதை நடத்தாமல் விட்டுவிட்டார்கள். இந்த மேல்வையில் 4 இடங்களை நிரப்பும்போதுகூட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு வந்துதான் இதைச் செய்ய வேண்டும் என்று திராணம் காட்ட முடியாதவர்கள், பொறுத்திருக்க முடியாதவர்கள், இந்த விழாவை மட்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வந்துதான் செய்ய வேண்டும் என்று இந்த விழாவையும் நடத்தாமல் போய்விட்டார்கள். அவர் பெயரால் தர வேண்டிய விருதினையும் வழங்குவதையும் தள்ளி வைத்தார்கள்.





என்ன காரணம் என்று என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. இதையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லும்போது பலருக்குச் சந்தேகம் ஏற்படலாம். 'இன்னுமா சந்தேகப்படுகிறீர்கள்' என்று அவர்கள் எண்ணலாம். ஆனால் சந்தேகப்படுவதற்கான சாட்சியங்கள் இருக்கும்போது, வேறு என்ன செய்வது என்று அவர்களுக்கு விளக்க வேண்டியிருக்கிறதே தவிர, வேறில்லை. எனவே பாவேந்தர் நினைவாக விருது வழங்குவதை இனி ஒரு மரபாகவே அரசு கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைக் களஞ்சியம் தயாரிப்பது என்பது மிகச் சிறந்த பணியாகும். இக் கொள்கைக் குறிப்பிலே அதுபற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கலைக் களஞ்சியத்தை உருவாக்கும் பணியைச் சேர்ந்தவர்கள் இன்றையதினம் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்ற வேதனையான செய்தியை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். இது குறித்து அவர்கள் என்னை அடிக்கடி வந்து பார்த்து முறையிடுகிறார்கள். அந்தப் பணியை சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பது கல்வியமைச்சர் அவர்கள் உள்ளத்தில் மிகுந்த ஆர்வமாக இருக்கிறது என்பதை அவரோடு கலந்து பேசுகிறபோது என்னாலே முறையாகப் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே விரைவாக அது குறித்து ஒரு நல்ல முடிவு எடுத்து அந்தப் பணியில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தர வேண்டும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைப் பணிவன்போடு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பழைய தமிழ்ச் சுவடிகளைத் தொகுக்கிற, மற்றும் அச்சிடுகிற பணியை, தொல்பொருள் துறையில் தற்போது ஒப்படைத்திருக்கிறார்கள். இது குறித்த என்னுடைய மாறுபாடான கருத்தை இந்த அவையிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தொல்பொருள் துறையில் இருப்பவர்கள் ஒரு மரபாகவே ஒரு விதியாகவே சமஸ்கிருதத்தில் வடமொழியில் எம்.ஏ., முதுகலைப் பட்டம் பெற்றவர்களே இயக்குநராக இருக்க வேண்டும் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக அந்தத் துறையில் இருப்பவர்களுக்கு ஆழ்ந்த தமிழ்ப் புலமை இருக்குமா என்பது எனக்கு இருக்கும் ஐயமாகும். எனவே தமிழ்ச் சுவடிகளை, ஏட்டுச் சுவடிகளை, ஓலைச் சுவடிகளைத் தொகுத்து அச்சிடுகிற பணி தமிழ் வளர்ச்சித் துறையில் இருக்க வேண்டும். தமிழ் வளர்ச்சித் துறை என்று ஒரு துறை தற்போது இருக்கிறது. அந்தத் துறையில் இருப்பவர்கள் ஆழ்ந்த புலமை மிக்கவர்கள். தமிழ் மொழியை, எழுத்தை எண்ணிக் கற்று அறிந்தவர்கள். எனவே அவர்களிடம் இந்தப் பணி ஒப்படைக்கப்படுவது என்பது தமிழுக்கும் நல்லது என்று கருதி, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும் இது குறித்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[புலவர் புலமைப்பித்தன்] [1980 ஜூலை 22

கல்விக் கொள்கைக் குறிப்பில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது தமிழகத்தில் 117 மத்திய அரசு உயர்நிலைப் பள்ளிகள் இயங்குகின்றன. தமிழகத்தில் 117 மத்திய அரசின் உயர்நிலைப் பள்ளிகள் இருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதானே என்று அப்பாவித்தனமான மகிழ்ச்சி முதலில் எனக்கு ஏற்பட்டது. ஆனால் கொஞ்சம் ஆழ்ந்து பார்க்கிறபோது, இந்த 117 மத்திய அரசுப் பள்ளிகளும் நான் தெரிந்துகொண்ட செய்தியைச் சொல்லுகிறேன். தமிழகத்தில் இந்தியைக் கட்டாயப் பாடமாகச் சொல்லிக் கொடுக்கின்றன. தமிழகத்தில் 117 உயர்நிலைப் பள்ளிகள் மத்திய அரசுப் பள்ளிகளாக இருப்பதில் நான் மகிழ்ச்சியடைந்தாலும், அதே நேரத்தில் இந்த 117 மத்திய அரசுப் பள்ளிகளும் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இருமொழிக் கொள்கை இருக்கிறதே அதைக் கல்லறைக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபடுகிற நிறுவனங்களாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையும் உணருகிறேன். இது நியாயம்தானா என்பதைக் கல்வியமைச்சர் அவர்களும் இந்த அமைச்சரவையும் எண்ணிப் பார்க்க வேண்டும். எனக்குச் சட்டம்பற்றி ஒன்றும் தெரியாது. நான் சட்டத்தைப்பற்றியும் அதிகமாகக் கவலைப்படவில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிதானே தவிர வேறல்ல. சட்டத்தைப்பற்றிக் கவலைப்படுகிற பொறுப்பும் எனக்கு

(பிற்பகல் 5-00)

இல்லை. ஆனால் இப்படிப்பட்ட 117 பள்ளிகள் இருப்பதும், அதன் மூலமாக இந்தியைத் திணிப்பது என்பதும் எந்த அளவுக்குச் சரியானதாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் நடத்தும் கான்வென்ட் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அதைப்பற்றிச் சொன்னால், தனியாருடைய சிறுபான்மையோரின் உரிமைகள் என்று சொல்வார்கள். சட்டத்திலே எதை வேண்டுமானாலும் சொல்லி தப்பித்துக்கொள்ள முடியும். சிறுபான்மையோருடைய உரிமை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்தப் பள்ளிகளிலே மூன்றாவது வகுப்பிலிருந்து இந்தியைச் சொல்லிக் கொடுத்து குழந்தைகளின் குரல்வளையை நெறித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு என்ன மாற்று என்பதைச் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும். சிந்தித்துப் பார்க்கிற பொறுப்பு இந்தப் புறத்திலே உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, அந்தப் புறத்திலே உள்ளவர்களுக்கும் உண்டு. தனியார் துறையைச் சேர்ந்த பள்ளிகள், சிறுபான்மையோர் என்று சொல்லி செந்தமிழுக்கு ஊறு விளைவிக்கின்ற முயற்சியில் ஈடுபடாமலிருக்க, அதைத் தடுக்க என்ன வழி என்று எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 22] [புலவர் புலமைப்பித்தன்]

தமிழ் நாட்டிலே தமிழை வளர்ப்பதைப் போல சங்கடமான காரியம் வேறு ஒன்றுமில்லை என்று முதலிலேயே சொன்னேன். அதற்கு எடுத்துக்காட்டாக நான் ஒன்றைச் சொல்லுகிறபோது, அடிப்படை உரிமைகள், சட்டங்கள் என்று சொன்னார்கள். ஒருசில பத்திரிகைகள்—நான் பத்திரிகையினுடைய பெயரைக் குறிப்பிடத் தேவையில்லை—ஒரு முன்னுரையோடு தொடங்கியிருக்கிறார்கள். "தமிழக அரசின் மொழிக் கொள்கையின் காரணமாக நான் தமிழ் நாட்டிலே இந்தப் பணியைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது" என்று முன்னுரை போட்டுக்கொண்டு இந்திப் பாடங்களைச் சொல்லித் தருகிறார்கள். நான் இதைச் சொன்னால், அடிப்படை உரிமைகள், சட்டம் என்பார்கள். நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன், கல்வித் துறையில் நான் ஒரு தற்குறி, சட்டம் தெரியாது, ஆனால் தர்மம் தெரியும், நியாயம் தெரியும். அந்த வகையில் சொல்லுகிறேன், இது என்ன நோக்கம் என்று எனக்கு விளங்கவில்லை. "தமிழக அரசினுடைய மொழிக் கொள்கை ஒருவிதமாக இருக்கிற காரணத்தாலே, நான் இந்தப் பணியைச் செய்ய வேண்டியவனாக இருக்கிறேன்" என்று சொன்னால், அதற்கு என்ன பொருள் என்று இன்னமும் எனக்கு விளங்கவில்லை. யாருக்காவது விளங்கியிருந்தால், வெளியே வந்து இரகசியமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனுடைய நோக்கம் என்ன, பொருள் என்னவென்று புரியவில்லை.

THIRUMATHI TARA CHERIAN. People who send their children to those schools are employed in Central Government.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் தமிழிலேயே சொல்லலாம்.

* **திருமதி தாரா செரியன்** : மத்திய அரசு நடத்துகிற பள்ளிகளில் படிக்கிற பிள்ளைகள் யாரென்று பார்த்தால், அகில இந்திய சர்வீசிலிருந்தும், ஆர்மட் போர்ஸிலிருந்தும், மத்திய அரசுப் பணியிலிருந்தும் வடக்கேயிருந்து வந்தவர்களின் பிள்ளைகள்தான் என்று தெரிகிறது. அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும்போது இந்தியைக் கற்றுக் கொடுக்க வேண்டியது அத்தியாவசியம்.

**புலவர் புலமைப்பித்தன்** : இங்கேயிருந்து அப்படிப்பட்ட பணியிலே போயிருக்கிறவர்களுக்கு வடக்கே எத்தனை பள்ளிகள் இருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அதைவிட ரொம்ப அத்தியாவசியமானது, மாண்புமிகு உறுப்பினருக்கு அளித்த நேரம் முடிந்து விட்டது என்பதுதான்.

**புலவர் புலமைப்பித்தன் :** வடக்கே தமிழைச் சொல்லித்தருகிற பள்ளிகளை எத்தனை உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், இதை மகிழ்ச்சியோடு ஒத்துக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். அதனாலே தமிழ் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே நாம் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டியது நம்முடைய கடமை. காற்று நுழையாத இடத்திலே கூட இந்தியை நுழைக்கும் முயற்சிகள் எப்போதும் நடக்கும். நாம் மட்டும் கண் அயர்ந்தால் தவறுகள் நிகழ்ந்துவிடும். ஆகவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

"நைந்ததெனில் நைந்து போகும் என் வாழ்வு ;
நன்நிலை உனக்கு எனில் எனக்குந்தானே "

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னார். ஆகவே மொத்தமாக சமுதாயத்தின் வாழ்வு தாழ்ந்து போகுமென்று கருதுகிற காரணத்தாலே, இதை கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை நினைவுபடுத்துவது என்னுடைய நீங்காத கடமையென்று சொல்லுகிறேன்.

இன்னொன்று, ஆங்கிலத்தில் பி.எஸ்சி. படித்துவிட்டு, பி.ஏ. படித்துவிட்டு எம்.ஏ. பாடம் நடத்தக்கூடாதென்று கட்டுப்பாடு இருக்கிறது. ஆனால் தமிழ் மட்டும் ஒரு காலத்திலே கிள்ளுக்கீரையாக இருந்தபடியால், அது தொடர்ந்து வருகிறது. தமிழ் படிக்கக் கூடாதென்று நான் நினைக்கவில்லை. தமிழ் படிக்க வேண்டும். ஆனால் இளங்கலை பாடத்தை வேறு துறையிலே படித்து விட்டு ஊதிய உயர்வுகருதி பணத்திற்காக மட்டுமே முதுகலைப் பாடத்தை தமிழிலே பெறுகிற நிலை இருக்கிறது. தமிழ் மொழி உயரிய மொழி என்று பாராட்டப்படுகிற மொழியை தவறாகச் சொல்லிக் கொடுத்தால், அதனுடைய விளைவு மிகவும் மோசமாகப் போய்விடும். ஆகவே முறையாக தமிழ் படித்து, எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் மட்டுமே உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்கு தமிழ் பாடத்தைப் போதிக்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டை உருவாக்கித் தர வேண்டும். ஊதிய உயர்வுக்காக மட்டுமே படிப்பவர்களை தமிழில் நான்கு வரிகள் எழுதச் சொன்னால், 4 பிழைகளோடு எழுதுகிறார்கள். அப்படிப் பட்ட நிலைமையில் இருப்பவர்கள் பிள்ளைகளுக்கு எப்படிச் சொல்லிக் கொடுப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ்மொழி எளிதான மொழி என்று யாரும் கருதிவிட தேவையில்லை. தமிழ் மொழி செம்மையான மொழி, தானே இயங்கக் கூடிய ஆற்றல் பெற்ற மொழி. நல்ல புலமை பெற்ற மொழி. ஆகவே தமிழ் மொழியில் நல்ல புலமை பெற்றிருப்பவர்கள் மேல்நிலையில் உள்ள வகுப்புகளில் சொல்லித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மொழித் துறையைப்பற்றி ஏராளமான கருத்துக்களை நாம் சொல்லித்தர வேண்டும். அடிக்கடி கல்வியமைச்சர் அவர்களைச் சந்திக்கிறபோது, தனியாகச் சொல்லிக் கொள்ள முடியும் என்றாலும், இந்த மாமன்றத்திலே சொல்லுகிற வாய்ப்பைப் பெற வேண்டும் என்ற முறையிலே சிலவற்றைச் சொன்னேன். விட்டுப்போனவற்றைத் தொட்டுத் தொடங்கி அவரோடு இருக்கிற காலத்திலே சொல்லி வெற்றிகரமாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்வேன் என்று சொல்லி, மூன்று மணித் துளிகள் அதிகமாகிவிட்டதற்காக, தலைவர் அவர்களே, தாங்கள் பொறுத்தருள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஐந்து மணித் துளிகள்.

THIRU A. R. DAMODARAN : Sir, I rise to commend the Hon. the Minister for Education and the officers of the Education Department on the excellent note—Policy Note on Education that has been placed before this House. Since I have only ten minutes' time, I hope they will forgive me—the Hon. Minister will forgive me if I do not waste my time in praising them and refer only to certain points, certain deficiencies which I feel could be rectified, in the Education Department.

The first point is about the State Education Consultative Committee. We had it last year and it did not meet for one year and while I am quite sure it will meet, since it is formed this year, I would request the Hon. Minister to include the representatives of Universities, Managements of Schools, Colleges and Technological Institutions and also representatives of industries. If we restrict the membership of this Consultative Committees only to the Members of the Assembly and the Council, all that will happen is a repetition of debates that take place in both these Houses. With due respect to the Members of these Houses, I feel that more frank and honest appraisal of the problem of education could be made if the representatives of the various institutions, and managements were there because there are many problems connected with the management, the University, Technological institutions and industries which can be fruitfully discussed in the Consultative Committee. I hope the Hon. Minister will consider this.

Number two, Sir, I find there is a single sentence in this Note whereby it has been stated that the 45 schools for handicapped—physically handicapped, deaf and dumb and blind—have been transferred to the Social Welfare Department This seems to have been done in April 1979 and I did not know about this until a

month ago when we visited a School at Cuddalore which is meant for the blind. There are 23 pupils in this school, there is a music master, there is a craft master, there is a Physical )ducation Teacher, there is a cook, an Ayah and a peon. There was a Headmistress for this school from 1979. Unfortunately, the Headmistress did not know Braille and she could not teach the blind pupils anything at all ; and for one year we had a Headmistress who had no knowledge of Braille and she also left that school in March 1980. Today these blind children have absolutely no education in that

(பிற்பகல் 5-10)

school. This is a sample of what happens when the Education Department jettisons 45 well-managed schools to the Social Welfare Department which, with due respect, is not fully equipped perhaps to deal with institutions of this type. I would request that either the Government may re-transfer the schools to the Education Department or, if not, the Hon. the Education Minister may kindly have a word with the Hon. the Minister for Social Welfare in the matter because the Welfare Department is not geared to looking after the needs of such institutions. Today we are spending Rs. 100 per capita per child in that school and there is a teacher-pupil ratio of 1:5. But I find that the children are absolutely miserable because they do not receive education of any kind. I do not know what is happening in other schools for the blind, deaf and dumb but I would request the Government to think over this matter.

Sir, the other point which I would like to make is about the vocational stream in the Higher Secondary Course. We have ourselves spoken a great deal about the vocational stream and the academic stream of the + 2 pattern of education. I must sincerely compliment the Government on the determination they have had in pushing through the + 2 scheme of education because we wanted an all-India pattern of schooling. Now, large funds have been devoted to the academic stream. Even last year, I think that more than three crores of rupees have been spent for buildings and for providing laboratories. This year, the amount may be even more. But, as far as the vocational stream is concerned, there is some room for real concern. The hon. Member Thirumathi Mandakini Krishnamurthi referred to the fact that the vocational course in Nursing was receiving great acclaim from the students who wanted to join that course. I accept it. But we are having a number of vocational courses in our + 2 schools where, unfortunately we have not pumped in enough resources for vocational training. In fact, exactly the opposite has occurred. We



doing well in the academic stream. We need not feel ashamed of the syllabi although the hon. Member Thiru Swaminathan had complained of a heavy syllabus. It is true that it is a heavy syllabus but we have learnt to cope with that syllabus. It is a matter of proud achievement that we have commenced building laboratories in a number of + 2 schools even in the rural areas. it is a great achievement and a great impetus is being given to rural education. But, the Kothari Commission envisaged the vocational course as a terminal course. They expected the boy to complete his + 2 vocational course and then to go over into employment in industries or into self-employment in his own industry. Therefore, when we adopted a scheme of vocationalisation of education at the + 2 stage, we should have devoted very special attention to strengthening the education in the vocational courses. Unfortunitely, we have not done so because of lack of resources with the result that many of the vocational courses that are being conducted in our schools today lack the materials and the equipments that are essential for running of vocational courses. For example, they have vocational courses in agriculture, like Farm Mechanics. Now, if a boy is to be trained in that, he must have some machinery with which he can operate. One cannot learn skills excepting by using one's hands and this is one of the essential lessons of vocational education. Therefore, we expect to give a 2 education to a boy who will qualify in Farm Mechanics but would not have seen the inside of a tractor and would not know how to manipulate a pumpset. I really feel that we are doing a disservice by this. Similarly, in the course 'Commerce and Business', they train boys for Office Secretaryship. But there is not a single typewriter on which the boy can learn typewriting. I do not know whether typewriting is a compulsory subject in this course. But, in my opinion, if I want an Office Secretary, I would like him to know shorthand and typewriting. There are schools where there are no typewriters and there are schools where there is only one typewriter on which the boy cannot practise at all. Therefore, it is a big hoax on the boy who thinks that he is going to be an Office Secretary. Therefore, in the vocational courses, they must have better trained instructors to teach the boys the vocational courses in which they are being trained. The hon. Member Thirumathi Mandakini Krishnamurthi referred to the Nursing course and she was right. It is an institution where training is given by expert instructors. There are many fields in vocational courses where we are faring badly because of lack of trained instructors and lack of proper written syllabi. The boys have been just thrown into those courses. As far as the other complications like admissions to colleges, polytechnics, etc. are con-

cerned, I wait for the Policy Note on Education relating to the year 1981 to find out how many of these boys have been admitted to colleges and polytechnics.

Sir, my next point is about audio-visual education. The world over it is recognised as an essential thing especially for backward areas. In the rural areas, we want to train students belonging to the Scheduled Castes, Scheduled Tribes and Backward Classes. But, even today, if you go to a primary school in some place in Kallakurichi Taluk you will find that there are children who have not seen an electric train. We have given them lessons on locomotives, space-rockets and aeroplanes but they do not even know what they mean. So, audio-visual education is very important. But I find that in the Policy Note on Education, a magnificent provision of 25 thousand rupees has been made for the entire State of Tamil Nadu for providing film strips and slides for display in 700 Schools which are pleased to have 16 mm projectors. I do not know how many of these projectors are in working condition and that is a separate question we have to ask. But may I ask why the provision for audio-visual education is being depressed to such an extent? The Education Department should be modern looking Even in most advanced countries like the U.S.A. and the U.S.S.R audio-visual education is an essential 'must' in the primary and secondary education stages. I would, therefore, plead with the Hon. Minister that at least during the course of this year, when funds become available in some other sector which are not spent, such funds might be allotted to audio-visual education especially in rural areas. I am not talking of urban areas where we have television, cinemas and so many other facilities through which the students can get necessary experience. But in rural areas, there is a great need to strengthen the audio-visual education, particularly in the backward areas.

Sir, many people have referred to the question of English medium. I know I will be hurting the feelings of many and the sensitivity of many people on this issue. But I wish to stick to my original view that on the question of medium of education, the Government should adopt a liberal policy. It does not matter whether we consider this particular medium to be bad or good. We may not want it but the students want it. The policy of the Tamil Nadu Government from 1967 to 1980—and I mention this period because during this period the D.M.K. and the A.I.A.D.M.K have been in power—has deliberately created a black-market for English education, deliberately created a black-market for English medium schools. Even in the S.S.L.C. schools, during the period between 1968 and 1974,



it was the deliberate policy of the Hon. Minister for Education—Thiru Nedunchezhian at that time—not to permit English medium sections in any school. Afterwards, it has been relaxed and now my only request is, whether the Government permit new English medium institutions or not, not to follow the advice of my hon. Friend Pulavar Pulamaipithan who has complained bitterly about 117 Central Schools. We are having in Tamil Nadu 36,000 elementary schools and Higher Elementary Schools, 3200 High Schools where we teach nothing but Tamil, Tamil and other subjects also incidentally, and the hon. Member is not able to spare 117 Central Schools which incidentally do not prohibit the teaching of Tamil as a second language.

*புலவர் புலமைப்பித்தன் :* மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய பெருவாரியான மக்களுடைய எண்ணமும், அந்த எண்ணத்தினுடைய எதிரொலியாக இருந்துகொண்டிருக்கின்ற அரசின் திட்டமும் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே, கொண்டு வந்த இருமொழித் திட்டம். இந்த நாட்டின் திட்டமாக அது உருவாக்கப்பட்டது. அந்த திட்டத்தைச் சிதறச் செய்கின்ற முயற்சிகள் எதுவாக இருந்தாலும், இந்த நாடு ஏற்றுக்கொள்ளாது என்பதை நான் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru A. R. DAMODARAN : Sir, I do not require any tuition on what Arignar Anna meant in 1967 ; I was here in this Council when he enunciated his policy. It applied only to the State-aided institutions. If the Government think that it is the correct policy, let them continue the same policy. I am only saying that we have created a black-market in Education and people are prepared to pay Rs. 2000 and Rs. 3000 to have education in English medium in minority institutions. We are also criticising the minority institutions. There will be only black-market in English education. I would only refer to another matter to which my hon. Friend Thiru Swaminathan referred. If a census is taken of the officers in the Secretariat and of the Government of Tamil Nadu, if you take a census of M.L.As'., M.L.Cs'. and M.Ps'. in Tamil Nadu, we will find that 95 per cent of them are sending their children to English medium schools.

Thiru G. SWAMINATHAN : and also the Hon. Ministers.

Thiru A. R. DAMODARAN : I have mentioned M.L.As. and M.L.Cs. and the Ministers are also covered by those terms.

Ministers are also M.L.A.s' or M.L.C.'s All of them are M.L.A.'s or M.L.C.'s and I do not want to single them out. My only point is this. Let us be liberal in this matter. We are liberal in the plus 2 courses and the Hon. the Education Minister has allowed English-medium sections in those courses. Of course, he has made it on a fee-levying basis. It has been criticised, but I personally welcome it because I believe that if one wants to go in for a special type of education, one must be prepared to pay for it. In Delhi alone, which is the Capital and which is a city in the Hindi heartland, there are over 387 English-medium High Schools. That will indicate to the Hon. Minister as a pointer that if he neglects English education in Tamil Nadu, the consequences will be disastrous for our sons and our grandsons. Let us not make this mistake. The future generations will curse us if we destroy the English education in Tamil Nadu.

Sir, I will finish in three minutes. I now come to the most important point about the grievances of teachers. This is an issue that has been worrying this House not only now but over the past 10 or 12 years. Ever since 1974, and I particularly mention that year, there has been a steady deterioration in teacher-management relationship and in teacher-Government relationship. There is a reason why it arose in 1974. If we had taken the decision then to implement the U.G.C. scales of pay, we would never have been facing the situation which we are facing today. In fact, the delayed decisions have driven the teachers to the wall and to the streets and to-day it is unfortunate that many of them consider that direct action is the only answer to their problems. I do not blame them because the situation has reached such a stage. In the matter of protecting the rights of teachers, we have brought forth many Acts. In 1966, we had the Madras Private Educational Institutions Regulation Act and in 1976, we had the Tamil Nadu Private College Regulation Act. All these Acts have been struck down because of Article 30-A of the Constitution which gives some protection to the minorities. Sir, in bringing forth a particular Bill to protect the service conditions of the teachers, let us make it very clear that the rights of the management in regard to other matters will not be interfered with but so far as service conditions, salaries, etc., of the teachers are concerned, there will be a Bill to regulate their procedure. If Article 30-A of the Constitution has to be amended to include the words saying "subject to such reasonable restrictions as a State may impose to govern the service conditions of teachers", all of us would certainly welcome such an amendment. I believe that the Education Department has become a department for crisis-management. We manage only one crisis at a time and we are jumping from crisis to crisis. Today, the teachers of Annamalai University are on strike and the examinations have been postponed. I will not go into all the merits but I would only plead with the Hon. Minister that, of the 21 demands which they have mentioned, if he finds there is some merit in the other demands, immediate action may be taken to see that the University authorities comply with certain Government directions in this regard. The Hon. Minister mentioned yesterday that out of the 21 demands only 5 demands related to Government and that the remaining 16 demands were to be dealt with by the University. May I remind the Hon. Minister that Government cannot disclaim responsibility in regard to University affairs because the Director of Collegiate Education is a member of the Syndicate of the Annamalai University and also a member of the Syndicate of the Madurai-Kamaraj University while the Secretary to Government, Education Department is a member of the Syndicate of the Madras University and also member of the Syndicate of the Perarignar Anna University of Techonology? Therefore, the Government are aware of all these problems. These 21 demands are not new to them. They have been on their files and on the desks of the Secretaries for months together. In 1976, when I was a member of the Senate of the Annamalai University, the question of non-confirmation of teachers was raised and the then Vice-Chancellor, Mr. Chandrasekhar, said that he would do it. Therefore, I would request the Government not to hide behind the excuse that this is a matter of University autonomy. Let us realise that today the finances of the University are entirely dependent on Government grants. Of these 21 demands, 18 demands involve financial expenditure and the University pleads that it has no funds to dispense all those amenities which have been requested. I would only close by stating a significant fact that has been mentioned in the Policy Note, and which highlights what I have been saying, that Universities do not receive block-grants in adequate measure. In 1978-79, the non-Plan grants for all the three Universities in Tamil Nadu—the Madurai-Kamaraj University, the Madras University and the Annamalai University—was Rs. 1.22 crores. It was reduced to Rs. 1.15 crores in 1979-80 and to Rs. 1.16 crores in 1980-81. The Plan grant was reduced from Rs. 1.05 crores to Rs. 41 lakhs and then to Rs. 30 lakhs. At a time of inflation when the Government are increasing the Dearness Allowance to the staff, etc., what is the point in reducing block grants to Universities? If the Government want to take over the University, let them take it over

(Thiru A. R. Damodaran) [1980 ஜூலை 22

in a straightforward manner and run it as a Government College. If the Government want them to function as Universities, without adequate finance no University in the world can function. Therefore, without going into the merits of the Annamalai University dispute—I realise there are many things that have been done there —I would request the Hon. Minister to strengthen our Universities and increase the block grants to them so that they may not plead lack of finance to refuse essential increment and promotion to their staff.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவரவர்களே, என்னுடைய அணியைச் சேர்ந்த மேலவை உறுப்பினர்களான திரு. பா. ரா. தாமஸ் அவர்களும், செல்வி லீலாவதி அவர்களும் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். நேற்று கல்விக் கொள்கை குறித்த விவாதத்தில் என்னுடைய அணியில் நான் ஒருவன் மட்டும் பேசினால் போதுமென்று நான் தெரிவித்ததாகவும், அதன் பேரில் அவர்கள் இருவருக்கும் வாய்ப்பு இல்லை என்று தெரிவித்ததாகவும் சொன்னார்கள். நேற்று நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பிரச்சினை பற்றிப் . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லாத ஒன்றைச் சொல்லும்போது, அது பற்றி அபிப்பிராயம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நான் சொல்லவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நான் சொல்வது சரியா, இல்லையா . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் சொல்லவே இல்லை. அது பற்றிப் பேச என்ன இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவரவர்களே, இது போன்ற பிரச்சினைகளைத் தலைவரது அறையிலே தெரிவிக்க வேண்டுமே தவிர, ஒருவருக்கொருவர் கருத்து பரிமாறிக்கொண்டு, இங்கே விளக்கம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கட்சிக்கு ஒருவர்தான் பேச வேண்டுமென்று சொன்னேன். அவர் பேசிவிட்டார், அதனால் நீங்கள் பேச வேண்டாமென்று நான் சொல்லவில்லை. அதற்கு அவசியமும் இல்லை.



1980 ஜூலை 22]

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவரவர்களே, தங்கள் அறையில் ஆசிரியர் பிரதிநிதிகள் கல்விக் கொள்கைக் குறிப்பிலே பேச வாய்ப்பு வேண்டுமென்று கேட்டோம். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் தான் ஒருவராகப் பேசுவதை ஏற்றுக்கொண்டதாகச் சொன்னீர்கள். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் இப்படிப்பட்ட அபிப்பிராயம் சொல்லுவார்களென்று நான் எதிர்பார்க்கவில்லை. அவரை நன்றாகத் தெரியும். அப்படி நான் சொல்லவில்லை. உங்கள் கட்சிக்காக திரு. லெட்சுமிகாந்தன் பேசிவிட்டார், எல்லாக் கட்சிக்காரர்களும் உடன்படிக்கை செய்துகொண்டு, அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். டாக்டர் சனார்த்தனம் அவர்கள் ஆஸ்பத்திரியிலிருந்து வந்து, பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்டார். அறையிலே உடன்படிக்கை ஏற்பட்டுவிட்டது, உங்கள் கட்சியின் சார்பில் புலவர் புலமைப்பித்தன் பேசிவிட்டார், நீங்கள் முன்னாடியே வந்திருந்தால் உங்களைப் பேச அனுமதித்திருப்பேன் என்று சொான்னேன். ‘நான்தான் பேசுவேன் எங்கள் கட்சிக்காக’ என்று அவர்கள் சொன்னதாக நான் சொல்லவில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** ஆசிரியர் பிரதிநிதிகளாக நாங்கள் வரும்போது, எங்களைப்பற்றி, எங்களுடைய முறைகளைப்பற்றி, செயல்பாடுகளைப்பற்றி மக்கள் அறிய விரும்புகிறார்கள். இந்த நிலையிலே தாங்கள் எங்களுடைய உரிமைகளை மறுப்பதால், அதைக் கண்டித்து, நானும், மாண்புமிகு உறுப்பினர்கள் செல்வி லீலாவதியும், திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் வெளி நடப்புச் செய்கிறோம்.

(வெளி நடப்புச் செய்தார்கள்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதுதான் மேலவையின் சரித்திரத்திலேயே முதன்முறையாக நடக்கிறது. அதிகம் பேரைப் பேச அனுமதிக்க முடியவில்லை. எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்று கட்சித் தலைவர்கள் உடன்படிக்கைக்கு வந்த பிறகு, வெளி நடப்பு செய்வதென்பது இதுதான் முதல் முறை. தவறான வழக்கம்.

**திரு. அ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கல்வி சம்பந்தமான கொள்கைக் குறிப்பின்மீது என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தக் கொள்கை அறிக்கையிலே சில அம்சங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மேல்நிலைக் கல்வி

விஸ்தரிப்பு, ஆசிரியர்களுக்கான பல நிவாரணங்கள், கிடைக்க அரசு உத்தரவு
கள், பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் 95,000 பேர்களை அரசு ஊழியர்
களாக்குதல், இன்னும் அதிகமான ஆசிரியர்கள் பதவி ஏற்படுத்த முயற்சிகள்
போன்ற பல அம்சங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரு தவறான எண்ணத்தைப் போக்க
வேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன். ஆசிரியர்களின் பிரதிநிதிகள் இங்கு
தொடர்ந்து தங்களைத் தவிர அதில் வேறு யாருக்கும் அக்கறையில்லை என்ற
எண்ணத்தை உருவாக்குவது நல்லதல்ல. நேற்றுகூடச் சொன்னேன்.
அமைச்சரவர்களும், கொள்கைக் குறிப்பு விவாதத்திற்கு வரும்போது ஒத்தி
வைப்புத் தீர்மானத்தை அனுமதிப்பதில்லை என்று சொன்னார்கள். இருந்
தாலும் ஆசிரியர்களின் பிரச்சினை என்பதற்காகத்தான் அதை அவையில்
கொண்டு வர அனுமதித்தேன். இந்த எண்ணம் தொடருவதற்கு மற்ற கட்சித்
தலைவர்கள் அனுமதிக்கக்கூடாது.

(பிற்பகல் 5-30)

**திரு. ஆ. நல்லசிவன் :** இது போன்ற அரசு நடவடிக்கைகளை நாங்கள்
வரவேற்கிறோம். இதற்கெல்லாம் மேலாக ஒரு விஷயத்தை நான் இங்கே கூற
விரும்புகிறேன்: கல்வி அமைச்சர் அவர்கள் ஆசிரிய-மாணவ சமுதாயத்தின்
மீது கொண்டுள்ள பரிவுணர்ச்சியையும், தமிழ் நாட்டில் கல்வியை வளர்ப்பதற்
காக, அனைவரும் கல்வியைப் பெறுவதற்காக தன் காலத்திலேயே ஏதாவது
உருப்படியாகச் செய்ய வேண்டுமென்று கொண்டிருக்கக் கூடிய சின்சியா
ரிட்டியையும் பாராட்டுகிறேன். இதை நான் முகஸ்துதிக்காகச் சொல்லவில்லை.
கட்சி வேறுபாடு இல்லாமல் கல்வியை வளர்க்க வேண்டுமென்று அவர் செய்
திருக்கக் கூடிய முயற்சிக்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வியை தேசியமயமாக்குகின்ற பிரச்சினையைப் பற்றி
ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கல்வியை தேசியமயமாக்க
வேண்டுமென்று சொல்லும்போது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு
வாதத்தைக் கூறுகிறார்கள். அவருடைய வாதத்தை என்னால் ஏற்க முடி
யாது. கல்வி நிறுவனங்களை தேசியமயமாக்குவதைப் பொறுத்தவரை, அவர்
கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மைனாரிட்டி சமூகத்தினருக்கு கல்வி
நிலையங்களை நடத்த நாம் உரிமையைக் கொடுத்திருக்கும்போது, மெஜாரிட்டி
யினருக்கு இருக்கக்கூடிய உரிமைகளை நாம் மறுக்கக்கூடாது என்பதால்





கல்வியை தேசியமயமாக்க அரசு முனையவில்லை என்ற கருத்தைச் சொன்னார்
கள். நான் இந்தக் கருத்தை ஏற்க முடியாது. மைனாரிட்டியினர் நடத்தக்
கூடிய பல கல்வி நிறுவனங்கள் அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய, ஆசிரியர்
களுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய சட்டங்களையெல்லாம் நிறைவேற்ற மறுக்
கிறார்கள் என்பதோடு மட்டுமல்லாமல் எதிர்க்கவும் செய்கிறார்கள். அதை
எதிர்ப்பதோடு மட்டுமல்லாமல் சுப்ரீம் கோர்ட் வரை சென்றிருக்கிறார்கள்.
ஏன் நீங்கள் ஆசிரியர்களுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய சட்டங்களை நிறை
வேற்றக் கூடாது என்று கேட்டால், "அரசியல் சாசனம் எங்களுக்குச் சில
உரிமைகளைக் கொடுத்திருக்கிறது, ஆகவே அதன்படி நாங்கள் செய்கிறோம்"
என்று சொல்லுகிறார்கள். மைனாரிட்டியினர் தான் அப்படிச் செய்கிறார்கள்.
ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை ஒழுங்காகக் கொடுக்காத காரணத்தால், அரசு
ஆசிரியர்களுக்காக நிவாரணம் அளிக்கக்கூடிய சட்டங்களைப் போட்டு,
மைனாரிட்டி நிர்வாகத்தினர் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டால், மைனா
ரிட்டி நிர்வாகத்தினர் அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்கிற உரிமை
அவர்களுக்கு இருக்கிறது. அந்த உரிமைகளையெல்லாம் இந்த மெஜாரிட்டி
யினருக்கும் தர வேண்டுமென்று அரசே விரும்புகிறதா என்று மாண்புமிகு
அமைச்சரிடமிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மைனாரிட்டி
யினருக்கு உள்ள உரிமைகள் எல்லாம் மெஜாரிட்டியினருக்கும் வேண்டுமென்று
அரசு விரும்புகிறதா ? தனியார் துறையை மேலும் மேலும் வளர விடுவதன்
மூலம் கல்வித் துறையில் வியாபாரம் நடைபெற அரசு ஏன் அனுமதிக்க
வேண்டும் ? இதுகுறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உண்மை
யான காரணத்தைக் கூற மறுக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். உண்
மையான காரணம் என்ன என்பதை நாம் அறிய வேண்டும். நான் சொல்கி
றேன், கல்வியை தேசியமயமாக்க வேண்டுமென்றால், அதற்கு நிறைய பணம்
வேண்டும். அரசாங்கத்திடம் அதற்குப் போதுமான நிதி வசதி இருக்க
வேண்டும். ஆனால் அரசாங்கத்திடம் போதிய நிதி வசதி இல்லை. நமது
அரசாங்கத்தின் நிதி வசதியைப் பொறுத்தவரை, "குண்டு சட்டியில் குதிரை
ஓட்டுவது" போல் இருக்கிறது. மத்திய அரசிடமிருந்து இதற்காகப் பணம்
வேண்டுமென்று கேட்டால், வம்பெல்லாம் வரும். ஆகவே அப்படிக் கேட்பதை
விட்டு விட்டு, வேறு காரணத்தைச் சொல்லி சமாளிக்கலாம் என்று நினைக்
கிறார்கள். மைனாரிட்டியினருக்கு இருக்கக்கூடிய உரிமைகள் மெஜாரிட்டி
யினருக்கு இருக்க வேண்டுமென்ற நினைப்போடு சொல்வது சரியல்ல.
அவற்றை ஏற்று செயல்படுத்த போதிய பணவசதி அரசிடம் இல்லையென்ற
அடிப்படைக் காரணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்க
லாம். ஆனால் உண்மைக் காரணத்தை ஏற்காமல், அதை வெளியே சொல்லா

மல் இருப்பது நல்லதல்ல. தனியாரிடம் மேலும் மேலும் கல்விப் பொறுப்பைக் கொடுத்துக்கொண்டு போகின்ற நிலை சரிதானா? உண்மையான காரணம் அரசிடம் பணமில்லை என்பதுதான். மத்திய அரசிடமிருந்து இந்த அரசு சண்டை போட்டுத்தான் பணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது என்கின்ற உண்மையை இந்த அரசு மக்களிடம் தைரியமாகச் சொல்ல வேண்டும். அதில் இந்த அரசுக்கு என் தயக்கம்? தனியாரை மேலும் மேலும் வளர விடுவது போராட்டம் நடத்த ஏதுவாகும் என்பதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசே இதை நிறைவேற்ற குறுக்கே நிற்கிறதோ என்கிற சந்தேகம் எனக்கு எழுகிறது. மைனாரிட்டியினர் பிரச்சினை பற்றிச் சொல்லும்போது, கான்ஸ்டிட்யூஷன் திருத்தத்தைப் பற்றிய ஒரு கருத்தை நேற்று ஒரு மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்.

கிறிஸ்டியன் மிஷனரிகளைப்பற்றிச் சொன்னார். கிறிஸ்டியன் மிஷனரிகள் நம்முடைய நாட்டிலே கல்விக்காகச் செய்துள்ள தியாகத்தை, தொண்டை நான் எப்போதும் மறுக்கவில்லை. ஆனால் கிறிஸ்டியன் மிஷனரீஸ் வெளிநாட்டு உதவியை நாடி, அவர்களுடைய உதவியைப் பெற்று இத்தகைய காரியங்களைச் செய்கிறார்கள். ஆகவே தான் அரசு அவர்களிடத்திலே வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்முடைய மண்ணில் இருந்துகொண்டு அவர்களுடைய பணத்தில் அவர்கள் இந்த உதவியைச் செய்யவில்லை. வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு தான் இந்த உதவியை அவர்கள் செய்கிறார்கள். இதனால் என்ன நிலைமை என்றால், வட கிழக்கு இந்தியாவிலே 1947 ஆம் ஆண்டிலே சுதந்திரம் பெற்ற பொழுது நார்த் ஈஸ்ட்டர்ன் பகுதி பூராவும் இந்தியாவுடன் சேரக் கூடாது என்று சொன்னார்கள். தேசிய இயக்கத்திலே தேசிய நீரோட்டத்திலே அவர்கள் அன்றைக்கு கலப்பதற்காக வரவும் இல்லை, விரும்பவும் இல்லை. ஏற்கெனவே அங்கு இருந்தவர்கள் ஆங்கிலேயர்களுடைய ஆங்கில மொழியைப் பயிற்சி மொழியாகப் பயின்றுகொண்டிருந்தார்கள். ஆகவே இந்தியா சுதந்திரம் பெற்ற போது, இந்தியாவிலிருந்து தனியாக அந்தப் பகுதிகளைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். வட கிழக்கு இந்தியாவில் கிறிஸ்டியன் மிஷனரீஸ் அங்கு உள்ளவர்களுக்கு ஆதரவாக வேலை செய்தார்கள். ஆனால் அத்தகைய முயற்சி நாட்டிலே ஏற்பட்டிருந்த தேசிய இயக்கத்தாலே தடுத்து நிறுத்தப்பட்டது. வட கிழக்கு மாநிலங்களில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அதிருப்தியைப் பயன்படுத்தி, தொழில் வளர்ச்சி இல்லாத நிலையைப் பயன்படுத்தி, இன்றைக்குக் கூட 7 மாநிலங்களில் பிரிவினையைத் தூண்டி விட்டுக்

கொண்டிருக்கிறார்கள். ஆகவே தான் கிறிஸ்டியன் மிஷனரிசாக வருகிற அனைவரும் நல்லதுக்குத் தான் வருகிறார்கள், தொண்டு செய்யத் தான் வருகிறார்கள் என்கிற கண்ணோட்டத்தோடு அரசு அவர்களைப் பார்க்காமல் இருக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன். ஏற்கெனவே கல்விக்காக பாடுபட்ட மிஷனரிஸ் பற்றி நான் குறைத்து மதிப்பிடுவதாகவோ, சொல்வதாகவோ தயவுசெய்து யாரும் கருதக்கூடாது. கிறிஸ்டியன் மிஷனரிஸ் வட கிழக்கு மாநிலங்களை, 7 மாநிலங்களை இந்தியாவிலிருந்து பிரித்துக்கொண்டு போகிற வகையிலே இன்றையதினம் கையாட்களைப் போல செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத் தான் நான் இதைக் கூறுகிறேன். ஆகவே அவர்கள் எல்லோரையும் தொண்டு செய்ய வருகிறார்கள் தான் என்று அரசு நம்பிவிடக் கூடாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, டிராப் அவுட் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பள்ளிக்கூடப் பிள்ளைகளிலே பலர் இடையிலேயே படிக்காமல் நின்று விடுகிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 6 முதல் 11 வயதிலே உள்ளவர்களைப் பொறுத்தவரை முன்பு 51 சதவிகிதம் என்று இருந்த டிராப் அவுட் இப்போது 33 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். நான் ஒன்றை இந்த சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன். அப்படி குறைந்திருக்கிறது என்று சொல்லும்போது, வேறு ஒருவிதமான கோணத்திலேயிருந்து இந்த டிராப் அவுட் பிரச்சினையைப் பார்த்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். 6 வயது முதல் 11 வயது வரை உள்ளவர்களைப் பொறுத்தவரையில், சாதாரணமாக 94 முதல் 95 சதவிகிதத்தினரை பள்ளிக்கூடங்களிலே ரெக்ரூட் செய்ய முடிகிறது. ஆனால் 11 வயது முதல் 14 வயதுவரை உள்ளவர்களைப் பொறுத்தவரையில், சாதாரணமாக 51 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதத்தினரைத் தான் ரெக்ரூட் டண்ண முடிகிறது. ஆகவே தான் இத்தகைய டிராப் அவுட் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எட்டாவது வகுப்பு வரை கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்துங்கள் என்று நான் போன வருஷம் பேசும்போது சொன்னேன். 8 வது வகுப்பு வரை கட்டாயக் கல்வி என்று ஆக்கும்போது, எல்லோரும் கல்வியைப் பரவலாகப் படிக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை வரும். அப்படி வரும்போது, 10-வது வகுப்புக்கும் அந்த மாணவர்கள் தொடர்ந்து வரக்கூடிய நிலையிலே டிராப்

அவுட் என்பது அவ்வளவு பெரிய அளவில் இருக்காது என்பது என் கருத்து. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் 8-வது வகுப்புவரை தயவு செய்து கல்வியைக் கட்டாயமாக்குங்கள் என்பது தான். 8 வது வகுப்புவரை நாட்டிலுள்ள எல்லாப் பிள்ளைகளும் கல்வி அறிவைப் பெற வேண்டாமா? அப்படி ஆக்குவதற்கு அரசு குறுக்கே நிற்பது நீதியா? இதைச் செய்ய வேண்டியது அரசின் கடமை.

திருத்த முடியாத குடிகாரர்களுக்கெல்லாம் நன்மை செய்கிறோம் என்று சொல்லி, 150 கோடி ரூபாய்க்கு மேல் வருவாயை நாம் இழப்பதற்குப் பதிலாக இந்த நல்ல கொள்கையை அரசு செய்யலாமே. இந்த 150 கோடி ரூபாயைக் கொண்டு இளம் தளிர்களுக்கு 8 வது வகுப்பு வரை கட்டாயக் கல்வி புகட்டி, அவர்கள் அனைவரையும் கல்வி அறிவு பெற்றவர்களாக ஆக்கலாமே. இதை அரசு செய்ய முடியாதா? திருத்தவே முடியாத குடிகாரர்களுக்காக அரசு ஏன் 150 கோடி ரூபாயைப் பாழாக்க வேண்டும்? 6 வயது முதல் 11 வயது வரையுள்ள மாணவர்களைப் பொறுத்தவரையில் 33 சதவிகிதம் டிராப் அவுட் என்று சொல்லும்போது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 3 வது வகுப்புவரை நாங்கள் வடிகட்டவில்லை என்கிற கருத்தையும் சொன்னார்கள். அதை நான் சாதனையாகப் பார்ப்பதை விட வேதனையாகத் தான் பார்க்கிறேன். 1 முதல் 3 வகுப்பு வரை தான் பிள்ளைகளுக்கு அதிகமான கல்வி அறிவைப் புகட்ட வேண்டிய பிராயம். ஒவ்வொரு குழந்தைக்கும் அப்போது தான் இன்டிவிஜுவல் கவனிப்பு தேவைப்படுகிறது. அந்தப் பிராயத்தில் தான் ஆசிரியரின் தனி கவனிப்பு பிள்ளைகளுக்குத் தேவை. அதற்கு ஒவ்வொரு வகுப்பிலும் 20 க்கு மிகாமல் பிள்ளைகள் இருந்தால் தான், ஆசிரியரின் தனி கவனிப்பை அவர்கள் பெற முடியும். ஆவரேஜ், சராசரி 38 என்று இப்போது போட்டிருந்தாலும் 40, 50 என்று ஒவ்வொரு வகுப்பிலும் பிள்ளைகளின் எண்ணிக்கை இருக்கிறது. இவ்வளவு எண்ணிக்கை ஒரு வகுப்பில் இருந்தால், அந்தச் சிறு குழந்தைகள் தெளிவாக கல்வியறிவை ஆசிரியரின் தனி கவனிப்பை எப்படிப் பெற முடியும்? ஆசிரியர்களால் எப்படி கல்வியை ஊட்ட முடியும். இப்படிப்பட்ட நிலையில் அரசு உண்மையிலேயே பரீட்சை வைத்து வடி கட்டப் பார்த்தால்கூட, எல்லாப் பிள்ளைகளும் தேறாது. இப்போதே குறிப்பிட்ட எண்ணிக்கைக்கும் அதிகமாக பிள்ளைகள் ஒவ்வொரு வகுப்பிலும் இருக்கிற காரணத்தால், பிள்ளைகளுக்குப் படிப்பு வரமாட்டேன் என்கிறது. பிள்ளைகளின் இந்த எண்ணிக்கையைக் குறைத்து, ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை அதிகமாக்க அரசிடம் பணமில்லை. ஆகவே "மூன்றாவது வகுப்புவரை வடி கட்டாமல் பிள்ளைகளை மேல் வகுப்புக்கு அனுப்புகிறீர்கள்"





என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு அடிப்படையை ஏற்படுத்த வேண்டிய பிராயம் அது தான். அந்தப் பிராயத்தில் வடிகட்டாமல் மேல் வகுப்புக்கு அனுப்பினால், அடிப்படை சரியாக இல்லாத காரணத்தால், 4-வது 5-வது வகுப்புக்கு வரும்போது, அடிப்படை சரியில்லாத பிள்ளைகளை வைத்துக்கொண்டு ஆசிரியர்கள் பாடங்களைச் சொல்லிக்கொடுக்க மிகவும் திண்டாடுவார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் சுட்டிக்காட்டினார். அரசு "வடி கட்டாமல் மேல்வகுப்புக்கு அனுப்புகிறோம்" என்று சொல்வதற்கு அது தான் அர்த்தம். இப்போது ஒரு ஆசிரியருக்கு ஒவ்வொரு வகுப்பிலும் அனுமதிக்கப்பட்டுள்ள 40, 50 என்று இருக்கக்கூடிய குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைத்தால், அதிக எண்ணிக்கையில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டியிருக்கும். அதற்கு அதிகமாகப் பணம் செலவாகும். அத்தகைய ஒரு நிலையைத் தவிர்ப்பதற்குத் தான் அரசு 1 முதல் 3-வது வகுப்பு வரை பரீட்சை வைக்கவில்லை. அப்படியே பரீட்சை வைத்தாலும் ஒருவரும் பாஸ் பண்ண மாட்டார்கள். ஆதலால் தான் அரசு தேர்வு வைக்கவில்லை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 5-40)

ஆகவே, இந்த டீச்சர்-பியூப்பிள் ரேஷியோவை சரிசெய்து ஒரு ஆசிரியருக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களைப்பற்றிச் சொன்னார்கள். எனது நண்பர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள். 2.58 லட்சம் ஆசிரியர்களில் 95 ஆயிரம் ஆசிரியர்கள் இன்றையதினம் சர்க்கார் ஊழியர்களாக இருக்கிறார்கள். 1.63 லட்சம் பேர்கள் இன்றைக்கு தனியார் பள்ளிக்கூடங்களில் பணியாற்றுகிறார்கள். இந்த 2.58 லட்சம் ஆசிரியர்களில் ஒரு பகுதி சர்க்கார் ஊழியர்களாகவும், இன்னொரு பகுதி தனியார் துறையிலும் இருக்கிறபோது, சர்க்காரில் இருப்பவர்களுக்கு அரசு ஊழியர்கள் என்ற முறையில் வேலைக்கு உத்தரவாதம் இருக்கிறது. தனியார் பள்ளிகளில் இருப்பவர்களுக்கு அந்த உத்தரவாதம் இல்லை. இன்றையதினம் தனியார் பள்ளிகளிலே வேலைசெய்யும் ஆசிரியர்கள் அனைவரும் தங்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அரசு உடனடியாக அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க முடியாது. அவர்கள் தனியார் பள்ளிகளின் ஊழியர்கள், அரசு ஊழியர்கள் அல்ல. அவர்கள் இந்தக் கோரிக்கையை வைக்கும்போது, கல்வியை தேசியமயமாக்க வேண்டும் என்ற கொள்கையை நாம் புறக்கணித்துவிட முடியாது. அப்படி கல்வியை தேசியமயமாக்காமல்,

[திரு. ஆ. நல்லசிவன்] [1980 ஜூலை 22

இன்றையதினம் தமிழ்நாட்டிலே இருக்கிற 1½ லட்சம் ஆசிரியர்களுக்கு 'நீங்களும் போராடுங்கள்' என்று அவர்களுக்கு அரசு வழிகாட்டியிருக்கிறது. அது காலப்போக்கிலே அப்படித்தான் வரும். பஞ்சாயத்து யூனியன்களிலே பணியாற்றும் 95 ஆயிரம் ஆசிரியர்கள் இன்றையதினம் அரசு ஊழியர்களாக் கப்பட்டிருக்கிறார்கள். அரசு ஒன்றும் புதிதாக ஆக்க வேண்டாம். அவர்களின் பெயரை மட்டும் மாற்றினால் போதும். ஆகவே, இந்தப் பிரச்சினை போராட் டமாக உருவெடுக்கும் முன்பு, 8-வது வகுப்பு வரையில் கல்வியை தேசியமய மாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். 8-வது வகுப்புவரையில் தேசியமயமாக்கி கட்டாயக் கல்வியாகவும் ஆக்க வேண்டும்.

அடுத்து, ஆசிரியர்களுடைய உரிமையைப்பற்றிச் சொல்லப்போனால். எம்.எல்.ஏ. அல்லது எம்.எல்.சி.-யாகத் தேர்ந்தெடுக்க மனுப் போடும்போது அரசுத் துறையில் இருக்கும் ஆசிரியர்களுக்கு உள்ள முதல் கண்டிஷன் 'அவர் கள் பதவியிலேயிருந்து விலகவேண்டும், ராஜிநாமா செய்ய வேண்டும்' என்பது. அப்போதுதான் அவர்கள் போட்டியிட வாலாம். இது என்ன நியாயம்? இதிலே வேடிக்கை என்னவென்றால், ஒரு தனியார் பள்ளிக்கூடத்திலே மேனேஜராக ஒருவர் இருக்கிறார், அவர் சர்க்காரிடமிருந்து கிரான்ட் வாங்கு கிறார். அவர் எம்.எல்.ஏ., அல்லது எம்.எல்.சி.-யாக வருவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. பள்ளிக்கூடத்திலே கரஸ்பாண்டென்ட் ஆக இருந்தால் எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-யாக வர தடையேதும் இல்லை. ஆனால், அரசுப் பள்ளிகளில் ஆசிரியராக இருந்தால், அவர் எம்.எல்.ஏ. அல்லது எம்.எல்.சி.-யாகக்கூடாது. அப்படி வரவேண்டுமென்று சொன்னால், அவர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். எப்போது போட்ட விதி இது? இது வசதிக்காக முன்பு போட்ட விதி. வாத்தியார் கொத்தடிமை என்று இருந்த காலத்திலே போட்ட விதி இந்த விதி வாத்தி யார்களுக்கு எந்த விதமான உரிமையும் இல்லாத காலத்திலே போட்ட இந்த விதியை இன்னும் வைத்திருப்பது நியாயமல்ல. ஆசிரியர் பணியிலே இருந்து கொண்டு அவர் எம்.எல்.ஏ., அல்லது எம்.எல்.சி.யாக இருந்தால் அவர் ஆசிரியர் களின் கஷ்ட நஷ்டங்களைச் சரியாகப் பிரதிபலிக்க முடியும். ஆகவே, அவர் கள் ஆசிரியர்களின் பிரதிநிதியாக வரும்போது, தங்களுடைய பதவியைக் காலி செய்துவிட்டுதான் வர வேண்டும் என்று சொல்வது என்ன ஜனநாயகம் என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே, பதவியில் இருந்துகொண்டே அவர் கள் எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-யாகும் உரிமையை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.



1980 ஜூலை 22]

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர் கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். எனக்கு இருக்கிற சந்தேகம், அவர்கள் ஆசிரியராகவும் இருந்து, எம்.எல்.சி.-யாகவும் இருந்தால், அவர்கள் இரண்டு இடங்களிலேயும் சம்பளம் வாங்குவது என்பது பொதுவுடைமைக் கொள்கைக்கு விரோதமாகப் போகும். ஆகவே, அவர்கள் சம்பளத்தை இரண்டு இடங்களிலேயும் வாங்க அவர்களை அனுமதிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** நிலச்சுவான்தார்களாகவும் பாக்டரி மானேஜர் களாகவும் இருந்தால் அவர்கள் வாங்கலாம் என்றால், இவர்களும் சம்பளம் வாங்கலாம். அவர்கள் வாங்கலாம் என்பது கொள்கையாக இருந்தால், இவர் கள் வாங்கலாம் என்று நான் சொல்வதிலே தப்பு ஒன்றுமில்லை. அவர்கள் 750 ரூபாய்க்கு மேல் வாங்கக் கூடாது என்பது கொள்கையாக இருந்தால், அவர்கள் ஒரு பதவியில் வாங்குவதைக் கழித்து 750 ரூபாய் கொடுக்கலாம். அதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், முதலாளிகளுக்கு மட்டும் ஏன் இந்த விதிவிலக்கு? இப்படி இரண்டு ஸ்டாண்டர்ட் மெயின் டெய்ன் பண்ணுவது சரியல்ல.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் ஆசிரியர்களாகவும் இருக்கலாம், இங்கே எம்.எல்.சி.-யாகவும் இருக்கலாம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தனியார் பள்ளி ஆசிரியர்கள் அப்படி இருக்கும் போது, ஏன் அரசு ஊழியர்கள் அப்படி வரும் வாய்ப்பு ஏற்படுத்தக்கூடாது என்று நான் விளக்கம் கேட்கிறேன். அவர்களுக்கும் பிரச்சினைகள் இருக் கின்றன. அரசுப் பள்ளிக்கூடத்திலே பணியாற்றுபவர்கள் ஏன் வரக்கூடாது? அவர்களுடைய பிரச்சினைகளைப்பற்றி இங்கே பேசுவதற்கு வாய்ப்பு ஏற் படுத்த வேண்டாமா?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அப்படியானால் மற்ற அரசு ஊழியர்கள் எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-க்களாகலாமா? அதற்கு வழிவகை இருக்கிறதா?

**திரு. ஆ. நல்லசிவன் :** மற்ற அரசு ஊழியர்களும் அப்படி ஆகலாம் என்பது தான் என்னுடைய கருத்து, அபிப்பிராயம் இந்த மாதிரி. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வழி இருக்கிறதா என்று கேட்டார் களே தவிர, தங்களுடைய அபிப்பிராயம் கேட்கவில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** அவர்களை சட்டசபையின் உள்ளே வரக்கூடாத பாவிகளாக ஆக்கிவைத்திருப்பது இந்த நாட்டின் ஜனநாயக முறைக்குப் பொருத்தமானதல்ல என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) அடுத்தது, ஒரு முக்கியமான பிரச்சினை. அண்ணா மலை யூனிவர்சிட்டி பற்றியது.—நேற்றையதினம் மாண்புமிகு தலைவர் அவர் கள். .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நேற்றையதினம் ஏற்கெனவே அது பற்றிச் சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடிவான அபிப்பிராயத்தைச் சொல்லியிருக்கிறார். அது சம்பந்தமாக மீண்டும் நேரம் எடுக்க வேண்டாம். உறுப்பினர் அவர்கள் பேச வேண்டும் என்று சொன்னால், நான் தடுக்கவில்லை. திருப்பியும் அதற்கென்று நேரம் செலவழிக்க வேண்டாம் என்றுதான் சொல்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஒரேயொரு விஷயம் அந்த யூனிவர்சிட்டியிலே அரசு போடக்கூடிய உத்தரவுகள் அமுல்படுத்தப்படுவதில்லை. இதுகூட ஒரு பெரிய பிரச்சினை அல்ல. அங்குள்ள பேராசிரியர்கள் 15 நாட்களுக்கு ஒரு முறை பிரித்துவிடப்பட்டு திரும்பவும் 'அப்பாயின்ட்' செய்யப்படுகிறார்கள். இதுகூட ஒரு பெரிய பிரச்சினை அல்ல. அங்கே நிதிநிலையிலே கோளாறு. இந்தப் பிரச்சினைதான் பெரிய பிரச்சினை. போதுமான தகவல் என்னிடம் இருக்கிறது. நேற்றையதினம் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் இந்த நிலைமைகளைப்பற்றி விசாரிக்க ஒரு ஸ்பெஷல் ஆபிசரைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஒரு ஸ்பெஷல் ஆபிசரைப் போட்டு விசாரிப்பதற்கு வேண்டிய ஒரு 'ப்ரைமா பேசி' நிலைமை இருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். 1 கோடியே 87 லட்சம் ரூபாய் அவர்களுக்கு இன்வெஸ்ட்மென்ட் ஆக இருக்கிறது. 116 லட்சம் ரூபாய் பிரைவேட் பாங்கிலே வைத்திருக்கி றார்கள். 68 லட்சம் ரூபாய் இந்தியன் பாங்கிலே இருந்தது. அதிலே இருந்து, 8¼ லட்சம் ரூபாய்க்கு ஓவர்டிராப்ட் வாங்கிவிட்டார்கள். இன்னும் 10 லட்சம் ஓவர் டிராப்ட் வேண்டும் என்று "அப்ளை" பண்ணியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு நிதிநிலைமை மோசமாகப் போயிருக்கிறது. இன்னொரு முக்கிய மான விஷயம். யூனிவர்சிட்டியின் பணம் முழுவதும் இந்தியன் வங்கியிலேயே முன்பு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இப்போது யூனிவர்சிட்டிக்கு வரும் வருவாய் இந்தியன் வங்கியிலே போடப்படுவதில்லை. இப்போது வரும் வரு வாய் முழுவதும் பேங்க் ஆஃப் மதுரைக்குப் போகிறது. அங்கேயிருந்து ஒவ் வொரு மாதமும் 15 ஆம் தேதிக்குப் பிறகு அடுத்த மாதம் 1 ஆம் தேதிக்குத்



தான் இந்தியன் பாங்க்குக்கு மாற்றப்படுகிறது. அப்படியானால் யூனிவர் சிட்டிக்கான பணம் 15 நாட்கள் பாங்க் ஆஃப் மதுரையிலே இருக்கிறது. அவர் கள் வட்டி சம்பாதிக்கிறார்கள். ஏன் பாங்க் ஆஃப் மதுரையில் அந்தப் பணத்தைப் போட வேண்டும்? இந்தச் சம்பவத்தைப் பற்றிக் கண்டிப்பாக விசாரிக்க வேண்டும். மாணவர்கள் மெஸ்சுக்குக் கட்டும் பணமும் தவறாகச் செலவழிக்கப்படுகிறது. கோவோப்பரேட்டிவ் ஸ்டோர்-க்கும், காண்ட்ராக்டர் களுக்கும் கொடுக்க வேண்டிய பணம் கொடுக்கப்படாமல் அங்கே தகராறு இருந்துகொண்டிருக்கிறது. அங்கு ஒரு ரிஜிஸ்ட்ரார் இருக்கிறார்கள். அவர் ஏற்கெனவே சர்க்காரில் பணிபுரிந்து ரிடையர் ஆனவர். அவர் சம்பளமும் பென்ஷனும் வாங்கினால், கடைசியாக வாங்கிய சம்பளத்தைவிட அதிகமாகப் போகக்கூடாது என்பது விதி. சட்டம் அப்படிச் சொல்கிறது. ஆனால், அவர் இப்போது சம்பளமும் வாங்குகிறார். பென்ஷனும் வாங்குகிறார். விதிகளுக்கு விரோதமாக இரண்டும் சேர்ந்து பென்ஷன் அதிகமாக அவர் வாங்குகிறார். இதனால் யூனிவர்சிட்டிக்கு 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இழப்பு.

ஊழியர்களுக்கு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. யூனிவர்சிட்டி குடியிருப்பையே அவர்களுக்குக் கொடுத்து, அதற்கு அதிகப்படியான வாட கையை விதித்து, அந்த வாடகை பெயரில் ஊழியர்களிடமிருந்து அதிகப்படி யான வீட்டு வாடகை பிடிக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) கடைசியாக. .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கடைசியாக என்பது இது இரண்டாவது முறை.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை உடனுக்குடன் பட்டுவாடா செய்யப்படாமல் அண்ணாமலை யூனிவர்சிட்டி ஃபண்ட்லே வைக்கப்பட்டு, பிறகுதான் அவர்களுக்குத் தரப்படுகிறது. ஆசிரி யர்களின் பிராவிடன்ட் பண்ட், சொசைட்டிக்குக் கட்ட வேண்டிய தொகை, வங்கித் தவணைத் தொகை இவைகளும் குறிப்பிட்ட காலத்திலே செலுத்தப் படாமல், யூனிவர்சிட்டி கணக்கிலே செலுத்தப்பட்டு கொஞ்சகாலம் கழிந்த பிறகுதான் உரிமைக் கணக்குகளில் செலுத்தப்படுகிறது. இது சரியா, தவறா என்று பார்க்கவாவது ஒரு குழு அமைக்க வேண்டும். இதில் ஒரு பிரைமாஃபேசி கேஸ் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் அளித்த வாக்குறுதிபோல ஒரு ஸ்பெஷல் ஆபீசர் அல்லது ஒரு ''இன்ஸ்பெக்டர் ஜெனரல்'' போட்டு இதை விசாரிக்க வேண்டும். அப்படிப் போட்டு விசாரிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஊழல்கள் அங்கே நடைபெறுகின்றன. இன்றைக்கும் அந்த ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். உடனடியாக.

இந்த அண்ணாமலை யூனிவர்சிட்டி சமாச்சாரத்தைச் சரி செய்யாவிட்டால், இந்த அரசு வசதியுள்ளவர்களுக்கு ஆதரவாக இருந்துகொண்டிருக்கிறது என்று தமிழ் நாட்டிலே உள்ள படித்தவர்கள் நினைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதைக் கூறி நேரமில்லை என்பதால் முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

* **திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்விபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு முன்னால் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் தணியாத உழைப்பையும், அவர் ஏற்றிருக்கிற துறையில் பல்வேறு தேவையான புதிய சிந்தனைகளைப் புகுத்த வேண்டும் என்று அவருக்கு இருக்கிற ஆர்வத்தையும் நான் துவக்கத்திலேயே பாராட்ட விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில், அவருடைய உழைப்பும், அவர் எடுத்துக் கொண்டிருக்கிற நோக்கமும் நிறைவேற வேண்டிய அளவுக்கு அரசினுடைய அல்லது அவரது கட்சியினுடைய கொள்கைகள் சில இடங்களில் குறுக்கிடுகின்ற காரணத்தால், நிறைவேறாமல் தடைப்பட்டு வருகின்றது என்பதை நிதர்சனமாக இந்த அவை விவாதத்தின் போது கண்டது. மாண்புமிகு கல்வியமைச்சர் அளித்திருக்கும் கல்விக் கொள்கைக் குறிப்பில் மகிழ்ச்சியோடு ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் உயர்நிலைப் பள்ளிகள், ஹையர் செகண்டரி பள்ளிகள், ஆக இரண்டுமாகச் சேர்ந்து மொத்தம் 3,226 பள்ளிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் ஏறத்தாழ 20,40,000 மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருக்கிறார்கள். இந்த 3,226 பள்ளிகளில் 1,018 பள்ளிகளுக்கு மட்டும்தான் விஞ்ஞானக் கூடங்கள் என்று சொல்லப்படும் லேபரேட்டரி (Laboratory) வசதிகள் கிடைத்திருக்கின்றன. நான் 1,018 என்று சொல்லும்போது, இந்த எண்ணிக்கையில் ஒன்றிரண்டு குறைவாகவோ கூடுதலாகவோ இருக்கலாம். ஆனால் இதில் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், இவைகளில் எத்தனை பள்ளிகள் நகர்ப்புறங்களில் அமைந்திருக்கின்றன என்பது தான். இந்தப் பள்ளிகள் அத்தனையும் நகர்ப்புறங்களில்தான் அமைந்திருக்கின்றன. மீதமிருக்கிற இரண்டாயிரம் பள்ளிகளும் கிராமப்புறங்களில் அமைந்திருக்கின்றன என்கிற கணக்கை எண்ணிப் பார்க்கிறபோது, எந்தப் பகுதி கல்வியிலே பின் தங்கியதாக இருக்கும் என்பது புரியும். கல்வித் துறையின் தற்போதைய வேகம் போதாது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இவ்வாறு உயர்நிலைப் பள்ளிகளை ஹையர் செகண்டரி பள்ளிகளாக மாற்றுகிறபோது, இது மிகவும் தேவை, மிகவும் அவசியம் என்ற உணர்வோடு தான் செயல்படுத்துகிறோம். ஆனால், இதன் மூலம் தமிழகத்தில் உள்ள





இரண்டாயிரம் பள்ளிகளை கல்வி வளர்ச்சியில் பின்னோக்கித் தள்ளுவதும் ஒரு ஆயிரம் பள்ளிகளை மட்டும் முன்னேறச் செய்யும்படி செய்வதும் எத்தகைய நிலையை உருவாக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தச் செயலின் காரணமாக கல்வித் துறையில் நம்மை அறியாமலேயே ஒரு பின்தங்கிய வகுப்பினை நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிய வேண்டும். இதைச் சொல்லும்போது, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அவருக்கு இருக்கிற நிதிப் பற்றாக்குறையை அல்லது சங்கடத்தைச் சொல்லலாம். ஆனால் இப்படிப்பட்ட சீர்திருத்த நடவடிக்கையை மேற்கொள்ளும்போது, அவர் அமைச்சரவையில் கண்டிப்பாகப் போராடி, வாதாடி, இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றாக வேண்டும். அதை அவர் செய்யவில்லை என்றால், நாம் தற்போது எடுத்திருக்கிற சீர்திருத்தக் கொள்கை அல்லது நடவடிக்கை முழுமை பெறாமல், முழுமையான பலனைத் தராமல் போய்விடும் என்பதையும் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, உயர்நிலைப் பள்ளிகளில் கட்டிடங்களைப் பொறுத்த வரையில், நாம் பெரிய அளவில் செலவு செய்து வருகிறோம். கட்டிடங்களைக் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு அதிகமாக இருக்கிறது. அதிகம் என்று சொல்லும்போது, தொகை அளவில் அது தேவைக்கு அதிகமானது என்று நான் சொல்லவில்லை. ஒதுக்கீடு ஓரளவுக்கு மற்ற தலைப்புகளுக்கு இருப்பதை விட அதிகமாக இருக்கிறது என்பதை மட்டும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தக் கட்டிடங்களுக்கு வேண்டிய லேபரேட்டரி சாமான்கள் மற்றும் (Equipments) வாங்கவும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அதே நேரத்தில் இந்தக் கட்டிடங்களுக்கான பராமரிப்புக்கு — மெயின்டினன்சுக்கு — ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி ஒதுக்கத்தைப் பார்க்கிறபோது, இரண்டாண்டுகளுக்கு அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறைகூட இந்தப் பள்ளிகளைப் பராமரிக்க முடியாத அளவுக்கு மிகக் குறைந்த அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகத்தான் தற்போது சென்னை நகரத்தைவிட்டு அப்பால் சென்று பார்த்தால் பல்வேறு பகுதிகளில் உள்ள பள்ளிகள் பாழடைந்த கட்டிடங்களில் செயல்படுகின்றனவோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. எனவே இந்த நிலைமையை மாற்றி கட்டிடங்களின் பராமரிப்புக்கு அதிகமான தொகையை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1980 ஜூலை 22

அடுத்து, இந்த அவையில் வாய்ப்பு வரும்போதெல்லாம் ஒரு கருத்து திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டதை நாம் அறிவோம். அதாவது சமுதாயத்தில் பின்தங்கியவர்கள், முன்னேறியவர்கள் என்று இரண்டு வகுப்பாரைப் பற்றி இங்கே பலரும் பேசியிருக்கிறார்கள். பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு இவ்வளவு இட ஒதுக்கீடு நியாயம்தானா என்றும் தேவைதானா என்றும் கேட்கப்பட்டது. அதுமட்டுமல்ல, இவ்வளவு காலத்திற்குப் பிறகும் அவர்களுக்கு இந்த அளவுக்கு இட ஒதுக்கீடு அவசியம்தானா என்றெல்லாம் விவாதம் தொடர்ந்து நடை பெற்று வருவதை இந்த அவையின் கவனத்திற்கும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொள்கைக் குறிப்பில் கொடுத்திருக்கும் கணக்கைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைபற்றிய கணக்கை இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்பில் கொடுத்திருக்கிறார்கள். 6 முதல் 11 வயதுக்குட்பட்டவர்களில் பள்ளி செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 94.64 சதவீதமாகும். அதைப் போலவே 11 முதல் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 59.68 சதவீதம். கடைசியாக 14 முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், அது 38.44 சதவீதம்தான். இது அநேகமாக 10-வது வகுப்புக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை என்று நான் கருதுகிறேன். ஆக, 10-வது வகுப்பை எட்டிப் பார்க்கும் மாணவர்களின் எண்ணிக்கை 38.44 சதவீதம்தான். இந்த 38.44 சதவீதத்தினர் எந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள் என்பதையும், எங்கே வசிப்பவர்கள் என்பதையும் அவர்கள் எந்தச் சமுதாயத் தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் நாம் கணக்கெடுத்துப் பார்க்கத் தயாராக இருக்கிறோமா என்று பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், ஒன்றை நிச்சயமாகச் சொல்ல முடியும். முதலில் நான் குறிப்பிட்ட 94.64 சதவீத மாணவர்கள் 10-வது வகுப்பை எட்டும்போது — அதாவது 14 முதல் 16 வயதுக்குட்பட்டவர்கள்—எப்படி 38.44 ஆகக் குறைந்து விடுகிறார்கள் என்பதை சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். இவ்வாறு குறைந்துவிடுகிற மாணவர்கள் யார்? அவர்கள் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த 38.44 சதவீதம் என்பதில் முன்னேறிய வகுப்பைச் சார்ந்த அவ்வளவு பேரும் இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையில் ஒரு 30 சதவீதம் அந்த வகுப்பைச் சார்ந்தவர்கள்தான் இருக்கிறார்கள். இவர்கள் 94.64 சதவீதத்திலும் இருக்கிறார்கள். 59.68 சதவீதத்திலும் இருக்கிறார்கள். கடைசியாக வருகிற 38.44 சதவீதத்திலும் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இடையில் யார் விடுபட்டுப் போகிறார்கள்



1980 ஜூலை 22] [திரு. க. இராமமூர்த்தி]

என்றால், பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்கள்தான் இடைக்காலத்தில் படிப்பை விட்டு, பள்ளியை விட்டு விடுபட்டுப் போகிறார்கள் என்பதை உணர முடியும். அந்தப் பகுதியினர்தான் விடுபட்டுப் போகிறார்கள்.

சமுதாயத்தில் பின்தங்கியவர்கள், முன்னேறியவர்கள் என்று சொல்லும் போது, அவர்களுக்கு இருக்கிற சூழ்நிலைகளையும் வைத்து நாம் கணக்கிட வேண்டும். சமுதாய ரீதியாக எந்தப் பிரிவினர் பின்தங்கியவர்களாக அல்லது முன்னேறியவர்களாக இருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, என்னுடைய அனுபவத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியை நான் இங்கே அவையில் குறிப்பிட விரும்புகிறேன். அப்போதுதான் இந்த வினா குறித்த சரியான பதிலை நாம் பெற முடியும்.

ஆண்டுக்கு 9,000 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் பின்தங்கியவர்கள் அல்ல என்று ஒரு உச்ச வரம்பு கட்டப்பட்டு அதனடிப்படையில் பின்தங்கியோர் பற்றிய கணக்கெடுப்பு நடைபெற்றபோது, அந்தக் கொள்கையை எதிர்த்து நாடு தழுவிய முறையில் பல்வேறு வாத பிரதிவாதங்கள் நடைபெற்றன. பிறகு அரசு ஓரளவுக்கு அதைத் திருத்த முன் வந்து. தகுந்த நடவடிக்கை மேற் கொண்டதை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். இதுகுறித்த வாதம் அதிகமாக இருந்தபோது, என்னைச் சந்திக்க வந்த பலர் அப்போது "வரு மானம் அதிகமாக இருப்பவர்களை எப்படிப் பின்தங்கியவர்கள் என்று சொல்ல முடியும்" என்று கேட்டார்கள். அரசியல் ரீதியாக என்னோடு நெருங்கிய தோழமை உணர்வு கொண்டிருப்பவர்கள்கூட அப்போது இதைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஒருமுறை நானும் அத்தகைய கருத்தை வைத்துக் கொண்டிருந்தவர்களும் சேர்ந்து ரெயிலில் பயணம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சேர்ந்து பயணம் செய்துகொண்டிருந்த எங்களுக்கு பல ரெயில் நிலையங்களில் வரவேற்பும் அளிக்கப்பட்டது. அப்படி எங்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்ட இடங்களில் சிதம்பரமும் ஒன்றாக இருந்தது. எங்கள் ரெயில் காலை 6 மணிக்கு சிதம்பரம் ரெயில் நிலையத்திற்குச் சென்றபோது, எங்களுக்கு வரவேற்பு அளித்தவர்கள் ரெயிலை நிறுத்தி மிகப் பெரிய மாலையை எங்களுக்குச் சூட்டினார்கள். ரெயில் நிலையத்திலேயே பெரிய வான வேடிக்கையையும் நடத்தினார்கள். பிறகு நான் அந்த ரெயில் அங்கே யிருந்து கிளம்பியது. அடுத்து மாயவரத்தில்தான் 6.15 மணிக்கு ரெயில் நின்றது. அங்கேயும் எங்களுக்கு வரவேற்பு தந்தார்கள். குறிப்பிட்ட காரணத் திற்காக இந்த நிகழ்ச்சியைப்பற்றிச் சொல்லுவதால் இங்கே அவையில் ஜாதியைக் குறிப்பிட்டுச் சொல்வது தவறு இல்லை என்று கருதி, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுக்கு சிதம்பரத்தில் மிகப் பெரிய

மாலை அணிவித்து வாணவேடிக்கை செய்து வரவேற்பு அளித்தவர் படையாச்சி இனத்தைச் சேர்ந்தவர். ரெயில் சிதம்பரத்தைவிட்டுப் புறப்பட்டதும் என்னோடு பயணம் செய்த நண்பர் ஒன்றைச் சொன்னார். "இவ்வளவு எல்லாம் செய்தார்கள். இவ்வளவு பெரிய மாலையையெல்லாம் நமக்கு அளித்தார்கள். இவ்வளவு செய்தவர்களுக்கு ஒன்றைச் செய்வதற்கு மூளை இல்லாமல் போய்விட்டதே. மூளையோடு இருந்திருந்தால், காலையில் நமக்குக் காப்பி கொடுத்திருப்பார்கள்" என்று சொன்னார். ஆனால் மாயவரத்தில் எங்களுக்கு வரவேற்பு கொடுத்தார்கள் என்றேனே, அங்கே வரவேற்பில் மாலை அணிவித்ததோடு காப்பியும் அளித்தார்கள். அந்த வரவேற்பை ஏற்பாடு செய்தவர் சைவப் பிள்ளை வகுப்பைச் சார்ந்தவர். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், ஒரு சமுதாயம் முன்னேறியிருக்கிறதா இல்லையா என்று பார்க்கும்போது, அது அவர்கள் சமுதாயத்தில் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதைப்

(மாற்றுத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் தலைமை)

(பிற்பகல் 6-00)

பொறுத்தே இருக்கிறது. பண வசதியைப் பொறுத்த வரையில், சிதம்பரத்திலே இருப்பவர்களுக்கு சீர்காழியிலே இருக்கிறவர்களை விட அது அதிகமாக உண்டு. ஆனாலும்கூட நாகரீக அளவு என்று வருகிறபோது, சமுதாயத்தில் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது, சிதம்பரத்திலே படையாச்சிகள் பின்தங்கியவர்களாகவும், சீர்காழியிலே சைவப்பிள்ளைகள் முன்னேறியவர்களாகவும் இருக்கிறார்கள் என்பது அவர்களுடைய குணநலன்களிலிருந்து தெரிகிறது. இரண்டு சாராரும் தங்கள் குழந்தைகளை எப்படி வளர்ப்பார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குணநலன்களைப்பற்றிக் குறிப்பிடுவதால், நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். முன்னேறிய வகுப்பாக இருந்து சில குணநலன்களைப் பெற்றிருந்தார்கள். அவர் வகுப்பைக் குறிப்பிட்டதால் நானும் சொல்லுவதில் தவறில்லை என்று நினைக்கிறேன். உதாரணமாக கோயம்புத்தூரில் கவுண்டர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் முன்னேறிய வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம். திடீரென்று பின்தங்கிய வகுப்பினராக அவர்களை அறிவித்துவிட்டால், அப்போது குணநலன் மாறிக்கொண்டே போகுமா ?

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தப் பிரச்சினை வேறு. பின் தங்கியவர்களைப் பற்றி மறுபரிசீலனை செய்யத் தயார். ஆனால், பின்தங்கியவர்கள் என்பதே கிடையாது என்ற வாதம் தவறானது.





**திரு. ஜி. சுவாமிநாதன் :** குணநலனைப் பொறுத்த வரையில், பின் தங்கிய வகுப்பில் இருக்கிற ஒருவர் கிறிஸ்தவராக மாறிய உடனே முன்னேறிய வகுப்பாக ஆகிவிடுகிறார் என்று சொல்லுகிறார்கள். அது எப்படி முடியும் ? இந்துவாக இருக்கிறபோது பின்தங்கியவராக இருந்தவர்கள் கிறிஸ்தவராக மாறியதும் முன்னேறியவராக ஆகிறார் என்ற நிலைமை இருந்தால் எப்படி ? எந்த விதமான அடிப்படையும் இல்லாமல் இருக்கிறது என்பதுதான் எங்களுடைய வாதம்.

**திரு. க. இராமமூர்த்தி :** இதெல்லாம் பின்னாலே வந்த குழப்பங்கள். சமுதாயத்தில் பின்தங்கியவர்கள் என்பதில் குழப்பம் இருக்கிறதா இல்லையா ? அதை கொள்கை அளவிலே நாம் ஏற்றுக்கொள்கிறோமா இல்லையா என்பதுதான். அதை ஏற்றுக்கொள்ளாமல் பணத்தின் அடிப்படையிலே பின்தங்கியவர்கள் என்ற கணக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, இந்தக் கொள்கை என்ன ஆவது என்று கேட்க விரும்புகிறேன். ஒன்றை மட்டும் நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு காரணங்களைக் காட்டி முன்னேறியவர்களுக்காகத் தனியாக ஒரு பள்ளிக்கூடம், பின்தங்கியவர்களுக்காக தனியாக ஒரு பள்ளிக்கூடம் என்று வைத்து அடையாளம் காட்டட்டுமே. தமிழகத்தில் காலம் காலமாக பின்தங்கியவர்களாக இருப்பதற்கேற்ப தனியாகப் பள்ளிகளை வைக்கட்டுமே. நீக்ரோவைப் போல நடத்தட்டுமே. நாட்டிலே சமுதாய அடிப்படையிலே பின்தங்கியவர்கள் முன்னேற்றமடைய என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று பார்த்தால், நீக்ரோக்களைப் போல் நடத்த வேண்டுமென்ற அளவிலே வாதங்கள் வருகின்ற அளவுக்கு நிலைமைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன என்பது தெரிகின்றது. அந்த அளவுக்கு சமுதாயத்திலே மிகப் பெரிய பயங்கரம் காத்துக் கொண்டிருக்கிறது என்பதற்காகத்தான் நான் இதை எடுத்துக்காட்டாகச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது என்னுடைய கடமையும் கூட என்று கருதுகிறேன்.

முன்னேறியவர்களால் சிலவற்றைப் பெற முடிகிறது. எல்லோரும்தான் படித்தார்கள். ஆனால் பின்தங்கியவர்கள் மூன்று முறை தோல்வி அடைகிறார்கள். அரிசன மாணவர்கள் தேர்வில் மூன்று முறை தோல்வி அடைகிறார்கள். அவனுக்கு இடம் கிடைக்கிறது, ஆனால் ஒரே முறையில் தேர்வு பெற்றவனுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற பிரச்சினை வருகிறபோதுதான் சமுதாயம் சில சங்கடங்களை அனுபவித்துத்தான் ஆக வேண்டுமென்ற நிலை வருகிறது. இதை யாரும் தடுத்துவிட முடியாது. பன்னெடுங்காலமாக பின்தங்கியவர்கள், எதற்கும் லாயக்கு இல்லை என்று ஒதுக்கி வைத்தபோது, அப்போது யார் அவர்களைப்பற்றிக் கவலைப்பட்டார்கள் ? பள்ளிக்கூடத்தில்

[திரு. க. இராமமூர்த்தி] [1930 ஜூலை 22

அடியெடுத்து வைத்தாலே பாவம் என்று ஒதுக்கி வைத்தோமே, அவனைத் தொட்டாலே பாவம் என்று ஒதுக்கி வைத்தோமே, அவனோடு சேர்ந்தாலே பாவம் என்று ஒதுக்கி வைத்தோமே, அப்போது யார் அவர்களைப்பற்றிக் கவலைப்பட்டார்கள்? இப்போது மட்டும் முன்னேறியவர்களையும் சேர்த்து வைத்துக்கொண்டு இரண்டு பேரில் யார் அதிகமாக மார்க் வாங்கியிருக்கிறார்கள், யார் ஒரே முறையில் பாஸ் பண்ணியிருக்கிறார்கள் என்று பார்த்து சில நன்மைகளைச் செய்தால், சமுதாயத்தை மீண்டும் நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த கட்டத்திற்கு அழைத்துச் செல்கிற மிகப் பெரிய பாவ காரியத்திற்குத் துணையாக நின்றவர்களாக ஆவோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மதிய உணவைப் பொறுத்த வரையிலே, "கேர்" நிறுவனத்தை வைத்து பல பஞ்சாயத்து யூனியன்களில் உணவைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மதிய உணவை எடுத்துச் செல்லுகிற வண்டி (வேன்) பழுது பார்க்க வேண்டிய காரணத்திற்காக தொடர்ந்து பல மாதங்களுக்கு சில பள்ளிகளில் உள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு கிடைக்காமல் போகிறது. மரக்காணம் பஞ்சாயத்து எல்லையில் இதுபோன்ற நிலைமை இன்று இருக்கிறது. தமிழகத்திலே எத்தனை இடங்களில் இது போன்ற நிலைமை இருக்கிறது என்பது தெரியவில்லை. இது போன்ற சூழ்நிலைகளை மாற்ற அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புதிய பல்கலைக் கழகங்கள் பல தோன்றவிருக்கின்றன என்பதைத் தெரிவித்தார்கள். இது மிகவும் தேவைதான். மத்திய அரசின் நிதியுதவியைக் கோருகிறபோது, தனித்தனியாகப் பல்கலைக் கழகங்கள் இருந்தால், நிதியுதவி கூடுதலாகக் கிடைக்கிற நிலை இருக்கிறது என்பதை இந்த அவை அறியும். ஆகவே புதிய பல்கலைக் கழகங்கள் மேலும் மேலும் தேவைப்படுகின்றன என்பதைத் தெரிவித்து, அப்படிப்பட்ட முயற்சியிலே அமைச்சர் அவர்கள் ஈடுபட்டிருப்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் உள்ள நூலகங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கின்றது. மேலும் நூலகங்களைச் சரிவரப் பயன்படுத்துகிற முறையும் நமக்குப் பழக்கமாகாமல் இருக்கிறது. நகரங்களில் மட்டும் நூலகம் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது. அதைவிட மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் நூலகங்களை எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதை ஆராய்ந்து அதையும் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 22] [திரு. க. இராமமூர்த்தி]

தமிழகத்திலே பல புதிய நர்சரிகள் தோன்றியிருக்கின்றன. எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஆங்கிலக் கல்வி எப்படி கருத்து மாற்றத்திலே கிடைக்கிறது என்பதைப்பற்றி அழகாக எடுத்துச் சொன்னார்கள். குறைந்தபட்சத் தேவைகள் கூட இல்லாமல், விளையாட்டு மைதானம் இல்லாமல், 30 குழந்தைகள் உட்காரக் கூடிய இடத்திலே 100 குழந்தைகளை அடைத்துப் போட்டு நர்சரிகளை நடத்தும் நிலை இன்றைக்கு இருக்கின்றது. ஆங்கிலக் கல்வியில் மக்களுக்கு உள்ள ஆர்வத்தைப் பயன்படுத்திக்கொண்டு குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பலி கொடுத்து இலாப நோக்கோடு வியாபாரம் செய்கிற மாதிரி நர்சரிப் பள்ளிகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை. அதைச் சீர்திருத்தியாக வேண்டும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

மொழிக் கொள்கையைப் பொறுத்த வரையில், போதுமான அளவிற்கு மற்ற உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அரசின் கணக்குப்படி 16,100 மாணவர்கள் தமிழை பயிற்சி மொழியாகக் கொண்டு கல்லூரிகளில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் ஆங்கிலப் பயிற்சி மொழியில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் மட்டுமே பயிற்சி மொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர் பயிற்சி மொழி தேவையென்ற உணர்விலே மக்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நம்மாலே மறுத்துவிட முடியாது. அரசு மீண்டும் தன்னுடைய கல்விக் கொள்கையைப் பரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே அரசு தன்னுடைய கல்விக் கொள்கையை, மொழிக் கொள்கையை மறுபரிசீலனை செய்தாக வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இது மற்றவர்கள் சொன்ன கருத்துதான் என்றாலும், நானும் அதைச் சொல்ல விரும்புகிறேன். வசதி படைத்தவர்கள், பணம் படைத்தவர்கள், சமுதாயத்தில் அந்தஸ்து பெற்றவர்கள் தமிழகத்திலே, இந்தியையும், ஆங்கிலத்தையும் பயிற்சி மொழியாகவோ அல்லது தேவையான பாடமாகவோ எடுத்துப் படிக்கலாம் என்ற நிலை இருக்கிறது. வசதி இல்லாதவர்களின் குழந்தைகள் மட்டும் அப்படிப் படிக்க வாய்ப்பின்றி நடுத்தெருவில் நிற்கிறார்கள் என்ற சூழ்நிலையை உருவாக்குவது நல்லதல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவிப்பது என்னுடைய கடமையென்று கருதுகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1980 ஜூலை 22

(பிற்பகல் 6-10)

(மாற்றுத் தலைவர் அவர்கள் மணி அடித்தார்கள்)

சீக்கிரத்தில் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். இங்கே தமிழகத்திலே உள்ள பள்ளிக்கூடங்களுக்கான, மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்கள், பாடப்புத்தகங்கள் விற்பனையைப் பொறுத்த அளவிலே, அரசு ஒரு நல்ல நடவடிக்கையை எடுத்திருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்களை, பாடப் புத்தகங்களை அங்கேயே கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகளை எடுத்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், என்னுடைய வேண்டுகோளாக, உரிமையோடு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பள்ளிக்கூட மாணவர்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்கள், பாடப்புத்தகங்கள், ஆகியவை அவரவர்கள் படித்துக் கொண்டிருக்கின்ற பள்ளிக்கூடங்களிலேயே கிடைக்கச் செய்ய வேண்டும். அவை வேறு எங்கும் கிடைக்கக் கூடாத நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்களை, நோட்டுப் புத்தகங்களை வெளியிலே விற்பதால், கள்ள மார்க்கெட்டில் விற்பவர்களும், வெளியே ஏமாற்றும் தொழில் செய்துகொண்டிருப்பவர்களும், அந்த நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே பள்ளிக்கூடங்கள் மூலமாகவே கிடைக்கச் செய்வதன் மூலம் அந்த நிலைமைகளைத் தடுப்பதற்கும், பெருமளவுக்கு கல்வி வளர்ச்சி அடைவதற்கும், மாணவர்களின் தரம் உயர்வதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக, முடிப்பதற்கு முன்னதாக இரண்டு விஷயங்கள் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். பள்ளி சாராக் கல்வியைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு அது பஞ்சாயத்து யூனியன்களில் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தப் பள்ளி சாராக் கல்வியைப் பொறுத்த வரையில், பல இடங்களிலே இது கேலிக்கூத்தாக இருக்கிறது. எங்கே அது எப்படி நடக்கிறது என்பதைப்பற்றிச் சொல்வதை விட, அந்த நோக்கத்தை எப்படித் தோற்கடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். வெளியே மற்றவர்கள் பார்த்துச் சிரிக்கின்ற நிலைதான் பல பஞ்சாயத்து யூனியன்களிலே இருந்து கொண்டிருக்கின்றது. அதைப்பற்றி முறையான பரிசீலனை செய்ய வேண்டும், நல்ல பராமரிப்பு இருக்க வேண்டும், சூப்பர்விஷனைக் கொஞ்சம் கடினப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1980 ஜூலை 22] [திரு. க. இராமமூர்த்தி]

இங்கே பேசுகின்றபோது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். தமிழ் கலைக் களஞ்சியத்தைப் பொறுத்த வரையில், தமிழ் கலைக் களஞ்சியம் இடையிலே நிற்கின்ற நிலை இருக்கிறது. அது தொடர்ந்து நடத்தும் பணியாக இருக்க வேண்டுமென்றுதான் தொடங்கப்பெற்றது. தமிழ் கலைக் களஞ்சியப் பணி என்றைக்கும் முடிவடையாது என்ற அளவிலேதான் முயற்சிகள் இருந்தன. தொடர்ந்து வெளியீடுகள் வர வேண்டுமென்று அமைந்தது. ஆனால் என்ன காரணத்தினாலோ அது இடையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில சிக்கல்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அது மீண்டும் இயங்குவதற்கும், தமிழ் கலைக் களஞ்சிய வெளியீடுகள் தொடர்ந்து வெளியிடுவதற்கும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே ஏற்கெனவே பேசி முடித்திருக்கின்ற காரணத்தினாலே, நான் மீண்டும் அதற்குள்ளே சென்று அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஒன்று மட்டும் அதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறியதுபோல, நம்முடைய அரசாங்கத்தினுடைய பிரதிநிதிகள் அங்கே சிண்டிகேட்டிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள்? 20 ஆண்டுகளாக அங்கு ஆசிரியர்கள் பெர்மனன்ட் செய்யப்படவில்லை. அவர்களுக்கு அங்கே பணிப் பாதுகாப்புத் தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கின்றது. இன்றைக்கும் அது எழுகிறது. சென்ற ஆண்டுகூட இந்த நிலை இருந்தது. அப்போது 19 ஆண்டுகளாகச் செய்யப் படவில்லை என்று சொல்லியிருப்பார்கள். பல ஆண்டுகளாகவே இந்த நிலைமைகள் இருக்கும்போது, நம்முடைய அரசாங்கத்தின் நியமன உறுப்பினர்கள், செயலாளர் மற்றவர்கள் எல்லாம், அந்த சிண்டிகேட்டில் இருந்துகொண்டு என்ன செய்துகொண்டிருக்கின்றார்கள் என்று கேட்க விரும்புகிறேன். இதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இதைப்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும். அவர்கள் சிண்டிகேட்டில் என்ன கருத்துக்களைச் சொல்கிறார்கள் என்பது தெரிய வேண்டாமா என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று பல பேர்கள், அரசாங்கத்தினுடைய நியமனப் பிரதிநிதிகள், சிண்டிகேட்டில் சென்று செயல்படவில்லை என்ற தகவல்கள் எனக்கு வந்தன. சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட்டில் என்ன நடவடிக்கைகள் என்று எடுத்துப்பார்த்தால், அரசாங்கத்தினுடைய நியமன உறுப்பினர்கள், பிரதிநிதிகள் அங்கே செல்வதில்லை. அவர்கள் ஏன் போகவில்லை என்று தெரியவில்லை. அந்தக் கூட்டங்களுக்கு அவர்கள் சரியாகப் போகவில்லை. நான் அந்த அதிகாரிகளைக் குறிப்பிட்டு

குறை சொல்வதாகக் கருதக்கூடாது. கல்வித் துறைச் செயலாளர் அவர்கள் போகவில்லை. இப்போதைக்கு புதிய செயலாளர் வந்திருக்கிறார்கள். கடந்த காலத்திலே சென்னைப் பல்கலைக் கழகத்தின் சிண்டிகேட் கூட்டத்திற்கு, அரசாங்கத்தினுடைய பிரதிநிதியாக நியமனம் செய்யப்பட்ட, கல்வித் துறைச் செயலாளர் எத்தனை கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அவர்கள் எந்த அளவுக்குப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆசிரியர்கள் பிரச்சினை வருகிறது, மாணவர்களுடைய பிரச்சினை வருகிறது, பல்கலைக் கழகத்தினுடைய பிரச்சினைகள், தீர்க்கப்படவேண்டியவைகள் எத்தனையோ வருகின்றன. போராட்டங்கள் வந்து விடுகின்றன, அரசு அவைகளைத் தீர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. அவைகள் சிண்டிகேட் மூலமாகத் தீர்க்கப்பட வேண்டும். அரசினுடைய அதிகார பூர்வமான பிரதிநிதிகள் இருந்தார்கள். அவர்கள் ஏன் இதைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதைப் பரிசீலிக்க வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிக்க வேண்டும். ஒருவேளை அப்படிப்பட்டவர்கள் சிண்டிகேட்டில் கலந்து கொள்வதை தங்கள் தரத்திற்குக் குறைவாகக் கருதி 'சிண்டிகேட்'டுக்குப் போக மாட்டோம் என்ற கருத்திலே இருக்கிறார்களா? அப்படி என்றால், அங்கே போவதன் மூலம் தரம் உயரும் என்று நினைக்கின்ற அதிகாரிகளை அங்கு நியமனம் செய்யலாம். அப்படிப்பட்டவர்களையாவது அனுப்ப வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே, இந்த நடவடிக்கைகள் முறையாக எடுக்கப்பட்டிருக்குமானால், சில ஆண்டுகளுக்கு முன்பாகவே, அங்கே இருக்கின்ற நிலைமைகள் வெளியே தெரிந்திருக்கும். அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்கின்ற வாய்ப்பு இருந்திருக்கும். இன்றுபோல் நிலைமைகள் முற்றவேண்டிய அவசியத்திற்கு வந்திருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன். பல்கலைக் கழகத்தினுடைய அமைப்பை அரசு பொறுப்பேற்றுச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு தனியார் நிறுவனம். ஆகவே அதை அழித்துவிட வேண்டுமென்ற அளவில் நடவடிக்கைகள் இருக்கக் கூடாது. அதற்கு இடம் கொடுக்கின்ற அளவிலே அரசினுடைய நடவடிக்கைகள் அமைந்துவிடக் கூடாது என்று எச்சரிக்கும் அளவில் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியைப் பொறுத்த, அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அங்கே என்ன போராட்டம் நடைபெற்றது, என்னென்ன பிரச்சினைகள் எழுந்தன என்பதுபற்றியெல்லாம் நமக்குத் தெரியும். இன்றைக்கு அங்கு என்ன நடைபெறுகிறது? அந்தக்



கல்லூரியில் மாணவியர்களைச் சேர்ப்பதைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். "போராட்டம் நடத்தினீர்களே, ஊதிய உயர்வு கேட்டீர்களே, சம்பள உயர்வு கேட்டீர்களே, எங்களை எதிர்த்துப் போராட்டம் நடத்தினீர்களே" என்பதைச் சொல்லிக் காட்டுவது போல அங்கே சேர்கின்ற மாணவிகளின் எண்ணிக்கையைக் குறைத்து விடுகிறார்கள். அதன் காரணமாக சில ஆசிரியர்கள் பணியாற்ற முடியாத நிலை ஏற்படுகிறது, பணியிலே தொடர்ந்து இருக்க முடியாத நிலை ஏற்படுகிறது. கல்லூரிகளிலே மாணவர்களுக்கு இடமில்லை என்று தவித்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, இருக்கின்ற சூழ்நிலைகளைப் பயன்படுத்திக்கொண்டு, வேண்டுமென்றே ஆசிரியர்கள் அவர்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளவில்லை என்பதற்காகவே பணிக் குறைப்புக்கான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவது சரியல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதிலே இன்னொன்றைச் சொல்கிறேன். அது பெண்கள் கல்லூரி. 3 பேர்கள் வேலையற்றுப் போனால் எங்கே போவது? அவர்களை எங்கே அனுப்புவது? சென்னை நகரத்தை விட்டு, கோயம்புத்தூருக்கோ, மதுரைக்கோ, திருச்சிக்கோ அல்லது வேறு எங்காவதோதான் அனுப்ப வேண்டியிருக்கும். இது வேண்டுமென்றே திட்டமிட்டு நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்ற மேனேஜ்மெண்ட் செய்கின்ற சதிச் செயல். இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தனியார் நிறுவனங்கள் இது போன்ற காரியங்களில் ஈடுபடுகின்றபோது, முறையாகச் செயல்பட வேண்டும் என்பதை அவர்களுக்கு அரசு தெளிவுபடுத்த வேண்டும், அவர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும். அப்படித்தான் அவர்களை முறைப்படுத்த வேண்டும். அவர்கள் சரியாக இல்லையென்றால், அரசினுடைய மான்யத்தை நிறுத்த முன் வரவேண்டும். அதற்கு ஏற்ற வகையிலே நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கின்றேன். நமது கல்வி அமைச்சர் அவர்களுடைய பல்வேறு நடவடிக்கைகள், எடுத்திருக்கின்ற முயற்சிகள், உலகத் தமிழ் மகாநாடு போன்ற பல நடவடிக்கைகள், இன்னும் வேறு பல காரியங்கள் எல்லாம் வரவேற்கக்கூடியதாக இருக்கின்றன. அவைகள் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் அமைந்திருக்கின்றன என்று கூறி, பாராட்டி அமைகிறேன்.

*திரு. க. அருணாசலம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசு பல்வேறு மாநிலங்கள் செய்ய முடியாத ஒன்றைச் செய்து சாதித்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) :** இன்றைய தினமே கல்வி அமைச்சர் அவர்களின் பதில் உரை இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அங்கத்தினர்கள் அருள்கூர்ந்து, கூடுமான வரையில் விரைவாக முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

**திரு. க. அருணாசலம் :** பத்து பிளஸ் இரண்டு பிளஸ் மூன்று என்ற திட்டத்தை ஏற்று செயல்படுத்தியுள்ளார்கள். அதிலே சில குறைகள் இருந்தாலும், வருகின்ற ஆண்டிலே அவைகளையெல்லாம் சரி செய்துகொண்டு செய்வார்கள். இப்போது 75 சதம் பள்ளி நிறுவனங்கள் தொடக்கக் கல்விக்காகவே இருக்கின்றன. 15 சதம் இடைநிலைப் பள்ளிகளாக இருக்கின்றன. 10 சதம் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளாக இருக்கின்றன. இதன் மூலம் கிராமப் புற வளர்ச்சி சிறப்பாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் கிராமப்புறங்களில் பள்ளியில் சேர்ந்த பிள்ளைகள் பலர் இடையே நின்றுபோகின்ற நிலைமைகளும் இருக்கின்றன. இந்தத் தொடக்கப் பள்ளிக் கல்வி இன்னும் சிறப்பாக நடைபெறவேண்டுமானால், அதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதிலிருந்து 33 சதம் பேர்கள் நின்று போகின்ற நிலை இன்று இருக்கிறது. அந்த மாணவர்களை தொடர்ந்து படிக்கச் செய்வதற்கு முக்கியமாகச் செய்யவேண்டிய முயற்சி என்னவென்றால், அந்த மாணவர்கள் பள்ளியில் மகிழ்ச்சியோடு இருக்கின்ற நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் வந்து படிக்கிறபோது, மகிழ்ச்சியோடு இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்கு ஏற்றம் ஏற்பட வேண்டுமென்று செயல்படும்போது, அவர்கள் கீழே போகின்ற நிலையிருக்கிறது. அதை மாற்ற வேண்டும். பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு மகிழ்ச்சி இல்லாமல் இருப்பதால், எப்போது அங்கேயிருந்து தப்பிப்போகலாம் என்று முயற்சி செய்து கொண்டிருந்துவிட்டு, தப்பி ஓடுகிறார்கள். அப்படியே விட்டு விட்டால், நாளாவட்டத்தில் அவர்கள் பள்ளிக்கூடத்திலிருந்தே நின்றே போகின்ற நிலைமைகள் ஏற்பட்டுவிடுகின்றன. எனது அனுபவம் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் 2-வது, 3-வது வகுப்பு ஆசிரியராக இருந்திருக்கிறேன். அவர்கள் எனது பள்ளியில் காலை 6 மணிக்கு வந்து மாலை 6 மணி வரை இருப்பார்கள். அங்கே அவர்களின் பெற்றோர்கள் வந்து ஆசிரியரைப் பார்த்து 'ஏனய்யா படிக்க அனுப்புகின்ற பிள்ளைகள் படிக்காமல் வேறு என்னமோ செய்து கொண்டிருக்கிறார்களே, இவர்கள் எப்போது கற்பார்கள் ?' என்றெல்லாம் கேட்பார்கள். அதற்குள்ள ஒரே காரணம்

(பிற்பகல் 6-20)

பிள்ளைகளை விளையாட விடுவதுதான். அந்தப் பருவத்திலே அவர்கள் பம்பரம் செய்வார்கள், குண்டு செய்வார்கள், கோலி விளையாடுவார்கள், கயிறு திரிப்பார்கள். அந்த வேலைகளைச் செய்ய அவர்களுக்கு இடம் கொடுத்த





போது, அவர்கள் பள்ளிக்கூடங்களில் மகிழ்ச்சியாகக் காரியங்களைச் செய்தார்கள். அதனால் படிப்பு வராது என்பதல்ல. அவர்கள் கயிறைத் திட்டமிட்டுத் திரித்தார்கள், பம்பரம் செய்யும்போது சிந்தித்து, திட்டமிட்டுச் செய்தார்கள். அதே போன்று குண்டு செய்தார்கள். குயவர்கள் வீட்டிற்குச் சென்று சுரை வைப்பது எப்படி என்பதைத் தெரிந்து செய்தார்கள். அந்த முறையில் அறிவை வளர்க்கும்படியாகவும், திறமையை வளர்க்கும்படியாகவும் பள்ளிக்கூடங்கள் இருக்க வேண்டும்.

கல்வித் துறையில் பரவல் முறை இருந்தால் நல்லதென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். நிர்வாகத்தில் மட்டும் அப்படியிருந்தால் போதாது. படிப்புப் பொருளிலும் வேண்டும். மேல்நிலைக் கல்வியில் ஆட்டானமி பற்றிப் பேசுகிறோம். தொடக்க நிலையிலும் அது வேண்டும். சிறு குழந்தைகள் படிக்க 'இன்னவேடிவ் ஸ்கூல்ஸ்' என்ற முறையில் ஏற்படுத்தி, அவர்களுக்குப் பொறுப்பு கொடுத்து, மாணவர்களைப் படிக்கச் செய்தால், பெரும்பாலோர் தொடர்ந்து படிப்பார்கள். நின்று போகிறவர்கள் விழுக்காடு குறைவாகும் பல பேர்கள் வேலையின் காரணமாக, வீட்டுப் பொறுப்பின் காரணமாக, பள்ளிக்கூடங்களில் தொடர்ந்து படிக்க முடியவில்லை. அவர்கள் ஆடு மேய்க்கப் போவார்கள், மாடு மேய்க்கப் போவார்கள். எனவே அவர்களுக்கு சௌகரியப்பட்ட நேரத்தில் கல்வி அளிக்க வேண்டும். முறைசாராக் கல்வி என்று சொல்லிக் கொண்டிருந்ததை இப்போது பள்ளி சாராக் கல்வி என்று சொல்லுகிறார்கள். எனினும் இவற்றையும் பள்ளிகளில்தான் நடத்துகிறார்கள். நான் சமீபத்தில் கும்பக் கரைக்குப் பக்கத்திலே போயிருந்தபோது 3, 4 இடங்களில் பையன்கள் கூட்டமாக நின்று கொண்டு மாடு மேய்த்துக்கொண்டிருந்தார்கள். இன்னொரு இடத்தில் ஒரு கும்பல் விளையாடிக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட இடங்களிலேயே கற்றுக்கொடுக்க வழி செய்தால், பள்ளி சாராக் கல்வி திறமையாக நடைபெறும். குறுகிய காலத்தில் தற்குறி நிலையிலிருந்து படித்தவர்களின் நிலைக்கு அவர்களைக் கொண்டுவர முடியும். எங்கு அவர்கள் வேலை செய்கிறார்களோ, அங்கேயே அவர்கள் கல்வி கற்கச் செய்ய வேண்டும். தீப் பெட்டித் தொழிற்சாலை, பீடித் தொழிற்சாலை போன்றவைகளில் பல சிறுவர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கே இடைவேளையில் கொஞ்ச நேரம் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். தொழில் நேரத்தை 6 மணி நேரமாக்கி, படிப்புக்கு ஒரு மணி நேரமென்று ஏற்பாடு செய்தால், பெருமளவில், குறுகிய காலத்தில் எல்லோரையும் எட்டாம் வகுப்பு வரை படிக்கும்படி செய்யலாம்.

[திரு. க. அருணாசலம்] [1980 ஜூலை 22

இன்றைக்கு 5,000 பள்ளிகளுக்குமேல் 8 ஆம் வகுப்புவரை நடந்து கொண்டிருக்கின்றன. அதற்குப் பிறகு 2 2 4 ஆண்டுகள் உயர் கல்வி, மேல் நிலைக் கல்வி என்று வைத்திருக்கிறார்கள். உயர்நிலைக் கல்வியை 6 ஆம் வகுப்பிலிருந்தும் ஆரம்பிக்கிறோம். அது இருக்க வேண்டியதுதான். கிராமங்களில் நிடுநிலைப் பள்ளிகளை அதிகமாக ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். அப்போது அங்கு குடிமை உணர்ச்சியோடு வளரும் மாணவர்கள் அதிகமாவார்கள். வேலை செய்ய எல்லோரையும் தயார் செய்வது மட்டுமல்ல, குடிமைப் பண்புகளை வளர்ப்பதும் அவசியம். அதனால் நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். இன்றைக்கு தொடக்கக் கல்விக்கு 105 கோடி ரூபாய்தான் செலவிட்டுக் கொண்டிருக்கிறோம். ஏகதேசமாக கல்விக்காக மொத்தம் 300 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். அதிலே 100 கோடி ரூபாய் அளவிற்கு அடிப்படைக் கல்விக்குச் செலவிடுகிறோமென்பது போதாது. அதை அதிகப்படுத்த வேண்டும். இன்னும் இதைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. 10 ஆண்டுகளில் எல்லோரையும் தற்குறித்தனத்திலிருந்து நீக்கிவிடுவோமென்று நினைத்தோம். அது இன்னும் கைகூடவில்லை. சுதந்திரம் பெற்ற நாடுகள் எல்லாம் எல்லோரையும் வெகு விரைவிலே படிக்க வைத்திருக்கின்றார்கள். தமிழ் நாட்டில் 60 சதவிகிதத்தினர் படிக்காதவர்கள் இருக்கிறார்கள். வெளி மாநிலங்களில் 70 சதவிகிதம் அளவிற்கு இருக்கிறார்கள். இந்த நாடு வளமுடைய நாடாக ஆகிக்கொண்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். வளமெல்லாம் ஒருசில வெஸ்டட் இன்ட்ரஸ்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. சாதாரணப் பொது மக்களுக்கு இந்த வளத்தின் பயன் கிடைக்க வேண்டுமென்றால், அடித் தளத்தில் இருக்கும் கல்வியைப் பலப்படுத்த வேண்டும். அதற்காகத்தான் வயது வந்தோர் கல்வி விரிவு அடைய வேண்டுமென்று மத்திய அரசு நினைத்துத் திட்டமிட்டது. அந்தத் திட்டத்தையும் மாநில அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. முறை சாராக் கல்வி என்று சொல்லி அதற்கு ஒரு டைரக்ரேட் ஏற்படுத்தப்பட்டது . . .

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாற்றுத் தலைவரவர்களே, அவையிலே பத்திரிகை படிக்கலாமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. அருணாசலம் :** இந்த முறைசாரா வயது வந்தோர் கல்வித் திட்டத்திற்காக 1 கோடியே 61 லட்சம் ரூபாய் செலவு செய்கிறோம். இதன் மூலம் 13 ஆயிரம் மையங்களில் 4 லட்சம் பேர்கள் படிக்கின்றார்கள். இப்படிச் செய்வதின்மூலம் தற்குறித்தனத்தை விரைவில் போக்க முடியாது. கல்வி மையங்களை 4, 5 பங்கு அதிகமாக்கி, விரைவிலே இந்தப் பணியைச் செய்ய வேண்டும். அறிக்கையிலே ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. தேசிய



1980 ஜூலை 22] [திரு. க. அருணாசலம்]

தொண்டர் படைக்காக 45 லட்சம் ரூபாயை நம்முடைய மாநில அரசு கொடுக்கிறது. இதற்காக மத்திய அரசும் உதவியளிக்கிறது. இதை வைத்துக் கொண்டு மாணவர்களும் எழுத்தறிவு அளிக்கிறார்களென்று சொல்லுகிறார்கள். மாணவர்கள் என்.சி.சி. பயிற்சி பெறும்போது, அவர்கள் திறமையை வளர்க்கிறார்கள். ஆனால் என்.எஸ்.எஸ்.-ல் ஒரு திறமையும் வளர்ப்பதில்லை. இவர்கள திறமையை வளர்க்க வேண்டும். முதலுதவி செய்வது, தீ அணைப்புப் படையில் வேலை செய்வது போன்றவற்றில், ஸ்கவுட்டில் திறமையை வளர்ப்பது போல, என்.எஸ்.எஸ். மாணவர்களுக்கும் திறமையை வளர்த்தால்தான் பின்னர் இரண்டு மடங்கு இவர்கள் சமூக சேவை செய்ய முடியும். முதலில் இவர்கள் தங்கள் திறமையை வளர்த்துக் கொண்டு, பிறகு சேவை செய்தால், நன்றாக இருக்கும். எனவே அவர்கள் திறமையை வளர்த்துக்கொள்ளுவதை திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

படித்தவர்கள் எல்லோரும் சொல்லிக் கொடுத்துவிடுவார்கள் என்று சொல்லிவிட முடியாது. கற்பிக்கும் திறமையைவிட கற்கும் ஆற்றலை வளர்க்க ஆசிரியர்களுக்குத் தெரிய வேண்டும். அது குறைவாக இருக்கிறது. அதற்கு வேண்டிய உபகரணங்களும் குறைவாக இருக்கின்றன. அகராதி, கலைக் களஞ்சியம் பற்றிச் சொன்னார்கள். சிறு குழந்தைகளுக்கு வேண்டிய மாதிரி நூல்கள் குறைவாக வந்து கொண்டிருக்கின்றன. இவற்றையும் வேகமாகக் கொண்டு வருதல் அவசியம்.

மேல்நிலைக் கல்வியைப்பற்றி அதிகமாகச் சிந்திக்க வேண்டிய அவசியம் இருந்தாலும், அடித்தளம் சரியாக இருந்தால்தான் நல்லது. இல்லையென்றால் மணலிலே கட்டிய வீட்டைப்போல சரிந்து விழுந்துவிடும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் எல்லாவற்றையும் தேசிய மயமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். சோஷலிச சமுதாயம் வேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறோம். மக்கள் ஆட்சி அடிப்படையிலே சோஷலிச சமுதாயம் வர வேண்டுமென்பதுதான் நம் கருத்து. மக்களாட்சி வர வேண்டுமென்றால் சிந்தனை வளர வேண்டும். அப்படிப்பட்ட சிந்தனையுடன் கூடிய காரியங்கள் நடைபெற வேண்டுமென்றால், பல்வேறு தானியங்கி நிறுவனங்களையும் பொது மக்களையும் சேர்த்துக்கொண்டு, காரியங்களைச் செய்தால், இந்த நாடு சீக்கிரமாக முன்னேறும். தமிழ் நாடு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது பல துறைகளிலே வேலை சிறப்பாக நடந்தாலும், இன்னும் சிறப்பாக நடக்க வாய்ப்பிருக்கின்றது. அதற்காக ஒருகுழு அமைத்து செயல்படுத்தலாமென்று சொல்லுகிறார்கள். தம்முடைய மாநிலத்தில் பல சமயங்களில் குழுக்களை அமைக்கிறார்கள். இதற்கு முன்னாலே வயது

வந்தோர் கல்விக்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஒரு தடவை கூடியது. பின்னர் கூடவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் செய்ய வேண்டும். இதுபோன்ற விஷயங்களில் பொது மக்களையும் கலந்து கொண்டு செய்தால்தான் ஜனநாயகம் வலுப்படுமென்று சொல்லி, பேச வாய்ப்பு கொடுத்த தலைவர்களுக்கு நன்றி தெரிவித்து, முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30)

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாற்றுத் தலைவரவர்களே, இந்த அவையில் வைக்கப்பட்டிருப்பதாகிய கல்விக் கொள்கை மீதுள்ள குறிப்பில் எனது கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் கல்வி எவ்வளவு தூரம் ஒரு நாட்டினுடைய இன்றியமையாத அங்கமாக அமைகின்றது என்பதை நான் எடுத்துச் சொல்லத் தேவையில்லை. கட்சிகளுக்கு அப்பாற்பட்டு சமுதாய நலன் அல்லது இந்த நாட்டினுடைய எதிர்காலம் என்ற முறையிலே ஒரு உயரிய, தரமான கல்வியைக் கொடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டியது இந்த நாட்டினுடைய கடமை. நாம் சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகளுக்கு அப்பால் கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது இன்றைக்குப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஒரு சுதந்திர நாட்டில் சுதந்திரம் கிடைத்து 33 ஆண்டுகள் ஆன பிறகு ஆரம்பக் கல்வியிலே 94.6 சதவித மாணவர்களைப் படிக்க வைத்கிறோம் என்று சொல்லி கடந்த பல ஆண்டுகளாக இருந்த புள்ளிவிவரங்களைச் சொல்லி நாம் ஓரளவு மகிழ்ச்சியடைகிறோமே தவிர, நாம் இன்னும் குறைபட்டுக் கொள்ளக் கூடிய நிலையிலே தான் கல்வியைப் பொறுத்தவரை இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூற்றுக்கு நூறு மாணவர்கள் பள்ளிகளுக்கு வந்து 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை இடையில் நின்று விடாமல் தொடர்ந்து படித்தால் தான், ஓரளவு அதன் பலனை நாம் அடைய முடியும். ஓரளவு நாம் மகிழ்ச்சி அடைய முடியும். 6 வது வகுப்பில் 51 விழுக்காடாகக் குறைந்து விட்டது. அதன் பிறகு உயர்நிலைப் பள்ளிகளில் 31 விழுக்காடாகக் குறைந்து விடுகிறது. இந்தக் குறைபாட்டை ஓரளவு நிவர்த்தி செய்கிறோம் என்று நாம் ஆறுதல் சொன்னாலும் கூட, எட்ட வேண்டிய எல்லையை இன்னும் எட்டவில்லை என்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலையைத் தான் நம்முடைய கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பும் சுட்டிக்காட்டுகிறது. இந்த நிலையில் இனிமேல் வருகிற கல்விக் கொள்கைக் குறிப்புகளிலே இன்னின்ன இடங்களிலே இத்தனை இத்தனை பள்ளிகள் தேவை என்கிற புள்ளிவிவரம் இருக்க வேண்டும். கல்வியைப் பொறுத்தவரை நமக்கு உறுதியான ஒரு திட்டம் தேவை. கேட்பவர்களுக்கெல்லாம், கேட்ட இடங்களில் எல்லாம் அது தொடக்கப் பள்ளியாக இருந்தாலும் சரி, நடுநிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி, உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி அல்லது மேல்நிலைப் பள்ளியாக



இருந்தாலும் சரி, கொடுப்பதை விட்டு விட்டு, அரசே ஒரு ஆய்வு செய்து இன்னின்ன இடங்களில் இன்னின்ன ஒன்றியங்களில் கல்விக்கூடங்கள் குறைவு, இன்னின்ன இடங்களில் இன்னும் கல்விக் கூடங்கள் வர வேண்டும், இன்னின்ன இடங்களில் இத்தனை இத்தனை பள்ளிக்கூடங்கள் வந்து விட்டன. இனி இத்தனை தேவை, இன்னின்ன ஊர்களில் தொடக்கப் பள்ளிகள் இத்தனை வரவேண்டும். நடுநிலைப் பள்ளிகள் இத்தனை வர வேண்டும், உயர்நிலைப் பள்ளிகள் இத்தனை வர வேண்டும் என்கிற முறையில் ஒரு எஜுகேஷன் மேப் தயார் செய்ய வேண்டும். அந்த இடங்களில் தான் பள்ளிக்கூடங்களைப் புதிதாக நடத்த அனுமதி கொடுக்க வேண்டும். தமக்கு சில உறுதியான திட்டம் கல்வித் துறையைப் பொறுத்தவரை கட்டாயம் இருக்க வேண்டும். ஆரம்பப் பள்ளியில் படிப்பவர்கள் ஒரு மைலுக்கு மேல் நடக்கக் கூடாது என்கிற முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். நடுநிலைப் பள்ளியில் படிப்பவர்கள் 2 மைலுக்கு மேல் நடக்கக் கூடாது என்கிற முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். உயர்நிலைப் பள்ளியில் படிப்பவர்கள் 3 மைலுக்கு மேல் நடக்கக் கூடாது என்கிற முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த முறையில் இதைப்பற்றி ஆராய்ந்து "வையபில் யூனிட்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு மாவட்ட ரீதியாக ஒரு திட்டம் தயார் செய்து ஒரு 'எஜுகேஷன் மேப்' தயார் செய்ய வேண்டும். இந்த நாட்டிலே பள்ளிக்கூடங்களை அரசு எங்கெங்கு ஆரம்பிக்க முடியுமோ அங்கெல்லாம் முயற்சி எடுத்து ஆரம்பிக்க வேண்டும். கல்வி இன்னும் முழுமையாக வளர்ச்சி பெறாத இடங்களில் எல்லாம் முயற்சி எடுத்து கல்வியை வளர்க்க வேண்டும். அப்படிப்பட்ட ஆராய்ச்சியைச் செய்ய வேண்டிய ஒரு கால கட்டத்தில் இன்றைக்கு நாம் இருக்கிறோம். அந்தக் கால கட்டத்தை நாம் அடைந்துவிட்டோம் என்று நான் நினைவூட்ட விரும்புகிறேன். இன்றைக்கு என்ன நிலைமை என்றால் அடுத்தடுத்து இரண்டு பள்ளிக்கூடங்கள் ஒரே இடத்தில் இருக்கின்றன. அதனால் ஆசிரியர்கள் குறைகிறார்கள். டிராப் அவுட் ஏற்படுகிறது. சர்பிளஸ், டிப்ளாய்மென்ட் போன்ற பிரச்சினைகள் எழுகின்றன. எங்கு உண்மையிலேயே பள்ளிக்கூடங்கள் தேவையோ அங்கு போய் பள்ளிக்கூடங்களை ஆரம்பியுங்கள் என்று சொல்லலாம். சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய ஒருவர் தேர்தல் சமயத்தில் இங்கே பள்ளிக்கூடம் ஆரம்பிக்க நான் அனுமதி வாங்கித் தருகிறேன் என்று தொகுதி மக்களுக்குச் சொல்கிறார். அதுபோல் ஒவ்வொரு இடத்திலும் உள்ளவர்கள் சொல்லுகிறார்கள். உடனே நிறைய பள்ளிகள் வந்து விடுகின்றன. தேவைக்கு மேல்

அடுத்தடுத்து பள்ளிகள் வந்து விடுகின்றன. இது சரியான அணுகு முறை ஆகாது. கல்வித் துறையிலே தனியாக இதற்காக ஆராய்ச்சி செய்து, இன்னின்ன இடங்களிலே தான் பள்ளிக்கூடங்கள் கட்ட அனுமதிக்க முடியும் என்று முன்கூட்டியே சொன்னால், தேர்தலுக்கு நிற்பவர்கள் உறுதியாக இன்ன இடத்திலே தான் பள்ளிக்கூடங்கள் வரும் என்று சொல்லுவார்கள். மற்றவர்களுக்குக் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்வார்கள். மற்ற இடங்களில் உள்ளவர்கள் மக்களிடம் இன்ன இடத்தில் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க நான் அனுமதி வாங்கித் தருகிறேன் என்று சொல்லவும் மாட்டார்கள். ஆகவே இப்படிப்பட்ட முறையில் ஒரு திட்டம் வகுக்க வேண்டும். எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய மாணவர்களுக்கும் கல்விச் சாலையைக் கட்டாயம் கொண்டு செல்ல வேண்டும். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வகுத்துச் செயல்படுத்தினால், நாட்டிலுள்ள அனைவருக்கும் அது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும். நான் இந்தக் கருத்தைச் சொல்லும்போது, ஆரம்பப் பள்ளிக்கு என்று ஒரு சார்ட், நடுநிலைப் பள்ளிக்கு என்று ஒரு சார்ட், உயர்நிலைப் பள்ளிக்கு என்று ஒரு சார்ட், மேல்நிலைப் பள்ளிக்கு என்று ஒரு சார்ட், கல்லூரிக்கு என்று ஒரு சார்ட் என்கிற முறையில் இதை வகுக்க வேண்டுமென்று மாற்றுத் தலைவரவர்கள் மூலமாக நினைவுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கல்விக் கொள்கைக் குறிப்பிலே இந்தத் துறையினர் சிறப்பாகப் புள்ளி விவரங்களை யெல்லாம் தந்திருக்கிறார்கள். நான் அதற்குள்ளே சென்று அதிக நேரத்தைச் செலவு செய்ய விரும்பவில்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரையில், ஒரு பள்ளிக்கூடம் என்றால் என்ன என்பதற்குத் திட்டவட்டமாக இலக்கணம் வகுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள் கிறேன். இப்பொழுதே பள்ளி என்றால் என்ன என்பதற்கான இலக்கணம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும் இப்போது இருப்பதுமாதிரி இல்லாமல் இலக்கண ரீதியாக அது வர வேண்டும். ஒரு பள்ளி என்றால், இத்தனை சென்ட் நிலம் இருக்க வேண்டும், விளையாட்டு மைதானம் இவ்வளவு அளவில் இருக்க வேண்டும், அறைகள் இவ்வளவு இவ்வளவு அளவுகளில் இருக்க வேண்டும். நடுநிலைப் பள்ளி என்றால் 3 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும், உயர்நிலைப் பள்ளி என்றால் 5 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும், பட்டப் படிப்புக் கல்லூரி என்றால் 40 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும், முதுகலைப் பட்டப் படிப்புக் கல்லூரி என்றால் 60 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும், பல்கலைக் கழகம் என்றால் 300 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும் என்றெல்லாம் வைத்திருக்கிறோம். ஆனால் மெரினாவில் ஒரு பல்கலைக் கழகம் மிகவும் கொஞ்சம் ஏக்கரில் இயங்கிக்கொண்டிருக்கிறது.



அதற்கு நிலம் அவ்வளவு இல்லை. முன்பே அது அமைந்தது. இனி வர வேண்டிய பள்ளிகள் எவை எவை, எந்தெந்த இடங்களில் அவை வர வேண்டும். எப்படியெப்படி கல்வியை வளர்க்க வேண்டும், எத்தனை ஏக்கர் நிலம் இருக்க வேண்டும் போன்ற விவரங்களையெல்லாம் திட்டவட்டமான இலக்கண ரீதியில் வகுத்து, கொள்கை ரீதியில் அவற்றையெல்லாம் இடம் பெறச் செய்ய வேண்டும். இன்றையதினம் கல்வித் துறையில் எத்தனையோ ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் இந்தப் பணியில் ஈடுபட்டு இந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் தர வேண்டும். இதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் ஏராளமாக தமிழ் நாட்டிலே இருக்கின்றன, ஆனால் 50 சதவிகிதப் பள்ளிகள் சரியான கட்டிடங்கள் விளையாட்டு அரங்கங்கள் இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலேயே அதிக அளவில் அரசாங்கப் பள்ளிகள் இருக்கக்கூடிய மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு போன்ற தாலுக்காக்களில் உள்ள 50 சதவிகிதப் பள்ளிகள் ஓலை கூரையிலேயே இருக்கின்றன. மூன்று வருடத்திற்கு ஒரு முறை ஓலை கட்ட வேண்டியிருக்கிறது. அவற்றையெல்லாம் ஓட்டுக் கட்டிடங்களாக ஒரு 'பேஸ்ட் புரோகிராம்' என்கிற அடிப்படையில் படிப்படியாக மாற்ற வேண்டும், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் 4,000 பள்ளிகளை 3 வருடத்திற்குள் 'பேஸ்ட் புரோகிராம்' என்ற முறையில் புதிய கட்டிடங்களாக மாற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் ஓலையில் கட்டப்பட்டுள்ள அரசாங்கப் பள்ளிக் கூடங்களையெல்லாம் ஓட்டுக் கட்டிடங்களாக மாற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் பள்ளிகளிலும் புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்கிற நிலைமை எல்லாம் கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பிலே இடம் பெறச் செய்ய வேண்டும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே உள்ள 95 ஆயிரம் ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொள்கிறோம் என்று அறிவிப்பு தந்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு அறிவிப்பு தந்ததற்காக, நான் அரசைப் பாராட்டுகிறேன். அறிவிப்போடு நம்முடைய பணி தீரவில்லை. அதுவல்ல நம்முடைய பிரச்சினை. இப்போதே அவர்கள் அரசு ஊழியர்களைப் போல முழுச் சம்பளம் பெற்று அரசு ஊழியர்களாகவே செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களில் கல்வியையும் அவர்களுக்குரிய ஒரு பொறுப்பாக நாம் வைத்திருக்கிறோம். ஆனால் பஞ்சாயத்து யூனியன்களில் கல்வித் துறை

சிறப்பாகச் செயல்படவில்லை. பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக இன்றைய தொடக்கப் பள்ளிகள், 3, ஆயிரம் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகள் 1,500 நகராட்சி பள்ளிகள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இவற்றுக்கு 50 விழுக்காடு மானியத்தை அரசு கொடுக்கிறது. அவர்கள் கல்வி செஸ் என்று வசூலிக்கிறார்கள். எவ்வளவு வசூல் செய்து சேர்க்கிறார்களோ அதில் 50 சதவிகிதத்தை அரசு மானியமாகக் கொடுக்கிறது. பிறகு பற்றாக்குறை ஏற்படுகிற தொகையையும் கொடுக்கிறோம். சுருக்கமாகச் சொன்னால், அவர்கள் கல்விக்காக வசூலிக்கின்ற தொகையை அப்படியே வாங்கி அரசாங்கக் கஜானாவில் அடைத்து விட்டு, பாக்கியை நம்முடைய அரசாங்கப் பணத்திலிருந்து பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். முழுக்க முழுக்க அரசு தான் நிதியை அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அது போலவே நில வரியைப் பொறுத்தவரையில், ஒரு ரூபாய் வருவாய் என்றால், 45 காசை பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கிறோம். நாம் வசூல் செய்து ஒரு ரூபாய்க்கு 45 காசு வீதம் அவர்களுக்குக் கொடுக்கிறோம். அதுபோல் உள்ளூர் வரியிலிருந்து தொடர்ந்து ஒன்பதில் நான்கு பங்கைக் கொடுக்கிறோம். இதைத் தவிர மக்கள் தொகை அடிப்படையில் நபருக்கு 6 ரூபாய் பங்கு கொடுக்கிறோம். அரசே அவர்களுக்குப் பூரா பணத்தையும் கொடுத்துவிட்டு அவற்றை நிர்வகிக்கிற பொறுப்பை மட்டும் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. அவர்கள் சிறப்பாக நிர்வாகம் செய்யவில்லை. பஞ்சாயத்து யூனியன் வளர்ச்சிப் பணியில்தான் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முடியும். பள்ளிக்கூடங்கள் அப்படியே இருக்கின்றனவா என்று மட்டும் தான் அவர்கள் பார்க்கிறார்களே தவிர, இன்னின்ன வட்டாரத்திலே இன்னின்ன விதத்திலே செயல்பட்டால், கல்வி வளர்ச்சி சிறப்பாக அமையும் என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு அவர்களுக்கு நேரம் இல்லை. சுதந்திரம் கிடைத்து 33 ஆண்டுகள் ஆன பிறகும் கூட பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கக்கூடிய பள்ளிகளில் எந்த வித முன்னேற்றமும் இல்லை என்பதை ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொண்ட பிறகு தான் அரசுக் கல்வித் துறையே அவற்றை ஏற்க வேண்டுமென்று கேட்கிறோம். அவைகள் அரசுப் பள்ளிகளாக இருந்தால் தான் நல்லது. இப்போதே நாம் முழுச் செலவையும் கொடுக்கிறோம். முழுதும் அந்தப் பணமே. ஆகவே அரசு அந்தப் பள்ளிக்கூடங்களை எடுத்துக் கொள்வதால், பணம் ஒன்றும் அதிகமாகச் செலவாகாது. நிர்வாகச் செலவாக வேண்டுமானால் கொஞ்சம் கூடுதலாகச் செலவாகலாம். ஆனால் அப்படிச் செய்தால், நிச்சயமாக கல்வியின் தரம் உயர முடியும். சர். சி. பி. ராமசாமி ஐயர் திருவாங்கூர்-கொச்சி சமஸ்தானத்தின் திவானாக இருந்த காலத்திலேயே, அரசியல் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பே,



ந்தப் பகுதியில் இருந்த அனைத்துப் பள்ளிகளையும் தேசியமயமாக்கினார். தந்திரம் வருவதற்கு முன்னால் நடந்த கதையைத்தான் நான் சொல்கிறேன். அரசியல் சட்டம் கூட உருவாக்கப்படவில்லை. அப்போது தை அங்குள்ள பிஷப்புகள் எல்லாம் எதிர்த்தார்கள். பிஷப்புகளை எல்லாம் றையில் போட்டார்கள். அத்தனை பள்ளிகளையும் தேசியமயமாக்கினார்கள். ன்றைக்கு கல்வியில் முதல் தரத்தில் கேரளா இருப்பதற்கு முக்கியமான ாரணம் அதுதான். இன்றைக்கு மைனாரிட்டியினரின் கல்விக் கூடங்களை ல்லாம் தேசியமயமாக்கப் போனால்கூட பிரச்சினைகள் வரத்தான் செய்யும். ஞ்சாயத்து யூனியன்களில் பணி புரியக்கூடிய ஆசிரியர்களை மட்டும் அரசு ழியர்களாக மாற்றிவிட்டால் போதுமா? ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ாற்றிவிட்டு பள்ளிகளை மட்டும் பஞ்சாயத்து யூனியன்களிடம் விட்டுவிடுவது சரியல்ல. முதல் படியாக ஆசிரியர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறார்கள். இன்னும் இதைத் தீவிரமாகப் பரிசீலித்து, அத்தனை பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளும் அரசுப் பள்ளிகளாக ஆக்கப்பட்டன என்று அடுத்த ஆண்டு கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவிப்பது பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 6-40)

இப்போது நம்முடைய கல்வி இலாகா நிர்வகிக்கின்ற பொறுப்பில் நாம் பல மாற்றங்களைச் செய்துகொண்டே வருகிறோம். ஆனால், அந்த மாற்றங்கள் சிறப்பாகச் செய்யப்படுகின்றனவா என்ற ஒரு ஐயப்பாட்டை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வி இலாக்காவிலே பல ஜி.ஓ.-க்கள் பிறப்பிக்கப்படுகின்றன. ஆனால், அவற்றில் எந்த ஜி.ஓ. வும் தமிழிலே பிறப்பிக்கப்படுவதில்லை. பிறப்பிக்கப்படுகின்ற இந்த ஜி. ஓக்கள் எல்லாம் தமிழிலே வரவேண்டும் தான் ஆட்சி செய்கிறோம் என்று சொல்லிவிட்டு, நடைமுறையில் பார்த்தால், எல்லாம் ஆங்கிலத்திலேயே தான் வருகின்றன. இது மிகவும் வருந்தத்தக்கது. இருந்தாலும், இனிமேல் இவைகள் தமிழிலே வர முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிறப்பிக்கப்படும் ஆணைகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவைகளாக இருக்கின்றன. ஒரு மாவட்ட அதிகாரி ஒருவிதமாக ஆணைக்கு விளக்கம் சொல்கிறார். இன்னொருவர் இன்னொரு விதமாக விளக்கம் சொல்கிறார். அவரவர்கள் கொண்டுள்ள விளக்கத்தின்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1980 ஜூலை 22

அடிப்படையில் ஆணையை வெவ்வேறு விதமாக அமுல் படுத்தப்படுகிறது. இதனால் பலவிதமான குழப்பங்கள் விளைகின்றன. ஆகவே, இந்த நிலைமைகளைச் சீர் செய்வதற்கு என்ன செய்ய வேண்டுமென்று பார்க்க வேண்டும். சீர் செய்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு நான் வழிவகைகள் சொல்வதற்கு முன்னால் அங்கு இருக்கின்ற ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே இந்த மன்றத்தில் பலமுறை சுட்டிக்காட்டப்பட்டும் தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையை நான் சொல்கிறேன். உதாரணமாக, 1970-லே 'டிஸ்ட்டிரிக்ட் போர்ட் பள்ளிகள் எல்லாம் 'அரசுப் பள்ளி'களாக மாறின. 'பி'-விங் பள்ளிகள் என்று அவைகளை வைத்தார்கள். 1970 ஆம் ஆண்டு இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டு, பின் முதல் நிலை தமிழாசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டவர்கள் பிரச்சினை தீர்க்கப்படாமலேயே இருக்கிறது. 1973-லே ஒரு அரசாணை போட்டு, அவர்கள் என்று முதல்நிலை தமிழாசிரியர்கள் ஆனார்களோ அன்றிலிருந்தே அவர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டது. பின், 1976-லே ஒரு அரசாணை போட்டார்கள். அதில் 1970-லே அரசுப் பள்ளிகளிலே நியமிக்கப்படும்போது, டிஸ்ட்ரிக்ட் போர்ட்' பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக மாறி 'பி-விங் உயர்நிலைப் பள்ளியாக வந்த பிறகு, அதில் நியமிக்கப்பட்ட இவர்கள் 30 வயதைத் தாண்டி விட்டார்கள். ஆகவே, அவர்களை பதவி உயர்வு தேதியிலிருந்து பணி வரன்முறை செய்யக்கூடாது. அந்த நியமனம் தவறு என்று சொன்னார்கள். இவர்கள் 1971-லே பதவி உயர்வு பெற்றிருந்தாலும் அல்லது 1972-லே பதவி உயர்வு பெற்றிருந்தாலும் 1974-லே தான் அவர்கள் பதவி உயர்வு பெற்றிருந்தாலும், 1974-லே தான் அவர்கள் பதவி உயர்வு பெற்றதாகக் கருதப் பட்டு, பணி வரன்முறை செய்யப்பட்டு, ஊதிய உயர்வு பெற்றதாகக் கருதப்பட்டு, பணி வரன்முறை செய்யப்பட்டு, ஊதிய உயர்வு கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சிக்கலான விஷயம். இது சம்பந்தமாக, இந்த இலாக்காவே குழப்பத்திற்குள்ளாகி இருக்கிறது. 1976-லே இந்த ஆணை போட்ட பிறகு, நான் அதிலே உள்ள தவறுகளை எடுத்துச் சொல்வதற்காக நான்கு முறைகள் கவன ஈர்ப்புத் தீர்மானமாக இந்த அவையிலே கொண்டு வந்தேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலிலே 2—3—1978-லே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன் பிரச்சினை இதுதான் 19—3—1978-ல் கல்விக் கொள்கைக் குறிப்பின் மீது விவாதத்திலே இது பற்றிப் பேசினேன். அதற்குப் பிறகு 28—5—1978-லே மாண்புமிகு கல்வி அமைச்சரிடத்திலே இது சம்பந்தமாகச் சொல்லி கடிதம் மூலமாக முறையீடு செய்து, என்னுடைய முறையீட்டின்



1980 ஜூலை 22] [திரு. ம. சங்கரலிங்கம்]

நகலைச் செயலாளருக்கும் கல்வி இலாக்கா இயக்குநருக்கும் கொடுத்திருக்கிறேன். அதற்குப் பிறகும் 12—9—1978-லே மீண்டும் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். அதற்குப் பிறகு 11—4—1979-லே கல்விக் கொள்கைக் குறிப்பிலே பேசினேன். இப்போது பழையபடி 22—7—1980-லே பேசிக்கொண்டிருக்கிறேன். இது ஒரு பெரிய பிரச்சினை அல்ல. எடுத்துச் சொல்லும்போது தீர்த்து விடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த இலாக்காவினரால் இந்தப் பிரச்சினையைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை, 1970-லே அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அப்போதுதான் 'டிஸ்ட்ரிக்ட் போர்ட் ஸ்கூல்', 'பி'-விங் ஸ்கூல் ஆகியது. இவர்கள் எல்லாம் பஞ்சாயத்து பள்ளிகளிலே அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்ட் பள்ளிகளிலே இருந்ததால், அவர்களை சி.ஈ.ஓ. நியமித்தார்கள். அரசாணை மிகத் தெளிவாகச் சொல்கிறது. நியமிக்கப்படுவதற்கு முன்னால் 5 ஆண்டுகளுக்கு ஏதாவது பள்ளிகளிலே வேலை பார்த்தால், 30 வயது என்ற வரம்பைத் தளர்த்தி 40 வயது வரை நியமிக்கலாம் என்று அரசு ஆணை தெளிவாக இருக்கிறது. இவர்களை நியமிக்கும்போது, இவர்களுக்கெல்லாம் 31, 32, 34 வயது என்று இருந்தது. ஆனால் 11, 12 வருட காலமாக பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலே வேலை பார்த்திருக்கிறார்கள். முன்னாள் கழகப் பள்ளிகளில் வேலை பார்த்திருக்கிறார்கள். 1970-லே செகன்ட் கிரேட் தமிழ் பண்டிட் என்றும், 1971-லே ஃபஸ்ட் கிரேட் தமிழ் பண்டிட் என்றும் ஆகியிருக்கிறார்கள். 1971-லே இருந்து அவர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டு அவர்கள் இன்கிரிமென்ட் பெற்றிருக்கிறார்கள். பிறகு 1974-லே தான் பணி வரன்முறை செய்யலாம் என்று 1976-லே ஒரு ஆணை வந்திருக்கிறது. அது தவறு என்று நாங்கள் எடுத்துச் சொல்லியிருந்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கவனிக்கிறோம் என்று உறுதிமொழி கொடுத்தார்கள். அதற்குப் பிறகு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களிடமும் நான் விளக்கிச் சொல்லியிருக்கிறேன். அந்த ஆசிரியர்கள் எல்லோருக்கும் மாதச் சம்பளத்தில் 100 ரூபாய் பிடித்தம் செய்ய உத்தரவு போட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 15 பேர்களுக்கு சம்பளத்தில் பிடித்தம் செய்ய அப்படி உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய் திரும்ப கட்ட வேண்டியிருக்கிறது. நான் இந்த விஷயத்தைச் சொன்னபோது, பிடித்தம் செய்து உடனடியாக நிறுத்தப்படும் என்று எனக்கு முன்னாலே சொன்னார்கள். ஆனால் இப்போது 1980-லே மீண்டும் ஆணை போட்டு சம்பள பிடித்தம் செய்கிறார்கள். திரும்பத் திரும்ப இந்தப் பிரச்சினையை எடுத்துச் சொன்ன பிறகும்கூட, அந்த இலாக்காவினரால் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏன் இந்த நிலைமை. நான் யாரையும் குறைசொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் குறை

சொல்லவில்லை. கல்வித் துறை அதிகாரிகளிடம் சொன்னால், அவர்கள் உடனே சூப்பரிண்டன்ட்களைக் கூப்பிட்டு அவர்களிடம் இந்தப் பிரச்சினையைச் சொல்லுகிறார்கள். அவர்களால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. இப்படியே ஒவ்வொரு இடமாகப் போவதால் காரியம் நடக்கவில்லை. இந்தப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்வதற்காக மேலே குறிப்பிட்ட 5 தேதிகளில் நான் பேசிய பேச்சும் அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலும் அதையொட்டி நான் கொடுத்த முறையீடும் அதையொட்டி எழுதிய அனைத்தும் நான் டைப் செய்து வைத்திருக்கிறேன். இதை எளிதாகப் படிக்க இயலும் பொருட்டு, தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இங்கே படிக்கப்போவதில்லையே, மகிழ்ச்சி.

திரு. ம. சங்கரலிங்கம்: கன்னியாகுமரி மாவட்டத்திலே பூத்துறை என்ற இடத்திலே நடந்த ஒரு சம்பவத்தை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்து, அது சம்பந்தப்பட்ட ரெக்கார்ட்களையெல்லாம் தலைவர் அவர்களது அனுமதியுடன் முன்னவர் அவர்களிடம் கொடுத்தேன். அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்கள். இப்போது அந்த உறுதிமொழிக் குழுவிலேயிருந்து அந்த ரெக்கார்ட்களின் காப்பி என்னிடம் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். ஓர் அவையிலே ஓர் உறுப்பினர் ஒரு பிரச்சினையை எழுப்பி, தேவையான ரெக்கார்ட்களைக் கொடுக்கும்போது, அதைக்கூட காப்பாற்ற முடியாமல் பிறகு என்னிடம் கேட்கின்ற நிலைமைதான் இருக்கிறது. ஒரு உதாரணத்திற்காக இதைச் சொல்கிறேன். என்னிடம் ரெக்கார்ட்களைக் கேட்டபோது, திரும்பவும் பூத்துறைக்குச் சென்று அந்த ரெக்கார்ட்களைக் கண்டுபிடித்துத் தருகிறேன் என்று பதில் சொல்லியிருக்கிறேன். இதுபோன்ற நிலைமை இதில் ஏற்படாது என்று நம்புகிறேன்.

இன்னொரு விஷயம், செலக்ஷன் கிரேடு பற்றியது. ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேட் வழங்கி ஆணை பிறப்பித்திருக்கிறது. செலக்ஷன் கிரேட் கொடுப்பதற்கு 10 ஆண்டு பணியாற்றி இருந்தால், செலக்ஷன் கிரேட் கொடுக்கப்பட்டது. முதலிலே 10 சதவிகிதம் செலக்ஷன் கிரேடு என்றிருந்தது. இப்போது அது 10 ஆண்டுகள் பணி என்று மாற்றப்பட்டிருக்கிறது. அதற்கு பதவிக் காலத்தைக் கணக்கிடும்போது, அவர்கள் பணியில் தொடர்ந்து இருந்திருக்க வேண்டாமென்றும், பல்வேறு ஏஜென்சிகளில், பல்வேறு காலங்களில் ஆசிரியர்களாக இருந்தாலும், அந்தத் துண்டுபட்ட சர்வீஸ்களையும் எடுத்துக்கொள்ளலாம் என்று ஆணை தெளிவாக கூறுகிறது. இப்போது





திடீரென்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை, குழித்துறை போன்ற கல்வி மாவட்டங்களிலே உள்ள ஆசிரியர்களின் துண்டுபட்ட சர்வீஸ் காலத்தை செலக்ஷன் கிரேட் வழங்க எடுத்துக்கொள்ள முடியாது என்று மறுத்து விட்டார்கள் இதனால் பல ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேட் கிடைக்கவில்லை. அவர்கள் என்னிடம் சொன்னார்கள் நான் அதற்குச் சொன்னேன் இரண்டு ஜி.ஓ-க்கள் முரண்பாடாக வந்திருக்கின்றன. கடைசியில் வந்த ஜி.ஓ.-வில் துண்டுபட்ட சர்விசையும் கணக்கில் எடுக்க வேண்டுமென்று இருக்கிறது. முதல் ஜி.ஓ. வை இப்போதுதான் அனுப்பியிருக்கிறார்கள். இரண்டாவதாகப் போட்ட ஜி.ஓ. தான் பின்பற்- வேண்டும். இது பற்றி 9—7—1980-லே கல்வி இலாகா இயக்குநருக்கு நான் விளக்கமாக எடுத்துக் கூறி விண்ணப்பம் அனுப்பியிருக்கிறேன். முதலில் வந்த அரசாணை தப்பாக வந்திருக்கிறது என்று எழுதியிருக்கிறேன். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒரு மாவட்ட அதிகாரி ஒரு பிரச்னைக்கு ஒரு ஜி.ஓ.-வை பின்பற்றுகிறார். இன்னொரு மாவட்ட அதிகாரி இன்னொரு அரசாணையைப் பின்பற்றுகிறார். இவற்றுக்கெல்லாம் என்ன காரணம் என்று பார்த்தால், முதலிலே கல்வி அதிகாரிகளுக்குச் சரியான பயிற்சி இல்லை. அவர்கள் எல்லாம் அந்தப் பதவியை ஓய்வுபெற்ற பீடமாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ப்ரமோஷன் வந்து கொண்டேயிருக்கிறது. இன்னும் பென்ஷன் வாங்குவதற்கு ஒரு இரண்டு வருஷம் அல்லது மூன்று வருஷம்தான் இருக்கிறது என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால், செக்ஷன் கிளார்க்கைக் கேட்கிறார்கள். அவர்கள் அவருக்குக் கீழே இருப்பவர்களிடம் கேட்கிறார்கள். இந்த மாதிரி நிலைமைகள்தான் இருக்கின்றன. இப்போது 'கெசட்டட் ஹெட் மாஸ்டர்களைத்தான்' மாவட்டக் கல்வி அதிகாரிகளாகப் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு ஒரு நல்ல டிப்பார்ட்மெண்டல் டெஸ்ட்' வைக்க வேண்டும். எல்லா ஜி.ஓ.க்களையும் அவர்களிடம் படிக்கச் சொல்ல வேண்டும். இப்போது உள்ள நிலைமை என்னவென்றால், அவர்களுக்கு எந்த ஜி.ஓ.-வும் தெரியாது. சூப்பரிண்டன்ட் சொல்வதுதான் ஜி.ஓ. என்ற நிலையில் இருக்கிறார்கள். இப்படியே அவர்கள் இருந்தால், அந்த என்ற நிலையில் இருக்கிறார்கள். இப்படியே அவர்கள் இருந்தால், அந்த இலாக்கா முன்னேறாது. அவர்கள் என்மீது கோபப்பட்டாலும் படலாம். "எங்களை ஜி.ஓ.க்களைப் படிக்கச் சொல்லியிருக்கிறார், அடுத்த முறை ஓட்டுக்கு வரட்டும், பார்க்கலாம்' என்று சொல்லலாம். பார்த்தால் பார்த்துக் கொண்டு போகிறார்கள். நான் அதற்காகக் கவலைப்படவில்லை. எனக்குப் பதவிக்காலம் முடிவடைவது 1986-ல் தானே. அதற்குள் அவர்கள் ஓய்வு பெற்று விடுவார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்தத் தைரியம் தான்.

திரு. ம. சங்கரலிங்கம் : டி.ஈ.ஓ. பதவிக்கு வருவதற்கு பேனலில் இருப்பவர்களுக்கு ஒரு 'டிபார்ட்மென்டல் டெஸ்ட்' வைக்க வேண்டும். டிபார்ட்மென்ட்லே ஒரு ஆராய்ச்சி ஸ்தாபனம் உறங்கிக்கொண்டிருக்கிறது. அதைத் தட்டியெழுப்பி, அவர்களிடத்திலே கொஸ்டியன் தயார் பண்ணச்சொல்லி செய்ய வேண்டும். எந்த ஜி. ஓ.-வுக்கு எந்த ஜி.ஓ. கான்ட்ரடிக்டரி என்று அவர்களுக்குத் தெரியும். 'ஒன் வேர்ட் கொஸ்டியன்' போட்டு, இவர்களை டெஸ்ட் எழுதச் செய்து, கம்ப்யூட்டர் வைத்து திருத்த வேண்டும். யார் பெயில் எழுதச் செய்து, கம்ப்யூட்டர் வைத்து, திருத்த வேண்டும். யார் ஃபெயில் ஆகிறார்கள் என்று பார்க்க வேண்டும். ஃபெயில் ஆகிறவர்களைத் தள்ளிவிட வேண்டாம். அவர்களுக்கு இன்னொரு சான்ஸ், இன்னொரு சான்ஸ் என்று மூன்று சான்ஸ் கொடுங்கள். இப்படி ஒரு மூன்று சான்ஸ் அவர்களுக்குக்

(பிற்பகல் 6-50)

கொடுத்து அதில் தேறியவர்களுக்கு மட்டும்தான் புரமோஷன் என்று வைக்கலாம். இப்படி டி.ஈ.ஓ.-வாக வந்தவர்கள்தான் பின்னால் சி.ஈ.ஓ-வாக வர வேண்டும். டி.ஈ.ஓ. டெஸ்ட் எழுதிய பிறகு ஒருவர் சி.இ.ஓ.-வாக வரும்போது, அவருக்கு வேறு ஒரு டெஸ்ட்டும் வைக்கப்பட வேண்டும்: அதிலிருந்துதான் அவருக்கு டெபுடி டைரெக்டர் மற்றும் டைரெக்டர் பதவி உயர்வு கொடுக்க வேண்டும். இப்படி அடிமட்டத்திலிருந்து பயிற்சி கொடுத்தால்தான், கல்வித் துறையே சீர்திருந்தும். தலைமையாசிரியர்களாக இருந்து டி.ஈ.ஓ.-வாக பதவி உயர்வு பெறும்போது, குறைந்தபட்சம் அவர்களுக்கு ஒரு மூன்று மாதத்திற்காவது ஒரு "இன்டன்சிவ் கோர்ஸ் ஆஃப் டிரெயினிங்" இருக்க வேண்டும். பழைய டி.ஈ.ஓ. ஆபீசுக்கு அவர்கள் போய்ப் பார்க்க வேண்டும் என்ற முறையை ஏற்படுத்த வேண்டும். ஒருவர் ஐ.ஏ.எஸ். ஆபீசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவருக்கு கலெக்டர் அலுவலகத்திலும், தாலுக்கா ஆபீசிலும் பணிதரப்பட்டு அங்கே வேலை செய்யும்படி பணிக்கிறார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டராக கொஞ்ச நாளைக்கு இருக்கச் சொல்கிறார்கள். ஒரு 3 நாளைக்கு கிராம அதிகாரியாக இருந்து உத்தரவு போடச் சொல்கிறார்கள். அதைப் போலவே ஒருவர் எஸ்.பி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், 'இன்வெஸ்ட்' ரிப்போர்ட்டு எழுதச் சொல்கிறார்கள். இப்படி நேரடியாக அனுபவம் இருந்தால்தான், மேல்பதவிக்கு வரும்போது, கீழே நடைபெறும் தவறுகளைக் கண்டுபிடிக்க முடியும் என்று இத்தகைய பயிற்சி அளிக்கப்படுகிறது.



இப்போது ஆசிரியராக இருக்கும் ஒருவர் டி.ஈ.ஓ-வாக வந்து விட்டால், இரண்டு கெட்டிக்கார சூப்பிரெண்டுகளை வைத்துக் கொண்டு சமாளித்து விடுகிறார். மேலும் இந்தக் கல்வி இலாக்கா திருந்த நான் ஒரு வழி சொல்வேன். அப்படிச் சொன்னால், நண்பர்கள் வேறு மாதிரியாக அர்த்தம் செய்துகொண்டு என்மீது கோபித்துக்கொள்ளக்கூடும். நிர்வாகத்திற்கு என்று ஒரு அட்மினிஸ்டிரேட்டிவ் அதிகாரி ஒருவரை நியமிக்கலாம். ஐ.ஈ.எஸ். எக்சாமினேஷன் மாதிரி ஒன்று வைத்து அதன் மூலமாக ஒரு அட்மினிஸ்டிரேட்டிவ் அதிகாரி ஒருவரை வைத்துக்கொண்டு நிர்வாகத்தை நடத்தினால், அது மிகவும் 'எபிசியன்ட்டாக' இருக்கும். அப்படிச் செய்தால், இலாக்காவில் திறமை வளர முடியும். இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கான பல காரணங்களை என்னால் எடுத்துச் சொல்ல முடியும் என்றாலும், நேரம் இல்லாத காரணத்தால், நான் அடுத்த விஷயத்திற்குப் போகிறேன்.

மேல்நிலைப் பள்ளிக் கல்வி முறையைக் கொண்டு வந்ததை நாம் வரவேற்றோம். இப்போதும் வரவேற்றுக் கொண்டுதான் இருக்கிறோம். காரணம் அது வந்துவிட்டது. இனி வேறு வழியில்லை. மேல்நிலைப் பள்ளிகளில் தரத்தை நாம் உயர்த்தியாக வேண்டும். இப்போது உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்போதுதான் 2 ஆண்டுப் படிப்பு முடிந்து மாணவர்கள் வெளியே வந்திருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மானசீகமாக அவர்களுடைய தரம் உயர்ந்திருப்பதாகக் கருதி, மேல்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்தவர்கள் எம்.பி.பி.எஸ். படிப்பதென்றால் 4 ஆண்டுகளென்றும், பி.இ. என்ஜினியரிங் படிப்பு படிப்பதென்றால் 4 ஆண்டுகள் என்றும், ஆனால் அதே நேரத்தில் பி.யூ.சி. படித்த மாணவர்கள் அந்த கோர்சுகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டால், 5½ ஆண்டுகள் படிக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறது. (இப்போது எல்லோருக்கும் ஒரே மாதிரியாக ஆக்கிவிட்டார்கள் என்ற குரல் ஒலித்தது).

ரொம்ப சந்தோஷம். இதை நான் சொல்வதற்குக் காரணம் அந்த மாணவர்கள் முதல் ஆண்டு படிப்பைச் சரிவரப் படிக்கவில்லை. அப்போது அவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் ஒழுங்காகச் சப்ளை செய்யப்படவில்லை. ஆசிரியர்கள் சரியாக இல்லை. எனவே முதலாண்டு ஹையர் செகண்டரி படிப்பை அந்த மாணவர்கள் சரியாகப் படிக்கவில்லை. இரண்டாவது ஆண்டுப் படிப்பைத்தான் ஓரளவு நன்றாகப் படித்திருக்கிறார்கள். எனவே இந்த மாணவர்களின் ஸ்டாண்டர்டு மிகக் குறைவாகத்தான் இருக்கும். ஆக, இந்த ஆண்டு ஹையர் செகண்டரி படித்துவிட்டு வரும் மாணவர்களைச் சேர்த்துக்

கொள்ளும் கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பப் பள்ளிகள் அல்லது கல்லூரிகள், அவர்களுக்கு ஒரு மாதம் தனியாக 'கோர்ஸ்' வைத்து அவர்களின் ஸ்டாண்டர்டை அப்கிரேடு செய்ய வேண்டும். இடைக்காலத்தில் நாம் இந்தக் கல்வி மாற்றத்தைக் கொண்டு வந்ததால், இந்தத் தவறு ஏற்பட்டுவிட்டது. எனவே இப்போது வெளி வந்திருக்கும் செட்டுக்கு—மாணவர்களுக்கு—நாம் எதிர்பார்த்த தரம் இருக்க முடியாது. எந்த ஆட்சி நடந்தாலும், இந்த நிலைமைதான் ஏற்பட்டிருக்கும். எனவே கல்லூரிகளில் அவர்களுக்கு ஒரு 'பிரிட்ஜ் கோர்ஸ்' நடத்த வேண்டும். எஞ்சினியரிங் போன்ற கல்லூரிகளில் குறைந்த பட்சம் ஒரு 6 மாதத்திற்காவது பிரிட்ஜ் கோர்ஸ் வைத்து அவர்களின் தரத்தை உயர்த்துவது நல்லது. ஒரு தலைமுறை தரம் குறைந்து வெளி உலகத்திற்கு வரக்கூடாது என்பதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன். இப்போதுதான் 3-வது பேட்ச் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் தரத்தை உயர்த்த நாம் இப்போதுதான் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் வேறு ஒரு விஷயத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

ஹையர் செகண்டரி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சர்வீஸ் கண்டிஷன் குறித்த ரூல்ஸ் இன்னும் போடப்படாமல் இருக்கிறது. அவர்கள் பணியாற்றத் தொடங்கி 3 ஆண்டுகளாகிவிட்டன. இன்னும் அவர்களுக்கான சர்வீஸ் ரூல்ஸ் போடப்படவில்லை என்று சொல்லப்படுகிறது, இது எந்த வகையிலும் சரியில்லை. ஓராண்டிற்குள்ளாகவே இதைத் தயார் செய்திருக்க வேண்டும். ஒரு ஹையர் செகண்டரி பள்ளியில், அந்தப் பள்ளி முன்னால் ஹைஸ்கூலாக இருந்தபோது முதற்கொண்டு பணியாற்றிய ஆசிரியர் பணியாற்ற அனுமதிக்கப்படுகிறார். அதாவது ஒருவர் எம்.ஏ. (ஹிஸ்டரி) படித்துவிட்டு பி.டி. முடித்துவிட்டு 5, 6 ஆண்டுகளாகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவரை இன்டக்டட் டீச்சர் என்று ஹையர் செகண்டரி பள்ளியிலேயே ஆசிரியராகப் போட்டு அதிகப்படியாக ரூபாய் 25 ஊதியம் தருகிறோம். அதற்குப் பின்னால் எம்.ஏ. படித்துவிட்டு ஒருவர் புதிதாக ஹையர் செகண்டரி பள்ளியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டால், அவருக்கு ரூபாய் 675—1,200 என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது. இதன் காரணமாகச் சில இடங்களில் ஏற்கெனவே பணியாற்றிய ஆசிரியர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களைவிடக் குறைந்த ஊதியம் பெறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சிலர் வேண்டுமானால் அதிக் சர்வீஸ் காரணமாக கூடுதல் ஊதியம் பெறலாம். இவ்வாறு இன்டக்ட் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும் ஏன் இந்த 675—35—





850—50—1,000 என்ற ஊதிய விகிதத்தில் சம்பளம் நிர்ணயம் செய்யக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன். கேட்டால் இன்னும் சர்வீஸ் ரூல்ஸ் போடவில்லை என்கிறார்கள்.

இதிலேயும் வேடிக்கை என்னவென்றால் இவ்வாறு ரன்னிங் ஸ்கேலில் அந்த ஆசிரியர்களை 'ஃபிட்' செய்யும்போது எப். ஆர். 22-பி விதிப்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்றால் முடியாது என்கிறார்கள். 1971 ஆம் ஆண்டு அரசு ஒரு ஆணை பிறப்பித்து தலைமை ஆசிரியர்களுக்கு ஊதியம் நிர்ணயிக்கப்படும்போது இந்த விதியின்கீழ் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டது. அதைப்போலவே 1976 ஆம் ஆண்டு ஆசிரியர்களுக்கும் இந்த விதி பொருந்தும் என்று தனியாக உத்தரவிடப்பட்டது. ஆனால் இப்போது மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு எப். ஆர். 22-பி 'அப்ளிகபிள்' அல்ல என்கிறார்கள். காரணம் கேட்டால் ஆசிரியர்களுக்கு அது புரமோஷன் இல்லையாம். இப்படி எப். ஆர். 22-பி படி ஊதியம் நிர்ணயம செய்வதனால், 690 ரூபாய் அடிப்படைச் சம்க்ளம் பெறுகிறவர் 710 ரூபாய் விகிதத்தில் நிர்ணயிக்கப்படலாம். அடுத்த இன்கிரிமெண்ட்டோடு ஒரு நோஷனல் இன்கிரிமெண்ட்டும் சேர்த்து ஒரு 35 ரூபாய் ஊதிய உயர்வு கிடைக்கும். இதனால் யாருக்கும் நஷ்டம் இருக்காது. இவ்வாறு 3 ஆண்டுகளாக அவர்களின் சர்வீஸ் ரூல்ஸ் நிர்ணயம் செய்யப்படாமல் இருப்பதால், ஆசிரியர்கள் மத்தியில் ஒரு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பது மட்டுமல்ல அவர்கள் இன்றையதினம் பள்ளிகளில் கல்வியைக் கற்பித்துக் கொண்டிருப்பதற்குப் பதில் இங்கே சட்ட சபை ஹாஸ்டலுக்கு வந்து எங்களைப் பார்த்துப் புள்ளிவிவரங்களைத் தருகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டால், அவர்கள் இங்கே ஹாஸ்டலுக்கு வந்து நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்க மாட்டார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால் சேலம், லிட்டில் பிளவர் ஹைஸ்கூலில் பணியாற்றும் திரு. ராகவாச்சாரி, எம். ஏ., பி.டி. என்ற ஆசிரியர் ஸ்கேலில் மினிமம் வாங்குகிறார். ஆனால் அதே பள்ளியில் புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர் கூடுதல் சம்பளம் பெறுகிறார். எனவே அரசு இதில் விரைவு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடந்த ஆண்டு கல்விக் கொள்கை விவாதத்தின்போது, மேல்நிலைப் பள்ளிகளில் 400 உடற் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டு, அது குறித்த அரசாணையும் சென்ற ஆண்டே வெளியிடப்பட்டது. ஆனால் அந்த அரசாணை இதுவரை அமுல்படுத்தப்படவே இன்னும் இந்த ஆண்டு மேலும் புதிதாக 200 உடற்பயிற்சி ஆசிரியர்கள்

நியமிக்கப் படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது என்னவாகுமோ எனக்குத் தெரியவில்லை. அரசாணை எண் 1591, தேதி 21—4—1979-ல் அனுமதிக்கப்பட்ட 400 ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப்படவே இல்லை. அவர்களுக்குச் சம்பளம் கூட நிர்ணயம் செய்து சொல்லப்பட்டது. இருக்கிற ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வும் கொடுக்கப்படவில்லை. இப்படி ஒரு அரசாணை வெளியிடப்பட்ட பிறகு அதை அமுல்படுத்தாதற்குக் காரணம் என்னவென்று கண்டுபிடித்து இதற்குப் பொறுப்பானவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாணை என்பது காகிதக் குப்பை போல் கருதப்பட்டால், நாம் என்ன செய்ய முடியும் யாரைப் போய் நொந்து கொள்ள முடியும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, சென்ற ஆண்டு அனுமதிக்கப்பட்ட 400 உடற்பயிற்சி ஆசிரியர்களோடு இந்த ஆண்டு அனுமதிக்கப்படும் 200 ஆசிரியர்களையும் சேர்த்து மொத்தம் 600 உடற்பயிற்சி ஆசிரியர்களையும் இந்த ஆண்டு நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு ஒரு ஹையர் செகண்டரி பள்ளியில் 1,200 மாணவர்கள் படித்தாலும், அங்கே ஒரே ஒரு இளநிலை எழுத்தர் மட்டுமே பணியாற்றுகிறார். சீனியர் எழுத்தர்கூட கிடையாது. இதற்குக் காரணம் 1976 ஆம் ஆண்டு நெருக்கடி நேரத்தில் இப்படிப்பட்ட நியமனங்களைத் தடை செய்திருந்தார்கள். கூடுதல் நியமனம் செய்வதைத் தடை செய்து அப்போது ஜி.ஓ. வெளியிட்டிருந்தார்கள். அது இன்னும் அமுலில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தூத்துக்குடி விக்டோரியா பெண்கள் பள்ளியில் 1,200 மாணவர்கள் படிக்கிறார்கள். அங்கே ஒரு எழுத்தர்தான் இருக்கிறார். திருநெல்வேலி பேட்டை உயர்நிலைப் பள்ளியில் 2 எழுத்தர்கள் பணியாற்றுகிறார்கள். காரணம் அவர்கள் 1976 ஆம் ஆண்டுக்கு முன்னால் நியமிக்கப்பட்டவர்கள். இப்போது நாம் கூடுதலாக அனுமக்கவில்லை. அரசு வெளியிட்டுள்ள ஆணையில் 500 மாணவர்கள் இருந்தால், அங்கே ஒரு இளநிலை எழுத்தர் இருக்கலாம் என்றும், 1,500 மாணவர்களுக்கு மேற்பட்ட இடத்தில் 3 எழுத்தர்கள் அதாவது ஒரு உதவியாளர் மற்றவர்கள் இளநிலை உதவியாளர்கள் நியமிக்கப்படலாம் என்றும் இருக்கிறது. ஆனால் இந்த உத்தரவு எங்கேயும் அமுல் படுத்தப்படவில்லை. தனியார் பள்ளிகளில் இருப்பவர்களுக்கு இளநிலை உதவியாளர் நிலையிலிருந்து உதவியாளர் பதவி உயர்வுகூட கிடையாது.

அரசுப் பள்ளியில் இருக்கிறவர்கள் அலுவலக மேலாளராகவோ, கண்காணிப்பாளராகவோ, மாவட்டக் கல்வி அதிகாரியாகவோ ஆகலாம். ஆனால் தனியார் பள்ளிகளில் இருக்கிறவர்கள் இளநிலை எழுத்தராகவேதான் கடைசி வரையில் இருக்க வேண்டும். ஏனென்றால் அங்கே உதவியாளர் பதவி கூட கிடையாது. அவர்களுக்குப் பதவி உயர்வே கிடையாது. அவர்களுக்குத் தேர்வு நிலை வழங்க வேண்டுமென்றாலும், துறைத் தேர்வை எழுதினால்தான் தர முடியுமென்று சொல்கிறார்கள்.





(பிற்பகல் 7-00)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் பேசி, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பதில் அளித்து முடிக்கும் வரையில் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்க எவ்வளவு நேரம் ஆகும் ?

**திரு. ம. சங்கரலிங்கம் :** சீக்கிரம் முடித்துவிடுகிறேன். இளநிலை எழுத்தருக்கு தேர்வு நிலை வழங்க 'டிப்பார்ட்மெண்டல்' டெஸ்ட் பாஸ் பண்ணத் தேவையில்லை என்பது நமக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் இலாக்காவில் டெஸ்ட்' யாருக்குத் தேவையோ அவர்களுக்கு இருக்கட்டும். இளநிலை இருப்பவர்களுக்குப் புரியாமலோ, புரிந்தோ டெஸ்ட் பாஸ் பண்ணினால் தான், தேர்வு நிலை தரப்படுமென்று சொல்கிறார்கள். 'டிபார்ட்மெண்டல் டெஸ்ட்' யாருக்கு தேவையோ அவருக்கு இருக்கட்டும். இளநிலை எழுத்தர் பதவியிலிருந்து உதவியாளர் பதவிக்கு வருகிறவர்களுக்கு அக்கவுண்ட் டெஸ்ட் தேர்வு வேண்டும். இளநிலை எழுத்தராகவே இருந்து ஓய்வு பெறப் போகிறவர்களுக்கு அது தேவையில்லை. ஆகவே பத்தாண்டுகள் பணி பூர்த்தியானதும் தேர்வு நிலையை வழங்க வேண்டும். இது குறித்து இந்தச் சபையிலேயே 28—2—1979 அன்று வினா (வினா எண் 72) கேட்டேன். மலையாள ஆசிரியராக இருந்தால் அவர் தமிழ் மொழித் தேர்வு எழுத வேண்டும். அந்தத் தேர்வை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்துகிறது. ஒரு ஆசிரியர் அந்தத் தேர்வை எழுத தன்னுடைய மனுவை பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு அனுப்பி வைத்தார். "பி. டி. யில் தமிழ் படித்ததால், டிப்பார்ட்மென்டல் டெஸ்ட் எழுத வேண்டாம்" என்று பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பதில் தெரிவித்துவிட்டது. ஆகவே அவர் அந்தத் தேர்வை எழுதாமலேயே இருந்து விட்டார். அவருக்குத் தலைமையாசிரியர் பதவி வரக்கூடிய நேரத்தில், அவர் 'டிபார்ட்மென்டல் டெஸ்ட்' பாஸ் பண்ணாததால், தலைமையாசிரியர் பதவி கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். அவர் தேர்வு எழுதத் தயாராகத்தான் இருந்தார். ஆனால் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அவர் அனுப்பிய பணத்தை வாங்கமாட்டேன் என்று சொல்லிவிட்டது. ஆகவே அவர் எழுதவில்லை. 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதியன்று இந்த அவையிலே இதைப்பற்றிய வினாவை எழுப்பி, நடராசா ஆசாரியார் என்ற

அந்த ஆசிரியருடைய பெயரையும் சொல்லிக் கேட்டேன். அப்போது கல்வி அமைச்சர் அவர்கள், "பரிசிலனை செய்வோம்" என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையிலும் பரிசிலனை செய்ததாகத் தெரியவில்லை. அவர் நீதிமன்றத்திற்குப் போனால், நிச்சயமாக ஜெயிக்க முடியும். அவருக்காக வாதாட வக்கீல் ஐந்தாயிரம் ரூபாயைக் கேட்கிறார். நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியருக்கு இது எப்படி முடியும்? இந்த அவையில் இருக்கிற திரு. வசந்த பை போன்ற வக்கீல்கள் இலவசமாக வாதாடுவதாக இருந்தால், அவரிடம் இதைக் கொடுக்கச் சொல்வேன். ஐந்தாயிரம் ரூபாயைக் கொடுக்க முடியாமல் வழக்கறிஞரை அணுக முடியாமல் இருக்கிறார் அவர். நம்முடைய கல்வியமைச்சர் அவர்களுக்கு ஒரு மனுவைக் கொடுக்கச் சொன்னேன். அவரும் ஒரு மனுவை அனுப்பியிருக்கிறார். அதனுடைய நகலையும், நான் கேட்ட வினாவையும், அதற்கு அமைச்சர் அளித்த வாக்குறுதியையும், தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கிறேன்.

(சில தஸ்தாவேஜுகளை மாண்புமிகு கல்வியமைச்சரிடம் கொடுத்தார்).

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அரசுக்குத் தந்திருக்கின்ற தஸ்தாவேஜ் நிறைய இருக்கிறது போலத் தெரிகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாணவர்கள் எல்லாம் அக்கடமிக் ஸ்ட்ரீமில் படித்துவிட்டு வேலை கிடைக்காமல் அலைந்துகொண்டு, வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் நிற்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் மேல் நிலைக் கல்வியில் தொழிற் பிரிவை ஆரம்பித்தோம். அதில் நாம் தோல்வியைக் கண்டிருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். மேல் நிலைக் கல்வியை முடித்தவர்கள் வேலைக்குப் போகத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் வேலை கிடைக்கவில்லை. தொழிற் கல்லூரிகளிலும் இடம் கிடைக்கவில்லை. இன்ஜினியரிங் கல்லூரிகளில் குறிப்பிட்ட இருக்கைகள் தான் இருக்கின்றன. பாலிடெக்னிக்குகளிலும் அதற்கேற்ப இருக்கைகளின் எண்ணிக்கையைக் கூட்டவில்லை. அப்படியானால் அக்கடமிக் ஸ்ட்ரீமிலிருந்து வேறு எந்த கோர்சுக்குப் போவார்கள்? எலெக்ட்ரிக் அப்ளையன்சஸ், டொமஸ்டிக் அப்ளையன்சஸ் போன்ற பிரிவுகளைப் படித்துவிட்டு வேறு எந்த கோர்சுக்குப் போவார்கள்? தொழிற் பாடப் பிரிவுகளை மேல்நிலைக் கல்வியில் வைத்த பிறகு, அதற்கேற்ப கல்லூரிகளிலும், தொழிற் கல்வி நிலை





யங்களிலும், பாலிடெக்னிக்குகளிலும் இருக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற் பிரிவைக் கற்பிக்கிற பகுதிநேர ஆசிரியர்களுக்கு 150 ரூபாய் தான் தரப்படுகிறது. ஆதலால் தரமான ஆசிரியர்கள் வரமாட்டேன் என்கிறார்கள். ரிட்டையர் ஆன பாலிடெக்னிக் டீச்சர்கள்கூட வர மாட்டேன் என்கிறார்கள். அவர்கள் இரண்டு இடத்தில் கட்டிட வரைபடங்களை வரைந்து கொடுத்தால், 700 ரூபாய் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். ஆகவே தரமான ஆசிரியர்கள் இல்லாமல் எங்கேயோ சர்டிபிகேட் வாங்கிவிட்டு ஒன்றும் தெரியாத மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தால், கல்வியின் தரம் எங்கே போகுமென்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே குறைந்தபட்சம் 500 ரூபாய் சம்பளமாவது கொடுத்தால்தான் நல்ல தரமான ஆசிரியர்கள் கிடைப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் கல்வியின் தரம் உயர விஞ்ஞானக் கூடங்களைக் கட்ட அரசு பல திட்டங்களை வகுத்திருக்கிறது. அதை மேலும் விரிவுபடுத்தி இந்த ஆண்டு இல்லாவிட்டாலுங்கூட, வருகிற இரண்டாண்டுகளிலாவது நாம் எதிர்பார்க்கிற அளவு தரத்தை உயர்த்த அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளைப் பொறுத்த வரையில், எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கை மிகுதியாக இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் இடம் கொடுக்க முடியாமல் கல்லூரிகளில் திண்டாட்டம் இருந்து வருகிறது. அதைப் போக்க எல்லாக் கல்லூரிகளிலும் மாலைநேர வகுப்புகளை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும். ஏனென்றால் மேலும் ஒரு பிரிவை ஏற்படுத்தினால், அதனால் தொல்லைகள்தான் வரும். ஆகவே மாலைநேர வகுப்புகளை ஏற்படுத்தி, எல்லா மாணவர்களுக்கும் படிக்கும் வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று காலை ரேடியோவிலே ஒரு செய்தியைக் கேட்டேன். சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பை ஐந்தாண்டுக் காலமாக மாற்ற சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் முடிவு செய்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது என்றாலும்கூட, ஆராய்ச்சி செய்து முடிவு எடுக்க வேண்டிய ஒன்று இது. எல்லாப் பட்டதாரிகளும் சட்டக் கல்லூரிக்குப் போக வழி இருக்க வேண்டும். மருத்துவக் கல்லூரிகளில், பி.யூ. சி. படித்த

வர்களுக்கென்றும், டிகிரி படித்தவர்களுக்கென்றும் கோட்டா வைத்திருக்கிறார்கள். அதே மாதிரி சட்டக் கல்லூரியிலும் ஐந்தாண்டுகள் என்று வைத்தாலும், 50 சதவீதத்தை டிகிரி முடிந்தவர்களுக்கும் வழங்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டை வைக்க வேண்டுமென்று சட்டக் கல்லூரிக்கு அரசு அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், மேலும் அதிகப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். தமிழகத்தில் தொழில் நுட்பக் கல்லூரி ஆறு இருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே நான்கு கல்லூரிகள் இருக்கின்றன. தனித்தியங்கும் தொழில்நுட்பக் கல்லூரிகள் இரண்டு இருக்கின்றன. மேலும் மாவட்டந் தோறும் பாலிடெக்னிக்குகள் இருந்தால் மட்டும் போதாது. ஒவ்வொரு பாலிடெக்னிக்குக்கும், ஒவ்வொரு இன்ஜினியரிங் கல்லூரிக்கும் ஒவ்வொரு தொழிற்பேட்டை இருக்க வேண்டும். மாணவர்கள் தொழில் பயிற்சியைப் பெறுவதோடு மட்டுமல்லாமல், உண்மையிலே பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு உற்பத்தி ஆலைகள் (புரொடக்ஷன சென்டர்கள்) இருக்க வேண்டும். அதற்குத் தனியாக மேனேஜிங் டைரக்டர் இருக்க வேண்டும். அந்த உற்பத்தி ஆலைகள் தனக்குத் தானே உரிய செலவுகளைத் தாங்கிக்கொள்ளுகிற அளவிற்கு இருக்க வேண்டும்.

ஆசிரியர்கள் பிரச்சினைகள் பல இருக்கின்றன. குறிப்பாக தமிழாசிரியர்கள் பி.லிட். எழுத அனுமதி கொடுப்பதில் பிரச்சினை இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. படித்தால், பி.லிட். எழுதலாம் என்று சொல்லுகிறார்கள் மற்ற மாநிலங்களில் ஆசிரியர்கள் நேரிடையாகவே பி. லிட். எழுதலாம் என்று சொல்லுகிறார்கள். அதைப் போலவே தமிழாசிரியர்களும் பி.லிட். தேர்வு எழுத அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சித் துறையென்று ஒரு துறை இருக்கிறது. அத்துறை என்ன தமிழ் வளர்ச்சிப் பணியைச் செய்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அதன் சார்புச் செயலாளர் அறையில் பார்த்தால், ஆங்கிலத்தில் போர்டு வைக்கப்பட்டிருக்கிறது. "Under Secretary to Government, Tamil Development Department", என்று ஆங்கிலத்தில் போர்டு வைத்துக் கொண்டு தமிழை வளர்த்துக் கொண்டு இருக்கிறார். தமிழிலேயே போர்டு போட்டு தமிழை வளர்கிற அளவிற்கு வரவேண்டும். தமிழ் வளர்ச்சி என்று பெயர் அளவிலே இருக்கிறதே தவிர, விருது பெற்று 33 ஆண்டுகள்





ஆகியும் இன்னும் தமிழிலே நூல்கள் பல வரவில்லை. ஸ்ரீலங்காவில் எம்.பி.பி.எஸ், பாடத்தை தமிழிலும், சிங்களத்திலும் படிக்கிறார்கள். ஆனால் இங்கே தொழில் நுட்பக் கல்லூரியில் தாய் மொழியில் கற்பிக்கிற அளவில் வர முடியாமல் ஆங்கிலத்தில் கற்பிக்கிற நிலை இருக்கிறது. இங்கே ஒரு inferiority complex இருக்கிறது. தமிழ் பேசத் தெரிந்தாலும்கூட, தமிழில் பேசினால் கேவலம் என்று நினைக்கிறார்கள். தமிழில் போர்டை வைத்தால், மற்ற அதிகாரிகள் குறைவாக நினைப்பார்கள் என்று கருதுகிறார்கள். தமிழில் சொல்லுவதுதான் சிறப்பு என்ற உணர்வை வளர்ப்பதுதான் அரசின் கடமை. தமிழ் வழி படித்தவர்களுக்குத்தான் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் முதலிடம், மருத்துவக் கல்லூரியில் முதலிடம், இன்ஜினியரிங் கல்லூரியில் முதலிடம் என்று சொன்னால்தான், எல்லோரும் தமிழில் படிக்க முன்வருவார்கள். தமிழில் படிக்க அனுமதி இருந்தாலும், எல்லோரும் ஏன் தமிழில் படிக்க மாட்டேன் என்கிறார்கள் என்றால், தமிழில் படித்தவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுவதில்லை என்பதுதான். இன்ஜினியரிங் கல்லூரிகளில் ஆங்கிலம் படித்தவர்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது. தமிழ் வழி படித்தவர்களுக்கு இத்தனை இடங்கள் என்று ஒதுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது தவறான கருத்து. தமிழ் படித்த மாணவர்களிடம் தமிழிலே தான் கேள்வியைக் கேட்கிறார்கள்.

(பிற்பகல் 7-10)

திரு. ஏ. ஆர். தாமோதரன்: தமிழிலே கல்வி கொடுக்கிறோம். ஆனால் இன்ஜினியரிங் கல்வி, மெடிகல் கல்வி பூராவும் ஆங்கிலத்திலேதான் இப்போது இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: அந்தப் பிரச்சினை இப்போது கொஞ்சம் தீர்ந்திருக்கிறது. பி.யூ.சி. யிலே இங்கிலீஷ் மீடியம் இருந்தது. இப்போது ஹையர் செகண்டரி எல்லாமே தமிழ் மீடியம். அதில் பெரும் பகுதி அப்படி இருக்கிறது. சில பகுதிகளிலே ரூபாய் கட்டி படிப்பவர்கள், ஆங்கிலத்தில் படிப்பவர்கள் கொஞ்சம் பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் மருத்துவக் கல்லூரியிலே, இன்ஜினியரிங் கல்லூரியிலே தமிழிலே கற்பிக்க வேண்டும். தாய் மொழி மூலம் தொழில் நுணுக்கக் கல்வியைக் கற்பிக்க முடியும். தமிழ் மொழி மூலம் முடியாது என்பதில்லை டெக்னாலஜி சொற்கள் இல்லை, தொழில் நுணுக்கம் இல்லை என்று சொல்வதையெல்லாம், ஒரு நாளும் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதைத்தான் மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொல்கிறார் போல் இருக்கிறது.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** தமிழ் யூனிவர்சிட்டி என்று வருகிறதே அதிலேயும் அப்படி வைப்பார்களோ என்று கேட்கிறேன். அதிலே இருந்தால் ரொம்ப நல்லது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழ் யூனிவர்சிட்டியிலே கொண்டு போய் மருத்துவம், இன்ஜினியரிங் வைப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. அது வேறு, இது வேறு.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, எனக்கு அதிலே மாறுபட்ட கருத்து இருக்கிறது. தமிழ் நாட்டிலே தமிழ் யூனிவர்சிட்டி என்று வைக்கிறோம் என்று யாராவது சொன்னால், இதைவிட கேவலம் வேறு எதுவும் இந்த உலகத்திலே இருக்க முடியாது. தமிழ் நாட்டிலே வேறு எந்த யூனிவர்சிட்டி இருக்க முடியும்? தமிழ் நாட்டிலே தமிழ் யுனிவர்சிட்டி இருந்தால் போதுமே. தமிழ் நாட்டிலே தமிழ் யூனிவர்சிட்டி வைக்கிறோம் என்று சொன்னால், இதுவரையில் தமிழை நாம் புறக்கணித்திருக்கிறோம் என்றுதான் சொல்வார்கள். ஆக இப்போது தமிழ் படிக்கின்றதற்கு ஒரு யூனிவர்சிட்டி வைத்து தமிழை ஏமாற்றப்போகிறோம் என்றுதான் அர்த்தம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலே அப்படி ஒரு குறிப்பு இருந்ததாக நான் படித்தது என் நினைவுக்கு வருகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, நான் இதை கட்சிக்காகச் சொல்லவில்லை, தமிழ் உணர்வோடு சொல்கிறேன். எங்கள் கட்சிக் கொள்கை என்றோ, உங்கள் கட்சிக் கொள்கை என்றோ அல்லது தேர்தல் அறிக்கையை காட்டியோ இதைச் சொல்லவில்லை. தமிழ் மகன் என்ற உணர்வோடு சொல்கின்றேன். என்னையும்விட மிகுந்த உணர்வு படைத்தவர்கள் நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என்ற உணர்வோடுதான் நான் இதைச் சொல்கிறேன். தமிழ் நாட்டிலே தமிழ் பல்கலைக் கழகம்தான் இருக்க முடியும். தமிழ் நாட்டிலே தமிழ் பல்கலைக் கழகம் என்று தேவையில்லை; இதை ஆந்திராவிலே வைத்திருக்கலாம். இங்கிலாந்திலே தமிழ் பல்கலைக் கழகம் என்று வைத்திருக்கலாம். தமிழ் நாட்டில்



தமிழ் பல்கலைக் கழகம்தான் இருக்க வேண்டும். தமிழ் மொழி வழிதான் கல்வி இருக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலே வேண்டுமானால் ஆங்கில பல்கலைக் கழகம் வைக்கலாம். சான்ஸ்கிரிட் பல்கலைக் கழகம் வைக்கலாம். தமிழ் நாட்டிலே தமிழ் கற்காத நிலை இருப்பதுபோல, நம் நாட்டைத் தவிர வேறு எங்கும் இந்தமாதிரி நிலை இல்லை. உலகத்திலே இல்லை. இங்கிலாந்திலேகூட முன்பு ரோமனிலேதான் படித்துக்கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு சட்டம் போட்டு ஆங்கிலத்திலேதான் படிக்க வேண்டும், ரோமன் மொழியிலே படித்தால் அங்கு வேலை இடையாது என்று சொல்லியிருந்தார்கள்.

பிற மொழி மோகம் வந்த பிறகு, அதைத் திடீரென்று விடுவது எவ்வளவு கடினமாக இருக்கிறது என்பது இப்போது நமக்குத் தெரியும். ஆனால் நம் மொழியைத் தவிர வேறு மொழி தெரிந்தால்தான் நமக்கு உயர்வு என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். அதை அடியோடு மாற்றுவதற்கு, அகற்றுவதற்கு இந்த அரசு குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிக விரைவிலே அத்தனை தொழில் நுணுக்கக் கல்வியையும் தமிழ் மொழி மூலம் கற்பிக்க முயற்சிக்க வேண்டும். ஏனென்றால் தமிழ் மொழியில் கற்பிக்கும்போது, மாணவனுக்கு 2 மணி நேரத்தில் கற்பிக்கப்படுவதை, அரை மணி நேரத்தில் கற்பிக்க முடிகிறது. இந்த ஐந்து ஆண்டுக் காலத்திலே அவனுடைய அறிவை ஏற்றம் மிக்கதாகக் கொண்டுவர முடிகிறது. எல்லோரும் ஆங்கிலத்தில்தான் படித்து முன்னுக்கு வருகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. சைனாவிலே சைன மொழியிலேதான் படிக்கிறார்கள். ஜப்பான் நாட்டிலே ஜப்பான் மொழியிலேதான் படிக்கிறார்கள். ஆங்கிலம் இல்லாத நாடுகளிலே, எத்தனையோ நாடுகள் நம்மையும்விட மிஞ்சி நிற்கின்றன. எனவே ஆங்கில ஆதிக்கக் காலத்திலேயிருந்து ஒன்றையே சொல்லிக் கொண்டு நாம் இன்றும் பார்த்துக் கொண்டிருந்தால், படித்துக்கொண்டிருந்தால் தமிழ் சமுதாயம் மன்னிக்கும் என்று நான் நம்பவில்லை என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

Thiru A. R. DAMODARAN : May I point out that, in the D.M.K. manifesto, they have specifically stated that more English medium schools will be started in rural areas? Am I to understand that the manifesto is changed?

**திரு. ம. சங்கரலிங்கம் :** தமிழ் மொழி வழி தமிழ் நாட்டில் எல்லாக் கல்வியும் இருக்க வேண்டும். ஆனால் பிற உலகோடு தொடர்புகொள்வதற்கு ஆங்கிலம் படிக்க வேண்டும். ஆங்கிலம் படிப்பதற்கு எல்லா வசதிகளும்

செய்து கொடுக்கப்படும், விரும்புகிறவர்கள் எல்லாம் படிப்பதற்கு அந்த வசதி செய்து தரப்படும் என்று இருந்தது. என்னுடைய கருத்து தொழில் நுணுக்கக் கல்வி ஆங்கிலத்திலேயே இருக்கக் கூடாது என்பதுதான். தொழில் என்பது தனி ஒரு மொழிக்குச் சொந்தமானது அல்ல. இது அறிவுக்குச் சொந்தமானது, சிந்தனைக்குச் சொந்தமானது. சிந்தனை தமிழ் மொழி வழிதான் வரமுடியுமே தவிர வேறு அல்ல. ரவீந்தரநாத் தாகூர் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். பிற மொழி வழியாக கல்வி கற்பிப்பது எது போல் இருக்கிறது என்றால், காதலனுக்கும் காதலிக்கும் இடையே 5 ஆயிரம் மைலுக்கு அப்பால் இருந்துகொண்டு தொலைபேசி மூலம் அவர்களுடைய காதலை நடத்திக்கொண்டிருப்பதைப் போல இருக்கிறது என்று சொன்னார்கள். பக்கத்திலே இருவரும் ஒருவருக்கொருவர் போய் பேச முடியாது, போக முடியாது. ஆகவே அந்த அறிவுக்குப் பக்கத்திலே போகாமல், இடையிலே உள்ள கல் போல், தொலைபேசி போல், இந்த மொழி இருக்கக்கூடாது என்பதை மிக அழுத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன். அது உங்களுடைய கட்சிக் கொள்கைதான். எங்களுடைய கட்சியின் கொள்கையும்தான். கட்சியினுடைய கொள்கை என்பதற்காக மட்டுமல்ல, தமிழ் நாட்டிலே தமிழருடைய கொள்கையாக இது இருக்க வேண்டுமே தவிர, வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் பண்பாட்டு மையம் என்று ஒன்றை ஏற்படுத்தி தமிழுக்கு எல்லாம் செய்வதாக அதிலே சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தமிழ் பண்பாடுக் குழுவிலே இருக்கக்கூடிய இயக்குநர் அந்தப் பொறுப்பை விடுத்து தமிழ் வளர்ச்சித் துறையிலே ஒப்படைக்க வேண்டுமென்று அரசாணை எண் 718, நாள் 18—4—1980-லே ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இன்று வரையிலே அவர் அந்தப் பொறுப்பை ஒப்படைக்கவில்லை. அவர்கள் இடத்திலே இருக்கக்கூடிய டி.எம்.எஸ். 6666 அவர்களிடம் தான் இருக்கிறது. என்ன காரணமோ தெரியவில்லை, எந்தக் காரணத்தினாலே அது நீடிக்கிறது என்று தெரியவில்லை. நாம் தமிழ் வளர்ச்சித் துறையினுடன் அதை இணைக்க வேண்டுமென்று முடிவு எடுத்துவிட்ட பிறகு ஏன் அவர் தொடர வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை.

அடுத்து, தமிழ் நாட்டு வரலாற்றை எழுதுவதற்காக 1974-ல் டாக்டர் மு. வ. அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு 'தொல்பழங்காலம்' என்ற ஒரு நூலை வெளியிட்டு அடுத்து தொடர்ந்து பல நூல்களை வெளியிடுவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்தது. அப்போது



அவர் மறைந்த பின்னர், அந்த இடத்தில் டாக்டர் கே. கே. பிள்ளை அவர்களைப் போட்டு அவர்கள் தலைமையில் அந்தக் குழு அமைக்கப்பட்டது. டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள்.

**புலவர் புலமைப்பித்தன் :** தலைவர் வர்களே, டாக்டர் மு. வரதராசனார் அவர்களுக்குப் பின்னாலே வரலாற்று உரைப் பேராசிரியர்களிலே மிகச் சிறப்பானவர்களிலே ஒருவராக கருதப்படுகின்ற அவ்வை துரைசாமி பிள்ளை அவர்கள் சங்க கால வரலாற்றை ஆராய்ந்திருக்கிறார் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டு வரலாற்றை அவர்கள் மாத்திரம் அல்ல, எத்தனையோ பெரியார்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். பல வரலாற்று நூல்கள் வந்திருக்கின்றன. ஆனால் அரசு சார்பிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவிலே ஆராய்ந்து வரலாற்றை ஏற்றுக்கொண்டு அதை அவர்கள் நமக்கு அளிக்க இருக்கிறார்கள். அவர்கள் நமக்கு வால்யூம் 1, 2 என்று வெளியிட இருக்கிறார்கள். அந்தக் குழு இப்போது டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் தலைமையிலேதான் செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் அந்தக் குழுவிலே இருந்து அரசுக்கு ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது என்ன ? "இந்தக் குழுவிலே இப்போது இருக்கக்கூடிய சப்-எடிட்டர் இந்தக் குழுவிற்குப் பொருத்தமானவர் அல்ல. அந்த வரலாற்றைத் தருவதற்கு பொருத்தமானவர் அல்ல" என்று அவரை மாற்றுவதற்கு எழுதியிருக்கிறார்கள். அப்படி அவர் எழுதின கடிதம் 28—11—1979-லே வந்திருக்கிறது. கல்வி இலாக்கா செயலாளருக்கு, கமிஷனர் அண்டு செக்காட்டரி டு கவர்ன்மெண்டு அவர்களுக்கு அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

Now I learn from the Director of Tamil Development that Sengai Podhuvan has appealed to the Government to retain him in the post. அவர் தேவையில்லை; அவர் அவசியமில்லை என்று எழுதியிருக்கிறார்.

"Meanwhile, we had, with the permission of the Government, advertised and applications have been received. I wish to come to your rescue. We have no grudge against him."

அந்தக் கடிதத்தில் இப்படி நிறைய சொல்லிக்கொண்டே போயிருக்கிறார்கள். Thiru Sengai Podhuvan met me personally. அதை நானே இப்போது சொல்லிவிடுகிறேன். அவரைச் சந்தித்ததிலே, "இங்கே இருந்து பேரன்ட் டிப்பார்ட்மெண்டுக்குப் போனால் எனக்கு 40 ரூபாய் குறைந்து

விடுகிறது அதனாலே வைத்துக்கொள்ளுங்கள்" என்று அவர் சொல்கிறார். ஆனால் "எனக்கு ஹிஸ்டரி போஸ்ட்-கிராஜுவேட்தான்வேண்டும். தமிழ் நாட்டின் வரலாறு தெரிந்தவர்க வேண்டும். இவர் எழுதியிருக்கின்ற இரண்டு மூன்று கட்டுரைகள் வெளியிடுவதற்குத் தகுதியற்றவையாக இருக் கின்றன" என்று கல்வி இலாக்கா செயலாளருக்கு 28—11—1979-லேயே எழுதியிருக்கிறார். இதுவரைக்கும் நடவடிக்கையே இல்லை. அதற்கு அடுத்தாற்போல் அவர் 2—6—1980-ல் திரும்பவும் கல்வி இலாகா செயலாள ருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். கேரளாவிலே, கேரள நாட்டு வரலாற்றை எழுதுவதற்கு ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். ஓர் ஆண்டுக்குள் மூன்று புத்தகங்களை அது வெளியிட்டிருக்கிறது. நானும் அந்த அட்வைசரி கமிட்டியிலே இருக்கிறேன். இங்கே அந்த அளவில் வெளியிட முடியாத தற்குக் காரணம் இவர்தான் தடையாக இருக்கிறார். என்று சொல்லியிருக் கிறார்கள். எனக்கு அவர்மேல் எந்தப் பகையும் இல்லை. உங்களுக்கு ஏதாவது காரணத்தினால் அவரை விடுவதற்கு முடியாவிட்டால், என்னை தயவுசெய்து விடுவிக்க வேண்டுமென்றும், இல்லையானால் பொதுமக்கள் என்னைத் தவறாகக் கருதிக்கொள்ளக் கூடாது என்றும் சொல்லிக்கொண் டிருக்கிறார்கள். இந்தக் கொள்கைக் குறிப்பிலே தமிழ் நாட்டு வரலாறு எழுதப்படுகிறது, எழுதப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் எழுதப்படுகின்றபோது எப்படி எழுதப்படுகிறது என்று பார்த்தால், இப்படித் தான் இருக்கிறது. ஆகவே இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய இந்த அமைச்சரவை, அதற்குரிய நல்ல வசதிகளைச் செய்து கொடுத்து, நல்லதொரு தமிழ்நாட்டு வரலாறு வெளி வருவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒரே ஒரு பாயிண்ட் சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய அரசில் எத்தனையோ 'போஸ்டஸ்' 'கிரியேட்' பண்ணியிருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர்களுக்கு, செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு என்று எத்தனையோ போஸ்ட்கள், புதிய பதவிகளையெல்லாம் தோற்றுவந்திருக் கிறார்கள். இவைகளை மாவட்டம் தோறும் பிரித்துக் கொடுக்கிறார்கள். மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் இவைகளை ஆங்காங்குள்ள பள்ளி களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்கள். இந்தப் பள்ளிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கின்ற பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பை முதன்மைக் கல்வி அதிகாரிகளிடத்திலே முழு அளவிலே விடுவதற்குரிய நிலைமைகள் இல்லை. அந்தக் கல்வி அதிகாரிகளின் அலுவலகங்கள் சரியாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் எல்லாம் அரசாணை களைப் புறக்கணித்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மைனாரிட்டி



ஸ்தாபனம் என்று சொல்லிக்கொண்டு இருக்கக்கூடிய ஸ்தாபனங்களை நடத்திக்கொண்டிருக்கின்றவர்கள் உதவியில் இவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கக் கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. அதனால் பல தவறுகள் நடந்துகொண் டிருக்கின்றன. அதை எடுத்துக் காட்டுவதற்கு நான் ஒரு முதன்மைக் கல்வி அதிகாரியின் அறிக்கையை மாத்திரம் வாசித்துக் காட்டுகிறேன். அத்தோடு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திருநெல்வேலி முதன்மை கல்வி அலுவலரின் நடவடிக்கைகள். இது 12—10—1979 தேதியிலே வெளி வந்துள்ளது. பொருள் பதவியைக் கொடுக் கின்றது பற்றியது. அதற்குள்ளே போகிறேன். இரண்டு, மூன்று பார்வைகள் போட்டிருக்கிறார்கள். பார்வை 1-ல் குறித்துள்ளது. இவ்வலுவலக செயல் முறைகளின்படி, மெய்ஞானபுரம் அம்புரோஸ் உயர்நிலைப் பள்ளியிலிருந்து பங்களாசுரண்டை பருத் மேல்நிலைப் பள்ளிக்கு 1978-79-ல் ஒரு பி.டி. ஆசிரியர் பணியிடத்தை 1—6—1978 முதல் 31-7-1978 முடியவும், அதற்குப் பிறகு 13-11-1978 முதல் தொடர்ச்சியாகவும் கொடுக்கிறார். அவர் எப்படிக் கொடுக்கிறார் என்றால், 1-8-1978 முதல் 12-11-1978 வரை வேறு பள்ளிக் கூடம். அது வேறு ஒரு கிறிஸ்டியன் மைனர்கல். கைலாசபுரம் என்ற ஊரில் ஒரு ஸ்கூல் இருக்கிறது. அங்கே ஒரு இடம் காலியாகிறது. ஜாப்டர் ஹைஸ்கூல் என்று ஒரு ஸ்கூல் திருநெல்வேலியில் இருக்கிறது. அங்கே ஒரு பிளேஸ் எக்செஸ் ஆக இருக்கிறது. இரண்டு பள்ளிகளும் ஒரே மேனேஜ் மெண்ட்டில் இருக்கின்றன. அந்தக் காலியான இடத்திற்கு அந்த ஆசிரியரை அனுப்ப வேண்டும். அரசுச் சட்டம் அப்படித்தான் இருக்கிறது. எந்த ஆசிரியரையும் வெளியே அனுப்பக்கூடாது என்று இருக்கிறது. அந்த ஆசிரியர் எக்செஸ் ஆக இருந்தாலும், அவர் அங்கேயே இருக்கலாம். அந்தப் பள்ளிக் கூடத்திலே இல்லையோ அங்கே அவரை அனுப்ப வேண்டும். இதுபோலத் தான் செய்ய வேண்டும். கைலாசபுரத்தில் இருக்கும் பள்ளியும் ஜாப்டர் ஹைஸ்கூலும் ஒரே மேனேஜ்மெண்டில் இருக்கிறது. இங்கே எக்செஸ் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே காலியிடத்தில் ஒரு புதிய ஆசிரியரைப் போட்டுவிடுகிறார்கள். மேனேஜர் அவருடைய சொந்தக்காரரைப் போடு கிறாரோ என்னவோ? அல்லது ரூபாய் வாங்கிக்கொண்டு போடுகிறாரோ

(பிற்பகல் 7-20)

தெரியவில்லை. கல்வி ஸ்தாபனங்கள் எல்லாம் ரூபாய் வாங்குகிறார்கள். அட்மிஷனுக்கு ரூபாய் வாங்குகிறார்கள். இப்போதிருக்கும் இடநெருக் கடியைப் பயன்படுத்திக்கொண்டு ரூபாய் வாங்குகிறார்கள். ஆசிரியர்கள்

நியமிக்கப்படும்போது ரூபாய் வாங்குகிறார்கள். நாகர்கோவிலில் கல்வி அமைச்சரவர்கள் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, மேல்நிலைக் கல்விபற்றிப் பேசும்போது, அந்த நிகழ்ச்சியில் நானும் கலந்துகொண்டேன். அப்போது அவர்களிடம் பேசும்போது, அரசுப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுங்கள், தனியார் பள்ளிகளை மாற்றாதீர்கள் என்று சொன்னேன். காரணம் தனியார் துறையில் வியாபாரமாக மாற்றப்படுகிறது. இந்த அவையிலேயும் நான் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறேன்.

தனியார் பள்ளியிலுள்ள ஓர் ஆசிரியரை நியமிப்பதற்காக பதவியை மூன்று இடங்களுக்கு மாற்றி, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆணை போட்டிருக்கிறார்கள் அதிகாரிகள். அந்தக் கடிதத்தின் அடுத்த பாராவில் திருநெல்வேலியில் உள்ள கல்வி அதிகாரி ஒரு மேனேஜ்மென்ட் பள்ளியில் ஓர் ஆசிரியர் சர்ப்ளஸ் ஆக இருக்கிறார், அவரை வேறு பள்ளியில் போட வேண்டும், எங்கே காலியிருக்கிறது என்று கேட்கிறார். சி.ஈ.ஓ. அவரை கேட்கிறார். இது உங்கள் வேலையில்லை, நான் சொல்கிறேன், அவரை அங்கேயே வைத்து கிராண்ட் கொடுங்கள் என்று சி.ஈ.ஓ. மாவட்டக் கல்வி அதிகாரிக்குச் சொல்லுகிறார். எனவே இது விஷயத்தில் கண்காணிப்பை மிகச் சிறப்பாகச் செய்ய வேண்டும். கண்காணிப்பிற்காக சிறந்த பயிற்சி அளிக்க வேண்டும். துறையில் திறமையானவர்களை வைத்திருக்க வேண்டும். திறமையாகக் கல்வி இலாக்கா செயல்பட்டால்தான், அரசு செலவிடும் பணம் மக்களுக்குப் பயன்படும். இல்லாவிட்டால் பாழாகிவிடுமென்று சொல்லிக்கொள்கிறேன். இறுதியாக கல்வி அமைச்சரவர்கள் வழங்கியுள்ள கல்விக் கொள்கைக் குறிப்பை ஆதரித்து, கல்வித் துறை செய்யும் பணிகள் வெற்றி பெற நாங்களும் உறுதுணையாக இருப்போமென்று சொல்லி, எங்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு, தவறுகளைக் களைந்து, நல்ல முறையில் இந்தத் துறையை நிர்வகித்துச் செல்ல வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த அவையிலே பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பல நல்ல யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கியிருக்கிறார்கள். பல குறைபாடுகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கின்ற நான், குறைபாடுகள் களையப்படுவதற்கும், நல்ல யோசனைகளைச் செயல்படுத்துவதற்கும் அரசு பெரு முயற்சி எடுத்துக்கொள்ளுமென்ற நம்பிக்கையையும், உறுதியையும் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நல்ல



கருத்துக்களையும், நல்ல யோசனைகளையும் வழங்கியும், குறைபாடுகளை எடுத்துச் சொல்லியும் தங்களுடைய கடமைகளை ஆற்றிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துப் பேசியிருக்கின்றார்கள். அவை ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்ல வேண்டுமென்ற நிலையில் நான் இருந்தாலும், காலம் கடந்துவிட்ட நிலையிலே இன்றைக்கு நாம் இருக்கிறோம். ஒருவேளை மழை பெய்யும் காரணத்தால் அதைப்பற்றி நினைக்காமல் இருக்கலாமென்றாலும், விரைவிலேயே என்னுடைய பேச்சை முடிக்கும் நிலையிலே, என்னுடைய விளக்கங்களை ஆரம்பிக்கிறேன்.

பல்வேறு கருத்துக்கள் இந்த அவையிலே பேசப்பட்டபோது, அவற்றுக்குப் பதில் சொல்ல நேரம் இல்லையென்றாலும், அந்தக் கருத்துக்களை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆங்கிலம் பயிற்று மொழி தேவை; அது கூடாது, தமிழ்தான் பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்கள் பேசப்பட்டன. பள்ளிக்கூடங்களிலே விஞ்ஞானக் கூடங்களில்லை என்ற குறைபாடும் சொல்லப்பட்டது. உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் நூலகங்கள் இருக்க வேண்டுமென்றும், அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்றும் கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதைப் போலவே நர்சரிப் பள்ளிகள்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இடையிலே இந்தி மொழி பற்றியும் கருத்துச் சொல்லப்பட்டது. தொழில் நுட்ப ஆசிரியர்கள் பற்றியும், தொழிற் கல்வி பற்றியும் கருத்துக்கள் சொல்லப்பட்டன. இவைகளையெல்லாம் விளக்க முற்படுகின்ற நேரத்தில், நேரம் இல்லாத நிலையில், இதுபோன்ற பிரச்சினைகளில் முடிவு எடுத்துக்கொண்டிருக்கிறேன்—அரசு சார்பில் முடிவு எடுக்கிறோம்—என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் முடிவெடுக்கும்போது, பல்வேறு அறிஞர்கள் கூறும் கருத்துக்களின் அடிப்படையில்தான் முடிவெடுக்கிறோம். எந்த அடிப்படையிலே நாங்கள் முடிவெடுக்கிறோமென்பதை நான் குறிப்பிட்டுக் காட்டிவிட்டேன் என்றால் உறுப்பினர்கள் பல்வேறு கருத்து மாறுபாடுகளைத் தெரிவிக்கும் நேரத்தில் எங்களைப் புரிந்துகொள்ள நல்ல சந்தர்ப்பமாக இருக்குமென்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்கள் இங்கே பேசும்போது மாணவர்களைக் கவரும் வகையிலே பள்ளிகள் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் மேலை நாடுகளிலே, குறிப்பாக கம்யூனிஸ்ட் நாடுகளிலே உள்ளது போல, பள்ளிக்கூடங்கள் அறிவு வளர்ச்சியளிக்கும் முறையில் நடைபெற வேண்டும், அடிமைத்

தன்மையை உருவாக்கும் நிலையமாக இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். இவைகள் எல்லாம் தொடர்புள்ள கருத்து என்பதால், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மாணவர்கள் எந்த நோக்கத்தோடு கல்வி பயில்கிறார்கள், எதற்காக பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்கள், எந்த நோக்கத்திற்காக ஆசிரியர்கள் கல்வி தருகிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டால், இருக்கின்ற குறைபாடுகள் தெரிந்துவிடும். அதை நீக்க நாம் எடுக்கும் நடவடிக்கைகளையும் புரிந்துகொள்ள முடியும். இன்றைக்கு நான் வருத்தத்தோடு ஒன்றைக் கூற விரும்புகிறேன். சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகளாகியும் அடிமைத் தளையை அகற்றி விட்டோமா என்றால், கேள்விக் குறியைப் போட வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம். குழந்தை படிப்பது வேலைக்கு வர வேண்டுமென்பதற்காகத்தான். அவன் பள்ளிக்கூடம் போவது எப்படியாவது வேலைக்குப் போக வேண்டுமென்பதற்காகத்தான். ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பது அவன் வேலைக்குப் போக வேண்டுமென்பதற்காகத்தான். அதற்குத்தான் பள்ளிக்கூடம் உதவி செய்ய வேண்டும். நம்முடைய நிலை, எப்படியாவது படிக்க வேண்டும், எப்படியாவது பாஸ் செய்ய வேண்டும், எப்படியாவது வேலைக்குப் போக வேண்டுமென்பதுதான். பாஸ் செய்ய வேண்டுமென்ற அளவிற்குப் படிக்க வேண்டும், அதற்காக எது செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்ற நிலைக்கு இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறது. 100 பக்கங்களுடைய ஒரு புத்தகத்தைப் படிக்க வேண்டுமென்று சொல்லும்போது, அதை முழுவதும் படிக்கும் வாய்ப்பு இன்றைக்குப் பள்ளிக்கூடங்களில் இல்லை. பாஸ் செய்ய வேண்டுமென்று 8 கேள்விகளைப் படிக்கிறார்கள். அல்லது 8-ல் நான்கு படிப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். நான்கு கேள்விகளைப் படித்து, பாஸ் செய்து, அவர்கள் ஆசிரியர்களாக வரும்போது, அவர்கள் எந்த அளவிற்குச் சொல்லிக் கொடுப்பார்களென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது தொடர்ந்து நீடிக்குமானால், எதிர்காலச் சமுதாயம் எந்த நிலைக்குப் போகுமென்பதைச் சிந்திக்கும்போது, அதை அழிக்க வெளியிலிருந்து ஆபத்து வர வேண்டியதில்லை, நாமே அதை அழிக்க இந்த முறையில் ஒரு நிர்ப்பந்தத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கிறோம். வேலைக்காகப் படிக்க வேண்டும், பட்டம் வாங்க வேண்டும், அதையும் அளவாகப் படிக்க வேண்டும், எப்படியாவது பாஸ் செய்ய வேண்டுமென்பதால், 'காப்பி' அடிக்கும் அளவிற்கு இன்றைக்கு வந்திருக்கிறது. மிகப் பெரிய சமுதாய நோயாக அது இன்றைக்கு இருக்கிறது. அதைத் தைரியமாகச் சொல்லி, அதை அகற்ற முயற்சி செய்யாவிட்டால், கல்வித் துறையே திருடர்களை உற்பத்தி செய்யும் நிலைமை ஏற்படும். இன்றைக்கு வேலைக்குப் படிக்க வேண்டுமென்ற நிலைமையில், கல்வித் துறை சமுதாய விரோதமான எண்ணங்களை வளர்த்து, சமுதாய விரோதி



களாக மாணவர்களை வளர்க்கும் இடமாக மாறிக்கொண்டிருக்கிறது. இது பெரிய குறைபாடு. நான் ஒன்றைச் சொல்ல மாண்புமிகு தலைவர்கள் அனுமதி தர வேண்டும். பம்பாயிலிருந்து வந்த செய்தி. அங்கே தேர்வு நடக்கிறது. 100-க்கு 100 வாங்குகிற மாணவன் பரீட்சை எழுதுகிறான். அவன் எண் 322. 323 என்றுள்ள மாணவன் சரியாகப் படிக்கமாட்டான். இரண்டு பேரும் பரீட்சை எழுதுகிறார்கள். தேர்வு முடிவு வரும்போது நன்றாகப் படிக்கும் மாணவன் பெயில் ஆகிவிட்டான், மோசமாகப் படிக்கும் மாணவன் பாஸ் ஆகிவிடுகிறான். என்ன நடந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். பரீட்சை ஹாலில் இரண்டு பேரும் பரீட்சை எழுதியிருக்கிறார்கள். 322 என்றுள்ள மாணவன் நன்றாகப் படிக்கும் மாணவன். அவன் தன்னுடைய எண்ணைப் போட்டு பரீட்சை எழுதியிருக்கிறான். மோசமாக எழுதும் மாணவனும் 322 என்று போட்டு, பரீட்சை எழுதிவிட்டு, வெளியே போகிறான். தேர்வு நேரம் முடிந்த பிறகு இவன் மட்டும் திரும்பி

(பிற்பகல் 7-30)

வருகிறான். நம்பரைப் போட்டதில் தவறு ஏற்பட்டு விட்டது, திருத்த வேண்டுமென்று அவன் கூறுகிறான். ஆசிரியரும் அதை எடுத்துப் பார்க்கிறார். அவரும் உடனே மாணவனிடம் அதைத் திருத்தச் சொல்கிறார். 322 என்று உண்மையான எண் உள்ள விடைத் தாளை எடுத்து அவன் 323 என்று திருத்துகிறான். ஆசிரியப் பெருமக்கள் படித்தவர்கள். கல்வியைத் திருட முடியாது என்று நாம் பள்ளிக்கூடத்திலே படித்திருக்கிறோம். இங்கே அறிவையே திருடப் பார்த்திருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்** : பம்பாயில் நடந்த சம்பவத்தைப்பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஆட்சிக் குழுவில் உறுப்பினராக இருந்த போது, இதேமாதிரி ஒரு சம்பவம் நடந்தது. ஒரு ஜட்ஜினுடைய மகன் அழுதே விட்டான். விடைத் தாளைப் பார்த்தபோது, இதே முறையில் இருந்தது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : இப்படிப்பட்ட சமுதாயக் குற்றம் நடைபெற்றிருக்கிறது என்பதை இங்கே நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக மட்டுமல்ல, சமுதாயத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்பது ஆசிரியப் பெருமக்களுக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். கல்வி வேலைக்காகப் படிக்க வேண்டுமென்ற அடிப்படையில் வருகிறது என்று நினைக்கிறார்கள். கல்வியின் அடிப்படை நோக்கம் வேலைக்காகப் படிப்பதல்ல, சமுதாயத்தில் இப்படிப்பட்டவர்களை

உருவாக்குவதற்காகவும் அல்ல, சமூக விரோதிகளை உருவாக்குவதற்காகவும் அல்ல. அறிவை, ஆற்றலைப் பெறுவதற்காகத்தான் நாம் அவர்களை உருவாக்குகிறோம். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, ஆங்கிலப் பயிற்சி மொழி, தமிழ் பயிற்சி மொழி என்பதற்கான விளக்கங்களையெல்லாம் நாம் தேடிக் கண்டுபிடிக்க முடியும். தமிழிலே மாணவர்கள் படிக்க வேண்டுமென்று நான் சொல்லுவதற்குக் காரணம், உண்மையான அறிவு வளர்ச்சி ஏற்படும் என்பதுதான். உலகத்திலுள்ள அத்தனை பேர்களும், அத்தனை நாடுகளும் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. அதுதான் உண்மை என்று நிரூபித்தும் காட்டுகின்றன. மொழி சம்பந்தமாக நான் பேசும்போது, தமிழ் நாட்டு மாணவனைப் போல அதிகமான மொழிகளைப் படிக்கக்கூடிய நிலையிலே இருப்பவர்கள் வேறு எங்கும் இருக்க மாட்டார்கள். ஒரு மொழிக்கு அதிகமான நேரத்தை ஒதுக்கி செலவழிக்கக்கூடிய நிலையில் நம்முடைய மாணவர்களைப்போல் வேறு எந்த நாட்டிலும் மாணவர்கள் இருக்க மாட்டார்கள். இன்னொரு மொழியை வருத்தி, கஷ்டப்பட்டுப் படிப்பவர்களும் தமிழ்நாட்டிலுள்ள மாணவர்கள்தான். இவர்களைப் போல் வேறு எந்த ஒரு நாட்டிலும் உள்ள மாணவர்கள் இருக்க மாட்டார்கள். தமிழிலே படிக்க வேண்டுமென்று சொல்வது என்றால், நாம் ஒவ்வொருவருக்கும் இருக்கக்கூடிய சலுகையை மறுப்பதல்ல. அவர்களுக்கு உண்மையான அறிவு வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். ஆங்கிலம் படித்தால்தான் அவன் அறிவு வளர்ச்சியைப் பெற முடியும் என்பது மிக மிகத் தவறான கருத்து. லண்டனில் ஆங்கிலம் பேசுகிறார்கள். அங்கேயும் அறிவாளிகளாக இல்லாதவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆங்கிலம் படித்தால்தான் அறிவாளிகளாக முடியும் என்கிற வாதம் சரியல்ல. சரித்திரம், கணக்கு, பூகோளம் எல்லாம் ஆங்கிலத்தில் சொல்லிக்கொடுக்கிறோம். அப்படி ஆங்கிலத்தில் அவர்கள் படிக்கும்போது, சரித்திரத்தில், கணக்கில், பூகோளத்தில் ஆங்கில அறிவு வளர்ச்சி இருக்குமே தவிர, உண்மையான அறிவு வளர்ச்சி இருக்காது. பயிற்சி மொழி என்பதை நாம் அந்த அடிப்படையில் தான் பார்க்கிறோம். ஆனால் ஒரு தவறான கருத்து இப்போது இருக்கிறது. ஆங்கில மொழியினுடைய மதிப்பை இந்த அரசு குறைத்துக்கொண்டிருக்கிறது. குறைத்துக்கொண்டு வருகிறது என்று யாராவது நினைப்பார்களேயானால், அது தவறான கருத்து என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன். 3-வது வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைக் கட்டாயமாகச் சொல்லிக்கொடுக்கும் மாநிலம் இந்தியாவிலேயே நம்முடைய மாநிலம்தான். ஆங்கிலம் கட்டாயம் தேவை என்பதை நாம் உணர்கிறோம். இந்தியாவினுடைய ஒற்றுமைக்கு அது மிக மிகத் தேவை, இந்தி கூடாது என்று சொல்லும்போது, இந்தி தேவையில்லை என்று சொல்கிற நேரத்தில், இருமொழிக் கொள்கை தேவை என்று வலி







யுறுத்துகிற அதேநேரத்தில், நாம் ஆங்கிலம் தேவை என்று சொல்வது இந்திய ஒற்றுமைக்காகத்தான். அதற்காகத்தான் ஆங்கிலம் கட்டாயம் வேண்டுமென்று நாம் சொல்கிறோம். தமிழகத்திலே ஒரு மொழி கட்டாயமாகச் சொல்லித் தரப்படுகிறது என்றால், அது ஆங்கில மொழி மட்டும்தான். தமிழ் படிக்காமல் ஒருவர் பட்டம் பெற முடியும். ஆனால் ஆங்கிலம் படிக்காமல் ஒருவர் பட்டம் பெற முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் கூட இதுபற்றிச் சொன்னார். ஆங்கிலம்தான் இங்கே கட்டாயமாக இருக்கிறது. அதைப்பற்றி வேண்டுமானால் நாம் சிந்திக்கலாம். தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆங்கிலத்திற்கு எந்தவித குறைபாட்டையும் நாம் வைக்கவில்லை. தமிழில் படித்தால் மேற்படிப்புகளில் அதிக இடங்கள் கிடைக்குமா என்று யாரும் அச்சப்படத் தேவையில்லை. நிச்சயம் இடம் கிடைக்கும். தமிழிலே ஒருவர் படிக்கிறார் என்றால், ஆங்கிலத்தில் படிப்பதைவிட 5, 10 மார்க்குகள் அதிகமாக வாங்குகிறார். அப்படித்தான் சொல்ல வேண்டும். தமிழில் படிப்பதால் வாய்ப்புகள் குறையாது, வாய்ப்புகள் இன்னும் அதிகமாகும் என்கிற தைரியத்தையும் நான் இங்கே வழங்க விரும்புகிறேன். இந்தி மொழிபற்றியும் இங்கே சொன்னார்கள். நேஷனல் எஜூகேஷனல் பாலிசியைப் பொறுத்தவரையில், இந்த அரசு பேரறிஞர் அண்ணா காலத்திலேயிருந்து இரு மொழிக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. மும்மொழித் திட்டத்தை ஏற்க முடியாது என்று டில்லிக்கு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். ஆகவே இந்தியைப் படிக்கத் தேவையில்லை. 3-வது மொழியைப் படிக்க வேண்டிய நிலை இங்கு தேவையில்லை. அப்படி அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொண்டு விடுவோமானால், இந்தியாவில் ஒரு சமத்துவ நிலை என்று இருக்கக்கூடிய நிலை மாறி ஒரு சாரார் மக்கள் அதாவது இந்தி பேசக்கூடிய மக்கள் முதல் தர மக்கள் போலவும், இந்தி மொழி பேசாதவர்கள் இரண்டாம் தர மக்கள் போலவும் ஆகக்கூடும். அதற்கான அபாயம் இருக்கிறது. அந்த வகையில் நாம் இந்தியை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று இருமொழிக் கொள்கையை வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இன்றைக்கு பல்வேறு மாநிலங்களிலே, குறிப்பாக வங்காளம், பஞ்சாப் போன்ற மாநிலங்களிலேயும், பிரச்சினைக்குரிய மாநிலங்களாக இருக்கிற வட கிழக்கு மாநிலங்களிலேயும் இதற்கு நல்ல ஆதரவு இருக்கிறது என்பது மட்டுமல்ல, இது நிச்சயம் வெற்றி பெறும் என்பதற்கான அறிகுறி தெளிவாகத் தெரிகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் கடந்த டிசம்பரில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது, பிராந்திய கட்சிகள் மட்டுமின்றி, அகில இந்தியக் கட்சிகள்கூட தேர்தல் அறிக்கையிலே இதைப்பற்றி அறிக்கை தந்தார்கள். அது எனக்கு மிக நன்றாக நினைவுக்கு வருகின்றது. செய்திகளை வைத்துப் பார்க்கிறபோது, திராவிட முன்னேற்றக்

கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற பிராந்தியக் கட்சிகள் மட்டுமல்ல, அனைத்திந்தியக் கட்சிகள் அனைத்தும்கூட இந்தியை நாங்கள் திணிக்க 'மாட்டோம் என்று ஒருமித்த வகையில் தங்கள் தேர்தல் அறிக்கையிலே வாக்குறுதி தந்திருந்தன. இது அனைத்திந்தியக் கட்சிகள் மும்மொழிக் கொள்கையில் நம்பிக்கையை இழந்து விட்டன என்பதற்கான அறிகுறி என்பதாக நான் எடுத்துக்கொள்ள முடியும். இது மக்களை ஏமாற்றும் கொள்கை என்றோ, கொள்கையை மாற்றி விட்டார்கள் என்றோ நான் சொல்லத் தயாராக இல்லை. ஒருமித்த கருத்தாக இது இன்றையதினம் உருவாகிக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்திலே இதுதான் வெற்றி பெற முடியும். செயற்கையான வழியில் இந்தியாவில் ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றால், அது வேறுவிதமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும்.

இப்படி பல்வேறு பிரச்சினைகள்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. பிறகும், இங்கே வேறு சில பிரச்சினைகள்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் வொக்கேஷனல் கோர்சுக்கு சிலபஸ் இல்லையென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வொக்கேஷனல் கோர்சைப் பொறுத்தவரையில், அதற்கான 'கரிகுலம்', 'சிலபஸ்' இருக்கிறது. 'கைட் புக்' கூட இருக்கிறது. 'கைட் புக்'கை மத்திய என்.சி.இ.ஆர்.டி. நிறுவனம் பாராட்டி, தாம் ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிற பதிப்புரிமையை வாங்கி, மற்ற மொழிகளில் வெளியிட வேண்டுமென்று தம்மைக் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒத்துழைப்புத் தர இருக்கிறோம். வொக்கேஷனல் கோர்சைப் பொறுத்தவரையில், அக்கடமிக் கோர்ஸ் மாணவர்களைவிட அவர்கள் நல்ல முறையில் தேறியிருக்கிறார்கள். அக்கடமிக் மாணவர்கள் 59 சதவிகிதத்தினர் தேறியிருக்கிறார்கள். வொக்கேஷனல் கோர்ஸ் மாணவர்கள் 60 சதவிகிதத்தினர் தேறியிருக்கிறார்கள். அந்த அளவு இதிலே ஆர்வத்தோடு படித்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த அக்கடமிக் கோர்ஸ், இப்போது இருக்கிற வொக்கேஷனல் கோர்ஸ் இவை இரண்டுக்கும் உள்ள முக்கிய வேறுபாடே, பார்ட் டைம் ஆசிரியர்களுக்குத் தருகின்ற ஊதியத்தின் பலனை நாம் இழந்துகொண்டிராமல் இருக்கும் வகையில், தொழில் கல்வியை ஹையர் செகண்டரி பள்ளிகளில் மாணவர்கள் பெற வேண்டும் என்பதுதான். அது தொடர்பான விவசாயப் பணியோடு, அலுவலகப் பணியோடு அவர்களுக்கு ஒரு தொடர்பு இருக்க வேண்டும். அவர்களுக்கு செய்முறைப் பயிற்சி அந்த இடங்களில் தர வேண்டும். 'இப்போதுள்ள படிப்பு முறை நன்றாக உள்ளது. பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவிட வேண்டுமென்ற அடிப்படையில், பாடசாலையில் சொல்லித் தருகின்ற கல்வி வாழ்க்கைக்கு உதவுகின்ற கல்வியாக இருக்கும் வகையில், கல்விக்கும் வாழ்க்கைக்கும் ஒரு





தொடர்பு இருக்க வேண்டுமென்ற வகையில், நல்ல ஒரு ஏற்பாட்டினைச் செய்து இந்த முயற்சியில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை நான் இங்கே மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்னாலே பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற எடுத்துக்கொண்டு அவைகள் தோல்வியடைந்த நிலையில், இது நமக்குக் கொஞ்சம் தைரியத்தைத் தருகிறது. ஆக, இதிலே இருக்கிற குறைபாடுகளை நாம் தீர்த்துக்

(பிற்பகல் 7-40)

கொள்வதன் மூலமாக கல்விக்கும், வாழ்க்கைக்கும் இடையில் ஏற்பட வேண்டுமென்று நான் நினைக்கிற தொடர்பை நிச்சயமாக ஏற்படுத்திக் காட்ட முடியும், நாட்டிலே ஒரு நல்ல சூழ்நிலையை உண்டாக்கிக் காட்ட முடியும். எஸ்.ஐ.இ.டி. கல்லூரி பற்றியும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பற்றியும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது என்பதையும், பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டும்கூட, அந்தப் பிரச்சினைகள், குறைகள் தீர்க்கப்படவில்லை என்றும் கூட நேற்றையதினம் ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பதில் அளித்தபோது சுட்டிக் காட்டப்பட்டது. இருந்தாலும் அவற்றிலே இருக்கின்ற குறைபாடுகளைக் களைய இந்த அரசு நிச்சயமாக முயற்சிக்கும். அந்த முயற்சியின் மூலமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு சிறந்த கல்விக் கேந்திரமாக மாறும். இந்த அரசு மாற்றும் என்ற உறுதியை இங்கே நான் தர விரும்புகிறேன். எஸ்.ஐ.இ.டி. கல்லூரியைப் பொறுத்தமட்டில், அங்கே ஆசிரியர்களை வெளியிடங்களுக்கு மாற்றுவதற்காக எடுத்திருக்கும் முயற்சியை நாங்கள் தடுத்து நிறுத்த முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் 4 ஆம் வகுப்பு தமிழ்ப் பாடம் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொன்னார்கள். நாம் அதிலே எடுத்துக்கொண்ட விரைவான நடவடிக்கை தான் மாறுதலுக்குக் காரணம். முன்னர் பிரதமராக இருந்த ஒருவர் மாறி புதிய பிரதமர் வந்த காரணத்தினால், அந்தப் பாடங்களை ரத்து செய்யவேண்டிய நிலைமைக்கு நாம் ஆளானோம். திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் பிரதமராக இல்லை என்ற நிலைமையில், அந்தப் பாடம் இருக்கக்கூடாது என்ற காரணத்தினால், விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததால்தான், அந்த நிலைமை வந்தது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அந்தப் பாடத்தை நீக்கியது குறை என்று சொல்லவில்லை. ஆனால் அதையொட்டி இன்னும் நான்கு பாடங்கள் சில பகுதியிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டது என்று அறிவித்திருந்தும் கூட, அவை நீக்கப்படாமல் மீண்டும் அச்சிடப்பட்டு வழங்குவதனால் ஏற்படுகின்ற நஷ்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விரைவான நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, ஒருவேளை அந்தத் தவறு ஏற்பட்டிருக்கலாம்.

அதற்கு அடுத்து, கல்லூரியிலே இடம் கிடைக்காததுபற்றி ஒரு பிரச்சினை வந்தது. இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஹையர் செக்கண்டரி மாணவர்கள் அதிகம் பேர் தேறியிருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்லூரியிலே இடம் கிடைக்கவில்லை என்ற குறைபாட்டை வெளியிலேயும், இங்கேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறைபாட்டைப் போக்க நாம் ஒரு சிறப்பான முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இவ்வாண்டு கல்லூரிகளிலே பட்டப் படிப்பு வகுப்புகளிலே ஏற்கெனவே உள்ள ஆசிரியர்களைப் பயன்படுத்திக்கொண்டு, கூடுதல் பிரிவுகளையும், புதிய படிப்புகளையும் தொடங்கி, மாணவர்களின் கல்லூரிக் கல்வித் தேவையை மேலும் முழுமையாகப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1979-80லிருந்து புகுமுக வகுப்பு நீக்கப்பட்டு விட்டதால் உபரியாக இருக்கும் கல்லூரி ஆசிரியர்களைப் பயன்படுத்திக்கொள்ள இருப்பதால், மேலும் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்ற தேவை இராது. அந்தந்தக் கல்லூரிகளிலே உள்ள நிலைமைகளுக்கேற்ப இப்பிரச்சினையை ஆராய்ந்து, தேவையான இடங்களில் எல்லாப் பட்டப் படிப்பு வகுப்புகளிலும் கூடுதலான மாணவர்களைச் சேர்க்கவும் புதிய வகுப்புகளைத் தொடங்கவும் கோரிக்கை அனுப்புமாறு கல்லூரி முதல்வர்களை கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொண்டிருக்கிறார். தனியார் கல்லூரிகளுக்கும், மாலை நேர பட்ட வகுப்புகளுக்கும் இது பொருந்தும். இந்த நடவடிக்கை சென்னை நகரில் உள்ள கல்லூரிகளைப் பொறுத்தமட்டில், ஏற்கெனவே தொடங்கப்பட்டு விட்டது. பிற வட்டாரங்களில் உள்ள கல்லூரிகளைப் பொறுத்தவரையில், இதுபோன்ற நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட இருக்கின்றன என்ற செய்தியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 1980-81 ஆம் ஆண்டில் 3,900 புதிய பல்வேறு ஆசிரியப் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்திலும் நீலகிரி மாவட்டத்திலும் ஒவ்வொரு முதன்மைக் கல்வி அலுவலகம்



ஏற்படுத்தப்படும். ஆக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இனி ஒரு முதன்மைக் கல்வி அலுவலர் இருப்பார். மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் தற்காலிகமாக இணைத்துக்கொள்ளப்பட்ட பி.எஸ்.ஸி./பி.எட். தகுதி உள்ள கணிதம் மற்றும் அறிவியல் ஆசிரியர்கள், முதுகலைப் பட்டம் பெறும் வாய்ப்பு அளிக்கும் வகையில் மாலை நேரக் கல்லூரி வகுப்புகளும், கிராமப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு உதவும் வகையில் விடுமுறைக் கால வகுப்புகளும் நடத்தி, அவர்கள் முதுகலைப் பட்டம் பெற, வழிவகை செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் அமர்த்தப்பட்டுள்ள உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களில் முதுகலைப் பட்டத்துடன் முழுத் தகுதிபெற்ற ஆசிரியர்களுக்கு, உரிய பணி விதிகளை விரைவில் வகுத்து அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் அமர்த்தப்பட்ட நாளிலிருந்து எஃப்.ஆர். 22-பியின்கீழ் ஊதியம் நிர்ணயம் செய்ய வழி வகை செய்யப்படும்.

5,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள 160 இடங்களில், ஆண்டொன்றுக்கு 30 நூலகங்கள் வீதம் புதிய கிளை நூலகங்கள், நூலக ஆணைக் குழுக்களால் வரும் ஆண்டுகளில் திறக்கப்படும்.

அதற்கு அடுத்தபடியாக, ஆட்சி மொழித் திட்டத்தை செம்மையாகவும், முழுமையாகவும் நிறைவேற்ற தீவிர ஆய்வுத் திட்டம் ஒன்று இவ்வாண்டில் ஐந்து துறைகளில் எடுத்துக்கொள்ளப்படும். இது மூன்று ஆண்டு காலத்தில் எல்லாத் துறைகளிலும் செயல்படுத்தப்பட்டு, அரசு அலுவலகங்கள் அனைத்திலும் ஆட்சி மொழியிலேயே, தமிழ் மொழியிலேயே அனைத்து அலுவல்களும் நடக்க வழி வகை செய்யப்படும்.

அதற்கடுத்தபடியாக, தமிழ் கலைக் களஞ்சியத்தின் இரண்டாவது பதிப்பை தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் மூலமாக வெளியிடுவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

அதற்கடுத்தது, வாழ்வில் நலிவுற்ற சிறந்த கலைஞர்களுக்கு அளிக்கும் உதவித்தொகை இந்த அரசு முன்னர் அறிவித்தவாறு, மாதம் ரூ. 75-ல் இருந்து ரூ. 150 ஆக 1—4—1980லிருந்து உயர்த்திக் கொடுக்கப்படுகிறது.

முதல்வர் அவர்கள் அறிவித்தபடி, 1979-80-ல் விண்ணப்பித்து நிதியுதவி கிடைக்கப்பெறாத மேலும் 275 நலிவுற்ற கலைஞர்களுக்கும் இந்த நிதியுதவி விரிவாக்கப்பட்டுள்ளது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1980 ஜூலை 22

ஈட்டிய விடுப்பை காசாக்கிக்கொள்ளும் சலுகை தனியார் கல்லூரிகளில் பணி புரிவோருக்கும் விரிவுபடுத்தப்படும். மேலும் அக்கல்லூரிகளில் பணியாற்றும் மகளிருக்கும் 1—4—1980 முதல் மகப்பேறு விடுப்பு மூன்று மாதங்களாக உயர்த்தப்படும்.

தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கு, அரசுக் கல்லூரிகளில் பணி புரிபவர்களைப் போன்றே தாராள ஓய்வூதியத் திட்டத்தின்படி பணிக்கொடையும், முழுமையான குடும்ப ஓய்வூதியமும் அளிக்கப்படும்.

சைனிக் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கும் முழுப் படிப்பு உதவித் தொகையை ஆண்டுக்கு ரூ. 3,500 லிருந்து ரூ. 4,000 ஆக உயர்த்த அரசு முன்வந்துள்ளது.

இந்த ஆண்டு 80 உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்படுகின்றன.

தமிழ் நாடு கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் மற்றும் தொடக்கக் கல்விப் பணிகளை செம்மையாகக் கவனிக்கும் பொருட்டு, பள்ளிக் கல்வி இயக்குநரின் கீழ் ஒரு தனி இணைப் பள்ளிக் கல்வி இயக்குநர் பதவி உடனடியாக ஏற்படுத்தப்படும்.

அதற்கடுத்து, தற்போது பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் உடற்பயிற்சி ஆசிரியைகளுக்கு சிறப்பு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இனி, ஆண், பெண் இருபாலரும் பயிலும் மேல் நிலைப் பள்ளிகளில் மேல் நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு உடற்பயிற்சி கற்றுத் தர உடற்பயிற்சி ஆசிரியைகளுக்கும் இந்தச் சிறப்பு ஊதியம் வழங்கப்படும்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை, அரசு ஊழியர்களாக ஆக்குவதென்ற நல்ல முடிவை இவ்வரசு ஏற்கனவே எடுத்துள்ளது. இதன் பலனாக 95,000 ஆசிரியர்கள் அரசுப் பணியின் கீழ் வருவார்கள். இதை முழுமையாக அமுல் படுத்தவும் இதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு அறிவிக்கவும் கீழே கண்ட உயர் மட்டக் குழு அமைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கல்விச் செயலாளர் | : | தலைவர் |
| நிதிச் செயலாளர் | : | உறுப்பினர் |
| ஊரக உள்ளாட்சித் துறைச் செயலாளர் | : | உறுப்பினர் |
| கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் | : | உறுப்பினர் |
| பள்ளிக் கல்வி இயக்குநர் | : | உறுப்பினர்/செயலாளர் |





1980 ஜூலை 22] [திரு. செ. அரங்கநாயகம்]

இக்குழு ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் மற்றையோரின் கருத்துக்களையும், செய்யவேண்டிய நிர்வாக மாற்றங்களையும்பற்றி அறிந்து பரிந்துரைகளை 3 மாதங்களுக்குள் அரசுக்கு அளிக்கும்.

உத்திரப் பிரதேசத்தில், கர்வால் வட்டாரம், ஸ்ரீநகரில் உள்ள கார்வல் பல்கலைக் கழகத்தில் அரசியல் பாடத்தை எம்.ஏ. நிலையில் பயிலும் மாணவர்கள் கற்கும் பாடங்களில் ஒன்றான "பண்டைக்கால இந்திய அரசியல் சிந்தனையும், அரசியல் நிலைமைகளும்" என்னும் பாடத்தில் திருவள்ளுவர் கருத்துக்களையும் பாடமாக வைக்க முடிவு செய்து அதற்கு வள்ளுவரைப் பற்றிய நூல்களை அனுப்புமாறு இவ்வரசை அப்பல்கலைக் கழகம் வேண்டியுள்ளதோடு நிதி உதவியும் கோரியுள்ளது. இவ்வரசு இதற்குத் தக்க உதவிகளைச் செய்ய இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதோடு இந்த விளக்கக் குறிப்பின் மீது பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி, கல்வித் துறையினுடைய வளர்ச்சிக்காக ஒத்துழைப்பைத் தந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையில் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, மீண்டும் நாளை காலை 10 மணிக்கு அவை கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

[பிற்பகல் 7-50]

**4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

*A. Statutory Rules and Orders.*

52. Notification issued in Letter No. 30903|VIII-2|79-15, Commercial Taxes and Religious Endowments, dated the 29th April 1980 in regard to the constitution of Tribunals with jurisdiction over certain areas. [Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963)].

53. Notification issued with G.O. Ms. No. 2123, Housing and Urban Development, dated the 26th November 1979 in regard to amendments to the Tamil Nadu Slum Clearance Board Last Grade Service Rules, 1972. (English and Tamil). [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971)].

54. Notification issued with G.O. Ms. No. 23, Commercial Taxes and Religious Endowments, dated the 12th January 1980 in regard to amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

55. Notification issued with G.O. Ms. No. 341, Commercial Taxes and Religious Endowments, dated the 15th April 1980 making the Tamil Nadu Levy of Ryotwari Assessment on Free-hold Lands Rules, 1980. [Laid on the table of the House under section 22 (2) of the Tamil Nadu Levy of Ryotwari Assessment on Free-hold Lands Act, 1972 (Tamil Nadu Act 31 of 1973)].

56. Notification issued with G.O. Ms. No. 545, Education, dated the 22nd March 1980 appointing the 26th March 1980 as the date on which the Madras University and Madurai-Kamaraj University (Second Amendment) Act, 1979 (Tamil Nadu Act 9 of 1980) shall come into force. [Laid on the table of the House under section 50 (2) of the Madras University Act, 1923 (Tamil Nadu Act VII of 1923) and 53 (2) of the Madurai-Kamaraj University Act, 1965 (Tamil Nadu Act 33 of 1965)].

*B. Reports, Notifications and Other Papers.*

* 51. Policy Note on Medical, 1980-81. (English and Tamil).

* 52. Policy Note on Indian Medicine, 1980-81. (English and Tamil).

* 53. Policy Note on Public Health, 1980-81. (English and Tamil).

* 54. Performance Budget on Medical Education 1980-81. (English).

* 55. Performance Budget on Medical Services and Family Welfare, 1980-81. (English).



* 56. Performance Budget on Indian Medicine, 1980-81. (English).

* 57 Performance Budget on Primary Health Centres, Public Health and Preventive Medicine, 1980-81. (English).

** 58. Policy Note on Registration Department. (English and Tamil).

** 59. Policy Note on Administration of Justice, 1980-81. (English and Tamil).

** 60. Demand No. 14.—The Administration of Jails in Tamil Nadu, 1980-81. (English and Tamil).

** 61. Policy Note on Forest Department, 1980-81. (English and Tamil).

** 62. Performance Budget on Forests, 1980-81. (English).

** 63. Policy Note on Dairy Development Department and Milk Supply Schemes, 1980-81. (English and Tamil).

** 64. A Review of the Activities of the Tamil Nadu Dairy Development Corporation Limited, during 1979-80. (English and Tamil).

## இணைப்பு I.

*(3 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)*

மேட்டூர் அணையில் நீர்மட்டம் அபாய கட்டத்தை எட்டிவிட்டதாகவும் 4—7—1980 அன்று காலை 8 மணிக்கு காவிரி ஆற்றில் வினாடிக்கு 1,00,000 கன அடி தண்ணீர் திறந்து விடப்போவதாகவும் மேட்டூர் நீர்த்தேக்கம் செயற் பொறியாளர் தந்தி மூலம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்குத் தெரிவித்தார். அதன்படி சேலம் மற்றும் பெரியார் மாவட்ட ஆட்சியர்கள் உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்தனர்.

2. மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதின் விளைவாக காவிரி நதியில் வெள்ளம் ஏற்பட்டு காவிரி நதி ஓரத்திலிருந்த தாழ்ந்த பகுதிகளில் குடிசைகள் பாதிக்கப்பட்டன. பள்ளிப்பாளையத்தில் 630 குடிசைகளும், குமாரபாளையத்தில் 85 குடிசைகளும், மேட்டூர் நகரியத்தில் 9 குடிசைகளும் சேதமுற்றன. பாதிக்கப்பட்ட குடும்பங்களை தற்காலிகமாக

* Laid on the Table of the House on 21st July 1980.

** Circulated to all M.L.Cs. on 21st July 1980.

அருகிலுள்ள பள்ளிகளில் குடியமர்த்தி உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடியிருப்புக்கும் ரூ. 100 மானியமாகவும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு புடவை வழங்கப்பட்டன. 15 வயது பெண் ஒன்று தற்கொலை செய்து கொண்டிருக்கலாமெனக் கருதி இது விசாரணையில் உள்ளதாகவும் தகவல் வந்துள்ளது.

3. பெரியார் மாவட்டத்தில் பவானியில் 52 குடிசைகளும், அம்மாப்பேட்டையில் 2 குடிசைகளும், தஞ்சைகோளநல்லியில் 7 குடிசைகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு குடிசை மானியம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசியும் கொடுக்கப்பட்டது. இங்கு உயிர்ச்சேதமோ, கால் நடைச் சேதமோ இல்லை. வெள்ளம் வடிந்து சகஜ நிலை இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

## இணைப்பு

(5 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பின்தங்கிய வகுப்பு நலத்துறையில் வார்டன்/மேட்ரன் மாற்றம் செய்வது பற்றி கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்டன :—

(i) ஒரு இடத்தில் பின்தங்கிய மாணவ விடுதிகளின் வார்டன்/மேட்ரன் மூன்றாண்டுகாலப் பணி முடிவு பெற்றால் வேறு இடத்திற்கு அவர்கள் மாற்றப்பட வேண்டும்.

(ii) கணவன் மனைவி இருவருக்கும் அரசு பணியில் ஒரே இடத்தில் மூன்றாண்டு காலம் பணி முடிவடைந்தால், முடிந்தால் இருவரையும் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். இருவரையும் வேறு இடத்திற்கு மாற்றமுடியாவிட்டால், பின்தங்கிய வகுப்பு நலத்துறை இயக்குநர், மாவட்ட ஆட்சியர், மற்றும் மாவட்ட பின்தங்கிய வகுப்பு நல அலுவலர், தங்கள் தீர்ப்புப்படி அவர்களை அங்கேயே பணி செய்ய ஆணை இடலாம். இத்தீர்ப்புப்படியே பெற்றோர்களுடன் வசிக்கும் மணமாகாத பெண் அரசு ஊழியர்களை அதே இடத்திலேயே பணியில் இருக்க ஆணையிடலாம்.



(iii) தீய நடவடிக்கை மற்றும் அரசு பணத்தை துர்பிரயோகம் செய்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் மூன்றாண்டு காலப் பணி முடியாவிட்டாலும் வார்டன்/மேட்ரன்களை வேறு இடங்களுக்கு மாற்றலாம்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள பின்தங்கிய வகுப்பு நலத்துறையின் ஆணையினைப் போன்றே அரிசன மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் பணி புரியும் வார்டன்/மேட்ரன்களை மாற்றுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாணைப்படி அரசுப் பணி புரியும் கணவன் மனைவியை மூன்றாண்டு
காலத்திற்குப் பின்னர் முடிந்தால் ஒரே இடத்திற்கு மாற்ற வேண்டும்.
அவ்வாறு ஒரே இடத்திற்கு மாற்ற முடியாவிட்டால் மாவட்ட ஆட்சியர்/
மாவட்ட அரிசன நல்வாழ்வு அலுவலர்/அரிசனம் மற்றும் ஆதிவாசி நல
இயக்குநர் தங்கள் உசிதம்போல் கணவன் மனைவியை அதே இடத்தில்
தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கலாம். ஆகவே
உள்ள ஆசிரியர்கள் பிரிக்கப்பட்டு தொல்லைகளுக்கு
இடம் இல்லை.

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

புதன்கிழமை, 1980 ஜூலை 23.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-00 மணியளவில் மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### இளநிலைப் பொறியாளர்கள்.

* 5. வினா—திரு. சே. ஆறுமுகம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) பொதுப்பணித்துறையில், இளநிலைப் பொறியாளர்களாக ஏழு முதல் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டுப் பணியாற்றி வருகின்ற பட்டய சான்றிதழ் பெற்றிருப்பவர்களுடைய பணி, வரன்முறை செய்யப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்த, அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : (அ) ஆம்.

(இ) இளநிலைப் பொறியாளர்களின் பணி வரன்முறைப்படுத்தாமைக்கு அவர்கள் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படாமையே காரணம். எனவே, இவர்கள் இளநிலைப் பொறியாளர் நேரடித் தேர்வுக்கான விண்ணப்பங்களை தேர்வாணைக்குழு கோரும்போது விண்ணப்பித்து தேர்ந்தெடுக்கப் பட்டால் அவர்களது பணியை வரன்முறைப்படுத்த இயலும். எனினும், இவர்களது நிலையை அரசு அனுதாபத்துடன் அணுகி இவர்களுக்காக தமிழ்நாடு பொதுத் தேர்வாணைக் குழு ஒரு தனித் தேர்வு நடத்தும் சாத்தியக் கூறுகள் பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

## Sub-way under Arcot Road.

* 6. Q.—THIRU S. MUTHU (on behalf of THIRU E. S. VENKATESAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to construct a sub-way under the Arcot Road, Kodambakkam, connecting Trustpuram Colony and United India and Film Directors Colonies ; and

(b) if so, the stage at which the matter now stands ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள, கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்:—

1. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1980).

2. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1980).

3. 1980 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1980).



## 3. கவன ஈர்ப்பு.

(1) 1978 ஆம் ஆண்டு ஜூலையில் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட பதிவுபெற்ற தலைமை ஆசிரியர்கள் அண்மையில் திடீரெனப் பதவி இறக்கம் செய்யப்பட்டது குறித்து.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்:—

"1978 ஜூலையில் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் அண்மையில் திடீரென பதவி இறக்கம் செய்யப்பட்டதால், தலைமை ஆசிரியர்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தி குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை @ ஒன்று மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தற்போது 14 தலைமை ஆசிரியர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டு பதவியிறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இது குறித்த வழக்கொன்று நீதிமன்றத்தில் இருப்பதால் அதைக் குறித்து இங்கே நான் பேச விரும்பவில்லை. ஆனாலும் இந்த 14 தலைமை ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்களின் அனுபவத்தின் அடிப்படையிலும், அவர்கள் பணிபுரிந்த காலத்தின் அடிப்படையிலும், அவர்களுக்கு மதிப்புக் கொடுக்கும் வகையில் தொடர்ந்து மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக நீடிக்கச் செய்ய வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இந்தப் பிரச்சினை வழக்கு மன்றத்தில் இருப்பதால், பொதுவான கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். குறிப்பிட்ட வகுப்புகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒரு தகுதி பெறாதவர்களுக்கு அந்தப் பொறுப்பை ஒப்படைப்பதன் மூலம்—ஒரு நடவடிக்கையை மேற்கொள்வோமானால், அதையே எல்லாப் பகுதி ஆசிரியர்களும் கேட்கக்கூடிய வாய்ப்பு எழும். எனவே மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள

@ 444, 445 ஆம் பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ஒரு பகுதி ஆசிரியர்களுக்கு மட்டும் இந்தச் சலுகையை அளித்தால், இயல்பாகவே அனுபவித்தின் அடிப்படையில் தமிழாசிரியர்களும் பி.எஸ்சி., பி.டி., பி.ஏ., பி.டி., படித்த ஆசிரியர்களும் இந்தச் சலுகையைக் கேட்பார்கள். அப்படிக் கேட்கிறபோது, ஹையர் செகண்டரி பள்ளிகளிலிருந்து படித்து வெளியேறுகிற மாணவர்களை கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளமாட்டோமென்று நமது பல்கலைக் கழகங்களும், வேறு மாநிலப் பல்கலைக் கழகங்களும் சொல்லக்கூடும்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மேல்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டபோது, தனியார் மேல்நிலைப் பள்ளிகளிலும், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மேல்நிலைப் பள்ளிகளிலும், எம்.ஏ. பட்டம் பெறாத தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் ஓய்வு பெறும் வயதுவரையில் அதே தலைமையாசிரியர் பதவியில் நீடிக்க உதவி செய்யும் வகையில் அரசு ஒரு ஆணை பிறப்பித்தது. எனவே தனியார் பள்ளிகளுக்கும், நகரவை பள்ளிகளுக்கும் அளித்த அதே சலுகையை நமது அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் விஸ்தரித்து, அங்கே பணியாற்றும் தலைமையாசிரியர்களின் கோரிக்கையை அனுதாபத்தோடு அரசு ஏற்கலாம் என்பது என்னுடைய கருத்து. வழக்கு மன்றத்தில் தற்போது வழக்கு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் தலைமையாசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் அந்த வழக்குகளை வாபஸ் வாங்கக்கூடத் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்வதோடு, அதற்கு நானே பொறுப்பேற்றுக் கொள்ளவும் தயார் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே தனியார் மேல்நிலைப் பள்ளிகள், மற்றும் நகராட்சி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு அளித்த அதே சலுகையை இந்தப் பதினான்கு தலைமை ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கும் வகையில் இப்பிரச்னையை அனுதாபத்தோடு அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தனியார் துறையைச் சார்ந்தவர்கள் மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்கமாட்டோம் என்ற நிலைமை உருவானபோதுதான் நாம் இந்தச் சலுகையை அவர்கள் கேட்ட காரணத்தால் கொடுத்தோம். இப்போது அதையேகூட மறுபரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம். அதை வேண்டுமானால் செய்யலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.



(2) மதுரை மாவட்டத்தில் சரும நோயைப் பரப்பும் ஆகாசத் தாமரைச் செடி (பார்த்தினியம்) பரவலாக வளர்ந்து தீங்கு விளைவிப்பது குறித்து.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :

"மதுரை மாவட்டத்தில் பல இடங்களில் சரும நோயை உருவாக்கும் ஆகாசத் தாமரைச் செடி (பார்த்தீனியம்) பரவலாக வளர்ந்து, பொது மக்களுக்குப் பெருந்தீங்கு விளைவித்திருப்பது குறித்து."

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, இது குறித்து மேலவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்த விஷச் செடி தமிழ்நாட்டில் முன்பு இருந்தது உண்டா? இச்செடியை ஒழிப்பது சம்பந்தமாக சுகாதார அலுவலர்களுக்கு முன் அனுபவம் உண்டா? இது குறித்துப் புதிதாக வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடத்தப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்த விஷச் செடியைப் பொறுத்தவரையில், தென் அமெரிக்காவிலிருந்து பி.எல். 480 என்கிற கோதுமை இந்தியாவுக்கு அனுப்பப்பட்டபோது, அந்த கோதுமையோடு வந்த சில விதைகள் மூலமாக முதலில் மராட்டிய மாநிலத்தில் பரவி அதற்குப் பிறகு தென் மாநிலங்களில் பரவியதாக நிபுணர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். இந்த விஷச் செடி இப்போது கோவை, மதுரை மாவட்டங்களில் பல பகுதிகளில் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை ஒழிப்பதற்குரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகவும், இவைகளை உடனடியாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். அதோடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாக இதற்கு வேறு ஏதாவது தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள முடியுமா என்று அறிந்து சொல்லும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

(திரு. ஜி. வசந்த பை பேச எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினருக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். இது கேள்வி நேரம் அல்ல. அவர் எதையும் கேட்கக்கூடாது.

---

@ 446-ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

THIRU G. VASANTHA PAI : Will the Hon. Minister get the statement published in the Press in a prominent form?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது சம்பந்தப்படாத உறுப்பினர் யாரும் கேட்க உரிமையில்லை.

THIRU G. VASANTHA PAI : I am requesting that the statement may be released to the Press and published in an extensive form for the information of the public.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எதுவாக இருந்தாலும் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள் தான் கேட்கலாம், மற்றவர்கள் கேட்க முடியாது.

THIRU G. VASANTHA PAI : This is a matter which concerns everybody.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற பத்திரிகை நிருபர்கள் அனைவரையும் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் செய்தியைத் தங்கள் பத்திரிகைகளில் நல்ல முறையில் விரிவாகப் பிரசுரித்து அதன் மூலமாக ஆங்காங்கே இருக்கக் கூடிய மக்கள் இத்தகைய விஷச் செடிகளை காணும்போது, அதுபற்றிய விவரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ, அங்கே உள்ள அதிகாரிகளுக்கோ தெரிவித்தால், அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

## 4. அரசின் சட்டமுன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1980).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, "சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1980) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 447 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

(முற்பகல் 10-10)

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப்பற்றிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய நாட்டில் 1960 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட நில உச்சவரம்புச் சட்டத்திற்கு டிமிக்கி கொடுக்கச் செய்த முயற்சியின் விளைவாக, அந்த நிலங்களை ஆரூரான் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு வழங்கக் கூடிய நிலங்களாக மாற்றினார்கள். பின்னாலே செய்த சட்டத் திருத்தத்தின் மூலமாக அந்த நிலங்களில் உபரியாக இருந்ததை சர்க்கரை ஆலையின் சொந்தப் பொறுப்பிலே வைத்திருந்தார்கள். பிறகு அந்த நிலங்களையெல்லாம் கரும்பு உற்பத்திப் பண்ணை என்ற பெயராலே ஒப்படைத்திருந்தார்கள். சில நிலப்பிரபுக்களிடமிருந்து உபரியாக உள்ள நிலங்களை எடுத்ததோடு மட்டுமல்லாமல், நில உச்சவரம்புச் சட்டத்திற்குட்படக்கூடிய நிலம் வைத்திருந்த சிறு நிலச்சுவாந்தார்களிடமிருந்தும் நஞ்சை நிலங்களை கரும்புச் சாகுபடிக்காக இந்தக் கரும்புப் பண்ணைக் கழகம் குத்தகைக்கு எடுத்திருந்தது. இப்போது இந்தக் கரும்புப் பண்ணைக் கழகம் இலாபகரமாக நடைபெறவில்லை. அதைத் தொடர்ந்து அந்தப் பண்ணைக் கழகத்தை வைத்திருக்க வேண்டுமா அல்லது கலைத்துவிடலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். இதற்காக இரண்டு வருட அவகாசம் கேட்பது அவசியமில்லை. ஏற்கெனவே அந்தக் கார்ப்பரேஷன் நஷ்டத்திலே நடந்து கொண்டிருக்கிறது. அதன் மூலமாக லாபகரமாக சர்க்கரை ஆலைக்குக் கரும்பு சப்ளை பண்ண முடியவில்லை என்று அரசாங்கத்தின் முன்னால் உள்ள அறிக்கையும், அனுபவமும் காட்டுகிறது. ஆகவே அந்தக் கார்ப்பரேஷனை உடனடியாகக் கலைத்துவிட வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

அந்தக் கார்ப்பரேஷன் வசமுள்ள உபரி நிலங்களை நிலம் இல்லாத விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கார்ப்பரேஷன் பொறுப்பில் உள்ள குத்தகை நிலங்களை நிலச் சொந்தக்காரர்களிடமே பயிரிடுவதற்காக ஒப்படைக்குமாறு கேட்டுக்

கொள்கிறேன். இவைகளைச் செய்து முடிக்க இரண்டு வருட அவகாசம் தேவையில்லை. இரண்டு வருடங்களை ஒரு வருடமாகக் குறைத்துக் கொண்டு அதற்குள்ளேயே ஆரூரான் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு சப்ளை செய்ய மாற்று ஏற்பாட்டைச் செய்துவிட்டு இந்தக் கார்ப்பரேஷனைக் கலைத்துவிட்டு, உபரி நிலத்தை நிலம் இல்லாத விவசாயிகளுக்குக் கொடுப்ப தோடு குத்தகைக்கு எடுத்த நிலங்களை அதன் சொந்தக்காரர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சாவூரில் வேறு ஒரு முக்கியமான பிரச்சினை இருக்கிறது. நம்முடைய அரசு, ஏற்கெனவே ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு உள்ள கூட்டுறவுக் கடனை ரத்து செய்துவிட்டது. தஞ்சைப் பகுதியிலே காவிரித் தண்ணீர் வந்துவிட்டது. எனினும் கூட்டுறவு வங்கிகளில் கடன் கொடுக்காத காரணத்தால், விவசாய வேலைகள் முடங்கிக் கிடக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே கடனை உடனடி யாக வழங்க வேண்டும். பத்து ஏக்கருக்குக் கீழே உள்ளவர்களுக்குக் கூட்டுறவுக் கடன் பாக்கியிருந்தாலும், கடன் தர வேண்டுமென்று கோரி, மாவட்டக் கூட்டுறவு வங்கிகளின் கிளை அலுவலகங்களின் முன்பும், கிராமக் கூட்டுறவு சொசைட்டிகளின் முன்பும், ஆக 100 இடங்களில் விவசாயிகள் உண்ணாவிரதம் இருந்து வற்புறுத்துகிறார்கள். தண்ணீரும் வீணாகிறது. காலமும் வீணாகிறது. ஆனால் பணம் இல்லை. ஐந்து ஏக்கருக்குக் குறை வாக உள்ளவர்களுக்கு கடன் ரத்து செய்யப்படுமென்ற கொள்கையை அரசு மேற்கொண்டிருந்தாலும், முடிவு தெரியும் வரையில் பழைய பாக்கியை வற்புறுத் தாமல் பத்து ஏக்கருக்குக் குறைவாகவுள்ள அனைவருக்கும் உடனடியாக விவசாயச் செலவிற்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று வங்கிகளுக்கு உத்தர விடவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இந்த மசோதாவின்மீது நான் சொல்லியிருக்கிற கருத்துக்களை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமர் கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது பெரும் நிலச்சுவாந்தார்கள் டிரஸ்ட்கள் தயார் செய்துவிட்டார்கள், மேய்ச்சல் நிலத் திற்கு, எழுதி வைத்துவிட்டார்கள், கரும்புப் பண்ணைக்கு எழுதி வைத்துவிட் டார்கள். அப்போது கொண்டு வரப்பட்ட சட்டத்திலே இவைகளுக்கெல்லாம்



விதிவிலக்கு இருந்ததால், விதிவிலக்காக அவர்கள் மாற்றி வைத்துவிட்டார்கள். 1971 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்படி கரும்பு நிலத்திற்காகவும், மேய்ச்சல் நிலத்திற்காகவும் ஒதுக்கப்பட்டதை எடுப்பது என்று தீர்மானிக்கப் பட்டது. அதன்படி ஆரூரான் கரும்பாலைக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த மூவாயிரம் ஏக்கர் நிலத்தை அரசு எடுத்து கரும்புப் பண்ணைக் கழகம் ஒன்றை ஏற்படுத்தியது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மிக முக்கிய நோக்கம் நிலம் இல்லாதவர்களுக்கு நிலத்தைப் பகிர்ந்தளிப்பதுதான். அப்படி யில்லாமல் கரும்பாலைத் தொழிலை வளர்க்க வேண்டுமென்று கரும்புப் பண்ணைக் கழகத்தை ஏற்படுத்தி வைத்திருந்தார்கள். இந்த நிலமும் போதா தென்று இரண்டாயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களை சிறு குத்தகை தாரர்களிடமிருந்து குத்தகையாகப் பெற்றிருந்தார்கள். இப்போது, சிறு நிலச் சுவாந்தார்கள் கரும்புப் பண்ணைக்குக் கொடுத்த குத்தகை காலாவதியாகிறது. இதை மேலும் நீட்டிக்கத்தான் இந்தச் சட்டத் திருத்தம் வருகிறதென்று நினைக்கிறேன். அரசு தந்திருக்கிற புள்ளிவிவரங்களிலிருந்து இதுதான் தெரிகிறது. அந்த நிலையில் நிலச்சுவாந்தார்களுக்குரிய நிலத்தை உரிய காலத்தில் அவர்கள் பெற வழிவகை செய்வதுதான் முறை. கரும்பு உற்பத் திக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இருந்தால், அவர்கள் நிலத்தைத் திரும்பப் பெற்ற பிறகும் கரும்புதான் உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொன்னாலே போதுமானது. அரசாங்கப் பொறுப்பிலே இருக்கக்கூடிய கரும்புப் பண்ணை நஷ்டத்திலே ஓடிக் கொண்டிருக்கிறது. பொதுத் துறை என்று வந்தாலே நஷ்டம்தான். அதிலே நிர்வாகத் திறமையின்மை புகுந்துவிடும். அதிலே இரண்டாயிரம் ஏக்கருக்குச் சொந்தமான நில உரிமையாளர்கள் ஆயிரம் பேராவது இருப்பார்கள். அவர்கள் கையில் நிலத்தைக் கொடுத்து கரும்பை உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொன்னால், நிச்சயமாக நல்ல முறையிலே, இதைவிட லாபகரமான முறையிலே பயிர் செய்து கரும்பாலைகளுக்குக் கரும்பைக் கொடுக்க முடியுமென்று கருதுகிறேன். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீரிய முறையில் சிந்தித்து, இரண்டாண்டுகள் என்று இப்போது கேட்டாலும், ஆறு மாதங்களுக்குள்ளாக ஒரு நல்ல முடிவை எடுத்து, ஐந்து ஏக்கருக்குட்பட்டவர்களாக இருந்தால், அந்தந்த நில உரிமை யாளர்களிடமே அந்த நிலத்தைக் கொடுப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் வேறு தொழில் இல்லாமல் கஷ்டப்படு கிறார்கள். அதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த 3,000 ஏக்கர் நிலத்தை, நிலம் இல்லாத ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்து, அத்தனை

பேரும் கரும்புதான் பயிர் செய்ய வேண்டுமென்று கட்டளையைப் பிறப்பித்தால், அது பலனுடையதாக இருக்குமென்று தெரிவித்து, அதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்கிற வகையில், இரண்டு பேரைத் தவிர, யாரும் கருத்துக்களைச் சொல்லாமல் அமர்ந்திருக்கிறார்கள். கருத்துக்களைச் சொன்ன இருவரும் இந்தச் சட்டத்தை வரவேற்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகிறபோது, சட்டத்தை வரவேற்றுவிட்டு, "இரண்டாண்டுகள் தேவையா, ஓராண்டு போதாதா ?" என்று கேட்டிருக்கிறார்கள். முதலிலே மூலச் சட்டம் வந்த போது, சில பேருக்கு விதிவிலக்கு அளித்தார்கள். அதற்குப் பிறகு விதிவிலக்கு அளித்தது தவறு என்று கருதி, அந்த விதிவிலக்கை ரத்து செய்துவிட்டார்கள். அதை ரத்து செய்துவிட்ட பிறகு, கரும்பு சாகுபடி செய்து சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொடுத்து அவர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று சட்டத்திலே இடம் அளித்துவிட்டார்கள். ஆகவே, இன்றைக்கு உடனடியாக இந்த நிலத்தை எடுக்க முடியாது. அதற்கு ஒரு திருத்தச் சட்டம் கொண்டுவர வேண்டும். முதலிலே சட்டம் கொண்டுவந்த போது 30—6—1974-லிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு ஐந்து என்பதற்குப் பதிலாக ஏழு என்று நாம் போட்டிருக்கிறோம். மொத்தமாக ஏழு ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். 30—6—1974-ல் இருந்து ஏழு ஆண்டுகள் கூட்டினால் 30—6—1981 தான் ஆகும். இன்றைக்கு நாம் எந்த நாளில் இருக்கிறோம் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே ஓராண்டுதான் கிடைக்கிறது. ஏழு ஆண்டுகள் என்று மொத்தமாக இருந்தாலும், 30—6—1981 அன்று முடிந்து விடுகிறது. ஆகவே இரண்டு ஆண்டு என்று இருப்பது சட்டத்திலே இருக்கிற பாதுகாப்புக்காக என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் அவர்கள், நிலங்களை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள் அப்படிக் கொடுப்பதற்குச் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும். ஏனென்றால் விதிவிலக்கை ரத்து செய்கிறபோது, சர்க்கரை ஆலைக்குக் கரும்பு



கொடுக்க வேண்டுமென்ற கண்டிஷன் இருக்கிறது. அந்த விதிவிலக்கை ரத்து செய்ய சட்டம் கொண்டுவர இருக்கிறோம். விதிவிலக்கை ரத்து செய்தாலும், அதற்குப் பிறகும் அதற்கு வேண்டிய பாதுகாப்பைத் தேட வேண்டும். இந்தக் காரணத்தால்தான் இந்தக் கால நீட்டிப்பைக் கேட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

எடுக்கிற நிலத்தை எப்படிக் கொடுக்க வேண்டுமென்ற அரிய யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனையின்படியே, அந்தப் பாதையிலேயே இந்த அரசு போய்க்கொண்டிருக்கிறது என்பது அங்கத்தினர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அந்தத் தடத்தைப் பார்த்துக்கொண்டு அந்தத் தடத்திலேயே நடந்துகொண்டிருக்கிறோம் என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம் என்று கூறிக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை அவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு நில சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1980) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1980) நிறை வேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்தம் சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1980).

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு, இந்து-சமய-அறக்கட்டளைகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு, இந்து-சமய-அறக்கட்டளைகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தினை நான் ஆதரித்துப் பேச விரும்புகிறேன். தமிழ் நாட்டில் அறநிலையத் துறையில் ஒரு மிகப் பெரிய அளவுக்கு நல்ல மாற்றங் களை உண்டாக்குவதற்காக முயற்சிக்கின்ற வகையில், தேவையான நேரங் களில், அவசியமான நேரங்களில் இப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டு வருகின்ற வகையில், இந்தச் சட்டத் திருத்தம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்

@ 448 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.





கிறது. இந்தத் திருத்தத்தின் அடிப்படையில், இன்றைக்கு அறநிலையத் துறையை எந்த வகையிலே மாற்ற வேண்டுமென்று இந்த அரசு கருதியிருக் கிறதோ அந்த வகையில் பல்வேறு மாற்றங்களைச் செய்வதற்கான முயற்சி களை இந்த அரசு இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரி ந்துக்கொள்கிறேன். அந்த முயற்சிகளின் அடையாளமாகத்தான் இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. இந்தத் திருத்தத்தின் மூலமாக நம்முடைய அற நிலையத் துறையில் இருக்கின்ற பல்வேறு கேடுகளைக் களைவதற்கு நடவ டிக்கைகள் எடுக்க வேண்டும். அந்த வகையிலே இந்தத் திருத்தத்தைப் பயன்படுத்த வேண்டும். இன்றைக்கு அறநிலையத் துறையிலே இருக் கின்ற நிலைமைகளையும், கடந்த பல ஆண்டுகளாக அறநிலையத் துறையிலே இருந்த பல நிலைமைகளையும் நாம் நிச்சயமாகக் கவனித்தாக வேண்டும். இன்றைக்கு அறநிலையத் துறை தமிழ்நாட்டில் முழுமையாக, செம்மையாக இயங்க ஆரம்பித்துவிட்டது என்று நான் சொல்ல இயலவில்லை என்றாலும், இன்றைக்கு குறை சொல்ல முடியாத அளவுக்கு, குற்றங் காண முடியாத அளவுக்கு அதிலே பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த மாற்றங்களின் விளைவாக, என்னைப் போன்ற சாமியிலே நம்பிக்கை இல்லாத வர்கள்கூட, இன்றைக்கு அந்தத் துறையிலே நடைபெறுகின்ற பல நல்ல காரி யங்களை நிச்சயமாகப் பாராட்ட வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக் கிறோம். நான் கடந்த காலத்தை இணைத்துச் சொல்கின்ற நேரத்தில், நான ஏதோ அரசியல் பேசுவதாக இங்கே இருக்கின்ற என்னுடைய அருமை நண்பர்கள் நினைத்துக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். அறங்களை வளர்ப்பதற்காகவும், பழைய நிலைமைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும் ஏற்பட்ட இந்தத் துறையை நாம் எதற்கெல்லாம் பயன்படுத்தினோம், அது எந்த அளவுக்கு மோசமாக இருந்தது என்பதைப் பற்றி நிச்சயமாக உடன்பாடு உள்ளவர்களாக இருந்தால், அவர்களுக்குக்கூட நன்றாகத் தெரியும். அந்த அளவுக்கு மோசமாக நடத்துகொண்டிருந்தது. அதை மாற்ற வேண்டுமென்று எடுத்துக்கொண்ட முயற்சிகள் எந்த அளவுக்குப் பலன் கொடுத்திருக்கிறது என்பதை நாம் பார்த்தாக வேண்டும்.

பெரிய பெரிய கோயில்களில் எல்லாம் இன்றைக்கு வருகின்ற வருமானங் களையும், 1973-74-லிலே வந்துகொண்டிருந்த வருமானங்களையும் ஒத்துப் பார்க்கின்றபோது, நமக்கு ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. நான் நிச்சய மாகச் சொல்வேன். இன்றைக்கு உண்டியலிலே கை வைக்க முடியாத சூழ் நிலையை உண்டாக்கிவிட்டிருக்கிறார்கள் என்பதிலே நான் மிகுந்த பெருமைப்

படுகிறேன். அதற்கு முன்னாலே எல்லாம் கோயில்களிலே, சாமிக்கு முன்னாலே இருக்கின்ற உண்டியலிலே, பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டு, யார் வேண்டுமானாலும் எடுக்கலாம், எதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்தலாம், அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் கேட்கமாட்டார்கள், சாமியும் கேட்காது என்று இருந்த நிலைமை மாறி, இன்றைக்கு சாமி கேட்காவிட்டாலும், அரசு கேட்கும், அதிகாரிகள் கேட்பார்கள் என்ற நிலைமைகளை உண்டாக்கியிருக்கிறார்கள். அதிலே நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன்.

இன்றைக்கு முன் அனுபவத்தைக் கொண்டு பார்க்கின்ற நேரத்தில், இந்தத் துறையிலே நம்பிக்கை உள்ளவர்கள்தான் இந்தத் துறையிலே ஈடுபட வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. சில நேரங்களிலே அறநிலையத் துறையிலே நம்பிக்கை இல்லாதவர்கள்கூட அந்தத் துறைக்குச் சென்று சம்பந்தமில்லாத காரியங்களில் ஈடுபடுகின்ற நிலையை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கு யார் யாருக்கு நம்பிக்கை இருக்கிறதோ, அவர்களே அந்த அறநிலையத் துறையிலே அந்தந்தக் காரியங்கள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றனவா என்று பார்க்கிறார்கள். அந்தப் பணிகள் சீராக நடக்கின்றனவா என்று பார்த்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. பணியாளர்கள் செய்ய வேண்டிய பணிகளை ஒழுங்காகச் செய்கின்றார்களா என்று பார்த்துக்கொள்ளும் அளவுக்கு இன்றைக்குப் பல்வேறு காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இந்தத் துறையை நல்ல முறையில் சீர்திருத்தம் செய்வதற்காக இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதற்காக நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன். இதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் சீர்திருத்தங்களைச் செய்வதற்கு இப்படிப்பட்ட திருத்தங்களை தேவையான நேரத்தில், அவசியமான நேரத்தில் கொண்டு வருவதை நான் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். அவர்கள் அதைத் தவறாகக் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டில் மிகப் பெரிய மடாலயங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு மடாதிபதிகள் இருக்கிறார்கள். அவர்கள் எந்தக் கணக்கையும் வைக்காத நிலையில் நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏதோ ஒரு குட்டி சாம்ராஜ்யத்தையே



நடத்துபவர்கள்போல் இருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் கூட நான்கைந்து மடாதிபதிகள் இருக்கிறார்கள். அந்த மடாதிபதிகளுக்கு அடங்கியிருக்கும் குட்டித் தம்பிரான்களும் இருக்கிறார்கள். சில அரசியல்வாதிகள் அவர்களை எதிர்ப்பதுபோல் பேசிவிட்டு, பிறகு அவர்களே அவர்களுக்கு குட்டித் தம்பிரான்களாக மாறிவிடுகிறார்கள். அந்த மடாதிபதிகள் செய்கின்ற காரியங்கள் குட்டித்தம்பிரான்கள் மூலமாகவே நடைபெறுகின்றன. அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அந்த அரசியல் குட்டித் தம்பிரான்களைக் கொஞ்சம் கவனித்துக்கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இந்தத் திருத்தத்தை ஆதரித்து அமைகிறேன். வணக்கம்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Presidential Act of 1976 removed all non-hereditary trustees from Temple Management Boards and now we are in the year 1980. So, four years have elapsed since the temples have had Trustees. I could have

(மு.பகல் 10-30)

understood if there was some difficulty for a period of six months or one year in deciding who should be the non-hereditary trustees attached to each temple. But the fact that the Hon. Minister is struggling for four years raises a doubt whether he has not been able to find persons in Tamil Nadu to become Trustees of our temples. I do not know if we have reached a stage where he does not find even 10,000 or 12,000 good people to come as Trustees of these temples. In fact, one year ago, when he came with a similar Bill to extend the period for appointment of Trustees, I pleaded with him that time was moving and that our temples, as was the case with other local institutions like Panchayats and Municipalities, could not function well without local people who could advise in the administration of temples. The hon. Member Thiru Eradha mentioned that after this Government took over, there was a revolutionary change in the administration of temples. I do not mind his making this claim because this is a claim that has been made by every Government that has taken over temple administration just after its election. But, those of us who go to temples and who believe in our Gods and in the Hindu practices are really concerned about one thing. We are not concerned whether it is the members of the DMK or the AIADMK who are Trustees of the temples. We are not even concerned whether they are members of the Congress,

whether they are believers in God, etc. What we are concerned about is that allowing these Temples to be run only by the bureaucracy, while it may have certain advantages in certain areas, is not a desirable practice and was not contemplated when the Hindu Religious and Charitable Endowments Act was originally passed in 1924 or 1925. My plea to the Hon. Minister is this. I have no recommendations to make regarding the appointment of trustees. I have already made my views very clear that people who believe in Hindu religion and follow Hindu practices have to be appointed as trustees. I would like to endorse the same plea by making a request to him. In view of the difficulty that he seems to be having because he seems to be struggling with lists for such a long period, I would tell him that there is one class of persons who may be considered suitable for appointment as trustees and that is the class of retired Government servants, whether they are retired officers or other retired Government servants. They are all accustomed to administration and they know the process of looking after temple properties, temple jewels, lands and real estate. I would, therefore, request that some of those persons who are experienced at least in the field of administration may be considered for appointment as trustees. My other plea is that women should also be considered in a large measure for appointment as trustees in our temples. It is not because I have any particular discriminatory liking for this particular class. But, I feel that the time has come for us to entrust this administration to them because I consider that they will take better care of the finances of the temples. There is one great difficulty that our establishments have to face and this is in spite of what the hon. Member Thiru Eradha has mentioned that the income of these temples has increased enormously over the past four years. I have not had the occasion to go through the Policy Note on Hindu Religious Endowments because that was not tabled for discussion. But I know for a fact that many of our temples own property in two distinct kinds, the first being agricultural lands and the second being real estate in the form of extensive properties surrounding the temples concerned.

As far as agricultural lands are concerned, our temples are not deriving any income from lands because of various moratoria and the relief Acts that have been promulgated by the Government to bring relief to the cultivating tenants and other people who are cultivating these lands. I will not go into the question whether such relief is required or not and that is not my intention. I agree



that such relief is required. But the time has come for the Hon. Minister to do something in consultation with all the interests concerned because I realise that this is a controversial issue. I have suggested in the past also that the time has come for us to have a complete re-thinking on whether temples will be able to derive any income at all from the agricultural lands owned by them. I would request that these lands be vested in an independent authority either in the same Government Department or in some other department and the entire value of the land taken over might be given to the temples in the form of bonds at the present market value and the income from such investments might be utilised by the temples. I fully anticipate that in the course of the next 10 to 15 years, owing to various socio-economic measures and pressure of population, our temples are not going to get any income from these lands. Let us accept it as something that is practically inevitable. With the Hon. the Minister for Revenue thinking of parcelling out lands into one acre and one and a half acres, we can easily realise what the agrarian economy is going to be like 10 or 12 years hence. I would, therefore, request that these lands be taken over by some agency in consultation with the authorities concerned and although the temple authorities are reluctant to part with their lands, they have to be persuaded to realise that there is practically no income from these lands. The Executive Officers are not able to withstand the local pressures and they are not able to take any sort of action to force the tenants to pay even the legitimate share that is due to the temples. I have already mentioned how in Cuddalore in the Tiruppapoliyur Devasthanam, where I was a Trustee for a few years, we had agricultural lands and the tenants—fairly rich and influential tenants refused to pay even Rs. 500 per annum for 3 or 4 acres of land. I, therefore, applied to the Board which was kind enough to give permission and we sold about 3-1/2 acres of land—the income from which was about Rs. 4,000 to Rs. 5,000 and which was not collected—for Rs. 3,50,000. We put it in Fixed Deposit, to be untouched by the Temple Executive Officers or Trustees and the Fixed Deposit is fetching an income of Rs. 30,000 for the temple. I know, in spite of his repeated pleadings, the temple lands are not going to be excluded from all the protective legislation that has been passed by the Government for the benefit of the cultivating tenants and, therefore, I would like to plead with the Hon. Minister to evolve a method, in consultation with the officers of the Hindu Religious and

[Thiru A. R. Damodaran] [1980 ஜூலை 23

Charitable Endowment Department, Commissioner and with various other interests so that some solution could be found to the problem of getting adequate income from these capital assets of the temples.

The next point is about temple jewels. In certain temples, especially where there are hereditary trustees/priests as in the case of Tiruvandhipuram temple in Cuddalore, I believe these are entrusted to the hereditary priests of the particular temple. I would like the Hon. Minister to prepare an accurate and descriptive list of all the jewels that are endowed to such temples and which are in the custody of the hereditary trustees/priests so that the Government may have a record of those jewels. I have heard that these jewels are in the custody of these hereditary trustees/priests and in these days of rising cost of gold and diamond, I believe that some degree of substitution may occur and the temples may lose the real worth of the jewels. We come across news of bronze idols being sold for lakhs of rupees and I do not know whether the Government have any machinery to prevent such thefts and to protect the temples. In South Arcot district in a temple 15 miles away from Cuddalore, I found the bronze, idols which were very valuable remaining unprotected and if I were inclined to have a criminal instinct, I could easily devise ways to steal that idol in

(முற்பகல் 10.40)

exactly 24 hours. I would request the Hon. Minister to ensure that a proper valuation of the jewels and idols in our temples is made and entered in our temple records. Duplicate records should also be kept in the Central Office, probably, in the form of photostat copies. We now have computers and we can use the computers to keep track of these ancient jewels and idols so that some protection may be given to temples.

Sir, I have only to end by requesting the Hon. Minister not to come forward with a Bill again in 1981 and say that they want to extend the time again. I do not realise what his difficulty is. He can make a beginning and if he appoints trustees for half-a-dozen temples everyday, he can probably finish the work in about three or four months. Probably, his preoccupation with Forests is taking a lot of his time. My only request is that these things have to be done urgently because I really believe. in spite of all that may be said, that temples without Trustees is not a good indication for the proper management of our temples and other institutions. Thank you.



1980 ஜூலை 23]

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவரவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் திருத்தச் சட்ட முன்வடிவு தவிர்க்க முடியாத ஒன்று, தேவையான ஒன்று என்ற அளவிலே அவை முன் வந்திருக்கிறது. இந்த மசோதாவைப் பொறுத்தவரை, ஆளுநர் ஆட்சியின்போது ஏற்கெனவே நியமனத்தில் இருந்து, பணியாற்றிக்கொண்டிருந்த அறங்காவலர்களுடைய பதவி முடித்து வைக்கப்பட்ட நிலையிலே இன்றைக்கு மீண்டும் புதிதாக நியமனம் செய்வதற்கு அரசுக்கு அவகாசம் தேவை என்ற அளவிலே இது வந்திருக்கிறது. ஆளுநர் ஆட்சியின்போது ஏற்கெனவே இருந்த அறங்காவலர்களுடைய பதவிக் காலத்தை முடித்து வைத்தது நியாயம் என்பதோடு மட்டுமல்ல, ஒன்றைத் தெளிவாகச் சொல்லவும் விரும்புகிறேன். ஆளுநர் ஆட்சி தேவையா இல்லையா என்பது வேறு. ஆனால் ஆளுநர் ஆட்சி வந்த பிறகு ஏற்கெனவே இருந்துகொண்டிருந்த அறங்காவலர்கள்தான் இருக்க வேண்டுமென்ற நிலையும், அதுவும் தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற நிலையும் இருப்பது சரியல்ல. ஆனால் கடந்த 3 ஆண்டுக் காலத்திலே எத்தனை ஆலயங்களுக்கு அறங்காவலர்கள் இல்லாமல் இருந்த நிலை இருந்தது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இரண்டரை ஆண்டுக் காலம் எத்தனை ஆலயங்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கவில்லையென்ற கணக்கை எடுக்கும்போது, வேறு நோக்கங்களுக்காக இதையெல்லாம் நிறுத்தி வைக்கவில்லையென்று அரசு வாதிட்டாலும்கூட, ஏதோ ஒரு காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்பது மட்டும் தெளிவாகிறது. அதிகமாக இதற்குள்ளே நான் போக விரும்பவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா: ஏதோ ஒரு காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி சொன்னார். என்ன காரணம் என்பது நாட்டுக்குத் தெரிய வேண்டும். இன்றைக்கு இருக்கிற நாட்டினுடைய நிலையும் அதுதான். அதற்கான காரணத்தை ஆளுநர் சொல்லாவிட்டாலும், திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி: நான் சொன்ன கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா சரியாகப் புரிந்துகொள்ளவில்லையென்று கருதுகிறேன். அவர் ஒருவரையும் நியமனம் செய்யவில்லை. ஏற்கெனவே இருந்த ஆளும் கட்சி அல்லது அரசு நியமனம் செய்தது என்ற நிலையில், அந்தக் கட்சி ஆட்சியிலே இல்லாத நிலையிலே, இடையிலே புதிதாக நியமனம் செய்ய விருப்பமில்லாத காரணத்தால், அறங்காவலர்களை நியமிக்காமல் இருந்தார்கள். ஆனால் சில

ஆலயங்கள் அறங்காவலர்களே இல்லாமல் இருந்தன. அத்தகைய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது, எதனால் வந்தது என்பதற்கான பதிலை இங்கே உறுப்பினர் சொல்ல வேண்டும். அதைத்தான் நான் கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களோ, மாண்புமிகு அமைச்சர் அவர்களோதான் அதற்கு பதில் சொல்ல வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : ஏதோ ஒரு காரணம் என்பதைப்பற்றி நான் முன்னாலேயே பேசும்போது மறைமுகமாகக் குறிப்பிட்டேன். 1972 ஆம் ஆண்டுக்குப் பிறகு எப்படிப்பட்ட அறங்காவலர்கள் ஆலயங்களில் இருந்தார்கள் என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி மிக மிக நன்றாக அறிந்திருந்தார்கள். இப்படிப்பட்டவர்களை எல்லாம் அறங்காவலர்களாக எப்படி நியமித்தீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் எல்லாம் சொல்லி, அவர்கள் கேட்ட பிறகு தான் நீக்கப்பட்டார்கள். வேறு காரணங்கள் இருப்பதாக கற்பனை பண்ணி நிச்சயமாகக் கருதத் தேவையில்லை. ஆகவே எதனால் நீக்கப்பட்டார்கள் என்கிற காரணம் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். நட்பின் காரணமாக வேண்டுமானால் அதை இப்போது விட்டுவிடலாம்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா இப்படி என்னிடம் வந்து சிக்கிக்கொள்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருந்தால், வேறு விதமாக நிச்சயமாக பதில் சொல்லியிருப்பார்கள். "எப்படிப்பட்ட அறங்காவலர்கள்" என்று எல்லாம் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அதற்கு முன்பு காங்கிரஸ் ஆட்சியில் எல்லாம் எப்படிப்பட்ட அறங்காவலர்கள் எல்லாம் தொடர்ந்து இருந்தார்கள் என்று பார்த்திருக்கிறோம். காங்கிரஸ் ஆட்சியைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் அறங்காவலர்களாக தொடர்ந்து இருந்திருக்கிறார்கள். அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும் அறங்காவலராக ஒருவரே தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம். அதற்கு நாம் இடம் கொடுத்திருக்கிறோம். அப்படி தொடர்ந்து அறங்காவலராக இருக்கின்றவருடைய பெர்சனல் ரிப்போர்ட் (Personal Report) )ஐ எடுத்துப் பார்ப்போமேயானால், எவ்வளவு வேகமாக இங்கே திரு. இராதா அவர்கள் சொல்ல வந்தார்களோ அந்த வேகத்தைக் குறைத்திருப்பார்கள். அறங்காவலர்களைப் பொறுத்தவரை,



இன்றைக்கு இருக்கிற நிலை என்ன என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏன் குறிப்பிட்ட 6 மாதங்களுக்குள்ளாக அறங்காவலர்களை நியமிக்கக் கூடாது என்று நான் அறிய விரும்புகிறேன். தேவையான ரெவின்யூ அதிகாரிகள் நமக்கு இல்லையா? தகுதியான ஆட்கள் இல்லையா? நம்மால் சிறப்பாகச் செய்ய முடியாதா? நாமே இன்றைக்கு இதையெல்லாம் பரிசீலித்து நியமிப்பது தான் பொருத்தம். ஆனால் இதற்காக எத்தனை ஆண்டுகள் எடுத்துக்கொண்டு போவது? தொடர்ந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்படாமல் இருந்திருந்தால், 5 ஆண்டுகளில் அதனுடைய ஆயுட்காலம் முடிந்ததும் மீண்டும் தேர்தலை சந்தித்திருக்க வேண்டும். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே தொடர்ந்து 2½ ஆண்டுக் காலம் ஆலயங்களில் அறங்காவலர்களே இல்லாமல் இருந்த நிலைமையை நாங்கள் எல்லாம் பார்த்தோம். நாங்கள் அதைப் பார்த்து சலிப்படைந்து கொண்டிருந்தோம். இந்த 2½ ஆண்டுக் காலத்திலே அரசினுடைய கண்களிலே நல்லவர்கள் ஒருவரும் அகப்படவில்லையென்று சொல்லுவார்களா? நான் சொல்லுகிறேன் அதுவல்ல காரணம். ஏதோ கோளாறு இருக்கிறது, அதனால் தான் சொல்கிறேன். இன்னொன்று. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கூட அன்றைக்கு இருந்தது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே வேறு கட்சிக்காரர்கள் யாரும் போட்டிக்கு வரவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே அனைத்து அறங்காவலர்களையும் நியமித்திருக்கலாம். வேறு கட்சிக்காரர்கள் போட்டிக்குக் கூட வரவில்லை. ஆனால் போட்டிக்கு வந்தவர்கள் யார் என்றால், ஏற்கெனவே அறங்காவலராக இருந்தவர்கள். அந்தப் பதவியிலிருந்து அனுபவித்தவர்கள், ருசி கண்டவர்கள், அல்லது வேறு காரணங்களுக்காக வாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டு கட்சியை மாற்றிக்கொண்டவர்கள் இப்படிப்பட்டவர்கள் அரசிடம் வரும்போதுதான் அரசுக்கு நிச்சயமாகச் சிக்கல் ஏற்பட்டிருக்க வேண்டும். அதுவல்ல காரணம் என்று அரசு சொன்னால், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆலயங்களின் நிர்வாகம் அறங்காவலர்களின் கையில் இல்லாமல் இதே நிலைமையில் போய்க்கொண்டிருப்பது நல்லதல்ல. அறங்காவலர்களாக இருந்தவர்களிடத்தில் இன்றையதினம் எவ்வளவு சொத்து சேர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். எவ்வளவு ஏக்கர் நிலத்தை வைத்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, அதன் மதிப்பு இன்றைக்கு எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதையும் அந்தச் சொத்துக்களை இன்று யார் அனுபவிக்கிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

[திரு. க. இராமமூர்த்தி] [1980 ஜுலை 23

மடாதிபதிகளைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட காரியங்களைச் செய்ய அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அப்படிப்பட்ட காரியங்களில் இறங்கவில்லை. அறங்காவலர்கள் என்ற பெயரால் அரசியல் கட்சிகளினுடைய ஆதரவைத் தேடி சிலர் தவறான காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். "செஞ்சியிலே ஆலயத்திற்குச் சொந்தமான நிலம் யார் யாரிடம் சிக்கிக்கொண்டிருக்கிறது என்கிற விஷயம்—என்னுடைய கேள்வி எழுந்த பிறகுதான்—பல பேர் நிலத்தைத் தவறாக அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்கிற விஷயம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது" என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற முறை பேசும்போது குறிப்பிட்டார்கள். அதுவும் "முழு விவரம் எனக்கு வரவில்லை, அந்த அளவுக்கு அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்" என்றும் சொன்னார்கள். அதுபோல் திண்டிவனத்திலேயும் ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்களை ஆலயத்தைச் சேர்ந்தவர்கள் தவறான முறையில் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை தயவுசெய்து பரிசீலனை செய்து பாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். நிழலைப் பார்த்து சண்டை போட்டுக்கொண்டிருப்பதை விட்டு விட்டு பிரத்தியட்ச நிலைக்கு வாருங்கள் என்று அழைக்கிறேன். ஆலயங்களை நிர்வகிக்கின்ற நிர்வாகப் பொறுப்பு அரசுக்கு இருப்பதால், பிரச்சினைகள் வரும்போதெல்லாம், அவர்கள் செய்தார்கள், இவர்கள் செய்தார்கள் என்கிற வாதத்தை மட்டுமே நம்பித் தப்பித்துக்கொள்வதாக எப்போதும் இருக்கக்கூடாது. சரியம் செய்ய வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. கடவுள் நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதோ இல்லையோ, அந்த வாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை. வேறு எந்தத் துறையிலாவது இதுபோல் நிர்வாகம் ஸ்தம்பித்திருக்கிறதா? இதன் விளைவு என்ன ஆகும்? அறங்காவலர்கள் என்கிற பேச்சு வந்ததால் தான் சொல்கிறேன். அறங்காவலர்களை நியமனம் செய்வதற்காக 6, 7 பேர் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து ஏதோ பெயரிட்டு அமைத்தார்கள். பிறகு அறங்காவலர்களை நியமிக்கின்றபோது அவர்களுக்கு ஒரு உறுதிமொழி கூட கொடுத்தார்கள். நீங்கள்தான் அறங்காவலர்களாக இருப்பீர்கள் என்று உறுதிமொழி தந்தார்கள். இவர்களையெல்லாம் அறங்காவலர்களாக நியமிப்பதா என்று சிலர் செக்கரட்டேரியட்டுக்கு வந்தார்கள். பிறகு அதில் 2 பேரை நீக்கிவிட்டு வேறு 2 பேரைப்



1980 ஜுலை 23] (திரு. க. இராமமூர்த்தி)

போட்டார்கள். முதலில் வெளியிட்ட லிஸ்டிலிருந்து 2 பேருடைய பெயரை அகற்றிவிட்டார்கள். தலையிட்டவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்? நிர்வாகத்திலே எதனால் இப்படிப்பட்ட போட்டிகள் எல்லாம் வருகின்றன என்பதை

(முற்பகல் 10-50)

நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதெல்லாம் இல்லாமல் தடுக்க முடியவில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, இந்தச் சொத்துக்கு, ஆண்டவனுடைய சொத்துக்கு உரிமை கொண்டாடும் ஆர்வம், இதைப் பங்கு போட்டுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எந்த அளவுக்கு மலிந்து கிடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள், இவர்கள் என்று யார் மீதோ பழி போட்டுக்கொண்டு போவதைவிட இந்த நிலைமைகளை உணர்ந்து உடனடியாக அறங்காவலர்களை நியமிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறியதுபோல, இந்த வேலையை இவ்வளவு குறைந்த காலத்திலே செய்து முடிக்க முடியுமா என்பது தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இது சுலபமாக இருக்கும் என்று கருதுகிறேன். காரணம் கடந்த 2½ ஆண்டு கால ஆட்சியிலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் மீண்டும் நியமிக்கப்படலாம். அவர்கள் தங்களுடைய பொறுப்பை செம்மையாக, நேர்மையாக, நாணயமாக நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று கருதினால், மீண்டும் அவர்களை நியமிக்கலாம். இதுவரை அறங்காவலர்கள் நியமனம் செய்யப்படாத ஆலயங்களைப் பொறுத்தவரையில்தான், கால அவகாசம் தேவை. ஆனால், என்னுடைய வேண்டுகோள், அந்தச் சொத்து, இந்தச் சொத்து என்று நாம் சண்டை போட்டுக்கொண்டிருக்கும்போது, கோயில் சொத்துக்களிலே கை வைப்பவர்களை நாம் தயவு செய்து ஒதுக்கிட வேண்டும். இங்கே இருந்தால் கெட்டவர்கள், அங்கே வந்தால் யோக்கியர்கள் என்ற நிலைமை இல்லாமல் இதனைச் செய்ய வேண்டும்.

இன்னொன்று, ஆலயங்களிலே இருக்கின்ற கோயில் நகைகளைப் பொறுத்த வரையில் சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நகைகளைப் புதுப்பிப்பதும், கோயில் கட்டிடங்களை மீண்டும் புதுப்பிப்பதும் மிகவும் அவசியம் என்று வல்லுநர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை வரும்போது, அதை தயவுசெய்து பகிரங்கப்படுத்த வேண்டும். 'இந்த ஆலயத்தின் நகைகள் மீண்டும் புதுப்பிக்கப்பட இருக்கிறது, புதுப்பிக்கப்போகிறோம். இன்னார் அந்தப் பணியைச் செய்யப்போகிறார்கள்' என்று விளம்பரப்படுத்த

வேண்டும். மக்கள் தெரிந்துகொள்ளட்டும். வெளியில் இருப்பவர்கள் யாருக்கும் இவைகள் தெரியாமல் இருப்பதால், இதிலே ஏதோ நடைபெறுகிறது என்று சந்தேகம் கொள்ளும் அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. ஏதாவது தவறுகள் நடைபெற்றுவிட்டால், மறுக்க முடியாத நிலையில் நாம் சிக்கிக் கொள்கிறோம். ஆகவே, அதுபற்றி விளம்பரம் செய்யவேண்டிய பொறுப்பு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அறங்காவலர்களை நியமிப்பது சம்பந்தமாக—ஏற்கெனவே இருந்தவர்களை நியமித்தாலும்கூட—பரிசீலனைக்கு என்று ஒரு ஆலோசனையைச் சொல்கிறேன். அவர்கள் கோயில் சொத்துக்களை அனுபவிப்பவர்களாகவோ அல்லது அவர்களது குடும்பத்தினரில் யாராவது அனுபவிப்பவர்களாகவோ இருந்தால், கண்டிப்பாக அவர்களை நியமிக்கக்கூடாது. யாரெல்லாம் சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு, ஆலயத்திற்குத் தரவேண்டியதைத் தராமல் இருக்கிறார்களோ, அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களைப் போடக்கூடாது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் ஆலயங்களுடைய சொத்துக்கள் பாதுகாக்கப்படும், ஆலயங்களின் நிர்வாகம் ஒழுங்குபடும் என்று சொல்லி ஆலயங்களை நெடுநாட்கள் நிர்வாகத்திற்கான அறங்காவலர்கள் இல்லாமல் விட்டுவிட வேண்டாம் என்று கேட்டு அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பரம்பரை அறங்காவலர்கள் இல்லாது நியமனம் பெறவேண்டிய அறங்காவலர்கள் இருக்கக்கூடிய கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்க ஓராண்டுகாலம் தேவை என்றும், அதுவரையில் இப்போது இருக்கக்கூடிய அதிகாரிகளின் ஆட்சி நடைபெற அனுமதி வேண்டியும் வந்திருக்கும் இந்தத் திருத்த மசோதாவை நான் எதிர்க்கிறேன். இப்படி மசோதா கொண்டு வருவது இது முதல் தடவை அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள், "இதற்கு முன்னாலும் பல தடவை வந்திருக்கிறது. அப்போதெல்லாம் இதே காரணம் சொல்லப்பட்டது. இப்போதும் அதே காரணம் தான். இனி அடுத்த தடவை கொண்டுவரும்போதும் இதே காரணம் சொல்லாமல் இருக்க வேண்டும்" என்றும் சொன்னார்கள். அறங்காவலர்களைக் கண்டுபிடிப்பதிலே இவ்வளவு கஷ்டம் இருக்கிறதா என்ற ஐயப்பாடும் எழுகிறது. 2½ ஆண்டுக் கால ஆட்சியிலே நல்ல அறங்காவலர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லையோ என்ற



ஐயப்பாடும் எழுகிறது. ஒரு ஆட்சி, வெறும் அதிகாரிகளை மட்டும் நம்பி நிர்வாகத்தை நடத்த முடியும் என்று நினைத்தால், அதைவிட தவறு வேறு இருக்க முடியாது. ஏதோ, இதற்கு முன்னால் இருந்த அரசு நியமித்த அறங்காவலர்கள் எல்லோரும் தவறு செய்துவிட்டார்கள், அல்லது அந்த அரசைச் சேர்ந்தவர்களை நியமித்துவிட்டார்கள், ஆகவே, நாங்கள் கலைத்துவிட்டோம், இனி நல்லவர்களை நியமிக்கப்போகிறோம் என்று சொல்லி கலைத்ததற்குப் பிறகு, இப்போது புதிதாக நியமிக்க ஏன் இவ்வளவு காலதாமதம்? தேடிப்பார்த்தோம், நல்லவர்களே கிடைக்கவில்லை என்று அரசு சொல்லுமோ என்ற ஐயப்பாடும் ஏற்படுகிறது. அறங்காவலர்களாக நியமிக்கப்படுகிறவர்கள் தவறு இழைத்தால், அவர்கள்மீது கிரிமினல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அரசு வந்த பிறகு நியமிக்கப்பட்டவர்களில் யார் யார் தவறு செய்தார்களோ அவர்கள் மீதும் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது இருக்கும் அதிகாரிகள் தவறு செய்யவில்லையா? முன்னால் இருந்தவர்கள் என்றால், இரண்டு பேரும் சேர்ந்தால்தான் தவறு செய்யலாம். பங்கு போட்டுக்கொள்வதிலே தகராறு ஏற்பட்டால், கண்டிப்பாக தவறு வெளியே வரும். இப்போது எந்தவிதமான கவலையும் இல்லாமல் தப்பு செய்கிறார்கள். இப்போது தான் மிகவும் அதிக அளவு தப்பு நடக்கிறது. முன்பெல்லாம் ஒருவர் தவறு செய்தார் என்றால், எவ்வளவுதான் மறைத்துவைத்தாலும், 1 வருஷம், 2 வருஷத்திற்கு உள்ளே அது வெளியே வரும். இப்போது ஒரேயொரு ஆளாக இருப்பதால், செய்தி வெளியே வருவதில்லை. நடக்கும் தவறுகளை எடுத்துச் சொல்ல வேறு ஆட்கள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசும்போது மிகவும் நாகரிகமாக—எந்த ஒரு கட்சியின் பெயரையும் சொல்லாமல்—இதற்கு முன்னால் இருந்தவர்கள் இப்படித் தவறுகள் செய்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். நான் அவருடைய பண்பைப் பாராட்டுகிறேன். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்தாலும், தவறு தவறுதான். அந்த முறையிலே நாங்கள் அவர்களுடைய நடவடிக்கைகளை எடுத்து வெளியிட்டிருக்கிறோமே தவிர, எல்லாக் கட்சியிலும் நல்லவர்களும் இருக்கிறார்கள், தீயவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, தீமை மட்டும் ஒரு பக்கத்துக்கு என்றும், நன்மை ஒரு பக்கத்துக்கு என்றும் ஒதுக்குகிற சூழ்நிலை இல்லை என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேநேரத்தில், அறங்காவலர்களை நியமிப்பதிலே இப்போது ஓராண்டு கால அவகாசம் கேட்டாலும்கூட, தீவிர முயற்சி எடுத்து ஒரு மாத காலத்துக்குள் அவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. ம. சங்கரலிங்கம்) [ 1980 ஜூலை 23

திருட்டு போனது என்றெல்லாம் சொன்னார்கள். இப்போது கோயில்களிலே நிறைய திருட்டு போகிறது. விக்கிரகங்கள் திருடப்படுகின்றன. இதற்கெல்லாம், இப்போது உள்ள ஆட்சிக்காரர்கள் தான் காரணம் என்று நான் சொல்லவில்லை. சமூக துரோகிகள், விரோதிகள், சமுதாயத்தில் சுயநலம் படைத்தவர்கள் எல்லா காலகட்டத்திலும் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இருக்கவேண்டிய இடத்திலே பத்திரமாக இருக்கிறார்கள். எங்கே ஆட்சி இருக்கிறதோ அங்கே அவர்கள் இருக்கிறார்கள். திருடப் போகும்போது திருடன் எல்லா கதவுகளையும் திறந்து வைத்துவிட்டு, கதவுக்குப் பக்கத்திலே இருந்து திருடினால் உடனடியாக ஓடி தப்பித்துவிடலாம் என்று கதவுக்குப் பக்கத்திலே இருந்து திருடுவது போல அவர்களும் இருக்கவேண்டிய இடத்திலே இருக்கிறார்கள். மொத்தத்தில் பார்த்தால் இப்போது திருட்டு கூடித்தான் இருக்கிறது, குறையவில்லை. அறங்காவலர்களை நியமிப்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை காட்டுகிறது என்று சொல்வதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நடைமுறையில் அந்த அக்கறை காட்டப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. முன்னால் இருந்த அரசு அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களை நியமித்தார்கள் என்று சொன்னார்கள். அப்படியானால், இந்த அரசு அதைச் செய்யாமல் இருந்தால் நான் பாராட்டுகிறேன். ஆனால், இவர்கள் அதையே செய்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கன்னியாகுமரி மாவட்ட அறங்காவலர், ஒரு மாவட்டத்தில் உள்ள கோயில்களுக்கு எல்லாம் சேர்த்து அறங்காவலராக இருப்பவர் யார் என்றால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கன்னியாகுமரி மாவட்ட அவைத் தலைவர். இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? நாங்கள் செய்தது தவறு என்றும், அதனால்தான் நாங்கள் இந்தப் பக்கம் இருக்கிறோம் என்றும் ஆளும் கட்சியினர் சொல்கிறார்கள். அவர்களும் இந்தப் பக்கம் வரவேண்டுமென்றால், இதைச் செய்யட்டும். அடுத்தவர்கள்மீது குற்றஞ்சொல்வது சிறப்புடையதல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஒரு கோயிலுக்கு ஒரு தர்மகர்த்தா நியமிக்கப்பட வேண்டும் என்று சொன்னால், அறங்காவலர் துறை அதிகாரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். அதை அவர் பரிசீலனை செய்து இங்கே இருக்கக்கூடிய ஆணையருக்கு அனுப்புவார்கள். ஆணையர் தான் நியமிக்க வேண்டும். இப்போது 'ஏரியா கமிட்டி' என்று போட்டு, அதில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களை நியமித்து, அவர்களை வைத்துச் சிபாரிசு செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். முன்னால் இருந்த முறை ஒரு சின்ன ஓட்டையாக இருந்தது



1980 ஜூலை 23] (திரு. ம. சங்கரலிங்கம்)

என்றால், இப்போது இருக்கும் முறை ஒரு பெரிய ஆறாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

ஓட்டையிலேயே இவ்வளவு பேர் நுழைந்து வந்துவிட்டார்களென்றால், இப்போது இந்த ஆட்சி வந்து அதை ஆறாக மாற்றி, அதிலும் ஓடம் போட்டு ஏறிக் கொள்ளுங்கள் என்றால், அதன் மூலம் எவ்வளவு தவறு நடக்கும் என்பதைத் தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் நெருக்கடி நிலை அமுலில் இருந்தபோதுதான் எல்லா அறங்காவல் குழுக்களையும் கலைத்தார்கள். ஒரே கட்சிக்காரர்கள் அறங்காவலர்க் குழுக்களில் பெரும்பகுதியாக இருக்கிறார்கள் என்ற காரணத்தைச் சொல்லி அப்போது கலைத்தார்கள். அதற்குப் பிறகு இந்த ஆட்சி 2½ ஆண்டுக் காலம் நடைபெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் இந்தக் கோயில்களுக்கு நியமிக்கப்பட வேண்டிய அறங்காவலர்கள் குழுவை நியமிப்பதில் இன்னும் காலம் தாழ்த்துவது எந்த வகையிலும் சரியல்ல. கொஞ்சம் காலம் தாழ்த்துவதன் மூலம் நடுநிலையாளர்களையும் அற உணர்வு உள்ளவர்களையும் கட்சி சார்பற்றவர்களையும் நியமிக்கத்தான் இந்தக் காலதாமதம் என்று சொல்லுகிறார்கள். எனக்கு இருக்கிற சந்தேகம் என்னவென்றால், இப்படிச் செய்வதன் மூலம் தங்கள் கட்சி ஆட்களையே நடுநிலையாளர்கள் என்றும் அற உணர்வுள்ளவர்கள் என்றும் பொதுமக்கள் நினைக்கக் கொஞ்ச கால அவகாசம் கொடுக்கிறார்களோ என்பதுதான். ஏனென்றால் உண்மையிலேயே நடுநிலையாளர்களையும் அற உணர்வுள்ளவர்களையும் கட்சி சார்பற்றவர்களையும் நியமிப்பதற்கு இவ்வளவு காலம் தேவையில்லை.

இந்த அவையில் முன்பே நான் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறேன். அதை மீண்டும் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் தவிர்த்த மற்ற மாவட்டங்களில் உள்ள கோயில்களுக்கு மட்டும்தான் அறநிலையத் துறை மூலம் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஆங்காங்கே உள்ள கிராமங்களில் உள்ள மக்கள் சமுதாயக் கோயில்கள் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளுக்கு அறநிலையத் துறை அறங்காவலர் குழுக்களை நியமிப்பதில்லை. மாறாக அந்த கிராம மக்களே தேர்தல் மூலம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை

அறங்காவலர் குழுவைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்கள்தான் அதன் நிருவாகத்தை நடத்துவார்கள். இதற்காக அவர்களெல்லாம் கோர்ட்டுக்குப் போய் ஸ்கீம் வாங்கி வைத்திருக்கிறார்கள். அல்லது அவர்களுக்குள்ளே ஒரு உடன்பாடு செய்து கொண்டு அந்தக் கோயில்களையெல்லாம் நிர்வகித்து வருகிறார்கள். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அந்தக் கோயில்களுக்குச் சொத்து இருந்தால் அல்லது கோயில்களுக்கு வருமானம் இருந்தால், அவர்கள் அறநிலையப் பாதுகாப்புத் துறையின் ஆடிட் பிரிவுக்குத் தகவல் கொடுத்து அவர்கள் வந்து அதன் கணக்குகளை ஆடிட் செய்து, அதற்கான ஆடிட் பீசையும் அந்தக் கோயில்களே கொடுத்து, முறையான நிர்வாகத்தைச் செய்து வந்தார்கள். ஆனால் கடந்த நெருக்கடி கால நேரத்தில் அத்தகைய சமுதாயக் கோயில்களைக்கூட அரசே எடுத்துக்கொண்டு அந்தக் கோயில்களுக்கு 'ஃபிட் பர்சன்'களை நியமித்து அதுபற்றிய விவரங்களை அரசு தயாரித்து அக்கோயில்களையெல்லாம் மீண்டும் அந்தக் கிராமத்தைச் சார்ந்தவர்களிடமே ஒப்படைத்து பழையபடியே தேர்தல்மூலம் அக்கோயில்களை நிர்வகிக்கும் முறையை உருவாக்க வேண்டும் என்று கேட்டு அது சம்பந்தமான எல்லா விவரங்களையும் முன்பே அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இந்த அவையிலேயே கொடுத்தேன். குறிப்பாக என்னுடைய ஊரான தேரேகால்புதூர் கிராமத்திலேயே இப்படிப்பட்ட சமுதாயக் கோயிலை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் அப்போது நான் குறிப்பிட்டேன். அதுபற்றிய விவரங்களையும் விளக்கமாக எழுதிக் கொடுத்தேன். அந்தக் கோயிலுக்கு ஃபிட் பர்சன் போட்டதால் பூசைகூட சரியாக நடைபெறுவதில்லை. பூசாரியைக் கேட்டால், "எனக்கு நெல் கொடுக்கவில்லை, சம்பளம் கொடுக்கவில்லை" என்று சொல்கிறார். "கோயிலைத் திறந்து வைத்துக்கொண்டு நான் செய்ய முடியும்? தண்ணீர் ஊற்றிவிட்டு, சும்மா பூவைப் போட்டுவிட்டுப் போகிறேன்" என்று அந்தப் பூசாரி சொல்கிறார். இந்தச் செய்தியையும் அப்போது அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னதன் காரணமாக இது குறித்து விசாரிக்க ஒரு அதிகாரி கிராமத்திற்கு வந்தார். என்னிடத்திலேயே அதுகுறித்து விசாரித்தார். நான் பூசாரியிடமும் மற்றவர்களிடமும் போய்க் கேளுங்கள் என்று சொன்னேன். ஆனால் என்ன நடந்தது என்று பார்த்தால், இன்னமும் அதே ஃபிட் பர்சன்தான் அந்தக் கோயிலின் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறார். நிர்வாகத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. எனவே சமுதாய மக்களே கூடி நிலைமையை மாற்றவில்லை என்றால் கோர்ட்டுக்குப் போவதாக சுமார் 2 பாதங்



களுக்கு முன்பு ஒரு நோட்டீஸ் விட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தான் அறங்காவல் துறை செயல்படுகிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிடும்போது மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தவறாகக் கருதக்கூடாது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து தேவஸ்வங்களுக்குமாக முன்னே ஒரே ஒரு டிரஸ்ட் போர்டுதான் இருந்தது. 536 கோயில்கள் அப்போது திருவாங்கூர் தேவோஸ்வத்திலிருந்து தமிழ் நாட்டுக்குப் பிரிந்து வந்தன. அதற்காக அவர்கள் நமது அரசுக்கு ஆண்டுதோறும் 13½ லட்சம் ரூபாய் தருகிறார்கள். இப்போது 40 லட்சம் ரூபாய் கொடுத்தாலும் போதாது. 1956-ல் 13½ லட்சம் ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. அப்போது ரூபாயின் மதிப்பு வேறு. இப்போது ரூபாய் மதிப்பு 25 காசுக்கும் கீழே போய்விட்டது. 4 மடங்கு அதிகமான தொகை இப்போது தேவை. அது வேறு பிரச்சினை. அப்போது 3 பேரைக் கொண்ட ஒரு அறங்காவலர் குழு நியமிக்கப்பட்டது. அதற்குப் பிறகு செங்கோட்டைப் பகுதியிலிருந்தும் ஒரு அறங்காவலரை நியமிக்க வேண்டும் என்று இந்த அவையிலேயே ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டு, பிறகு அந்த தேவஸ்வம் போர்டின் உறுப்பினர் எண்ணிக்கை 5 ஆக உயர்த்தப்பட்டது. அப்படி அமைக்கப்பட்ட குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும்போது, இந்த அரசு ஒரு கிருஸ்தவரை நியமித்தார், அது குறித்து கோர்ட்டுக்குப் போய் பிறகு மாற்றப்பட்டது. அதற்கு என்ன காரணம் என்றால், அதற்கான ஏரியா கமிட்டி அவருடைய பெயரைச் சிபாரிசு செய்திருந்ததுதான். இதற்கு முன்பெல்லாம் அறங்காவலர் குழுவில் இடம் பெற விரும்புகிறவர்கள் கலெக்டருக்கு விண்ணப்பம் போட வேண்டும். கலெக்டர் அந்த விண்ணப்பங்களையெல்லாம் பரிசீலனை செய்து, பிறகு சிபாரிசு செய்வார். அந்தச் சிபாரிசுகளை ஒரு 'பேனலாக' அரசாங்கத்திற்கு அனுப்பி வைப்பார். அந்த பேனலில் உள்ளவர்களில் 3 பேரை அரசு தேர்ந்தெடுத்து அறங்காவலர் குழுவிற்கு நியமனம் செய்யும். இப்போது ஏரியா கமிட்டி இந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறது. அந்த ஏரியா கமிட்டியின் தலைவர் மாவட்ட அண்ணா தி.மு.க. அவைத் தலைவர். அவர் தலைமையிலுள்ள அந்தக் குழு ஒரு கிருஸ்தவரின் பெயரை அறங்காவலர் பதவிக்குச் சிபாரிசு செய்திருக்கிறது. அவரும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார். பின்னாலே அது கோர்ட்டுக்குப் போய் அதிலே ஒரு ஸ்டே வாங்கி, பிறகு அவரே ராஜிநாமா செய்துவிட்டார். அதுகுறித்து நானே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். ஆனால் அதற்கு முன்பாகவே அவர்

(திரு. இராம. வீரப்பன்) [ 1980 ஜூலை 23

ராஜினாமா செய்துவிட்டார். பின்னால் எல்லோரும் சேர்ந்து -குறை சொல்லி அந்த முறை மாற்றப்பட்டது. முன்பெல்லாம் கோயிலுக்கு நிறைய சொத்துக்களை எழுதி வைத்தார்கள். இப்போது யாராவது எழுதி வைக்கிறார்களா என்று பார்த்தால், எங்கேயும் இல்லை. அப்போதெல்லாம் நாட்டில் அதிகமான மருத்துவ வளர்ச்சியில்லை. காலரா போன்ற நோய் வந்தால் நூற்றுக்கணக்கானவர்கள் இறந்து ஊரே காலியாகிவிடும். பொதுமக்கள் எல்லோரும் பயந்து ஊரை விட்டு ஓடுவார்கள். சொத்து வைத்திருப்பவர்கள், இதற்குக் காரணம் ஆண்டவனுடைய கோபம் என்று கருதி, தங்களின் சொத்துக்களையெல்லாம் கோயிலுக்கு எழுதி வைத்துவிடுகிறார்கள். அப்படி விஞ்ஞான வளர்ச்சியில்லாத. நிலையாமை பற்றிய அச்ச உணர்வு இருந்த காலத்தில் உச்ச கட்டத்தில் மக்கள் தங்கள் சொத்துக்களையெல்லாம் பொதுக் காரியத்திற்கு எழுதி வைத்தார்கள். ஆனால் இப்போதிருக்கிற சமுதாய வளர்ச்சிகளுக்கும் நிலைமைகளுக்கும் ஏற்ப கோயில்களின் பொருளாதாரத்தை நாம் பயன்படுத்த முன்வர வேண்டும். ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி அளிக்க, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அல்லது தொடர்புள்ளவர்களுக்கு உதவி செய்யக்கூடிய வகையில் நாம் விதிமுறைகளை மாற்றியமைக்க வேண்டும். முன்பெல்லாம் கோயில்களில் ஏழைகளுக்குச் சாப்பாடு போட்டோம். இப்போது காலையில் 7 முதல் 8 மணி வரை தேவாரம் ஓதிவிட்டு கல்லூரிக்குப் போகும் மாணவர்களுக்கு மாதம் 200 ரூபாய் உதவித் தொகை அளிப்பது என்று கொண்டு வரலாம். இப்படி சமுதாய மாற்றத்திற்குத் தகுந்தாற் போல் கோயில்களிலிருந்து செய்யும் உதவிகளின் தன்மையை மாற்றியமைக்க நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய பொதுச் சொத்துக்களை நாட்டு வளர்ச்சிக்காகவும், சமுதாய வளர்ச்சிக்காகவும் பயன்படுத்துகிற உணர்வு நமக்கு ஏற்பட வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, ஆட்சியில் உள்ளவர்கள் இது குறித்து ஒரு விரிவான சட்டத்தைக் கொண்டுவர இருப்பதால், அதில் இதற்கெல்லாம் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோயில் அறங்காவலர் குழுக்களில் கட்சி சார்பற்றவர்களை நியமியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைச் சொல்லும்போது எங்களைப் பார்த்து "நீங்கள் கட்சிக்காரர்களை நியமிக்கவில்லையா ?" என்று கேட்கக் கூடாது. நாங்கள் செய்ததை நீங்களும் செய்யாதீர்கள் என்றுதான் சொல்ல முன்வருகிறேன். நீங்களாவது உண்மையிலேயே கட்சி சார்பற்றவர்களை நியமிக்க வழிகாட்டுங்கள் என்று சொல்லி அதற்கு இந்தக் காலதாமதம் தேவையில்லை என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.



1980 ஜூலை 23]

*மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்து சமய அறக் கட்டளை திருத்தச் சட்ட முன்வடிவுமீது ஆளும் தரப்பிலிருந்து ஒரு உறுப்பினரும், எதிர் வரிசையிலிருந்து மூன்று உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் இந்தச் சட்டத் திருத்த முன்வடிவை அறிமுகம் செய்கிறபோது, இந்தச் சட்டத் திருத்த முன்வடிவு விவாதத்திற்கு உரியதாக ஆகாமல், விரைவிலேயே நிறைவேற்றப்படுமென்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் இந்த ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்தின் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது மேலவையிலே விவாதம் இல்லையென்ற காரணத்தாலோ என்னவோ— இனிமேல் இருக்குமோ என்னவோ தெரியாது—இங்கே பேசிய உறுப்பினர்கள் இதையே ஒரு கொள்கை விளக்கக் குறிப்பின்மீது நடைபெறும் விவாதமாக ஆக்கியிருப்பதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு மேலவைத் தலைவரவர்கள் உறுப்பினர்களுக்குப் பதில் அளிக்க வேண்டிய மிக முக்கியமான கடமையை எனக்கு உருவாக்கி இருப்பதனால், சிறிது கால அவகாசம் எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தக் கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லவில்லையானால், இந்த மன்றத்திலே எடுத்து வைக்கவில்லையானால் பல உண்மைகள் இந்த மன்றத்திற்கும், நாட்டு மக்களுக்கும் தெரியாமல் போயிருக்கும். ஆகவே அந்த உண்மைகளையெல்லாம், தொடர்பான சம்பவங்களையெல்லாம் இவற்றுக்கு யார் காரணம், ஏன் இவையெல்லாம் நடைபெறுகின்றன, இப்படி ஒவ்வொரு ஆண்டும் இந்த மன்றத்திலே ஒரு ஆண்டு நீட்டிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்கும் அவல நிலைக்கு என்னை ஆளாக்கியிருப்பது யார் என்பதை எடுத்துச் சொல்வதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-10)

திருத்தச் சட்டமுன்வடிவு என்ற பெயரைப் பார்க்கிறபோது, இத்திருத்தம் சட்டத்திலே இருக்கின்ற பல்வேறு விதிகளை மாற்றுவதற்காகவோ, திருத்துவதற்காகவோ கொண்டு வந்தது போலத் தோன்றும். ஆனால் இந்தத் திருத்தச் சட்டத்தினுடைய ஒரே விதி 1980 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதியோடு முடிகிற காலத்தை 1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி வரை நீட்டிக்க வேண்டும் என்கிற ஒரே வேண்டுகோள்தான். காங்கிரஸ் கட்சியைச்

[திரு. இராம. வீரப்பன்] [1980 ஜூலை 23

சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஜாக்கிரதையாகப் பேசினார்கள். இரண்டரை ஆண்டுக் காலமாக ஏன் நியமிக்கவில்லை என்று கேட்டார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள், குறைவான காலத்தைக் கொடுக்க விரும்பாமல் 1976-லிருந்து இத்தனை ஆண்டுகளில் ஏன் நியமிக்கவில்லை என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கூட ஏன் நியமிக்கவில்லை, எதற்காக நீட்டிக் கொண்டேயிருக்கிறார்கள் என்று கேட்டார்கள்.

பல பேர் இதனுடைய முன் சரித்திரத்தை மறந்துவிட்டார்கள். அதனாலே நினைவுபடுத்த விரும்புகிறேன். அரசாங்கத்திலே முறையாக நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள் தமிழகத்திலே இருந்தார்கள். அன்றைக்கு ஆளுகிற பொறுப்பிலே இருந்த அரசாலே நியமிக்கப்பட்டவர்கள் அவர்கள். அவர்கள் யார், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், எந்தத் தகுதியைப் பெற்றிருந்தார்கள் என்கிற விவாதத்திற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தாலே நியமிக்கப்பட்டவர்கள் அன்றைக்கு இருந்தார்கள். எவ்வளவு நிலையங்களுக்கு இருந்தார்கள் என்பதை மனத்திலே வைத்துக்கொண்டிருந்தால்தான், இதை மீண்டும் சீர்படுத்த எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை உணர்ந்துகொள்ள முடியும். தமிழகத்திலே இந்து சமய அறநிலையத் துறையின் பொறுப்பில் இருக்கிற கோயில்கள் மாத்திரம் 26,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதிலே 110, 120 கோயில்களுக்கு அரசாங்கமே அறங்காவலரை நியமிக்கிறது. 120, 130 கோயில்களுக்கு இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் நியமிக்கிறார். சில ஆயிரம் கோயில்களுக்குத் துணை ஆணையாளர் நியமிக்கிறார். சில ஆயிரம் கோயில்களுக்கு உதவி ஆணையாளர் நியமிக்கிறார். இப்படி 26,000 கோயில்களுக்கு நியமிக்கப்பட்டாக வேண்டும். அதற்கு முன்னாலே எப்படி அமைந்திருந்தது என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தெரிவித்தார்கள். அதே அமைப்பு இன்றைக்கும் இருக்கிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே எந்த மாற்றமும் இல்லை. ஆனால் 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் தேதியன்று, இந்திய துணைக் கண்டத்தினுடைய குடியரசுத் தலைவர் பிறப்பித்த ஆணையால் 26,000 கோயில்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் நியமித்த அறங்காவலர்கள் ஒரே இரவில், ஒரே நாளில் தூக்கி எறியப்பட்டார்கள், அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டார்கள். இது மிகச் சுலபம். நான் சட்டப் பேரவையிலே கூட சொன்னேன். ஜப்பான் நகரத்திலே மிகப் பெரிய



1980 ஜூலை 23] [திரு. இராம. வீரப்பன்]

நகரத்தை அழிக்க ஒரு குண்டு போதும், ஒரு வினாடி போதும். ஆனால் அந்த நகரத்தை உருவாக்க ஒரு வினாடியிலே முடியாது. ஒருவேளை, மயன் மாளிகை எழுப்பினான் என்று பாரதத்திலே சொல்லுகிறார்களே, அதைப்போல ஒருவன் வந்தால் அப்படி நடக்குமோ என்னவோ எனக்குத் தெரியாது. ஒரேயொரு ஆணையால் 26,000 கோயில்களில் இருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அரசால் நியமிக்கப்பட்ட அறங்காவலர்களை நீக்கினார்கள். அதை மறந்துவிட்டு விவாதத்தைத் தொடர்ந்தால், அல்லது மற்றவர்கள் மறந்துவிட வேண்டுமென்று யாராவது விரும்பினால், உண்மையை மறைத்த குற்றத்திற்கு ஆளாவோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1976 ஆம் ஆண்டிலே நீக்கினார்கள். 1977 மே மாதம் 31 ஆம் தேதி முடிய ஓராண்டுக் காலம் அவர்கள் ஆட்சியிலே இருந்தார்கள்—தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல, குடியரசுத் தலைவர் ஆட்சி. அந்த ஆட்சி எப்படி நடந்தது, யார் நடத்தினார்கள், யார் ஆட்டி வைத்தார்கள் என்பதைப்பற்றி நடந்தது, யார் நடத்தினார்கள், யார் ஆட்சிவைத்தார்கள் என்பதைப்பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அந்த ஓராண்டுக் காலத்திலே ஒரு துரும்பைக் கூட அவர்கள் எடுத்து வைக்கவில்லை. 26,000 கோயில்களில் இருந்த அறங்காவலர்களை நீக்கிவிட்டு மீண்டும் "ஃபிட் பேர்சன்" என்று சொல்லக்கூடிய தக்கார்களிடம் தூக்கி ஒப்படைத்தார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கூட வருத்தத்தோடு தெரிவித்துக் குறைபட்டுக் கொண்டார்கள். அதுதான் இந்த நாட்டிலே இருக்கிற ஜனநாயகக் கொடுமை. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு ஒருவரிடத்திலே கொடுப்பது என்பது அரசியல் சட்டத்தின்படி ஏற்றுக்கொண்டிருக்கிற மரபாகிவிட்டது.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிற காரணத்தாலே சொல்லுகிறேன், நியமனம் செய்யப்பட்டவர்களைத் தூக்கியெறிந்துவிட்ட சங்கடம் இருக்கிறபோது, தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவரவர்களை ஒரே சட்டத்தின் மூலமாக ஒரே நாளில் அ.தி.மு.க. அரசு தூக்கி யெறிந்து இருக்கிறது, அதையும் நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களைக் கலைத்ததற்குப் பிறகு அவர்களை நீக்கினார்கள். இவர்களைப் பார்த்து அவர்கள் கற்றுக்கொண்டார்களா ? அல்லது அவர்களைப் பார்த்து இவர்கள் கற்றுக்கொண்டார்களா ?

**திரு. க. இராமமூர்த்தி :** இரண்டு பேரும் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஜனநாயக நாட்டிலே நடைபெற்று முடிந்த, நடைபெறுகிற சம்பவங்களை எடுத்துச் சொல்லுகிறபோது, அவர்கள் இவ்வளவு நேரம் உள்நோக்கம் கற்பித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். நான் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். எங்களுக்கு இருக்கிற தாய்மையான உணர்வை நம்ப மறுத்துப் பேசிக்கொண்டிருந்தார்கள், குற்றச் சாட்டுகளைச் சொன்னார்கள். கேட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் உலகத்திற்கெல்லாம் தெரிந்த ஒரு விஷயத்தைச் சொல்லுகிறபோது, அவர்கள் அவசரப்படத் தேவையில்லை. இதை யார் ஆரம்பித்து வைத்தார்கள், எத்தனை ஆண்டுக் காலத்திற்குப் பிறகு ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள், ஏன் ஆரம்பித்திருக்கிறார்கள், அதற்குக் காரணம் இருக்கிறதா என்று பல்வேறு அடிப்படையில் விவாதத்திற்குள்ளே நான் நுழையவில்லை. ஆனால் இந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளே ஏன் நியமனம் செய்யவில்லை என்று கேட்கிறார்கள். அவர்கள் ஆட்சியில் இருந்த ஓராண்டுக் காலத்திற்குள் உத்தரவுகளைப் போட்டு மீண்டும் நிரப்பியிருந்தால் நாங்கள் வந்து ஒன்றும் செய்திருக்கமாட்டோம். ஆனால் இப்போது எங்களைக் கேட்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதிதான் பதவியை ஏற்றோம். அதற்கு முன்னாலே இருந்த பிரச்சினைகள் என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். 9 ஆண்டுக் காலம் ஒரு கட்சி ஆட்சி செய்தது. அதற்குப் பிறகு ஒன்னேகால் ஆண்டுக் காலம் ஒரு கட்சியினுடைய ஆதிக்கத்தின் கீழே இருந்த ஆளுநரின் ஆட்சி நடைபெற்றது. 1977 மார்ச் திங்கள் முதல் ஜூன் முடிய 3 மாத காலத்திலே இன்னொரு ஆட்சி ஏற்பட்டது. ஆகவே இத்தனை ஆட்சிக்குப் பிறகுதான் நாங்கள் வந்து சேர்ந்தோம். எங்களுக்கு முன்னாலே இருந்த பிரச்சினைகள் என்னென்ன என்பது எல்லோருக்கும் தெரியும். அதிலும் குறிப்பாக அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில், முதலமைச்சர் அவர்களே பொறுப்பை வைத்திருந்தார்கள். ஏனென்றால் இது ஒரு பெரிய விவாதப் பிரச்சினையாக ஆகிவிட்டது. 26,000 கோயில்களில் உள்ள அறங்காவலர்களை என்ன காரணத்திற்காக நீக்கினார்கள் என்பதை அரசு ஆராய்ந்து கண்டறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. துறையில் உள்ளவர்களைக் கூப்பிட்டுக் கேட்டால், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமித்திருப்பதாகச் சொன்னார்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசால் நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள் ஊழல்களைச் செய்திருக்கிறார்கள், குற்றங்களைச் செய்திருக்



(முற்பகல் 11-20)

கிறார்கள், தவறுகளைச் செய்திருக்கிறார்கள். ஆகவே அதை விசாரிக்க திரு. பத்மநாபன் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியின் தலைமையில் தனி நபர் குழு ஒன்றை நியமித்திருப்பதாகவும் அவர் அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார் என்பதாகவும் தகவல் தெரிவித்தார்கள். அதை முடித்து அறிக்கையைத் தாருங்கள் என்று கேட்டு அறிக்கையை வாங்கிப் பார்த்தோம். அந்த அறிக்கையிலே பல்வேறு விவரங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் அவர்கள் "தவறு செய்தார்கள் யாராக இருந்தாலும் தண்டியுங்கள்" என்று கூறினார்கள். அப்படி தண்டிக்க இன்றைக்குள்ள சட்டத்திலே வழிவகை இல்லை. அதனால்தானோ என்னவோ துணிந்து தவறுகளைச் செய்திருக்கிறார்கள். நஷ்டத்திற்குள்ளான ரூபாயை வசூல் செய்யத்தான் முடியும். ஆகவே வேறு விதிகளின் கீழ்தான் வழக்குப் போட வேண்டிய அவசியம் வருகிறது. தவறு செய்தவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக சிலவற்றைச் செய்திருக்கிறார்கள். ஆனால் கூறப்பட்ட புகார்கள் மீது அன்றைக்கு இருந்த ஆளுநர் ஆட்சி அவர்களை நீக்கியது. ஆகவேதான் நாங்கள் சூடு கண்ட பூனையைப் போல் ஜாக்கிரதையாக உள்ளே நுழைய ஆரம்பித்தோம்.

இது ஏன்? இந்த துறையிலே இவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றனவே, இதற்குக் காரணம் என்ன? இப்போது புகார்கள் வருகின்றனவே, அவை உண்மையா? அதற்கு அடிப்படை இருக்கிறதா? இவைகளைப் பற்றியெல்லாம் தெரிந்து கொண்டு அதற்குமேலே நாங்கள் அறங்காவலர்களை நியமிக்க வேண்டுமென்கின்ற ஒரு முயற்சியிலே ஈடுபட்டோம். அப்படி ஈடுபடுகிறபோது, நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்கின்றபோது, முன்னாலே அதிகாரிகளே ஆய்வு செய்து அறிக்கை அனுப்பி, அந்த அதிகாரிகளே நிர்வகித்து, அவர்களே நியமனம் செய்து வந்தார்கள் என்று கூறினார்கள். ஒருபுறத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள் அறங்காவலர்களாக நியமிக்கப்படவில்லை என்றும் குற்றம் சாட்டுகிறீர்கள். ஆனால் நீங்களே அறங்காவலர்களை நியமிப்பதற்காக மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழு இடையிலே இருக்கவேண்டுமென்று குழுவை நியமித்த அரசாங்கத்தையும் குறை கூறினால், இதற்கு என்ன பொருள் என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற அந்தத் தத்துவத்திற்குப் பின்னால் கட்சி சார்பற்றவர்கள் அந்த ஏரியா கமிட்டியிலே இருந்தால், பாராட்டக்கூடியதாக

இருக்கும். அற நிலையத் துறை நிர்வாகங்களிலே எந்தக் கட்சியையும் சேராதவர்கள் இந்த ஏரியா கமிட்டியிலே நியமித்து, இவர்கள் வழி காட்டியிருப்பார்கள் என்றால், அதைப் பின்பற்ற வசதியாக இருக்கும். அப்படி இல்லாததால் தான் குறை கூறப்பட்டது என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இவ்வளவுக்கும் நான் பதில் சொல்ல இருக்கிறேன். தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் என்னுடைய பதிலை முடிவாகக் கேட்டுவிட்டு, அதற்குப் பின்னாலே ஐயப்பாடு இருந்தால், எங்கள் மீது சந்தேகம் இருந்தால், கேட்கலாம். அதற்கெல்லாம் பதில் சொல்லத்தான் நான் வருகிறேன். இதற்கு இன்றைக்கு ஒரு நடைமுறை இருக்கிறது. விண்ணப்பங்களைக் கோரிப் பெற்று, அந்த விண்ணப்பங்களை ஆய்வு செய்வதற்காக அறநிலையத் துறை ஆய்வாளர்கள் போய், அவர்கள் சொல்லியிருக்கின்ற தகுதியெல்லாம் அவர்களுக்கு இருக்கிறதா என்று விசாரிப்பது, இவர் அந்தத் தகுதிகளுக்குச் சொந்தக்காரர்தானா, அது உண்மைதானா என்று தெரிந்து அவர்கள் தெரிவிப்பார்கள். அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே அதிகாரிகள் நியமிப்பது என்பது முன்பு இருந்த முறை. குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்திலே அதிலே ஒரு மாறுதலைக் கொண்டு வந்து கலைத்தார்கள். கலைக்கவேண்டுமென்று முடிவெடுத்தார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. நான் உள்நோக்கம் கற்பிக்கவில்லை. அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிற முறையிலே ஒரு மாறுதலைக் கொண்டுவந்து அதை அமுல்படுத்துகின்ற காரணத்தினாலே, இந்த விதிகளின் கீழ் நியமிக்கப்படாத அறங்காவலர்கள் நீக்கப்படுகிறார்கள் என்று நீக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த முறைதான் இன்றைக்கு அமுலிலே இருக்கிறது. இதற்கு இடையிலே திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்களே அது போல தொடர்ந்து காங்கிரஸ் கட்சி ஆட்சியிலேயும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும், இப்போது நடைபெறுகிற இந்த ஆட்சியிலேயும் பலபேர் தொடர்ந்து அறங்காவலர்களாக இருந்து கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்டவர்கள் யாராவது தொடர்ந்து இருந்துகொண்டு வருவதிலே தவறு இல்லை. நல்லவர்களாக இருந்தால், தகுதி உள்ளவர்களாக இருந்தால் தவறு ஒன்றுமில்லை. ஆனால் தவறானவர்கள் யாராவது உள்ளே வந்துவிடக் கூடாது. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்கள் யாராவது உள்ளே வந்துவிடக்கூடாது. அங்கே ஆய்வுக்குப் போகிற சாதாரண அதிகாரிகளை கைக்குள்ளே போட்டுக்கொண்டு அந்த இடத்தைப் பெற்றுவிடக் கூடாது. ஆகவே அதைப்பற்றித் தெரிந்தவர்களாக இருக்க வேண்டுமென்றுதான் இந்தக் குழுக்களைப் போட்டோம்.





மாண்புமிகு அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்திலே முக்கியமான ஒரு உறுப்பினர் திரு. வாசகம் பிள்ளை அவர்களைப் போட்டிருக்கிறோம். அவர் யார் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

* **திரு. க. இராமமூர்த்தி :** என் பெயர் வந்ததனாலே தலையிடுகிறேன். திரு. வாசகம் பிள்ளை அவர்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர். அவரைப் போட்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே அ.தி.மு.க வினர் தலையீடே இல்லாமல் இருந்ததா என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா அல்லது அதிலே காங்கிரஸ் கட்சியின் குறுக்கீடு ஏதேனும் இருந்ததா என்று சொல்ல முடியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் அவசரப் பட்டு விட்டார்கள். அமைச்சர் பெயரைச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் என்ன சொல்ல இருக்கிறார் என்று கேட்க பொறுமையில்லை.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நான் குறுக்கீடுகள் குறித்து ஒன்றும் சொல்லவில்லை. இந்த அரசாங்கம் எந்த நோக்கத்தோடு குழுக்களை அமைத்தது, எந்த நோக்கத்தோடு செயல்படுகிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஒரு குற்றச்சாட்டு தெரிவித்தார்கள். கட்சிச் சார்பற்றவர்களைத்தான் போட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குள்ளே நுழைந்தால், மிகப் பெரிய ஆபத்திருக்கிறது. யார் கட்சி சார்பற்றவர்கள் என்று கண்டுபிடிக்கவே ஒரு ஆராய்ச்சி நடத்த வேண்டும் கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் கிரிமினல் குற்றவாளிகள் என்று முடிவு எடுத்துவிட்டால், அதைவிட கேடு இந்த நாட்டிலே வேறு இல்லை. ஜனநாயக யுகத்திலே ஒரு கட்சியைச் சேர்ந்தவன் நான் என்று சொல்பவன்தான் உண்மையிலேயே ஜனநாயகத்தைக் காப்பாற்றுவான் என்று பொருளே தவிர, நான் கட்சி சார்பு அற்றவன், கட்சி சார்பு அற்றவன் என்று சொன்னால் அது எங்கே கொண்டு போய் நிறுத்தும் என்பது நம் எல்லோருக்குமே தெரியும.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவைத் தலைவர் தவிர வேறு யாரும் இருக்கமாட்டார்கள்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மேலவைத் தலைவர் அவர்கள்கூட அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அந்த ஆசனத்திலே அமர்ந்ததற்குப் பிறகு நீங்கள் அப்படி விளங்குகிறீர்களே தவிர, எந்தக் கட்சி சார்பும் அற்றவர் என்று சொல்லிக்கொள்ள முடியாது. நீங்கள் அந்த இடத்திலே அமர்ந்திருக்கிறபோது, அந்தப் பொறுப்புக்கு, அந்தத் தகுதிக்குத் தங்களை தாங்கள் ஆளாக்கிக்கொண்டிருக்கிறீர்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதைத்தான் அறங்காவலர்கள் பதவிக்கும் சொல்கிறோம். அந்த முறையை வைத்திருக்கிறோம். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் "எனக்கு எந்தக் கட்சியிலேயும் அதிக ஈடுபாடு கிடையாது" என்று சொல்லலாம், "எந்தக் கட்சியிலும் முழுநேர உறுப்பினராக இல்லை" என்று வேண்டுமானால் சொல்லலாம், "எந்தக் கட்சியினுடனும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது" என்று வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் அப்படிப்பட்டவர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது, நான் தென்னாற்காடு மாவட்டத்தைப்பற்றிச் சொன்னேன். கோவை மாவட்டத்தில் இந்தத் தேர்வுக் குழுவுக்குப் போடப்பட்டிருக்கிற தலைவர், திரு. சுந்தரவேலு என்கின்ற ஒருவர், எந்தக் கட்சியிலேயும் ஈடுபடாமல் ஒதுங்கியிருக்கின்ற ஒருவர். இதுபோல பல்வேறு குழுக்களை நான் சொல்லிக்கொண்டிருக்க முடியும். நான் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. எங்கள் தூய்மையான உணர்வை அங்கத்தினர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஆகவே அறங்காவலர்களை நியமிக்க இந்தக் குழுக்களை அமைக்க ஆரம்பித்தோம். அந்த நியமனத்திற்கான பரிசீலனைகள் எல்லாம் முடிவதற்கு எவ்வளவு காலம் ஆகிறது என்பதை நாம் தயவுசெய்து கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். மனுக்களை எல்லாம் பெற வேண்டும். அவைகளைப் பரிசீலனை செய்ய வேண்டும். அந்த மனுதாரர்களைப்பற்றி அந்த கிராமப்புறங்களிலே விசாரித்து குழு ரிப்போர்ட் கொடுத்து, அந்த அறிக்கையின் மீது தேர்ந்தெடுத்து சிபார்சு செய்கிறார்கள். அந்தப் பட்டியலிலேயிருந்துதான் உதவி ஆணையாளர்கள், துணை ஆணையாளர்கள். ஆணையாளர்கள் எல்லாம் அறங்காவலர்களை நியமிக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்யலாம். அந்தச் சிபாரிசை எடுத்துக் கொள்ள வேண்டும் என்கின்ற விதி அரசாங்கத்திற்குக் கிடையாது. இப்படியெல்லாம் நியமிக்கப்பட்டவர்களைப் பற்றிச் சொல்கிறேன். நான் ஒரு பட்டியலே தருகிறேன். சென்ற ஆண்டு நான் இங்கே கால நீடிப்பு கேட்ட போது, அது முடியவில்லை. அப்போது அதைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பு இல்லை. பேரவையிலே இரண்டு முறைகள் சொல்லவேண்டிய



அவசியம் வந்துவிட்டது. இங்கே சொல்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். ஓய்வு பெற்ற அதிகாரிகளைப் போட வேண்டுமென்று சொன்னார்கள். அப்படியும் முயற்சி செய்து பார்த்து ஒருவர்தான் கிடைத்தார். கபாலீஸ்வரர் கோயிலிலே ஓய்வு பெற்ற ஒரு மாவட்ட நீதிபதி என்று கருதுகிறேன், அவரைப் போட்டிருக்கிறோம். கபாலீஸ்வரர் கோயிலிலே அறங்காவலர் குழுவின் தலைவர் அவர்கள். அவர்களுக்கு அரசியலிலே அதிகமாக ஈடுபாடு கிடையாது. ஒரு பொது நல ஊழியர். சேவை செய்கின்றவர். வர்த்தகத் துறையிலே ஈடுபட்டிருக்கின்றவர். ஆலயத்திருப்பணியிலே ஈடுபட்டிருக்கின்ற ஒருவர்.

நமது அறநிலையத் துறையில் மாநிலத்திலேயே அதிக வருமானம் உள்ள கோயில் பழனி கோயில். அந்தப் பழனி கோயிலுக்கு அறங்காவலர் குழுத் தலைவராக முதன் முதலாக ஒரு பெண்மணி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் டாக்டர் ராதா தியாகராசன் என்பவர்.

இராமேஸ்வரம் கோயில் நம்முடைய மாநிலத்திலே அதிக வருமானம் பெறுகின்ற 10, 11 கோயில்களில் ஒன்று. அதனுடைய தலைவர் மறைந்த இராமநாதபுரம் மன்னர் அவர்களுடைய துணைவியார்.

திருநெல்வேலியில் காந்திமதி நாதர் ஆலயத்தினுடைய தலைவர், அறங்காவலர் குழுவின் தலைவர், ஒரு கட்சியையும் சாராதவர், அதிலே ஈடுபாடு காட்டாமல் பொதுத் தொண்டு செய்துகொண்டிருக்கின்றவர், வியாபாரத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற ஒருவர் தலைவர். அவர் திரு. எஸ். கல்யாண சுந்தரம் பிள்ளை அவர்கள்.

இப்படி ஒவ்வொரு குழுவிலேயும் உள்ளவர்கள் இருக்கிறார்கள். கோவை பக்கத்திலே இருக்கின்ற மருத மலை அறங்காவலர் குழுத் தலைவர், திருப்பூரில் மிக நீண்ட காலமாக தேசிய இயக்கத்திலே ஈடுபட்டிருக்கின்ற தேச பக்தர். அவர் ஒரு பழுத்த காங்கிரஸ்காரர். அப்படி புகழ் பெற்றவர் இருக்கிறார். அவர் மதிப்பிற்குரிய பழனிச்சாமி கவுண்டர் அவர்கள். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், அறங்காவலர் குழுத் தலைவர்களைப் போடுகிறபோது, நாங்கள் எங்கள் கட்சிக்காரர், வேறு கட்சிக்காரர் என்று பார்ப்பதில்லை. மாண்புமிகு அங்கத்தினர் திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் இந்த சபையினுடைய மரபைக் கூட மீறி என்று கருதுகிறேன், இந்த

சபையிலே இல்லாதவர் பற்றிச் சொன்னார்கள். நாகர்கோயில் தேவஸ்வம் போர்டுக்கு ஒருவரைப் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பெயரைச் சொன்னார்கள்.

(முற்பகல் 11-30)

**திரு. ம. சங்கரலிங்கம் :** சபையில் இல்லாதவரின் பெயரை நான் சொல்லவில்லை. அவர் வகிக்கும் பதவியைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** பெயரைச் சொன்னதாகக் கருதிக் கொண்டிருந்தேன். பெயரைச் சொல்லவில்லை என்றால் நன்றி. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட அவைத் தலைவர் என்றால், அவர் சமுதாய விரோதியா, அவர் ஏதாவது கிரிமினல் குற்றத்தில் ஈடுபட்டவரா ? அறங்காவலர்களாக வர தகுதிகள் வைத்திருக்கிறோமே, அந்தத் தகுதிகளின் வரம்பை மீறியவரா ? அவர் நாகர்கோவிலில் உள்ள சிறந்த குடிமக்களில் ஒருவர், டாக்டர். மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார். ஒரு நர்சிங் ஹோம் சொந்தமாக நடத்திக்கொண்டிருக்கிறார். மகப்பேறு, குழந்தைகள் மருத்துவத்தில் நிபுணர். லட்சக் கணக்கான ரூபாய் சொத்துள்ளவர், யாருடைய காசுக்கும் ஆசைப்படாதவர். குறிப்பாக அறநிலையத் துறையிலேயிருந்து காசு எடுத்து, அதிலிருந்து சாப்பிட வேண்டுமென்ற நிலையில் இல்லாதவர். இவ்வளவு தகுதியும் உள்ளவரைத் தான் தலைவராகப் போட்டிருக்கிறோம். அவர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக இருப்பது தவறு, அவரை நாடு கடத்த வேண்டுமென்பதை ஒப்புக்கொண்டால், 1976 ஜூன் 1 ஆம் தேதி கலைத்தார்களே, அதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். என்னைப் பொறுத்த வரையில், அந்த வாதத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள், சேராதவர்கள் என்ற காரணத்தைக் காட்டி, அந்தப் பதவிகளிலிருந்து நீக்குவதை நாங்கள் உண்மையிலேயே ஒத்துக்கொள்ளவில்லை. அதை மறுக்கிறோம். தகுதியானவர்களா என்பதுதான் எங்களுடைய பரிசீலனை. அதுதான் நாங்கள் வைத்திருக்கிற அளவுகோல்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நான் குறிப்பிட்டுச் சொன்னதைப்பற்றி அமைச்சரவர்கள் விளக்கம் தந்ததால், குறுக்கிடுவதற்கு மன்னிக்கக் கேட்டுக்கொள்கிறேன். நான் அவரைக் குறை சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசுகிறபோது, கட்சி சார்புடையவர்கள் உங்கள் ஆட்சிக் காலத்தில் இருந்தார்களே, அதைப்போல ஓரிடத்திலாவது இப்போது



போட்டிருக்கிறார்களா என்று கேட்டார்கள். அதற்காகத்தான் சொன்னேன். அவர் குறை உடையவர், நிறை உடையவர் என்ற வாதத்திற்குள் நான் வரவில்லை.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஸ்ரீரங்கம் கோவிலுக்கு டாக்டர் கோபிநாத் என்பவரை அறங்காவலர் குழுத் தலைவராகப் போட்டிருக்கிறோம். தமிழகத்திலே மிகப் பெரும் வருமானமுள்ள ஆலயங்கள் 10, 11 தான் இருக்கும். அந்தக் கோவில்களில் நாங்கள் எப்படிப்பட்ட அணுகுமுறையைக் கையாள்கிறோமென்பதைத்தான் சொன்னேன். தேடித் தேடிப் பார்க்கிறோம். பெண்களைத் தேடிப் பிடித்துத்தான் போட வேண்டியிருக்கிறது. பழனி கோவிலுக்குக்கூட அப்படித்தான் போட்டோம். அவர்கள் முதலில் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். நாங்களே விரும்பி, வேண்டி அவர்களைப் போட்டோம். அந்த அறங்காவலர் குழுத் தலைவர் மதுரையிலிருந்து பழனிக்கு வந்து, கோவில் விடுதியில் தங்கினால், சட்டப்படி கட்டணம் வாங்க மாட்டார்கள். ஆனால் அதைக்கூட அம்மையார் உண்டியலில் போட்டுவிட்டுப் போகிறார்கள். அவ்வளவு தகுதி படைத்தவர்களைத்தான் போட்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும், மற்ற உறுப்பினர்களும் தயவு செய்து தகுதியானவர்களின் பட்டியலைத் தரட்டும், நாங்கள் அதில் கட்சிக் கண்ணோட்டம் பார்க்க மாட்டோம் என்பதை வலியுறுத்திச் சொல்கிறேன். அதே நோக்கில் போடப்பட்டவர்கள் யாராவது தவறு செய்கிறார்கள், இந்தத் தகுதிகளுக்குக் குறைவானவர்களாக இருக்கிறார்கள், விதிகளை மீறியவர்களாக இருக்கிறார்கள் என்று சான்றுகளைத் தாருங்கள். அடுத்த கணம் அவர்களை நீக்க நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்கிறேன். இவ்வளவு கஷ்டப்பட்டு, இத்தனை ஆயிரம் கோவில்களுக்கு ஆய்வெல்லாம் செய்து, போட ஆரம்பித்தோம். வண்டி பழுது பட்டு ஷெட்டில் அடைபட்டிருந்த காரை வெளியே எடுத்து, என்ஜினைச் சுத்தம் செய்து, ஆயில் போட்டு, கிளீன் பண்ணி ஸ்டார்ட் பண்ண ஆரம்பித்தோம். நிறுத்திவிட்டார்கள். இது மெக்கானிகல் டிபெக்ட் அல்ல. இதுபற்றிப் பேசுவதற்கும், பல உண்மைகளைச் சொல்லுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்ததால் சொல்கிறேன். ஸ்டார்ட் பண்ணினோம். அந்த வேகத்தில் 6,000 கோவில்களுக்குப் போட்டோம். இன்னும் 19,000 கோவில்களுக்குப் போட வேண்டிய வேலைதான் பாக்கி. அடிப்படை வேலை பூர்த்தி அடைந்து, போடுகிற வேலையைத்

துவங்குகிறபோது, வெளியே அனுப்பிவிட்டார்கள். அப்படி அனுப்பியது தவறு என்று சொல்லவில்லை. இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஏன் போடவில்லை, ஏன் போடவில்லை என்று பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுக்கும் இது தெரிய வேண்டும். சில விஷயங்களை வெளியில் சொல்லக் கூடாது என்றிருக்கிறது. ஆனால் இந்தச் சட்ட மன்றத்திலே எல்லா உண்மைகளையும் சொல்லியாக வேண்டும். இவ்வளவு கஷ்டப்பட்டு, 10 மாதம் சுமந்து, பிள்ளை இல்லையே என்று வருந்துகிற நேரத்தில் ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்தால், அந்தப் பிள்ளையையும் கழுத்தை நெறித்துக் கொல்லும் முயற்சி நடந்தது. 6,000 கோவில்களுக்கும் போட்டோமே, அறங்காவலர்கள்—டாக்டர் இராதா தியாகராசன், திரு. பழனிச்சாமி கவுண்டர், மதுரையில் வி. என். சிதம்பரம், ஸ்ரீரங்கத்தில் டாக்டர் கோபிநாத், இராமேஸ்வரத்தில் சேதுபதி மன்னரின் மனைவி—இவர்களையெல்லாம் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு இங்கேயிருந்து இடைக்கால ஆட்சியின்போது ஒரு நகல் தீர்மானம் அனுப்பப்பட்டது. நீங்கள் இன்றைக்குப் போடவில்லை என்று குற்றம் சாட்டுகிறீர்களே, இந்த 6,000 கோவில்களும் அனாதையாகியிருக்கும். நான் சொன்ன இந்தப் பட்டியல், அதாவது இந்தத் தகுதி உள்ளவர்கள் உட்பட எல்லோரையும் உடனே நீக்க வேண்டும் என்று நகல் தீர்மானம் அனுப்பினார்கள். அன்றைக்கு அட்வைசராக இருந்தவர் திருச்சியில் பேசினார். நீண்டகாலம் அனுபவம் பெற்றவர், ஐ.ஏ.எஸ். அதிகாரி ரிடையர் ஆகப் போகிறவர், சொல்கிறார், "சட்டப்படி நியமிக்கப்பட்ட இந்தக் குழுக்களை கலைக்க வேண்டியது" என்று. 1976-ல் செய்ததுபோல் இந்தக் குழுக்களைக் கலைக்க ஒரு சட்டம் பிறப்பித்திருந்தால் எங்களுக்கு நஷ்டமில்லை. மக்கள் புரிந்துகொள்வார்கள், தீர்ப்பு அளிப்பார்கள். மீண்டும் வந்து போடுகிறோம். எவ்வளவு கஷ்டப்பட்டு, எவ்வளவு சிரமப்பட்டு, ஓராண்டுக்காலம் சிரமப்பட்டு 6,000 கோவில்களுக்குத் தேர்ந்தெடுத்து பொறுக்கிப் போட்டால், அவர்களை நீக்க வேண்டுமென்று இங்கிருந்து ஆலோசனை போகிறது. நல்லவேளை, 6,000 கோவில்களும் தப்பின. இதுதான் வரலாறு. எங்கள் தூய்மையை, நல்லமுறையில் நடக்க வேண்டுமென்ற நோக்கத்தை, நல்லவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற எண்ணத்தைச் சந்தேகிக்க வேண்டாம். இதில் உறுப்பினர் எல்லோரும் உறுதுணையாக இருக்கலாம். நல்லவர்களின் பெயர்களைத் தரலாம். நிச்சயமாகச் சொல்கிறேன், மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய சார்பிலே சொல்கிறேன், இதில் கட்சி வித்தியாசம் பார்ப்பதில்லை. ஒரு சான்றைச் சொல்கிறேன். குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. சத்திய



மங்கலத்திற்குப் பக்கத்தில் பன்னாரி மாரியம்மன் கோவில் என்று இருக்கிறது. திடீரென்று அந்தக் கோவிலுக்கு புகழ் ஏற்பட்டு, 15 லட்சம் ரூபாய் வருமானம் வர ஆரம்பித்துவிட்டது. அந்தக் கோவிலுக்கு சில அறங்காவலர்களைப் போட்டிருக்கிறோம். அதில் ஒருவர், நாடாளுமன்றத் தேர்தலின்போது வாக்களிக்க வந்த அரிசன மக்களைக் கொண்டு போய், அடைத்து வைத்து அவர்கள் வாக்கே போடக்கூடாது என்று தடுக்கக் கூடிய அளவிற்கு அரசியலில் ஈடுபாடு கொண்டவர். எந்தக் கட்சி என்று நான் சொல்ல விரும்பவில்லை. அவரையும் போட்டிருக்கிறோம். திருச்செந்தூரில் ஒரு கட்சியின் சார்பில் வேட்பாளராக நிற்க வேண்டுமென்று வேட்பு மனு தாக்கல் செய்தவர் அவர் எந்தக் கட்சி என்று எண்ணிப் போடவில்லை. அப்படிப்பட்ட எண்ணத்தில் அரசு இல்லை என்பதை தயவு செய்து இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய தூய்மையைச் சந்தேகிக்க வேண்டாம்.

**திரு. க. இராமமூர்த்தி:** ஏற்கெனவே போட்டிருக்கின்ற அறங்காவலர்களைப்பற்றி மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற அவசியம் இருக்கிறதென்பதை அமைச்சரவர்கள் ஒப்புக்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** அறங்காவலர்கள் பணியில் குறையில்லை. கட்சிக்காரர்களைப் போட்டுவிட்டீர்கள், கட்சிக்காரர்களைப் போட்டுவிட்டீர்கள் என்று சொல்கிறார்கள். எங்கள் கட்சிக்காரர்களை மாத்திரம் போடவில்லை, அரசியல் உணர்வோடு எங்கள் கட்சியை அழிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களே, அவர்களையும் போட்டிருக்கிறோம். ஆனால் கோவில்களில் கொள்ளை அடிக்கிறவர்களைப் போட மாட்டோம் எந்த நிலையிலும்.

**திரு. க. இராமமூர்த்தி:** அரிசனங்களைத் தடுப்பவர்களை அறநிலையங்களில் அறங்காவலர்களாகப் போடுவதென்பது இந்து அறநிலையக் கொள்கைக்கு முரணானது என்பதை அமைச்சரவர்கள் ஒப்புக்கொள்வார்களென்று நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** நான் தேர்தலிலே நடைபெற்ற காரியத்தைச் சொன்னேன். அவர், அறநிலையத்திற்கு வரும் அரிசனைத் தடுக்க முடியாது. தடுத்தாலும், விட மாட்டோம். தேர்தல் நேரத்தில் எவ்வளவு கட்சி வெறியோடு பாடுபட்டார் என்பதைத் தெரிவித்தேன். இதற்கு மேலே இது குறித்து விவாதத்தில் ஈடுபட வேண்டாம். சில குற்றச்சாட்டு

களைச் சொன்னதற்கு, சான்றுகளோடு பதில் சொல்லுகிறேன். கோவில்களில் அறங்காவலர்களை நியமிப்பதில் அரசு மிகுந்த அக்கறை எடுத்துக்கொள் கிறது என்பதால்தான் காலதாமதம். எல்லோரும் தேர்தலின் மூலம் வந்து விடலாமென்றால், அதில் கஷ்டமிருக்காது. சில தகுதிகளை வைத்திருக்கி றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னார் களே, அதுவும் அதிகாரி தந்த குறிப்பின்மீதுதான் போடப்பட்டது. உண்மை. மறைக்கப்பட்டு, மதம் மாறியவர் என்று அதிகாரி சர்டிபிகேட் தந்தார். இல்லையென்றால் அரசு எப்படி நியமிக்க முடியும் இந்து அற நிலையத்திற்கு இருத்துவரை எப்படி நியமிக்க முடியும்? ஒரு அதிகாரி அந்த சர்டிபிகேட் தந்தார். புகார் வந்த பிறகு, பரிசிலித்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்ன கோவில் பற்றிய விவகாரத்தில் இந்தத் துறை இயங்குகிறது என்பதை அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று பார்த்தேன். அதற்கு இன்னும் அவர் மனம் இடம் தரவில்லை. அவர் இன்னும் உள்ளத்தை விசால மாக்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

**திரு. ம. சங்கரலிங்கம் :** அதிகாரி வந்தார், விசாரித்தார். ஆனால் முடிவு எனக்கு வரவில்லை என்பதைத் தான் சொன்னேன். அவர் நடவடிக்கை எடுத்திருந்தால் தான், எனக்குத் தெளிவாக பதில் தர முடியும். மாண்புமிகு அமைச்சருக்குக் கடிதம் எழுதினேன். அவர் இன்னின்ன நடவடிக்கை எடுத் திருக்கிறோம் என்று சொல்லியிருந்தால் பாராட்டியிருப்பேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** உடனடியாக அந்தக் கடிதத்தை அந்தத் துறைக்கு அனுப்பி நடவடிக்கை எடுத்திருப்பதிலிருந்து இந்தத் வேகமாகச் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் ஒத்துக்கொள்வார் என்று கருதுகிறேன். ஆனால் பிரச்சினையைப் பார்க்கும்போது, அதில் சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. அது யாருடையது என்கிற பிரச்சினை வேறு எழுந்திருக்கிறது. விரைவிலே தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான முயற்சிகளிலே நாங்கள் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறோம்.

அதைப்போல ஆலயச் சொத்துக்கள், நிலங்களைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆலய நிலங்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள்.



இந்த ஆலய நிலங்களை இடையிலே இருப்பவர்கள் வைத்துக்கொண்டிருந் தால், நாளடைவில் கரைந்து போய்விடும் என்பது நமக்குத் தெரிகிறது. வெயிலில் வைத்த வெண்ணெயாக உருகிக் கொண்டு இடம் தெரியாமல் போய் விடுவது போல், இந்த நிலங்களும் நாளாவட்டத்தில் கரைந்து போய்விடும். அதுபோல எந்தக் காலத்திலோ எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகள் காப்பாற்றப்பட வேண்டும். முன்னோர்கள் வருங்கால சமுதாயத்தை நம்பி எழுதி வைத்திருக்கிறார்கள். நமக்குப் பிறகு எப்படியோ. ஆனால் நாம் நம்முடைய பெயரைக் காப்பாற்றிக் கொண்டு போக வேண்டும். பின்னால் எப்படியும் போகலாம். அதற்காக தீவிரமாக அரசு பரிசீலித்துக்கொண்டிருக் கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிலங்களை எப்படி நாம் எடுத்துக்கொள்வது என்பது வேறு பிரச்சினை. நாமே விலைக்கு எடுத்துக்கொள்வதா, இல்லை விலைக்குக் கொடுப்பதா, இல்லை உழுபவர்களுக்குக் கொடுப்பதா என்கிற பிரச்சினையில் சட்டச் சிக்கல்கள் எல்லாம் இருக்கின்றன. பொருளா தார பிரச்சினை வேறு இருக்கிறது. ஆகவே விரைவிலே இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதில் இந்த அரசு தீவிரமாக இருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். ஆகவே தகுதியானவர்களைப் போடுவதற்காகத்தான் இந்தக் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் இதுவரை கூறிய வரலாற்றிலிருந்து, புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் மடாலயங்களைப்பற்றிச் சொன்னார்கள். முன்னாலே இருந்த எங்களுடைய முன்னோடிகள், அதாவது மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுடைய கட்சி யைச் சார்ந்த அரசு, அவற்றையெல்லாம் சரி செய்யவில்லை. நாங்கள் ஒரே கொள்கையை உடையவர்கள்தானே. அவர்கள் அதைச் செய்துவிட்டுப் போயிருந்தால், எங்களுக்கு இந்தத் தொந்தரவு எல்லாம் வந்திருக்காது. 1967-க்கு முன்னால் இருந்த ரொம்ப அனுபவம் பெற்ற முன்னாள் முதலமைச் சர் திரு. பக்தவச்சலம் அவர்கள் ஆட்சிக் காலத்திலேயும் அதற்கு முன்னாலே யும் நடவடிக்கை எடுத்திருந்தார்களென்றால், இந்தப் பிரச்சினைகள் வந்திருக் காது. இப்போது எல்லாப் பிரச்சினைகளையும் இந்த அரசு வந்ததற்குப் பிறகு தீர்க்க வேண்டுமென்று எல்லோரும் எங்களிடம் நம்பிக்கை வைத்துச் சொல்வதைப் பார்க்கும்போது, எனக்கு நிரம்ப மகிழ்ச்சி ஏற்படுகிறது. செய்ய நாங்கள் மறுக்கவில்லை, அவர்கள் இந்த மடாலயங்களைப் பற்றிய கணக்கு

வழக்குகளை மட்டும் அறநிலையத் துறைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதை நல்ல முறையில் கொண்டுவர வேண்டுமென்று கருதி, ஏறத்தாழ 32 நிர்வாக அதிகாரிகளை அங்கே போட்டோம். உடனே அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் 'ரிட்' மனு போட்டு 'ஸ்டே' வாங்கி விட்டார்கள். எங்கள் மடாலய நிர்வாகத்திற்குள்ளே நுழைந்துவிட்டார்கள் என்று சொல்லி அவர்கள் நீதிமன்றத்திலே போட்ட வழக்கு ஒன்று இருக்கிறது. மடாலய சொத்துக்களும் பொதுமக்களுடைய சொத்துக்கள்தான். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும், மக்கள் பிரதிநிதிகளும், இதுபோன்ற மன்றங்களிலே இருப்பவர்களும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் நிச்சயமாக இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சற்று அழுத்தமான முறையிலே இன்னும் கடுமையான சொல்லால் சொல்வதென்றால் அரசு தீவிரமாக, கடுமையாக இதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வளவு முறைகேடுகள் அங்கே நடந்திருக்கின்றன. குற்றச்சாட்டுகள் தரப்பட்டிருக்கின்றன. எந்தக் கட்சிக்காரர்களும் குற்றச்சாட்டுகளைத் தரவில்லை. கட்சிகளுக்கு அப்பாற்பட்ட பெரியவர்கள், சமுதாயம் நல்ல முறையில் இருக்க வேண்டும், நல்ல முறையில் இயங்க வேண்டும் என்று அக்கறை கொண்டவர்கள், ஆஸ்திகத்திலே நம்பிக்கையுள்ளவர்கள், ஆலயப் பணிக்காகவே தங்களை ஒப்படைத்துக்கொண்டிருப்பவர்கள் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தந்திருக்கிறார்கள். மடாலய நிர்வாகத்தில் அறநிலையத்துறை நிச்சயம் புகுந்தாக வேண்டும். அறநிலையத் துறை உள்ளே நுழைகிறது என்று சொன்னால், அரசே உள்ளே நுழைகிறது என்று பொருள். அந்தச் சொத்துக்கள் காப்பாற்றப்பட்டாக வேண்டும். கணக்கை காட்டியாக வேண்டும். அவர்களுடைய நடவடிக்கைகளை நாம் கண்காணித்தாக வேண்டும். இப்போது அவர்கள் வழக்குமன்றத்திற்குப் போய்விட்டார்கள். எதற்கெடுத்தாலும் இப்போதெல்லாம் வழக்குமன்றத்திற்குப் போகிற ஒரு முறை இருப்பதால், அவர்களும் வழக்குமன்றத்திற்குப் போய்விட்டார்கள். எதற்கெடுத்தாலும் இப்போதெல்லாம் வழக்குமன்றத்திற்குப் போகிற ஒரு முறை இருப்பதால், அவர்களும் வழக்குமன்றத்திற்குப் போய்விட்டார்கள். இருள் விலகாதா, விடிவு வாராதா என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓராண்டு காலத்திற்கு இந்த இந்து சமய—அறக்கட்டளைகள் திருத்தச் சட்டமுன்வடிவிற்கு அவகாசம் கேட்டேன். ஆனால் ஒரு மாத காலத்திற்குள் எப்படியாவது இதை முடியுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் கேட்டிருக்கிறார். நிச்சயமாக ஒரு மாத காலத்திற்குள் இது முடியவே



முடியாது. ஓராண்டுக்குள் எப்படியாவது முடிக்க தீவிரமாக இதில் ஈடுபடுவோம். அறநிலையத் துறை அதிகாரிகளுக்கும் இதைச் சொல்லியிருக்கிறேன். எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களானாலும் அவர்கள் நல்லவர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருதினால், உங்களுக்கு அவர்கள் தெரிந்தவர்களாக இருந்தால் தயவுசெய்து அப்படிப்பட்டவர்களுடைய பட்டியலை என்னிடம் தாருங்கள் என்று நான் சென்ற முறையும் கேட்டேன். இந்த முறையும் சொல்கிறேன், "தயவுசெய்து அப்படிப்பட்டவர்களுடைய பட்டியலை என்னிடம் தாருங்கள்." எந்தக் காரணத்தைக் கொண்டும் கட்சி பேதம் பார்க்க மாட்டேன் என்று இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொல்லி, சில உண்மைகளை, விவரங்களை நான் இந்த மன்றத்திலே சொல்ல உறுதுணை புரிந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI TARA CHERIAN : Mr. Chairman, Sir, the architectural beauty of some of the temples in South India is comparable to the great architectural monuments in the whole world. If the Taj Mahal is one of the Seven Wonders of the World and has become a national monument, it is not because of the religious tenets of any particular religion but because of its architectural beauty. I was listening with great interest to all that was said about things being done without any party feelings. In places like Manchester which are full of factories, soot covers the whole area. On account of that, the architectural monuments become dirty and their beauty is spoilt. There are very many voluntary associations who come forward to clean and beautify them. In the same manner, the voluntary associations could be utilised for preserving the beauty of the architectural monuments in our country.

THIRU K. RAMAMOORTHY : On a point of clarification. Is the hon. Member making a speech or seeking a clarification only ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமுன்வடிவு மீது விவாதம் முடிந்துவிட்டது. இப்போது உறுப்பினர் அவர்கள் சொற்பொழிவு பண்ணுகிறார்கள்.

திருமதி தாரா செரியன் : கட்சிப் பாகுபாடு பார்க்க மாட்டோம் என்று மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவள் என்கிற முறையில் சொல்

இறேன். நம்முடைய கோயில்களை அழகுபடுத்த ஏராளமான வாலன்டீர்ஸ் இருக்கிறார்கள். அவர்களைக் கூப்பிட்டு இதைச் செய்யச் சொல்லலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் கிறிஸ்தவராக இருந்தாலும், ஆதரித்துப் பேசுவதாக இருந்தால், அப்பொழுதே பேசியிருக்கலாம். விவாதம் முடிந்ததற்குப் பிறகு சொற்பொழிவு கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை.

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1980 ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1980) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1980) நிறைவேற்றப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன்உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1980) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



### (3) 1980 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1980.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1980 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1980 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1980) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு தலைவரவர்களே, 1980 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவின் மீது சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். சென்னையிலே தெருக்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. முக்கியமாக இருக்கும் அண்ணா சாலை போன்ற சாலைகளைத் தவிர வீடுகள் இருக்கும் பகுதிகளிலே தெருக்கள் மிக மிகக் கேவலமான நிலையில் இருக்கின்றன. தண்ணீர் போக வசதியில்லை. தண்ணீர் தேங்கிக் கொண்டு சில தெருக்கள் பிளந்து இருக்கின்றன. இன்னும் சில தெருக்கள் அபாயகரமான நிலையில் இருக்கின்றன. இம்மாதிரி நிலை சென்னையில் இருக்கும்போது, நமக்கு மாநகராட்சியைச் சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் அவர்களை சென்னை வாசிகள் அணுகி குறைகளைச் சொல்லி அவற்றைப் பழுதுபார்க்க அவர்களுக்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்.

(முற்பகல் 11-50)

அதுமட்டுமல்ல, சென்னை நகரிலே அநேக இடங்களில் லைட்கள் சரியாக எரிவதில்லை. இதையெல்லாம் யாரிடம் சென்று முறையிடுவது? அதிகாரிகளிடம் சென்று சொல்ல சென்னைவாசிகளுக்கு நேரம் இல்லை. 'எலக்டட் பெர்சன்ஸ்' இருந்தால், அவர்களிடம் சென்று சொல்ல வசதியாக இருக்கும். மக்கள் நெரிசல் அதிகம் உள்ள 'ப்ராட்வே'-யில் 2 ஃபர்லாங் தூரம் பழுது பார்க்கும் வேலை ஆரம்பித்து 8 மாத காலமாக அந்த வேலையை முடிக்காமல் போட்டிருந்தார்கள். மிகவும் அவமானமான காரியம் இது. பேருந்துகள்

@ 449 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வேறு பாதைகளிலே மாற்றி விடப்பட்டன. பள்ளிக்குப் போகும் மாணவர்களும், கல்லூரிக்குப் போகும் மாணவர்களும், அலுவலகங்களுக்குப் போகும் ஊழியர்களும், பொதுமக்களும் மிகவும் திண்டாடவேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டார்கள். கடைசியாக என்னிடத்திலே வந்து சொன்னார்கள். “8 மாத காலமாக இந்தத் தெரு ரிப்பேர் ஆகிக்கொண்டிருக்கிறது, ஸ்பெஷல் ஆபீசரிடம் சொல்ல எத்தனையோ முறை போய் பார்த்தோம், முடியவில்லை. எலக்டட் கவுன்சிலர்கள் இல்லாமல் பிரச்சினை முடியவில்லை. இந்தத் தொகுதியிலே நீங்கள் இருப்பதால், உங்களிடம் வந்து சொல்கிறோம்” என்று சொன்னார்கள். ஆகவே, சீக்கிரமாக தேர்தல் நடத்த வேண்டும். மதிய உணவு அளக்க மெஷின் இருக்கிறது. அதை ஒவ்வொரு வருஷமும் சரிபார்த்து முத்திரையிட வேண்டும். அந்த மெஷின் சரிசெய்யப்படாமல், 'டிப்ரிசியேட்' ஆகி இப்போது மோசமாகியிருக்கிறது. ஒரு கிலோ அளந்தால் அரை கிலோ தான் வருகிறது மேலும் அதிலே ஊழல் நடக்கிறது. இவற்றையெல்லாம் அதிகாரிகளிடம் சொன்னால், அவர்கள் கேட்பதில்லை. ஆகவே, விரைவில் 6 மாத காலத்திற்குள் எலக்ஷன் நடந்தால், சென்னை வாசிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அதுமட்டுமல்ல, சுகாதாரம் மிகவும் கேடுகெட்ட நிலையில் இருக்கிறது. ஜார்ஜ் டவுன், வண்ணாரப்பேட்டை, தண்டையார்பேட்டை போன்ற பகுதிகளை எடுத்துக்கொண்டால், அவை மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. குறிப்பாக, அங்கே உள்ள பள்ளிகளை எடுத்துக்கொண்டால், பள்ளிகளைச் சுற்றி எந்த அளவுக்கு அசுத்தம் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு பக்கத்திலே இருப்பவர்கள் அசுத்தம் செய்திருக்கிறார்கள். அந்தப் பள்ளிகளைச் சுற்றி மாடுகளை வைத்தும் அசுத்தப்படுத்துகிறார்கள். யார் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. அங்கு அதிகாரிகள் இல்லாததால், எலக்டட் கவுன்சிலர்கள் இல்லாததால், அவர்கள் யாருக்கும் அடங்காமல் இருக்கிறார்கள். நாங்கள் கேட்டால், ‘உங்களுக்கு என்ன, நாங்கள் செய்வோம்’ என்று சொல்கிறார்கள். ஆகவே, அதிக விரைவில் தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Government have come forth with another Bill to extend the period within which the elections to the Madras Corporation have to be held. Last time when a Bill was introduced for a similar purpose, many Members requested that if it was possible, the election should be held earlier and the Hon. Minister mentioned that it would be held earlier, it would be held 6 months earlier. Now, that six months' period has



gone and we are now seeking to extend the time by a further period of one year from 31st May 1980. We have just now listened to the Hon. the Minister for Religious Endowments who gave some explanation for the delay in appointing trustees and I realise that such appointment for about 26,000 temples within a period of one year may have presented certain difficulties. But this is a body where we could have held the elections quickly and elected the Councillors on the basis of the old electoral rolls. But, unfortunately, even now we have doubts whether the elections are going to be held in time, because nothing has been mentioned as to whether the Government are going to prepare fresh electoral rolls on the basis of the reduced voting age of 18. Here it is mentioned that it will be held on the basis of the voting age of 21. According to the announcement of the Hon. the Chief Minister, the voting age is going to be reduced to 18. Therefore, time would be required to complete the electoral rolls; but nothing has been mentioned in this Bill where the age is mentioned as 21 years and it is stated that the Assembly electoral rolls will be adopted. Am I to take it that for elections to the Madras Corporation, the Government are not going to reduce the voting age to 18? I require a clarification on that aspect.

Sir, the second point is that this old Corporation which has been in existence for decades has been without elected representatives for the past 5½ years. It is true that a major scandal occurred in the Madras Corporation. Many Councillors, ex-Mayors and hundreds of employees were involved in the Muster Roll scandal. The Judgment has been delivered but appeals have been made. But, as there has been a criminal case in the Corporation, are they going to stay the elections to the Municipal Corporation, because one particular Councillor or one particular Chairman may be involved? The election to local boards, in my mind, should never be postponed because of certain alleged corruption or criminal deeds performed in a local body. If this principle is accepted, then where against corruption cases or Inquiry Commissions ex-Chief Ministers may be pending, the entire Assembly elections will have to be postponed by the President as they would like to do in certain cases just to keep the people of that State from expressing their views on what their popular Government should be. In fact, I have pleaded in the past and I would plead again in this matter. We require an amendment to our Constitution

which will forbid elections being postponed either to local bodies or to Assemblies or to Parliament under some pretext or the other. This negates the whole principle of local administration. If we trace the District Municipalities Act of 1920, the District Boards Act and the Panchayats Act, we will realise that the future administrators of our State and our country will have to receive their training in local bodies and in Corporations. In the past, we had many eminent people who had earlier presided over the Madras Corporation. In the old days, between 1925 and 1930, we had even Chief Ministers of our State who had been earlier associated with local bodies. The late Thiru Theagaraja Chetti, for example, was associated with the Corporation and, later, was for many years a Minister in our State. I am making this plea because I have a very sincere belief though I do not know if the entire ruling party believes in it. I have a sincere doubt that the Hon. the Chief Minister is very very diffident about having elected representatives in local bodies, co-operative societies and even in temples for which an explanation has been given. He should shed this fear. If there are going to be elected representatives, 100 per cent of them are not going to be honest now or in the future whether they are elected from the ruling party or from other parties because in the society that exists today there will be a few people who will take advantage of the situation and who will be dishonest. Whether it is an elected body, whether it is an Assembly and whether they are even Ministers, Inquiry Commissions cannot be ruled out in the future also. But, because of this fear, we cannot keep on delaying elections to local bodies. It is creating havoc. As one hon. Member mentioned, can the Hon. Minister assert with any degree of confidence that because there are no elected representatives in the Madras Corporation, the administration of the Madras Corporation is clean, honest and above board? Checks and balances are required in any democracy and unless we have elected representatives on the Corporation Council, it will not be possible to check the dishonest elements in the bureaucracy. Mention was made about the condition of streets and pavements, roads, lights and the growth of slums, etc. Have we been able to check these because there are no elected representatives on the Corporation Council? The Hon. Ministers themselves have visited some places near Broadway in the Madras Corporation area. There, the pavements are not available for



(நண்பகல் 12.00)

pavement-walkers but they are available only for pavement-hawkers. The pedestrians have to walk on the roads. The Transport buses have to stop in the middle of the road at the bus stops because they cannot come to the border of the road where the pedestrians are walking. Everyday five people are losing their lives because of road accidents. Who is worried about it? Is it the bureaucracy in the Corporation? I have nothing against the bureaucracy and I am not blaming the entire bureaucracy. Unless we have checks and balances in democracy, the entire bureaucracy is likely to go the wrong way. I, therefore, believe that coming forth with such Bills frequently every year or every half year to keep on extending the term of office of the Executive Officers or Special Officers of the Corporation is itself dangerous to democracy and will ultimately ruin the administration of local bodies. In fact, to-day we have no continuity at all and elections have not been held for a long time. All of us, if elected to the local bodies, are going to be new-comers to Local Administration. I, therefore, plead—I have pleaded in the past and I will continue to plead, because I do not know whether they will be coming forth with another Bill for extension—with the Hon. Minister that the preparation of electoral rolls should not be used as an excuse for delaying the elections and that we must have the elections as early as possible. If it is going to take time because of the reduction in the voting age, I would appeal that, in consultation with all the political parties, at least this election may go on on the basis of old electoral rolls and there is no harm in allowing people of the age of 18 to vote from the next elections to be held 3 years hence and nothing will be lost. I would, therefore, plead that this should not be given as an excuse. We should go ahead on the basis of the present Assembly rolls which are in perfect condition and the elections can be held within 3 or 4 months.

I would like this Government to finish all these election processes within the next six months and unless the Government finish the elections to local bodies, Panchayats, Panchayat Unions, Corporations, etc., their minds will be pre-occupied only with election and they will not be able to get on with their work; and the developmental work of the State will suffer because all of us will be involved in the election process and more and more time

will be spent in that connection. I would request, therefore, that before December 31, 1980—which may be kept as the dead-line—we should finish all the elections and we should start the new year from 1st January 1981 with elected representatives all over the State so that for the next 4½ years during which period this Government will be in power, they could devote their proper attention to the developmental activities and governance of this State. Thank you, Sir.

• THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI : Honourable Chairman, while speaking on this Bill, I also would like to express my opinion that there is no taxation without representation. I remember the days when we had the local representative in our area who used to visit the place almost everyday and enquire about the difficulties and problems of the people in the area. Then we had our problems solved immediately. I have nothing against the bureaucracy ; but the bureaucracy has to look to somebody higher-up and the problems are not solved. The aspirations of the people have to be satisfied and unless we have elected representatives, it is not possible. We have a very youthful Minister and as Agriculture Minister we have seen him being very active. I remember the time when he was in charge of Dairy Development ; when the name-board of Muthulakshmi Reddy Park in Adyar was removed by somebody, on the ground that the names of living persons should not be there—though Dr. Muthulakshmi Reddy had passed away even 10 years back—I brought this to the notice of the Hon. Minister and the next day I found that the name-board was re-installed there. In the same manner, I would like to make another appeal. Long ago, the District Board which was in existence then resolved that the Lattice Bridge Road should be named after Dr. Muthulakshmi Reddi. But, because there is no elected representative now, I think that our voice is not heard. But, every other day I see a man's name being put on some board. I have nothing against men but I have to state that only very few Women are being honoured. I do not know why it is taking such a long time for renaming that road. If elected representatives are not going to be there soon, I request that at least the Hon. Minister may see to the renaming of that road.



Sir, I have another appeal to make with regard to the betterment tax which is being levied at the rate of Rs. 182. Many people who had limited amounts of money have purchased land. Some of them have taken loans for constructing buildings. But they are unable to construct the buildings because of the levy of tax at the rate of Rs. 182. Even for one ground of land, if it has a frontage of 60', the amount would come up to Rs. 10,920. In the case of some lands which have 40' frontage, the amount is Rs. 7,280. They have to pay this amount before they can get the licence from the Corporation. If there had been an elected representative, I think that he would have raised his voice in this matter. Many people come to me and express their grievances about the levy of betterment tax. Once I met the Special Officer also and he was very polite. But he could not do anything in the matter because he has to look to somebody else. So, if the Government want to satisfy the aspirations of the people, I am sure that they will have the elections very soon. Otherwise, the people will rise and they will say, "We will not pay taxes unless we have representation." Thank you.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவைமுன் உள்ள இந்தச் சட்ட முன்வடிவைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நான் மேலவைக்கு உறுப்பினராக வந்து 2 ஆண்டுகள் ஆகின்றன. இந்த இரண்டு ஆண்டுகளில் ஒவ்வொரு செஷன்போதும் உள்ளாட்சி மன்றங்கள் அல்லது, கார்ப்பரேஷன் அல்லது பஞ்சாயத்துக்கள், அல்லது கூட்டுறவு அமைப்புகள். ஆகியவற்றின் தேர்தல்களைத் தள்ளிப் போடுவது குறித்தோ, கோயில்களுக்கு தர்மகர்த்தாக்களை நியமிப்பதைத் தள்ளிப்போடுவது குறித்தோ ஒரு சட்ட முன்வடிவு வருவதைப் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் தேர்தல்களை 6 மாதத்திற்கோ அல்லது 1 வருஷத்திற்கோ தள்ளிப் போட வேண்டும் என்று அரசுத் தரப்பில் கேட்பது தொடர்ந்து நடந்து வருகிற ஒன்றாக இருக்கிறது. ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களைப் பொறுத்த வரை, வேறொரு அமைச்சர் ஏற்கெனவே 4 அல்லது 5 முறை தவணை கேட்டு விட்டுப் போய்விட்டார், இப்போது புதிதாக வந்திருக்கிற அமைச்சரின் பின்' ஆரம்பமாகியிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதற்கு ஏதாவது ஒரு உச்ச வரம்பு கொண்டு வந்தால் தேவலாம் போல் இருக்கிறதா?

**திரு. ஆ. நல்லசிவன் :** புதிய அமைச்சர் டர்ன் இப்போதுதான் ஆரம்பமாகியிருக்கிறது. இதோடு இந்தத் தள்ளிவைப்பு முடிந்துவிடுமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. இப்போது கேட்கிற ஒரு வருஷத் தவணைக்குள்ளாவது ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களை நடத்தி முடிப்பார்களா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. ஆர். தாமோதான் அவர்கள் பேசும்போது, ஏற்கெனவே உள்ள வாக்காளர்கள் பட்டியலின் அடிப்படையில், அதாவது 21 வயதானவர்களைக் கொண்ட வாக்காளர்கள் பட்டியலின் அடிப்படையில், வரும் டிசம்பர் மாதத்திற்குள்ளாக ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களை நடத்தி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஆனால் எங்களைப் பொறுத்த வரையில், 18 வயதானவர்களுக்கு தேர்தலில் ஓட்டுப்போட வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுள்ளவர்களானதால் தற்போது கேட்கப்படும் தவணையான 1981 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள்ளாகவாவது அவர்களுடைய பட்டியலையும் தயாரித்து அந்தத் தேர்தல்களை நடத்தி முடிக்க வேண்டும் என்பதாகும்.

நமது மாநிலத்தின் தலைநகரான சென்னை மாநகராட்சிக்குக் கடந்த 6 வருஷங்களுக்கு மேலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கார்ப்பரேஷன் கவுன்சில் இல்லாமல் ஆட்சி நடைபெறுகிறது. வேறு மாநிலத் தலைநகரங்களுக்குப் போகிறபோது, அங்கே இருக்கிற மேயர்களைப் பார்க்கிறோம். இங்கே மட்டும் தான் மேயரைக் காண முடியவில்லை. வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்கள் கூட இவ்வளவு பெரிய நகரத்திற்கு கார்ப்பரேஷன் இல்லையா, மேயர் இல்லையா என்று கேட்கிறார்கள். இந்த ஆட்சி பதவிக்கு வந்து 3 வருஷங்கள் ஆகின்றன. எனவே இந்தத் தடவை கேட்கிற தவணையோடு கார்ப்பரேஷன் தேர்தல்களை நடத்தி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அறநிலையத் துறையில் தர்மகர்த்தாக்களை நியமிப்பதைத் தள்ளிப் போடுவதற்குக் காரணம் கேட்டால், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் காரணம் சொல்லும்போது, இத்தனையாயிரம் கோயில்களுக்கும் சர்க்காரும் சர்க்காரின் கீழ் உள்ள ஒருசில அதிகாரிகளுமே நியமிக்க வேண்டியிருப்பதால், கால தாமதம் இன்னும் ஆகிறது என்றார்கள். 26,000 கோயில்களுக்கு அமைச்சரும் இன்னும் 4, 5 அதிகாரிகளுமாகச் சேர்ந்து ஒரு லட்சம்





விண்ணப்பதாரர்களிலிருந்து பொறுக்கி எடுக்க நாளாகிறது என்று சொன்னார்கள். இந்தக் காரணத்தை ஏற்றுக்கொள்ள முடிகிறது. ஆனால் பஞ்சாயத்துக்களைப் பொறுத்த வரையிலும், கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையிலும், அப்படிப்பட்ட பொறுப்பு அமைச்சருக்கோ அதிகாரிகளுக்கோ இல்லை. ஏற்கெனவே ஒரு வாக்காளர் ஜாபிதா இருக்கிறது. தேர்தல் விதிமுறைகள் இருக்கின்றன. அரசாங்கத்தில் இருப்பவர்கள் நோட்டிபிகேஷன் போட்டுவிட்டு தேர்தலை நடத்துவதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அறநிலையத் துறை அமைச்சர் சொன்னமாதிரி, ஏதாவது நியாயமான காரணங்கள் இருந்தாலாவது பரவாயில்லை. எப்போது கேட்டாலும் வாக்காளர் பட்டியல் திருத்தப்படுகிறது என்று சொல்லுகிற காரணம் சரியல்ல. அதற்காகத்தான் ஒரு இலாக்காவே இருக்கிறதே. அதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருக்கிறார்; ஒரு டிபார்ட்மெண்ட் இருக்கிறது. இதெல்லாம் அவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள். அவர்கள் இவற்றை சரியாகச் செய்யவில்லை என்றால், அதற்காக அமைச்சர்கள் இங்கே வந்து வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுவது நியாயமல்ல. எனவே ஒரு வருஷ காலத்திற்குள்ளாகவாவது இந்தத் தேர்தல்களை நடத்த வேண்டும் 18 வயதானவர்கள் பட்டியல் தயாரிக்க 1 வருஷம் தேவையில்லை. 6 மாதமே போதும் என்பது என் அபிப்பிராயம். 18 வயதுக்காரர்களை நிச்சயமாகச் சேர்க்க வேண்டுமென்று

(பிற்பகல் 12-10)

கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதியைக் கொடுத்துபோல பெண்களுக்கும், அரிசனங்களுக்கும் ஒதுக்கீடு செய்யும் பிரச்சினை இருக்கிறது. அதைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். இதைப்பற்றிக் கோரிக்கைகூட வந்திருக்கிறது. முதலமைச்சர் கூட்டிய கூட்டத்திலேயே சிலர் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அமைச்சரவை முடிவு எடுத்திருக்கிறதா என்பதைத் தெரிவிக்க வேண்டும். பெண்களுக்கும், அரிசனங்களுக்கும் ஒதுக்க வேண்டிய இடங்களை ஒதுக்க வேண்டும் என்பதுதான் எங்கள் அபிப்பிராயம். ஆனால் அரசு என்ன கருதுகிறது என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த ஒரு வருடத்திற்குள் தேர்தலை கட்டாயம் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மற்ற அமைச்சர்களைப் போல் மீண்டும் நீட்டிக்க வரமாட்டேன் என்று சொல்லாமல் "நிச்சயமாக வரமாட்டேன். வந்தால் மந்திரிசபையின் வாக்குறுதியை மீறுவதாக ஆகும்" என்று கூறி வாக்குறுதியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜேப்பியார் :** மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன் வடிவின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள், தமிழில் கூட அவ்வளவு அழகாகப் பேச முடியாது என்ற அளவிற்கு ஆங்கிலத்திலே பேசினார்கள். ஆங்கிலத்தில் பேசுகிற இவ்வளவு திறன் படைத்த அவர், தங்களைத் தலைவராகக் கொண்டுள்ள இந்தச் சபையில் அடுத்த முறை பேசுகிறபோது நல்ல தமிழிலேயே பேசி ஆங்கிலத்தில் பெயர் எடுத்ததைப் போல தமிழிலும் பெயர் எடுத்தால், எங்களைப் போன்றவர்கள் பெருமை அடைவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவருக்குக் கோபம் வந்தால் தமிழில் பேசுவார். ஆனால் கோபம் வரமாட்டேன் என்கிறது. அதற்காக கோபத்தை உண்டாக்குங்கள் என்று சொல்லவில்லை.

**திரு. ஜேப்பியர் :** அவர் ஒன்றைக் குறிப்பிட்டார். அது வரவேற்க வேண்டிய கருத்தாக இருப்பதால், நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர் எந்த உள்நோக்கத்திலும் பேசவில்லை என்று நான் கருதுகிறேன். அவர் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. "முன்னாள் முதலமைச்சர்" என்று சொன்னார். முன்னாள் முதலமைச்சர் மீது கரப்ஷன் கமிஷன் இருக்கிறது என்று.

**திரு. ஏ. ஆர். தாமோதரன்:** தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் என்று நான் சொல்லவில்லை. எல்லா முன்னாள் முதலமைச்சர்கள் பேரிலும் என்கொயரி இருக்கிறது. 11 முதலமைச்சர்கள் பேரில் என்கொயரி கமிஷன் இருக்கிறது என்று சொன்னேன். இதற்கு எவிடென்சாக என்னைத் சொல்ல வேண்டாம். அவரே நேரிடையாக தைரியமாகச் சொல்லலாம், சொல்லுவதாக இருந்தால்.

**திரு. ஜேப்பியார்:** தலைவர் அவர்களே, நான் வெற்றி பெற்றுவிட்டேன். அவர் தமிழிலே பேச ஆரம்பித்துவிட்டார். பிள்ளைத் தமிழ்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கோபம் வரும்படி பண்ணிவிட்டீர்கள்.

**திரு. ஜேப்பியார் :** அவர்கள் சொன்னதாக எடுத்துக்கொண்டேன். முன்னாள் முதலமைச்சர்கள் மீது கரப்ஷன் கமிஷன் இருக்கிறது. சிலர் தேர்தலை என் வைக்கவில்லை என்று கேட்டார்கள். மஸ்டர் ரோல் என்பது சென்னை நகர மக்களுக்குப் பீதியை உண்டாக்கியிருக்கிறது. மீண்டும் தேர்தல் வந்து



விட்டால் மஸ்டர் ரோல் மீண்டும் ஆரம்பித்துவிடுமோ என்று அஞ்சுகிறார்கள். ஆகவே சென்னை நகரத்து மக்கள் அதை விரும்பவில்லை என்று பொதுமக்கள் சொல்ல நாங்கள் கேட்டிருக்கிறோம். மஸ்டர் ரோலைக் காரணமாகக் காட்டாமல், ஓராண்டு என்று சொல்லுவது, தனி அதிகாரியினுடைய பதவியை ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்கவே ஒழிய தேர்தலைத் தள்ளி வைக்க வேண்டும் என்பதற்காக அல்ல என்பதுதான் எனக்குத் தெரிந்த கருத்தாகும்.

நாங்கள் தேர்தலைக் கண்டு பயப்படவில்லை. 1977 ஆம் ஆண்டிலே ஆட்சியைப் பிடித்தவுடன் மதுரை மாநகராட்சித் தேர்தலை நடத்திக் காட்டியவர்கள்தான் நாங்கள். சென்னை மாநகராட்சித் தேர்தலை நடத்தத் தயாராக இருந்தபோதுதான் இரவோடு இரவாக ஆட்சி கலைக்கப்பட்டு இருண்ட கவர்னர் ஆட்சியை உருவாக்கிக் காட்டினார்கள். கலைத்துவிட்டு உடனே மாநகராட்சித் தேர்தலை வைத்துவிட்டு பிறகு சட்டமன்றத் தேர்தலை நடத்துவார்கள் என்று நாங்கள் அப்போது நினைத்தோம். ஆனால் தேர்தலில் நம்பிக்கையில்லை, கலைத்துவிட்டு அதில் குளிர் காய்வதில் நம்பிக்கையுண்டு என்ற விதத்தில் சில பேர் இருக்கிறார்கள் என்பது தெரிந்தது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, ஆளுநர் ஆட்சியின் மூலமாக மத்திய அரசு ஆள்கிறதென்றால், மத்திய அரசுக்குத் தேர்தலில் நம்பிக்கையில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறாரா?

**திரு. ஜேப்பியார் :** மத்திய அரசில் ஆட்சி செய்கின்ற கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்திதான் சொல்லவேண்டும். என்னைக் கேட்பது சரியாக இல்லை. நகராட்சித் தேர்தலை இடைக் காலத்திலே வைத்தால் மஸ்டர் ரோல் வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் மீண்டும் வந்துவிடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாக வைக்கவில்லையோ என்று சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் பிராட்வே தெருக்கள் எப்படியிருக்கின்றன என்பதைப்பற்றிச் சொன்னார்கள். தெருக்களை மட்டும் சுத்தம் செய்கிற பணிகளை ஏற்றுக்கொள்வது போதாது. சென்னை நகரத்திலே இருக்கிற சினிமா தியேட்டர்களையும் கவனிக்கவேண்டும். நூறாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கெய்டி, சித்திரா போன்ற தியேட்டர்கள் இடிந்து விழுகிற நிலைமையிலே இருக்கின்றன என்று மக்கள் அஞ்சுகிறார்கள். மாநகராட்சி அதிகாரிகள் இதைக் கொஞ்சம் கவனிக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் ரோடில்

1980 ஜூலை 23] [திரு. ஜேப்பியார்]

பஸ்கள் போக முடியவில்லை என்றும் பல பேர் சாகிறார்கள் என்றும் அச்சத்தோடு சொன்னார்கள். இரண்டு மணி நேரம் கவலையை மறந்திருக்க பொது மக்கள் செல்லுகிற கலையரங்குகள் இடிந்து விழுமோ என்ற அச்சம் பொது மக்களிடையே உருவாகியிருக்கிறது. ஆகவே அதைக் கண்காணித்து, சீர்படுத்தி, வேறு கட்டிடங்களைக் கட்ட வேண்டும் என்று கேட்டு இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமர்கிறேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே உள்ள தெருக்கள் எல்லாம் பழுதடைந்து போகிற வாகனங்கள் எல்லாம் பள்ளத்திலே இறங்குகிற காட்சியைப் பார்க்கிறோம். அண்ணா சாலை, அல்லது மெரினா பீச் ரோடு ஆகியவைகள் சுத்தமாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் நகரத்திலே மற்ற பகுதிகளில் சாதாரண மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் பாதாள சாக்கடை மாதிரி ரோடில் குழிகள் உள்ளன. மழைக் காலங்களில் குழந்தைகள் பள்ளிக்குப் போகும்போது, மழைத் தண்ணீர் என்று ஆசையாகச் சென்று கால் வைக்கிறபோது, ரோட்டில் உள்ள பள்ளங்களில் விழுந்துவிடுகின்றனர். சென்னையில் இந்த நிலை மேலும் நீடித்தால், பொது மக்களுக்கு மிகவும் கஷ்டமான நிலை ஏற்படும். தேர்தலை நடத்துவதில் என்ன சங்கடம் இருக்கிறதென்று தெரியவில்லை. ஆளும் கட்சி உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் தேர்தலை நடத்தத் தயாராக இருப்பதாகச் சொன்னார்கள். மிகவும் சந்தோஷம். அதே நேரத்தில் தேர்தலை நடத்துவதற்கு முன்பு வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும்போது, 300, 400 பேர் வசிக்கக் கூடிய பகுதியை விட்டுவிடக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். பாராளுமன்றத் தேர்தலுக்காகத் தயாரித்த பட்டியலையும், சட்டமன்றத் தேர்தலுக்காக தயாரித்த பட்டியலையும் வைத்துக்கொண்டு விவரங்களை எடுக்காமல் புது முறையிலே புதியதாக வாக்காளர் பட்டியலை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விட்டுப்போனவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அது பாதகமாக அமைகிறது. ஆகவே வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதிலே போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் சொன்னதைப் போல கெய்டி சினிமா தியேட்டர் நான் பிறப்பதற்கு முன்பே இருந்ததாகத் தெரிகிறது. நான் சின்னப் பையனாக இருந்தபோதே இருந்தது.



1980 ஜூலை 23]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்பவும் மாண்புமிகு உறுப்பினர் இளைஞர்தான்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** ஆகவே கெய்டி சினிமா தியேட்டரை உடனடியாக இடித்துவிட்டு புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே சித்திரா தியேட்டரும் பழையதுதான். அதையும் புதுப்பிக்க வேண்டும். மாநகராட்சி அதிகாரிகள் உண்மையிலேயே அந்த இடங்களில் எல்லாம் சென்று வருகிறார்களா என்பது தெரியவில்லை. சுகாதாரம் கெட்ட நிலையிலே அவைகள் இருக்கின்றன.

நகராட்சி நடத்தும் டிஸ்பென்சரிகளில் சரியான மருந்துகள் கொடுப்பதில்லை. அங்கே போகிறவர்கள் ஏழையெளிய மக்கள். ஏழையெளிய மக்களுக்கு நல்ல வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். ஆகவே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஓராண்டுக்கு நீட்டிக்காமல் ஓராண்டுக்குள்ளாகவே நகராட்சிகளின் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

*** திரு. நீலநாராயணன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சித் திருத்த மசோதாவின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக என்னுடைய நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மசோதா இந்த மன்றத்திற்குப் புதியது அல்ல என்பதை எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் மாற்றியிருக்கின்றார்களே தவிர்த்து, மாநகராட்சித் தேர்தலைப் பொறுத்தவரையிலே, இந்த அரசு கடந்த காலத்தில் எந்தக் கொள்கையைக் கடைபிடித்து வந்திருக்கிறதோ அதே கொள்கையைத்தான் தற்போதும் கடைப்பிடித்து வருகிறதோ என்று சந்தேகப்படத்தக்க அளவுக்கு இந்த மசோதா அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். சென்னை மாநகராட்சி ஒரு அட்டானமஸ் பாடி என்பதை எல்லோரும் அறிவார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் சமீபத்தில் மதுரையிலே பேசுகிறபோது, தன்னாட்சியைப்பற்றி மொழிந்த பேருரையில் அதற்கு தன்னுடைய சொற்பொழிவிலே முக்கியத்துவம் கொடுத்துப் பேசியிருப்பதை பத்திரிகை வாயிலாக நான் படித்தறிந்தேன்,

[திரு. நீலநாராயணன்] [1980 ஜூலை 23

அப்படிப்பட்ட நிலைமையிலே இந்த மாநகராட்சியில் கடந்த ஆறு ஆண்டுகளாக அந்தத் தேர்தலைத் தள்ளிப் போடுகின்ற சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால், தன்னாட்சி என்ற நிலவரம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பது தன்னாட்சியிலே அக்கறை கொண்டவர்கள் எண்ணிப்பார்க்கவேண்டிய ஒன்று என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்னாலே சில காரணகாரியங்களை, பொருத்தமான காரணங்களை இந்த அவையிலே சுட்டிக் காட்டினார்கள். அதிலே ஒன்று மஸ்டர் ரோல் வழக்கு. இதையே மீண்டும் இங்கே சுட்டிக்காட்டவில்லை. அதை இங்கே சுட்டிக் காட்டக் கூடாது என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஜேப்பியார் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் நானும் அதே காரணத்தை அமைச்சர் அவர்களுக்கு உங்கள் மூலமாகச் சொல்ல வேண்டுமென்று நான் கருதிக்கொண்டு இருந்தேன். இதுவரையிலே சொல்லப்பட்ட பல காரணங்களிலே வலுவான காரணமாக அது அமைந்திருந்தது. அது ஒன்றுதான் வலுவான காரணம். அந்தக் காரணத்தை ஏன் சொல்லக்கூடாது என்ற காரணத்தை அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் எந்தக் கண்ணோட்டத்திலே அந்த வழக்குகளை எடுத்துக் கொண்டாலும்சரி, எங்களைப் பொறுத்தவரையிலே, நாங்கள் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்த மஸ்டர் ரோல் வழக்கு ஒரு கட்சியினுடைய உறுப்பினர் சம்பந்தப்பட்ட வழக்கு அல்ல. அந்த வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள் எல்லாக் கட்சிகளையும் சார்ந்தவர்களாக இருந்த காரணத்தினாலே அதை ஒரு பிரச்சினையாக ஆக்கமாட்டார்கள். அதை தேர்தலை தள்ளிப் போட்டதற்குக் காரணமாக் கொள்ளமாட்டார்கள் என்று நிச்சயமாகக் கருதினேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அதிலே இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிலே இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அதிலே இருக்கிறார்கள். அந்தக் காரணத்தைக் காட்டி இந்த மசோதாவை இதற்கு முன்னாலே இரண்டு முறை கொண்டுவந்து மீண்டும் இன்றையதினம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆனால் அவர்கள் அந்தக் காரணத்தைச் சொல்லவில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எல்லாக் கட்சிகளிலே இருப்பவர்களும் மஸ்டர் ரோல் வழக்கிலே இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள், ஆனால் எனக்குத் தெரிந்தவரையிலே, அதிலே சேர்க்கப்



1980 ஜூலை 23] [திரு. எஸ். ஆர். இராதா]

பட்டிருக்கிறது அ.தி.மு.க.வினர் குற்றவாளிகள் அல்ல, நிரபராதிகள் என்று தீர்ப்பு இருக்கிறது. அதுவும் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. நீலநாராயணன் :** திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களும் குற்றவாளிகள் அல்லர், நிரபராதிகள் என்று விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்ட முன்வடிவிலே அந்த விஷயங்கள் எல்லாம் வரவில்லை.

**திரு. நீலநாராயணன் :** அடுத்து, இந்த முன் மாதிரி உண்மையிலேயே ஒரு வேதனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. அந்த மாதிரியான முன் மாதிரிகள் நீடித்துவிடுமோ என்று அச்சப்படுகிறேன். இதற்கு முன்னாலே அறநிலையத் துறையைச் சேர்ந்த அதிகாரியினுடைய பதவிக்காலத்தை ஒரு வருடம் நீடிக்க வேண்டுமென்று ஒரு பில் கொண்டுவரப்பட்டது. இப்போது மாநகராட்சி அதிகாரியினுடைய பதவிக்காலம் நீடிப்பு . . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதிகாரிகளுக்கு ஒரு வருடத்திற்கு பதவி நீட்டிப்பு கொடுப்பதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது அறங்காவலர்கள் நியமிப்பதற்கு கால தவணை நீடிப்பு மசோதா என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நிறைவேறிய சட்டம் திரும்பவும் வருகிறது.

**திரு. நீலநாராயணன் :** இப்படி அதிகாரிகளினுடைய காலவரையறையை நீடித்துக்கொண்டே போகின்ற காரணத்தினாலே நடைபெற்றுக்கொண்டிருப்பது அ.தி.மு.க. ஆட்சியா அல்லது அதிகாரிகளுடைய ஆட்சியா என்ற ஐயப்பாடு அடையத்தக்க அளவுக்கு நிலைமைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்கு விரைவிலே முற்றுப்புள்ளி வைப்பதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இதைப் பயன்படுத்திக்கொண்டு நம்முடைய அமைச்சர் அவர்கள் விரைவிலே சென்னை மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்கு முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

1980 ஜூலை 23] [திரு. நீலநாராயணன்]

எனக்கு முன்னாலே பேசியவர்கள், இந்த மாநகராட்சித் தேர்தல் நடைபெறாத காரணத்தினாலே என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன, என்னென்ன கஷ்டநஷ்டங்களை மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்த மாநகராட்சி இப்போது விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. புறநகர் பகுதிகள் சென்னையோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகள். சென்னையினுடைய மற்ற பகுதிகள் எந்தெந்த வசதிகளை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனவோ அந்த வசதிகளை அனுபவிப்பதற்கும் அதற்குரிய வழிமுறைகளைத் தேடிக்கொள்வதற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தர பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினாலே, மகத்தான துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் இவர்கள். அவைகளை நீக்குவதற்காகவாவது தேர்தலை விரைவிலே நடத்த வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு ஆபத்தான நிலவரம் இருக்கிறது. புறநகர் பகுதிகள் மாநகராட்சி நிர்வாகத்திற்கு உட்படுத்தப்பட்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதனால் இன்றையதினம் அந்தப் பகுதியில் வீடு கட்டிக்கொண்டிருக்கின்றவர்கள், சாதாரண நடுத்தர மக்களுடைய வாழ்விலே தொல்லைகள் உருவாக்குகிற அளவுக்கு நிலைமை ஏற்பட்டுவிட்டது. அவர்கள் 'பெட்டர்மெண்ட் டாக்ஸ்' அதிகமாகக் கட்டவேண்டும் என்று ஆகிவிட்டது. இதுவரையில் 400 ரூபாய், 500 ரூபாய் என்று இருந்த டாக்ஸ் இன்றையதினம் ரூபாய் 14,000 அளவுக்கு உயர்ந்துவிட்டது. அந்தப் பகுதிகள் மாநகராட்சியில் சேர்க்கப்பட்டுவிட்டதால், அப்படிப்பட்ட ஆபத்தான நிலைமைகள் உருவாகிவிட்டன. இவைகளையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்றால், அதற்கு மக்கள் பிரதிநிதிகளைக் கூட்டி முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

இதே மாதிரி நிலைமைகள் மதுரை மாநகராட்சியாக ஆகியபோது உருவாயின. அப்போதுகூட திராவிட முன்னேற்றக் கழக அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் கூட்டி, அவர்களுடன் ஆலோசனை செய்து, அந்த பெட்டர்மெண்ட் டாக்ஸ்-லிருந்து அவர்களுக்கு ஓரளவுக்கு விதிவிலக்கு அளிக்கின்ற நிலைமையை அன்றையதினம் மதுரை மாநகராட்சியைப் பொறுத்த அளவிலே உருவாக்கிக் காட்டினார்கள். அதுபோலவே சென்னை மாநகராட்சியில் இப்போது சேரும் புறநகர்ப் பகுதிகளுக்கும் அப்படிப்பட்ட ஒரு விதிவிலக்கு கொண்டு வருவதற்கு இவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1980 ஜூலை 23] [திரு. நீலநாராயணன்]

(பிற்பகல் 12-30)

ஆக இப்படிப்பட்ட மக்கள் பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட வேண்டுமென்று சொன்னால், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்க வேண்டும். சென்னையைப்பற்றிப் பல குறைபாடுகளைச் சொல்லலாம். பாதைகள் எப்படி சென்னையில் இருக்கின்றன என்பதைப்பற்றி ஏற்கெனவே இதே மேலவையில் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். பல்லாங்குழிபோல இருக்கின்றன. வேண்டுமானால் அமைச்சர்கள் வரட்டும், காண்பிக்கிறேன் என்று ஒருமுறை சுட்டிக்காட்டினேன். அமைச்சர்கள் வரும் பாதைகள் செம்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பல்லாங்குழி சின்னதாக இருக்கும்.

திரு. நீலநாராயணன் : பெரிய பல்லாங்குழிபோல் பாதைகள் இருக்கின்றன. அந்த அளவிற்கு பிரச்சினைகள் முற்றிப்போயிருக்கின்ற காரணத்தாலே, தேர்தல்களை மிக விரைவில் நடத்த வேண்டும். எவ்வளவு விரைவில் தேர்தல்களை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவில் தேர்தல்களை நடத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்றையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே கமிஷன்களைப்பற்றியும், மற்றவற்றைப்பற்றியும் சுட்டிக்காட்டினார்கள். கமிஷன் போட்டுவிடுகிற காரணத்தாலே எந்த நபரும் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : யாரும் அப்படிச் சொல்லவில்லை. அதை ஒரு சப்ஜெக்ட்டாக வைத்து, பதில் அளிக்க வேண்டாம்.

திரு. நீலநாராயணன் : கமிஷன் என்று சொன்னாலே அதை ஏற்றுக்கொள்கிற சூழ்நிலையிலே இன்றையதினம் நாடு இருந்துகொண்டிருக்கிறது. காரணம் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கம் போய்விட்டால், கமிஷன் ஒன்றும் செய்யாது என்ற முறையில் குளிர்விட்டுப் போய்விடும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதற்கு யார் காரணமாக இருந்தாலும், இப்படிப்பட்ட முன்மாதிரிகள் நாட்டிலே நீடிக்கக்கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, கமிஷன் வருகிறதென்ற காரணத்தாலே இடம் மாறிவிட்டால், கமிஷன் வராது என்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் சொல்லும் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்த விவாதத்தை நான் அனுமதிக்கத் தயாராக இல்லை. நேரத்தை வீணாக்க வேண்டாம்.

திரு. நீலநாராயணன் : அதைக் கண்டு யாரும் அஞ்சவதில்லை . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதைக் கண்டு நான் அஞ்சுகிறேன் (சிரிப்பு). நேரம் வீணாகிறது.

திரு. நீலநாராயணன் : இன்றையதினம் இங்கேயிருந்து அங்கே போய் விட்டால் எந்தக் கமிஷனும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய தனி அலுவலரின் பதவிக் காலத்தை மீண்டும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்கின்ற மசோதாவின் பேரில் 7 மாமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்ததன் நோக்கம் என்ன என்பதைக் கூற விரும்புகிறேன். 1974 நவம்பர் 30 ஆம் தேதி, அந்தத் தனி அலுவலரை நியமித்து பதவிக் காலத்தை நீட்டித்ததே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அதற்குப் பின்னிட்டு வந்த இந்த ஆட்சி, 30—5—1980 ஓடு முடிவடைந்தது. அதற்குப் பிறகு குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்ததாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம் இல்லாத காரணத்தாலும், நாடாளுமன்றத் தொடர்க் கூட்டம் நடைபெறாத காரணத்தாலும், மீண்டும் ஒரு அவசரச் சட்டத்தின் மூலமாக ஓராண்டுக் காலத்திற்கு தனி அலுவலரின் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால், கவர்னர் அவர்கள் ஒரு அவசரச் சட்டத்தை, 6/30 சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த அவசரச் சட்டம்தான் இன்று மசோதாவாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் வைத்திருக்கிறோம். ஆகவே குறிப்பாக எப்படியாவது காலத்தைத் தள்ள வேண்டுமென்றோ, தேர்தல்களைத் தள்ளிப் போட வேண்டுமென்றோ எண்ணம் கண்டிப்பாக இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அடுத்து, குறிப்பாக மாமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதுபோல, 18 வயது உள்ளவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்று பெரும்பான்மையான கட்சித் தலைவர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்றால், அதற்காக வாக்காளர் பட்டியலில் அவர்களின் பெயர்களைச் சேர்க்க வேண்டும். அப்படி அவர்களின் பெயர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்றால், நான்கு மாதங்கள் ஆகும். அதற்குப் பின்னாலே தேர்தல்களை அறிவித்து, தேர்தல்களை நடத்த வேண்டுமென்று சொன்னால், இரண்டு மாதங்களாகும். ஆக ஆறு மாதங்களுக்குள்ளாக தேர்தல்களை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்த மசோதாவைச் சட்டபூர்வமாக்க வேண்டுமென்று இந்த அவையில் கொண்டு வந்திருக்கிறோம். அதே நேரத்தில் கோவை நகராட்சியை மாநகராட்சியாக்க வேண்டுமென்று குடியரசுத் தலைவருக்குக் கடிதம் எழுதி, அவருடைய ஆணையைப் பெற காத்திருக்கிறோம். அதுகூடச் சீக்கிரத்தில் கிடைக்குமென்று கருதிக்கொண்டிருக்கிறோம். கோவை மாநகராட்சி ஆக்கப்பட்டால், அதனுடைய தேர்தலையும் சென்னை மாநகராட்சித் தேர்தலோடு வைத்துக்கொள்ளலாமென்ற எண்ணத்தோடு, இங்கே சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை நகரத்திலுள்ள தெரு விளக்குகள்பற்றியும், சாலைகளின் நிலைமைகளைப்பற்றியும் மாமன்றத்தினுடைய உறுப்பினர்களெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாகச் சென்னை மாநகராட்சியினுடைய நிதி நிலையைப் பொறுத்தவரையில், போதுமானதாக இல்லை என்பதால், பல வேலைகள் தடைபட்டுக் கிடந்தன. இப்போது நிதிநிலையைச் சரியாக்கி, பல்வேறு வேலைகள் தொடங்கப்பட்டு, தெரு விளக்குகளைச் சரிப்படுத்தவும், சாலைகளைச் சீரமைக்கவும், நல்ல முறையில் அவற்றைச் செப்பனிடவும் ஆங்காங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதைப்போலவே இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியர் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். 60, 70 ஆண்டுகளாக இருக்கக்கூடிய தியேட்டர்கள்—பழுதடைந்த தியேட்டர்கள்—பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியனவாக இருக்கின்றன. அப்படிப்பட்ட திரை அரங்குகள் அகற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட திரை அரங்குகள்மீது நடவடிக்கை எடுத்து, அவைகளைப் புதுப்பித்துக் கட்ட மாநகராட்சி மூலமாக நடவடிக்கை எடுக்க இருக்கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ப. குழந்தைவேலு] [1980 ஜூலை 23

மாநகராட்சி வருமானத்தை அதிகரிக்க, நேற்றைக்கு முன்தினம் உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கைபற்றி பதில் அளிக்கின்றபோது நான் சொல்லியிருக்கிறேன். மாநகராட்சியின் மூலமாக திரை அரங்குகள் கட்டப்பட்டு, அதன்மூலமாக வருமானத்தைப் பெருக்க வழி வகைகள் செய்ய இருக்கிறோம். நாடகக் கொட்டகைகள் கட்டப்பட்டு, அதன் மூலமாக வருமானத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் பல்வேறு இடங்களிலுள்ள நிலைமைகளைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கண்டிப்பாக அவைகளை நேரில் பார்த்து, எந்தெந்த இனங்களில் சரிப்படுத்த முடியுமோ, அவைகள் செய்யப்படும். மக்களுக்குப் போக்குவரத்து வசதி ஏற்படுத்துவதோடு, மக்களின் பொதுச் சுகாதாரத்தைக் காக்கும் பொறுப்பையும் ஏற்று நல்ல முறையில் மாநகராட்சி பணியாற்றும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1980 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1980) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1980 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1980) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.



1980 ஜூலை 23]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1980 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1980) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : இத்துடன் இன்றைய காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மேலவை மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-40)

அவை மீண்டும் பிற்பகல் 4 மணிக்குக் கூடியது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

5. அரசின் தீர்மானம்.

மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : தலைவரவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்ட 'மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும்' குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்ட 'மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும்' குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்** : மாண்புமிகு தலைவரவர்களே, மருத்துவத் துறைபற்றிய இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே என்னுடைய சில எண்ணங்களை இங்கே படைப்பதற்கு நான் முயற்சிக்கின்றேன். மருத்துவத்

---

* ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளன

துறையிலே நம்முடைய தமிழ்நாடு கடந்த காலத்தைவிட இப்பொழுது மிகச் சிறப்பாக முன்னேறி வருகிறது. மிகச் சிறப்பாகவே முன்னேறியிருக்கிறது என்றாலும், வேறு பல முன்னேற்றங்களும இன்னும் தேவை என்பதையும் அடிப்படை வசதிகள் இன்னும் தேவை என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் கண்ட அனுபவத்திலே வேலூரில் சி.எம்.சி. யில் இருக்கக்கூடிய வாய்ப்புகளும் வசதிகளும், நோய்களுக்குரிய வைத்திய வசதிகளும் நம்முடைய அரசினர் மருத்துவமனைகளிலே பலவற்றிலே இல்லை என்பதை நான் அனுபவத்தின் வாயிலாகக் கண்டிருக்கிறேன். குறிப்பாக சிறுநீரகத்தை மாறுதல் செய்கின்ற நோய்க்கு, அதாவது சிறுநீரகத்தில் பழுது வந்து விட்டால் வேறு ஒன்றைப் பொருத்துகின்ற வாய்ப்பும் வசதியும் அரசினர் மருத்துவ மனைகளில் இருப்பதாக தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், எனக்குத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்த வரையில், ஒரு ஆசிரியைக்கு அந்த நோய் வந்து அவர் மிகவும் தொல்லைக்கு ஆளாகி 30 ஆயிரம், 40 ஆயிரம் ரூபாய் செலவு செய்தால்தான், அதுவும் பணத்தைக் கட்டிய பிறகுதான் அங்கே சிகிச்சை பெற முடியும் என்ற நிலை ஏற்பட்டு, அதற்குப் பிறகு அமைச்சர்களுடைய பெரு முயற்சி காரணமாக அரசும் அதற்கு ஒப்புதல் அளித்து இறுதியில் அந்தப் பணம் கிடைக்கக்கூடிய நேரத்தில், அந்த ஆசிரியை இறந்துவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் மிக அதிகமான பணத்தை இப்படிப்பட்ட வியாதிகளுக்குச் சிகிச்சை செய்துகொள்வதற்காக செலவு செய்து நிவாரணம் தேட முடியாது. ஆகவே அரசு மருத்துவமனைகளில் இப்படிப்பட்ட சிகிச்சை வசதிகளையெல்லாம் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக மஸ்குலர் டிஸ்டிராபி என்ற வியாதி உண்டு. அதற்கு தமிழ் நாட்டிலே வைத்திய வசதி இல்லை. அதிலே பல குடும்பங்கள் சிக்கி, தொல்லைக்கு ஆளாகி, எங்கெங்கோ சுற்றி இங்கு இருக்கக்கூடிய எல்லா மருத்துவ மனைகளிலும் பார்த்தும், கடைசியில் வைத்திய வசதியில்லை என்று அவர்கள் திருப்பி அனுப்பக்கூடிய நிலையிலே, சாவைத் தவிர வேறு வழியில்லை என்கிற நிலை இருக்கிறது. ஆகவே எந்தெந்த நோய்க்கு இங்குள்ள அரசு மருத்துவ மனைகளிலே வைத்திய வசதிக்கு வாய்ப்பு, வசதி இல்லை என்பதைக் கண்டறிந்து, வெளி நாடுகளில் அதற்கான வைத்திய வசதி முறைகள் இருந்தால், செலவு செய்து நிவாரணம் தேட முடியாது. ஆகவே அரசு மருத்துவ மனைகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் மாண்புமிகு மக்கள் நல்





வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக நம்முடைய நாட்டிலே மருத்துவமனைகளிலே மருந்துப் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. 15 நாட்களுக்கு முன்பு நம்முடைய சென்னையில் திருவல்லிக்கேணியிலே இருக்கக்கூடிய மருத்துவ மனையிலே பிரசவத்துக்குச் சென்றிருக்கக்கூடிய ஒரு அம்மையாருக்கு நான்கு நாட்கள் வரை மருத்துவ வசதியில்லை என்கிற நிலை ஏற்பட்டது. அந்தக் குறிப்பிட்ட மருந்து அங்கே 'சப்ளை' செய்யப்படவில்லை. ஸ்டான்லியிலும் இல்லை. ஜி.எச்-லும் இல்லை. வெளியிலே வாங்கவும் வாய்ப்பு இல்லையென்று சொல்லி அந்த அம்மையாரை அல்லல்பட வைத்தார்கள். இங்கே நான் அதுபற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினருக்குப் பலமுறை சொல்லியிருக்கிறேன். அறையில் ஏற்கப்படாததை இங்கே சொல்லக்கூடாது என்று பலமுறை சொல்லியிருக்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : மாண்புமிகு தலைவரவர்களின் எண்ணத்தை ஏற்றுக்கொள்கிறேன். மருந்துப் பற்றாக்குறை இருக்கும்போது பல்வேறு இடங்களில் இதே நிலை இருக்கிறது. ஆரம்பச் சுகாதார நிலையங்களில்கூட மருந்துப் பற்றாக்குறை இருக்கிறது. ஏதோ தண்ணீர் ஊற்றிக் கொடுப்பது போல் மருந்து கொடுக்கிறார்கள். தேவையான எல்லா மருந்துகளையும் 'சப்ளை' செய்ய வாய்ப்பும் இல்லை. இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் நீக்கி, எல்லாப் பகுதிகளிலும் மருந்தை வழங்கக்கூடிய வகையில், எல்லா ஏழையெளிய மக்களும் எளிதில், சுலபமாக மருந்தைப் பெறக்கூடிய வாய்ப்பினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாவேன்.

இங்கே மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திலே, கும்பகோணத்திலே, நன்னிலத்திலே, பாபனாசத்திலே இப்படிப்பட்ட பகுதிகளில் திரு. இருதய ஆண்டவர் தொழுநோய் மருத்துவக் கழகம் செயல்பட்டு வந்தது. அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் ஒன்று சேர்ந்து ஒரு தொழிற் சங்கம் அமைத்தார்கள். அப்படி தொழிற் சங்கம் அமைத்ததை அந்த நிர்வாகம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதை அமைக்கக் காரணமாக இருந்த ஊழியர்களை தற்காலிக பணி நீக்கம் செய்து, பழி வாங்கும் நடவடிக்கையை மேற்கொண்டது. அதற்குப் பின்னால் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 11—4—1979 முதல் 29—4—1979 வரை உண்ணாவிரதம் மேற்கொண்

டார்கள். உண்ணாவிரதப் போராட்டத்திற்குப் பிறகு மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் தலையிட்டு தொழிற் சங்கத்துடனும் நிர்வாகத்துடனும் ஒரு ஒப்பந்தம் செய்தார்கள். ஒப்பந்தத்தின் அடிப்படையிலே பணியாற்றிக்கொண்டிருந்தவர்களை திடீரென்று 31—8—1979 முதல் நிரந்தரமாகப் பணி நீக்கம் செய்தார்கள். 11—9—1979 முதல் அந்த ஊழியர்கள் 62 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். அந்த நேரத்தில் மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு அறிவிப்பு தந்த நேரத்தில், அந்த நிர்வாகம் ஒப்பந்தத்தை மீறினால், அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளத் தயங்காது என்றெல்லாம் உறுதி மொழி தந்தார்கள். ஆனாலும் இன்றைக்கு அந்த ஊழியர்கள் 50 பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கும் 20 ஆயிரம் தொழு நோயாளிகளுக்கு முறையான சிகிச்சை வசதிகள் இல்லாமல் அவர்கள் கஷ்டப் படுகிறார்கள். அவ்வூழியர்கள் இப்போதும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகிறார்கள். இதையெல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்து நிலைமையைச் சரிசெய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

அதுமட்டுமல்ல, இந்த மருத்துவக் கொள்கைக் குறிப்பின் அடிப்படையிலே சில பகுதிகளிலே, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலே இருக்கக்கூடிய தாய்-சேய்-நலவிடுதி போன்றவைகளையெல்லாம் அரசினர் மருந்தகங்களாக மாற்றுவதற்கு முயற்சி எடுத்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் ஊராட்சி ஒன்றியத்திலே அத்துறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கிற ஊழியர்கள், இந்த நலவிடுதிகள் மருந்தகங்களாக மாறும் நேரத்தில், வேலையிழக்கும் நிலைக்கு உட்படுத்தாமல், அவர்களையும் இதிலே பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியான தலைஞாயிறிலே, நாகையிலே, தஞ்சையிலே எல்லாம் இருக்கக்கூடிய மருத்துவமனைகளைப் பார்த்தால், மிகவும் பரிதாபமாக இருக்கிறது. மருத்துவமனைகள் என்றாலே அவைகள் சுகாதாரத்திற்கு உதாரணமாக இருக்க வேண்டும். தஞ்சாவூரில் இருக்கும் ராஜா மிராசுதார் மருத்துவமனையை எடுத்துக்கொண்டால் அங்கே வராண்டாவில்தான் படுக்கைகள் எல்லாம் போட்டிருக்கிறார்கள். சுகாதாரம் மிகவும் குறைவாக இருக்கிறது. நாகையிலே இருக்கும் மருத்துவமனைக்குச் சென்றால், குறிப்பாக அங்கேயிருக்கும் டி.பி. வார்டுக்குச் சென்றால், செல்பவருக்கு டி.பி. வரும் என்ற அளவுக்கு சுகாதாரக் கேடு அங்கே இருக்கிறது. தலைஞாயிறில்





இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு பள்ளமான இடத்திலே அமைந்திருக்கிறது. அங்கே எந்த நேரத்திலும் தண்ணீர் தேங்கியிருக்கிறது. தண்ணீர் ஓடிக்கொண்டேயிருக்கிறது. சுகாதாரம் கிடையாது. இந்த மருத்துவமனைகளை சுகாதாரமாக வைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டு நிமிடங்களுக்குள்ளே முடிக்க வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசு பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து டாக்டர்களை உற்பத்தி செய்கிறது. டாக்டர்களே கிடைக்காத காலத்தில், டாக்டர்கள் அரசு மருத்துவமனைகளிலே பணியாற்றினாலும், அவர்கள் சொந்தத்திலே தனியாக கிளினிக் வைத்துக்கொள்ளலாம் என்ற நிலைமை இருந்திருக்கலாம். இப்போது அவர் டாக்டராக அரசுப் பணியிலே இருந்தாலும், அவர் தனியாக கிளினிக் வைத்துக்கொள்ள உரிமை இருக்கிறது. இந்தச் சலுகை அவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். காரணம், சாதாரணமாக ஒரு நோயாளி ஆஸ்பத்திரிக்குச் சென்றால், அங்கே அவருக்குப் படுக்கை வசதிகள் இல்லையென்றால், டாக்டர்களைச் சென்று வீட்டிலே பார்த்து அவர்களுக்குப் பணம் தந்ததற்குப் பிறகுதான் இடம் ஒதுக்கப்படுகிறது. அப்படி பணம் கொடுத்தால்தான், அந்த நோயாளிகள் சரிவர கவனிக்கப்படுகிறார்கள். மேலும் குறைந்தது வாரத்திற்கு ஒருமுறையாவது அவர்களைக் கவனித்தால்தான் சிறப்பாக கவனிக்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இதை மாற்ற அரசாங்க மருத்துவமனைகளிலே பணியாற்றும் டாக்டர்கள் சொந்தத்தில் மருத்துவமனைகள் வைத்து நடத்துவதை உடனடியாகத் தடுக்க வேண்டும். அப்போதுதான் ஆஸ்பத்திரிகளில் நன்றாக நோயாளிகள் கவனிக்கப்படுவார்கள். இப்போது ராஜஸ்தானிலே, பீஹாரிலே, குஜராத்திலே எல்லாம் இந்த முறையைக் கொண்டு வந்து அமுல்படுத்துகிறார்கள். அங்கெல்லாம் டாக்டர்கள் சொந்தமாக மருத்துவமனை வைத்து நடத்த சட்டம் அனுமதிக்கவில்லை. அப்படி இருந்தால்தான், ஏழைகள் கவனிக்கப்படுவார்கள் என்பதைச் சொல்லி அதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

* THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI : Hon. Chairman, I am very happy to speak on the Health Programme and I won't take much of the time of this House. Our young people who are coming out of the medical institutions look forward

[Thirumathi Mandakini Krishnamurthi] [1980 ஜூலை 23

to specialisation and even at the All-India level, there is specialisation programme but it is rather difficult for every aspirant to get admission. I would like to suggest that besides merit, we could say that a Graduate in Medicine who has put in 2 to 3 years of rural service will be given preference in admission to whichever branch of Specialisation he wants to take up. Then I think we will have sufficient number of doctors opting to serve in rural areas.

Another point is that some of our young graduates who are appointed in Primary Health Centres and other remote places have no chance to go for specialisation, if they want to do M.S. (Surgery). They have no chance to have special training in the Primary Health Centres. I know a young man who was posted to a Primary Health Centre wanted, on his own, to do an operation but he was not allowed to do the operation. Naturally there were no proper facilities. If he is permitted to take off for a day or two in a week and go to the District Hospital for specialisation, it will be useful to him. During that period, some honorary doctors, called locums, could take up the work there. In this manner, if those young doctors are allowed to have specialised training in the District Hospitals every week or twice a month or something like that, I hope, it will avoid frustration among such young doctors posted to remote places. It will also avoid brain drain.

I am interested in the programme of training of Health Workers or the Nurses in the Plus 2 Vocational Stream, and I found at some place in the Policy Note that the Government were going to reduce the period of training programme for the A.N.M. Since their educational qualification is not so good as that of Plus Two candidates, I think, the reduction of 6 months in the period of their training will not be conducive to their efficiency. Since it is auxiliary type of training, the reduction in the period of their training will result in reduction in their efficiency also. That is why I made an appeal to the Hon. the Health Minister some time back and asked why he should not take these plus 2 girls in his health programme instead of reducing the A.N.M. programme to six months. At that time, I made another appeal also. I said that he could take these girls, after they worked for a year or two, in the Primary Health Centres as a second line of defence and that they might be asked to undergo six months' training in midwifery so that they might also become equal to A.N.M's. If this is done, the Health Department will get all these nurses at the



1980 ஜூலை 23] [Thirumathi Mandakini Krishnamurthi]

expense of the Education Department, without the Health Department spending even a single paisa. The financial strain of the Health Department will be considerably reduced if the girls in the plus 2 vocational course of Nursing are taken in the Primary Health Centres.

With these words, I thank you for having given me this opportunity. Generally, in a democracy, a specialist is not so very broad-minded when he becomes a Minister. But we have in our Health Minister both a democrat and a specialist and I am sure that the Health Department under him will progress by leaps and bounds. Thank you.

* THIRU G. VASANTHA PAI : Hon. Chairman, I thank you for the opportunity given to me. I would like to be excused if I refer to a personal matter. It so happened to me that while I was in Sao Paulo last year, I fell down from an aeroplane and broke some of my teeth. For that, I was treated in Sao Paulo Airport as well as in Curitiba and thereafter in New York and St. Louis. I found that even in the Airport annexe my tooth which was broken was removed by a dental equipment releasing a powerful water-jet which I do not find in any of the hospitals in Tamil Nadu or elsewhere in India. I have been trying several hospitals in this connection and I do not find a tooth being removed with a powerful water-jet as was done to me in a clinic in the Airport annexe in Sao Paulo. I had another experience when I went to St. Louis also for treatment. There, an Indian doctor named Thirumathi Nikita Mehta attended on me and set right one of my teeth. In respect of the same tooth, doctors of eminence here—I do not want to mention the names—said that there was a cavity and that it had to be pulled out and they had pulled out one of my left molars. But, the doctor at St. Louis removed the pulp and made an excavation into the pulp chamber. Then she removed the pulp from the chamber and filled it up with some medicine and with a substance called Gatta Parcha and sealed it. After I came to India, an infection started at the root of that tooth and I wanted to consult a doctor. I searched all over. Finally, Dr. Cherian who was once the Chief Medical Officer of the Perambur Hospital and who is now in the Vijaya Hospital told me of a doctor who could attend on me. That is Dr. Rajan of the Dental College in Madras. I was sceptical because I was told earlier that nobody in India could attend to my tooth. I went to that doctor with an

introduction letter from the Deputy Chairman. When I met him, instead of giving me four sittings as was done in America, he gave me about twenty sittings. To my great happiness he removed the pulp from the inner chamber of the molar. He also removed the

(பிற்பகல் 4-20)

sepsis from the root of the tooth. He took a considerable time over it and even now I am his patient. The reason is that he has not got the necessary equipments in the hospital. The only equipment he is using is his own brain. In such conditions, he has attended on my tooth and I must congratulate the Government of Tamil Nadu on processing such a person as the Dean or the Principal of the College. There is no other equipment which is given to him for this purpose. I appeal to the Hon. Minister to look into this because this 'tooth business' affects everybody and everybody has to get a decayed tooth removed and have artificial tooth in its place. Instead, if someone could repair the existing tooth, it will be a great boon. This has to be attended to with a crown which has to be made of acrylic, porcelain or vitalium. Vitalium and Porcelain crowns cannot be made in Madras City and have to be done only in Bombay. Those things have to be sent to Bombay for being made with a mould from here. There is no equipment here to do vitalium or porcelain crowns in the City and we have facilities to make only acrylic crowns. I find that the Dental Hospital in Madras is ill-equipped. Most of the dental chairs are out of date and they should be replaced. I think the Government should have at least one hospital in the State, particularly in the Metropolitan City of Madras, where all the equipments available in U.S.A. should be made available. This is my request to the Hon. Minister and I am giving him the two pamphlets, which I have already shown to you, Mr. Chairman, which illustrate and furnish information as to how tooth can be saved by endo-dantic treatment, which is being followed in Great Britain and the U.S.A.

I then go to the next matter. I am told that this Government, before the Assembly was dissolved, had appointed a Super Committee to go into the functioning of several hospitals and find out what was lacking in them. They have done their work for 1½ years till the Advisers' Government came. I would like to know whether this Government is thinking of reinstating that Committee and making it continue the work which it had left half-finished.



The third matter which I want to point out to the Hon. Minister is a matter concerning the students of the Medical College. I do not find any adequate material in the Performance Budget, Budget Estimates, etc. furnished to us. That is why I request the Hon. Minister to make some sort of an explanatory statement as to what the Government are going to do about the problems which I am going to state presently. We have got 1,048 seats in the First Year M.B.B.S. This year, 1,048 candidates who have passed the old P.U.C. are going to proceed to the First Year Medical Course. Recently, we introduced the plus 2 courses. So, another 1,048 candidates from the plus two course are going to be pumped into the First Year M.B.B.S. How are the Government going to have double the number of students in the First Year course ? It is going to be double the existing number and how are they going to manage for all the five years in the Medical College ? What is the Minister going to do about the laboratory equipments and the personnel for teaching ? What is going to be done about instruments for dissection of bodies, etc., for anatomy classes for all these students and many other apparatus for laboratory work ? What are the concrete steps that the Government are going to take ? There is nothing stated in the pamphlets issued to us about these questions. Therefore, I request the Hon. Minister to enlighten us on these points. This is a serious problem because the number is going to be doubled for all the five years. Therefore, the Government have to give their immediate attention to this problem. Otherwise, what will happen, is that people will be working with less than half the facilities that are required. I would, therefore, once again request the Hon. Minister to look into these matters.

Sir, I come to the last point. Environmental pollution, about which something has been stated in the Policy Note, is on the increase because slum clearance is not being done properly. I brought to the notice of the House, the other day, about a cricket ground being invaded as a new slum. Even now, after the order of the Minister for Slum Clearance, that slum has not been cleared from the cricket ground and it has become a public convenience for the slum-people. Now, areas like this are being spoiled. Such areas are considered as the lungs of the City but nothing is being done about such areas being spoiled. I think that the people in the Medical Department, the Slum Clearance Board, etc., should put their heads together and have a uniform programme to create better environmental conditions. The number of public conveniences should

be increased. People in the slums should be given water facilities, public conveniences, etc. I hope that the Medical Department will give serious attention to this problem.

The slums also bring in their wake a lot of mosquitoes because the people in the slums have a lot of cattle under their control and they allow the cattle to graze on the roads. They wash the cattle and the water which stagnates becomes a breeding-ground for mosquitoes. All these cause considerable nuisance to the residential localities in the City. Something must be done for eliminating mosquitoes which, as the Hon. Minister said the other day, are also responsible for Enciphalitis. Something has got to be done about all these matters and I hope that the new Minister, with his vitality and energy, will not fail us.

Thank you.

*செல்வி அ. லீலாவதி :* மாண்புமிகு தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பின்மீது நடக்கும் விவாதத்தில் பங்கு கொண்டு பேசும் வாய்ப்புக் கிடைத்தமைக்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போதே, ஹெல்த்துக்காக என்று ரூபாய் 15 கட்டணமாக வசூலிக்கிறார்கள். அதில் மெடிகல் செக்கப்புக்காக என்று ரூபாய் 2 வசூலிக்கப்படுகிறது. ஆனால் இப்போது ஒரு பள்ளியில்கூட மாணவர்களுக்கு மெடிகல் செக்-அப் செய்வதில்லை. நான் சிறுமியாக இருக்கும்போது, பள்ளிகளில் ஆண்டுக்கொருமுறை மெடிகல் செக்-அப் நடக்கும். . பள்ளிக்கு வருகிற மெடிகல் ஆபீசர் எங்களைப் பரிசோதித்து எங்களுக்கு ஏதேனும் வியாதி இருக்கிறதா என்று பார்த்து, வியாதிகள் இருந்தால், அதுபற்றி எங்கள் பெற்றோர்களுக்குக் கடிதம் எழுதிக் கொடுத்து, இந்தக் குழந்தைக்கு இன்ன குறை இருக்கிறது, அல்லது இந்த வியாதி இருக்கிறது, இதை நிவர்த்தி செய்ய இந்த சிகிச்சை செய்ய வேண்டும் அல்லது இந்த விட்டமின் மாத்திரை கொடுக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். ஆனால் இன்றையதினம் அப்படிப்பட்ட முறை சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் கூட கிடையாது. மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குப் பல்வேறு விதமான வியாதிகளும் குறைபாடுகளும் இருக்கின்றன. அங்கே படிப்பவர்களில் பெரும்பாலும் ஏழைப் பிள்ளைகளாக இருப்பவர்களே அதிகமாக இருந்தாலும், அவர்களிடமும் ரூபாய் 15 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் அந்தக் குழந்தைகளுக்கு எந்தவிதமான மெடிக்கல் செக்கப்பும் செய்வதில்லை. அவர்கள் நோய் வந்து கஷ்டப்படுகிறபோது, ஆசிரியர்களான



நாங்கள் அதைப் பார்த்து அவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே மீண்டும் பள்ளிகளில் மாணவர்களை மெடிக்கல் செக்-அப் செய்யும் முறை கொண்டுவரப்பட்டால், அது மாணவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். குழந்தைகளுக்கு வியாதிகள் இருந்தால், ஆரம்ப காலத்திலேயே கண்டுபிடிக்க அது உதவியாக இருக்கும். தொடக்கக் காலத்திலேயே வியாதியைக் கண்டுபிடித்துவிட்டால், அவர்களுக்கு வைத்தியம் செய்வது ஏழைப் பெற்றோர்களுக்கு இயன்றதாக இருக்கும். இப்போது அந்தகைய வசதி எதுமில்லாமல் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பொதுவாக, ஒரு குழந்தை இருமினால், அது எதன் காரணமாக இருமிக் கொண்டிருக்கிறது என்று பார்க்காமல், அவர்களுக்குத் தெரிந்த மருந்து எதையாவது கொடுத்துக் கொண்டேயிருப்பார்கள். டி.பி. வியாதியின் காரணமாக இருமிக் கொண்டிருக்கும் குழந்தையாக இருந்தால், அதற்கு உடனடியாக நாம் சிகிச்சை கொடுக்க வேண்டும். இதற்கு மெடிகல் செக்-அப் இருந்தால்தான் முடியும்.

அதைப்போலவே எக்ஸ்-ரே கூட பள்ளிகளுக்கு வந்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். அதையும் செய்ய வேண்டும். அதைப்போலவே பள்ளி ஆசிரியர்களுக்கும் ஆண்டுக்கு ஒரு முறையாவது ஒரு மெடிக்கல் செக்-அப் செய்யும் முறை இருந்தால், நன்றாக இருக்கும். எனவே பள்ளிகளுக்கே மெடிகல் ஆபீசர்கள் வந்து இவற்றைச் செய்யும்படியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-30)

அது மட்டுமல்லாமல், மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் வாரத்திற்கு ஒரு முறையோ, மாதத்திற்கு ஒரு முறையோ வைட்டமின் மாத்திரைகளைக் கொடுத்தால் நலமாக இருக்கும். அம்மாணவர்களுக்கு மதிய உணவைக் கொடுக்கிறார்கள் என்றாலும், அது வைட்டமின் சத்து கலந்ததாக இல்லை. ஆகவே அது குழந்தைகளின் வளர்ச்சிக்கு ஊட்டம் அளிப்பதும் இல்லை. ஏதோ கொடுப்பதைச் சாப்பிடுகிறார்கள். மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கக்கூடிய ஏழைக் குழந்தைகள்தான் நமது நாட்டின் சொத்துக்கள். அவர்கள்தான் நமக்காக உழைப்பவர்களாக மாறுகிறார்கள். அதிகம் படித்த மற்றவர்கள் வெளிநாடுகளுக்குப் போய்விடுகிறார்கள். ஆகவே மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு எந்தெந்த விதத்தில் உதவி செய்யலாம் என்பதை அறிந்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(செல்வி அ. லீலாவதி) [1980 ஜூலை 23

மாநகராட்சிப் பள்ளிகளில், அதுவும் குறிப்பாகத் தொடக்கப் பள்ளிகளில் சானிடரி கன்டிஷன் மிகவும் மோசமாக இருக்கிறது. உள்ள 300 தொடக்கப் பள்ளிகளில் ஏறக்குறைய 200 பள்ளிகளில் மாணவர்கள் சிறுநீர் கழிக்கப் போதுமான வசதிகள் இல்லை. ஆண்டுக்கு ஒருமுறை "கிளென்லினெஸ் வீக்" என்று கொண்டாடி மாணவர்கள் மிகவும் சுத்தமாக இருக்க வேண்டுமென்று நாம் போதிக்கிறோம். ஆனால் மாணவர்கள் சுத்தமாக வைத்துக்கொள்ளக்கூடிய வகையில் சிறுநீர் கழிப்பிடங்கள் இல்லாததால், அவர்கள் பள்ளியின் ஒரு மூலையிலும், தெருக்களின் ஓரத்திலும் சிறுநீர், மலம் கழித்தல் போன்றவற்றைச் செய்கிறார்கள். ஆகவே பள்ளிக்கூடத்தைச் சுற்றி துர்நாற்றம் அடிக்கிறது. அப்பள்ளிகளில் பணிபுரியக்கூடிய ஆசிரியர்கள் அதை நாள் முழுவதும் சுவாசித்துக்கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. மாணவர்களும் அந்த அசுத்தக் காற்றை சுவாசித்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்து பள்ளிகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளக்கூடிய வகையில் எல்லாப் பள்ளிகளிலும் கழிவிடங்களை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே சினிமா தியேட்டர்களிலும் மிக மோசமான நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கடி மருத்துவமனைகளுக்குச் சென்று பார்வையிடுவதைப்போல சினிமா தியேட்டர்களையும் கவனிக்கக் குழுக்களை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேனேஜ்மென்ட் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு மெடிக்கல் ரீயிம்பர்ஸ்மென்ட் வசதிகள் இல்லை. அரசுப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கும், மாநகராட்சிப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கும் மெடிக்கல் ரீயிம்பர்ஸ்மென்ட் வசதி இருக்கிறது. அதைப்போலவே மருத்துவமனைகளில் சிகப்பு அட்டை கொடுத்து அரசு ஆசிரியர்களையும், மாநகராட்சி ஆசிரியர்களையும் கவனிக்கிறார்கள். ஆனால் அதுபோல் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குச் செய்வதில்லை. ஆகவே அவர்களுக்கும் சிகப்பு அட்டையைக் கொடுத்து மருத்துவ வசதிகளைச் செய்ய வேண்டுமென்றும், ரீயிம்பர்ஸ்மென்ட் வசதிகளை அவர்களுக்கும் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பல ஆண்டுகாலமாக ஊக்க ஊதியம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் 1980 ஆம் ஆண்டு சனவரி முதல் இது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.



1980 ஜூலை 23]

திரு. ஆ. நல்லசிவன் : மேலவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறை கொள்கை விளக்கக் குறிப்பின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தத் துறைக்காக மொத்தம் 108 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட 11 கோடி ரூபாய் அதிகம்தான் இது. ஆனால் ஒட்டுமொத்தமாக பட்ஜெட் தொகையில் பார்க்கும்போது, இது 11 சதவீதம் தான் வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள ஐந்து கோடி மக்களுக்கும் எவ்வளவு என்று கணக்கிட்டுப் பார்த்தால், ஓராண்டுக்கு ஒரு நபருக்கு ரூபாய் 21.60 தான் வருகிறது. நவீன விஞ்ஞான வளர்ச்சியடைந்த நாடுகளோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்.

குறிப்பாக பட்ஜெட்டிலிருந்து மக்களுடைய சமூக நலனுக்காகச் செலவிடக்கூடிய துறைகள் கல்வித் துறையும், சுகாதாரத் துறையும்தான். இந்த இரண்டு துறைகளுக்கும் ஒதுக்கியிருக்கிற தொகைகளைச் சேர்த்தால், மொத்தத் தொகையில் 34 சதவீதம்தான் வருகிறது. அதாவது கல்விக்கு 23 சதவீதமும் சுகாதாரத்திற்கு 11 சதவீதமும் ஒதுக்கியிருக்கிறோம். இந்தச் செலவினத்தை 40 சதவீதத்திற்காவது உயர்த்த கல்வியமைச்சர் அவர்களும், சுகாதார அமைச்சர் அவர்களும் அமைச்சரவையில் போராடினால் நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம். அவரவர்கள் தங்களுடைய இலாக்காக்களுக்காக வேண்டிய பணத்தைப் பெறுவதற்காக போராடத்தான் வேண்டியிருக்கும். மருத்துவத் துறைக்கு நம்முடைய நாட்டில் அதிகப் பணம் தேவைப்படுகிறது. ஆகவே கல்வித் துறைக்கும், சுகாதாரத் துறைக்கும் சேர்த்து 40 சதவீதத் தொகைக்குக் குறையாமல் ஒதுக்க வேண்டியது அத்தியாவசியம் என்று நான் நினைக்கிறேன்.

இருபத்துமூன்று மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரிகளில் மொத்தம் 14,202 படுக்கைகள் இருக்கின்றன. அவற்றில் 9,600 படுக்கைகள் சென்னை நகரத்திலே உள்ள ஆஸ்பத்திரிகளில் இருக்கின்றன. மீதியுள்ள நாலாயிரத்து சொச்சம் படுக்கைகள் கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் உள்ள மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரிகளில் இருக்கின்றன. ஆகவே சென்னையில் உள்ள படுக்கைகளைக் குறைக்கச் சொல்லவில்லை நான். மற்ற ஆஸ்பத்திரிகளில் உள்ள படுக்கைகளை அதிகரிக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். அது மட்டுமல்லாமல், எல்லா ஆஸ்பத்திரிகளிலும் உள்ள படுக்கைகளை அதிகப்படுத்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1980 ஜூலை 23

ஒதுக்கியுள்ள 108 கோடி ரூபாயை எப்படிச் செலவிடுகிறார்கள் என்று பார்க்கும்போது, நகரத்திலே உள்ளவர்கள் அதிகமான கூப்பாடு போடுவதால், அதிகமாக வசதி செய்து கொடுக்கிறார்கள். கிராமப்புறத்தில் உள்ளவர்கள் அதிகமாகக் கூப்பாடு போடாததால், அவர்களுக்குச் செய்வதில்லை. இப்போது கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கும் மருந்து வேண்டுமென்ற ஞானம், அறிவு அதிகமாகிக்கொண்டு வருகிறது. ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களால் சமாளிக்க முடியாத அளவிற்கு 500, 600 பேஷன்டுகள் ஒரு நாளைக்கு வருகிறார்கள். ஆகவே கிராமப்புறத்து மக்களும் மாறிவருகிறார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு கிராமப்புறத்திற்கும் சரிசமமாக நிதியொதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூப்பாடு அதிகம் வருகிற இடங்களுக்கு அதிகம் கொடுத்துவிட்டு கூப்பாடு அதிகம் வாராத இடங்களுக்குக் குறைத்துவிடக் கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

கிராமப்புறத்திற்கு டாக்டர்களை அனுப்புவது என்பது முக்கியமான பிரச்சினை. சமீபத்திலே பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். உலகத்தில் உள்ள பெரும்பான்மையான நாடுகளில் இந்திய டாக்டர்கள் இருக்கிறார்கள் என்றும், இந்திய நாட்டு டாக்டர்கள் இல்லாத நாடுகளே உலகத்தில் இல்லை என்ற அளவிற்கு இந்திய டாக்டர்கள் வெளிநாடுகளுக்குப் போகிறார்கள் என்றும் தகவல் இருக்கிறது. ஐக்கிய நாடுகளில்கூட நம்முடைய டாக்டர்களைப் பயன்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் இத்தனை பேருக்கு ஒரு டாக்டர் என்ற விகிதத்தைப் போட்டுப் பார்த்தால், அந்த அளவிற்கு இங்கே டாக்டர்கள் இல்லை. ஒரு டாக்டரை உருவாக்க ரூபாய் 1,35,000-ஐச் செலவழிக்கிறோம். சமுதாயப் பணத்தைச் செலவழித்து ஒரு டாக்டரை உருவாக்கிய பிறகு, அவர் எங்கே வேலை செய்ய வேண்டுமென்று முடிவு செய்கின்ற பொறுப்பு சமுதாயத்திற்கு இருக்க வேண்டுமா அல்லது அவர் முடிவு செய்ய வேண்டுமா? நகரத்திலே வசதியாக உட்கார்ந்துகொண்டு கிராமப்புறத்திற்குப் போகமாட்டேன் என்று சொன்னால், இந்தச் சமுதாயம் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்க வேண்டுமா? ஆகவே கிராமப்புறத்திற்குப் போக வேண்டுமென்று அரசாங்கம் அவர்களை வற்புறுத்த வேண்டும். மூன்று வருடங்களுக்குக் கிராமப்புறத்திலே அவர்கள் பணியாற்ற வேண்டுமென்று வற்புறுத்தலாம். அவர்கள் படிக்கும்போதே அதை ஒரு கண்டிஷனாகப் போடலாம். கட்டாயமாக கிராமப்புறத்திற்கு அவர்களை அனுப்ப என்ன வழி என்று யோசிக்க வேண்டும்.



1980 ஜூலை 23] [திரு. ஆ. நல்லசிவன்]

உலகத்தில் பல்வேறு பகுதிகளில் கால்நடையாகவே சென்று மருத்துவம் பார்க்கும் பேர்ஃபுட் டாக்டர்கள் இருக்கிறார்கள். 100 கோடி மக்களைக் கொண்ட சைனாவில்கூட டாக்டர்கள் மருந்தைத் தூக்கிக்கொண்டு கிராமப்புறத்திற்குச் சென்று சிகிச்சை செய்கிறார்கள் என்பதைப் படிக்கும்போது, பெருமையாக இருக்கிறது. ஆனால் ஒரு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் ரூபாயைச் செலவழித்து உருவாக்கப்பட்ட டாக்டர்கள் கிராமப்புறத்திற்குச் செல்லமாட்டேன் என்று சொல்லும்போது, அரசாங்கம் அவர்களை அப்படிச் செல்லும்படி கட்டாயப்படுத்த முடியாமல் இருக்கிறது. அப்படியென்றால் கோளாறு எங்கே இருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஆகவே அவர்கள் படிக்க வரும்போதே கண்டிஷன் போடலாம். உதவித் தொகையைக் கொடுக்கும்போது, கண்டிஷன் போடலாம். இதைப்பற்றியெல்லாம் யோசிக்க வேண்டும். அட்மிஷனில் எனக்கு அனுபவம் இல்லை. இல்லாவிட்டால் இவர்களை மேல்நாடுகளுக்கு அனுப்பாமல் தடுப்பது எப்படி என்பதைப்பற்றி

(பிற்பகல் 4-40)

யோசிக்க வேண்டும். இவர்களையெல்லாம் தயார் செய்து இந்த நாட்டு மக்களுக்கு அவர்கள் வைத்தியம் பண்ணுவதற்கு வருவதற்கு முன்னாலேயே, நம் நாட்டிலே உள்ள சித்த வைத்திய முறையில், இந்திய நாட்டு வைத்திய முறையில் வைத்தியப் பயிற்சி பெற்றவர்களைப் பயன்படுத்தலாம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். சித்த வைத்தியர்கள் வருவதிலும் குறை ஏற்பட்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டிலே 10 ஆயிரம் பேர்களை தமிழ்நாட்டிலே சித்த வைத்தியர்களாக ஆக்க, ஆர்.ஐ.எம்.பி. தேர்வு என்று ஒன்று நடத்தி பட்டமளிப்பதாக இருந்தார்கள். அதன்படி தேர்வும் நடத்தினார்கள். இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அந்தத் தேர்வின் ரிசல்ட் என்னவாயிற்று என்று யாருக்கும் தெரியவில்லை. அந்த முடிவைப்பற்றி இன்னும் யாருக்கும் தெரிவிக்கப்படவும் இல்லை. குடியாத்தம் தாலுகாவிலே உள்ள சித்த வைத்தியர்கள் சங்கம்கூட ஒரு அறிவிப்பு செய்திருக்கிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். அந்தத் தேர்வின் முடிவு என்ன ஆயிற்று? அதை ஏன் வெளியிடவில்லை என்று கேட்டுக்கொள்கிறேன். அடையாறிலேகூட ஒரு சித்த மருந்து உற்பத்தி நிறுவனம், பார்மஸி இருக்கிறது. சித்த வைத்திய மருந்துகளை அங்கு தயாரிக்கிறார்கள். அந்த மருந்துகளை கிராம மக்கள் எப்படி உபயோகப்படுத்துவது என்ற அளவுக்காவது ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்தபட்ச வைத்தியர்களாவது வரவேண்டும். அந்த வைத்தியர்கள் அங்கு இருந்து அந்த மருந்துகளைப் பயன்படுத்துமளவுக்காவது ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்தபட்ச வசதியாவது செய்து தரவேண்டும்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1980 ஜூலை 23

எம்.பி.,பி.எஸ். டாக்டர்கள் வருகின்ற வரையிலே கிராம மக்கள் காத்துக் கொண்டிருக்க முடியாது. கிராம மக்கள் சித்த வைத்திய முறையையாவது பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன். அந்த சித்த வைத்தியர்கள் தேர்வு என்ன ஆயிற்று? அதன் முடிவு என்ன என்று சொன்னால், நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு விஷயம்பற்றிச் சொல்கிறேன். இப்போது ஆனரரி டாக்டர்கள் என்று இருக்கிறார்கள். இந்த ஆனரரி முறை வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். பணக்கார பேஷண்டுகளை டாக்டர்கள் பிடிப்பதற்கு அந்த முறை ஒரு கிரௌண்ட்டாக இருக்கிறது. பணக்கார பேஷண்டுகள் ஆஸ்பத்திரிக்கு வரும்போது, அவர்களைப் பிடிப்பதற்கு இது வசதியாக இருக்கிறது. ஒரு காலத்திலே ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்கள் அதிகமாக இல்லாத காலத்திலே, இந்த முறை தேவைப்பட்டது. அந்தக் காரணத்திற்காகத்தான் ஆனரரி டாக்டர்கள் தேவைப்பட்டனர். இன்றையதினம் நிறைய ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்கள் இருக்கும்போது, ஏன் அரசாங்கம் ஆனரரி டாக்டர்களை வைத்திருக்கிறது? இந்த ஆனரரி முறை தேவையில்லை. இந்த முறை தேவை இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட பேசியதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். அதை அமுல்படுத்த பிரஷர் இருக்கும், மற்றவர்களிடமிருந்து, முக்கியமானவர்களிடமிருந்துகூட பிரஷர் இருக்கலாம். அமைச்சர் அவர்கள் சொல்லிய கருத்து ஒரு வரவேற்கக்கூடிய கருத்து. ஆகவே அந்தப் பிரச்சினைகளையெல்லாம், தடைகளையெல்லாம் தாண்டி வந்து, அவருடைய கருத்தை அமுல்படுத்த முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தனியாக டாக்டர்கள் பிராக்டீஸ் செய்வதைப் பற்றிச் சொல்கிறேன். இதிலே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், பணக்கார பேஷண்டுகளாக வந்தால், அந்த பேஷண்டை தன்னுடனேயே கூட்டிப்போய் விடுகிறார்கள். தனக்கு வேண்டிய ஏழை பேஷண்டாக இருந்தால், அவர்கள் பணம் செலவழிக்க முடியாது என்ற அளவில், அவர்களை சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் சேர்த்துவிடுகிறார்கள்.

இதிலே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு வருகின்றவர்களை அவர்கள் வீட்டுக்கு வரச் சொல்லிவிடுகிறார்கள். எனக்குத் தெரிந்த வரையிலே, நான் சொல்கிறேன். எனக்குத் தெரியும். நானே என்னுடைய மகளை டான்சில்ஸ் ஆப்பரேஷன் பண்ண வேண்டும்



1980 ஜூலை 23] [திரு. ஆ. நல்லசிவன்]

என்பதற்காக ஆஸ்பத்திரிக்கு வெளியே அழைத்துச்சென்று சிகிச்சை செய்திருக்கிறேன். டாக்டர் பீஸ் பண்ணி அப்படி செய்திருக்கிறேன். அது என் சொந்த அனுபவம். அதைத்தான் நான் இங்கே சொல்கிறேன். ஆகவே டாக்டர் தனியாக பிராக்டீஸ் பண்ணக்கூடாது என்ற அளவுக்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். தனியாக பிராக்டீஸ் செய்வது என்ற நிலை இருப்பதால் என்ன ஆகிறது என்றால், இங்கே 5 வருட காலம் டாக்டருக்குப் பயிற்சி பெற்றவர்களை, ஒரு மூன்று வருட காலம் ஸ்பெஷலிஸ்ட் ஆக ரூ. 500 சம்பளத்தில் பணியாற்ற வெளியே வரச்சொன்னால், கிராமப்புறங்களுக்கு வரச்சொன்னால், வரமாட்டேன் என்கிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டும். அவர்களுக்கு சேவை மனப்பான்மை வர வேண்டும். அந்த சேவை மனப்பான்மை இப்போது இல்லாமல் போய்விட்ட சூழ்நிலையில், நாம் இன்றைக்கு ஒன்றும் செய்யமுடியாத நிலைமைகள் ஏற்பட்டுவிட்டன. அவர்கள் 500 ரூபாய் சம்பளத்திற்கு வரமாட்டேன் என்கிறார்கள். இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்தால் வருவார்கள் என்று கருதுகிறேன். இந்த ஜனநாயக அமைப்பிலே அவர்களுக்கு ஒரு சேவை மனப்பான்மை வர வேண்டும். அப்படிப்பட்ட மனப்பான்மையில் அவர்கள் இன்று இல்லை. ஆகவே, வெளியே தனியாக பிராக்டிஸ் பண்ணும் முறையை நிறுத்த வேண்டும். அந்த அளவுக்கு அரசு நான்-பிராக்டிஸிங் அலவன்ஸ் முறையைக் கொண்டுவர வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தது, பார்மசிஸ்ட் போராட்டங்கள் தமிழ் நாட்டிலே நிறைய நடக்கின்றன. இப்போது புதிய அமைச்சர் அவர்கள் பதவிக்கு வந்திருக்கிறார்கள். அவர்மீது நான் ஒன்றும் சொல்லவில்லை. அங்கே பார்மசிஸ்ட்கள் தகராறு இருக்கிறது. இந்த இலாக்காவில் தகராறு இருக்கின்றது. பார்மசிஸ்ட்களுக்கும் டாக்டர்களுக்கும் தகராறு இருக்கிறது. பார்மசிஸ்ட்களை டாக்டர்கள் அங்கீகரிக்க மறுக்கிறார்கள். நான் போன தடவையேகூட முந்தைய அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன். அந்த அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். பார்மசிஸ்ட் அமைச்சர் அவர்களைப் பார்ப்பதற்கு பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

மருத்துவக் கல்லூரிபற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மதுரை மருத்துவக் கல்லூரியில் பி.பார்மசிஸ்ட் மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அதிலே அரசாங்கத்தில் ஒரு குறையைச் செய்திருக்கிறார்கள். அதாவது 1979 ஆம் ஆண்டிலே மதுரையிலிருந்து அதைத் திருச்சியிலே கொண்டுபோய் சேர்த்திருக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், டெல்லியில் துக்ளக் பண்ணிய மாதிரி இருக்கிறது. துக்ளக் டெல்லியிலேயிருந்து ஹைதரா

பாத்துக்கு தலைநகரை மாற்றியது போல இருக்கிறது. பையன்களைச் சேர்ப்பது மே மாதத்தில் என்று சொல்லி பிறகு செப்டம்பர் என்று ஆகியது. அந்தத் தாமதத்தை 'அட்ஜஸ்ட்' பண்ணி விட்டார்கள். காலம் தள்ளிப் போய்விட்டது. இப்போது என்ன ஆயிற்று? அவர்கள் திரும்பவும் இரண்டு ஆண்டுகள் படிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதற்கிடையே பிளஸ் 2 மாணவர்கள் வந்துவிட்டார்கள். இவர்கள் ஒரு வருடம் படித்தால் போதும். அடுத்த வருடம் பார்மசிஸ்ட் ஆகிவிடுவார்கள். இந்த நிலையில் ஏற்கெனவே ஒரு வருடம் படித்தவர்கள், முந்தியே சேர்ந்தவர்கள் ஏன் பின்னாலே போகிறார்கள்? நான் இப்போது ஒரு யோசனை சொல்லுகிறேன். அந்த மாணவர்கள் நூறு பேர்கள் இன்றைக்கு உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். 24 ஆம் தேதியிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதம் என்று அறிவிப்பு செய்திருக்கிறார்கள். அவர்களைப் பழி வாங்கக்கூடாது. இந்த ஜூலை மாதத்திலிருந்து அக்டோபர் முடிய பர்ஸ்ட் இயர் படிப்பு என்று சொல்லி படிக்கச் சொல்லிவிடுங்கள். நவம்பர் மாதத்திலிருந்து 1981 ஜூன் மாதம் வரையில் செகண்ட் இயர் முடிந்ததாகச் சொல்லுங்கள். ஆக 2 வருடங்கள் கடந்துவிடும். எம்.பி.,பி.எஸ்., ஸ்டூடன்ட்களுக்கு 4½ வருடங்கள் ஆகிவிட்டன. முதல் வருடம் சொல்லிக்கொடுத்த ஆசிரியர்கள் சும்மா இருக்கிறார்கள். இப்போது புதிய ஆசிரியர்கள் தேவையில்லை. அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நான் யோசனை சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களும் சேர்ந்து செய்யவேண்டிய முடிவு இது என்று சொல்கிறேன். நூறு பி.பார்ம் மாணவர்கள், மதுரை கல்லூரியிலே உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். அரசாங்க நடைமுறைகளில் ஏற்பட்ட தவறுகளினால் அவர்கள் இரண்டு வருடங்களை இழக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தக் காரணத்திற்காக அவர்கள் ஒரு வருட காலத்தை வீணாக்க முடியாது என்பதைச் சொல்லி, இந்த யோசனையைச் சொல்லுகிறேன்.

அடுத்து, மருந்துக் கடைகள் கண்ட்ரோல்பற்றிச் சொல்கிறேன். 'டிரக்ஸ் கண்ட்ரோல்' சம்பந்தமாக போன மந்திரிசபையில் இருந்த அமைச்சர் அவர்களிடம் சொன்னேன். அவரிடம் அதைப்பற்றி ஏற்கெனவே சொன்னேன். அந்த அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். நான் மட்டும் சொன்ன சமாசாரம் அல்ல அது. நமது மாஜி துணைத்தலைவர் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டியிலும் சொல்லியாகி விட்டது. இப்படி பல கமிட்டிகளிலேயிருந்து சொல்லியாகி விட்டது. அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.



ஆனால் ஒரு டைரக்டர்தான் இந்த இரண்டு துறைகளுக்கும் இருக்கிறார்கள். மருந்து உற்பத்தி, மருந்து விநியோகம் இந்த இரண்டிற்கும் என்று பார்மசிஸ்ட் டிப்பார்ட்மெண்ட் இருக்கிறது. மருத்துவத் துறையிலே இருக்கக்கூடிய டாக்டர்களும் இந்த பார்மசிஸ்ட்களும் ஒத்துப்போகத் தயாராக இல்லை. அவர்கள் அரசாங்கத்தை அனுசரிக்கவில்லை. அரசாங்கம் கோடிக் கணக்கான ரூபாய்களை இதற்காக என்று செலவழித்துக்கொண்டிருக்கிறது. அந்த மருந்துகள் ஒழுங்காக உற்பத்தி செய்யப்படுகின்றனவா, விநியோகிக்கப் படுகின்றனவா என்று பார்க்க வேண்டும். உற்பத்தி பண்ணுவதற்கு என்று தனியாக ஒரு இலாகாவும், கண்காணிக்க ஒரு தனி இலாகாவும் இருக்க வேண்டுமென்று பல பத்திய அரசு கமிட்டிகளிலேகூட கூறியாகிவிட்டது. நான் போன தடவைகூட அதைப்பற்றிப் பேசியபோது, அன்றைக்கு இருந்த அமைச்சரவை, அதை மறுக்க முடியாமல், பரிசீலனை செய்கிறோம், பரிசீலனை செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறது. இப்படி மறு பரிசீலனை செய்வதாகச் சொல்வது என்பது எப்படி இருக்கிறது? அது 'ஷெல்வ்' பண்ணுவதாகத்தான் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். இங்கே சொல்கிறார்கள். ஆனால் அதையே செய்யத் தயாராக இல்லை. ஆகவே பரிசீலனை செய்வோம், பார்ப்போம், பரிசீலிப்போம் என்று சொல்வது எப்படி இருக்கிறது என்றால் அது தொலைந்துவிட்டது என்று அர்த்தம். அதைப் பார்க்கவே மாட்டார்கள் என்று அர்த்தம். அதைப் பரிசீலனை செய்யவே மாட்டார்கள் என்று அர்த்தம். இப்போது அப்படி பார்ப்போம் என்று சொல்லாமல், தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவோம் என்று சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் துறையிலே நாங்கள் கொடுத்திருக்கக்கூடிய குறிப்பிலே மிகத் திட்டவட்டமாக வேறு ஒரு பிரிவை ஏற்படுத்துகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தப் பிரச்சினை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** குறிப்பிலே இருப்பதல்ல. அன்றைக்கே சொன்னார்கள். நான் உங்களிடத்திலே போன தடவை பேசியபிறகு, இந்த பிரச்சினையைக் கொண்டு வந்த பிறகு, இலாகா டைரக்டர், அந்த இலாகாவின் ஜாயிண்ட் டைரக்டரிடம் பிரிக்க வேண்டாமென்று சொல்லி எழுதி வாங்கி விட்டார். நாம் இந்தப் பிரச்சினையைப்பற்றி இங்கே விவாதித்த பிறகு, டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த், டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த்-லேயே இருக்கலாம், அதிலே பாதகம் இல்லை என்று ஒரு ரிப்போர்ட்டை ஜாயிண்ட்

டைரக்டரிடம் நிர்பந்தித்து வாங்கி விட்டார்கள். இப்படியெல்லாம் காரியங்கள் நடக்கின்றன. இதையெல்லாம் எழுதி வைத்தால் மட்டும் பிரயோசனம் இல்லை. இதைத் திட்டவட்டமாகச் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையிலே, இது முடிவான முடிவு. அதைத்தான் நான் தெளிவாக இந்தக் கொள்கை விளக்கத்திலே போட்டிருக்கிறேன். அதற்கான ஏற்பாடும் நடக்கின்றது. அதைப் பிரித்து இன்னொரு இலாகாவாகச் செய்கிறோம். அதைப் பிரிக்க வேண்டிய வேலைகளையும் ஏற்கெனவே ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த் குறுக்கே நிற்கிறார்கள் என்ற எண்ணம் தற்போது தேவையில்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அதைப்பற்றிக் கவலையில்லாமல் இருக்கலாம் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கூறியதற்கு நன்றி. 'ட்ரக்ஸ் கன்ட்ரோல்' அவசியம் என்று நான் ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு வாரத்திற்கு முன்பு மதுரையிலே நான்கு ட்ரக்ஸ் இன்ஸ்பெக்டர்கள் ஒரு கடையைச் சோதனை பண்ணும்போது, ராஜாஜி காலத்திய முத்திரையிடப்பட்டிருக்கிற, ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள மருந்துகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு மருந்துகள் வெளியே கடத்தப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைக் கண்காணிப்பதற்கு ஏற்பாடு செய்யவில்லை. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் என்ன பண்ணுகிறார்கள் என்பது தெரியவில்லை. அதற்குத் தனியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது மெடிகல் காலேஜ் அட்மிஷன் பற்றியது. மெடிகல் காலேஜ் அட்மிஷன் விஷயம் ஒவ்வொரு வருடமும் ஹைக்கோர்ட்டுக்குப் போகிறது. ஹைக்கோர்ட்டுக்குப் போக அவசியம் இல்லாத பிரச்சினை இது. அதற்கு என்ன வழி என்றால், கேரள அரசிலே மார்க்குகள் அடிப்படையிலே மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இன்டர்வியூ முறையால்தான் தகராறுகள் எல்லாம் வருகின்றன. இன்டர்வியூவிலே நுழைவது என்பது தவறு செய்வதற்கு ஏற்பாடு செய்கின்ற ஒரு இடமாகத்தான் இருக்கிறது. இந்த இன்டர்வியூ முறையே வேண்டாம். இன்டர்வியூ முறையில் கோளாறு இருக்கிறது என்ற காரணத்தால்தான் கேரள அரசு அதை வேண்டாம் என்று விட்டுவிட்டு, பரீட்சையில் மாணவர்கள் எடுக்கும் மார்க்குகளை வைத்து செலக்ட் பண்ணுகிறார்கள். அப்படி



'செலக்ட்' பண்ணுகிறபோது ஷெட்யூல்ட் கேஸ்ட்ஸ், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் இவர்களுக்கு என்று இடங்களைத் தனியாக ஒதுக்கிவிடலாம். அவர்களுடைய மார்க்குகளைப் பார்த்து அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களின் மார்க் அடிப்படையிலே அட்மிஷன் கொடுக்க வேண்டும். இந்த இன்டர்வியூ முறையைப் பின்பற்றுவதால், அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியதாக ஆகிவிடுகிறது. போன முறை அமைச்சர் அவர்கள் என்ன பண்ணினார்கள், 1976 ஆம் ஆண்டில் அமைச்சர் அவர்கள் என்ன பண்ணினார்கள் என்று பார்த்தோம். 'அண்ணா' பத்திரிகையிலே பார்த்தோம். அவர் என்ன பண்ணிவிட்டார் என்று ஹைக்கோர்ட்டிலே சொல்லிவிட்டார்கள். தமிழ் நாட்டிலே இந்த சமுதாயத்திலே தவறு செய்வதற்கு இடமில்லை. அவர்கள் வாங்குகின்ற மார்க்குகள் அடிப்படையிலே தேர்ந்தெடுத்தால், யார் என்ன வேலை செய்தாலும், எவ்வளவு வாங்கினாலும், அது வேலை செய்யாது. பணம் வாங்கியதாக வரும் கெட்ட பெயர் எல்லாம் அங்கிருந்துதான் ஆரம்பமாகிறது. இந்த மெடிகல் காலேஜ் அட்மிஷனிலே வாங்குகின்ற பணம் வெளியிலே முதன் முறையாக வர ஆரம்பிக்கிறது. இந்த ஓட்டையை அடையுங்கள் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

(பிற்பகல் 4-50)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ஒரு கருத்தை வலியுறுத்திப் பேசினார்கள். அதைத் தொடர்ந்து நானும் ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக மெடிகல் மற்றும் பப்ளிக் ஹெல்த்தைப் பொறுத்தவரையில், அவர்கள் செலவு செய்கிற பணத்திலே பெரும் பகுதியை சென்னை நகரத்திலும், அர்பன் சென்டர்ஸ் என்று சொல்லக்கூடிய அளவிற்கு உள்ள நகர்ப்புறங்களிலும்தான் செலவிடுகிறார்கள் என்ற பரவலான கருத்தை நானும் சொல்ல விரும்புகிறேன். திரு. நல்லசிவன் அவர்கள் அதைப் பற்றித் தெளிவாகச் சொன்னார்கள். நான் இன்னும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக, கொடுக்கப்பட்டிருக்கும் கொள்கைக் குறிப்பைப் பார்க்கும்போது, 1979-80-லே நம்முடைய மருத்துவ மனைகளுக்குக் கருவிகள் வாங்கியிருக்கிறார்கள். எவ்வளவு வாங்கியிருக்கிறார்கள் என்று பார்த்தால், 57.95 லட்சம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். அதிலே சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய மருத்துவமனைக்கு எவ்வளவு வாங்கியிருக்கிறார்கள் என்றால், 54.94 லட்சம் ரூபாய் அளவிற்கு வாங்கியிருக்கிறார்கள். மொத்தம் வாங்கியதில் சென்னை நகருக்கு 94.8 சதவிகிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்தபடி, 1980-81 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் கட்ட இருக்கிறார்கள்.

1979-80-ல் கட்டிடங்களைக் கட்டியிருக்கிறார்கள். 1979-80-ல் கட்டிடங்களுக்காகச் செலவு செய்வதாக அறிவிக்கப்பட்டது ரூபாய் 245.91 லட்சம். அதிலே சென்னை நகருக்காக எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள் அல்லது செலவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், ரூபாய் 168.06 லட்சம் ஆகும். அதாவது 68.3 சதவிகிதம். 1980-81-ல் இதுமாதிரி கட்டிடங்கள் கட்டுவதற்காக எவ்வளவு செலவு செய்வதாக உத்தேசம் செய்யப்பட்டிருக்கிறதென்றால், 36.92 லட்சம் ரூபாயாகும். அதில் 27.75 லட்சம் ரூபாய் சென்னை நகருக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதாவது 75 சதவிகிதம் சென்னை நகருக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். படுக்கைகளைப் பார்த்தால், டி.எம்.ஈ. சைடில் 14,202 படுக்கைகள் இருக்கின்றன. டி.எச்.எஸ். சைடில் 13,699 படுக்கைகள் இருக்கின்றன. சென்னை நகரம், கோவை, திருநெல்வேலி, மதுரை போன்ற இடங்களிலே டி.எம்.ஈ.-ன்கீழ் உள்ள மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவ மனைகளிலே உள்ள மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 14,202 என்றால், டி.எச்.எஸ். ஆல் கண்காணிக்கப்படுகின்ற தமிழ் நாட்டிலுள்ள எல்லா மருத்துவ மனைகளிலும் சேர்ந்து உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 13,699 ஆகும். தமிழ் நாட்டிலேயுள்ள மொத்த படுக்கை வசதிகளிலே பாதிக்கு மேலே நகர்ப் புறங்களில் இருக்கும் நிலைமை இருக்கிறது.

அடுத்து, பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் என்று சொல்லப்படும் மருத்துவ மனைகளுக்கு 1.40 கோடி ரூபாய் அளவிற்குச் செலவு செய்கிறோம். கிட்டத்தட்ட 384 பிரைமரி ஹெல்த் சென்ட்டர்ஸ் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். இந்த 384 சென்டர்கள் 3.5 கோடி பேர்களுக்குப் பணி செய்வதாக வைத்துக்கொண்டால், கிட்டத்தட்ட தமிழ் நாட்டில் முக்கால்வாசிப் பேர்களின் மருந்துக்குச் செலவு செய்வது 1.40 கோடி ரூபாய்தான். கிட்டத்தட்ட பல ஆண்டுகளாகப் பார்க்கும்போது, ஒவ்வொரு அறிக்கையிலேயும் என்ன சொல்லுகிறார்கள் என்றால், கிராமங்களிலே இருக்கிறவர்களுக்கு அதிக வசதியை நாங்கள் கொடுக்க இருக்கிறோம், அதுதான் எங்கள் கருத்து என்று சில ஆண்டுகளாகச் சொல்லப்படுகிறது. அதுவும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக அறிக்கைகளைப் பார்க்கும்போது, பத்திரிகைகளைப் பார்க்கும்போது, கிராமப்புறங்களுக்கு மருத்துவ வசதிகளைச் செய்யப் போகிறோமென்று கூறியதைப் பார்க்கிறோம். ஆனால் சொல்லியதற்கும், செய்வதற்கும் இடைவெளி அதிகமாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புறங்களிலே ஓரளவிற்கு இன்னும் மருத்துவ வசதிகளைப் பெருக்க வேண்டும். இரண்டு மருத்துவர்கள் இருந்த இடத்தில் இப்போது மூன்று மருத்துவர்களைப் போட்டிருக்





கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு பணம் கொடுக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். ரூபாய் 14,000 ஓராண்டுக்குக் கொடுத்து வந்தோம். இப்போது ரூபாய் 6,000-யைக் கூட்டி, ஒரு மருத்துவ மனைக்கு ரூபாய் 20,000 கொடுக்கிறோம். கிட்டத்தட்ட ஒரு லட்சத்திலிருந்து 1.25 லட்சம் பேர்களுக்கு இருக்கக்கூடிய சுகாதார நிலையத்திற்கு 20,000 ரூபாய் அளவிற்கு மருந்து கொடுத்தால் போதுமானதாக இருக்குமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். எனக்குத் தெரிந்தவரையில், இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகு அங்கு மருந்துகள் இருப்பதில்லை. ஆதலால் யாரும் அந்த மருத்துவமனைகளுக்குப் போவதில்லை. போனாலும் மருந்து கிடைக்காது என்ற நிலை இருப்பதால், அவர்கள் நகர்ப்புறங்களுக்கு வருகிறார்கள். நகர்ப்புறங்களில் இருக்கிறவர்கள் சென்னைக்கு வருகிறார்கள். சென்னையிலே, கேன்சர் டிரீட்மென்ட்டைப் பொறுத்தவரையில், வேண்டிய அளவிற்கு வசதிகளைப் பெருக்குகிறார்கள். தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு கோபால்ட் தெராபி யூனிட் வேண்டுமென்று பல ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது சொன்னேன். கடந்த 7, 8 ஆண்டுகளாக, புற்று நோய் சிகிச்சைக்காக அந்தக் கருவியை தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு வந்தேன். இதுவரை அந்த கோபால்ட் தெராபி யூனிட் கொடுக்கப்படவில்லை. சென்னையில் ஸ்டான்லி மருத்துவமனை, ஜெனரல் ஆஸ்பத்திரி, மற்றுமுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தேவையான அளவிற்கு மேலாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. தஞ்சையில் 'டீப் எக்ஸ்ரே தெராபி யூனிட்' என்று ஒரு கருவியை வாங்கிக் கொடுத்தார்கள். அது கடந்த இரண்டு ஆண்டுகளாக இயங்காத நிலைமையிலே இருக்கிறது. அதனால் மிகச் சாதாரணமான எளியவர்கள்கூட சென்னைக்கு வந்து, துயர்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வர வேண்டிய தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு மாவட்டங்களில் உள்ள பல பகுதிகளில் இருக்கக்கூடிய புற்று நோய் நோயாளிகள், சென்னைக்கு வர வேண்டிய நிலை இருக்கிறது. அல்லது அவர்கள் மதுரை, பாண்டிச்சேரியில் உள்ள மருத்துவ மனைகளுக்குப் போக வேண்டும். இப்படி முக்கியமான சிகிச்சைப் பிரிவு இல்லாத நிலை அங்கே இருக்கிறது. ஆனால் எல்லாப் பணத்தையும் இங்கேயே செலவழிக்கிறார்கள். ரூபாய் 40 லட்சம் செலவில் 'ஸ்கேனர் யூனிட்' வாங்கப்படுகிறது. அடுத்த ஆண்டு ஒரு கோடி ரூபாய்க்கு 'ஃபுல் ஸ்கேனர் யூனிட்' வாங்குவார்கள். அந்த அளவிலே இங்கே ஸ்பெஷலைஸ் செய்வதைக் கண்காணித்து, சரியான முறையில் ஒதுக்கப்படும் பணத்தைப் பங்கீடு செய்ய வேண்டு

மென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்கள், சிறிய நகரங்கள், டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் போன்ற இடங்களிலுள்ள மருத்துவ மனைகளுக்கு அதிகமான பண ஒதுக்கீட்டுக்கு வழி செய்ய வேண்டும். நாம் பணம் செலவு செய்து கொண்டிருக்கிறோம். ஆண்டுக்காண்டு சில கோடி ரூபாய்களை அதிகமாகச் செலவு செய்கிறோம். இதனால் முழுப் பயன் கிடைக்குமா என்றால், தேவையான அளவிற்குப் பயன் கிடைக்கவில்லை என்ற கருத்து இருக்கிறது. We can formally spend, but the human factor என்று சொல்லக்கூடிய அளவிலே மருத்துவ மனையில் இருக்கக்கூடிய டாக்டர்கள், அங்கே இருக்கக்கூடிய சிப்பந்திகள் நோயாளிகளுக்கு எந்த முறையில் சிகிச்சை வேண்டுமோ அந்த முறையிலே சிகிச்சை செய்கிறார்களா என்றால், அதில் ஓரளவிற்கு சிக்கல்கள் இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பல மருத்துவ மனைகளில் இருக்கக்கூடியவர்கள்—பெரிய மருத்துவ மனைகளில் இருக்கக்கூடியவர்கள்—தனியான முறையில் 'பிராக்டிஸ்' என்று வைத்துள்ளதால், மருத்துவ மனையில் சிகிச்சை கொடுப்பதைவிட அவர்களுடைய கிளினிக்கில் சிகிச்சை கொடுக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. ஏழைகள் மருத்துவ மனைக்கு வருகிறார்கள். பணக்காரர்கள் டாக்டர்களுடைய சொந்த கிளினிக்குக்குப் போகிறார்கள். இது தவிர, மருத்துவ மனைகளில் 'கரப்ஷன்' அதிகமாக இருக்கிறது. மேலே உள்ள அதிகாரிகள், கீழேயுள்ள அதிகாரிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை இருக்கிறது. சிப்பந்திகள் சரியாக இல்லை என்றால் மேல் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால், அதனால் தங்களுக்கு ஏதாவது ஆபத்து வருமோ என்ற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். இப்படி 'டிசிப்ளின்' இல்லாமல் பல மருத்துவ மனைகள் இயங்குவதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர்—தலைமை)

(பிற்பகல் 5-00)

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். டிப்ளமோ இன் பார்மசியைப் பொறுத்தவரை, இந்த ஆண்டு 100 இடங்களை அதிகமாக ஆக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கே அதை ஆரம்பிக்கப் போகிறார்கள் என்பதுபற்றிய விவரம் தெரியவில்லை. மதுரையைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு இருந்த எண்ணிக்கைதான் இந்த ஆண்டும் இருப்பதாக நான் அறிகிறேன். சென்னை மருத்துவக் கல்லூரியில் அந்தப் பட்டயப் படிப்பை ஆரம்பிக்கப் போவதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே





அதை அமைக்க அரசு என்ன ஏற்பாட்டினைச் செய்திருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன். உண்மையாகவே 100 இடங்களை அதிகப்படுத்த வேண்டுமென்றால், சென்னையிலே உள்ள சென்னை மருத்துவக் கல்லூரியின் பார்மஸி டிப்பார்ட்மெண்டிலேயே இதை ஆரம்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். முன்பெல்லாம் இதில் 100-ல் இருந்து 125 வரை நபர்களைச் சேர்த்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே இந்த ஆண்டும் 50-லிருந்து 100 பேரை பட்டயப் படிப்பில் சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சில முக்கியமான மருத்துவமனைகளுக்குச் சென்று பார்த்ததாகக் கேள்விப்பட்டேன். விமன் அன்ட் சில்ட்ரன் ஆஸ்பத்திரிக்கும், சில்ட்ரன் ஆஸ்பத்திரிக்கும் அவர்கள் சென்று வந்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய கீழ்ப்பாக்கம் மருத்துவ மனைக்கும் சென்று வந்ததாகச் சொன்னார்கள். மருத்துவ மனைகளைச் சோதனையிட்டு நல்லமுறையில் குறைகளைத் தெரிந்துகொண்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இன்னொன்றை நான் மாண்புமிகு அமைச்சரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சருடைய அண்ணா நகர் வீட்டுக்கு அருகில்தான் அறிஞர் அண்ணா சித்த மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனைக்கும் ஒரு தடவை சென்று பார்க்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள மருத்துவப் பண்ணையைப்பற்றி, 'மெடிக்கல் பார்ம்' பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டு காலமாக நான் இதைப்பற்றிப் பேசி வருகிறேன். ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாக எனக்குத் தெரியவில்லை. அங்கே எந்தவிதமான செடிகளும் இல்லை என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன்.

No plants are available in that particular place. The medicinal farm is now being used as a public lavatory.

இதற்கென்று தனியாக ஒரு கார்ப்பரேஷன் போடப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்பு அங்கு ஒரு பி.எஸ்சி. (அக்ரி) அதிகாரியைப் போட்டு, அது மிகச் சிறப்பான முறையில், அதாவது 1963-64 ஆம் ஆண்டுகளில் நடந்துகொண்டிருந்தது. இப்போது அதுமாதிரி இல்லை. ஆகவே தனியாக ஒரு பி.எஸ்சி. (அக்ரி)யைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் சிறப்பாகக் கண்காணிப்பார். அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரை, அதனுடைய சுற்றுப்புறச் சூழ்

நிலை எப்படி இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொாலியிஸ் பேசன்ட், அதாவது வாத நோய்க்கு அங்கே நவர பிழிச்சல் போன்ற நல்ல சிகிச்சைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்காக என்று தனியாக ஒரு வார்ட் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சித்த மருத்துவத்திற்கென தனியாக ஒரு கல்லூரியை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது தேவையில்லை. பாளையங்கோட்டையிலேயே இருக்கக்கூடிய சித்த மருத்துவக் கல்லூரியில் இன்னும் 100 பேரைச் சேர்க்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. இப்போது அங்கே 44 பேர் படிக்கிறார்கள். அது 40 பேர் படிக்கக்கூடிய கல்லூரி. இப்போதே 400 அப்ளிகேஷன்கள் வருகின்றன. ரூபாய் 75 ஸ்டைபென்ட் கொடுக்கிறார்கள். ஸ்டைபென்ட் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இன்னும் தேவையானால், 100 பேரைச் சேர்த்து, அந்தக் கல்லூரியை விரிவுபடுத்த வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். யுனானி மருத்துவ முறைக்கு என்று தனியாக ஒரு கல்லூரி அமைக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போதே மாநிலம் பூராவும் 14 யுனானி டிஸ்பென்சரீஸ் இருக்கின்றன. தனியாக அதற்கென்று ஒரு கல்லூரி ஆரம்பித்தால், அங்கே படித்து வருகின்றவர்களுக்கு எங்கே வேலைவாய்ப்பு இருக்கிறது? யுனானி மருத்துவர்கள் இன்னும் ஐந்து, பத்து பேர் தேவையென்றால் ஆந்திராவில், ஹைதராபாத்தில் இருக்கக்கூடிய சித்த யுனானி மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி படிக்க வைக்கலாம். கேரளாவிலிருந்து ஐந்து மாணவர்கள் நம்முடைய சித்த கல்லூரிக்கு வந்து படிக்கிறார்கள். அதுமாதிரி இதிலும் நாம் ஏற்பாடு செய்யலாம். ஆயுர்வேதா நூல்களை தமிழிலே மொழி பெயர்க்கப் போவதாகச் சொல்லுகிறார்கள். ஆயுர்வேத நூல்களை ஏற்கனவே துரைசாமி ஐயங்கார் என்பவர் மொழி பெயர்த்திருக்கிறார். அவர் மொழி பெயர்த்த அத்தனை நூல்களும் இப்போதே இருக்கின்றன. மறுபடியும் அந்த நூல்களை பிரிண்ட் செய்தால் போதும். தனியாக அதற்காக புத்தகங்களை எழுதி 'டிரான்ஸ்லேட்' செய்ய வேண்டிய அவசியமில்லை. சித்தாவில் நர்சிங் கோர்ஸ் ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். சித்த மருத்துவத்திற்கு என்று தனியாக நர்சிங் கோர்ஸ் தேவையில்லை. மருந்துகளைச் சரியாகக் கொடுப்பதற்கான பயிற்சிதான் தேவை. நர்சிங் என்றால் அது சித்தாவாக இருந்தாலும், ஆயுர்வேதாவாக இருந்தாலும், அலோபதியாக இருந்தாலும், மருந்துகளை எப்படி கொடுக்க வேண்டுமென்ற பயிற்சிதான் தேவை. அதற்காக தனியாக ஒரு



கல்லூரி ஆரம்பிக்கத் தேவையில்லை. 'நேஷனல் பார்முலரி இன் சித்தா' பிரின்டிங் வேலை முடிந்து அண்மையில் வெளிவர இருக்கிறது. ஆஸ்பத்திரி பார்மசியைப் பொறுத்தவரை, அச்சிடத் தேவையில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இறுதியாக, தஞ்சை மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரை, போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் மூன்று, நான்கு ஆரம்பிக்க மத்திய மெடிக்கல் கவுன்சில் ஒப்புதல் அளித்திருக்கிறது. ஏற்கனவே டி. பார்ம் கோர்ஸ் அதிகமாக ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை கடந்த ஓராண்டு காலமாக அரசின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது. அதற்கான ஏற்பாட்டையும், பிலேரியல் கிளினிக்கல் ரிசர்ச் யூனிட் அமைப்பதற்கான ஏற்பாட்டையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மெடிக்கல் காலேஜ் அட்மிஷனைப் பொறுத்தவரை சென்ற மாதம் 27 ஆம் தேதி நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன். மருத்துவக் கல்லூரிகளினுடைய அட்மிஷனைப் பொறுத்தவரை . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஏற்கனவே திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குச் சொன்னதைத்தான் உறுப்பினருக்கும் சொல்கிறேன். கவன ஈர்ப்புப்பற்றியெல்லாம் இங்கே எடுத்துப் பேச வேண்டாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப்பற்றிப் பேசவில்லை. பொருளை மட்டும் சொல்கிறேன். ஒரு மாத காலமாக பதில் வரவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இங்கே அதைப்பற்றிப் பேச வேண்டாம். மூதன் முதலாக அதைப்பற்றி இங்கே பேசுகிறார்கள். ஆகையால்தான் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அடுத்து, கடந்த சில ஆண்டுகளாக பி.எஸ்சி. பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி படித்த பட்டதாரிகளெல்லாம் எம்.பி.பி.எஸ்.-க்கு அப்ளை பண்ணினால், அவர்களுக்கு இண்டர்வியூ கார்டு வருவதில்லை.

They are allowed to apply but after they apply, they are not getting interview cards. It seems that the marks of one ancillary subject are not being computed for the purpose of interview.

என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இது உண்மையாக இருக்குமானால், கடந்த இரண்டு, மூன்று ஆண்டு காலமாகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் தவறான ஏற்பாடுகள் என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அட்மிஷன் ஆரம்பிக்கக்கூடிய நேரத்தில் இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மிகவும் சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் இயங்குகின்ற நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நான் சொன்ன எல்லாவற்றையும் சிறப்பாக, அதேபோல செய்வார்கள் என்று எதிர்பார்த்து, என் எதிர்பார்ப்பு உண்மையாகும் என்கிற நம்பிக்கையைத் தெரிவித்து, என் உரையை முடிக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு தலைவரவர்களே, மருத்துவத் துறையைப் பொறுத்தவரை, இந்தக் கொள்கைக் குறிப்பின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற வாய்ப்பு தந்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும், எவ்வளவுதான் கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்புகள் இருந்தாலும்கூட, நேரத்தினுடைய நிலையை அறிந்து எந்த அளவுக்கு சுருக்கமாகக் கருத்துக்களைக் கூற முடியுமோ அந்த அளவுக்கு சீக்கிரம் சுருக்கமாகக் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.'

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒவ்வொருவரும் ஆரம்பிக்கும்போது அப்படிச் சொல்லத் தவறுவதில்லை. ஆனால் ஒருவரும் அதை அனுசரிப்பது கிடையாது. (சிரிப்பு)

**திரு. எஸ். ஆர். இராதா :** தலைவரவர்களே, அப்படிச் சொன்னதனால் சுருக்கமாக ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் எடுத்துச் சொல்லி, என்னுடைய உரையை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறியதுபோல், தமிழ் நாட்டில் சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால், இப்போதுதான் முதன் முதலாக ஒரு டாக்டர் இந்த இலாக்காவுக்கு அமைச்சராக வந்திருக்கிறார் என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதற்கு முன்னால் டாக்டர் ராஜன் அவர்கள் இந்த இலாக்காவுக்கு அமைச்சராக இருந்த நேரத்தில் இந்தியா விடுதலை பெறவில்லையென்று நான் கருதுகிறேன். இதில் எந்தவித சந்தேகமும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்களுக்கு வரத் தேவையில்லையென்றாலும்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுவதற்காக நான் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு



(பிற்பகல் 5.10)

அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே தனக்குள்ள நல்ல அனுபவத்தை வைத்துக்கொண்டு, மிகச் சிறப்பாக எல்லாப் பகுதிகளையும் கவனிக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்தத் துறை நிச்சயமாக மேலும் மேலும் மிகச் சிறப்பான முறையில் வளரும் என்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். நான் அப்படிச் சொல்கிற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டுக் கூற வேண்டும். பொதுவாக டாக்டர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் நோயாளியை எப்படிப் பரிசோதனை செய்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்கும் ஆற்றல் நிச்சயமாக சாதாரணமான யாருக்கும் இல்லை. இன்னொரு டாக்டர் அல்லது அவரைவிட அதிகமாகப் படித்த டாக்டர் ஒருவரால்தான் அது முடியும் என்பதுதான் இன்றைய நிலைமை. அவர்கள் என்னென்ன தவறுகள் செய்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்கும் ஒரு ஆடிட் பிரிவு இந்தத் துறையிலே இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. பேரவையில்கூட ஒரு முறை இதுபற்றித் தெரிவித்திருக்கிறேன். போலீஸ் ஸ்டேஷனிலேகூட நாம் சென்று எதிர்த்துப் பேசிவிடலாம். 'அவர் எந்தச் சட்டத்தின்கீழ் இப்படி இந்த வழக்கைப் பதிவு செய்தார்' என்று கேட்கலாம். ஆனால் ஒரு டாக்டரிடம் நம்முடைய நோயாளி பிழைப்பானா என்ற பயத்தோடுதான் நாம் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒரு டாக்டர்தான்.

**திரு. எஸ். ஆர். இராதா :** ஒரு டாக்டரே இந்தத் துறைக்கு வந்துவிட்டதால், எங்களுக்குத் தைரியம் வந்துவிட்டது. இன்றைக்கு இந்த டாக்டர் இப்படிச் செய்துவிட்டார் என்று சொன்னால், அவருக்கும் தெரியாமல் நமக்கும் தெரியாமல் நிலைமை விபரீதமாகப் போய்விடும் நிலைமை இல்லை. உதாரணமாகச் சொன்னால், இன்றைக்கு மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், எல்லா டாக்டர்களும் மிகவும் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆளும் கட்சியிலே இருக்கும் உறுப்பினர் இப்படிச் சொல்லலாமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி போன்றவர்கள் நினைக்கலாம். ஒரு துறை செயல்படும் விதத்தைப்பற்றிச் சொல்லும்போது, ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று நினைக்க வேண்டாம். எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் எப்போதும் குறை சொல்கிறார்கள். ஆனால், அப்படிச் சொல்லாமல் 'நாங்கள் தவறுசெய்த காரணத்தால்தான் இங்கே வந்துவிட்டோம். நீங்கள் அந்தத் தவறைச் செய்யாமல் இருங்கள்' என்று இங்கே இருக்கும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவரையும் கெடுக்கப் பார்க்கிறீர்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : சில பேருக்கு ஏதாவது எப்போதும் ஆளும் கட்சி மீது குறைகளைச் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும் என்ற அரிப்பு இருக்கிறது. அதற்கு இந்த மருத்துவத் துறை மருந்து கண்டுபிடித்து, அவர்கள் எப்போதும் நல்லவற்றையே சொல்ல வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், குறைகளுக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. அதிகாரிகளைப் பொறுத்தவரையில், தங்களுக்கு காரியம் ஆகும் வரையில், அவர்கள் ஆளும் கட்சிக்குத் துணையாக இருப்பார்கள். அவர்களுக்குக் காரியம் ஆகிவிட்டால், அப்புறம் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு வக்காலத்து வாங்குவார்கள். பேப்பரிலே எப்படியும் வந்தால் போதும் என்ற அளவுக்கு பல்வேறு குற்றச்சாட்டுகளை எதிர்க் கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கிறார்கள். இந்தமாதிரி நிலைமைகள் மாறவேண்டுமானால், நம்முடைய மாண்புமிகு டாக்டர் அவர்கள் இந்த இலாக்காவை கொஞ்சம் நல்ல முறையில் கவனிக்க வேண்டும். அவரை யாரும் ஏமாற்ற முடியாது. அந்த அளவுக்கு அதிலே அவர் தேர்ந்தவர் என்ற காரணத்தாலே, என்னைப் போன்றவர்களுக்கு அவர் செய்வார் என்று மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. அப்படிச் செய்யும் போது ஒன்றைக் கவனிக்க வேண்டும். தமிழ் நாட்டிலே இருக்கும் டாக்டர்கள் அத்தனை பேரும் தங்களுடைய கடமைகளை ஒழுங்காகச் செய்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யும் இந்தத் துறையில் எத்தனை டாக்டர்கள் தங்களது கடமைகளை சரிவரச் செய்கிறார்கள் என்பதையெல்லாம் நாம் கண்டிப்பாகப் பார்க்க வேண்டும். இதுவரையில் அப்படிச் செய்யவில்லை. டாக்டர்கள் தங்களது பணிகளை சரியாகச் செய்யவில்லை. அதற்கு பல உதாரணங்களை நான் சொல்ல முடியும். பல சம்பவங்களை நான் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். எத்தனையோ ஆஸ்பத்திரிகளிலே இன்றைக்கு பதவியின் காரணமாகத்தான் சிலர் சிறப்பாகக் கவனிக்கப்படுகிறார்கள். சிகிச்சைக்குப் போகின்றவர்கள் நல்ல பதவியில் இல்லையென்றால், அவர்களை நல்ல முறையில் கவனிப்பதில்லை. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், எங்கள் தரப்பிலே இருக்கும் இரண்டு மூன்று உறுப்பினர்களைக்கூட நான் சொல்ல முடியும். அப்படிச் சொல்வதற்குக் காரணம், வகிக்கும் பதவியின் அடிப்படையில் அதிகமாகக் கவனிக்க வேண்டுமென்ற உணர்வு இன்றையதினம் வளர்ந்திருக்கிறது. சாதாரண ஏழையெளிய மக்கள் மருத்துவமனைக்குச் செல்லும்போது, அவர்களை டாக்டர்கள் அணுகும் முறை மாற வேண்டும். இன்றையதினம் டாக்டர்கள் எல்லாம் மருத்துவமனையிலே மட்டுமல்லாமல், தனியாக வெளியிலேயும் மருத்துவம் செய்கிறார்கள் என்று சொல்லி, இது மாற்றப்பட வேண்டுமா,



வேண்டாமா என்பது பிரச்சினைக்குரிய விஷயமாக இருக்கிறது. அவர்கள் வெளியிலே எப்படி மருத்துவம் பார்த்தாலும், மருத்துவமனைக்கு வந்த பிறகு அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்கிறார்களா என்பதைக் கண்காணிக்க ஒரு வழிவகை வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம், மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், சென்னையிலேதான் எல்லா வசதிகளும் கிடைக்கின்றன. சென்னையில் உள்ள நிலைமையை வைத்துத்தான் பல்வேறு வியாதிகளைத் தீர்க்கும் அவசியத்திற்கு நாம் ஆளாகியிருக்கிறோம். இங்கே இருக்கும் மக்களில் பெரும்பான்மையோர், மற்ற ஊர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அதிக அளவிலே ஹோட்டல்களில் சாப்பிடுகிறார்கள். ஹோட்டல்களில் சாப்பிடுகிறவர்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். சென்னையிலே இருக்கும் பல்வேறு ஹோட்டல்களில் நம்முடைய சுகாதார இலாக்காவினர் உள்ளே சென்று பார்ப்பதே கிடையாது. சென்னையிலே வருகின்ற பல்வேறு வியாதிகள் தடுக்கப்பட வேண்டும். சென்னையிலே இருக்கிற மக்களுக்குப் பாதுகாப்பாக, இங்கே இருக்கும் உணவு விடுதிகளை நல்ல முறையிலே பரிசோதித்துப் பார்த்து, தேவையான நடவடிக்கைகள் எடுத்து சிறந்த மாற்றங்களை ஏற்படுத்தினால், நிச்சயமாக அது சென்னை நகர மக்களுக்கு ஒரு பெரிய உதவியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப் பகுதிகளிலே இந்த வாய்ப்பு இருக்கிறதா என்றால், அங்கே இருப்பவர்கள் உணவு விடுதிகளைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. வீடுகளிலேயே சாப்பிட்டு அங்கே இருப்பவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள்.

மருத்துவ வசதிகளைப் பொறுத்தவரையில், இந்தக் குறிப்பிலே பல்வேறு சாதனைகளை நாம் கிராமப்புறங்களிலே இருப்பவர்களுக்காக உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம். நடமாடும் மருத்துவமனைகளை நடைமுறைக்குக் கொண்டுவந்து டாக்டர்கள் நேரடியாகப் பல்வேறு கிராமங்களுக்குச் சென்று பார்க்கும் நிலைமையை ஏற்படுத்தியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. இதை இன்னும் திறம்படச் செயலாற்ற வைப்பதன் மூலமாக அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு கிடைக்கும்.

இன்றைக்குப் பெரிய படிப்பு படித்தவர்கள் இருக்கிறார்கள். எம்.பி.பி.எஸ். படித்து அதற்குப் பிறகு எம்.எஸ்., எம்.டி. என்றெல்லாம் படிக்கிறார்கள். இவர்கள் எல்லாம் கிராமங்களுக்குச் சென்று சிகிச்சை அளிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கையை நாம் எடுக்க வேண்டும். எம்.பி.பி.எஸ். படித்தவர்கள்தான் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும் என்ற நிலைமையை மாற்ற

[திரு. எஸ். ஆர். இராதா] [1980 ஜூலை 23

வேண்டும். சிலர் எம்.டி., எம்.எஸ். வாங்கினால் சென்னையைவிட்டு வெளியே போகவேண்டாம் என்று நினைத்து, போட்டி போட்டுக்கொண்டு இந்தப் பட்டங்களைப் பெறுகிறார்கள். அந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமென்றால், நிச்சயமாக கிராமங்களுக்கெல்லாம் பெரிய படிப்பு படித்தவர்கள் போகக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும். எம்.எஸ். படித்தவர்கள் போகவேண்டுமென்றால், உடனே 'அவர்களுக்குப் போதுமான வசதிகள் செய்யப்பட வேண்டாமா?' என்று கேட்கிறார்கள். வசதிகள் வேண்டுமென்று சொன்னால், இப்போது நடமாடும் ஆஸ்பத்திரிகள் அங்கே இருக்கின்றன. மேலும், ஆங்காங்கே கூடாரங்கள் ஏற்படுத்தும் அளவுக்கு நிலைமைகளை உருவாக்கலாம்.

கிராமங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொண்டால், அங்கே இருக்கும் அறுவை சிகிச்சைக் கூடங்கள் இப்போது மூடப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டிடங்கள் நீண்ட காலங்களுக்கு முன்னால் கட்டப்பட்டவை. அவைகள் அப்படியே இருக்கின்றன. எந்தவிதமான வசதியும் இல்லை. இதைச் சரிசெய்ய வேண்டும். இன்னும் பல நேரங்களிலே பெரிய ஆஸ்பத்திரிகளிலே கூட 1-ம் நம்பர், 2-ம் நம்பர், 3-ம் நம்பர் என்று அறைகள் இருக்கும். 1-ம் நம்பர் மூடியிருக்கும். 2-ம் நம்பரில் டாக்டர் இருப்பார். 3-ம் நம்பர் கிடைத்தால்தான் அறுவை சிகிச்சை செய்ய முடியும் என்ற நிலைமைகளும் இருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் பார்த்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்டங்களைப் பார்க்கும்போது, மாவட்டத் தலைநகரங்களிலே தலைமை மருத்துவமனைகள் இருக்கின்றன. தஞ்சாவூரைப் பொறுத்தவரையில், தஞ்சை மாவட்ட மருத்துவமனை மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டது. அதைத் தவிர, தஞ்சை மாவட்டத்திலே தலைமை மருத்துவமனை என்று சொல்லும் அளவுக்கு, வேறு ஒன்றுமில்லை. கும்பகோணம் போன்ற ஊர்களிலே பெரிய அளவில் மருத்துவமனை உண்டாக்கும் நிலைமையை உருவாக்க வேண்டும். அங்கிருப்பவர்கள் எல்லாம், மருத்துவத்திற்கு தஞ்சைக்குச் செல்ல வேண்டும், திருச்சிக்குச் செல்ல வேண்டும் அல்லது சென்னைக்குச் செல்ல வேண்டும் என்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அருகிலேயே இருக்கும் ஊர்களில் அவர்களுக்கு இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் பல்வேறு ஊர்களுக்கு மக்கள் செல்வதைத் தடுத்து அவர்கள் அந்தந்த ஊர்களிலேயே தேவையான மருத்துவ வசதிகளைப் பெறும் வாய்ப்பை நாம் உருவாக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1980 ஜூலை 23] (திரு. எஸ். ஆர். இராதா)

(பிற்பகல் 5-20)

அதைப்போலவே, மருத்துவத் துறை வளர்ச்சியைப்பற்றி எண்ணும்போது, எல்லாப் பிரிவு மருத்துவத்தையும் நாம் வளர்த்தாக வேண்டும். அதாவது தமிழ் மருத்துவம், ஹோமியோபதி மருத்துவம், சித்த மருத்துவம் போன்ற பல்வேறு மருத்துவத் துறைகளையும் நாம் வளர்ப்பதற்கான வசதிகளை அதிகமாகச் செய்து தர வேண்டும். தற்போது தமிழ் மருத்துவத்திற்குப் பொதுவாகவே நல்ல வரவேற்பு இருக்கிறது. அதைப்போலவே ஹோமியோபதி மருத்துவத்திற்கும் நல்ல வரவேற்பு நாட்டு மக்களிடத்தில் இருக்கிறது. ஆக, நாம் ஒரே மருத்துவ முறையை அனுசரிப்பதைவிட, பல்வேறு மருத்துவ முறைகளை அனுசரிப்பதன் மூலமாக தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்படும் பல்வேறு வியாதிகளுக்கும் நம்மாலே தீர்வு காண முடியும். பல்வேறு வியாதிகளுக்குத் தீர்வு காண முயற்சிக்கும்போது, மருத்துவ முறைகளில் மனமாற்றத்தை உண்டு பண்ணுவதேகூட வியாதிகளைக் குணமடையச் செய்யலாம். இந்த வகையில் பல்வேறு மருத்துவ முறைகளைக் கொண்டு வருவதுபற்றி இக்கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பல்வேறு மருத்துவத் துறைகளைப்பற்றிக் குறிப்பிடும்போது, உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையில் அதைப்பற்றி யாரும் அதிகமாகக் குறிப்பிட்டுப் பேச மாட்டார்கள். சென்னை கீழ்ப்பாக்கத்தில் மனநோய் மருத்துவமனை என்று ஒன்று பைத்தியக்காரர்களுக்காக இருக்கிறது. அங்கே உள்ளவர்கள் யாரிடமும் எதையும் வந்து சொல்ல முடியாது. எனவே அதைப்பற்றிக் கவலைப்படுகிறவர்களும், கவனிப்பவர்களும் யாரும் இருக்க மாட்டார்கள். காரணம் அதைக் கவனிக்க வேண்டிய அவசியம் பலருக்கு இல்லை. சமுதாய வளர்ச்சியில் நாம் ஒன்றை உணர வேண்டும். சமுதாய வளர்ச்சியில் பலருக்கு மனநோய் பிடித்திருப்பதைப் பார்க்கிறோம். அவர்களுக்கு எதனால் மனநோய் பிடித்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சிலருக்கு மனநோய் இருந்தாலும், அவர்களுக்கு மனநோய் இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதே சிரமமாக இருக்கிறது, சந்தேகப்படுகிற நிலை இருக்கிறது. அப்படி மனநோய் பிடித்த பைத்தியக்காரர்களை நாம் பிடித்துக் கொண்டுபோய் வழக்கு மன்றத்தில் நிறுத்தி இவர்களை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டுமென்றாலும், அங்கே இருக்கிற நீதிபதிகள், 'இவர்கள் ஊரில் உள்ளவர்களைத்தானே அடிக்கிறார்கள். என்னை அடிக்கவில்லையே' என்று வெளியே அனுப்பிவிடுகிறார்கள். கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்துவ மனையில் அனுமதி பெறுவது என்பது மிகவும்

கஷ்டமாக இருக்கிறது. எனவேதான் ஒரு கருத்தைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ஒரே ஒரு இடத்தில் அதாவது கீழ்ப்பாக்கத்தில் மட்டுமே மனநோய் மருத்துவமனை இருக்கிற நிலையை மாற்றி, தமிழ்நாட்டில் பரவலாக பல இடங்களில் அத்தகைய மனநோய் மருத்துவ மனைகளைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சிரிப்பதிலிருந்து ஒருவேளை நான் அரசியலில் மனநோய் பிடித்தவர்களுக்காகப் பேசுகிறேன் என்று நினைப்பதுபோல் தோன்றுகிறது. நான் அவர்களுக்காக இங்கே வாதாட வரவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினரின் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, பைத்தியக்கார ஆஸ்பத்திரிகள்கூட அதிகமாகத் தேவைப்படுகிற நிலைமை உருவாகியிருக்கிறதே என்றுதான் சிரித்தேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு இந்த நிலைமை ஏற்படவில்லை. முன்னாலே இருப்பவர்கள் வளர்த்துவிட்டதைத் தீர்த்து வைக்கிற பொறுப்புக்கு நாங்கள் வந்துவிட்டோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி அரசியலில் மனநோய் பிடித்தவர்களைக் குணப்படுத்தினால்தான், அரசு எதைச் செய்தாலும் அதனால் நாட்டிற்குப் பலன் ஏற்படும். எனவே கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியைப் போன்று நாட்டின் பல இடங்களிலும் வைத்திய வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் எம்.பி.பி.எஸ். தேர்வுகளில் நடக்கிற பிரச்சினைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதில் எனக்கிருக்கிற மகிழ்ச்சியெல்லாம் கடந்த 2½ அல்லது 3 ஆண்டுக் காலமாக நடைபெற்ற ஆட்சியில்தான், அதிலும் குறிப்பாக எங்களுடைய புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலத்தில்தான்—இதை நான் எங்கேயும் தலை நிமிர்ந்து தைரியமாக, இந்த மன்றத்திலும் வெளியிலேயும்கூட சொல்ல முடியும்—ஒரு மெடிகல் சீட்டிற்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கினேன் என்று சொல்லுகிற தைரியம் யாருக்கும் வராமல் போயிற்று. இதைத் துணிவோடு எங்கேயும் சொல்லுகிற தைரியம் எனக்கு இருக்கிறது. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், ஆண்டுக்காண்டு வழக்கு மன்றத்திற்குச் சிலர் போகிறார்களே என்றால், அதுவும்கூட ஒரு வகையான வியாதியாகப் போயிருக்கிறது. அந்த வியாதியையும் தீர்ப்பதற்கான மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு மாண்புமிகு டாக்டர் அவர்களுக்கு இருக்கிறதென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி பலருக்கும் பல வியாதிகள் இருப்பதால்தான், இத்தகைய நிலைமைகள் உருவாகின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது இதையும் குறிப்பிட்டிருந்தால் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்திருப்பேன். எனவே 10,000 ரூபாய் கொடுத்து எம்.பி.பி.எஸ். சீட் வாங்க முடியுமென்ற நிலைமையைத் தமிழ்நாட்டில் மாற்றியிருப்பதாக நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். எனவேதான் பொதுவாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். யார் எங்கே தவறு செய்தாலும், கண்டு பிடியுங்கள். கண்டுபிடித்துச் சொல்லுங்கள். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், தண்டிக்க வேண்டிய கடமை அரசியலில் இருக்கிற அனைவருக்கும் உண்டு. தவறு செய்பவர்களுக்குத் துணை புரிந்துவிட்டு நாங்கள் தவறே செய்யவில்லை என்று செய்த தவறை மறைத்து, தவறே செய்யாதவர்களைப்போல் காட்சி தர வேண்டும் என்று ஆசைப்படுவது என்பது நிச்சயமாக அரசியலில் பயன் தராது என்று கூறி, மருத்துவக் கொள்கைக் குறிப்பைப் பாராட்டி, மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையை மேலும் சிறப்பாக ஆக்க வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, I have great pleasure in participating in the discussion on the Policy Note on Medical and Public Health. I would particularly like to welcome our old friend, the Hon. Dr. Hande, who has been a Member of this House for quite some time in the past and I am glad that he is now the Minister for Health, dealing with a very important portfolio.

(மாற்றுத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் தலைமை)

Sir, my first request to him is that in addition to the formation of a Consultative Committee—I do not know whether he intends to form one—we should have a State Advisory Council consisting of specialists drawn from various fields of activity in the medical field to give him advice on various aspects of medical education, research and development. The reason why I am saying this is that neither in this House nor in the other House, to my knowledge, do we have specialists who have qualified themselves in medicine, as in the past. A few years ago, of course, we had very eminent persons in the Legislative Council to advise the Government on various specialised activities. I request him to form such a Council because it has been a longstanding demand of

[Thiru A. R. Damodaran] [1980 ஜூலை 23

perhaps a feeling amongst the members of the medical profession that they have been neglected in all aspects of medical development in our State. At present, the Hon. the Minister for Health is himself a doctor and he will be able to understand the specialisation problems better. But, in the past, when we had only laymen as Health Ministers, there was a very heavy reliance on the medical bureaucracy of the State machinery. With all due respect to the medical bureaucracy—I do not say they are inexpert in any field—they are all conditioned by constraints of financial resources and they have to shape their recommendations according to the budget which may be imposed upon them by the Finance Department. I would request him to have a Brains Trust for his Department to advise him on important matters. It is up to him to accept or modify or reject any such advice. I think the time has come for the Minister for Health to take the medical profession into confidence in planning for medical and health activities in our State.

*(பிற்பகல் 5-30)*

Sir, reference was made to the fact that there was need for improvement of the rural health services. Even three or five years ago, we made a plea that there should be greater mobility in the rural health services. I am very happy and gratified to note that the scheme is being extended to more centres. In 1977-78, this scheme was adopted in 24 Primary Health Centres. In 1978-79, it was extended to 100 more Centres and in 1979-80, it was extended to another 100 Centres, bringing the total number of Primary Health Centres under this Scheme to 224. I think that this is a very great achievement. I do not say, for a moment, that we have achieved 100 per cent of what we set out to do. But it is an excellent beginning. I would like the Hon. Minister to set up an independent evaluation team to find out whether the benefits of the Mobile Health Service Scheme are reaching the people to the extent we want them to reach. It is not with the intention of jettisoning the scheme but I would like him to make an impartial survey so that if any defects are found, they may be rectified.

Sir, in the matter of sending doctors to the villages, I want to express my humble opinion, though I am not an expert in this field. Many of us here and many from outside have argued that Masters of Medicine should go to villages, that Masters of Surgery should go to villages and that Neuro-Surgeons should go to villages. This is a wrong concept of medical treatment of the rural poor. Nowhere in the world will you have a specialist going to a village.



1980 ஜூலை 23] [Thiru A. R. Damodaran]

What is a specialist going to do in a village? Our assumption is that the moment we have a doctor in our household our disease will be cured. But that doctor requires appliances, modern diagnostic apparatus, machinery, etc. In fact, many of our specialists would feel absolutely helpless if we send them out to the villages. Of course, the poor people in the rural areas may be in need of help. I am saying this because I have been associated with the medical profession for a very long time and we have been discussing about this problem. How to extend medical relief to the rural areas is a national problem. Many experts and many Health Committees have given their considered opinion in the matter and probably the Hon. Minister has gone through them. The advice given by them is that we should try to strengthen the District Headquarters Hospitals and, if we have enough money, perhaps even the Taluk Headquarters Hospitals. These should act as the central points for providing mobile health service to the rural areas. A doctor who leaves at 7 o'clock in the morning can attend five villages on a programmed basis and come back at 2 p.m. or 3 p.m. There are cases which require hospital treatment. An operation cannot be performed in a village. An operation has to be performed in an operation-theatre under aseptic conditions. It is meaningless to say that all cases can be treated at the village level and this aspect has to be borne in mind. It is being borne in mind . . . .

*திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகள் போதவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறபோது, எக்ஸ்பர்ட்டுகளை கிராமப்புறத்திற்கு அனுப்பினால், எப்படி வேலை செய்வார்கள் என்று கேட்டு தயவு செய்து கவனத்தைத் திருப்ப வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*திரு. ஏ. ஆர். தாமோதரன் : நான் சொல்லுவதால் கவனம் திரும்புகிற மாதிரி இருந்தால், அவர் மந்திரியாக இருப்பாரா? நான் சொல்லுவதைச் சொல்கிறேன். அவர் என்ன செய்கிறாரோ செய்யட்டும்.*

I said that because a criticism was being mounted against the doctors. It is stated that we are spending anything like Rs. 1,35,000 on a doctor's education. Who was the person who manufactured these facts to say that we spend Rs. 1,35,000? How is it estimated and costed? It seems that they estimate and cost the provision on the entire teaching staff who also take part in hospital activities. It is not known how they calculate and do the

costing. My hon. Friend Thiru Nallasivan has gone into the whole area and I would not be able to cover it again. What I wanted to say is this. My real intention is that if we want to carry the medical relief teams to our rural areas, the District Headquarters Hospitals have to be upgraded. In fact, it was a recommendation of a Health Committee made more than 15 years ago that every district should have a Medical College and an upgraded Medical Hospital with at least 500 beds. If this recommendation had been accepted by the Planning Commission, 12 of our districts would have had Medical Colleges and Hospitals and these would have functioned as central points for rural medical relief. My request to the Hon. Minister is to evaluate the performance of the Mobile Health Service teams and to strengthen them with additional resources.

Sir, my hon. Friend Thiru Swaminathan referred to the fact that the drug allowance had been increased from Rs. 14,000 to Rs. 20,000 for Primary Health Centres. If I remember aright, in the Policy Note also they have stated that wherever they have provided Mobile Health Service teams, they have also provided an additional Rs. 15,000 by way of drugs. That is a good beginning. But, there is a constraint on resources. We would like the provision to be increased to Rs. 60,000 but obviously the Minister cannot do it. I would request the Hon. Minister to strengthen the mobility of the Health Services and use the District Headquarters Hospitals as referal centres. The specialist centres in Madras like the neurological blocks, etc. and the cardiology specialists may be used for reference of more difficult cases coming from the districts.

Sir, on the head 'Family Welfare', a sum of Rs. 100 crores is being spent in Tamil Nadu. But, unfortunately, we are not able to achieve what we set out to achieve. There is need for strengthening this department. I know a lot has been said and there is nothing that I need add to this, but I sincerely believe that the Primary Health Centres must take more active interest in promoting the Family Welfare work. Health Visitors/Workers which the Hon. Minister contemplates will be a good adjunct to the Primary Health Centres in the sense that they will act as motivators. Motivation is the most important thing in Family Welfare Campaign and this is absolutely necessary, in my opinion, in our State because the population of Tamil Nadu is expected to be around 73 million by 2000 A.D. and more and more funds will have to be spent in this direction.



In the control of communicable diseases, I would request that at least in the District and Taluk Headquarters Hospitals, deep freeze equipment and refrigeration equipment should be provided. It is not sufficient if they are merely provided but they must also be properly serviced and maintained and kept in a condition beyond repair. Many of the machines in our Hospitals, probably crores of rupees worth of them, are lying idle. The information was given in answer to a question some time back. They are not being serviced and repaired properly. It is a disgrace to a State which produces thousands of Engineers per annum and skilled technicians to plead inability to keep the machines in our Hospitals in good order. I read somewhere that the Hon. Minister was looking into that aspect. I hope he will provide our District and Taluk Headquarters Hospitals with deep freeze and refrigeration equipments because many costly vaccines, particularly the Polio vaccines, will get spoilt if they are kept outside. People are now bringing them in thermos flasks. Such vaccines, if left outside, would become useless and life will be in danger. I, therefore, request that at least in District Headquarters Hospitals, deep freeze equipment and refrigeration equipments should be provided and they should work on generators. We cannot depend upon the power supplied by the Electricity Board. If we depend upon the Electricity Board's power supply, lakhs of rupees worth of vaccines will become useless. I find that the Government have provided generators to some of the hospitals and I welcome it.

So far as the elimination of malaria, filaria and viral encephalitis which is caused by the mosquitoes is concerned, I see from the figures that thousands of new persons are being afflicted with such diseases. I come from an endemic area and filaria is pecular to my district of South Arcot. Thousands of cases come in and I do not think the problem will be solved merely by anti-larvae and insecticidal sprays. In all our Municipalities we have introduced the water-supply scheme but we have no drainage scheme and therefore, mosquitoes will breed in millions. I would, therefore, request the Hon. Minister to consult the experts not only in this State but also outside our State and if necessary even the experts from the World Health Organisation to find out what new methods we can adopt for eradication of this mosquito menace. I believe experiments are being carried on for sterilisation of the male mosquitoes so that they may not breed and I hope due care will be taken to see that action is taken for the control of these diseases.

Turning to Medical, there have been complaints about the supply of equipments to our General Hospital. I would only request that the purchase of 40 lakhs of rupees worth of equipment to be kept in the General Hospital should not be compared with the supply of equipment to our District Hospitals. People from outside Madras City come to the General Hospital and certain rare high specialities could be developed only in the General Hospital at Madras. I would request the critics to shed the attitude of comparing such provision to the General Hospital with the provision of equipment in District and Taluk Headquarters Hospitals to say that the rural area is neglected. It is true that our District Headquarters Hospitals have a claim to have some specialities.

In the case of orthopaedically handicapped, it takes one year for the supply of calipers or artificial limbs. The Orthopaedic Centre in the Madras General Hospital took so much time and I learn that it has now been shifted to K.K. Nagar Hospital. In view of the need for the artificial limbs, I would request the Government to take necessary steps to improve the production of artificial limbs so that the delay may be cut down to two or three months. If it takes one year to receive an artificial limb, it means a great deal of suffering.

(பிற்பகல் 5-40)

Sir, regarding the methods of admission to the Medical Colleges in our State, I made a plea two years ago. I would like to make the same plea now. The Committee system may have its advantages like the possibility of giving admission to some boys from the rural areas. The system suggested by the hon. Member Thiru Nallasivan may not work for the reason that we have boys coming from three Universities in our State—the Madurai Kamaraj University, the Madras University and the Annamalai University. The system of questioning and grading of students is totally different in each of these Universities. If a boy gets 96 marks in the Madurai-Kamaraj University, it does not mean that he is equivalent to a boy who has got 96 marks in the Madras University because the system of examination and the system of grading are totally different in these two Universities. Then, we have boys coming from Central Schools after taking the plus two Examination of the Central Board of Secondary Education, Delhi. So, boys come from four or five streams which do not have a common grading system. The only answer to this problem is, as I suggested two years ago, to have an Entrance Examination for Medical and Engineering



courses. On the basis of answers to objective type of questions that will be asked and based on a grading system that may be drawn, the students may be selected for admission to these courses. The hon. Member Thiru Eradha said that there might not be a single blemish in the present selections. I accept his good intentions. Even if we are extremely honest, we are all humans subject to human pressures. Whether we are on the Selection Committee or whether we are on the Treasury Benches, sometimes some mistake will occur. The Government may stick to whatever quotas they have reserved for the Scheduled Castes, Scheduled Tribes and the Backward Classes. But in the matter of admission to professional colleges, the selection should be strictly on the basis of an Entrance Examination where there is no room for anybody to corrupt the person who corrects the answer papers. This is being done in JIPMER and other medical institutions and also in the Indian Institutes of Technology. It seems to be working well. We should give this an experiment because whatever we may do, complaints will be raised that some malpractices have been committed.

Thank you.

THIRUMATHI TARA CHERIAN : Mr. Vice-Chairman, I thank you for giving me also an opportunity to participate in this discussion. Not as a doctor's wife but as one who had worked in many of the hospitals in Madras in an honorary capacity for over 30 years and as one who knows something about the administration of hospitals, I am happy to participate in today's discussions. I congratulate the Hon. the Health Minister on his assuming this onerous and responsible portfolio which is going to be a very taxing one. He has started very well indeed. I also congratulate him on giving a very comprehensive and rather explicit Note explaining all the subjects that come under the head 'Health'.

Sir, I request the Hon. Minister to see that the applications for admission to the Medical Colleges are processed and the lists published by the 15th of August so that those who are not able to join the Medical Colleges may have the time to get into Colleges where Science groups are in vogue.

The Policy Note clearly shows that various programmes are going to be taken up out of the Budget allocation for 1980-81. In this connection, I would like to make a suggestion and I hope that the Hon. Minister will agree with me. A quarterly review of all the projects including the old, new and continuing ones may be prepared and placed on the table of the House. If that is done,

Members from both sides of the House will be able to give constructive suggestions and people may know what the bottlenecks are, where the money could not be used and where the Budgetary provisions have to be re-allocated. Such a discussion would be very useful because, at the end of the year, Government can come with a good account of the constructive work done by them during the year.

Sir, health has been defined as a state of complete mental, physical and social well-being and not merely the absence of disease or infirmity. It has also been said that the enjoyment of a higher standard of health is one of the fundamental rights of every human being without distinction of race, religion, political belief, economic or social conditions. If all these could be ensured, we will have a brighter future and we will have a brighter view of public health. But this is only a cry in the wilderness for many reasons. Now, when doctors attend on their patients, they treat only the disease without taking a comprehensive view of the individual. But, how can this be rectified when all our hospitals are crowded, In our hospitals, we find patients on the bed, under the bed and by the side of the bed. In some areas, we find that the people have become too very hospital-conscious. The Policy Note has not given us any idea about the doctor-patient ratio and the patients-nurses ratio that exist now. If that can be given, we will get an idea about the problems in our hospitals.

Then, Sir, the importance of nurses cannot be over-emphasised. Because they are over-worked, they are not able to nurse all the patients. But they are a group of persons specially trained for nursing the patients and the people should be made to understand that there is a lot of difference between nursing given by a trained nurse and the nursing by an ordinary person. Therefore, he or she needs certain comforts and better places to live in, particularly in rural areas. I have not been to many of the rural areas but still I have found that there is no proper housing for the nurses and midwives, and the young school girls who go there as nurses are exposed to dangers. I hope some money will be allotted for construction of houses for the nurses, etc. in the rural areas.

Coming to Medical Education, I think Thiru Damodaran spoke about certain things. I feel that we have a wonderful University, Syndicate and Senate here and it is their responsibility to decide about the curricula for Medical Health. I feel the time has come



when we have got to have more of social medicine and it should be given more importance. In the curricula, social medicine has to be given more importance and it will solve some of the problems particularly in the rural areas. Social medicine is concerned with methodology of families, groups, societies and population. The doctor, therefore, should be familiar, not only with the pathology of the diseased condition of the patient, but it is more important that he should know the conditions of the home, family and community of the patient and the prejudicial factors in them can impair the patient even during the convalescent period. Efforts must be made to see that social medicine is given more importance in the case of our students in medical colleges and also the refreshers. There are a number of doctors—some of them old—who do not keep abreast of the recent happenings. The general practitioners also need special courses. The Medical Department should conduct Refresher Courses not only for the nurses, but for the doctors, and for general practitioners also so that they may keep abreast of all the things that are going on.

Talking about medicine, many of our village dispensaries are not properly equipped, I know. I saw a beautiful building in the district of Coimbatore, near Erode and there was a young doctor who was sitting alone and it was two years ago. I am not, therefore, saying this as a complaint against this Government, since, after all, we all realise the new Government has taken over only a few months ago. Therefore, there is every prospect of its doing everything very well. He was sitting idle without medicines. At the same time, he must understand the use and misuse of the miracle drugs. I know a patient who has taken anti-biotics and as an after-effect her bones had become cancerous. It is very necessary that we should look into that aspect also.

Then, Sir, coming to the Women and Children Hospital, Madras, in the indents for the care of the patients, there is nothing for the new-born baby. The poor woman wraps her child with a part of her saree and in one mat four patients are lying and the child is lying on the floor. I am not exaggerating; I went there to see the wife of one of my servants and, therefore, I know about it. Sir, there has been a little bit of apathy about the Missionaries and the Christian Missions. I saw the other day the Swamiji's note in the paper about giving training to people. If we use our trained social workers in the Hospitals, particularly to watch cooking of food and distribution of food, it would be better. As a member of the Advisory Board for the Hospital, I have seen, with my own

eyes, one thing. The water tap will be there. The milk will also be there. Both will be mixed and given to the patient whose eyes are bandaged. Unless 8 annas or one rupee is given, the patients are not removed from the stretcher. This is not because of the new administration. This has been going on for years. The gateman, out of poverty, is also collecting money. I request the Government to renew the Advisory Committees and take people who are conscientious to do the above work since the nurses are so

(பிற்பகல் 5-50)

much over-worked and have no time for this type of work. A properly constituted Advisory Committee will not interfere with the internal administration of the hospital but will only help the administration by giving constructive ideas. Some people who are qualified in nursing may also find place in that Committee. Such people can be asked to work when nurses are in shortage. If we ask the Red Cross Society, they can send some of the trained people. Now, if a patient comes to the hospital with 105 degrees of temperature, there are no adequate facilities. There is no water to drink, and there is no phenyle in the bath-rooms and the hospitals are stinking. Now, it seems that each one in the Department is working in a water-tight compartment. If there is co-ordination among them and if there is better co-ordination among social workers and the medical officers, better work can be done and conditions in the hospitals can be bettered.

Sir, with these words, I thank you once again for giving me this opportunity.

* **திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மருத்துவத் துறைப் பொறுப்பினை ஏற்ற பிறகு மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் ஒரு நல்ல மாற்றத்தை என்பதைவிட, மருத்துவத் துறையிலே ஈடுபட்டிருக்கிற டாக்டர்களுக்கு நல்ல நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறார் என்பதற்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கொள்கை விளக்கக் குறிப்பைத் தாண்டி நின்று, இந்தத் துறையிலே கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாகத் தெரிந்தோ தெரியாமலோ ஒவ்வொரு மருத்துவமனையாகச் சென்று சோதனையிடுகின்ற முறையும், அங்கே ஏதோ டாக்டர்கள் திருடுவதற்காக என்றே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பது போல, அவர்களை அங்கேயே கையும், களவுமாகப் பிடிப்பது போலவும், தொடர்ந்து அவர்களை சஸ்பெண்ட் (Suspend) செய்வது என்ற நிலையும், அதனைத் தொடர்ந்து சில காலத்திற்குப் பிறகு அவர்கள் குற்ற



மற்றவர்கள் என்பதாலோ அல்லது வேறு காரணங்களினாலோ அவர்களை அதே இடத்திலோ, வேறு இடத்திலோ வேலைக்கு அமர்த்தும் நிலையும் இருந்து கொண்டிருந்தன. இன்றைக்கு திரு. இராதா அவர்கள் சொல்லியது போல, சுதந்திரத்திற்குப் பிறகு டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பேற்ற பிறகு, டாக்டர் ஹண்டே அவர்கள்தான் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதால், அவர்களே ஒரு டாக்டர் என்பதால், அதிலுள்ள சங்கடங்களை உணர்ந்துள்ள காரணத்தால், இன்றைக்கு அதிலே மாற்றத்தை உருவாக்கி, இன்றைக்கும் மருத்துவ மனைக்குச் சென்று பார்வையிடும் நிலை இருக்கும்போதுகூட, அங்கே இருக்கும் குறைகள் என்ன, அவைகளைத் தீர்ப்பது எப்படி என்று ஆக்கபூர்வமான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதை உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மருத்துவத் துறைக்கும், பொது மக்களுக்கும் நல்ல நம்பிக்கையைத் தந்திருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுடைய இந்த முயற்சியை வரவேற்கிறேன். இது தொடர வேண்டுமென்று கருதுகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்த்தபோது, பல பழைய திட்டங்கள் அல்லது புதிய திட்டங்கள் இரண்டுமாகச் சேர்ந்து ஒரு நல்ல முடிவு ஏற்பட வேண்டும், நல்ல வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு பணியாற்றுகிற முறையைக் காண முடிகிறது. இன்றைக்கு எமர்ஜன்சி ரிசர்வ் ( (Emergency Reserve) ) டாக்டர்கள் என்று மருத்துவ மனைகளிலே 24 மணி நேரமும் இருந்து, மக்களுக்கு 24 மணி நேரமும் மருத்துவ வாய்ப்பும், வசதியும் கிடைக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்திருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். இந்த ரிசர்வ் டாக்டர்களைப் பொறுத்தவரையில், சென்னையைப் போன்ற பெரிய நகரங்களிலே இவர்களை நியமிப்பதோடு நின்றுவிடாமல், அவர்களை தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனைகள் அளவிற்கு நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு நிறைய டாக்டர்கள் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல்கள் வந்து கொண்டிருக்கும் நிலையிலே, இதைச் செய்வதன் மூலமாக பொது மக்களுடைய தேவையையும் பூர்த்தி செய்கிறோமென்பதோடு புதிய டாக்டர்களை நியமிக்கும் வாய்ப்பையும் பெறுகிறோம். இன்னமும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்குச் சாலை விபத்துக்கள் மிக அதிகமாக நடக்கின்றன. அதிலேயும் குறிப்பாக நெடுஞ்சாலைத் துறையிலே பல்வேறு குறிப்பிட்ட பகுதிகளிலே—சில ஊர்களுக்கு இடையிலே—மிக அதிகமாக சாலை விபத்துக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்காக ஒரு கணக்கு

(Statistics) எடுத்து, அந்தப் பகுதிகளிலே உள்ள மருத்துவ மனைகளில் ரிசர்வ் டாக்டர்கள் நிச்சயமாக இருக்கும் அளவிற்கு, அவர்களைப் பயன்படுத்தும் அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் சொல்லுகின்றபோது எனக்கு ஒன்று நினைவிற்கு வருகிறது. சென்ற முறை நான் பேசும்போது, டாக்டர் ஹண்டே அவர்கள் அமைச்சராக இல்லை. வேறு ஒருவர் அமைச்சராக இருந்தார். அப்போது சொன்னேன். திண்டிவனத்திற்குப் பக்கத்தில் சாலை விபத்துக்கள் நடந்து கொண்டிருக்கின்றன, எனவே மருத்துவ வசதிகளுடன் கூடிய மொபைல் வேன் அங்கிருந்தால் இதற்கு நிவாரணம் காண முடியுமென்று சொன்னேன். திண்டிவனம் என்ன பாவம் செய்ததோ தெரியவில்லை. ஒருவேளை என் பெயரிலே அது இருப்பதாலோ என்னவோ அல்லது நான் சொன்னதாலோ என்னவோ திண்டிவனத்தைத் தாண்டி விழுப்புரத்திற்கு அந்த 'மொபைல் வேன்' கொடுக்கப்பட்டது. இப்போது அங்கேயும் தி.மு.க., எம்.எல்.ஏ. தான் வந்திருக்கிறார். அதனால் உங்களுக்கு ஒன்றும் பிரயோசனமில்லை. நிறைய சாலை விபத்துக்கள் விழுப்புரத்திற்கும் திண்டிவனத்திற்கும் இடையில் நடைபெறவில்லை. திண்டிவனத்திற்கும் செங்கற்பட்டுக்கும் இடையிலே அல்லது திண்டிவனத்திற்கும் சென்னைக்கும் இடையிலேதான் இன்றைக்கும் நிறைய சாலை விபத்துக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. சமீபத்திலே நடந்த பல்வேறு விபத்துக்களிலே மருத்துவ வசதிக்காக அல்லாடி, விழுப்புரத்திற்குச் செல்லும் நிலை, பாண்டிச்சேரிக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட காலதாமதத்தால் ஒன்றிரண்டு பேர்கள் உயிரிழக்கும் நிலையும் ஏற்பட்டது. இதுபோன்ற விஷயங்களில் அரசியல் கண்ணோட்டத்தைவிட்டு, பொதுமக்கள் நல்வாழ்வு என்ற கண்ணோட்டத்தைக் கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

அதுபோலவே இன்றைக்கு தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளைப் பொறுத்தவரையில், அதிகமாக இருந்து கொண்டிருப்பது டாக்டர்களை டெப்யுடேஷனில் (Deputation) அனுப்புவதாகும். ஒரு மருத்துவ மனையில் 5, 6 டாக்டர்களை, தேவைக்கேற்ப நியமிக்கிறோம். அங்கிருந்து நிரந்தரமாக 2, 3 டாக்டர்களை டெப்யுடேஷனில் அனுப்புவதால், அந்த மருத்துவ மனையின் தேவைகளைக் குறைக்கிறோம். இதை ஒரு தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். விழுப்புரத்தில் எப்போதும் 4 டாக்டர்கள் இல்லாமல் இருப்பார்கள். திண்டிவனத்திலிருந்து நிரந்தரமாக ஒரு டாக்டர், இரண்டு டாக்டர்கள் டெப்யுடேஷனில் சென்று கொண்டிருப்பார்கள். எங்கள் மாவட்டத்தின் பல பகுதிகளில் அப்படித்தான் இருக்கிறது.



ஒன்று, டாக்டர்கள் இல்லாத குறையா அல்லது அப்படித்தான் அனுப்ப வேண்டுமென்று முறையா அல்லது டாக்டர்களைத் தண்டிக்க இது ஒரு முறை என்று அரசு கருதுகிறதா? திண்டிவனத்தில் உள்ள நிலைமையைப் பார்க்கிறபோது, குறிப்பிட்ட டாக்டர்கள்தான் டெப்புடேஷனில் போக வேண்டும் என்கிற நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதைக் காணும்போது, இதிலே எங்கோ ஒரு சிக்கல் இருந்து கொண்டிருக்கிறது என்பதைவிட, இதிலே ஒரு பொறுப்பற்ற தன்மை நிலவிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்கும், அமைச்சரவர்களின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மற்ற உறுப்பினர்கள் பேசிய ஒரு கருத்துபற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நாடு தழுவிய மலேரியா ஒழிக்கும் திட்டம் ஏறக்குறைய தோற்றுப் போய்விட்டதென்பதை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இன்றைக்கு அதிக அளவில் பரவிக் கொண்டிருக்கிற அந்த நோய்க்கு தண்ணீர் ஒரு காரணம். தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் இதோடு பைலேரியா (Filaria) நோய் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இதோடு மூளைக் காய்ச்சல் நோய்கூட கொசுவால் வருகிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம் போன்ற பின் தங்கிய மாவட்டங்களில் அல்லது சுகாதார அளவிலே வளர்ச்சி அடையாத மாவட்டங்களில் இந்த நிலை மிக அதிகமாக உள்ளதால், இதில் தனிக் கவனம் செலுத்தி இதற்கான பரிகாரம் காண வேண்டும்.

அடுத்து, மருத்துவத் துறைக்குத் தேவையான மருந்துகளையெல்லாம் தயாரிக்கின்ற முயற்சியை இந்தத் துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இது மிக மிகத் தேவை என்பது மட்டுமல்ல, இப்படித் தயாரிக்கப்படுகின்ற மருந்துகள் அரசு மருத்துவ மனைகளுக்குத் துணையாக இருக்குமென்பதால், நான் இதை வரவேற்கிறேன். இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இன்னொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மினி ஹெல்த் சென்டர்ஸ் (Mini Health Centres) என்று ஒரு திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் வரவேற்கக்கூடிய திட்டம். இந்தத் திட்டத்தை மேலும் பரவலாக்குவதற்கும், விரிவுபடுத்துவதற்கும் இந்தத் துறை தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களில் டாக்டர்கள் தங்குவதில்லை. கிராமங்களுக்கு குவாலிபைட் டாக்டர்களை அனுப்ப வேண்டுமென்ற குரல் பல இடங்களில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. உண்மையிலேயே உள்ள சங்கடம் என்ன

என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கிராமங்களுக்கு டாக்டர்களை அனுப்புகிறோம். அவர்களை அனுப்பும்போது, இருக்கின்ற முதல் குறை, அவர்கள் இருப்பதற்கான வீட்டு வசதிகள் இல்லை. இந்த நிலையில் கிராமங்களில் எம்.பி.பி.எஸ்; படித்த டாக்டர்கள் சென்று அங்கேயே தங்கியிருக்க வேண்டுமென்று சொல்லுவது எவ்வளவு நியாயமானது என்பது புரியவில்லை. அவர்கள் இரண்டு குழந்தைகளோடு, அதுவும் 7 முதல் 10 வயதுள்ள, பள்ளிக்குச் செல்லுகின்ற குழந்தைகளோடு கிராமங்களுக்குச் சென்றால், அந்தக் குழந்தைக்கு எப்படிக் கல்வி அளிப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 6.00)

ஆகவே நிச்சயமாக அவர்களுடைய பிள்ளைகளுக்குத் தேவையான கல்வியைக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கும்போது, குறைந்தபட்சம் தாலுக்கா ஹெட் குவார்ட்டர்சில் இருந்துகொண்டு காலையில் போய் மாலையில் திரும்பி வருவது தவிர்க்க முடியாத நிலை. அவர்கள் அங்கே இருப்பதில்லை என்று நாம் குற்றம் சாட்டும்போது, அவர்களுக்கு உரிய வசதிகளை நாம் செய்து கொடுத்து விட்டு குற்றம் சாட்ட வேண்டும். இதை நாம் செய்யாமல் இரண்டும் ஒத்துப் போகாத நிலையில் அவர்களை குறை சொல்வதில் பயனில்லை.

இன்னொன்றையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அவையில் இருந்திருந்தால், மிகவும் நன்றாக இருந்திருக்கும். அவர் அவையிலிருந்து போய்விட்டார். இந்த அவையில் நான் ஒரு தகவலைச் சொல்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே சுந்தரப்பெருமாள் கோயிலில் ஒரு மருத்துவமனை தனியாருடைய உதவியாலே கட்டப்பட்டது. கோவிந்தசாமி மூப்பனார் என்பவர் கொடுத்த நிலத்தில் அந்த மருத்துவமனை கட்டப்பட்டது. அவருடைய பெயராலேயே அது கட்டப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பிறகு அவருடைய பெயரை கட்டிடத்திலிருந்து எடுத்துவிட்டார்கள். இதை நான் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். உடனடியாக இதுபற்றிய விவரங்களைச் சேகரித்து ஆவன செய்கிறேன் என்று சொன்னார். அவர் தகவலைச் சேகரித்தபோது, அது உண்மைதான் என்று கண்டறிந்து கோவிந்தசாமி மூப்பனார் பெயரை மீண்டும் எழுதுவதற்கான நடவடிக்கையை எடுப்பதாக துறை அறிவித்தது. இதுவரை அவருடைய பெயர் இடம் பெறவில்லை. ஆனால் வேறு ஒரு துறை அதாவது வருவாய்த் துறை சுகாதாரத் துறையைவிட மிகவும் வேகமாகச்





செயல்பட்டது என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். யார் அந்த நிலத்தை தானமாகக் கொடுத்தது, எப்போது கொடுத்தார்கள், ஏன் கொடுத்தார்கள், கொடுக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது, எந்த நேரத்தில் கொடுத்தார்கள் என்கிற தகவல்களையெல்லாம் தயாரித்திருக்கிறார்கள். அந்தத் தகவலின் அடிப்படையிலே அவர்களால் என்ன செய்ய முடியும்? ஒன்றும் செய்ய முடியாது என்கிற சவாலுக்கு நான் வரவில்லை. அவர்களால் முடிந்தால் தூக்கில் வேண்டுமானாலும் போடட்டும். அந்தத் தகவல் வந்த பிறகு, அரசுக்கு ஒரு நிலைமை தெளிவாகி இருக்கும். இந்தக் காலத்தில் வெறும் விளம்பரத்திற்காகவும், வரியை ஏமாற்றுவதற்காகவும் மட்டுமே. நாட்டிலே சிலர் தானம் கொடுக்கிறார்கள், தர்மம் செய்கிறார்கள் என்ற எண்ணத்திற்கு மாறாக, ஒருசில நல்லவர்களும் நாட்டிலே இருக்கிறார்கள், மக்களுடைய நல்வாழ்விலே அக்கறை கொண்டு உண்மையாகவே தானம் செய்கின்ற நல்லவர்களும் இருக்கிறார்கள் என்கிற தகவல் அரசுக்கு வந்திருக்கும். அரசு தந்த வாக்குறுதியை இதுவரை நிறைவேற்றவில்லை என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிலையைப் பார்க்கும்போது, துறையில் கோளாறா, இல்லை வேண்டுமென்றே இப்படிச் செய்கிறார்களா என்பது தெரியவில்லை. இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு எந்த அளவிற்கு மதிப்பு இருக்கிறது என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். அமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதியை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து, சென்னை நகரைப் பொறுத்தவரையில், பல மருத்துவ மனைகளில் மிகச் சிறப்பாகச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் இருக்கின்ற மருத்துவ வசதிகள், சுகாதார வசதிகள் மருத்துவமனைக்குள் எப்படி இருக்கின்றன என்பது பற்றிய விவாதம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கிறது. மிகப் பின் தங்கிய நாட்டிலே, வறுமை குடியிருக்கிற நாட்டிலே மருத்துவமனைகளை எப்படி எப்படியெல்லாம் நிர்வாகம் செய்ய முடியும் என்பதை எல்லாம் ஆராய்ந்து சுகாதார வசதிகளைப் பெருக்க மேலும் மேலும் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

கீழ்ப்பாக்கம் மருத்துவமனை சம்பந்தப்பட்ட ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதுபற்றி மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். அங்கே ஒரு ஆபரேஷன் தியேட்டர் கட்டப்பட்டது. ஆனால் அது இன்னும் இயங்கவில்லை. மருத்துவ மனையில் வேறு இடங்களில்

[திரு. க. இராமமூர்த்தி] [1980 ஜூலை 23

எல்லாம் ஆபரேஷன் நடந்துகொண்டிருக்கிறது. முழுமையாக எல்லா வசதிகளோடும் கூடிய ஆபரேஷன் தியேட்டர் அங்கே கட்டப்பட்டது. அது கட்டி முடிக்கப்பட்டு தயாராக இருந்துகொண்டிருக்கிற நிலையில், அந்த ஆபரேஷன் தியேட்டர் சில ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். அது யாருக்காவது காத்திருக்கிறதா? வேண்டுமென்றே அது காத்திருக்கிறதா? இல்லை அது தேவையில்லையென்று கருதுகிறார்களா? அல்லது சென்னையிலே மருத்துவ வசதி ஏற்கெனவே அதிகமாக இருக்கிறது என்கிற நிலை இருப்பதால், இது வேண்டாமென்கிற நிலையா என்று எனக்குப் புரியவில்லை. சென்னை நகரத்திலே ஒரு பக்கம் இப்படிப்பட்ட நிலை இருக்கும்போது, இன்னொரு பக்கம் மிகச் சிறப்பான முறையிலே இதய சிகிச்சைப் பிரிவு ஹார்ட் சர்ஜரி சிகிச்சையை ஆரம்பித்து நல்ல வெற்றியைத் தேடித் தந்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே இந்தத் துறையில் நாம் மிக மிக முன்னேறியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், நாம் வழி காட்டியாக இருக்கிறோம் என்பதை நான் எடுத்துச் சொல்வதுடன் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் பக்கத்திலே இருக்கின்ற கிங் இன்ஸ்டிட்யூட் (King Institute) கூட நம்முடைய மாநிலத்திற்கு மிகுந்த பெருமையைத் தேடித் தந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு அதிலே ஒரு பிரிவை தனிப்பட்ட வகையில் ஒரு குறிப்பிட்ட வேலைக்காக அமைப்பது மிக நல்லது என்று நான் கருதுகிறேன். அதாவது மதுவிலக்குச் சட்டத்தின் அடிப்படையில் அநேகமாக மாநிலத்திலே பதிவு செய்யப்படுகின்ற அத்தனை வழக்குகளிலும் பரிசோதனைக்காக (Samples) "கிங் இன்ஸ்டிட்யூட்டுக்கு" தான் வந்துகொண்டிருக்கின்றன. தடுக்க முடியாத ஒரு சட்டமாக அது இருக்கிறது. மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் வருகிற அனைத்தும் கிங் இன்ஸ்டிட்யூட்டுக்கு வராமல் போவதில்லை. அங்குதான் பரிசோதனைக்கு வந்தாக வேண்டும். அவர்கள் ரிப்போர்ட் கொடுத்தாக வேண்டும். இப்படிப்பட்ட நிலையில் இதற்கென்று அங்கே தனியாக ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்றும் அதற்கென்று தனியாக நிபுணர்களையும், டாக்டர்களையும் வைத்து பரிசோதனை செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நிபுணர்களுடைய நேரத்தை இதிலே செலவிட்டு நேரத்தை இழந்து கிங் இன்ஸ்டிட்யூட் செய்துகொண்டிருக்கக்கூடிய நல்ல பணி பாழாகி விட வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 23] [திரு. க. இராமமூர்த்தி]

சித்த வைத்தியத்தைப் பொறுத்தவரை, இன்றைக்கு மாநிலத்தின் பல பகுதிகளிலே சித்த வைத்திய முறை வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் அப்படி ஒன்று இல்லை. அங்கே ஒன்றை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவக் கல்வியை பொறுத்தவரை, இன்றைக்கு மற்றவர்கள் எல்லாம் பேசிவிட்டபடியால், நான் ஒன்றை மட்டும் சொல்கிறேன். தாரமணியில் ஒரு போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட் அமைக்க பல ஆண்டுகளாக ஒரு அரிய முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த முயற்சிக்கு ஆர்வம் காட்டுகின்ற அதேநேரத்தில் அந்த முயற்சிக்கு இடையூறான பல காரணங்களால் அது தடைபட்டுக்கொண்டிருக்கிறது. சமீபத்திலே பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. அதற்கு என்று ஒதுக்கப்பட்ட நிலத்திலே இன்றைக்கு புதிதாக குடிசைகள் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். எந்த நோக்கத்திற்காக அது ஆரம்பிக்கப்பட்டதோ, எவ்வளவு உன்னத நோக்கத்திற்காக அதைத் துவங்கினோமோ அந்த முயற்சி எல்லாம் வீணாகிவிட்டது. நாம் இந்த நிலையில் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தாரமணியில் துவங்கிய அந்தப் பணி முழுமை பெற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவருடைய காலத்திலேயே முயற்சி செய்ய வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கான பொறுப்பினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்க வேண்டும்.

இறுதியாக முடிப்பதற்கு முன்னதாக எவ்வளவு தான் நான் பொதுப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினாலும் என்னுடைய சொந்த ஊரைப்பற்றி அவர்கள் இங்கே உறுப்பினராக இருந்தபோதே, நான் ஒரு விஷயத்தைப்பற்றி இங்கே பேசியிருக்கிறேன். அதாவது ஒரு எக்ஸ்ரே (X-ray) யூனிட் வைக்கப்பட்டதாக எனக்கு பதில் கூட மாண்புமிகு அமைச்சரிடமிருந்து வந்தது. எக்ஸ்ரே யூனிட் வைத்து பல மாதங்கள் ஆகியும், இன்னும் அது வேலை செய்யவில்லை. எலெக்ட்ரிசிட்டி எஞ்சினியர்கள் வந்து ஓ.கே. கொடுக்கவில்லையாம். அதனால் வேலை செய்யவில்லையாம். இன்றைக்கும் "X-ray" என்றால், பாண்டிச்சேரிக்குத்தான் போக வேண்டும். முழுமையாக இயந்திரம் நிறுவியும் இன்னும் அது சரியாக இயங்கவில்லை. அதுபோல திண்டிவனத்திலே பிளட் பேங்க் (Blood Bank) வைத்தாகி விட்டது என்று துறையிலிருந்து எனக்கு பதில் வருகிறது. ஆனால் தண்ணீர் இல்லாமல் அதுவும் இயங்கவில்லை. பல ஆண்டுகளாக அங்கே இருக்கக்கூடிய

குறை மேல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டும், இருக்கிற கிணற்றிலே தண்ணீர் கிடைக்கவில்லையென்ற நிலையில் புதிதாக கிணறு தோண்டி தண்ணீர் எடுக்கிற முயற்சியைச் செய்து குறைபாட்டை நீக்க ஒருவரும் முன்வரவில்லை.

(பிற்பகல் 6-10)

அதைப்போலவே, அந்தப் பகுதியிலே கடலூருக்கு அடுத்து இருக்கும் மிகப் பெரிய மருத்துவமனை திண்டிவனம் மருத்துவமனை. அங்கே ஒரு 'ஆப்பரேஷன் தியேட்டர்'க்குத் தேவை இருக்கிறது. இவையெல்லாம் என்னுடைய சொந்த ஊர் என்பதற்காக அல்ல. அந்தப் பகுதியிலே இரண்டு மூன்று தாலுக்காக்களுக்கு அவைகள் தான் இருக்கின்றன என்பதால் சொல்கிறேன். ஆகவே, இது தேவை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மருத்துவத் துறையில் பல்வேறு முன்னேற்றத்திற்கான திட்டங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் ஆண்டு செய்து காட்டுகின்ற வேலைத் திறனின் அடிப்படையிலே அவரை விமர்சிக்க வாய்ப்புத் தரவேண்டும் என்று சொல்லி, வாழ்த்தி, அமைகிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறை குறித்து இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கும் கொள்கைக் குறிப்பின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. மருத்துவத் துறையிலே பணியாற்றி நீண்டகால அனுபவம் பெற்றவர், அரசியலிலும் அதற்கு சமமான அனுபவம் பெற்றிருப்பவர் இன்றையதினம் அந்தத் துறைக்கு அமைச்சராக வந்திருக்கிறார்கள். அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக இன்றைக்குக் கல்வித் துறையிலே இருக்கும் அனைவருக்கும் மருத்துவ அறிவு வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, ஆசிரியர்களுக்கு மருத்துவம் பற்றிய அடிப்படை அறிவு வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஜப்பான் நாட்டைப் பொறுத்தவரையில், ஒருகாலத்திலே அவர்களைப்பற்றி நாம் படித்த போது 'குள்ளர்கள்' என்றுதான் படித்தோம். இன்றைக்கு மருத்துவத் துறையின் வளர்ச்சி காரணமாக ஒரு ஜப்பானியனுடைய சராசரி உயரம் 5 அடி 6 அங்குலமாக இருக்கிறது. அவர்கள் மருத்துவத் துறையிலே மக்களை அபிவிருத்தி செய்வதிலே எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம். மனிதர்களின் இரத்தத்திலே நான்கு விதமான பிரிவுகள் இருக்கின்றன. அவைகள், 'ஏ', 'பி'; 'ஏபி'; மற்றும்



'ஓ'. நாம் திருமணங்கள் செய்துகொள்வதற்கு முன் ஜாதகங்கள் தான் பார்க்கிறோம். ஆனால், ஜப்பான் நாட்டை எடுத்துக்கொண்டால், அங்கே ஜாதகம் பார்ப்பதில்லை. அங்கே திருமணத்திற்கு ஒரு தடை விதித்திருக்கிறார்கள். 'ஓ' பிரிவு இரத்தம் கொண்டுள்ள ஒரு ஆணும், 'ஓ' பிரிவு இரத்தம் கொண்டுள்ள ஒரு பெண்ணும் தங்களுக்குள் திருமணம் செய்யக் கூடாது என்று அங்கே தடை இருக்கிறது. இங்கே யாருக்கும் அதைப்பற்றித் தெரியாது. அப்படிச் செய்தால் என்ன நடக்கும் என்று ஆராய்ச்சி மூலம் அறிந்து தடை விதித்திருக்கிறார்கள். இதற்குக் காரணம், 'ஓ' பிரிவு இரத்தம் கொண்ட ஆணும், பெண்ணும் திருமணம் செய்துகொண்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அறிவில் சிறந்தவர்களாக இருக்கமாட்டார்கள். அறிவு குறைந்தவர்களாக இருப்பார்கள் என்பதேயாகும். ஆதலால், அத்தகைய க்ரூப் இரத்தம் உள்ளவர்கள் திருமணம் செய்யக்கூடாது என்று சொல்கிறார்கள். இதை ஒரு கருத்தரங்கிலே, கல்லூரியிலே இருக்கக்கூடியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அடிப்படை அறிவுகளை பள்ளிக்கூடங்களிலே ஆசிரியர்களுக்கும், பிள்ளைகளுக்கும் வழங்க நம்முடைய மருத்துவத் துறை முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாற்றாங்கால்களைப்போல, இளங் குருத்துக்களாக பள்ளிக்கூடங்களிலே இருக்கும் மாணவர்கள்தான் இந்த நாட்டின் எதிர்கால சமுதாயம். அவர்களுக்கு இந்த இளம் வயதில் போதுமான அளவுக்கு சத்துணவு கிடைக்கப்பெறாமையால், பலவிதமான நோய்கள் வருகின்றன. அவர்களுக்கு ரத்த சோகை ஏற்பட்டு கண்பார்வை கூட சரியாக இல்லாத அளவுக்கு சத்து குறைந்திருக்கிறது. ஆகவே, டாக்டர்களை வைத்து ஆராய்ந்து சிறுவர்களுடைய மருத்துவத் தேவைகளை உணர்ந்து சின்ன வயதிலேயே பிள்ளைகளுக்கு வரக் கூடிய நோய்களைத் தடுப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டினுடைய இளம் பிள்ளைகளுக்காக, சிறுவர்களுக்காக இது சம்பந்தமாக எவ்வளவு நிதி ஒதுக்கினாலும் அது தகும். எதிர் காலத்திலே இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்கு அது பயன்படும். ஆகவே, இதைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக்கூடங்களுக்கு டாக்டர்களை அனுப்பி மாணவர்களை கவனிக்க வேண்டும். அவர்களுக்கு மாத்திரைகளும், மருந்துகளும் தர எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். இப்போது உயர்நிலைப் பள்ளிகளிலே வேன்கள் இருக்கின்றன. ஆனால், ஆரம்பப் பள்ளிக்கு எந்தவிதமான வசதிகளும் இல்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் ஆரம்பப் பள்ளிகளிலே படிக்கும் மாணவர்களுக்கு இந்த உதவிகளைச் செய்ய வேண்டும்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

இப்போது அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் எல்லாச் சலுகைகளையும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், 'மெடிக்கல் ரிஇம்பர்ஸ்மென்ட்' என்று சொல்லப்படும் சலுகை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படவில்லை. ஆஸ்பத்திரிகளிலே சென்றால், தேவையான, முக்கியமான மருந்து இல்லையென்று சொன்னால், அந்த உயர்ந்த ரக மருந்தை வாங்கினால்தான் உயிர் பிழைக்க வைக்க முடியும் என்ற நிலைமையிலே வெளியிலிருந்து மருந்து வாங்கிக்கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், மற்ற அலுவலர்கள் இதை வாங்கி அனுபவிக்கலாம். தனியார் பள்ளி, கல்லூரி, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் இதைச் செய்யக்கூடாது என்று இருக்கிறது. அவர்களுக்கும் இந்தச் சலுகையை அளிக்க வேண்டும், அதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நர்ஸ்களின் எண்ணிக்கையை உயர்த்த இப்போது திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், இவைகள்கூட இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்யுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொன்னால், கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் மருத்துவமனை என்று ஒரு மருத்துவமனை இங்கே சென்னையிலே இருக்கிறது. இந்த மருத்துவமனையிலே 20 நர்ஸ் இடங்களுக்குமேல் காலியாக இருக்கின்றன. இங்கேயே இப்படியென்றால், மற்ற இடங்கள் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். இங்கேயே, பெண்களுக்குத் தலைமை மருத்துவமனையாக இருக்கும் இந்த மருத்துவமனையிலேயே 20 செவிலியர்கள் இடங்கள் காலியாக இருக்கின்றன. நேற்று அங்கிருக்கும் சூப்பிரண்டன்ட்டிடம் போன் செய்தபோது, இதைச் சொன்னார்கள். இதை நான் அமைச்சர் அவர்களிடம் தெரிவிக்கிறேன் என்று சொன்னேன். ஆகவே, இதை கவனிக்க வேண்டும். 'டிப்ளோமா இன் பார்மசி'யைப் பொறுத்தவரையில், அதற்கு இன்னும் அதிக இடங்கள் ஒதுக்க வேண்டும். அதிக இடங்கள் ஒதுக்கி அதிகமான மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். பார்மசியைப் பொறுத்தவரையில், 'முதுகலைப் பட்டம்' ஏராளமான கல்லூரிகளில் இல்லை. மாணவர்கள் வெளி மாநிலங்களில் சென்றுதான் படிக்கிறார்கள். சென்ற முறை நான் பேசும்போதும் இதைச் சொன்னேன். ஆகவே, 'போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் இன் பார்மசி'-யைக் கொண்டு வர உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போதிய மருத்துவமனைகளில் டாக்டர்களை அதிகமாக நியமிக்க வேண்டும்.



இப்போது மருத்துவமனைகளிலே ஏராளமான நோயாளிகளின் கூட்டம் வருகிறது. அங்கிருக்கும் டாக்டர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அதிகமான அளவிலே டாக்டர்கள் அணி நியமிக்கப்பட வேண்டும். எனக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றைச் சொல்கிறேன். ஒரு டாக்டரிடத்திலே சென்று தோள்பட்டை வலி . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 5 நிமிடங்களில் முடிக்கிறேன் என்றுதான் நேரம் கேட்டீர்கள். ஆகவே, சிக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** இதோ முடித்துவிடுகிறேன். தோள் பட்டையிலே வலி என்று சொல்லி அரசு மருத்துவமனைக்குச் சென்றபோது ஒரு தோள் பட்டையிலே ஊசி போட்டார்கள். வலி மீண்டும் வந்ததால் மீண்டும் ஊசி போட்டார்கள். ஊசியை ஸ்டெரிலைஸ் செய்யாமல் போட்டுவிட்டார்கள். அதன் காரணமாக செப்டிக் ஆகிவிட்டது. பின்னர், நாமக்கல் ஆஸ்பத்திரியிலேயிருந்து இங்கே சென்னைக்கு வந்து, இங்கே இருந்து பெரிய டாக்டரைப் பார்த்தபோது, என்னை மிகவும் திட்டினார். பேஷன்ட் என்னுடைய மனைவி, ஒரு ஆசிரியை. இன்னும் 15 நாட்கள் வராமல் இருந்திருந்தால், கையையே எடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும் என்று தெரிவித்தார். ஒரு எம்.எல்.சி. யாக இருந்தும் இவ்வளவு அலட்சியமாக இருந்தீர்களே என்று கோபித்தார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது ரொம்ப ப்ரிவிலேஜ் இஷ்யூ, டாக்டர் ஒரு எம்.எல்.சி.யைத் திட்டியது.

**திரு. செ. முத்துசாமி :** எம்.எல்.சி.யாக இருந்ததால்தான் கூடவே இருந்து சிகிச்சை அளிக்க இயலவில்லை. ஆசிரியராக மட்டும் இருந்திருந்தால், கூடவே இருந்திருக்க முடியும். அதற்குப்பின் 2½ மாத காலம் ஆஸ்பத்திரியிலேயே இருந்து சிகிச்சை அளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆகவே, இப்படிப்பட்ட முறையில் டாக்டர்கள் சில நேரங்களிலே தவறு செய்கிறார்கள். அதனால் பேஷன்ட்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு தவறும் அறியாத மக்கள் இந்த டாக்டர்களை நம்பி வருகிறார்கள். ஆகவே. டாக்டர்களுக்கு சரியான அறிவு வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை நாம் செய்து கொடுக்க வேண்டும். ஊசியைப் போடும் முன்பு நல்ல கொதிக்கின்ற நீரிலே போட்டுவிட்டு அப்புறம்தான் நோயாளிகளுக்கு ஊசி போட வேண்டும் என்று வசதி செய்து கொடுத்திருக்கிறோம். இருந்தாலும் டாக்டர்கள் தவறு செய்கிறார்கள். என் வாழ்க்கையிலேயே நேரடியாக அனுபவம் ஏற்பட்டதன் காரணமாக நான் சொல்

கிறேன், இதையெல்லாம் முக்கியமாக, உடனடியாகக் கவனிக்க வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, மாணவர்களின் வளர்ச்சி மிகவும் முக்கியமானது, அந்த முக்கியமான கருத்தை மனதிலே வைத்துக்கொண்டு, அவர்களுக்கு வேண்டிய மாத்திரைகள், மருந்துகள் ஆகியவற்றைக் கொடுத்து தேவையான வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு தந்த தலைவருக்கு நன்றி செலுத்தி இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை மருத்துவத் துறைக்கான கொள்கைக் குறிப்பின்மீது எனது கருத்துக்கள் சிலவற்றை இங்கே சொல்ல விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் புதிதாக இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டியதைப் போலவே, பல்லாண்டுகாலமாக அவரோடு பழகக் கூடிய வாய்ப்பு பெற்றவன் என்ற அடிப்படையில், இதுவரையில் இந்தத் துறை சிறக்க, செம்மையாக ஓரளவிற்குத்தான் செயல்பட்டிருந்தாலும், எதிர்காலத்திலே இன்னும் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்ற ஆர்வத்தோடு அவர் பாடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 6-20)

அவர் அமைச்சர் பொறுப்பேற்ற உடனேயே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, மதுரைப் பகுதியில் பல்லாயிரக் கணக்கான ரூபாய் பெருமானமுள்ள அரசு மருந்துகள் தனியார் கடைகளில் விற்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி வந்தது. ஆக, புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் எவ்வளவு சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறார் என்பதற்கு இது சான்றாக அமைந்தது. அந்த முறையிலும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற சொற்றொடருக்கு நாம் சொந்தக்காரர்களாக இருந்தாலும், இன்றையதினம் நாட்டில் எந்த அளவுக்கு நோய்கள் போக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். மருத்துவத் துறைக்காக நாம் இந்த ஆண்டு ரூபாய் 103 கோடி செலவிடப் போகிறோம் என்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தந்தாலும், வளர்ந்து வருகிற ஒரு



சமுதாயத்தில் இந்தத் தொகை எந்த வகையிலும் போதாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களேகூட ஒப்புக்கொள்வார்கள். ஆனால் அகில இந்தியாவோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்து தமிழ்நாடுதான் மருத்துவத் துறைக்கு என்று தன்னுடைய வருமானத்தில் சுமார் 9, 10 அல்லது 11 சதவீதம் அளவுக்குச் செலவழிக்கிறது என்ற பெருமை இருந்து வருகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆக, இவ்வாறு மொத்த வருவாயில் 11 சதவீதம் அளவுக்கு மருத்துவத் துறைக்காகச் செலவிட்ட பின்னாலும், செலவிடப்படும் பணத்தின் அளவுக்கு நாட்டு மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. தற்போது மருத்துவத் துறைக்கு நல்ல இளமையானவரும் சுறுசுறுப்பானவருமான ஒரு அமைச்சர் கிடைத்திருக்கிறார் என்பதைப்போல் இந்தத் துறைக்கு ஒரு சுறுசுறுப்பான செயலாளரும் கிடைத்திருக்கிறார். இந்த இருவருமாகச் சேர்ந்து அந்தப் பணியை வேகப்படுத்தி, தமிழ் நாட்டு மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கச் செய்யும் வகையில் பாடுபடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

மருத்துவ வசதிகளை கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக நாம் அளித்து வருகிறோம். ஆண்டுக்கு ரூபாய் 14,000 அளவுக்கு அந்த மருத்துவ நிலையத்திற்கு மருந்து அளித்ததற்கு மாறாக இன்னும் ஒரு 6,000 ரூபாய் அதிகப்படுத்தி இனி ஆண்டுக்கு ரூபாய் 20,000 என்ற அளவுக்கு மருந்துக்காகச் செலவு செய்ய இருக்கிறோம் என்று இங்கே கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் மக்கள் வாழ்கிற ஒரு ஒன்றியப் பகுதியில்தான் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அந்தப் பகுதிக்கு ரூபாய் 20,000 மட்டும் மருந்துக்காகச் செலவிடுவது என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால், தனி நபருக்கு ஆண்டுக்கு 20 பைசாதான் செலவிடப் படுகிறது என்பதை உணர முடியும். எனவே இந்த வகையில் நமக்கு இன்னும் எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது என்பதையும் இதன்மூலம் நாம் அறிந்துகொள்ள முடியும்.

அதைப் போலவே கிராம மக்களின் இருப்பிடங்களிலேயே சுகாதாரப் பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் தமிழ் நாட்டில் 1977-78-ல் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அந்தத் திட்டம் இன்றையதினம் 234 நிலையங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி அறிந்து நாம் மகிழ்ச்சியடைந்தாலும், இன்னும் 160 இடங்களில் இந்தப் பணி செய்யப்படாமல் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நாட்டில் வேலையில்லாமல் இருக்கிற டாக்டர்கள் இந்தப் பணிக்குப் பயன்

படுத்தப்பட்டால், ஒரு பக்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும், அதே நேரத்தில் நடமாடும் சுகாதாரக் குழுக்கள் கிராமங்களில் விரிவாகச் செயல்பட்டு அதிகமான மக்களுக்கு வசதியும் செய்து தரமுடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சிறு சுகாதார நிலையங்கள் இதுவரை தமிழகம் முழுவம் 164 இடங்களில் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், இந்த ஆண்டு 50 நிலையங்களைக் கூடுதலாக்கி அதுவும் 5,000 மக்கள் தொகை கொண்ட பகுதிகளுக்குப் பயன்படக்கூடிய வகையில் செயல்படுத்தப்படும் என்ற செய்தியைப் பார்க்கிறபோது, உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக இந்த அரசாங்கம் கூட்டுறவு அடிப்படையில் தொண்டு நிறுவனங்கள் மூலமாக அந்த அமைப்புகள் செயல்படுகிறபோது, ஒவ்வொரு தொண்டு நிறுவனத்திற்கும் ஆண்டுக்கு ரூபாய் 9,000 நிதி உதவி கொடுப்பது என்பது பாராட்டத் தக்கதுதான். ஆனால் அந்த ஒன்பதாயிரம் ரூபாயை எப்படிக் கொடுக்கப்போகிறோம் என்றால், ஏப்ரல்-மே மாதத்தில் மூவாயிரம் ரூபாயும், பிறகு செப்டம்பர்-அக்டோபரில் மூவாயிரம் ரூபாயும் கொடுத்துவிட்டு, பிறகு மீதியிருக்கிற மூவாயிரம் ரூபாயை கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டதற்குப் பின்னாலே கொடுக்கப் போகிறோம் என்று கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக மருத்துவத் துறையில் கணக்குகள் எப்போது ஆய்வு செய்யப்படும் என்று தெரியாத நிலை இருக்கும்போது, இந்த 164 சிறு சுகாதார நிலையங்களுக்கு, அவற்றின் கணக்குகள் ஆய்வு செய்யப்பட்ட பிறகுதான் கடைசி மூவாயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்றால், நாம் எந்த நல்ல நோக்கத்திற்காக இந்தச் சிறு சுகாதார நிலையங்களை உருவாக்குகிறோமோ, அந்த நோக்கம் தடைப்பட்டுப் போய்விட நாமே காரணமாக அமைந்துவிடுவோமோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மக்களிடத்தில் ஒவ்வொரு ரூபாயாக வசூல் செய்து தொண்டு நிறுவனங்கள் மூலமாக நல்ல முறையில் மக்களுக்குப் பணியாற்ற வேண்டும், பரவலாக மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது, இந்த மூவாயிரம் ரூபாய்க்கு இப்படி ஒரு கண்டிஷன் பிறப்பிக்க வேண்டிய அவசியமில்லை. எனவே இதைத் தளர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது மாநிலத்தில் இவ்வளவு அதிகமான தொகையை மருத்துவத் துறைக்காக என்று ஒதுக்கிய பிறகும், நோய்கள் அறவே ஒழிந்துவிட்டனவா என்றால் இல்லை. வாந்தி பேதி (காலரா) மூலமாக 1979 ஆம் ஆண்டில் 396 பேர்



இறந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, இருபதாவது நூற்றாண்டில் மருத்துவத் துறையும் விஞ்ஞானத் துறையும் இவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்று நாம் பெருமை அடைந்தாலும், 396 பேர் இந்த நோய்க்கு பலியாகியிருக்கிறார்கள் என்பதைக் கண்டு, நாம் வெட்கப்பட வேண்டியிருக்கிறது.

அதைப்போலவே காலராவைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் அது எந்தப் பகுதியைத் தொட்டாலும், அதை உடனடியாகப் போக்கக்கூடிய சக்தி பெற்றிருந்தாலும், அதற்கான நல்ல திறமையான டாக்டர்கள் இருந்தாலும், அந்த நோயால் 1,391 பேர் பாதிக்கப்பட்டு அதில் 21 பேர் இறந்திருக்கிறார்கள் என்ற செய்தி நமக்கு மகிழ்ச்சியைத் தராது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே மலேரியா நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கணக்கைப் பார்க்கிறபோது நாம் மருத்துவத் துறையில் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறோமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. 1977 ஆம் ஆண்டில் அந்த நோயால் மொத்தம் 83,300 பேர் பாதிக்கப்பட்டார்கள். 1978 ஆம் ஆண்டில் 76,222 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் 1979 ஆம் ஆண்டில் 91,807 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைப் பார்க்கிறபோது நாம் இதன் காரணத்தைக் கண்டறிந்தாக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கொள்கைக் குறிப்பில் இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு காரணத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இராமேஸ்வரம் தீவில் மட்டும் 28,000 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை நகரில் மட்டும் 33,450 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், எங்கே பார்த்தாலும் கொசுத் தொல்லை தாங்க முடியாத அளவுக்கு இருக்கிறது. சாக்கடை ஒருபுறம் தேங்கியிருப்பதால், எந்த அளவுக்கு வேகமாக இந்த நோய் பரவுவதற்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு மாநகராட்சியும் இதற்கு உதவி செய்கிறது என்று சொன்னால், யாரும் இதை மறுக்க மாட்டார்கள் என்றுதான் கருதுகிறேன். தமிழ்நாட்டில் மலேரியாவால் பாதிக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சென்னை நகரில் மட்டும் இருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கிறபோது, இந்த அளவுக்கு சென்னை நகரம் பாதிக்கப்பட ஏன் இந்த அரசு பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதைப்போலவே யானைக்கால் நோய் ஆண்டுக்காண்டு வளர்ந்து கொண்டே வருகிறது. இந்த நோய் தடுக்கப்பட வேண்டும், அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நாம் பேசிக் கொண்டிருந்தாலும், அது இன்றையதினம் வேகமாகப் பரவிக் கொண்டிருப்பதை நம்மாலே அறிய முடிகிறது. 1975 ஆம் ஆண்டில் 6,499 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டார்கள் என்பதற்கு மாறாக 1979 ஆம் ஆண்டில் 10,897 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைப் பார்க்கும்போது, வருத்தமாக இருக்கிறது. இதைப் போக்குவதற்காக 20 யானைக்கால் நோய் சிகிச்சைப் பிரிவுகளைத் தொடங்க அரசு இந்த ஆண்டு முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் ஓரளவு பலன் கிடைக்கும் என்று நாம் நம்பலாம். ஆனாலும் காலராவும் யானைக்கால் நோயும் தமிழகத்தில் அறவே இல்லை என்று சொல்லுகிற நாள் வந்தால்தான், நாம் மருத்துவத் துறைக்கு இவ்வளவு செய்வதற்கு ஒரு பலன் ஏற்பட்டதாக இருக்க முடியும் என்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, 1977 ஆம் ஆண்டு திடீரென்று தமிழகத்தில் மூளைக் காய்ச்சல் நோய் பரவியது. அதிலும் குறிப்பாகச் சிறு பிள்ளைகளுக்கு இந் நோய் வந்து அவர்கள் பாதிக்கப்பட்டபோது, பல தாய்மார்கள் கவலைக்கு உள்ளானார்கள். அதிலும் குறிப்பாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் இந் நோய் தொடங்கி, பிறகு தென்னாற்காடு மாவட்டத்தை அதிகமாகப் பாதித்தது என்று இங்கே விவரம் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் எனக்கு இருக்கிற வருத்தமெல்லாம், மற்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், அதனால் இறந்து போனவர்கள் எத்தனை பேர் என்ற புள்ளி விவரம் தந்திருக்கிற இந்த அரசு மூளைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழகம் முழுவதும் எவ்வளவு பேர் என்றும், அதில் இறந்து போனவர்கள் எவ்வளவு பேர் என்றும் விவரம் தரவில்லை. இரண்டு தினங்களுக்கு முன்னால் இங்கே சவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விவரத்தைச் சொன்னார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் பெரியவர்கள் 42 பேரும், சிறுவர்கள் 52 பேரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நோயைக் கண்டுபிடித்த உடனே சிகிச்சை அளிக்க எவ்வளவுதான் முயற்சிகளை நாம் மேற்கொண்டாலும், பலர் அப்பாவியாக இருந்துவிடுகிற காரணத்தால், இறந்து போக வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே இந்த நோய் வாராமல் தடுக்க அல்லது வந்தாலும் முழுமையாகத் தடுக்கத் தேவையான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது சாதாரண





தொத்து நோயாக இருந்தாலும், ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நோயாக இருந்தாலும், இந்த நோயை அறவே எப்படிப் போக்குவது என்பதைப்பற்றி அரசு சிந்தித்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30)

இந்த நோய்களையெல்லாம் தடுக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுக்கிறது. டைபாய்ட், தட்டம்மை போன்ற நோய்களை தடுப்பு ஊசிகளின் மூலம் தடுக்கிறோம். அந்த ஊசிகள் 1976 ஆம் ஆண்டில் 13.76 இலட்சம் போட்டதற்கு மாறாக 1979-ல் 9.4 இலட்சம் தான் போடப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது, தடுப்பு ஊசிகள் போடுவது குறைந்துவிட்டதால்தான் நோய்கள் பரவியிருக்குமோ என்ற ஐயப்பாடு இருப்பதால், இன்னும் அதிகமாக தடுப்பு ஊசிகளைப் போட்டு நோய்கள் வராமல் தடுக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிறக்கின்ற குழந்தைகள் கக்குவான், தொண்டை அடைப்பான் போன்ற நோய்களால் ஒருகாலத்திலே பாதிக்கப்பட்டிருந்தார்கள். இந்த நோய்கள் குழந்தைகளுக்கு வந்தால் எந்த அளவிற்குப் பெற்றோர்கள் கவலைப்பட்டார்கள் என்பதைப் பார்த்திருக்கிறோம். இந்நோய்களை முழுமையாகக் கட்டுப்படுத்த முத்தடுப்பு ஊசி போடும் திட்டம் என்று சொல்லி தமிழகத்திலே முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது என்ற நிலை இருந்தாலும், இதில் மேலும் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக நோய்களைத் தடுக்க 1978-79 ஆம் ஆண்டுவரை 110 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சுகாதாரப் பார்வையாளர்களைக் கூடுதலாக நியமித்தார்கள் என்றாலும், 1979-80 ஆம் ஆண்டில் 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மட்டுமே இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 383 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தான் இருக்கின்றன. முத்தடுப்பு ஊசித் திட்டம் நல்ல பலனைத் தரும். எதிர்கால சமுதாயத்தை நல்ல முறையில் உருவாக்கும். இன்றைய குழந்தைகள்தான் நாளைய மன்னர்கள் என்று ஒத்துக்கொள்ளக்கூடிய நாம் முழுவதுமாக எல்லாக் குழந்தைகளுக்கும் தடுப்பு ஊசி போட எல்லா ஒன்றியங்களிலும் இருக்கக்கூடிய ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1980 ஜூலை 23

தாய்-சேய் நலப் பணிகள் மிகச் சிறப்பாக நடக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. மகப்பேறுக்குரிய வயதுள்ள மகளிர் (15 வயது முதல் 45 வரை) அனைவருக்கும் இந்த நலப்பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனக்குள்ளே ஒரு சந்தேகம் வந்துவிட்டது. ஒரு காலத்திலே நாம் சொல்லியதையே திரும்பத் திரும்ப எழுதுகிறார்களோ என்ற சந்தேகம் வந்துவிட்டது. இன்றும் 15 வயதான மகளிர்க்கு இந்த உதவி கிடைக்கிறதா என்று தெரியவில்லை. நாமே சட்டத்திற்கு விரோதமாகச் செயல்படுகிறோம் என்ற கெட்ட பெயர் வந்துவிடும். இந்து திருமணச் சட்டத்தின்படி 18 வயதானவர்கள் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டு, 15 வயதுள்ள தாய்மார்களுக்கும் உதவி செய்கிறோம் என்று சொன்னால், நாம் தவறு செய்துவிட்டோமோ, கிரிமினல் குற்றத்திற்கு ஆளாகிவிட்டோமோ என்ற ஐயம் மற்றவர்களுக்கு வரும் என்பதனால், உள்ளபடியே நடைமுறையில் அப்படியிருந்தாலும்கூட, அச்சடித்துக் கொடுக்கும்போது 18 வயது முதல் 45 வயது வரை என்று திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி, உண்மைக்குப் புறம்பாக அச்சடித்துக் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறாரா?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : உண்மைக்குப் புறம்பாக அச்சடித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை. சட்டத்தை வைத்துக் கொண்டு, சட்டத்திற்கு விரோதமாக அரசாங்கம் செயல்படுகிறது என்ற எண்ணம் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன்.

**திரு. எஸ். ஆர். இராதா** : தலைவர் அவர்களே, இந்துக்களுக்கு மட்டும் அச்சடிக்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி சொல்கிறார். அப்படி ஏதாவது இருக்குமா என்று கேட்க விரும்புகிறேன். இந்துக்களுக்கு மட்டும்தான் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : திரு. இராதா அவர்கள் சட்டத்தை எடுத்துப் பார்க்க வேண்டும். 1978 ஆம் ஆண்டு சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகவேதான் சொன்னேன். அப்படியே வைத்துக்கொள்வதாக இருந்தால், எந்தவிதமான கருத்து வேறுபாடும் எனக்குக் கிடையாது. மத்திய அரசாங்கம் போட்ட . .



1980 ஜூலை 23]

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI : It is only the fertility that is mentioned here and not the marriageable age. Fertility is 15 to 45. There is a great difference between marriageable age and fertility.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : தலைவர் அவர்களே, இதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மகப்பேறுக்குரிய வயதுடைய மகளிர் 15 முதல் 45 வரை என்று குறிப்பிட்டிருப்பதால் நான் இதைக் குறிப்பிட்டேன்.

**திரு. எஸ். ஆர். இராதா** : தலைவர் அவர்களே, எல்லா மதத்திற்கும் சேர்த்துத்தானே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அமைச்சர் அவர்கள் சொல்லும்போது பதில் சொல்ல விடவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : தலைவர் அவர்களே, 15 முதல் 45 ஆண்டுகள் வரையில் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சட்டத்திலே 18 வயது என்று இருந்தாலும்கூட, 16 வயதிலே கூட அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறபோது, நமக்குப் பொறுப்பு இல்லை, ஆகவே பாதுகாக்க முடியாது என்று சொல்லி தட்டிக்கழிக்க முடியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மொழிக்காக ஒன்றைச் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரும்பவும் அதைப் படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : மகப்பேறுக்குரிய வயதுடைய மகளிர் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : "மகப்பேறுக்குரிய வயதுடைய மகளிர்" என்றுதானே இருக்கிறது. திருமணம் ஆகிவிட்டதாகப் பொருள் கொள்ள வேண்டியதில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : அப்படிப் பொருள் கொண்டால், தலைவர் அவர்களே, இன்னும் தவறாகப் போய்விடும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : தமிழுக்காகச் சொல்கிறேன். பருவம் வந்துவிட்டது. சட்டத்திற்குப் பயந்து கல்யாணம் ஆகவில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : மகப்பேறுக்குரிய வயதுடைய மகளிர் என்று குறிப்பிட்டிருப்பதால், நான் அதைக் குறிப்பிட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, சமுதாயத்தில் அப்படிப்பட்ட

தவறுகள் நடைபெற்றால், அரசாங்கத்திற்குப் பொறுப்பு இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். இருந்தாலும் எழுத்து மூலமாகக் கொடுக்கும்போது, எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

இவ்வளவு நோய்கள் வர அடிப்படையான காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். கலப்படம் என்பது தமிழகத்திலே மட்டுமல்லாமல் சமுதாயத்திலே எல்லா இடங்களிலும் இருக்கிறது. கலப்படம் செய்த குற்றவாளிகளை எந்த அளவிற்குத் தண்டிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்கிறேன். 1979-80 ஆம் ஆண்டு கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டறியப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 2,404. அதிலே கலப்படம் இருக்கிறதென்று நம் கிங் இன்ஸ்டிடியூட்டில் பணியாற்றக்கூடியவர்கள் நல்ல முறையிலே கண்டுபிடித்து அரசாங்கத்திற்கு அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். அதிலே எத்தனை பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், அபராதம் விதிக்கப்பட்டவர்கள் 613 பேர், சிறுதண்டனை அடைந்தவர்கள் 279 பேர். ஆக ஏறக்குறைய 900 பேர்கள்தான் இதிலே தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இது மூன்றிலே ஒரு பங்காகத்தான் இருக்கிறது. மூன்றிலே இரண்டு பகுதியினர்—குற்றம் செய்தவர்கள்—சட்டத்திலிருந்து தப்பித்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படிப்பட்ட குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்காமல் இருக்க கடுமையான சட்டங்களைக் கொண்டு வாருங்கள் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நாட்டிலே பிறப்பு, இறப்பு விகிதங்களைப் பார்க்கிற நேரத்தில், ஓராண்டுக் காலத்தில் தமிழகம் எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பது தெரிகிறது. பிறப்பு விகிதம் 28.9 ஆகவும் இறப்பு விகிதம் 12.8 ஆகவும் இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, எந்த அளவிற்குத் தமிழகம் முன்னேறியிருக்கிறது என்பது புரிகிறது. பிறப்பு விகிதத்தைக் குறைக்க நாம் எந்த அளவிற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பேராசிரியர் அவர்கள் சுகாதார அமைச்சராக இருந்தபோது தனிக் கவனம் செலுத்தப்பட்டு, அறுவை சிகிச்சைகள் நடந்து, இந்தியாவிலேயே சிறந்த மாநிலம் என்று தமிழ்நாடு பெயர் எடுத்து பரிசைப் பெற்று சுகாதார இலாக்கா நல்லமுறையில் செயல்பட்டது.





நம் மாநிலத்திலே சுகாதார போக்குவரத்து நிறுவனம் என்று ஒன்று இருப்பதாகவும், அதில் 1,463 ஊர்திகள் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் உள்ள ஒரு புள்ளிவிவரத்தைப் பார்க்கும்போது, எனக்குக் கவலையாக இருக்கிறது. அந்த ஊர்திகள் எல்லாம் செம்மையாகப் பயன்படுத்தப்பட வேண்டும், கிராமப் பகுதிகளுக்குப் போக வேண்டுமென்று நாம் சொல்லுகிறோம். ஆனால் 1977-78 ஆம் ஆண்டில் மட்டும் 104 ஊர்திகள் பழுதுபார்க்க முடியாமல் போயிருக்கின்றன. 1978-79 ஆம் ஆண்டில் 72 ஊர்திகளும், 1979-80 ஆம் ஆண்டில் 108 வண்டிகளும் பழுதுபார்க்க முடியாமல் விடப்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தைப் பார்க்கும்போது, அதற்கான காரணங்கள் என்ன என்பது தெளிவாக இல்லை. வாகனங்கள் இருக்கின்றன, ஆனால் பழுதுபார்க்க முடியவில்லை. எனவே ஊர்திகள் எங்கேயிருந்தாலும் உடனடியாகப் பழுதுபார்க்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-40)

இந்த ஆண்டு 600 இளநிலை மருத்துவர்கள் நியமிக்கப்படுவதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இவர்களுக்கெல்லாம் மாதம் 500 ரூபாய் ஊதியம் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைவிட மகிழ்ச்சி யூட்டுவது அவர்கள் எல்லாம் தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதுகின்றபோது, அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று சொல்லியிருப்பது. அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது பாராட்டத்தக்கது. ஏனென்றால் இன்றையதினம் கிராமப்புறங்களுக்கு எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் போவதில்லை என்ற ஒரு கருத்து இருக்கிறது. இப்படிப்பட்டவர்களை இந்த நேரத்தில் கிராமத்திற்கு அனுப்பி கிராம மக்களுக்குத் தொண்டு செய்து அதற்காக ரூ. 500 சம்பளம் கிடைக்கிறது என்று சொன்னால், அவர்கள் எதிர்காலம் இருக்கிறது என்ற மன நிறைவோடு, நம்பிக்கையோடு செய்வார்கள். அதுபோலவே அவர்களுடைய மேல்படிப்புக்கும் முன்னுரிமை என்று நமது அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவர்கள் இதைச் செய்தால், டாக்டர்கள் மகிழ்ச்சியடைவார்கள். இன்றையதினம் எம்.டி., எம்.எஸ். கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. ஒரு ஆறு மாதம் பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்குச் சென்று இப்படி சர்வீஸ் செய்தால், எதிர்காலத்திலே தங்களுக்கு இந்த முன்னுரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு வரும். அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் உள்ளபடியே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே, சென்னை அரசுப் பொது மருத்துவ மனையிலே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதுபோல, நாம் எல்லாம் பெருமைப் படக்கூடிய அளவுக்கு இந்த ஆண்டு 350 பேர்களுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்திருக்கிறார்கள். அதுவும் நல்ல முறையிலே பலனளித்திருக்கிறது. அந்தச் செய்தி, உள்ளபடியே அந்தத் துறையிலே நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறது. இதே நோத்தில் இன்னும் வளர்ச்சிகள் எந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

செவிலியர்கள் பயிற்சியைப் பொறுத்த வரையிலே, ஆண்டுதோறும் 300 மாணவிகளுக்கு 6 பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பெறுவதாகவும் மேலும் 325 மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. தெரிவித்த 625 பேருக்கு பயிற்சி அளிக்கப்படும் என்பதற்கு மாறாக 475 பேர்கள் என்று புள்ளிவிவரத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது சரியா என்று தெரியவில்லை. எப்படி இருந்தாலும், நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, ஏராளமான பெண்கள் படித்து விட்டு எந்தத் துறையிலே பணியாற்றலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற நோத்தில், எனக்குத் தெரிந்த வரையிலே இந்த செவிலியர் துறை பெண்களுக்கு ஒரு சிறப்பான துறையாக இருக்கிறது. இன்றும் வெளிநாடுகளிலே தம்முடைய நாட்டிலிருந்து போகின்ற நர்சுகளுக்குக் கிடைத்திருக்கின்ற வரவேற்பு வேறு எந்த நாட்டு நர்சுகளுக்கும் கிடையாது. எனவே நம் நாட்டிலே ஆண்டுக்கு ஒரு ஆயிரம் அல்லது 1,500 பெண்களுக்கு நர்ஸிங் டிரெயினிங் கொடுத்து அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதாக இருந்தால், அவர்கள் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தால், அந்தப் பயிற்சி இந்த சமுதாயம் நல்ல முறையிலே பயன் அடைவதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே, மருத்துவக் கல்லூரியிலே இருக்கக்கூடிய படுக்கைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். அதையே நான் திரும்பச் சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும் ஒன்றைச் சொல்கிறேன். கடந்த ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் இடையே எந்த அளவுக்கு முன்னேற்றம் என்று பார்த்தால், ஒரு 400 படுக்கைகள் உயர்ந்திருக்கிறது. அதுவும் இன்றைக்கு இருக்கக் கூடிய பொருளாதார சூழ்நிலையில் கொஞ்சம் கடினம் தான். இருந்தாலும் நாம் இன்னும் பல



நல்ல சீர்திருத்தங்களைச் செய்யும்போது, ஒரு ஆண்டிற்கு ஒரு ஆயிரம படுக்கைகளையாவது பொதுமக்களுக்காக அதிகப்படுத்தவேண்டிய வாய்ப்பு அரசாங்கத்திற்கு ஏற்பட வேண்டும்.

டாக்டர் பல மருத்துவ மனைகளுக்குச் சென்று பார்க்கிறார்கள், நாமும் பார்க்கிறோம். அங்கே நோயாளிகளை இன்னமும் பாயில்தான் படுக்க வைத்திருக்கிறார்கள். பல நோயாளிகளை அப்படித்தான் படுக்க வைக்க முடிகிறது. சென்னை நகரம், சென்னை நகரம் என்று சொன்னாலும் கூட அந்த சென்னை நகரத்திலும் அப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கிறது. ஏதோ சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய மருத்துவ மனையிலே பெரிய வசதிகள் இருக்கின்றன என்று நாம் பெருமைப்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் வார்டுகளிலே சென்று பார்த்தால்தான், கட்டிலில் படுக்க வைத்திருப்பவர்கள் எண்ணிக்கையும், பாயில் படுக்க வைத்திருப்பவர்கள் எண்ணிக்கையும் தெரியும். ஆனால் ஒரு நாளிலேயே டாக்டர் ஹண்டே அவர்கள் எல்லா சீர்திருத்தங்களையும் செய்ய வேண்டுமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. காலப்போக்கிலே இவைகளையெல்லாம் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று தான் சொல்கிறேன். படிப்படியாக ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் படுக்கைகள் வரவேண்டும். இப்படி மருத்துவ மனைகளிலே விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட மருத்துவ மனைகளிலும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகைக்கு ஏற்ப அந்தப் படுக்கைகளின் எண்ணிக்கையை விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தெரிவிக்க விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது. 1974-லிலே கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளை யொட்டி சென்னை நகரத்திலே பல இடங்களிலே நோயாளிகளை எல்லாம் ஒரே இடத்திற்கு வரச்செய்வதைத் தடுக்கும் முறையில் 5 பிரிவுகளாக புற நோயாளிகள் பகுதி மருத்துவ மனைகள் அமைக்க திட்டமிடப்பட்டது. கே. கே. நகர், அண்ணா நகர், தண்டையார்ப்பேட்டை, பெரம்பூர், தென் சென்னை ஆகிய பகுதிகளிலே அமைக்க திட்டமிடப்பட்டது. அதற்கு மருத்துவ மனைகளைக் கட்ட வேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டது. அப்போது கட்டிடங்கள் கட்டுவதற்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. 1975-ல் கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்து, கட்டிடங்கள் முடிக்கப்பட்டன. கே. கே. நகர் மருத்துவமனை இயங்கிக்கொண்டிருக்கிறது. குறிப்பாக அண்ணா நகர், தண்டையார்பேட்டை மருத்துவ மனைகள் இயங்குவதாக, ரூ. 21.98 லட்சம் பணம் ஒதுக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே போய் பார்த்தால் தெரியும், பக்கத்திலே இருக்கக்கூடிய அண்ணா நகர் பகுதி மருத்துவ

மனையில் படுக்கைகள் இல்லை. பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கிறோம். பல முயற்சிகளை எடுக்கிறோம். கட்டிடங்கள் கட்டி 3, 4 ஆண்டுகளாக அவைகள் பயன்படாமல் இருக்கின்றன என்றால், அதற்கு அரசாங்கத்தினுடைய பணத்தைச் செலவிடுவதிலே என்ன நியாயம் இருக்கிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதுபோலவே பெரம்பூர், தென் சென்னை போன்ற பகுதிகளில் மருத்துவமனைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை என்றும், அது எப்போது எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்தால், அது சென்னை நகர மக்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல் சிகிச்சைப் பிரிவுகள் 88 பிரிவுகள் இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். வட்டாரத் தலைமையிட மருத்துவமனைகளில் எல்லாம் இந்தப் பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காது, மூக்கு, தொண்டை பிரிவுகள் மொத்தமே 14 பிரிவுகள்தான் இருக்கின்றன. இந்த ஆண்டு இன்னும் 5 பிரிவுகள் ஏற்படுத்தப்படும் என்று சொல்கிறார்கள். காது, மூக்கு, தொண்டை மருத்துவமனையாக இருந்தாலும் சரி, அது கண் மருத்துவமனையாக இருந்தாலும் சரி, தமிழ் நாட்டில் ரெவின்யு டிவிஷன்கள் என்று இருக்கின்றன. அந்த டிவிஷன்களில் உள்ள தாலுக்கா மருத்துவ மனைகளிலே இந்தப் பிரிவுகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஹோமியோபதி கல்லூரியில் 25 படுக்கைகள் இருப்பதாகவும், அதில் இன்றைக்கு 21 மாணவர்களைச் சேர்க்கிறார்கள் என்றும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஹோமியோபதி கல்லூரியை திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே எப்படியும் மிகச் சிறப்பாகக் கொண்டுவர வேண்டுமென்று முயற்சி எடுத்து, அது இன்றைக்கு இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் 6, 7 ஆண்டுகளாகியும் கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்றது. கட்டிடங்களைக் கட்ட முன் வர வேண்டும். அதற்கு முயற்சிக்க வேண்டும். அது சேலத்திற்குப் போகப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். டாக்டர் ஹண்டே அவர்கள் அது அங்கே போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அது சென்னை நகரத்திலே இருந்தால், ரொம்ப வசதிகள் இருக்கும். இங்கே டைரக்டர்கள் இருக்கிறார்கள். ஏதாவது தேவைப்பட்டால், உதவிகள் உடனடியாகக் கிடைப்பதற்கு வசதியாக இருக்கும். இல்லையென்றால் சேலத்திற்கும் சென்னை நகரத்திற்கும் இடையே வெறும் கடிதப்போக்குவரத்திலேயே காலம் சென்றுவிடும். வளர்ச்சி இருக்காது. ஆகவே அது





இங்கேயே இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது இன்னும் தமிழ் நாட்டில் எதிர்காலத்திலே சிறப்பாக இருக்க வேண்டுமானால், அனைவரும் அதில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மக்கள் தொகை பெருகப்பெருக எல்லாவற்றிலும் போட்டி வளர்ந்து கொண்டே வருகிறது. நம்முடைய தமிழகத்தில் குடும்ப நலத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசு 2,82,00 பேர்களுக்குச் சிகிச்சை செய்ய வேண்டுமென்று இலக்கு வைத்தார்கள். நாம் கடந்த ஆண்டு 1,45,521 பேர்களுக்குத்தான் சிகிச்சை அளித்திருக்கிறோம். அதாவது 51 சதவிகிதம் தான் ஏறத்தாழ இருக்கிறது. அது போதாது. 75 சதவிகிதம் இலக்கையாவது நாம் எட்டினால்தான் எதிர்காலத்திலே இந்தக் குறைகளைப் போக்குவதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு சித்த மருத்துவத்தைப் பொறுத்த வரையிலே, நம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல குறிப்புகளைச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு நேரம் இல்லை. சுருக்கமாகவே சொல்லிவிடுகிறேன். 18—6—1978-ல் பாரம்பரை சித்த மருத்துவர்கள் தேர்தல் நடத்தியிருக்கிறார்கள். இதுவரையிலும் தமிழக அரசு அதன் முடிவுகளை வெளியிடவில்லை. பரீட்சை எழுதி இரண்டு ஆண்டுகளாக மாணவர்களுக்கு முடிவு தெரியாமல் இருந்தால், அவர்கள் என்ன தொழிலிலே ஈடுபட முடியும்? ஏன் இந்தக் காலதாமதம்? இரண்டு ஆண்டுகள் ஆகிறது. உடனடியாக அந்த முடிவுகளை அளிப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காஞ்சிபுரத்திலே 'கேன்சர் இன்ஸ்ட்டிடியூட்' இருக்கிறது. ஒரு கோடி ரூபாய் அளவிலே செலவு செய்து 1974-ல் கட்டிடம் கட்ட ஆரம்பித்து, அதற்குப் பிறகு இதுவரையிலே அது சரியாகச் செயல்படவில்லை என்ற ஒரு கருத்து இருக்கிறது. தமிழகத்திலே அந்த வியாதி பரவலாக இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கொடுமையான நோய் காரணமாகப் பாதிக்கப்பட்டு மறைந்ததை நாம் அனைவரும் அறிவோம். அந்தக் கொடுமையான நோய்க்கு சிகிச்சை அளிக்கக் கூடிய அந்த மருத்துவமனையை செம்மையாகச் செயல்படச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி]     [1980 ஜூலை 23

மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதுபற்றிச் சொன்னார்கள். அதிலே ஊழல் இருக்கிறதா இல்லையா என்று சொல்ல வரவில்லை. இப்போதுதான் புதிய அமைச்சரவை தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகவே அதற்குள்ளே போக நான் விரும்பவில்லை. இன்றைய அமைச்சர் அவர்களுக்குக் கடந்த கால வரலாறு நன்றாகத் தெரியும். ஆகவே அதைப் பற்றி விரிவாகப் பேச நேரம் இல்லை. இப்போது விவாதிக்கவும் நான் விரும்பவில்லை. ஆனால் அதிலே ஒரு கருத்து சொல்லப்பட்டது. இன்னும் இதுவரையிலே அப்ளிகேஷன் 'கால் பார்' செய்யவில்லை. எப்போது விண்ணப்பங்கள் போட வேண்டுமென்று தெரியவில்லை. அரசாங்கத்திற்கு ஏற்கெனவே தெரியும். பிளஸ் 2 எக்சாமினேஷன் எப்போது முடிந்தது? அவைகளின் முடிவுகள் எப்போது வரும்? வந்தவுடனே விண்ணப்பங்கள் போடுவதற்கு வசதிகள் ஏற்பட்டிருக்குமானால், உடனடியாக நேர்முகத் தேர்வுகூட ஆரம்பிக்க முடியும். அப்படி இல்லையென்றாலும், ஏதோ ஒரு தேர்வு நடத்திருக்கலாம். ஆனால் இதுவரையில் அப்ளிகேஷன் 'கால் பார்' செய்யவில்லை. கேட்டால் செப்டம்பர் மாதத்திலே என்று சொன்னார்கள். அப்போது எப்படியும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று சொல்கிறார்கள். செப்டம்பர் அல்லது அக்டோபரில் சேர்ப்பதில் எனக்குக் கருத்துவேறுபாடு இல்லை. அக்டோபரிலே இடம் கிடைக்காதவர்கள் என்ன செய்வார்கள்? அதற்குப் பிறகு வேறு காலேஜுக்குப் போக முடியுமா? அது முடியாது. மதுரை போன்ற இடங்களிலே ஆகஸ்ட்-செப்டம்பர் முதல் வாரத்திலே பர்ஸ்ட் செமஸ்டர் முடிந்துவிடும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படி முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒரு கருத்துச் சொன்னார்கள். என்ட்ரன்ஸ் எக்சாமினேஷன் என்று வைத்து அட்மிஷன் கொடுப்பது நல்லது என்று சொன்னார்கள். அதைச் சொல்லிவிட்டு நேர்முகத் தேர்வு பற்றியும் சொன்னார்கள். மாண்புமிகு திரு. நல்லசிவன் அவர்கள் அது தேவையற்றது என்று சொன்னார்கள். அவர் சொன்னதற்கும் இவர் சொன்னதற்கும் வேறுபாடு இருக்கிறது. முன்பு பி.யூ.சி. யாக இருந்தபோது வேறுவேறாக இருந்தது. மார்க்குகள் போடுவதிலே, கேள்விகள் தயார் செய்வதிலே எல்லாம் வேறு வேறு மாதிரியாக இருந்திருக்கக்கூடும். ஆனால் பிளஸ் 2 வருகிற நேரத்திலே ஏறத்தாழ ஒரே மாதிரியான கேள்வித் தாள்கள் இருப்பதற்கும், ஒரே மாதிரியாக பேப்பர்களைத் திருத்துவதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இங்கே என்ட்ரன்ஸ் எக்சாம் வைத்து, பிளஸ் 2 முறையில் வாங்கக்கூடிய சப்ஜெக்ட் மார்க்குகளை வைத்து தேர்ந்தெடுக்கலாம். பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, நேச்சுரல் சையன்ஸ்



1980 ஜூலை 23]     [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

ஆகியவைகளுக்கெல்லாம் ஒரு நூறு மார்க்கு என்று வைத்துக்கொண்டு, ஒரு என்ட்ரன்ஸ் எக்சாம் என்று வைத்து அதற்கு ஒரு நூறு மார்க்கு வைத்து, நேர்முகத் தேர்வைக்கூட நீக்கிவிடுவது என்பது வரவேற்கக்கூடிய ஒன்றுதான் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 6-50)

அதோடு இதையெல்லாம் சொல்லுகின்ற நேரத்தில், குறைகளையெல்லாம் சொல்லுகின்ற நேரத்தில், ஏதோ இதெல்லாம் விளம்பரத்திற்காக என்று கருதக்கூடாது. குறைகளைப் போக்கினால்தான் இந்தத் துறை செம்மையாகச் செயல்பட முடியும். டி.பி. சானடோரியம் செம்மையாகச் செயல்படவில்லை என்று அனைத்துக் கட்சிக்காரர்களும் கூட்டம் போட்டு, அங்கே என்னென்ன தவறுகள் நடக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்கள். அதை அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அங்கே நோயாளிகள் உள்ளபடியே சரியாகக் கண்காணிக்கப்படுவதில்லை. நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இப்போது சாராயம் எங்கேயும் நடமாடுகிறது. சாராயம் குடிப்பவர்களைப்பற்றி நான் அதிகமாகக் கவலைப்படவில்லை. ஆனால் ஒரு டி.பி. நோயாளி சாராயம் குடித்தால், அவன் நோய் குணம் ஆகுமா? அதைவிடக் கொடுமையானது வேறொன்றுமில்லை. அவர்கள் சாராயம் குடிக்கக்கூடாது, பீடி, சிகரெட் புகைக்கக்கூடாது என்று டாக்டர்கள் சொல்லுவார்கள். ஆனால் டி.பி. சானடோரியத்திலுள்ள நோயாளிக்கு சாராயம் குடிக்கக்கூடிய நிலையிருந்தால் அது நல்லதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தாம்பரம் டி.பி. சானடோரியத்தில் அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அமைச்சரவர்கள் திடீரென்று 'விசிட்' செய்தால் இதைக் கண்டுபிடிக்க முடியும். அடுத்து அங்கே 'டயட்' கொடுப்பதில் பல மோசடிகள் நடைபெறுகின்றன. ஒரே ஒரு நாள் 'டயட் ஷீட்டைப்' பார்த்தால் தெரியும். 5—4—1979 டயட் ஷீட்டைப் பார்த்தால் 'ஆக்சுவல்' வேறு, இன்டென்ட் வேறு என்பது தெரியவரும். இட்டன்ட் ஓரளவிற்குப் போடுகிறார்கள். ஆக்சுவல்ஸ் எவ்வளவு என்று பார்த்தால், இரண்டுக்கும் 249 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. இப்படி ஒவ்வொரு நாளும் நோயாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய உணவில் மோசடி செய்து, ஆண்டு இறுதியில் அந்தப் பணத்தில் மருந்துகள் வாங்குகிறோமென்று சொல்லி, மருந்துகளை வாங்காமல், பில்லை மாத்திரம் வாங்கிக்கொண்டு, மோசடி செய்கிறார்கள் என்று பல புகார்கள் வந்திருக்கின்றன. அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. இதை யார் செய்தாலும் அரசாங்கத்திற்குக்

கெட்ட பெயர் வருகிறது. அந்த அடிப்படையிலே இதை எப்படிப் போக்க வேண்டுமென்று கண்டுபிடிக்க வேண்டும். அதை விடுத்து, வீராசாமி சொல்வதால், அவருக்கு இதை யார் கொடுத்தார்கள் என்று பார்க்கக்கூடாது.

அங்கே ஒரு மருந்து—குறிப்பாக 'பிபாமைசின்' என்ற மருந்து—மிக முக்கியமான, அடிப்படையான மருந்தாகும். அந்த மருந்து சப்ளைக்கான டெண்டர்கள் 'கால் பார்' செய்வதில் ஊழல். ஆ பார்ம் என்ற நிறுவனத்தார் டென்டர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதிகமான ரூபாயை அவர்களுடைய டெண்டரில் 'குவோட்' செய்திருக்கிறார்கள். இருந்தாலும் குறைந்து 'குவோட்' செய்தவருக்கு ஆர்டர் கொடுக்காமல், அவர்களுக்குக் கடிதம் எழுதுகிறார்கள், 'நெகோஷியேட்' செய்து, முடிவு எடுக்கலாம் வாருங்கள்' என்று. இதை அறிந்த மகாவீர் பார்ம் டிஸ்டிரிபியூடர்ஸ் என்ற நிறுவனத்தார் எங்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்று கடிதம் எழுதி, எங்களுக்கும் நெகோஷியேட் செய்ய வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த முறைகள் போக்கப்பட வேண்டும், குறைகள் போக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அங்கே இடம் ஒதுக்குவதிலேகூட குறைகள் இருக்கின்றன. அந்தத் துறையின் தலைமை அதிகாரியாக டி.எம்.எஸ். இருக்கிறார், அந்த இடம் ஒதுக்குவது குறித்து சில விதிமுறைகள் வைத்திருக்கிறார். அந்த விதிமுறைகள் அங்கே பின்பற்றப்படுகின்றனவா என்றால் பின்பற்றப்படுவதில்லை. அதை டி.எம்.எஸ். அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள், அவர் கடிதம் எழுதுகிறார். Letter, dated 22nd March 1979, Ref. No. 44486 TB|2|79 என்ற கடிதத்தில்

The Superintendent, Government T.B. Sanatorium, Tambaram, Madras is requested to furnish the following particulars, since the same are required on the above subject.

என்று சொல்லி, நீங்கள் எப்படி இடம் ஒதுக்குகிறீர்கள், வெயிட்டிங் லிஸ்ட் எப்படி வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார். மெடிக்கல் டிபார்ட்மெண்டில் என்.ஜி.ஓ.வினருக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறதா? போலீஸ் கான்ஸ்டேபிளுக்கு இரண்டாம் இடம் அளிக்கப்படுகிறதா? என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள்.

Male N.G.O., Female N.G.O., Jail Convict, ex-Service Man, E.S.I. Employees, என்ற முறைப்படி இவர்களுக்கெல்லாம் முன்னுரிமை கொடுக்கப்படுகிறதா என்று சொல்லி, விளக்கம் கேட்கிறார்கள். அப்படி அவர் விளக்கம் கேட்டு, 28—4—1979-ல் ரிமைண்டர் போட்டு, 14—6—1979-ல் இன்னொரு ரிமைண்டர் அனுப்பி, 12—9—1979-ல் மறுபடியும் ரிமைண்டர்



அனுப்பியும், ஒரு சூப்பரின்டென்டன்ட், டி.எம்.எஸ். அவர்களை மதிக்கவில்லை என்றால், அந்த மருத்துவ மனை எப்படிச் செயல்பட முடியுமென்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏழு மணிக்குள் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவரவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை கொள்கைக் குறிப்பின்மீதான விவாதம் நாளை காலையும் தொடர்ந்து நடைபெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், 7 மணிவரையில் பொறுங்கள். நாளை காலை தொடர்ந்து இருக்குமா, இருக்காதா என்பது தெரியும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மன நோயாளிகளைப்பற்றிச் சொன்னார்கள். எனக்கே கூட அவர்களிடம் அனுதாபம் உண்டு. அவர்கள் வரக்கூடாத இடங்களில் வந்துவிடுகிறார்கள். நான் ஒரு டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டிற்குப் போயிருந்தபோது பார்த்தேன். ஒரு மாணவன் பயிற்சி பெற வந்தான். நல்ல மாணவன் என்று எண்ணி அவனைச் சேர்த்துக்கொண்டார்கள். பின்புதான் அவனுக்கு மன நோய் இருந்தது தெரிந்தது. உடனே அவனை மருத்துவ மனையில் சேர்த்தார்கள். அவன் என்ன செய்தான் என்றால், அவனை அழைத்துக் கொண்டு போன அண்ணனை அங்கே விட்டுவிட்டு, வெளியே வந்துவிட்டான்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மன நோய் என்பதற்கு நீங்கள் சொன்னது பொருளில்லை. அப்பட்டமாக அப்படி எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதில்லை. வருத்தம், துன்பம் ஆகியவைகூட மன நோய்தான்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அந்த நோயாளிகளுக்கு கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் தேவையான வசதிகள் இல்லை. எனவே அவர்களுடைய நல்வாழ்வையும் பேணிக் காக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன்.

[1980 ஜூலை 23

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மதிப்பிற்குரிய மேலவைத் தலைவரவர்களே, சிறப்பான வகையிலே இன்றையதினம் இந்த மாமன்றத்திலே பல்வேறு கட்சிகளின் சார்பாகவும், ஆளுங் கட்சியின் சார்பாகவும் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்களை நிச்சயமாக என்னைப் பொறுத்தவரையில் மிக்க பயனுள்ள கருத்துக்களாக நான் எடுத்துக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மிக முக்கியமாக ஒரு குறை எடுத்துக் கூறப்பட்டது. நகர்ப்புறங்களிலே குறிப்பாக சென்னை மாநகரத்திலே நல்ல மருத்துவ வசதிகள் இருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் கிராமப்புறங்களில் சரியான வகையிலே மருத்துவ வசதிகள் இல்லை என்பதைத்தான் இந்த அவையிலே எடுத்துக் கூறப்பட்ட முக்கியமான கருத்தாக நான் எடுத்துக் கொள்கிறேன். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், நாம் சற்று ஆராய்ந்து பார்த்தோமானால், அந்த வாதம் நியாயமற்ற ஒரு வாதமாகத் தான் இருக்கிறதென்று சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னது போன்று சென்னை, மதுரை, தஞ்சை, நெல்லை போன்ற இடங்களில் நமக்கு மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த மருத்துவக் கல்லூரிகளில்தான் நாம் பட்டம் பெற்ற டாக்டர்களை உருவாக்க வேண்டியிருக்கிறது. ஒரு மருத்துவக் கல்லூரிக்குத் தேவை இருக்கக்கூடிய அளவிற்கு கிளினிகல் மெடிரியல்ஸ் தேவை. அங்கே மாணவர்கள் நல்ல முறையில் படித்து, நல்ல டாக்டர்களாக வர வேண்டுமென்றால், ஒரு நாளைக்கு இத்தனை நோயாளிகளைப் பார்க்க வேண்டுமென்று இருக்கிறது. எனவே ஆயிரக்கணக்கான நோயாளிகள் வரும் அப்படிப்பட்ட மருத்துவ மனைகளில் இருந்து பணியாற்றினால்தான், அவர்கள் பல்வேறுவகையான நோய்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். அதற்குப் பிறகு அவர்கள் கிராமங்களுக்குச் சென்று நல்ல முறையில் பணியாற்ற முடியும். இதை அர்பன் ஓரியன்டட் பட்ஜெட், ரூரல் ஓரியன்டட் பட்ஜெட் அல்ல என்று சொன்னால், அது நியாயமாக இராதென்று கருதுகிறேன். இன்னும் சொல்ல வேண்டுமானால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சராக நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, நகர்ப் புறங்களில் நாம் கொடுக்கக்கூடிய மருத்துவ வசதிகளை, கிராமங்களில் படிப்படியாக ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதற்குப் பல்வேறு சான்றுகள் இருக்கின்றன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் பதிலுரை முடியும்வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



1980 ஜூலை 23]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்த ஆண்டிலே, அதாவது 1980-81-லே, 'நியூ சர்வீஸ்' என்று ஏற்படுத்தியிருக்கிறோம். டைரக்டர் ஆஃப் பிரைமரி ஹெல்த் செண்ட்டர்ஸ் என்று 6 மாதங்களுக்கு முன்பு ஒரு இலாக்கா ஏற்படுத்தப்பட்டது. அவர்களை மாநிலத்தில் இருக்கக்கூடிய 384 பிரைமரி ஹெல்த் செண்டர்களையும் கண்காணிக்க நியமித்திருக்கிறோம். அவர்கள், ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கக்கூடிய பிரைமரி ஹெல்த் செண்டர் நல்ல முறையில் பணியாற்றுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். அவருடைய இலாக்காவிற்கு 'நியூ சர்வீஸ்' என்ற அடிப்படையிலே 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இதுவரை இல்லாத ஒன்றாகும் இது. அது மட்டுமல்லாமல், டைரக்டர் ஆஃப் மெடிகல் சர்வீசுக்கு 1.26 கோடி ரூபாய் தனியாக 'நியூ சர்வீஸ்' என்று கொடுத்திருக்கிறோம். இது எதைக் காட்டுகிறதென்றால், நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், மிகத் தீவிரமாக கிராமங்களில் எல்லா வகையான வசதிகளையும் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில்

(பிற்பகல் 7.00)

அரசு செயல்படுகிறது என்பதைக் காட்டுகிறது. ஆனால் புள்ளிவிவரங்களையெல்லாம் பார்க்கும்போது, அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் பேசியிருக்கிறார்கள். இன்னும் பலரும் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், திரு. வீராசாமி அவர்களும் நல்ல வகையிலே, எனக்குச் சாதகமான வகையிலே கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். சென்னை நகரத்திலே, பெரிய பெரிய நகரங்களிலே எல்லாம் வசதியான வைத்தியம் கிடைக்கவில்லையென்றும், இன்னும் அவற்றை விரிவுபடுத்த வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் மிக நன்றாக இருக்கும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இன்னொன்றையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, பெரிய 'லாப்சைடட் திங்கிங்' ஆக இருப்பது என்னவென்றால், தவறான எண்ணங்களை நாம் உருவாக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும். சென்னையில் இருக்கக்கூடிய பொது மருத்துவமனையில் 'கேட்சன் கம்பியூட்டரைஸ்ட் ஆக்சியோமெட்டிக் மெஷின்' என்கிற ஒன்று வர இருக்கிறது. அதற்காக மட்டும் 40 இலட்சம் ரூபாய் ஒதுக்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள்கூட சொன்னார்கள். அது ஸ்கல் என்கிற முறையில் பயன்படும். அதுபோல் இன்னொரு முறை வர இருக்கிறது. அதை ஏற்படுத்த 1 கோடி ரூபாய் வரை ஆகும். இதெல்லாம் நமக்குத் தேவையா என்கிற தொனி வரக்கூடிய வகையில் ஒரு மாண்புமிகு உறுப்பினர் பேசியிருக்கிறார். விவாதத்தை முதன் முதலாகத் துவக்கி

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1980 ஜூலை 23

வைத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசிய கருத்து மிகவும் பயனுள்ள கருத்து. அவர் ஒரு கருத்தை பேச்சின் ஆரம்பத்தில் சொன்னார். பல அரசாங்க மருத்துவமனைகளில் டையாலிசிஸ் எக்விப்மெண்ட் இல்லையென்று சொன்னார். ஆனால் வேலூர் சி.எம்.சி.யில் அந்த சிகிச்சைக்கான நல்ல கருவிகள் எல்லாம் இருக்கின்றன என்றும் அது போன்று அரசு மருத்துவமனைகளில் எல்லாம் அமைக்க வேண்டுமென்ற கருத்தினைக்கூடச் சொன்னார்கள். 'சோபிஸ்டிகேட்ட் எக்விப்மெண்ட்' பற்றி மாண்புமிகு உறுப்பினருக்கு அப்படி ஒரு தவறான எண்ணம் வரக்கூடாது. நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரை, "We are second to none" என்ற முறையில் தனியார் மருத்துவமனைகளில் இருக்கக்கூடிய வசதிகளை விட ஒரு படி மேலே நல்ல முறையில் அரசு மருத்துவமனைகளில் நல்ல சிகிச்சை முறைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். அதுதான் அரசாங்கத்திற்கும் பெருமையாக இருக்கும். 'ரெபால்' சிகிச்சை சென்னையில் மட்டும் பயன்படுகிறது என்பதல்ல. அதை திருநெல்வேலியாக இருந்தாலும் அல்லது வேறு ஒவ்வொரு இடத்திலும் வைக்க முடியாது. ஓபன் ஹார்ட் சர்ஜரியை முக்கியமான இடங்களில் மட்டும்தான் வைக்க முடியும். அதை மதுரையில் வேண்டுமானால் வைக்கலாம். பொதுவாக இதுமாதிரி உள்ள சிகிச்சை வசதிகளை மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவமனைகளில் மட்டும்தான் வைக்க முடியும். டையாலிசிஸ் எக்விப்மெண்ட்-ஐப் பொறுத்தவரை, சென்னை அரசு பொது மருத்துவமனையில் இப்போது விரிவுபடுத்தியிருக்கிறோம். இது சென்னைவாழ் மக்களுக்கு ஒரு நல்ல செய்தியாகும். அதோடுகூட இப்போது 7 மாடி கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் கட்டட வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஒரு ஃப்ளோரில் அதற்கென்று தனியாக நெஃப்ரோலஜி, யூரோலஜி டிப்பார்ட்மெண்ட் எல்லாம் ஏற்படுத்தி நல்ல முறையில் டில்லி, பம்பாய்போல் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் காலத்திலேயே ஆரம்பிக்க இருக்கிறோம். பல மருத்துவ நிபுணர்கள் எல்லாம் நல்ல முறையில் இப்படிப்பட்ட துறைகளில் பயிற்சி பெற வேண்டுமென்றால் இப்படிப்பட்ட பெரிய மருத்துவமனைகள் தேவை. ஓபன் ஹார்ட் சர்ஜரி சிகிச்சை முறை 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1972 ஆம் ஆண்டு, அரசாங்கப் பொது மருத்துவமனையில் இரண்டே இரண்டுதான் நடந்திருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் வேலூரில் 30, 40-க்கு மேல் நடந்திருக்கிறது. இப்போது நிலைமை அப்படி இல்லை. 1979 ஆம் ஆண்டு நம்முடைய அரசாங்கப் பொது மருத்துவமனையில் 200 ஓபன் ஹார்ட் சர்ஜரி நடந்திருக்கிறது. அதாவது கிட்டத்தட்ட நாள் ஒன்றுக்கு ஒன்று விதம் நடந்திருக்கிறது. இந்த ஆண்டு



1980 ஜூலை 23] [டாக்டர் எச். வி. ஹண்டே]

ஜூன் மாதம் வரையுள்ள நிலவரப்படி நாம் 350 சர்ஜரி நடத்த முடியும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் அதற்கு என்று ஒதுக்கப்படும் நிதி சற்று அதிகமாக இருக்கும். இவ்வளவு பணத்தை நாம் இந்தக் கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்காக, போஸ்ட் கிராஜுவேட் மாணவர்களுக்காக நாம் செலவழிக்கிறோம். இன்னும் சூப்பர் போஸ்ட் கிராஜுவேட் எல்லாம் இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாகச் செலவழிக்கும் பணத்தை நாம் கணக்கில் பார்க்கிறபோது, கடந்த 3, 4 ஆண்டுகளுக்குரிய புள்ளிவிவரங்களை எல்லாம் பார்க்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் பார்த்தால்கூட, நாம் கூடுதலாக 4, 5 சதவிதம் நிதியை ஒதுக்கியிருக்கிறோம். கிராமப்புறங்களில் மேலும் தரமான, அதிகமான சிகிச்சையைத் தர இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அரசைப் பொறுத்தவரை, கிராமப்புறங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் ஆணித்தரமாகவும், அழுத்தந்திருத்தமாகவும் ஆதாரங்களுடனும் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் சிறு சிறு கிராமங்களில் எல்லாம், ஆரம்ப சுகாதார நிலையங்களில் எல்லாம் சர்ஜிக்கல் தியேட்டர் வசதியைச் செய்ய முடியாது. அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொல்லும்போது, நான் தலையை ஆட்டினேன். முன்னேறியிருக்கிற நாடுகளிலும்கூட இப்படிப்பட்ட நிலை இருக்கத்தான் செய்கிறது. அதனால்தான் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இருக்கக்கூடிய தராதரத்தை அகற்ற வேண்டுமென்ற முறையில் சரியான முறையில் வாகன வசதிகளை எல்லாம் ஏற்படுத்தி, வண்டிக்குள்ளேயே தேவையான சௌகரியங்களை எல்லாம் செய்து நோயாளிக்கு ஆபத்து ஒன்றும் ஏற்படாமல் உரிய ஏற்பாட்டினைச் செய்து, முக்கியமான நகரங்களுக்கு நோயாளியை விரைவாகக் கொண்டு வந்து நல்ல முறையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதுதான் இப்போது நாம் செய்ய வேண்டிய முக்கியமான காரியம். இதுகுறித்து இந்தக் குறிப்பிலே தனிக் கவனம் செலுத்தி இதைக் கொண்டுவர வேண்டுமென்று நினைத்தேன். பல இடங்களில் வாகனங்கள் சரியான முறையில் இல்லாத நிலையை, சரிப்படுத்த முடியாத நிலையை எல்லாம் பார்த்தேன். அதனால்தான் கொள்கை விளக்கக் குறிப்பிலே வாகனங்கள் எல்லாம் பழுது பார்க்கப்பட வேண்டுமென்று நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். கிராமங்களிலே நாம் மினி ஹெல்த் சென்டர்ஸ், அதாவது சிறு சுகாதார நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி ஒன்றைச் சொன்னார். மூன்று ஆயிரம் ரூபாய் கடைசியாகக் கொடுப்பதை கணக்குப்

பார்த்துக் கொடுக்க வேண்டாமா என்று சொன்னார். இப்போது அது குறித்து நான் வாக்குறுதி தருகிறேன். கணக்குப் பார்க்கப்படாமல் ஒன்பது ஆயிரம் ரூபாய் வரை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யும் என்கின்ற வாக்குறுதியை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் தருகிறேன். தேவையில்லையென்றுதான் தோன்றுகிறது; இருந்தாலும் 30 ஆண்டுகள் எனக்கு இதில் சர்வீஸ் இருப்பதால், இது அவசியம் என்று கருதுகிறேன். அதை உடனடியாக அமுல்படுத்துகிறோம். இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் பல பகுதிகளிலே 'வைரல் என்சிபேலிட்டீஸ்' என்கிற மூளைக் காய்ச்சல் நோய் இருக்கிறது. மே மாதம் முதல் ஜூன் மாதம் வரையுள்ள குறிப்புகள் என்னிடம் இருந்தன. நான் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, லாஸ்ட் ஸ்டேஜில்தான் நான் அதைப் பார்க்க முடிந்தது. அதற்கு முன்பே 40 குழந்தைகள் இந்த நோயால் தாக்குண்டு இறந்துவிட்டன என்கிற தகவலை எனக்குக் கொடுத்தார்கள். இவ்வாறு ஏற்படாமலிருப்பதற்கு நாம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும். மருத்துவமனைகளை நிறைய ஏற்படுத்தி நிறைய செலவு செய்கிறோம். இவ்வளவு பணம் செலவு செய்தாலும், அரசின் முதல் முக்கியமான கொள்கையான கிராமங்களில் நோயால் தாக்கப்பட்டவர்களை விஞ்ஞான ரீதியான வண்டிகள் மூலம், அதாவது அட்வான்ஸ்ட் டெவலப்ட் மொபிலிடி, லேட்டஸ்ட் எக்யுப்மென்ட் மூலம், நகரங்களுக்கு துரிதமாகக் கொண்டு வந்து சிகிச்சை அளிக்கக்கூடிய முறை இன்னும் வெற்றி பெறவில்லை. Scientific method of improving quality and quantity of treatment in the rural areas. அதுதான் இன்றைக்கு கிராமப்புறங்களுக்கு உடனடி தேவை. இரண்டாவதாக நோய்த் தடுப்பு முறை, அதாவது தடுப்பு நிவாரணத்திற்காக 'பிரிவென்டிவ் மெடிசின்' என்கிற முறையில் அதற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நோய் வருவதற்கான அறிகுறி தோன்றிய உடனேயே You must transfer the patients immediately to the urban or Metropolis Hospital Director of Public Health, D.M.S., D.M.E. என்றெல்லாம் இருக்கிறார்கள். சாதாரணமாக நாம் மெடிக்கல் எஜுகேஷன், மெடிக்கல் எஜுகேஷன் என்றுதான் பேசுகிறோம். மெடிக்கல் சர்வீஸ் என்றா கேட்கிறோம்? இல்லை. இப்படிப்பட்ட ஒரு தவறை எல்லோரும் செய்கிறோம். இப்படி பப்ளிக் ஹெல்த் டிப்பார்ட்மென்டை ஒரு தவறான

* (பிற்பகல் 7-10)

எண்ணத்தோடு பார்க்கிற ஒரு நிலை இன்றைக்கு இருக்கிறது. அதை நாம் அகற்றியாக வேண்டும். அங்கே பணியாற்றக்கூடிய டாக்டர்கள் 10 நாட்



களுக்கு முன்பு என்னை வந்து சந்தித்தார்கள். "எங்களைப்பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை" என்று சொன்னார்கள். நான் இப்போது சொல்கிறேன், திட்டவட்டமான நம்முடைய கொள்கை அந்த இலாக்காவை நல்ல வகையிலே விரிவுபடுத்த வேண்டும் என்பது. 'Prevention is better than cure". என்ற வகையிலே அதை விரிவுபடுத்த வேண்டும், அதுதான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய கொள்கையாகவும் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நாம் செய்ய வேண்டும். சொல்லிவிட்டால் மட்டும் போதாது. அதற்கு வேண்டிய 'இன்ஃப்ராஸ்ட்ரக்சர்' வேண்டும். அதற்கான முன்னோடியாகத்தான் பப்ளிக் ஹெல்த் டிப்பார்ட்மென்ட்லே இன்னும் அதிகமான அளவு பணம் செலவு செய்தாலும் பரவாயில்லை என்று செலவு செய்கிறோம். பப்ளிக் ஹெல்த் டிப்பார்ட்மென்ட்லே 1 ரூபாய் செலவு செய்தால், டி.எம்.ஈ.-ல் 10 ரூபாய் செலவு செய்வதற்குச் சமமாக இருக்கிறது. மனிதனுக்கு நோய் வருவதை நாம் தடுக்கிறோம். மேலும் நோய்களைத் தடுக்கக்கூடிய வேலைகள் எல்லாவற்றையும் நாம் செய்ய வேண்டும். அப்படிச் செய்ய வேண்டுமென்றால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதுபோல சில முக்கியமான விஷயங்களை நாம் கவனித்தாக வேண்டும். 'ட்ரிப்பிள் ஆண்டிஜன்', மூன்று நோய்களுக்கு இருக்கும் ஒரே மருந்து 'டெட்டேனஸ், டிப்தீரியா, ஹூப்பிங் காஃப்' போன்ற நோய்களுக்குத் தடுப்பு ஊசியாக ஒரேயொரு ஊசி இருக்கிறது. இவைகளையெல்லாம் நல்ல முறையில் உபயோகப்படுத்த வேண்டும். இப்போது இதுபற்றிய புள்ளிவிவரங்கள் எல்லாம் என்னிடம் இருக்கின்றன. ஆனால், I am not satisfied. இதுபற்றி இலாக்காவிலே கேட்டேன், அவர்களும் இது போதாது என்றும், இன்னும் ஜாஸ்தி படுத்த வேண்டும் என்றும் சொன்னார்கள். இந்த விஷயத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே, இந்த 'ட்ரிப்பிள் ஆண்டிஜன்' போன்றவைகளை இன்னும் அதிகமாகக் கொடுத்து விரிவுபடுத்துவது மிகவும் அவசியம். அந்த வகையிலே மிகுந்த கவனம் செலுத்த இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். டாக்டர்கள் 'பிரைவேட் பிராக்டிஸ்' செய்வது பற்றிச் சொன்னார்கள். இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில், இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அரசாங்க டாக்டர்கள் பிரைவேட் பிராக்டிஸ் செய்யலாமா, செய்யக்கூடாதா என்பது

ஒரு பெரிய பிரச்சினை. கொள்கை ரீதியாக நம்முடைய அரசாங்கம், இதற்கு முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டிருந்த கொள்கையைப் பின்பற்றுகிறது. அதிலே எந்தவிதமான வேற்றுமையும் கிடையாது. 'கன்சல்டிங் பிராக்டிஸ்' செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு என்று இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு சிலர் தவறாக நடந்தால், நிச்சயமாக இந்த அரசு அதைக் கண்காணிக்கும். 'கன்சல்டிங் பிராக்டிஸ்' கூட தேவையா இல்லையா என்ற பிரச்சினை வரும்போது, கொஞ்சம் ஆழமாக நாம் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்றால், அப்படி முடிவெடுக்கும்போது 'The brain trust available in bth the Houses will definitely be utilised.' எல்லோருடைய கருத்துக்களையும் அறிந்த பிறகு, இந்த விஷயத்தில் ஒரு முடிவு எடுக்கலாம் என்று சொல்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ண மூர்த்தி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'வொக்கேஷனல் கோர்ஸ்' முடித்திருப்பவர்களை மருத்துவத் துறை ஏன் பயன்படுத்தக்கூடாது என்று கேட்டார்கள். நர்சிங் துறையிலே வொக்கேஷனல் கோர்ஸ் பயிற்சி பெற்றவர்களை எப்படி எடுத்துக்கொள்ளலாம், எந்த முறையில் எடுத்துக்கொள்ளலாம் என்பதை இப்போது உடனடியாக என்னால் சொல்ல முடியாது என்றாலும், கொள்கை அளவிலே நிச்சயமாக நாம் அவர்களைப் பயன்படுத்திக்கொள்வோம் என்ற உறுதியை அம்மையார் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். அவர்களை உடனடியாகப் பயன்படுத்திக்கொள்வதிலே சில சங்கடங்களும் இருக்கின்றன. குறிப்பாக மெட்டர்னிட்டி பயிற்சி அவர்களுக்கு இல்லை. அந்த டிரெய்னிங் கொடுத்த பிறகு, அவர்களை நாம் எடுக்கலாமா என்பதெல்லாம் சரியாகச் சிந்தித்து எடுக்க வேண்டிய முடிவு. கொள்கை அளவிலே அவர்களை நிச்சயமாகப் பயன்படுத்திக்கொள்வோம் என்று சொல்கிறேன்.

இங்கே இன்னொரு விஷயத்தைப் பற்றி மதிப்பிற்குரிய அம்மையார் லீலாவதி அவர்கள் சொன்னார்கள். மாநகராட்சியின் கீழ் நடைபெறுகின்ற பள்ளிக்கூடங்களிலே சரியான முறையிலே சுகாதாரம் இல்லை என்று சொன்னார்கள். அதைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி, இன்னொரு யோசனையும் என்னுடைய மனதிலே வந்துகொண்டிருக்கிறது. அதையும் நடைமுறைப்படுத்தலாம் என்று கருதுகிறேன். இப்போது லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப், இப்படி இன்னும் பல கிளப்கள் இருக்கின்றன. அவர்கள் கூட உதவ முன்வந்திருக்கிறார்கள். அவர்கள்





நமக்கு இலவசமாக டாக்டர்களைத் தருகிறார்கள், சென்னை நகரிலே எங்கெங்கு மாநகராட்சிப் பள்ளிகள் இருக்கின்றனவோ அங்கே அவர்கள் சென்று தேவையான 'ஃபிசிக்கல் செக் அப்' செய்து கவனித்துக்கொள்வார்கள். அவர்களுக்கு நாம் மற்ற உதவிகளைச் செய்தால் போதும் என்று சொன்னார்கள். அது எந்த அளவுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதை ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கையும் எடுக்க வேண்டியிருக்கிறது.

இன்னொரு பெரிய பிரச்சினை. பல்வேறு நண்பர்களும் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். குறிப்பாக இப்போது வரவிருக்கின்ற அட்மிஷனில், பிளஸ்-2, பிரி-யூனிவர்சிட்டி போன்றவை படித்துவிட்டு வரும் மாணவர்களை எப்படித் தேர்ந்தெடுப்பது என்பதுபற்றியது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள்தான் முதலிலே இதை எழுப்பினார்கள் அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வீராசாமி, திரு. சுவாமிநாதன் மற்றும் பல உறுப்பினர்களும் இதுபற்றிப் பேசினார்கள். பி.எஸ்ஸி-யைப் பொறுத்தவரையில் கொஞ்சம் யோசித்துச் செய்துகொண்டிருக்கிறோம் இப்போது இருக்கிற ப்ளஸ் 2, கடந்த வருஷம் பி.யு.சி. ஆகியவை பாஸ் செய்தவர்கள் வருகிறார்கள். இப்போது 'அனாட்டமி, பிசியாலஜி' என்று இருக்கின்றன. ப்ளஸ் 2-லிருந்து வருகிறவர்களும் நேரடியாக அனாட்டமிக்கு வருகிறார்கள். ஒரு ரயில் வண்டி விழுப்புரத்திலிருந்து மெயின் லைனிலே கிளம்பினாலும் திருச்சிக்கு வரும்போது, கார்ட் லைனில் வந்த இன்னொரு வண்டியும் இதுவும் ஒரே நேரத்தில் வந்து சேர்வதைப்போல, ஒரு வண்டி 1½ மணி நேரத்திற்குப் பின்னால் கிளம்பினாலும் பிளாட்பாரத்திற்கு வரும்போது ஒன்றாக வருவதுபோல, இவர்கள் வருகிறார்கள். சென்ற ஆண்டு பி.யு.சி பாஸ் செய்தவர்கள் இப்போது அனாட்டமிக்கு வருகிறார்கள். ப்ளஸ் 2 முடித்தவர்களும் இப்போது வருகிறார்கள். பி.யு.சி. முடித்தவர்களில் 1,034 மாணவர்கள் வருகிறார்கள், அதுபோல ப்ளஸ் 2-ல் இருந்தும் 1,034 மாணவர்கள் வருகிறார்கள். இப்போதுதான் சங்கடம் வருகிறது. எதற்காகத் தாமதம் என்று கேட்டார்கள். அதற்குக் காரணம், நாம் பொறுப்பேற்றவுடனேயே செயல்படத் தொடங்கியிருந்தாலும், முடிவுக்கு வரும் முன்பு நாம் சில சடங்குகளைச் செய்தாக வேண்டும். முதலிலே முடிவு செய்யவேண்டியது, பி.யு.சி மாணவர்களுக்கும், ப்ளஸ் 2 மாணவர்களுக்கும் ஒரேமாதிரியான உரிமை கொடுக்க வேண்டுமா என்பதுதான். இதற்கு இந்தியன் மெடிக்கல் கவுன்சிலின் கிளியரன்ஸ் தேவை. ஆகவே, இந்தியன் மெடிக்கல் கவுன்சிலின் ஆலோசனைக்கு அவர்களை அணுக வேண்டும். அதற்குப் பிறகு யார் யாருக்கு எத்தனை சதவீதம் என்று வகுத்துக் கொடுக்க வேண்டும். இதுதான் பிரச்சினை. அவர்களும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.

[1980 ஜுலை 23

திரு. ஜி. சுவாமிநாதன்: 'இந்தியன் மெடிக்கல் கவுன்சில்' சுறுசுறுப்பாக இருக்கிறதா, இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எச். வி. ஹண்டே: அவர்கள் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில், சுறுசுறுப்பாகத்தான் இருக்கிறார்கள். It depends upon how active we are. நான் சொல்ல வந்ததெல்லாம் இப்போது பி.யு.சி. படித்தவர்களுக்கு எத்தனை சதவீதம், பிளஸ் 2 படித்தவர்களுக்கு எத்தனை சதவீதம் என்று நிர்ணயம் செய்து, கடைசியாக ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு அநாட்டமி பிளாக்குக்கும் இரண்டு மடங்கு மாணவர்களைக் கொண்டு வந்து நிறுத்த வேண்டும். அப்படிச் செய்யும்போது, இரண்டு பிரச்சினைகள் வருகின்றன. அனாட்டமிக்கு 'பாடிகள்' மிகவும் தேவை. இப்போது 'பாடிகள்' கிடைக்கவில்லை. ஒரு காலத்திலே 4 அல்லது 6 பேருக்கு ஒரு 'பாடி'. இப்போது 25 பேர்களுக்குக் குறையாமல் ஒரு 'பாடி'யைச் சுற்றி நின்று பயிற்சி பெறும் நிலைமை இருக்கிறது. மேலும் இதற்குத் தேவையான இட வசதியையும் நாம் விஸ்தரிக்க வேண்டியிருக்கிறது. இரண்டாவதாக, இதற்குத் தேவைப்படும் ஆசிரியர்களையும் நாம் அதிகமாக நியமிக்க வேண்டியிருக்கிறது. இத்தனைக்கும் பணம் ஜாஸ்தியாகச் செலவாகும். இவைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகச் சிந்தித்து, மிக விரைவில் ஒரு முடிவு காண இருக்கிறோம். அது மிகவும் திருப்திகரமான முடிவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி இப்போது திருப்தியடைவார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் டென்டல் டிப்பார்ட்மெண்டைப் பாராட்டினார்கள். அதற்காக நன்றி. அதை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று சொன்னார்கள். 'ஆர்த்தோடாம்சியா' என்ற ஒரு வைத்தியம் இருக்கிறது. அதைச் சிறப்புமிக்க பிரிவாகக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். நான்கூட அந்தப் பிரிவைப் பார்த்து வந்தேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் 'பேர்ஃபுட்' டாக்டர்கள் பற்றிச் சொன்னார்கள். முன்னால் திரு. அன்பழகன் அவர்கள் இருந்தபோது என்ன கொள்கை இருந்ததோ, அதற்குப் பிறகு புரட்சித் தலைவரின் ஆட்சியில் சுகாதார அமைச்சராக திரு. சௌந்தரராசன் அவர்கள் இருந்தபோது என்ன கொள்கை இருந்ததோ, அந்தக் கொள்கைதான் இப்போதும் பின்பற்றப்படுகிறது. We are against the imposition of bare-foot doctors as far as Tamil Nadu is concerned.



1980 ஜுலை 23] [டாக்டர் எச். வி. ஹண்டே]

(பிற்பகல் 7-20)

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, நாம் இதில் மிகத் தெளிவாக இருக்கிறோம். காரணம் நமக்குத் தேவைப்படும் அளவுக்கு, நமது மாநிலத்திலேயே படித்துப் பட்டம் பெற்ற, நிபுணத்துவம் பெற்ற, விவரம் அறிந்த டாக்டர்கள் இருக்கிறார்கள். இப்போது அவர்களை வைத்துக்கொண்டு என்ன செய்கிறோம் என்றால், ஏறத்தாழ 600 ஜுனியர் டாக்டர்களைக் கிராமப்புறங்களில் பணியாற்றும் வகையில் முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். 600 ஜுனியர் டாக்டர்களைக் கொண்டுபோய் பிரைமரி ஹெல்த் சென்ட்டர்களில் போட்டிருக்கிறோம். அதைப்பற்றி இங்கே குறிப்பிட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் அது தொடர்பாக ஒரு வினாவையும் எழுப்பினார்கள். இவ்வளவு டாக்டர்களைக் கிராமங்களில் பயன்படுத்துவது மகிழ்ச்சிக்குரியதுதான் என்றாலும் அவர்களுக்கு சர்வீஸ் கமிஷன் தேர்வில் முதலிடம் கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அப்படிச் செய்தால் நான் மகிழ்ச்சியடைவேன் என்றும் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், சர்வீஸ் கமிஷனைவிட அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான உரிமையை வேறு வகையில் கொடுக்கலாம் என்பதுதான். அதாவது அத்தகைய டாக்டர்கள் மேற்பட்டப்படிப்புக்காக விண்ணப்பிக்கும்போது, அவர்களுக்கு அதிகமான சலுகை தரப்பட வேண்டும். நிச்சயமாக அந்தப் பிரைமரி ஹெல்த் சென்ட்டர்களில் பணியாற்றும் ஜுனியர் டாக்டர்களுக்கு மேற்பட்டப் படிப்புக்கு கண்டிப்பாக முதலிடம் கொடுக்கப்படும் என்பதைத் திட்டவட்டமாக இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்தால்தான் இந்த ஜுனியர் டாக்டர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் போவதற்கும், அங்கே போய் நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும் முன் வருவார்கள். என்னுடைய ஆசையெல்லாம் இவ்வாறு 600 ஜுனியர் டாக்டர்களை நாம் கிராமங்களுக்கு அனுப்பும்போது, அதில் ஒரு சிலராவது அங்கே உள்ள சூழ்நிலையில் மன நிறைவு அடைந்து அங்கேயே கூட பிராக்டிஸ் செய்ய முன்வரலாம். அப்படிப்பட்ட டாக்டர்களை வைத்துக் கொண்டு கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு நாமும் நல்ல மருத்துவ உதவியைக் கொடுக்க முடியும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, 'டிப்ளமா இன் பார்மசி' பற்றி வருத்தப்பட்டுக் கொண்டார்கள். ஆனால் அதில் ஒரு சிக்கல் இருக்கிறது. அதைக்கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களே மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார். அந்தப்

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1980 ஜூலை 23

படிப்பைக் கொஞ்ச கால தாமதத்தோடு துவக்கிய காரணத்தால், இரண்டாண்டுகள் படிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இப்போது பிளஸ் 2 படித்துவிட்டு வருகிற மாணவர்கள் அதில் சேரும்போது, ஒரே ஆண்டில் முடித்துக்கொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது. ஆகவே நான் இந்த அவையின் மூலம் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், "தயவுசெய்து நீங்களே அந்த மாணவர்களுக்குச் சொல்லி தற்போது மேற்கொண்டிருக்கும் வேலை நிறுத்தத்தைக் கைவிடச் சொல்லுங்கள். நானும் இந்த அவையின் மூலம் கேட்டுக் கொள்வது அவர்கள் மேற்கொண்டிருக்கிற ஸ்டிரைக்கைக் கைவிட வேண்டும்" என்பது. ஏனென்றால் இப்போது அதுகுறித்து அரசு ஒரு கருத்தைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அந்த மாணவர்கள் 2 ஆண்டுக்காலம் முழுமையாகப் படிக்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்தாலும்கூட, இரண்டாண்டுகளுக்குப் பதில் 1½ ஆண்டுக் காலமாக அதைக் குறைக்க வேண்டும் என்று இருக்கிறோம். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள்கூட உதவியாக இருக்க வேண்டும். காரணம் அவர் பார்மசி கவுன்சிலில் உறுப்பினராக இருக்கிறார். இந்த வகையில் காலத்தைக் குறைப்பதற்கு பார்மசி கவுன்சில் அனுமதி தர வேண்டும். இந்தியன் மெடிகல் கவுன்சில் போன்ற ஒரு ஸ்டேச்சுடரி அமைப்பாக பார்மசி கவுன்சில் இருக்கிறது. ஆக இந்த இரண்டு ஆண்டுக்காலம் என்பதற்குப் பதிலாக—ஒரு ஸ்பெஷல் கேசாக—இதை 1½ ஆண்டுக்காலம் என்று குறைத்துத் தருவதற்கு உறுதுணையாக இருப்பார்களானால் அது நமக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஒரே ஆண்டு என்று வைத்தால் அதில் சரியான பயிற்சியும் இருக்காது, பயனும் இருக்காது. நம்மைப் பொறுத்தவரையில் அந்த மாணவர்களுக்குப் பயிற்சியும் தேவை, அவர்களுடைய சங்கடமும் போக்கப்பட வேண்டும். எனவே இதை ஒரு 'காம்பரமைஸ் பார்முலாவாக' ஏற்று, 1½ ஆண்டு என்று அவர்களின் படிப்பைக் குறைக்க முடியுமா என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் பேசும்போது, டாக்டர்களுக்கு ரிப்ரஷர் கோர்ஸ் தேவை என்ற கருத்தைச் சொன்னார்கள். நான் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, ஒரு 15 நாட்களுக்குப் பிறகு பிரஸ் இண்ட்டர்வியு செய்தபோதே நான் இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறேன். டாக்டர்களுக்கு ரிப்ரஷர் கோர்ஸ் என்பது மிக மிகத் தேவை, மிக மிக அவசியம். வளர்ச்சியுற்ற நாடுகளில்



1980 ஜூலை 23] [டாக்டர் எச். வி. ஹண்டே]

கூட டாக்டர்களுக்கு ரிப்ரஷர் கோர்ஸ் என்பது ஒரு ஸ்டாச்சூட்டரி ரிக்கொயர்மெண்ட்டாக இருக்கிறது. சட்டப்படி ஒவ்வொரு ஜெனரல் மெடிகல் பிராக்டிஷனரும் 2 ஆண்டுகளுக்கு அல்லது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிரந்தரமாக இந்த ரிப்ரஷர் கோர்ஸ் அட்டெண்ட் செய்ய வேண்டும். அந்த வகையில் அவர்கள் தங்களின் திறமையைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எப்படி சட்டமன்றத்திற்கு நாம் 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை நமது உறுப்பினர் பதவியைப் புதுப்பித்துக்கொண்டிருக்கிறோமோ அதைப்போல் அவர்கள் தங்கள் திறமையைப் புதுப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால் அவர்களுக்கு எப்போதும் பழைய முறைகள்தான் நினைவுக்கு வரும். வளர்ந்து வருகிற விஞ்ஞானத்தின் காரணமாக மருத்துவத் துறையில் மாதா மாதம் மிக நவீனமான, மிக வேகமான சிகிச்சை முறைகள் உருவாகி வருகின்றன. எனவே டாக்டர்களுக்கு "Refresher Course is a must" என்பது என்னுடைய அபிப்பிராயம். இதையும் சட்ட ரீதியாகக் கொண்டு வர முடியுமா என்பதைப் பின்னாலே ஆராய வேண்டும். அதைப்பற்றி இப்போது எதுவும் சொல்வதற்கு இல்லை. இருப்பினும் இப்படி ரிப்ரஷர் கோர்ஸ் மேற்கொள்ளுகிற டாக்டர்களுக்கு எல்லா உதவிகளும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில் டாக்டர்கள் ரிப்ரஷர் கோர்ஸ் மேற்கொள்ளும்போது "They will be declared that they are on duty" அந்தக் காலத்திற்கான ஊதியம் கூட கொடுக்கப்பட்டு அவர்கள் வேலையில்இருப்பதைப்போலவே கருதப்படுகிற நிலை இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது ரோடு ஆக்சிடெண்ட்ஸ் பற்றிக் குறிப்பிட்டார்கள். அண்மையில் சென்னையில் ரோடு ஆக்சிடெண்ட்ஸ் குறித்து ஒரு கருத்தரங்கே நடைபெற்றது. அதில் ஜெர்மானிய நாட்டிலிருந்து ஒரு பெரிய விஞ்ஞான நிபுணர் டாக்டர் 'வெல்லர்' என்பவர் வந்திருந்து உரையாற்றினார். இந்த ரோடு ஆக்சிடெண்ட்ஸ் குறித்து, கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட போட்டிருக்கிறோம். உடனடியாக ரூ. 1.98—அதாவது கிட்டத்தட்ட ரூ. 2 கோடி செலவில் இதற்காக ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம். பெரிய தேசிய நெடுஞ்சாலைகளான என். ஹெச் 4, என். ஹெச் 47 போன்ற டிரங்க் ரோடுகளில் உள்ள முக்கியமான விபத்து நடக்கும் சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ள இடங்களில்—ஆங்கிலத்தில் 'வல்னரபிள் ஏரியாஸ்' என்று சொல்லுவார்கள்—இதற்கான ஒரு அமைப்பை நிறுவி, மற்ற சௌகர்யங்களையும் செய்து தந்து, சைரன் பொருத்தப்பட்ட ரோடு ஆக்சிடெண்ட்களைக் கவனிக்கக் கூடிய

வகையில் வண்டிகளை ஏற்படுத்தி, விபத்து எங்கே ஏற்பட்டாலும். அங்கே உடனடியாக இந்த வண்டிகளை அனுப்பி விபத்தில் சிக்கியவர்களை மீட்டு, சிகிச்சை செய்வதற்கான திட்டம் போடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறபோது, அதை திண்டிவனத்தில் வைப்பதா விழுப் புரத்தில் வைப்பதா என்று ஆளும் கட்சியினர் வெற்றி பெற்ற இடங்களை மனதில் கொள்ளாதீர்கள் என்று திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்டுக்கொண் டார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், ஆளைப் பார்த்து காரியங் களைச் செய்வதில்லை. எந்த இடத்தில் யார் வெற்றி பெற்றிருக்கிறார் என்று பார்த்து எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. எனது நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திண்டிவனத்தில் இருக்கும்போது, அத்தகைய பிரச்சினையே எழாது. எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் எங்கே வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று பார்க்க மாட்டோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இப்போது எல்லாவற்றையும் சென்னையிலேயே செய்து கொண்டிருக்கிறோம் என்று குற்றம் சாட்டப்பட்டது. சென்னையில் எங்கள் கட்சிக்கு மெஜாரிட்டி இல்லை. இருந்தாலும் செய்திருக்கிறோம் என்றால், ஆளைப் பார்க்காமல் எது எங்கே தேவைப்படுகிறதோ அதை அங்கே செய்கிறோம். இந்த அரசைப் பொறுத்தவரையில், ரிக்கொயர்மெண்ட்ஸ் அடிப்படையில்தான், தேவையின் அடிப்படையில்தான் செயல்படுத்திக் கொண் டிருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். வெற்றி பெற்றவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள், அங்கே உள்ள மக்கள் யாருக்கு வாக்களித் தார்கள், அவர்கள் எண்ணம் எப்படி என்று பாராமல் தேவையின் அடிப்படை யிலேயே செயலாற்றிக் கொண்டிருக்கிறோம்.

**திருமதி தாரா செரியன்:** அதே சமயத்தில் அரசு ஒன்றை மறந்துவிடக் கூடாது. இத்தகைய எக்விப்மெண்ட்சைக் கொண்டு வந்து ஹாஸ்பிடல்களில் வைக்கும்போது, அங்கே இருக்கும் ரெட் டேப்பிசத்தையும் 'கட்' செய்ய வேண்டும். இல்லாவிட்டால் பேஷண்ட் போய்ச் சேர்ந்தால், டாக்டர் வந்து எழுத வேண்டும், நர்ஸ் வந்து எழுத வேண்டும் என்று காலந் தாழ்த்தினால் அதற்குள் பேஷண்ட் போய்விடுவான்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** சிவப்பு நாடா முறை என்பது எப்போதும் இருந்து வந்திருக்கிறது. அதைப் படிப்படியாகத்தான் போக்க முடியும். மனிதாபிமான உணர்வு ஏற்பட்டால்தான் இது மறையும். இப்போதே சென்னையில் ஒன்றைப் பார்க்கிறோம். ரோடில், குறிப்பாக மருத்துவ மனைக்கு எதிரிலேயே ஒரு ஆக்சிடெண்ட் ஏற்பட்டாலும், பல டாக்டர்கள் அங்கே போய் பேஷண்டைத் தொடுவதற்கே பயப்படுகிறார்கள்.



காரணம் பின்னால் அவர்களையெல்லாம் சாட்சிக்குக் கூப்பிடுவார்கள் என்ற பயம் அவர்களுக்கு இருக்கிறது. ஒரு இடத்தில் அடிபட்டு, வேறு ஒரு இடத்தில் ஒருவன் இறந்துவிட்டால், எங்கே இறந்தான் என்பதில் பிரச்சினை ஏற்படுகிறது. இதெல்லாம் 'ரெட் டேப்பிசம்' தான். என்றாலும் இத்தகைய ரெட் டேப்பிசத்தை இந்த அரசு படிப்படியாகக் குறைத்துக்கொண்டுதான் வருகிறது. ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். காரணம் அவர்கள் பல்வேறு பொறுப்புகளில் இருந்தவர்கள். மேயராகக்கூட இருந்திருக்கிறார்கள். இதுவரையில் இல்லாத அளவுக்கு நாங்கள் ரெட் டேப்பிசத்தைக் குறைத்து இருக்கிறோமா இல்லையா என்பதுதான் பிரச்சினை. குறைத்திருக்கிறோம் என்பதை அவர் ஒப்புக்கொள்வார் என்று நினைக்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே ஒரு படத்தையே வைத்துக்கொண்டிருக்கிறேன் (படத்தை அவையில் காட்டினார்.) இந்த மோட்டார் வண்டி 6 மாதத்திற்கு முன்பே மருத்துவத் துறைக்கு வந்த வண்டி. இதற்கு ரெஜிஸ்டிரேஷன் நம்பர் பெற வேண்டும். இந்த வேலையை யார் செய்வது என்று கேள்வி. அடுத்து, இதற்கு மஞ்சள் பெயிண்ட் அடிக்க வேண்டுமா அல்லது வெள்ளை பெயிண்ட் அடிக்க வேண்டுமா என்பது. இது ஏற்கெனவே வெள்ளைப் பெயிண்ட்டோடுதான் வந்திருக்கிறது. ஒரு மருத்துவக் கல்லூரிக்கு 3 வண்டிகள் வீதம் 8 கல்லூரிகளுக்கு 24 வண்டிகள் வந்திருக் கின்றன. வந்து ஆறு மாதமாகிறது. ஒரு வண்டி 3 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் போக வேண்டும். ஆக 24 பெருக்கல் 3 இடங்களுக்கு இந்த வண்டிகள் போயிருக்க வேண்டும். ஆறு மாத காலமாக அத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இவைகள் பயன்பட்டிருக்க வேண்டும். ரெட் டேப்பிசம் காரணமாக இவைகள் பயன்படுத்தப்படாமலேயே இருந்தன. நான் வந்து டிராபிக் டெபுடி கமிஷனரை அழைத்து நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன என்று கேட்டு, இப்போதுதான் இந்த வண்டிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இந்த அளவுக்கு 'ரெட் டேப்பிசம்' இருக்கிறது என்பது எனக்கும் தெரியும். ரெட் டேப்பிசத்தால் நானே பாதிக்கப்பட்டிருக்கிறேன்.

ஆக இப்படி பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் செய்ய இருக்கிறோம். இன்னும் அதிகமாக மாண்புமிகு உறுப்பினர் களுடைய பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை என்ற காரணத்தால், விரைவில் முடித்துக்கொள்கிறேன். நாங்கள் இப்படி நல்ல காரியங்களைச் செய்யும்போது, எதிர்க் கட்சியில் இருக்கிற நண்பர்கள் மறைமுகமாகப்

பாராட்டுவதற்காக நான் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் எதையாவது பாராட்டினால் கூட வழக்கமாக அதை "It is done with a kick" என்று சொல்லுவார்கள். வின்ஸ்டன் சர்ச்சில் அப்படிச் சொன்னார் என்று நினைக்கிறேன். எதிர்க் கட்சிகளைப் பொறுத்த வரையில் வெளிப்படையாகப் பாராட்ட முடியாது. அவர்களுக்கு இருக்கிற சங்கடத்தை நான் உணருகிறேன். ஓரளவுக்குத்தான் அவர்கள் பாராட்ட முடியும். அந்த அளவுக்குப் பாராட்டியதற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பல நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். அவைகளை எல்லாம், என்னுடைய பணியில் என்னைத் தீவிரப்படுத்தச் சொன்ன கருத்துக்களாக நான் ஏற்றுக்கொள்கிறேன். அதோடு நாங்கள் எங்கே தவறு செய்தாலும், தைரியமாகச் சுட்டிக்காட்டுங்கள் என்று கேட்டுக் கொள்வேன். தவறுகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலமாகத்தான் அவைகளைத் திருத்திக் கொள்ள முடியும்.

" இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்,
கெடுப்பாரிலானும் கெடும் " ?

என்ற குறள் கருத்தை ஏற்பவன் நான்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தாம்பரம் ஆஸ்பத்திரியைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். 1964 ஆம் ஆண்டு நானும் திரு. சங்கரலிங்கம் அவர்களும் ஒன்றாக இந்த அவைக்கு வந்தோம். இரண்டு பேரும் ஒன்றாக உட்கார்ந்திருந்தோம். அப்போது திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் அமைச்சராக இருந்தார்கள். முதன் முதலாக இந்த மன்றத்தில் மிகத் தெளிவாக, விரிவாக நான் சாடியது தாம்பரம் ஆஸ்பத்திரியினுடைய விஷயங்களைப் பற்றித்தான். அது நிச்சயமாகக் கண்காணிக்கப்பட வேண்டிய மருத்துவமனை. அதிலே எந்தவிதமான கருத்து வேற்றுமையும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னது கூட, சரியான வகையிலே அந்த மருத்துவமனையைக் கண்காணிக்கப் பயன்படுமென்று கருதுகிறேன். பதினைந்து நாட்களாக இன்னுமொரு யோசனையைச் செய்து கொண்டிருக்கிறேன். மற்ற இடங்கள் எப்படியோ எனக்குத் தெரியாது. படிப்படியாகச் செய்வோம். ஆனால் அந்த ஆஸ்பத்திரியைப் பொறுத்த வரையில், ஒரு அட்வைசரி கமிட்டியைப் போட வேண்டும். இல்லாவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. தம்மை ஏமாற்றக் கூடிய



நிலைமை அங்கே இருக்கிறது. யார் ஏமாற்றுகிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே அந்த ஆஸ்பத்திரியைக் கண்காணிக்க ஒரு அட்வைசரி கமிட்டியைப் போட்டு, அதிலே மூன்று, நான்கு விவரம் தெரிந்த, கருத்துக்களைச் சொல்லக் கூடிய உறுப்பினர்களைப் போட்டு—சேனல் ஆஃப் கம்யூனிகேஷன் என்ற வகையிலே—நல்ல வகையிலே கண்காணித்து அந்த மருத்துவமனையை நிச்சயமாகச் சீராக்கிப் பணியாற்ற வேண்டிய எல்லா முயற்சிகளையும் செய்கிறேன் என்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக, என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-30)

### 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

57. Notification issued with G.O. Ms. No. 1067, Revenue, dated the 21st April 1980 making the Tamil Nadu Debt Relief Rules, 1980. [Laid on the table of the House under section 13 (3) of the Tamil Nadu Debt Relief Act, 1980 (Tamil Nadu Act 13 of 1980).]

### B. Reports, Notifications and Other Papers.

* 65. Policy Note on Food situation in Tamil Nadu. (English and Tamil).

* 66. Review of the Road Development Programme in Tamil Nadu, 1979-80 and Programmes for 1980-81. (English and Tamil).

* Circulated to all M.L.Cs. on 22nd July 1980.

## இணைப்பு

[289 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1971 ஆம் ஆண்டில், 80 அரசு கழக உயர்நிலைப் பள்ளிகளில் பதிவு பெற்ற தலைமையாசிரியர் நியமனம் செய்ய அரசு உத்தரவு வழங்கியது. அரசு ஆணையின்படி மேற்படி நியமனம் பதிவுபெறாத் தலைமையாசிரியர்களின் மாநில முன்னுரிமைப்படியும் அவர்களின் தகுதி அடிப்படையிலும் நிரப்பப் பட நேரிடும். இருப்பினும், அவசரத்தைக் கருதியும், நிர்வாக நலனை முன் னிட்டும் ஏற்கெனவே உள்ள மாவட்ட முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படை யிலும் மேற்படி 80 பதவிகள், தற்காலிகமாக அரசின் அனுமதி பெற்று நிரப்பப் பட்டன. பின்னர் 30—10—1974-ல் வெளியிட்ட கல்வித்துறை, அரசு ஆணை 1849-ன்படி அரசு கழக உயர்நிலைப் பள்ளி பதிவு பெற்ற தலைமை ஆசிரியர் களின் பதவிகள் பதிவுபெறாத் தலைமையாசிரியர்களின் மாநில முன்னுரிமைப் பட்டியல்படிதான் நிரப்பப்படல் வேண்டும் என்று ஆணை வெளியிடப் பட்டது.

2. மாநில முன்னிரிமைப்படி பதவி உயர்வு பெறத் தகுதியில்லாத தலைமை ஆசிரியர்கள் தற்காலிகமாக பதிவுபெற்ற தலைமையாசிரியர்களாகத் தொடர்ந்து பணியில் பதிவுபெறாத் தலைமையாசிரியர் ஊதியமே பெற்று நீடித்து வந்த னர். மாநில முன்னுரிமை பட்டியல்படி 24 தலைமையாசிரியர்கள் போதிய முன்னுரிமைப் பெறவில்லை. இவர்கள் பணிபுரிந்து வந்த பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டபோதும் ஏற்கெனவே தற்காலிகமாக பதிவுபெற்ற தலைமையாசிரியர்களாகப் பணி புரிந்து வரும் அனைவரும் மேல் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான கல்வித்தகுதி பெறாவிடினும் அவர்கள் பெற்று வந்த ஊதியத்துடன் நீடித்து வந்தனர். ஏற்கெனவே மாவட்ட முன்னுரிமைப்படி தற்காலிகமாக நியமிக்கப்பட்ட மாநில முன்னுரி மைப் பெறாத 21 பதிவு பெற்ற தலைமையாசிரியர்கள் (3 பேர் இடையில் ஓய்வு பெற்றவர் போக) அரசு மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர் களாய்த் தொடர்ந்து பணி புரிந்து வந்தனர். இவர்களில் 7 பேர் முதுகலைப் பட்டப்படிப்புத் தகுதி பெறலாயினர். இந்த 7 பேர்களைத் தவிர மீதமுள்ள 14 தலைமையாசிரியர்கள் மாநில முன்னுரிமைப்படி பதவி உயர்வு பெறும் தகுதியில்லை. அவர்களை மேல்நிலைப் பள்ளிகளில் தக்க வைப்பதற்கும் முதுகலைப் பட்டப் படிப்பு அவர்கள் பெறவில்லை. பதிவுபெற்றத் தலைமை யாசிரியர்கள் ஊதிய விகிதமும், பதிவுபெறாத் தலைமையாசிரியர்கள் ஊதிய





விகிதமும் மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி ஒன்றாக்கப் பட்டது. மேற்கூறிய நிலையில் மேலே குறிப்பிட்டுள்ள 14 தலைமை யாசிரியர்கள் அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரிர்களாக மாற்றம் செய்யப்படுவார்கள் என்று முன்கூட்டி அறிவிக்கப்பட்டபின்பு பள்ளிக்கல்வி இயக்குநரால் மாற்றம் செய்யப்பட்டனர்.

3. தற்போது அப்படி உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களாக மாற்றம் செய்யப்பட்ட சில தலைமையாசிரியர்கள் சென்னை உயர்நீதிமன்றத் தில் ரிட் மனு தாக்கல் செய்து இடைக்கால தடையுத்தரவு பெற்றுள்ளனர். ஆதலின், இது உயர்நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

## இணைப்பு II

[291 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

தீங்கு விளைவிக்கும் தன்மை வாய்ந்த "பார்த்தீனியம்" என்னும் ஒரு வகை நச்சுச் செடி தமிழ்நாட்டில் தற்சமயம் குறிப்பாக, கோவை மாவட்டத்தில் பீளமேடு, சிங்காநல்லூர், பல்லடம், ஆளியாறு அணையின் பாசனப் பகுதி, கோவை நகரம் ஆகிய இடங்களில் அதிகமாகவும், சேலம், மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்களிலும், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய இடங்களிலும் பரவலாகக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. அதனைத் தொட்டால், மக்களுக்குத் தோல் வியாதி மற்றும் பலவகை எதிர்விளைவுகள் உண்டாகுமென்று தெரிய வந்துள்ளது.

விளை நிலங்களிலும் இக்களை பரவுகிறது என்றும் கூறப்படுகிறது.

இவ்விநச் செடி எங்கு தென்பட்டாலும் உடனடியாக அதை ஒழிக்க நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மற்றும் நகராட்சி அலுவலர்கள், வட்டார அலுவலர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள் ஆகியோரின் உதவியைக் கொண்டு இப்பணியை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நச்சுச் செடியை அடையாளம் கண்டுபிடிப்பதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தக்க உதவி புரியும்படி கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தையும் அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இச்செடி எங்கு கண்டுபிடிக்கப்பட்டாலும் அதனைத் தொடாமல் இருக்கும்படியும், அது இருக்குமிடத்தை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அலுவலர்களுக்கும், சுகாதார அதிகாரிகளுக்கும் தெரிவித்தால் அதனை அறவே ஒழிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அவர்கள் உடனடியாக மேற்கொள்ளுவார்கள் என்றும் பொதுமக்களுக்கு அரசு செய்தி வெளியீட்டின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.



## இணைப்பு III

[ ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 19 OF 1980.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-first Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land Amendment Act, 1980.

(2) It shall be deemed to have come into force on the 15th January 1972.

2. *Tamil Nadu Act 58 of 1961, as subsequently modified, to have effect subject to modification.*—The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), as subsequently modified (hereinafter referred to as the principal Act), shall have effect as if, in sub-section (1) of section 94-B, for the words "five years", the words "seven years" had been substituted.

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 4 of 1980), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the corresponding provisions of the principal Act, as amended by this Act.

## இணைப்பு IV

[298-ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 20 OF 1980.)

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Act,* 1976.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-first Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Act, 1980.

(2) It shall be deemed to have come into force on the 30th May 1980.

2. *Amendment of section* 12, *President's Act* 24 *of* 1976.—In section 12 of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Act, 1976 (President's Act 24 of 1976) (hereinafter referred to as the principal Act), for the words " three years ", the words " four years " shall be substituted.

3. *Repeal.*—(1) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 5 of 1980), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.



## இணைப்பு V

[335-ஆம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 17 OF 1980.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Madras City Municipal Corporation Act,* 1919.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-first Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Municipal Corporation (Amendment) Act, 1980.

(2) It shall be deemed to have come into force on the 30th May 1980.

2. *Amendment of section 55-B, Tamil Nadu Act IV of* 1919.—In section 55-B of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919) (hereinafter referred to as the principal Act), in sub-section (1), for the words " within a priod of five years and six months ", the words " within a period of six years and six months " shall be substituted.

3. *Repeal.*—(1) The Madras City Municipal Corporation (Amendment) Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 6 of 1980), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the corresponding provisions of the principal Act, as amended by this Act.

## இணைப்பு VI

355 ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### மருத்துவத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

10 தோற்றுவாய் :

கிராமப் பகுதிகளில் இருந்தாலும், நகரத்தில் இருந்தாலும் போதிய உணவு மற்றும் சரியான சத்துணவு இல்லாமலிருக்கும் ஏழை மக்களின் தேவைகளை மேம்படுத்துவதையே அரசு முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. இப்பெருமை மிகு குறிக்கோளை அடைவதற்காக, மக்கள் நல்வாழ்வுத்துறை சமூகத்தின் மிக நலிந்த ஏழை மக்களால் அடிப்படை ஆதாவளிக்கப்பட்டு வரும், நகரத்திலும் மாவட்டங்களிலும் உள்ள அரசு மருத்துவ நிலையங்களின் வசதினை மேம்படுத்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இதையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், இக் கொள்கை விளக்கக் குறிப்பின் பின்னால் வருகின்ற அத்தியாயங்களில் வெளிக் கொணரப்பட்டிருக்கின்றன.

கிராம ஏழை மக்களுக்கு உதவியளிக்க வேண்டும் என்ற இந்த அரசின் தத்துவத்திற்கேற்ப,. ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து ஆரம்பித்து, நடமாடும் மருத்துவக்குழுக்கள் மூலம், பல்வகையான பணிகளை வழங்குவது ஏற்கெனவே செயல் முறையில் இருந்து வருகிறது. விபத்தில் பலியாகிறவர்களுக்கு. சரியான பலன் அளிக்கக்கூடிய சிகிச்சையினை வழங்க வேண்டும் என்ற கருத்தில், அரசு ரூபாய் 1.39 கோடி செலவில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், புறநகர் முதலுதவி மையங்களாகவும், வட்டம் மற்றும் மாவட்ட மருத்துவ மனைகள் அவசர சிகிச்சை அளிக்கும் நிலையங்களாகவும், மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் மேல் சிகிச்சை அளிக்கும் நிலையங்களாகவும் இயங்கும் விபத்து மற்றும் அவசர மருத்துவப்பணிகள் என்ற மூன்று அடுக்கு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. ஆர்வம் நிரம்பிய, மிகவும் பயன் தரக்கூடிய ஒரு மக்கள் நல்வாழ்வு திட்டத்தினை செயல்படுத்துவதின் ஆரம்பத்தைத்தான் இது காட்டும்.

மேலே சொன்ன, திட்டங்களை செயல்படுத்துவதின் மூலம் கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகளை மேம்படுத்துவதுதான் அரசின் முக்கிய குறிக்கோளாக இருந்தாலும், நவீன, தரம் உயர்ந்த மருத்துவப் பணிகளை வழங்குவதில் அரசு மாநகரில் வாழும் ஏழை மக்களது நலனைப் பொருட்படுத்தாமல்



ஂல்லை. அவசர சிகிச்சை அளிப்பதற்காகவும், நோய் அளவினையும், றப்பு விதத்தையும் குறைப்பதற்காகவும், 'ஸ்ட்ரோக்'—கால் அவதியுற்று கிச்சைக்காக வருகின்ற ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்குப் புதிய ம்பிக்கையினை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்திலும், இந்தியாவிலேயே தலாவதாக சென்னை அரசு பொது மருத்துவ மனையில் நரம்பியல் துறை ல் ஸ்ட்ரோக் நிலையம் (Stroke Centre) ஒன்றினை ஏற்படுத்த ஒப்புதல் ழங்கியிருக்கிறது. மேலும் ரூ. 40.00 இலட்சம் செலவில் இதே துறைக்காக ிடாட்சி கம்ப்யூட்டரைஸிடு 'டோமோகிராபிக் ஸ்கான்னர்' கருவி ஒன்று பாருத்துவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறது. சென்னை மருத்துவக் ல்லூரியை பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சி நிலையமாக உயர்நிலைப்படுத்துவது ட அரசின் பரிசீலனையில் இருக்கிறது. திரவ வாய்வழி மருந்துகள், மாத் ிரைகள், காப்சூல்கள், களிம்புகள் முதலிய அனைவரும் பயன்படுத்துகின்ற ிலை குறைந்த மருந்துகளைத் தயாரிக்கும் கருத்துருவை அரசு பரிசீலனை சய்துகொண்டு வருகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது இப் ிரிவுகள் தன்னிறைவு கொண்டு விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மலும் இவைகள் மருந்தாக்கியல் மாணவர்களுக்கு மேலே சொன்ன பரவலாக யன்படுத்துகின்ற மருந்துகளைத் தயாரிக்கும் முறையைத் தெரிந்து கொள் தில் பயிற்சி அளிக்க உதவும்.

பொதுப் பிரிவுகளில் 24 மணி நேரங்களில் 5 படுக்கைகளுக்கு ஒரு செவி யர் விதம் பணிபுரிதல், சிறப்புப் பிரிவுகளில் 2 நோயாளிகளுக்கு ஒரு சவிலியர் விதம் பணி புரிதல், தீவிர மற்றும் சிறப்பு கவனப் பிரிவுகளில் ரு நோயாளிக்கு ஒரு செவிலியர் விதம் பணிபுரிதல் என்ற அளவு காலினை எய்துவதற்காக, முதல் கட்டமாக, அரசு மாநிலத்தில் உள்ள மருத் வக் கல்லூரி மருத்துவமனைகளில் கூடுதலாக 100 செவிலியர்களை பணிக்கு மர்த்த ஒப்புதல் வழங்கியிருக்கிறது.

மாநிலத்தில் உள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் ழ்க்காணும் அமைச்சுப் பணியாளர்களை கூடுதலாக வேலையில் அமர்த்த ரசு ஆணை வழங்கியிருக்கிறது :—

| | | |
|---|---|---|
| 1. | உயர்நிலை அமைச்சுப் பணியாளர் | 25 |
| 2. | உதவியாளர்கள் | 20 |
| 3. | இளநிலை உதவியாளர்கள் | 20 |
| 4. | தட்டச்சர்கள் | 6 |
| 5. | பதிவேடு எழுத்தர்கள் | 32. |

மேலும் மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், மருந்தகங்களில் கீழ்க் காணும் பணியாளர்களை பணியில் அமர்த்த அரசு ஆணை வழங்கியிருக் கிறது :—

| | |
|---|---|
| 1. உயர்நிலை அமைச்சுப் பணியாளர் மற்றும் கண்காணிப்பாளர்கள் | [illegible] |
| 2. உதவியாளர்கள் | 20 |
| 3. இளநிலை உதவியாளர்கள் | 100 |
| 4. தட்டச்சர்கள் | 10 |
| 5. பதிவேடு எழுத்தர்கள் | 78 |

மருத்துவ அலுவலர்களது தொடர் பணியினை கவனத்திற்கொண்டு, மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவமனைகளில் கூடுதலாக 161 ரிசர்வ் பணி மருத்துவர் பணிகளை ஏற்படுத்த ஆணை வழங்கியிருக்கிறது. மருத் துவக் கல்லூரி மற்றும் மருத்துவப் பணிகள் துறைகளில் மருந்தாளுநர், பதவிகள் 23-ஐ தலைமை மருந்தாளுநர் பதவிகளாக மாற்றவும், தலைமை மருந்தாளுநர் பதவிகள் 34-ஐ மருத்துவ ஸ்டோர் கீப்பர் பதவிகளாக மாற்றும் படியும் ஆணை வழங்கியிருக்கிறது.

1980-81 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

வேலையில்லா மருத்துவ பட்டதாரிகளுக்கு வேலை கொடுப்ப கிராமப் பகுதிகளில் மருத்துவப் பணிகளை மேலும் தீவிரப்படுத்து வும், 600 இளநிலை மருத்துவ அலுவலர்களை நியமிக்க கருதப்ப இவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 500 பயிற்சி உதவிப் பணமாக பெ வழங்கப்படும். பணிக்காலம் ஒரு வருடத்துக்குள் இருக்கும். இளநிலை மருத்துவ அலுவலர்களாக ஆறு மாதங்கள் ஆரம்ப நிலையங்களிலும் வட்டத் தலைமையிட, வட்டத் தலைமையி மருத்துவமனைகளில் 6 மாதங்களும் பணி புரிவர். இந்த ஒரு வருட காலத்தைப் பூர்த்தி செய்த மருத்துவ பட்டதாரிகளுக்கு, தமிழ்நாடு பணியாளர் தேர்வு ஆணைக்குழு உதவி மருத்துவர்களாக தேர்ந் போதும், நியமிக்கப்படும் போதும் முன்னுரிமை அளிக்கப்படும்.

சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் அறுவை சி பகுதிக்கு மேல் ரூ. 203.00 இலட்சம் மொத்தச் செலவில் கூடுதலாக மாடிகள் கட்டவும் முடிவு செய்திருக்கிறது.



சென்னை அரசு பொது மருத்துவ மனையில் இருதய அறுவை சிகிச்சை.

இருதய அறுவை சிகிச்சைத் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இருதயத்தில் துவாரங்களுடனும், பழுதடைந்த இருதய வால்வுடனும் புரை பேமி இருதய நோயுடனும், இருதய துடிப்பு தடைகளுடனும், ஏனைய சிக்கலான இருதய நோய்களுடனும் வருகின்ற நோயாளிகளை இப்போது இருதய அறுவை சிகிச்சை மூலம் சிகிச்சை அளித்து காப்பாற்றவும் அல்லது இந் நோய்களிலிருந்து விடுவிக்கவும் முடியும். எல்லா மாநிலங்களிலிருந்தும், குறிப்பாக ஆந்திரா, கர்நாடகம், கேரளா முதலிய அண்டை மாநிலங்களி லிருந்து சென்னை பொது மருத்துவமனைக்கு இந்நோய்களுடன் நோயாளிகள் வருகிறார்கள். குறைந்தது 100 நோயாளிகள் வெளிப்புற சிகிச்சைப் பிரிவிற்கு ஒவ்வொரு நாளும் வருகிறார்கள். அவர்களில் குறைந்தது 10 பேர்களாவது இருதய அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது.

1970 ஆம் ஆண்டில் இரண்டு திறந்த இருதய அறுவை சிகிச்சைகள் செய்யப் பட்டன. 1979-ல் ஏறக்குறைய 200 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. 1980-ல் ஏறக்குறைய 350 திறந்த இருதய அறுவை சிகிச்சைகள் செய்யப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே திறந்த இருதய அறுவை சிகிச்சை வசதிகள் கிடைப்பது இல்லை என்ற தவறான கருத்தும் இருக்கும் வசதிகள் தரம் குறைந்ததாக இருக்கின்றது என்ற தவறான கருத்தும் நீக்கப் படவேண்டும். ஒரே நாளில் ஆறு திறந்த இருதய அறுவை சிகிச்சைகள் செய்வதிலும், இருதயத்தில் உள்ள துவாரங்களை அடைப்பதில் இந்தியன் ரா சில்கை பயன்படுத்துவதிலும் இந்திய நாட்டு இருதய நுரையீரல் சாதனத் தைப் பயன்படுத்துவதிலும் திறந்த இருதய அறுவை சிகிச்சையில் புதிய வழி முறைகளை பயன்படுத்துவதிலும், உண்மையில், சென்னை அரசு பொது மருத்துவமனை, இந்தியாவிலேயே முதலாவது நிலையமாக இருக்கிறது.

தமிழக அரசு இவ்வசதிகளை சாதாரண மனிதனுக்கு இலவசமாக அளிக் கிறது. உண்மையில் சென்னை அரசு பொது மருத்துவமனை இந்தியா விலேயே, ஏழை மனிதனுக்கு திறந்த இருதய அறுவை சிகிச்சையின் எல்லா முறைகளையும் இலவசமாக அளிக்கும் ஒரே மருத்துவமனையாக இருக்கிறது என்று சொல்லலாம். இருதய வால்வுகள் மற்றும் ஏனைய தரம் உயர்ந்த சாதன வசதி இலவசமாகவே வழங்கப்படுகின்றன. அறுவை சிகிச்சையின் முடிவுகள் மிகவும் மன நிறைவு தரும் வகையிலும் உலக நாடுகளின் தரங் களுக்கு ஒப்பிடும் வகையிலும் இருக்கின்றன.

[1980 ஜூலை 23

இந் நிலையத்தின் தரத்தினை உயர்த்த கூடுதலான வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந் நடவடிக்கைகள் மாநிலத்திலுள்ள ஏழை மனிதன், உலகத்தில் எங்கிலும் கிடைக்கின்ற மிகச் சிறந்த இருதய அறுவை சிகிச்சை வசதியைப் பெறுவதற்கு உதவுகின்றன.

மாநில வரவு-செலவுத் திட்டமும் மருத்துவம் மற்றும் நல்வாழ்வு செலவினங்களும் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை 1-ல் தரப்பட்டுள்ளன.

### 2. மருத்துவக் கல்வித்துறை

**1. மருத்துவக் கல்லூரிகள்.**

260 மருத்துவம் ஏசி. கல்வியின் கீழ் 1980- 81-க்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மொத்த நிதி ஒதுக்கம் ரூ. 622.00 இலட்சம் ஆகும்.

இத்தலைப்பின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் செய்யப்பட்ட செலவு பின்வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1977-78 | 454.27 |
| 1978-79 | 533.74 |
| 1979-80 (திருத்திய மதிப்பீடு) | 590.28 |

(i) பட்டப் படிப்புகள்

தற்சமயம் மாநிலத்தில் 8 அரசு மருத்துவக் கல்லூரிகளும் ஒரு அரசு பல் மருத்துவக் கல்லூரியும் இருக்கின்றன. அவைகளில் 3 மருத்துவக் கல்லூரிகளும், அரசு பல் மருத்துவக் கல்லூரியும் சென்னை மாநகரில் இருக்கின்றன. எஞ்சிய 5 கல்லூரிகளும் மாவட்டங்களில் உள்ளன. சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவப் பிரிவு, அக் கல்லூரியிலிருந்து பிரிந்து அரசு பல் மருத்துவக் கல்லூரியாக சமீபத்தில் அமைக்கப்பட்டு 1—11—1979 முதல் இயங்க ஆரம்பித்திருக்கிறது.

மருந்தாக்கியல் பட்டப் படிப்பு, சென்னை மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் நடத்தப்படுகிறது. மருந்தாக்கியல் பட்டப் படிப்பின் முதலாவது ஆண்டில் சென்னை மருத்துவக் கல்லூரியில் 20 மாணவர்களும் மதுரை மருத்துவக் கல்லூரியில் 26 மாணவர்களும் ஆண்டுதோறும் சேர்த்துக் கொள்ளப்பட்டுகின்றனர். இவர்கள் தவிர இரண்டாவது ஆண்டு பட்டப்படிப்பில், மருந்தாக்கியல் பட்டயத் தகுதிப் பெற்றவர்களிலிருந்து கல்லூரிக்கு ஐவர் வீதம் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.



1980 ஜூலை 23]

சென்னை பல் மருத்துவக் கல்லூரியில் பல் நோய்ச் சிகிச்சைக்கான பட்டப் படிப்பு நடத்தப்படுகிறது. இதில் ஆண்டுதோறும் 40 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1979 கல்வியாண்டிலிருந்து முன்னாள் / மாண்ட / பணிபுரிந்து வரும் இராணுவத்தினரின் குழந்தையைச் சேர்த்துக் கொள்வதற்காக ஒரு இடம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் செவிலியர் பட்டப்படிப்பு (B.Sc., Nursing) நடத்தப்படுகிறது. இப்படிப்பின் கால அளவு இரண்டரை ஆண்டுகளாகும். ஆண்டுதோறும் அரசு பணியிலிருப்பவர்கள் 10 பேரும் தனிப்பட்டவர்கள் 10 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்வாண்டு கூடுதலாக 10 அரசுப் பணியிலிருப்பவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(ii) பட்ட மேற்படிப்புகள் :

பல்வேறு துறைகளில் போதுமான அளவுக்கு வல்லுநர்களும் ஆசிரியப் பணியாளர்களும் இல்லை. இதனை நிறைவு செய்ய வெவ்வேறு மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு பட்டயத் தகுதி வகுப்புகளும், உயர்சிறப்பு வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இவ்வாறு நடத்தப்படும் பட்ட மேற்படிப்பு பட்டயத் தகுதி வகுப்புகளும் உயர் சிறப்பு வகுப்புகள் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை 2-ல் தரப்படுகின்றன. சென்னை மருத்துவக் கல்லூரியில் எம்.டி. காசநோய் மற்றும் மார்பு நோய்கள் என்றொரு புதிய படிப்பு துவக்கப்பட இருக்கிறது. இப்படிப்பில் மூன்று மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(iii) அறுவை மருத்துவம், மருந்தியல் மகளிர் நோயியல் எஸ்.பி.எம். முதலிய சிறப்பு மருத்துவ பிரிவுகளில் உள்ள பணிமருத்துவர்களுக்கு உட்பணி மறுபயிற்சி (in-service Training Course) படிப்பினை நடத்தும் கருத்துருவைக்கூட அரசு பரிசீலித்துக்கொண்டு வருகிறது.

2. பயிற்சி :

1980-81 ஆம் ஆண்டில் 51.76 இலட்சம் ரூபாய் பயிற்சிக்காக செலவிட கருதப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பதை கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் மூலம் அறியலாம்.

| ஆண்டு | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1978-79 | 19.28 |
| 1979-80 (திருந்திய மதிப்பீட்டின்படி ) | 36.06 |

(i) செவிலியர் பயிற்சி

ஆண்டொன்றுக்கு 300 மாணவிகள், 6 பயிற்சி நிலையங்களில் செவிலியர் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்பயிற்சியின் கால அளவு 3 ஆண்டுகளாகும். அனைத்து மருத்துவமனைகளிலும் நோயாளிகளுக்கு மிகச் சிறந்த செவிலிப்பணி கவனம் வழங்க வேண்டும் என்பதற்காக இக்கல்வியாண்டி லிருந்து ஆண்டுதோறும் 375 மாணவிகளுக்குக் கூடுதலாகப் பயிற்சி வழங்கும் ஒரு திட்டத்துக்கு அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. இதன்படி தற்சமயம் இயங்கி வருகின்ற 6 பயிற்சி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றவர் களின் எண்ணிக்கை 300 லிருந்து 475 ஆக உயரும். மேலும் இரண்டு புதிய பள்ளிகள் திறக்கப்படும். இப்பள்ளிகளில் ஆண்டுதோறும் பள்ளிக்கு 100 மாணவிகள் வீதம் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவர்களைத் தவிர, 50 பயிற்சி உதவிப் பணம் பெறாதவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

(ii) துணைச்செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் பயிற்சி :

தற்சமயம் 4 பயிற்சி நிலையங்களில் துணைச்செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு ஒவ் வொரு நிலையத்திலும் 30 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 5,000 மக்கட் தொகைக்கு துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர்களை பலநோக்கு சுகா தாரப் பணியாளர்களாக நியமிக்கக் கருதி, இப்பயிற்சியின் கால அளவு 18 மாதங்களுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும் 960 மாணவிகளுக்குக் கூடுதலாகப் பயிற்சி வழங்கும் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியிருக் கிறது. இதன்படி, தற்சமயம் இயங்கி வருகின்ற 4 பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றவர்களின் எண்ணிக்கை 120-லிருந்து 480 ஆக உயரும். மேலும் இராமநாதபுரம், நாகப்பட்டினம், கடலூர், நாகர்கோயில், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் 5 புதிய பள்ளிகள் திறக்கப்படும். அங்கு ஆண்டொன் றுக்கு 120 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(iii) மருந்தாக்கியல் பட்டயத் தகுதிப் படிப்பு :

தற்சமயம் மருந்தாக்கியல் பட்டத் தகுதிப் படிப்பு மதுரை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படுகிறது. இதில் ஆண்டொன்றுக்கு 150 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1979-80 ஆம் ஆண்டில் மேலும் 100 பேர் சேர்த்துக் கொள்ளும்படி மருந்தாக்கியல் பட்டயத் தகுதிப் படிப்பு ஆரம்பிக்க ஒப்புதல் வழங்கியிருக்கிறது.



(iv) ஏனைய படிப்புகள் :

இவைகளைத் தவிர, துப்புரவு ஆய்வாளர்கள் படிப்பு கண்வரையியலாளர் படிப்பு போன்ற பல்வேறு பயிற்சி வகுப்புகளும் மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன.

3. மருத்துவக் கல்லூரிகளுக்கு மேம்பாடுகள்— (i) மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு புதிய பேருந்துகள் வழங்குதல் :

மாநிலத்தில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் மாணவர் களின் உபயோகத்திற்காக, பேருந்துகளை வாங்க அரசு முடிவு செய்திருக் கிறது. முதல் கட்டமாக, கீழ்க்காணும் 4 மருத்துவக் கல்லூரிகளுக்கு 4 புதிய பேருந்துகள் வாங்க ஆணை வழங்கியிருக்கிறது :

1. மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.
2. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி.
3. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்.
4. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.

(ii) மருத்துவக் கல்வியை புத்தறிவாக்குதல் :

நாட்டில் உள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரிகளைக் கொண்டு கிராம-நகர்ப்புற மக்களுக்கு நேரடியாக சுகாதாரப் பாதுகாப்புப் பணிகளை வழங்க வும் சமுதாயப் பணிகளில் நேரடி ஈடுபாடு ஏற்படும் வகையில் மருத்துவக் கல்வியை புத்தறிவாக்கவும் ஆகிய இரட்டை குறிக்கோள்களைக்கொண்டு இந்திய அரசு 'மருத்துவக்கல்வியை புத்தறிவாக்குதல்' என்றொரு திட்டத்தைக் கொண்டுவந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாநில அரசுகள் கருத்தரங்கு, சொற்பொழிவு, அறைகளுக்கு கட்டிடங்கள் மற்றும் தங்கு மிடங்கள் கட்டவேண்டும். ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் முதலிய வைகளில் திருத்தங்கள் மற்றும் மாற்றங்கள் செய்யவேண்டும். மேலும் கூடுத லாக துறை அதிகாரிகளையும், பணியாளர்களையும் நியமிக்கவேண்டும் ; சமுதாயத்தின் சுகாதார நிலைபற்றிய அடிப்படை புள்ளி விவரங்கள் சம்பந்தப்பட்டதை சேகரிக்க வேண்டும் ; ஆராய்ச்சி வேலையை துரிதப்படுத்த வேண்டும்.

[1980 ஜூலை 23

இம்மாநிலத்தில் இத்திட்டத்தை செயல்படுத்தி வேலையை ஆரம்பிக்க இந்திய அரசு ஒவ்வொரு மருத்துவக்கல்லூரிக்கும் ரூ. 4.79 இலட்சம். வீதம் ரூ. 43.11 இலட்சம் ஒருமுறை தொடரா உதவிப்பணமாக வழங்கியது. இப் பணம் முக்கியமாக கீழ்க்கண்ட மருத்துவக் கல்லூரிகளில் தேவையான அடிப் படை வசதிகள் ஏற்படுத்த ஆகும் தொடரா செலவிற்காக அளித்துள்ளது:—

1. அரசு சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.
2. அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.
3. அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை.
4. அரசு செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு.
5. அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்.
6. அரசு மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.
7. அரசு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.
8. அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி.
9. கிறித்துவ மருத்துவக் கல்லூரி, வேலூர்.

ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் வழங்கப்படுகின்ற மேலே சொன்ன ஒருமுறை தொடரா உதவிப்பணமான ரூ. 4.79 இலட்சத்தை ஏற்றுக்கொண்டு இவ்வரசு 8 மருத்துவக் கல்லூரிகளில் (கிறித்துவ மருத்துவ கல்லூரியைச் சேர்க்காமல், மருத்துவ கல்லூரிக்கு 3 ஆரம்ப சுகாதார நிலையங்களை இணைத்து ஆணை வழங்கியிருக்கிறது. இந்த எல்லா 24 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கூடுதல் கட்டிடங்கள் கட்டவும் ஆணை வழங்கியிருக்கிறது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதின் மூலம், சுற்றிருப்பு மருத்துவர்கள் சில காலங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தங்கி கிராமப்புறங்களில், சுகாதாரப்பணிகளின் நோய்த்தீர்ப்பு. நோய்த்தடுப்பு வழி முறைகளை தகுந்த வழி காட்டுவோரின் மேற்பார்வையில் தெரிந்து கொள்வார்கள். இவ் வாறு மாணவர்கள் நியமிக்கப்படும்போது, வெவ்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுநர்கள்கூட அங்கு சென்று, சிறப்புப் பணி புரிவர்; மாணவர்களுக்கும் வழிகாட்டுவர்.

**(iii) மருத்துவக் கருவிகள் வழங்குதல்:**

1979-80 ஆம் ஆண்டில், சென்னை மருத்துவக் கல்லூரிக்கு 5.80 இலட்ச ரூபாய் மதிப்பில் பல்வேறு மருத்துவக் கருவிகள் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது.



1980 ஜூலை 23]

1980-81 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மருத்துவக் கருவித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க கருதப்பட்டுள்ளது:—

( : ) தஞ்சை மருத்துவக் கல்லூரியின் நோய்க் குறியியல் துறைக்கு மைக்ரோ போட்டோகிராபிக் மற்றும் மைக்ரோ புரொஜெக்ஷன் கருவிகள் ரூ. 0.65 இலட்சம் செலவில் வாங்குதல்;

(i) தஞ்சை மருத்துவக் கல்லூரியின் நோய்க் குறியியல் துறைக்கு 2 புளோரிசன்ட் மைக்ராஸ்கோப்புகளை ரூ. 0.65 இலட்சம் செலவில் வாங்குதல்;

(ii) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியின் பல்வேறு துறைகளுக்கு ரூ. 5.00 இலட்சம் செலவில் கருவிகள் வாங்குதல்;

(iv) மதுரை மருத்துவக் கல்லூரியின் பார்மாகாக்னஸி துறைக்கு ரூ. 0.26 இலட்சம் செலவில் கருவிகள் வாங்குதல்.

**(4) கட்டிடத் திட்டங்கள்:**

கீழ்க்கண்ட பல்வேறு மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டிடத் திட்டங்கள் கட்டப்பட்டு வருகின்றன:—

(i) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியைச் சுற்றி ரூ. 1.00 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்டுதல்;

(ii) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் ரூ. 7.00 இலட்சம் செலவில் மருந்தாக்கியல் பட்டப் படிப்புக்கான பகுதி கட்டுதல்.

(iii) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ரூ. 3.00 இலட்சம் செலவில் புதிய புறநோயாளித் தொகுதிக்கு மேல் முதல் மாடி கட்டுதல்;

(iv) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ரூ. 2.35 இலட்சம் செலவில் கூடுதலாக 28 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டுதல்;

(v) மதுரை மருத்துவக் கல்லூரியில் ரூ. 1.79 இலட்சம் செலவில் மத்திய மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி கட்டுதல்;

(vi) தஞ்சை மருத்துவக் கல்லூரியின் பிண அறையில் ரூ. 1.90 இலட்சம் செலவில் குளிர் சேமிப்பு பிளாண்டை வழங்குதல் 1980-81-ல் கீழ்க் கண்ட கட்டிடத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கக் கருதப்பட்டுள்ளது:—

1. சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் பொது மருத்துவமனையில் குடிநீர் வழங்குதலைப் பெருக்குதல்.

2 சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் ரூ. 2.90 இலட்சம் செலவில் பொது நுழை வாயிலிலிருந்து நூலகம் மற்றும் பிணவறைத் தொகுதி வரைக்கும் தார் ரோடு போடுதல் மற்றும் சொற்பொழிவு அரங்கத்தை திருத்தி புதிப்பித்தல்.

3. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் ரூ. 3.24 இலட்சம் செலவில் பெண்கள் விடுதிக்கு இறக்கை பகுதிகள் கட்டுதல்.

4. மதுரை மருத்துவக் கல்லூரியில் வெள்ளிவிழா சொற்பொழிவு அரங்கம் கட்டுதல்.

5. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ரூ. 2.00 இலட்சம் செலவில் விளையாடுமிடம் அமைத்தல்.

6. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ரூ. 2.10 இலட்சம் செலவில் பெண்கள் விடுதியின் முதலாவது, இரண்டாவது மாடிகளின் வெளி யிடங்களில் கூடுதலாக அறைகள் கட்டுதல்.

7. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியின் நோயியல், நுண்ணுயிரியல் துறைகளை ரூ. 3.68 இலட்சம் செலவில் விரிவாக்குதல்.

### 4. மருத்துவ ஆராய்ச்சி :

1980-81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மருத்துவ ஆராய்ச்சிக்கான நிதி ஒதுக்கம் ரூ. 9.54 இலட்சம் ஆகும். தமிழ்நாட்டில் மருத்துவம் சார்ந்த அறிவியலில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு தமிழ்நாடு மாநில மருத்துவ ஆராய்ச்சிக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சிப் பணிக்கு மானியம் கோட்டு வரும் வேண்டுகோள்களை இக்குழு பரிசீலிப்பதோடு தகுதியுடைய திட்டங் களுக்கு உதவி அளிக்கிறது. ஒவ்வொரு மருத்துவத்திலும் அந்தந்த தலைவர்/பேராசிரியர்கள் முதலியோரைக் கொண்டு தனியாக ஆராய்ச்சிப் பிரிவினை ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்து வருகிறது. அப்படி ஏற் படுத்தும்போது தற்சமயம் இருக்கின்ற மாநில ஆராய்ச்சிக் குழு மிகப்பெரிய





அளவில் உள்ள திட்டங்களில் கவனம் செலுத்தும். குறிப்பிட்ட ஆராய்ச்சித் திட்டங்களுக்காக அரசு தரப்பில்லாதாரிடமிருந்து உதவித் தொகைகள் பெற இந்தக் கல்லூரிகளின் ஆராய்ச்சிப் பிரிவுகளுக்கு இசைவு வழங்கும் ஆலோசனை கூட பரிசீலிக்கப்படும்.

ஐ.சி.எம்.ஆர். மானியங்கள்:

1970-80 ஆம் ஆண்டில், ஐ.சி.எம்.ஆர். கீழ் ஆராய்ச்சி மானியம் வழங்க ரூ. 27,28,530 மொத்தத் தொகையில் 11 இனங்கள் பரிசீலிக்கப்பட்டன. இந்த 11 இனங்களும் மானியங்கள் பெற்றன.

நோயாளிகளுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் முழு விவரத்தைப் பற்றிய ஆவணங்களை துல்லியமாகவும், முழுமையாகவும் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் அரசு கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் மருத்துவ ஆவணத் துறைகளை ஏற்படுத்த ஒப்புதல் வழங்கியிருக்கிறது. அவைகள் தற்சமயம் இயங்கி வருகின்றன.

1. அரசு பொது மருத்துவமனை, சென்னை.
2. அரசு ராஜாஜி மருத்துவமனை, மதுரை.
3. குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.
4. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.
5. அரசு மகளிர் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.
6. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு.
7. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.
8. அரசு கண் மருத்துவமனை, சென்னை.
9. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.
10. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.
11. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை.
12. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத் தூர்.
13. அரசு காச நோய் மருத்துவம் மற்றும் நலம்பேண் நிலையம் 1, தாம்பரம்.
14. ராஜா சர். இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை.

15. அரசு திருவொற்றீசுவரர் காசநோய் மருத்துவமனை, சென்னை.

16. அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.

17. மன இயல் மருத்துவ மனை, சென்னை.

1980-81 ஆம் ஆண்டில், சென்னை அரசு கஸ்தூரிபாய் காந்தி பெண்கள்-குழந்தைகள் மருத்துவமனையில் ஒரு மருத்துவ ஆவணத் துறையை ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது.

5. மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் (i) படுக்கைகளின் எண்ணிக்கை.

மாநிலத்தில் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த 23 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளும், மருத்துவ நிலையங்களும் இருக்கின்றன. இவைகளின் பட்டியல் பிற்சேர்க்கை iii -ல் தரப்பட்டுள்ளது. 1978-79, 1979-80 ஆம் ஆண்டுகளில் பல்வேறு மருத்துவமனைகளின் மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை பற்றிய விவரம் பிற்சேர்க்கை iv -ல் தரப்பட்டுள்ளது. 1978-79-ல் அனைத்து மருத்துவமனைகளிலும் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 13,800 ஆக இருந்தது. அது 1979-80-ல் 14,202 ஆக உயர்ந்திருக்கிறது. 1980-81 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் 60 படுக்கைகள் சேர்க்கப்பட இருக்கின்றன.

(1) அரசு ராஜாஜி மருத்துவமனை, மதுரை—30 படுக்கைகள்.

(2) அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி—30 படுக்கைகள்.

(i) புறநகர் மருத்துவமனைகள்.

சென்னை மாநகரின் புறநகர்ப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு மருத்துவப் பணிகளை வழங்குவதற்கு கருதப்பட்ட 5 புறநகர் மருத்துவமனைகளில், கே. கே. நகர், அண்ணா நகர் மற்றும் தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள 3 மருத்துவமனைகள் 100 படுக்கைகளை கொண்டு தற்சமயம் இயங்கி வருகின்றன. 1979-80 ஆம் ஆண்டில் தண்டையார்பேட்டை, அண்ணா நகர் ஆகிய இடங்களில் உள்ள புறநகர் மருத்துவமனைகளில் 21.98 இலட்ச ரூபாய் செலவில் பணியாளர்களை நியமிக்கவும், மருந்துகள், உணவுப் பொருட்கள் மருத்துவமனையின் ஏனைய தேவைப் பொருட்கள் மேசை, நாற்காலி சாமான்கள், பீங்கான் பாண்டங்கள், துணிகள் முதலியவற்றை வாங்குவதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. பெரம்பூர், தென் சென்னை ஆகிய இடங்களில் கருதப்பட்டிருக்கும் மருத்துவமனைகளை ஆரம்பிக்க விரைவான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.



(iii) கே. கே. நகர் புனர்வாழ்வு மற்றும் செயற்கை உறுப்பு பொருத்தும் நிலையம்.

1979-80 ஆம் ஆண்டில் புதிதாக இயங்கிவரும் சென்னை கே. கே. நகர் புனர்வாழ்வு மற்றும் செயற்கை உறுப்பு பொருத்தும் நிலையத்திற்காக ரூ. 6.00 இலட்சம் செலவில் மருத்துவக் கருவிகள், மேசை, நாற்காலி போன்ற பொருட்கள் வாங்க அனுமதி வழங்கியிருக்கிறது.

(iv) வாய் பேசா காது கேளாதோர் புனர்வாழ்வு நிறுவனம் ஒன்று சென்னை அரசு பொது மருத்துவமனையில் 4—7—1980 முதல் செயல்படத் துவங்கியுள்ளது.

6. மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

(i) மருத்துவக் கருவிகள் வழங்குதல்.

1979-80 ஆம் ஆண்டில் பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூ. 57.95 இலட்சம் மதிப்புள்ள, முக்கியமான மருத்துவக் கருவிகள் வாங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவைகளின் பட்டியல் ஒன்று பிற்சேர்க்கை v -ல் தரப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு கீழ்க்கண்ட கருவிகள் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க கருதப்பட்டுள்ளது.

(1) அரசு ராஜா சர் இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனையில் ரூ. 0.92 இலட்சம் செலவில் வாஷிங் இயந்திரமும் ஹைடிரோ எக்ஸ்டிராக்டரும் வாங்குதல்.

(2) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையின் அறுவை சிகிச்சை துறைக்கு ரூ. 0.60 இலட்சம் செலவில் கோலோனஸ்கோப் கருவி வாங்குதல்.

(3) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஃபிலிம் சேன்ஜர்களை ரூ. 2.50 இலட்சம் செலவில் வாங்குதல்.

(ii) கட்டிடத் திட்டங்கள்.

ரூ. 44.60 இலட்சம் செலவில் கட்டப்பட்ட கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு அவைகள் 1979-80 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவைகளின் பட்டியல் பிற் சேர்க்கை -ல் தரப்பட்டுள்ளது.

ரூ. 53.82 இலட்சம் செலவில் கட்டிடங்கள் கட்டப்பட்டு அவைகள் வெகு விரைவில் செயல்படத் தொடங்க இருக்கிறது. இவைகளின் பட்டியல் பிற்சேர்க்கை vii-ல் தரப்பட்டுள்ளது.

ரூ. 192.12 இலட்சம் செலவில் கட்டிடப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவைகள் பூர்த்தி அடைந்ததும் செயல்படத் தொடங்கும். இவைகளின் பட்டியல் பிற்சேர்க்கை VIII-ல் தரப்பட்டுள்ளது.

1980-81 ஆம் ஆண்டில் 36.92 இலட்சம் செலவில் 10 கட்டிடத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க கருதப்பட்டுள்ளது. இக் கட்டிடத் திட்டங்களின் பட்டியல் பிற்சேர்க்கை ix -ல் தரப்பட்டுள்ளது.

**7. கிங் நிறுவனம், கிண்டி.**

கிங் நிறுவனம், கிண்டி ஒரு பெரும் சுகாதார ஆய்வுக்கூடமாக மட்டுமல்லாமல் கல்வி-ஆராய்ச்சி நிலையமாகவும் செயல்படுகிறது. இந்நிறுவனத்தில் உறையவைத்து உலர வைக்கும் அம்மைப்பால், காலரா, டைபாயிட், நோய் தடுக்கும் நோயை குணப்படுத்தும் மருந்துகளும் அம்மைப்பால் இசிவு நோய்த் தடுப்பு மருந்து, விலங்குகளின் குருதி நிணநீர் ஆகியவையும் தயாரிக்கப்படுகின்றன. இந்நிறுவனம் காலரா, டைபாயிட் முதலிய நோய்த்தடுப்பு மருந்துகளை பல மாநிலங்களுக்கு வழங்கி அதற்கான செலவுத் தொகையைப் பெற்று வருகிறது. வெறிநாய்க்கடியின் நச்சு அகற்றுகிற மருந்துக்கு அதிகத் தேவை உள்ளபடியால் அம்மைப்பால் தயார் செய்வதற்குப் பதிலாக வெறிநாய்க்கடியின் நச்சு அகற்றுகிற மருந்தினைத் தயாரிக்கத் துவங்கியிருக்கிறது.

**கிண்டி கிங் நிறுவனத்தில் மேம்பாடுகள்.**

1979-80 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு ரூ. 1.88 இலட்சம் செலவில் பல்க் ஹை பிரஸ்ஸர் ரெக்டாங்குலர் ஸ்டெரிலைசர் கருவியினை வாங்க ஒப்புதல் வழங்கியிருக்கிறது. 1980-81 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு கீழ்க்கண்ட கருவிகளை வாங்க கருதப்பட்டிருக்கிறது:—

(1) ரூ. 1.00 இலட்சம் செலவில் அல்ட்ரா காபினெட் மைனஸ் 70 டிகிரி சி மற்றும் அக்செஸ்ஸரிஸ் வாங்குதல்.

(2) ரூ. 2.50 இலட்சம் செலவில் மத்திய இரத்த வங்கிக்கு உறைய வைத்து உலரவைக்கும் பிளாஸ்மா யூனிட் வாங்குதல்.

(3) ரூ. 1.30 இலட்சம் செலவில் ரெவ்கோ மைனஸ் 70 டிகிரி சி டீப் ஃப்ரீஜர் வாங்குதல்.

1979-80 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் அடித்தளத்தில் உள்ள Prophy lactic Vaccine செக்சனின் அனைத்து அறைகளையும் ரூ. 2.42 இலட்சம் செலவில் சீர்வளிப்படுத்தும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது.





1980-81 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

(1) ரூ. 6.78 இலட்சம் செலவில் 250 கேவிஏ ஆல்டர்னேடர் செட் (மின் உற்பத்திக் கருவி) பொருத்துதல்.

(2) ரூ. 0.80 இலட்சம் செலவில் இரண்டு கோபர் கேஸ் பிளான்ட் கட்டுதல்.

## III மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலத்துறை.

### 1. மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவமனைகள்.

### (i) மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி கோயம்புத்தூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு பெரியார் பெயரில் ஒரு தனி மாவட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதன் விளைவாக, தற்சமயம் திருப்பூரில் இயங்கி வருகின்ற வட்டத் தலைமையிட மருத்துவமனையை உயர்நிலைப்படுத்தி கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ஒரு புதிய மாவட்டத் தலைமையிட மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டது. மேலும், தற்சமயம் ஈரோட்டில் இயங்கி வருகின்ற மாவட்டத் தலைமையிட மருத்துவமனையை பெரியார் மாவட்டத்துக்கு வைத்துக்கொள்ளப்பட்டது. எனவே தற்சமயம் மாநிலத்தில் 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் 4,631 படுக்கைகளுடன் இயங்கி வருகின்றன.

1979-80 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்பட்ட படுக்கைகளின் விவரங்கள் கீழே தரப்படுகின்றன:

| | அதிகரிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, தர்மபுரி. | 22 |
| 2. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, திண்டுக்கல். | 20 |
| 3. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, தூத்துக்குடி. | 10 |
| 4. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, நாகர்கோவில். | 10 |

| | அதிகரிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 5. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, இராமநாதபுரம். | 10 |
| 6. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, திருப்பூர். | 104 |
| மொத்தம் | 176 |

நோயாளிகளுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் முழு விபரத்தைப்பற்றிய ஆவணங்களை துல்லியமாகவும் முழுமையாகவும் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் 1979-80 ஆம் ஆண்டு அரசு சேலம், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய 4 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் மருத்துவ ஆவணத் துறைகளை ஏற்படுத்த ஆணை வழங்கியிருக்கிறது.

மாநில அரசு ஊழியர்களுக்கு விரிவாக்கப்பட்ட மருத்துவ வசதிகளை அளிக்கும் நோக்குடன் 1979-80 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்கண்ட மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள மருந்தகங்களை விரிவாக்க ஆணை வழங்கியிருக்கின்றது:—

(i) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, வேலூர்.

(ii) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, காஞ்சிபுரம்.

(iii) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, கடலூர்.

(iv) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி.

(v) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, புதுக்கோட்டை.

(vi) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திண்டுக்கல்.

(vii) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம்.

(viii) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, நாகர்கோவில்.

(ix) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, சேலம்.

(x) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, தர்மபுரி.



கட்டிடத் திட்டங்கள்:

1979-80 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்களுக்கு ஆணை வழங்கியிருக்கிறது :—

(1) திண்டுக்கல் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் வெளிப்புற நோயாளிப் பகுதி ஒன்றினை தனியாக ரூ. 2.00 இலட்சம் செலவில் கட்டுதல்.

(2) நாகர்கோவில் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் வெளிப்புற நோயாளிப் பகுதி, மகப்பேறுப் பகுதி ரூ. 14.65 இலட்சம் மொத்தச் செலவில் கட்டுதல்.

(3) நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் மின் உற்பத்திக் கருவிகளை ரூ. 6.16 இலட்சம் செலவில் பொருத்துதல்.

1980-81 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்க கருதப்பட்டுள்ளது :—

(1) தூத்துக்குடி, இராமநாதபுரம், கடலூர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் ரூ. 3.00 இலட்சம் செலவில் மின் உற்பத்திக் கருவிகளைப் பொருத்துதல் ;

(2) காஞ்சிபுரம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் இரட்டை அறுவை அரங்கத்தை ரூ. 2.00 இலட்சம் செலவில் சீர்வளிப் படுத்துதல்;

(3) திருச்சிராப்பள்ளி, சேலம், ஈரோடு, வேலூர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் ரூ. 32.00 இலட்சம் செலவில் அறுவை அரங்கங்களை சீர்வளிப்படுத்துதல்;

(4) இராமநாதபுரம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் ரூ. 8.49 இலட்சம் செலவில் தீவிர இருதய சிகிச்சை பிரிவு ஏற்படுத்துதல்;

(5) திண்டுக்கல் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் மையம் உள்ள அடித்தளத்தின் மேல் செவிலியர் தங்குமிடம் ரூ. 1.95 இலட்சம் செலவில் கட்டுதல்;

(6) புதுக்கோட்டை மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் நவீன சமையற் கட்டிடம் ஒன்றினை ரூ. 2.53 இலட்சம் செலவில் கட்டுதல்.

[1980 ஜூலை 22

**(ii) வட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள் :**

1979-80 ஆம் ஆண்டில் 7 வட்டத் தலைமையிடமில்லாத மருத்துவ மனைகள் அவைகளின் 130 படுக்கை வசதிகளுடன் வட்ட மருத்துவ மனைகளாக மாற்றப்பட்டுள்ளன. மேலும் கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் 174 படுக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன :—

| | அதிகரிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. அரசு மருத்துவமனை, திருமங்கலம் | 20 |
| 2. அரசு மருத்துவமனை, அறந்தாங்கி | 32 |
| 3. அரசு மருத்துவமனை, கூடலூர் | 40 |
| 4. அரசு மருத்துவமனை, குடியாத்தம் | 12 |
| 5. அரசு மருத்துவமனை, பழனி | 10 |
| 6. அரசு மருத்துவமனை, பெரியகுளம் | 10 |
| 7. அரசு மருத்துவமனை, ராஜபாளையம் | 10 |
| 8. அரசு மருத்துவமனை, சிவகெங்கை | 10 |
| 9. அரசு மருத்துவமனை, தென்காசி | 10 |
| 10. அரசு மருத்துவமனை, கோவில்பட்டி | 10 |
| 11. அரசு மருத்துவமனை, அருப்புக்கோட்டை | 10 |
| மொத்தம் | 174 |

இவைகளுடன் தற்சமயம் மாநிலத்தில் 116 வட்டத் தலைமையிட மருத்துவமனைகள், 5,987 மொத்த படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகின்றன. 1979-80 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்களுக்கு, ஆணை வழங்கியிருக்கிறது:—

(1) மேலூர், வாணியம்பாடி அரசு மருத்துவமனைகளில் வெளிப்புற நோயாளிப் பகுதி கட்டுதல்.

(2) மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டுதல்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு மருத்துவமனையில், 32 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டுதல்.

(4) ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் பிணப் பரிசோதனை கொட்டகை ரூ. 0.36 இலட்சம் செலவில் கட்டுதல்.



1980 ஜூலை 23]

(5) பழனி, பெரியகுளம், ராஜபாளையம், சிவகெங்கை, தென்காசி, கோயில்பட்டி, அரசு மருத்துவமனைகளில் 10 படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பணிகள் பிரிவு ரூ. 24.42 இலட்சம் செலவில் கட்டுதல்.

(6) அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் திருவாளர்கள் ஜெய விலாஸ் போக்குவரத்தினர் நன்கொடையாக வழங்கிய நிலத்தினைப் பெற்று வள்ளல் திரு. மனோகரன் அவர்களால் இலவசமாக அவசரப் பிரிவு ஒன்றைக் கட்டுதல்.

1980-81 ஆம் ஆண்டு, கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்களுக்கு ஆணை வழங்க கருதப்பட்டுள்ளது:—

(1) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையினை ரூ. 2 இலட்சம் செலவில் விரிவாக்குதல்.

(2) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவ மனையை ரூ. 5.50 இலட்சம் செலவில் விரிவாக்குதல்.

(3) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் அரசு மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட பிரிவு ரூ. 4 இலட்சம் செலவில் கட்டுதல்.

(4) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி அரசு மருத்துவமனையில் பணி மருத்துவர்கள் அறை ரூ. 0.61 இலட்சம் செலவில் கட்டுதல்.

**iii வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.**

1979-80 ஆம் ஆண்டில் 7 அரசு மருந்தகங்கள் மருத்துவமனைகளாக மாற்றப்பட்டுள்ளன. 114 படுக்கைகள் இம்மருத்துவமனைகளில் சேர்க்கப் பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் மேலும் 75 படுக்கைகள் கீழ்க்காணும் மருத்துவமனைகளில் அதிகரிக்கப்பட்டுள்ளன:—

| | அதிகரிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. அரசு மருத்துவமனை, குளச்சல் | 10 |
| 2. அரசு மருத்துவமனை, ஸ்ரீரங்கம் | 50 |
| 3. அரசு மருத்துவமனை, இலுப்பூர் | 15 |
| மொத்தம் .. | 75 |

இவைகளுடன் தற்சமயம் மாநிலத்தில் 109 வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகள், 2,087 மொத்த படுக்கைகளுடன் இயங்கி வருகின்றன. 1979-80 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்களுக்கு ஆணை வழங்கியிருக்கிறது:—

(1) சேலம் மாவட்டம், குமாரபாளையம் அரசு மருத்துவ மனையில் எக்ஸ்ரே தொகுதி கட்டுதல்.

(2) ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் ரூ. 2.98 இலட்சம் செலவில் பல் சிகிச்சைப் பிரிவு, பரிசோதனைக்கூடம், இரத்த சேமிப்பு வங்கி, மருத்துவ கிடங்கு, மருத்துவ அலுவலர்கள் தங்குமிடம் ஆகியவைகளுக்கு கட்டிடம் கட்டுதலும், அடித்தளத்தினை மட்டப்படுத்துதலும்.

(3) மதுரை மாவட்டம், சோழவந்தானில் புதிய மருத்துவமனைக் கட்டிடம் கட்டுதல்.

(4) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவியில் அரசு மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டுதல்.

(5) புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடியில் புதிய மருத்துவ மனை கட்டிடம் கட்டுதல்.

(6) இராமநாதபுரம் மாவட்டம், இளையான்குடியில் புதிய மருத்துவ மனை கட்டிடம் கட்டுதல்.

(7) தஞ்சாவூர் மாவட்டம், சித்தமல்லியில் புதிய மருத்துவமனை கட்டிடம் கட்டுதல்.

1980-81 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்களுக்கு ஆணை வழங்க கருதப்பட்டுள்ளது :—

(1) வத்தலக்குண்டு அரசு மருத்துவமனையை ரூ. 2.60 இலட்சம் செலவில் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல்.

(2) பள்ளிபாளையத்தில் ரூ. 8.50 இலட்சம் செலவில் புதிய மருத்துவ மனைக் கட்டிடம் கட்டுதல்.

(3) வட ஆற்காடு மாவட்டம் சோளிங்கர் அரசு மருத்துவ மனையில் ரூ. 4.00 இலட்சம் செலவில் 20 படுக்கைகள் கொண்ட பிரிவு, அறுவை அரங்கம், பிரசவ அறை, பிணப் பரிசோதனை கொட்டகை கட்டுதல்.

(4) இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் ரூ. 4.00 இலட்சம் செலவில் புதிய மருத்துவமனை கட்டிடம் கட்டுதல்.



(5) மதுரை மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் ரூ. 3.20 இலட்சம் செலவில் புதிய மருத்துவமனை கட்டிடம் கட்டுதல்.

(6) இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் பணியாளர் தங்குமிடம் கட்டுதல்.

அரசு மருந்தகங்களுக்கு மேம்பாடுகள்:—

தற்சமயம் மாநிலத்தில் 184 அரசு மருந்தகங்கள் 230 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகின்றன. 1979-80 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அரசு ஆணை வழங்கியுள்ளது :—

(1) கோயம்புத்தூர் மாவட்டம், அரசூரில் அரசு மருந்தகம் திறத்தல்.

(2) திருச்சிராப்பள்ளி மாவட்டம், குணமங்கலத்தில் ஒரு அரசு மருந்தகம் திறத்தல்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டிணத்தில் அரசு மருந்தகம் ஒன்று திறத்தல்.

(4) தஞ்சாவூர் மாவட்டம், நீருமலையில் அரசு மருந்தகம் ஒன்று திறத்தல்.

(5) தென்னாற்காடு மாவட்டம், கல்ராயன் மலையில் அரசு மருந்தகம் ஒன்று திறத்தல்.

(6) வடாற்காடு மாவட்டம், ஏலகிரி மலையில் அரசு மருந்தகம் ஒன்று திறத்தல்.

(7) கன்னியாகுமரி மாவட்டம், தாத்தூரில் ரூ. 1 இலட்சம் செலவில் அரசு மருந்தக கட்டிடம் கட்டுதல்.

(8) செங்கற்பட்டு மாவட்டம், ஊத்துக்கோட்டையில் ரூ. 2 இலட்சம் செலவில் அரசு மருந்தக கட்டிடம் கட்டுதல்.

(9) தஞ்சாவூர் மாவட்டம், மங்கநல்லூரில் ரூ. 2 இலட்சம் செலவில் அரசு மருந்தக கட்டிடம் கட்டுதல்.

(10) மனாமதுரையில் ரூ. 8.30 இலட்சம் செலவில் 24 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைக் கட்டிடம் கட்டுதல்.

1980-81 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஆணை வழங்க கருதப்பட்டுள்ளது:—

(1) திருநெல்வேலி மாவட்டம், விளாத்திகுளம் அரசு மருந்தகத்தில் ரூ. 8.50 இலட்சம் செலவில் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல்.

(2) தஞ்சாவூர் மாவட்டம், கீவளூர் அரசு மருந்தகத்தில் ரூ. 1.46 இலட்சம் செலவில் சிறிய அறுவை அரங்கம், சமையற்கூடம் கொண்ட பத்து படுக்கைகள் கொண்ட பிரசவப் பிரிவு கட்டுதல்.

(3) கொத்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த மறைந்த திரு. காமாட்சி பிள்ளை அவர்கள் நன்கொடையாக வழங்கிய கட்டிடம், 6 மேசை நாற்காலி மற்றும் . 90,000 ரொக்கப் பணம் இவைகளை ஏற்றுக்கொண்டு இராமநாதபுரம் மாவட்டம் கொத்தமங்கலத்தில் 8 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை ஒன்று திறத்தல்.

(V எக்ஸ்-ரே கருவிகள்.

1979-80 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அரசு ஆணை வழங்கியுள்ளது:—

(1) திருச்சிராப்பள்ளி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் ரூ. 1.20 இலட்சம் செலவில் 100 எம்.ஏ. எக்ஸ்-ரே பிரிவு ஏற்படுத்துதல்

(2) தூத்துக்குடி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் ரூ. 1.50 இலட்சம் செலவில் 200 எம். ஏ. எக்ஸ்-ரே பிரிவு ஏற்படுத்தல்.

(3) திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை அரசு மருத்துவ மனையில் ரூ. 1.20 இலட்சம் செலவில் 100 எம்.ஏ. எக்ஸ்-ரே பிரிவு ஏற்படுத்துதல்.

(4) தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் அரசு மருத்துவ மனையில் ரூ. 0.70 இலட்சம் செலவில் 50 எம்.ஏ. எக்ஸ்-ரே பிரிவு ஏற்படுத்தல்.

(5) புதுக்கோட்டை மாவட்டம் வளையப்பட்டி அரசு மருத்துவ மனையில் ரூ. 1.20 இலட்சம் செலவில் 100 எம்.ஏ. எக்ஸ்-ரே பிரிவு ஏற்படுத்தல்,

1980-81 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் ரூ. 1.35 இலட்சம் செலவில் 200 எம்.ஏ எக்ஸ்-ரே பிரிவு ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது.



(vi ) சிறப்புத் துறைகளை ஏற்படுத்துதல்.

1. இரத்த சேமிப்பு வங்கிகள்.

அரசு மருத்துவ நிலையங்களில் மருத்துவ சிகிச்சைக்காகவும், அறுவை சிகிச்சைக்காகவும், பிரசவத்திற்காகவும் வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருப்பதால், இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்துதல் மிக அவசியமாகும். மேலும் விபத்துக்கள் மற்றும் அவசரப்பணிகள் என்ற புதிய திட்டத்தினை செயல்படுத்தவும் இரத்தசேமிப்பு வங்கி ஏற்படுத்துவது அத்தியாவசியமாகும். தொண்டு நிறுவனங்களின் மூலம் மனித இரத்தத்தின் வழங்கலைப் பெருக்குவதற்காக, வெளிநாடுகளில் மட்டும் தற்சமயம் அளிக்கப்படுகின்ற கீழ்க்கண்ட சலுகைகளை, இம் மாநிலத்தில், தானாக முன்வந்து இரத்ததானம் செய்கிறவர்களுக்கு அரசு விரிவுபடுத்தியிருக்கிறது:—

(1) தாய்லாந்தில் உள்ளதுபோல, 7 முறை தானாக முன்வந்து இரத்த தானம் செய்கிறவர்களிடமிருந்து, அவர்கள் அரசு மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் நேரத்தில், மருத்துவ செலவுத்தொகை குறைவாக வசூலிக்கப்படும்.

(2) இரத்ததானம் செய்யும் நாள் சிறப்பு தற்செயல் விடுப்பு நாளாக எடுத்துக்கொள்ளப்படும்.

1978-79 வரை, மாநிலத்தில் பல்வேறு அரசு மருத்துவ மனைகளில் 43 இரத்த சேமிப்பு வங்கிகள் ஏற்படுத்தப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டு, கீழ்க்கண்ட இடங்களில் மேலும் 13 இரத்த சேமிப்பு வங்கிகளை ஏற்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது:—

1. அரசு மருத்துவமனை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டம்.
2. அரசு மருத்துவமனை, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.
3. அரசு மருத்துவமனை, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம்.
4. அரசு மருத்துவமனை, அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
5. அரசு மருத்துவமனை, பெரியகுளம், மதுரை மாவட்டம்.
6. அரசு மருத்துவமனை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டம்.
7. அரசு மருத்துவமனை, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.
8. அரசு மருத்துவமனை, மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்.

9. அரசு மருத்துவமனை, விருத்தாச்சலம், தென்னாற்காடு மாவட்டம்.

10. அரசு மருத்துவமனை, தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

11. அரசு மருத்துவமனை, இராசபாளையம், இராமநாதபுரம் மாவட்டம். மாவட்டம்.

12. அரசு மருத்துவமனை, பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

13. அரசு மருத்துவமனை, ஓசூர், தர்மபுரி மாவட்டம்.

1980-81 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட இடங்களில் இரத்த சேமிப்பு வங்கிகள் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது:—

1. அரசு மருத்துவமனை, வாணியம்பாடி, வடாற்காடு மாவட்டம்.

2. அரசு மருத்துவமனை, உளுந்தூர்பேட்டை, தென்னாற்காடு மாவட்டம்.

### 2. பல் சிகிச்சைப் பிரிவுகள்.

தற்சமயம் 88 பல் சிகிச்சைப் பிரிவுகள் மாநிலத்திலுள்ள பல்வேறு அரசு மருத்துவமனைகளில் இயங்கி வருகின்றன. 1980-81 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் பல் சிகிச்சைப் பிரிவுகள் திறக்க கருதப்பட்டுள்ளது:—

1. அரசு மருத்துவமனை, சீர்காழி, தஞ்சாவூர் மாவட்டம்.
2. அரசு மருத்துவமனை, வாணியம்பாடி, வடாற்காடு மாவட்டம்.
3. அரசு மருத்துவமனை, கம்பம், மதுரை மாவட்டம்.
4. அரசு மருத்துவமனை, விருத்தாச்சலம், தென்னாற்காடு மாவட்டம்.
5. அரசு மருத்துவமனை, திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.

### 3. முடநீக்கியல் சிகிச்சைப் பிரிவுகள்.

1978-79 வரை மாநிலத்தில் உள்ள பல்வேறு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 10 முடநீக்கியல் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டு, நாகர்கோயில் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில், முடநீக்கியல் சிகிச்சைப் பிரிவு ஒன்றினை ஏற்படுத்த ஆணை வழங்கியுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் முடநீக்கியல் சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது:—

1. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, தூத்துக்குடி.
2. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, தர்மபுரி.
3. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, காஞ்சிபுரம்.
4. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, திருப்பூர்.
5. அரசு மருத்துவமனை, ஹோசூர், தர்மபுரி மாவட்டம்.



### 4. காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவுகள்.

1978-79 ஆம் ஆண்டுவரை மாநிலத்தில் உள்ள பல்வேறு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 12 காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்த ஆணை வழங்கியுள்ளது:—

1. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, புதுக்கோட்டை.

2. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, உதகமண்டலம்.

1980-81 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் இடங்களில் காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது:—

1. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திருப்பூர்.

2. அரசு மருத்துவமனை, திருவண்ணாமலை, வட ஆற்காடு மாவட்டம்.

3. அரசு மருத்துவமனை, குன்னூர், நீலகிரி மாவட்டம்.

4. அரசு மருத்துவமனை, பழனி, மதுரை மாவட்டம்.

5. அரசு மருத்துவமனை, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

### 5. பால்வினை நோய் சிகிச்சைப் பிரிவுகள்.

1978-79 ஆம் ஆண்டுவரை மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசு மருத்துவமனைகளில் 18 பால்வினை நோய் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் பால்வினை நோய் சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது:—

1. அரசு மருத்துவமனை, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

2. அரசு மருத்துவமனை, உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.

3. அரசு மருத்துவமனை, பழனி, மதுரை மாவட்டம்.

4. அரசு மருத்துவமனை, திருவண்ணாமலை, வட ஆற்காடு மாவட்டம்.

5. அரசு மருத்துவமனை, கரூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

1980-81 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட இடங்களில் பால்வினை நோய் சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்த கருதப்பட்டுள்ளன :—

1. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திருப்பூர்.

2. அரசு மருத்துவமனை, துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. அரசு மருத்துவமனை, ஹோசூர், தர்மபுரி மாவட்டம்.

4. அரசு மருத்துவமனை, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்.

### 6. கண் சிகிச்சைப் பிரிவுகள்.

1978-79 ஆம் ஆண்டுவரை, மாநிலத்தில் பல்வேறு அரசு மருத்துவ மனைகளில் 14 கண் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட இடங்களில் கண் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது:—

1. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, தர்மபுரி.

2. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, நாகப்பட்டினம்.

1980-81 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட இடங்களில் கண் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது:—

1. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திருப்பூர்.
2. அரசு மருத்துவமனை, திருப்பத்தூர், வட ஆற்காடு மாவட்டம்.
3. அரசு மருத்துவமனை, சிதம்பரம், தென் ஆற்காடு மாவட்டம்.
4. அரசு மருத்துவமனை, நாமக்கல், சேலம் மாவட்டம்.
5. அரசு மருத்துவமனை, ஹோசூர், தர்மபுரி மாவட்டம்.
6. அரசு மருத்துவமனை, தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

### 7. மனநோய் சிகிச்சைப் பிரிவுகள்.

மாநிலத்தில் உள்ள பல்வேறு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை களில் தற்சமயம் 11 மனநோய் சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. 1980-81 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட இடங்களில் மனநோய் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது:—

1. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, தர்மபுரி.

2. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, உதகமண்டலம்.

3. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திருப்பூர்.

4. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, நாகர்கோவில்.



### 8. சிசு நோய் சிகிச்சைப் பிரிவுகள்.

1978-79 ஆம் ஆண்டுவரை, மாநிலத்தில் உள்ள பல்வேறு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 14 சிசு நோய் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் சிசு நோய் சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது:—

1. அரசு மருத்துவமனை, மாயவரம், தஞ்சாவூர் மாவட்டம்.

2. அரசு மருத்துவமனை, உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.

3. அரசு மருத்துவமனை, விழுப்புரம், தென் ஆற்காடு மாவட்டம்.

4. அரசு மருத்துவமனை, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

5. அரசு மருத்துவமனை, திருப்பத்தூர், வட ஆற்காடு மாவட்டம்.

1980-81 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட இடங்களில் சிசுநோய் சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது:—

1. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திருப்பூர்.

2. அரசு மருத்துவமனை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டம்.

3. அரசு மருத்துவமனை, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.

4. அரசு மருத்துவமனை, ஹோசூர், தர்மபுரி மாவட்டம்.

5. அரசு மருத்துவமனை, கரூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

### (v) ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்றுதல்.

1979-80 ஆம் ஆண்டில் நாகூரில் உள்ள நகராட்சி மருந்தகத்தையும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வாங்கல், வட ஆற்காடு மாவட்டத்தில் பேர்ணாம் பேட்டை, மதுரை மாவட்டத்தில் மண்ணாடிமங்கலம் ஆகிய இடங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களையும் அரசு மருந்தகங் களாக மாற்றும் படி அரசு ஆணை வழங்கியுள்ளது. இவைகளுடன், 136 நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்ற அரசு ஆணை வழங்கியுள்ளது. இவைகளில் இதுவரை 127 மருந் தகங்கள் ஏற்கனவே அரசால் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. ஏனைய மருந்தகங்கள் மேற்கொள்ளப்படும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளது.

## (viii) அரசு இலவச கண் சிகிச்சை முகாம் திட்டம்.

புரை நோயாலும் ஏனைய கண் நோய்களாலும் பார்வையிழந்திருக்கும் ஏழை மக்களுக்கு மருத்துவ நிவாரணம் அளிக்கும் நோக்கத்துடன் அரசு இலவச கண் சிகிச்சை முகாம் திட்டம் 1972 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தொடங்கப்பட்டது. 1980-81 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1979-80 ஆம் ஆண்டில், 50 முகாம்களில் 10,887 புரை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. 65,769 பேர்கள் வெளிப்புற நோயாளிகளாக சிகிச்சை பெற்றுள்ளனர். 6,314 பேர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமுலுக்கு வந்த திருத்தப்பட்ட நடைமுறையின்படி புரை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் அறுவை செய்து கொண்ட ஆறு வாரங்களுக்குப் பிறகு பரிசோதிக்கப்படுகிறார்கள். பரிசோதிக்கப்பட்ட பிறகு 3 வாரங்களுக்குள் ரூ. 20 மதிப்பு மிகாமல் மூக்கு கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன.

## (ix) தொற்று நோய்கள் கட்டுப்பாடு.

### 1. தொழு நோய் கட்டுப்பாடு திட்டம்.

தொழு நோயை பொருத்தளவு இந்தியாவிலே மிக அதிகமான அளவில் தொழு நோய் பாவியுள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். சராசரியாக தொழு நோய் ஆயிரத்தில் 10 முதல் 40 பேர்களிடம் காணப்படுகிறது. தொழு நோயாளிகளைக் கண்டு பிடித்து சிகிச்சை அளிப்பதுதான் தொழு நோய் கட்டுப்பாடு திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் தேசிய தொழு நோய் கட்டுப்பாடு திட்டத்தின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரை 59 தொழுநோய் கட்டுப்பாடு பிரிவுகளும், (132) எஸ்.இ.டி. பிரிவுகளும், 48 நகர தொழுநோய் மையங்களும், 2 தொழு நோய் நலம்பேண் நிலையங்களும், ஒரு தொழுநோய் சிகிச்சை பிரிவும், 9 அறுவை சிகிச்சைப் பிரிவுகளும், 15 தற்காலிக சிகிச்சைப் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. தற்காலிக சிகிச்சைப் பிரிவுகள் 10 கட்டப்பட்டு வருகின்றன. 12 மாவட்ட தொழு நோய் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.





இத்திட்டத்தின்கீழ் ஆண்டுவாரியாக பரிசோதனை செய்யப்பட்டவர்களின் விவரங்களும், புதிய நோயுண்டு என கண்டறியப்பட்டவர்களின் விவரங்களும் ஆயிரத்திற்கு கீழே தரப்படுகின்றன :—

| ஆண்டு | பரிசோதனை செய்யப்பட்டவர்கள் | புதிய நோயுண்டு என் கண்டறியப் பட்டவர்கள் | வீதம் (ஆயிரத்திற்கு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (இலட்சத்தில்) | | (இலட்சத்தில்) |
| 1974 | 34·6 | 0·45 | 13·0 |
| 1975 | 47·0 | 0·58 | 12·3 |
| 1976 | 79·4 | 1·09 | 13·7 |
| 1977 | 107·1 | 1·11 | 10·4 |
| 1978 | 103·95 | 0·58 | 5·6 |
| 1979 | 92.83 | 0·41 | 4·4 |

இந்திய அரசு மாநிலவாரியாக சாதிக்க வேண்டிய புதிய திட்டங்களின் இலக்கினைக் குறித்து நிதி உதவியும் வழங்குகிறது. மேலும் 22 தற்காலிக சிகிச்சை பிரிவுகளும், 6 தொழுநோய் கட்டுப்பாடு பிரிவுகளும், 1 தொழுநோய் மறுவாழ்வு தேர்ச்சிப் பிரிவும் நடப்பாண்டில் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது. இரண்டு நகர தொழுநோய்ப் பிரிவுகளும், 6 மாவட்ட தொழுநோய் அலுவலர்களுடைய அலுவலகங்களும் உயர்நிலைப்படுத்த கருதப்பட்டுள்ளது. இது குறித்து செலவழிக்கப்படுகின்ற பணம் 50 : 50 அடிப்படையில் இந்திய அரசும் மாநில அரசும் ஏற்றுக்கொள்ளும்.

பள்ளிகளில் 11 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பரிசோதனை செய்ய ஒப்பளிக்கப்பட்ட பள்ளி மருத்துவப் பரிசோதனை திட்டம் 1978-79 ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை செய்யப்பட்ட சாதனைகள் பின்வருமாறு:—

பரிசோதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை—16,23,638.

நோயிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை—21747.

## 2. காசநோய் கட்டுப்பாடு திட்டம்.

மாநிலத்தில் காசநோய் கட்டுப்பாடு திட்டம் கீழ்க்காணும் இலட்சியங்களை நிறைவேற்றும் நோக்குடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. சுகாதார நிலையங்களுக்கு வருகின்ற வெளிப்புற நோயாளிகளில் காசநோய் அறிகுறிகளுடன் காணப்படும் நோயாளிகளை அதிகபட்ச எண்ணிக்கையில் கண்டறிதல்.

2. கைக்குழந்தைகளுக்கும், குழந்தைகளுக்கும் பி.சி.ஜி. தடுப்பு ஊசி போட்டு காசநோய் வாராமல் பாதுகாப்பு அளித்தல்.

தேசிய காசநோய் திட்டத்தில் செயல்பிரிவு மாவட்ட காசநோய் திட்டமாகும், தற்சமயம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட காச நோய் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இம்மாவட்ட காச நோய் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், அரசு மருந்தகங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் காசநோயாளிகளுக்கு இலவச மருத்துவச் சிகிச்சை வசதிகள் அளிக்கப்படுகின்றன. இதுவரை 9.2 இலட்சம் காசநோயாளிகள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் 8 அரசு காசநோய் நலம் பேண் நிலையங்களும், 3 தனியார் காசநோய் நிறுவனங்களும் இருக்கின்றன. மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும், சில வட்ட மருத்துவமனைகளிலும் காசநோயாளிக்கென சில அவசர சிகிச்சை படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் மாநிலத்தில் 3,593 காசநோயாளிக்கென படுக்கைகள் இருக்கின்றன.

பி.சி.ஜி. தடுப்புத்திட்டம் காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் ஓர் அங்கமாகும். தமிழ் நாட்டில் 23 பி.சி.ஜி. குழுக்கள் இயங்கி வருகின்றன கிராமங்களிலும் நகரங்களிலும் இந்த குழுக்கள் வீட்டுக்கு வீடு சென்று, இளம் வயதில் உள்ள குழந்தைகளுக்கு பி.சி.ஜி. தடுப்பூசி போட்டு வருகின்றன. இதுவரை 146.6 இலட்சம் பேர்களுக்கு பி.சி.ஜி. தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இரண்டு காசநோய் விளம்பரப்பிரிவுகள் இருக்கின்றன. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், குடிசைக் குடியிருப்புகளிலும் காச நோய் பற்றி கூட்டங்களும் திரைப்படக் காட்சிகளும் நடத்தி காசநோய் வந்துள்ளதை விரைவில் கண்டு அறிந்து சிகிச்சை அளிக்கப்பட்டுவரும் வசதிகளை பொதுமக்கள் அறியும்படி செய்கின்றன.



1979-80 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காசநோய் சங்கத்தின் கூட்டு முயற்சியுடன் கிராமப்பகுதிகளிலும், குடிசைப்புறங்களிலும் 104 பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கூட்டங்களில் திரைப்பட காட்சிகளும் காட்டப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் 46 கல்வி நிலையங்களுக்கும் சென்று வரப்பட்டது.

மாநிலம் முழுவதும் உள்ள பீடி மற்றும் கைத்தறி நெசவாளர்களிடையே காணப்படும் காசநோய் தன்மையைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் ஒரு தெளிவமைந்த சுகாதார பாதுகாப்புத் திட்டம் ஒன்றுக்கு ரூ. 36.45 இலட்சம் மொத்தச் செலவில் செயல்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி முழு மாநிலமும் 5 தொகுதிகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு தொகுதியும், ஒரு நடமாடும் மருத்துவச் சிகிச்சைப் பிரிவினையும், ஒரு மாஸ் மினியேச்சர் ரேடியோகிராபி பிரிவினையும் கொண்டு இருக்கும். இந்த ஐந்து தொகுதிகளும் சேலம், ஈரோடு, திண்டுக்கல், தூத்துக்குடி, வேலூர் தலைமை இருப்பிடங்களாகக் கொண்டு இயங்கும்.

## (X) தனியார் மருத்துவ நிலையங்களுக்கு மானிய உதவி.

தனியார் மன்றங்கள், கூட்டமைப்புக்கள், சங்கங்கள், சமயப்பணி மன்றங்கள் போன்றவற்றின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்ற மருத்துவ நிறுவனங்களுக்கு மானிய உதவி அளிக்கப்படுகின்றது. அரசால் வழங்கப்படுகின்ற பல்வேறு வகைப்பட்ட மானியங்கள் விவரம் பின்வருமாறு :—

### 1. தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு பராமரிப்பு மானியம்.

மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநல இயக்குநரின் பரிந்துரையின் பேரிலும், தணிக்கை செய்யப்பெற்ற கணக்கு விவர அறிக்கைகள் தாக்கல் செய்த பின்னரும், மானியங்கள் வழங்கப்படுவதற்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்துள்ளதாக ஆய்வு அதிகாரிகள் அறிவித்த பின்னருமே இந்த மானியங்கள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசிடமிருந்து பராமரிப்பு மானியங்களை 38 நிறுவனங்கள் பெற்று வருகின்றன. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 21 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. பெருந்துறை காசநோய் நலம்பேண் நிலையத்திற்கு வழங்கப்படுகின்ற மானியத்தொகை ரூ. ● இலட்சத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

## 2. கட்டிட மானியங்கள்.

மருத்துவ பணிகளுக்கென கட்டிடங்கள் கட்டுவதற்காக ஒவ்வொரு கட்டிடப் பணிக்கும் ஆகின்ற மொத்த மதிப்பீட்டு செலவில் பாதியளவிற்கு தனியார் நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன ; ஒவ்வொரு கட்டிடத்தைப் பொறுத்தவரையில், வழங்கப்படுகின்ற இம்மானியத்தொகை அரசு வரையறுத்த குறிப்பிட்ட உயர் அளவிற்கு உட்பட்டே இருக்கும். 1979-80 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு கட்டிட மானியம் வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது :—

| | | |
|---|---|---|
| 1. சுகாதார தொண்டு நிறுவனம், அடையாறு, சென்னை | ரூ. | 1,13,000 |
| 2. புற்றுநோய் நிறுவனம், அடையாறு, சென்னை | ரூ. | 2,60,700 |
| 3. உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு உதவிபுரியும் சங்கம், கோயம்புத்தூர் | ரூ. | 1,22,500 |
| மொத்தம் | ரூ. | 4,96,200 |

## 3. கருவிகள் மானியங்கள்.

கருவி வாங்கும் செலவில் பாதி தொகை கருவிகளுக்கென மானியங்களாக தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன. கருவிகளை நிறுவனங்கள் வாங்கிய பிறகும், வாங்கியதற்கான தணிக்கைச் செய்யப்பெற்ற கணக்கு விவர அறிக்கையை கொடுத்த பின்னரும், இம்மானியங்கள் வழங்கப்படுகின்றன. இதுவரை எந்நிறுவனமும் இம்மானியத் தொகையைப் பெற முன்வரவில்லை.

## 4. தனியார் தொழுநோய் நிறுவனங்களுக்கு தலைவீத மானியங்கள்.

தனியார் தொழுநோய் நிறுவனங்களுக்கு, தொழுநோயாளி ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 25 வீதத்திலும், தொழு நோயாளியை நம்பியுள்ள உடல்நலமுள்ள குழந்தை ஒவ்வொன்றுக்கும் ரூ. 12 வீதத்திலும் மானியங்கள் வழங்கப்படுகின்றன. தொற்றும் தன்மையுள்ள தொழுநோயாளிகளுக்கும் தொழுநோய் குணமாகி உறுப்புக்கள் செவ்வையான வடிவம் பெறுவதற்காக அறுவைசிகிச்சைப் பெற்றுவரும் தொழுநோயாளிகளுக்கும் குஷ்டினால் ஏற்படக்கூடிய புண்ணுக்கு சிகிச்சைபெறும் பொருட்டு சேர்க்கப்பட்டுள்ள தொழுநோய் தோற்றமுடைய ஆனால் தொழுநோய் சார்பில்லாத நோயாளிகளுக்கும் (Non-Lepromatous patients) சிகிச்சை அளித்து வரும் தொழுநோய் தொண்டு நிறுவனங்களுக்கு இம்மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசிடமிருந்து தலைவீத மானியங்கள் பெற்று வரும் தொழுநோய் தொண்டு நிறுவனங்களின் எண்ணிக்கை 11 ஆகும். 1979-80 ஆம் ஆண்டில் இந்நோக்கத்திற்காக ரூ. 4.49 இலட்சம் வழங்கப்பட்டது.



## 2. ஹோமியோபதி மருத்துவம்.

ஹோமியோபதி மருந்தகக்கல்வியும், ஹோமியோபதி மருத்துவ நடைமுறையும் 1971 ஆம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவ முறை மற்றும் ஹோமியோபதி மருத்துவ அலுவலர்கள் சட்டத்தின்படி செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இம்மாநிலத்தில் ஹோமியோபதி மருத்துவ முறைக்கு உத்வேகம் கொடுக்க வேண்டிய தேவையை உணர்ந்தும், அம் மருத்துவ முறையை மேம்படுத்துவதற்காகவும் அரசு ர்ஹோமியோபதி மருத்துவத்தை ஏற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவ முறையாக அங்கீகரித்துள்ளது. இச்சட்டத்தின் கீழ் ஹோமியோபதி மருத்துவ அலுவலர்களை பதிவு செய்வதற்காக ஹோமியோபதி மருத்துவக் குழு ஒன்று அமைக்கப்படுகிறது.

இம்மருத்துவ முறையை விரிவாக்கும் நோக்குடன், அரசு 25 படுக்கைகளுடன் கூடிய ஒரு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் கூடிய மருத்துவமனையை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடந்துவருகிறது. இந்நிறுவனத்தில் ஆண்டொன்றுக்கு சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 21 ஆகும். இக்கல்லூரி ஹோமியோபதி மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில், 6 மாத சுற்றிருப்பு பயிற்சியுடன் கூடிய நான்காண்டு பட்டயத் தகுதிபடிப்பு நடத்துகிறது. இப்படிப்பின் பாடத்திட்டங்கள் ஹோமியோபதி மருத்துவக்குழு அங்கீகரித்த பாடத்திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள அனைத்து மருத்துவ முறைகளுக்கு பொதுவான நோய் கண்டறியும் முறைகளும் ஏனைய அடித்தள விஞ்ஞான முறைகளும் இங்கு கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

1980-81 ஆம் ஆண்டில் சென்னை ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் உபயோகத்திற்காக பேருந்து ஒன்றுக்கு ஆணை வழங்க கருதப்பட்டுள்ளது.

திண்டுக்கல், சேலம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் இரண்டு ஹோமியோபதி மருத்துவச் சிகிச்சைப் பிரிவுகள் தற்சமயம் இயங்கி வருகின்றன. 1980-81 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் ஹோமியோபதி மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளை ஆரம்பிக்க கருதப்பட்டுள்ளது.

1. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, தூத்துக்குடி.
2. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம்.
3 அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, வேலூர்.
4. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, கடலூர்.
5. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, நாகப்பட்டினம்.
6. அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி.

### 3. குடும்பநலத் திட்டம்.

தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் செயல்படத் தொடங்கிய நாள் முதல் எவ்வித கட்டாயமோ அல்லது நிர்பந்தமோ இன்றி செயற்படுத்தப்பட்டு வருகிறது. குடும்பநலத் திட்டத்தின் மூலம் ஏற்கப்படுகின்ற சிறு குடும்ப நெறி பொருளாதார முன்னேற்றத்தையும், நல்வாழ்வுத் தரத்தையும் உயர்த்தும் என்பதை மக்கள் உண்மையில் உணர்ந்து இத்திட்டத்திற்கு தாங்களாகவே முன்வந்து ஆதரவு தருகின்றனர். மதத்தால் மாறுபடுபவர்கள் கூட இத்திட்டத்தால் ஒன்றுபட்டு அறுவை சிகிச்சைகள் செய்துகொள்ள முன்வருவதை தமிழகம் கண்டு கொண்டிருக்கிறது.

இத்திட்டத்தை நிறைவேற்றவும், நோக்கங்களை எய்தவும் மாநில நிலையிலிருந்து தொடங்கி, கிராம அளவு வரையிலான எல்லா நிலைகளிலும் நிறுவப்பட்ட அமைப்பு ஒன்று மாநில நல்வாழ்வுப் பணிகளின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகச் செயல்பட்டு வருகிறது. மாநில குடும்பநலக்கழகம், மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநல இயக்குநர் அலுவலகத்தின் ஒரு பிரிவாக செயல்படுகிறது. இது குடும்பநல தாய்—சேய் நலத்திட்டங்களின் பல்வேறு பணிகளைச் செயல்படுத்துகிறது என்பதோடு அவற்றிற்கு வழிகாட்டியாயும்



உள்ளது. கிராமப்புறங்களில் உள்ள தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் குடும்ப நலத் திட்டத்தின் இன்றியமையாத நோக்கங்களை மக்களுக்கு அறிவுறுத்தும் பணியைச் செய்கின்ற முக்கிய நிலையங்களாகச் செயல்படுகின்றன. தொடக்க நல்வாழ்வு நிலையம் மக்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல், பெண்களுக்கு கருத்தடை வளையம் பொருத்துதல், தாய்-சேய் நலப்பணிகள் ஆகிய பணிகளைச் செய்கின்றது. தொடக்க நல்வாழ்வு நிலையம் ஒவ்வொன்றிற்கும் 10,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை நிலையம் வீதம் துணை நிலையங்கள் உள்ளன. அத்துணை நிலையங்களின் பணிகளை துணைச்செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர்கள் கவனிக்கின்றனர். துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் ஒவ்வொருவரும் தத்தம் பகுதியில் தாய்-சேய் நலப்பணி குடும்பநலப்பணி ஆகியவற்றைக் கவனிக்கின்றனர்.

நகரப்பகுதிகளில், குடும்பநலப்பணிகளையும், தாய்-சேய் நலப்பணிகளையும் அங்குள்ள நகர்ப்பகுதி குடும்பநல நிலையங்கள் கவனிக்கின்றன. இவை அரசாலும் உள்ளாட்சி மன்றங்களாலும் தொண்டு நிறுவனங்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இந்திய அரசு வழங்க அனுமதித்துள்ள தொகை, தமிழ்நாடு அரசு வழங்கும் ஈட்டுத் தொகை பற்றிய விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும் தலைப்பும். | இந்திய அரசு | | தமிழ்நாடு அரசு | |
|---|---|---|---|---|
| | ஆண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை. | பெண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை. | ஆண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை. | பெண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூபாய் | ரூபாய் | ரூபாய் | ரூபாய் |
| 1. அறுவை சிகிச்சை செய்து கொள்ள ஒத்துக் கொண்டவருக்கு ரொக்க உதவித்தொகை. | 70 | 70 | 75 | 85 |
| 2. மருந்துகள், சுட்டுக் கட்டுதல் ஆகியவைகளுக்கான செலவு. | 10 | 15 | 1 | [illegible] |

| தொடர் எண்ணும் தலைப்பும். | இந்திய அரசு: ஆண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை. | இந்திய அரசு: பெண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை. | தமிழ்நாடு அரசு: ஆண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை. | தமிழ்நாடு அரசு: பெண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை. |
|---|---|---|---|---|
| (1) | (2) ரூபாய் | (3) ரூபாய் | (4) ரூபாய் | (5) ரூபாய் |
| 3. உணவுச் செலவு. | 5 | 20 | 5 | 20 |
| 4. போக்குவரத்துச் செலவு. | 5 | 5 | 5 | 5 |
| 5. பல்வகை நோக்கங்களுக்கான நிதி :— | 10 | 10 | — | — |
| (அ) குடும்ப நலத் திட்டத்தை ஏற்கும்படி ஊக்க மூட்டுபவர். | — | — | 10 | 10 |
| (ஆ) மருத்துவர். | — | — | 3 | 5 |
| (இ) மயக்க மருந்து கொடுப்பவர். | — | — | — | 3 |
| (ஈ) மருத்துவத் துணை பணியாளர்கள். | — | — | 2 | 2 |
| (உ) கருணைத் தொகை விந்துக்குழாய் இணைத்தல், சமூக ஊக்கத் தொகை அளித்தல், குடும்ப நலமுனைப்பு இயக்கம் நடத்துதல், அறுவைக் கருவிகள் ஆகியவற்றுக்காகும் செலவு. | — | — | *5 | — |
| மொத்தம் .. | 100 | 120 | 115 | 145 |

(*) ஆண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை, பெண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை, ஆகிய இரண்டுக்கும் இது பொருந்தும்.





கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டம் ;

1979-80-ம் ஆண்டில் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் பலமுறைகளுக்கு இந்திய அரசு நிர்ணயித்த அளவும், தமிழ்நாடு அரசு எய்தியுள்ள அளவும் பின்வருமாறு :—

| | 1979–80-ம் ஆண்டுக்கு இந்தியஅரசு நிர்ணயித்த் அளவு. | 1979–80-ம் ஆண்டு எய்திய அளவு. | விழுக் காடு |
|---|---|---|---|
| கருத்தடை அறுவை சிகிச்சை, | 2,82,000 | 1,45,521<br>ஆண்கள் 30,488<br>பெண்கள் 1,15,033 | 51.6% |
| கருத்தடை வளையம் பொருத்துதல், | 85,000 | 29,586 | 34.8% |
| மரபு முறையிலான கருத்தடைச் சாதனங்களைப் பயன் படுத்துதல். | 1,01,200 | 71,073 | 70.2% |

1979-80-ம் ஆண்டில் 45,077 மாத்திரைகள் நபர்களுக்கு வழங்கப்பட்டன.

தாய்சேய் நலத்திட்டம் :

தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் நோய்த்தடுப்பு உடல் நலன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அதிக கவனம் செலுத்துவதன் அவசியத்தை (குறிப்பாக தொற்று நோயிலிருந்து காக்க குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடுதல்) இந்திய அரசு வலியுறுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வகை நலப்பணியின் கீழும் 31-3-1980 வரை பயன் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கையினை கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்:—

| முறைகள். | 1979–80-ம் ஆண்டுக்கான இலக்கு. | 1979–80-ம் ஆண்டு அடைந்த அளவு. | விழுக் காடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. முதல்நிலை முத்தடுப்பு ஊசி. | 8,00,000 | 6,31,179 | 78.9% |
| 2. பேரளவு முத்தடுப்பு ஊசி, (Booscer) | 1,50,000 | 1,25,884 | 90.6% |

| முறைகள் | 1979–80–ம் ஆண்டுக்கான இலக்கு. | 1979–80–ம் ஆண்டு அடைந்த அளவு. | விழுக்காடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 3. தொண்டை அடைப்பான், நரம்பிசிவு நோய்த் தடுப்பூசி குத்தப் பெற்றவர்கள் (DT) பள்ளி சிறார்கள். | 17,00,000 | 6,21.912 | 36.6% |
| 4. நரம்பிசிவு நோய்த் தடுப்பூசி (கருவுற்றிருக்கும் பெண்கள்). TT | 5,00,000 | 3,31,590 | 66.3% |
| 5. தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்துணவின்மையால் ஏற்படும் ரத்தச் சோகையைத் தடுப்பதற்கான மருந்து (இரும்புச்சத்து நிறைந்த மாத்திரைகள்). | | | |
| தாய்மார்கள் — | 8,00,000 | 5,80,100 | 72·3% |
| குழந்தைகள் — | 8,00,000 | 6,10,733 | 76.3% |
| 6. வைட்டமின் 'ஏ' குறைவினால் குழந்தைகளுக்குக் கண் குருடாவதைத் தடுப்பதற்கான மருந்து (வைட்டமின் 'ஏ' கரைசல்). — | | | |
| குழந்தைகள் முதலாவது அளவு. (Dose) இரண்டாம் அளவு. | 19,00,000 | 15,82,367 | 83,3% |

**பிரிட்டிஷ் உதவித் திட்டம் :**

இத்திட்டத்தின்கீழ் வட்ட அளவில் உள்ள மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக் கூடத்தைக் கட்டுவதற்கும், 6 படுக்கைகளைக் கொண்ட பிரிவுகளைக் கட்டுவதற்கும் அவற்றிற்கான அறுவைச் சிகிச்சைக் கருவிகளை வாங்குவதற்கும், இன்னும், தொடக்க நல்வாழ்வு நிலையங்களில், தற்போதுள்ள மகப்பேறு அறைகளை அறுவைச் சிகிச்சைக் கூடங்களாக மாற்றுவதற்கும், அவற்றிற்கான அறுவை சிகிச்சை கருவிகளை வாங்குவதற்கும், பிரிட்டிஷ் அரசு உதவி புரிகிறது. இவ்வுதவி 1977-78, 1978-79 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு கிடைத்தன.





1978-79-ல் இத்திட்டத்தின்கீழ், 9 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்த தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்கான அறுவைச் சிகிச்சைக் கருவிகள் வாங்கப்பட்டன. மகப்பேறு அறைகளை அறுவை சிகிச்சைக் கூடங்களாக மாற்றும் பணியும் முடிவடைந்தது.

மகப்பேறுக்குப் பிறகு செய்யப்படும் கருத்தடை அறுவை சிகிச்சை.

இம்மாநிலத்தில் தற்போது மகப்பேறுக்குப் பிறகு செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சையை, கல்லூரி இணைந்த மருத்துவமனைகள் 9-ம், 2 தொண்டு நிறுவனங்களுக்கும், 13 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளும் செயல்படுத்தி வருகின்றன.

1978-79 ல் மகப்பேறுக்குப் பிறகு செய்யப்படும் கருத்தடை அறுவை சிகிச்சை திட்டத்தின்கீழ், புதுக்கோட்டை அரசினர் தலைமையிட மருத்துவமனையில், 10 படுக்கைகளைக் கொண்ட மகப்பேறுக்கு பிறகு செய்யப்படும் கருத்தடை அறுவை சிகிச்சைப் பிரிவையும், அறுவை சிகிச்சை அரங்கத்தையும் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. 1978-79-ல் ஆந்திர மகிள சபா மருத்துவமனையில், 10 படுக்கைகள் கொண்ட மகப்பேற்றுக்குப் பிறகு செய்யப்படும் கருத்தடை அறுவை சிகிச்சைப் பிரிவையும், அறுவை சிகிச்சை அரங்கத்தையும் கட்டுவதற்காக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1978-79-ம் ஆண்டு மத்திய அரசு கீழே கண்ட தொண்டு நிறுவனங்களில் மகப்பேற்றுக்குப் பின் செய்யப்படும் கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டத்தை விரிவு படுத்த அனுமதி வழங்கியுள்ளது. இந்த அரசும் இதற்கான அனுமதி அளித்துள்ளது.

(1) கிறிஸ்தவ மிஷன் மருத்துவமனை, மதுரை.

(2) கூளை மகப்பேறு மருத்துவமனை, சென்னை.

(3) குழந்தைகள் நல நிலையம், புளியந்தோப்பு, சென்னை.

(4) குழந்தைகள் நல நிலையம், வடபழனி, சென்னை.

(5) பெரியபட்டி மகப்பேறு மருத்துவமனை, சைதாப்பேட்டை, சென்னை.

(6) காந்தி கிராம் கஸ்தூரிபா மருத்துவமனை, காந்தி கிராமம், மதுரை மாவட்டம்.

மேலே 1-லிருந்து 5 வரை, குறிப்பிட்ட நிலையங்களில், அறுவை சிகிச்சை அரங்கு உட்பட 10 படுக்கைகள் கொண்ட பிரிவும், 6-ல் குறிப்பிட்ட நிலையத்தில் கருத்தடை அறுவை சிகிச்சைப் பிரிவை மட்டும் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு இதற்கான வேலைகள் தொடங்கப்படும்.

### கிராம குடும்பநலத் திட்ட நிலையங்களுக்கு கட்டிடம் கட்டுதல்.

1979-80 ஆம் ஆண்டு, 5 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் குடியிருப்புப் பகுதி உட்பட கட்டிடம் கட்டுவதற்கும், 2 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் கட்டவும், வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் நிலையங்களில் தொடக்க நல்வாழ்வு நிலைய இணைப்பகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும் ரூ. 18.45 இலட்சம் செலவு செய்ய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### தாய்களுக்கு (மருத்துவச்சிகள்) பயிற்சி அளித்தல்.

மருத்துவ மனைகளுக்குச் செல்லாமல் வீடுகளிலேயே மகப்பேறு பார்க்கும் ‘தாய்’ களுக்கு (மருத்துவச்சிகள்) இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1979-80-ல் 5,835 தாய்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 2,799 பேர்களுக்கு மகப்பேறு உபகரணப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு மத்திய அரசிடமிருந்து வந்தவுடன் வழங்கப்படும்.

### மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல்.

தாய்மார்கள் தொடர்ந்து கருவுருவதால் அவர்கள் உயிருக்கு ஆபத்து விளையும். ஆகவே, தொடர்ந்து கருவுருவதைத் தடுக்கும் வகையில் அவர்களுக்கு ஆலோசனை வழங்கி, கருவை கலைக்க உதவும் பொருட்டு, தமிழ் நாட்டில், தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளில் மருத்துவமுறையில் கருவைக் கலைத்தலுக்கான வசதிகள், 1971-ம் ஆண்டு மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளன. தற்சமயம் தமிழ் நாட்டில் 141 மருத்துவ நிலையங்களில் இதற்கான வசதி உள்ளது. இந்த 141 மருத்துவ நிலையங்களில், கல்லூரி இணைந்த, இணைக்கப்படாத 117 அரசு மருத்துவ நிலையங்களும், வட்டமருத்துவமனைகளும், வட்டமல்லாத (Non-Taluk) மருத்துவ மனைகளும், ஆரம்ப சுகாதார நிலையங்களும்



அடங்கும். 117 அரசு மருத்துவ நிலையங்களில், 24 மருத்துவ நிலையங்களுக்கு (10 கல்லூரி இணைந்த மருத்துவ மனைகள், 14 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள்) மருத்துவ முறையில் கருவைக் கலைப்பதற்கான கருவிகள் வழங்கப்பட்டன. 72 அரசு மருத்துவ நிலையங்களுக்கு மொத்தம் ரூ. 4,32,000 செலவில் (ஒவ்வொரு நிலையத்திற்கும் ரூ. 6,000 வீதம்) இதற்குத் தேவையான கருவிகள் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 22,148 பேர் மருத்துவ முறையில் கருவைக் கலைத்துள்ளனர்.

### டேனிஷ் உதவித்திட்டம்.

மக்களுக்கு முழு சுகாதார வசதி அளிக்கும் பொருட்டு இத்திட்டத்தைச் செயலாக்குவதற்காக இம்மாநிலத்தில், தென்னாற்காடு, சேலம், ஆகிய இரு மாவட்டங்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் இவ்விரு மாவட்டங்களிலும் ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இதற்கு டேனிஷ் அரசு குறிப்பிடத்தக்க அளவிற்கு நிதி உதவி அளிக்கும். திட்டப் பணியாளர்கள் மேற்கூறிய திட்டத்தை செயலாக்குவதற்கான செயல் திட்டங்களை தயாரிக்க அவரவர்க்குரிய பதவி இடங்களில் அமர்த்தப்பட்டனர். அவர்களுக்கு, டேனிடா அதிகாரிகளாலும் அவர்களது ஆலோசகர்களாலும் மறுபுத்தறிவு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. திட்ட அதிகாரிகளால் இத்திட்ட நகல் ஒன்றினை தயார் செய்து, டேனிஷ் அரசுக்கு அனுப்பும்படி, இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. டேனிஷ் அரசின் ஒப்புதல் பெற்றதும், இத்திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும்.

### ஊராட்சிகளின் பணி.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் முன்னுரை, அச்சட்டத்தின் நோக்கங்களைப்பற்றிக் கூறுகையில், “மக்கட் தொகைப் பெருக்கத்தின் தேவைக்கேற்ப ஆண்டுதோறும் உணவு உற்பத்தியும் பெருக வேண்டுமென்பது, தேசிய நலத்தைப் பொறுத்த மட்டில் அவசியமானதாகும். அதன் பொருட்டு மக்கட் தொகைப் பெருக்கமும் கட்டுப்படுத்தப்பட வேண்டும்” என்று கூறுகிறது. எனவே, குடும்ப நலத்திட்டம் ஊராட்சி ஒன்றியங்களின் செயல் வரம்புக்குள்ளேயே செயல்படுத்தப்படலாம் என்பது வெளிப்படையாகிறது. குடும்பநல முகாம்களை நடத்தும் பொருட்டும், அந்தந்த மாவட்டங்களில் குடும்பநலத் திட்டங்களைச் செயலாக்கும் பொருட்டும் அந்தந்த மாவட்ட

ஆட்சியர்களிடம், ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றும் ரூபாய் 5,000 அளிப்பதற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. ரூ. 3.00 இலட்சத்திற்கும் அதிகமாக பொதுநிதி வைத்துள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மேலே குறிப்பிட்ட குடும்பநலத் திட்டத்தை செயலாக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியாளர்களுக்குக் கொடுத்த ரூ. 5,000-க்கு அதிகமாக ரூ. 25,000 வழங்குவதற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டம் மாவட்ட ஆட்சியாளர்களின் மேற்பார்வையில் நடந்தேறி வருகிறது. மாவட்ட ஆட்சியாளர்கள் இத்திட்டம் வெற்றி பெற தங்களது ஒத்துழைப்பைத் தந்துள்ளார்கள்.

**தனிப்பட்ட மருத்துவர்கள், தனியார் மருத்துவ நிலையங்களின் பங்கு.**

குடும்பநலத் திட்டத்தில் தனிப்பட்ட மருத்துவர்களையும் ஈடுபடுத்த மைய அரசு திட்டம் வகுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் தனிப்பட்ட மருத்துவர்கள் கருத்தடை அறுவை சிகிச்சைகளைச் செய்தும், கருத்தடை வளையங்களைப் பொருத்தியும் இந்த வகைகளில் ஏற்படும் செலவுக்காக அவர்கள் அரசிடமிருந்து தொகை பெற்றுக் கொள்ளலாம். தனிப்பட்ட முறையில் அறுவை சிகிச்சை செய்துகொள்ள வரும் ஆண்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதால் ஏற்படும் செலவுக்காக, நபர் ஒன்றுக்கு ரூ. 30 என்ற வீதத்திலும், கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ள வரும் பெண்களுக்கு கருத்தடை வளையம் பொருத்துதல், மருந்து கொடுத்தல், மருந்திட்டு கட்டு கட்டுதல், தொடர் சிகிச்சை அளித்தல் ஆகிய வகையில் ஏற்படும் செலவுக்காக நபர் ஒன்றுக்கு ரூ. 3 வீதத்திலும், ஒவ்வொரு மருத்துவருக்கும் தொகை வழங்கப்படும். இச்செலவுகள் குறித்து தேவையான கைச்சாத்துகள், ஆவணங்கள், சான்றிதழ்கள் கொடுக்கப்படுவதன்பேரில் மாவட்ட குடும்ப நல தாய்—சேய் நல அதிகாரிகளால் இத்தொகை திருப்பி கொடுக்கப்படும்.

**மானிய உதவி.**

நகர்ப்பகுதி குடும்பநல நிலையங்கள், துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் பயிற்சி நிலையங்கள், மகப்பேற்றுக்குப் பின் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் நிலையங்கள் முதலியவற்றை நடத்துவதற்காக தொண்டு நிறுவனங்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் அரசு மானிய உதவி அளித்து வருகின்றது. இந்த மானியங்கள் மைய அரசு நிர்ணயித்துள்ள முறையில் வழங்கப்படுகின்றன. தற்போது 12 தொண்டு நிறுவனங்களும் சென்னை, மதுரை மாநகராட்சிகள் ஆட்பட 19 உள்ளாட்சி மன்றங்களும் இந்த மானியத்தைப் பெற்று வருகின்றன.



**குடும்பநலப் பிரச்சாரம் மற்றும் கருத்தடை ஆதரவாளர்களுக்கு அளிக்கப்படும் புத்தறிவு பயிற்சி முகாம்கள்.**

குடும்பநலத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த வேண்டுமானால் குடும்ப நலக் கல்வி, பிரச்சாரப்பணி முதலியவை முக்கிய காரணங்களாக அமைந்துள்ளது. 1979-ம் ஆண்டு செம்டம்பர் 16-ம் தேதி முதல் அக்டோபர் 15-ம் தேதி வரை, தேசிய குடும்ப நல இருவார விழா தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரப்பணி, விளம்பரப்பணி ஆகியவற்றை முடுக்கிவிடும் நோக்கத்துடன் கொண்டாடப்பட்டது. இந்த இருவார விழாவின் முக்கிய நோக்கம். "முதல் குழந்தையை தாமதப்படுத்துக; இரண்டாவது குழந்தைக்கு இடைவெளி விடுக. மூன்றாவது குழந்தையை நிறுத்துக" என்பதாகும். இந்த இருவார விழாவிற்கு முந்தியநாள் மேதகு ஆளுநர் அவர்கள் இந்த திட்டத்தைக் கடைப்பிடிக்கும்படி வானொலி மூலம் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். இதைப் போன்று, முன்னாள் சுகாதார அமைச்சரும், மக்கள் இந்த திட்டத்தில் முழு பங்கேற்கும்படி வானொலி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஊரணிபுரம் கிராமத்தில் அகில இந்திய வானொலி நிலையமும், குடும்பநல இயக்குநர் அலுவலகமும் இணைந்து கிராமப் பிரச்சார திட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தது.

அரசு ஊழியர்களும், மற்றவர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்கள். சொற்பொழிவு நிகழ்ச்சிக்குப் பின் பிரபல சினிமா நடிகர்கள், நடிகைகள், பாடுபவர்கள் கலந்து கொண்ட நாடகம் நடத்திக் காண்பிக்கப்பட்டது. இருவார விழாவின் கடைசிநாளன்று சென்னை நகரத்தில் சென்னை துறைமுகப் பொறுப்புக்கழகம் (Madras Port Trust) சென்னை துறைமுக தொழிலாளர்கள் (Madras Dock Labour) ஆகியோர் இணைந்து தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது. தொழிலாளர்கள் அதிகம் வசிக்கும் பகுதியில், ஒரு பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் தொழிலாளர்கள், ஆலை ஊழியர்கள், அவர்களின் குடும்பங்கள் பெருமளவில் கலந்து கொண்டார். முக்கியமான அதிகாரிகள், மற்றவர்கள் கலந்துகொண்டு குடும்பநலத் திட்டத்ினை தங்கள் தேவைக்கும், நிலைமைக்கும் ஒத்தவாறு மனமுவந்து கருத்தடை முறைகளைக் கடைபிடிக்கும்படி கேட்டுக்கொண்டு உரை நிகழ்த்தினர்.

அடையாறிலுள்ள திரைப்படப் பிரிவுத்துறை Tamil Nadu Film Division, Adyar) " கல்யாணத்திற்கொரு நிபந்தனை " என்ற தலைப்பில் சிறு குடும்பத்தின் அவசியத்தை வலியுறுத்தி ஒரு செய்தி விளம்பரப்படம் எடுத்து வருகிறது.

[1980 ஜூலை 23

தற்போது தமிழ்நாடு அரசு அனுமதிபெற்று 38 நாடகக் குழுக்களும் மற்றும் 23 கலை நிகழ்ச்சிக் குழுக்களும் (வில்லுப்பாட்டு, கதா காலட்சேபம், பொம்மலாட்டம் முதலியன) உள்ளன. தமிழ்நாடு முழுவதும், இந்த குழுக்களுக்கு கலை நிகச்சிகள் நடத்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒரு நாடகம் நடத்த ஊதியம் ரூ. 770-ம் ஒரு கலை நிகழ்ச்சி நடத்த ஊதியம் ரூ. 250-ம் அளிக்கப்படுகிறது.

சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற நான்கு பெரிய அளவிலான பொருட்காட்சிகளில் (அகில இந்திய வர்த்தகப் பொருட்காட்சி, 1980) பங்கு பெற்றது இந்த நிலையங்களைப் பார்க்க வரும் தகுதிபெற்ற தம்பதியர்களுக்கு புத்தகங்கள், நிரோத் முதலியன வழங்கப்பட்டு சிறு குடும்பத்தைப்பற்றிய பயனை விளக்கிக் கூறப்பட்டது.

வானொலி, தொலைக்காட்சி, விளம்பரப்பலகைகள், சுவரொட்டிகள் சினிமா, திடைப்படக் கொட்டைகளில் சிலைடுகள் போட்டு காட்டுதல், சுவர்ச் சித்திரங்கள் வரைதல் பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் வைத்தல் மூலமாகவும், நல்வாழ்வு அமைச்சர், முதலமைச்சர் ஆகியோர் ஆற்றிய உரைகளை சிறுபுத்தகங்களாக வெளியிடுதல் ஆகியவற்றின் மூலமாகவும், "முதல் குழந்தையை தாமதப்படுத்துக; இரண்டாவது குழந்தைக்கு இடைவெளி விடுக; மூன்றாவது குழந்தையை நிறுத்துக" என்ற நோக்கம் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

1,025 புத்தறிவு பயிற்சி முகாம்கள், இம்மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட மையங்களில் நடத்தப்பட்டன. இதில் 40 கருத்தடை ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். சில முகாம்கள் பெண்களுக்கு மாத்திரம் நடத்தப்பட்டன. இந்த முகாம்களில் கலந்து கொண்டவர்களுக்கு மிக எளிய பாதுகாப்பான, விஞ்ஞான ரீதியான குடும்பநல முறைகள் பற்றியும், வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கான குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக்கொள்கின்ற அவசியம் பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டது.

இந்த திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட, குடும்பநல அச்சகத்திலிருந்து மாதாந்திர இதழ் "குடும்பநல செய்திக்கதிர்" வெளியிடப்படுகிறது. இந்த இதழ் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு வழங்கப்படுகின்றது. தொடக்க நல்வாழ்வு நிலையங்கள், தொண்டு நிறுவனங்கள், நூலக ஆணைக் குழுவின்



1980 ஜூலை 23]

(Local Library Authority) நிர்வாகத்தில் உள்ள நூலகங்கள் ஆகியவற்றுக்கும் வழங்கப்படுகின்றது. இந்த இதழ் முற்றிலும் இத்திட்டத்தின் முன்னேற்றத்திற்காகவே பயன்படுத்தப்படுகிறது.

**வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.**—1979-80 ஆம் ஆண்டு ரூ. 920.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டு தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தம் ரூ. 1048.63 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

டாக்டர் எச். வி. ஹண்டே,
மக்கள் நல்வாழ்வு அமைச்சர்.

பிற்சேர்க்கை—I.

மாநில வரவு-செலவுத் திட்டமும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு செலவினங்களும்.

**1980–81** ஆம் ஆண்டுக்கான கோரிக்கை 18. மருத்துவம் மற்றும் கோரிக்கை 19. மக்கள் நல்வாழ்வு இவைகளின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 108 கோடியாகும். இது வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 967 கோடியில் 11 விழுக்காடாகும். மருத்துவம், குடும்பநலம், மக்கள் நல்வாழ்வு, துப்புரவு, குடிநீர் வழங்கல் ஆகியவற்றிற்கான செலவினம் ஒவ்வொரு வருடமும் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்பதை கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் மூலம் அறியலாம்.

| ஆண்டு. | | வருவாய்க் கணக்கில் செலவினம் * (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| 1967–68 | .. | 18 |
| 1968–69 | .. | 21 |
| 1969–70 | .. | 24 |
| 1970–71 | .. | 27 |
| 1971–72 | .. | 34 |
| 1972–73 | .. | 40 |
| 1973–74 | .. | 42 |
| 1974–75 | .. | 49 |
| 1975–76 | .. | 55 |
| 1976–77 | .. | 78 |
| 1977–78 | .. | 71 |
| 1978–79 | .. | 83 |
| 1979–80 (திருத்திய மதிப்பீட்டின்படி) | | 97 |

மருத்துவக்கோரிக்கையின்கீழ் 1980–81-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பல்வேறு நிலைப் பணிகளுக்கும் செய்யப் பட்டுள்ள நிதி ஒதுக்கம் பற்றிய விவரங்கள் பின் வருமாறு:—

* 1980–81–ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புக்களில் உள்ள புள்ளிவிவரங்களில் இருந்து எடுத்துத் தரப்பட்டிருக்கின்றன.



**1980–81க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.**

| | திட்டமல்லாத செலவினம். | மாநிலத் திட்டம். | திட்டச் செலவினம்: மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள். | திட்டச் செலவினம்: மத்திய அரசு உதவி செய்யும் திட்டங்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | | | | |
| 259. அரசு மருத்துவ நிலையங்களின் கட்டட பராமரிப்பு, சீர் செய்தல் பணிகளுக்கான செலவு. | 90,00 | .. | .. | .. | 90,00 |
| 280. மருத்துவம்— | | | | | |
| (i) கல்வி .. .. .. .. | 6,10,45 | 11,54 | .. | 1 | 6,22,00 |
| (ii) பயிற்சி .. .. .. .. | 23,81 | 27,93 | .. | 2 | 51,76 |
| (iii) ஆராய்ச்சி .. .. .. .. | 336 | 498 | 120 | .. | 954 |
| (iv) மருத்துவ நிவாரணம் (மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள், மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவ மனைகளைச் சேர்த்து). | 40,65,19 | 1,37,23 | 673 | .. | 42,09,51 |
| (v) ஹோமியோபதி மருத்துவம் .. .. | 772 | 496 | .. | .. | 12,68 |
| (vi) இந்தியமுறை மருத்துவம்* .. .. | 65,41 | 20,54 | 374 | .. | 89,69 |
| (vii) பிற இனங்கள். .. | 8,14,86 | 603 | .. | .. | 8,20,89 |
| 88. சமூக பாதுகாப்பு மற்றும் நலம் .. | 63,99 | .. | .. | .. | 63,99 |
| மொத்தம் .. | 57,44,79 | 2,13,21 | 11,67 | 3 | 59,69,70 |

* இந்திய மருத்துவத்துறையைப் பற்றியக் குறிப்பு தனியாக அவையில் வைக்கப்பட்டுள்ளது.

***மக்கள் நல்வாழ்வுக் கோரிக்கையின்கீழ் 1980-81-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ல்வேறு நிலைப் பணிகளுக்கும் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்க விவரங்கள் பின்வருமாறு :—

1980-81-க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

| | திட்டமல்லாத செலவினம். | மாநிலத் திட்டம். | திட்டச் செலவினம்: மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள். | திட்டச் செலவினம்: மத்திய அரசு உதவி செய்யும் திட்டங்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | | |
| 259. மக்கள் நல்வாழ்வு நிலையங்களுக் ான கட்டட பராமரிப்பு சீர் செய்தல் ணிகளுக்கான செலவு. | 800 | .. | .. | .. | 800 |
| 280. மருத்துவம் | | | | | |
| ஆரம்ப சுகாதார நிலையங்கள். | 7,50,73 | 2,03,77 | 205 | .. | 9,56,55 |
| 281. குடும்பநலம். | .. | .. | 10,22,18 | .. | 10,22,18 |
| 282. (i) மக்கள் நல்வாழ்வு. | 4,41,55 | 55,21 | 13,86 | 95,60 | 6,06,22 |
| (ii) கழிவு நீர்ப்போக்கு மற்றும் குடிநீர் வழங்கல். | ( ) 3,39,35 | 16,64,83 | 5,00,00 | .. | 18,25,48 |
| மொத்தம் .. | 8,60,93 | 19,23,81 | 15,38,09 | 95.60 | 44,18,43 |
| ட்டுக-திருப்பி வசூலிப்பவை. | | | | | 3,83,09 |
| | | | | | 48,01,52 |

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்காக செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி துக்கங்கள் தவிர, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுக் கட்டிடங்கள் ஆகியவற்றிற்காக பிற கோரிக்கைகளின்கீழ் 1980-81-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

***மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பற்றியக் குறிப்பு தனியாக அவையில் வைக்கப்பட்டுள்ளது.



1980-81-ஆம் ஆண்டில் புதிய திட்டங்களுக்கு ஆணை வழங்க கருதப்பட்டுள்ளது. துறைவாரி விவரங்கள் கீழே தரப் கின்றன.

| துறை. | திட்டங்களின் எண்ணிக்கை. | மொத்தச் செலவு. | 1980-81-ஆம் ஆண்டில் செலவு. |
|---|---|---|---|
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | |
| மக்கள் நல்வாழ்வு .. | 16 | 2,85,60 | 2,00,54 |
| ருத்துவக் கல்வி .. | 42 | 2,94,55 | 78,18 |
| ருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலம் | 34 | 1,94,57 | 1,25,91 |
| ந்திய மருத்துவம் .. | 19 | 44,03 | 25,60 |
| | 111 | 8,15,75 | 4,30,23 |

## பிற்சேர்க்கை II.

**1979–80 ஆம் ஆண்டில் மாநில மருத்துவக் கல்லூரிகளில் நடத்தப்படும் பட்ட மேற் படிப்பு பட்டயத்தகுதி வகுப்புகள், உயர்நிலை சிறப்பு வகுப்புகளுக்கான பட்டியல்.**

| வரிசை எண்ணும் படிப்பின் பெயரும். | சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை. | ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை. | கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை. | மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை. | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. | | | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 எம். டி. (பொது மருந்தியல்) .. | 21 | 20 | 6 | 19 | 5 | 10 | 81 |
| 2 எம். டி. (நோய்க்குறியியல்) .. | 4 | .. | .. | 2 | .. | .. | 6 |
| 3 எம். டி. (நுண்ணுயிரியல்) .. | 6 | .. | .. | 2 | .. | .. | 6 |
| 4 எம். டி. (மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல்). | 13 | 8 | .. | 5 | .. | .. | 21 |
| 5 எம். டி. (சமூக தடுப்பு மருத்துவம்) .. | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| 6 எம். டி. (உடல் அமைப்பியல்) .. | 4 | 1 | 1 | 4 | .. | .. | 10 |
| 7 எம். டி. (மருந்தாக்கியல்) .. | 4 | .. | .. | 4 | .. | .. | 8 |
| 8 எம். டி. (சட்டஞ்சார்ந்த மருத்துவ இயல்). | 2 | .. | .. | 2 | .. | .. | 4 |
| 9 எம். டி. (சிசு நோய் மருத்துவம்) .. | 17 | 3 | .. | 6 | .. | .. | 26 |
| 10 எம். டி. (உளநோய் மருத்துவம்) .. | 4 | .. | .. | 3 | .. | .. | 7 |
| 11 எம். டி. (மயக்க மருந்தியல்) .. | 5 | 3 | .. | 5 | .. | .. | 13 |
| 12 எம். டி. (எக்ஸ் கதிர்முறை நோய் அறியியல்) | 4 | .. | .. | .. | .. | .. | 4 |
| 13 எம். டி. (எக்ஸ் கதிர்முறை நோய் சிகிச்சை இயல்) | 4 | .. | .. | .. | .. | .. | 4 |
| 14 எம். டி. (மேக நோய் இயல்) .. | 4 | .. | .. | 1 | .. | .. | 5 |
| 15 எம். டி. (தோல் நோய் இயல்) .. | 5 | 2 | .. | .. | .. | .. | 7 |
| 16 எம். டி. (உயிர்வேதியியல்) .. | 4 | .. | .. | .. | 1 | .. | 5 |
| மொத்தம் .. | 102 | 37 | 7 | 53 | 6 | 10 | 215 |
| 17 எம். எஸ். (பொது அறுவை சிகிச்சை). | 21 | 20 | 12 | 18 | 6 | 10 | 87 |
| 18 எம். எஸ். (உடற்கூறு ஆய்வு இயல்).. | 4 | .. | .. | 2 | .. | .. | 6 |
| 19 எம். எஸ். (கண்நோய் இயல்) .. | 6 | .. | .. | 6 | .. | .. | 12 |
| 20 எம். எஸ். (காது, மூக்கு, தொண்டை இயல்). | 6 | .. | .. | 4 | .. | .. | 10 |
| 21 எம். எஸ். (முடநீக்கியல் மருத்துவம்). | 5 | .. | .. | 4 | .. | .. | 9 |
| 22 எம். எஸ். (நரம்பியல் அறுவை சிகிச்சை). | 6 | .. | .. | .. | .. | .. | 6 |
| மொத்தம் .. | 48 | 20 | 12 | 34 | 6 | 10 | 130 |

| வரிசை எண்ணும் படிப்பின் பெயரும். (1) | சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை. (2) | ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை. (3) | கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை. (4) | மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை. (5) | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். (6) | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர். (7) | மொத்தம். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 23 எம். டி. எஸ். (பல்வலியால் ஏற்பட்டுள்ள வீக்கம்). | 3 | .. | .. | .. | .. | .. | 3 |
| 24 எம். டி. எஸ். (ஓரல் சர்ஜரி) .. | 4 | .. | .. | .. | .. | .. | 4 |
| 25 எம். டி. எஸ். (ஆபரேடிவ் சர்ஜரி) .. | 3 | .. | .. | .. | .. | .. | 3 |
| 26 எம். டி. எஸ். (ஆர்தோடென்ஷியா) | 4 | .. | .. | .. | .. | .. | 4 |
| 27 எம். டி. எஸ். (புரோதிடிக்டென்டிஸ்டிரி) | 2 | .. | .. | .. | .. | .. | 2 |
| மொத்தம் .. | 16* | .. | .. | .. | .. | .. | 16 |

(ஒதுக்கப்)பட்ட இடங்களின் எண்ணிக்கை (columns 2–7).

* அரசு பல் மருத்துவக் கல்லூரியுடன் சேர்க்கப்பட்டுள்ளது.



## பட்டயத் தகுதிப் படிப்புகள்.

| வரிசை எண்ணும் படிப்பின் பெயரும். (1) | சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை. (2) | ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை. (3) | கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை. (4) | மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை. (5) | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். (6) | மொத்தம். (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 டி. ஜி. ஓ. .. .. .. | 36 | 16 | 8 | 16 | 6 | 82 |
| 2 டி. சி. எச். .. .. .. | 36 | 12 | 8 | 12 | 4 | 72 |
| 3 டி. எம். ஆர். டி. .. .. | 8 | 8 | .. | 12 | .. | 28 |
| 4 டி. எம். ஆர். டி. .. .. | 8 | .. | .. | .. | .. | 8 |
| 5 டி. எல். ஓ. .. .. .. | 24 | 4 | 4 | 12 | 4 | 48 |
| 6 டி. ஏ. .. .. .. | 12 | 12 | .. | 20 | 4 | 48 |
| 7 டி. ஆர்த்தோ .. .. .. | 8 | 4 | 8 | 6 | .. | 26 |
| 8 டி. ஓ. .. .. .. | 16 | .. | .. | 12 | 4 | 32 |
| 9 டி. வி. .. .. .. | 16 | .. | .. | 4 | .. | 20 |
| 10 டி. சி. பி. .. .. .. | 9 | .. | .. | .. | .. | 9 |

ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை (columns 2–6).

| வரிசை எண்ணும் படிப்பின் பெயரும். (1) | | ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை. (2) | ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை. (3) | கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை. (4) | மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை. (5) | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். (7) | மொத்தம். (6) |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | டி. டி. சி. டி. .. .. .. | 12 | .. | .. | ... | ... | 12 |
| 12 | டி. டி. .. .. .. | 12 | 4 | .. | .. | .. | 16 |
| 13 | டி. பி. எம். .. .. .. | 8 | .. | .. | 6 | .. | 14 |
| 14 | டிப்ளமா இன் பிஸிகல் மெடிசின் .. | 4 | .. | .. | .. | .. | 4 |
| 15 | பி. எஸ். எஸ். சி. டி. பி. எச். ஆக மாற்றப்பட்டுள்ளது. | 10 | .. | .. | .. | .. | 10 |
| 16 | எல். பி. எச். .. .. .. | 1 | .. | .. | .. | .. | 1 |
| | மொத்தம் .. | 220 | 60 | 28 | 100 | 22 | 430 |



உயர்நிலை சிறப்புத்துறைகள்.

| வரிசை எண்ணும் படிப்பின் பெயரும், (1) | | சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை. (2) | ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை. (3) | மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை. (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|---|
| 1 | எம். சி. எச். (சிசுநோய் அறுவை சிகிச்சை இயல்). | 3 | .. | 2 | 5 |
| 2 | எம். சி. எச். (பிளாஸ்டிக் சர்ஜரி) .. | 3 | 2 | 2 | 7 |
| 3 | எம். சி. எச். (நீரோ சர்ஜரி) .. | .. | .. | 2 | 2 |
| 4 | எம். சி. எச். (ஜெனிடோயூரினரி சர்ஜரி) | 4 | .. | .. | 4 |
| 5 | எம். சி. எச். (தொராசிக் சர்ஜரி) .. | 4 | .. | .. | 4 |
| | மொத்தம் .. | 14 | 2 | 5 | 22 |
| 1 | டி. எம். (கார்டியாலஜி) .. | | .. | .. | 3 |
| 2 | டி. எம். (நியுராலஜி) .. | 5 | .. | .. | 5 |
| 3 | டி. எம். (நெப்ராலஜி) .. | 1 | .. | .. | 1 |
| 4 | டி. எம். (கேஸ்ட்ரோ (என்டிராலஜி) .. | 2 | .. | .. | 2 |
| | மொத்தம் .. | 11 | .. | .. | 11 |

உயர்நிலை சிறப்புத்துறைகள்.

| ..ச எண்ணும் படிப்பின் பெயரும். | சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை. | ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை. | மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ..ம. பார்மஸி | .. | .. | 3 | 3 |
| பெரு மொத்தம் .. | 25 | 2 | 9 | 36 |



## பிற்சேர்க்கை III.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளும் நிறுவனங்களும்.

1. அரசு பொது மருத்துவமனை, சென்னை.
2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.
3. கீழ்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, சென்னை.
4. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.
5. அரசு கண் மருத்துவமனை, சென்னை.
6. அரசு கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.
7. அரசு மகப்பேறு மகளிர் நோய் இயல் நிறுவனம் மற்றும் பெண்கள் குழந்தைகளுக்கான மருத்துவமனை, சென்னை.
8. அரசு சர். இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவ மனை, சென்னை.
9. குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.
10. அரசு திருவொற்றீசுவரர் காசநோய் மருத்துவமனை, ஓட்டேரி, சென்னை.
11. அரசு மனநோய் மருத்துவமனை, சென்னை.
12. அரசு காசநோய் மருத்துவம் மற்றும் நலம்பேண் மருத்துவ மனை, தாம்பரம்.
13. அரசு ராஜாஜி மருத்துவமனை, மதுரை.
14. அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.
15. தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.
16. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.
17. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.
18. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,

## பிற்சேர்க்கை III—தொடர்ச்சி.

### மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளும் நிறுவனங்களும் —தொடர்ச்சி.

19. அரசு மார்பு நோய் சிகிச்சை நிலையம், சேத்துப்பட்டு, சென்னை.

20. அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய்சிகிச்சை நிறுவனம், காஞ்சிபுரம்.

21. அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை, காரப்பேட்டை, காஞ்சிபுரம்.

22. இங் நிலையம், கிண்டி.

23. புனர்வாழ்வு மற்றும் செயற்கை உறுப்பு பொருத்தும் நிலையம், கே. கே. நகர், சென்னை.



## பிற்சேர்க்கை IV

### மருத்துவக் கல்வி இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் மருத்துவ மனைகளிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை.

| | 1978–79 | 1979–80 |
|---|---|---|
| 1. அரசு பொது மருத்துவமனை, சென்னை | 1,621 | 1,621 |
| 2. (i) அரசு ஸ்டான்லி மருத்துவமனை சென்னை. | 1,121 | 1,121 |
| (ii) அரசு புறநகர் மருத்துவமனை தண்டையார்பேட்டை (அரசு ஸ்டான்லி மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டுள்ளது). | .. | 100 |
| 3 (i) கீழ்பாக்கம் மருத்துவக்கல்லூரி | 420 | 420 |
| (ii) அரசு புறநகர் மருத்துவமனை, அறிஞர் அண்ணாநகர், சென்னை (கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைக்கப் பட்டுள்ளது.) | .. | 100 |
| 4. (i) அரசு இராயப்பேட்டை மருத்துவ மனை, சென்னை. | 662 | 662 |
| (ii) அரசு சைதாப்பேட்டை மருத்துவமனை, சென்னை (அரசு இராயப்பேட்டை மருத்துவ மனையுடன் இணைக்கப் பட்டது.) | 32 | 32 |
| (iii) அரசு புறநகர்—மருத்துவ மனை, கே. கே. நகர், சென்னை (அரசு இராயப்பேட்டை மருத்துவமனை யுடன் இணைக்கப்பட்டது). | 100 | 100 |
| 5. அரசு கண்நோய் மருத்துவமனை, சென்னை. | 328 | 328 |
| 6, அரசு கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை சென்னை. | 685 | 685 |
| 7. மகப்பேறு மகளிர் நோய் இயல் நிறுவனம் மற்றும் பெண்கள் குழந்தைகளுக் கான அரசு மருத்துவமனை, சென்னை. | 574 | 574 |

பிற்சேர்க்கை IV—தொடர்ச்சி.

மருத்துவக் கல்வி இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை—

| | 1978-79 | 1979-80 |
|---|---|---|
| 8. அரசு ராஜா சர் ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை. | 426 | 426 |
| 9. குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை. | 250 | 250 |
| 10. அரசு திருவொற்றீசுவரர் காசநோய் மருத்துவமனை, ஒட்டேரி. | 222 | 222 |
| 11. அரசு மனநோய் மருத்துவமனை, சென்னை. | 1,800 | 1,800 |
| 12. அரசு காசநோய் மருத்துவம் மற்றும் நலம்பேண் மருத்துவமனை, தாம்பரம். | 750 | 750 |
| 13. அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர். | 612 | 612 |
| 14. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, தஞ்சாவூர். | 589 | 589 |
| 15. (i) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி | 663 | 663 |
| (ii) அரசு பிரெய்டா மொன்னியர் மருத்துவமனை, களக்காடு (திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டது). | 30 | 30 |
| 16. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர். | 805 | 907 |
| 17. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு. | 416 | 416 |
| 18. (i) அரசு ராஜாஜி மருத்துவமனை, மதுரை. | 1,394 | 1,394 |
| (ii) அரசு காசநோய் மருத்துவம் மற்றும் நலம்பேண் நிலையம், தோப்பூர் (மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையுடன் இணைக்கப் பட்டது). | 182 | 182 |



பிற்சேர்க்கை IV—தொடர்ச்சி.

மருத்துவக் கல்வி இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை—தொடர்ச்சி.

| | 1978–79 | 1979–80 |
|---|---|---|
| (iii) அரசு தொற்றுநோய் மருத்துவ மனை, தோப்பூர் (மதுரை அரசு ராஜாஜி மருத்துவ மனையுடன் இணைக்கப்பட்டது). | 50 | 50 |
| (iv) அரசு காலரா சேகரிப்பு மையம், தோப்பூர் (மதுரை ராஜாஜி மருத்துவ மனையுடன் இணைக்கப் பட்டது). | 28 | 28 |
| (v) அரசு மருத்துவமனை, பாலரங்க புரம் (மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையுடன் இணைக்கப் பட்டது). | 40 | 40 |
| அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனை, காரப் பேட்டை, காஞ்சீபுரம். | .. | 100 |
| | 13,800 | 14,202 |

## பிற்சேர்க்கை V.

1979—80 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட முக்கியமான மருத்துவக் கருவிகளின் பட்டியல்.

| வரிசை எண். | நிறுவனம் | கருவிகளின் பெயர். | தொகை (ரூ. இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | அரசு பொது மருத்துவமனை, சென்னை. | ஹிட்டாச்சி கம்ப்யூட்டரைசுடு டோமோகிராபிக் ஸ்கேன்னர். | 40.00 |
| | | ரெக்டிலீனியர் ஸ்கேன்னர். | 2.77 |
| | | வெண்டிலேட்டர் செட் ஆப் ஆக்ஸஸ்ஸரிஸ் ஏ. பி. சி. அலாரம் டிவைஸ் ஏர் கம்ப்ரெஸ்ஸர்—பீடியாட்ரிக் வெண்டிலேட்டர் வித் அஸஸ்ஸரிஸ். | 1·15 |
| | | சார்ஞ்ஸ் ஸ்டெர்நல் சாடெர்மோ டைலக்ட்தோம் கார்டியோ அவுட்புட் சிஸ்டம் ஸ்வான் காஸ் ப்லோடிநோக்டெட் தெர்மோடிலேஷன் மல்டிபர் பஸ்காதீட்டர் வித் கம்ப்யூட்டர். | 1.06 |
| | | அறுவை அரங்கங்களுக்கும் மயக்க மருந்தியல் மற்றும் சிறுநீரக இயல் துறைகளுக்கும் கருவிகள். | 1.57 |



## பிற்சேர்க்கை V—தொடர்ச்சி.

1979–80 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட முக்கியமான மருத்துவக் கருவிகளின் பட்டியல்—தொடர்ச்சி.

| வரிசை எண். | நிறுவனம். | கருவிகளின் பெயர். | தொகை (ரூ .இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 6. | அரசு பொது மருத்துவமனை, சென்னை. | அல்ட்ரா சவுண்ட் கருவி. | 4.94 |
| 7. | ,, | அறுவை மேசைகள் | 0.98 |
| 8. | அரசு ஸ்டான்லி மருத்துவ மனை. | 200 எம். ஏ.எக்ஸ்ரே பிரிவு. | 1.07 |
| 9. | ,, | டி. சி. டெஃப்பிபிரிலேட்டரும் மானிட்டரும். | 0.40 |
| 10. | அரசு இராயப்பேட்டை மருத்துவமனை. | ஹேமோடையலைஸர் பிரிவு. | 1.01 |
| 11. | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர். | எலக்ட்ரோ ஸர்ஜிகல் அப்பேரடஸ் சீலிங் லேம்ப் இன்ஸ்ட்ரு-மெண்ட் மற்றும் பவுல் ஸ்டெரிலைஸர், ஹை ஸ்பீட் இன்ஸட்ருமெண்ட் ஸடெரிலைஸர், பாயில்ஸ் அப்பாரடஸ், சர்கில் அப்சார்பர்ஸ். | 1.12 |
| 7 . | அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் நிறுவனம். | சென்ட்ரலைசுடு ஆக்ஸிஜன் மெடிகல் கேஸஸ் அண்டு வேக்குவம். | 1.89 |
| | | மொத்தம் .. | 57.95 |

## பிற்சேர்க்கை VI.

1979–80 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்பட்ட கட்டிட வேலைகள் பட்டியல்.

| வரிசை எண். | வேலைகளின் விவரம். | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | அண்ணா நகரில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுதல். | 18.70 |
| 2. | கே. கே. நகரில் செயற்கை உறுப்பு நிலையம் கட்டுதல். | 23.00 |
| 3. | சென்னை மனநோய் நிறுவனத்தில் பேக்கரி பிரிவு கட்டுதல். | 1.00 |
| 4. | சென்னை அரசு பொது மருத்துவமனையில் தீப்புண் பிரிவில் சீர்வளி சாதனங்கள் பொருத்துதல். | 0.67 |
| 5. | தாம்பரம் காசநோய் நலம்பேண் நிலையத்தில் உள்ள சவக்கிடங்குப பிரிவிற்கு குளிர்பதன வசதிகள் செய்து கொடுத்தல். | 0.87 |
| 6. | சென்னை அரசு பொது மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சைக்குப் பிந்தி அளிக்கப்படும் டான்சிலாக்டமிப் பிரிவை சீர்வளி செய்தல். | 0.36 |
| | மொத்தம் .. | 44.60 |



## பிற்சேர்க்கை VII

கட்டிடங்கள் கட்டப்பட்டு வெகு விரைவில் செயல்பட இருக்கின்ற திட்டங்களின் பட்டியல்

| வரிசை எண். | வேலைகளின் விவரம். | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | காஞ்சிபுரம் அருகில் உள்ள காரப்பேட்டையில் உள்ள புற்றுநோய் மருத்துவ மனையில் 150 படுக்கைகள் கொண்ட பகுதி கூடுதலாக கட்டுதல். | 17.00 |
| 2. | காஞ்சிபுரம் அருகில் உள்ள காரப்பேட்டையில் 100 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் மருத்துவமனை கட்டுதல். | 33.92 |
| 3. | காஞ்சிபுரத்தின் அருகில் உள்ள காரப்பேட்டையில் உள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் உயர் அழுத்த மின் சக்தி வழங்குதல். | 2.90 |
| | மொத்தம் .. | 53.82 |

## பிற்சேர்க்கை VIII

### கட்டப்பட்டு வரும் கட்டிடங்களின் பட்டியல்

| வரிசை எண். | வேலைகளின் விவரம். | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சென்னை அரசு பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சை அறுவை அரங்கம் கட்டுதல். | 3.35 |
| 2. | சென்னை அரசு பொது மருத்துவமனையில் மைய ஸ்டெரிலைசேஷன் பிரிவு கட்டுதல். | 2.15 |
| 3. | சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் கை காய சிகிச்சைப் பிரிவுக்குமேல் முதல் மாடி கட்டுதல். | 1.83 |
| 4. | சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பகுதிக்கு மேல் நான்கு மாடிகள் கட்டுதல். | 68.80 |
| 5. | சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் இரண்டு விரிவுரை கூடங்கள் கட்டுதல். | 3.90 |
| 6. | சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் கோபால்ட்டு தெரபி பிரிவுக்காக கட்டிடங்கள் கட்டுதல். | 4.80 |
| 7. | சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையின் கை காய சிகிச்சைப் பிரிவுக்கு இணைப்புக் கட்டிடம் கட்டுதல். | 2.00 |
| 8. | சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் சமூகம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவ பகுதிக்கு மேல் முதல் மாடிக் கட்டிடம் கட்டுதல். | 5.70 |
| 9. | சென்னை குழந்தை நல நிறுவனம் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ மனையில் நீராவி சலவைப் பிரிவுக்காக அடித்தளம் கட்டுதல். | 6.25 |



## பிற்சேர்க்கை VIII—தொடர்ச்சி.

### கட்டப்பட்டு வரும் கட்டிடங்களின் பட்டியல்—தொடர்ச்சி.

| வரிசை எண். | வேலைகளின் விவரம். | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 10. | சென்னை மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் நிறுவனம் மற்றும் பெண்கள் குழந்தைகளுக்கான மருத்துவமனையில் சவக்கிடங்குப் பிரிவுக்காக குளிர்பதன வசதிகள் செய்தலும், கட்டிடம் கட்டுதலும். | 2.70 |
| 11. | காஞ்சிபுரம் அருகில் உள்ள காரப்பேட்டையில் உள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிறுவனத்தில் பணியாளர் தங்குமிடங்களும் கட்டிடங்களும் கட்டுதல். | 28.57 |
| 12. | தஞ்சாவூர் அரசு ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் உள்ள தாமஸ் கூடத்தை பழுது பார்த்தலும் புதிய பிரசவப் பிரிவு மற்றும் முடநீக்கியல் வெளிப்புற நோயாளிகள் பகுதி கட்டுதலும். | 3.00 |
| 13. | தஞ்சாவூர் அரசு ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் அறுவை அரங்கப் பகுதி கட்டுதல். | 3.00 |
| 14. | மதுரை அரசு ராஜாஜி மருத்துவ மனையில் தனியாக பல் மற்றும் முடநீக்கியல் பகுதி கட்டுதல். | 16.20 |
| 15. | மதுரை அரசு ராஜாஜி மருத்துவ மனையில் செயற்கை உறுப்பு பொருத்துதல் மற்றும் மறுவாழ்வு மையம் கட்டுதல். | 8.00 |
| 16. | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புதிய புறநோயாளிகள் மற்றும் மகப்பேறு பகுதிகளில் சரிவுப்பாதை அமைத்தல். | 2.25 |
| 17. | சென்னை அரசு பொது மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு வங்கியின் இரத்தக்கசிவு அறையை சீர்வளிப்படுத்துதல். | 0.42 |

## பிற்சேர்க்கை VIII—தொடர்ச்சி.

### கட்டப்பட்டு வரும் கட்டிடங்களின் பட்டியல்—தொடர்ச்சி.

| வரிசை எண். | வேலைகளின் விபரம். | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 18. | சென்னை அரசு பொது மருத்துவ மனையில் எம். எஸ். இணைப்புக் கட்டிடத்தில் சில பகுதிகளை சீர்வளிப்படுத்துதல். | 10.00 |
| 19. | சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவ மனையில் அவசரச் சிகிச்சைப் பகுதியில் ஒரு படுக்கை மற்றும் பிரயாணிகள் செல்லும் விசை ஏணி (Lift) வசதி செய்து கொடுத்தல். | 2.90 |
| 20. | சென்னை பெண்கள் குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையில் மின் உற்பத்திக் கருவி பொருத்துதல். | 2.25 |
| 21. | சென்னை அரசு பெண்கள் குழந்தைகளுக்கான மருத்துவ மனையில் உள்ள சவக்கிடங்குப் பகுதியை குளிர்பதன வசதி செய்து கொடுத்தல். | 1.60 |
| 22. | சென்னை அரசு பெண்கள் குழந்தைகளுக்கான மருத்துவ மனையில் மின் உற்பத்திக் கருவி பொருத்துதல். | 1.09 |
| 23. | சென்னை திருவொற்றீசுவரர் காசநோய் மருத்துவ மனையில் உள்ள சவக்கிடங்குப் பகுதியை குளிர்பதன வசதி செய்து கொடுத்தல். | 1.08 |
| 24. | சென்னை கே. கே. நகரில் உள்ள புறநகர் மருத்துவ மனையின் சவக்கிடங்குப் பகுதியை குளிர் பதன வசதி செய்து கொடுத்தல். | 1.44 |
| 25. | காஞ்சீபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவ மனையில் மின் உற்பத்திக் கருவி பொருத்துதல். | 3.72 |





பிற்சேர்க்கை VIII—தொடர்ச்சி.

கட்டப்பட்டு வரும் கட்டிடங்களின் பட்டியல்—தொடர்ச்சி.

| வரிசை எண். | வேலைகளின் விபரம் | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 26. | காஞ்சீபுரம் அருகில் உள்ள காரப்பேட்டை புற்றுநோய் மருத்துவ மனைக்கு விசை ஏணி (Lift) வசதி செய்து கொடுத்தல். | 1.79 |
| 27. | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவை சீர்வளிப்படுத்துதல். | 0.48 |
| 28. | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள்ள அறுவை அரங்கத்தைச் சீர்வளிப்படுத்துதல். | 2.85 |
| | மொத்தம் .. | 192.12 |

## பிற்சேர்க்கை—IX

### 1980—81 ஆம் ஆண்டில் ஒப்பளிக்க இருக்கின்ற கட்டிடத் திட்டங்களின் பட்டியல்.

| வரிசை எண். | கட்டிடத் திட்ட வேலைகளின் விவரம். | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சென்னை மாநகரில் உள்ள சில மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள அறுவை அரங்குகளுக்கு சீர்வளி வசதி செய்தல். | 16·00 |
| 2. | சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் நிறுவனம் மற்றும் மகளிர் குழந்தைகளுக்கான மருத்துவமனை, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மின் உற்பத்தி இயந்திரங்கள் அமைத்தல். | 9.85 |
| 3. | சென்னை அரசு திருவொற்றியூர் காச நோய் மருத்துவமனையிலுள்ள புதிய கட்டிடத்திற்கு விசை ஏணி (லிஃப்ட்) வசதி செய்து கொடுத்தல். | 1·90 |
| 4. | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் காது, மூக்கு, தொண்டை சிகிச்சைத் துறையிலுள்ள கேட்புத்திறன் குறைநீக்கு சிகிச்சைப் பிரிவிற்கு ஒலிப்புகா அறை வசதி செய்து கொடுத்தல். | 0·12 |
| 5. | மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கும் உதவி மருத்துவர்களுக்கும் குளியல் அறையுடன் இணைந்த முறைப்பணி அறைகள் இரண்டு கட்டுதல் (500 ச.அ.). | 50 |



## பிற்சேர்க்கை IX—தொடர்ச்சி.

### 1980-81 ஆம் ஆண்டில் ஒப்பளிக்க இருக்கின்ற கட்டிடத் திட்டங்களின் பட்டியல்—தொடர்ச்சி.

| வரிசை எண். | கட்டிடத் திட்ட வேலைகளின் விவரம் | செலவு (ரூபாய் (இலட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 6. | மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையின் அணுகு சாலைகளுக்கும் மருத்துவமனை வளவிற்குள்ளும் தார் சாலை போடுதல். | 0·28 |
| 7. | மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையிலுள்ள கண் சிகிச்சைக் கட்டிடத்திற்கும் கதிர்வீச்சு மருத்துவக் கூடத்திற்கும் இடையே இணைப்புப் பாதை கட்டுதல. | 0·27 |
| 8. | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள சில பழைய கட்டிடங்களை இடித்து சீர்வளி சாதன (சன்னல் முறை) வசதியுடன் கூடிய அறுவை சிகிச்சைக் கூடமும், சிசு நோய் அறுவை சிகிச்சைக்குப் பிந்திய கவனிப்பிற்கு 30 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றும் கட்டுதல். | 5·50 |
| 9. | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள சவக் கிடங்கு பகுதியை சீர்வளிப் படுத்துதல். | 1·76 |
| 10. | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள சவக்கிடங்கு அறைக்கும் இரத்த சேமிப்பு வங்கிக்கும் சீர்வளி வசதி செய்தல். | 0·74 |
| | | 36·92 |

## இணைப்பு

## மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

### 1. தோற்றுவாய் :

மாநிலத்தில் மக்கள் நல்வாழ்வு நிலைமைகளை மேம்படுத்தவும் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் 1923-ஆம் ஆண்டில் முதன் முதலாக மக்கள் நல்வாழ்வுத் துறை ஏற்படுத்தப்பட்டது. 1966 ஆம் ஆண்டு, இத்துறை மருத்துவப் பணிகள் துறையோடு இணைக்கப்பட்டு, மக்கள் நல்வாழ்வு பணிகள் மற்றும் குடும்பநலத் துறையென பெயரிடப்பட்டது. 1976 ஆம் ஆண்டு, மீண்டும் இந்த அமைப்பு மக்கள் நல்வாழ்வு மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை எனவும் மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலத் துறை எனவும் இரண்டாக திருத்தி அமைக்கப்பட்டது. இந்த அமைப்பின் படி, மக்கள் நல்வாழ்வுத் துறை ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல்வேறு தொழிற் நுட்பப் பிரிவுகள் தாய்சேய் நலம், மலேரியா ஒழிப்பு, பெரியம்மை ஒழிப்பு யானைக்கால் நோய்க்கட்டுப்பாடு, கொள்ளை நோய் கட்டுப்பாடு, தொழிலக துப்புரவு, சத்துணவு ஆராய்ச்சி, சுகாதாரக் கல்வி, சுகாதாரம் மற்றும் பிறப்பு இறப்பு புள்ளி விவரம், மருந்து கட்டுப்பாடு, உணவு மற்றும் நீர் மாதிரிகளை பகுப்பாய்தல், சுகாதாரப் போக்குவரத்து முதலியவைகளைக் கொண்டு விளங்கியது. தற்சமயம், ஆரம்ப சுகாதார நிலையங்களில் அளிக்கப்படுகின்ற பல்வேறு பணிகளை மேம்படுத்தும் நோக்குடனும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் அளிக்கப்படுகின்ற நோயை குணப்படுத்தும் பணிகளை வலுப்படுத்தவும், அரசு முழுநேர இயக்குநர் ஒருவரைக் கொண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கென ஒரு தனி இயக்குநரகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சென்னையை தலைமையகமாகக் கொண்டு இந்த இயக்குநர் இயங்குவார். ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாட்டினை மேம்படுத்தும் எண்ணத்துடன் மாநிலம் முழுவதும் விரிவான முறையில் சுற்றி வருவார். ஆரம்ப சுகாதார நிலையங்களில் வெளிப்புற உள்ளிருப்பு நோயாளிகளை கவனிக்கும் மருத்துவர்களும் ஏனைய நிரந்தரப்பணியாளர்களும் இந்த இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குவார்கள். நடமாடும் மருத்துவக் குழுக்களின் பணிகளும் இந்த இயக்குநரின் மேற்பார்வையின் கீழ் வரும். இருந்தாலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அளிக்கப்படுகின்ற நோய்த் தடுப்பு பணிகள் தொடர்ந்து மக்கள் நல்வாழ்வு மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் இருக்கும்.

மேலும், பல்வேறு சுகாதாரத்திட்டங்களை பலன்தரும் வகையில் செவ்வனே செயல்படுத்தவும், விரும்பிய குறிக்கோளை அடையும் பொருட்டும், மக்கள் நல்வாழ்வுத்துறையை திருத்தி அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது.



திருத்தி அமைக்கப்பட்ட அமைப்பின்படி, தற்சமயம் இருக்கின்ற 5 மண்டலங்களுக்குப் பதில் 7 வட்டாரங்கள் இருக்கும். ஒவ்வொரு வட்டாரமும் இரண்டு அல்லது மூன்று வருவாய் மாவட்டங்களின் பரப்பளவில் ஆட்சி செலுத்தத் கூடிய அளவில் வட்டார உதவி மக்கள் நல்வாழ்வு இயக்குநரைக் கொண்டு விளங்கும். தற்சமயம் இருக்கின்ற 15 மாவட்ட சுகாதார அலுவலகங்களுக்குப் பதில் 29 மாவட்ட சுகாதாரப் பிரிவுகள் இருக்கும். ஒவ்வொரு மாவட்ட சுகாதார பிரிவு அதிகபட்சம் 16 ஆரம்ப சுகாதார நிலையங்களின் பரப்பளவில் ஆட்சி செலுத்தக்கூடிய மாவட்ட சுகாதார அதிகாரி ஒவ்வொருவரைக் கொண்டு விளங்கும். வட்டாரத்தினை நிர்வகிக்கும் வட்டார உதவி இயக்குநர் வெவ்வேறு மாவட்ட சுகாதார பிரிவுகளது பணிகளை ஒருங்கிணைப்பார்; பல்வேறு சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்த வழி காட்டுவார், மேற் பார்வையிடுவார்; திட்ட முன்னேற்றத்தினை கோட்ட அளவில் ஆய்வுகள் நடத்துவார். மாநில சுகாதார கொள்கையினையும், சுகாதாரத் திட்டங்களையும் பலன்தரும் வகையில் செயல்படுத்துவதற்கான நுண்ணளவு திட்டத்திற்கு (Micro planning) பொறுப்பாளியாவார். இவர் தன் வட்டாரங்களின் கீழ் வருகின்ற உணவு பகுப்பாய்வுக் கூடத்திற்கும் மற்றும் மாநிலச் சுகாதாரப் போக்குவரத்து அமைப்பிற்கும் நிர்வாகப் பொறுப்பு வகிப்பார். மேலும் இவர் மாவட்ட சுகாதார அலுவலர் வட்டாரத்தில் வருகின்ற நகராட்சி சுகாதார அலுவலர்களையும் நிர்வாக முறையிலும், தொழில் முறையிலும் கட்டுப்படுத்துவார். மக்கள் நல்வாழ்வு பணிகளை ஒழுங்காக செயல்படுத்துவதற்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒழுங்காக செயல்படுவதற்கும் பொறுப்பாளியாவார். மாவட்ட சுகாதாரப் பிரிவிற்கும் பொறுப்பளியான மாவட்ட சுகாதார அலுவலர் தன்னுடைய அதிகாரவரம்பில் வரும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு பொறுப்பாளியாவார். இவர் இப்பிரிவிற்குத் தலைவராகவும்' இதுவரை வருவாய் மாவட்டத்தின் மாவட்ட சுகாதார அலுவலர்கள் செலுத்திய உத்தரவுகளையும் செலுத்துவார்.

### 2. கிராம சுகாதாரப் பணிகள்

1980 எதிர்பார்ப்பு மக்கட் தொகையின்படி, இம்மாநிலத்தில் 47 மில்லியன் முதல் 48 மில்லியன் வரையில் மக்கள் வாழ்வதாக மதிப்பிடப்படுகிறது; அவர்களில் 33.5 மில்லியன் மக்கள் கிராமப் பகுதிகளில் வாழ்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் ஏனைய தொழிலாளர்கள், மாணவர்கள் இவர்களிடையே உள்ள வாராதத் தன்மை, நோய் இவைகளைக் குறைப்பதின் மூலம் அவர்களுடைய சமூக பொருளாதார நிலைமைகளை உயர்வுபடுத்த முடியும்

எனக் கருதி கிராம சமுதாயத்தினருக்கு சுகாதார வசதியை மேம்படுத்துவது அவசியம் என்பதை உணர்ந்து இந்த பரந்த எண்ணிக்கை கொண்ட கிராம சமுதாய மக்களுக்கு மிகச்சிறந்த மருத்துவ வசதிகளும் சுகாதார பாதுகாப்பும் அளிக்கப்படுவதை உறுதிப்படுத்த இவ்வரசு கண்ணுங்கருத்துமாய் இருக்கிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களையும் அதன் கிளை நிலையங்களையும் அமைத்ததிலிருந்தும் நடமாடும் சுகாதாரக் குழுக்களை ஏற்படுத்தியதிலிருந்தும் சிறு சுகாதார நிலையங்கள் தோற்றுவித்ததிலிருந்தும் இந்த எண்ணம் மிகத் தெளிவாக பிரதிபலிக்கிறது.

(i) ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

நமது மாநிலத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் (சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள்) இருக்கின்றன. அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளோடு 9 ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக நமது மாநிலத்தில் மொத்தம் 383 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்தோடு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மகப்பேறு நிலையங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவைகள் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கிளை நிலையங்களாகும். மொத்தம் 3,294 கிளை நிலையங்கள் இருக்கின்றன.

மருத்துவ சிகிச்சை அளிப்பது, ஆரம்ப சுகாதார நிலையங்களின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். நோயாளிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சைப் பிரிவுகளுக்கு வருகின்றனர். மருத்துவப் பரிசோதனை, ஆலோசனை, மருந்துகள் முதலியன பெறுகின்றனர். ஆரம்ப சுகாதார நிலையங்களில் இவ்வாறான பணிகளைப் பெற்று வருகின்ற வெளிப்புற நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. தற்சமயம் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையமும் 14,000 ரூபாய் மதிப்புள்ள மருந்துகளை பெற்று வருகின்றது. இது போதவில்லை என கண்டறிந்ததாலும், உள்ளூர் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடனும், 1980-81 ஆம் ஆண்டு 6,000 ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் கூடுதலாக வழங்க கருதப்பட்டுள்ளது. மேலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள 40 பழுது சீர் செய்ய முடியாத நிலையில் இருக்கின்ற குளிர்பதனப்பெட்டிகளை மாற்றவும் கருதப்பட்டுள்ளது. மருந்துகள் பதிவேடுகள் முதலியவைகளை பேணிபாதுகாக்கும் நோக்குடன் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் இரும்பு அலமாரி வழங்கவும் கருதப்பட்டுள்ளது. ஆரம்ப





சுகாதார நிலையங்களில் உள்ள வேலைப் பளுவைக் குறைக்கக் கருதி
வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பணிபுரிய 333 இளநிலை
யாளர் தட்டச்சர்கள் பதவிகளை ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது.
ஆம் ஆண்டு ரூ. 182.05 இலட்சம் மொத்தச் செலவில் 20 ஆரம்ப சு
நிலையங்களுக்கு மருந்தக கட்டிடங்கள் கட்டவும், 25 ஆரம்ப சு
நிலையங்களுக்கு பணியாளர் தங்குமிடங்கள் கட்டவும், 30 ஆரம்ப சு
நிலையங்களைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்டவும் ஆணை வழங்கியிரு
தற்சமயம் இத்திட்டத்தினை 17 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.
இலட்சம் மொத்தச் செலவில் விரிவாக்க கருதப்பட்டுள்ளது.

(ii) நடமாடும் சுகாதாரப் பணிகள் :

ஏற்கெனவே கூறியதுபோல் மாநிலத்தின் மிக மிக கவனிக்கத்
கிராமப்பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு மருத்துவப் பணிகள்
வதில் அரசின் முக்கியத்துவம் தொடர்ந்து இருந்து வருகிறது. இ
வத்தின் பகுதியாகவும், கிராமவாசிகளின் இருப்பிடங்களிலேயே சு
பாதுகாப்பு வழங்கும் நோக்குடனும் இவ்வரசு நாட்டிலேயே முதல
1977-78-ல் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து அப்பகுதிகளின்
தங்கிய கிராமங்களுக்கு சென்றுவர நடமாடும் மருத்துவக் குழுக்கள்
ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 1978-79-ல் மேலும் 100
சுகாதார நிலையங்களுக்கு இத்திட்டத்தை விரிவு படுத்தியது. 1979-
ஆண்டில், இன்னும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் சுக
குழுக்களை ஏற்படுத்த ஆணை வழங்கியுள்ளது. நடமாடும் சுக
குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் ப
பிற்சேர்க்கை 1-ல் தரப்பட்டுள்ளது.

மூன்று மருத்துவ அலுவலர்கள் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய
இத்திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது. ஒரு மருத்துவ அலுவலர் வெ
நோயாளிகளை ஆரம்ப சுகாதார நிலையங்களில் தங்கியிருந்து காலை
மாலையிலும் கவனித்துக்கொண்டிருப்பார். எஞ்சியுள்ள 2 ம
அலுவலர்கள் நோய்த் தீர்ப்பு, நோய்த் தடுப்பு பணிகளை கிராமங்
சென்று கவனிப்பார்கள். இவ்வாறாக ஒரு வார காலத்திற்குள் முழு
டாரமும் கவனிக்கப்படும். சிக்கலான நோய் உள்ளவர்கள் மருத்து
களில் உள்ள சிறப்பு மருத்துவர்களிடம் காண்பிக்கும்படி அனுப்பப்
றனர். ஒவ்வொரு கிராமத்திலும் கிராம நலக் குழுக்கள் அமை

கின்றன. இக்குழுவின் உறுப்பினர்கள் சுகாதாரக் கல்வியை பரப்புவதிலும் மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்கு ஒருமித்த மக்கள் ஆதரவை திரட்டுவதிலும் உதவி புரிவர்.

நடமாடும் சுகாதார குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் தற்சமயம் ரூ. 15,000 மருந்துகளுக்காக பட்ஜெட்டில் வழங்கப்படுகிறது. இத்தொகை ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகளுக்காக வழங்கப்படுகின்ற 14,000 ரூபாய்களோடு சேர்த்துத் தரப்படுவதாகும்.

### (iii) சிறு சுகாதார நிலையங்கள் :

கூட்டுறவு அடிப்படையில் மக்களுக்கு விரிவான சுகாதார பாதுகாப்பு பணிகளை வழங்க தொண்டு நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனம் 5000 மக்களுக்கு ஆண்டொன்றுக்கு சிறு சுகாதார நிலையத்திற்கு ரூ. 18,000 மொத்தச் செலவில் தெளிவமைந்த சுகாதாரப் பணிகள் வழங்கும்படி ஏற்பாடு செய்யும். ஒரு சிறு சுகாதார நிலையத்தில் ஒரு முழுநேர ஆண் சுகாதார பணியாளரும், மூன்று முதலுதவியாளர்களும் அமர்த்தப்படுவர். மருந்துகளுக்காக ரூ. 3,000 ஒதுக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு உயர்ந்த அளவு 9000 ரூபாய்க்கு உட்பட்டு மொத்தச் செலவில் 50 சதவீதத் தொகையை மானிய உதவியாக மாநில அரசு வழங்குகிறது. தொண்டு நிறுவனம் நன்கொடைகள் பெறுவதன் மூலமோ அல்லது பயனடைபவர்களிடமிருந்து பணம் வசூலிப்பதின் மூலமோ எஞ்சியுள்ள 9000 ரூபாய் செலவை ஏற்கும். சிறு சுகாதார நிலையம் ஒன்றினைத் தொடங்க, தொண்டு நிறுவனங்கள் தேவையான கட்டிடம், சாதனங்கள், மேசை, நாற்காலிகள் முதலியவற்றை தங்கள் நிதியிலிருந்து ஏற்படுத்திக் கொள்வார்கள். தொண்டு நிறுவனங்களின் நிதிப்பற்றாக் குறையைத் தவிர்க்கக் கருதி அரசு பின்கண்டவாறு 3 தவணைகளில் ரூ. 9000 மானியத் தொகையை வழங்குமாறு ஆணையிட்டுள்ளது :—

1. முதல் தவணைத் தொகையான ரூ. 3000, ஏப்ரல், மே மாதங்களில்,
2. இரண்டாவது தவணைத் தொகையான ரூ. 3,000 செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில்,
2. மூன்றாவதும் இறுதியுமான தவணைத் தொகை ரூ. 5,000—கணக்குகள் ஆய்வு செய்யப்பட்ட பிறகு.



இதுவரை அரசு 164 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்க ஆணை வழங்கியுள்ளது. தொண்டு நிறுவனங்களிடமிருந்து ஊக்கம் தரப்படும் வகையில் விண்ணப்பங்கள் வருவதையொட்டி, 1980-81 ஆம் ஆண்டில் அரசு, மேலும் சிறு சுகாதார நிலையங்களை அமைப்பதில் உதவி புரிய கருதியிருக்கிறது.

### (iv) பள்ளி சுகாதாரப் பணிகள் :

பள்ளி சுகாதாரப் பணிகள் திட்டம் 1965-ல் தொடங்கப்பட்டது. 1978-79 வரை, இத்திட்டம் 63 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 5 நகராட்சிகளிலும் செயல்பட்டு வந்தது. 1979-80 ஆம் ஆண்டு, இத்திட்டத்தை மேலும் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களில் விரிவாக்கியுள்ளது. பள்ளி சுகாதாரப் பணிகள் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் பட்டியல் பிற்சேர்க்கை 2-ல் தரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் பள்ளி மருத்துவப் பரிசோதனையைக் கவனிக்க கூடுதலாக ஒரு சுகாதாரப் பார்வையாளர் அமர்த்தப்படுகின்றனர். ஆரம்ப சுகாதார நிலையங்களை, பொறுப்பு வகிக்கும் மருத்துவ அலுவலர்களுக்கு அவர்களின் கூடுதல் வேலை கருதி மாதமொன்றுக்கு ரூ. 50 மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலர் 6 முதல் 11 வயது வரை உள்ள 2000 பள்ளி குழந்தைகளை மருத்துவப் பரிசோதனை செய்யவேண்டும். உடல் நலம் குறைந்து காணப்படும் மாணவர்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறப்புச் சிகிச்சை தேவைப்படும் மாணவர்கள் மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். இக்கல்வி நிலையங்களில் உள்ள ஆசிரியர்களும், மாணவர்களும், சுகாதாரம், நோய்கள் ஆகியவை குறித்து சில தொடக்க நிலை விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கும் அவர்களது உடல்நலத்தைப் பேணுவதற்கான வழிவகைகளை தெரிந்து கொள்வதற்கும் சுகாதாரக் கல்வி முறை இப்பள்ளிகளில் கற்பிக்கப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டில் 1,37,866 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 1979-80-ல், மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1,71,072 ஆகும்.

## 8. தொற்று நோய்களை கட்டுப்படுத்தல்.

### (i) வாந்திபேதி (காலரா) :

இம்மாநிலத்தில் 7 நடமாடும் கொள்ளை நோய்ப் பிரிவுகள் மூலமும், 3 கொள்ளை நோய் கட்டுப்பாடு பிரிவுகள் மூலமும், 4 காலரா ஒழிப்பு பிரிவுகள் மூலமும் திருச்சியில் உள்ள ஒரு நடமாடும் மருத்துவப் பிரிவு மூலமும்,

சென்னையில் உள்ள 2 கொள்ளை நோய்ப் பிரிவுகள் மூலமும் தீவிரக் காலரா கட்டுப்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகளுடன் வடாற்காடு, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் 162 சிறப்பு காலரா பணியாளர்களும், 6 காலரா மேற்பார்வையாளர்களும் இருக்கின்றனர். சுகாதார ஆய்வாளர்களோ, அல்லது துப்புறவு ஆய்வாளர்களோ ஒவ்வொரு நாளும் அரசு மருத்துவமனைகளுக்குச் சென்று ஏ.ஜி.ஈ./காலரா நோய் சம்பந்தப்பட்டவர்களைப் பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து வருகிறார்கள். அவர்கள், சிகிச்சைப் பெற்று வருகின்றவர்களது எண்ணிக்கை பற்றிய அறிக்கையை காலரா சுகாதார அலுவலர்களிடமும், மாவட்ட சுகாதார அலுவலர்களிடமும் உடனே அனுப்புகிறார்கள்.' இப்பணியாளர்கள் இம்மாவட்டங்களின் தீவிரமாக நோய்ப்பரவும் பகுதிகளுக்கு சென்று வருகின்றனர். பெருமளவில் தடுப்பூசிகள் போடுதல், நீர்நிலைகளில் குளோரின் மருந்து தெளித்தல், சுற்றுப் புறங்களை துப்புறவாக வைத்திருத்தல் போன்ற நோய்த்தடுப்பு கட்டுப்பாடு நடவடிக்கைகளை கவனிக்கின்றனர். பல்வேறு பிரிவுகளின் வண்டிகள், நோய்த்தணிப்பு நடவடிக்கைகளோடு, மக்களையும், சாமான்களையும் மிகமிக அருகிலுள்ள சிகிச்சை அளிக்கும் நிலையங்களுக்கு அப்புறப்படுத்தி அழைத்துச் செல்ல பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறு மாவட்டங்களில் உள்ள 64 ரிசர்வ் சுகாதார ஆய்வாளர்கள் கூட நோய் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகளை கவனிக்கின்றனர். சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது நிவாரணப் பகுதிகளில் துப்புறவு ஏற்படும், வண்ணம் எல்லாவகையிலுமான குடிக்கும் நீர்நிலைகளில் குளோரின் மருந்தினைத் தெளிக்கும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. களப் பணியாளர்களுக்கு விரிவான வகையில் அறிவுரைகள் கூட வழங்கப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகளினால் வாந்திபேதி நோய்கள் எங்கும் ஏற்படா வண்ணம் தடுக்கப்பட்டிருக்கின்றன. 1979-80 ஆம் ஆண்டில் ஏ.ஜி.ஈ.யால் 11241 பேர்கள் பாதிக்கப்பட்டு 390 பேர் இறந்துள்ளனர்; காலரா நோயினால் 1391 பேர்கள் பாதிக்கப்பட்டு, 21 பேர் இறந்துள்ளனர்.

(ii) **பிளேக் :**

தமிழ்நாட்டில் 1965 முதல் பிளேக் நோய் முற்றிலும் எங்கும் இல்லை. இருந்தாலும் இந்நோய், தமிழ்நாடு எல்லைக்குட்பட்டிருக்கும் ஆந்திரப் பிரதேசம், கர்நாடக மாநிலங்களில் காட்டியல்பான கொறி விலங்குகளின் மூலம் பரவுவதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்திய அரசின் தேசிய தொற்று நோய் நிறுவனம் முந்நாளிலிருந்தே பிளேக் நோய் மனிதர்களிடையே பரவுவதாக கருதப்படும் வடாற்காடு, கோயம்புத்தூர், தர்மபுரி, உதகமண்டலம்



மாவட்டங்களில், மனிதர்களிடையே பரவும் பிளேக் நோயைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பிளேக் நோய் கட்டுப்பாடு நடவடிக்கைகளை தொடரும்படி நம்மை கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆகையால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இப் பிளேக் நோய் பரவும் மாவட்டங்களில் சிறப்பு பணியாளர்களைக் கொண்டு பிளேக் நோய் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(iii) **தேசிய மலேரியா ஒழிப்பு திட்டம் ;**

நமது மாநிலம் 1958-லிருந்து மத்திய அரசின் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றி வந்தது. 1977 ஆம் ஆண்டு முதல், தேசிய மலேரியா ஒழிப்புத்திட்டத்தின் திருத்தப்பட்ட செயல்முறை திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. பூச்சிமருந்து தெளிப்பது, மலேரியா கூட்டுப்புழு வளர்ச்சியை ஒழிப்பது ஆகிய நடவடிக்கைகளின்மூலம் மலேரியா நோய் பரவுவதைத் தடுப்பதற்கான ஏனைய ஆதரவான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், காய்ச்சல் கண்டவர்களை முறையாகக் கண்காணிப்பதன் மூலம் மலேரியாக் காய்ச்சலைக் கண்டறிந்து அனைத்து மலேரியா நோய்களுக்கும் சிகிச்சை அளிப்பதன்மூலம் நோயுற்ற நிலையையும் இறப்பு விகிதத்தையும் குறைப்பது அல்லது தடுப்பதுவே இதன் நோக்கமாகும்.

இம்மாநிலத்தில் மலேரியா பிரச்சினை சில கிராம பகுதிகளிலும் நகரப் பகுதிகளிலும் காணப்படுகின்றது. அப்பகுதிகளாவன :

(1) கிராமப்பகுதிகள் : (அ) வடாற்காடு, தென்னாற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் பெண்ணையாறு ஆற்றினை யொட்டியுள்ள பகுதிகள்.

(ஆ) இராமேஸ்வரம் தீவு உட்பட இராமநாதபுரம் மாவட்டத்தின் கரையோரப் பகுதிகள்.

(2) நகர்பகுதிகள் : சென்னை, சேலம், ஈரோடு, கரூர், தூத்துக்குடி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, வேலூர் திருச்செங்கோடு.

[1980 ஜூலை 23

1970-லிருந்து 1979 வரையிலான ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு :—

| | மலேரியா நோய் பாதித்ததாக பதிவு செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை. |
|---|---|
| 1970 | 1,313 |
| 1971 | 1,557 |
| 1972 | 1,518 |
| 1973 | 4,581 |
| 1974 | 19,687 |
| 1975 | 74,579 |
| 1976 | 1,03,921 |
| 1977 | 23,300 |
| 1978 | 76,227 |
| 1979 | 91,807 |
| 1980 (மே வரை) | 23,043 |

1978 ஆம் ஆண்டு 76,227 பேர் பாதிக்கப்பட்டார்கள்; ஆனால் 1979-ல் 91,807 பேர் பாதிக்கப்பட்டார்கள். இராமேஸ்வரம் தீவிலும் சென்னை நகரிலும் திடீரென்று மலேரியா நோய் பரவியதால் இந்த உயர்வு ஏற்பட்டது. இராமேஸ்வரம் தீவில். மட்டும் 28,000 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள். சென்னை நகரில் 33,450 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள். 1979-ல் பாதிக்கப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையில் இது மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் அதிகமாகும். இராமேஸ்வரம் தீவில் மலேரியா நோயைக் கட்டுப்படுத்த வாராவாரம் காய்ச்சல் கண்டவர்களை தீவிரமாக கண்காணிப்பது, மலேரியா கொட்டுப்புழு வளர்ச்சியை ஒழிப்பது, பூச்சி மருந்து தெளிப்பது போன்ற தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தீவில் மலேரியா நோய் கட்டுப் பாடு முயற்சியில் தீவிரமாக்கப்பட்டு சிறப்பு பணியாளர்கள் வேறு அமர்த்தப் பட்டுள்ளனர்.



### நகர்ப்புற மலேரியா திட்டம்.

மாநிலத்தில் மலேரியா நோய் பாதிக்கப்பட்டவர்களில் 50 சதவீதத்தினர் நகர்ப்புறங்களில் உள்ளனர். நகர்ப்புற மலேரியா நோய் பிரச்சினை, நகர்ப் புற மலேரியா திட்டத்தினை செயல்படுத்துவதின் மூலம் தீர்க்கப்பட்டு வரு கிறது. இத்திட்டம் சென்னை நகரம், சேலம், இராசிபுரம், தூத்துக்குடி, வேலூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி. மற்றும் திண்டுக்கல் நகராட்சிகளிலும் சேலம் மாவட்டம் எல்வம் பின்னை என்ற இடத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மலேரியா நோயால் அவதிப்பட நேரிடுகின்ற மக்கள் வாழும் நகராட்சிப் பகுதிகளில் நகர்ப்புற கண்காணிப்பினை செயல்படுத்தும் நோக்குடன், படிப் படியாக கொண்டு வரும் திட்டத்தின்படி சென்னை, மதுரை, கோயம்புத்தூர், வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 5 நகரங்களில் ஆய்வகப் பணிகள் அடங்கிய கண்காணிப்பு பிரிவுகள் ஏற்படுத்த ஆணை வழங்கியுள்ளது. இப்பிரிவுகளில் இரத்த ஸ்லைடுகளை பரிசோதிக்கும் வசதிகள் இருக்கும்.

மலேரியா நோய் பரவுவதை தடுப்பதற்காக, சென்னை நகரில் தற்சமயம் மலாத்தியனுடன் மருந்து புகை அடிக்கும் (தெர்மோ ஃபோக்கிங்) நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு மேலும் சில நகர்ப் பகுதிகளில் இந்நடவடிக்கை விரிவாக்க கருதப்பட்டுள்ளது. மைய அரசு நகர்ப்பகுதிகளில் உபயோகிப்பதற்காக மூன்று மருந்துபுகை அடிக்கும் இயந் திரங்களை வழங்கியிருக்கின்றது. மேலும் 2 இயந்திரங்கள் நடப்பாண்டில் வழங்க ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### (iv) யானைக்கால் நோய் :

யானைக்கால் நோய் 'க்யூலக்ஸ்' என்ற கொசுக்களினால் ஏற்படுகிறது. நம் மாநிலத்தில் இந்நோய் உள்ளது. இது அதிகமாக பரவும் பகுதிகளில் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தை 1958 ஆம் ஆண்டிலிருந்து நிறை வேற்றி வருகிறோம். இதுவரை 15 யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டு பிரிவுகள் ஒரு ஆய்வுப்பிரிவு 13 யானைக்கால் நோய் சிகிச்சைப் பிரிவுகள் ஏற் படுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் கண்டறியப்பட்டவர்களது விவரம் கீழே தரப்படுகிறது :—

| ஆண்டு. | எண்ணிக்கை. |
|---|---|
| 1975 | 6,499 |
| 1976 | 7,359 |
| 1977 | 10,060 |
| 1978 | 10,020 |
| 1979 | 10,897 |

1980-81 ஆம் ஆண்டில் மேலும் 4 யானைக்கால் நோய் கட்டுப் பாட்டுப் பிரிவுகளும், 20 யானைக்கால் நோய் சிகிச்சைப் பிரிவுகளும் ஏற்படுத்த கருதப் பட்டுள்ளது.

(v) நரம்புச் சிலந்திநோய் :

நீலகிரி கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் தவிர ஏனைய எல்லா மாவட் டங்களில் இந்நோய் காணப்படுகிறது. எனவே, நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத் தின் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) நரம்புச் சிலந்தி நோய் கண்டுள்ளவர்களைக் கண்டறிதலும் அவர் களுக்கு சிகிச்சையளித்தலும்

(2) இந்நோயைப் பரவச் செய்யும் 'சைகிலோப்' என்னும் ஒருவகை நந்தையைக் கொல்வதற்காக ஆறு வாரங்கட்கு ஒருமுறை நோய்க்கிருமிகள் பரவி உள்ள நீர்நிலைகளில் 4 பி.பி.எம். அளவில் பூச்சிக் கொல்லி மருந்து தெளித்தல்.

1979 ஆம் ஆண்டில், 9 கிராமங்கள் இந்நோயால் பாதிக்கப்பட்டதென்று கண்டறியப்பட்டது. 25 பேர்கள் இதனால் பாதிக்கப்பட்டனரென்று கண்டு பிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.



(vi) யாஸ் (சரும) நோய் :

யாஸ் (சரும) நோய் ஒழிப்புத் திட்டத்தின் ஒரு பிரிவு, சேலம் மாவட்டத் திலுள்ள ஆத்தூரில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு கல்ராயன் மலைப்பகுதிகளில் ஆய்வு நடத்தி வருகிறது. 1979 ஆம் ஆண்டில் இப்பிரிவு 50 'யாஸ்' (சரும) நோயாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தது.

(vii) மூளைக் காய்ச்சல் :

மூளைக் காய்ச்சல் என்றழைக்கப்படும் (Encephalitis) எனும் நோய் புதிய நோயல்ல. இதற்கு முன்பே காணப்படுகின்ற நோய்தான் இது. 1977 ஆம் ஆண்டிலிருந்து இந்நோய் நாட்டின் சில பகுதிகளில் கொள்ளை நோயாக உருவெடுத்து பரவியது. இந்நோய் ஜப்பானிய நுண்கிருமிகளால் Japanees Virus B strain ஏற்படுகிறது. இதை ஜப்பானிய விஞ்ஞா னிகள் முதன்முதலில் கண்டறிந்ததால் இப்பெயர் ஏற்பட்டது. நீர் பறவை கள், பன்றிகள் போன்ற மிருக இனங்களிலிருந்து க்யூலெக்ஸ் என்ற ஒருவகை கொசு இனத்திடம் பரவி அதன் மூலம் மனிதர்களிடம் பற்றிக்கொண்டு பரவு கிறது. 1977 அக்டோபரில் திருநெல்வேலி மாவட்டத்தில் கொள்ளை நோய் வடிவில் இந்நோயின் ஆரம்ப குறிகள் தென்பட்டன. 1978 மார்ச்சில் திரு நெல்வேலி மாவட்டத்திலும் 1978 டிசம்பரில் தென்னாற்காடு மாவட்டத்திலும் இந்நோய் அதிக அளவில் காணப்பட்டது. 1980 மேயிலும் ஜூனிலும் தென் னாற்காடு மாவட்டத்தில் சில நபர்களிடம் இந்நோய் இருப்பதாக கண்டறியப் பட்டது. இந்நோயைக் கட்டுப்படுத்த அரசு உடனடியான பலன் தரக் கூடிய நடவடிக்கைகள் மேற்கொண்டது. தீவிர கொசு கட்டுப்பாடு மக்கள் நல்வாழ்வு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு, மிகப் பெரிய அளவில் இந் நோய் பரவாமல் தடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அரசு மருத்துவ நிலையங்களில் சிகிச்சையளிக்கப்பட்டது. பூனாவிலுள்ள நுண் கிருமிகள் ஆராய்ச்சி மையத்தின் உதவியுடனும், மக்கள் நல்வாழ்வு அதிகாரி களின் உதவியுடனும் மதுரை மருத்துவக் கல்லூரியின் நுண்ணுயிரியல் துறை யானது நோய் மேலும் விரிவான அளவில் பரவமால் தடுக்கப்படுதலை உறுதிப்படுத்த, நோய் பரவும் இடங்களை கண்டு பிடிப்பதில் தீவிர முயற் சிகள் மேற்கொண்டது. இந்நோயைத் தடுப்பதற்காகவும் நோய் வந்தவர் களை காப்பாற்றுவதற்காகவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பொது மக்களுக்கு தெரிவிக்கும் குறிக்கோளுடன், விளம்பர நடவடிக்கைகள் செய் தித்தாள்களின் மூலமாகவும், அகில இந்திய வானொலி மூலமாகவும், தொலைக்

காட்சி மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டது. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக பாதிக்கப்பட்ட இடங்களில் துண்டுப் பிரச்சாரங்கள், சிறு வெளியீடுகள் வெளியிடப்பட்டன. மருத்துவ அலுவலர்கள் மற்றும் ஏனையோருக்கு, இம்மாதிரி நோய் கண்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வழிகாட்டி நெறிகளும் வெளியிடப்பட்டிருக்கின்றன. எடுக்க வேண்டிய நோய்த் தடுப்பு மற்றும் நோய்த்தீர்ப்பு நடவடிக்கைகளை முடிவு செய்வதில் இந்நோய் மற்றும் நுண்கிருமிகளை கண்டறிய வேண்டியது அவசியமானதாக இருக்கிறது. பூனா தேசிய நுண்கிருமிகள் நிலையத்தின் கூட்டுமுயற்சியுடன் மதுரையிலும் சென்னையிலும் களப்பணி நுண்கிருமியியல் நிலையம் ஒன்றினை அமைத்திடலாமா என அரசு பரிசிலனை செய்து வருகிறது.

(viii) விரிவு படுத்தப்பட்ட நோய் தடுப்பூசித் திட்டம், (முன்னாள் தேசிய பெரியம்மை ஒழிப்புத்திட்டம்.

கீழ்க்காணும் நோய்களின் மூலம் நோயுற்ற அளவும் இறப்பு விதமும் ஏற்படுகிறது:

1. தொண்டை அடைப்பான், 2. கக்குவான், 3. இசிவுநோய், 4. இளம்பிள்ளைவாதம் 5. டைபாய்டு காய்ச்சல், 6. காசநோய் 7. தட்டம்மை.

இதனை, இந்நோய்கள் கண்ட 2 வருடங்களுக்கு குறைந்த வயதுடைய அதிக எண்ணிக்கை கொண்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதின் மூலமும் கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கு இசிவு நோய் வராமல் பாதுகாப்பதற்காக இசிவு நோய் தடுப்பூசி போடுவதின் மூலமும் குறைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டப் பணியாளர்கள் பெரியம்மை நோயை ஒழிப்பதில் பெற்ற விலைமதிப்புள்ள அனுபவம் இத்திட்டத்தை செயல்படுத்துவதில் தற்சமயம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மக்கள் நல்வாழ்வு பணியாளர்களாகிய மருத்துவ அலுவலர்களும், கோட்ட சுகாதார ஆய்வாளர்களும், தடுப்பூசி போடுபவர்களும் இத்திட்டத்தில் அப்படியே பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

மைய அரசால் இலவசமாக வழங்கப்பட்ட டைபாய்டு நோய் தடுப்பு மருந்தாகிய 4083 மருந்துபாட்டில்கள் 5, 6 வயதில் இருக்கின்ற ஆரம்பப் பள்ளி குழந்தைகளுக்கு தடுப்பு மருந்தாக செயல்படுத்தும்படி நகராட்சி சுகாதார அலுவலர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது.



முதன் முதலில் நகர்ப்பகுதிகளில் இளம்பிள்ளை வாதத் தடுப்பூசித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

தட்டம்மை தடுப்பூசிகளை பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் பற்றி மருத்துவ அலுவலர்களின் ஒத்துழைப்புடன் ஆய்வு நடத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டுக்குள் புதிதாக பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் இந்நோய்கள் வராதவாறு தடுப்பூசி போடுவதே இத்திட்டத்தின் இறுதி இலட்சியமாகும். 1976 முதல் 1979 வரையிலான காலங்களில் ஆரம்ப தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளவர்கள் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1976 | ... | 13·76 | இலட்சம் |
| 1977 | .. | 12·77 | ,, |
| 1978 | .. | 11·28 | ,, |
| 1979 | — | 9·40 | ,, |

உலக குழந்தை ஆண்டு நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக தொண்டை அடைப்பான் நோய்த்தடுப்பூசிகள் மற்றும் இசிவு நோய்த்தடுப்பூசிகள் 6 முதல் 8 வயது வரையுள்ள ஆரம்பப்பள்ளிக் குழந்தைகளுக்கு போடப்பட்டன. விவரம் பின்வருமாறு :—

| | 1978 | | | 1979 | | |
|---|---|---|---|---|---|---|
| | முதல் ஊசி | 2வது ஊசி | தீவிர அளவு | முதல் ஊசி | 2வது ஊசி | தீவிர அளவு |
| கிராமம் | 207368 | 72493 | 1124 | 215013 | 229961 | 4046 |
| நகரம் | 11612 | 891 | 385 | 27714 | 30572 | 437 |

1980-81 ஆம் ஆண்டில் மாநிலத்தில் விரிவுப்படுத்தப்பட்ட தடுப்பூசித் திட்டத்தின்கீழ், குழந்தைப் பருவ நோய்களான மேலே சொன்ன 7 நோய்களும் வருவதை கண்காணிக்கும் பணிகள் செய்வதை சிறப்பாக வலியுறுத்தப்பட்டு, அதற்காக கொள்ளை நோயியல் பணிகள் தீவிரப்படுத்தப்படும். மேலும் குழந்தைகள் நோய்களிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பதற்கு தடுப்பூசி போடுதலை அதிகப்படுத்த பிற அமைப்புகளையும் இணைத்துக் கொண்டு இணைந்து செயல்படுத்தப்படும்.

(ix) முத்தடுப்பு ஊசித்திட்டம்.

கக்குவான், தொண்டை அடைப்பான், இசிவு நோய் ஆகிய மூன்று நோய் களுக்கு எதிராக 5 வருடங்களுக்கு குறைவான வயதுடைய குழந்தைகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலம் தடுப்பூசி போடப்படும். முத்தடுப்பு ஊசித்திட்டம் தமிழ்நாட்டில் 1964 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் கிராமப் பகுதிகளில் முத்தடுப்பு ஊசி போடுவதைத் தீவிரப்படுத்த 13 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத் திலும், மாவட்ட மக்கள் நல்வாழ்வு செவிலியர் ஒருவர் அமர்த்தப்பட்டார். இத்திட்டத்தை மேம்படுத்த படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் கூடுதலாக சுகாதாரப் பார்வையாளர் ஒருவர் அமர்த்தப்படுகின்றார்.

1978-79 வரை, 110 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மேற்சொன்னவகை யில் சுகாதாரப் பார்வையாளர்கள் கூடுதலாக அமர்த்தப்பட்டனர். 1979-80-ல் இத்திட்டம், மேலும் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. 1980-81-ல், இத்திட்டத்தை, மேலும் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நீட்டிப்பது என்று கருதப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வுத்துறையால் முத்தடுப்பூசி போடப்பட்ட குழந்தை களின் எண்ணிக்கை (0—5 வயது வரை) பின்வருமாறு :—

| ஆண்டு | முத்தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1976—77 | 2,62,209 |
| 1977—78 | 2,51,445 |
| 1978—79 | 2,80,915 |
| 1979—80 | 3,73,647 |

* தாய் சேய் நலப்பணிகள்.

மகப்பேறுக்குரிய வயதுடைய மகளிர் (15—45 ஆண்டுகள்) குழந்தைகள் (0—16 ஆண்டுகள்) சுகாதார கேடுகளுக்கு எளிதில் இரையாகிறார்கள். அவர் அவர்கள் நமது மக்கள் தொகையில் 60 சதவீதத்தினராக உள்ளனர். அவர் களுடைய சுகாதார மேம்பாட்டுக்காகவும், நோய்த்தடுப்புக்காகவும், அவர் களிடையே தோன்றும் நோய்களை விரைவில் கண்டறிந்து சிகிச்சையளிக்க



வும் அக்கறை காட்டப்பட்டு வருகிறது. எனவே முதல்தரமுள்ள, மகப்பேறு மற்றும் குழந்தை நலப்பணிகளுக்கான ஏற்பாடு எப்போதும் அரசின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

பேறுகால முந்தைய கவனம், பிரசவ கவனம், பேறுகாலப் பின்கவனம், குழந்தைகள் கவனம், பள்ளி செல்லா வயதுடைய பாலர்கள் கவனம், பள்ளி சுகாதாரத் திட்டம் ஆகியவை தாய்-சேய் நலப் பணிகளில் அடங்கும். மாநிலத் தில் இப்பணிகள் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகவும், மகப்பேறு நிலையங்கள் மூலமாகவும், மகப்பேறு இல்லங்கள் மூலமாகவும் வழங்கப்படு கின்றன. தற்சமயம், ஊராட்சி ஒன்றியங்கள் நிர்வகிக்கும் 2,834 மகப்பேறு நிலையங்களும். நகராட்சிகள், மாநகராட்சிகள் நிர்வகிக்கும் 372 மகப்பேறு நிலையங்களும், 128 மகப்பேறு இல்லங்களும் பூவிருந்தவல்லி மக்கள் நல் வாழ்வு நிலையம் நிர்வகிக்கும் 1 மகப்பேறு நிலையமும், 7 மகப்பேறு இல்லங் களும், பின்தங்கிய பகுதித் திட்டத்தின்கீழ் 95 மகப்பேறு இல்லங்களும், பல் நோக்கு சுகாதார பணியாளர்கள் திட்டத்தின் கீழ் 460 கிளை நிலையங்களும் இருக்கின்றன. இந்நிலையங்களில் பணிபுரியும் மகப்பேறு உதவியாளர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களும் சுகாதார பார்வையாளர்களும் வழிகாட்டுகின்றனர். இந் நிலையங்களை பராமரிப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களும், நகராட்சிகளும், மாநகராட்சி களும் உதவி மான்யத் தொகை பெறுகின்றன.

(xi) வெள்ள நிவாரண நடவடிக்கைகள்.

1979 நவம்பர் முதல் வாரத்திலிருந்து பெய்த பெருமழை காரணமாக தமிழ் நாட்டின் பெரும்பான்மை பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டன. பொதுமக்களுக்கு ஏற்பட்ட சுகாதாரக்கேடுகளை களையவும் முன்னமேயே திட்டமிடப்பட்டது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் நிவாரண நடவடிக்கை களை மேற்கொள்ள அனைத்து மக்கள் நல்வாழ்வுப் பணியாளர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டனர்.

போர்கால அடிப்படையில் வெள்ள நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன. பாதிக்கப்படாத பகுதிகளில் இருந்த பணியாளர்களும், ஊர்திகளும் நிவாரண நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்தும் வகையில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு திருப்பிவிடப்பட்டன. அழுக்கு, கழிவுப் பொருட்கள், ஈக்கள் மூலமாகவும் துப்புறவுக் குறைவினாலும் சுகாதாரக் குறைவினாலும் பரவ வாய்ப்புள்ள உணவு, நீர் மூலம் ஏற்படுகின்ற நோய், களுக்கு எதிராக தடுப்பு நடவடிக்கைகள் பயன்தரும் வகையில் மேற்கொள்ளப்

பட்டன. பாதிக்கப்பட்ட பகுதிவாழ் மக்கள் அனைவருக்கும் வாந்திபேதி, டைபாய்டு நோய் வராத வண்ணம் தடுப்பூசிகள் போடப்பட்டன. பாதிக்கப் பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து குடிநீர் நிலைகளிலும் தொடர்ச்சியாக வும் முறைப்படியும் மருந்திடப்பட்டது. சுற்றுப்புற துப்புரவு, உணவு நீர் இவைகளில் சுகாதாரம் ஆகியவற்றின் மேம்பாட்டில் துரிதமுறையில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. சிறு காயங்கள் அடைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரூ. 39.25 இலட்சம் மொத்த மதிப்பில் காலரா தடுப்பூசிகள் போடப்பட்டன.

(xii) பொருட்காட்சிகளும் திருவிழாக்களும்.

மாநிலத்தில் அநேக பொருட்காட்சிகளும், திருவிழாக்களும் நடத்தப் பட்டன. இப்பொருட்காட்சிகளிலும். திருவிழாக்களிலும் செய்யப்பட்ட துப் புரவு ஏற்பாடுகள் மக்கள் நல்வாழ்வுத்துறை அலுவலர்களால் மேற்பார்வை யிடப்பட்டன. இப்பொருட்காட்சிகளிலும் திருவிழாக்களிலும் செய்யப் பட்ட விரிவான துப்புரவு ஏற்பாடுகள் காரணமாக, கொள்ளை நோய்கள் ஏதும் பரவாமல் எல்லாட பொருட்காட்சிகளும் திருவிழாக்களும் நடைபெற் றன. சமீபத்தில் கும்பகோணத்தில் கொண்டாடப்பட்ட மகாமகம் திரு விழாவையொட்டி நடவடிக்கைகளை திறம்பட இயக்கவும், கட்டுப்படுத்தவும், மேற்பார்வையிடவும் மான்யமாக ரூ. 21.24 இலட்சம் அரசு வெளியிட்டது குறிப்பிடத்தகுந்தது.

**பார்வைக் கோளாறு மற்றும் கண் குருடாவதை தடுத்தலும், கட்டுப் படுத்தலும், மற்றும் டிராக்கோமா நோய்க் கட்டுப்படுத்தலும் ஆகிய தேசியத்திட்டம்.**

மைய அரசு பார்வைக்கோளாறு மற்றும் கண் குருடாவதை தடுத்தலும். கட்டுப்படுத்தலும் மற்றும் டிராக்கோமா நோய்க் கட்டுப்படுத்தலும் ஆகிய தேசியத்திட்டம் ஒன்றினை வரைந்தது. இத்திட்டத்தின்படி மைய அரசு ஒரு நடமாடும் பிரிவிற்கும், 45 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், கருவி களாகவும், பொருட்களாகவும் இம்மாநிலத்திற்கு மைய உதவியை வழங்கக் கருதியது. அதில் மேலும் 5 மாவட்ட மருத்துவ மனைகளை வலுப்படுத்து வதற்கும் ஒரு மருத்துவக் கல்லூரியின் கண் சிகிச்சைப் பிரிவினை உயர் நிலைப்படுத்துவதற்கும் உதவி புரிய கருதியது.



மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் இத்திட்டத் தினை செயல்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது. அதற்கேற்ப, அரசு ரூ. 1.37 இலட்சம் செலவில் ஒரு நடமாடும் கண் மருத்துவப் பிரிவு ஒன்று ஏற்படுத்த ஆணை வழங்கியுள்ளது. இப்பிரிவு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையோடு இணைக்கப்படும். மதுரை, இராமநாதபுரம், புதுக் கோட்டை மாவட்டங்களுக்குட்பட்டு இருக்கும். பின்தங்கிய மாவட்டங் களின் தேவைகளை நிறைவு செய்ய ரூ. 5.00 இலட்சம் செலவில் மதுரை அரசு ராஜாஜி மருத்துவ மனையின் கண் மருத்துவத்துறையை உயர்நிலைப் படுத்தவும் அரசு ஆணை வழங்கியிருக்கிறது. நிலையுள்ள கண் மருத்துவ கருவிகளை ரூ. 4.00 இலட்சம் செலவில் வாங்குவதற்காகவும் அரசு ஆணை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகங்கை, சாநாடுகாத்தான், பழனி, அறந்தாங்கி ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் உள்ள 30 படுக்கைகளை கண் மருத்துவ உள்ளிருப்பு சிகிச்சை நோயாளிகளுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்படும். இம்மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் ஒரு கண் சிகிச்சை உதவியாளர் (Refractionist) அமர்த்தப்படுவார். ஒவ்வொரு மருத்துவ மனையிலும் ரூ. 0.75 இலட்சம் மதிப்புள்ள மருந்துகளும், கருவிகளும் வழங்கப்படும். மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 45 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்துகளும், கருவிகளும் ரூ. 1.35 இலட்சம் மதிப்பிற்கு வழங்கப்படும். தற்சமயம் கண் சிகிச்சை உதவியாளர்கள் போதுமான அளவுக்கு இல்லை ஆதலால், மதுரை மருத்துவக் கல்லூரியில், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் சுகாதார ஆய்வாளர்களுக்கும் மருத்துவ அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலம் சுகாதார ஆய்வாளருக்கு 4 வாரங்கள் ஆகும்; மருத்துவ அலுவலர்களுக்கு 2 வாரங்கள் ஆகும்.

இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தவும், மைய அரசுடன் தொடர்பு இருப்பதற்காகவும், கண் மருத்துவத்தில் ஒரு சிறு குழுவும் (Cell ஒரு மாநில ஆலோசனை குழுவும், ஒரு மாவட்ட கூட்டுக்குழுவும் அமைக்கப் பட்டுள்ளன.

**4. உணவில் கலப்படம் செய்வதைத் தடுத்தல் :**

உணவுப்பொருள்களில் கலப்படம் செய்வது சமூகத்திற்கு இழைக்கப்படும் கடுமையான தீங்கு ஆகும். சுகாதாரம் பற்றிய சட்டத்தின் வாயிலாகவும், சுகாதாரக் கல்வி மூலமாகவும் இத்திங்கினைக் கட்டுப்படுத்த முயற்சிக்கப்படு

கிறது. மக்கள் தரமான உணவுப்பொருள்களை மட்டுமே வாங்கவேண்டும்; தரம் குறைந்த, கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பொருள்களை விற்பனை செய்யப்படுவதாக சந்தேகிக்கின்றபோது அது குறித்து தகவல் அளிக்க வேண்டும்; மேலும் இவைகளின் மூலம் நல்ல உணவுப்பொருள்கள் விற்பனை செய்யப்படுவதற்கு, ஊக்கம் அளிக்கவேண்டும். இவைகளின் முக்கியத்துவம் குறித்து அவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் கிராமப்புறங்களிலும் நகர்ப் புறங்களிலும் பணியாற்றும் சுகாதார மேற்பார்வை ஆய்வாளர்கள், ஏனைய மக்கள் நல்வாழ்வுப் பணியாளர்கள் மூலமாக சுகாதாரம் பற்றிய அறிவுரை எடுத்துரைக்கப்படுகிறது. உணவில் கலப்படம் செய்பவர்கள், அவற்றைச் சேமித்து வைத்திருப்பவர்கள், விற்பவர்கள் ஆகியோர்மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த நான்காண்டுகளாக பரி சோதிக்கப்பட்ட உணவு மாதிரிகளின் புள்ளிவிவரம் கீழே தரப்படுகிறது :—

| | 1976–77 | 1977–78 | 1978–79 | 1979–80 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | 21,777 | 21,930 | 17,513 | 16,979 |
| கலப்படம் செய்யப் பட்டதாக கண்டறியப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | 5,432 | 3,994 | 2,809 | 2,404 |
| அபராதம் விதிக்கப் பட்ட எண்ணிக்கை. | 4909 | 5157 | 1183 | 613 |
| சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட எண்ணிக்கை. | 250 | [illegible]24 | 300 | 279 |
| வசூலிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை. | ரூ. 12,75,655 | ரூ. 14,11,781 | ரூ. 6,44,391 | ரூ. 4,07,26[illegible] |





உணவில் கலப்படம் செய்வதைத் தடுக்கும் சட்டத்தின் கீழ், உணவுப்பொருட் களின் மாதிரிகள் கிண்டி, கிங் நிறுவனத்தின் அரசு ஆய்வாளரது உணவு ஆய்வக பரிசோதனைக்கூடத்திலும், கோயம்புத்தூர் தலைமை மக்கள் நல் வாழ்வு, ஆய்வுக் கூடத்திலும், சென்னை மாநகராட்சியின் ஆய்வாளரகத் திலும் பரிசோதிக்கப்படுகின்றன. மேலும் அதிக அளவில் உணவுப்பொருள் களின் மாதிரிகளைப் பரிசோதிக்க வசதியாக மதுரை, தஞ்சாவூர், சேலம், பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் மேலும் நான்கு பரிசோதனைக் கூடங்கள் அமைக்க ஆணை வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த நான்கில், 1978-லிருந்து மதுரை, தஞ்சாவூரில் அமைக்கப்பட்டுள்ள பரிசோதனைக்கூடங்க ளில் உணவுப் பொருட்களின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. பாளையங்கோட்டையில் உணவு, ஆய்வக பரிசோதனைக்கூடம் கட்டி முடிக்கப் பட்டு, 1978 முதல் மருத்துவமனை உணவுப்பொருள்களின் மாதிரிகள் பரி சோதிக்கப்பட்டு வருகின்றன. 1978 ஆம் ஆண்டில் இதுபோல 41 உணவுப் பொருள்களின் மாதிரிகளும், 1979-ல். 534 மாதிரிகளும் பரிசோதிக்கப் பட்டன. இக்கூடம் சட்டபூர்வமான உணவு பொருள்களின் மாதிரிகளை பரிசோதிக்கும் முகமாக, தேவையான கருவிகளை விரைவில் கொண்டு இயங் கும். சேலத்தில் உணவு ஆய்வக பரிசோதனைக்கூடம் கட்டிமுடிக்கப்பட்டு தேவையான கருவிகளைக் கொண்டு விரைவில் இயங்கப்போகிறது.

1979 ஆம் ஆண்டில், கிண்டியிலும், கோயம்புத்தூரிலும் உள்ள உணவு ஆய்வக பரிசோதனைக்கூடங்களில் 48 உணவு ஆய்வாளர்களுக்கு உணவு ஆய் விலும், மாதிரியிலும் பயிற்சி அளிக்கப்பட்டது. இம்மாதிரியான பயிற்சித் திட்டங்கள் 1980-81 ஆம் ஆண்டிலும் நிறைவேற்றப்படும்.

### 5. மருந்து கட்டுப்பாடு.

மக்கள் நல்வாழ்வு மற்றும் நோய்தடுப்பு மருந்து இயக்குநர் மாநில மருந்து கட்டுப்பாடு அதிகாரி ஆவார். அவருக்கு ஒரு இணை மாநில மருந்து கட்டுப்பாடு அதிகாரியும், 2 உதவி மாநில மருந்து கட்டுப்பாடு அதிகாரிகளும் 59 மருந்து ஆய்வாளர்களும் 10 முதுநிலை மருந்து ஆய்வாளர்களும் உதவி புரிகின்றனர். மருந்து கட்டுப்பாட்டு நிறுவனத்தின் முக்கிய பணிகள் பின் வருமாறு :—

(அ) மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்பு விற்பனை, விநியோகம் முதலியவற்றை ஒழுங்குப்படுத்தி 1940 ஆம் ஆண்டு மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்களின் சட்ட விதிகளை அமுல் செய்வது;

(ஆ) மருந்துப் பொருட்களின் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப் படுகின்ற 1955 ஆம் ஆண்டு அத்தியாவசிய பொருட்கள் சட்டத் தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட 1970 ஆம் ஆண்டு மருந்துகள் (விலைக் கட்டுப்பாடு) விதித்துறைகளை செயல்படுத்துதல் ;

(இ) 1954 ஆம் நண்டு மருந்து மற்றும் மாந்திரீக நிவாரணங்கள் (தடைசெய்யப்படவேண்டிய விளம்பரங்கள்) சட்டப் பிரிவுகளை அமுல் படுத்துதல் ,

(ஈ) 1930 ஆம் ஆண்டு அபாய மருந்து சட்டத்தின்கீழ் அபாய மருந்து களை கைவசம் வைத்திருத்தல், தயாரித்தல், மற்றும் விற்பனை செய்தல் போன்றவைகளை ஒழுங்குப்படுத்துதல்.

மருந்து ஆய்வாளர்களால் கொண்டுவரப்படுகின்ற மருந்துகள் ஒப்பனைப் பொருள்களின் மாதிரிகள் மக்கள் நல்வாழ்வு மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்ற அரசு (மருந்து) ஆய் வாளராலும், மருத்துவக் கல்வி இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்ற அரசு (மருந்துகள் சிறப்பு) ஆய்வாளராலும் பரிசோதிக்கப்படு கின்றன. மருந்து பரிசோதிக்கும் கூடம் ஒன்று மக்கள் நல்வாழ்வு மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்குநரகத்தின் வளாகத்தில் சட்டி முடிக்கப் பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் கூடுதல் பொறுப்பினை கிண்டி கிங் நிறுவனத்தின் அரசு (உணவு) ஆய்வாளர் மேற்கொண்டுள்ளார்.

பல்வேறு சட்டங்களின்கீழ் சட்ட நடவடிக்கைகள் தொடர்வது ; உரிமம் பெற்றவர்கள் மீது நிர்வாக நடவடிக்கை எடுப்பது ஆகிய நடவடிக்கைகள் தவிர ஆல்கஹால் அல்லது போதையூட்டுகின்ற மருந்துகள், உறக்கம் மற்றும் மன மயக்கம் பொருள்கள் கலந்து தவறானமுறையில் தயாரிக்கப்படுகின்ற மருந்து மற்றும் டாய்லெட் தயாரிப்புகளை தடுப்பதற்காக சிறப்பு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தியாவசிய மருந்துகள் எப்போதும் கிடைக்கும்படி கண்காணிக்கப்பட்டு வருகிறது; பற்றாக்குறையென்று அறியும் பட்சத்தில் தீர்வு நடவடிக்கைகள் எப்போதெல்லாம் அவசியமோ அப்போ தெல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. மருந்து எதிர்விளைவுகள் குறித்து வரும் புகார்கள் முழுவதுமாக ஆராயப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் போலி மருந்துகள் பற்றி சினிமா ஸ்லைடுகள் மூலமாக அறியும்படி நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசு மருத்துவ நிலையங்களைச் சார்ந்த மருந்துகள் மற்றும் எனைய ஸ்டோர் சாமான்கள் களவு போவதைத் தடுக்கும் நோக்கத்துடன் சட்டத்தினை கொண்டுவர பரிசீலித்து வருகிறது.



அரசு மருத்துவ நிலையங்களில் வழங்கப்படும் மருந்துகள்தான் என்று சுலபமாக கண்டறிய மாத்திரைகளிலும் கட்டு உறைகளிலும் தேவையான குறி யீடுகள் இடும்படி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மைய அரசால் அமைக்கப் பட்ட ஹாத்திக்குழு செய்த பரிந்துரையின்படி மருந்து கட்டுப்பாடு நிறு வனம் ஒன்றினை தனி இயக்குநர் கொண்டு அமைக்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. இது விரைவில் செயல்படுத்தப்படும்.

6. சுகாதாரக் கல்வி :

மாநில சுகாதாரக் கல்வி நிலையம் கீழ்க்கண்ட இலட்சியங்களை கொண்டு அமைக்கப்பட்டது :

1. மக்கள் தங்களின் சுகாதாரப் பிரச்சினைகளை அறிந்து கொள்ள உதவுவது ;
2. மக்கள் சிறந்த சுகாதாரங்களை விரும்ப உதவுவது ;
3. மக்கள் தங்களின் சொந்த முயற்சி, செய்கைகளின் மூலம் தங்களின் சுகாதாரப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள உதவுவது.
4. சுகாதாரக் கொள்கைகளையும் திட்டங்களையும் நிறைவேற்றுவதில் மக்களின் தீவிர ஈடுபாட்டையும் ஒத்துழைப்பையும் திரட்டுவது ;
5. சுகாதாரக் கல்வியின் கொள்கை நடைமுறையில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பது.

மேற்சொன்ன இலட்சியங்களை அடைய இந்நிலையத்தைச் சார்ந்த பல் வேறு பிரிவுகள் அநேக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

1979-80 ஆம் ஆண்டில், 61 வெளியீடுகளை மாநில சுகாதாரக் கல்வி அச் சகம் வெளிக்கொணர்ந்துள்ளது. திரைப்படச் சுருள் காப்பகம் வெவ்வேறு சுகாதார தலைப்புகளில் 404 தடவைகளில் பல்வேறு அரசு, தொண்டு நிறு வனங்களுக்கு திரைப்படங்களை அனுப்பியிருக்கிறது. மேலும் 43 திரைப் படக் காட்சிகளை நடத்தியிருக்கிறது. பொம்மை நாடகப் பிரிவு 26 நாடகக் காட்சிகளை நடத்தியுள்ளது. ஒரு மாதத்தில் சராசரியாக 15 செயல் முறை காட்சிகளும், சுகாதாரக் கல்வி சட்டங்களும் தேசிய பள்ளி சுகாதாரத் திட்டத் தின் கீழ் வருகின்ற பள்ளிகளைச் சேர்த்து பல்வேறு பள்ளிகளில் நடத்தப் பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் ஆசிரியர் பெற்றோர் சங்கம் என்ற வடி வில் பொருள் சட்டங்களும் 30 இடங்களில் நடத்தப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டத்தின் நாங்குநேரி வட்டாரத்தில் யூனிசெப் நிறுவன உதவியுடன் சிறப்பு சுகாதார கல்வித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கிராமவாசிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சுகாதார கல்வியாளர்களால் மக்களுக்கு சுகாதாரக் கல்வியை பரப்புவதின் மூலம் சிறந்த பலனை அடையும் வகையில் சுகாதாரக் கல்வியில் மக்களை ஈடுபடுத்துவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**7. பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் திட்டம்.**

பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் திட்டத்தின்கீழ் அனைத்துப் பணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு கிராமப்புரங்களில் 5,000 மக்கட் தொகைக்கு ஆண் சுகாதாரப் பணியாளர் ஒருவரும் பெண் சுகாதாரப் பணியாளர் ஒருவரும் அமர்த்தப்படுவர். 4 ஆண் சுகாதார பணியாளர்களுக்கு ஆண் சுகாதார மேற்பார்வையாளர் ஒருவரும் 4 பெண் சுகாதார பணியாளர்களுக்கு பெண் சுகாதார மேற்பார்வையாளர் ஒருவரும் நியமிக்கப்படுவர். இத்திட்டம் கன்னியாகுமரி, மதுரை, தென்னாற்காடு, சேலம், செங்கல்பட்டு மாவட்டங்களில் செயல்படுத்த பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த 5 மாவட்டங்களிலும் இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட இருக்கின்ற பல்வேறு திட்டங்களின் கீழ் ஆண் சுகாதார பணியாளர்களும், ஆண் சுகாதார மேற்பார்வையாளர்களும் தயாரான நிலையில் இருக்கின்றனர்.

ஆனால் துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர்களாகிய பெண் சுகாதாரப் பணியாளர்களின் பற்றாக்குறை இருக்கிறது. எனவே 1,080 துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வசதியை ஏற்படுத்தும் ஒரு திட்டத்துக்கு அரசு ஆணை வழங்கியுள்ளது. இதன்படி, வேலூர், சேலம், திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தற்சமயம், இயங்கி வருகின்ற பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை 120 லிருந்து 480 ஆக உயர்த்தப்படும், இராமநாதபுரம், நாகப்பட்டினம், கடலூர், நாகர்கோயில் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் 5 புதிய பள்ளிகள் திறக்கப்படும். இப்பள்ளி ஒவ்வொன்றிலும் ஆண்டு தோறும் 120 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இத்திட்டத்தை செயல்படுத்த பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியது முதற்தேவையாக இருக்கிறது. அதற்கேற்ப முக்கிய பயிற்சியாளர்களுக்கும், மாவட்ட அளவு அதிகாரிகளுக்கும் காந்தி கிராமத்திலுள்ள கிராம சுகாதாரம் மற்றும் குடும்பநல நிறுவனத்தோடு



இணைந்த மைய பயிற்சி நிலையத்தில் முறையே 30 வேலை நாட்களுக்கும், 10 வேலை நாட்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. அதே போல ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவ அலுவலர்களுக்கும், வட்டார விரிவாக்க கல்வியாளர்களுக்கும் எழும்பூர், சேலம், காந்திகிராமம் ஆகிய இடங்களில் உள்ள சுகாதாரம் மற்றும் குடும்பநல பயிற்சி மையத்தில் 30 வேலைநாட்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 5 மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுகாதார பணியாளர்களும் மேற்பார்வையாளர்களும் (ஆண் மற்றும் பெண்) பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றனர். இதுவரை பயிற்சி பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு :

| | |
|---|---|
| ஆண் சுகாதார பணியாளர்கள் | 1851 |
| பெண் சுகாதார பணியாளர்கள் | 1731 |
| ஆண் சுகாதார மேற்பார்வையாளர்கள் | 633 |
| பெண் சுகாதார மேற்பார்வையாளர்கள் | 514 |

ஐந்து மாவட்டங்களில் பணியாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் அளிக்கப்படுகின்ற பயிற்சித் திட்டம் முடியும் தருவாயில் இருக்கிறது, பணியாளர் பயிற்சி முடிவடைந்தவுடன், இத்திட்டம் முழுவதுமாக செயல்படுத்தப்படும்.

மேலும் மைய அரசு பல்நோக்கு சுகாதார பணியாளர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்ற ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் தொடரா அவசரச் செலவாக ரூ. 500 வழங்கியிருக்கிறது. களப்பயணங்களுக்கு வசதியாக, மாநில அரசு, பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஊர்திக்காகும் எரி பொருளுக்காக கூடுதலாக பணம் ஒதுக்கியுள்ளது.

சுகாதார பணியாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் (ஆண் மற்றும் பெண்) 750 மருந்து வைத்துக்கொள்ளும் பெட்டிகள் (Kit boxes) வழங்க ஆணை வழங்கியுள்ளது. மேலும் இத்திட்டத்தின்கீழ் திறக்கப்படுகின்ற ஒவ்வொரு கிளை நிலையத்திற்கும் ரூ. 2,000 அளவுக்கு மருந்துகள் வழங்கவும் ஆணை பிறப்பித்துள்ளது. இதுவரை 460 துணை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

**8. பிறப்பு இறப்பு பதிவு :**

பிறப்பு இறப்பு, சைக்குழந்தை இறப்பு, இறந்து பிறத்தல்—தாய்மார் இறப்பு போன்ற புள்ளிவிவரங்கள் பல்வேறு சுகாதார திட்டங்களை நன்கு வகுப்பதற்கு அவசியமாகும். நமது மாநிலத்தில் பிறப்பு இறப்பினை பதிவு செய்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 1969 ஆம் ஆண்டு மத்திய சட்டம் 18இன்கீழ் பதிவுப்பணி நடைபெற்று வருகிறது.

குறைமை பதிவு முழுமை பெறவில்லை மாதிரி பதிவுத் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பல தரப்பட்ட மக்களிடையே சில பகுதிகளில் மட்டும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. 1978-ல் இம்மாதிரி பதிவுத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட பிறப்பு இறப்பு விகிதம் பின்வருமாறு :

பிறப்பு விகிதம் 1000 மக்கட் தொகைக்கு—28.9

இறப்பு விகிதம் ,, —12.8

மாதிரிப் பதிவுத்திட்டம் மக்கட்தொகை வளர்ச்சி விகிதத்தைக் கண்டறியவும் உதவுகிறது. கிராமப்புறங்களில் இறப்பின் காரணங்களைப் பதிவு செய்தல் அநேகமாக இல்லை. எனவே இதனை மேம்படுத்த மாதிரிப் பதிவுத் திட்டம் என்றழைக்கப்படும் ஒரு திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட 42 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல் படுத்தப்படுகிறது. எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இத்திட்டம் படிப்படியாக விரிவுப்படுத்தப்படும்.

உலக குழந்தைகள் ஆண்டையொட்டி, இந்திய அரசு மக்கட் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநரின் ஒத்துழைப்புடனும், இந்திய அரசின் உதவியுடனும் மாதிரிப்பதிவு திட்டப்பிரிவானது 'கைக்குழந்தை மற்றும் குழந்தை இறப்பு' பற்றி ஆய்வு நடத்தியது. ஆய்வில் சேகரிக்கப்பட்ட விவரங்கள் இந்திய அரசின் பதிவாளர் தலைவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது; அவர் அனைத்திந்திய முறையில் ஆய்வின் விளைவுகளை வெளியிடுவார்.

**9. மாநில சுகாதாரப் போக்குவரத்து நிறுவனம் :**

மாநில சுகாதாரப் போக்குவரத்து நிறுவனம் மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநலம், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் நோய்தடுப்பு மருந்து, மருத்துவக் கல்வி மற்றும் இந்திய மருத்துவ இயக்குநகரங்களை சார்ந்த பல்வேறு ஊர்திகளை பராமரித்தும் பாதுகாத்தும் வருகிறது. இம்மாநில சுகாதாரப் போக்குவரத்து நிறுவனத்தினரால் தமிழ்நாடு முழுவதும் பராமரிக்கப்பட்டு வருகின்ற ஊர்திகளின் எண்ணிக்கை சுமார் 1,463 ஆகும்.





இந்நிறுவனம், சென்னை, சேலம், மதுரை ஆகிய இடங்களில் உள்ள ஊர்திகள் பராமரிப்பு நிறுவனத்தின் வளாகத்திலுள் 3 வட்டார பணிமனைகளைக் கொண்டுள்ளது. மேலும் திருச்சிராப்பள்ளி மைய பணிமனை ஒன்றும் சென்னை கிண்டியில் ஒரு மைய நிர்வாக அலுவலகமும் பண்டகசாலையும் கொண்டுள்ளது. மாவட்ட சுகாதார அலுவலர்களின் அலுவலகங்களுடன் இணைக்கப்பட்ட பல்வேறு மாவட்டத் தலைமையகங்களில், மாவட்டங்களில் இயங்கிவருகின்ற ஊர்திகளின் சர்வீசுக்காகவும் சிறிய அளவிலான குறைகளை பழுதுபார்ப்பதற்காகவும் 15 நடமாடும் பராமரிப்பு பணிமனைகளையும் கொண்டுள்ளது. மைய பணிமனையும், வட்டார பணிமனைகளும் சுகாதாரத்துறை ஊர்திகளில் ஏற்படுகின்ற பெரிய, நடுத்தர வகையிலான குறைகளை பழுதுபார்க்கும் பணிகளை கவனிக்கின்றன. கடந்த மூன்றாண்டுகளில் இந்த பணிமனைகளில் பழுதுபார்க்க ஏற்றுக்கொள்ளப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கையும் பழுதுபார்த்து கொடுக்கப்பட்ட எண்ணிக்கையும் பற்றிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன:—

| ஆண்டு | ஆண்டு ஆரம்பத்தில் பணி மனைகளில் இருந்த எண்ணிக்கை. | பழுது பார்க்க ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை. | பழுதுபார்த்து கொடுக்கப் பட்ட எண்ணிக்கை. | மீதி |
|---|---|---|---|---|
| 1977–78 | 106 | 496 | 498 | 104 |
| 1978–79 | 104 | 594 | 626 | 72 |
| 1979–80 | 72 | 451 | 415 | 108 |

மாநில சுகாதாரப் போக்குவரத்து நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக 1979-80 ஆம் ஆண்டில், கீழ்காணும் திட்டங்களுக்கு அரசு ஆணை வழங்கியுள்ளது :—

(1) ரூ. 6-00 இலட்சம் செலவில் உதிரிபாகங்களை வாங்கும் ரூ. 2.50 இலட்சம் செலவில் இயந்திரங்கள், தளவாடங்கள், கருவிகள் முதலியன வாங்குதலும்.

(2) சென்னையில் உள்ள மாநில சுகாதார போக்குவரத்து நிறுவனத்தின் வளாகத்தில் ரூ. 3.00 இலட்சம் செலவில் வட்டார பணிமனை கட்டுதல்.

(3) 100 பழைய ஊர்திகளை ரூ. 8.00 இலட்சம் செலவில் பழுது பார்த்தல்.

(4) சென்னை, சேலம், மதுரை ஆகிய இடங்களில் உள்ள வட்டாரபணிமனைகளில் கூடுதலாக பணியாளர்களை நியமித்தல்.

**1980-81 ஆம் ஆண்டில் ரூ. 64.50 இலட்சம் செலவில் 100 பழைய ஊர்திகளை மாற்றி அமைக்க கருதப்பட்டுள்ளது.**

10. சுற்றுபுறம் மாசடைவதைக் கட்டுப்படுத்துதல்:

முன்னேறி வருகின்ற தொழிற்சாலைகள் பல பாதுகாப்பின்றி வெளியேற்றுகின்ற திட, திரவ, வாயு கழிவுப் பொருட்கள், மிக பெரிய அபாயகரமான அளவில் நீர், நில, வாயு மாசுபடுதலுக்கு காரணமாக அமைவதால் சுற்றுபுறம் மாசுப்படுவதை கட்டுப்படுத்துவது மிகமிக அவசியமாகி வருகிறது. கடுமையான மாசுப் பிரச்சினைகள் ஏற்படக் காரணமாகும் பெரிய தொழிற்சாலைகளில் சில தோல் பதனிடும் தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள், எரிசாராயத் தொழிற்சாலைகள், சிமிண்டு தொழிற்சாலைகள், காகிதம் மற்றும் கூழ் தொழிற்சாலைகள், இரசாயனம் மற்றும் உரப் பிரிவுகள், அனல் மின் நிலையங்கள், பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலைகள் ஆகும்.

கிண்டி கிங் நிறுவனத்தில் உள்ள மக்கள் நல்வாழ்வு இயக்குநரகத்தின் மாநில அளவு நீர் பகுப்பாய்வு சோதனைக்கூடம், நகராட்சிகள், நகர பஞ்சாயத்துக்கள், நிறுவனங்கள், முக்கிய புகைவண்டி நிலையங்கள், விமான நிலையங்கள், சிறைச்சாலைகள், மருத்துவமனைகள், கிராம நீர் வழங்கும் திட்டங்கள் முதலியவற்றின் பாதுகாக்கப்பட்ட நீர் வழங்கலிருந்து நீர் மாதிரிகளை, சுகாதாரத் தரத்தை மதிப்பிடுவதற்காக பரிசோதித்து வருகின்றது. ஒவ்வோராண்டும் புதிய நீர் வழங்கல் காலமுறை சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் வேகமான தொழில் வளர்ச்சி காரணமாக கிராம நகர்ப்புறங்களில் பாதுகாக்கப்பட்ட நீர் வழங்கும் திட்டங்களின் எண்ணிக்கையில் உயர்வு காணப்படுகிறது; சோதனைக் கூடத்தின் செயல்பாடுகள் அந்த அளவு உயர்ந்த வேகத்துடன் வளர்ச்சி அடைய வேண்டியிருக்கிறது. எனவே களப் பிரிவுகள், ஆய்வகத்தில் காலமுறை சோதனைக்காக நீர்மாதிரிகள், கழிவு நீர், காற்று முதலியவற்றை சேகரிக்கவும் இருப்பிடத்திலேயே சோதிக்கவும், ஆய்வு நடத்தவும் பல்வேறு தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஒவ்வொரு தொழிற்சாலையின் அமைப்பு குறித்த விவரங்கள் உபயோகிக்கின்ற கச்சாப்பொருட்கள், பின்பற்றப்படும் முறை, தரம், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற நில, நீர், வாயு கழிவுப் பொருட்களின் அளவு, பின்பற்றப்படுகின்ற வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆகியவை குறித்த விவரங்களும் களப்பயணங்களின் போது சேகரிக்கப்படுகின்றன; அதன்படி மக்கள் நல்வாழ்வு இயக்குநரகத்திலிருந்து உரிமமும் அளிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு தொழிற்சாலைகளைச் சுற்றி வாயுவில் மாசுபட்டிருக்கும் அளவினை கண்டறியவும், மாசுப் பொருள்களின் இயற்கைத் தன்மையை கண்டறியவும் பின்பற்றப்பட்டு வருகின்ற குறைப்பு நடவடிக்கைகளின் போதுமானத் தன்மையை மதிப்பீடு செய்யவும் ஆய்வு நடத்தப்படுகிறது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகின்ற வாயு



கழிவுப் பொருள்கள் சுற்றுப்புற சூழலை மாசுப்படுத்திக் கொண்டிருப்பதை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், பின்பற்றப்படுகின்ற கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் திறனுடையவைகளாகும் வண்ணம் அவைகள் உடனடியான நடவடிக்கைகள் எடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. நீர் மாசுபடும் பிரச்சினையைக் கண்டு கவலைக்கொண்டு இந்திய அரசு 1974 நீர் (மாசுதடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், ஒன்றினைக் கொண்டுவந்தது. நீர் மாசுறுவதை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் மைய வாரியம் ஒன்றும் அமைத்தது. மேலும் இந்திய அரசு 1977 (நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல்வரி சட்டம் ஒன்றினையும் கொண்டுவந்தது. இதன்கீழ் பயன்படுத்தும் நீரை அடிப்படையாகக் கொண்டு மேல்வரி விதிக்கப்படுகின்றது. தொழிற்சாலைப் பிரிவுகளும் உள்ளாட்சி நிறுவனங்களும் இம்மேல்வரியை செலுத்த வேண்டும். ஆனால் இம்மாநில அரசு, மையச் சட்டத்தைப் பின்பற்றாமல் இப்பொருளில் ஒரு தனியான சட்டம் கொண்டுவர முடிவு செய்திருக்கிறது. அவையில் இதனை ஏற்றுக் கொள்வதற்காக விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

டாக்டர் எச். வி. ஹண்டே,
மக்கள் நல்வாழ்வு அமைச்சர்.

கை 1.

நடமாடும் சுகாதாரக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் பட்டியல்.

செங்கல்பட்டு மாவட்டம் (தெற்கு).

1. திருக்கழுக்குன்றம்
2. அச்சரப்பாக்கம்
3. உத்தரமேரூர்
4. நந்திவரம்
5. திருப்புக்குடி
6. எழுச்சூர்
7. மதுரமங்கலம்
8. பவஞ்சூர்
9. ஜமீன் எண்டத்தூர்

செங்கல்பட்டு மாவட்டம் (வடக்கு).

10. புதூர்
11. கும்மிடிபூண்டி
12. பீரகுப்பம்
13. கச்சூர்
14. நாரவாரிகுப்பம்
15. பேரம்பாக்கம்

தென்னாற்காடு மாவட்டம்.

16. ஒரத்தூர்
17. கண்டமானடி
18. ஒலக்கூர்
19. கிளியனூர்
20. கேடார்
21. தியாகதுர்கம்
22. சிவக்கம்
23. மங்களூர்
24. கச்சிராபாளையம்
25. புதுப்பேட்டை
26. எளவனசூர்
27. முகையூர்
28. மைலம்
29. சத்தியமங்கலம்
30. சிறுவந்தாடு
31. திருநாவலூர்

தஞ்சாவூர் மாவட்டம்

32. ஆக்கூர்
33. தலஞாயர்
34. பூதலூர்
35. கபிஸ்தல
36. காளி
37. திருவெண்காடு
38. பூந்தோட்டம்
39. ஆலங்குடி
40. தேவூர்
41. உள்ளிக்கோட்டை
42. ஆலத்தம்பாடி
43. ஆதிச்சபுரம்
44. கோனேரிராஜபுரம்
45. கொனுலம் பள்ளம்
46. முருக்கன்குடி
47. பட்டீஸ்வரம்

புதுக்கோட்டை மாவட்டம்.

48. விராளிமலை
49. பொன்பேத்தி
50. அன்னவாசல்
51. மலையூர்
52. நற்சாந்துபட்டி
53. நாகுடி
54. அண்டாகுளம்
55. காடியாபட்டி
56. திருவரங்குளம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

57. லெப்பைகுடிக்காடு
58. சின்னதாராபுரம்
59. உப்பிடமங்கலம்
60. உப்பிலியாபுரம்
61. மீன்சுருட்டி
62. திருமானூர்





திருச்சிராப்பள்ளி மாவட்டம்—தொடர்ச்சி

63. டி. புதூர்
64. இனாம் கொளத்தூர்
65. வையப்பட்டி
66. துவரங்குறிச்சி
67. அம்மாபாளையம்
68. காரை
69. புதூர் உத்தமனூர்
70. வாளகொண்டிபுரம்
71. வீரமாச்சான்பட்டி
72. தொட்டியம்

மதுரை மாவட்டம்.

73. ஏழுமலை
74. பாப்பம்பட்டி
75. வேடசந்தூர்
76. வாடிப்பட்டி
77. கடலூர்
78. சின்னமனூர்
79. வீருவீடு
80. கள்ளிக்குடி
81. செக்கனூரணி
82. அலங்கா நல்லூர்
83. நத்தம்
84. அம்மயநாயக்கனூர்
85. டொம்புசேரி
86. தேவதானப்பட்டி
87. கண்டமனூர்
88. கல்லந்திரி
89. கன்னிவாடி
90. கருங்காலகுடி
91. மன்னவனூர்
92. தாடிகொம்பு
93. வெள்ளலூர்

இராமநாதபுரம் மாவட்டம்.

94. பேரையர்
95. குன்னூர்
96. கல்லம நாயக்கன்பட்டி
97. கீழ்த்தூவல்
98. சாலைகிராமம்
99. திருவேகம்பட்டு
100. முத்துநந்தல்
101. செம்பனூர்

இராநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி

102. காரியபட்டி
103. எம். புதுப்பட்டி
104. போகலூர்
105. தேவிப்பட்டினம்
106. கடலாடி
107. கன்னிசேரிபுதூர்
108. பாண்டுகுடி
109. ஆர். ரெட்டியபட்டி
110. ஆர். எஸ். மங்கலம்
111. திருஉத்திரகோசமங்கை
112. ஜமீன் கொல்ல கொண்டான்.

திருநெல்வேலி மாவட்டம்.

113. ஏரல்
114. வாசுதேவநல்லூர்
115. எலத்தூர்
116. ஆலங்குளம்
117. நாகலாபுரம்
118. ஒட்டநத்தம்
119. ரெட்டியப்பட்டி
120. திருக்கரன்குடி
121. திசையன்விளை
122. முக்கூடல்
123. கீழ ஈரால்
124. கரிவலம் வந்த நல்லூர்
125. பத்தமடை
126. பேரிலோவன்பட்டி
127. சேந்தமரம்
128. வல்லநாடு
129. முனைஞ்சிபட்டி

கன்னியாகுமரி மாவட் ம்.

130. கோத்தநல்லூர்
131. அகஸ்தீஸ்வரம்
132. செண்பகராமன்புதூர்
133. முட்டம்
134. ஆருதேசம்
135. கரிங்கல்
136. ராஜக்கமங்கலம்

வடாற்காடு மாவட்டம்.

137. ஆலங்கயம்
138. வானாபுரம்
139. நரியம்பட்டு
140. குஞ்சி
141. காரப்பட்டு
142. மங்கலம்
143. தச்சூர்
144. பெருங்காட்டூர்
145. லால்பேட்டை
146. புன்னை
147. கலம்பூர்
148. ஆண்டியப்பனூர்
149. கடலாடி
150. கீழ்பென்னாத்தூர்
151. வேட்டவலம்
152. கொம்மநேந்தல்
153. கொளப்பலூர்
154. காட்டம்பூண்டி
155. நாத்தாம்பூண்டி
156. புதுப்பாடி
157. எஸ். வி. நகரம்

சேலம் மாவட்டம்.

158. கொளத்தூர்
159. கங்காவல்லி
160. அரியம்பாளையம்
161. மேச்சேரி
162. வாழவந்தி
163. பனமரத்துபட்டி
164. நயினம்பட்டி
165. எலந்தைகுட்டை
166. நல்லூர்
167. பாலபட்டி
168. பேறுகுறிச்சி
169. சித்தூர்
170. எருமைப்பட்டி
171. இராயமங்கலம்
172. கடயம்பட்டி
173. காரபட்டி
174. தாமகிரிப்பேட்டை
175. நங்காவல்லி
176. சரக்க பிள்ளையூர்

சேலம் மாவட்டம்—தொடர்ச்சி

177. தலைவாசல்
178. வாழவந்திநாடு
179. மாணிக்கம்பாளையம்

தர்மபுரி மாவட்டம்.

180. பர்கூர்
181. சூளகிரி
182. கீளமங்கலம்
183. பெண்ணாகரம்
184. கடத்தூர்
185. தீர்த்தமலை
186. பாரூர்
187. பாகலூர்
188. கக்கதாசம்
189. மேகலசின்னம்பள்ளி
190. பாப்பிரெட்டிபட்டி
191. அவனாசி
192. எரிசனம்பட்டி
193. குடிமங்கலம்
194. காரமடை
195. சர்க்கார் சாமகுளம்
196. புளுவபட்டி
197. நல்லாட்டி பாளையம்
198. அரிசி பாளையம்
199. அன்னூர்
200. கனியூர்
201. கோளார்பட்டி
202. பெருமாநல்லூர்

பெரியார் மாவட்டம்.

203. மூலனூர்
204. சிவகிரி
205. சிறுவளூர்
206. உக்கரம்
207. சென்னிமலை
208. சித்தோடு
209. சாவடிப் பாளையம்
210. மொடக்குறிச்சி
211. குளவாரெட்டியூர்
212. கவந்தபாடி
312. கோலநல்லி
214. தாளவாடி



பெரியார் மாவட்டம்—தொடர்ச்சி

215. தூக்கநாயக்கன் பாளைய
126. பெருந்துறை
217. வெள்ளகோயில்
218. நம்பியூர்

நீலகிரி மாவட்டம்.

219. நெடுங்குளம்
220. பந்தலூர்
221. கேட்டி
222. டி. ஒரநல்லி
223. துனேரி
224. நெல்லக்கோட்டை

பிற்சேர்க்கை 2.

பள்ளி சுகாதாரப் பணிகள் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் பட்டியல்

செங்கல்பட்டு மாவட்டம்.

1. மதுரமங்கலம்
2. போரூர்
3. பொடத்தூர்பேட்டை
4. ஆவடி
5. அச்சரப்பாக்கம்
6. பெரிய பாளையம்
7. உத்தரமேரூர்
8. பரந்தூர்

வடாற்காடு மாவட்டம்.

9. களம்பூர்
10. வானாபுரம்
11. புதுப்பாடி
12. தெள்ளாரி
13. மங்கலம்
14. மதலூர்
15. ஒடுகாத்தூர்
16. கலியம்பாடி
17. உசூர்
18. காரப்பட்டு
19. புன்னை

தென்னாற்காடு மாவட்டம்.

20. மருங்கூர்
21. ஒரத்தூர்
22. திருநாவலூர்
23. மைலம்
24. முகையூர்
25. சத்தியமங்கலம்

தஞ்சாவூர் மாவட்டம்.

26. ஆக்கூர்
27. கபிஸ்தலம்
28. திருவெங்காடு
29. தலநாயர்
30. நடுகாவேரி
31. பூதலூர்
32. பட்டீஸ்வரம்
33. ஆலங்குடி
34. பூந்தோட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

35. மனச்சநல்லூர்
36. நாவல்பட்டு
37. புதூர் உத்தமனூர்
38. குலுமனி
39. சின்னதாராபுரம்
40. உப்பிடமங்கலம்
41. உப்பிலியாபுரம்

புதுக்கோட்டை மாவட்டம்.

42. திருவரங்குளம்
43. கடயாம்பட்டி
44. பொன்பெதி
45. காரையூர்
46. நாகுடி

மர்தபுரி மாவட்டம்.

47. மேகலசின்னம்பள்ளி
48. கக்கதாசம்
49. சூளகிரி
50. பாளையம் புதூர்
51. வேப்பனபள்ளி
52. தீர்த்தமலை

சேலம் மாவட்டம்.

53. கொளத்தூர்

இராமநாதபுரம் மாவட்டம்

54. பிரான்மலை
55. குன்னூர்
56. திருவேகம்பட்டு
57. முத்தநான்டால்
58. எம். புதுப்பட்டி
59. சாலிகிராமம்
60. திருச்சுழி
61. ஜமீன்கொல்லகொண்டான்

மதுரை மாவட்டம்

62. நத்தம்
63. தேவதானப்பட்டி

திருநெல்வேலி மாவட்டம்

64. பத்தமடை
65. புதுக்கோட்டை
66. ரெட்டியார்பட்டி
67. திசையன்விளை
68. கடம்பூர்
69. திருக்கரங்குடி
70. எலத்தூர்
71. வல்லநாடு

கன்னியாகுமரி மாவட்டம்

72. எடைக்கோடு
73. ராஜக்க மங்களம்
74. கோத்த நல்லூர்
75. அகஸ்தீஸ்வரம்

கோயம்புத்தூர் மாவட்டம்.

76. பெரியநாயக்கன்பாளையம்
77. நல்லாட்டி. பாளையம்
78. குடிமங்கலம்
79. காரமடை
80. புலுவாப்பட்டி

பெரியார் மாவட்டம்

81. சிவகிரி

நீலகிரி மாவட்டம்

82. நெடுகுலா
83. நெல்லக்கோட்டை



மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத் துறை,
இந்தியமுறை மருத்துவம்.

I கொள்கை.

இந்திய முறை மருத்துவத்திற்கு, குறிப்பாகத் தமிழகத்திற்கே உரித்தானதும், பழமை வாய்ந்த நமது பாரம்பரியம் மிக்க நாகரிகத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றதுமான சித்த மருத்துவத்திற்கு ஆதரவளித்து வளர்ச்சியடையச் செய்ய வேண்டியது அரசின் முக்கியமான கடமையாகும். இந்திய முறை மருத்துவத்தின் ஏனைய பிரிவுகளான ஆயுர்வேதம், யுனானி, இயற்கை வைத்தியம், யோகாசன முறை ஆகியவற்றின் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை மிகுதியான அளவில் ஏற்படுத்தித் தருகின்ற பணியிலும் இந்த அரசு முழு ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளது.

**மூலிகைப் பண்ணைகளுக்காக ஓர் தன்னுரிமையுள்ள வணிக நிறுவனம் ஏற்படுத்துதல்.**—இந்திய முறை மருத்துவத்தின் தலைசிறந்த வளர்ச்சியானது, மூல மருந்துச் சரக்குகள், மூலிகைகள், மற்றும் மூலிகை மருந்துகள் கிடைப்பதைப் பொறுத்துள்ளது என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே இந்திய முறை மருத்துவ நிலையங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் இந்த அத்தியாவசியமான பொருட்கள் எப்போதும் நிலையாகக் கிடைக்கச் செய்யும் பொருட்டு மூலிகைப் பண்ணைகளுக்காகவும், மூலிகை மருந்துகளைத் தயாரிப்பதற்காகவும், ஓர் தன்னுரிமையுள்ள வணிக நிறுவனம் ஏற்படுத்த வேண்டுமென்ற செயற்குறிப்பினை அரசு ஆய்ந்து வருகின்றது. தோற்றுவிக்கப்படவிருக்கும் வணிக நிறுவனத்தின் குறிக்கோள்கள் வருமாறு :—

(1) மருந்துச் செடிகளையும், மூலிகைகளையும் பயிர் செய்தல்.

(2) தமிழகக் காடுகளிலும், குன்றங்களிலும் இயற்கையாக வளர்ந்துள்ள மூலிகைகளைச் சேகரித்தல்.

(3) எப்போதும் கிடைப்பனவும், கிடைத்தற்கரியனவுமாகிய மூலிகைகளை வளர்த்துப் பராமரித்தலும் பாதுகாத்தலும்.

(4) நறுமண மருந்து மூலிகைகளைப் பயிர் செய்தல்.

(5) மூல மருந்துகளைத் தயாரித்தல்.

(6) தனியார்களிடமிருந்து மருந்துச் செடிகள், மூலிகைகள், நறுமண மூலிகை மருந்துகள் போன்றவற்றைக் கொள்முதல் செய்தல்.

(7) சித்த, ஆயுர்வேத, யுனானி முறைகளில் மூலிகை மருந்துகளைத் தயாரித்தல்.

(8) தயாரிக்கப்பட்ட மருந்துகளையும், மருந்துச் சரக்குகளையும் இந்திய முறை மருத்துவ நிலையங்களுக்கு விநியோகம் செய்தல்.

(9) உபரியாகவுள்ள மூலிகைகள், மூல மருந்துச் சரக்குகள், நறுமண மருந்துப் பொருள்கள், மூலிகை மருந்துகள் ஆகியனவற்றை விற்பனை செய்தலும் ஏற்றுமதி செய்தலும்.

இந்தக் குறிக்கோள்களுக்கு, செயல் வடிவம் தருதல் வேண்டும் " என்ற விருப்பத்தின் பேரில், அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாக இந்த ஆண்டிலும் பல புதிய திட்டங்களைச் செயலாக்க முன்வந்துள்ளதை, கீழ்க் காணும் பட்டியல் நன்கு விளக்கும் :—

| ஆண்டு | புதிய திட்டங்களுக்கு ஆகும் மொத்தச் செலவினம் | இப்புதிய திட்டங்களுக்கு நடப்பு ஆண்டில் ஒதுக்கீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1972–73 .. .. .. | 3.24 | 3.01 |
| 1973–74 .. .. .. | 7·29 | 6.47 |
| 1974–75 .. .. .. | 19·60 | 7.02 |
| 1975–76 .. .. .. | 13·31 | 9·97 |
| 1976–77 .. .. .. | 17·99 | 13.69 |
| 1977–78 .. .. .. | 4.04 | 2.69 |
| 1978–79 .. .. .. | 6.49 | 3·68 |
| 1979–80 .. .. .. | 95·68 | 47.69 |
| 1980–81 .. .. .. | 44.03 | 25·60 |



## II மருத்துவ நிவாரணம்.

**1. அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனை, சென்னை.**—இந்திய முறை மருத்துவத்திற்கெனத் தனியாக ஒரு மருத்துவ மனை அமைப்பதற்கு 1968 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டு அது 1970 ஆம் ஆண்டில் அரும்பாக்கத்தில் நிறுவப்பட்டது. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயங்கி வந்த இந்தியமுறை மருத்துவப் பிரிவு, அங்கிருந்து மாற்றப்பட்டு அரும்பாக்கத்தில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தில் செயல்படத் தொடங்கியது. இந்த மருத்துவமனைக்கு " அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனை " எனப் பெயரிடப்பட்டது. இம் மருத்துவமனை 100 படுக்கை வசதிகளுடன் 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள்முதல் செயல்படத் தொடங்கியது. ஒரே வளாகத்தில், சித்த, ஆயுர்வேதா, யுனானி மருத்துவ முறைகளில் புறப்பிணியாளருக்கும் உட்பிணியாளருக்கும் மருத்துவச் சிகிச்சை வாய்ப்புகளை நல்கும் சிறப்புத் தன்மையினை இந்த மருத்துவமனை கொண்டுள்ளது. இந்த மருத்துவமனையில் புதிதாகக் கட்டப்பட்ட பகுதியில் மேலும் 50 படுக்கைகள் 1976-77 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன.

அரசு அலுவலர்களுக்கென்று, மேற்சொன்ன மூன்று மருத்துவ முறைகளின் கீழ் புறப்பிணியாளர் சிகிச்சைப் பிரிவுகள், இம்மருத்துவமனையில் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் சித்தா துறையில் தோல் பிணி சிறப்பு சிகிச்சைப் பிரிவு ஒன்று இம் மருத்துவமனையில் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை நகரில், தலைமைச் செயலகம், சேப்பாக்கம் அலுவலக வளாகம், சைதாப்பேட்டை, திருவல்லிக்கேணி ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மருந்தகங்களில் சித்த மருத்துவ முறையின்கீழ் புறப்பிணியாளருக்கான சிகிச்சை வசதிகள் அமைந்துள்ளன. இந்த மருந்தகங்கள், சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையோடு இணைக்கப்பட்டுள்ளன.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையினை விரிவாக்கம் செய்தற் பொருட்டு, 1979-80 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, அத்திட்டங்கள் செயலாக்கம் பெற்று வருகின்றன :—

(அ) ரூபாய் 6.35 இலட்சம் செலவில், கழிவு நீர் வடிகால் வசதிகள் அமைத்தல்.

(ஆ) இந்த மருத்துவமனையைச் சுற்றி சுற்றுச் சுவர் எழுப்புதல்—ரூபாய் 3.35 இலட்சம்.

(இ) நவீன முறையில் அட்டிற்சாலை அமைத்தல்—ரூபாய் 1.00 இலட்சம்.

(ஈ) நூலகம் ஒன்று ஏற்படுத்துதல்—ரூபாய் 0.27 இலட்சம்.

1980-81 ஆம் ஆண்டில், இந்த மருத்துவமனையின் வளர்ச்சிக்காக கீழே கண்ட திட்டங்களைச் செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது :—

(அ) புறப்பிணியாளர் பகுதியினை விரிவாக்கக் கட்டிடம் கட்டுதல்—ரூபாய் 1.00 இலட்சம்.

(ஆ) 25 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பகுதிக்கான கட்டிடம் கட்டுதல்—ரூபாய் 2.00 இலட்சம்.

**2. பாளையங்கோட்டை, அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ள மருத்துவமனை.**—சித்த மருத்துவ முறையின்கீழ் புறப்பிணியாளர் மற்றும் உட்பிணியாளருக்கான சிகிச்சை வசதிகள் கொண்ட 208 படுக்கைகளுடைய மருத்துவமனையொன்று பாளையங்கோட்டை அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ளது.

இம் மருத்துவமனையில் 1980-81 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொள்ளலாமெனத் திட்டமிடப்பட்டுள்ளது :—

(அ) நவீன முறையில் அட்டிற்சாலை அமைத்தல்—ரூபாய் 0.84 இலட்சம்.

(ஆ) மருந்துசெய் நிலையத்திற்குத் தேவையான கூடுதல் எந்திரங்களை அமைத்தல்—ரூபாய் 1.00 இலட்சம்.

**3. சித்த மருத்துவப் பிரிவுகள்.**—14 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் வட்டத் தலைமையிடம் மற்றும் வட்டத் தலைமையிடம் அல்லாத இடங்களிலுள்ள 59 மருத்துவமனைகளிலுமாக தற்போது 73 சித்த மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. 1979-80 ஆம் ஆண்டில், வட்டத் தலைமையிடம் மற்றும் வட்டத் தலைமையிடம் அல்லாத கீழ்க்கண்ட 15 இடங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்குவதற்காக ஆணையிடப்பட்டுள்ளது.—

| | | |
|---|---|---|
| (1) திருத்தணி | .. ... | செங்கல்பட்டு மாவட்டம். |
| (2) ஆரணி | .. ... | வடாற்காடு மாவட்டம். |
| (3) திருவரங்கம் | ... .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| (4) முசிறி | .. .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| (5) பெரியகுளம் | .. .. | மதுரை மாவட்டம். |
| (6) திருவைகுண்டம் | .. | திருநெல்வேலி மாவட்டம். |
| (7) தென்கனிக்கோட்டை | .. | தர்மபுரி மாவட்டம். |
| (8) சின்கோனா | .. .. | கோயம்புத்தூர் மாவட்டம் |
| (9) திருமயம் | .. .. | புதுக்கோட்டை மாவட்டம் |
| (10) அருப்புக்கோட்டை | .. | இராமநாதபுரம் மாவட்டம் |
| (11) சிவகாசி | .. .. | இராமநாதபுரம் மாவட்டம் |
| (12) பாலடா | .. .. | நீலகிரி மாவட்டம். |
| (13) திருத்துறைப்பூண்டி | .. | தஞ்சாவூர் மாவட்டம். |
| (14) திருச்செங்கோடு | .. | சேலம் மாவட்டம். |
| (15) சேந்தமங்கலம் | .. | சேலம் மாவட்டம். |

1980-81 ஆம் ஆண்டில் வட்டத் தலைமையிடம் மற்றும் வட்டத் தலைமையிடம் அல்லாத மேலும் 15 இடங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும். இத்திட்டத்திற்கு 1980-81 ஆம் ஆண்டிற்கு ஆகும் செலவு ரூபாய் 4.20 இலட்சமாகும்.

மேற்கூறிய திட்டங்கள் தவிர தற்போது சித்தா முறையில் சிகிச்சை வசதிகள் இல்லாத கீழ்க்கண்ட நான்கு பயிற்சி மருத்துவமனைகளில் 1980-81 ஆம் ஆண்டில் சித்தா பிரிவுகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது :—

(1) அரசினர் இராசாசி மருத்துவமனை, மதுரை/அரசினர் மருத்துவமனை, பலவங்கபுரம், மதுரை.

(2) அரசினர் இராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.

(3) அரசினர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, கோயம்புத்தூர்.

(4) அரசினர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, செங்கல்பட்டு.

மேற்கூறியுள்ள திட்டங்களுக்கு 1980-81-ல் ரூபாய் 0.93 இலட்சம் செலவிடப்படும்.

மாவட்டத் தலைமையிடம் மற்றும் வட்டத் தலைமையிடங்களிலுள்ள அரசினர் மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் மொத்த எண்ணிக்கைகளுக்கேற்ப, 5 முதல் 10 படுக்கைகள் வரை சித்த மருத்துவ முறையில் சிகிச்சையளிப்பதற்காக ஒதுக்கப்படுகின்றன.

[1980 ஜூலை 23

சித்த மருத்துவப் பிரிவுகளுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையில் புறப்பிணியாளர் மற்றும் உட்பிணியாளர் பகுதிகளைத் தனியாகக் கொண்ட தனிக் கட்டிடங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதைக் கருத்திற்கொண்டு 1979-80 ஆம் ஆண்டில் இராமநாதபுரம், தர்மபுரி, சிதம்பரம் ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் 15 படுக்கைகள் கொண்ட தனிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. இவற்றிற் காகும் மொத்தச் செலவு ரூபாய் 8.55 இலட்சமாகும் (ஒரு பிரிவுக்கு ரூபாய் 2.85 இலட்சம் வீதம்).

1980-81 ஆம் ஆண்டில், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினம், பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோடு ஆகிய இடங்களில், மாவட்டத் தலைமை யிட மருத்துவமனைகளில் 25 படுக்கைகள் கொண்ட தனிக் கட்டிடங்கள் கட்டி சித்தா பிரிவுகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகும் மொத்த செலவினம் ரூபாய் 12.88 இலட்சமாகவும், 1980-81 ஆம் ஆண்டில் மட்டும் ரூபாய் 3.00 இலட்சமாகவும் இருக்கும்.

4. அரசு நடத்தி வரும் இந்திய மருத்துவமுறை மருந்தகங்கள்.—இம் மாநிலத்தில் இந்திய மருத்துவ முறையில் 13 அரசினர் மருந்தகங்கள் செயல் பட்டு வருகின்றன. அவற்றில் 8 சித்தா மருந்தகங்கள், 5 ஆயுர்வேதா மருந் தகங்கள். இம் மருந்தகங்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

சென்னை நகரம்

1 திருவல்லிக்கேணியிலுள்ள சித்தா மருந்தகம்.
2. தலைமை செயலகத்தி லுள்ள சித்தா மருந்தகம்.
3. சேப்பாக்கத்திலுள்ள சித்தா மருந்தகம்.
4. சைதாப்பேட்டையிலுள்ள சித்தா மருந்தகம்.

} இவை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனை யுடன் இணைந்துள்ளன.

மாவட்டங்கள்.

5. சித்தா மருந்தகம், சோமரசன் பேட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

6. சித்தா மருந்தகம், வாலாஜாபாத், செங்கல்பட்டு மாவட்டம்.

7. சித்தா மருந்தகம், ஆனந்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.

8. சித்தா மருந்தகம், வாய்மேடு, தஞ்சாவூர் மாவட்டம்.



1980 ஜூலை 23]

ஆயுர்வேதா மருந்தகங்கள்.
மாவட்டம்.

1. அரசினர் ஆயுர்வேதா மருந்தகம், புதுக்கோட்டை.

2. அரசினர் ஆயுர்வேதா மருந்தகம், செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.

3. அரசினர் ஆயுர்வேதா மருந்தகம், எடலக்குடி, கன்னியாகுமரி மாவட்டம்.

4. அரசினர் ஆயுர்வேதா மருந்தகம், புதுக்கடை, கன்னியாகுமரி மாவட்டம்.

5. அரசினர் ஆயுர்வேதா மருந்தகம், திருப்பாத்திசரம், கன்னியாகுமரி மாவட்டம்.

1979-80 ஆம் ஆண்டில், 20 அரசினர் ஊர்ப்புற மருந்தகங்களைக் கீழ்க் கண்ட இடங்களில் தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| 1. | ஊத்துக்காடு .. | .. செங்கல்பட்டு மாவட்டம். |
| 2. | தில்லைநாயகபுரம். | .. தென்னாற்காடு மாவட்டம். |
| 3. | வரதலம்பட்டு | .. வடாற்காடு மாவட்டம். |
| 4. | உத்தமசேரி .. | .. திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 5. | திருக்கலப்பூர் | .. திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 6. | சிறுவாச்சூர் .. | .. சேலம் மாவட்டம். |
| 7. | பெரியதண்டா .. | .. சேலம் மாவட்டம். |
| 8. | கடுகினான்மலை | .. புதுக்கோட்டை மாவட்டம். |
| 9 | மேனாசி .. | .. தர்மபுரி மாவட்டம். |
| 10. | கொட்டாப்பட்டி | .. தர்மபுரி மாவட்டம் |
| 11. | வானதிராசபுரம் | .. தஞ்சாவூர் மாவட்டம். |
| 12. | கீழணைக்கட்டு | .. தஞ்சாவூர் மாவட்டம் |
| 13. | கள்ளம்பாளையம் | .. கோயம்புத்தூர் மாவட்டம். |
| 14 | சுல்தான்பேட்டை | .. கோயம்புத்தூர் மாவட்டம் |
| 15. | யாதபள்ளி .. | .. நீலகிரி மாவட்டம். |
| 16. | சேடப்பட்டி .. | .. மதுரை மாவட்டம். |
| 17. | இரட்டையூரணி | .. இராமநாதபுரம் மாவட்டம். |
| 18. | உத்தமலை .. | .. திருநெல்வேலி மாவட்டம். |
| 19. | மேலநீளிதநல்லூர் | .. திருநெல்வேலி மாவட்டம் |
| 20. | பூவங்கோடு .. | .. கன்னியாகுமரி மாவட்டம். |

5 உள்ளாட்சி மன்றங்கள் நடத்தும் முறையான மருந்தகங்களும் கிராம ருந்தகங்களும்.—கிராம மருந்தகங்களையும், முறையான மருந்தகங்களையும் ராட்சி ஒன்றியங்களும், நகராட்சி மன்றங்களும், மாநகராட்சிகளும் நடத்தி ருகின்றன.

கிராம மருந்தகங்கள் பெரும்பாலும் பரம்பரை அல்லது பாரம்பரியப் பிற்சியுடைய பதிவுபெற்ற மருத்துவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. றையான மருந்தகங்கள் இந்திய மருத்துவப் பட்டதாரிகளாலும் பட்டயத் குதி பெற்றவர்களாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த கிராம/முறையான மருந்தகங்களுக்கு அரசு மானியமாகவும், தவித் தொகையாகவும் நிதியுதவியளித்து வருகிறது. கிராம மருந்தகங்களைப் பொறுத்த வரையில் மருத்துவர்களின் சம்பளத்தின் ஒரு பகுதி உதவித் தொகையாகத் தரப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு முறையான மருந்தகத்திற்காகும் பராமரிப்புச் செலவில் 50-சதவீதத்தினை, ரூபாய் ஐந்தாயிரத்திற்கு மிகைப்படாதவாறு மானியமாக அரசு வழங்கி வருகின்றது.

இம் மாநிலத்தில், உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப்படும் மொத்த கிராம மருந்தகங்கள், முறையான மருந்தகங்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

| | சித்தா. | ஆயுர் வேதா. | யுனானி. | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தும் கிராம மருந்தகங்கள் .. | 307 | 59 | 8 | 374 |
| ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தும் முறையான மருந்தகங்கள் .. | 40 | 9 | 1 | 50 |
| நகராட்சி மருந்தகங்கள் | 30 | 18 | 3 | 51 |
| சென்னை மாநகராட்சி மருந்தகங்கள் .. | 3 | 1 | 2 | 6 |
| மதுரை மாநகராட்சி மருந்தகங்கள் .. | 4 | 2 | .. | 6 |
| மொத்தம் .. | 384 | 89 | 14 | 487 |



மேலும் பல கிராம மருந்தகங்களை தொடங்கு முகமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவித் தொகையாக நிதியுதவியளிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 1.91 இலட்சம் செலவிடப்படும்.

## III. இந்திய மருத்துவ மருந்து செய் நிலையங்கள்.

**1. சென்னை அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவ மனையுடன் இணைந்துள்ள மருந்து செய் நிலையம்.**—சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையுடன் இணைந்துள்ள மருந்து செய் நிலையம் ஆண்டு தோறும் ஏறத்தாழ ரூ. 6 இலட்சம் மதிப்புள்ள சித்த, ஆயுர்வேத, யுனானி மருந்துகளைத் தயாரித்து வருகிறது. இந்த மருந்து செய் நிலையத்தில் தயாரிக்கப்படும் மருந்துகள், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையிலும் சென்னை நகரில் இயங்கிவரும் 4 சித்தா மருந்தகங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த மருந்து செய் நிலையத்தினை எந்திரமயமாக்கத் தேவையான எந்திரங்களை வாங்கும்பொருட்டு இந்திய அரசு ரூ. 1.00 இலட்சம் வழங்கியுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், வரும் ஆண்டுகளில் இந்த மருந்து செய் நிலையத்தின் வளர்ச்சிக்கென மேலும் ரூ. 7 இலட்சம் மைய அரசின் உதவித் தொகையாகத் தரப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1979-80 ஆம் ஆண்டில் ரூ. 22.95 இலட்சம் செலவில் இந்த மருந்து செய் நிலையத்திற்கு வேண்டிய கூடுதல் கட்டிடங்களைக் கட்டவும், வாயு உற்பத்தித் தளவாடம் நிறுவவும் நீராவிக் கொதிகலம், அமைக்கவும் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இத் திட்ட வேலைகள் தொடங்கப்பட்டு செயலாக்கம் பெற்று வருகிறது.

**2. பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரி மருந்து செய் நிலையம்.**—பாளையங்கோட்டை, அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியிலுள்ள மருந்து செய் நிலையம், அக்கல்லூரியுடன் இணைந்துள்ள 208 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையின் தேவையினை நிறைவாக்கும் வகையில் மருந்துகளைத் தயாரித்து வருகிறது.

ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 1.50 இலட்சம் மதிப்புள்ள மருந்துகளை இம் மருந்து செய் நிலையம் தயாரிக்கின்றது. மருந்து செய் முறைகளைத் துரிதமாக்கும் பொருட்டு, இந்த மருந்து செய் நிலையத்தினை எந்திரமய மாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அடிப்படையிலே முதல் கட்டமாக ரூ. 68.000 செலவில் எந்திரங்கள் வாங்க ஆணையிடப்பட்டு அவை வாங்கப் பட்டுள்ளன.

அதுபோன்று 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் செலவில், மேலும் சில எந்திரங்களை வாங்கி இந்த மருந்து செய் நிலையத்தினை விரிவாக்கம் செய்து எந்திரமயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## IV. மூலிகைப் பண்ணைகள்.

இந்தியமுறை மருத்துவத்தின் வளர்ச்சி, மூல மருந்துப் பொருட்கள் மற்றும் தரமான மூலிகைச் செடிகள் கிடைப்பதைப் பொறுத்தே அமையும். இந்தியமுறை மருத்துவத்தின் தேவைகளை நிறைவாக்குகின்ற வகையில், கிடைத்தற்கரியனவும், எப்போதும் கிடைப்பனவும் ஆகிய மூலிகை மற்றும் மருந்துச் செடிகளை வளர்க்க வேண்டியது மிகவும் அவசியம். அந்த மூலிகை இனங்கள் அழிந்து விடாமல் பராமரிக்கவும் வேண்டியுள்ளது. இந்த குறிக் கோளை அடையும் வகையில் மூலிகைப் பண்ணைகளை ஏற்படுத்துவதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 5.08 லட்சம் செலவில் கீழே கண்டுள்ள இடங்களில் மூலிகைப் பண்ணைகளை ஏற்படுத்தவும் தற்போதுள்ள மூலிகைப் பண்ணைகளை விரிவாக்கம் செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது:—

1. சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை.
2. மதுரை காமராசர் பல்கலைக் கழக வளாகம்.
3. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள திருவரங்கம்.
4. மதுரை மாவட்டத்திலுள்ள வைகை நீர்த்தேக்கம்.
5. மதுரை மாவட்டத்திலுள்ள சிறுமலைக் குன்றம்.

1980-81 ஆம் ஆண்டில், இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூருக்கு அருகிலுள்ள செண்பகத்தோப்பு என்னுமிடத்தில் ரூ. 3.00 இலட்சம் செலவில் மேலும் ஒரு மூலிகைப் பண்ணை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



தற்போதுள்ள மூலிகைப் பண்ணைகளை விரிவாக்கம் செய்தல்.

1. சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையிலுள்ள மூலிகைப் பண்ணை.—1979-80-ஆம் ஆண்டில், சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையை ஒட்டியுள்ள இடத்தில் 9.2 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள மூலிகைப் பண்ணையினை ரூ. 1.06 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சிப் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

2. கன்னியாகுமரி மாவட்டம், வீரப்புலி ஒதுக்கக் காட்டிலுள்ள மூலிகைப் பண்ணை.—கன்னியாகுமரி மாவட்டம், வீரப்புலி ஒதுக்கல் காட்டில், 5 எக்டேர் நிலப்பரப்பில் ஒரு மூலிகைத் தோட்டம் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. ரூ. 1.00 இலட்சம் செலவில் தொழிலாளர் குடியிருப்பும் கட்டப்படும். சரியான படி அணுகுச்சாலை மற்றும் போக்குவரத்து ஆகிய வசதிகளின்மையால் இந்தத் திட்டத்தினை உடனடியாகச் செயலாக்கம் பெற எடுத்துக் கொள்ள முடிய வில்லை. ஆகையினால் ரூ. 8.37 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் இந்த மூலிகைப் பண்ணையினை விரிவாக்கம் செய்யவும், மூலிகை அருங்காட்சியக மொன்று நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி யாளர் இந்த மூலிகைப் பண்ணை அமைப்பதற்கான திட்ட அறிக்கை ஒன்றி னைத் தயார் செய்து அரசுக்கு அனுப்பியுள்ளார். இந்தத் திட்ட அறிக்கை யினை அரசு முனைப்புடன் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

## V. மருத்துவ கல்வி.

மருத்துவப் பட்டப்படிப்பு.—பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அளிக்கும் பி.எஸ்.எம்.எஸ், பட்டப் படிப்பிற்கான சித்த மருத்துவக் கல்வி, மாணவர் களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 1978-79-ஆம் கல்வியாண்டு முதல், ஆண்டு தோறும் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 40 லிருந்து 44 ஆக (உதவித் தொகை பெறத்தக்க 30 இடங்களும் உதவித்தொகை பெறத்தகுதி இல்லாத 14 இடங்களும்) உயர்த்தப்பட்டுள்ளது.

பி.எஸ்.எம்.எஸ், சித்த மருத்துவப் பட்டப் படிப்பிற்காக இக்கல்லூரியி லுள்ள 44 இடங்களில் 4 இடங்களை, பரிமாற்று முறையில் அரசு கேரள மாணவர்களுக்கு ஒதுக்கம் செய்துள்ளது. இது போன்று, கேரள மாநில அரசும், தமிழக மாணவர்கள் நான்கு பேரை கேரளத்திலுள்ள இரு ஆயுர்வேதக் கல்லூரிகளில் பி.ஏ.எம்.எஸ், ஆயுர்வேதப் பட்டப்படிப்பில் சேர்த்துக் கொள்ள இணங்கியுள்ளது.

பி.எஸ்.எம்.எஸ். சித்த மருத்துவப் பட்டப் படிப்பில் சேர்வதற்கு மாணவர்களிடையே மிகுந்த அளவில் வரவேற்பு இருந்து வருகின்றது. மேற்குறிப்பிட்ட பாளையங்கோட்டையிலுள்ள கல்லூரியில் தேர்ச்சி பெற்று வருபவர்கள், தேவைகளை நிறைவாக்கப் போதுமான அளவுக்குக் கிடைக்காத காரணத்தால், பணித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் பயிற்சி பெற்ற சித்த மருத்துவர்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. வருங்காலத்தில், மேலும் பல சித்தா கல்லூரிகளைத் தொடங்கி பயிற்சி பெற்ற சித்த மருத்துவர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்காவிடில் தகுதி வாய்ந்த மருத்துவர்கள் கிடைப்பது அரிதாகிவிடலாம். எனவே, இந்த மாநிலத்தில் மேலும், ஒரு சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கலாமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக ஆய்வுக் கூடங்கள், கல்லூரிக்கான கட்டிடங்கள் போன்ற வசதிகளைத் கொண்ட 50 படுக்கை வசதியுடன் மருத்துவமனையொன்று ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பொருட்டு 1980-81-ஆம் ஆண்டில் ரூபாய் 4.15 இலட்சம் மருத்துவமனை மற்றும் கல்லூரிக் கட்டிடம் கட்டுவதற்குச் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### புகுமுக சித்தா பயிற்சி.

தமிழ்நாட்டில், பி.எஸ்.எம்.எஸ். சித்தா பட்டப்படிப்பிற்கு முன்னோடியாக் புகுமுக சித்தா வகுப்பு தொடங்கப்படல் வேண்டுமென, டில்லியிலுள்ள இந்திய மருத்துவ மத்திய ஆராய்ச்சிக் கழகம் வலியுறுத்தி வந்தது. 1979-80 ஆம் கல்வி ஆண்டில், புகுமுக சித்தா வகுப்பிற்கான பாடத்திட்டங்கள் தயாரிக்கப் பட்டு, புதிய மேல் நிலைக் கல்வித் திட்ட நீரோட்டத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

### அரசினர் இந்திய முறை மருத்துவக்கல்லூரி (யுனானி), சென்னை.

1960-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த மருத்துவக் கல்லூரி மூடப்பட்டதிலிருந்து, யுனானி மருத்துவக் கல்வி வழங்கும் பிரிவுகள் இல்லாத நிலை இருந்து வந்தது. இந்த இடைவெளியினை நிரப்பவும், இந்த மருத்துவ முறையினை இளைய தலைமுறையினருக்கு வழங்கிடவும், 1979-80-ஆம் கல்வி யாண்டு முதல் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில், யுனானி மருத்துவக் கல்வி கற்பிக்கும் பொருட்டு, ஒரு இந்திய முறை மருத்துவக் கல்லூரி தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது.





இந்தக் கல்லூரி பி.யு.எம்.எஸ். என்ற யுனானி மருத்துவப் பட்டப் படிப்பிற்கான பயிற்சியளித்துவரும். ஆண்டுதோறும், இப் பயிற்சியில் 15 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இந்த 15 இடங்களில் 10 இடங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு இடத்திற்கு ரூபாய் 75 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

யுனானி பட்டப் படிப்பின் முன்னோடியான, இரண்டாண்டு கால புகுமுக யுனானி டிப் வகுப்பு, பெண்களுக்கு சென்னையிலுள்ள எஸ்.ஐ.இ.டி. மகளிர் கல்லூரியிலும், ஆண்களுக்கு புதுக்கல்லூரியிலும் தொடங்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில், 15 மாணவர்கள் (9 பெண்களும் 6 ஆண்களும்) இவ் வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்டுள்ள யுனானி மருத்துவக் கல்லூரிக்கு ரூபாய் 6.25 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டிடங்கள் கட்டுமுகமாக 1980-81-ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டில் அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ஆயுர்வேதா மருத்துவக் கல்வி.

1978-79-ஆம் கல்வியாண்டில், கோயம்புத்தூரிலுள்ள ஆயுர்வேத தர்ம நிறுவனம் ஒன்று பி.எ.எம்.எஸ். ஆயுர்வேதப் பட்டப் படிப்புக் கல்லூரி ஒன்றினைத் தொடங்கியுள்ளது. மைலாப்பூரிலுள்ள வேங்கடரமணா ஆயுர்வேத தர்ம நிறுவனமும் 1980-81 ஆம் கல்வியாண்டில் இருந்து ஆயுர்வேதப் பட்டப் படிப்புக் கல்வி வழங்கி வருகிறது.

### மருத்துவ பட்டமேற்படிப்பு.

பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில், "மருத்துவம்" "குணபாடம்" ஆகிய இரு பிரிவுகளில் சித்த மருத்துவப் பட்ட மேற்படிப்பு, 1972-ஆம் ஆண்டு டிசம்பர் முதல் மைய அரசின் முழுநிதி உதவியுடன் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. ஆண்டு தோறும், இந்தப் படிப்பிற்கு ஒரு பிரிவுக்கு 10 மாணவர்கள் விதம் இரு பிரிவுகளிலும் சேர்க்கப் பட்டு வருகின்றனர். ஒவ்வொரு மாணவருக்கும் மாதந்தோறும் ரூபாய் 200 உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

படிப்புதவித் தொகையான ரூபாய் 200 சொற்பமாக இருப்பதால், பி.ஐ.எம். பட்டதாரிகள் பட்ட மேற்படிப்பு வகுப்பில் சேர்வதற்குத் தயங்குகின்றனர். பட்ட மேற்படிப்பு வகுப்பிற்கு இந்திய அரசு வரையறை செய்துள்ள பணியாளர் அமைப்பினை சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டால்தான், இந்திய அரசு தற்போதுள்ள உதவித் தொகையினை ரூபாய் 400 ஆக உயர்த்துவதற்கு முன்வரும்.

போதிய கல்வித் தகுதியுள்ளவர்கள் இல்லாத காரணத்தால், பேராசிரியர், இணைநிலைப் பேராசிரியர், விரிவுரையாளர் போன்ற ஒரு சில பதவிகள் பட்ட மேற்படிப்புத்துறையில் பணியாற்றுவதற்கு நிரப்ப இயலாமல் இருந்து வருகின்றது. இந்தப் பதவிகளை நிரப்புவதற்கான செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. கூடுதலான அளவில் பி.ஐ.எம். பட்டதாரிகளை பட்ட மேற்படிப்பில் சேர்வதற்கு ஊக்குவிக்கும் வகையில், இந்தப் படிப்புதவித் தொகையினை ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 325 ஆக உயர்த்தலாமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய அரசு இந்தப் படிப்புதவித் தொகையினை ஒரு மாணவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400 ஆக உயர்த்தும் காலகட்டம் வரையில், இதனால் ஏற்படும் கூடுதல் செலவினமான ரூபாய் 125-ஐ (மாணவர் ஒன்றுக்கு மாதம் ரூபாய் 125 வீதம்) மாநில அரசே ஏற்றுக் கொள்ளும். இதற்காக, 1980-81 வரவு-செலவு மதிப்பீட்டில் ரூபாய் 0.83 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### இந்தியமுறை மருந்தாளுநர் பட்டயத் தகுதிப்படிப்பு.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவ மனையில் இரண்டாண்டுகால இந்தியமுறை மருந்தாளுநர் பட்டயத் தகுதிப்படிப்பிற்கு 1974-75 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் 25 மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். இந்த மருத்துவ மனையில் சித்தா, ஆயுர்வேதம், யுனானி ஆகிய மூன்று பிரிவுகளிலும் மருந்தாளுநர் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. பாளையங்கோட்டை, அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியில் சித்தா பிரிவில் மட்டும் மருந்தாளுநர் பயிற்சியளிக்கப்படுகிறது. 1979-80-ஆம் ஆண்டில் இப்பயிற்சிக்கு 25 மாணவர்கள் (18 சித்தா, 5 ஆயுர்வேதா 2 யுனானி) சேர்க்கப்பட்டனர். ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 30 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

### பாளையங்கோட்டை, அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியினை விரிவாக்கம் செய்தல்.

இக்கல்லூரிக்கென 1979-80-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு:—

1. ரூபாய் 4.00 இலட்சம் செலவில் உட்பயிற்சி மருத்துவர் விடுதி கட்டுதல்.
2. ரூபாய் 23.80 இலட்சம் செலவில், மாணவர்களுக்கான விடுதி கட்டுதல்.
3. ரூபாய் 7.75 இலட்சம் செலவில் மாணவியருக்கான விடுதி கட்டுதல்.



### ஆயுர்வேத, யுனானி மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல்.

தற்போது ஆயுர்வேத, யுனானி மருத்துவக் கல்வியின் பயிற்று மொழியாக முறையே சமஸ்கிருதமும் உருதும் இருந்துவருகின்றன. 1964 ஆம் ஆண்டு பாளையங்கோட்டை, அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியில் ஆயுர்வேதப்பயிற்சி சமஸ்கிருதத்திலும் யுனானிப் பயிற்சி உருது மொழியிலும் தொடங்கப்பட்டபோது, மொழி அறியாக் காரணமாக மாணவர் எவரும் இப் பிரிவில் சேர முன்வரவில்லை. எனவே, தமிழக மாணவர்கள், ஆயுர்வேத, யுனானிப் பயிற்சிப் பிரிவுகளில் சேர்ந்து பயனடையும் வகையில், வரும் ஆண்டுகளில் ஆயுர்வேத, யுனானி மருத்துவக் கல்வியினைத் தமிழிலேயே பயிற்றுவிக்கலாம் என்ற நோக்குடன், இந்தப் பயிற்சினை தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு தொடங்கப்படின், ஆயுர்வேத, யுனானி மருத்துவ நூல்களை முறையே சமஸ்கிருதம், உருது ஆகிய மொழிகளிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதவிர, சித்த மருத்துவத் தமிழ் இலக்கியங்களையெல்லாம் அவற்றில் அமைந்துள்ள நிறைந்த அறிவுச் செல்வமும் குறிப்பிடத் தக்க அம்சங்களும், பிறமொழி பேசுகிறவர்களுக்கும் வெளிப்படுத்தும் நோக்குடன் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத் திட்டம் அரசால் விரைவில் செயல்படுத்தப்படும்.

### இந்திய மருத்துவ முறையில் செவிலியர் பயிற்சி.

இந்திய முறை மருத்துவமனைகளில், செவிலியர்பணி அலோபதி முறையில் பயிற்சி பெற்ற செவிலியர்களால் கவனிக்கப்பட்டு வருகின்றது. இந்தியமுறை மருந்துகளைக் கையாள்கிற முறைமையும், சிகிச்சையின் தன்மையும், மருந்துகளின் செயல்திறனும் இந்தச் செவிலியர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இந்திய முறை மருத்துவத்திற்கென்றே தனியாகச் செவிலியர் பணியினை ஏற்படுத்துதல் வேண்டும் என்பதை முன்னிட்டு, இந்திய மருத்துவ முறையில் செவிலியர் பயிற்சித் திட்டம் ஒன்றினை அமுலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த செவிலியர் பயிற்சிக் காலம் 3½ ஆண்டுகளாகும். மேற்கண்ட பயிற்சி விரைவில் தொடங்கப்படும். இதற்காக 1980-81 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 0.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## VI. இந்திய மருத்துவமுறை ஆராய்ச்சி.

புது டில்லியிலுள்ள ஆயுர்வேதா மற்றும் சித்தா ஆராய்ச்சி மத்தியக் குழுவின் ஆதரவில், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையில் கீழ்க்கண்ட ஆராய்ச்சிப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சிப் பிரிவுகளுக்கு மாநில அரசு இடவசதியும், படுக்கைவசதியும் செய்து கொடுத்துள்ளது. ஆராய்ச்சித் திட்டங்களுடன் தொடர்புடைய ஏனைய செலவுகள் அனைத்தையும் புது டில்லியிலுள்ள சித்தா மற்றும் ஆயுர்வேதா மருத்துவ ஆராய்ச்சி மத்தியக்குழு ஏற்றுக்கொள்கிறது.

(1) சித்த, ஆயுர்வேத, யுனானி முறைகளில் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவுகள்.

(2) மத்திய ஆராய்ச்சி நிலையம் (சித்தா).

(3) கேப்டன் சீனிவாசமூர்த்தி ஆராய்ச்சி நிலையம்.

சித்த மருத்துவ மத்திய ஆராய்ச்சி நிலையம், கேப்டன் சீனிவாசமூர்த்தி ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் விஸ்தரிப்புத் திட்டங்களுக்காக, பிராணிகள் கூடம், மருந்துசெய் பிரிவு, அட்டிற் சாலை போன்றவற்றிற்கான கூடுதல் கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கு 1979-80-இல் ரூ. 10.05 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டிட வேலைகள் செயலாக்கம்பெறும் பொருட்டு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 1.50 இலட்சம் செலவில் கேப்டன் சீனுவாசமூர்த்தி ஆராய்ச்சி நிலையத்திற்கென கூடுதல் கட்டிடம் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வட்டார யுனானி ஆராய்ச்சி நிலையம்.—இந்திய அரசின் யுனானி ஆராய்ச்சி மத்தியக் குழு, சென்னையில் 1979-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் ஒரு வட்டார யுனானி ஆராய்ச்சி நிலையம் தொடங்கியுள்ளனர். இந்த ஆராய்ச்சி நிலையத்தின் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன:—

(1) புறப்பிணியாளர் பிரிவுடனும் 25 படுக்கைகள் கொண்ட உட்பிணியாளர் பிரிவுடனும் மருத்துவ ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் ;

(2) நடமாடும் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு ;

(3) மூலிகை ஆராய்ச்சிப் பிரிவு.

(4) குடும்பக் கட்டுப்பாடு மருந்துகள் பற்றிய ஆராய்ச்சித் திட்டம்.



இந்த வட்டார யுனானி ஆராய்ச்சி நிலையத்தினை அமைப்பதற்கு அரசு வாடகையில்லாமல் ஓர் கட்டிடத்தினைத் தந்துள்ளது. இந்தக் கட்டிடத்தைப் பழுதுபார்க்க ரூ. 1.25 இலட்சம் அரசால் செலவிடப்பட்டுள்ளது.

**மாநில அளவிலான ஆராய்ச்சித் திட்டங்கள்.**—நோய்களின் தன்மைகளை கண்டறியவும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சென்னை அறிஞர் அண்ணா அரசின் இந்திய முறை மருத்துவமனையில் முழு வசதிகளும் கொண்ட நோய்க் குறியியல் சோதனைக் கூடம் ஒன்று அமைக்கவும் உயிர் வேதியியல் சோதனைக் கூடமொன்று ஏற்படுத்தவும், ஊடுகதிர் தளவாடங்கள் வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வசதிகளுக்காக, 1979-80-இல் ரூ. 3.60 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டு கட்டுமான வேலைகள் செயலாக்கம் பெற்றுவருகின்றன.

## VII. சித்த மருத்துவ அறிவியல் மேம்பாட்டுக் குழு.

சித்த மருத்துவ அறிவியல் மேம்பாட்டுக் குழு 1973-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பனை ஓலைச் சுவடிகள், கையேட்டுப் பிரதிகள், அச்சிடப்பட்ட அரிய நூல்கள் ஆகியனவற்றைத் திரட்டுதல், பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படும் பி.எஸ்.எம்.எஸ். சித்தா பட்டபடிப்பு, எம்.டி. சித்தா பட்ட மேற்படிப்பு ஆகியவற்றுக்கான பாட நூல்களையும் திரட்டப்பட்ட சுவடிகள் போன்றவற்றையும் அச்சிட்டு, வெளியிடுதல் இக் குழுவின் பொறுப்பாகும்.

இக் குழு தொடங்கப்பட்ட நாள் தொட்டு அது ஆற்றியுள்ள குறிப்பிடத்தக்க பணிகளாவன:—

| | | | |
|---|---|---|---|
| (1) | அச்சிடப்பட்ட அரிய நூல்கள் | .. .. | 699 |
| (2) | ஓலைச் சுவடிகள் | .. .. | 848 |
| (3) | கையேட்டுப் பிரதிகள் | .. .. | 99 |
| (4) | தட்டச்சுப்பிரிதிகள் | .. .. | 306 |
| (5) | முப்பு பற்றிய தட்டச்சுப் பிரதிகள் | | 2 பாகங்கள் |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள் (1) முதல் (3) இல், 119 பிரதிகள் படி எடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 74 கையேட்டுப் பிரதிகள் பிழைகள் நீக்கப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள சுவடிகளும் கையேட்டுப் பிரதிகளும் பரிசீலனை செய்யப்பட்டு எடுத்து எழுதப்பட வேண்டியுள்ளது.

அறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது அச்சிட்ட அரிய நூல்களில், 7 அரிய நூல்களை அச்சிடத் திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வளவு துரிதமாக இயலுமோ அவ்வளவு துரிதமாக இந்த அரிய நூல்களை அச்சிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. 3 புத்தகங்கள் அச்சிடத் தயாராக உள்ளன. 4 நூல்களுக்கு விளக்கவுரைகள் எழுதப்பட்டு வருகின்றன.

மேற்கொண்டு அச்சிடவேண்டிய நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பாக, இதுவரை சேகரிக்கப்பட்டுள்ள அரிய நூல்களின் விளக்கத் தொகுப்பு ஒன்று தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

காலஞ்சென்ற திரு. கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றிய "சித்த மருத்துவ வரலாறு" எனும் ஆங்கில நூல் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. டி. வி. சாம்பசிவன் பிள்ளையவர்கள் எழுதிய சித்த மருத்துவப் பேரகராதியின் 5 பாகங்களும் ஜி. டி. நாயுடு அச்சகத்தில் அச்சிடப்பட்டு விற்பனைக்குத் தயாராக உள்ளன.

**பாட நூல்கள்.**—இதுவரை 11 பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட பாட நூல்கள் அரசு அச்சகத்தில் அச்சிடப்பெற்று வருகின்றன:—

(1) குணபாடம் (தாது ஜீவ வர்க்கம்).

(2) சித்த மருத்துவாங்கச் சுருக்கம்.

(3) அறுவை மருத்துவத்தில் நோயாளியைப் பரிசோதிக்கும் முறைமை.

இரண்டு பாட நூல்கள் அச்சிடத் தயாராக உள்ளன. மேலும் 2 நூல்கள் எழுதப்பட்டு வருகின்றன. இன்னும் 4 நூல்களை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஒரு பாடநூலும், ஒருங்கிணைந்த மருத்துவ மனையில் கையாளப்பட்டு வந்த "சித்த மருத்துவ முறைகளின் தொகுப்பு" என்ற நூலும் மீண்டும் அச்சிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு சில நபர்கள் தங்கள் வசமுள்ள சுவடிகளையும் அரிய நூல்களையும் தருவதற்கு முன் வந்துள்ளனர். அவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.



## VIII. இந்தியமுறை மருத்துவ ஆராய்ச்சி மேம்பாட்டுக் குழு.

சித்த மருத்துவத்தினை மேம்பாடடையச் செய்வதற்கும் பொது மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை அதிகமாக்கவும் உரிய வழி முறைகளை ஆய்ந்து அரசுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு, 1978-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் "இந்திய முறை மருத்துவ ஆராய்ச்சி மேம்பாட்டுக் குழு" அமைக்கப் பட்டது. இக் குழு 1978-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ஆம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது. இம் மாநிலத்திலுள்ள சித்தா பிரிவுகள் உட்பட பலதரப்பட்ட இந்திய மருத்துவ வசதி நிலையங்களையும் பார்வையிட்ட பின்னர், இக்குழு அரசுக்கு ஒரு இடைக்கால அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளது. இக் குழுவின் பணிக்காலம் 1979-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3-ம் நாள் முடிவடைந்து விட்டது. இக் குழுவின் இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

## IX. தொண்டாற்றும் நிறுவனங்களுக்கு மாநில உதவியளித்தல்.

இந்திய மருத்துவ முறையில் இலவசச் சிகிச்சையளித்து வரும் தொண்டு நிறுவனங்களுக்கு, அரசு மானிய உதவியளித்து வருகின்றது. இந்த மானியம், அந் நிறுவனங்களின் பராமரிப்பு செலவில் துண்டு விழும் ஒரு பகுதியினை ஈடு செய்கின்ற வகையில் வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தின்கீழ் பின்வரும் நிறுவனங்கள் ஆண்டு தோறும் மானிய உதவி பெற்று வருகின்றன:—

| | | ஆண்டு ஒன்றுக்கு ரூபாய். |
|---|---|---|
| (1) | ஸ்ரீ வெங்கடரமண ஆயுர்வேத மருந்தகம், மயிலாப்பூர் .. .. .. | 5,000 |
| (2) | ருக்மணி நினைவக மருத்துவமனை, பட்டுக் கோட்டை .. .. .. | 2,000 |
| (3) | அருள்மிகு இராமநாதசுவாமி தேவஸ்தான ஆயுர்வேத மருந்தகம், இராமேஸ்வரம் .. | 2,000 |
| (4) | ஸ்ரீ வெங்கடேச ஔஷதாலயா, சென்னை 1. | 5,000 |

## X. இந்திய முறை மருத்துவர்களின் பதிவு.

சென்னையிலுள்ள இந்திய மருத்துவ மத்தியக் குழு இந்திய முறை மருத்துவர்களைப் பதிவு செய்து வருகிறது. பட்டங்கள் மற்றும் பட்டயத் தகுதி பெற்ற மருத்துவர்களும் பாரம்பரை மற்றும் பாரம்பரிய மருத்துவர்களும் பல்வேறு நிலைகளில் இந்திய மருத்துவ மத்தியக் கழகத்தில் பதிவு செய்யப்பட்டு வருகின்றனர். இக் கழகம் அரசின் செயலாணைகளின்படி இயங்கி வருகின்றது. இந்திய அரசிலுள்ள இந்திய மருத்துவ மையக் குழுவின் 1970-ஆம் ஆண்டுச் சட்டத்தின் படி, பாரம்பரை மற்றும் பாரம்பரிய வைத்தியர்களின் பதிவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பதிவினை நீடிக்கலாமா என்ற விவரமறியும் பொருட்டு இந்திய அரசிடம் ஒரு சில விளக்கங்கள் கேட்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டு இந்தியமுறை மருத்துவர்களைப் பதிவு செய்வதற்கான சட்டம் நடப்பு ஆண்டில் சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படும்.

ஒருங்கிணைந்த மருத்துவக் கழகம்.—ஒருங்கிணைந்த மருத்துவக் கழகம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த மருத்துவ 1956-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஒரு நிலையான அமைப்பாகும். இந்த அமைப்பு ஒருங்கிணைந்த மருத்துவர்களின் நலன்களைப் பேணுவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் உட்கூறுகள் ஒருங்கிணைந்த மருத்துவர்கள் இந்திய மருத்துவ முறையிலும், அலோபதி மருத்துவ முறையிலும் சிகிச்சை செய்யும் உரிமையினை அளித்துள்ளது.

## XI. யோகாசன முறைச் சிகிச்சை.

யோகாசன சிகிச்சை முறைக்கு அங்கீகாரம் வழங்குவது பற்றியும் இந்த முறையினைத் தமிழகத்தில் மேம்பாடடையச் செய்வது பற்றியும் அரசுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு தமிழக அரசு ஒரு குழுவினை அமைத்தது. இக்குழு அரசுக்கு ஒரு ஆரம்ப அறிக்கையினைத் தந்து சில பரிந்துரைகளையும் அனுப்பியுள்ளது. இப்பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன. மாநிலத்தில் தற்போது இயங்கி வருகின்ற யோகாசன நிலையங்களுக்கு, அரசு மானிய உதவியளிக்கவேண்டியது பற்றியும் இக்குழு பரிந்துரை செய்யும்.

திருப்பதியிலுள்ள "இந்திய யோகாசனம் மற்றும் யோகாசனத்தொடர்பான அறிவியற் பயிற்சி நிலையம்" (பதிவுசெய்யப்பட்டது) ஆஸ்துமா, மஞ்சட் காமாலை போன்ற சில வகையான நோய்களை யோகாசன முறையில் குணப்படுத்துவது பற்றி ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றது. இந்தப் பயிற்சி நிலையம் ஆந்திர மாநில அரசின் பொறுப்பில் கொண்டு வரப்பட்டுள்ளது.





ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் இந்நிலையத்தின் பாரமரிப்புச் செலவினை 2:1:1 என்ற விகிதத்தில் ரூ. 3.00 இலட்சத்திற்கு மிகைப்படாதவாறு கொடுக்கும் வகையில், தமிழக அரசு அந்தப் பயிற்சி நிலையத்தின் நிர்வாகத்தில் பங்கேற்றுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்டுள்ளது.

பங்கு பெறும் மாநிலங்களின் விகிதாசாரத்திற்கேற்ப (அதாவது ஆந்திரா—2, தமிழ்நாடு—1, கர்நாடகம்—1) இந்தப் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் யோகாசனப் பட்டயத்தகுதி மற்றும் சான்றிதழ் பயிற்சி வகுப்புகளுக்கு தமிழக மாணவர்களை அனுப்புவதற்கு வசதிகள் உள்ளன.

மேற்குறிப்பிட்ட "இந்திய யோகாசனம் மற்றும் யோகாசனத் தொடர்பான அறிவியற் பயிற்சி நிலையம்" தமிழ் நாட்டு மாணவர்களுக்கு மொத்த இடங்களில் 25 விழுக்காடு இடங்களை, அதாவது பட்டயத் தகுதிப் படிப்பிற்கு 15 இடங்களும் சான்றிதழ் படிப்பிற்கு 10 இடங்களும் ஒதுக்கம் செய்துள்ளது.

தற்சமயம் தமிழகத்தில் 25 யோகாசன நிலையங்கள் உள்ளன. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள இதயநோய் சிகிச்சைத் துறையுடன் யோகாசனப் பிரிவு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னையிலுள்ள அரசினர் பொது மருத்துவ மனையில் யோகாசன ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் நிடமான இதயத் துடிப்பு ஆய்வுக் கூடம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளன.

## XII. இயற்கை முறை மருத்துவம்.

இயற்கை முறை மருத்துவத்தினையும் தமிழகத்தில் வழக்கில் இருந்து வரும் சிகிச்சைப் பிரிவுகளில் ஒன்றாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இயற்கை முறை சிகிச்சை பற்றிய அனைத்து விவரங்களையும், இந்த முறையினை மேம்பாடடையச் செய்வதற்கான வழிகளையும் பற்றிய ஆலோசனைகளை வழங்கும் பொருட்டு, அரசு அமைத்துள்ள ஆலோசனைக் குழு, இந்த சிகிச்சை முறை பற்றிய பாடங்கள், பாடத்திட்டங்கள் குறித்த வரைவு அறிக்கை ஒன்றை அரசுக்கு அளித்துள்ளது. இந்த அறிக்கையினை அரசு ஆய்ந்து வருகிறது.

இந்த ஆலோசனைக் குழு, ஐதராபாத்திலுள்ள இயற்கை முறை மருத்துவக் கல்லூரிக்கு தமிழகத்திலிருந்து பயிற்சி பெறுவதற்காக மாணவர்களை அனுப்ப வேண்டுமென எடுத்தியம்பியுள்ளது. இதற்கிணங்க 1979-80 முதல் ஐதராபாத்திலுள்ள இயற்கை முறை மருத்துவக் கல்லூரியில், நான்காண்டு கால இயற்கை முறைப் பட்டப்படிப்பில் சேர்ந்து படிப்பதற்கு, தமிழகத்திலிருந்து

ஆண்டு தோறும் 4 மாணவர்களை, அவர்களுக்கு மாதம் ரூபாய் 250 உதவித் தொகை வழங்கி அனுப்பலாமென ஆணையிடப்பட்டுள்ளது. இந்த மாணவர்கள் மேற்சொன்ன பயிற்சியை முடித்த பிறகு தமிழகத்தில் இயற்கை முறையில் சிகிச்சையும் பயிற்சியும் அளிப்பார்கள். மேற்சொன்ன பயிற்சிக்கு 1979-80 ஆம் ஆண்டில் நான்கு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

### தேவையான நிதி ஒதுக்கீடு.

மேலே கூறப்பட்டுள்ள நிதித் தேவைகளை நிறைவாக்கும் வகையில், கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 113.70 இலட்சத்திற்குப், பதிலாக 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 129.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய முறை மருத்துவத்தின் மேம்பாட்டுக்கென ரூபாய் 44.03 இலட்சம் செலவில் புதிய திட்டங்களை வகுத்து, 1980-81 ஆம் ஆண்டில ரூபாய் 25.60 இலட்சம் செலவிட அரசு முன் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்திய முறை மருத்துவத்தின் வளர்ச்சிக்கென இந்த அரசு மிக்க ஆர்வத்துடன் முயன்று வருகின்றது.



## இணைப்பு.

### நாளது தேதிவரை, மாவட்ட ரீதியாக இயங்கும் சித்த மருத்துவப் பிரிவுகளின் விவரங்கள்

| மாவட்டம். | அரசு மாவட்ட/வட்ட/வட்டம் அல்லாத மருத்துவ மனைகள் உள்ள இடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1 செங்கற்பட்டு மாவட்டம். | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, காஞ்சீபுரம். |
| | (2) அரசு மருத்துவ மனை, தாம்பரம். |
| | (3) அரசு மருத்துவ மனை, திருபெரும்புதூர். |
| | (4) அரசு மருத்துவ மனை, திருவள்ளூர். |
| | (5) அரசு மருத்துவ மனை, பொன்னேரி. |
| | (6) அரசு மருத்துவ மனை, மதுராந்தகம். |
| | (7) அரசு மருத்துவ மனை, திருத்தணி. |
| 2 தென்னாற்காடு மாவட்டம். | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, கடலூர். |
| | (2) அரசு மருத்துவ மனை, திண்டிவனம். |
| | (3) அரசு மருத்துவ மனை, சிதம்பரம். |
| | (4) அரசு மருத்துவ மனை, கல்லக்குறிச்சி. |
| | (5) அரசு மருத்துவ மனை, உளுந்தூர்பேட்டை. |

| மாவட்டம். | அரசு/மாவட்ட/வட்ட/வட்டம் அல்லாத மருத்துவ மனைகள் உள்ள இடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 3 வடாற்காடு மாவட்டம். | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, வேலூர். |
| | (2) அரசு மருத்துவ மனை, குடியாத்தம். |
| | (3) அரசு மருத்துவ மனை, அரக்கோணம். |
| | (4) அரசு மருத்துவ மனை, செய்யார். |
| | (5) அரசு மருத்துவ மனை. திருவண்ணாமலை. |
| | (6) அரசு மருத்துவ மனை, திருப்பத்தூர். |
| | (7) அரசு மருத்துவ மனை, ஆம்பூர். |
| | (8) அரசு மருத்துவ மனை ஆரணி. , |
| 4 தஞ்சாவூர் மாவட்டம் | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, நாகப்பட்டினம். |
| | (2) அரசு மருத்துவ மனை, கும்பகோணம். |
| | (3) அரசு மருத்துவ மனை, பட்டுக்கோட்டை. |
| | (4) அரசு மருத்துவ மனை மன்னார்குடி. |
| | (5) அரசு மருத்துவ மனை, மாயூரம். |
| | (6) அரசு மருத்துவ மனை திருவாருர். |
| | 7) அரசு மருத்துவ மனை, திருத்துறைப்பூண்டி. |



| மாவட்டம் | அரசு/மாவட்ட/வட்ட/வட்டம். அல்லாத மருத்துவ மனைகள் உள்ள இடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 5 திருச்சிராப்பள்ளி மாவட்டம். | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை திருச்சிராப்பள்ளி. |
| | (2) அரசு மருத்துவ மனை, லால்குடி. |
| | (3) அரசு மருத்துவ மனை, கரூர். |
| | (4) அரசு மருத்துவ மனை, அரியலூர். |
| | (5) அரசு மருத்துவ மனை, ஜெயங்கொண்டான். |
| | (6) அரசு மருத்துவ மனை, பெரம்பலூர். |
| | (7) அரசு மருத்துவ மனை ஸ்ரீரங்கம். |
| | (8) அரசு மருத்துவ மனை, முசிரி. |
| 6 புதுக்கோட்டை மாவட்டம். | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, புதுக்கோட்டை. |
| | (2) அரசு மருத்துவ மனை, ஆலங்குடி. |
| | (3) அரசு மருத்துவ மனை, வளையப்பட்டி. |
| | (4) அரசு மருத்துவ மனை, அறந்தாங்கி. |
| | (5) அரசு மருத்துவ மனை, திருமயம். |

| மாவட்டம். | அரசு மாவட்ட/வட்ட/வட்டம் அல்லாத மருத்துவ மனைகள் உள்ள இடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 7 மதுரை மாவட்டம். | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திண்டுக்கல். |
| | (2) அரசு மருத்துவ மனை, நிலக் கோட்டை. |
| | (3) அரசு மருத்துவ மனை, உசிலம்பட்டி. |
| | (4) அரசு மருத்துவ மனை' தேனி. |
| | (5) அரசு மருத்துவ மனை, திருமங்கலம். |
| | (6) அரசு மருத்துவ மனை, மேலூர். |
| | (7) அரசு மருத்துவ மனை, கம்பம். |
| | (8) அரசு மருத்துவ மனை, பெரியகுளம். |
| 8 இராமநாதபுரம் மாவட்டம். | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, இராமநாதபுரம். |
| | (2) அரசு மருத்துவ மனை, ஸ்ரீவில்லிபுத்தூர். |
| | (3) அரசு மருத்துவ மனை, சிவகங்கை. |
| | (4) அரசு மருத்துவ மனை, திருப்பத்தூர். |
| | (5) அரசு மருத்துவ மனை, விருதுநகர். |



| மாவட்டம். | அரசு/மாவட்ட/வட்ட / வட்டம் அல்லாத மருத்துவ மனைகள் உள்ள இடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 8 இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி. | (6) அரசு மருத்துவ மனை, ராஜபாளையம். |
| | (7) அரசு மருத்துவ மனை, காரைக்குடி. |
| | (8) அரசு மருத்துவ மனை, அருப்புக்கோட்டை. |
| | (9) அரசு மருத்துவ மனை' சிவகாசி. |
| 9 திருநெல்வேலி மாவட்டம். | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, தூத்துக்குடி. |
| | (2) அரசு மருத்துவ மனை, கோவில்பட்டி. |
| | (3) அரசு மருத்துவ மனை, சங்கரன்கோவில். |
| | (4) அரசு மருத்துவ மனை, திருச்செந்தூர். |
| | (5) அரசு மருத்துவ மனை, அம்பாசமுத்திரம். |
| | (6) அரசு மருத்துவ மனை, கடையநல்லூர். |
| | (7) அரசு மருத்துவ மனை, ஸ்ரீவைகுண்டம். |
| 10 கன்னியாகுமரி மாவட்டம். | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, நாகர் கோவில். |
| | (2) அரசு மருத்துவ மனை, பத்மநாபபுரம். |

| மாவட்டம். | அரசு/மாவட்ட/வட்ட/வட்டம் அல்லாத மருத்துவ மனைகள் உள்ள இடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 11 நீலகிரி மாவட்டம். .. | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை உதக மண்டலம். |
| | (2) அரசு மருத்துவ மனை, கோத்தகிரி. |
| | (3) அரசு மருத்துவ மனை, குன்னூர். |
| | (4) அரசு மருத்துவ மனை, பலடா. |
| 12 கோயம்புத்தூர் மாவட்டம். | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, திருப்பூர். |
| | (2) அரசு மருத்துவ மனை, உடுமலைப்பேட்டை. |
| | (3) அரசு மருத்துவ மனை, பொள்ளாச்சி. |
| | (4) அரசு மருத்துவ மனை, சின்கோனா. |
| 13 பெரியார் மாவட்டம். .. | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, ஈரோடு. |
| | (2) அரசு மருத்துவ மனை, கோபிசெட்டிப்பாளையம். |
| | (3) அரசு மருத்துவ மனை, பவானி. |
| 14 தர்மபுரி மாவட்டம். .. | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, தர்மபுரி. |
| | (2) அரசு மருத்துவ மனை, ஓசூர். |
| | (3) அரசு மருத்துவ மனை, தென்கனிக்கோட்டை. |
| | (4) அரசு மருத்துவ மனை, கிருஷ்ணகிரி. |



| மாவட்டம். | அரசு/மாவட்ட/வட்ட/வட்டம் அல்லாத மருத்துவ மனைகள் உள்ள இடங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 15 சேலம் மாவட்டம். .. | (1) மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, சேலம். |
| | (2) அரசு மருத்துவ மனை, ஆத்தூர். |
| | (3) அரசு மருத்துவ மனை, நாமக்கல். |
| | (4) அரசு மருத்துவ மனை, மேட்டூர் அணை. |
| | (5) அரசு மருத்துவ மனை, ஏர்காடு. |
| | (6) அரசு மருத்துவ மனை, திருச்செங்கோடு. |
| | (7) அரசு மருத்துவ மனை, சேந்தமங்கலம். |

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

**வியாழக்கிழமை, 1980 ஜூலை 24.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினா.

**தானியக்கடன்.**

*7. **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் செல்வி அ. லீலாவதி :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம் :

(அ) பண்டிகை முன்பணம் வழங்குவதுபோல, அறுவடைக் காலங்களில் தானியங்கள் வாங்குவதற்காக அரசுப் பள்ளி ஆசிரியர்கள் உட்பட அரசு ஊழியர்களுக்கு, தானியக்கடன் வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விழாக் காலங்களில் ஒட்டுமொத்தமாக ஒரு குறிப்பிட்ட தொகையை அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அரசு முன்பணமாகக் கொடுக்கிறது. அந்தக் கடன் தொகை அவர்களுக்குப் பல வகைகளில் உதவியாக இருக்கிறது. அதைப் போலவே அறுவடைக் காலங்களில் தானியங்களின் விலை மிகக் குறைவாக இருப்பதால், அந்தச் சமயத்தில் ஒரு ஆண்டுக்கு வேண்டிய

தானியத்தை ஊழியர்கள் வாங்கி வைத்துக் கொள்ள, அவர்களுக்கு உதவி செய்கின்ற வகையிலே அரசு இதைப்பற்றிப் பரிசீலனை செய்யுமா? தான்யங்கள் வாங்குவதற்கு கடன் வழங்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இருப்பதாகப் பத்திரிகைச் செய்தியெல்லாம் வந்தது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தற்போது அது அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்று சொன்னார்கள். இப்போது இல்லாவிட்டாலும் வருங்காலத்தில் அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்ய முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல், செயற் குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை. அப்படிப் பரிசீலிக்கவேண்டிய அவசியமும் இல்லை என்று கருதுகிறேன். ஏனென்றால் வேறு பல கடன்கள், வட்டியில்லா கடன்கள், வட்டியோடு கூடிய கடன்கள் என்று வழங்கப் படுகின்றன. கதர் துணி முன் பணம், கைத்தறித் துணி வாங்க முன்பணம், செவி கேட்கும் கருவி வாங்க கடன் உதவி, பண்டிகை முன் பணம், மூக்குக் கண்ணாடி வாங்க முன்பணம், குழந்தைகள் கல்விக்கு முன் பணம் என்று இப்படி வட்டியில்லாத கடன்கள் கொடுக்கப்படுகின்றன. அதுபோலவே வட்டி யோடு கூடிய கடன்கள், மோட்டார் வாகன கடன்கள், மோட்டார் சைக்கிள் வாங்க கடன், மோபட் வாங்க கடன், மிதி வண்டிக் கடன், கட்டிட மனை வாங்க கடன், கட்டிடம் கட்டக் கடன், கம்பளிக் கடன் ஆகிய பலவிதமான கடன்கள் இருப்பதால், இந்த அறுவடைக் காலத்தில் தான்யக் கடன் என்று கொடுப்பதற்கு செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தற்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அரசில் கொடுக்கும் கடன் உதவிகள் பற்றி படித்துக் காண்பித்தார் கள். ஆனால் அந்த உதவிகள் எல்லாம் அரசு ஊழியர்கள், அரசுப் பள்ளி களில் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு மட்டும் தான் கொடுக்கப்பட்டு அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றில் ஒரு சில சலுகைகள் மட்டும் தான் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் கொடுப்பதாகத் தெரிகிறது. அமைச்சர் அவர்கள் இப்போது அறிவித்த சலுகைகள் அரசு ஊழியர்களுக்குத் தான் கிடைக்கின்றன தனியார் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் அந்தச் சலுகைகள் எல்லாவற்றையும் வழங்க அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றித் தனித் தனியாக கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். எது எது கொடுக்கப் படுகிறது, எது எது கொடுக்கப்படவில்லை என்பதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த பட்டியலிலே ஆடம்பரப் பொருள்களுக்குக் கடன் உதவி இருக்கிறது. அத்தியாவசியமான பொருள்களுக்கும் கடன் வழங்குகின்ற நிலைமைகள் இருக்கின்றன. இப்போது கேட்டிருப்பது உணவுக்காக. இது ஒரு இன்றி யமையாத பொருள். அந்த உணவை அறுவடைக்காலங்களில் நாம் கொடுத்து விடுவதன் மூலம் நாம் உணவு விநியோகத்தின் ஒரு பகுதிப் பொறுப்பையும் ஓரளவுக்குக் குறைத்துக்கொண்டுவிடுகிறோம். எனவே 'புட் கார்ப்பரேஷன்' மூலம் அந்த உணவுப் பொருள்களைக் கொடுத்துவிட்டு மாதந்தோறும் ஊழியர்கள் சம்பளப் பணத்தில் பிடித்தம் செய்யும் திட்டத்தை அமுல்படுத்த அரசு முயற்சி செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட செயற் குறிப்பு எதுவும் ஆராயும் தன்மையில் இப்போது இல்லை. இனியும் இல்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரி வேலை நிறுத்தம் பற்றியும், கால வரம்பின்றி மூடப்பட்டிருப்பது பற்றியும், அதைத் திறப்பது குறித்தும்.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருவாளர்கள் பா. ரா. தாமஸ், சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் செல்வி எ. லீலாவதி ஆகியோர் மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரி வேலை நிறுத்தம் பற்றியும், மேலும் அது காலவரம்பின்றி மூடப்பட்டிருப்பதுபற்றியும் அக்கல்லூரியைத் திறப்பதற்கு வழி செய்வது பற்றியும், இச்சூழ்நிலை மற்ற பொறியியற் கல்லூரிகளுக்கு

பாவாமல் இருப்பது பற்றியும் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு இவ்விதிகளின் கீழ் வருகின்றது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரி மாணவர்கள் இந்த ஆண்டு சேரக் கூடிய மாணவர்கள் நான்கு ஆண்டுகளில் பொறியியல் கல்வியை முடித்துவிட்டு வருவார்கள், அதே நேரத்தில் இப்போது இரண்டாம் ஆண்டு பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களும் நான்காவது ஆண்டில் அவர்கள் படிப்பை முடித்து விட்டு வருவார்கள். ஆக ஒரே சமயத்தில் இரு சாராரும் பொறியியல் கல்வியை முடித்துவிட்டு வருவதால், அதிகமான பேர்கள் வெளியே வரும் வாய்ப்பு இருக்கிறது. அந்தக் காரணத்தினால் அவர்களுடைய வேலை வாய்ப்பு பெருமளவுக்கு பாதிக்கப்படும் என்று அதிகக் கவலைப்படுவதால் போராட்டம் நடத்துவதாகவும், அதன் விளைவாக கல்லூரிகள் மூடப்பட்டதாகவும் அறிகிறேன். இந்த நிலையில் அந்த மாணவர்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படுத்த ஒரு நல்ல திட்டத்தை வகுக்கும் வகையிலே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துப் பேச அனுமதிக்குமாறு தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமஸ் அவர்கள் மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரியில் நடைபெற்ற ஒரு பிரச்சினைபற்றி இங்கே விவாதத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை அங்கே மட்டும் இல்லை. காரைக்குடி, இன்ஜினியரிங் கல்லூரியிலேயும், சேலம், கோவை ஆகிய இடங்களில் உள்ள கல்லூரிகளிலும் உள்ள இரண்டாம் ஆண்டு பட்டப்படிப்பு படிக்கின்ற மாணவர்கள் பொறுத்து இந்தப் பிரச்சினை இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

பொறியியற் கல்லூரிகளில் ஐந்து ஆண்டு பொறியியல் பட்டப்படிப்பு இந்த ஆண்டிலிருந்து நீக்கப்பட்டு மாற்றி அமைக்கப்பட்ட நான்கு ஆண்டு பொறியியல் பட்டப்படிப்பு புகுத்தப்பட்டுள்ளது. இதனை எல்லாப் பொறியியல் கல்லூரிகளைச் சார்ந்த இரண்டாம் ஆண்டு பட்டப் படிப்பு மாணவர்கள் எதிர்க்கிறார்கள். இவ்வாண்டு துவங்கும் நான்கு வருட பொறியியல் பட்டப் படிப்பில் சேரும் மாணவர்கள் தற்பொழுதுள்ள 5 வருட பட்டப்படிப்பின் இரண்டாம் ஆண்டு மாணவர்களும் ஒரே சமயத்தில் (1984-ல்) பொறியியல் பட்டப்படிப்பை முடித்து வெளியேறுவார்கள் என்றும், இது அவர்களுடைய



வேலை வாய்ப்பினை பெருமளவு பாதிக்குமெனவும் கூறியுள்ளனர். எனவே அவர்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நான்கு ஆண்டு பொறியியல் பட்டப் படிப்பில் ஆறுமாத கால பயிற்சி முறை புகுத்தப்படவேண்டுமெனவும், இதனால் புதிய மாணவர்கள் தங்களோடு ஒன்றாக பட்டப்படிப்பினை முடிக்கமாட்டார்கள் என்றும் கூறியுள்ளனர். அவ்வாறு செய்ய இயலவில்லையென்றால், இந்த புதிய முறை பொறியியல் பட்டப் படிப்பினை ஆறுமாத காலம் தாழ்த்தி ஆரம்பிக்கலாம் என்றும், அதனால் இந்த வருடத்தில் ஒரு பருவ கால (Semester) படிப்புத்தான் அவர்களால் முடிக்கப்படும் என்றும் எனவே அவர்கள் தங்களுடன் இணையாக பட்டப்படிப்பினை முடிக்க முடியாது என கூறியுள்ளனர். மேற்கண்ட கோரிக்கையினை வலியுறுத்த பல பொறியியல் கல்லூரிகளில் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளனர். மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியிலும் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். இதைத் தொடர்ந்து அக்கல்லூரியை மூட நேர்ந்தது.

இதே பிரச்சினை குறித்து கோவை அரசு பொறியியற் கல்லூரி, கோவை தொழில் நுட்ப கல்லூரி, அழகப்ப செட்டியார் பொறியியல் கல்லூரி, காரைக்குடி முதலிய கல்லூரிகளிலும் மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரைவில் வகை செய்யப்படும். ஏற்கெனவே தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் அறிக்கைப்படி இந்த நான்கு ஆண்டு பட்டப்படிப்பில் இவ்வாண்டு சேரும் மாணவர்கள் அவர்களது செமஸ்டர் தேர்வில் ஒரு பகுதியை பிப்ரவரி-மார்ச்சு மாதத்திலும், மற்றொரு பகுதியை ஆகஸ்ட்-செப்டம்பர் மாதத்திலும் எழுதுவார்கள். அதன்படி பார்த்தால் ஆறுமாத காலம் தள்ளி வைத்து நடத்துவதற்கும், அதை மாணவர்களுக்கு அறிவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இந்த முடிவினை அனைத்து பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கும் தெரிவிக்கும்படி அனைத்து பொறியியல் கல்லூரி முதல்வர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். ஆகவே, இன்று மாணவர்களுடைய கோரிக்கையினை ஏற்கின்ற நிலையிலே, அவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, தங்களுடைய படிப்பைத் தொடர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதைப்பற்றி மேலும் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால், இந்த அவையை ஒத்திவைத்துப் பேச வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1980 ஜூலை 24

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கூறி அனுமதி மறுக்கிறேன்.

(பிற்பகல் 4-10)

3. கவன ஈர்ப்புத் தீர்மானம்.

(1) பெரியார் மாவட்டம், ஈரோட்டை அடுத்துள்ள வீரப்பன்பாளையத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர்களை வீட்டுக்குள் பூட்டி வைத்து உயிரோடு கொளுத்தப்பட்டது குறித்து.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

" 2—7—1980 அன்று பெரியார் மாவட்டம், ஈரோட்டை அடுத்துள்ள வீரப்பன்பாளையத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர்களை வீட்டுக்குள் பூட்டி வைத்து உயிரோடு கொளுத்தப்பட்டது குறித்து ".

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : தலைவரவர்களே, விவர அறிக்கை@ அவை முன் வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. ஆ. நல்லசிவன் : இறந்து போன குடும்பத்தில் வேறு குழந்தைகள் அல்லது சார்ந்திருப்பவர்கள் யாராவது உண்டா? அப்படியிருந்தால் நிர்கதியாக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இறந்து போன குடும்பத்தைச் சார்ந்த அல்லது இறந்து போனவரின் வருமானத்தை எதிர் பார்த்து யாராவது இருக்கிறார்களா என்று தகவல் கேட்கப்பட்டிருக்கிறது. அப்படி யாராவது இருந்தால், நிச்சயமாக உதவி செய்யப்படும்.

திரு. ஆ. நல்லசிவன் : ஒரு குடும்பம் முழுவதையும் வீட்டிற்குள் வைத்து, எரித்துக் கொல்லும் அளவிற்கு விரோதம் முற்றிய நிலை இருந்திருக்கிறது. எனவே ஏற்கெனவே அது குறித்து போலீசுக்குப் புகார் வந்ததா? அது குறித்து முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

---

@ 662 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது



1980 ஜூலை 24]

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நீண்டகாலமாக பாசனத்திற்குத் தண்ணீர் பெறுவதில் தகராறு இருந்து வந்திருக்கிறது. கீழ் பவானி அணையிலிருந்து தண்ணீர் பெற வேண்டுமென்ற நிலையில், பாதிப்பிற்கு உள்ளாகி மரணம் அடைந்தவரின் நிலங்களுக்குத் தண்ணீர் வரவேண்டுமென்றால், வேறு ஒருவரின் நிலத்திலுள்ள கால்வாய் வழியாக வரவேண்டி இருந்தது. அவ்வப்போது தகராறு வந்தபோது, அது ஒழுங்குபடுத்தப்பட்டது. தொடர்ந்து பகை முற்றியிருக்கிறதென்பது இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் தெரிந்தது. அதற்கு முன்பு இவ்வளவு பெரிய தகராறு வெளியே தெரியக்கூடிய சம்பவமாக வரவில்லை.

(2) கோயம்புத்தூர் டி. ஏ. இராமலிங்கம் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய முன்னாள் இருமுனைப் பாட வகுப்பு ஆசிரியர்களைப் பணி நீக்கம் செய்தது குறித்து.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

" கோயம்புத்தூர் டி. ஏ. இராமலிங்கம் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய முன்னாள் இருமுனைப் பாட வகுப்பு ஆசிரியர்களை பணி நீக்கம் செய்தது குறித்து "

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு தலைவரவர்களே, விவர அறிக்கை @அவையின் முன் வைக்கப்படுகிறது.

திரு. பா. ரா. தாமஸ் : இரு கூறாக்கப்பட்டப் பாடத் திட்டத்தின்கீழ் பணியாற்றிய ஆசிரியர்களைப் பணி நீக்கம் செய்வதற்கு நிர்வாகங்கள் இரண்டு முறைகளைக் கையாள்கின்றன. ஒன்று, அந்தப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்போது, தொழிற் கல்வியைப் புகுத்தாது, அந்த ஆசிரியர்களை வெளியேற்றுகிறார்கள். அதுவும் காலம் கடந்து, தொழிற் பிரிவை ஆரம்பிக்காமல் வெளியேற்றுகிறார்கள். இப்படி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட அந்தப் பள்ளிகளில் தொழிற் பிரிவை ஆரம்பித்து, வெளியேற்றப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் அழைத்து, அங்கேயுள்ள தளவாடங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த அரசு தக்க ஆணையிடுமா?

---

@ 662-663 ஆம் பக்கங்களின் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, டி. ஏ. இராமலிங்கம் உயர்நிலைப் பள்ளியில் வேலை செய்த ஆசிரியர்களும், அங்கிருந்த தளவாடங்களும் கோவைக்கு அருகிலுள்ள காரமடைக்கு மாற்றப்பட அரசாணை இடப்பட்டு, அந்த ஆசிரியர்களும் அங்கே பணியாற்றுகிறார்கள்.

**திரு. பா. ரா. தாமஸ் :** அரசாணைதான் இடப்பட்டிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான பணத்தை மானியமாகப் பெற்று, அதிலிருந்து 15,000 அல்லது 20,000 ரூபாய்க்கு வாங்கிய 'லேத்' போன்ற கருவிகள் இன்றைக்கு 40,000 அல்லது 50,000 ரூபாய் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கருவிகள் வாங்கப்பட்டு, அவற்றை உபயோகப்படுத்தவில்லை என்றால், அதனால் பெரும் இழப்பு ஏற்படுகிறது. எனவே வருங்காலத்தில் இப்படிப்பட்ட பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்போது, அந்தப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்கள் அங்கேயே தொடர்ந்து பணியாற்றும் முறையிலே தொழிற் பிரிவை அங்கே ஆரம்பிக்க ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இன்றைக்கு அங்கேயிருந்த உத்தர சாதனங்களையும், ஆசிரியர்களையும் காரமடைக்கு மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டு, ஆசிரியர்களும் அங்கே போயிருக்கிறார்கள். அங்கே அவர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு உரிய வேலைப் பாதுகாப்பு தந்திருக்கிறோம். அவர்கள் வேலை இழக்காமல் இருக்கச் செய்திருக்கிறோம் என்ற நிலைமையைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கொண்டு இதில் எந்த நடவடிக்கையும் தேவையில்லை.

## 4 அரசின் தீர்மானங்கள்.

### (1) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1980-81 ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்" என்று முன்மொழிகிறேன்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1980-81 ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒற்றை மாற்று வாக்கு மூலம், விகிதாசார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2 (1) ஒழுங்குமுறை விதிக்கிணங்க, 1980-81 ஆம் நிதியாண்டிற்கான உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன் :

| | |
|---|---|
| வேட்புத் தாள்கள் வரப்பெறுவதற்கான நாளும், நேரமும். | 26-7-1980 மாலை 5 மணி |
| வேட்புத் தாள்கள் சரிபார்ப்பதற்கான நாளும், நேரமும் | 26-7-1980 மாலை 6 மணி. |
| வேட்புத் தாள்களை திரும்பப் பெறுவதற்கான நாளும், நேரமும். | 28-7-1980 மாலை 5 மணி. |

வேட்புத் தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஒன்பது பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின், வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

### (2) அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியையொட்டி, 1980-81 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியை யொட்டி, 1980-81 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் 2 (1) ஒழுங்குமுறை விதிக்கிணங்க, 1980-81 ஆம் நிதியாண்டிற்காக அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன் :—

வேட்புத் தாள்கள் வரப்பெறுவதற்கான நாளும், நேரமும்—26-7-1980 மாலை 5 மணி.

வேட்புத் தாள்கள் சரி பார்ப்பதற்கான நாளும், நேரமும்—26-7-1980 மாலை 6 மணி.

வேட்புத் தாள்களை திரும்பப் பெறுவதற்கான நாளும், நேரமும்—28-7-1980 மாலை 5 மணி.

வேட்புத் தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஆறு பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின், வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

## (3) தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக்குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

@ 664-694 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

THIRUMATHI TARA CHERIAN : Mr. Chairman, I thank you for the opportunity given to me to say a few words on the Policy Note on Food situation in this State. Though I am not very familiar with this particular subject after going through the Policy Note, I must congratulate the Department on the Note which gives information about the subjects which they are dealing with. I had no permanent home in Madras City, because I had been in Bombay for quite some time. As far as my knowledge goes, I think the position of rice and of sugar in Tamil Nadu is better than in the State of Maharashtra. The price also has been kept low. It is mentioned that rice is supplird for a price of Rs. 1.90 or Rs. 2.25 per kilo. We do not get good quality rice at Rs. 1.90 per kilo. The particular rice is bad smelling and when the rice is cooked, bad smell emanates. Therefore. I would suggest that better quality rice may be made available at Rs. 1.90 per kilo. Going through the note, I find that the Government of India are not giving something. For instance, I have seen a note that no formal orders have been issued by the Government of India and after such orders, our State Government announcement would be made for suitable directive so that they may borrow money from the Reserve Bank. Only formal orders, and not final orders, are required and there seems to be some snag. I would like to know from the Government whether this is the policy of the Government of India in all the other States or whether it is only peculiar to our State. Then I would also like to know whether the Minister without portfolio or some person whose designation I do not remember correctly stationed at Delhi for maintaining proper liaison with the Government of India to represent our grievances is there and if he is a strong person, he will be able to place our views across the table and get what is necessary for us. I am sure we will be able to get it if they are being extended to other States also.

The transport of our commodities like rice to other States at the expense of the people of Tamil Nadu may not be correct.

(பிற்பகல் 4-20)

During my stay in Mysore, I saw that the Food Research Institute there had been able to find ways of preserving rice and other things in a better way adopting new methods. I was

wondering whether that would be possible here also so that when we had surplus foodgrains we would be able to preserve them in a scientific way instead of paying heavy rents to whathouses.

Sir, wheat and rice imported by us from other countries are now allowed to be kept open in the harbour and it is not very becoming to look at. Moreover, rat-droppings and other rubbish get into the foodstuffs. There is much difference between wheat produced in our country and the imported wheat. Perhaps the price is also low and we should not allow the wheat to get spoilt. Therefore, I request Government to see that the foodgrains kept at the shipping yards are properly looked after.

Sir, the Hon. the Finance Minister who is also in charge of Food has announced the payment of Rs. 50 per mensem to unemployed Graduates. The unemployed Graduates must be having some legitimate grievances. But I have a suggestion to make in this regard. During my short tenure as Chairman of the State Social Welfare Board, we had a beautiful kiosk in front of our office and it was run by some of the deaf and dumb girls who had been trained. People in different offices located in the building of the Social Welfare Board were able to get tea, coffee, etc., from this kiosk run by the deaf and dumb girls. If the deaf and dumb girls are given a little more money, they will be able to run some more kiosks and people will be able to get wholesome food at low prices. I hope that the Food Department and the Social Welfare, Board would get together and do something about this. Similarly, mobile canteens may be organised for the benefit of labourers. If food packets and hot drinks are sold at low prices in the mobile canteens, the labourers would be benefited.

Sir, handwriting is my biggest enemy and now I am unable to read the handwritten hints I have brought with me. I must congratulate the Food Department who have brought out this Policy Note in which they have provided more information than what we expected. It has been pointed out that the price of firewood has gone up 1½ times. Recently, a small stove called 'Nutan' stove has come into the market for sale. In our State, we have enough intelligentsia. So, in our State itself we may manufacture a nice little kerosene-stove which will be useful for our people. It can be sold at subsidised rates so that people may conserve kerosene and cook better.

With these words, I thank you once again for having given me this opportunity.



**திரு ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவரவர்களே, தமிழகத்தில் உணவு நிலைமை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது என் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அரசாங்கம் தன்னுடைய உணவுக் கொள்கையை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக அமுல் நடத்துகிறது. ஆகவே அரசு நடத்தக்கூடிய ஒரு மிக முக்கியமான இலாகாவாக இது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையிலும், இன்றைய சூழ்நிலையில் அரசு மிகவும் கவனம் செலுத்த வேண்டிய இலாகா இது என்று கருதுகிறேன். சமீபத்தில் நடைபெற்ற இரண்டு தேர்தல்களும், பாராளுமன்றத் தேர்தலும், சட்டமன்றத் தேர்தலும் இதை நிரூபித்துள்ளன. விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாத அரசுகள், விலைவாசி ஏறி வருவதைத் தடுத்து மக்களுக்கு நிவாரணம் அளிக்க முடியாத அரசுகள் இப்படிப்பட்டவை எல்லாம் தொடர வேண்டுமா என்கிற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அனைவருக்கும் ஒரு படிப்பினையை அது ஏற்படுத்தியுள்ளது. மக்கள் மத்தியில் மன மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது பிரதான காரணங்களில் ஒன்று. அந்த முறையில் இந்த அரசும் விலைவாசியைக் கட்டுப்படுத்த எப்படி எப்படி நடந்துகொள்ளப் போகிறது என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். விலைவாசியை சமாளிப்பதில் மாநில அரசுக்கு இன்றைக்கு இருக்கக் கூடிய அதிகாரம் மிக மிகக் குறைவு. குறைந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு மாநில அரசு இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டும். அதற்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனை எப்படி எப்படி பயன்படுத்தப்போகிறார்கள் ? அதுவும் இருக்கக்கூடிய குறைந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக எப்படி விலைவாசியைக் கட்டுப்படுத்தப்போகிறார்கள் ? அப்படி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது என்றால், அதற்கு நாங்கள் பொறுப்பில்லை என்று பொதுமக்களிடம் இந்த அரசு சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லித்தான் இந்த விலைவாசி என்னும் அதிர்ச்சியிலிருந்து, இந்த அரசு பொதுமக்களிடமிருந்து தப்ப முடியும். விலைவாசியைக் குறைப்பதை ஒட்டித்தான் இன்றையதினம் அரசுகளே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆபத்தான குதிரையை அடக்குவது போல விலைவாசி என்னும் ஆபத்தான குதிரையை அடக்கியாக வேண்டும். அப்படி விலைவாசியை கட்டுப்படுத்துவதற்கு அரசு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனை ஒரு சவுக்காகப் பயன்படுத்த வேண்டும். அந்த சவுக்கை அரசு எப்படி பயன்படுத்தப் போகிறது என்பது தான் இங்கே மிக மிக முக்கியம். இதிலே ஒரு கொள்கைப் பிரச்சினைபற்றி நான் இங்கே குறிப்பிடாமலிருக்க முடியாது. அரிசி விலை உயராமலிருப்பதற்குக் காரணம்

கட்டுப்பாடு இல்லாமல் இருப்பது தான் என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது அரிசியைப் பொறுத்தவரை, விலைவாசி உயராமல் சீராக இருப்பதற்குக் காரணம் கண்ட்ரோல் இல்லாததுதான் என்று சொல்லியிருக்கிறார்கள். கண்ட்ரோல் இல்லாமல் இருப்பதுதான் பிரதான காரணம் என்கிற பொருள்பட மூன்று பாராக்களில் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் கன்ட்ரோல் இல்லாமல் வியாபாரம் ஒழுங்காக நடக்கும் என்கிற தப்பான பிரச்சாரத்தை மக்களிடத்திலே கொள்ளை லாபமடிக்கும் மொத்த வியாபாரிகள் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் கன்ட்ரோல் இல்லாமல் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது. கன்ட்ரோல் கொண்டு வராததால் தான் அரிசியின் விலை சீராக கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்கிற வாதம் மூன்று பாராக்களில் இருந்தாலும், அரிசி வியாபாரத்தைப் பொறுத்தவரை, அதன் விலை குறைந்திருப்பதற்கு கட்டுப்பாடு இல்லாத வியாபாரம் தான் காரணம் என்று சொல்வது தமிழ் நாட்டின் சமீப கால சரித்திரத்தை மறப்பதாகும். தஞ்சை மாவட்டத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு கொஞ்சம் கட்டுப்பாட்டைத் தளர்த்தியதன் காரணமாக, பழைய ஆட்சியில் உணவு தானியங்கள் கடத்தப்பட்டு பலவிதமான பிரச்சினைகள் எல்லாம் எழுந்து, பிறகு சர்க்காரியா கமிஷன் வரை அது போனதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். ஆகவே கட்டுப்பாடு இருப்பதுபற்றி இவ்வளவு பெரிய தப்பு அபிப்பிராயம் கொள்வது, அல்லது நினைப்பது சரியல்ல. இப்படி ஓரிடத்தில் கட்டுப்பாடு தேவையில்லை, அதனால் தான் அரிசியின் விலை குறைந்திருக்கிறது என்று சொல்லிவிட்டு, இன்னொரு இடத்தில் கட்டுப்பாடு இல்லாமல் இருந்தும் வேறொரு பொருளினுடைய விலையைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். தமிழ் நாட்டிலே இன்றையதினம் சர்க்கரை நிறைய உற்பத்தி ஆகிறது. கன்ட்ரோல் மூலம் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2.85 வீதம் விற்கிறோம். வெளி மார்க்கெட்டில் கிலோ ஒன்றுக்கு 6 ரூபாய்க்கு விற்பதை அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது. வெளிச் சந்தையில் விற்கக் கூடிய 35 சதவிகிதம் சர்க்கரை தான் இந்த விலை உயர்வுக்குக் காரணம் என்று அரசு சொல்லியிருக்கிறது. நான் இதை முழுக்க முழுக்க ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக சர்க்கரை விற்பதிலும் ஊழல் இருக்கிறது. 35 சதவிகிதம் வெளி மார்க்கெட்டில் விற்கப்படுவது அப்படியே வெளி மாநிலங்களுக்குப் போய் விடுகிறது. அப்படி போய்விடுவதால், இங்கே கிலோ 6 ரூபாய்க்கு விற்கிறது என்று அரசு குறிப்பிட்டிருக்கிறது. அரசே அப்படி குறிப்பிட்டிருக்கிறது என்றால் அதற்கு என்ன அர்த்தம்? அப்படி அடுத்த மாநிலத்திற்கு சர்க்கரை



யைக் கொண்டு போகாமல் அரசால் தடுக்க முடியவில்லையென்று கூறுகிறார்கள். அந்த வகையில் பார்த்தாலும் கட்டுப்பாடு தேவை இல்லையா ? மொத்த வியாபாரிகளுடைய தப்பான பிரச்சாரத்தைப் பார்த்து அரசும் கட்டுப்பாடு கூடாது என்று சொல்லக்கூடாது. சில பொருள்களுக்கு சில நேரங்களில் கட்டுப்பாடு கொண்டு வருகிறார்கள். சில நேரங்களில் கட்டுப்பாடு வைப்பதில்லை. சுதந்திரமாக வியாபாரம் செய்ய விரும்புகிற மொத்த வியாபாரிகள் கட்டுப்பாடு இருப்பது பாவமான காரியம் என்று கருதுகிறார்கள். அரசும் அவர்களுடைய கருத்துக்கு ஒப்புதல் அளிப்பதுபோல் அரிசி விலை குறைந்திருப்பதற்குக் காரணம் கட்டுப்பாடு இல்லாத நிலைதான் என்று நினைக்கிறது. அதே நேரத்தில் இன்னொரு இடத்தில் கட்டுப்பாடு தேவை என்றும் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆதலால்தான் நான் இந்தக் கருத்தை இங்கே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டுப்பாடு எப்போதுமே இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்களா அல்லது கட்டுப்பாடு அவசியமான நேரத்தில் மட்டும் வைத்து அவசியமில்லாத நேரத்தில் விட்டுவிடலாம் என்று கருதுகிறார்களா ?

**திரு. ஆ. நல்லசிவன் :** எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், எங்களது கருத்து குறைந்தது ஒரு 10 அத்தியாவசியப் பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து ரீட்டேல் ஷாப் மூலம் விநியோகம் செய்வதன் மூலம் பெருகிவரும் விலைவாசி உயர்விலிருந்து மக்களுக்கு நிவாரணம் கிடைக்க வழிசெய்ய முடியும். ஒரு வியாபாரத்தைப் பொறுத்தவரையில், இந்தியப் பொருளாதாரத்தை எடுத்துக்கொண்டால், கட்டுப்பாடு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்று என்று கருத வேண்டிய காலகட்டம் இது. கட்டுப்பாடு எவ்வளவு வேண்டும் என்ற பிரச்சினைக்கு நான் இப்போது போக விரும்பவில்லை. இந்தக் காலத்திலேயே கூட அரிசியின் விலையை நம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகவே, கட்டுப்பாடு என்பது மிகவும் அவசியம். கட்டுப்பாட்டை இந்த அரசு ஊக்குவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நெல் கொள்முதல் விலையைப் பொறுத்தவரையில், 130 ரூபாய் வேண்டும் என்று நமது அரசு சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால் கோதுமைக்கு இப்போது கொடுக்கக்கூடிய 117 ரூபாய்கூட அரிசிக்குக் கொடுக்கப்படவில்லை. முன்புகூட 95 ரூபாய்க்கு மேல் கூடுதலாகக் கொள்முதல் விலை கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதையும் மீறி அரசினர் அதிகமாகக் கொடுத்தார்கள். அது தமிழ்நாடு விவசாயிகளுக்கு மிகவும் பயன்பட்டது. "நீங்கள் 105 ரூபாய், 109 ரூபாய் என்று கூடுதலாகக் கொடுத்து வாங்குவது, வாணிபமாகாது. ஆகவே, நீங்கள் கொள்முதல் செய்வதற்கு ரிசர்வ் வங்கி கிரெடிட் தராது. நீங்கள் ஏன் கூடுதலாகக் கொடுத்தீர்கள்? அந்தக் கூடுதல் செலவைத் தர மாட்டோம்" என்று மத்திய அரசினர் சொன்னார்கள். அரசு இப்போது 95 ரூபாயிலே இருந்து நகரமாட்டேன் என்று இருக்கிறது. அரசு 130 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது, ஆனால் அவர்கள் கொடுக்கலாம் என்று விதித்திருக்கும் தொகைக்கு அதிகமாகக் கொடுத்தால் கிரெடிட் தரமாட்டார்கள் என்று பயப்படுகிறது. ஆக, அவர்களும் கூடுதலாகத் தரமாட்டோம் என்று சொல்கிறார்கள், மாநில அரசையும் கூடுதலாகக் கொடுக்க முடியாது பயமுறுத்தி வைக்கோல் போர் நாய் போல நடந்துகொள்கிறார்கள். தாங்களும் தரமாட்டார்கள், கொடுக்கவும் விடமாட்டார்கள். இந்தக் கருத்தையே அறிக்கையில் எழுதி வைத்திருக்கிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மத்திய அரசை நாய் என்று குறிப்பிடலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மத்திய அரசை 'நாயே' என்று நான் சொல்லவில்லை. தன்னால் தின்னமுடியாத வைக்கோலை, தானும் தின்னாமல், மற்ற மிருகங்களையும் தின்ன விடாது நாய் தடுப்பதுபோலத் தான் இருக்கிறது இந்த நிலைமை என்று சொன்னேனே தவிர வேறல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் மத்திய அரசினுடைய போக்குக்கு நாயை இப்படி உவமையாகக் காட்டுகிறார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஆம். 'நாய்' என்று சொல்வது இழிவுபடுத்துவதற்காக அல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நாயை அங்கேயிருந்து விரட்டுவோமா ?



**திரு. ஆ. நல்லசிவன் :** விரட்டுங்கள்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** ஆங்கிலத்தில் , dog in the monger policy என்று சொல்வார்கள். அவர் சொல்வது 'பெர்ஃபெக்ட்லி கரக்ட்'. அப்படிச் சொல்வது பார்லிமென்ட்டரி எக்ஸ்பிரஷனுக்கு ஒன்றும் விரோதமானதல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளை எடுத்துக்கொண்டோமானால், 'நாய்' என்றால் கேவலமல்ல. இங்கே, பழக்கம் காரணமாக அந்த மனப்பான்மை வந்திருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஆகவே, இந்த மாநில அரசு கூட நியாயம் என்று கருதுகிற விலையைக் கூட கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசினர் தடுக்கிறார்கள். இந்த நிலைமையை கோடிக்கணக்கான நெல் விளைவிக்கும் மக்களுக்கு இந்த அரசு சொல்ல வேண்டும். அவர்களிடம் சொல்லாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இந்த அரசும், தமிழ் நாட்டிலே உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து பகிரங்கமாகக் குரல் எழுப்பி, தமிழ் நாட்டில் நெல்லுக்கு அதிக விலை தர வேண்டும் என்ற பிரச்சினையில் ஏகமனதாக முடிவெடுக்க வேண்டும். சில நேரங்களில் இந்த அரசே 'இதற்கு நாங்கள் பொறுப்பில்லை' என்று இருக்கிறது. மத்திய அரசினரும் அதிகம் தரவில்லை. இரண்டு பேருக்கும் இடையிலே இருக்கும் நிலைமைகளை மக்களுக்குச் சொல்ல வேண்டும். வருஷா வருஷம் பார்த்தால் இதே நிலைமைதான் இருக்கிறது. இப்படி புத்தகத்திலே மட்டும் சொன்னால் போதாது. அரிசி விலையைப்பற்றிச் சொல்லும்போது, 30, 35 பைசாவுக்கு மேல் அதிகமாகப் போகவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், இப்போது உள்ள உண்மை நிலைமையைப் பார்த்தால் 75, 80 பைசாவுக்கு மேல் விலை ஏறியிருக்கிறது. இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதைப்போல, ஒவ்வொரு ஆண்டும், மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை பொருட்களின் விலை ஏறும். 25, 30, 35 பைசாதான் ஏறியிருக்கிறது என்று இந்த அறிக்கையைப் பார்த்து மெத்தனமாக இருக்கக்கூடாது. இப்போதே 75, 85 காசு அதிகமாக விற்கிறது. சமீபத்திலே 'இந்து' பத்திரிகையிலே ஒரு ரிப்போர்ட் வந்தது. இந்தக் குறிப்பிட்ட ஜூலை மாதத்தில் நெல்லின் விலை மார்க்கெட்டிலே ஏறியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதன்காரணமாக மக்கள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, விலையைப் பொறுத்தமட்டில், அது ஏறிக்கொண்டே இருக்கிறது. இன்னும், ஏறும் அபாயம் இருக்கிறது. அரசின் கணக்குப்படி

பார்த்தால் கூட, அக்டோபருக்கு இன்னும் மூன்று-நான்கு மாதங்கள் தான் இருக்கின்றன. எங்களுக்குச் சொல்வதற்கு என்று இந்த அறிக்கையிலே 30, 35 பைசா தான் ஏறியிருக்கின்றது என்று சொல்லப்பட்டிருப்பதை அரசு நம்பி சும்மா இருக்காமல் தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'கார்டு' விநியோகம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். 'கார்டு' விநியோகத்தை எடுத்துக்கொண்டால், கிராமங்களில் அரைகுறையாகத்தான் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இப்போதெல்லாம் பாஸ்போர்ட் கிடைப்பது கூட மிகவும் சுலபமாகப் போய்விட்டது. எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் கையெழுத்துப் போட்டால் கிடைத்து விடுகிறது. ஆனால், 'கார்டு' கிடைக்கவில்லை. அவ்வளவு பெரிய கஷ்டமாகப் போய்விட்டது. மேலும், ஏற்கெனவே விநியோகிக்கப்பட்ட கார்டுகள் மிகவும் பழையதாகப் போய்விட்டன. ஏற்கெனவே நல்ல கார்டுகள் கொண்டுபோகும்போதே, தர மாட்டேன் என்று சொல்வார்கள். இப்போது நிலைமையைச் சொல்ல வேண்டாம். ஆகவே, பழைய கார்டுகளைப் புதுப்பிக்க எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சீனி விநியோகம் பற்றிச் சொல்கிறேன். இப்போது சீனி வெளி மார்க்கெட்டிலே 6 ரூபாய், 7 ரூபாய் என்று விற்கிறது. வெளி மார்க்கெட்டிலே கொடுக்கப்படும் சீனி ஒழுங்காக விநியோகிக்கப்படுவதில்லை. மேலும், தனியார் கடையும், சிவில் சப்ளைஸ் கடைகளும், அவர்களுக்கு என்று ஒதுக்கப்படும் சீனியை காலாகாலத்தில் எடுப்பதில்லை. ஒரு மாதத்திற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் அளவை, 20 ஆம் தேதிக்குப் பிறகு வந்து எடுத்துக்கொண்டு போகிறார்கள். மக்களுக்கு அதுவரையில் உள்ள தேவைக்கு அது கிடைக்கவில்லை. மக்கள் வெளியிலே சென்று அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். கடைசியாக மாதம் முடிய 10 நாட்கள் இருக்கும்போது, அந்த கோட்டாவை எடுத்துக்கொண்டு போய் கள்ள மார்க்கெட்டிலே விற்கிறார்கள். கோயம்புத்தூரிலே இப்படி நடக்கிறது என்று எங்கள் கட்சியின் மூலமாக கம்பிளெயின்ட் வந்திருக்கிறது. இந்த நிலைமையைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் எல்லா சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளிலும், தனியார் கடைகளிலும் அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற சரக்குகளை ஒழுங்காக வாங்கி விற்பனைக்கு வைத்திருக்கிறார்களா என்று சோதனை செய்ய வேண்டும்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சீக்கிரம் முடிக்க வேண்டும். இன்றைக்காவது நேரத்தோடு முடிக்க வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** எதற்காகச் சொல்கிறேன் என்றால், திண்டுக்கல் தாலூக்காவிலே 5 மூட்டை சீனி ஒரு ரேஷன் கடையிலேயிருந்து கைப்பற்றப்பட்டு, அதை எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் சேர்ந்து பிடித்து, போலீசாரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். நியாய விலைக் கடைகளுக்கு விநியோகத்திற்காகக் கொடுக்கப்படும் சீனி கூட ஒழுங்காக விநியோகிக்கப்படுவதில்லை. அதுவும் கள்ள மார்க்கெட்டுக்குப் போகிறது.

அடுத்து, மண்ணெண்ணெய் விநியோகத்தைப் பொறுத்தவரையில், சில்லறை விநியோகப் பொறுப்பைப் பொது விநியோக முறையின் கீழ் அரசு சார்பு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாலும், சில்லறை விற்பனையை மட்டுமே நடத்துவது அந்த நிறுவனங்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் என்று இருப்பதாலும், மண்ணெண்ணெய் மொத்த வியாபார உரிமையிலும் இந்த நிறுவனங்களுக்குப் பங்கு அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளதாக குறிப்பிலே இருக்கிறது. நமக்கு நடைமுறை அனுபவமே இருக்கிறது. மண்ணெண்ணெய் விநியோகத்தில் சர்க்கார் கண்ட்ரோல் மிகவும் தேவை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கோபப்பட்டாலும் பரவாயில்லை. அப்படிச் செய்தால், இப்போது உள்ள சங்கடங்கள் தீரும். மொத்த வியாபாரம் முழுவதையும் அரசு தன்னுடைய கையிலே எடுக்க வேண்டும். கால் பங்கு, அரை பங்கு, முக்கால் பங்கு என்று இல்லாமல் மொத்த வியாபாரத்தையும் அரசே எடுத்து, பப்ளிக் டிஸ்ட்டிரிபூஷன் சிஸ்டம் மூலம் விநியோகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

அடுத்தபடியாக, சென்னையில் மட்டும் விறகை நியாய விலையில் விற்பதற்காக கடைகள் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருககிறது. அந்தக் கடைகளைச் சென்னையில் மட்டும் திறந்தால் போதாது. ஒருவேளை பத்திரிகைகளில் போடுகிற கூப்பாட்டைக் குறைக்க அது உதவி செய்யலாம், தமிழ்நாடு முழுவதும் விறகின் விலை உயர்வாகத்தான் இருக்கிறது. ஒரு ரூபாய்க்கு 1½ கிலோ வெங்காயம் விற்கிற இந்த நாளில் ஒரு கிலோ விறகை 1½ ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஏழைகள் இந்த விலை கொடுத்து எப்படி வாங்க முடியும்? எனவே அரசாங்கம் பாரஸ்ட் டிபார்ட்-

மெண்ட்டோடு தொடர்பு கொண்டு விறகை வாங்கி தமிழ் நாடெங்கும் உள்ள சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகள் மூலமாகப் பொது மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரே நாளில் உடனடியாக இந்தக் கடைகளைத் திறக்க வேண்டும் என்றுகூட நான் சொல்லவில்லை. சென்னையோடு உங்கள் நினைப்பை முடித்துக் கொள்ளாதீர்கள். தமிழ் நாடு முழுவதும் நியாய விலையில் விறகு கிடைக்க வகை செய்யுங்கள் என்றுதான் சொல்ல விரும்புகிறேன். நியாய விலையில் விற்காவிட்டால், விறகுக் கடைகளைக்கூட அரசே ஏற்று நடத்துவோம் என்று விறகு வியாபாரிகளுக்கு எச்சரிக்கை செய்கிற மாதிரி இதைச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அடுத்து, எங்கும், எதிலும் கலப்படம் என்று பாட்டே எழுதி விட்டார்கள். அந்தப் பாட்டை உண்மையிலேயே மிகவும் ரசிக்கிறார்கள். காரணம் அவர்கள் வாழ்க்கையில் அந்த அளவுக்குக் கலப்படத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உணவுப் பொருள்களில் செய்யப்படும் கலப்படத்தைப் பற்றி கொள்கை விளக்கக் குறிப்பில் ஒரு வார்த்தைகூட காணப்படவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** " எங்கும் எதிலும் கலப்படம் " என்று பாட்டெழுதியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எங்கும் எதிலும் தமிழ் என்றுதான் இருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** அவரவர்கள் பார்க்கிற கோணத்தில் இருக்கிறது. இப்படி எங்கும் எதிலும் கலப்படம் என்கிறபோது, தமிழ் நாட்டில் மட்டும் கலப்படமே இல்லையா ? கலப்படம் இருக்கிறது என்றால், அதைப் பற்றி கொள்கை விளக்கக் குறிப்பில் ஒன்றும் குறிப்பிடாததற்கு என்ன காரணம்? யார் மீதாவது அரசாங்கத்தால் கலப்படத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? எனவே அதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் விட்டுப் போயிருப்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நேரம் அதிகமாக இல்லாத காரணத்தால், இன்னொரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே இந்த அவையில் பேசும் போது இந்தக் கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் விற்கப்படும் பொருள்களின் அளவு, எடை ஆகியவற்றில் மிகப் பெரிய மோசடி நடக்கிறது. 1000 கிராம் கொண்ட ஒரு கிலோ என்று விற்கப்படும் பொருளின் எடை 800 கிராம்கூட இல்லாமல் விற்கப்படுகிறது. பொருள்



களை எடைபோடும்போதே பொருள் இருக்கும் பக்கம் உள்ள தராசுத் தட்டை அழுத்தி நெருக்கமாகப் பிடிப்பதால் தட்டு கீழே இறங்கியிருக்கும் போது பொருளைப் போடுகிறார்கள். அளவில் பெரிய மோசடி நடக்கிறது. கேட்டால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், எங்களுக்கு வருகிற சாமான்களின் எடையே இப்படித்தான் குறைந்திருக்கிறது என்கிறார்கள். அது மட்டுமல்ல. சிலர் சாமானை எடை போட்டுவிட்ட பிறகு, அதிலிருந்து கைப்பிடி அளவுக்கு கையிலேயே எடுத்து விடுகிறார்கள். அவர்களைக் கேட்டால், இப்படித்தான் நாங்கள் 'மேக் அப்' செய்ய வேண்டியிருக்கிறது என்கிறார்கள். கொஞ்சம் பேர்தான் இப்படிச் செய்கிறார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் எடையில் மோசம் செய்கிறார்கள். இந்த மோசடிக்கு யார் பொறுப்பு? சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்தான் பொறுப்பா என்று கேட்டால், ஆம் என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ் நாடு அரசு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நிறுவனத்தை அமைத்திருக்கிறது. ஆனால் அந்த நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பளத்தையும் அரசாங்கத்தில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பளத்தையும் தயவுசெய்து ஒப்பிட்டுப் பாருங்கள். சர்க்கார் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுவதைவிட மிகக் குறைவாக அந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் பணியாற்றுகிறவர்களுக்கு ஊதியம் கொடுக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் கையிலேயே இந்தப் பொருள்களின் விநியோகப் பொறுப்பையும் ஒப்படைத்தால், தங்களுக்குக் கிடைக்கும் குறைந்த ஊதியத்தை இங்கே 'மேக் அப்' செய்து விடுகிறார்கள். அப்படித்தான் அவர்கள் மனம் போகிறது. சென்ற ஆண்டே அந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்கள் நியாயமான ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டுமென்று கோரி பெரிய போராட்டத்தையே நடத்தினார்கள். அதற்குப் பிறகுதான் இப்போது அவர்கள் நிலை கொஞ்சம் உயர்ந்திருக்கிறது. இதையெல்லாம் அங்கே இருக்கிற அதிகாரிகள் கவனிக்க நேரமில்லை. அதுமட்டுமல்ல. அங்கே பணியாற்றுகிறவர்களுக்குள்ளேயே இந்த அதிகாரிகள் பாரபட்சம் காட்டுகிறார்கள். அதாவது புரமோஷன் கொடுக்கும்போது, பாரபட்சம் காட்டுகிறார்கள். இராமநாதபுரம் ஜில்லாவில் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சு மூலமாக 31 சேல்ஸ்மென் எடுக்கப்பட்டார்கள். ஆனால் அவ்வாறு நியமிக்கப்பட்ட அந்த விற்பனையாளர்களை மீறி வேறு ஆட்களுக்கு இப்போது புரமோஷன் கொடுத்திருக்கிறார்கள். அதன் விளைவு என்ன ஆயிற்று என்றால், அவர்கள் இன்றைய தினம் அதைப்பற்றி நோட்டீஸ் போட்டு 350 எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-க்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவோ பொறுப்பான காரியங்களைச் செய்ய வேண்டிய நேரத்தில் அதிகாரிகள் இந்த வேலை

யில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். நீரோ பிடில் வாசித்ததைப்போல விலைவாசியால் நாட்டு மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகள் இப்படிப்பட்ட வேலைகளைத்தான் வழக்கமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்களின் நிலை இன்றைய தினம் பரிதாபமாக இருக்கிறது. அரசு இதையும் கவனித்து அந்த ஊழியர்களும் திருப்தி அடைகிற மாதிரி, மற்ற அரசு ஊழியர்களுக்கு அளிப்பதைப்போல் இவர்களுக்கும் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அவர்களின் ஊதியத்தை 'கம்பேர்' செய்தால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது. அவர்கள் கையிலே இன்றைய தினம் விநியோகப் பொறுப்பையும் தந்திருக்கிறார்கள். அவர்கள் எப்படி நியாயமாக நடப்பார்கள்? எனவே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்களின் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடாவது பேசி அவர்கள் நிலைமையைச் சீர்திருத்த வேண்டும் என்று கோரி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. வி. வி. ஆனந்தம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உணவு நிலைமை நன்றாகவும் அதிலும் குறிப்பாக அரிசியின் விலை மிகவும் குறைவாகவும் இருப்பதற்காக நான் இந்த அரசை மனமுவந்து பாராட்டி, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை வரவேற்கிறேன்.

தமிழகத்தின் முக்கிய பொருளான அரிசி நமது தமிழகத்திற்கு தூத்துக்குடி, சென்னை துறைமுகத்தின் மூலம் பல ஆண்டுகளுக்கு முன்னால் வெளிநாடுகளிலிருந்து அதிலும் குறிப்பாக தாய்லாந்து, பர்மா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அதே தூத்துக்குடி துறைமுகத்தின் மூலமாகப் பெருமளவுக்கு அரிசியை ஏற்றுமதி செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 50,000 டன் பச்சரிசியும், 5,000 டன் குருணையும் இந்தத் துறைமுகத்தின் மூலமாகவே நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறோம். ஆக, உணவுத் துறையில் நாம் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிலைமை ஏற்பட்டதற்கான முக்கியமான காரணங்கள் என்பதைப் பற்றி இந்த நேரத்தில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டில் அணைக்கட்டுத் திட்டங்கள் மூலமும் நீர்ப்பாசன வசதிகள் அதிகரிக்கப்பட்டதன் மூலமும் இதைச் செய்திருக்கிறோம். விவசாயிகளுக்குத் தரமான



புதிய உற்பத்தித் திறன் கொண்ட வித்துக்களைக் கண்டுபிடித்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்திருக்கிறோம். நல்ல உரமிடுதல் மூலமும், பூச்சிப் பாதுகாப்பு மருந்துகள் தெளிப்பது மூலமும் நல்ல விளைச்சலைப் பெருக்கியிருக்கிறோம். உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமே, உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலமே பற்றாக்குறையைப் போக்கி ஏற்றுமதி செய்யும் அளவுக்கு நாம் உயர்ந்திருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பற்றாக்குறை ஏற்படும்போது அதைச் சமாளிப்பதற்கு உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டியதுதான் முக்கியமான பணியாகும். இடைக்கால நிவாரணமாக வேண்டுமானால் வேறு நாடுகளிலிருந்து கொஞ்சம் இறக்குமதி செய்து சமாளித்துக்கொள்ளலாம்.

அடுத்து, விவசாயிகளுக்கு உரிய விலை கிடைத்தால்தான் உற்பத்தியைப் பெருக்க அவர்களுக்கு ஊக்கம் ஏற்படும். 1967-68 ஆம் ஆண்டிலிருந்து கோதுமைக்கும் நெல்லுக்குமிடையே கொள்முதல் விலையில் வித்தியாசம் இருந்துகொண்டே வந்திருக்கிறது. இந்தப் பண்டங்களின் விலையை வேளாண்மை விளைபொருள்கள், விலைவாசிகள் ஆணைக் குழுவின் பரிந்துரையின் மீது நிர்ணயிப்பதாகச் சொல்கிறார்கள். நம் அரசு வேளாண்மைப் பல்கலைக் கழக நிபுணர்கள், வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஆகியோர் நம் மாநிலத்தில் உற்பத்தியாகும் நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 124 அளவில் வைக்க வேண்டும் என்று எடுத்துக்காட்டியும் ஏன் மத்திய அரசு நெல்லுக்குக் கூடுதல் விலையை நிர்ணயிக்க முன்வரவில்லை என்று கேட்க விரும்புகிறேன். பஞ்சாப் போன்ற மாநிலங்களில் உற்பத்திச் செலவு குறைவாக இருக்குமோ என்னவோ தெரியவில்லை. நம் மாநிலத்திலாவது உற்பத்திச் செலவின் அடிப்படையில் நெல் கொள்முதல் விலையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சபையின் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பொது விநியோக முறையில் நெல் கொள்முதல் விலைக்கும், அரிசியின் விற்பனை விலைக்கும் இடையே உள்ள பெரும் வேறுபாட்டுக்குக் காரணம் இந்தக் கொள்கைக் குறிப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது போக்குவரத்துச் செலவு, அரவைக்கூலி, சாக்கு, தவிர ரிசர்வ் பேங்க் கடனுக்கு 11 விழுக்காடு வட்டி போன்ற காரணங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்தக் காரணங்கள் அனைத்தும் தனியார் வியாபாரிகளுக்கும் பொருந்தும். தனியார் வியாபாரிகளுக்கு மார்க்கெட்டில் 20 விழுக்காடு வட்டி செலுத்திப் பணம் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலையில் பல கோடி ரூபாய் நஷ்டப்பட்டு அடக்க விலைக்கும் குறைவாகவே அரிசியை விற்பதக்

கண்டிருக்கிறது. அப்படியிருந்தும், பொது விநியோக முறையின்கீழ், அரிசியின் விற்பனை குறைந்திருப்பதாக விளக்கக் குறிப்பில் சொல்லப் பட்டிருக்கிறது. விலையைக் குறைத்துக் கொடுத்துங்கூட மக்கள் பொது விநியோக முறையில் அரிசியை வாங்குவதில்லை. காரணம், இந்த விளக்கக் குறிப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. வெளிச் சந்தையில் அரிசி தரமாகவும், நயமாகவும், தாராளமாகவும் கிடைத்து வருவதே என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, கட்டாயக் கொள்முதலின் காரணமாக கசப்பான அனுபவங்களைப் பெற்ற விவசாயிகள் மன நிறைவு அடையவும் செழிப்பான சீரான விநியோகமும், சுதந்திரமான வர்த்தகச் சூழ்நிலையும் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 4.50)

சர்க்கரை இப்போது பொது விநியோகத்திற்கு 65 விழுக்காடும், வியாபாரிகள் மூலமாக விற்க 35 விழுக்காடும் ஒதுக்கப்படுகிறது. சென்ற ஓராண்டுக்கு முன் சர்க்கரையின் விலை கிலோ ஒன்றுக்கு 2½ ரூபாயாக இருந்தது இன்றைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 7.50-க்கு விற்கப்படுகிறது. இந்த அளவிற்கு விலை உயர்ந்ததற்குக் காரணம், வரலாறு காணாத வகையில் தென் மேற்குப் பருவக் காற்று பொய்த்துப் போனதால் வட மாநிலங்களில் கரும்பு உற்பத்தி குறைந்ததுதான். அதாவது 19 இலட்சம் டன் குறைந்துவிட்டது. ஆகவே நமது மாநிலத்தில் சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருந்தாலும், வட மாநிலங்களிலிருந்து விநியோகிக்கிற சர்க்கரையை அவர்களே வாங்கிக்கொண்டு போவதால் தமிழகத்திலே சர்க்கரைப் பற்றாக்குறை ஏற்பட்டு விலை இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது.

மத்திய அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களிடம் "விலைவாசிகள் குறையவில்லையே, சர்க்கரையின் விலை ஏறிக்கொண்டே போகிறதே" என்று கேட்டபோது, "அதை எப்படிச் சொல்லலாம்? இந்தியாவில் சர்க்கரையின் விலை ரொம்பவும் குறைவு. இந்த விலைக்கு எந்த நாட்டில் உங்களுக்குக் கிடைக்கிறது? வெறுமனே புகார் செய்வது சுலபம்" என்று பதிலளித்திருக் கிறார். நமது அண்டை நாடான பாகிஸ்தானில் சர்க்கரையின் விலை கிலோ ஒன்றுக்கு 20 ரூபாயாக இருக்கிறது. ஆகவே சர்க்கரையின் விலையைக் குறைக்க மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது என்பதும் முடியாது.

பயறு, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், ஆகியவற்றில் வட மாநிலங்களில் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக, பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே இந்தப் பற்றாக்குறையை நீக்க பயறு, பருப்பு



வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றை வேளாண்மைத் துறையில் உற்பத்தி செய்ய நாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக நஞ்சை நிலங்களில், முப்போகத்தில் இரண்டு போகங்களுக்கு நெல் உற்பத்தி செய்துவிட்டு ஒரு போகத்திற்கு பயறு, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யலாம். தஞ்சாவூர், தென்னாற்காடு, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் இதை உற்பத்தி செய்கிறார்கள். அதைப் போலவே மற்ற எல்லா இடங்களிலும் பயறு, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றை விவசாயிகள் உற்பத்தி செய்ய ஊக்க மளித்தால், பற்றாக்குறை நீங்கி தன்னிறைவைப் பெற முடியுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உளுந்து, துவரை, ஆகியவை தாய்லாந்து, டான்சானியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. அதைப்போலவே கடலையையும் கூட ஆப்ரிக்க நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யலாம்.

சமையல் எண்ணெய் பற்றாக்குறையைப் போக்க கடுகு எண்ணெய் இனத்தைச் சேர்ந்தவற்றையும், பாமோலின் எண்ணெயையும் இறக்குமதி செய்கிறார்கள். பாமோலின் எண்ணெய்தான் தமிழகத்திலே அதிகமாகச் செலவாகிறது. அதுவும் தமிழ் நாட்டில் உள்ள நகர்ப்புறங்களில்தான் இந்த எண்ணெயை அதிகம் விரும்பி வாங்குகிறார்கள். கிராமங்களுக்கு அனுப்பி னாலும் அப்படியே நகர்ப்புறங்களுக்குத் அதைத் திருப்பி அனுப்பி விடுகிறார்கள். ஆகவே நகர்ப்புறங்களுக்கே இதை அதிகமான அளவில் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எண்ணெய் வித்துக்களின் பற்றாக்குறை நம் நாட்டில் நீண்ட காலமாகவே இருக்கிறது. இந்நிலையில் நேஷனல் அக்ரிகல்சுரல் மார்க்கெட்டிங் பெடரேஷன் (நேஃபார்ட்) மூலமாக இரண்டரை இலட்சம் மூட்டைகள் ஏற்றுமதி செய்தி ருக்கிறார்கள். இன்னும் ஏற்றுமதி செய்வார்கள் என்று தெரிகிறது. இதன் காரணமாக எள் விலை கூட நல்லெண்ணெய் விலையும் கூடுகிறது. இதனால் பாதிக்கப்படுவது தமிழ் நாடு, ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்கள்தான். ஆகவே எள் ஏற்றுமதியாவதைத் தடுக்க மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்த வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் கூறியதை போல, அதிகாரிகளைக் கண்காணிக்க ஜனநாயக அமைப்பு தேவை. மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். மார்க்கெட்டிங் கமிட்டிகளில் தனி அலுவலர் களுடைய காலத்தை, மற்ற ஸ்தல ஸ்தாபனங்களில் நீட்டிப்பதைப்போல்

நீட்டிக்காமல், விவசாயிகள், வணிகர்கள் கொண்ட பிரதிநிதிகள் இருக்குமாறு செய்ய வேண்டும். "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்" என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில், வாணிபத்தில் சிறந்தவர்களையும், எம்.பி.ஏ. படித்தவர்களையும் நியமித்தால் விநியோகம் சீராக நடக்குமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நமது மாபெரும் மேதை மூதறிஞர் ராஜாஜி அவர்கள், "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று கூறி பங்கீடு முறையை அகற்றினார். கண்ட்ரோல், லைசென்ஸ் முறைகள் ஒழுக்கக் கேட்டை வளர்க்கிறது என்று அறிவுறுத்தினார். இந்தத் தத்துவங்களை மீண்டும் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வெறும் தத்துவத்திற்காக அரசே எல்லாவற்றையும் விநியோகிக்க வேண்டுமென்ற முறையில் அரசு ஈடுபட்டால் கெட்ட பெயர் சம்பாதிக்க நேரிடும், அதனால் மக்களுக்கும் பாதகம் ஏற்படும்.

நான் ஒரு மதுரைவாசி. டி.வி.எஸ். பஸ் சர்வீஸ் இருந்தபோது நாங்கள் எல்லாம் சௌகரியமாக இருந்தோம். தனிப்பட்ட முதலாளி கையில் இருக்கக் கூடாது என்ற கொள்கைக்கேற்ப பஸ் போக்குவரத்தை அரசுடமையாக்கியிருக்கிறோம். ஆனால் முன்பிருந்த சௌகரியங்கள் இப்போது இல்லை என்பதை மதுரை மக்களாகிய நாங்கள் உணர்கிறோம்.

* திரு. ஆர். டி. சீத்தாபதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மதுரையில் போக்குவரத்துக் கழகம் நடத்தும் வண்டிகளில் நல்ல வசதிகள் இல்லை என்று சொல்கிறார்கள். பஸ்களில் ஏற்ற மறுக்கிறார்களா என்பதை அவர் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவருடைய அபிப்பிராயத்தை அவர் சொல்லியிருக்கிறார்.

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** ஒருவர் வணிகம் செய்ய ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு உரிமம் பெற வேண்டிய முறை இருக்கிறது. அத்துடன் முனிசிபாலிடி, கார்ப்பரேஷன் போன்றவர்களிடமும் லைசென்ஸ் பெறவேண்டிய நிலை இருக்கிறது. வாணிபம் செய்பவர்கள் தங்கள் கடையில் சுவாமி படங்களின் பக்கத்தில் 10 லைசென்ஸ்களை மாட்டியிருக்கிறார்கள். மேலும்



பலவித ரிட்டர்ன்களைச் சமர்ப்பிப்பதில் என்ன பிரயோஜனம் என்
தெரியவில்லை. இந்தச் சிரமங்களைக் குறைத்து எல்லா வியாபாரத்திற்
ஒரே உரிமம் வழங்க முன்வந்திருக்கும் நமது அரசைப் பாராட்டுகிறே
அதுவும் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதைப் புதுப்பித்துக்கொள்ளல
என்று கூறியிருக்கிறார்கள். மத்திய அரசின் சி.எஸ்.டி. சர்டிபிகேட் வா
யவர்கள் புதுப்பிக்க வேண்டியதே இல்லை. புதுப்பிக்க வேண்டிய அவசி
என்னவென்று தெரியவில்லை. பொதுவாக விலைவாசிகள் நிலைமை
பிரத்தியட்சக் கண்ணோட்டத்தில் அணுகியிருக்கும் அரசை வரவேற்கிறே

* THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI : H
Chairman, I am happy to speak on the Policy Note on Food a
Civil Supplies. I would like to say that, on the whole, it is
very satisfactory report. We are a country where we have ma
problems. If we have a policy by which whatever we have at o
disposal could be distributed properly to the people belonging
the low-income group, that policy will always be successf
I am for rationing because rationing helps poor people to get th
quotas. If we have a system in which things will be availab
only in the open market, the sufferers are only the poor peop
Now, if there was rationing and if there was only a limit
quantity of sugar available, everybody would have been complainin
Being a housewife myself, I know the psychology of a housewi
The psychology of a housewife is that if a limited quantity is the
we will always complain. But when there is open-market sug
available, housewives know that their budget will be pinched a
they will remain satisfied with what they get. That way, I wou
say that the availability of food materials in our State is ve
satisfactory when compared to the other States.

Sir, I have a request to make to the Government. Famil
who have family cards are able to get their cards renewed eas
because the renewal is done at the shop to which their car
are attached. But the trouble comes when voluntary institutio
go for renewal of their bulk cards because there is some del
We have to approach the office. If there is some system by whi
a time-limit could be fixed and the renewals are done on a time-bou
programme, it would be of help to these voluntary institutio
If there is a stipulation that the applications for renewal should n
be kept pending for more than 15 days, it would be help
because most of the orphanages, educational institutions a
working women's hostels depend mostly on the quotas they g
through family cards. Some time back, when I was away

Australia for two months, the people in the institution with which I am associated applied for sugar but nothing happened. When I returned, I contacted the Secretary to Government, Food Department. He immediately arranged for the release of sugar. But we would not like to trouble him all the time. We will be grateful if there is some programme by which the bulk card renewals could be done quickly.

(பிற்பகல் 5-00)

Another problem that we, on behalf of educational institutions and other institutions, face is the supply of cement. It is stated that cement is being given on priority basis. But educational institutions depend on Government grants; they have to get the grants from the Government; they have to get Corporation licence; they have to get P.W.D. permits and fulfil all other conditions. By the time they get permits and all that, they are not able to get cement. Before they could obtain cement, the licence given by the Corporation gets expired. I request the Hon. Minister, who is always very quick in taking action and who is always easily amenable to suggestions, to make some arrangement by which the educational institutions could be exempted from this type of procedure and if they are receiving Government grants, their cases may be considered favourably. I have got two buildings and I am finding it a bit difficult to get the cement quickly. If there is delay, the Corporation licence would expire and I will have to apply again for licence. If we are helped in this matter, we will be grateful to the Hon. Minister.

Regarding the fixation of price for hotel dishes, I think we need not interfere with the hoteliers in reducing the prices of hotel dishes. If we interfere, they will agitate and we all have seen a number of times in the papers cartoons about the size and texture of Iddlis. I would like to suggest one thing. If we have a parallel organisation to sell the dishes at reasonable prices, it will be better. We have heard that Lazzat Pappad manufacturers, the Mahila Mandal organisation in Bombay are supplying Janata dishes in their vans for one rupee in the labour area. If we have such *parallel* suppliers, it will have a very salutary effect and the hoteliers will have to voluntarily reduce the prices. On the other hand, if we go and ask them to reduce the prices, there will be agitation. If we could have these parallel organisations like the Annapoorna and others and the kiosks which are run by the unemployed Graduates Association and if all of them could be involved in this kind of scheme, we could prepare and supply the



food packets in places where there is need for the Janata Meal at a reasonable price. There may not be any difficulty, if the Civil Supplies Corporation could take the initiative. Just as there is open market sugar, those who want to go to the hotel and pay more, can go. Those who cannot afford to do so will be buying the food dishes at the concessional price sold by the above organisations. With these words, I would like to congratulate the department because I have not found any difficulty in getting the articles required and I am sure the same condition will be there in future also.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தின் உணவு நிலைமை கொள்கை விளக்கக் குறிப்பில் பேசுகின்ற பெரு வாய்ப்பினைத் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில், ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்குகின்ற வகையில் ஏறத்தாழ 55 ஆயிரம் டன் அரிசியை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற அளவுக்கு ஒரு புதிய வரலாற்றை கடந்த காலத்தில் நம்முடைய தமிழக அரசு செய்திருக்கிறது. அப்படிச் செய்து தமிழகத்திற்குப் பெருமையைத் தேடித் தந்திருப்பது நமக்கெல்லாம் ஒரு பெருமையாக இருக்கிறது. அது மட்டுமல்ல, வருகின்ற காலங்களில் ஏற்படக்கூடிய மக்களுடைய தேவையை உணர்ந்து அவர்களுடைய நிலைமைகளைச் சீராக்குவதற்கு, சரிக்கட்டுவதற்கு ஏற்ப தமிழக அரசு கையிருப்பில் போதிய உணவை வைத்திருக்கிறது என்பதனையும் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். கடந்த காலத்திலும்கூட நம்முடைய கழக அரசு ஆளுகின்ற நேரத்தில் நிச்சயமாகப் பஞ்சம் இருக்காது என்ற அளவில் உணவு நிலைமைகளை வைத்திருந்தது. இன்றும் நம்முடைய அரசு அந்த நிலையை உருவாக்கியிருக்கிறது.

குறிப்பாக தமிழகத்திலே அரிசியினை, நெல்லை உற்பத்தி செய்கின்ற விவசாயப் பெருமக்களுக்கு அவர்கள் நெல், கரும்பு விளைவிக்க செலவழிக்கின்ற முதலீட்டுக்குரிய பணம், கொள்முதல் விலைகூட கிடைக்கவில்லை என்ற பிரச்சினை இன்றையதினம் மாநிலம் பூராவும் எழுப்பப்படுகின்ற ஒரு கோஷமாக இருக்கின்றது. ஆனால் இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் எடுத்துச் சொன்னது போல, இந்த மாநில அரசு நெல்லுக்கு 130 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறது, ஆனால் மத்தியிலே இருக்கின்ற சர்க்கார் அதைக் கொடுக்க

மறுக்கிறது என்று இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கேட்பதைக் கொடுக்கக்கூட மத்திய அரசு தடையாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதை அழகாக எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தடையைப் பற்றிச் சொல்லும்போது, இந்தப் புத்தகத்திலே மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு மாநிலத்தை எப்படியெல்லாம் புறக்கணிக்கிறது என்பதைப்பற்றி மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக 1967-68 ஆம் ஆண்டில், கோதுமையின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 70 முதல் ரூ. 76 வரை நிர்ணயிக்கப்பட்டிருந்த நேரத்தில், நெல்லின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 43 ஆகத்தான் நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி 1967-68-லே அன்றையதினம் கோதுமைக்கு மத்திய சர்க்கார் கொடுத்தது விலை 70 முதல் 76 ரூபாய் வரை என்று இருக்கும்போது, நெல் விளைவிக்கின்றவர்களுக்கு ரூ. 43 தான் என்று மத்திய அரசு கொடுத்தது. 1967ஆம் ஆண்டிலேயே மத்திய அரசு மாநில அரசிடம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொண்டிருக்கிறது. ஆக மத்திய அரசு அரிசி சாப்பிடுகின்றவர்களுக்கு நெல்லை உற்பத்தி செய்கின்றவர்களுக்குரிய உரிமையைக் கொடுக்காமல் புறக்கணித்து வந்திருக்கிறது. அது மட்டுமல்ல. அதுவே நாளாவட்டத்தில் படிப்படியாக மத்திய அரசு மாநில அரசைப் புறக்கணிக்கின்ற அளவுக்கு மாறியிருக்கிறது. குறிப்பாக அரிசி சாப்பிடுகின்றவர்களைப் புறக்கணித்திருக்கிறது. இதை அந்தக் கொள்கைக் குறிப்பிலேயே சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை இப்போது ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை அல்ல. தமிழகத்தைப் பொறுத்தவரையில், மத்திய சர்க்கார் வரியை ஏற்றியிருக்கிறது. டீசல் ஆயிலுக்கு, மண்ணெண்ணெய் வரி ஏற்றப்பட்டிருக்கிறது. இதனால் என்னைப் போன்ற விவசாயப் பெருமக்களுக்கு, நாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களின் மூலதனச் செலவு அதிகமாக்கப்பட்டிருக்கிறது. இது நாடு அறிந்த ஒன்று. அப்படியிருந்தும்கூட நம்முடைய அரசு தானியக் கொள்முதல் விலையை ஏற்றித்தர கருதுகிறது. ஆனால் அதை அரசியல் மனப்பான்மையோடு மத்திய அரசு கருதுகிறது. நெல், கரும்பு விளைவிக்கின்ற விவசாயப் பெருமக்கள் படுகின்ற கஷ்ட நஷ்டங்களைப் புரிந்துகொண்டு, மனிதாபிமான உணர்வோடு நாம் மத்திய சர்க்காரிடம் உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று சென்ற ஆண்டிலேயிருந்தே சொல்லிக்கொண்டிருக்கிறோம். அந்த ஒரு காட்சியை நம்மாலே பார்க்க முடிகிறது.

**திருமதி தாரா செரியன்:** இந்தத் தமிழகத்தின் சமுதாயத்திற்கு மட்டுமா அல்லது மற்ற மாநிலங்களுக்கும் இப்படிச் செய்திருக்கிறார்களா என்று சொன்னால் நமக்குத் தெரியும்.



**திரு. காடுவெட்டி கண்ணப்பன்:** கொஞ்சம் சத்தமாகச் சொன்னால் கேட்கும். அதற்கு நான் பதில் சொல்வேன். இன்னும் கொள்கைக் குறிப்பிலே மிக அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவிலே மூன்றில் இரண்டு பங்கு மக்கள் நெல்லை உற்பத்தி செய்கின்ற மக்களாக இருக்கிறார்கள். அரிசியை மூன்றில் இரண்டு பங்கு மக்கள் சாப்பிடுகிறார்கள். அப்படி மூன்றில் இரண்டு பங்கு மக்கள், நெல்லை உற்பத்தி செய்கின்ற மக்கள் தங்கள் உரிமையைக் கேட்கிறார்கள். அந்த உரிமைகளை மத்திய அரசு புறக்கணிக்கிறது என்பதையும் நாம் உணர்கிறோம். இந்த நாட்டு மக்களும் உணர்கிறார்கள். இருந்தாலும் இப்போதும்கூட இந்த மாநில அரசின் மீது விவசாயப் பெருமக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படை உணர்வினை, உரிமைகளைப் புரிந்துகொண்டிருக்கின்ற நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், மத்திய சர்க்கார் தடுத்தாலும்கூட, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொண்டிருப்பதால், அவர்களுடைய துயரைத் துடைப்பார்கள் என்ற நம்பிக்கையில் அந்த விவசாயப் பெருமக்கள் இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதை மத்திய சர்க்காரிலே இருப்பவர்கள் ஏற்கவில்லை என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே உள்ள கிணற்றிலே உள்ள நீரை எடுத்து இறைக்க வேண்டும். அங்கு 200 அடி, 300 அடி ஆழத்திற்குக் கீழேதான் நீர் இருக்கும். அதிலிருந்து நீரை இறைக்க வேண்டுமானால் 2 மோட்டார்களை நாம் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் கிணற்றிலேயிருந்து நீரை ஏற்றி நிலத்திற்குப் பாயச் செய்ய முடியும். இப்படி இரண்டு மோட்டார்களை, பம்பு செட்டுகளைப் பயன்படுத்த வேண்டும். இன்னும் சொல்லப்போனால், சில கிணறுகளில் மின்சார மோட்டார் இல்லாத காரணத்தினால், அவர்கள் ஆயில் என்ஜினைத்தான் பயன்படுத்த வேண்டும். அப்படி அவர்கள் ஆயில் என்ஜினைப் பயன்படுத்துகின்ற காரணத்தினால், அந்தத் தண்ணீரை மேலே கொண்டு வருவதற்கு, ஆயில் அதிகமாகத் தேவைப்படுகிறது. அப்படி தேவைப்படுகின்ற ஆயிலுக்கு நாங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. அதனால் மூலதன உற்பத்திச் செலவும் அதிகமாக ஆகிவிடுகிறது.

* **திரு. க. இராமமூர்த்தி:** மின்சார பம்புசெட்டுகள், இரண்டு பம்பு செட்டுகள் வைத்திருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மின்சார பம்பு செட்டுகளுக்கு உபயோகித்த மின்சாரக் கட்டணத்தைக் கட்டவில்லை. அப்படி கட்டாத கட்டணத்தையும் சேர்த்துச் சொல்கின்றார்களா அல்லது அதைக் குறைத்துச் சொல்கின்றார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-10)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** மின்சாரக் கட்டணம் கட்டவில்லை என்றால், எந்த சர்க்காரும் விட்டுவிடப் போவதில்லை. அப்படி கட்டாமல் இருந்து, சர்க்கார் விட்டுவிடுமென்றால், ஒத்துக்கொள்கிறேன். உற்பத்திச் செலவு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. சில கிணறுகளிலிருந்து தண்ணீரை இறைக்க ஆயில் என்ஜின்களைப் பயன்படுத்துகிறோம். அதற்குத் தேவை ஆயில், டீசல் அல்லது குருடாயில் இருந்தால்தான், வேலை செய்ய முடியும். ஆனால் மத்திய அரசு அதன் விலையை ஏற்றுகிறது. அதன் காரணமாக உற்பத்திச் செலவு அதிகமாகிக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் நெல்லின் கொள்முதல் விலையை ஏற்ற ஏன் தயங்குகிறது என்பதுதான் என்னுடைய கேள்வி. உற்பத்தியை உருவாக்க மூலப்பொருள் ஆயில். அதன்மீது வரியை ஏற்றுகிறார்கள். அதே நேரத்தில் உற்பத்திப் பொருள்களை விற்பனைக்குரிய இடத்தில் விற்கும்போது, அதன் கொள்முதல் விலையைப் பெற மத்திய அரசு தடைக் கல்லாக ஏன் இருக்கிறது என்பதுதான் கேள்வி. புரட்சித் தலைவர்கள், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற முறையில் கடந்த 1½ ஆண்டுகளுக்கு முன்பாகவே சொன்னார்கள். பாராளுமன்றத்திற்கு முன்பு போராடத் தயார் என்று சொன்னார்கள். காரணம், அவர்கள் இந்த நாட்டு மக்களுடைய உணர்வுகளைப் புரிந்திருக்கிறார்கள். விவசாயப் பெரு மக்களுடைய உணர்வுகளைப் புரிந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் அழகாக அந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.

எங்கள் பகுதியில் கரும்புதான் அதிகமாக விளைவிக்கிறோம். அந்தக் கரும்பைப் பக்கத்திலே இருக்கிற ஆப்பக்கூடல் சர்க்கரை ஆலைக்குக் கொடுக்கிறோம் என்றாலும், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலை கிடைப்பதில்லை. குவிண்டாலுக்கு 120 ரூபாய், 130 ரூபாய் கொடுத்தாலும், ஆலை அதிபர்கள், ஆலைச் சொந்தக்காரர்கள் டன்னுக்கு 10 ரூபாய் பிடித்துக் கொள்கிறார்கள். அதற்காக ஷேர் கொடுப்பதும் கிடையாது. அதற்குக் கணக்கும் கிடையாது. கரும்பை விளைவிக்கிறவர்களிடமிருந்து டன்னுக்குப் பத்து ரூபாய் பிடித்துக்கொண்டு, அவர்கள் பங்குதாரர்களாகவும் இல்லை, அவர்களுக்கு லாப நஷ்டக் கணக்கும் காட்டப்படுவதில்லை. கரும்பை வெட்டி, 24 மணி நேரம் ஆலைக்குப் பக்கத்திலே அடுக்கி வைத்து, அதற்குப் பிறகு ஆலையிலே அதை உபயோகித்து சர்க்கரை தயாரித்தால், அந்தச் சர்க்கரையின் தரம் குறைகிறது. எனவே கண்டசாரி சர்க்கரை என்ற முறையிலே உடனடியாக வீட்டிலேயே சர்க்கரை தயாரிக்க சீமை எண்ணெய், டீசல், குருடாயில் போன்றவை எங்கள் பகுதியில் சீரான





முறையில் விநியோகிக்கப்பட வேண்டும். கோபி, பவானி வட்டாரத்தில் இருக்கக்கூடிய மக்களின் உழைப்பை மூலப் பொருளாகக் கொண்டு, கரும்பை உற்பத்தி செய்து, அதைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களுடைய உழைப்பு கெடாமல், கரும்பு கெடாமல், சர்க்கரையின் தரம் கெடாமல் இருக்க, அவர்களுக்குத் தேவையான எண்ணெயை முறைப்படுத்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, கோவை நகரங்களைப் பொறுத்தவரையில், கேஸ் (எரிவாயு) சப்ளை அடிப்படைப் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே நாம் பயன்படுத்தும் இந்த எரிவாயுவை மத்திய அரசின் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் மூலமாகத் தருவதைவிட, மாநில அரசே அந்த விநியோகத்தை ஏற்றுக்கொண்டு, நடுத்தர மக்களுக்கு, வசதியற்ற மக்களுக்கு, அதை முறைப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பைத் தந்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.

* THIRU A. R. DAMODARAN : Hon. Chairman, Sir, I thank you for giving me a chance to speak on the Policy Note that has been placed before the House by the Hon. Minister and I am also grateful to you for having called me after Thiru Nallasivan, because he has raised many policy matters of a very crucial nature which, I think, should be debated not only in this House but throughout the length and breadth of India. Thiru Nallasivan belongs to a party where they believe that everything must be produced by the State, distributed by the State and consumed also under State supervision. This may be possible in other countries, but I do not think this Government have accepted the principle that we should have wholesale nationalisation of all trade, wholesale nationalisation of all industries, and wholesale nationalisation of distribution facilities. If we follow this principle, all the consumers and the people in this State will become slaves of the State and they cannot exist as independent people. I am saying this because he has raised an important issue. Why should he have raised this issue, when in Tamil Nadu, the in-take from the Civil Supplies Corporation has fallen to 10,000 M.T. per month, i.e., 1,20,000 M.T. per annum? In 1976 when we had drought, the Civil Supplies Corporation was able to handle 6 to 7 lakh tonnes of rice through its shops. But when there is a promise of plenty, a season of plenty, nobody ventures near the Civil Supplies shops. There must be a moral and a lesson in it; but that lesson and moral we have not learnt so far. My thesis is that the more and

[Thiru A. R. Damodaran] [1980 ஜூலை 24

more of controls we have the greater will be the difficulties in distributing the scarce commodities, although I realise that it is inevitable that at some stage or other some degree of Government control may be indicated. For example, at the time of the Parliamentary Elections, probably a note may have been put up that onion should also be taken up under the control of the Civil Supplies Department. Today, a note has been put up that firewood should also be brought under Civil Supplies control. Tomorrow, a note will be put up that cow-dung balls (Veratti) should also be brought under Civil Supplies control, because it is a form of energy. What I am trying to make out is this. There is a limit beyond which a public distribution apparatus, purely State-owned and State-managed, cannot function efficiently. In 1980-81, the Food Corporation of India, which is a gigantic monopoly Corporation created by the Government of India, is getting a subsidy from the national Exchequer to the tune of Rs. 600 crores. This amount of Rs. 600 crores is being borne by every consumer and tax-payer in India. Therefore, when we create giant monopolies and when we entrust them with the task of distribution at all levels, wholesale or retail, we are creating, in my opinion, an extremely expensive and costly public distribution machinery which will only increase the cost of distribution. Sir, I do not have to say this. The Hon. Minister may call for the accounts of the Civil Supplies Corporation over the past 2½ years or 3 years and verify for himself, with outside Cost Accountants, what it costs the Civil Supplies Corporation to purchase paddy and sell us rice. It has been mentioned in the Policy Note that on one lakh tonnes distributed by the Civil Supplies Corporation, the State of Tamil Nadu will have to lose Rs. 5.32 crores. This is for distributing one lakh tonnes of rice. That is because the procurement price is higher than the resale price of rice, after taking into account the transportation cost, the storage cost, the interest costs and the various other costs that go into the procurement operation. People seem to think that the elimination of middlemen completely means that we can take paddy directly from the producer and give it to the consumer in Madras City. I do not have to say it because I represent private trade but this has been said by the Department itself. In the Policy Note itself there is a very telling paragraph where it is said that the costs of distribution, etc. cannot be lessened and that the Tamil Nadu Civil Supplies Corporation is losing on the finer varieties of rice Rs. 430 per tonne or Rs. 43 per quintal and Rs. 60 per quintal on coarse varieties of rice.



1980 ஜூலை 24] [Thiru A. R. Damodaran]

(பிற்பகல் 5-20)

Sir, this is happening in a year when the rice position, paddy position is fairly comfortable. There will come a time when we have the periodic drought and lack of rainfall and when the Civil Supplies Corporation will have to handle 7 lakh tonnes to 8 lakh tonnes. I expect that it may have to handle even a million tonnes because the population has grown over the years. Is the Hon. the Finance Minister going to give a subsidy of Rs. 5-1/4 crores for every lakh of tonnes that is being distributed by the Corporation? It would mean that Rs. 50 crores will have to be provided, if we run into a year of bad luck when production may be affected. I am only stating this because it has been stated in this Note that Tamil Nadu in contrast to other States, has adopted a public distribution system whereby it seeks to eliminate the retail traders from the field of trading in commodities. The Civil Supplies Corporation, while it was handling only rice in 1979, is today handling cement, sugar, kerosene and various other commodities like pulses and chillies and it is mentioned that other commodities also may be taken. May I request the Government to kindly consider the social policy aspect of the matter? This is something on which the Government will have to make up their mind and state in very clear terms, precise terms: Do they want to have the State distribution apparatus entirely managed by Government servants or by quasi-Government servants or do they intend using private channels of distribution also? When I mention the private channels of distribution, I am not referring to the big wholesale merchants. When the Government displace, with their Civil Supplies Corporation shops, the Chettiar in a village—the grocer—who is earning Rs. 200 to Rs. 250 a month and who is employing 3 or 4 persons on Rs. 80 to Rs. 90 per month, may I ask what possible gain the State has in displacing all these small traders from employment and providing an extremely costly method of public distribution? The Hon. Minister, if he investigates, will find that the employees of the Civil Supplies Corporation, although they are only a few in number at present, will grow in number, in view of the monstrous appetite of this Government for taking over each and every aspect of private trade. The consumers feel annoyed, Sir. . . . . .

*திரு. ஆ. நல்லசிவன் :* பெரிய ஹோல்சேல் டிரேடர்களுக்காக 'நான் வாதாடியதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் கூறினார்.

வியாபாரம் முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் சம்மதிப்பாரா? ரீடெயிலர்சிலும் கிராமப்புறங்களில் செட்டியார் போன்றவர்கள் வளருவதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அரசு மொத்த வியாபாரம் முழுவதையும் ஏற்றுக்கொள்வதற்கு முன் வந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் ஏற்றுக்கொள்வாரா என்று நான் அவரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, there is no need to ask the question at all. I am dead against nationalisation of industries, wholesale trade, retail trade, etc.

* மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒருவருக்கொருவர் நீங்கள் ஒத்துப் போகவே முடியாது. (சிரிப்பு)

THIRU A. R. DAMODARAN: Sir, we have agreed to differ and there is no point of meeting at all. We run on parallel tracks. My only point is that even in the distribution of commodities, for example, cement, by one stroke of the pen 60 per cent of the distribution of cement was taken over by the Civil Supplies Corporation on January 1, 1979 and only 40 per cent was left to private traders. The Government have, thereby, reduced the gross income of every private cement stockist by 60 per cent with one stroke of the pen. The consequences would not be realised by the Minister. This will be known only by the persons employed in the retail trade. How many hundreds of persons would have been thrown out of employment and what about the economy of the trader? When the Government introduce a gigantic public distribution system to take over the distribution, they are causing great havoc amongst the retail trade and to employment in that sector. In the Policy Note itself, it is mentioned that for the past one year conditions are extremely satisfactory in the kerosene trade. Sir, I have never been against price control. I accept price discipline and I think responsible traders will accept price discipline. But, when they want to take over retail distribution, what happens is this. Out of 13,000 kerosene dealers whose monthly income would have ranged from Rs. 200 to Rs., 450 according to the Note published only 5,200 dealers have been permitted to deal in kerosene. Out of these 5,200 dealers, about 2,800 dealers are the so-called hand-cart-men who have been permitted to retail 100 litres in Madras City and 50 litres in the mofussil. The Hon. Minister may not know the economics of



retail trading. I am not surprised because he is not expected to go into these details. But, according to the margins fixed by the Government themselves, the gross income for the retail hand-cart vendor in the districts is Rs. 3 per day and it is Rs. 6 per day for the hand-cart vendor in Madras City. If we expect any man to sell kerosene at these margins and if we expect no black-marketing to take place, I am afraid, we are living in a Fools' Paradise. Either you fix the fair price or you do not encourage these people to sell it. In the districts also, there is no such thing as a hand-cart-man because most of the carts are driven by bulls and bullocks. This is for the information of the Civil Supplies Department.

Sir, the other thing I want to refer to is that I hope the Government will use the retail traders who are already in the field and who have been licensed. I know that suggestions have been made—and, of course, the hon. Member Thiru Nallasivan has supported them—that if Government take over the wholesale trade in kerosene, it is going to be infinitely profitable. The Hon. Minister has already taken over one portion of the trade in Madras City. I will wait for his Policy Note for 1981-82 to find out how much profit he makes out of it. There is one difficulty in this. Kerosene is a commodity that is rationed and we are not getting increased quantities. When the Hon. Minister allows the Civil Supplies Corporation to step in as a wholesaler, if he can give an assurance that the quota that the other wholesalers were getting will not be disturbed, I am prepared to accept the role of the Civil Supplies Corporation as a monitoring factor in the wholesale trade. But, that is not going to happen. Gradually, as I said, the monstrous appetite of this Corporation will swallow the existing wholesalers in the field and all of them will be nationalised through a process, without any compensation. I would request the Government to examine in detail the policy implications. I have no objection if Government can distribute scarce commodities for a few months. But, if they are going to displace private trade and create a costly State apparatus, we are going to have serious troubles in the future, which the Hon. Minister himself may be aware of, because of the fact that on two or three occasions we have had strikes in Madras City which paralysed the distribution of essential commodities.

One word more and I have done, Sir. I have already spoken about it while we discussed the Budget and it is not necessary for me to enlarge on it. But I would like to say that in the fixation of prices of certain articles in hotels, I would like the Hon. Minister to approach the problem with some degree of pragmatism and realism.

(மாற்றுத் தலைவர் திருமதி தாரா செரியன் தலைமை)

We are a consumer-oriented assembly naturally because the consumers are the largest sector in the population. But, there is no escape from the fact that basic economics can never be thwarted by our own ideologies. The very Note that has been submitted by the Civil Supplies Department will indicate that to enable them to go on procuring at higher prices, our Government have requested the Government of India for a higher price for paddy. If they get it, if they pay Rs. 130 per quintal to the farmer and if they are going to sell at the present issue price of Rs. 1|68 to Rs. 1|78 per kg. of rice, they will be left not with Rs. 40 crores deficit but they will be left with a deficit of Rs. 80 crores. Whether the issue price should be increased or not when the procurement price goes up is a problem that they will have to think about. My only point is this. In fixing the prices of 'dosai', 'iddli', 'vadai', 'sambaar' and 'chutney', I would request that the Government spare some time to think about more important matters than thinking about these which may not solve the problem at all. All that will happen is that 'iddli', 'dosai', 'vadai', 'sambaar' and 'chutney' will disappear from these hotels because we cannot expect them to load the price on other eatables. The hon. lady Member mentioned that there were Annapoorna canteens. The Guild of Service is running a canteen in the premises of the Transport Department which it is going to close, I believe, because they do not accept an increase of 5 paise. The Guild of Service which is a non-profit organisation is going to close that canteen. So, I would suggest that with all the resources and the apparatus that it has, it will not be difficult for the Civil Supplies Department itself, as one hon. Member suggested to distribute 'iddlis', dosais' 'sambaar', etc. at various kiosks in the City.

(பிற்பகல் 5-30)

The Dairy Development Corporation has put up kiosks at many places and probably this may be a profitable source of employment. I have no objection if the Government take up the distribution of iddlis, etc. through them. The only trouble is that we are the persons who are going to suffer ultimately because the moment the Government introduce controls over catering and distribution of foodstuffs, they will naturally disappear from the hotels and the consumers will suffer. The hotel industry is a difficult industry to run at the present moment. By increased Government interference in this industry we will only be depressing the growth of hotel industry. I remember in





Bangalore in 1976 after the famous order of 'Iddli business' came into operation during the emergency, the Mavelli Tiffin Rooms, one of the most famous hostels, closed down operation and they stated, "We are not going to have any such activity under Government supervision". I would not like such a situation to develop in Tamil Nadu. In fact, we will be more interested if the Government could arrange for periodic inspection of these hotels and try to improve the sanitary conditions in these hotels which are causing a lot of diseases to many of our consumers. I would, therefore, request the Government to keep their hands off from the hotel industry If they want to encourage, they may encourage any number of small hotels, probably subsidised by the Corporation or through some other source of financial institution, so that new employment opportunities can be found. Thank you very much.

* திரு. நீலநாராயணன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மனித வர்க்கத்தினுடைய அடிப்படைத் தேவைகளில் மிக இன்றியமையாத ஒன்றாக இருக்கின்ற உணவுபற்றி நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்.

உடுக்க உடை, இருக்க இடம், உண்ண உணவு இந்த மூன்றும் மனித வர்க்கத்தினுடைய இன்றியமையாத பொருட்களில் தலைசிறந்த பொருட்கள். இது நான் அறிந்த உண்மை. அந்த முறையிலே, இந்த உணவை எந்த அரசு பேணி, பாதுகாத்து, காப்பாற்றி மக்களுக்கு வழங்கி வருகின்ற கடமைகளைச் சரிவரச் செய்கின்றதோ அந்த அரசு தான் மக்களின் நலம் பேணும் சர்க்கார் என்பது ஜனநாயக நாடுகள் அறிந்துள்ள உண்மையாகும். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்பது தமிழ் ஆன்றோர்களின் பழமொழி. அந்த நிலையிலே, உயிரனைய இந்த உணவுப் பிரச்சினையிலே இந்த அரசு எத்தகைய கொள்கைகளை இன்றையதினம் கடைப்பிடித்து வருகின்றது, அந்தக் கொள்கைகள் மூலம் இன்றைக்கு நாட்டில் இருக்கும் உணவுப் பிரச்சினை நல்ல முறையிலே தீர்க்கப்பட்டு வருகின்றதா என்பதை விருப்பு வெறுப்புக்கு இடமின்றி அந்தத் தன்மையிலே என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைப்பது கடமை என்று நான் கருதுகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பினைப் பார்க்கின்றபோது, இதில் தெளிவாகவே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். உணவுப் பிரச்சினையில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்றுவிட்டது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் வெளி

[திரு. நீலநாராயணன்] [1980 ஜூலை 24

மார்க்கெட்டிலே அரிசி தாராளமாக, அதுவும் குறைந்த விலையில், கிடைத்துக் கொண்டிருக்கிறது, அரிசி தட்டுப்பாடே இல்லாத நிலையில் தாராளமாகக் கிடைத்துக்கொண்டிருக்கிறது என்பதைப் பெருமிதத்தோடு இந்தக் குறிப்புகளிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு உண்மை என்பதை நான் பின்னாலே சொல்கிறேன். ஆனால், உண்மையிலேயே அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று சொன்னால், அதை வரவேற்கவும், அப்படிப்பட்ட அரசைப் பாராட்டவும், வாழ்த்தவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் குறிப்பைப் பார்த்தால், வெளி மார்க்கெட்டிலே 1.90 ரூபாய்க்கும் 2.20 ரூபாய்க்கும் அரிசி விற்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மை நிலை அதுதானா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையிலும், நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் வெளி மார்க்கெட்டிலேதான் அரிசியை வாங்குகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், உங்களுடைய இந்தக் குறிப்பிலே சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 25 காசு விலை அதிகமாகியிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றையதினம் வெளி மார்க்கெட்டிலே 2.60 ரூபாயில் இருந்து 3 ரூபாய் வரையில் அரிசி விற்கப்படுகிறது. இது தான் உண்மையான நிலைமை. இதே நிலைமையை வைத்துக்கொண்டு நாம் பார்க்கின்றபோது, இன்னும் நான்கு ஐந்து மாதங்கள் சென்றால், இன்னும் விலைகள் ஏறக்கூடும் என்ற பயத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையிலேதான், இருக்கும் நிலைமையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவும், அதன்மீது அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளவும் நாங்கள் விரும்புகிறோம். எந்த அளவுக்கு இந்த அரசு கையிருப்பைத் தேக்கி வைத்துக்கொண்டிருக்கிறது என்ற நிலைமைகளை எண்ணிப் பார்க்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது, ரொம்ப பூரிப்பான தகவல்களை இந்த அறிக்கையிலே தந்திருக்கிறார்கள். எத்தகைய நிலைமைகள் ஏற்பட்டாலும், எந்த நெருக்கடியான நிலைமைகள் ஏற்பட்டாலும், அவற்றையெல்லாம் சமாளிக்கும் நிலைமையிலேதான் அரசு இருந்துகொண்டிருக்கிறது என்ற வலுவான தன்மையை இந்தக் குறிப்பிலே அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால், பின்னால் வருகின்ற குறிப்பிலே இருக்கின்ற புள்ளி விவரங்களைப் பார்க்கின்றபோது, நமக்குக் கொஞ்சம் அச்சம் ஏற்படுகிறது. நிதிநிலை அறிக்கையிலேயும் சரி, இந்தக் குறிப்பிலேயும் சரி, ஒன்றைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். "வேலைக்கு உணவு" என்ற திட்டத்தின் கீழ் மைய அரசு 73,000 டன் அரிசியை ஒதுக்கீடு செய்திருந்தது சென்ற ஆண்டு. அந்த ஒதுக்கீடு மத்திய அரசிடமிருந்து நமக்கு வந்து சேர்ந்ததா, சேரவில்லையா என்பது தெரியவில்லை. இந்தக் குறிப்பிலே, தமிழ்நாட்டில்



1980 ஜூலை 24] [திரு. நீலநாராயணன்]

இருக்கும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக, அதனுடைய கையிருப்பிலே இருந்து 3 ஆயிரம் டன் அரிசியை அவர்கள் செலவு செய்திருப்பதாக—'வேலைக்கு உணவு' என்ற திட்டத்திற்குக் கொடுத்திருப்பதாக—புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, வரவு செலவுத் திட்டத்திலே நாம் பார்த்தோம். 2 லட்சம் டன் நெல்லைக் கொள்முதல் செய்திருக்கிறார்கள். ஆகவே, ஏறக்குறைய 1 லட்சம் டன் அரிசி சென்ற ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. 73 ஆயிரம் டன் கையிருப்பில் உள்ள அரிசியை 'வேலைக்கு உணவு' என்ற திட்டத்தின் கீழ், மத்திய சர்க்கார் பின்னர் தருவார்கள் என்று எதிர்பார்த்து நாம் செலவு செய்திருக்கிறோம். அதோடு கூட, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள், நிவாரண வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு 4 ஆயிரம் டன் அரிசியை நாம் வழங்கியிருக்கிறோம். வெளிநாடுகளுக்கு 55 ஆயிரம் டன் அரிசியை ஏற்றுமதி செய்திருக்கிறோம். ஆக மொத்தம் 132 ஆயிரம் டன் அரிசி நம்முடைய கையிருப்பிலே இருந்து செலவாகியிருப்பதாக இந்தக் குறிப்பிலே காணப்படுகிறது. முதலில் எவ்வளவு இருப்பு இருந்தது என்பது இந்தக் குறிப்பிலே இல்லை. ஆனால், கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளிவிவரக் கணக்கை வைத்து நாங்கள் எண்ணிப் பார்க்கிறோம். மத்திய சர்க்காருக்குக் கொடுத்த அரிசி திரும்பத் தரப்பட்டிருக்கிறதா ? இல்லையா ? அதை நமது அரசு கேட்டிருக்கிறதா ? இல்லையா ? இந்த விவரங்கள் இந்தக் குறிப்பிலே இல்லை. ஆனால், செலவுக் கணக்கை மட்டும் இங்கே குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள். இந்நிலையில் எந்த நிமிஷத்திலும், எத்தகைய சூழ்நிலையிலும், எத்தகைய நிலைமை ஏற்பட்டாலும், அதைச் சந்திப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் அதைப் பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 5-40)

ஆனால் எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்பது என்ன அட்சய பாத்திரமா, அள்ள அள்ளக் கொடுத்துக்கொண்டே இருப்பதற்கு ? அல்லது அலிபாபாவின் தீபமா ? உரைத்தவுடனே 10,000 டன் அல்லது 20,000 டன் அரிசி கொண்டுவா என்றால், கொண்டுவந்து கொடுக்க ? என்னாலே இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவேதான், இப்படிப்பட்ட நிலவரம், திருப்திகரமான நிலவரமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இன்னொரு விந்தையான நிலைமையையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையில் வேலைக்கு உணவு என்ற திட்டத்திற்காக இந்த அரசு செலவழித்த அரிசியின் மொத்த அளவு 55,000 டன் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்

குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் இந்த உணவுக் கொள்கைக் குறிப்பில் அதற்குச் செலவிடப்பட்ட மொத்த அரிசியின் அளவு 73,000 டன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு புள்ளி விவரத்திலும் எது தவறு, எது சரி என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களோ 55,000 டன் என்று சொல்லுகிறார்கள். ஆனால் மாண்புமிகு உணவு அமைச்சரோ 73,000 டன் என்கிறார்கள். இந்த நிலையில் இந்தக் கணக்கை எப்படி ஏற்றுக்கொள்வது என்று புரியவில்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் பதிலுரையில் இதை விளக்குவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, நெல் கொள்முதல் பிரச்சினை, எங்கேயும் பரவலாகப் பேசப் படுகிற ஒன்றாக இருக்கிறது. மைய அரசு நெல் கொள்முதலுக்கு அதிகப் படியான விலையைக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 130 கொடுக்க வேண்டும். மத்திய அரசு கோதுமைக்குக் கொடுக்கிற விலை ரூ. 117 ஆக இருக்கிறது. அதே அளவு தொகையாவது நமக்குக் கொடுக்கக் கூடாதா என்ற வினாவையும் இங்கே எழுப்பி, அந்த அளவுக்கு மத்திய அரசு நம்மை மாற்றாந்தாய் மனப் பான்மையோடு நடத்திக் கொண்டிருக்கிறது என்று கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு கூட, மத்திய உணவுக் கார்ப்பரேஷன் கோதுமைக்கு மான்யம் கொடுப்பதைப்போல் ஏன் அரிசிக்கும் மான்யம் கொடுக்கக் கூடாது, மத்திய உணவுக் கார்ப்பரேஷனை நாம் ஏன் தட்டிக் கேட்கக் கூடாது, ஏன் நாம் நமது உரிமைக் குரலை இதுகுறித்து எழுப்பக் கூடாது என்று இங்கே கேட்கப்பட்டது. எங்களைப் பொறுத்தவரையில், ஒன்றைத் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தின் வளர்ச்சிக்காக தமிழ் மகனுடைய வள வாழ்வுக்காக மத்திய அரசு குறுக்கே நிற்குமென்றால், அவர்களோடு போராடி, குரலெழுப்ப நாங்கள் எப்போதுமே தயங்கியதில்லை. எந்தச் சமயத்திலும் நாங்கள் அதற்குத் தயாராக இருக்கக் கூடியவர்கள். "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்". இன்று நேற்றல்ல, மத்திய அரசின் பிரதமராக இருக்கும் அம்மையார் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தோடு நேசக் கரம் நீட்டிய காலத்திலேயே இந்த உரிமை முழக்கத்தை முழக்கியவர்கள் நாங்கள். எங்களுடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த உரிமை முழக்கத்தைச் சாதாரணமான சந்து பொந்திலிருந்து எழுப்பவில்லை. இந்த நாட்டின் பிரதமரை முன்னாலே வைத்துக்கொண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் படத் திறப்பு விழாவின்போது இந்த உரிமை



முழக்கத்தை எழுப்பினார்கள். அது மட்டுமல்ல. இன்றுவரை அந்த முழக்கத்தைக் கட்டிக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சில தலைவர்களைப் போல் எதிர்க் கட்சியாக இருந்தால் ஒரு கருத்து, ஆளும் கட்சியாக இருந்தால் ஒரு கருத்து, நட்போடு இருந்தால் ஒரு சொல், நட்பைத் துறந்துவிட்டால் மற்றொரு சொல் என்று இல்லாமல், நாட்டின் வளர்ச்சி, வளம், முன்னேற்றம் இதனை முன்னே வைத்து தன்னுடைய உரிமையையும் உறவையும் நிலைநாட்டிக்கொள்ளுகிற தெம்பையும் திராணியையும் பெற்றவர் எங்கள் தலைவர். அவருடைய தலைமையில் இயங்கிக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசைத் தட்டிக் கேட்பதற்குத் தயாராக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இங்கே இருக்கும் ஆளும் கட்சியின் நிலை என்ன? அவர்கள் எந்த நிலையில் இருந்து கொண்டிருக் கிறார்கள்? அதைத்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பிரதமர் உறுத்துப் பார்த்தால் முன்னேறுவார்களா, திரும்பி விடுவார்களா?

இப்போது மத்திய அரசிலே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறவர்கள் அவர்கள் நிலைமையைப் புரிந்து கொண்டு, மாநிலங்களின் தன்மை எப்படி இருக்கிறது என்று புரிந்து கொண்டு லாகவமாக, திறமையாக ஆட்சி செய்கிற நிலைமையில் இருக்கிற காரணத்தால், இன்றைக்கு டெல்லியில் பச்சைக் கொடி காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நெல்லுக்கு அதிகமான விலை கொடுக்கப் படும் என்று சொல்லிவிட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே உரு வாகிக் கொண்டிருக்கிற காரணத்தால், இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் குரல் கொடுக்கிறீர்கள். நாங்களும் உங்களோடு இதை ஆதரிக்கிற தன்மையில் குரல் கொடுக்கிறோம். ஆனால் அந்த நிலைமையில் தோல்வி கண்டு விட்டால், மத்திய அரசு உங்களுக்கு எதிர்பார்த்த அளவு கொடுக்காவிட்டால், அரசு என்ன செய்யப் போகிறது? அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அதையேதான் நானும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் தொடக்கத்தில் அழகாகப் பேசினார்கள். இப்போது திடீரென்று 'அவர்கள் செய்யவில்லை என்று சொன்னால், நீங்கள் குரல் கொடுக்கப் போகிறீர்களா? அவர்களோடு உறவை முறித்துக் கொள்ளத் தயாரா?' என்று கேட்டார்கள். இப்போது அவர் சண்டைக்கு எங்களை அழைத்துக் கொண்டிருக்கிறார். நாங்கள் முன்னாலே சொன்னதைப் போல் 'நம்பிக்கை யோடு இருப்போம். சண்டைக்குப் போக வேண்டும் என்றால், சண்டைக்குப் போகவும் தயாராக இருக்கிறோம்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** சண்டை என்றால் எப்படிப்பட்ட சண்டை என்பதை உறுப்பினர் விளக்க வேண்டும்.

**மாற்றுத் தலைவர் (திருமதி தாரா செரியன்) :** விளையாட்டுச் சண்டை.

**திரு. க. இராமமூர்த்தி :** மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் சண்டையா அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சண்டையா ?

**திரு. நீலநாராயணன் :** மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து பிரச்சினையைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். சண்டைக்கோ சச்சரவுக்கோ இது சந்தர்ப்பமல்ல. அப்படிப்பட்ட எண்ணமும் எனக்கு இல்லை. ஆனால் நான் கேட்பதெல்லாம், தேவைப்பட்டால் மத்திய அரசை எதிர்த்து இந்த அரசு உரிமைக் குரலை எழுப்பப் போகிறீர்களா இல்லையா ? இதைத்தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு அவர்கள் பச்சைக் கொடி காட்டுகிற சூழ்நிலையில் நீங்கள் குரல் கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். அதைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை.

அடுத்து, எண்ணெய் விலை உயர்வைப்பற்றிக் கொள்கைக் குறிப்பிலேயே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். கடலை எண்ணெய் ஒரு கிலோ ரூ. 5.40-லிருந்து ரூ. 12 வரை சென்றிருக்கிறது. நல்லெண்ணெய் கிலோ ரூ. 8.50-லிருந்து ரூ. 14 வரை உயர்ந்திருக்கிறது. தேங்காய் எண்ணெய் கிலோ ரூ. 13-லிருந்து ரூ. 16 வரை உயர்ந்திருக்கிறது. இதைப் போலவே புளி, தனியா. விறகு முதலியவையும். இப்படி அத்தியாவசியமான பொருள்கள் அனைத்தின் விலையும் ஏறிக்கொண்டிருக்கின்றன என்பதை 27-வது பக்கத்திலே பட்டியல் போட்டு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதற்கான காரண காரியங்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்று நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன், ஒரு சேம நல சர்க்கார் மக்கள் நலம் பேணுகிற சர்க்கார், விலைவாசி ஏற்றத்திற்குக் காரண காரியங்களைக் கூறுவதற்கு மட்டும் இல்லை. அதைத் தடை செய்ய வேண்டிய பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் இந்த அரசு என்னென்ன நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதையெல்லாம் பத்திரிகைகளில் படித்துப் பார்த்துவிட்டு இங்கே அவைக்கு வருகிறோம். இங்கே வந்தால் அதே செய்தியை ஆட்சியில் இருப்பவர்களும் கொடுத்தால் நாங்கள் என்ன செய்வது ? பத்திரிகைக்



குறிப்புக்கும் கொள்கைக் குறிப்புக்கும் எந்த வேறுபாட்டையும் காண முடிய வில்லை. எனவேதான் இந்த நிலைமைக்குப் பரிகாரம் வேண்டும் என்று சொல்கிறேன்.

சென்ற முறை கடலை எண்ணெய் விலை மிக அதிகமாக ஏறியபோது, 1978-79 ஆம் ஆண்டில் 70,71,000 ரூபாய் சப்சிடியாகக் கொடுக்கப்பட்டதாகக் கணக்கில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது..

(பிற்பகல் 5-50)

விஷம் போல் விலைவாசி ஏறியிருப்பதற்குப் பரிகாரமாக அப்படிப்பட்ட ஏற்பாடுகள் ஏதாவது செய்யப்பட்டிருக்கின்றனவா ? எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஓட்டல்களில் விற்கப்படும் பண்டங்களின் விலை வாசியைப்பற்றி இங்கே சுட்டிக்காட்டினார்கள். அவற்றையே நானும் திரும்பத் திரும்பச் சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேன். காரணம், கூறியதையே கூறுகின்ற குற்றத்திற்கு ஆளாவேன் என்பதுதான். ஆகவே ஓட்டல்களில் விற்கக்கூடிய பண்டங்களின் விலையைக் கட்டுப் படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்காருடைய கொள்கைக் குறிப்பிலே உணவு நிலைமையைப்பற்றிக் குறிப்பிடும்போது, கொள்முதல் செய்தல், அதைச் சேமித்து வைத்தல், பொது விநியோகம் செய்தல் போன்ற பணிகளைத் திறம்படச் செய்வதற்காக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது என்று கூறியுள்ளார் கள். அதன் நிர்வாகச் செலவிற்காக, ஒரு வருடத்திற்கு என்று நினைக் கிறேன், 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்த வகையில் 70 இலட்சம் ரூபாய் இலாபம் வந்த தாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையில், நிதித்தட்டுப்பாடு இல்லையென்று கருதுகிறேன். அது மட்டுமல்லாமல், "ஸ்டேட்மென்ட் ஆஃப் போஸ்ட்ஸ் அண்டு ஸ்கேல்ஸ் ஆஃப் பே" என்று கொடுக்கப்பட்டுள்ள புத்தகத்தில் பக்கம் 62-63-ஐப் பார்த்தால், ஒரு மினி போலீஸ் ஸ்டேஷனே இந்தத் துறையில் இருக்கிறதோ என்று கருதக் கூடிய அளவிற்கு அதிகாரிகளுடைய பட்டியல் இருக்கிறது. வேண்டியதுதான், வேண்டாமென்று நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அவர்கள் என்ன பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கான குறிப்புகள் இந்தப் புத்தகத்திலே இல்லை. எத்தனை வழக்குகளை அவர்கள்

பிடித்திருக்கிறார்கள் என்ற விவரமும் இல்லை. சென்ற ஆண்டு என்னென்ன செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு பற்றிய நிலவரங்களை அதிலே காணவில்லை. அந்தக் கார்ப்பரேஷன் பல பெரிய அதிகாரிகளைக் கொண்டு நல்ல முறையிலே வளர்ந்தோங்கி இருக்கிறது. ஆனால் இந்த இலாகாவிற்கு அடிப்படையாக இருந்துகொண்டு மக்களோடு நேரிடையாகத் தொடர்பு கொள்ளக்கூடிய சேல்ஸ்மென், சேல்ஸ்விமன் எல்லாம் இன்றைய தினம் மிகவும் எளிய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வேன். அவர்களுடைய வாழ்க்கையை மேலும் உயர்த்த முன்வாருங்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிடுவார்கள் என்று கருதியிருந்தேன். அவர்களும் சங்கத்தை வைத்துக்கொண்டு போராட்டம் என்று ஆரம்பித்து விடக் கூடாது. ஏற்கெனவே இருக்கின்ற தொல்லைகளோடு இதுவும் வந்து சேர்ந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே இதைச் சுட்டிக்காட்டுகிறேன். ஆகவே இதை முதலிலே கவனிக்க வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில், ரூ. 291 இலட்சம் மதிப்புள்ள பல சேமிப்புக் கிடங்குகளை வைத்திருக்கிறார்கள். 50 சதவீதம் மத்திய அரசின் நிதியாகவும், 50 சதவீதம் தமிழக அரசினுடைய நிதியாகவும் செலுத்தி அந்தக் கிடங்குகளை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு 76 இலட்சம் ரூபாய் செலவில் கிடங்கு கட்டப்படுவதற்கு திட்டமிடப்பட்டதாகவும் அத்திட்டம் இப்போது கைவிடப்படக்கூடிய நிலைமையிலே இருப்பதாகவும் இந்தக் குறிப்பிலே கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் கிடங்குகள் வருமானம் வரக்கூடிய ஒன்றாக இருக்கின்றன என்பதை இந்தக் குறிப்பிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் ரூ. 157.49 இலட்சம் லாபம் அந்தக் கிடங்குகளின் வாயிலாக வந்திருக்கிறது. அப்படி வருமானம் வரக்கூடிய ஒன்றை, மத்திய சர்க்காரிலிருந்து எதிர்பார்த்த அளவு பணம் வரவில்லை என்ற காரணத்திற்காக, கைவிடப் போகிறோம் என்று சொல்வது அவ்வளவு உசிதமாகப்படவில்லை. ஆகவே தமிழக அரசே அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இலாபம் வரக்கூடியதாக இருக்கிறது. இலாபம் வந்து கொண்டிருந்தால்தான், வரி இல்லாத பட்ஜெட்டைப் போட்டுக் கொண்டிருக்க முடியும். ஆகவே கிடங்குகளைக் கட்ட அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், வணக்கம்.



* திரு. க். இராமமூர்த்தி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் நுகர் பொருள் வாணிபக் கழகக் கொள்கைக் குறிப்பின் மீது நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

உணவுப் பொருள்களைப் பொறுத்த வரையில், ஒரு நிம்மதியான நிலை—விலைவாசி எப்படியிருந்தாலும்—உணவுப் பொருள் தட்டுப்பாடு, அதுவும் குறிப்பாக அரிசித் தட்டுப்பாடு இல்லாத நிலை சில ஆண்டுகளாக இருந்து வருகிறது. அந்த நிலை தொடர்ந்து நீடிக்குமென்ற உத்தரவாதம் இருக்கின்ற நிலை உருவாக்கப்பட்டிருப்பதால், என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசினுடைய கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருப்பதைப் போல, ஒரு பக்கம் நமக்கு அரிசியினுடைய உற்பத்தி நிலை மகிழ்ச்சிக்குரியதாக இருந்தாலும், உற்பத்தி செய்யக் கூடிய நெல்லுக்கு உரிய விலையை நிர்ணயிக்க முடியாத நிலையிலே இருக்கிறோம் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதைப் பொறுத்த வரையில், தமிழகத்திலே மாறுபாடான கருத்து இருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். ஆனால் பழக்கத்தின் காரணமாகவோ என்னவோ, இது போன்ற நிலைமைகளைச் சொல்ல வேண்டிய அவசியம் வருகின்றபோது, இந்தியாவின் தலைநகர் டில்லியிலே வேறு யாரோ இந்த நாட்டைச் சேராதவர்கள் ஆண்டு கொண்டிருப்பதைப் போலவும், அடிமையாக இருப்பவர்கள் தமிழகத்தில் இருப்பதைப் போலவும், ஆகவே போர்க் குரல் எழுப்ப வேண்டிய நிலை இருப்பதைப் போலவும் பேசப்படுகிறது. இடையிலே பல ஆண்டுகள், மாநிலத்திலே எந்த ஆட்சி நடைபெறுகிறதோ அவர்களுக்குச் சம்பந்த முள்ளவர்கள் மத்தியிலே ஆட்சியை நடத்திக் கொண்டிருந்தார்கள். அப்போது இங்கேயிருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். அப்படிப்பட்ட வாய்ப்புகள் இருந்தபோது, இப்போது எந்த அளவிற்குக் குரலை எழுப்புகிறோமா, எந்த நிலைமைகளை விவாதிக்கிறோமோ, எந்த நியாயத்தைக் கோருகிறோமோ, அதையே நம்முடைய பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கலாம். எந்தக் கட்சியாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும், காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும், அப்படி எடுத்துச் சொல்லுகிற பொறுப்பு அனைவருக்கும் உண்டு. அதைப் போலவே இந்த அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. மாநில அரசு இதை

எடுத்துச்சொல்ல பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன. தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டம் போன்ற கூட்டங்களில் கூட எடுத்துச் சொல்லலாம். அரிசியை இங்கே நாம்தான் விளைவிக்கிறோம், நாம் தான் சாப்பிடுகிறோம்' என்பதல்ல. தென்னகத்து மாநிலங்கள் மட்டுமல்லாமல், வடக்கேயிருக்கிற மாநிலங்களில் கூட அரிசியைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் கூட இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆனால் இந்த முறை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலேயிருந்து, "வாருங்கள் தெருவுக்குப் போராட" என்று சொல்லுவதைப் பார்க்கிறோம். நெல்லுக்கான விலையை நிர்ணயம் செய்வதிலே அவர்களுடைய கொள்கை அகில இந்திய அடிப்படையிலே இருக்கிறதா என்றால், இல்லை. இதிலே மாறுபட்டிருப்பதைக் காண்கிறோம். தனக்குச் சாதகமாக வரும்போது அகில இந்திய அளவிலே என்று பேசுவதும், சாதகமாக இல்லையென்றால் மாநில உணர்வுகளுடன், டில்லியிலே நமக்குச் சம்பந்தமில்லாத ஒரு மத்திய ஆட்சி இருப்பதைப் போல, ஒரு பிரமையை உருவாக்கி அதனுடைய நிழலிலே மறைத்துக்கொள்ளுவதும் வழக்கமாக இருக்கிறது. இது நல்லதல்ல.

**திரு. ஜேப்பியார் :** மாற்றுத் தலைவர் அவர்களே, "மாநில உணர்வுகள்" என்று மாண்புமிகு உறுப்பினர் பேசுவதால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த காலத்திலிருந்தே இந்த உணர்வுகளுக்கு முன்னோடியாக இருப்பது திராவிட முன்னேற்றக் கழகம் என்பது தெரியுமா? தெரிந்துதான் அவர்களோடு உறவை வைத்துக் கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இது பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், விவாதம் நீண்டு போகும். குறிப்பாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தேசியத் தன்மைக்கு எந்த நேரத்திலும் ஊறு வராத வகையில் நாங்கள் சேர்க்கிறோம். எங்களிடம் வந்து ஓடிப்போகிறவர்கள் சிலவற்றைப் புதியதாகக் கற்றுக்கொண்டும் போகலாம், அல்லது விட்டுவிட்டும் போகலாம். ஆனால் காங்கிரஸ் கட்சி தன்னுடைய கொள்கையிலிருந்து பிறழாமல் இருக்கிறது. போராட்டத்தைப்பற்றிக் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்கள் சொன்னார்கள்.

(பிற்பகல் 6-00)

எனக்குக் கூட நினைவுக்கு வருகிறது. டெல்லிக்கு பல பேர்கள் டிக்கெட்டு வாங்கினார்கள். இங்கே விடுதியிலே இருக்கும் அறைகளிலே எல்லாம் அவர்கள் நிரம்பி இருந்தார்கள். ஆனால் டில்லிக்கு அவர்கள் ஏன், போகவில்லை?



எதனாலே அவர்கள் போகவில்லை? இருக்கின்ற உறவுகள் அப்படி இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தினுடைய உரிமைகளை நிலைநாட்ட நம்முடைய உரிமைகளைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அரசியல் ரீதியாக நாம் நம் உரிமைகளைப் பயன்படுத்தினோமா என்று பார்க்க வேண்டும். அந்த உரிமைகளை நாம் முழுக்க முழுக்கப் பயன்படுத்தியிருக்க வேண்டும். நாடாளுமன்றம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, தேசிய வளர்ச்சி மன்றம் இருக்கிறது. இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் நம்முடைய குரலை ஒலிக்கச் செய்தோமா என்பதுதான் என் கேள்வி. நெல்லுக்கு விலை கேட்பது என்று மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம் பேசினார்கள். அதற்கு மாநிலங்களின் முதலமைச்சர் அவர்கள் எல்லாம் சேர்த்து வைத்து குரல் கொடுக்க வைத்தோமா? அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒருமித்த, ஏகோபித்த குரலைக் கொடுக்க முடிந்ததா? ஒரு முறை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கோபித்துக்கொள்வது, ஒரு முறை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கோபித்துக் கொள்வது. இன்னொரு முறை கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் கோபித்துக் கொள்வது, காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கோபித்துக்கொள்வது என்ற நிலைமைகள்தான் இருக்கின்றன. ஏன் ஒரு மனதாகக் கேட்கவில்லை? அதற்கான காரணத்தைப் பார்க்க வேண்டும். நான் யார் மீதும் பழி சொல்ல விரும்பவில்லை. அப்படிப்பட்ட நிலைமைகளை நாம் உணர வேண்டும். இன்றைக்கு இதைப்பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். நெல்லுக்கு விலை போதாது என்று சொல்கின்றோம். தெளிவாகக் கேட்கிறார்கள். எத்தனையோ மாநிலங்கள் சேர்ந்து குரல் கொடுத்ததன் விளைவாக மாநிலங்களின் சிபார்சுகளை ஏற்க முடியாது, கொடுக்க முடியாது என்று இருந்த நிலைமை மாறி, கேட்கப்பட்டதற்காக திட்டம் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். கொள்கையிலேயிருந்து இன்றைக்குக் கொஞ்சம் இறங்கி வந்திருப்பதைக் காண்கிறோம். அந்த மாதிரி வேண்டாம், மாநில அரசுகள், எந்த மாநிலத்திலாவது தேவையானால் உயர்த்திக் கொடுக்கலாம் என்று கொள்கை அளவிலே சொல்லும் நிலையில் இருக்கிறார்கள். ஆக இது குறித்து கொள்கை அளவிலே வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதைக் காண்கிறோம்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி எந்த மாநிலமாவது விரும்பினால், அதிகம் கொடுத்துக் கொள்ளலாம் என்ற கொள்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது என்று சொல்கிறார்கள். தமிழக அரசு அன்று ரூ. 104 என்று கொடுத்தது. அப்போது ரிசர்வ் வங்கியிலே கொடுக்கும் கிரிடிட்டைக் குறைப்போம் என்று சொன்னார்கள். அதைக்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிலே குறிப்பிட்டிருக்

கிறார்கள். அதிகமாகக் கொடுப்பதை மத்திய அரசு அங்கீகரிக்கவில்லை. அதன் காரணமாக ரிசர்வ் பாங்கியில் கிரிடிட் கொடுப்பதைக் குறைப்போம் என்று சொன்னதை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** வங்கியில் கண்ட்ரோல் செய்ததற்கான காரணத்தை அங்கத்தினர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவருடைய கருத்திலேயே அது தெளிவாகத் தெரிகிறது. நான் அதை மேலும் அதிகமான பிரச்சினையாக்க விரும்பவில்லை.

அடுத்து, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையிலே, சொல்கிறேன். நுகர்பொருள் வாணிபக் கழகம் பற்றி நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது மிகமிகத் தேவை என்று சொல்லிக் கொள்கிறேன். தமிழகத்திலே இன்றைக்கு உணவுப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் நிச்சயமாகக் கிடைக்கின்ற சூழ்நிலையை அது உண்டாக்கியிருக்கிறது. விலைவாசிகளை ஓரளவுக்காவது கட்டுப்படுத்துகின்ற அளவுக்கு இருக்கிறது. அப்படி கட்டுப்படுத்த முடிகிறது என்றால், அதற்குக் காரணம் இந்தக் கழகம் தான். அதிலே சில குறைகள் இருக்கலாம். ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதத்திலே விலை உயர்வதை நாம் அறிவோம் இன்றைக்கு அந்த நிலைமைகள் இல்லாமல் இருக்கின்றதே அதற்குக் காரணம என்ன? அந்த மாதத்திலே விற்கின்ற பொருள்களுக்கு விலை குறைவாக ஆகிறதா, அதிகமாக ஆகிறதா என்பது தெரியவில்லை. இதுபோன்று பொருள்களின் விலைகள் மாறிக்கொண்டிருக்கும். விலைகளை நிச்சயமாக நிலைப்படுத்தி வைத்துக்கொள்வதற்கு முடியாமல் வியாபாரிகள்கூட கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பார்கள். பொருள்களை விற்கமுடியாமல் இருந்துகொண்டிருப்பார்கள். அவர்கள் ஒரு நிச்சயமான, கட்டாயமான விலைக்கு பொருள்களின் விலைகள் மாறிக் கொண்டிருக்கும். விலைகளை நிச்ச மாற்ற ஒரு இலாகா உதவி செய்ய வேண்டும். அதுதான் இந்த சிவி சப்ளைஸ் கார்ப்பரேஷன். இந்தத் துறை தெளிவாகச் செயல்படுவதன் விளைவாக, இன்றைக்கு என்ன ஆயிற்று? மற்ற வியாபாரிகளைப் பொறுத்த வரையிலே, அவர்களுக்குப் போட்டியாக இந்த நிறுவனம் இருந்தால், அந்த அளவிலே குறைந்த விலைக்கு விற்றால், அவர்களுக்கு லாபம் போதாத என்ற நிலையில், அவர்கள் கலப்படத்தில் இறங்கி இருக்கிறார்கள். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் விலைகள் சில நேரங்களில் கூடுதலாக இருக்கலாம். குறைவாக இருக்கலாம். அது அல்ல பிரச்சினை. பொருள்கள் கிடைக்கிறதா இல்லையா என்பதல்ல. அதிலே சில குறைகள் இருக்கலாம். ஆனால் கலப்படம் உண்டு என்ற குறை வந்ததா? இன்றைக்கு எந்த இடத்திலே பார்த்தாலும், கிராமப்புறங்களிலே பார்த்தாலும், நகரங்களிலே பார்த்தாலும், வியாபாரத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற பெரும் முதலாளிகள் கலப்



படத்திலே ஈடுபடவில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் அந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையிலே அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்படுவதில்லை. இதையெல்லாம் நாம் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையிலே, இது ஒரு தெளிவான விஷயமாக இருக்கிறது. கலப்படம் என்பது இல்லை. இதிலே இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நான் இப்போது நமது பெருந்தலைவர் திரு. காமராசர் அவர்களாலே சொல்லப்பட்டதைச் சொல்கிறேன். சிக்கலான நேரத்திலே அவருடைய கருத்தை அறியும் வாய்ப்பினைப் பெற்றவன் நான். பொருள்களின் விலை ஏறுகிறதே, தடைபட்டு இருக்கிறதே, என்று அவரிடம் சொன்ன நேரத்தில் அவர் ஒன்றைச் சொன்னார் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது ஒருமுறை அப்படி தடைப்பட்டிருக்கிறது. அப்போது அவரிடம் வேகவேகமாகச் சென்று அதைப்பற்றிக் கூறியபோது, அவர் இதற்குக் காரணம் நாம்தான் என்று சொன்னார். அவர் தமிழகத்திலே நிரந்தரமாக ஒரு டிஸ்டிரிபியூஷன் மெஷினரியை நாம் வைக்கவில்லை என்று சொன்னார். கிராமப்புறங்களிலே அரசுத் தரப்பில் கடைகள் இல்லை என்று சொல்கிறேன். அப்போது இருந்த கடைகளில் பொருள்கள் கிடைக்காத சூழ்நிலைகள் இருந்தன. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அப்போது பற்றாக்குறையைத் தீர்த்து விட முயற்சி எடுத்திருக்கிறார்கள். பொருள்களை கடைகள் மூலமாகக் கொடுக்க முயற்சி செய்தார்கள். அதையே வெற்றியாகக் கொண்டாட ஊர் ஊராக விழா நடத்தினார்கள். அதனால்தான் தனியாக ஒரு டிஸ்ட்ரிபியூஷன் மெஷினரி என்பது நன்றாக இல்லாமல் போயிற்று. அதன் காரணமாக கிராமப்புறங்களிலே விலைகளை எல்லாம் அதிகப்படுத்தி பொருள்களை விற்றார்கள். அரசுத் துறையிலே இருந்தவர்கள் தலையிட்டார்கள். மற்ற இடங்களில் விலைகள் அதிகமாக இருந்தாலும், அப்போது அரசாங்கத்திற்குச் சொந்தமான கடைகளிலே நியாயமான விலைகளிலே பொருள்களை வாங்க முடியும் என்ற நிலைமை இருந்தது. அதன் பிறகு அநேகமாக கிராமப்புறங்களில் கூட்டுறவுத் துறையோடு இணைந்த கடைகளையும் சேர்த்துக்கொண்டார்கள். கிராமப்புறங்களிலே இந்தக் கடைகளை உருவாக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதையும் நான் பாராட்டுகிறேன். அதிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அப்படி எடுத்திருப்பதாலே நாம் அந்தக் கொள்கையிலே வெற்றிபெற்றிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடைமுறையில் கடைகளை நடத்திக்கொண்டிருக்கின்றவர்களுக்கு என்று சில திட்டங்களை வகுத்துக்கொடுக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. பெரிய அதிகாரிகள் அளவிலே நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால் படிப்படி

யாகக் கீழே போகின்றபோது அத்தனை பேர்களும் ஒழுங்காக நடக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அதற்கான கண்காணிப்பு முறையை நாம் வலுப்படுத்தியாக வேண்டும். இன்றைக்கு பல இடங்களிலே கள்ளச் சந்தை, பொதுமக்களை விலை ஏமாற்றுகின்ற நிலை, இவைகள் எல்லாம் அதிகமாக இருந்துகொண்டிருக்கின்றன. இந்தக் கடைகளுக்கு வருகின்ற பொருள்கள் தனியார் கடைகளுக்கு முதல் நாளே வந்துவிடுகின்றன. கூட்டுறவு பெடரேஷன் மார்க்கெட்டிங் சொசைட்டியிலிருந்து வரும். மொத்தமாக தாலுக்காக்களிலே இருக்கின்ற சொசைட்டிகளுக்கு வருகிறது. அப்படி வந்த பிறகு பொருள்கள் 2, 3 நாட்களுக்குப் பிறகு கடைகளுக்குப் போகும். பொருள்கள் வந்த சில நாட்களில் கிராமப்புறங்களுக்குச் செல்ல வேண்டும். அங்கு அந்தந்தக் கடைகளின் மூலமாக நியாயமான விலைக்கு விற்கப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலமாக விற்கப்பட வேண்டும். ஆனால் இதற்கும் முன்னதாகவே திண்டிவனம் கடை வீதிகளிலே அதிகமான விலைக்கு இந்தப் பொருள்களை விற்றுக்கொண்டிருக்கக்கூடிய நிலைமைகளை நான் பார்க்கிறேன். அந்தப் பொருள்களை வேறு இடங்களுக்குக் கொடுத்தாகிவிட்டது என்ற நிலைமைகள் இருக்கின்றன. நானே பார்த்த காரணத்தினாலேதான் நான் திண்டிவனம் என்று சொன்னது. அதனால்தான் சொல்கிறேன். இப்படித்தான் பல இடங்களில் இருக்க முடியும். ஆகவே ஒரு 'எபக்டிவ் சூப்பர்விஷன்' இருக்க வேண்டும். அதிகாரிகளே இன்றைக்கு அதை நடத்தலாம். அதை நம் அதிகாரிகளால் கண்காணிக்க முடியும். அதற்கு என்று ஒரு எபக்டிவ் மெஷினரி இருக்க வேண்டும். அதிகாரிகளே வியாபாரம் செய்ய வேண்டுமா என்று கேட்கிறார்கள். வடை சுடலாமா என்று கூட கேட்கலாம். அவசியம் என்றால் அதையும் செய்துதான் ஆகவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். நாட்டு மக்களின் நலனுக்காகச் செய்யவேண்டியது தேவை என்றுதான் சொல்லிக்கொள்கிறேன்.

அதைப் போலவே இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இது சிமெண்ட் விநியோகம் பற்றியது. சிமெண்டைப் பொறுத்தவரையில், நான் இந்த நேரத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இதிலேயும் பெரிய மோசடிகள் நடக்கின்றன என்று கருதுகிறேன். அதையும் என்னுடைய சொந்த அனுபவத்திலேயிருந்து சொல்கிறேன். அதுவும் திண்டிவனத்திலே கிடைத்த அனுபவம். ஒவ்வொரு நாளும் நடக்கிறது. தேவையானவர்கள் மனுப்போடுகிறார்கள், பெர்மிட் பெறுகிறார்கள். அந்த பெர்மிட்டைக் கொடுத்து கடையில் சிமெண்ட் கேட்டால், சிமெண்ட் கிடைக்கவில்லை. இதைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் தாசில்தார்களுக்கு இருக்கிறது. ஆனால் இன்றைய



தினம் அந்தக் கடைகளுக்குச் சென்று, பெர்மிட் வைத்துக்கொண்டு சிமெண்ட் கேட்டால், அங்கே கிடைப்பதில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகள் இருக்கின்றன. சில்லறைக் கடைகள் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையினுடைய கடைகள் இருக்கின்றன. மார்க்கெட்டிங் சொசைட்டி கடைகள் இருக்கின்றன. வேறு தனியார் கடைகளும் இருந்துகொண்டிருக்கின்றன. இதிலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், ஒருவர் 40 மூட்டை சிமெண்ட் வேண்டும் என்று பெர்மிட் கொடுத்துக் கேட்டால், 10 மூட்டைதான் இருக்கிறது, வாங்கிக்கொள்கிறீர்களா என்று கேட்கிறார்கள். பத்து மூட்டைகளை வாங்கியவுடன், அதற்குப் பிறகு

(பிற்பகல் 6-10)

மீதி முப்பது மூட்டைகளை எந்தக் காலத்திலும் அவர்களால் வாங்க முடியவில்லை. என்ன செய்கிறார்கள் என்றால், 10 மூட்டைகளை இவர்களுக்குக் கொடுத்துவிட்டு, கடைக்காரர்கள் மீதியை 40 ரூபாய் விலைக்கு வெளியில் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் 40 மூட்டைகளையும் பிறகு வாங்கிக்கொள்கிறோமென்று சொல்லிவிட்டு, தாசில்தாரிடம் மீண்டும் செல்கிறபோது, எப்போது சிமெண்ட் வருகிறதென்று எனக்குத் தெரியாது என்று அவர் சொல்லுகிறார். எனவே வாரத்திற்கு ஒரு முறை சென்று புதுப்பித்துக்கொள்ள வேண்டிய நிலையும், கேட்டால் சிமெண்ட் மூட்டை இப்போது வராது என்று சொல்கிற நிலையும், இதற்கிடையில் 40 ரூபாயில் கள்ளச் சந்தையில் யார் வேண்டுமானாலும் வாங்கும் நிலையும் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திட்டமிட்டு சதி நடந்து கொண்டிருக்கிறது. இதிலே எல்லோரும் கூட்டுச் சேர்ந்துகொண்டு செய்கிறார்கள். அரசுத் துறை இதில் பொறுப்பில்லாமல் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நானே தாசில்தாரிடம் போனேன். புதுப்பித்துத் தரக்கூட அவர் தயாராயில்லை. வேறு ஒரு கடையில் இருக்கிறது, அதற்கு பெர்மிட் தாருங்கள் என்றால், அதற்குத் தர அவர் தயாராக இல்லை. எப்போது வருமென்று கேட்டால், அதைச் சொல்லவும் தயாராக இல்லை. திண்டிவனத்தில் மாத்திரமல்ல, மாநிலத்தில் பல்வேறு ஊர்களில் இருக்கும் நிலைமை இது. இப்படிப்பட்ட நிலைமை அரசாங்கத்தின் நல்ல திட்டங்களை முறியடித்துவிடுகிறது.

இன்னொன்று பாமாலின் ஆயில். இது உணவுப் பொருளாகப் பயன்படுகிறது. இன்றையதினம் பெரிய அளவிலே இது விற்பனையாகிக்கொண்டிருக்கிறது. எனக்கு அதைப்பற்றி அதிகமாகத் தெரியாது. சமீபத்தில்

பத்திரிகைச் செய்தியின் மூலமாக அறிந்தேன். 2½ கோடி ரூபாய் அளவிற்குப் பதுக்கி வைத்திருந்தார்கள், அதைப் பிடித்துவிட்டார்கள் என்ற தகவல் பத்திரிகைகளில் வந்தது. உடனே தொடர்பான நடவடிக்கைகள் நடை பெறுகின்றன என்ற தகவல்களும் வந்தன. அதற்குப் பிறகு முதலமைச்சர. வர்கள் மதுரையில் பேசியதாகக் கவனம், அவர், ரூ. 2½ கோடி அளவிற்கு பாமாலின் ஆயில் பதுக்கி வைத்திருந்தார்கள், ஆனால் அது சாப்பிடக்கூடிய எண்ணெய் அல்ல, அதற்குத் தகுதியானதல்ல என்ற தகவலைக் கொடுத் திருக்கிறார். இப்போது 4, 5 நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் பார்த் தேன். இன்னும் யாரோ ஒருவர் 10, 15 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பாமாலின் ஆயிலைப் பதுக்கி வைத்திருந்தார் என்று செய்தி பார்த்தேன். இந்த எண்ணெய் உணவுக்குப் பயன்படுவதாக இருந்தால் எப்படி அதைப் பதுக்கி வைத்தார்? உணவிற்குப் பயன்படாது என்றால், அந்த எண்ணெயை எதற்காக வைத்திருக்கிறார்கள்? கலப்படத்திற்காகத்தான் வைத்திருக்கிறார்கள். அப்போது அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுத் திருக்கிறோம்? எது எதற்கோ நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கி றோம். காமராவைத் தயாராக வைத்துக்கொண்டு, போட்டோ எடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம். விஷத்தைத் துளித் துளியாக ஏற்றிச் சாகடிப்பதுபோல, பணம் படைத்த முதலாளிகள் செய்யும் மோசடியை அரசு பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டாமா? அவர்களைப் பிடித்துவிட்டோம் என்றால், அந்த தொடர்பான தகவல்கள் பத்திரிகையில் வர வேண்டாமா? அது ஏன் மறைக்கப்படுகிறது? பொது மக்களுக்குத் தெரிய வேண்டிய விவரங்கள் அல்லவா? அவற்றை வெளியிடுவதால் மற்ற வியாபாரிகள் அடங்க மாட்டார்களா? இதையும் அரசு எண்ணிப் பார்க்க வேண்டும்.

உணவு விடுதிகளைப் பொறுத்தவரையில், நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. ப்ளோட்டிங் பாபுலேஷன் (floating population) எங்கே அதிகமாக இருக்கிறதோ, அங்கே வசதிகளைச் செய்ய வேண்டும். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து சென்னைக்கு நிறைய பேர்கள் வரு கிறார்கள். நிரந்தரமாக எவ்வளவு பேர்கள் சென்னையில் இருக்கிறார்களோ, ஏறத்தாழ அதே அளவிற்கு அல்லது அதைவிட அதிகமாக சென்னைக்கு வந்து போகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கிடையாது. அவர்கள் ஓட்டல்களில்தான் சாப்பிட வேண்டும். அவர்கள் வசதி படைத்த வர்களாகவோ, வசதியில்லாதவர்களாகவோ இருக்கலாம். சென்னைக்கு வரும்போது, வேளைக்குப் பத்து ரூபாய் கொடுத்து சாப்பிட வேண்டுமென்ற நிலை ஏற்படும்போது, அது எல்லோராலும் முடியாது. அதற்கு மாற்று வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். விலையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால், விலையைக் குறைக்கமாட்டோமென்று சொல்லுகிறார்கள். ஸ்டிரைக் செய்வோமென்று சொல்லுகிறார்கள். ஒரு ரூபாய்க்கு சாப்பாடு போடவேண்டுமென்று இப்போதிருக்கும் நிலைமையில் சொல்ல முடியாது. 1½ அல்லது 2 ரூபாய் அளவில் அல்லது எந்த விலைக்குக் கட்டுப்படி யாகிறதோ அந்த விலையில் சாப்பாடு கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். ஓட்டல்களில் இதைச் செய்ய முடியாது என்று திட்டவட்டமாக மறுப்பார்களேயானால், அந்த ஓட்டல்களை நடத்துகிறவர்கள் அதிக விலைக்கு விற்கின்ற அதே நேரத்தில் அவர்கள் அரசாங்கத்திடமிருந்து பல் வேறு சலுகைகள் பெறுவதைத் தடுக்க வேண்டும். சர்க்கரைக்கும், பருப் புக்கும் எதற்காக அவர்கள் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டுக்கு வர வேண்டும்? எங்கேயாவது வாங்கிக்கொள்ளட்டும். அதிக விலையில் சாப்பிடு கிறவர்களுக்குக் கொடுக்கட்டும். இந்த முறையில் அரசு செயல்பட வேண்டு மென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு சென்னை நகரத்திலும் சரி, தமிழகத்திலுள்ள பல்வேறு பெரிய நகரங்களிலும் சரி, ஒரு சங்கடமான நிலைமை இருந்துகொண்டிருக் கிறது. விலைவாசி உயர்வால் எல்லாப் பொருள்களும் அதிக விலை விற் கிறது. அரிசி ஓரளவிற்கு விற்கிறது என்றாலும், விறகிலிருந்து, காய்கறி யிலிருந்து அத்தனை பொருள்களிலும் இன்றைக்கு விலையேற்றம் அதிக மாகி, மிகச் சாதாரண மக்களையும், ஏழைகளையும் பாதித்திருக்கிறதென் பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசாங்கம் காய்கறி வியாபாரம் செய்வது பயனுள்ளதாக இராது என்ற கடந்த கால அனுபவத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், சில நேரங்களில் சில சங்கடங்களைப் போக்க, சில ஆயிரம் ரூபாய்கள் நஷ்டமானாலும் சரி, அதில் மாற்றங்களைச் செய்ய வேண்டும். இன்றைக்கு, கிலோ ஒன்றுக்கு மூன்று ரூபாய் கொடுக்காமல், எந்தக் காய்கறியும் வாங்க முடியாது. அந்த நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு மாற்று ஏற்பாட்டை உடனடி யாகச் செய்தாக வேண்டும். இன்றைக்கு எரிவாயு (கேஸ்) கிடைக்கவில்லை. கெரசின் வழங்க அரசு மாற்று ஏற்பாடுகளைச் செய்தும், தட்டுப்பாடும், பற்றாக்குறையும் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. வெளியே கொஞ்சம் அதிக விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதிக விலைக்கு விற்று, அதோடு அளவில் குறைத்துக் கொடுக்கும் நிலைமை இருக்கிறது. விறகு வாங்காமல் சென்னையில் இருக்கும் பெண்கள் குடும்பத்தை நடத்த முடியாமல் திண்டாடுகிறார்கள். இன்றைக்கு விறகின் விலை என்ன

என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இன்னமும் அந்த விளை நிலத்திற்கு எக்ஸ்சம்ஷன் கொடுத்திருக்கிறார்கள். அவ்வளவு விலை விறகு விற்றுக் கொண்டிருக்கிறது. அதன் விலையைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் நடுத்தர மக்களின் சங்கடங்களைக் குறைக்க முடியும்.

சென்னை நகரில் இன்னொரு நிலைமை இருக்கிறது. அமைச்சரவர்கள் திடீரென்று சோதனை செய்தால், அதைப் பார்க்க முடியும். ரேஷன் கார்டுகள் கொடுக்கும் ஜோனல் (Zonal) அலுவலகங்களில் பெட்டிஷன் ரைட்டர்கள் (Petition Writers) நிரந்தரமாக உட்கார்ந்து விட்டார்கள். காரணம் அந்த அளவிற்குக் கேட்பவர்கள் அதிகமாகவும், மனுக்கள் கொடுத்த பிறகு, அவர்களுக்குக் கார்டுகள் கொடுக்கக் கால தாமதமும் ஆகிறதென்பதுதான். எனவே அரசாங்கத்தின் அங்கீகாரமில்லாமலேயே வியாபாரம் நடக்கிறது. இது போன்ற சில்லரை விஷயங்களைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவற்றோடு இந்த ஆண்டுக்கான உணவு மற்றும் நுகர் பொருள் வழங்கு துறையின் கொள்கை விளக்கக் குறிப்பைப் பொறுத்த வரையிலும், ஒரு நல்ல சூழ்நிலை இருந்து கொண்டிருப்பதை முழுமையாக நாட்டு மக்களுக்கு, தமிழகத்து மக்களுக்குப் பயன்படும் வகையிலே செய்துகொண்டிருக்கிற ஏற்பாடுகள், கடைசிவரையிலும் சென்று, கடைசியாக வாங்கிச் சாப்பிடுபவர்கள் அந்தப் பலனை அடையத்தக்க முறையில் ஏற்பாடுகளை முழுமையாகச் செய்ய வேண்டுமென்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 6-20)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவரவர்களே, உணவு நிலைமை விளக்கம் குறித்து இந்த மன்றத்திலேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய அரிய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். இப்போதுள்ள உணவு நிலைமையை மேலும் மேம்படுத்துவதற்குப் பயன்படுகின்ற கருத்துககளையும், இப்போதுள்ள குறைபாடுகளை



நீக்குவதற்கான கருத்துக்களையும் சொன்னார்கள். எனக்கும் சரி, இந்தத் துறைக்கும் சரி, இந்த கருத்துக்கள் எல்லாம் பேருதவியாக இருக்கும் என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உணவு நிலைமையைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலம் மிக திருப்திகரமான நிலையில் இருக்கிறது என்பது விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. இதைப் பாராட்டி வரவேற்று பல உறுப்பினர்கள் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்திருப்பது எனக்கு மன நிறைவைத் தருகின்றது. ஆகவே உணவு நிலைமையைப் பொறுத்தவரையிலும், நாம் அச்சப்பட தேவையில்லாத அளவுக்கு திருப்திகரமாக இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நமக்கு உணவு நிலைமை மிக மிக முக்கியமானது என்பதை இங்கே பல்வேறு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இப்போதுள்ள சூழ்நிலையில் அரிசி போதுமான அளவுக்கு மேல் நமக்குக் கிடைத்து வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் உபரியாகவும் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. வெளி நாட்டுக்குக் கூட ஏற்றுமதி செய்து அதன் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டுகின்ற அளவுக்கு திருப்திகரமாக இருக்கிறது. பொது விநியோக முறையின் கீழ் வழங்குவதற்காக அரிசியை நாம் கணிசமான அளவுக்கு கையிருப்பில் வைத்திருக்கிறோம் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறோம். மேலும் பொதுமக்களுக்கும் மற்றவர்களுக்கும் அடிக்கடி தொல்லை கொடுத்து வந்திருக்கக்கூடிய கட்டாயக் கொள்முதல் முறையும் இப்போது இல்லை. வணிகர்கள் மீதோ, அரிசி ஆலைகள் மீதோ லெவி முறை எதும் இப்போது இல்லை. நெல், அரிசி நடமாட்ட தடையும் இல்லை. இவைகள் எல்லாம் இப்போது உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டுகளாகும். இன்றியமையாத உணவுப் பொருள்களை பலரும் பெறுவதற்காக நியாய விலைக் கடைகள் மூலம் கொடுப்பதன் மூலம் அடித்தளத்து மக்கள் கஷ்டப்படாத அளவுக்கு மிக மிகப் பயன்படுகின்ற அளவுக்கு அது அமைந்திருக்கிறது. உணவு நிலைமைகள் ஓரளவுக்கு உயர்ந்து வந்திருப்பதற்கு மாநில அரசும் மத்திய அரசும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மட்டும் காரணமல்ல. வேளாண்மைத் துறை செய்திருக்கக் கூடிய முயற்சிகளும், பொறுக்கு விதைகளும், ஒவ்வொரு துறையிலும் கண்டுபிடிக்கப்பட்ட புதிய புதிய முறைகளும், விவசாயிகளுடைய ஒத்துழைப்பும் தான் அடிப்படைக் காரணங்கள் என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். அரிசியை மட்டும் கணக்கிடும்போது, 1975-76 ஆம் ஆண்டில் 58,67,000 டன்களாக இருந்த உற்பத்தி 1979-80 ஆம் ஆண்டு 62,29,000 டன்களாக உயர்ந்திருக்கிறது. இன்னும் கம்பு, சோளம், கேப்பை, அரிசி போன்ற எல்லாவற்றையும் சேர்த்து நாம் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால், 77 லட்சம் டன்களாக

இருந்தது இப்போது 81,04,000 டன்களாக அதிகரித்திருக்கிறது. 81 லட்சம் டன்களாக உயர்ந்திருப்பது உள்ளபடியே நாம் உணவு உற்பத்தியைப் பொறுத்தவரை வளர்ந்துகொண்டிருக்கிறோம் என்பதற்கான ஒரு நல்ல அறிகுறி.

அடுத்து, விலைவாசிகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். பொதுவாக உணவுப் பொருள்களின் விலையைப் பொறுத்தவரை மே திங்களிலிருந்து அக்டோபர் திங்கள் வரை விலைகள் ஏறியிருக்கும். தொடர்ந்து பல ஆண்டுகள் அதற்கான பட்டியலை நாம் பார்த்தால், இதைக் கண்டறியலாம். அப்படிப் பார்க்கும்போது, இந்தக் காலம் அதாவது ஜூலை மாதம் புதிதாக விவசாயம் செய்கின்ற காலமோ, அறுவடை செய்கின்ற காலமோ அல்லது சந்தைகளுக்குப் புதிய சரக்குகள் பரவலாக வருகின்ற காலமோ அல்ல. இத்தகைய காலங்களில் இயற்கையாக விலைகள் ஏறுகின்ற நிலைமைகள் தான் இருக்கும். சாதாரணமாக எண்ணெய் போன்றவைகளை எடுத்துக் கொண்டால், நாம் பிற மாநிலங்களை நம்பித்தான் இருக்கிறோம். பருப்பைப் பொறுத்தவரை, வட மாநிலங்களிலிருந்து வருவதை நாம் நம்பியிருக்கிறோம். பருப்பு உற்பத்தி செய்யப்படுகின்ற வட மாநிலங்களிலே இப்போது உற்பத்தி குறைவு. ஆதலால் அங்கே விலை ஏறியிருக்கிறது. இங்கே வருகின்றபோது அதன் காரணமாக இங்கேயும் விலை ஏறியிருக்கிறது. நல்லெண்ணெயைப் பொறுத்தவரை, ஆந்திராவிலிருந்து நமக்கு வர வேண்டிய நிலை இருக்கிறது. இது உற்பத்தியாகிற இடத்தில் விலை ஏறியிருக்கிறது. அதன் காரணமாக இங்கேயும் விலை ஏற வேண்டிய நிலை இருக்கிறது. தேங்காய் எண்ணெயைப் பொறுத்தவரை, கேரளாவிலிருந்து வருகிறது. அங்கேயும் அதன் விலை ஏறியிருக்கிறது, அதன் காரணமாக இங்கேயும் விலை ஏறியிருக்கிறது. வெளி மாநிலங்களில் எந்த விலைக்கு விற்றாலும், நாம் அதைக் கட்டாயம் வாங்க வேண்டிய நிலை இருப்பதால், எவ்வளவுதான் நாம் விலையைக் கட்டுப்படுத்தினாலும், ஓரளவுக்குத் தான் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிகிறது. பொதுவாகவே விலைகள் ஏறுவதற்கான சாத்தியக் கூறுகள் பெரும்பகுதியும் மத்திய அரசின் பக்கம் தான் இருக்கின்றன, அது தான் உண்மை என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன். மத்திய அரசைக் குற்றம் சாட்ட வேண்டுமென்ற அவசியம் எங்களுக்கு இல்லை. நம்மிடம் பணம் இல்லை, அவர்களிடம் இருக்கிறது என்பதற்காகவும் அல்ல. ஆனால் விலைகள் ஏறுவதற்கான சாத்தியக் கூறுகள் அங்கே தான் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. நாம் விலைவாசியை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தினாலும் அல்லது கட்டுப்படுத்துவதற்குரிய தீவிர முயற்சிகளை எடுத்துக்கொண்டாலும் கூட, விலைவாசிகள் ஏறுகின்ற சூழ்நிலையெல்லாம் அவர்களிடம் தான் இருக்கிறது. இதை நாங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே மிகத் தெளிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறோம். பொதுவாக நிதிக் கொள்கையை வகுக்கின்ற அதிகாரம் மத்திய அரசிடம் தான் இருக்கிறது. அவர்களைப் பின்பற்றித் தான் மாநிலங்கள் இருக்க வேண்டும். பணப் புழக்கத்தைப் பொறுத்தவரையிலும், இன்றையதினம் அந்த அதிகாரம் கூட அவர்கள் கையில் தான் இருக்கிறது. அதை எவ்வளவுக்கு எவ்வளவு விரைவுபடுத்துகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு விலைவாசிகள் உயரும். பொருளாதார அடிப்படையில் விலைவாசி அப்போது உயரும். வங்கிகளைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் வங்கிகள் எவ்வளவு கடன் தரலாம் என்பது போன்ற அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசிடமும் ரிசர்வு வங்கியிடமும் தான் இருக்கின்றன. பெரிய பெரிய முதலாளிகள் இன்னும் மற்றவர்கள் எல்லாம் குறிப்பிட்ட வங்கிகளிலிருந்து கடன் பெற்று சரக்குகளை வாங்கி கிடங்குகளில் அடைத்து விடுகிறார்கள். தட்டுப்பாடு வரும்போது அதிகமான விலையைப் பெற்றுக்கொண்டு விநியோகித்து அதிகமான லாபத்தைச் சம்பாதிக்கிறார்கள். வங்கிகள் கடன் கொடுத்து, அதை முதலாளிகள் பெற்று, விலை குறைவாக இருக்கும்போது உணவுப் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கி கிடங்குகளில் சேமித்து வைத்து, அதன் பிறகு தட்டுப்பாடு வரும்போது, அவற்றை அதிக விலைக்கு விற்று பெரும் லாபம் சம்பாதிப்பதற்கு வங்கிகள் இடம் தருகின்றபோது, இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் வருகின்றன. முதலாளிகள் அதிகமான சரக்குகளை வாங்கி பதுக்கி விற்பதற்கு இடம் தராத அளவுக்கு வங்கிகள் அவர்களுக்குக் கடன் தராத வகையில் கொள்கை வகுத்து மத்திய அரசும் ரிசர்வு வங்கியும் கட்டுப்படுத்தாத வரை விலை ஏறத்தான் செய்யும். அது போல் இறக்குமதி ஏற்றுமதி செய்கின்ற நிலை வருகின்றபோது கூட, இப்படிப்பட்ட தன்மைகள் இருந்துகொண்டுதான் இருக்கும். மத்திய அரசும் ரிசர்வ் வங்கியும் தான் இவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும். பல்வேறு மாநிலங்களிலும் இதே நடைமுறை இருக்கும்வரை, இப்படிப்பட்ட விலைவாசிகள் உயர்கின்ற நிலை இருக்கத்தான் செய்யும். விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக விலைகள் ஏறும் நேரத்தில் அந்தப் பொருள்களை அரசே கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகித்தால், விலைகள் இறங்கும். பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலைகள் ஏற்றப்பட்டதன் மூலம் பாக்கி அத்தனை சாமான்களின் விலையும் உயரும். விலைவாசிகள் ஏறாமல் தவிர்ப்பதற்கு நாம் என்னென்ன நடவடிக்கைகள், முயற்சிகள் எடுத்தாலும், நம்முடைய எக்கனாமிக்ஸ் குறுக்கே இருந்து

கொண்டிருக்கிறது. சில பொருளாதாரப் பிரச்சினைகள் தவிர்க்கக் கூடியனவாக இருக்கும், சில பொருளாதாரப் பிரச்சினைகள் தவிர்க்க முடியாதவையாக இருக்கும். ஆனால் மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு, வரம்புக்கு உட்பட்டு எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு அனைத்து முயற்சிகளையும் எடுத்து விலைவாசியைக் கட்டுப்படுத்த இந்த அரசு முயற்சி செய்து வருகிறது. அரிசியைப் பொறுத்தவரை, எல்லோருக்கும் குறைந்த விலைக்குக் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் நாம் நியாய விலைக் கடைகள் மூலமாகக் கொடுத்து வருகிறோம். அது போல் அரிசியைத் தவிர மற்ற எல்லாவற்றையும் நாம் எல்லோருக்கும் நியாய விலையில் கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் நியாய விலைக் கடைகள் மூலமாகக் கொடுக்கிறோம். அவ்வாறு நியாய விலைக் கடைகள் மூலமாக அரசு கொடுப்பதால், தனியார்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். இப்படிச் செய்ய வேண்டியது அவசியம்தானா? இதன் மூலம் தனியார்கள் வேலை வாய்ப்பை இழந்துவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இப்போது நாம் ஆரம்பித்திருப்பது அடித்தளத்து ஏழை மக்களின் நன்மைக்காக. குடும்பக் கார்டு வைத்திருப்பவர்களுக்கெல்லாம் நியாய விலையில் எல்லாப் பொருள்களுக்கும் வழங்குகின்ற நிலை வர வேண்டுமென்பதற்காகத்தான் 17 ஆயிரம் நியாய விலைக் கடைகள் என்கின்ற திட்டத்தினை வகுத்திருக்கிறோம். இதனால் மற்ற கடைகள் எல்லாம் பாதிக்கப்பட்டன என்பதற்கான ஆதாரமோ, தனியாருடைய வேலை வாய்ப்புகள் பாதிக்கப்பட்டன என்பதற்கான ஆதாரமோ கிடையாது. எந்தச் சூழ்நிலையிலும் எந்த ஒரு குறைபாடும் அவர்களிடமிருந்து வரவும் இல்லை. இந்த 17 ஆயிரம் நியாய விலைக் கடைகளில் கிட்டத்தட்ட 15 ஆயிரம் நியாய விலைக் கடைகளை கிராமங்களில் வைத்திருக்கிறோம். அதை வைத்து நடத்துவதிலே, தமிழ்நாடு நுகர்பொருள்

(பிற்பகல் 6-30)

வாணிபக் கழகத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறதே தவிர லாபம் இல்லை. நஷ்டத்தையும் தாங்கிக் கொண்டு இதை நடத்துவதற்குக் காரணம், சாதாரண மக்களுக்கு மிகவும் இன்றியமையாத பொருள்கள் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்ற நோக்கம்தான். தனி நபர்களுடைய தன்மைகளை, அழிக்க வேண்டுமென்றோ, அவர்களுக்குக் கிடைக்கும் நன்மையை எடுத்துவிட வேண்டுமென்றோ எண்ணி எல்லாச் சரக்குகளையும் இந்தக் கடைகளின் மூலம் கொடுக்க வேண்டும் என்று காரியங்கள் ஆற்றவில்லை. நாளுக்குநாள் இன்றியமையாத



பண்டங்கள் வளர வளர, அரிசி, கோதுமை, ரவை, குழந்தைகளுக்குத் தேவைப்படும் பால் வகைகள் இப்படியெல்லாம் ஒவ்வொன்றாகச் சேர்த்து, அதற்குப் பிறகு சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய மற்ற பொருள்களை எடுத்துக்கொண்டால்கூட, விலை ஏறும்போது அவற்றையும் வாங்கி இந்தக் கடைகள் மூலம் வழங்குகிறோம். உதாரணமாக, எண்ணெய் விலை ஏறுகிறது என்று சொன்னால், ஒரு கிலோ 18 ரூபாய், 20 ரூபாய் என்று ஏறும்போது, பாமாலின் எண்ணெய் விலை குறைவாக இருப்பதால், இது ஏழைகளுக்குப் பயன்படும் என்று இதை வாங்கி வைத்து, இந்த எண்ணெயை ஏழைகளுக்குக் குறைந்த விலையில் கொடுக்கும் நிலை ஏற்பட்டது. இப்படியே மாட்டுத் தீவனம் கிடைக்காத நிலைமை ஏற்பட்டபோது, உமி, தவிடு போன்றவைகளை இந்தக் கடைகள் மூலம் கொடுக்கிறோம். ஆகவே, இவை எல்லாவற்றையும் இந்தக் கடைகள் மூலம் கொடுத்து, மற்ற வணிகப் பெருமக்களுடைய வணிகத்தைக் குறைக்க வேண்டும் என்ற நிலைமை இல்லை. சாதாரண மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்ற நிலைமையிலேதான் பல்வேறு பொருட்களை வைத்து தேவைப்பட்ட இடங்களில் கொடுக்கிறோம். மொத்தமாக நாம் வாங்கும்போது விலை குறைவாக இருக்கிறது. அவற்றை விநியோகிக்கும்போதும் குறைந்த விலையிலேயே விநியோகிக்கிறோம். ஆகவே, இப்படிச் செய்வது வணிகப் பெருமக்களைப் பாதிக்கும் நிலையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஏற்கெனவே பொது விநியோகத்தின் மூலம் நாமே அரிசி விநியோகம் செய்ய வேண்டிய நிலைமை மாறி, ஓரளவு வெளிச் சந்தையில் வாங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது, உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. 1976-ல் பொது விநியோக முறையில் 623,328 டன் அரிசி கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன்பிறகு, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக பொருட்கள் விநியோகிக்கின்ற நிலைமை நாளுக்கு நாள் குறைந்து இப்போது 1979-லே 148,994 டன்கள் என்ற அளவுக்குத்தான் நாம் விநியோகிக்க வேண்டிய நிலைமைக்கு வருகிறோம் என்று சொன்னால், இதற்குப் பொருள் இப்போது கடைகளிலே மக்கள் வாங்கி திருப்தியடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது, அரசின் கொள்கையைப் பொறுத்தவரையில், நாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அரிசியைப் பொறுத்தவரையில், நாம் சப்சிடி கொடுக்கவேண்டிய நிலைமைக்கும் ஆளாகியிருக்கிறோம். நெல் கொள்முதலைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் குறிப்பிட்டார்கள். முன்பு கொள்முதல் விலை குவின்டால் ஒன்றுக்கு 85 ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயித்திருந்தது. அந்த விலை கட்டுப்படியாகாது என்று சொல்லி நாம் 20 ரூபாய் கூடுதலாகக் கொடுத்தோம். சாதாரண நெல்லுக்கு 95 ரூபாயும், சன்னரக நெல்லுக்கு 109 ரூபாயும்

கொடுத்தோம். அதற்குப் பிறகு மத்திய அரசு 85 ரூபாய் என்று இருந்ததை 95 ரூபாய் என்று ஆக்கிற்று. அப்போது நாம் 105 ரூபாய் விலை கொடுத்து கொள்முதல் செய்ய வேண்டிய நிலைமை இருந்தது. இப்போது மத்திய அரசினர்கூட பச்சைக் கொடி காட்டியிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அவர்கள் ஐந்து ரூபாய்க்குத்தான் பச்சைக்கொடி காட்டியிருக்கிறார்கள். மத்திய அரசு 95 ரூபாய் என்று இருப்பதை 100 ரூபாய் என்று உயர்த்தலாம் என்று சிபாரிசு செய்திருக்கிறது. இப்போது இருக்கும் சூழ்நிலைப்படி பார்க்கும்போது, இங்கே இருக்கிற பொருளாதார வல்லுநர்களும், மற்றவர்களும் கணக்கெடுத்து, குவிண்டால் ஒன்றுக்கு 124 ரூபாயாவது மிகக் குறைந்த அளவு கொடுக்க வேண்டும், அப்படி 124 ரூபாயாவது கொடுத்தால்தான், அடக்க விலை ஆகும் என்றும் கூறியிருக்கிறார்கள். ஆகவேதான் இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தி எப்படியும் 130 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறது. அதற்காக, 170 ரூபாய், 200 ரூபாய், 250 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அது நடைமுறைக்கு உகந்ததல்ல. எவ்வளவு தூரம் நெல்லின் விலை ஏறுகிறதோ அதைப் பொறுத்து மற்ற பொருட்களின் விலையும் ஏறும். இட்டிலி, தோசை, வடை போன்றவைகளின் விலைகளும் ஏறும். ஆக, எல்லா வற்றையும் மனதிலே வைத்துக்கொண்டு நியாயத்தின் அடிப்படையில் பார்த்தால், இதுதான் நியாயம் என்று சொல்லி, 130 ரூபாய் கொள்முதல் விலை வைக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 95 ரூபாய் என்று நிர்ணயித்தபோது, கோதுமைக்கு 117 ரூபாய் கொடுத்தார்கள். கோதுமைக்கு எவ்வளவு செலவாகிறதோ, கிட்டத்தட்ட அதே செலவு நெல்லுக்கும் வருகிறது என்று சொன்னார்கள். ஆகவேதான், நீண்டகாலமாகவே அரிசிக்கும், கோதுமைக்கும் வேறுபாடு காட்டி விலை நிர்ணயம் செய்யும் போக்கு மாற வேண்டும் என்று எல்லோரும் சொல்கிறோம். இதை வற்புறுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி கூட சொன்னார்கள். இந்தப் பிரச்சினையிலே நாம் எல்லோரும் ஒன்றாக இருக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. யாரும், இதிலே கருத்து வேறுபாடு கொள்ளவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களில் அரிசியைப் பயன்படுத்தும் அத்தனை உறுப்பினர்களும் இந்தக் கருத்தை வற்புறுத்துகிறார்கள். மாநில முதலமைச்சர்கள் மாநாட்டிலேகூட, கொள்முதல் விலையை நிர்ணயிக்கும் போது, நெல் உற்பத்தி செய்யும் மாநிலங்களைச் சார்ந்த முதலமைச்சர்கள் அத்தனை பேரும், அது காங்கிரஸ ஆட்சி செய்யும் மாநிலமாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி செய்யும் மாநிலமாக இருந்தாலும் சரி, அண்ணா தி.மு.க. ஆட்சி செய்யும் மாநிலமாக இருந்தாலும் சரி, நெல்லுக்காகக் கொடுக்கப்



படும் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று மிகக் கடுமையாக வாதாடியிருக்கிறார்கள். மத்திய அரசின் கொள்கை அப்படி இருக்கிறது. அவர்கள் குறிப்பிட்டு இப்படித்தான் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த நிலைமை இருப்பதால்தான், நாம் திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறோம். இப்போது மீண்டும் கொள்முதல் விலையை நிர்ணயிக்க விரைவில் மத்திய அரசு கூட்டம் கூட்ட இருக்கிறது. அந்தக் கூட்டத்திலேயும் இந்தக் கருத்தை வற்புறுத்த இருக்கிறோம். "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அந்தக் கொள்கையில் யாருக்கும் வேறுபாடு கிடையாது. நாங்களும் உறவுக்குக் கை கொடுப்போம். அந்தக் கருத்திலே மாறுபாடு இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள், உறவுக்குக் கையும், உரிமைக்குக் குரலும் கொடுத்தார்கள். எங்களுக்கு நீங்கள் கொஞ்சம் கை கொடுங்கள், நாம் சேர்ந்து குரல் கொடுப்போம் என்றுதான் நாங்களும் கேட்டுக் கொள்கிறோம். நாம் எதெதில் உரிமைக்குச் சேர்ந்து குரல் கொடுக்க வேண்டுமோ அதில் சேர்ந்து கொடுப்போம். மத்திய அரசு என்பதும் தனியான ஒரு அமைப்புதான். மத்திய அரசுக்கு என்று தனியாக மக்களும், மாநில அரசுக்கு என்று தனியாக மக்களும் இல்லை. மத்திய அரசை அமைக்கும் மக்கள்தான் மாநில அரசையும் அமைக்கிறார்கள். அது ஒரு அமைப்பே தவிர வேறல்ல. ஆகவே, அது வேறு, இது வேறு அல்ல. ஆகவே, அமைப்பிலே இருக்கிற சிலபல குறைகள் மாற வேண்டும். நாமே ஏற்படுத்துகிறோம். நாமே அதை மாற்றலாம் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் வற்புறுத்தி வருகிறோம். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அடக்க விலை சன்ன ரக அரிசியை எடுத்துக்கொண்டால், குவிண்டால் ஒன்றுக்கு 228 ரூபாய் ஆகிறது. சாதாரண ரகம் 220 ரூபாய் ஆகிறது. சன்ன ரகம் 1 கிலோ 2 ரூபாய் 28 காசுக்கு விற்க வேண்டும். சாதாரண ரகம் ஒரு கிலோ 2.20 ரூபாய்க்கு விற்க வேண்டும். இப்போது பொது விநியோகம் மூலம் என்ன விலைக்கு விற்பனை செய்கிறோம் என்றால், சன்ன ரகம் ஒரு கிலோ ரூபாய் 1.85-க்கும் சாதாரண ரகம் ஒரு கிலோ ரூபாய் 1.60-க்கும் விற்பனை செய்கிறோம். உண்மையிலேயே விலை குறைத்துக் கொடுக்கிறோம். இப்போது இருக்கிற நிலைமைப்படி விலை கூட்டிக் கொடுத்தால், சாதாரண மக்களால் தாக்குப் பிடிக்க முடியாது என்று சொல்லி, பழைய விலையிலேயே அவர்களுக்குக் கொடுக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள்கூட, ஒரு குவிண்டால் சன்ன ரகம் அரிசி விற்பனையில் 43 ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்றும் சாதாரண ரகத்தில் 60 ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்றும் சொன்னார்கள். ஒரு லட்சம் டன் அரிசியை நாம் விநி

யோசித்தால், நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 5 கோடி 32 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இப்போது ஓராண்டில் ஏறக்குறைய இவ்வளவுதான் விநியோகிக்கிறோம். ஆனால், 5 லட்சம் டன்கள், 6 லட்சம் டன்கள் அரிசி விநியோகிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அப்போது நிலைமை என்ன வாகும் என்று அவர்கள் கேட்டார்கள். அது யோசிக்க வேண்டிய விஷயம் தான். அப்போது இதே நிலைமைதான் நீடிக்க வேண்டும் என்பது இல்லை. வேறு சில சூழ்நிலைகள் சேர்ந்து இப்போது மக்களை வாட்டிக்கொண்டிருக் கிறது என்ற காரணத்தால்தான், இப்படியே விலையை ஏற்றாமல் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஐந்து லட்சம், 6 லட்சம் டன்கள் விநியோகிக்க வேண்டிய நிலைமை வரும்போது, நிச்சயமாக விலையை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும்.

(பிற்பகல் 6.40)

மாண்புமிகு உறுப்பினர் திரு. நிலநாராயணன் அவர்கள் பேசும்போது, வேலைக்கான உணவுத் திட்டத்தில் இதுவரை 55,636 டன் அரிசி செலவழிக்கப் பட்டிருப்பதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும், இங்கு உணவு பற்றிய கொள்கைக் குறிப்பில் அது 73,000 டன் என்று சொல்லப் பட்டிருக்கிறது என்றும் சுட்டிக்காட்டி இதில் எது சரி என்று கேட்டார்கள். நிதிநிலை அறிக்கையின் பக்கம் 36-ல் வேலைக்கான உணவுத் திட்டத்தின்கீழ் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், 30—3—1980 வரை 55,636 டன் பயன்படுத்தப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் உணவு மானியக் கோரிக்கையில் அந்தத் திட்டத்திற்காக 73,000 டன் அரிசி ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதோடு வேலைக்கு உணவு போன்ற பல்வேறு திட்டங்களுக்கு வழங்கப் பட்ட அரிசி போக இப்போது தமிழக அரசு தன் கையில் எவ்வளவு டன் அரிசியை வைத்துக் கொண்டிருக்கிறது என்றும் கேட்டார்கள். இந்தத் திட்டங்களுக்கெல்லாம் செலவழித்ததுபோக இன்னும் ஒரு ஆறு மாதத் தேவையை நிறைவு செய்கிற அளவுக்குக் கணிசமாகக் கையிருப்பில் வைத்திருக்கிறோம் என்று அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், மிக அதிகமான அளவுக்கு நம்மிடத்தில் கையிருப்பு இருந்ததால்தான், வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் தேவைப்பட்ட அரிசியை நமது கையிருப்பிலிருந்து கொடுத்துவிட்டு, அதற்குரிய தொகையை மத்திய அரசிடமிருந்து பணமாக நாம் பெற்றுக்கொண்டோம். நம்மிடம் அதிகமாக இருந்த அரிசியை வேறு இடத்திலே விற்பதற்குப் பதிலாக மத்திய



அரசின் வேலைக்கான உணவுத் திட்டத்திற்காக அவர்களிடமிருந்து நாம் அரிசி பெறுவதற்குப் பதிலாக நமது அரிசியைப் பயன்படுத்திக்கொண்டு அதற்குரிய தொகையைப் பெற்றுக்கொண்டோம். நம்மிடம் அதிகமாகக் கையிருப்பில் இருந்ததைத்தான் இந்த வகையில் செலவழித்திருக்கிறோம்.

அடுத்து, சர்க்கரை விநியோகத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டார்கள். மத்திய அரசில் மீண்டும் கட்டுப்பாடு வந்த பிறகு நமது மாநிலத்திற்கு மத்திய அரசு கொடுக்கும் லெவி சர்க்கரையின் அளவு 19,700 டன்களாகும். இந்த 19,700 டன் சர்க்கரையைத்தான் நாம் பல்வேறு வகைகளில் பிரித்துக் கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், மொத்தம் 10,488,239 குடும்ப கார்டு அட்டைகளை வழங்கியிருக்கிறோம். சென்னை நகரிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் மொத்தம் 8,02,951 குடும்ப கார்டு அட்டைகளை வழங்கியிருக்கிறோம். மாவட்டத் தலைநகர்கள், நகராட்சிகள் போன்ற பகுதிகளுக்கு 8,74,153 குடும்பக் கார்டுகளை வழங்கியிருக்கிறோம். இதர நகராட்சிகளுக்கு 6,60,000-க்கு சற்று அதிகமாக வழங்கியிருக்கிறோம். மாவட்டத் தலைநகர்களை ஒட்டிய நகரங்கள், புறநகர்ப் பகுதிகள் போன்ற இடங்களில் 2,80,938 அட்டைகளை வழங்கியிருக்கிறோம். நகரப் பஞ்சாயத் துக்களில் 16,37,000-க்கும் அதிகமாக வழங்கியிருக்கிறோம். கிராமப் பஞ்சாயத் துக்களில் 59,81,611 குடும்பக் கார்டுகள் வழங்கியிருக்கிறோம். இவ்வாறு கிட்டத்தட்ட 77 லட்சம் அளவுக்குக் குடும்பக் கார்டுகளை கிராமப்புறங் களுக்கு மட்டும் வழங்கியிருக்கிறோம்.

இந்த நிலையில் மத்திய அரசால் நமக்கு ஒதுக்கப்படும் 19.700 டன் சர்க்கரையை எந்த விதத்தில் பிரித்துக் கொடுக்கிறோம் என்றால்,

சென்னை நகரிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள கார்டுதாரர் களுக்கு—மாதத்திற்கு 5 கிலோ.

மாவட்டத் தலைநகர், நகராட்சிகளில் இருப்பவர்களுக்கு ஒரு கார்டுக்கு மாதத்திற்கு 3 கிலோ.

கிராமங்களிலும் நகரப் பஞ்சாயத்துக்களிலும் உள்ள கார்டுதாரர்களுக்கு மாதத்திற்கு 1 கிலோ என்ற அளவில் சர்க்கரை வழங்குகிறோம். தற்போது கிராமப்புறங்களில் இருப்பவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்படும் சர்க்கரையின்

அளவு போதாது. அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஒரு கிலோ கொடுக்கும் பகுதிகளில் 3 கிலோ கொடுக்க வேண்டுமென்றால், அதற்காக மத்திய அரசு மேலும் 15,000 டன் சர்க்கரையை நமக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். 2 கிலோ அதிகப்படுத்துவதானால் இந்த நிலை. ஏற்கெனவே கொடுக்கப்படும் ஒரு கிலோவோடு இன்னொரு கிலோ சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்றால், மத்திய அரசிடமிருந்து நமக்குக் கூடுதலாக 7,500 டன் சர்க்கரை கிடைக்க வேண்டும்.

தற்போது சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், வருமான வரம்பைப்பற்றிக் கவலைப்படாமல் ஒவ்வொரு குடும்பக் கார்டுக்கும் 5 கிலோ சர்க்கரை கொடுக்கிறோம். சாதாரணமானவர்களுக்கும் 5 கிலோ—வசதி உள்ளவர்களுக்கும் 5 கிலோ—வசதி இல்லாதவர்களுக்கும் மாதம் 5 கிலோ என்று கொடுக்கிறோம். இதன் காரணமாகத்தான் சாதாரணமானவர்கள் 5 கிலோ சர்க்கரையை வாங்கிக் கொண்டுபோய் வெளியில் அதிகமான விலைக்கு விற்று லாபம் சம்பாதிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு கிலோ சர்க்கரையை அவர்கள் ரூ. 2.85-க்கு வாங்கி கிலோ ரூ. 5 அல்லது ரூ. 6 அளவுக்கு விற்கிறபோது ஒரு கிலோவுக்கு 2, 3 ரூபாய் லாபம் கிடைக்கிறது. அந்த விற்பனை நடைபெறுவதைத் தடுக்க வேண்டுமென்றால், சர்க்கரை விநியோகத்தை வருமான அடிப்படையில் வழங்க வேண்டும். எனவே இனி வருமான வரம்பை அடிப்படையாக வைத்து இந்த விநியோகத்தைச் செய்யலாமா என்று யோசித்து வருகிறோம்.

அதுமட்டுமல்ல, இப்போது குடும்பக் கார்டுகள் அதிகமாக வேண்டும் என்ற நெருக்கடி வருவதற்குக் காரணம், இதற்கு முன்பெல்லாம் ரேஷன் கடைகள் மூலம் அரிசி மட்டுமே கொடுத்துக் கொண்டிருந்தோம். அப்போது பெரும்பாலானவர்கள் அசட்டையாக இருந்தார்கள். இப்போது குடும்பக் கார்டுகள் மூலமாக மண்ணெண்ணெய் போன்ற மற்ற பொருள்களும் வழங்கப்படுவதால், அதில் மக்களுக்குத் தேவையும் இருக்கிறது, லாபமும் கிடைக்கிறது என்று அதிகமாகக் கார்டுகள் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். எனவே இதையெல்லாம் கணக்கில் கொண்டு பார்க்கிறபோது, இந்த சர்க்கரை விநியோகத்தை வருமான வரம்பின் அடிப்படையில் கொடுக்கலாமா என்ற யோசனை ஏற்பட்டிருக்கிறது. வருமானத்தின் அடிப்படையில் 3 கிலோ, 4 கிலோ அல்லது 5 கிலோ என்று பிரித்துக் கொடுத்தால் சர்க்கரையில் கொஞ்சம் மிச்சப்படுத்த முடியும். அப்படி மிச்சப்படுகிற சர்க்கரையை கிராமத்தில் இருப்பவர்களுக்குக்



தற்போது ஒரு கிலோ கொடுப்பதற்குப் பதில் கூடுதலாக ½ கிலோ கொடுக்க முடியுமா என்ற யோசனை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதில் இன்னமும் எந்த முடிவும் எடுக்கவில்லை.

நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 65 சதவீத உற்பத்தியை லெவி சர்க்கரையாகக் கொடுத்துவிட்டு, மீதியுள்ள 35 சதவீத உற்பத்தியை நீங்கள் எப்படி வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்றுக் கொள்ளுங்கள் என்று மத்திய அரசு சர்க்கரை ஆலைகளுக்கு உத்தரவிட்டு விட்டார்கள். இப்படி இந்திய அரசாங்கமே அவர்களுக்கு அனுமதி அளித்துவிட்ட காரணத்தால், சர்க்கரை ஆலைகள் வெளி மார்க்கெட்டில் சர்க்கரையை அதிக விலைக்கு விற்கிறார்கள். இதன் காரணமாகத்தான் வெளி மார்க்கெட் சர்க்கரை கிலோ ஒன்றுக்கு ரூ. 6, 7 அல்லது 8 என்ற அளவுக்கு விற்கிறது.

தமிழகத்தில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகம் இதன் காரணமாகக் கூட்டுறவு ஆலைகளோடு பேசி, அவ்வப்போது நமது மாநிலத்திற்கு என்று சர்க்கரையை அவர்களிடமிருந்து பல்வேறு விலை கொடுத்து கடந்த காலத்தில் வாங்கி சேமித்து வைத்திருந்ததன் காரணமாகத்தான், தமிழகத்தைப் பொறுத்த அளவில் சர்க்கரையின் வெளி மார்க்கெட் விலை அவ்வளவாக ஏறாமல் இருக்கிறது. வெளி மார்க்கெட் சர்க்கரையின் விலை ஏறாமல் பார்த்துக்கொள்ளும் சூழ்நிலையே நமக்கு இதனால்தான் ஏற்பட்டது. நாம் ஏற்கெனவே வெளி மார்க்கெட்டில் வாங்கிய சர்க்கரையைத்தான் திருமணங்கள் ஓட்டல்கள் போன்ற மற்ற அவசியமானவைகளுக்குத் தருகிறபோது, கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய் என்று விற்கிறோம். அதாவது லெவி சர்க்கரை இல்லாமல், அதிகப்படியான சர்க்கரை தேவை என்று வருகிறவர்களுக்கு இந்த விலையில் தருகிறோம். அதற்குக் காரணம், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கடந்த காலத்தில் வாங்கி சேமித்து வைத்திருந்ததுதான். அப்போது டன் ஒன்றுக்கு ரூ. 290, 350, 400, 500 என்று பல்வேறு விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். அப்படி வாங்கியதன் விலையைச் சராசரியாகக் கணக்கிட்டு இப்போது கிலோ ரூ. 5 என்ற விலைக்கு விற்கிறோம். இதன் காரணமாகத்தான் தமிழகத்தில் ஓரளவுக்குச் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அண்டையில் உள்ள பம்பாயை எடுத்துக்கொண்டால், அங்கே வெளி மார்க்கெட்டில் கிலோ சர்க்கரை ரூ. 6-க்கு மேல் விற்கப்படுகிறது. இங்கே ஒரு கிலோ சர்க்கரை 5 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நேற்றைய வெளிவந்த எகனாமிக் டைம்ஸ் பத்திரிகையில் ஒரு தலையங்கமே தீட்டியிருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூலை 24

"The open market price of sugar has crossed Rs. 8 per kilogram and, what is worse, the price expectation in the market is that it will cross Rs. 9. More than the absolute price of sugar which has crossed a record, it is the price expectation that is of concern."

என்று தலையங்கம் எழுதியது மட்டுமல்ல, இன்னொரு பத்திரிகையான டைம்ஸ் ஆஃப் இந்தியா என்கிற பத்திரிகையில் ஒரு செய்தியும் வெளியிட்டிருக்கிறார்கள்.

"The prices have crossed Rs. 8 per kilo and considering the pace of increase witnessed during the last two months, it will be miracle if they do not scale a high of Rs. 10 by November."

அதாவது நவம்பர் மாதத்தில் ரூபாய் 10 அளவுக்கு விலை உயர்ந்து விடும் என்கிற நிலை இருக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள். எதற்குச் சொல்லுகிறேன் என்றால், நுகர் பொருள் வாணிபக் கழகம் முன்னாலே சர்க்கரையை வாங்கி வைத்திருப்பதன் காரணமாக, தமிழகத்தில் ஓரளவுக்கு அதன் விலையைக் கட்டுப்படுத்த முடிகிறது என்பதற்காகச் சொல்லுகிறேன்.

அடுத்து, உணவு விடுதிகளில் உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்க வேண்டுமென்று பல உறுப்பினர்கள் கேட்டபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் அதையெல்லாம் அரசாங்கம் கட்டுப்படுத்தக் கூடாது, ஹோட்டல் தொழில் செய்பவர்களை அரசாங்கம் நிர்ப்பந்தம் செய்யக் கூடாது என்று குறிப்பிட்டார்கள். நிர்ப்பந்தம் செய்கிற நிலைக்கு நாம் வரவில்லை.. நெருக்கடி நிலைக் காலத்தில் அவர்கள் நிர்ப்பந்தத்திற்கு அவர்கள் கட்டுப்பட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில்தான் விலை கட்டுப்படியானாலும் ஆகாவிட்டாலும், அவர்கள் சொல்லுகிற விலைக்கு விற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கட்டுப்படி ஆகாத நிலைக்கு வந்தபோது பலர் கடைகளையே மூடிவிட்டார்கள். அப்போது எமர்ஜென்சியைப் பார்த்து எல்லோரும் பயந்தார்கள். ஆனால் அவசர நிலை நீங்கிய பிறகு, அவர்களைக் கட்டுப்படுத்த வழியில்லாமல் போய்விட்டது. அவரவர்கள் தங்கள் இஷ்டம் போல் ஏற்றி விடுகிறார்கள். பொதுமக்கள் பொதுவாக விரும்புவது அடிப்படை உணவுப் பொருள்களின் விலை குறைந்திருக்க வேண்டும் என்பதுதான். இஷ்டப்படி செலவிடுகிறவர்களைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் ஒரு நியாயமான விலையில் அடிப்படையில் இன்றியமையாப் பொருள்களை விற்பனை செய்ய வேண்டும் என்று நாம் சொல்கிறோம். இட்டிலி, தோசை, காபி, தேனீர், மலிவு விலைச் சாப்பாடு இவற்றை ஒரு குறிப்பிட்ட விலைக்குக்



1980 ஜூலை 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

(பிற்பகல் 6-50)

கொண்டு வாருங்கள் என்று கேட்கிறோம். அப்படிக் கேட்டுக்கொள்கிற முயற்சி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஓட்டல் உரிமையாளர்கள் ஆகியவர்களை அழைத்துப் பேசி எந்த அளவிற்கு, நியாயத்தின் அடிப்படையிலே, விலையைக் குறைக்க முடியுமோ, அந்த அளவிற்குக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

சில இடங்களில் மலிவு விலையில் சாப்பாடு போடுகிறார்கள். சில இடங்களில் அப்படிப் போடுவதில்லை. அப்படி மலிவு விலையில் சாப்பாடு போட்டால் ஏழையெளியவர்களுக்குப் பயன்படும் என்பதற்காகத்தான் நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இப்போது விலை இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. இட்டிலி தென்னாற்காடு மாவட்டத்திலே 25 பைசாவிற்கு விற்கப்படுகிறது, சில இடங்களில் 40 பைசாவுக்கு விற்கப்படுகிறது. தோசை தென்னாற்காடு மாவட்டத்திலே 40 பைசாவுக்கு விற்கப்படுகிறது. சில இடங்களில் 70 பைசாவிற்கு விற்கப்படுகிறது. காபி தென்னாற்காடு மாவட்டத்திலே 35 பைசாவிற்கு விற்கப்படுகிறது. சில இடங்களில் 60 பைசாவிற்கு விற்கப்படுகிறது. தேநீர் 25 பைசாவிற்கு சில இடங்களிலும், 35 பைசா, 45 பைசா என்று சில இடங்களிலும் விற்கப்படுகிறது.

மலிவு விலை சாப்பாடு என்ற வகையில் சில இடங்களில் அளவுச் சாப்பாடு என்று போடுகிறார்கள். சென்னையிலே ஒரு ரூபாய் 50 காசுகளுக்குப் போடுகிறார்கள், சில இடங்களில் ஒரு ரூபாய் 75 காசுகளுக்குப் போடுகிறார்கள். மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் ஒரு ரூபாய் 25 காசுகளுக்குப் போடுகிறார்கள். பெரியார் மாவட்டத்தில் சில இடங்களில் ஒரு ரூபாய் 50 காசுகளுக்குப் போடுகிறார்கள். ஆகவே ஓரளவிற்கு ஏழையெளியவர்கள் பசியாறக் கூடிய வகையில் மலிவு விலையில் சாப்பாடு போடலாம். அறுசுவையை உண்ண விரும்புகிறவர்கள் 15 ரூபாய், 20 ரூபாய் கொடுத்து சாப்பிடட்டும். ஆகவே ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்தால் தான், சாதாரண மக்களுக்குப் பயன்படும் என்ற வகையில் இந்த நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கிறோம்.

அவிநாசிலிங்கம் செட்டியார் கல்லூரியில் ஹோம் சையன்ஸ் படிக்கிற மாணவர்கள் அவர்களுடைய கல்லூரியில் ஒரு ரூபாய்க்குச் சாதாரண சாப்பாடு போடுகிறார்கள். அவர்கள் இலாபம் இல்லாமல் போடக்கூடும். இலாபம் வைத்தாலும் ஒரு ரூபாய் 50 காசு என்று வைத்தால், சாதாரண

மக்களுக்குப் பாதிப்படும் என்றநிலை வருகிறது. நாங்கள் சட்டத்தை வைத்து மிரட்டி கட்டுப்படுத்தவில்லை. இட்டிலி இவ்வளவுதான இருக்க வேண்டு மென்று தராசைத் தூக்கிக்கொண்டு போய் அளந்து பார்க்கும் நிலை இல்லை. தரம் பிரித்துப் பார்க்க வேண்டும். எல்லா இடங்களிலும் ஒரே விலை இருக்க முடியாது. சாதாரண கூரை போட்ட கட்டிடத்திலே உள்ளவர்கள் 15 பைசா வுக்கு இட்டிலி கொடுக்கலாம். ஆனால் தாஜ் கோரமண்டலில் இதே விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்த்தால் எப்படி? ஆகவேதான் தெளிவாக இருக்க வேண்டும். இட்டிலி விலை 15 பைசாதான், சர்வீஸ் சார்ஜ் 15 பைசா என்று போடலாம். இந்த ஓட்டல்களை யார் யார் விரும்புகிறார் களோ அவரவர்கள் போகட்டும். காபியின் விலை ரூ. 3.50 என்றால் மலைக்கிறார்கள். அநியாயம், கொள்ளையடிக்கிறார்கள் என்று சொல் கிறார்கள். ஆகவே காபியின் விலை 40 பைசா, சர்வீஸ் சார்ஜ் இரண்டரை ரூபாய் என்று வைத்துக்கொள்ளட்டும். ஏனென்றால் அங்கே கார்ப்பெட், ஏர்-கண்டிஷன். படுக்கைகள் போன்ற வசதிகள் இருக்கின்றன. ஆகவே இவற்றை யெல்லாம் கவனித்து ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று அவர்களைக் கேட்டுக் கொள்டிருக்கிறோம்.

சென்னையில் குடும்ப கார்டுகள் வழங்குவதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சென்னையில் ஏறத்தாழ 8 இலட்சம் அட்டைகள் இருக்கின்றன. இவற்றை யெல்லாம் புதுப்பிக்க வேண்டும் என்பதற்காக, இவற்றில் மூன்றில் இரண்டு பங்கு அடைகளுக்குத் தான் ஒட்டப்பட்டு விட்டன. இப்போது அவர்கள் ஆணையாளருடைய அலுவலகத்திற்குப் போக வேண்டுமென்ற அவசியம் இல்லை. அவர்களுக்குப் பல சங்கடங்கள் இருக்கும் என்பதால், பழைய அட்டையின் மேலேயே ஒரு தாளை ஒட்டி புதுப்பித்துக் கொள்ளலாம் என்று உத்தரவு போடப்பட்டு, அப்படிப்பட்ட வகையிலே புதுப்பித்துக் கொண்டு வருகிறார்கள். இந்த ஆண்டு ஜனவரி திங்கள் முதல் ஜூன் திங்கள் இறுதி வரை 32,034 மனுக்கள் வந்தன. 1—1—1980 அன்று நிலுவையில் உள்ளவை 1,147. ஆக மொத்தம் 33,181 மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு அவற்றில் 31744 மனுக்கள் பைசல் செய்யப்பட்டு விட்டன. ஆகவே 30—6—1980 அன்று நிலுவையில் உள்ளவை 1,437 மனுக்கள். 1—1—1980 முதல் 30—6—1980 வரை 24,805 புதிய குடும்ப அட்டைகளும் தொலைந்து போனதற்காக 6,039 நகல் அட்டைகளும் வழங்கப்பட்டன. ஜூலை திங்கள் 18 ஆம் தேதியன்று இருந்த 7,921 விண்ணப்பங்களையும் 30—6—1980 அன்று நிலுவையில் இருந்த விண்ணப்பங்களையும் சேர்த்து மொத்த விண்ணப்பங்கள் 9,358. அதில் 5,160 விண்ணப்பங்கள் பைசல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளவை 4,198



1—7—1980 முதல் 18-7-1980 வரை 4,241 புதிய அட்டைகளும், 919 நகல் அட்டைகளும் ஆகமொத்தம் 5,120 அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மீத முள்ளவைகள் இன்னுமொரு திங்களுக்குள் கொடுக்க முயற்சிகளைத் துரிதமாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

சென்னை புறநகர் பகுதிகளில் 382 நியாய விலைக் கடைகளை வைத்து அவற்றின் மூலமாக இன்றியமையாத பொருள்களை வழங்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல், நுகர் பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் இப்பணியைச் செய்து வருகின்றன.

பாமாலின் எண்ணெயைப் பொறுத்த வரையில், நடவடிக்கை எடுக்கவில்லை அவர்கள் விடப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். 14—6—1980 அன்று புலனாய்வுத் துறையினர் 14,497 பேரல் பாமாலின், பதுங்கி வைத்திருந்ததாகக் கைப்பற்றி னார்கள். ஒரு பேரல் 200 கிலோகிராம் கொண்டது. அதில் ஒரு பகுதி ஆண்டியப்ப நாயக்கன் தெரு, இராயபுரம் என்ற இடத்திலிருந்தும், பட்டினத்தார் தெரு, திருவொற்றியூரிலிருந்தும் கைப்பற்றப்பட்டு இரண்டு வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. கைப்பற்றப்பட்ட அந்த எண்ணெயை ஏலத்தில் விட்டு அந்தப் பணத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று கீழ்க் கோர்ட்டிலே சொன்னார்கள். அந்த எண்ணெயின் உரிமையாளராக இருப்ப வர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று 'ஸ்டே' வாங்கினார்கள். பிறகு ஏலம் விடுவது நிறுத்தப்பட்டது. ஐதர் அலி என்டர்பிரைஸ் அண்டு கம்பெனி என்று அதற்குப் பெயர். அதிலே முக்கியமாக இருப்பவர்கள்—ஐதர் அலி, புரப்பரைட்டர், ஜகாங்கிர் பாட்சா, புரப்பரைட்டர்—பீனா என்பவர் மேனேஜர், மூசாத் என்பவர் கிடங்குகளைப் பார்த்துக்கொள்பவர், நைனார் முகமது—புரப்ரைட்டர். இந்தக் கம்பெனியைச் சேர்ந்த இவர்கள் எல்லாம் ஹைக் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். 22—7—1980 அன்று உயர்நீதிமன்றம் விசாரித்துத் தீர்ப்பு அளித்திருக்கிறது. எண்ணெயைப் பொறுத்த வரையில், அதற்குரிவர்கள் விற்றுக்கொள்ளலாம் என்றும், விற்று வந்த பணத்தை ஒரு வங்கியிலே செலுத்தலாம் என்றும், செலுத்திய பணம் வங்கியிலேயே இருக்க வேண்டும் என்றும், எந்தக் காரணத்தைக் கொண்டும் வங்கியிலேயிருந்து அந்தப் பணத்தை வழக்கு முடிகிற வரையில் திரும்ப வாங்கக் கூடாது என்றும் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நீதிமன்றத்திலே கொடுத்த தீர்ப்பைப் பற்றிச் சொன்னார்கள். அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரையிலே

பேசும்போது, "கைப்பற்றப்பட்ட எண்ணெய் உபயோகத்திற்குப் பயன் படாது" என்று ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்து உண்மையாக இருக்குமானால், ஏலத்திலே விடப்பட்ட அந்த எண்ணெயை பொது மக்களுக்கு விற்பதன் மூலம் பொதுமக்களுக்குத் தீங்கு விளைவிப்பதாக ஆகாதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எண்ணெயைப் பற்றிய முழு விவரம் தெரியவில்லை. ஏதோ ஒன்றுக்குப் பயன்படுகிற காரணத்தால் தான், அதைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள். ஏலம் போட்ட இடத்தில் வாங்கியவர்கள் உணவுக்குப் பயன்படுத்தாவிட்டாலும், வேறு ஒன்றுக்குப் பயன்படுத்துவார்கள்.

***திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, நான் சொல்லுவது, அந்த எண்ணெய் உணவுக்குப் பயன்படாது. வேறு எதற்கோ பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருந்தாலும், அதைத் தவறாகப் பயன்படுத்த பதுக்கி வைத்திருந்தார்கள். எனக்குக் கிடைத்திருக்கிற தகவல், வனஸ்பதியைத் தயாரிக்க அதைப் பயன்படுத்துகிறார்கள் என்பதுதான். ஆனால் இந்தத் தகவல் போலீஸ் இலாக்காவின் மூலமாக வரவில்லையே என்பதுதான் என்னுடைய வருத்தம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எந்த நோக்கத்திற்காகப் பதுக்கி வைத்திருந்தார்கள் என்பது தெரியாது. இப்போது அந்த எண்ணெயை ஏலம் விடலாம் என்றும், விற்று வருகிற பணத்தை வங்கியிலே கட்ட வேண்டுமென்றும் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. ஆகவே விற்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தன்னுடைய பதிலுரையை முடிக்கும் வரையில், அவையின் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூறுவதைப் போன்று வேறு உணவுப் பண்டங்களுக்குப் பயன்படுத்தி, விஷத்தைக் கலக்காத அளவிற்குக் கண்காணிக்க வேண்டுமென்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே யார் யார் வாங்குகிறார்கள், எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது.





கலப்படத்தைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை என்று திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டார்கள். கலப்படத்தைப் பொறுத்த வரையில், அதைக் கவனிக்க வேண்டிய துறை சுகாதாரத் துறையாக இருப்பதாலும், அதற்கென்று தனியாக அந்தத் துறையில் ஒரு விங் இருப்பதாலும் முழு விவரங்களையும் அவர்கள் சொல்வார்கள். உணவுத் துறையிடமும், நுகர் பொருள் வாணிபக் கழகத்திடமும் இதுபற்றிய முழு விவரம், குறிப்பு இல்லை, அவர்களிடத்திலே இருக்குமென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 16--7—1980லே அதே

(பிற்பகல் 7-00)

கம்பெனியைச் சேர்ந்தவர்கள் மறுபடியும் பதுக்கி வைத்தது வேறு இடத்திலே புலனாய்வுத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. திருவொற்றியூர், காலாடிப் பேட்டை, 201 ஏ3, எண்ணூர் ஹைரோட்டில் 1,62 260.5 கிலோ கிராம் பாமாலின் ஆயில் பிடிக்கப்பட்டிருக்கிறது, அதன் விலை மதிப்பு ரூ. 16,22,000 என்று சொல்கிறார்கள். அதைக் கைப்பற்றி வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். இதை அவர்கள் மூன்றாம் முறையாகச் செய்திருக்கிறார்கள். ஏற்கெனவே இரண்டு முறைகள் அவ்வாறு செய்திருக்கிறார்கள். இது மூன்றாவது முறையாக இருக்கிறது. இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. எந்த முறையிலே சட்டம் இடம் கொடுக்கிறதோ அந்த அளவில் எந்தச் சட்டத்தின் அடிப்படையில் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அதை இந்த அரசு எடுக்க முயன்று கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல மூல வழக்கு இருக்கிறது. மூல வழக்கு தொடர்ந்து நடந்து வருகிறது. அதன் தீர்ப்புக்குப் பிறகு அந்த வங்கியிலே செலுத்தும் பணத்தை யார் பயன்படுத்திக்கொள்வது, யார் எடுத்துக்கொள்வது, அது யாருக்குச் சேரும் என்பது தெரியும். வழக்கு மன்றம் அதைப்பற்றித் தீர்ப்பு அளிக்க வேண்டியதாக இருக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசாங்க சார்பில் வழக்காடிய பப்ளிக் பிராசிக்கூட்டர் அவர்கள் அந்தப் பணத்தை அவர்கள் கையிலே ஒப்படைக்கக்கூடாது என்று அரசு சார்பில் எடுத்து வழக்காடினார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றிக் கருத்து தெரிவிக்கப்பட்டது. நம்மிடம் கொடுக்க வேண்டும் என்று நாம் வாதாடிக் கொண்டிருக்கிறோம். நம் கஸ்டடியில் இருப்பதால், நாம் அதை விற்கிறோம். விற்று வந்த பணத்தை நீதிபதி சொல்கின்ற வகையிலே வைத்திருக்கிறோம்

என்று தான் வாதாடினோம். நீதிபதி எடுத்த தீர்ப்பு அவர்கள் விற்கட்டும், அவர்களுடைய பொறுப்பிலே அந்தப் பணம் வங்கியிலே இருக்கட்டும். ஆனால் யாரும் எடுக்கவும் கூடாது, அதை வங்கியும் கொடுக்கக்கூடாது என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். இந்த மூல வழக்குக்குத் தீர்ப்பு வந்தபிறகு பார்க்கலாம் என்று இருக்கிறோம். அது தீர்ப்பாக அமைந்துவிட்டது. நம்முடைய வழக்கறிஞர் அந்த வகையிலேதான் வாதாடினார்கள்.

அடுத்து, மண்ணெண்ணெயைப் பொறுத்து, மாண்புமிகு அங்கத்தினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த விநியோகத்தைப் பொறுத்த வரையில், 7,000 லிட்டர் வாங்கினால்கூட, அதிலே 200 லிட்டர் அளவுக்குத்தான் நாம் விநியோகிக்கின்ற நிலை இருக்கிறது. மற்றவர்கள் மூலமாக, மற்ற கடைகள் மூலமாகவும் விற்கப்படுகிறது. அந்தத் தன்மைகளை நாம் கெடுப்பது என்ற கருத்து இருந்தாலும், அந்த முறையைக் குறைக்க முடியாது. சாதாரணமாக விற்கின்றவர்களைக் கெடுக்கின்ற மாதிரி இல்லை. இந்த முறையில் டிரான்ஸ்போர்ட் சார்ஜ் அதிகமாக ஆகிறது என்று அவர்கள் சொன்னார்கள். அதாவது கெரோசின் எடுத்துப்போகின்ற சார்ஜ் அதிகமாக ஆகிறது என்று சொல்கிறார்கள். இப்போது டீசல் விலை உயர்ந்திருக்கிறது. அதன் காரணமாக கொஞ்சம் விலையை உயர்த்த வேண்டும் என்று கேட்கிறார்கள். அதைப்பற்றிப் பேசி முடிவெடுக்க வேண்டும். உணவுத் துறை அதிகாரிகள் அவர்களுடன் உட்கார்ந்து பேசி ஒரு முடிவுக்கு வந்த பிறகு, அதைப்பற்றி யோசிக்கலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன். மற்ற இடங்களிலே அதிகமான விலை, 5, 6, 7 ரூபாய் என்ற அளவுக்கு இருந்தது. அந்தக் காலங்களிலே நுகர் பொருள் வாணிபக் கழகம் வைத்திருந்த காரணத்தினாலே, குறிப்பிட்ட விலைக்கு கூடுமான வரையில் சாதாரண ஏழை எளிய மக்கள், பொது மக்கள் வாங்கி உபயோகிக்கும் அளவுக்கு இருந்தது. நாம் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகக் கிடைக்கின்ற எண்ணெயை கொடுக்கும் முறையை வைத்திருக்கிறோம்.

அதே மாதிரி, கரும்பு விலையைப் பொறுத்தும் சொன்னார்கள். கரும்பு விலையைப் பொறுத்த வரையில் 1979-80-ல் 8.5 சதம் சர்க்கரை கட்டுமானம் உள்ள அளவுக்கு ஒரு டன் கரும்புக்கு ரூ. 125 என்று அவர்கள் கேட்டார்கள். மேற்கொண்டு ஒவ்வொரு சதவிகிதத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 1.47 என்று விதித்திருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் நம் தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்திக் கேட்கிறது. இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் விவசாயிக்குக் கட்டுப்படியாகின்ற அளவுக்கு, ஒரு டன்னுக்கு ரூ. 175



ஆவது தரவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலேதான் நாம் கொள்முதல் முறையைச் சீர்படுத்தி நடத்த வேண்டும், செம்மைப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறோம். நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாகக் கொடுக்கப்படுகின்ற பொருள்களில் நஷ்டம் ஏற்பட்டாலும்கூட, அதன் மூலம் ஏழையெளிய மக்கள் பயனடைய வேண்டுமென்ற அடிப்படையிலேதான் விற்றுக்கொண்டு வருகிறோமே தவிர, வேறு எந்த நிலைமையும் இல்லை. லெவி முறையெல்லாம் அந்த விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் வைத்திருக்கிறோம். அந்த அளவுக்குத்தான் நாம் அதைக் கடைப் பிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பொருள் பரவலாகக் கிடைக்க வேண்டும், நியாயமான விலையில் கிடைக்க வேண்டும். பதுக்கல்களைத் தடுப்பதற்கு என்று புலனாய்வுத் துறையிலே 'ஆண்டி கரப்ஷன் அண்டு விஜிலன்ஸ் கமிஷன்' என்று ஒரு தனி இலாகா ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த இலாகா அதிகாரிகள்தான் இதையெல்லாம் கண்டுபிடிக்கிறார்கள். பதுக்கலை மட்டும் கண்டுபிடிக்க வேண்டும் என்று தீவிரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று தான் அவர்கள் அண்மையிலே நியமிக்கப்பட்டு, அவைகளைக் கண்டுபிடிப்பதிலே தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர்கள் கூறுவதுபோல, மேலும் மேலும் இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற, பொது மக்களுடைய ஒத்துழைப்பு வேண்டும். ஆங்காங்கு இருப்பவர்கள் ஒத்துழைப்பார்களானால், இதிலே நல்லதொரு சூழ்நிலையைக் கொண்டு வர முடியும். ஆகவே இந்த நுகர் பொருள் வாணிபக் கழகமும் மற்றவர்களும் ஒத்துழைப்புத் தருவதன் மூலமும், இதற்கு அடிப்படையாக இருக்கின்ற சட்ட திட்டங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் ஒரு சீரான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணம். அதற்கு மாண்புமிகு அங்கத்தினர்களின் ஒத்துழைப்பும் தொடர்ந்து இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : சிமெண்ட் விநியோகத்தை நுகர் பொருள் வாணிபக் கழகம் எடுத்துக்கொண்ட பிறகு, அடிமட்டத்திலே பெர்மிட்டில் கொடுக்கப்பட்டிருக்கின்ற அளவுக்கு சிமிண்ட் விநியோகம் இருப்பதில்லை. பெர்மிட் கொடுத்தால், அதை வாங்கிக்கொண்டு சென்றால், கடைகளிலே சிமிண்ட் கிடைக்காமல் இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம். அதே நேரத்திலே அவர்கள் குறைத்துக் கொடுக்கிறோம், வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லும் நிலைமைகள் இருக்கின்றன. அதைக் கட்டுப்படுத்துவதற்கு,

அந்த ஸ்டாக் மீது ஒரு கண்ட்ரோல் இருப்பதற்கு தாசில்தாருக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. இந்த நிலையிலே ஓபன் பிளாக் மார்க்கெட் (Open Black Market) என்பது அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூறிய கருத்தினை மனதிலே வைத்து இதை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்த முடியும், எந்த அளவுக்கு நன்கு கொண்டுவர முடியும் என்று யோசித்து, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்ல கருத்துக்களைத் தெரிவித்த அங்கத்தினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உணவுத் துறை சிறப்பாக நடைபெறுவதற்கு பேருதவியாக இருந்த செயலாளர், அதிகாரிகள், அலுவலர்கள் எல்லோருக்கும், நுகர் பொருள் வாணிபக் கழகத்தினுடைய அதிகாரிகள், அலுவலர்கள், இயக்குநர் ஆகிய அத்தனை பேருக்கும், இங்கே கருத்துக்களை வழங்கிய உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7.06)

### 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

58. Notification issued with G.O. Ms. No. 1886, Labour and Employment, dated the 10th November 1979, in regard to amendments to the Tamil Nadu Beedi and Cigar Workers (Conditions of Employment) Rules, 1968. [Laid on the table of the House under section 44 (4) of the Beedi and Cigar Workers (Conditions of Employment) Act, 1966 (Central Act 32 of 1966.)].



59. Notification issued with G.O. Ms. No. 143, Labour and Employment, dated the 25th January 1980, in regard to an amendment to the Tamil Nadu Welfare Fund Rules, 1973. [Laid on the table of the House under section 41(5) of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972)].

60. Notification issued with G.O. Ms. No. 81, Revenue, dated the 21st Jaiuary 1980 making the Tamil Nadu Land Reforms (Surplus Land of Sugar Factories) Rules, 1980. [Laid on the table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961)].

### B. Reports, Notifications and Other Papers.

* 67. Policy and Programmes on Handlooms and Textiles, 1980-81. (English and Tamil).

* 68. Performance Budget on Handlooms and Textiles, 1980-81. (Tamil).

* 69. Policy Note on Labour in Tamil Nadu, 1980-81. (English and Tamil).

* 70. Policy Note on the working of the Stationery and Printing Department. (English and Tamil).

---

* Circulated to all M.L.Cs. on 23rd July 1980.

## இணைப்பு I.

(590 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

பெரியார் மாவட்டம், அரச்சலூர் காவல் நிலைய எல்லைக்குள்ளிருக்கும் வீரப்பம்பாளையம் என்ற கிராமத்தில், 2—7—1980 அன்று நள்ளிரவு, முத்துசாமி என்பவரது ஓலை வேய்ந்த வீடானது யாரோ சிலரால் வெளிப்புறமாகப் பூட்டப்பட்டுத் தீ வைக்கப்பட்டது. இதன் காரணமாக, அவ்வீட்டிலிருந்த முத்துசாமி கவுண்டர் (வயது 40), அவருடைய மனைவி பாப்பம்மாள் (வயது 30) அவருடைய 8 வயது மகள், 5 வயது மற்றும் ஒரு வயதான இரு மகன்கள் ஆகியோர் இறந்துவிட்டனர்.

2. பெரியார் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு அங்கிருந்தவர்களிடம் மேற்படி நிகழ்ச்சியைப் பற்றி விசாரித்துள்ளார். பாசனத்திற்காக கீழ் பவானி திட்டத்திலிருந்து தண்ணீரை கால்வாய் மூலமாக சென்னியப்பன் என்பவரது நிலத்தின் வழியாகக் கொண்டு வருவதுபற்றி இறந்தவர்களது குடும்பத்தினருக்கும் சென்னியப்பன் மற்றும் சென்னிமலை கவுண்டர் ஆகியோரது குடும்பத்தினருக்கும் இடையே நீண்ட காலமாக பகைமை இருந்து வந்துள்ளதாக விசாரணையிலிருந்து தெரிய வருகிறது. இச்சம்பவம் குறித்து அரச்சலூர் காவல் நிலையத்தில் குற்ற எண். 325/80-ல் இ.பி.கோ. 436 மற்றும் 302 பிரிவுகளின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை நடந்து வருகிறது. மேற்படி நிகழ்ச்சியினால் வீரப்பம்பாளையம் கிராமத்திலோ அல்லது அதன் சுற்றுப்புற கிராமங்களிலோ சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் எழவில்லை. பதட்டமான நிலையும் ஏதும் நிலவவில்லை. எனினும், நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

## இணைப்பு II

(591 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1978-79 ஆம் ஆண்டு முதல் 10 + 2 + 3 பாடத் திட்டம் அமுலாக்கப்பட்டதன் விளைவாக இருமுனைப் பாடத் திட்டம் அந்த ஆண்டு முதல் (1978-79) நீக்கப்பட்டது.

2. அரசாணை எண் 1091 கல்வி, நாள் 15—6—1978 & 1092 கல்வி நாள் 15—6—1978-ன்படி உயர்நிலைப் பள்ளிகளில் அதிகப்படியாகப் பணியாற்றும் ஆசிரியர்களும் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வேலைக்கமர்த்தப்



படமுடியாத இருமுனைப் பாடத்திட்ட வகுப்பு ஆசிரியர்களும் பணி நீக்கம் செய்யப்படாமல் அவர்கள் ஓய்வு பெறும் வரை பணியாற்றலாம். அவர்களுடைய பணியானது வேலை அனுபவத்திற்காகவோ அல்லது கூடுதலான கைவேலை கற்பித்தல், நூலகம்/அறிவியல் ஆய்வுக்கூட வேலைகள் ஆகியவற்றிற்கோ பயன்படுத்திக் கொள்ளப்படும். அரசாணை எண் 1719, கல்வி, நாள் 14—9—1979-ன்படி முன்னாள் இருமுனை பாட வகுப்பு ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் பணியில் அமர்த்தப்படும்பொழுது அவர்களுடைய பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளிகளில் புதிதாக ஏற்படுத்தப்பட்டதாகக் கருதப்படும்.

3. அரசு குறிப்பாணை எண் 44494 எ/எச். எண் 2-79-1, கல்வி, நாள் 15—3—1979-ன் படி அதே பள்ளியில் பணியாற்ற முடியாத நிலையில் இருக்கும் முன்னாள் இருமுனைப் பாட வகுப்பு ஆசிரியர்கள் மற்ற பள்ளிகளில் தகுந்த பணியிடங்களில் அமர்த்தப்படுவர்.

4. 1978-79 ஆம் ஆண்டில் கோயம்புத்தூரிலுள்ள டி. வ. இராமலிங்கம் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படாததால் அங்கிருந்த இருமுனைப் பாட வகுப்பு ஆசிரியர்கள் 1979-80-ல் காரமடையில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு தொழிற்கல்விப் பாடங்களைக் கற்பிப்பதற்காக மாற்றப்பட்டனர். கோயம்புத்தூரிலுள்ள இராமலிங்கம் செட்டியார் உயர்நிலைப் பள்ளியிலுள்ள கருவிகளும் காரமடை மேல்நிலைப் பள்ளிக்கு மாற்ற ஆணையிடப்பட்டது. டி. வ. இராமலிங்கம் செட்டியார் உயர்நிலைப் பள்ளியானது 1980-81-இல் தான் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. ஆதலால் அரசு ஆணைகளுக்குப் புறம்பாக எதுவும் நடைபெறவில்லை.

அரசாணை எண் 1091, கல்வி, நாள் 15—6—1978 மற்றும் ஆணை எண் 1719, கல்வி, நாள் 14—9—1978-ல் உள்ள விதிகளின்படிதான் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# இணைப்பு III

(594 ஆம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

## தமிழகத்தில் உணவு நிலைமை.

## I. அரிசி நிலைமை—கொள்முதலும், விற்பனையும்.

### 1. அரிசி நிலைமை.

அரிசியைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் நிலைமை மிகவும் திருப்திகரமாக உள்ளது. வெளிச் சந்தையில் அரிசி தாராளமாகவும் நிதானமான விலைகளிலும் கிடைத்து வருகிறது. பெரும்பான்மையான நுகர்வோர் பயன்படுத்தும் சாதாரண ரகப் புழுங்கல் அரிசி வெளிச் சந்தையில் கிலோ ரூ. 1.90 முதல் ரூ. 2.20 வரை விற்கப்படுகிறது.

பொது விநியோக முறையின்கீழ் வழங்குவதற்குத் தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினிடம் கணிசமான கையிருப்பு அரிசி உள்ளது. வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகக் கிடைப்பதால் பொது விநியோக முறையின்கீழ் மாதந்தோறும் விற்பனையாகும் அரிசியின் அளவு, சென்ற சனவரி மாதம் முதல், மாதம் ஒன்றுக்கு 10,000 டன்களுக்குள்ளாகவே இருந்து வந்துள்ளது. அடுத்த மூன்று நான்கு மாதங்களில், நெல் அறுவடை இல்லாத காரணத்தினால் வெளிச் சந்தையில் அரிசியின் புழக்கம் குறையக்கூடும் என்பதால், பொது விநியோக முறையில் அரிசிக்குத் தேவை உயரலாம். அப்படி உயர்ந்தாலும் தேவையைச் சமாளிக்கப் போதுமான கையிருப்பு அரசின் கைவசம் உள்ளது.

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் மேற்பார்வையில் நடந்து வரும் "வேலைக்கு உணவு" என்ற திட்டத்தின்கீழ், மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, 1979-80 ஆம் ஆண்டில் மத்திய அரசு உணவுத் தொகுப்பின் அரிசிக்குப் பதிலாக, தமிழக அரசின் கையிருப்பில் இருந்த அரிசியை நாம் பயன்படுத்தி வந்தோம். 1979-80 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு அளித்த ஒதுக்கீடு 73,000 டன்கள். இதைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தன் கையிருப்பில் இருந்து வழங்கியது. 1980-81 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு தமிழ் நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யும் அரிசியை மத்திய அரசின் உணவுக் கார்ப்பரேஷனிடமிருந்து நேரடியாகப் பெற்று இத்திட்டத்திற்குப் பயன்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.



1979-80-ல் பொது விநியோகத்தின் தேவையை முழுமையாக நிறைவு செய்ததோடல்லாமல், வேலைக்கு உணவுத் திட்டத்திற்கு 73,000 டன்கள் அரிசியும், வெள்ள நிவாரண வேலைகளுக்கு 4,000 டன்கள் அரிசியும் வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர வெளிநாடுகளுக்கு 50,000 டன்கள் பச்சரிசியும், 5,000 டன்கள் குருணையும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கெனியா நாட்டிற்கு 20,000 டன்கள் அரிசியும், பெரு நாட்டிற்கு 10,000 டன்கள் அரிசியும், க்யூபா நாட்டிற்கு 20,000 டன்கள் அரிசியும், மேற்கு ஜெர்மனிக்கு 5,000 டன்கள் குருணை அரிசியும் ஆக மொத்தம் 55,000 டன்கள் இதுவரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. ஏற்கெனவே செய்துள்ள ஒப்பந்தத்தின்படி மேலும் 10,000 டன்கள் அரிசி ஏற்றுமதி செய்யவேண்டும். 55,000 டன்கள் ஏற்றுமதி செய்ததின் மூலமாக ஏறக்குறைய 70 இலட்சம் ரூபாய் நிகர இலாபம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கிடைத்துள்ளது. அதுமட்டுமல்லாமல் இதே அரிசியைப் பொதுவிநியோக முறையின்கீழ் குறைந்த விலையில் விற்றிருந்தால் ஏற்படக்கூடிய 3.10 கோடி ரூபாய் நட்டமும் தவிர்க்கப்பட்டுள்ளது.

### 2. கொள்முதல்.

இப்பொழுது தமிழ்நாட்டில் கட்டாயக் கொள்முதல் எதுவும் கிடையாது. வர்த்தகர்கள் மீதோ, அரிசி அரைவை ஆலைகள் மீதோ லெவி எதுவும் கிடையாது. நெல் அரிசி நடமாட்டத் தடைகள் எதுவும் கிடையாது. நெல் வர்த்தகத்தில் இத்தகைய சுதந்திரமான சூழ்நிலையை உருவாக்கி, அதே சமயத்தில் அரிசியின் விலைவாசிகளையும் கட்டுப்படுத்தி, உற்பத்தியாளர்களின் நலனையும் நுகர்வோர் நலனையும் ஒருங்கே காத்து, பொது விநியோக முறையைத் தேவைக்கு ஏற்பத் திறமையாகச் செயல்படுத்தக் கணிசமான கையிருப்பும் வைத்திருப்பது, இந்த அரசு உணவு முனையில், ஆற்றியுள்ள சிறப்பான சாதனையாகும். சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு, கட்டாயக் கொள்முதலினால் கஷ்டப்பட்டுக் கசப்பான பல அனுபவங்களைப் பெற்றிருந்த விவசாயிகள், இன்றுள்ள சூழ்நிலையில், பெரும் மனநிறைவும், நிம்மதியும் அடைவார்கள் என்று நாம் துணிந்து கூறலாம். கட்டுப்பாடும், தட்டுப்பாடும் கடுமையாக இருந்த நிலை கடந்த கால நிலையாகி, செழிப்பும், சீரான விநியோகமும், சுதந்திரமான வர்த்தகச் சூழ் நிலையும் உருவாக்கப்பட்டிருப்பது பொதுமக்கள் அனைவரும் பாராட்டிப் போற்றுதற்குரியது.

### 3. நெல்லின் கொள்முதல் விலைகள்.

நெல்லின் கொள்முதல் விலை மத்திய அரசினால் நிர்ணயிக்கப்படுகின்றது. மத்திய அரசு நியமித்துள்ள விவசாய விளை பொருள்கள் விலைவாசிகள் ஆணைக் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்த விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. கோதுமையின் உற்பத்திச் செலவைவிட நெல்லின் உற்பத்திச் செலவு எந்த வகையிலும் குறைவாக இருக்க முடியாது என்பது வேளாண்மை நிபுணர்களின் தெளிந்த கருத்து. இருந்தபோதிலும், நெல்லின் கொள்முதல் விலைக்கும் கோதுமையின் கொள்முதல் விலைக்கும் இடையே, பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பெரும் வேற்றுமை காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 1967-68 ஆம் ஆண்டில் கோதுமையின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 70 முதல் ரூ. 76 வரை நிர்ணயிக்கப்பட்டிருந்த நேரத்தில், நெல்லின் கொள்முதல் விலை ரூ. 43 ஆகத்தான் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அது போலவே, 1979-80 ஆம் ஆண்டில் கோதுமையின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 117 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலைக்கு மாறாக, சாதாரண ரக நெல்லின் கொள்முதல் விலை ரூ. 95 ஆகத்தான் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நெல்லின் கொள்முதல் விலைக்கும் கோதுமையின் கொள்முதல் விலைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை நீக்கவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தி, வேளாண்மை விளை பொருள்கள் விலைவாசிகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரே 1978-79 ஆம் ஆண்டு குழுவின் அறிக்கையில் தனிக் குறிப்பு ஒன்று அளித்திருந்தார். வேளாண்மைப் பல்கலைக் கழக நிபுணர்கள், வேளாண்மைத் துறை அதிகாரிகள், விவசாய உயர்மட்டக் குழுவின் உறுப்பினராக இருந்த விவசாயப் பிரதிநிதிகள் ஆகியோர் கருத்துக்களை அறிந்து, நம் மாநிலத்தில் நெல்லின் உற்பத்தி விலை குவிண்டாலுக்கு ரூ. 124 அளவில் அமைந்துள்ளது என்று எடுத்துக் காட்டிப் புள்ளி விவரங்களை மத்திய அரசு முன் வைத்துள்ளோம். நம் நாட்டு விவசாயிகளில் மூன்றில் இரு பங்கினர் நெல் உற்பத்தியாளர்கள். நம் நாட்டு மக்கள் தொகையில் மூன்றில் இரு பங்கினர் அரிசியையே முக்கிய உணவாகக் கொண்டுள்ளவர்கள். ஆகவே, மத்திய அரசின் கொள்முதல் கொள்கை இதுவரை கோதுமைக்கு மட்டுமே ஆதரவாக இருந்து வந்துள்ள நிலையை மாற்றி, நெல்லுக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அமையவேண்டும் என்பதையும் நாம் எடுத்துக் காட்டியுள்ளோம். நெல்லின் விலையை உயர்த்துவது, கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு மட்டும் அல்லாமல், நாட்டு மக்களின் ஒருமைப்பாட்டு உணர்வை பலப்படுத்துவதற்கும், இன்றியமையாத நடவடிக்கை என்பதையும் நாம் வலியுறுத்தியுள்ளோம்.



1978-79ஆம் ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை சாதாரணரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 85 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்த நேரத்தில், மத்திய அரசு நம் பரிந்துரைகளை ஏற்று நியாயமான விலையை நிர்ணயிக்காவிட்டால், தமிழக அரசே தம் சொந்த நிதிப் பொறுப்பிலிருந்து குவிண்டாலுக்குக் கூடுதலாக ரூ. 20 அளித்து, நெல்லை விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்கிக்கொள்ள வகை செய்யுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1979-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 13-ஆம் நாளன்று அறிவித்தார்கள். அதற்கு இணங்க, அப்போது மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்டிருந்த நெல் கொள்முதல் விலையான ரூ. 85க்குக் கூடுதலாக ரூ. 20 கொடுத்து, சாதாரண ரக நெல்லை ரூ. 105 என்ற விலைக்கும், சன்ன ரக நெல்லை ரூ. 109 என்ற விலைக்கும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்க முன்வர வேண்டுமென்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அரசு ஆணையிட்டது. 1979—80 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு நெல்லின் கொள்முதல் விலையை சாதாரண ரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூ. 95 என்று நிர்ணயித்த பின்னரும், ரூ. 105, ரூ. 109 என்ற கூடுதலான விலைகளில் தமிழக அரசின் ஆணையின் பேரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கி வந்துள்ளது. மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலைகளுக்குக் கூடுதலாக, மாநில அரசுகள் ஊக்குவிப்புத் தொகையாகவோ, வேறு எந்த இனத்தில் கூடுதல் தொகையாகவோ அதிக விலை கொடுக்கக் கூடாதென்று மத்திய அரசு ஆணைகள் பிறப்பித்திருந்தது. மாநில அரசு அதிக விலை தர விரும்பினால் அவர்கள் தங்கள் சொந்த நிதிப் பொறுப்பிலிருந்து அவ்வாறு வழங்கிக் கொள்ளலாம் என்று பின்னர் மத்திய அமைச்சர்களால் அறிவிக்கப்பட்டது. ஆனால் இதற்கான அதிகாரபூர்வமான ஆணை எதுவும் வரவில்லை. இவ்வாறு அறிவிப்பு செய்வது மட்டும் பலன் தராது என்பது கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து புலனாகும். மாநில அரசுகள் தங்கள் கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரிசர்வ் வங்கியிலிருந்து கடனாகப் பல கோடி ரூபாய்கள் வாங்குகின்றன. மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலைகளுக்குக் கூடுதலான விலைகளில் நெல்லை வாங்கியதால் மாநில அரசுகளுக்கு ரிசர்வ் வங்கியின் நிதியுதவி கிடைப்பதில் பல சிக்கல்கள் எழுந்துள்ளன. அவ்வாறு அதிக விலை கொடுத்து வாங்குவது, கொள்முதல் ஆகாது என்றும், ஆகவே அந்த வர்த்தக நடவடிக்கைகள் ரிசர்வ் வங்கியின் நிதி உதவிக்கு உரியவை ஆகா என்றும் ரிசர்வ் வங்கியின் சார்பில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியின் நிதி உதவி இல்லாமல் கொள்முதல் செய்வது இயலாதது. ஆகவே, இந்த இக்கட்டான நிலைமைக்குத் தீர்வு காண்பதற்கு ஒரே வழி, மத்திய அரசு நெல்லின் கொள்முதல் விலைகளை உயர்த்துவதுதான்.

தமிழக விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பிப்ரவரி திங்களிலேயே ஒரு குறிப்பு கொடுத்திருந்தார்கள். இந்த அரசு மீண்டும் பொறுப்பு ஏற்ற பின்பு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு இப்பரிந்துரைகளை வலியுறுத்தி மீண்டும் ஒரு கடிதம் எழுதியுள்ளார்கள். இவ்வளவு முயற்சிகள் எடுத்துள்ள போதிலும், வரும் ஆண்டுக்கு நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டாமென்று வேளாண்மை விளை பொருள் விலைவாசிகள் ஆணைக் குழு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ததாக முதலில் வந்த செய்திகள் நமக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தன. இதற்கு இடையில், உரங்கள், டீசல் ஆகியவற்றின் விலையில் உயர்வு ஏற்பட்டதையொட்டி நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்ற பிரச்சினை பரிசீலிக்கப்பட்டபோது, ஆணைக் குழு குவிண்டாலுக்கு ரூ. 95 ஆக இருந்த விலையை ரூ. 100 ஆக உயர்த்தி நிர்ணயித்தால் போதும் என்று அண்மையில் பரிந்துரை செய்துள்ளதாக வந்துள்ள செய்திகள் நமக்கு மிகுந்த மன வேதனையை அளிக்கின்றன. உற்பத்திச் செலவின் அடிப்படையில் குவிண்டாலுக்கு ரூ. 130 ஆக நெல்லின் கொள்முதல் விலையை நிர்ணயிக்கவேண்டுமென்றும், முதற்கட்டமாக, கோதுமையின் கொள்முதல் விலையான ரூ. 117க்கு ஒத்த அளவிலாவது நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்றும் தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. இக்கருத்துக்கு இம்மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதான ஆதரவு அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இக்கருத்துக்கு மதிப்பு கொடுத்து, முதல் கட்டமாக கோதுமையின் கொள்முதல் விலைக்கு ஒத்த அளவிலாவது நெல்லின் கொள்முதல் விலையை நிர்ணயித்து மத்திய அரசு விரைவில் ஆணைகள் வெளியிட வேண்டுமென்று நாம் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

**4. பொது விநியோக முறையில் அரிசி விற்பனையின் பொருளாதாரம்.**

சாதாரண ரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ. 105, சன்ன ரக நெல்லுக்கு ரூ. 109 என்ற கூடுதல் விலைகளை விவசாயிகளுக்கு அளித்து, 1979 ஆம் ஆண்டு குறுவையிலும் 1980 ஆம் ஆண்டு சம்பாவிலும் ஏறத்தாழ இரண்டு இலட்சம் டன்கள் நெல்லைத் தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வாங்கியுள்ளது. இந்த விலையில் நெல்லை வாங்கி அரிசியாகத் தயாரித்து விற்பதற்கு அடக்கவிலை, சன்ன ரக அரிசியைப் பொறுத்தவரை குவிண்டாலுக்கு ரூபாய் 228-ம், சாதாரண ரக அரிசியின்





விலை குவிண்டாலுக்கு ரூ. 220ம் ஆக அமையும், அதாவது சன்ன ரக அரிசியின் அடக்கவிலை கிலோவுக்கு ரூ. 2.28. சாதாரண ரக அரிசியின் அடக்கவிலை கிலோவுக்கு ரூ. 2.20. ஆயினும் மத்திய அரசின் கொள்முதல் விலைகள் ரூ. 74—78ஆக இருந்த நேரத்தில், தமிழகத்தில் பொது விநியோக முறையின் கீழ் அரிசியின் சில்லறை விற்பனை விலைகளாக நிர்ணயிக்கப்பட்டிருந்த சாதாரண ரக அரிசிக்கு கிலோ ரூ. 1.60, சன்ன ரக அரிசிக்கு கிலோ ரூ. 1.85 என்ற விற்பனை விலைகளிலேயே, இப்போதும் தமிழக அரசின் ஆணையின் பேரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விற்று வருகின்றது. கூடுதல் விலைகளில் நெல்லை வாங்கி, குறைந்த விலைகளில் அரிசியை விற்பதினால், சன்ன ரக அரிசியைப் பொறுத்தவரை ஒரு குவிண்டாலுக்கு ரூ. 43 இழப்பும், சாதாரண ரக அரிசிக்கு குவிண்டாலுக்கு ரூ. 60 இழப்பும் ஏற்படுகிறது. இந்த அடிப்படையில் சுமார் 1 இலட்சம் டன்கள் அரிசியைப் பொது விநியோக முறையின்கீழ் இப்பொழுது நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் விற்பதன் மூலம் தமிழக அரசுக்கு ரூ. 5.32 கோடி இழப்பு ஏற்படுகின்றது. ஓர் ஆண்டில் சுமார் 2 இலட்சம் டன்கள் விநியோகம் ஆகும் என்று கணக்கு எடுத்துக்கொண்டால் கூட ரூ. 10.64 கோடி இழப்பு ஏற்படுகின்றது.

மத்திய அரசு, அயல் நாடுகளிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்து வந்தபோது, அயல் நாட்டுக் கோதுமையையும் உள்நாட்டுக் கோதுமையையும் விரவி ஒரே விலையில் விற்பதற்காக, கோதுமை விற்பனைக்கு ஓர் ஆண்டுக்குப் பல கோடி ரூபாய்கள் மத்திய உணவுக் கார்ப்பரேஷனுக்கு மான்யமாக அளித்து வந்தது. அதுபோலவே விவசாயிகளின் நலனை முன்னிட்டு நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்துகின்ற நேரத்திலே, நுகர்வோரின் நலனை முன்னிட்டு அரிசியின் விலையைக் குறைந்த அளவில் நிர்ணயிக்க, இதுவரை கோதுமைக்குத் தந்து வந்தது போலவே, அரிசிக்கும் மத்திய அரசு மான்யம் தரவேண்டுமென்று இந்த அரசு கோரியுள்ளது. இக்கோரிக்கையினை மத்திய அரசு ஆதரவாகப் பரிசீலிக்க வேண்டும் என்பதில் இந்த மாமன்ற உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு இராது என்று நான் நம்புகிறேன். நம் ஒருமித்த குரலுக்கு மத்திய அரசு செவி சாய்க்கும் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

**5. அரிசியின் சில்லறை விற்பனை விலைகள்.**

நெல்லின் கொள்முதல் விலைக்கும், பொது விநியோக முறையின்கீழ் அரிசியின் சில்லறை விற்பனை விலைக்கும் இடையே பெரும் வேறுபாடு உள்ளது என்று சில சமயங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது. தாமாக விரும்பி நெல்லை

அரசுக்கு விற்க விரும்பும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை வாங்குவதற்கு அறுவடைக் காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெல் வாங்கும் நிலையங்களைப் பரவலாகத் திறக்க வேண்டியுள்ளது. இவற்றிற்கான நிர்வாகச் செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். பல்வேறு இடங்களில் வாங்கும் நெல்லை கிடங்குகளில் சேமித்து வைத்து, போக்குவரத்து வசதிகள் கிடைக்கின்ற நேரத்திலே அரைவை ஆலைகள் அதிகமாக உள்ள மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லவேண்டியுள்ளது. ஒரு குவிண்டால் அரிசியைத் தயாரிக்க 1½ குவிண்டால் நெல்லுக்கு மேல் தேவை ஆகின்றது. அரைவைக் கூலியை நாம் தரவேண்டும். சாக்கு போன்ற செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அரிசி ஆலைகளில் இருந்து பல்வேறு மாவட்டங்களுக்கும் அரிசியை விநியோகத்திற்காக எடுத்துச்செல்ல வேண்டும். எந்த நோத்திலும் பொது விநியோக முறையின்கீழ் போதிய கையிருப்பு இல்லை என்ற குறைக்கு இடம் தாாமல் முன்னெச்சரிக்கையாக நாம் கணிசமான அளவு கையிருப்பைச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் நெல்லைக் கொள்முதல் செய்வதற்காக ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் பெறுகின்றோம். இந்தக் கடனுக்கு 11 விழுக்காடு வட்டி செலுத்த வேண்டும். தனியார் வியாபாரிகள் இத் தொழிலில் ஈடுபடும் போது, அவர்கள் தங்கள் தேவைகளுக்கு வேண்டிய நெல்லை மட்டும் வாங்கிக் கொள்ளலாம். தங்களுக்குப் பிடித்தமான ரகங்களை மட்டும் வாங்கிக்கொள்ளலாம். அதிகப் போக்குவரத்துச் செலவுக்கு இடம் கொடாமல், சுற்று வட்டாரத்திலேயே விற்றுக்கொள்ளலாம். அவர்கள் விற்பனை விலைக்கு நிர்ணயமும் கட்டுப்பாடும் கிடையாது. ஆனால், அரசு பொதுவிநியோகத்தை மேற்கொள்ளும்போது உருவாகும் சில அடிப்படை நிர்ப்பந்தங்களை நாம் மனதில் கொள்ள வேண்டும். தாமாக விரும்பி விவசாயிகள் தருகின்ற நெல் அனைத்தையும் அவர்கள் நலனை முன்னிட்டு நாம் வாங்கிக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம். ஆகவே, நெல்லை வாங்கும்போது நம் தேவைக்கு ஏற்ற அளவு வாங்கிக் கொண்டால் போதும் என்ற வர்த்தக நோக்குக்கு இடம் கொடாமல், விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, அவர்கள் தர முன்வரும் நெல் அனைத்தையும் நாம் வாங்கிக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட சில ரகங்களைத் தேர்ந்தெடுத்து வாங்குவது என்பது இயலாது. உற்பத்தியாகும் மாவட்டங்களில் நெல்லை வாங்கி பற்றாக்குறை மாவட்டங்களில் உள்ள குக்கிராமங்களுக்கும் அரிசியை எடுத்துச் செல்ல வேண்டும். தனியார் நடத்தும் வர்த்தகத்தைவிடப் பொது விநியோக முறையின் பொறுப்புகள் மிக அதிகமானவை, விரிவானவை. உற்பத்தியாளர் நலனைக் காக்கும் வகையிலும் நுகர்வோர் நலனுக்குப் பாதகம் இல்லாத முறையிலும் செயல்படுவதே, பொது விநியோக முறையின் இரு அடிப்படை நோக்கங்களாகும். இந்த வரம்புகளுக்கு உட்பட்டு மிகச் சிக்கனமான முறையில் நாம் விநியோகத்தை நடத்தி



வருகின்றோம். பங்கீட்டு முறையோ பொதுவிநியோக முறையோ செயல்பட் வந்த சென்ற முப்பது ஆண்டுகள் அனுபவத்தை நாம் ஆய்ந்து பார்த்தா அரிசியின் சில்லரை விற்பனை விலை, நெல்லை வாங்கும் விலைக்கு இ மடங்காகத்தான் தொடர்ந்து இருந்து வந்துள்ளது. இதே நிலைதான் இன்று நீடிக்கின்றது. மேலும், நான் முன்னால் குறிப்பிட்டதுபோல், இப்போ அடக்க விலைக்கும் குறைவான விலையில் நாம் அரிசியை விற்று வருவதா பல கோடி ரூபாய் இழப்பை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். நெல்லை வாங்கும் விலையோடு அரிசியின் சில்லரை விற்பனை விலையை ஒப்பிட் அரிசியின் விலை அதிகமாக இருக்கிறதா என்ற பிரச்னையை அணுகும்போது இந்த பின்னணியைக் கொண்டுதான் நாம் ஆராய வேண்டும். அந்த நோக் கொண்டு ஆய்வு செய்தால், தமிழகத்தில் பொதுவிநியோக முறை மிகவு திறமையாகவும் சிக்கனமாகவும் நடந்து வருகின்றது என்று துணிந் கூறலாம்.

## II இன்றியமையாப் பொருட்களின் பொது விநியோகம்.

### 1. அரிசி.

பொது விநியோக முறையின்கீழ் மாநிலம் முழுவதிலும் அரிசி வழங்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகவும் நயமாகவும் கிடைத்து வருவதால், பொதுவிநியோக முறையின்கீழ் அரிசியின் விற்பனை தற்சமயம் குறைவாகவே உள்ளது. 1976ஆம் ஆண்டில் 6 இலட்சம் டன்கள் விநியோகிக்கப்பட்டதற்கு மாறாக, 1978ஆம் ஆண்டில் 93,000 டன் களுக்குக் குறைந்தது. 1979-ல் கிராமந்தோறும் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டதன் விளைவாக, அரிசி விநியோகம் சற்று உயர்ந்து 1.50 இலட்சம் டன்கள் அளவை எட்டியது. 1980 ஆம் ஆண்டில் அரிசியின் மாதாந் திரச் செலவு சனவரி முதல் மே மாதம் வரை சராசரியாக 8 முதல் 11 ஆயிரம் டன்கள் அளவில் உள்ளது.

### 2. கோதுமை, கோதுமைப் பொருள்கள்.

தமிழகத்தில் அரிசி நிலைமை மிகவும் திருப்திகரமாக இருப்பதாலும், சிறு தானியங்கள் தாராளமாகக் கிடைப்பதாலும், பொது விநியோக முறையின்கீழ் கோதுமையின் புழக்கம் குறைந்து விட்டது. 1975 ஆம் ஆண்டில் அரிசி பற்றாக்

குறையும் விலையேற்றமும் இருந்தபோது, 4.80 இலட்சம் டன்கள் அளவில் இருந்த கோதுமையின் விற்பனை, அடுத்த மூன்று ஆண்டுகளில் குறைந்து கொண்டே வந்தது. 1978-ல் 24,000 டன்கள் விற்பனை ஆனதற்கு எதிராக 1979-ல் 8,500 டன்களே விற்பனை ஆனது. நடப்பு ஆண்டில் மாதாந்திர விற்பனை சுமார் 1,000 முதல் 1,200 டன்கள் வரையில் உள்ளது. மத்திய அரசு கோதுமையை மாநில அரசுகளுக்கு விற்கும் மொத்த விலையை உயர்த்தியுள்ள போதிலும், தமிழக அரசு பொதுமக்களுக்குச் சில்லரை விற்பனை விலைகளை உயர்த்தாமல், தொடர்ந்து கிலோ ரூ. 1.40 என்ற விலையிலேயே விற்று வருகிறது.

தமிழ்நாட்டில் 31 கோதுமை அரைவை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றிற்கு தேவைப்படும் கோதுமை தாராளமாக வழங்கப்பட்டு வருகிறது. கடந்த சில மாதங்களாக மின்வெட்டு காரணமாக இந்த ஆலைகள் முழு அளவில் இயங்க முடியாமல் தடங்கல் ஏற்பட்டது. மின்வெட்டுக் காரணமாக இந்தப் பண்டங்களில் சிறிது பற்றாக்குறை காணப்பட்டதால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஆலைகளிலிருந்து மைதா, ரவையை வாங்கி, நுகர்வோருக்கு, சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கிணங்க, மைதாவை கிலோ ரூ. 1.95 என்றும் ரவையை கிலோ ரூ. 1.90 என்றும் வழங்கி வருகிறது. அதே போன்று ரொட்டி தயாரிப்போர், உணவு விடுதிகள் போன்ற மொத்த நுகர்வோருக்கும் மைதாவை வழங்கி வருகின்றது. மே மாதத்தில் ஏறக்குறைய 3,000 டன்கள் மைதாவையும் 180 டன்கள் ரவையையும் நுகர்பொருள் வாணிபக் கழகம் விற்பனை செய்தது. இதன் காரணமாக வெளிச் சந்தையில் தட்டுப்பாடு நிலை உருவாகாமல் தடுக்கப்பட்டது.

ஒரு நாளுக்கு 30 டன்கள் அரைவைத் திறனுக்குக் குறைவாகவுள்ள சிறிய ஆலைகளை நிறுவ மாநில அரசு அனுமதி அளிக்கலாம் என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்திருந்தது. இதற்கிணங்க 11 புதிய ஆலைகளை, ஆலைகள் இல்லாத மாவட்டங்களிலும் பிற்பட்ட பகுதிகளிலும் நிறுவ, இந்த அரசு அனுமதி அளித்தது. இந்த அதிகாரத்தை மைய அரசு திரும்பப் பெற்றுக்கொண்டு, மேலும் சிறிய ஆலைகளை நிறுவ அனுமதி அளிக்க வேண்டாமென்று அண்மையில் தெரிவித்துள்ளது.



**3. சர்க்கரை விநியோகம்.**

1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் சர்க்கரை மீதான கட்டுப்பாடு அனைத்தையும் நீக்கியதையொட்டி மத்திய அரசு லெவி சர்க்கரை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை. மீண்டும் 1979ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் நாள் முதல் மத்திய அரசு லெவி சர்க்கரை விநியோக முறையைச் செயல்படுத்தியது. இத்திட்டத்தின்படி, நாட்டில் உற்பத்தியாகும் மொத்த சர்க்கரையில் 65 விழுக்காடு லெவிக்கு ஒதுக்கப்படும். எஞ்சிய 35 விழுக்காட்டை ஆலைகள் நாட்டின் எப்பகுதியிலும் எந்த விலைக்கும் விற்றுக்கொள்ளலாம். நுகர்வோருக்கு வழங்கப்படும் லெவி சர்க்கரையின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ 2.85 ஆகும்.

லெவி திட்டத்தின்கீழ் சர்க்கரை தமிழ்நாட்டிற்கு மாதம் ஒன்றுக்கு 19,780 டன்கள் என்ற அளவில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சென்னை நகரம், அதன் புறநகர்ப் பகுதி, மாவட்டத்தலைநகரங்கள் ஆகிய பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு 5 கிலோ வீதம் லெவி சர்க்கரை விநியோகம் செய்யப்படுகிறது. இதர நகராட்சிப் பகுதிகளிலும், நகரியப் பகுதிகளிலும் மற்றும் மாவட்ட தலை நகரங்களையொட்டிய புறநகர்ப் பகுதிகளிலும் மாதம் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் லெவி சர்க்கரை வழங்கப்படுகிறது. நகரப் பஞ்சாயத்துக்கள், கிராமப் பகுதிகள், ஆகியவற்றில் ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ லெவி சர்க்கரை வழங்கப்படுகிறது. கிராமப் பகுதிகளில் தற்போது வழங்கப்பட்டு வரும் அளவு மிகக் குறைவு என்றும் இதை உயர்த்தவேண்டும் என்றும் பரவலாக கோரிக்கைகள் வந்துள்ளன. இம்மாநிலத்தில் ஏறக்குறைய 106 இலட்சம் குடும்ப அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அவற்றில் கிராமப் பகுதிகளிலும் நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளிலும் ஏறக்குறைய 77 இலட்சம் குடும்ப அட்டைகள் உள்ளன. நகராட்சிப் பகுதிகளில் வழங்கப்படும் அளவுக்குக் கிராமப் பகுதிகளிலும் சர்க்கரை வழங்க வேண்டும் என்றால் ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு கிலோ சர்க்கரை கூடுதலாக வழங்க வேண்டிவரும். அதற்கு கூடுதலாக ஏறக்குறைய 15,000 டன்கள் லெவி சர்க்கரை தேவைப்படும். மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ வழங்கப்படும் பகுதிகளில் இரண்டு கிலோ வழங்க வேண்டுமென்றால்கூட மேலும் 7,600 டன்கள் லெவி சர்க்கரை தேவைப்படும். கிராமப் பகுதிகளில் சர்க்கரையின் அளவை உயர்த்துவதற்குக் கூடுதலான லெவி சர்க்கரை ஒதுக்கீடு செய்யும்படி நாம் மத்திய அரசை வற்புறுத்தி வந்துள்ளோம். ஆனால், இதுவரையில் மத்திய அரசிடமிருந்து கூடுதல் ஒதுக்கீடு கிடைக்கவில்லை. கூடுதல் ஒதுக்கீடு கிடைப்பதற்கான வாய்ப்புக் கூறுகளும் தென்படவில்லை. எனினும் கிராமங்களுக்கு அதிக சர்க்கரை வழங்குவதற்கான வசதிகளைச் செய்யும் முயற்சியில் இந்த அரசு முனைந்து ஈடு

பட்டுள்ளது. குடும்பக் கார்டுகள் தவிர, அரசு மருத்துவ நிலையங்கள், கல்வி நிலையங்களைச் சார்ந்த உணவு விடுதிகள், அனாதை இல்லங்கள், சிறைகள் ஆகியவற்றின் தேவைக்கும் லெவி சர்க்கரை விநியோகம் செய்யப்படுகிறது.

லெவி சர்க்கரை விநியோக முறை தமிழகத்தில் மிகச் சீராகவும், செம்மையாகவும் நடந்து வருகிறது. ஒவ்வொரு மாதமும் மத்திய அரசு நமக்கு ஒதுக்கீடு செய்யும் லெவி சர்க்கரையை அந்த மாதத்திற்குள்ளாகவே ஆலைகளிலிருந்து எடுத்து, நகரம் முதற்கொண்டு குக்கிராமம் வரை, விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகள் மிகக் கட்டுப்பாடான முறையில் செயல்பட்டு வருகின்றன. ஒதுக்கீடு செய்யப்படும் லெவி சர்க்கரையை ஆலைகளிலிருந்து எடுத்துச் சீராக விநியோகித்து வரும் மாநிலங்களில் தமிழகம் தலையாய இடம் பெற்றிருக்கிறது என்று மத்திய அரசு அண்மையில் நம்மைப் பாராட்டியுள்ளது.

**4. வெளிச் சந்தை சர்க்கரை நிலைமை.**

தமிழகத்தில் லெவி சர்க்கரையின் விநியோக முறை மிகச் சிறப்பாக நடந்து வந்த போதிலும், வெளிச் சந்தையில் லெவி அல்லாத சர்க்கரையின் விலை உயரும் நிலை உருவாகியுள்ளது. ஆனால், நாட்டின் பிற பகுதிகளில் வெளிச் சந்தையில் சர்க்கரை கிலோ ரூ. 7 என்ற அளவில் விற்கப்பட்டு, அதிலும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த ஒரு நிலையிலும் கூட, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் வெளிச் சந்தை சர்க்கரையின் விலை ரூ. 5.50 முதல் ரூ 6.00 வரையில்தான் இருந்து வந்தது. வெளிச் சந்தை சர்க்கரையை மத்திய அரசு ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலிருந்தும் எந்த அளவுக்கு விற்பனை செய்யலாமென நிர்ணயிக்கின்றது. வெளிச்சந்தை சர்க்கரையை ஒரு மாநிலத்திலிருந்து வேறு ஒரு மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதற்குத் தடை எதுவும் இல்லாத ஒரு நிலையில், தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து விற்கப்படும் வெளிச் சந்தை சர்க்கரையின் பெரும்பகுதி மற்ற மாநிலங்களுக்குச் சென்று விடுகிறது. சர்க்கரை நடமாட்டத்துக்குக் கட்டுப்பாடுகள் இல்லாத ஒரு நிலையில் இதைத் தவிர்ப்பதற்கில்லை. சர்க்கரை உற்பத்தியில் தமிழகம் உபரி மாநிலமாக இருந்தபோதிலும் தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து வெளிச் சந்தை சர்க்கரையின் பெரும் பகுதி வேறு மாநிலங்களுக்குச் சென்று விடுகிறது என்ற காரணத்தினால் தமிழகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டு வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலையும் உயரக்கூடிய ஒரு நிலை ஏற்படக்கூடும் என்பதை மத்திய அரசுக்கு நாம் எடுத்துக் காட்டியுள்ளோம். 1978—79 ஆம் சர்க்கரை ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது 1979-80 சர்க்கரை ஆண்டில் நாடு முழுவதும் சர்க்கரையின் உற்பத்தி ஏறக்குறைய 19 இலட்சம் டன்கள் குறைவாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த சர்க்கரை ஆண்டு உற்பத்தி இந்த ஆண்டு அக்டோபர் மாதம்தான் தொடங்கும். வெளிச் சந்தை சர்க்கரையின் விலை ஏற்றத்தைத் தடுப்பதற்குத் தீவிர நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. மொத்த வியாபாரிகள் சர்க்கரையைப் பதுக்கி வெளிச் சந்தை விலையை உயர்த்திவிடாமல் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றது. மேலும் வெளிச்சந்தை சர்க்கரை பல வியாபாரிகள் கைமாறி, இறுதியில் சில்லரை விற்பனை விலை கட்டுக்கு மேல் உயர்ந்துவிடுவதைத் தடுக்கும் பொருட்டு, ஒரு மொத்த வியாபாரி மற்றொரு மொத்த வியாபாரிக்கு சர்க்கரையை விற்பனை செய்யக்கூடாது என்றும், சில்லரை வியாபாரிகளுக்கும் மொத்த நுகர்வோருக்கும் மட்டுமே விற்கலாம் என்றும் மத்திய அரசின் ஒப்புதலோடு இந்த அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது.



மேலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வெளிச் சந்தை சர்க்கரையை சர்க்கரை ஆலைகளிடமிருந்து வாங்கி மொத்த நுகர்வோருக்கு வெளிச்சந்தை விலையைவிடக் குறைந்த விலையில் விநியோகம் செய்து வருகிறது. 1980 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதற்கொண்டு வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலை உயர்ந்த நிலையில், உணவு விடுதிகள், ரொட்டி தயாரிப்போர், தனியார் மருத்துவமனைகள் போன்ற மொத்த நுகர்வோர் நலனை முன்னிட்டு, அவர்களுக்கும் திருமணம் போன்ற விழாக்களுக்கும் வெளிச சந்தை விலைகளைவிடக் குறைவான விலையில் கழகம் விற்று வந்தது. முன்னெச்சரிக்கையாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கணிசமான அளவு வெளிச்சந்தை சர்க்கரையை வாங்கி வைத்திருந்த காரணத்தினால்தான் இந்த ஏற்பாட்டைச் செய்ய முடிந்தது. இந்த ஏற்பாட்டை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று மத்திய அரசு அறிவுரை கூறியுள்ளதே, தமிழக அரசு எடுத்துக்கொண்ட முயற்சிக்குச் சிறந்த பாராட்டுதலாகும். வருகின்ற அக்டோபர் மாதத்தில் தொடங்கும் சர்க்கரை ஆண்டில் ஆலைகளில் சர்க்கரை உற்பத்தியாகி, வெளிச் சந்தையில் சர்க்கரை விலை மீண்டும் நிதானப்படும் வரை வெளிச் சந்தை விலைகளை விடக் குறைவான விலைக்கு விற்க, முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**5. மண்ணெண்ணெய் விநியோகம்.**

மண்ணெண்ணெய் விநியோகம் உணவுத்துறையின் அதிகார வரம்புக்கு உட்பட்டது. டீசல், பெட்ரோல் ஆகியவற்றின் விநியோகத்தை உள்துறை கவனித்து வருகிறது.

நாடு முழுவதும் பெட்ரோலியம் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டின் விளைவாக தமிழகத்திற்கு மத்திய அரசு செய்து வந்த மண்ணெண்ணெய் ஒதுக்கீடு கடந்த ஆண்டு குறைந்தது. எனவே மண்ணெண்ணெய், நுகர்வோர் அனைவருக்கும் அரசு நிர்ணயித்த விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யும் வகையில், பொது விநியோக முறையின்கீழ் மண்ணெண்ணெய் விநியோகத்தை அரசு மேற்கொள்ள முடிவு செய்தது. அதன்படி மண்ணெண்ணெய் குடும்ப அட்டைகளின் பேரில் விநியோகம் செய்யப்படுகிறது. சென்னை நகரிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும், மாவட்ட தலைநகரங்களிலும் மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு 10 லிட்டர்கள் விதம் வழங்கப்படுகிறது. மற்ற நகராட்சிப் பகுதிகளில் 6 லிட்டர்களும், நகரியங்கள், நகரப் பஞ்சாயத்துக்கள் ஆகிய பகுதிகளில் 5 லிட்டர்களும், கிராமப் பகுதிகளில் 3 லிட்டர்களும் மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு வழங்கப்படுகின்றன. 1980 ஆம் ஆண்டு சனவரி முதற்கொண்டு மத்திய அரசு இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ள மண்ணெண்ணெய் அளவின் விவரம் பின்வருமாறு :—

| | மெட்ரிக் டன்களில் |
|---|---|
| சனவரி | 32,344 |
| பிப்ரவரி | 27,274 |
| மார்ச்சு | 30,780 |
| ஏப்ரல் | 26,959 |
| மே | 27,870 |
| சூன் | 24,820 |
| சூலை | 26,151 |

கடந்த ஆண்டு அந்தந்த மாதத்தில் எவ்வளவு விநியோகம் செய்யப்பட்டதோ, அதற்குக் கூடுதலாக ஒரு குறிப்பிட்ட விழுக்காடு அளவிற்கு உயர்த்தி இந்த ஆண்டில் மண்ணெண்ணெய் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என மத்திய அரசு தெரிவித்திருந்தது. ஆனால் சில மாதங்களில் இந்த அடிப்படையில் கூட நமக்குக் கிடைக்கவேண்டிய ஒதுக்கீடு முழுமையாகக் கிட்டவில்லை. தமிழகத்தின் குறைந்த பட்சத் தேவை மாதம் ஒன்றுக்கு



30,000 மெட்ரிக் டன்கள் ஆகும். மின்வெட்டு உள்ள காலங்களிலும் குளிர் காலப் பருவத்திலும் மண்ணெண்ணெயின் தேவை அதிகமாக இருக்கும் எனவே சென்ற ஆண்டு ஒதுக்கீட்டை அடிப்படையாகக் கொள்ளாமல், ஒவ்வொரு மாதத்திற்கும் நிர்ணயமாகக் குறைந்த பட்சத் தேவைக்கேற்ப, ஒதுக்கீடு செய்து, வாய்ப்பு இருந்தால், அதை உயர்த்தித்தர வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு தெரிவித்துள்ளது. இதன்படி ஒரு மாதத்தில் குறைவாக பதிலாக மூன்று மாதத்திற்கு எவ்வளவு தேவை என்பதை மத்திய அரசு நிர்ணயித்து ஒதுக்கீடு செய்யவேண்டுமென்ற கருத்தையும் மாநில அரசு மத்திய அரசுக்கு தெரிவித்துள்ளது. இதன்படி ஒரு மாதத்தில் குறைவாக மண்ணெண்ணெய் பயன்படுத்தப்பட்டாலும் அடுத்த மாதங்களில் தேவையிருக்கும்பொழுது, கூடுதலாகப் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் இந்த யோசனையை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

குடும்ப அட்டைகளின்பேரில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இயங்கி வருகின்ற நியாய விலைக் கடைகளின் மூலமாக மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. இது தவிர, மண்ணெண்ணெய்த் தொழிலையே நம்பிப் பல கைவண்டிக்காரர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கும் தொடர்ந்து மண்ணெண்ணெய் வழங்குவது என அரசு முடிவு செய்தது. அதன்படி சென்னை நகரத்திலுள்ள 1,023 கைவண்டிக்காரர்களுக்கு நாள் ஒன்றுக்கு 100 லிட்டர்கள் மண்ணெண்ணெய் சில்லறை விற்பனைக்காக வழங்கப்படுகிறது. இதை அவர்கள் கார்டு அடிப்படையில் இல்லாமல் பொது மக்களுக்கு அரசு நிர்ணயித்த விலையில் விநியோகம் செய்யவேண்டும். இதே போன்று இதர மாவட்டங்களில் 1,817 கைவண்டிக்காரர்களுக்கு நாள் ஒன்றுக்கு 50 லிட்டர்கள் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. கைவண்டிக்காரர்கள் தவிர சில சில்லரை வியாபாரிகளும் மண்ணெண்ணெய்த் தொழிலையே நம்பி இருப்பதாகவும், எனவே அவர்களுக்கும் மண்ணெண்ணெய் விற்பனைக்கு வழங்கப்படவேண்டும் என்றும் கோரிக்கைகள் வந்தன. அவற்றைப் பரிசீலித்து சென்னை நகரைத் தவிர மற்ற மாவட்டங்களில் மண்ணெண்ணெய்த் தொழிலையே நம்பியிருந்த சில்லரை வியாபாரிகளுக்கு, 500-க்கு மேற்படாமல் குடும்ப அட்டைகளை இணைத்து அந்த அட்டைகளின்பேரில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்படி 2,383 சில்லரை வியாபாரிகள் பயன் அடைந்தனர். சென்னை நகரம், அதன் புறநகர்ப் பகுதிகளைப் பொறுத்தவரையில் கைவண்டிக்காரர்களுக்கு வழங்கப்படுவதுபோல் நாள்

ஒன்றுக்கு 100 லிட்டர்கள் வீதம் மண்ணெண்ணெய்த் தொழிலையே நம்பி இருக்கும் 154 சில்லரை வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்திற்கு மத்திய அரசு ஒவ்வொரு மாதமும் ஒதுக்கீடு செய்யும் மண்ணெண்ணெய்யில் ஏறக்குறைய 20 விழுக்காடு, குடும்பக்கார்டு அடிப்படையில் அல்லாமல் கைவண்டிக்காரர்கள், தனியார் சில்லரை வியாபாரிகளுக்கும் வழங்கப்படுகிறது. இதற்கு மேற்பட்ட அளவில் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்தால், அந்த அளவுக்கு மண்ணெண்ணெய்யின் பொது விநியோக முறை பலவீனமடையும். இது பொதுநலனுக்கு உகந்ததல்ல.

மண்ணெண்ணெய் சில்லரை விற்பனை விலை சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் விலை ரூ. 1.55. சென்னை நகரின் புறநகர்ப் பகுதிகளில் ஒரு லிட்டர் விலை ரூ. 1.56. மாவட்டங்களில் மண்ணெண்ணெய்யின் சில்லரை விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.59 முதல் ரூ. 1.76 வரை உள்ளது.

**மண்ணெண்ணெய் விநியோகம்—பொதுப் பிரச்னைகள்.**

அனைத்து நாட்டு நிலைமையையொட்டி பெட்ரோலியம் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், இன்னும் சிறிது காலத்திற்கு நமக்குத் தேவையான அளவு கிடைப்பது உறுதியில்லை என்ற நிலையில், பொதுமக்களுக்கு இன்றியமையாத மண்ணெண்ணெய்யைப் பொது விநியோக முறையின் கீழ் விநியோகிக்க முடிவு செய்து, அம்முறையைத் திறமையாகச் செயல்படுத்தி வருவதன் மூலம், இந்த அரசு இப்பிரச்னையை கட்டுப்படுத்த முடிந்துள்ளது. இதன் பயனாகக் குக்கிராமங்களுக்கும் மண்ணெண்ணெய் எளிதில் நியாயமான விலையில் கிட்டும் வாய்ப்பு உருவாகியுள்ளது. மாநிலத்திற்குச் செய்யப்படும் மண்ணெண்ணெய்யின் ஒதுக்கீட்டை உயர்த்தவேண்டுமென்று நாம் மைய அரசிடம் வற்புறுத்தி வருகிறோம். ஆனால் நாடு முழுவதுமுள்ள நெருக்கடி நிலையிலே அவர்கள் இக்கோரிக்கையை ஏற்பதற்கான வாய்ப்புக்கூறுகள் அதிகமில்லை. ஆகவே கிடைக்கும் அளவைச் சீராக விநியோகிப்பதுதான் இப்பிரச்னையைத் தீர்க்க நாம் எடுக்கக் கூடிய உடனடியான நடவடிக்கையாகும். இப்பிரச்னைக்கு நிரந்தரமாகத் தீர்வு காணப் பல ஆலோசனைகளையும் இந்த அரசு மைய அரசு முன் வைத்துள்ளது. சில்லரை விநியோகப் பொறுப்பைப் பொது விநியோக முறையின்கீழ் அரசு சார்பு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாலும், சில்லரை விற்பனையை மட்டுமே நடத்துவது அந்த நிறுவனங்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தினாலும், மண்ணெண்ணெய் மொத்த வியாபார



உரிமையிலும் இந்த நிறுவனங்களுக்குப் பங்கு அளிக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தியுள்ளோம். இக்கோரிக்கை கொள்கை அளவில் மைய அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். பெட்ரோலியம் பொருட்களைச் சேகரித்து வைக்கும் நிலையங்கள் பெட்ரோலியம் கம்பெனிகளின் பொறுப்பில் உள்ளன. தமிழகத்தில் 16 மாவட்டங்களில் இப்பொழுது 6 மாவட்டங்களில்தான் இந்த நிலையங்கள் அமைந்துள்ளன. மற்ற மாவட்டங்களுக்குத் தேவைப்படும் மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் போன்றவற்றை இந்த மாவட்ட நிலையங்களிலிருந்துதான் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. போக்குவரத்துச் செலவுகள் அதிகமாகி உள்ள சூழ்நிலையில், இதில் பல சிக்கல்களும் தாமதங்களும் ஏற்படுகின்றன. ஆகவே அடுத்த மூன்று ஆண்டு காலத்திற்குள்ளாவது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நிலையத்தை நிறுவுவதற்கு மைய அரசு ஒரு திட்டத்தை வகுக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்தியுள்ளோம்.

சமையல் வாயு விநியோகத்தில் இன்று மாநில அரசுக்குப் பங்கும் பொறுப்பும் சிறிதும் இல்லை. சமையல் வாயு விநியோகத்தில் தடங்கல் ஏற்படும்பொழுது மண்ணெண்ணெய்யின் தேவையும் அதிகமாகிவிடுகிறது. ஆகவே இந்த நிலையைச் சீர்படுத்த சமையல் வாயு விநியோகத்திலும் மாநில அரசைச் சார்ந்த நிறுவனங்களுக்குப் பங்கு அளிக்கவேண்டுமென்று நாம் மைய அரசிடம் கோரியுள்ளோம். இப்பிரச்னைக்கு நிரந்தரமாகத் தீர்வு காண நாம் நீண்டகால நோக்குடன் செய்துள்ள பரிந்துரைகளை மைய அரசு வெகு விரைவில் பரிசீலித்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றோம். இதற்கிடையில் நமக்குக் கிடைக்கும் மண்ணெண்ணெய்யைச் சீராக விநியோகம் செய்வதிலும், இந்த விநியோகத்தைக் கண்காணிக்க வெளியிடப்பட்டுள்ள ஆணைகள் மீறப்படாமல் முன் எச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுப்பதிலும், மீறப்படுகின்ற நேரத்திலே கடுமையான நடவடிக்கை எடுப்பதிலும், நாம் முனைந்து செயல்பட்டு வருகிறோம்.

**III கிராமந்தோறும் நியாய விலைக் கடைகள்.**

இந்த அரசு 1977 ஆம் ஆண்டில் பொறுப்பேற்றவுடன் சட்டப் பேரவையில் ஆளுநர் நிகழ்த்திய முதல் உரையிலேயே, வருவாய் கிராமம் ஒவ்வொன்றிலும் ஒரு நியாய விலைக் கடை திறக்கப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. இதற்குப் பின் ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர்தான் அனைத்திந்திய அடிப்படையில், பொது விநியோக முறையைப் பலப்படுத்த, கிராமங்

களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்படவேண்டுமென்ற திட்டம் ஒன்று மத்திய அரசினால் மாநிலங்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. மத்திய அரசின் பரிந்துரைக்கு முன்பே இத்திட்டத்தைச் செயல்படுத்திய பெருமை தமிழகத்துக்கு உரியது. நம் மாநிலத்தில் இப்பொழுது ஏறத்தாழ 17,000 சில்லரை விற்பனைக் கடைகள் நியாய விலைக் கடைகளாகச் செயல்பட்டு வருகின்றன. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், மற்ற மாநிலங்களில் இக்கடைகள் பெரும்பாலும், தனியார் வியாபாரிகளால் நடத்தப்படுகின்றன. ஆனால், தமிழகத்தில் இக்கடைகள் அனைத்துமே தமிழக அரசால் அமைக்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், கூட்டுறவு நிறுவனங்களாலுமே நடத்தப்படுகின்றன. மாநிலத்திலுள்ள 17,000 நியாய விலைக் கடைகளில் 15,000-க்கு மேற்பட்ட கடைகள் கிராமப் பகுதிகளில் இருக்கின்றன. திருநெல்வேலி, தென்னார்க்காடு, தஞ்சாவூர், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமும் மற்ற மாவட்டங்களில் இப்பொறுப்பு கூட்டுறவுத் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்பு ரேஷன் கடைகளில், அரிசி, கோதுமை, லெவி சர்க்கரை ஆகியவை மட்டுமே விற்கப்பட்டு வந்தன. அவை தவிர, பொது மக்களின் அன்றாடத் தேவைக்கான இன்றியமையாப் பொருட்களில் முக்கியமானவற்றையும் இக்கடைகளில் விற்பனை செய்யும் வகையில் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில், பருப்பு, பயறு வகைகள், புளி, மிளகாய், உப்பு, தீப்பெட்டிகள் ஆகியவையும் இக்கடைகளில் விற்கப்படுகின்றன. ஏறக்குறைய சென்ற ஒரு ஆண்டுக்கு முன்னரே மண்ணெண்ணெய் விற்பனையையும் இக்கடைகள் தொடங்கிவிட்டன. மத்திய அரசு இறக்குமதி செய்துள்ள சமையல் எண்ணெய்களில் ஒன்றான 'பாமோலின்' எண்ணெய் விற்பனையும் இக்கடைகள் மூலம் நடந்து வருகின்றது.

தொடக்க கட்டத்தில் இக்கடைகளில் இழப்பு ஏற்படும் என்பதை அறிந்த அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆண்டுக்கு ரூபாய் 4 கோடி மான்யமாக வழங்கி வருகின்றது. இந்த மான்யத் தொகையில் பாதியையாவது ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நாம் மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்துள்ளோம். இதுவரை மத்திய அரசு நமக்கு மானியத் தொகையை வழங்க முன்வராதது, நமக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இந்த நியாய விலைக் கடைகள் சீராகச் செயல்படுகின்றனவா என்பதை அவ்வப்போது தணிக்கை செய்ய, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவு அமைப்புகளும் தணிக்கைப் பிரிவுகளை அமைத்துள்ளன.



இது தவிர இக்கடைகளை மேற்பார்வை செய்து, ஒழுங்கீனங்களைக் கண்டுபிடிக்கவும், கடைகள் செம்மையாக நடக்கப் பரிந்துரைகள் செய்யவும், மாவட்ட ஆட்சித் தலைவர் முதலாக, வட்ட ஆட்சித் தலைவர் ஈறாக, பல்வேறு அதிகாரிகளும் அவ்வப்போது பார்வையிட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. உணவு குற்றப் புலனாய்வுத் துறைக் காவலர் பிரிவும் கடைகளைப் பார்வையிடுகின்றது.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கடையை அமைக்கும் பணி ஏறக்குறைய நிறைவு பெற்றுவிட்டது. திட்டத்தின் தொடக்க கட்டத்தில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களும் நிர்வாகத் தடங்கல்களும் ஏற்பட்டபோதிலும், மொத்தத்தில் இத்திட்டம் வெற்றிகமாகவே செயல்பட்டு எந்த நோக்கத்துடன் கொண்டுவரப் பட்டதோ அதை நிறைவேற்றி வருகிறது என்பதில் நாம் மன நிறைவு கொள்ளலாம்.

## IV வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள்.

இன்றியமையாப் பண்டங்களின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தி, அவை நயமான விலையில் பொது மக்களுக்குத் தாராளமாகக் கிடைக்க வழி செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள் நடைமுறையில் உள்ளன :—

1. தமிழ்நாடு நெல், அரிசி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.
2. தமிழ்நாடு கோதுமை, கோதுமைப் பொருள்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.
3. தமிழ்நாடு மணிலா, மணிலாப் பொருள்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.
4. தமிழ்நாடு வனஸ்பதி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.
5. தமிழ்நாடு சர்க்கரை வர்த்தகர்கள் உரிமம் வழங்கும் ஆணை, 1962.
6. தமிழ்நாடு பயிறுகள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1978.
7. தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1973.

வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளின்கீழ், வணிகர்கள் வியாபாரம் செய்வதற்கு, உரிமம் பெறவேண்டும். மொத்த வியாபாரம் செய்யும் வணிகர்களுக்கு உரிமங்களும், சில்லரை வியாபாரம் செய்யும் வணிகர்களுக்கு பதிவுச்

சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. உரிமங்களைப் புதுப்பிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தி ஒவ்வொரு ஆண்டும் உரிமத்தைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். நெல், அரிசி வர்த்தகத்தை பொறுத்த வரை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்துக் கொண்டால் போதுமானதாகும். வர்த்தகர்கள் இன்றியமையாப் பண்டங்களை முடக்கிவைத்து செயற்கையாகத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையைத் தவிர்க்கும் பொருட்டு, வர்த்தகர்கள் ஒரே சமயத்தில் கையிருப்பில் வைத்துக் கொள்ளும் அளவிற்கு உச்ச வரம்பு, வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சமையல் எண்ணெய், பயறுவகைகள், எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரையில் மைந்திய அரசு உச்ச அளவுகளை நிர்ணயித்து ஆணை பிறப்பித்துள்ளது. வர்த்தகர்கள் தாங்கள் கொள்முதல் செய்த அளவு, விற்ற விவரங்கள், இறுதி இருப்பு ஆகிய விவரங்களை உரிமங்கள் வழங்கும் அலுவலருக்கு இரு வாரங்களுக்கு ஒருமுறை அனுப்ப வேண்டும்.

பல வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள் இருப்பதால் தங்களுக்கு நடைமுறையில் பல சங்கடங்கள் உள்ளதெனவும் ஒவ்வொரு ஆண்டும் உரிமங்களைப் புதுப்பிக்க வேண்டியுள்ளதெனவும் எல்லா இன்றியமையாப் பண்டங்களிலும் வர்த்தகம் செய்ய ஒரே உரிமம் வழங்கும் முறையைக் கொண்டுவரவேண்டுமென்றும் வர்த்தகர்களிடமிருந்து கோரிக்கைகள் பரவலாக வந்துள்ளன. இவற்றைப் பரிசீலித்து, வர்த்தகர்களின் கோரிக்கையை ஏற்று, மண்ணெண்ணெய், சர்க்கரை நீங்கலாக, மேற்சொன்ன ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற பொருள்களுக்கு ஒரே உரிமம் வழங்குவதென்று அரசு முடிவு செய்துள்ளது. வர்த்தக சமுதாயத்தின் நலனைக் கருதி அரசு எடுத்துள்ள இந்த முடிவை வர்த்தக சமுதாயம் வரவேற்கும் என்று அரசு நம்புகிறது. புதிய திட்டத்தின்கீழ் உரிமங்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தால் போதுமானது என்றும் விதி செய்யப்படும்.

### V அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குதல்.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய, 15,000 அரைவை ஆலைகள் உள்ளன. இவற்றில் சுமார் 6,000 ஆலைகள் மொத்த வணிகம் செய்யும் பெரிய ஆலைகள். மற்றவை சில்லரை வணிகர்களுக்கும், விவசாயிகளுக்கும் கூலி அரைவை செய்பவை. அரைவை செய்யப்படும் அரிசியின் தரத்தை உயர்த்தவும், நெல்லிலிருந்து கிடைக்கும் அரிசியின் அளவை உயர்த்தவும், அரிசி அரைவை ஆலைகளில் நவீன இயந்திரங்கள் பொருத்தவேண்டுமென்று மத்திய அரசு



1970 ஆம் ஆண்டிலேயே ஆணையிட்டது. நவீன இயந்திரங்கள் வாங்குவதில் சிரமமிருக்கிறதென்று ஆலை அதிபர்கள் முறையீடுகள் செய்ததன் பேரில், இம் மாநில அரசு செய்த பரிந்துரையை ஏற்று, மத்திய அரசு, நவீன இயந்திரங்களைப் பொருத்துவதற்கான காலக்கெடுவை அவ்வப்போது நீட்டித்து வந்தது.

ஒரு ஹல்லருக்கு மேல் பொருத்தப்பட்ட ஆலைகள், ஷெல்லர் பொருத்தப்பட்ட பழைய ஆலைகள், ஆகியவற்றில் நவீன இயந்திரங்களைப் பொருத்துவதற்கான காலக்கெடு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள் வரையில் மட்டும் கொடுக்கப்பட்டிருந்தது. மாநில அரசின் பரிந்துரையை ஏற்று இந்தக் காலக்கெடுவை 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள் வரை மத்திய அரசு நீட்டித்து ஆணையிட்டுள்ளது.

பல்வேறு ரக அரைவை ஆலைகளுக்கு நவீன இயந்திரங்கள் பொருத்த வேண்டிய காலக்கெடு கீழே விவரிக்கப்பட்டுள்ளது:—

<u>ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர் அல்லது ஷெல்லர்</u>
<u>பொருத்தியுள்ள ஆலைகள்.</u>

| ஏற்கனவே இயங்கும் ஆலைகள். | கால அவகாசம். |
|---|---|
| 30—4—1975க்கு முன் உரிமம் பெற்றவை. | 30—4—1981 வரை. |
| புதிய ஆலைகள்— | |
| 30—4—1977க்கு முன்பு கட்டிடம் கட்டி, இயந்திரங்களைப் பொருத்தி உரிமத்திற்கும் மனு 30—4—1977க்கு முன்பு செய்யப்பட்டவை. | உரிமம் வழங்கப்படும் நாளிலிருந்து ஓராண்டுக் காலம். |
| 30—4—1977க்குப் பின் நிறுவப்பட்ட அல்லது உரிமத்திற்கு மனுச்செய்யப்பட்ட புதிய ஆலைகள். | உரிமம் வழங்கப்படுவதற்கு முன் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். |

<u>ஒரே ஒரு ஹல்லர் பொருத்தப்பட்ட ஆலைகள்—</u>

| | |
|---|---|
| ஏற்கெனவே இயங்கும் ஆலைகள். | 6—9—1981 வரை. |
| புதிய ஆலைகள்— | |
| 15 குதிரை வேகத்திற்குக் குறைவான மோட்டாருடன், கிராமப் பகுதிகளில் நெல்லை வேக வைத்துப் புழுங்கல் அரிசியாகத் தயாரிக்கும் வசதிகளில்லாமலும் வாடிக்கைக்காரர்கள் கொண்டு வரும் நெல்லை அப்படியே அரைவை செய்தும் வரும் ஆலைகள். | உரிமம் வழங்கப்படும் நாளிலிருந்து ஐந்தாண்டுக் காலம். |
| மற்ற புதிய ஆலைகள் (அதாவது நகரப் பகுதிகளிலுள்ள ஆலைகளும் 15 குதிரை வேகத்திற்கு மேற்பட்ட மோட்டார் பொருத்தப்பட்ட கிராமப் பகுதிகளில் உள்ள ஆலைகளும்). | உரிமம் வழங்கும் முன்பாகவே நவீன இயந்திரங்கள் பொருத்தப் பட்டிருக்க வேண்டும். |

அரைவை ஆலைகளை நவீனமயமாக்குவதில் ஆலையாளர்க்கு அறிவுரைகள் வழங்கவும், அவர்களுக்குத் தேவையான கடன் வசதிகளைப் பெறுவதில் உதவுவதற்கும், அரசு ஒரு குழுவை உணவு வழங்கு துறையின் இணை ஆணையாளர் தலைமையில் நியமித்துள்ளது. இக்குழுவில் சில மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர் சங்கங்களின் தலைவர்களும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழு இதுவரையில் நான்கு கூட்டங்களை நடத்தியுள்ளது. ஆலைகளை நவீனமயமாக்குவதில் உள்ள சிரமங்களை இக்குழுவில் விவாதித்து அதன் தொடர்பாகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. குறிப்பாக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி அக்கழகத்தின் மூலமாக ஆலையாளர்க்குக் கடன் வசதி ஏற்பாடு செய்யப்பட்டது. நவீனமயமாக்கப்படும் ஆலைகளுக்குக் கூடுதல் மின் சக்தி தேவை. அதைப் பெறுவதற்கு செல்நிலைச் சான்றிதழ் (Solvency Certificate) பெறவேண்டுமென தமிழ் நாடு மின்சார வாரியம் நிர்ணயித்திருந்த விதி தளர்த்தப்பட்டுள்ளது. ஆலைகளை நவீனமயமாக்கப் புது இயந்திரங்களைப் பொருத்த அனுமதி கோரும்பொழுது, சுகாதாரத் துறை அந்த ஆலைகளில் சில மாறுதல்களைச் செய்யவேண்டுமென கட்டாயப் படுத்துவதாகவும், ஆனால் அவை சாத்தியமற்றவையெனவும் குழுவில் தெரிவிக்கப்பட்டதையொட்டி, நவீனமயமாக்கும் அரிசி அரைவை





ஆலைகளைப் பொறுத்தவரை, இத்தகைய நிபந்தனைகளைக் கடுமையாகச் செயல்படுத்த வேண்டாமென அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. அரசு அதனை ஏற்றுக்கொண்டு, போதிய பாதுகாப்பு வசதிகள் இருந்தால் அத்தகைய ஆலைகளின் கட்டிட அமைப்பில் மாறுதல் செய்ய வற்புறுத்த வேண்டாமென 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 6 ஆம் நாள் அன்று மக்கள் நல்வாழ்வுத் துறையிலிருந்து ஆணை பிறப்பித்துள்ளது.

## VI. விலைவாசிகள் நிலைமை.

பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதற்கொண்டு அக்டோபர் வரை, அறுவடையோ, விவசாயப் பொருட்கள் உற்பத்தியோ அதிகம் இல்லாத பருவம். இப் பருவத்தில் விலைவாசிகள் சற்று ஏறுமுகமாக இருப்பது ஆண்டு தோறும் காணப்படும் போக்கு. மேலும் விலைவாசிகள் உயர்வுக்கான காரணங்கள் மாநில அரசுகளின் கொள்கைகளுக்கு முற்றிலும் உட்பட்டவை அல்ல. மத்திய அரசு பின்பற்றும் நிதிக் கொள்கை, நாணயப் புழக்கம், வங்கி தரும் நிதி உதவி, இறக்குமதி ஏற்றுமதிக் கொள்கைகள், பல்வேறு மாநிலங்களுக்கு இடையே இன்றியமையாப் பொருட்களின் நடமாட்டம், போக்கு வரத்துச் செலவுகள், ரெயில்வேக்களில் சரக்குப் பெட்டிகள் கிடைக்கும் வாய்ப்புகள், பெட்ரோல், டீசல் போன்றவற்றின் விலை உயர்வுகள்—இவையெல்லாம் விலைவாசிகளைப் பெரிதும் பாதிக்கின்றன. மாநில அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு தீவிரமாக எடுத்து விலைவாசிகளைத் தன்னால் இயன்ற வரை கட்டுப்படுத்த முயன்று வருகிறது.

### அரிசியின் விலை.

சென்ற ஆண்டில் நிலவி வந்த விலைகளுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு அரிசியின் விலை கிலோவுக்குச் சராசரி 25 பைசா கூடியுள்ளது. இந்த விலை உயர்வுக்கு முக்கிய காரணம், இந்த ஆண்டு வட மாநிலங்கள் பல வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால் நெல் உற்பத்தியாகும் தென் மாநிலங்களிலிருந்து அங்கு அரிசி பெருமளவில் செல்வதேயாகும். மற்றொரு காரணம், நெல்லின் உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பதினால் விவசாயிகள் விற்கும் விலை உயர்ந்துள்ளது. இருந்தபோதிலும் தமிழகத்தில் அரிசியின் வெளிச் சந்தை விலைகள் மொத்தத்தில் நிதானமாகவே உள்ளன. நம் கையிருப்பும் கணிசமாக இருப்பதால் பொது விநியோக முறையில் அரிசியின் விநியோகத்தை விரிவு படுத்தி வெளிச் சந்தையில் விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

**சிறு தானியங்கள்.**

கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற சிறு தானியங்களின் விலைகளும் கட்டுக்கடங்கிய கிலோ சுமார் ரூபாய் 1.30 வாக்கில் நிலவி வருகின்றன.

**பயறு, பருப்பு வகைகள்.**

பயறு, பருப்பு வகைகளைப் பொறுத்தவரையில் தமிழகம் எப்பொழுதுமே பற்றாக்குறை மாநிலமாகத்தான் இருந்து வருகிறது. கடலைப் பருப்பு, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவற்றில் நம் மாநிலத்தில் உற்பத்தியாகும் அளவுக்கும் புழக்கத்திற்கு இங்கே தேவைப்படும் அளவுக்கும் ஏறத்தாழ ஐந்து இலட்சம் டன்கள் குறைபாடு இருந்து வந்துள்ளது. மேலும் இந்த ஆண்டு பல வட மாநிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால் பருப்பு வகைகள் உற்பத்தியாகும் அம் மாநிலங்களின் உற்பத்தி நிலையங்களிலேயே விலைகள் கூடிவிட்டன.

கடலைப் பருப்பைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டைவிட விலை கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய்க்குமேல் கூடியுள்ளது. இதற்குக் காரணம் வட மாநிலங்களில் இவ்வாண்டு உற்பத்தி பெருமளவு, வறட்சி காரணமாகக் குறைந்துள்ளது. கடலை அயல்நாடுகளில் பயிர் செய்யப்படாததால், அதை இறக்குமதி செய்யவும் வாய்ப்பில்லை.

துவரம் பருப்பைப் பொறுத்தவரையில், வெளிச்சந்தையில் விலை கிலோவிற்குச் சுமார் ரூபாய் 4.75 ஆக உள்ளது. சென்ற ஆண்டும் இதே விலைதான் நிலவி வந்தது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், தரத்தைப் பொறுத்து, கிலோ ரூபாய் 3.88 முதல் ரூபாய் 4.25 வரை உள்ள விலைகளில் விற்று வருகின்றது.

உளுத்தம் பருப்பைப் பொறுத்தவரையில் வெளிச் சந்தையில் விலை சென்ற ஆண்டைப் போல் கிலோ ரூபாய் 4.15 அளவில் உள்ளது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் உளுத்தம் பருப்பைக் கிலோ ரூபாய் 3.50 அளவில் விற்று வருகிறது. துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவற்றைப் பொறுத்தவரை, உள்நாட்டில் உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்த போதிலும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாகப் பற்றாக் குறை ஈடு செய்யப்பட்டு, விலைகளும் நிதானமாகவே உள்ளன.



**சமையல் எண்ணெய்கள்.**

சமையல் எண்ணெய்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் அதிகம் புழங்குவது கடலை எண்ணெய்தான். வெளிச் சந்தையில் கடலை எண்ணெய்யின் விலை கிலோ ஒன்றுக்கு இப்பொழுது சுமார் ரூபாய் 10.90 அளவில் அமைந்துள்ளது. விலை உயர்விற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று அனைத்திந்தியாவிலும், குறிப்பாக தமிழ்நாட்டிலும், இவ்வாண்டு கோடை மணிலாப் பயறு உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டது. மற்றொன்று, தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவில் வேறு மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதேயாகும். கடலை எண்ணெய் அல்லது மணிலாப் பயறு ஆகியவற்றை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதை ஒழுங்குபடுத்தத் தடைகள் எதையும் மாநில அரசு விதிக்கக் கூடாதென்பதில் மத்திய அரசு கண்டிப்பாக உள்ளது.

நல்லெண்ணெய்யைப் பொறுத்தவரையில் நம்முடைய தேவைகளில் பெரும் பகுதி ஆந்திராவிலிருந்தும், ராஜஸ்தானிலிருந்தும் வருகிறது. அந்த மாநிலங்களிலேயே உற்பத்திக் குறைவின் காரணமாக விலைகள் உயர்ந்துவிட்டன. சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 8.50 என்ற விலையில் விற்று வந்த நல்லெண்ணெய் இப்பொழுது கிலோ ரூபாய் 13.00 முதல் ரூபாய் 14.00 வரை விற்று வருகிறது.

தேங்காய் எண்ணெய்யின் புழக்கம் தமிழகத்தில் அதிகமில்லை. நம்முடைய தேவை முழுவதும் கேரள மாநிலத்திலிருந்துதான் வருகிறது. சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 13.00 என்ற விலையில் விற்று வந்த தேங்காய் எண்ணெய் இப்பொழுது ரூபாய் 16.00 அளவில் விற்று வருகிறது. இதற்குக் காரணம் உற்பத்தி மாநிலத்திலேயே விலைகள் கணிசமாக உயர்ந்து விட்டதேயாகும்.

சமையல் எண்ணெய்களின் விலைகளைக் குறைப்பதற்கு மத்திய அரசு எடுத்துக்கொண்டுள்ள முக்கிய நடவடிக்கை, சில வகை சமையல் எண்ணெய்களை அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விநியோகிப்பதுதான். அவர்கள் இறக்குமதி செய்யும் எண்ணெய்களின் பெரும் பகுதி கடுகு எண்ணெய் இனத்தைச் சேர்ந்தது. இந்த எண்ணெய், வங்காளம், ராஜஸ்தான், ஒரிஸா போன்ற வட மாநிலங்களில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் இதைப் பொது மக்கள் பயன்படுத்துவதேயில்லை. மத்திய அரசு இறக்குமதி செய்யும் 'பாமோலின்' என்ற எண்ணெய் வகை

மட்டுமே தமிழக மக்களுக்கு ஏற்புடையதாய் உள்ளது. இதில் நாம் மத்திய அரசிடமிருந்து மாதம் 1,000 டன்கள் ஒதுக்கீடு பெற்றுப் பொது விநியோக முறையில் விற்று வந்தோம். இப்பொழுது மாதம் 2,000 டன்கள் அளவில் பெற்று விநியோகம் செய்யும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். 'பாமோலின்' விற்பனையை விரிவுபடுத்துவதன் மூலம், சமையல் எண்ணெய் விலைகளை ஓரளவு நிதானப்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கின்றோம். 'பாமோலின்' விற்பனை விலை கிலோ ரூபாய் 8.25.

**புளி.**

நம் மாநிலத்தின் தேவைகளில் முக்கால் பங்கு வெளி மாநிலங்களிலிருந்து, குறிப்பாகக் கர்நாடக மாநிலத்திலிருந்தும், ஆந்திர மாநிலத்திலிருந்தும் வருகிறது. விளைச்சல் குறைவினால் அங்கு விலை உயர்வு காரணமாக இங்கும் புளி விலை உயர்வாக கிலோ ரூபாய் 7.50 அளவில் உள்ளது.

தனியாவின் விலையும் வெளிச் சந்தையில் ஏறிவிட்டது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் தன் கையிருப்பில் உள்ள தனியாவை நியாய விலைக் கடைகளின் மூலம் கிலோ ரூபாய் 5.40 என்ற விலைக்கு விற்று வருகிறது.

மிளகாயைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டைவிட விலைகள் சற்று குறைந்துள்ளன.

**சிமிட்டி.**

இவற்றைத் தவிர, சிமிட்டியிலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சிமிட்டி விநியோகத்தைத் தொழில் துறை கவனித்து வருகிறது. மத்திய அரசு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஒதுக்கீடு செய்யும் சிமிட்டியை தொழில் துறை விநியோகம் செய்யும். இந்த விநியோகத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவு அமைப்புகளும் முதன் முறையாகப் பங்கு கொண்டுள்ளன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை மாநிலம் முழுவதும் சுமார் 3.5 இலட்சம் டன்களை விநியோகித்துள்ளது. வட்ட ஆட்சித் தலைவர்கள் அளிக்கின்ற அனுமதிச் சீட்டுகளின் பேரில் பதிவு செய்துகொண்ட வரிசைக் கிரமப்படி மிகச் சீராக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சிமிட்டியை விநியோகம் செய்கிறது.



**விறகு.**

சென்னை நகரில் விறகு விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் வனத் துறையின் உதவி கொண்டு காடுகளிலிருந்து விறகை எடுத்து வந்து நியாய விலைகளில் சென்னை நகரில் விற்க ஒரு திட்டம் வகுக்க உணவுத் துறை முனைப்பாக செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தை இம் மாத இறுதிக்குள் தொடங்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இரயில்வே துறையுடன் ஒருங்கிணைப்பு.**

இரயில்வே சரக்குப் பெட்டிகள் போதிய அளவு உரிய காலத்தில் கிடைக்காதது விலைவாசிகளின் உயர்வுக்கு ஒரு காரணமாகும். இச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு பல்வேறு துறைகளின் சிரமங்களையும் அறிந்து இரயில்வே தலைமை அதிகாரிகளுடன் கூடிப் பேசி கூடியவரை சிக்கல்களைத் தீர்க்கும் பொறுப்பு உணவுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாட நூல் நிறுவனத்திற்கு வரவேண்டிய காகிதத்தை எடுத்துவரவும், நிலக்கரி, உப்பு ஆகியவற்றின் போக்குவரத்துக்குத் தேவைப்படும் சரக்குப் பெட்டிகள் ஒழுங்காகக் கிடைப்பதற்கும் இந்தப் பேச்சு வார்த்தைகள் பெருமளவு பயன் பட்டுள்ளன. ஆனால் நிலக்கரியைப் பொறுத்தவரையில் சரக்குப் பெட்டிகள், முக்கியமாக, கல்கத்தாவிலிருந்து வரவேண்டியுள்ளதால் இப் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காண இயலவில்லை. இரயில்வேக்களுக்கு வேண்டிய நிலக்கரி கிடைப்பதிலேயே பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளன என்று அத் துறையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இருந்தபோதிலும், பல்வேறு துறைகளிலும் உள்ள பிரச்னைகளையும் இரயில்வே அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவற்றிற்கான தீர்வு காணும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

**உணவு விடுதிகளில் பண்டங்களின் விலை.**

உணவு விடுதிகளில் உணவுப் பண்டங்களின் விலைகள் மிக உயர்ந்துள்ளது அரசுக்குக் கவலை அளிப்பதாக இருக்கின்றது. இவ் விலைகளைக் குறைக்கும் பொருட்டு மீண்டும் ஒருமுறை மாவட்ட உணவு விடுதிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி ஓர் உடன்பாடு காண இயலுமா என்பதைப் பரிசீலிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இப் பேச்சு வார்த்தைகளினால் பலன் கிடைக்கின்றதா என்ற நிலைமை தெளிவான பின்பு மாநில அளவில் இப் பிரச்னை பரிசீலிக்கப்படும். உணவு விடுதி அதிபர்கள் விலைகளைக் குறைக்கத் தாமாக முன்வந்து பொது

மக்கள் நலனுக்கு உகந்த முறையில் செயல்படும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதில் அரசு மிகுந்த அக்கரை கொண்டுள்ளது. அவ்வாறு விலைகளைக் குறைக்க அவர்கள் தாமாக முன்வரவில்லை எனில், இட்டலி, தோசை, காப்பி, தேனீர், ஜனதா சாப்பாடு ஆகிய முக்கிய பண்டங்களின் விலைகளையாவது நியாயமான அளவில் நிர்ணயிக்க சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து இம் மாமன்றத்திலுள்ள பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளையும் கலந்துகொண்டு நடவடிக்கை எடுக்க அரசு உறுதி கொண்டுள்ளது.

## VII. உணவுப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை.

உணவுப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை 1964-ல் நிறுவப்பட்டது. இத் துறைக்கு ஒரு துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் தலைமை வகிக்கிறார். 1979-ல் மாநிலத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசிக்கு லெவி செலுத்த வேண்டியதில்லை என்று முடிவு செய்த பிறகு இத் துறையில் பணியாளர்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டார்கள். பதுக்கலைத் தடுப்பதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கத் தனியாக ஒரு பிரிவு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருட்கள் தொடர்பான பல்வேறு கட்டுப்பாடு ஆணைகளை அமல்படுத்துவதுடன், குறிப்பாக இன்றியமையாப் பண்டங்கள் இருப்பு, விலைகளை அறிவித்தல், கணக்குகள் வைத்தல் ஆணையையும், சர்க்கரை, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய்கள், இருப்பு வைப்பதில் உச்சவரம்பு ஆணைகளையும் அமலாக்குவதில் இத் துறை முனைப்பாகப் பணியாற்றுகிறது.

1979 ஆம் ஆண்டில் இத் துறை 842 குற்றங்களைப் பதிவு செய்தது. இவற்றில் 825 இன்றியமையாப் பண்டங்களின் சட்டத்தின் கீழும், 17 குற்றங்கள் இந்தியன் பீனல் கோடு/இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் ஆகியவற்றின்கீழும் பதிவு செய்யப்பட்டன. 270 குற்றங்களைப் பொறுத்த வரை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய அனுமதி அளித்தனர். 153 குற்றவாளிகள் தண்டனை பெற்றனர். 64 குற்றங்களைப் பொறுத்தவரை கைப்பற்றப்பட்ட பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 1979 இறுதியில் 115 குற்றங்கள் நீதி மன்றங்கள் முன்பு விசாரணையில் இருந்தன. 1980-ல் இத் துறை மேலும் தீவிரமாகப் பணியாற்றி முதல் 5 மாதங்களில் 468 குற்றங்களை கண்டுபிடித்தது. இவற்றில் கைப்பற்றப்பட்ட இன்றியமையாப் பண்டங்களின் மதிப்பு 56 இலட்சம் ரூபாயாகும்.



அண்மையில் சென்னையில் ரூ. 2.63 கோடி மதிப்புள்ள பாமோலின் எண்ணெய் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதுபற்றி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## VIII. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

தமிழக அரசு வகுக்கும் உணவுக் கொள்கைகளை நடைமுறையில் செயல்படுத்தி, கொள்முதல், சேமிப்பு, பொது விநியோகம் ஆகியவற்றைத் திறமையாக நடத்துவதற்கான ஆயத்தங்கள் செய்யும் பொறுப்பு இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நேரடி நெல் வாங்கும் நிலையங்களைத் திறந்து தமிழக அரசு நிர்ணயிக்கும் விலைகளில் நெல்லை விவசாயிகளிடமிருந்து வாங்கி சேமித்து வைத்து அரைவை செய்து, அரிசியைப் பல்வேறு நியாய விலைக் கடைகள் மூலமாக விநியோகிப்பதற்கான மொத்த வர்த்தகப் பொறுப்பை இக்கழகம் ஏற்றுக்கொண்டுள்ளது. பொது விநியோக முறை எந்த நிலையிலும் முறிவடைந்து விடாமல் பாதுகாப்பது இக்கழகத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். கட்டாயக் கொள்முதலோ, ஆலைகள் மீதும், வர்த்தகர்கள் மீதும் லெவியோ, இல்லாத இன்றைய சூழ்நிலையிலும், விவசாயிகள் விரும்பித் தர முன்வரும் நெல்லை வாங்குவதில் இக்கழகம் முனைந்து செயல்படுகிறது. நெல்லை அரைவை செய்யும் பதின்மூன்று நவீன அரிசி ஆலைகளை இக்கழகம் நிர்வகித்து வருகிறது. இந்த ஆலைகளின் நிர்வாகம் இக்கழகத்தின் பொறுப்புக்கு மாற்றப்பட்ட பின், இவை லாபகரமாக இயங்குவதுடன், தரமான அரிசியும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

நெல், அரிசி விநியோகம் தவிர, லெவி சர்க்கரை விநியோகத்திற்கான மொத்தப் பொறுப்பையும் இக்கழகம் ஏற்றுக்கொண்டுள்ளது. மத்திய அரசு லெவி சர்க்கரையைப் பல வேளைகளில் பல்வேறு மாநிலங்களில் உள்ள சர்க்கரை ஆலைகளிடமிருந்து ஒதுக்கீடு செய்கிறது. அந்த ஆலைகளிலிருந்து சர்க்கரையைக் காலம் தாழ்த்தாமல் கிராம மட்டம் வரை எடுத்துச் செல்லும் பொறுப்பை இக்கழகம் செவ்வனே ஆற்றி வருகிறது. லெவி சர்க்கரைக்காக ஆலைகளுக்குக் கொடுக்க வேண்டிய விலையை மத்திய அரசு நிர்ணயித்துள்ள போதிலும், ஆலை அதிபர்கள் நீதிமன்றங்களில் தொடர்ந்துள்ள வழக்குகளை ஒட்டி சில மாநில நீதிமன்றங்கள் இடைக்காலத்திற்குக் கூடுதலான விலையை ஆலைகளுக்குத் தர வேண்டுமென்று ஆணைகள் பிறப்பித்துள்ளன. இந்தக் கூடுதல் விலைகளைத் தருவதினால் ஏற்படும் இழப்பை மத்திய அரசு ஈடு செய்ய வேண்டும். ஆயினும், நடைமுறையில் மத்திய அரசு இந்த இழப்புகளை

இதுவரையில் ஈடு செய்யவில்லை. இதற்கிடையில் சர்க்கரை விநியோகம் சீர் குலைந்து போகக்கூடாது என்ற காரணத்தால் இக்கழகம் தன் சொந்த நிதிப் பொறுப்பிலேயே இக்கூடுதல் விலையைத் தந்து ஆலைகளிலிருந்து சர்க்கரை பெற்று வருகின்றது. சர்க்கரை விநியோகத்தில் நமக்கு ஈடு செய்ய வேண்டிய ஏறக்குறைய பத்து கோடி ரூபாயை மத்திய அரசு விரைவில் நமக்குத் தரவேண்டும் என்று மாநில அரசு வற்புறுத்தியுள்ளது.

சர்க்கரையைத் தவிர சிமிட்டி, மண்ணெண்ணெய், பாமோலின் முதலிய வற்றையும் விற்பனை செய்யும் வகையில் இக்கழகம் தன்னுடைய வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்கியுள்ளது. இன்றியமையாப் பொருட்கள் பல வற்றை நியாய விலையில் வழங்குவதற்கு இக்கழகம், சென்னை நகரில் 151 நியாய விலைக்கடைகளையும், 26 அமுதம். சிறப்பு அங்காடிகளையும், மாநிலத்தின் மற்ற பகுதிகளில், 4,044 நியாய விலைக் கடைகளைக் கிராமங் களிலும், 562 நியாய நிலைக் கடைகளை நகரப் பகுதிகளிலும், 24 அமுதம் சிறப்பு அங்காடிகளையும் நடத்தி வருகின்றது. பருப்பு, பயறு வகைகள், உப்பு, புளி, மிளகாய் போன்ற மற்ற இன்றியமையாப் பொருட்களையும் உற்பத்தி இடங்களிலிருந்தே வாங்கிச் சேமித்து வைத்துக் கழகத்தின் கிராம நியாய விலைக் கடைகள் மூலமாகவும், அமுதம் கடைகள் மூலமாகவும் இந்தக் கழகம் விநியோகித்து வருகின்றது.

1972-73 ஆம் ஆண்டு கழகம் தோன்றிய பொழுது உணவுப் பொருள் வழங்கு துறையினரிடம் இருந்து சுமார் 13,450 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 5 கிட்டங்கிகளையும் நவீன அரிசி ஆலைகளுடன் 16,950 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 12 கிட்டங்கிகளையும் தன் கைவசம் எடுத்துக் கொண்டது. இன்றைய தினம் 1.56 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிட்டங்கிகளை சுமார் 3,03.50 இலட்ச ரூபாய் செலவில் 34 இடங்களில் இக்கழகம் கட்டி முடித்துள்ளது. ஆக, இக்கழகத்திற்குச் சொந்தமான கிட்டங்கிகளின் கொள்ளளவு 1.86 இலட்சம் மெட்ரிக் டன்களாக உயர்ந் துள்ளது. மேலும் 21 இடங்களில் 55,400 மெட்ரிக் டன்கள் அளவிற்குக் கொள்ளளவு கொண்ட கிட்டங்கிகள் சுமார் ரூபாய் 1,53.82 இலட்சம் செலவில் அமைக்கும் பணி நடந்து வருகிறது. பொது விநியோக முறையில் தடங்கல் ஏதுமின்றிப் பொருள்களை வழங்க, தமிழகம் எங்கும் மாவட்டங்கள்தோறும், கழகம் சொந்த கிட்டங்கிகளை நிறுவும் பணியில் தீவிர முன்னேற்றம் கண்டுள்ளது. இம் முயற்சியில் வெளி உதவி இன்றியே தனது சொந்த நிதி வசதிகளைக் கொண்டே கழகம் செயல் புரிந்து வருவதும் குறிப்பிடத் தக்கதாகும்.



1972 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தக் கழகம் முதல் ஆண்டு தவிர அடுத்த ஐந்து ஆண்டுகளில் லாபகரமாகவே நடந்து வந்தது. அரசின் ஆணைப்படி விவசாயிகளுக்குக் கூடுதலான நெல் விலை தரவேண்டியிருப்ப தாலும் அரசு நிர்ணயித்துள்ள விலைகளிலேயே அரிசியைச் சில்லரை விற்பனை செய்வதாலும், சென்ற இரண்டு ஆண்டுகளாக இக்கழகத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. தன்னுடைய வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்கி அதன் மூலம் எந்த அளவிற்கு இந்த இழப்பை ஈடு செய்ய முடியுமோ, அந்த வகையில் கழகம் தன் பொறுப்புகளைத் திறமையோடும் சிக்கனமாகவும் நிர்வகித்து வருகின்றது. அரசுக் கொள்கைகளின் அடிப்படையான சமுதாய நோக்கை நிறைவேற்றும் வகையிலும், அதே சமயத்தில் வாணிப ரீதியாகத் திறமையாகச் செயலாற்றும் வகையிலும் இக்கழகம் இயங்கி வருகின்றது.

சென்ற ஆண்டு 50,000 டன்கள் பச்சரிசியையும் 5,000 டன்கள் குறுணை யையும், தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்த இக்கழகம் சர்வதேச வர்த்தக வட்டாரங்களில் மிகச் சிறப்பான பெயரை ஈட்டியுள்ளது.

### தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 52 மையங்களில் சேமிப்புக் கிடங்குகளைப் பராமரித்து வருகிறது. சொந்தமாகக் கட்டப்பட்ட கிடங்கு களின் கொள்ளளவு 1.62 இலட்சம் டன்கள் ஆகும். வாடகைக்கு அமர்த்தப் பட்ட கிடங்குகளின் கொள்ளளவு 70,000 டன்கள் ஆகும்.

1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளில் இந்த நிறுவனத்தின் மொத்த மூலதனம் 2,91 இலட்சங்கள், இதில் சரிபாதி தமிழக அரசின் பங்கும் மறுபாதி மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பங்கும் ஆகும். 1979-80-ல் நான்கு மையங்களில் முந்தைய ஆண்டு முடிவுபெறாத கிடங்குகளைக் கட்டி முடித்ததுடன் புதிதாக 8 மையங்களில் 16 கிடங்குகளை கட்ட இக்கழகம் முற்பட்டது. இவற்றில் 6 கிடங்குகள் தூத்துக்குடியில் அமைந்துள்ளன. 1980-81 ஆம் ஆண்டில் 76 இலட்ச ரூபாய்ச் செலவில் கிடங்குகளைக் கட்டி முடிக்கத் திட்டமிட்டுள்ளது. மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட மூலதனப் பங்கீடான ரூபாய் 30 இலட்சத்திற்கு மாறாக ரூ. 10 இலட்சமே கிடைக்குமென்று இப்பொழுது தெரிவதால், 1980-81-ல் புதிய

நிடங்குகளை மேற்கொள்ள இயலாத நிலையில் இக்கழகம் உள்ளது. கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென இக்கழகம் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திடம் வற்புறுத்தி வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் இலாபத்தில் இயங்குகிறது என்பது கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து தெரிய வரும் :—

| ஆண்டு. | | | நிகர இலாபம். (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1975—76 | .. | .. | 28.85 |
| 1976—77 | .. | .. | 18.52 |
| 1977—78 | .. | .. | 42.59 |
| 1978—79 | .. | .. | 38.63 |
| 1979—80 | .. | .. | 28.90 |

(உத்தேச மதிப்பீடு.)

1978-79 வரை கணக்குகளின் தணிக்கை முடிந்துவிட்டது. 1979-80ஆம் ஆண்டுக் கணக்கு தணிக்கையில் உள்ளது. விஞ்ஞான முறைக்கேற்பப் பொருட்களைச் சேமித்து வைத்து விரயம் ஏற்படாமல் தடுப்பதில் இக்கழகம் பயனான தொண்டினை ஆற்றி வருகிறது.

## X. பொது.

பொது விநியோகப் பொறுப்பை மேற்கொண்டுள்ள நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள் இதுவரை கூட்டுறவுத் துறையின் பாராமரிப்பில் இருந்தன. பொது விநியோகத் துறையில் இவற்றிற்கு முக்கிய பங்கு இருப்பதாலும், கூட்டுறவு நுகர்வோர் பண்டகசாலைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய இரு பிரிவுகள் மூலம் நடக்கும் பொது விநியோக முறையை ஒரு சீராக ஒரே துறையில் கண்காணிப்பது நலம் என்று அரசு கருதியதாலும், நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலைகள், அவற்றின் மூலம் நடக்கும் பொது விநியோகப் பொறுப்பு ஆகிய இரண்டு அலுவல் இனங்களையும் தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத் துறையிடமிருந்து உணவுத் துறைக்கு மாற்றி இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தலைமைச் செயலகத்திலுள்ள உணவுத் துறையின் பெயரும் உணவு, சிவில் சப்ளைஸ் துறை என்று மாற்றப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு சட்ட மன்ற பேரவை

## வெள்ளிக்கிழமை, 1980 ஜூலை 25

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம.பொ.சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.
### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மதிய உணவுத் திட்டம்.

* 8 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & செல்வி ஆ. சீவாவது: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்.

(அ) தற்பொழுது துவக்கப்பள்ளிகளில் செயல்படுகின்ற மதிய உணவுத் திட்டத்தை, உயர்நிலைப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் விரிவுபடுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, பெருந்தலைவர் காமராசர் அவர்கள் காலத்திலே தொடக்கப் பள்ளிகளிலே மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்ததால் பள்ளிக்குச் செல்ல வேண்டிய ஏராளமான குழந்தைகளை, அதாவது 5 முதல் 11வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பள்ளிக்குக் கொண்டு வர முடிந்தது. இன்றைக்கு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் வர வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. அப்படிக் குறைந்ததற்குக் காரணம் அவர்களுடைய வறுமைதான். ஆகவே அவர்களையும் பள்ளிக்குக் கொண்டு வர ஒரு முனைப்பாக இருக்கின்ற வகையிலே உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்துவது சமுதாயத்திற்கு உகந்தது என்பதால், இது குறித்து அரசு வருங்காலத்தில் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய உணர்வை நான் மறுக்கவில்லை. நல்ல உயர்ந்த நோக்கத்தோடு தான் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்திலே யாருக்கும் மாறுபாடு கிடையாது. அரசுக்கும் மாறுபாடு கிடையாது. இப்போதுள்ள பிரச்சினை நிதி

வசதி இல்லை என்பதாகும். மேலும் ஆரம்பப் பள்ளிகளில் மதிய உணவைக் கொடுத்துக் கொண்டு வந்தாலும், அது ஆசிரியர்களுடைய பணியை எந்த அளவிற்குப் பாதிக்கிறது, எந்த அளவிற்கு மாணவர்களின் படிப்பு அதனால் வீணாகிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கும்போது, மதிய உணவு குறித்த நிர்வாகம் முறைப்படுத்தப்பட்டு, ஒழுங்காக நடத்தப்படும் அளவிற்குக் கொண்டு வந்த பிறகுதான், இது விஸ்தரிக்கப்படும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மதிய உணவுத் திட்டத்தைக் கல்லூரிகளில் அமுல்படுத்தும் யோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உயர்நிலைப் பள்ளிகளில் விரிவுபடுத்தியதற்குப் பிறகு, கல்லூரிகளுக்கு வரும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய நடைமுறைச் சங்கடங்களைப் புரிந்து கொண்டாலும் மதிய உணவு நிர்வாகத்தைச் சீர்படுத்துவதென்பது ஒரு புறம் இருந்தாலும், தற்போது ஒவ்வொரு பள்ளியிலும் பள்ளிக் கட்டிடக் குழுக்கள் இருக்கின்றன. பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் இருக்கின்றன. அவர்களுக்குச் சுற்றறிக்கை மூலமாக, ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும், மேல் நிலைப் பள்ளியிலும் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தும் வகையிலே, கல்வித் துறை வேண்டுகோளை அனுப்புமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உயர்நிலைப் பள்ளிகளில் அல்லது மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கின்ற கட்டிடக் குழுக்கள், தாங்களே இத்தகைய ஒரு வசதியைச் செய்ய முன் வருவார்களானால், அதை நிச்சயம் இந்த அரசு வரவேற்கிறது. இப்போது கூட ஒரிரு பள்ளிகளில் அப்படி இருக்கிறது, மதுரை சௌராஷ்டிரா பள்ளியில், நாம் மதிய உணவுத் திட்டத்தை ஆரம்பப் பள்ளிகளில் கொண்டு வருவதற்கு முன்னாலேயே, அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகக் கூறியது என் நினைவிற்கு வருகிறது. அத்தகைய முயற்சிகளை வரவேற்கிறோம். அப்படிப் பட்டவர்கள் வந்தால், அவர்களை அரசு நிச்சயம் பாராட்டும்.

திரு. ம. சங்கரலிங்கம் : மதிய உணவுத் திட்டத்தைப் படிப்படியாக உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் விஸ்தரிப்பது பற்றி அரசு பரிவுணர்ச்சியோடு இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் சில பகுதிகளிலே, கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள் கூட மதிய உணவு இல்லாமல், வறுமையில் வாடும் நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். என்னுடைய கல்லூரியில் 700 மாணவர்களில் 30 பேர்கள் மதிய உணவு இல்லாமல் இருக்கிறார்கள். அதைப் பார்த்து ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் இரண்டு ரூபாயை, தாங்கள் உணவு அருந்துவதை நிறுத்தி, அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். இதே நிலை



யில் தார்மீக உணர்வோடு பணிகள் செய்ய ஒரு தூண்டுகோல் அமைத்து, அப்படி நடைபெறும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு, மேல்நிலைப்பள்ளிகளுக்கு கல்லூரிகளுக்கு சிறப்பு விருது கொடுத்து, இந்த உணர்வுகளை மற்றவர்களுக்கு ஊட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னது மிகவும் பாராட்டத்தக்க ஒன்று. அத்தகைய முயற்சிகளை இந்த அரசு வரவேற்கிறது என்பது மட்டுமல்லாமல், அவர்களைப் பாராட்டுகின்ற வகையிலே ஏதேனும் மரியாதையை அரசுத் தரப்பிலே செய்ய முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. முத்துசாமி : எல்லா ஏழை மாணவர்களுக்கும் மதிய உணவு கொடுப்பதென்பது முதல் கட்டத்திலே சிரமமாக இருந்தாலும், அரிசன மாணவர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் மதிய உணவு அளிக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெரும்பான்மையான மாணவர்களுக்கு விடுதிகள் பெருமளவில் இருக்கின்றன. அங்கே அவர்கள் வசதிகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. பா. ரா. தாமஸ் : மதிய உணவுத் திட்டத்தை அமல் படுத்துவதில் ஆசிரியர்கள் தங்கள் பணியைச் சரியாகச் செய்ய முடியாமல் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். எனவே மையச் சமையற்கூடங்கள் இப்போது செயல்படும் இடங்களிலுள்ள உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கலாம் அல்லவா? சென்ற ஆண்டு தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் மையச் சமையற் கூடங்கள் ஏற்படுத்துவதாக இருந்தது. அதில் எத்தனை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மையச் சமையற் கூடங்கள் செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் 5 மையச் சமையற் கூடங்களை அமைக்க அண்மையில் ஏற்பு அளிக்கப்பட்டிருக்கிறது இன்னும் அமைக்கப்படவில்லை என்று குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்த இரண்டு மாவட்டங்களிலும் இன்னும் முழுமையாக மையச் சமையற் கூடங்களை அமைக்கும் சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. மையச் சமையற் கூடங்கள் அனைத்துப் பகுதிகளுக்கும் வந்தால் ஆசிரியர்கள் தங்கள் பணியைச் செவ்வனே செய்ய முடியுமென்ற கருத்தை அரசு கொண்டிருக்கிறது. இப்போது மையச் சமையற் கூடங்கள் இருக்கும் பகுதிகளில் இருக்கும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு கொடுக்கப்படுமா என்று கேட்டிருக்

Thiru G. VASANTHA PAI: Sir, in view of the general complaint that the Government are giving only ten paise or twelve paise as subsidy and also because of the low quality of the meals, will the government think of improving the quality or discontinuing the system of giving midday meals in the elementary schools?

(பிற்பகல் 4—10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்பொழுது தரப்படுகிற மதிய உணவு தரமில்லாமல தரப்படுகிறது என்கிற வகையில் உறுப்பினர் கருத்துக்களைச் சொன்னார். நாம் இப்பொழுது தந்து கொண்டிருக்கின்ற உணவை மாணவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எந்த விதமான புகாரும் இதுவரை இல்லை. கேர் ஸ்தாபனத்தின் உதவியோடு இதை நடத்திக் கொண்டிருக்கிறோம். இன்றைய. நிலையில் பண உதவியை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

Thirumathi TARA CHERIAN: Sir, as the hon. Member Thiru Vasantha Pai said, the subsidy of twelve paise or fifteen paise given by Government for the midday meals scheme is not enough. But we do not include what is being given by CARE, UNICEF and others by way of milk powder, rice, etc., to supplement the subsidy of fifteen paise given by the Government. That does not mean that we would be able to give a sumptuous and very good meal. But, let us also remember that when we prepare meals on a large scale, say 10.000 meals, if we exercise proper care, we can prepare a satisfactory meal by using this amount of 15 paise. The next point is. . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இது கேள்வி நேரம்.

திருமதி தாரா செரியன்; செய்ய முடியுமா என்று கேட்டால் நிச்சயம் செய்ய முடியும். உதவி செய்ய வேண்டுமென்று கேட்டால் செய்கிறோம் என்று சொன்னார்கள்.

Thiru G. VASANTHA PAI: Sir, with the permission of the Hon. Chairman, I wish the hon. Member were on the Treasury Benches to reply to me.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் இப்படி எல்லாம் நேரத்தை வீணடிக்கக் கூடாது.

திருமதி தாரா செரியன்: தமிழில் பேசினால் நேரம் நீண்டு கொண்டு போகிறது. (சிரிப்பு)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதற்காக தமிழ் மீது பழியை உறுப்பினர் போட வேண்டாம். (சிரிப்பு)





Thirumathi TARA CHERIAN: Sir, in the village, instead of asking the teachers to distribute is food, the Parent-Teachers Associations and other voluntary organisations may be entrusted with the distribution of midday meals. Otherwise, the children will get the food only at 3 p. m. and the teachers also will not be able to teach well. Moreover, drinking water and water for washing hands are not available in the schools. If such facilities are available, I am sure that with the 15 paise that the Government give and with the help that we get from CARE we can give the children a good meal.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தமிழ்நாட்டில் தற்போது இலவச நண்பகல் உணவுத் திட்டத்தின்கீழ் நன்மை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை தொடக்கப் பள்ளிகளில் 20.2 இலட்சம். அவர்களில் 1.6 இலட்சம் மாணவர்கள் பிற்பட்ட மற்றும் அரிசன பள்ளிகளில் பயில்பவர்கள். மீதி 18.6 இலட்சம் பேருக்கு பள்ளிக் கல்வித் துறை ஆண்டுக்கு 5½ கோடி ரூபாய் செலவழித்து இலவச உணவு வழங்கி வருகிறது. ஆண்டுக்கு 200 நாட்கள் இலவச உணவு வழங்கப்படுகிறது. 100 நாட்களுக்கான தானியத்தையும், 200 நாட்களுக்கான எண்ணெயையும் 'கேர்' நிறுவனம் இலவசமாகத் தருகிறது. அவ்வாறு 1979-80 ஆம் ஆண்டு கேர் நிறுவனம் இலவசமாகத் தந்த உணவின் அளவு, விலை மதிப்பு கீழ்க்கண்டவாறு. உணவு தானியம் பெரும்பாலும் கோதுமை போன்றவை வயாரும். 441 இலட்சம்: மதிப்பு ரூ 4,98 இலட்சம். எண்ணெய் 3 இலட்சம். அவற்றின் விலை மதிப்பு ரூ'2,29 இலட்சம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அளவுக்கு அவர்கள் உதவிசெய்து கொண்டிருக்கிறார்கள். இறுதியாக உறுப்பினர் பேசும்போது, பேரண்ட்—டீச்சர்ஸ் அசோசியேஷன் மூலம் செய்ய முடியுமா என்று கேட்டார். அவர்களைப் பொறுத்தவரை நல்ல முறையில் இதைச் செய்து வந்தாலும், இன்னும் பல பள்ளிகளில் சரியான முறையில் இதை உருவாக்கவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்து 2½ ஆண்டுக் காலத்தில் மிகவும் முயற்சி எடுத்து, இப்போது தான் அதற்குரிய விதிகளை எல்லாம் போட்டு பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் அதிகமாகப் பங்கு ஏற்கச் செய்யும் வகையில் ஏற்பாடு செய்து இந்த ஆண்டு இந்தப் புதிய விதிகளின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும். இனி புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் அந்தச் சங்கம் ஓரளவு நல்லபடியாகப் பணி செய்ய முயற்சி செய்தால், நல்லபடி பணி செய்யலாம்.

திரு. பா. ரா. தாமஸ்: மதிய உணவு சமையற் கூடத்திலேயிருந்து வழங்கும் உணவை மாணவர்களிலே ஒரு பகுதியினர் தான் உட்கொள்ளுகிறார்கள் - இதனால் இந்த உணவை உட்கொள்ளாத

மற்ற பகுதியினர் இவர்களைத் தாழ்வான மனப்பான்மையுடன் நடத்துகிறார்கள். ஆகவே அவர்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட பணத்தை வசூலித்து அவர்களும் இந்த மதிய உணவுத் திட்டத்திலே பங்கேற்று இந்த உணவை உட்கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சமையல் முடிய ரொம்ப நேரம் ஆகும் போல் இருக்கிறது. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உறுப்பினருடைய கருத்து ஓரளவு ஒப்புக்கொள்ளக் கூடியது தான். அனைவரும் ஒன்றாகச் சாப்பிடும்போது சமத்துவ உணர்வு வரும் என்றாலும், ஒரு பகுதியினரிடமிருந்து பணம் வசூலித்து உணவு வழங்கும் நிலை வருமானால், அது இலவசக் கல்வி என்ற தன்மையை இழந்துவிடும். மேலும் பொது மக்களிடமிருந்தும் இதற்கு எதிர்ப்பு வரும்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, மத்திய சமையற் கூடங்களிலிருந்து பல்வேறு பள்ளிகளுக்கு அல்லது கிராமங்களுக்கு உணவைக் கொண்டு செல்லுகின்ற போது, உணவு பெரும்பாலும் வேன்களில் கொண்டு செல்லப்படுகிறது. வேன்கள் பழுதடைந்தால் வாரக் கணக்கில், மாதக் கணக்கில் மாணவர்களுக்கு உணவு கிடைப்பதில்லை. இப்படி வேன்கள் பழுதடைந்ததால் உடனடியாக மாற்று ஏற்பாடுகளை அதிகாரிகளே செய்யலாம் என்கிற வகையில் அங்கு இருக்கக் கூடிய அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படுமா? அப்படிச் செய்யாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இது பற்றி நாங்கள் பரிசீலனை செய்ததில் ஓரளவு வேன்களையே பயன்படுத்தாமலிருப்பது எப்படி, என்கின்ற நிலையைத் தான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். வண்டிகள் மூலமோ சைக்கிள்கள் மூலமோ அந்த உணவைக் குறிப்பிட்ட பள்ளி இருக்கின்ற இடத்திலுள்ள ஒருவர் மூலம் கொண்டு செல்வதற்கான வாய்ப்பைத் தந்தால், வேன்களின் மூலம் அனுப்பப்பட வேண்டியதில்லை என்கின்ற நிலை வருவதோடு பழுதடைந்து விடுவது போன்ற பிரச்சினைகளும் வராது என்பதோடு மட்டுமல்ல, ரொம்ப பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். மேலும் பெட்ரோல், டீசல் போன்றவற்றுக்குப் பற்றாக்குறை இருக்கின்ற இந்த நேரத்தில் மிகச் சிறந்த சிக்கன நடவடிக்கையாகவும் இது இருக்கும். இது குறித்து அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.



## அரிசன நலத்துறைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள்

* 9 வினா திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்;

(அ) கல்வித்துறையில் உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு, ஊதியம் வழங்குதல், விடுப்பு அனுமதித்தல் போன்ற பல்வகை அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது போல, அரிசன நலத்துறை உயர்நிலை, மேல்நிலைப் பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டும் என கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம்.

(இ) கல்வித்துறையின் கீழுள்ள பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதுபோல் அரிசன நலப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அவ்வப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு வழங்குதல், எல்லா வகையான விடுப்புகள் அனுமதித்தல், சேம நல நிதியிலிருந்து கடன் வழங்குதல் மற்றும் முன்பணம் வழங்குதல் ஆகியவற்றிற்கு உரிய அதிகாரம் வழங்க வேண்டும் என்ற அரிசன பழங்குடி நல இயக்குநரின் முன்மொழிவு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இந்தக் கோரிக்கையை நான் நீண்ட காலத்திற்கு முன்பே ஆசிரியர்கள் சார்பாக அரிசன நலத் துறையில் சம்பந்தப்பட்டவர்களிடம் பல முறை சொல்லிவிட்டேன். கடந்த 2 ஆண்டுகளுக்கு மேல் இது அப்படியே இருக்கிறது. உரிமைகளை அவர்களுக்கு விரைவாகக் கொடுப்பதன் மூலம் அந்தப் பள்ளிகளிலே நிர்வாகத்தினுடைய செயல்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டு தாமதங்கள் ஏற்படுவது குறைக்கப்படலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு விரைவாக, உடனடியாக ஆணை வழங்க நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: உறுப்பினர் குறிப்பிட்டதை இந்த அரசு நன்கு உணர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அதற்குண்டான முயற்சிகளை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: கல்வித் துறையிலுள்ள ஆசிரியர்களுக்கு அளிக்கக் கூடிய சலுகைகளை, உரிமைகளை, அரிசன நலத் துறை, பஞ்சாயத்து யூனியன்கள் போன்ற துறைகளில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும்

தலைமை ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாதவர்களுக்கும் பொருந்தும் வகையில் மொத்தமாக சம்பந்தப்பட்ட ஆணை ஒன்றை பிறப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறைக்கு அறிவுரை வழங்குவாரா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், உறுப்பினர் கூறிய கருத்துக்களை இந்த அரசு பரிசீலித்து அவர்கள் கூறிய கருத்துகளுக்கேற்ப இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சர் விரைவாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித் துறையில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடிய பதவி உயர்வு போன்ற வாய்ப்புகள் அரிசன நலத் துறைப் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும் இல்லை. அந்தப் பதவி உயர்வு வாய்ப்புகளைக் கொடுப்பது பற்றியும் சேர்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா ?

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : உறுப்பினர் கூறிய அறிவுரையை ஏற்று இந்த அரசு ஆவன செய்ய முயற்சிக்கும்.

திரு. செ. முத்துசாமி : அரிசன நலத் துறையைப் பொறுத்த வரையில், அரசுத் துறையிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு என்னென்ன உத்தரவுகள் பொருந்தும் என்று அரசு போடுகிறதோ, அந்தந்த உத்தரவுகள் அவ்வப்போது உடனடியாக தானாகவே இவர்களுக்கும் பொருந்தும் என்று ஒரு 'ஸ்டேண்டிங் ஆர்டரை'ப் போடுவதற்கு அரசு முன்வருமா ? அப்படிச் செய்தால்தான், இந்தப் பிரச்சினைகள் தீரும். அதற்கு இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு எம். விஜயசாரதி : நான் ஏற்கெனவே கூறியதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்கள் ஏற்கெனவே பரிசீலனையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].





## 2. அறிவிப்பு.

### வினாக்களுக்கான விடைகள் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்ற மேலவைக் கேள்விகளுக்கான விடைகளைத் துறைகள் துரிதமாக அனுப்ப ஆணையிடும்படி மாண்புமிகு அமைச்சர்களை 26—6—1980 ஆம் தேதியன்று கேட்டிருந்தேன். மேலும் 21—7—1980 ஆம் தேதியன்றும் மாண்புமிகு அமைச்சர்களை கேள்விகளுக்கான விடைகளை 2,3 நாட்களுக்குள் மேலவைத் துறைக்கு அனுப்ப ஆவன செய்யுமாறு கேட்டிருந்தேன். ஆனால், இதுவரையில் 9 கேள்விகளுக்கு மட்டும்தான் விடைகள் இத்துறைக்கு வரப்பெற்று, அவைகள் வினாப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. 28—7—1980 ஆம் நாளிலிருந்து வினாப் பட்டியலில் சேர்க்க விடைகள் எதுவும் இத்துறையில் இல்லை. எனவே, விடைகள் வரா விட்டாலும், கேள்விகளை வினாப் பட்டியலில் சேர்க்கும்படி சட்டமன்ற மேலவைத் துறைக்கு ஆணையிட்டுள்ளேன். அந்த வினாப் பட்டியலின் நகல் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும், துறைகளுக்கும் இன்று அனுப்பப்பட்டுள்ளன. எனவே, அமைச்சர்கள் அவைகளுக்கு விடைகளைத் துரிதமாகப் பெற்று அவைக்கு அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்.

### சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து உறுப்பினர்களுக்கான பேருந்து குறித்து.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள ஒரு பொதுவான சங்கடத்தை இங்கே தலைவர் அவர்களின் அனுமதியுடன் நான் எழுப்புகிறேன். ஏற்கெனவே, இந்தப் பிரச்சினை பேரவையிலே எழுப்பப்பட்டிருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து இங்கு அவைக்கு வரும் போது, பேருந்திலே ஏற்படுகின்ற சங்கடங்கள் பற்றிப் பேரவையிலே விவாதிக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே பலமுறை இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது. இன்னும் தொடர்ந்து இவை நீடிக்கின்றன. ஆகவே, தலைவர் அவர்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இருக்கும் நான்கு—ஐந்து பேருந்துகளிலே, அவைகளை இரண்டாகப் பிரித்தால் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று இப்போது பிரிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், இப்போதும் அதே பிரச்சினை இருப்பதால், இதற்கு நிரந்தரமாக ஒரு தீர்வுகாண வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று தனியாக பேருந்துகளும், அவர்களுடன் வருபவர்கள் வருவதற்கென்று தனியாக வேறு பஸ்களும் விட்டால் தான் இந்தப் பிரச்சினை முடிவுக்கு வரும். இப்போது ஏற்கெனவே பேருந்துக்குரிய தொகையை அரசு செலுத்துகிறது. அதோடு பார்வையாளர்கள் விடுதியிலிருந்து டிக்கெட் வாங்குகிறார்கள்.

இரண்டு சாரார்க்கும் தனித்தனியாக பேருந்துகள் விடப்பட்டால்தான் இந்தப் பிரச்சினை தீரும். இன்றைக்கு காலையிலே வருந்தத்தக்க நிகழ்ச்சி ஒன்று நடந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் மனம் வருந்தும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டது. ஒரு பேருந்து வந்தது. அதிலே இடம்ம இல்லை. பேருந்தின் வாயில் வரையில் நின்று அடைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த அளவுக்குக் கூட்டம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் நானும் ஒரு கமிட்டியில் கலந்துகொள்ள 11 மணிக்கு வரவேண்டியிருந்தது. அப்போது அவர் உணர்ச்சிவசப்பட்டு, 'பஸ்ஸை நிறுத்திஙங்களுக்கு \இடம் ஏற்பாடு செய்த பிறகுதான், பஸ்ஸை அனுமதிக்க முடியும்', என்று சொல்லக் கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டது. ஆகவே,' இந்த சீரியஸ்னஸ்ஸை அரசு உணர்ந்து, ஒரு நல்ல முடிவை எடுக்க தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ரா. இராசாமுகமது : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை ஏற்கெனவே சட்டமன்றப் பேரவையிலும் எழுப்பப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினையையும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குக்கூட சில நேரங்களில் பிரச்சினைகள் ஏற்பட்டு அவர்கள் வர முடியாத சூழ்நிலை ஏற்படுவதையும் சொன்னார்கள். அரசைப் பொறுத்த வரையில், சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும்தான் வர வேண்டும் என்று தனியாக பஸ்கள் ஏற்பாடு செய்யலாம். சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்க, அவர்களைப் பார்த்து அவர்கள் மூலமாக தங்களுடைய தொகுதிகளில் பற்பல காரியங்களை நிறைவேற்ற, வெளியூர்களிலிருந்து பலர் வருகிறார்கள். அவர்களை ' நீங்கள் இன்னொரு பஸ்ஸிலே வாருங்கள், நான் இந்த பஸ்ஸிலே போகிறேன் என்று சொன்னால், அவர்கள் அதை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்வார்கள் என்ற பிரச்சினை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எல்லோருக்கும் ஏற்படுவது சகஜம். ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் வருகிறார் என்று சொன்னால், அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் என்ன என்பதை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களே இந்தப் பிரச்சினையை எழுப்பினால், அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்தவர்கள் 10 பேர்கள் வந்து அவர்களை உறுப்பினர்கள் வரவேண்டாம் என்று சொல்லக்கூடிய நிலைமை வந்தால், அதை அவர்கள் ஒத்துக்கொள்வார்களா? சட்டமன்ற உறுப்பினர்களோடு வந்தால், ஏதோ அவர்களுக்கு ஒரு மரியாதை என்று



மன்ற உறுப்பினர்களைக் கண்காணிக்கிறார்கள் என்று நான் சொல்லமாட்டேன். அவர்கள் கூட வந்தால்தான் மரியாதை என்று நினைக்கிறார்கள். அவர் ஏறுகிற பஸ்ஸிலேதான் ஏற வேணடும். அவர் எந்த அமைச்சரைப் பார்க்கப் போகிறாரோ, அவருடன் கூடச் சென்றே அந்த அமைச்சரைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடம் இருக்கிறது. இதையெல்லாம் மனதிலே கொண்டு பார்க்கின்றபோது, இந்தப் பிரச்சினையை எந்த அளவுக்கு ஒழுங்குபடுத்தலாம் என்று நிச்சயமாக நாம் எல்லோரும் சேர்ந்து முடிவு செய்ய வேண்டும். நம்முடைய கட்சித் தலைவர்களே கூட இதைச் செய்யலாம். இது பொதுவான பிரச்சினை. எல்லோருக்கும் ஏற்பட்டுவிடுகிறது. அதிலும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் போன்றவர்களைப் பார்த்தால், அவர்கள் வழிவிட்டு இடம் கொடுத்திருக்க வேண்டும். ஏதோ கிராமங்களிலே இருந்து வந்தவர்கள் சிலருக்கு அதெல்லாம் தெரியாமலேகூட இருந்திருக்கலாம். இந்தப் பிரச்சினையை நிச்சயமாக அரசு கவனத்திலேகொண்டு, பேரவைத் தலைவர், மேலவைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், போக்குவரத்துத்துறை அமைச்சர் எல்லோரும் சேர்ந்து முடிவெடுக்கலாம் என்பதையும், இதை எப்படி ஒழுங்கு படுத்தலாம் என்பதை அரசு பரிசீலித்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : * * *

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்கிறேன். அதை இங்கே சொல்ல விதிவிலக்கு இருக்கிறது. என்னுடைய அறையிலேயே வந்து கேட்டிருக்கலாம். அது எப்போது வரும், என்ன என்றெல்லாம் அறையிலேயே கேட்டிருக்கலாம்.

திரு. செ. முத்துசாமி : * * *

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் அறையிலே தெரிந்துகொள்ளலாம். விதி எல்லாம் உறுப்பினருக்கே தெரியும். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : * * *

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பிரச்சினை முழுவதையுமே சொல்லிவிட்டார்கள். பிரச்சினைபற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பகுதி அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட வேண்டும். இங்கே இருக்கிற மரபைக் கவனிக்க மாட்டேன் என்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் அங்கே கொடுத்தது என்னவென்று இங்கே தெரியக்கூடாது என்று

விதி தெளிவாக இருக்கிறது. அப்படியிருக்க முழு விஷயத்தையும் சொன்னால் எப்படி? இந்தப் பிரச்சினைபற்றிச் சொன்ன அந்தப் பகுதி முழுவதும் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

திரு. செ. முத்துசாமி : * *

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரும்பத் திரும்பச் சொன்னால் எப்படி?

திரு. செ. முத்துசாமி : இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்காத நிலையில், * * *
நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(பின்னர் திரு. செ. முத்துசாமி அவையிலிருந்து வெளியேறினார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றிச் சொன்னது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

## 4. கவன ஈர்ப்புத் தீர்மானம்.

**சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் தினக் கூலியாக வேலை செய்பவர்களுக்கு 4 மாதமாக ஊதியம் வழங்காமலும் 5 ஆண்டுகளாகப் பணியாற்றும் அவர்களை நிரந்தரமாக்காமலும் உள்ள நிலை குறித்து.**

திரு.* க. மீனாட்சி சுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, "சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் தினக்கூலியாக வேலை செய்யும் 50 பெண்கள் உட்பட 100 பேர்களுக்கு 4 மாதமாக ஊதியம் வழங்காமலும் 5 ஆண்டுகளாகப் பணியாற்றும் அவர்களை நிரந்தரமாக்காமலும் உள்ள நிலை குறித்து" மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அவையின் முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தற்காலிகமாகப் பணியில் சேருபவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வாரத்தில் ஊதியம் வழங்கப்படுவதாக இந்தக் குறிப்பிலே கூறப்பட்டுள்ளது. வேலையில்லாமல் கஷ்டப்படுகின்றவர்கள் தற்காலிக வேலைக்கு அன்றாடக் கூலியாக வந்து வேலை செய்கிறார்கள். அவர்கள் வேலைக்குக் கொடுக்கப்படும் கூலியை அந்தந்த நாளிலேயே கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனியாவது ஏற்பாடு செய்வார்களா?

---

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.
@ 773–774 பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தற்காலிகமாக வேலையில் இருக்கக்கூடியவர்களுக்கு உடனடியாகச் சம்பளம் கொடுக்காமல் இருந்த நிலை நீண்டகாலமாக இருந்து வந்தது. பலமுறை நாம் வற்புறுத்தியிருக்கிறோம். சென்னை இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும், திருவல்லிக்கேணியிலிருக்கும் கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் மருத்துவ மனையிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஏப்ரல் மாதம் வரையிலும் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கக்கூடிய பிரச்சினை என்னவென்றால், தற்காலிகமாகப் போடக்கூடியவர்களைப் போடுவதற்கு முன்பாக 'பே அண்ட் அக்கவுண்ட்ஸ்' அலுவலரின் அனுமதி வாங்க வேண்டும். மருத்துவமனையில் பணிபுரிபவர்களைப் பொறுத்தவரையில், ஒரு விதி விலக்கு வேண்டும் என்று இப்போது நாம் வற்புறுத்தியிருக்கிறோம். அதற்கான ஒரு ஆணை பிறப்பித்து. ஒரு டி.ஓ. கடிதம் கூட 1980 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் தேதி அன்று எழுதியிருக்கிறோம். முன்கூட்டியே, அட்வான்ஸ் ஆக அனுமதி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று 'பே அண்ட் அக்கவுண்ட்ஸ்' அலுவலரைக் கேட்டிருக்கிறோம். மருத்துவமனையாக இருப்பதால், மற்ற இடங்களுக்குப் பொருந்தும் ரூல்ஸைச் கொஞ்சம் தாராளமாக 'ரிலாக்ஸ்' செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் சுமுகமாக முடிக்க ஏற்பாடு செய்யப்படும்.

(பிற்பகல் 4—30)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மருத்துவமனை என்பது மிகவும் அத்தியாவசியமான பணியைச் செய்யும் இடம். அங்கே இப்படி 'ரொட்டீன் புரொசீஜர்' எல்லாம் பார்த்து அதற்குப் பிறகு ஒரு ஏற்பாட்டைச் செய்வது என்றால், ஆபத்திற்கு உதவ ஆள் இல்லாமல் போய்விடுவார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே நன்கு உணர்ந்திருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிர கவனம் செலுத்தி, எவ்வப்போது பதில் ஆள் நியமிக்கப்பட்டாலும் அவ்வப்போதே அவர்களுக்கு ஊதியம் பட்டுவாடா செய்கிற முறையை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அது நிச்சயமாகச் செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அரசின் தீர்மானங்கள்.

தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, கைத்தறி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு ஆகியவற்றின் மீது விவாதம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : இன்றைக்கு "தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பும்" "கைத்தறி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பும்" விவாதிக்கப்பட இருக்கின்றன. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கைத்தறி மற்றும் கதர் அமைச்சர் அவர்களும் முதலில் தீர்மானங்களை முன்மொழிந்து விட்டால், உறுப்பினர்கள் இரண்டு கொள்கை விளக்கக் குறிப்புகள்மீதும் பேசிவிடலாம். இறுதியாக அமைச்சர்கள் இருவரும் தனித்தனியாகப் பதில் உரை நிகழ்த்தலாம்.

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின்முன் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

* **மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கைத்தறி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @@ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : முன்மொழியப்பட்ட தீர்மானங்கள் :

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கைத்தறி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**திரு. காடுவெட்டி கண்ணப்பன்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான கைத்தறி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது ஒரு சில கருத்துக்

@ 775-869 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது





களைச் சொல்ல விழைகிறேன். "சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னிவரும் எங்கள் சித்திரக் கைத்தறிச் சேலையடி தென்னாட்டில் எந்நாளும் கொண்டாடும் வேலையடி" என்று மறைந்த பட்டுக்கோட்டையார் பாடி, அந்தப் பாடலுக்குச் சிறப்பேற்றும் வகையில் நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் தம் தோள்மீது கைத்தறித் துணிகளைச் சுமந்து தமிழ் நாட்டில் தெருத் தெருவாகச் சென்று விற்பனை செய்து இந்தத் துறைக்கே மகத்தான சிறப்பைத் தேடித் தந்தார்கள். அப்படிப்பட்ட சிறப்பு மிக்க துறை, கைத்தறித் துறை, இத் துறையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் அமைந்த நமது புரட்சித் தலைவரின் அரசு இன்றைய தினம் மாபெரும் புரட்சியைச் செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

கைத்தறித் துறையிலுள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் அங்கத்தினர்களை அதிகப்படுத்துகிற வகையில் 1984-85ல் 7 சதவீத உறுப்பினர்களை இதன்கீழ் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டுள்ளதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

நலிந்துள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்தல், தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் தலைமைச் சங்கத்தின் மூலதனத்தை அபிவிருத்தி செய்தல், நெசவாளர்களுக்குத் தேவையான பருத்தி நூல், பட்டு, செயற்கைப்பட்டு, சரிகை, சாயம் மற்றும் ரசாயனப் பொருட்களை நியாயமான விலையில் அளித்தல் ஆகியவை கைத்தறித் துறைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு செய்து வரும் பல நல்ல காரியங்களில் சிலவாகும். அதோடு வடிவமைப்பு நிலையம், நெசவாளர் பயிற்சி நிலையம் போன்றவை அமைத்தலும், நலிந்த நெசவாளர்களுக்கு வாழ்வு தரும் வகையில் கைத்தறித் துணியை அதிக அளவு ஏற்றுமதி செய்வதும், இந்த அரசு கைத்தறி நெசவாளர்களுக்கு செய்துள்ள உதவிகளாகும். அதுமட்டுமல்ல, 1979-80 முடிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தலைமைச் சங்கமாகிய கோஆப்டெக்ஸ்க்கும் வழங்கப்பட்ட கடன் வரம்பு ரூ.16.9 கோடியாக இருக்க, வரும் 1980-81 ஆம் ஆண்டில் அதை 22.58 கோடி என்ற அளவுக்கு இந்த அரசு உயர்த்தியிருக்கிறது. இது ஒன்றே புரட்சித் தலைவர் அவர்கள் கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கையில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதற்குச் சான்றாக அமைந்திருக்கிறது.

பொருட்கள் நிறுவனம்'' என்ற ஒரு அமைப்பை நிறுவியிருப்பது நலிவுற்ற நெசவாளர்களின் வாழ்க்கையில் ஒளிவிளக்காகத் திகழ்கிறது என்றால், அது மிகையாகாது. அது மட்டுமல்ல, 1979–80 ஆம் ஆண்டில் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி 52 கோடி ரூபாய் அளவுக்கு இருந்ததன் காரணமாக, மாநிலமெங்கும் தேங்கியிருந்த நிலைமையை மாற்ற, அதன் காரணமாக வாடிக் கிடக்கும் தொழிலாளர்களின் துயரைத் துடைக்க தமிழக அரசு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாக ரூ. 29 கோடி மதிப்புள்ள தேங்கியிருந்த கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்திருக்கிறது. ஆனால் அந்த அளவு தேங்கியிருந்த துணியினை விற்கும்போது, அதையே 35 கோடி ரூபாய்க்கு விற்று நெசவாளர்களின் துயரைப் போக்கியிருக்கிறது. இந்த அளவுக்கு கைத்தறித் துணி விற்பனையாவதற்காக இந்த அரசு நுகர்வோருக்கு விற்பனையில் தள்ளுபடிச் சலுகை அளித்திருக்கிறது. அதைப்போலவே சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கி ஏற்றுமதியை அதிகரித்திருப்பதன் மூலமாக நெசவாளர்களுக்கு உதவி செய்திருக்கிறது. அதோடு நெசவாளர் ஒருவர் இறந்தால் அவர் குடும்பத்திற்கு ரூ.3,000 உதவிப்பணம் வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு வழி செய்திருக்கிறது.

அதைப்போலவே நெசவாளர்களுக்கான வீட்டுவசதித் திட்டம் மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். நவீன சாயச் சாலைகள் அமைத்தலும், பட்டு சரிகையை நியாய விலையில் கிடைக்கச் செய்ய கடைகளை அமைத்தலும் ஏழைக் கைத்தறி நெசவாளர்களின் வயிற்றில் பால் வார்க்கும் புரட்சித் திட்டங்களாகும்.

கடந்த காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த அரசின் சாதனைகள் மிகவும் பாராட்டுக்குரியனவாக இருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பை வைத்துக்கொண்டு பேசுகிறாரா அல்லது எழுதி வைத்துக்கொண்டு படிக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: குறிப்பை வைத்துக் கொண்டு பேசுகிறார் என்றுதான் நம்புகிறேன்.



திரு. காடுவெட்டி கண்ணப்பன்: முந்தைய அரசின் காலத்தில் கோவை மத்திய மாவட்ட வங்கியின் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு தறியின் அடிப்படையில் ரூ. 500/-தான் வழங்கப்பட்டது. ஆனால் புரட்சித் தலைவரின் காலத்தில் தறி ஒன்றுக்கு ரூ. 1,500 ஆக அது உயர்த்தப்பட்டிருக்கிறது. அதுவும் தற்போது உயர்ந்து ரூ. 2,000 என்ற அளவுக்கு வந்திருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இடையிடையே என்னையும் பார்த்துப் பேசினால், இந்தக் கேள்வியே எழாது.

திரு. காடுவெட்டி கண்ணப்பன்: முன்னாலே ஒரு கூட்டுறவு நெசவாளர் சங்கம் அமைக்கப்பட வேண்டும் என்றால், சங்கத்தின் மூலதனம் ரூ. 5,000 போடவேண்டும் என்றிருந்தது. பிறகு அதுவே ரூ. 10,000 ஆக உயர்த்தப்பட்டது. ஆனால் புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்தில் அதிகமான கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் உருவாக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் உறுப்பினர் ஒன்றுக்கு ரூ. 10.25 வீதம் மூலதனம் போட்டால் போதும் என்றும், 100 உறுப்பினர்கள் இருந்தால் அந்தச் சங்கம் 1,025 கட்டினால் போதும் என்றும் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

எங்களுடைய கவுந்தப்பாடியில் உள்ள அமரர் அண்ணா நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தை எடுத்துக் கொண்டாலும், 1974–75–ல் அதற்குக் கொடுக்கப்பட்ட கடன் தொகை ரூ. 15,000/–தான். ஆனால் 1975–76-ல் அந்தச் சங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட கடன் தொகை ரூ. 8,000/-ஆகக் குறைந்து விட்டது. 1976-77-ல் அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 12,000 கடன் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த அரசு 1977–78–ல் அதை 19,000 ஆக உயர்த்திக் கொடுத்தது. இப்போது எங்கள் புரட்சித் தலைவரின் அரசு 1978-79-க்கு அதை 50,000 ரூபாயாக அதிகப்படுத்திக் கொடுத்து அங்கே இருக்கிற நெசவாளர்களின் துயரைத் துடைத்திருக்கிறது.

[திரு.காடுவெட்டி கண்ணப்பன்]

[பிற்பகல் 4.40]

1980—81 ஆம் ஆண்டுக்கு கழக அரசு 50 ஆயிரம் ரூபாயை வழங்கியிருக்கிறது. முந்தைய அரசு, நெசவாளர்கள் இறந்து விட்டால், 500 ரூபாய் மட்டும் அவர்களது குடும்பததிற்கு வழங்கியிருக்கிறது. நெசவாளர்கள் இறந்துவிட்டால், அவர்களுடைய குடும்பத்தினருடைய துயரைத் துடைத்து பாதுகாப்பதற்காக நம்முடைய கழக அரசு 3 ஆயிரம் ரூபாயை வழங்கியிருக்கிறது. அதைப் போலவே இயற்கைக் கொடுமைகளால் பாதிக்கப்படுபவர்களுக்கு, அதாவது வெள்ளத்தின் காரணமாக அல்லது தீ பிடித்து உடைமைகளை இழந்துவிட்டால், அவர்களுக்கு உதவும் பொருட்டு முந்தைய அரசு 250 ரூபாய் மானியமாகவும், 250 ரூபாய் கடனாகவும் வழங்கியிருக்கிறது. நமது கழக அரசும் இது போன்ற துயர் துடைக்கிற பணிகளில் கூடுமான வரையில் உதவி செய்திருக்கிறது. தமிழகத்தினுடைய விவசாயப் பெருமக்கள் முதுகெலும்பு என்று சொன்னால், நெசவாளர்கள் விலா எலும்பாக இருந்து தமிழகத்தைக் கட்டிக் காத்து வருகிறார்கள். விலா எலும்பாக உள்ள நெசவாளர்கள் முன்பு உத்திரவாதமில்லாத வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்கள். நெசவாளர்களுக்கு மூலமும் கிடையாது, முதலும் கிடையாது என்ற அளவில் இந்தச் சமுதாயத்தில் நித்தியக் கண்டம் பூரண ஆயுசு என்ற அளவில் இருந்த நெசவாளர்களுக்கு புரட்சித் தலைவர் அரசு நல்ல பல அறிவிப்புகளைத் தந்து, அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதத்தை அளித்திருக்கிறதென்றால், மிகையாகாது. பாவில் நூலை இழைத்து வண்ண வண்ண ஆடைகளைத் தயாரித்துத் தந்து மற்றவர்களுடைய மானத்தைக் காக்கின்ற அவர்களுடைய மானத்தைக் காப்பாற்ற முடியாமல் வேதனைக்குள்ளாகி முன்பு இருந்தார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, கடந்த இரண்டு ஆண்டுகளிலும் சரி, வருகின்ற ஆண்டுகளிலும் சரி, அவர்களுடைய வாழ்வுக்குப் பெருவாரியான உத்தரவாதத்தைத் தரக்கூடிய அளவிற்கு திட்டங்களைத் யாரித்துத் தந்திருக்கிறார்கள். ஆகவே நான் இந்தக் கொள்கைக் குறிப்பை வரவேற்கிறேன் என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

* <u>திரு. ஆர். டி. சீத்தாபதி</u> : தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கைக் குறிப்பிலே பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றதற்காக உள்ளபடியே பெருமகிழ்ச்சி கொள்கிறேன். ஏனென்று சொன்னால் இந்த அவையின் தலைவராக இருக்கிற தாங்கள் தங்களுடைய வாழ்க்கைப் பயணத்தை அச்சுக்கோர்க்கும் தொழிலாளியாக ஆரம்பித்து பின்னர் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு இந்த அவையின் தலைவராக வந்து வீற்றிருக்கக் கூடிய அளவிற்கு உயர்ந்திருக்கிறீர்கள் என்பதை நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.



[திரு.ஆர்.டி.சீத்தாபதி]

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட தொழிலாளியாக இருந்து, நான் சொல்கின்ற தொழிலாளி சினிமா தொழிலாளி அல்ல— நடிப்புத் தொழிலைக் கொண்டு படத்தில் நடித்து நாட்டு மக்கள் மத்தியிலே செல்வாக்குப் பெற்று முதலமைச்சராக வந்திருக்கிறார். அவரும் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்தான். அதைப்போலவே மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு இரயில்வேயில் பணியாற்றிய பிறகு, தொழிலாளர்களுக்காகப் பணியாற்றி இப்போது இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகிற நானும் ஒரு தொழிலாளிதான். இந்த அவையைப் பற்றி ஒருகணம் சிந்தித்துப் பார்க்கிற நேரத்தில்.....

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u>: மாண்புமிகு உறுப்பினர் தான் செய்த தொழிலைப் பற்றிச் சொல்லவில்லையே.

<u>திரு. ஆர். டி. சீத்தாபதி</u> : இரயில்வே தொழிலாளியாக இருந்து பணியாற்றினேன் என்பதை அவைத் தலைவருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் போன்றவர்கள் அமர்ந்திருந்த இந்த அவையைத் தொழிலாளி வர்க்கம் எட்டிப்பிடித்து விட்டதோ என்று எண்ணிப் பார்க்கிறேன். ஆகவே தொழிலாளிகள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டுமென்ற உணர்வோடு என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிலாளி என்று சொல்லிக்கொண்டு தொழிலாளிகளுடைய முதுகிலே குத்தாமல் பணியைச் செய்ய வேண்டியது நம்முடைய கடமை. தொழிலாளர்கள் நிலைமையைப்பற்றி இந்த அரசு தந்திருக்கிற புத்தகத்தைப் பார்த்தால், 1979ஆம் ஆண்டிலே என்னென்ன தந்தார்களோ அதே குறிப்பைத்தான் இந்தப் புத்தகத்திலும் தந்திருக்கிறார்கள். அட்டையை மட்டும் மாற்றித் தந்திருக்கிறார்கள், வேறு எதுவும் புதியதாகச் செய்திருப்பதாக நான் கருதவில்லை,

இந்தச் சர்க்கார் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏற்பட்ட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையையும் இப்போதுள்ள வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையையும் கணக்கிட்டுப் பார்த்தால், 1975 ஆம் ஆண்டு 224 என்றும் 1976 ஆம் ஆண்டிலே 207 என்றும், 1979 ஆம் ஆண்டிலே 331 என்றும், ஆண்டுக்காண்டு வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போவதைப் பார்க்கிறோம்.

தொழிலாளர்கள் தகராறு சட்டத்திலே வரப்பெற்ற புகார்களைப் பார்த்தால், 1975 ஆம் ஆண்டில் 6,971.

*புலவர் புலமைப் பித்தன்; தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் போராட்டங்கள் குறைச்சலாக இருந்து அதற்குப் பின்னாலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு தொழிலார்களுடைய போராட்டங்கள் அதிகமாக இருக்கிறதென்று சொல்லும்போது, தொழிலாளர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறதென்று அர்த்தமல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்த மாதிரியான விவாதங்களில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார் என்று மாண்புமிகு உறுப்பினர் நம்பிக்கொண்டிருக்க வேண்டும்.

புலவர் புலமைப்பித்தன்: நெருக்கடி காலத்தில் போராட்டங்கள் நடைபெறவில்லை. அப்படியானால் அப்போது தொழிலாளர் பிரச்சினைகள் இல்லாமல் இருந்தது என்று ஏற்றுக் கொள்கிறாரா மாண்புமிகு உறுப்பினர் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி; தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால், நான் சொன்ன வாசகத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று கருதுகிறேன். வேலை நிறுத்தங்கள் எத்தனை நடந்தன என்பதைப் பற்றித்தான் சொன்னேனே தவிர, வேறு எதையும் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் வரப்பெற்ற புகார்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, 1975 ஆம் ஆண்டு 6,671 வந்திருக்கின்றன. 1976 ஆம் ஆண்டில் 7,090 வந்திருக்கின்றன. 1977ஆம் ஆண்டு 6,775 வந்திருக்கின்றன. ஆனால் 1978ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டால் 8,204 வந்திருக்கின்றன, 1979ஆம் ஆண்டில் 7,808 புகார்கள் வந்திருக்கின்றன என்ற அளவிற்கு அதன் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறதென்றால், இந்த சர்க்கார் அந்த அளவிற்கு நாட்டம் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



அதைப் போலவே இழந்த உழைப்பு நாட்களைப் பார்க்கும் போது, 1975 ஆம் ஆண்டு 16,86,246 ஆக இருந்தது, 1976ஆம் ஆண்டில் 10 இலட்சமாக இருந்தது, 1979 ஆம் ஆண்டு 82,73,236 ஆக உயர்ந்திருக்கிறது. இந்த அளவிற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறதென்றால், இந்த அரசு தொழிலில், தொழிலாளர் நலனில் அக்கறை செலுத்தியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். ஆகவே தேவையில்லாமல் இப்படி இழப்பு ஏற்படாமலிருக்க இந்த இழப்பைக் குறைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைவர் அவர்களே, இன்னும் எவ்வளவு நேரம் நான் பேசலாம்?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தொடர்ந்து பேசலாம். நேரம் முடிந்ததும் என்னுடைய வலது கை வேலை செய்யும். அதைப் பார்த்து நிறுத்திவிடலாம். ஏன் மாண்புமிகு உறுப்பினரே தடை விதித்துக் கொள்ளுகிறார்? என் கை உயர்ந்தாலே அநாவசியமாக கெட்ட பெயர் வருகிறது

திரு. ஆர். டி. சீத்தாபதி; ஆகவே தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டு, இப்போதைய தன்மையை இந்த அரசு மாற்றிக்கொண்டு நல்ல முறையிலே செயலபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காழ்ப்புணர்ச்சியின் காரணமாக குற்றம் சாட்ட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 52 என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் தீர்ப்புக் கூறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 85 என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதில் எது உண்மையென்று அறிய விரும்புகிறேன். மொத்தம் 52 வழக்குகள் என்று சொல்லிவிட்டு, தீர்ப்பு வழங்கியது 85 வழக்குகள் என்றால், நிலைமை எப்படி இருக்கும் என்பதை இந்த அரசு விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 4.50]

அதே நேரத்தில் விபத்துக்களைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய கண்காணிப்பு முறைகளை அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்களின் பிரச்சினைகள் ஏற்படுகின்ற நேரத்தில், அவர்களுக்கு ஏற்படுகின்ற சாதக பாதகங்களை நன்றாக ஆய்ந்து அவர்களுக்கு நல்லது செய்துகொண்டிருக்கின்ற அரசு தொழிலாளர்களுடைய நலன்களை அக்கறையோடு கவனித்து, சட்ட திட்டங்களை அனுசரித்து அவர்களைக் காக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன். நன்றி. வணக்கம்.

*திரு சி. இராமலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை, கைத்தறி மற்றும் பஞ்சாலை கொள்கைக் குறிப்பின் மீது எனக்குப் பேசுகின்ற வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு உங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப் பேற்ற பிறகு, கைத்தறித் துறையின் வளர்ச்சியைக் கூர்ந்து கவனித்தால், அதனுடைய நிலைமை நமக்கு நன்றாகப் புலப்படுகின்றது. கைத்தறி வளர்ச்சித் திட்டம் என்ற அடிப் படையில் 6 இடங்களில் அதன் பணியைத் தொடங்கியிருக்கிறார் கள். சொந்தத்திலே வீடு இல்லாத, சொந்தத் தறி இல்லாத நெசவாளிகளுக்கு, வெறும் கையையும் காலையும் வைத்துக் கொண்டு வேலையைத் தொடங்கியிருக்கின்ற நெசவாளிகளுக்கு உதவி செய்கின்ற அளவில், தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம் என்ற அடிப்படையிலே ஆங்காங்கு திட்டங்களைத் தொடங்கி பணியாற்றி வருகிறது. அதைப் பொதுமக்களும், கைத்தறி நெசவாளர்களும் பெரிதும் உவந்து வரவேற்கிறார்கள். நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பல பகுதிகளிலே நல்ல முறையிலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்து வருகின்ற துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. கடந்த ஒரு ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட ரூ. 60 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அதை இந்த அவையில் கடந்த கூட்டத்தொடரில் கூட அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தேக்கத்தைப் போக்குவதற்கு பல தீவிர நடவடிக்கைகளை எடுத்த புரட்சித் தலைவர் அவர்கள் அரசு, இதற்காக ஒரு 5 கோடி ரூபாய் மான்யமாக ஒதுக்கியிருக்கிறது. அதன் மூலமாக பிரைமரி சங்கங்கள் கொள்முதல் செய்வதற்கு வாய்ப்பு அளித் திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், நம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்கூட பேரவையிலே சொல்லியிருக் கிறார்கள். ரூ. 5 லட்சத்திற்கு உட்பட்டு கொள்முதல் நடை முறை மூலதனத்தையுடைய சிறிய கூட்டுறவுச் சங்கங்கள் மாநில கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்வது என்ற அருமையான திட்டத்தை அறிவித்தார்கள். கிட்டத்தட்ட 100-க்கு 40 சதவிகிதம் பிரைமரி சங்கங்கள் ரூ. 5 லட்சத்திற்கு உட்பட்ட சங்கங்களாகவே இருக்கின்றன. இப்படி அவர்கள் கொள்முதல் செய்வது என்று சொன்னபோது, அதிலே உள்ள நெசவாளர்கள், இந்த அரசினுடைய இந்த முன்னோடித் திட்டத்தை நல்ல முறையிலே வரவேற்று ஆனந்தப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும் சாயத்தொழிலை அமைப்பது பற்றிச் சொல்லியிருக் கிறார்கள். இன்றைக்கு சாயப் பொருள்கள் ஜெர்மனியிலிருந்தும் வேறு பல நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன.



அதுவும் தேவையான அளவுக்குக் கிடைக்காத காரணத்தினால் பெரும் வியாபாரிகள், ஏஜெண்டுகள் அதை வாங்கி பதுக்கி வைத்து பண்டிகைகள் வருகின்ற நேரத்தில் அதிக விலைக்கு விற்கிறார்கள். அது சங்கராந்தியாக இருந்தாலும் சரி, தீபாவளியாக இருந்தாலும் சரி, மற்ற இந்துக் கள் பண்டிகையாக இருந்தாலும் சரி, கிருத்துவர்கள் பண்டிகைகள் ஆனாலும் சரி, அந்தத் துணிகளுக்கு கிராக்கி வருகிற நேரத்தில் அந்த வியாபாரிகள் அதை ஒன்றுக்கு நான்கு மடங்கு விலைக்கு விற்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே சாயப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு தென் னாற்காடு மாவட்டத்தில் இப்போது ஏற்பாடு செய்திருக்கிறார் கள். அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற சாயப் பொருள்கள் தொழிலாளர்களுக்குக் கணிசமாகவும் குறைந்த விலையிலும் கிடைக்கும் என்று உறுதி கொடுத்திருக்கிறார்கள். கைத்தறித் தொழிற்சாலைகளுக்குக் குறைந்த விலையில், தரமான நூல்களைக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இன்றைக்கு கூட்டுறவு ஆலைகளின் மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கடந்த ஓராண்டு காலமாக அந்த ஏற்பாட்டைச் செய்து வந்திருக்கிறார்கள். தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை உடனடியாக விற்க வேண்டும் என்று தீவிர நடவடிக்கைகள் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. கடந்த 1-ஆம் தேதியிலிருந்து தமிழ் நாடு கூட்டுறவுக் கைத்தறி தொழிலாளர்கள் சங்கத்தின் ஆலோசனைக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கின்றேன். அந்தச் சங்கம் தீவிரமாக நல்ல பணியாற்றிக்கொண்டிருக்கிறது. அங்கு அறிந்த விஷயங்களை இந்த அவையின் மூலமாக அரசுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏற்கெனவே இந்த அரசும் மத்திய அரசும் கைத்தறித் துணிகளுக்கு ரிபேட் என்ற முறையிலே உதவி கொடுத்து வந்தது. சங்கராந்தி பண்டிகைக்கு ரிபேட் 30 நாட்களுக்குக் கொடுத்துவருகிறது. தீபாவளிப் பண்டிகைக்கு முன் ரிபேட் ஒரு 20 நாட்களுக்குக் கொடுத்துவருகிறது. அதுபோலவே மொத்தம் 50 நாட்களுக்குக் கொடுத்துவருகிறது. அப்படியே ஆண்டு முழுவதும் கொடுக்க வேண்டும். இப்போது ரம்சான் பண்டிகைக்கு முன்னும் ரிபேட் கொடுக்க முடிவு எடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக கடந்த காலத்திலே மொத்த வியாபாரிகள், அந்த ரிபேட் கிடைக்கும் என்பதால், ரூ. 30,000, ரூ. 50,000 என்ற அளவுக்கு மொத்தமாகவும் கொள்முதல் செய்வார்கள். அப்போது நான் எதிர்த்துப் பேசினேன். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற தேக்கத்தைப் பார்க்கும்போது, அந்த வியாபாரிகள், அதிகாரிகள் சொல்வதைக் கூர்ந்து பார்க்கின்றபோது, அந்த நடைமுறை நல்லது என்று தெரிகிறது. ஆக 1978-ஆம் ஆண்டு இருந்த அந்த நடைமுறையை நாம் மீண்டும் கொண்டு வரலாமா என்ற எண்ணம் இருக்கிறது. ஏனென்றால், மொத்த வியாபாரிகள் மொத்தமாகச் சரக்கு எடுத்துக்

கொண்டால். அவர்களுக்கு ரிபேட் கிடைக்கிறது. ரிபேட் பெற்றதை எடுத்துச் சென்று அவர்கள் ஜவுளிக் கடையிலே வைத்து 3, 6 மாதங்களுக்கு வைத்து சில்லறையில் விற்கிறார்கள். அதனால் நெசவாளிகளுக்கு என்ன நன்மை என்று பார்க்கின்றபோது, நெசவாளர்கள் தொழில் நடக்க உதவுகின்றது, கூட்டுறவுச் சங்கங்களிலே நாம் அதிகக் கூலியைக் கொடுக்கிறோம். நாங்கள் செய்யும் தொழில் லுங்கி உற்பத்தி செய்வது. அந்த லுங்கித் தொழிலை எடுத்துக்கொண்டால், 8 லுங்கிக்கு ரூ. 48 வரை கொடுக்கிறார்கள் தனிப்பட்ட மாஸ்டர் வீவர்கள். நாங்கள் கூட்டுறவுச் சங்கத்திலே அந்த 8 லுங்கிக்கு ரூ. 64 வரை கொடுக்கிறோம். இந்த 48 ரூபாய்க்கும் 64 ரூபாய்க்கும் எவ்வளவோ கூலி வித்தியாசம் இருக்கிறது. இந்தக் கூலி, நூல் விலை, மற்றும் போக்குவரத்துச் செலவு என்று இப்படி பல செலவுகளையும் சேர்த்துத்தான் அதற்கு விலை நிர்ணயம் செய்கிறோம். தனியார்கள் அந்த லுங்கியை அடக்கத்தோடு ரூ. 22க்கு விற்கிறார்கள், கூட்டுறவுத் துறையிலே ரூ. 23க்கு விற்கிறார்கள். அதில் ரிபேட் கொடுத்தால், அதன் விலை கிட்டத்தட்ட ரூ. 21க்கு வந்து விடுகிறது. ஆகவே தொழிலாளர்களுக்கு அதிகக் கூலி கிடைக்கிறது. விலை குறைவதால், ரிபேட் கொடுப்பதால் அந்த இரண்டு ரூபாய் குறைகிறது. சில்லறையிலே கொடுத்தால் அந்த ஒரு ரூபாய் மாஸ்டர் வீவர்களுக்குக் கிடைக்கிறது. பெரும்பான்மையான வியாபாரிகள் அதிகமாகக் கொள்முதல் செய்கிறார்கள். சமயம் வரும்போது, சில்லறையில் விற்கிறார்கள். ஒவ்வொரு வியாபாரியும் மொத்தமாக எடுப்பதற்கு, பல்வேறு மாஸ்டர் வீவர்களிடம் போய் திரிந்து எடுக்கவேண்டியதாக இருக்கிறது. அந்த வியாபாரிகள் சொசைட்டிகளில் தேவையை மொத்தமாக எடுக்க வசதியாக இருக்கின்றது. அவர்கள் கிட்டத்தட்ட ரூ. 50 ஆயிரத்திற்குககூட எடுக்கிறார்கள். தற்போதுள்ள இந்தத் தேக்கத்தைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு புதிய முறையை அறிவிக்க வேண்டும். அப்படிச் செய்தால் உடனடியாக இந்த தேக்கத்தைப் போக்கலாம்.

அடுத்து, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்ற சிப்பந்திகளை வேலைக்கு எடுப்பது பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவர்களை வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தின் மூலம் எடுக்கிறோம். அவர்களை அப்படி வேலையில் வைக்கிறோம். அது கூட்டுறவுச் சங்கமாக இருந்தாலும் சரி கூட்டுறவு பலசரக்கு விற்பனை நிலையமானாலும் சரி, நெசவுத் தொழிலைப் பொறுத்தவரையில், அது சரியாக வரவில்லை. வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தின் மூலமாக நாம் சிப்பந்திகளை எடுத்துக்கொண்டால், அந்த சிப்பந்திகள் பணியாற்றுகின்ற போது காலையிலே 10 மணிக்கு வந்து மாலை



5 மணிக்கே போய்விடுகிறார்கள். அந்த வேலையில் நூல் கட்டுகளைத் தூக்கிப் போடவேண்டிய வேலை இருக்கிறது. மற்றும் எடுபிடி வேலைகளைச் செய்ய வேண்டி இருக்கிறது. இந்தத் தொழிலுக்கு எஸ். எஸ். எல். சி. படித்தவர்கள் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தின் மூலம் வருகிறார்கள். எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக வேலைக்கு வருகின்ற நபரை ஏதாவது கேட்டால், அவர்கள், 'நாங்கள் சர்க்கார் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வேலைக்கு வருகிறோம், ஆகவே இந்த வேலையைச் செய்யமாட்டோம்' என்று சொல்கிறார்கள். அழுக்குப் பிடிக்கிற வேலை, மூட்டை தூக்குகின்ற வேலை இவைகளை அவர்கள் செய்ய விரும்புவதில்லை. இந்த நிலைமையில் அந்தச் சங்கத்தினுடைய தலைவரே அந்த மூட்டையை பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் எடுத்துப்போக வேண்டியதாக ஆகிவிடுகிறது. அவர்கள் அங்கு அடங்கி வேலை செய்வதில்லை. கூட்டுறவுச் சங்கங்களில் இப்படிப்பட்டவர்களை, அழுக்குப்படாமல் வேலை செய்ய வேண்டும் என்று இருப்பவர்களை, வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தின் மூலம் எடுத்து வேலை வாங்க முடியாது. ஆகவே அந்த முறையில் வேலைக்கு ஆட்களை எடுப்பதற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற வேலைகளுக்கும் இது பொருந்தும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாநில சர்க்கார் சிப்பந்திகளுக்கு இந்தத் துணிகளை வாங்க நாம் கடன் வசதி செய்து தருகிறோம்.

(மாற்றுத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் தலைமை)

(பிற்பகல் 5—00)

அரசு ஊழியர்களுக்கு 'சிப்பந்திகளுக்குக்', கடனாகக் கொடுக்கப்படும் கைத்தறித் துணியின் விலையை, அரசு முன்கூட்டியே 'செக்' ஆக கைத்தறித் துறைக்குக் கொடுத்துவிடுகிறது. சிப்பந்திகள் மாதாமாதம் அவர்கள் சம்பளத்திலே கொடுத்துவிடுகிறார்கள். கைத்தறித்துறைக்கு முதலிலேயே பணம் வந்துசேர்ந்து விடுகிறது, அப்படிப்பட்ட வசதி, ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கு பண்டிகைக்காலங்களில் துணிகளைக் கடனாகக் கொடுக்கும்போது, கிடைப்பதில்லை. இப்போது பஞ்சாயத்து யூனியன்களில் பணியாற்றும் ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக்கப் போகிறார்கள். எனவே பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சிகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் மற்ற சிப்பந்திகளுக்கும் கைத்தறித் துணியைப் பண்டிகைக் காலங்களில் கொடுக்கும்போது, அரசு ஊழியர்களுக்குச் செய்வதுபோல, முன்கூட்டியே பணத்தைக் கொடுத்துவிட வேண்டும். இதற்கு முன்னால் அவர்களுக்குக் கைத்தறித் துணிகளைக் கடனாகக்

கொடுத்தபோது, அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், 'எங்களிடம் பணம் இல்லை, அவர்கள் மாதாமாதம் திருப்பிக் கொடுக்கும்போதுதான் தருவோமென்று சொல்லி, சிப்பந்திகளின் சம்பளத்தில் பிடித்தம் செய்த பணத்தை பஞ்சாயத்து யூனியன் அல்லது நகராட்சியின் நிர்வாகச் செலவுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். எனவே அந்த முறையை மாற்றி, அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், சர்க்கார் அந்தப் பணத்தை முன்கூட்டியே செக்-ஆக கைத்தறித் துறைக்குக் கொடுப்பது போல், உள்ளாட்சித் துறையிலுள்ள ஆசிரியர்களுக்கும், சிப்பந்திகளுக்கும் கைத்தறித் துணிகளைக் கடன் கொடுக்கும்போது, அதற்கான மொத்த பணத்தையும் முன்கூட்டியே தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அரசு ஊழியர்களுக்குக் கைத்தறித் துணியைத் கடனாகக் கொடுத்து, படிப்படியாகப் பிடிக்கும் முறையை மத்திய அரசு ஊழியர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக தமிழகத்தின் முதலமைச்சரவர்களையும், கைத்தறித்துறை அமைச்சரவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கும் இந்த வசதியை விஸ்தரிக்க மத்திய அரசைக் கேட்டுக்கொண்டால், அந்தச் சிப்பந்திகளும் நிறைய துணிகளை வாங்க வசதியாக இருக்கும். மாநில அரசு ஊழியர்கள் 7 லட்சம் பேர்கள் என்றால், அதே அளவிற்கு மத்திய அரசு ஊழியர்களும் நம் மாநிலத்தில் இருக்கிறார்கள். அவர்களும் பண்டிகை வந்தால் 500 ரூபாய் அல்லது 1000 ரூபாய்க்குத் துணிகள் வாங்குவார்கள். அதனால் கைத்தறித் துணிகள் தாராளமாகச் செலவாகும், தேக்க நிலை மாறும், அடுத்து, இந்திய நாட்டின் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான துணிகளையும் நம் கைத்தறித் துறையிலிருந்து வாங்கிக்கொள்ளலாம். பாதுகாப்புப் படையில் இருப்பவர்கள் எப்போதும் காக்கி சட்டையில் இருப்பதில்லை. வீட்டிற்கு அல்லது அறைகளுக்குப் போனால் லுங்கியுடன், சதாரண உடையில் இருக்கிறார்கள் அவர்கள் லுங்கி வாங்குவதற்கும், அவர்களுடைய மனைவிமார்களுக்குக் கைத்தறிப் புடவைகள் வாங்குவதற்கும் அவர்கள் கைத்தறித்துணியை கடனில்வாங்க அனுமதிக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டால், கைத்தறித் துணியின் தேக்கத்தைப் போக்கலாம். கைத்தறித் துணியின் தேக்கத்தைப் போக்குவதற்காக மாத்திரம் இதைச் சொல்லவில்லை. 6 மாதங்கள் தேக்கம் இருக்கும், பிறகு போய்விடும். எங்கள் தொழிலைப் பற்றி ஒரு பழமொழி சொல்லுவார்கள். "6 மாதம் நூலும் தறியும், 6 மாதம் வேலும் மயிலும்" என்று சொல்லுவார்கள். இந்த நாட்டிலே படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வேலையில்லாத்



திண்டாட்டத்தால் திண்டாடுகிறார்கள். அவர்களுக்கு ஒரு மாற்று வேலையாக கைத்தறித் தொழில் இருந்து, பாதுகாப்பு கொடுக்குமென்று நான் கருதுகிறேன். அப்படி பாதுகாப்பு கொடுத்து வருகிறது. இன்றைக்கு தென் ஆற்காடு, சேலம் திருச்சி, கோவை, மதுரை மாவட்டங்களில் அந்தத் தொழில் செய்யும் இனத்தில் பிறக்காதவர்கள், தறியைத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். வன்னியக் கவுண்டர்கள் இந்தத் தொழிலைச் செய்கிறார்கள், வெள்ளாளக் கவுண்டர்கள், தேவமார்கள் இந்தத் தொழிலைச் செய்கிறார்கள். சில பகுதிகளில் அகமுடையப் பிள்ளைகளும் இதைச் செய்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இந்தத் தொழில் மிகப் பாதுகாப்பாக இருக்கிறது. அந்த நாட்களிலே நான் சிறு பிள்ளையாக இருந்தபோது சொல்லுவார்கள். வேலை இல்லாமல் இருக்கிறாயே, அந்த முதலியார் வீட்டுக்குப் போனால் தறி நெசவு கற்றுக்கொள்ளலாம் என்று சொல்லுவது வழக்கம். இந்தத் தொழிலை, நியாயமான கூலியுள்ள தொழிலாக, பாதுகாப்பான தொழிலாக மாற்றினால் நல்லது, மத்திய அரசினர் பல உதவிகளைச் செய்கிறார்கள். எனவே இந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய கைத்தறித் துணிகளைப் போன்றே, மில் முதலாளிகள் பவர்லூம்காரர்கள் கைத்தறிப் போலியைத் தயார் செய்து, வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். உள்நாட்டிலே கூட கைத்தறித் துணி என்று சீலைப் போட்டு விற்கிறார்கள். அதனால் கூட எங்களுடைய தொழில் பாதிக்கப்படுகிறது. அதை மத்திய அரசுக்கு எடுத்துச்சொலலி, பாதுகாப்பைத் தேட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு கைத்தறித் துறையிலே ஆங்காங்கு விற்பனைக் கடைகள் இருக்கின்றன. "கோ-ஆப்டெக்ஸ்" கடைகள் இருக்கின்றன. அங்கே பண்டிகைக் காலங்களில் அதிகமான பணியாளர்களை வைக்கும் சூழ்நிலை இருக்கிறது. தீபாவளி, கிருஸ்துமஸ், ரம்ஜான் ஆகிய பண்டிகைகளின் போது அங்கே வேலைக்கு ஆட்கள் வரும்போது அவர்களை வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தின் மூலமாக நியமிக்க வேண்டியிருக்கிறது. ஒரு மாதத்திற்கு அவர்களை வைத்தால் முன்பின் துணியைப் பற்றிப் பழக்கமில்லாத அவர்களுக்குத் துணிகளின் நயம் தெரிவதில்லை, இது இன்ன நம்பர் சேலை என்றுகூடச் சொல்லத் தெரியவில்லை. அவர்கள் ஏனோ தானோ என்று பொறுப்பில்லாமல் உட்கார்ந்துவிட்டுப் போகிறார்கள். எனவே பண்டிகைக் காலங்களில் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களைப் பணியாளர்களாக வைத்துக் கொள்ள வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு, கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சுபிட்சமாக வாழ நல்ல திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறது. மேலும் கைத்தறிதுறை அமைச்சர் அவர்கள் பேரவையில் ஒன்றைச்சொன்னார்கள். கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் இறந்தால் 3000 ரூபாய் கொடுக்கப்படுமென்று சொன்னார்கள். நான்கூட காஞ்சீபுரத்தில் இதுபற்றிசொன்னேன். இது எல்லா நெசவாளர்களுக்கும் அல்ல, கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குத்தான் கொடுக்கப்படுமென்று. இந்த நேரத்தில் தமிழக அரசையும், கைத்தறித் துறை அமைச்சரவர்களையும் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். 3000 ரூபாய் என்பது எதற்கும் போதாது. ஈமச் சடங்கு செய்து, 11 ஆம் நாள் காரியம் செய்வது என்பதற்குக்கூடப் போதாது. எனவே மற்ற தொழிலாளர்களுக்குக் கொடுப்பது போல 5000 ரூபாய் என்று இந்த உதவியை அறிவிக்க வேண்டும். பனை மரம் ஏறும் தொழிலாளர்கள் இறந்தால், 5000 ரூபாய் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. அது போன்ற உதவியைத் தென்னை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று பல பேர்கள் என்னிடம் மகஜர்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே மரம் ஏறும் தொழிலாளர்களுக்கும், மீன் பிடிக்கும் தொழிலாளர்களுக்கும் இருக்கும் பாதுகாப்பு போல நெசவாளர்களுக்கும் 5000 ரூபாய் கொடுக்க வேண்டும். உடனடியாக நெசவாளர்கள் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து, நிறைவேற்றும்படி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்களைக் கேட்டுக் கொண்டு, அமைகிறேன்.

***திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக இந்த அரசாங்கத்தினுடைய தொழிலாளர் நலக் கொள்கையிலே தீவிர மாற்றம் தேவை என்று நாங்கள் சில ஆண்டுகளாகவே வற்புறுத்தி வந்திருக்கிறோம். நாங்கள் மட்டுமல்லாமல், தமிழ் நாட்டிலுள்ள தொழிலாளர்கள் அனைவரும் அப்படிச் சொல்லி வந்திருக்கின்றனர். கடந்த 2-1/2 ஆண்டுகளில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களின் அடிப்படையிலே, இந்த அரசின் தொழிலாளர் நலக் கொள்கையில் தீவிர மாற்றம் தேவை என்று அவர்கள் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கொள்கை விளக்கக் குறிப்பிலே "தமிழ் நாட்டில் 1979-ஆம் ஆண்டில் எல்லாப் பகுதிகளிலும் தொழில் அமைதியும் நட்புறவும் பொதுவாக நிலவின" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது எதார்த்தமல்ல. கொள்கை விளக்கக் குறிப்பின் நான்காம் பக்கத்தில் 'வேலையை நிறுத்தி விடுதல்' என்ற தலைப்பில் 1978 ஆம் ஆண்டில் இழந்த உழைப்பு நாட்கள் 21,55,675 என்று போட்டிருக்கிறது. 1979-ஆம் ஆண்டில் இழந்த வேலை நாட்கள்





[பிற்பகல் 5-10]

82,73,236 என்று போட்டிருக்கிறது. 1979-ஆம் ஆண்டிலே 4 மடங்கு அதிகமாக மனித உழைப்பு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 1979-ஆம் ஆண்டிலே தான் தமிழ் நாட்டிலே, 4, 5 மாதங்கள் நீடித்த பல போராட்டங்கள் நடைபெற்றன. மேட்டுப்பாளையம், திருச்சி, பள்ளிப்பாளையம், அம்பத்தூர், போன்ற இடங்களில இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன. மாநிலம் பூராவும் பஞ்சாலை வேலை நிறுத்தங்களும் போராட்டங்களும் நடைபெற்றன. அந்த ஆண்டிலே மாநிலம் பூராவும் அப்படிப்பட்ட போராட்டங்கள் நடைபெற்ற காரணத்தினால்தான், 1978 ஆம் ஆண்டை விட 4 மடங்கு மனித உழைப்பு நாட்கள் இழப்பு ஏற்பட்டது. இவ்வளவு போராட்டங்களையும் அரசு அன்றையதினம் சமாளித்த விதம் குறித்து அனைத்துத் தொழிற்சங்கங்களையும் சேர்ந்த தொழிலாளிகள் மிகக் கசப்பான உணர்வோடு இருந்தார்கள். என்றாலும் 1980 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வந்தபோது அதே தொழிலாளர் வர்க்கம் இந்த அரசுக்கு ஆதரவு கொடுத்தது என்பது எல்லோருக்கும் மிக நன்றாகத் தெரியும். அதற்குக் காரணம் தமிழ் நாட்டிலே மீண்டும் யதேச்சாதிகார சக்திகள் வரக்கூடாது. தமிழ் நாட்டை சர்வாதிகார சக்திகள் கைப்பற்றிவிடக் கூடாது என்கிற எண்ணம் தான். முன்பு மத்திய அரசிலே இருந்தவர்கள் எப்படியெல்லாம் யதேச்சாதிகாரத்துடன் நடந்துகொண்டார்கள், எப்படி எப்படியெல்லாம் தொழிலாள வர்க்கத்தின் உரிமைகள் பறிக்கப்பட்டன, அவர்கள் சம்பாதித்த பணம் எப்படி எப்படியெல்லாம் கட்டாயமாகப் பிடித்தம் செய்யப்பட்டது என்கின்ற நிலைமைகளையெல்லாம் அவர்கள் உணர்ந்திருந்தபடியால் மீண்டும் சர்வாதிகாரம் இங்கே தலை தூக்கக் கூடாது என்கிற எண்ணத்தில் ஆதரவு தந்தார்கள். ஆகவே தான் 1980 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஓட்டு அளித்தார்கள். அவர்கள் ஆதரவு தர இரண்டாவது காரணம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை அதன் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பே ஜனநாயக விரோதப் போக்குடன் கலைத்ததை தொழிலாளர் வர்க்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆளும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலத்திலே தொழிலாளர் வர்க்கத்துக்கு ஆதரவாகப் பேசிய பேச்சுக்களும், அளித்த வாக்குறுதிகளும் அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டின. சென்ற முறை இந்த அரசு கடைப்பிடித்த தொழிலாளர் நலக் கொள்கையில் இந்த முறை மாற்றம் இருக்கும் என்கிற நம்பிக்கையைத் தான் நான் குறிப்பிடுகிறேன். அவர்களுடைய நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு கருத்தை அமைச்சர் அவர்கள்

(திரு. ஆ. நல்லசிவன்) [1980 ஜூலை 25

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒரு இடத்தில் தந்திருக்கிறார்கள். ''நியாயமான ஊதியத்தைத் தொழிலாளர்களுக்கு வழங்குதல், தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல், தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்ய உள்ள உரிமையை அங்கீகரித்தல்'' என்கிற கருத்தினை முதல் பக்கத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். மேலும் தொடர்ந்து ''அவ்வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதினால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதகங்களை கருத்தில் கொண்டு தக்க சமயத்தில் அரசு தலையிடுதல், இணக்கம் செய்வித்தல், சுமுகமான உடன்படிக்கை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வேலை நிறுத்தம் தொடர்ந்து நீடிக்கா வண்ணம் பார்த்துக் கொள்வது என்ற அரசின் கொள்கை'' என்று இருப்பதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக ஆளும் கட்சி தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதியின் பிரதிபலிப்பு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் தொனிக்கிறது. அதேநேரத்தில் இன்லறக்கு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்ட போலீஸ் மானியம் சம்பந்தப்பட்ட ரிப்போர்ட்டையும் படித்தேன். அதை நான் படித்தபோது இதிலே எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு நேர் எதிராக, ஒரு பெரிய இடியாக, அதில் ஒரு கருத்து இருந்தது· அதிலே 'லேபர் அன்ரெஸ்ட்', தொழிலாளர் அமைதியின்மை, கிளர்ச்சி என்கிற தலைப்பின் கீழ் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்குறது. "The Tamil Nadu Essential Service Maintence Ordinance promulgated on the 13th July proved extremely effective in that it quelled all intent to strike in the minds of workers of essential services". என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழில் அதை மொழி பெயர்க்கும்போது சரியாக மொழி பெயர்க்கவில்லையென்று நான் கருதுகிறேன். என்ன நோக்கத்திலே அப்படி எழுதியிருக்கிறார்களோ அந்த நோக்கத்தைத் தெளிவாகச் சொல்லும் முறையில் அதே அழுத்தத்தோடு அதை மொழி பெயர்க்கவில்லை. ''மின்சாரம், போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய மனதில் வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று இருந்த எண்ணத்தை நீக்கிவிட்டது.'' என்று மொழிபெயர்த்துள்ளனர். இது சரியான மொழி பெயர்ப்பல்ல. வேலை நிறுத்த எண்ணத்தையே ஒழித்துக் கட்டு என்று தான் அர்த்தம். அவர்கள் எழுதியிருப்பதற்கு என்ன அர்த்தம் என்றால், தொழிலாளர் மனதில் வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தையே கொல் என்று தான் அர்த்தம். தொழிலாளர் மனதில் வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற எண்ணமே வரக்கூடாது என்பதற்காகத் தான் "quell the intent" என்ற சொற்றொடரைப் போட்டிருக்கிறார்கள். மேலும், வேலை நிறுத்தத் தடைச் சட்டம் எப்படி எப்படியெல்லாம் உதவியது என்பதைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில், ''வேலை நிறுத்தம்



1980 ஜூலை 25] [திரு. ஆ. நல்லசிவன்]

செய்ய உள்ள உரிமையை அங்கீகரித்தல்'' என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறார்கள். போலீஸ் மானிய அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் அவசரச் சட்டம் மூலம், தொழிலாளர்கள் என்றைக்குமே வேலை நிறுத்தம் செய்யக் கூடாது, அந்த எண்ணமே வரக் கூடாது என்கிற நோக்கத்தில் "quell the intent" என்று கூறியிருக்கிறார்கள். அப்படி என்றால், வேலை நிறுத்த உரிமையை அங்கீகரித்தல் என்று சொல்லியிருப்பது வெறும் பேப்பர் அளவில் தானா? அரசியல் சாசனத்தில் வேலை நிறுத்த உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அப்படி இருக்கும்போது ''க்வெல் தி இன்டெடைட்'' என்கிற கருத்தைச் கொல்லலாமா? இடது கையால் கொடுத்துவிட்டு வலது கையால் பறிப்பது மாதிரி செய்திருக்கிறார்கள். ''புரூவ்ட் எபெக்டிவ்'' திறமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால், வேலை நிறுத்தம் பற்றி அரசின் கொள்கை தான் என்ன? ''க்வெல் தி இன்டென்ட்' என்றால், ஒழித்துக் கட்டப்பட வேண்டும் என்றுதான் அர்த்தம். இரண்டு விதமான கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால் இரண்டில் அரசின் கொள்கை யாது? இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, நான் என்ன வற்புறுத்திச் சொல்கிறேன் என்றால் ''க்வெல் தி இன்டென்ட்'' என்கிற கருத்து மிகவும் ஆபத்தான போக்கு. அப்படி இல்லையென்று அரசு உடனே அறிவிக்க வேண்டும். இதை அதிகாரிகள் தயார் செய்து அவசரத்தில் அளித்தார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். அதுவும் போலீஸ் டிப்பார்ட்மென்ட் அதிகாரிகளே அதைத் தயார் செய்து முதலமைச்சர் அவர்களும் கையெழுத்துப் போட்டிருக்கிறார் என்றால், அவர்களுடைய உரிமை மறுக்கப்படுகிறது என்று தானே அர்த்தம்? ''க்வெல் தி இன்டென்ட்'' என்றால், யாரை வைத்து அதைச் செய்யப் போகிறார்கள்? தமிழ் நாட்டிலுள்ள போலீஸ் அதிகார வர்க்கத்தை வைத்துத் தான் அதைச் செய்ய வேண்டும். அவர்கள் தான் அதைத் தடுக்க முன்வர வேண்டும். இது எப்படிப்பட்ட போக்கு என்பதைத் தான் இங்கே சொல்ல விரும்புகிறேன். தமிழ் ரிப்போர்ட் 69 ஆம் பக்கத்தில் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 1980 மார்ச் மாதத்தில் 2 ஆம் தேதியன்று சென்னை நகரில் ஒரு ஆர்ப்பாட்டம் நடந்தது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டதற்கு தமிழ் நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகள் எல்லோரும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள். அந்த ஆர்ப்பாட்டத்தை எப்படி போலீசார் கலைத்தார்கள், எப்படி பலாத்காரத்தை உபயோகித்தார்கள் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அன்றைய தினம் சாதாரண போலீசார்கள் கூட அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது இருந்த கோபத்தின் காரணமாக, ஆர்ப்பாட்டத்தில பங்கெடுக்க

அடித்தார்கள். அன்றைக்கு இரவு நடந்த கடற்கரைக் கூட்டத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். "போலீசாருடைய போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும், மாற்றிக்கொள்ள இரண்டு வாரங்கள் அவகாசம் கொடுப்பேன். அப்படியும் அவர்கள் போக்கை மாற்றிக்கொள்ளாவிட்டால், நாங்களே நடவடிக்கையில் இறங்க வேண்டியிருக்கும்" என்று சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்திய ஊழியர்கள் மீது போலீஸ் நிர்வாகம் அடக்குமுறை நடத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்படி அன்றையதினம் நம்முடைய முதல்வர் பேசினார். அன்று நடைபெற்ற ஊர்வலத்தின்போது, சமூக விரோத சக்திகள் ஊர்வலத்தில் பங்கேற்ற தொண்டர்களுடன் கலந்து காவலர்களைத் தாக்கினார்கள். ஆகையால் ஊர்வலத்தில் வந்த தொண்டர்களை போலீசார் அடித்தார்கள் என்று போலீஸ் மானிய அறிக்கை கூறுகிறது. என்ன விரோதமான அறிக்கை! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியின் பதவிக் காலம் முடிவடைவதற்குள் கலைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட போராட்டத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட அதில் பங்கேற்ற அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் போலீசார் அடித்தார்கள். இதை எதற்காக நான் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு அப்படிப்பட்ட போலீஸ் நிர்வாகத்தின்கீழ் தான் தொழிலாளர் வேலை நிறுத்தம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை ஒப்படைத்திருக்கிறார்கள். போலீசாரிடம் தொழிலாளர் பிரச்சினையைச் சமாளிக்கும் அதிகாரத்தை ஒப்படைத்தால், நிலைமை என்ன ஆகும் என்பதைச் சற்று நிதானமாக எண்ணிப்பார்க்க வேண்டும்.

[பிற்பகல் 5-20]

போலீசார் தொழில் தகராறில் தலையிடக்கூடாது என்ற விஷயத்தில் சர்க்காரின் கருத்து என்னவென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். 'ஸ்டிரைக்' என்று அறிவித்தாலே உடனே அங்கே போலீஸ் வருகிறது. ஃபாக்டரிக்கே போலீஸ் வருகிறது. தொழிலாளர்கள் கூட்டம் கூட்டக்கூடாது, ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடாது என்று சொல்கிறார்கள், வேலை நிறுத்தம், கதவடைப்பு என்று வந்தால், முதலாளிகளுக்கும் கஷ்டம் இல்லை. அவர்களிடம் ஃபாக்டரி இருக்கிறது, நிறுவனங்களை வைத்திருக்கிறார்கள். எவ்வளவு நாட்கள் வேலை நிறுத்தம் நடந்தாலும், அவர்களால் தாக்குப்பிடிக்க முடியும். ஆனால், கஷ்டப்படும் தொழிலாளர்கள்தான் தங்கள் உணர்ச்சிகளை பொது மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டி ஊர்வலம், பொதுக்கூட்டம், போன்றவைகளில் ஈடுபடுகிறார்கள்.



தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. ஆனால் ஃபாக்டரிகளுக்கு போலீசார் பாதுகாப்புக் கொடுக்கிறார்கள். அப்படி போலீசாரை வைத்து ஃபாக்டரிகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது என்று சொன்னால், உயிருக்கும் உடமைக்கும் ஏதாவது ஆபத்து இருக்கிறது என்று சொன்னால் கொடுக்கலாம், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அதை நிர்ணயிப்பது யார்? முதலாளிகள் எப்போதுமே ஆபத்து என்றுதான் சொல்வார்கள். அரசுதான் நிலைமைகளை நிதானமாகக் கவனிக்க வேண்டும். வேலை நிறுத்தம் என்று சொன்னால், அது சாதாரண வேலை நிறுத்தம் மட்டுமா, உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். ஸ்டிரைக் என்று சொல்லிவிட்டால், உடனே பாக்டரிக்கு போலீஸ், 144 தடையுத்தரவு என்ற நிலைமைகள் இருக்கக்கூடாது. இன்றையநிலை தொழிலாளர்கள் கிளர்ச்சிகள் நடத்தி தங்களுடைய கோரிக்கையை முன்வைக்க வழியில்லாமல் இருக்கிறது. எனவே, தொழிலாளர் நலக் கொள்கையில், வேலை நிறுத்தம் போன்றவை நடத்தும்போது, போலீஸ் தலையிடக்கூடாது என்று நான் சொல்லிக் கொள்கிறேன். அரசு இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறதா என்று கேட்க . விரும்புகிறேன். வருங்காலத்தில் பல போராட்டங்கள் நடக்க இருக்கின்றன. மத்திய அரசு தன்னுடைய பட்ஜெட்டிலே 3,500 கோடி ரூபாய்க்கு வரிஉயர்வு, விலை உயர்வு சுமையை மக்கள் மீது சுமத்தியிருக்கிறார்கள்; அதன் காரணமாக, இப்போது பொருட்களின் விலைகள் நாளுக்குநாள் ஏறிக்கொண்டிருக்கின்றன. இன்னொன்று, 3,000 கோடி ரூபாய்க்கு நோட்டு அடித்துக் கொள்ளப்போகிறது. மத்திய அரசு மூலமாக சமுதாயத்தின் மீது 6,000-7,000 கோடி ரூபாய் சுமை வரும்போது, விலைவாசி இன்னும் அதிகமாக ஏறப்போகிறது. மக்கள் இன்னும் போராடப் போகிறார்கள்.

<u>திரு. ஏ. ஆர். தாமோதரன்:</u> லாபியிலேயிருந்து ஏகப்பட்ட சத்தம் வருகிறது. தயவுசெய்து லாபியிலே இருப்பவர்களை Calm ஆக இருக்கச் சொன்னால் நல்லது.

<u>திரு. ஆ. நல்லசிவன்:</u> இவ்வளவு ரூபாயையும் மத்திய அரசு நாட்டிலே புழக்கத்திற்குக் கொண்டு வரும்போது, நிச்சயமாக விலைவாசி ஏறும். இந்த உண்மை இந்த ரிப்போர்ட்டிலே அங்கீகரிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். "இன்றியமையாத பொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டே போகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. மக்களின் தேவைகள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகின்றன. இன்றைக்கு நாட்டிலே நடக்கும் குற்றங்களுக்கு இதுவும் ஒரு காரணம். இப்படி கஷ்டங்கள் வரும்போது மக்கள் குற்றங்களில் ஈடுபடுகிறார்கள்" என்று போலீஸ் மானிய

அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இது சாதாரண குடி மக்களின் நிலைமை. ஆனால், தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படும்போது, அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையை, தொழிலாளர் கொள்கையை, போலீஸ் கொள்கையை மாற்ற வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அதற்காக அவர்கள் போராடுகிறார்கள். இதற்கு தொழிற்சங்கங்கள் வழிகாட்டுகின்றன. இனிமேல் தொழிலாளர் போராட்டம் நடந்தால், இந்த அரசு 'அந்தப் பக்கத்திலேயிருந்து தூண்டுகிறார்கள்' என்று சொன்னால் அது நியாயமானதாக இருக்காது. நாங்கள் யாரையும் தூண்ட வில்லை. அரசின் ரிப்போர்ட்டே தெளிவாக இருக்கிறது. சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும், மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கும் அதிருப்தியே இந்தப் போராட்டங்களுக்குக் காரணம் என்று அரசினுடைய ரிப்போர்ட்டிலே ஒத்துக்கொண்டிருப்பதற்கு நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட போராட்டங்கள் அதிகமாகும்போது, அந்தப் போராட்டங்களைச் சமாளிக்க நிச்சயமாக முடியாது. இப்போது நடத்தப்படும் போராட்டங்கள் அனைத்தும் உங்கள் அரசுக்கு எதிராகத்தான் என்று ஏன் நினைக்கிறீர்கள்? அவை அந்தந்த முதலாளிகளுக்கு எதிராக நடத்தப்படுபவை. இவை அரசுக்கு எதிராக நடத்தப் படுகின்றன என்று நீங்கள் எடுத்துக் கொண்டதன் காரணமாக, கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தை நீங்கள் காணவில்லையா? ஆகவே, இந்தத் தன்மை மாற வேண்டும். நான் இதிலே வற்புறுத்துவது என்னவென்றால், பொருளாதார ரீதியில் பலவீன பிரிவினர் என்ற முறையிலே, அவர்கள் வேலைநிறுத்தம், போராட்டம் நடத்துவதற்கு இருக்கும் உரிமையை அரசு அங்கீகரிக்க வேண்டும். தொழிலாளர் போராட்டத்திலே போலீசார் தலையிடக்கூடாது இந்தப் பிரச்னையில் கொள்கை மாற்றம் வேண்டும். (மணியடிக்கப்பட்டது) அப்படி மாற்றம் செய்யும்போது, சந்தேகத்திற்கு இடமில்லாமல் செய்ய வேண்டும்.

அமைப்பு ரீதியாக திரட்டப்படாத தொழிலாளர் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அவர்களது குறைகளைச் சொல்ல தக்க அமைப்புகள் இல்லை. சில நேரங்களில் அமைப்புகள் இல்லாமலேயே அவர்கள் போராடுகிறார்கள். அமைப்பு இல்லாமல் போராடுவதனால் அவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். அமைப்புகளிருக்கும் இடங்களிலும் அவர்கள் தாக்கப்படுகின்றனர். சென்னையிலே 30 ஆயிரம் பெண்கள் 'ரெடி மேட் கார்மென்ட்' தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள், ஒரு சங்கம் வைத்த காரணத்தால், நூற்றுக்கணக்கானவர்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். பாலு கார்மென்ட்ஸ் என்ற நிறுவனத்திலே 500 பெண்கள் வேலையி



லிருந்து நீக்கப்பட்டு, அந்தப் பெண்கள் அன்றொரு நாள் கோட்டைக்கு வந்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இந்த அன்-ஆர்கனைஸ்ட் லேபரைப் பொறுத்தவரையில், அவர்கள் தொழிற் சங்க உரிமைகளின் அடிப்படையில் போராட்டத்தில் ஈடுபடும்போது, பழிவாங்கப்படுகிறார்கள். ஆகவே, அரசு இந்தப் பிரச்சினையில் உடனடியாகக் கவனம் செலுத்தி, அவர்களுக்கு எல்லாப் பாதுகாப்புகளையும் தரத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அரசு வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்களைப் பாதுகாப்போம் என்று சொல்கிறது. அப்படி வறுமைக் கோட்டுக்கும் கீழே இருப்பவர்கள்தான் இந்த கான்ட்ராக்ட் தொழிலாளர்கள், கேஷுவல் தொழிலாளர்கள். இவர்களுக்குச் சம்பள நிர்ணயம் கிடையாது. மற்ற எந்தவிதமான வசதிகளும் கிடையாது. பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனிலே அங்கு உள்ள பஸ்களைத் துடைப்பதற்கு 200-க்கு மேற்பட்ட கேஷுவல் லேபரை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நாளைக்குக் கூலியாக 40 காசு, 50காசு என்று கொடுக்கிறார்கள். ஒரு டீ குடிப்பதற்கு, காப்பி குடிப்பதற்குத்தான் காசு கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட நிரந்தரத் தன்மையுடைய வேலைகளுக்குக் கூட காஷுவல் லேபர் நியமிக்கப்படுகிறார்கள். பி. டபிள் யூ. டி. மற்றும் எலக்ட்ரிசிட்டி போர்டை எடுத்துக் கொண்டால், இந்த கேஷுவல் லேபர் அங்குதான் அதிகமாக நியமிக்கப்படுகிறார்கள். சமீபத்திலே காடம்பாறை, தூத்துக்குடி போன்ற இடங்களிலே மின்சாரத் துறையில் ஸ்டிரைக் நடந்தது. என்ன பிரச்சினை? தூத்துக்குடியிலே தெர்மல் ஸ்டேஷன் கட்டினார்கள். ஐந்து-ஆறு வருட காலம் கஷ்டப்பட்டு உழைத்தவர்களை விட்டுவிட்டு, நிரந்தரமாக ஆட்களை நியமிக்கும்போது, புதிதாக வெளியிலிருந்து ஆட்களை நியமிக்க முயற்சிக்கிறார்கள். அங்கே தற்காலிகப் பணி புரிந்து வந்தவர்களிலும் கூட ஐ. டி. ஐயில் படித்துத் தேர்ச்சிபெற்றவர்கள் உண்டு. ஏன் அவர்களை நியமிக்கக் கூடாது? எலக்ட்டிரிசிட்டி போர்டு சேர்மேன் இந்தப் புதிய நியமன ஏற்பாட்டைச் செய்திருக்கிறார். இதை எதிர்த்து 2 ஆயிரம் பேர் இன்றையதினம் போராடுகிறார்கள். சேர்மேனிடம் தொழிற் சங்கத் தலைவர்கள் சென்று கேட்டால், 'கான்ட்ராக்ட் லேபர்' பற்றிப் பேசாதீர்கள் என்கிறார். அவர்கள் என்ன தீண்டத்தகாதவர்களா? ஒரு பொறுப்புள்ள ஐ. ஏ. எஸ். அதிகாரி கான்ட்ராக்ட் லேபர் பற்றிப் பேசக்கூடாது என்று சொல்கிறார். தூத்துக்குடியிலே நடைமுறையை மீறி அங்கேவேலை செய்யும் 2 ஆயிரம் கான்ட்ராக்ட் லேபருக்கு வேலை கொடுக்காமல் புதிதாக ஆட்களை எடுக்கிறார்கள். காடம்பாறையிலேயும் காண்ட்ராக்ட் தொழிலாளர் பிரச்சினையில்தான் தகராறு. அங்கே வேலைகள் சரிவர நடக்கவில்லை. குறைந்த கூலிதான் தருகிறார்கள். அவர்களுடைய உரிமையை இந்த அதிகாரிகள் பறிக்கிறார்கள். ஆகவே, கான்ட்ராக்ட் லேபரைப் பொறுத்தவரையில், அரசின் இந்தக் கொள

கையைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காண்ட்ராக்ட் லேபர் ஆக்டைப் பொறுத்தவரையில், அதிலே செக்ஷன் 10 என்பது 'நிரந்தரமாகத் தேவைப்படுகின்ற வேலைகளுக்கு காண்ட்ராக்ட் லேபரை நியமிக்கக்கூடாது' என்று சொல்கிறது. ஆனால், நிரந்தரமாக ஆட்கள் தேவைப்படும் வேலைகளுக்குக் கூட காண்ட்ராக்ட் லேபர், கேஷுவல் லேபரை வைக்கிறார்கள். இது நியாயம் தானா? இந்தக் கொள்கையை அமுல்படுத்தினால், தமிழ் நாட்டிலே பல தொழில்களிலே இந்த காண்ட்ராக்ட் லேபர், கேஷுவல் லேபரின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகும். அதனால், வருங்காலத்திலே கிளர்ச்சி வலுத்துக்கொண்டு தான் போகும். ஆகவே, அதற்காக என்று போடப்பட்டிருக்கும் அட்வைசரி கமிட்டியை விரிவுபடுத்தி, எல்லாத் தொழிற் சங்க மையங்களின் பிரதிநிதிகளுக்கும் அதில் இடம் கொடுத்து ஒரு நல்ல முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இதோ முடித்து விடுகிறேன். பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்களின் நியாயமான தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காகவே டிஸ்மிஸ் செய்யப்படுகிறார்கள். சாதாரணமாக ஏதாவது அசம்பாவிதங்கள், ஒழுங்கீனங்கள் நடந்தால், நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், தொழிற் சங்கப் பிரச்சினைகளுக்கே இப்படி பழிவாங்குகிறார்கள். அவர்கள் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்றால், நம்முடைய லேபர் டிப்பார்ட்மெண்ட், அவர்களுடைய வழக்குகளை கோர்ட்டுக்கு விடாமலும், நடுவர் தீர்ப்புக்குக்கூட விடாமலும் அவர்களுடைய கோரிக்கைகளைத் திருப்பியனுப்புகிறது. டி. வி. எஸ்.–லே நடந்த போராட்டத்தைப்பற்றி ஒரு பெரிய சர்ச்சை நடந்தது. தொழிலாளிகள் தவறுகள் செய்தனர் என்பதால், அவர்கள் மீது மேனேஜ்மெண்ட் எடுத்த நடவடிக்கை அல்ல அது, சங்கம் வைத்ததன் காரணமாகத்தான் அவர்கள் பழிவாங்கப்பட்டார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டு, அத்தனை பேருக்கும் வேலை கிடைக்கும் என்று உறுதியளித்தார்கள். டி. வி. எஸ். கிளேட்டன் என்ற கம்பெனியிலே சங்கச் செயலாளர் சக்திவேலு என்பவர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார். அவருடைய வழக்கை லேபர் துறை அதிகாரிகள் மறு பரிசீலனை பண்ண மறுக்கிறார்கள். இது நியாயமா? இதில் ஒரு குறைந்தபட்ச வழக்கு நியாயம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். செக்ஷன் 11-ஏ-யின்படி ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டால், அவருடைய வழக்கை நீதித் துறையின் பரிசீலனைக்கு அனுப்பும் வாய்ப்பு இருக்கிறதே, அந்த வாய்ப்புக் கூட இந்தப் பிரச்சினையில் வழங்கப்படவில்லை. இப்படியாக தொழிலாளர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்ட பிரச்சினை. இதிலே கூட தொழிலாளர்களை அநியாயமாகப் பழிவாங்குகிறார்கள். இது உண்மையா, இல்லையா என்பதையாவது பார்க்க



வேண்டாமா? லேபர் டிப்பார்ட்மெண்ட் அதற்குக் கூடத் தயாராக இல்லை. இந்த நிலையில் தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? ஆகவே, நீதித்துறையின் பரிசீலனைக்கு அனுப்ப வகை செய்யும் செக்ஷன் 11–ஏ.–ன் கீழ் இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை என்றால், இந்தத் தொழிலாளர்களுக்கு இந்த அரசு எந்த வகையில் நியாயம் வழங்கப் போகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

[பிற்பகல் 5-30]

அடுத்து, சங்கங்களை அங்கீகரிப்பதுபற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பல சங்கங்கள் இருக்கும்போது, இதில் சங்கடம் ஏற்படுவது உண்மைதான். ஏழு பேர் சேர்ந்தாலே ஒரு சங்கம் வைத்துக்கொள்ளலாம் என்ற விதிமுறை இருக்கிற காரணத்தால், இதில் சங்கடம் ஏற்படத்தான் செய்யும். ஆனால், ரகசிய வாக்கெடுப்பு முறை மூலமாக, எந்தச் சங்கத்தில் அதிகமான உறுப்பினர் எண்ணிக்கை இருக்கிறதோ அந்தச் சங்கத்தை அங்கீகரிக்கும் முறையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். உதாரணமாக 51 சதவீதத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்ற சங்கம் ஒன்று இருந்தால், அதை அங்கீகரிக்கலாம். அந்தச் சங்கம் பொதுச்சபை அங்கீகாரத்துடன் கையெழுத்துப் போட்டு செய்து கொள்ளும் உடன்பாட்டை மற்றவர்கள் ஏற்க வேண்டும் என்று வைக்கலாம். எந்தச் சங்கத்துக்கும் 51 சதவீத ஆதரவில்லை என்றால் கூட்டாக 51 சதவீதத்துக்கு மேல் செல்வாக்குள்ள சங்கங்களுடன் தான் ஒப்பந்தம் செய்ய வேண்டும். அதைப்போலவே 15 சதவீத தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்ற சங்கம் இருந்தால், அதன் பிரதிநிதிகளோடு அச்சங்கத்தின் பிரச்சினைகள் மீது பேச்சு வார்த்தை நடத்தலாம். இப்படி ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அரசு நிறுவனங்களைப் பொறுத்தவரையில் ஒரு வேண்டுகோளை விடுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அவைகள் மற்ற முதலாளிகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும். இதற்கு லேபர் டிபார்ட்மெண்ட் உதவியாக இருக்க வேண்டும். தமிழ் நாடு ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட்டைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டில் புதிதாகத் துவங்கப்பட்ட பல்வேறு போக்குவரத்துக் கழகங்களுக்குப் போகச் சொல்லி தொழிலாளரிடம் 1974ல் கோரப்பட்டது. அப்போது என்ன சொல்லப்பட்டது என்றால், தொழிலாளர்களின் பழைய டிப்பார்ட்மெண்ட் சர்வீஸ் எல்லாம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அதன் காரணமாக 18,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு அவர்களுக்கு ரூ. 15 கோடி அளவுக்கு நஷ்ட ஈடு கிடைக்கும் என்று சொல்லி 15-9-75 தேதியிட்ட 378-ம் எண் அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

[திரு ஆ. நல்லசிவன்] [1980 ஜுலை 25

நிதித் துறையின் ஒப்புதலோடு அந்த அரசாங்க உத்தரவை வெளியிட்டு இப்போது 5 ஆண்டுகளுக்குப் பிறகு 18,000 தொழிலாளர்களுக்கும் ரூ. 15 கோடி கொடுப்பதா என்று அரசாங்கம் யோசிக்கிறது. அதில் ரூ. 5 கோடியைக் குறைக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறது. தனிப்பட்ட முதலாளி ஒருவர் இப்படிச் செய்தாலே இந்த அரசாங்கம் தொழிலாளருக்குப் பாதுகாப்புக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்க இலாக்காவே இத்தவறைச் செய்யலாமா? வேலியே பயிரை மேயலாமா? ''டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் பஸ் ஓட்டும் பிரிவைக் கலைத்து விட்டோம்; எங்களுக்கு ஆட்களே வேண்டாம்; எல்லோரும் போக்குவரத்துக் கழகங்களுக்குப் போய்விடுங்கள்'' என்று அவர்களுக்கு ஒரு ஆப்ஷன் கொடுத்துவிட்டு, அவர்களும் இதை ஏற்றுக் கொண்டு அந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்குப் போய்ச் சேர்ந்த பிறகு இப்போது கணக்குப்போட்டு ரூ. 15 கோடி கொடுப்பதா என்று யோசித்து அதிலிருந்து ஒரு 5 கோடியைக் குறைக்க வேண்டுமென்று கூறி அதற்காக தனியாக இன்னொரு அரசாணையும் போடப்பட்டிருக்கிறது. 1980 மார்ச்சில் புதிய அரசாணை 284 பிறப்பிக்கப்பட்டுள்ளது. சட்டத்தை அரசாங்க இலாக்காவே மதிக்கவில்லை என்றால், மற்றவர்கள் எப்படி மதிப்பார்கள் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். இந்த அரசாணையை எதிர்த்து, தொழிலாளர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள்.

அடுத்து, இந்தப் போக்குவரத்துக் கழகங்களை அமைக்கிறபோது தொழிலாளர்களுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டது. இந்தப் புதிய போக்குவரத்துக் கழகங்களில் ஒரே மாதிரியான சர்வீஸ் கண்டிஷன்கள் இருக்கும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது என்ன நிலைமை என்றால், தொழிலாளர்களின் சர்வீஸ் கண்டிஷன்கள் ஒன்றுபோலில்லை. சம்பள விகிதத்திலே மாற்றம் இருக்கிறது. போனஸை எடுத்துக் கொண்டாலும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த ஊழியர்களுக்கும் 8 சதவீத போனஸ்தான் வழங்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில், மற்ற போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு 20 சதவீத போனஸ் வழங்கப்படுகிறது. இப்படிச் செய்வதற்கு என்ன நியாயம் சொல்கிறார்கள்? பல்லவன் போக்குவரத்தில் நஷ்டம் என்கிறார்கள். சென்னை நகரில் அரசாங்கத்திற்குச் சில விசேஷ சமூகக் கடமைகள் இருக்கின்றன. இந்த மெட்ரோபாலிடன் நகரம் விரிவடைகிற காரணத்தால், பல லாபம் தராத ரூட்களில் பஸ்களை விட வேண்டியிருக்கிறது. அதோடு மாணவர்களுக்கு பிரயாணச் சலுகை அளிக்கப்படுகிறது.



1980 ஜுலை 25] (திரு. ஆ. நல்லசிவன்)

இத்தகைய விசேஷ சமூகக் கடமைகள் காரணமாக பல்லவன் போக்குவரத்துக் கார்ப்பரேஷனுக்கு அதிகமாக லாபம் வர முடியாமல் போகிறது. ஆகவே அந்தத் தொழிலாளர்களுக்கு 8 சதவீத போனஸ் தான் என்கிறார்கள். எல்லாவற்றையும் ஒரே நிருவாகத்தில் வைத்திருந்தால், தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனை போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுகிற எல்லா ஊழியர்களுக்கும் ஒரே மாதிரியான போனஸ் கொடுத்திருக்க முடியுமா முடியாதா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

அது மட்டுமல்ல. இந்த அரசாங்கத்தில் லேபர் இலாக்கா தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்குப் பாதகமாகச் செயல்படுகிறது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழிலாளர் நல இலாக்கா என்பது மேனேஜ்மெண்ட்டுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்படுகிற தாவாக்களில் தொழிலாளர் பக்கம்தான் சாய்மானம் கொள்ளவேண்டும். குறைந்தபட்சம் அப்படி இருக்கிறதா என்றால், இல்லை. பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே 'டிபென்ச்சர் ஷேர்' என்று வசூலிக்கப்பட்டது. அதாவது ஒவ்வொரு தொழிலாளியிடமும் மாதம் ரூ. 10/- ஊதியத்திலேயே பிடித்துக்கொண்டு அவர்களுக்கு இந்த டிபென்ச்சர் ஷேர் வழங்குகிறார்கள். இதற்கு ஊழியர்கள் சம்மதித்திருக்கிறார்களா என்றால், இல்லை. ஊழியர்கள் சம்மதம் இல்லாமலேயே, 50 மாதத்திற்கு 500 ரூபாயைப் பிடித்துக்கொண்டு அதற்கான டிபென்ச்சர் ஷேரை வழங்கியிருக்கிறார்கள். இவ்வாறு ஊதியத்தில் தொழிலாளர்களின் அனுமதியோ, சம்மதமோ இல்லாமல் பிடிக்கக்கூடாது என்று சம்பளபட்டுவாடா சட்டத்தில் கூறப்படுகிறது. தொழிலாளர்கள் எழுதிக் கொடுத்தால்தான் பிடிக்க வேண்டும், அவ்வாறு இல்லாமல் கட்டாயமாகப் பிடித்தது தவறு என்று அங்கே இருக்கிற தொழிலாளர்கள் போராடினார்கள். நிர்வாகம் கேட்காத காரணத்தால், தொழிலாளர்கள் வழக்குத் தொடர்ந்தார்கள். அதாவது டெபுடி லேபர் கமிஷனர் முன்பு இந்த வழக்குச் சென்றது. அந்த அதிகாரி என்ன தீர்ப்பு எழுதுகிறார் என்றால், ''பி. டி. சி. நிறுவனம் இப்படி சம்பளத்தில் பிடித்தது சரி'' என்று எழுதுகிறார். தொழிலாளர்கள் எழுதிக் கொடுத்தால்தான் பிடிக்கலாம் என்று சம்பளப் பட்டுவாடா சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எழுதிக் கொடுக்காமல் பிடித்தால், அது சட்டவிரோதமான பிடித்தம் என்று இருக்கும்போது, அந்த டெபுடி கமிஷனர் இது சட்ட பூர்வமானது என்று எழுதுகிறார். இதற்கு என்ன காரணம்? சர்க்கார் இலாக்கா ஒன்று இந்தப் பிடித்தத்தைச் செய்து விட்டது என்ற காரணத்தால், இப்படிச் சொல்லுகிறாரா? தொழிலாளர் நல இலாக்கா இப்படிச் செயல்படலாமா? இப்படி நடந்தால், தொழிலாளர்களுக்கு இந்த இலாக்காவின் மீது எப்படி நம்பிக்கை ஏற்படும்? தொழிலாளர்களுக்கும் மேனேஜ்மெண்ட்டுக்குமிடையே உள்ள தகராறில் சட்டப்

படி நியாயம் வழங்க வேண்டிய தொழிலாளர் நல இலாக்காவே இப்படி சட்டத்திற்கு மாறாக ஒரு அபிப்பிராயம் சொன்னால், அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இதுமட்டுமல்ல, இந்தப் போக்குவரத்துக் கழகங்களில் மின் வாரியத்தில் வேலை செய்கிற தொழிலாளர்கள் வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டால், அவர்களுக்கு இருக்கிற இன்னொரு கஷ்டத்தையும் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அது தான் ஸ்கிரீனிங் கமிட்டி என்ற பெயரால் செய்யப்படும் அநீதி. ஒரு தொழிலாளி ஒரு முதலாளியால் அநியாயமாக டிஸ்மிஸ் செய்யப்பட்டால் அந்த வழக்கை கோர்ட்டுக்கு அனுப்பி வைக்கும் அதிகாரம் லேபர் டிபார்ட்மெண்ட்டுக்குத்தான் இருக்கிறது. ஆனால் மின் வாரியம் போக்குவரத்துத் துறை போன்ற பொதுத் துறை நிறுவன ஊழியர்களைப் பொறுத்த வரையில், அங்கே தொழிலாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டால், அந்த வழக்குகளை தொழில் நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கும் அதிகாரம் லேபர் டிபார்ட்டுமெண்ட்டுக்கு இல்லை. இதற்கு என்று ஒரு கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டி சொன்னால்தான் தொழிலாளர்கள் கோர்ட்டுக்குப் போக அனுமதிக்கப்படுவார்கள் என்றால், இந்த லேபர் டிபார்ட்மெண்ட்டைத் தொழிலாளர்கள் எப்படி நம்ப முடியும்? இந்தப் பிரச்சினையைக் கோர்ட்டுக்கு விடக்கூடாது என்று மின்சார வாரியத் தலைவர் சொன்னால். அதற்குக் கட்டுப்பட்டு நடக்கும் நிலையில் லேபர் இலாக்கா இருக்கிறது. ஆகவே ஒரு சர்க்கார் இலாக்காவில் தவறு நடந்தால், அதை மூடி மறைப்பதற்காக, அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, லேபர் இலாக்காவைப் பயன்படுத்தினால் தொழிலாளர்கள் அதில் எப்படி நம்பிக்கை வைக்க முடியும் என்றுதான் கேட்க ஆசைப்படுகிறேன்.

லேபர் டிபார்ட்மெண்ட் அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் தாங்கள் வேறு யாருக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல, சட்டத்திற்கு மட்டும்தான் கட்டுப்பட்டவர்கள் என்ற உணர்வோடு செயலாற்ற வேண்டும். ஆனால் இன்றைக்கு நிலைமை அப்படி இருக்கிறதா என்றால், இல்லை. இந்த டிபென்ச்சர் ஷேர் விவகாரத்தில் லேபர் இலாக்கா அப்படி நடந்து கொண்டிருக்கிறதா? இந்தக் கவுன்சில் கூட்டம் முடிந்த பிறகு, ஒரு ஜட்ஜ்மெண்ட் காப்பியைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதில், இப்படிப் பிடித்தம் செய்வதற்கு ஏதாவது சட்ட நியாயம் சொல்லியிருக்கிறார்களா என்றால், இல்லை. "பி.டி.சி-யில் பிடித்துவிட்டார்கள். சர்க்கார் இலாக்காவில் பிடித்துவிட்டார்கள். ஆகவே அது நியாயம்" என்று கூறுவது போல், அந்த அதிகாரி சொல்லி விட்டார். இந்த அளவுக்குச் செயல்பட்டால், தொழிலாளர்களுக்கு லேபர் இலாக்கா மீது எப்படி நம்பிக்கை ஏற்படும். சந்தேகம்தான் வரும். எனவே தொழிலாளர் இலாக்கா அதிகாரிகள் இப்படிப்பட்ட பிரச்சினைகளில் சட்டப்படி நடுநிலைமையாக நடந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



கடைசியாக, கைத்தறித் துறைபற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கைத்தறி குறித்த மசோதா ஒன்று $1\frac{1}{4}$ வருடத்திற்கு முன்னரே வந்தது. அது பொறுக்குக் கமிட்டிக்கு விடப்பட்டிருந்தது. ஆனால் கடந்த சர்க்காரோடு அந்த மசோதாவும் போய்விட்டது, செலக்ட் கமிட்டியும் போய் விட்டது. இப்போது அமைச்சர் அவர்களின் அறிக்கை தெளிவாக இருக்கிறது. மத்திய அரசு சம்மதம் கொடுத்துள்ளது. செலக்ட் கமிட்டியில் வந்துள்ள யோசனைகளை வைத்துக் கொண்டு ஒரு மசோதா கொண்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் காலம் கடத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கூட்டத் தொடர் அடுத்த மாதம் 8 ஆம் தேதி வரை நடக்கும் என்று சொல்லுகிறார்கள். மசோதாவும் தயாராக இருக்கிறது. மத்திய அரசின் சம்மதமும் வந்துவிட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இந்தக் கூட்டத் தொடரிலேயே அந்த மசோதாவைக் கொண்டு வருவதன் மூலமாக, $1\frac{1}{4}$ வருஷமாகப் பாதுகாப்புக் கிடைக்கும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் 33 லட்சம் நெசவாளர்களின் நம்பிக்கை நிறைவேற வழிவகை செய்ய வேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்): மாண்புமிகு உறுப்பினர்கள் ஐவர் பேசி முடித்து, மாண்புமிகு அமைச்சர்கள் இருவர் பதிலுரை வழங்க இருக்கிற காரணத்தால், கூடுமான வரையில் 10 மணித்துளிகளுக்கு மேற்படாமல் மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை பற்றும் தொழிலாளர் நலம் குறித்த கொள்கைக் குறிப்பினமீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்தக் கைத்தறித் துணியில் நான்கில் ஒரு பங்கு தமிழகத்திலே மட்டுமே உற்பத்தியாகிறது என்னும் உண்மை இங்கே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரத்தின் மூலமாக நமக்குத் தெரிகிறது, இந்தப் புள்ளி விவரமே, தமிழகத்தில் கைத்தறித் தொழில் எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதையும் நமக்கு உணர்த்துகிறது.

அது மட்டுமல்ல. விவசாயத் தொழிலாளர்களுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ள தொழில் கைத்தறித் தொழில் என்பதிலிருந்து தமிழகத்தில் இத்தொழில் எவ்வளவு சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்தது என்பதை நமக்குப் புலப்படுத்துகிறது. ஏறத்தாழ 30 லட்சம் தொழிலாளர்கள் இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று புள்ளிவிவரம் காட்டுகிறது.

(பிற்பகல் 5.40)

அதிகாரபூர்வமற்ற புள்ளிவிவரங்கள் 40 இலட்சத்திற்கு மேல் இருக்குமென்று தெரிவிக்கிறது. எனவே மிக அதிக அளவில் கைத்தறித் தொழிலாளர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள். கைத்தறித் தொழிலாளர்களுடைய வாழ்க்கை நிலைமைகளையும், வேலை நிலைமைகளையும் நானே நேரில் சென்று பல இடங்களில் பார்க்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றவன் என்ற முறையில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு நான் சென்ற இடங்களில் எல்லாம் ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ள முடிந்தது. கூட்டுறவுச் சங்கங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு தொழில் நடத்துகிற கைத்தறித் தொழிலாளர்களுடைய வாழ்க்கை நிலைமை, வேலை நிலைமை சற்று திருப்திகரமாக இருக்கிறது. ஆனால் "Master Weavers" பிடியில் சிக்கிக் கொண்டுள்ள கைத்தறித் தொழிலாளர்களுடைய வாழ்க்கை நிலைமை மிகவும் மோசமாக, கேவலமாக இருக்கிறது என்பதை என்னால் கண்டு கொள்ள முடிந்தது. "மாஸ்டர் வீவர்களிடம்" சிக்கிக்கொண்டுள்ள கைத்தறித் தொழிலாளர்களை விடுவித்து 75 சதவிகிதத்தினரை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதென்று கூறப்பட்டிருக்கிறது. 75 சதவீதம் என்று இல்லாமல், நூற்றுக்குநூறு பங்கு கைத்தறித் தொழிலாளர்களை கூட்டுறவுச் சங்க அமைப்புகளின்கீழ் கொண்டுவருவதன் மூலமாகத்தான் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். "மாஸ்டர் வீவர்களிடம்" கைத்தறித் தொழிலாளர்கள் எந்த அளவிற்குச் சிக்கிக் கொண்டிருக்கிறார்களோ அந்த அளவிற்கு அவர்களுடைய அவதியும், பிரச்சினையும் நாளுக்கு நாள் அதிகமாகும் என்பதை உணர்ந்து அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1984 ஆம் ஆண்டுக்குள் 75 சதவீதம் கைத்தறித் தொழிலாளர்களை கூட்டுறவு அமைப்புகளின்கீழ் கொண்டுவர வேண்டுமென்பது அரசாங்கத்தின் இலட்சியம் என்பது வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது என்றாலும், நான் நேரில் பார்த்தபோது பெற்ற அனுபவங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும்போது, இது போதாது. இந்த மன்றத்திலே சொல்ல முடியாத அளவிற்கு அவர்கள் அவதியையும், இன்னலையும், தொல்லைகளையும் அனுபவித்துக்கொண்டு மிகக் கேவலமான நிலையிலே இருக்கிறார்கள். அவர்கள் விடுதலை காண வேண்டுமென்றால், நூற்றுக்குநூறு கைத்தறித் தொழிலாளர்களையும் கூட்டுறவு அமைப்புகளின் கீழ் கொண்டுவர வேண்டியது மிகவும் அவசியம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து, தள்ளுபடியைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நான் சென்ற இடங்களில் எல்லாம் இதைப்பற்றிக் குறைபட்டுக் கொண்டார்கள். துணிகளை விற்பவர்களுக்கு ஆதாயம் கிடைக்கிற அளவிலேதான் நாம் ரிபேட்டைக் கொடுக்க வழிவகை செய்திருக்கிறோம். கைத்தறித் துணியின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு எந்த அளவிற்கு இதில் ஆதாயம் கிடைக்கிறது என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. நாம் கொடுக்கும் ரிபேட்டின் மூலமாக விற்பனையாளர்களுக்கு லாபம் கிடைக்கிறது, ஆனால் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான லாபமும் கிடைக்கவில்லை என்ற கருத்தை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது நியாயமான கருத்து என்பதை அரசு உணர்ந்து துணி உற்பத்தியாகின்ற இடங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு ஆதாயம் கிடைக்கும்படி செய்யும் சாத்தியம் உண்டா என்பதைக் குறித்துப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே கோவாப்டெக்ஸ் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கேட்டறிந்த வரையில், உற்பத்தியாகின்ற துணிகளின் மேல் கிட்டத்தட்ட 40 சதவீதம் இலாபம் வைத்து கோவாப்டெக்சில் விற்கப்படுவதாக அறிகிறேன். இப்படி 40 சதவீதம் இலாபம் வைத்து விற்பதால், இரண்டு விதமான பாதகங்கள் நமக்கு ஏற்படுகின்றன. இந்த 40 சதவீத இலாபத்தில் ஏதாவது அனுகூலம் கோவாப்டெக்ஸ் நிறுவனத்தில் பணிபுரிகிற ஊழியர்களுக்குக் கிடைக்கிறதா என்றால், இல்லை. அதைப்போலவே இந்த 40 சதவீதம் இலாபத்தினால், துணியை உற்பத்தி செய்கின்ற தொழிலாளர்களுக்கு ஆதாயம் ஏற்படுகின்றதா என்றால், அதுவுமில்லை. அதுமட்டுமல்லாமல் 40 சதவீதம் இலாபம் வைத்து விற்பதன் மூலம் வாங்குபவர்களின் மேல் எந்த அளவிற்குச் சுமை சுமத்தப்படுகிறது என்பதையும் அரசு உணர்ந்து மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். கோவாப்டெக்ஸ் என்பது இலாபத்தை அதிகமாகத் தேடிக்குவிக்க வேண்டுமென்ற அமைப்பு என்ற ரீதியில் செயல்படாமல், தொழிலாளர்களுக்கும், வாங்கி உபயோகிப்பவர்களுக்கும் ஓரளவு சுமையைக் குறைக்கிற வகையில் இலாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படவேண்டும் என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். 60 பைசா பெறுமானமுள்ள துணியை ஒரு ரூபாய்க்கு விற்பதன் மூலம் கிடைக்கும் 40 காசுகள் தொழிலாளர்களுக்குப் போய்ச் சேருவதில்லை, இடையிலே இருப்பவர்களுக்குத்தான் போய்ச் சேர்கிறது. ஆக இப்படிப்பட்ட நிலைமையை அரசு மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதியைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல திட்டம். கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஓரளவு வசதியுடன் கூடிய

வீடுகளை கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் கட்டியிருப்பதை நான் சென்னிமலைக்குச் சென்றபோது நேரிலேயே பார்த்தேன். அப்படிப்பட்ட வசதிகள் அனைத்து இடங்களிலும் உள்ள நெசவாளர்களுக்கும் ஏற்படுத்தித் தரக்கூடிய வகையில் இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் சென்றுபார்த்த இடங்களில் எல்லாம் கைத்தறித் தொழிலாளர்கள் விடுத்த கோரிக்கைகளுள் மிக முக்கியமான ஒரு கோரிக்கையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அரசு ஊழியர்கள் பதவியில் இருக்கும்போது இறந்துவிட்டால், அவர்களுடைய குடும்பநலத்திற்காக பத்தாயிரம் ரூபாயைக் கொடுப்பதைப் போல எங்களுக்கும் ஏன் கொடுக்கக்கூடாது என்று அவர்கள் கேட்கிறார்கள். அவர்கள் கேட்பதிலே தவறு கிடையாது. Group Insurance மூலமாக அரசு ஊழியர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க முடியுமென்றால், அதைப்போலவே கைத்தறித் தொழிலாளர்களுக்கும் ஏன் இந்தத் திட்டத்தைக் கொண்டு வரக்கூடாது என்பது அவர்களுடைய கேள்வி. அவர்கள் கேட்பதில் அடிப்படை நியாயம் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, ''Mass Insurancc'' அல்லது ''குரூப் இன்ஷுரன்ஸ்'' மூலமாக அவர்களுக்கும் பாதுகாப்பு தரவேண்டுமென்று இந்தச் சமயத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

முடிப்பதற்கு முன்பாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் சென்று பார்த்த இடங்களில் எல்லாம், 12 வயதுக்குட்பட்ட சிறு பிள்ளைகளை ''Master Weavers'' தொழிலில் ஈடுபடுத்துகிறார்கள். இந்தக் கொடுமை கூட்டுறவுச் சங்கத்திலே கிடையாது. தனியார் நடத்தும் நிறுவனங்களில் 12 வயது, ஆறு, ஏழு வயதுடைய குழந்தைகளைக் கூட தொழிலில் ஈடுபடுத்துகிறார்கள். அவர்களை நான் கேட்டபோது, பள்ளிக்குச் சென்று அவர்கள் பயில விரும்பினாலும், வறுமையின் காரணமாக வேலைக்குச் சென்றால், ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் சம்பாதிக்கலாமே என்ற நிர்ப்பந்தத்தின் காரணமாகத்தான் அவர்களை வேலைக்கு அனுப்புகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த மாதிரியான நிலைமைகள் தமிழகத்திலே இருக்கக் கூடாது. வறுமையின் காரணமாக சிறுவர்கள் வேலைக்கு அனுப்பப்படும் நிலைமை தவிர்க்கப்படவேண்டும். அப்படிப்பட்ட குழந்தைகளை எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தத் தொழிலில் ஈடுபடுத்தக்கூடாது என்று ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. ஆனாலும் சட்டம் செயல்படுவதில்லை. இவற்றையெல்லாம் நாம் கண்ணைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சமுதாயக் கொடுமைகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கூறியதைப் போல, கைத்தறித் தொழிலாளர்களின் வேலை நிலைமையையும், வாழ்க்கை நிலைமையையும் மேம்படுத்தக் கூடிய அளவில் ஒரு பூரணமான சட்டமுன்வடிவை—நாம் ஏற்கெனவே பெற்றிருக்கிற அனுபவங்களின் அடிப்படையில்—இந்த நடப்புத் தொடரிலேயே கொண்டு வந்து இரு அவைகளிலும் நிறைவேற்றினால், இந்தச் சட்டத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற 40 இலட்சம் கைத்தறித் தொழிலாளர்களுக்கும் நன்மை அளிக்கும் என்று தெரிவித்து, இந்த அளவிற்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தற்காக மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

<u>திரு. எஸ். ஆர். இராதா:</u> தலைவர் அவர்களே, தொழிலாளர் நலக் கொள்கை விளக்கக் குறிப்பு, கைத்தறித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, ஆகிய இரண்டு கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது கருத்துக்களை இணைத்துத் தெரிவிக்க வாய்ப்புக் கொடுத்திருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரிய ஒன்று. தொழிலாளர் நல இலாக்காவின் கொள்கைக் குறிப்பின்மீது மட்டும் தனியாகப் பேசிவிட்டு, பிறகு கைத்தறித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது எங்கே பேச முடியாமல் போய்விடுமோ என்று நான் பயந்துகொண்டிருந்த நேரத்தில் கைத்தறி நெசவாளர்களும் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் இரண்டையும் ஒன்றாக இணைத்து, இரண்டு பற்றியும் கருத்துக்களைத் தெரிவிக்க நல்ல வாய்ப்புக் கொடுத்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த இரண்டு துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்பிலும் பல்வேறு அரிய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அவையில் குறுகிய காலத்தில் நான் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் ஒரு கருத்தைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். அதனை தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு அதை எந்த அளவிற்குச் செய்ய முடியும் என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அவைக்கு பல்வேறு தரப்பிலேயிருந்து பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள் என்றாலும், குறிப்பாக அதிகமாகப் பேசப்படுகிற பொருள் ஆசிரியர்கள் பிரச்சினைதான். ஆசிரியர்கள் பெயர் வராத நாளே இல்லையென்ற அளவிற்கு இங்கே ஆசிரியர்கள் என்ற வார்த்தை அடிக்கடி பேசப்படுகிறது. இங்கே ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் இருக்கிற காரணத்தாலே, எந்த இலாக்காவைப்பற்றி வந்தாலும், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், ஆசிரியர்களைப்பற்றிப் கிறார்கள். உதாரணமாக, சின்கோனா பற்றிப் பேசுவதாக இருந்தாலும், ஆசிரியர்களுக்கும் கொஞ்சம் வேண்டு

மென்று பேசக்கூடிய அளவிற்கு நல்ல வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கிறது. அவர்களுக்குள்ள அந்த வாய்ப்பைப்பற்றி நான் நினைத்துப் பார்க்கிற நேரத்தில், அதைப் போலவே தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளை இங்கே வந்து உட்கார வைத்தால், தொழிற் சங்கத்தைச் சேர்ந்த 10 பேர்களை இங்கே உட்கார வைத்தால், அவர்களுடைய கோரிக்கைகளையும் இங்கே எடுத்துப் பேச பெரிய வாய்ப்புக் கிடைக்குமென்று நினைக்கிறேன்.

(பிற்பகல் 5—50)

நான் ஆசிரியர்களைப்பற்றிப் பேசக்கூடாது என்பதனாலே இதோடு விட்டுவிடுகிறேன். தொழிலாளர்களைப் பற்றி இப்போது பேசவேண்டும் என்ற ஆசையாலேதான் நான் இதைக் கூறினேனே தவிர வேறு ஒன்றுமில்லை. தொழிலாளர்களைப் பற்றி நமது அருமை நண்பர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசினார்கள். அதைப்பற்றி நானும் அதிகமாகப் பேசவேண்டிய அவசியமிருக்காது என்று கருதுகிறேன். தொழிலாளர்களை இப்போது அரசியல்வாதிகளைப் போல் மாற்றுவது எப்படி என்று பார்க்கிறோம். ஆசிரியர்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதுபோல. ஆசிரியர்கள் தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்துகொண்டு, ஆசிரியர்கள் பிரதிநிதிகளைத்தேர்ந்தெடுப்பதுபோல, பட்டதாரிகள் எப்படி தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்துகொண்டு, பட்டதாரிகள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றார்களோ அதைப்போல எல்லாத் தொழிற்சங்கங்களிலும் இருக்கின்ற உறுப்பினர்கள், தொழிலாளர்கள், 5 ஆண்டுக் காலம் பிராவிடண்ட் பண்ட் கட்டியுள்ள தொழிலாளர்கள் என்று நிர்ணயித்துக்கொண்டு, அவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்யச் செய்து, அவர்களின் சார்பாக தொழிலாளர்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த அவைக்கு வந்தால், அவர்கள் தொழிலாளர்கள் நலப் பிரச்சினைகளைப்பற்றி இங்கே எடுத்துச் சொல்வார்கள். அவர்கள் மூலம் அரசும் தொழிலாளர்களின் பிரச்சினைகளை அறிந்து அவர்களுக்கு நம்மால் முடிந்ததையெல்லாம் செய்யலாம். அந்த மாதிரியான நல்ல நிலைமைகளை உருவாக்குவதற்கு அரசு அதைச் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் இதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தொழில் இலாக்காவை நிர்வகிக்கின்ற அவர்கள் முன்பு தீவிர தொழிற் சங்கத் தலைவராக இருந்திருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்களுக்கு தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் நன்றாகத் தெரியும். இன்று இந்த இலாகாவை அவர் கையிலே வைத்திருப்பதால், தொழிலாளர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இங்கே பேசும்



போது நண்பர் ஒருவர் இந்த அரசு தொழிலாளர்கள் முதுகில் குத்துகிறது என்று பேசினார். அவர்கள் பேசும் நேரத்திலேயே நான் பதில் சொல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டாலும், நான் பேசுகின்ற நேரத்திலேயே சொல்லிக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டேன். இப்போது நான் பதில் சொல்கின்ற நேரத்திலே அவர் இல்லை. என்றாலும், நான் பொதுவாக அ.தி.மு.க.வைப் பொறுத்த வரையிலே, தொழிலாளர்கள் முதுகிலே குத்துகின்ற பழக்கம் எங்களுடைய இயக்கத்திற்கு இல்லை என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தி.மு.க. தொழிற் சங்கப் பேரவையிலே தொழிலாளர்கள் பிரச்சினைகளில் எங்களை ஆட்படுத்திய நேரத்தில்கூட இன்றைக்கு அமைச்சராகஇருப்பவரும் நானும் எதிர்த்துப் போராடினோம். அப்போதும் தொழிலாளர்கள் முதுகிலே குத்துகின்ற நிலைமைக்கு நாங்கள் விட்டுவிடவில்லை. அ.தி.மு.க.வைப் பொறுத்த வரையில், நிச்சயமாக தொழிலாளர்கள் முதுகில் குத்துகிற அளவுக்குப் போக மாட்டோம் அப்படி யார் போனாலும் விடமாட்டோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையில் தொழிலாளர்கள் நலனுக்காக இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளை நாம் நிச்சயமாகப் பாராட்டியாகவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அரசு இன்று அவர்களுக்காக தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றது. அப்படி ஏதாவது நடவடிக்கை அரசு எடுக்கின்றது என்று வரும் போது, நண்பர்கள், அதிலும் தோழமையாக இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சியிலே இருக்கின்றவர்கள், தொழிலாளர்கள் பிரச்சினை என்று வருகின்றபோது தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதை அரசு தடைசெய்து விடுமோ என்ற சந்தேகத்தில் இருக்கிறார்கள்.

தொழிலாளர்களுக்கு அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள உரிமையுண்டு என்று பல நேரங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் தொழிலாளர்கள் போராட்டம் என்று நடத்துகின்றபோது, அரசு குறுக்கீடு எதுவும் இல்லாமல்தான் இருக்கிறது. இன்று இருக்கின்ற நிலைமைகளைப்பற்றி நினைத்துப்பார்த்தால், நிச்சயமாக உண்மைகள் தெரியும். தொழிலாளர்கள் போராட்டம் ஏற்பட்ட போது, அரசாங்கமே நல்ல நடவடிக்கைகளை எடுத்து தொழிலாளர்கள் பிரச்சினைக்குப் பரிகாரம் செய்திருக்கிறது. அப்படி பல நடவடிக்கைகளைக் குறிப்பாகக் கூற முடியும். இன்றைய தினம் உள்ள நிலைமை என்ன? தொழிலாளர்கள் போராட்டம் என்று எங்கே வந்தாலும், இந்த அரசைப் பொறுத்தவரையில், நடுநிலைமையோடு இருந்துதான் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிருக்கிறது. முதலாளிகள் சார்பாக இல்லாமல், தொழிலாளர்களுக்குத் துணையாக இருக்க வேண்டுமென்பதிலே தான் இந்தஅரசு இருக்கின்றது என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசுவதை நான் புரிந்துகொள்கிறேன். அரசு அவர்களுக்குத் துணையாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அரசு நடு நிலைமை வகிக்கிறது என்றும் சொல்கின்றார்கள். நான் அதனால் தான் கேட்கிறேன் இரண்டு தரப்பினர்களுக்குமிடையே நடு நிலைமையோடு இருக்கிறது என்றால், அரசு பலகீனமானவர் களுக்குச் சாதகமாக இருக்கிறதா என்று கேட்டுக் கொள்கி றேன். இந்த இரு தரப்பினரில் யாருக்குத் துணையாக இருக்கிறது என்று கருதுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ஒரு நல்ல சிந்தனையை இந்த நேரத்திலே எழுப்பியிருக்கிறார்கள். அரசு என்றுதான் நான் குறிப்பிடுகி றேன். அரசு என்று சொல்கின்ற நேரத்திலே அத்தனை பேருக் கும் பொதுவாக இருக்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறேன். அதை நான் எண்ணிப் பார்த்தேன். இன்று தொழிற் சங்கப் போராட்டங்கள் நடக்கின்றன என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எந்த அளவுக்கு தொழிலாளர்கள் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் அரசியல் காரணங்களுக்காக போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள் என்பதை நாம் மறுகக முடியாது. அவர்கள் அப்படிப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இன்று தொழிலாளர் நல அமைச்சராக இருப்பவர் தொழிலா ளர்களுக்காக வாதாடியவர் தான். அரசைப பெறுத்த வரையில், நடுநிலைமையோடுதான் இருக்க வேண்டும். தொழிலாளர்கள் நலன் என்ற வகையிலே, தொழிலாளர்கள் இலாகா தொழிலாளர் களுக்காகவே இருக்க வேண்டும். அரசு நடுநிலைமையோடு இருக்க வேண்டும் என்று பேசினேன். நான் அப்போதே குறுக் கிடவேண்டும் என்று இருந்தேன். இந்த இலாகா இருப்பது தொழிலாளர்கள் நலனுக்காக. இந்த இலாகா அவர்கள் நலனுக் காகப் போராட வேண்டும். தொழிலாளர் நல அமைச்சர் தொழிலாளர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதிலே கவன மாக இருக்க வேண்டும். எந்த சங்கமாக இருந்தாலும், அது கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும், அவர்கள் சில பிரச்சினை களைத் தீர்ப்போம் என்ற நம்பிக்கையிலேதான் எழுப்பு கிறார்கள். நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தோழமை போகப்போகிறது என்று கருதுகிறார்கள். நான் சொல்லிக்கொள் கிறேன், நிச்சயமாக அரசு தொழிலாளர்களுக்குத் தடையாக இருக்கிறது என்று கருத வேண்டாம். தொழிலாளர்களைப் பொறுத்த வரையிலே, இந்த அரசு நிச்சயமாக நல்ல நட வடிக்கைகளை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே குறிப் பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இன்று எத்தனை சட்டங் கள், நிலைமைகள், சிந்தனைகள் இவைகளை எல்லாம் நாம் வளரவிடுகிறோம். நீண்ட நாட்களுக்கு முன்னாலே போடப்



பட்ட சட்டம்தான் இன்றைக்கும் தொழிலாளர்கள் சட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. அதை வைத்துக்கொண்டுதான் நாம் இன்றும் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். தொழிற் சங்கம் என்று சொல்லிக்கொண்டு, ஏழு பேர் சேர்ந்து பதிவு செய்துகொண்டு வந்தாலும், அதையும் தொழிற் சங்கம் என்று கருதி பெருமைப்படும் சட்டம் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. இதை இந்த அரசி னுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை முன் நின்று செய்ய வேண்டும். அதிகாரிகளே தொழிற் சங்கங்களை நடத்தலாம் என்று சொல்ல முன்வர வேண்டும். தொழிலாளர்களுடைய பிரச்சினைகளுக் காக அவர்களே வாதாடுகின்ற நிலைமைகளை உண்டாக்க வேண்டும். எல்லாத் தொழிற்சங்கங்களையும் அரசுத் தரப்பிலே உள்ள தொழிற் சங்கங்களாக வைத்துக்கொண்டு தொழிலாளர் கள் பிரச்சினை என்று எது ஏற்பட்டாலும், அந்த இலா காவிலேயிருந்து எடுத்துச்சொல்கின்ற நிலைமைகள் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய தொழிற் சங்கங்கள் என்றால் அதிகமான சந்தா வருகின்ற சங்கம் என்று கருது கிறார்கள். அதிலே பல்வேறு தவறுகள் நடக்கின்றன. இன்று பல துறைகளை அரசு நடத்துகின்ற நிலைமையும் இருக்கின்றது. அதையும் எதிர்த்துப்பேசினார்கள். கல்லூரிகளிலே கூட மாண வர்கள் ஒன்று சேர்ந்து விடுகிறார்கள். சங்கம் என்று அமைக் கிறார்கள். தேர்தல் வைத்திருக்கிறார்கள். போராட்டம் என்று ஒன்று வந்துவிட்டால் அவர்கள் ஒன்று சேர்ந்து விடுகிறார் கள். அரசியல் கூட்டணிகளைப்போல கல்லூரி மாணவர்களும் மாறிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. தொழிலாளர்கள் தங்கள் பிரதிநிதிகளை வைத்துக்கொண்டு அவர்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்கின்ற அளவுக்கு வாய்ப்புகள் உண்டாக்க வேண்டும். தொழிலாளர்கள் பிரச்சினைகள் நீண்ட காலமாக இருந்துகொண்டிருக்கின்றன. அரசுத் தரப்பில் புதுப்புதுச் சட்டங் கள் போட்டுக்கொள்கிறார்கள். அதுகுறித்து தொழிற் சங்கப் பிரதிநிதிகளோடு ஆலோசனைகளும் நடக்கின்றன. அது இன்றைக்குத் தீவிரமாக இருந்துகொண்டிருக்கிறது. நெசவாளர் கள் பிரச்சினைபற்றிக் கூட சட்டம் இன்றைக்குக் கொண்டுவரப் பட்டது. அரசு அன்று கலைக்கப்பட்டதனால், அந்தச் சட்டம் வரா மல் போயிற்று. இந்தச் சட்டம் கொண்டு வருவதை நிச்சயமாக தொழிற் சங்க உறுப்பினர்கள் அறிவார்கள். $3\frac{1}{2}$ ஆண்டுக்கால மாக நெசவாளர்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற காரணத் தினாலே, அமைச்சர் அவர்களுக்கு அனுதாபம் இருக்கிறது. அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாக தமிழ் நாட்டில் நெசவாளர்கள் நல்வாழ்விற்கு வழிவகுப்பதில் அமைச் சர் அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்பு கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்யவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து காண்ட்ராக்ட் லேபர் பற்றிச் சொல்லிக்கொள்கிறேன். காண்ட்ராக்ட் லேபரர் அதிகமான பிரச்சினைகளுக்குரியவர்கள். அவர்கள் கேட்பாரற்றுக்கிடக்கிறார்கள். அவர்களுக்கும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கும் போராடும் உரிமையுண்டு. இந்த அரசு அவர்களுக்கும் பல்வேறு சலுகைகள் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்களிடம் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 6-00)

அப்படிக் கேட்டுக்கொள்கிற நோத்திலே, இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற ஏழை எளியவர்கள். சாதாரண நிலையிலுள்ள பாதுகாப்பில்லாத தொழிலாளர்கள் புரட்சித் தலைவரை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ்வு தரும் வகையிலே பல நல்ல சட்டங்களைச் செய்ய முயற்சிகள் உருவாகியிருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்றேன்.

அடுத்து நெசவாளர்களைப் பொறுத்தவரையில், இன்றைக்குப் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அந்தக் கருத்துக்களில் நான் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். நம்முடைய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு 60 சதவிகிதம் நெசவாளர்களைக் கூட்டுறவு சங்கங்களுக்கு மாற்றுவது என்ற கொள்கையை அறிவித்திருக்கிறோம். அந்த அளவிலே வேகமாகப் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன. அப்படிக் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்கும்போது, நமக்கு இருக்கின்ற சங்கடத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு கைத்தறி இலாகா அனுமதி கொடுத்திருக்கிறது. கைத்தறி இலாகா அனுமதி கொடுத்ததற்குப் பின்பு, பணம் வாங்கக் கூட்டுறவு இலாகாவிடம் போக வேண்டும். கூட்டுறவு மத்திய வங்கி அவர்களுக்குப் புதிய சட்ட திட்டங்களை வைப்பதால், கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் எந்த அளவிற்குக் கஷ்டப்படுகிறார்கள் என்பது நீண்ட நாட்களாகத் தெரிந்த ஒன்று. அதை மாற்ற ஒரு வழி சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு நெசவாளர் சங்கம் ஆரம்பித்து, அவர்களுக்குக் கடன் தருவதாக இருந்தாலும், அந்தச் சங்கத்தின் வரவு செலவை நிர்வகிப்பதாக இருந்தாலும், கூட்டுறவு நெசவாளர் வங்கி ஆரம்பிக்க வேண்டியது மிகமிக அவசியம். விவசாயிகளுக்குக் கடன் தர கிராம நாணயச் சங்கங்கள் இருக்கின்றன. விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய அத்தனை கடன்களையும் அங்கே வாங்குகிறார்கள். அதே போன்று நெசவாளர்கள் கடன் வாங்க, அதன் வரவு செலவை



நிர்வகிக்க, மத்திய வங்கியினுடைய மேற்பார்வையில் இருந்தாலும் சரி, பரவாயில்லை; அவர்கள் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாக இருந்தாலும் சரி, நெசவாளர் வங்கியை ஆரம்பிக்க வேண்டுமென்பதில் கைத்றித் துறை அமைச்சரவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் மணியடித்தார்.)

இன்னொன்றையும் நான் சொல்வேன். இன்றைக்கு விவசாயிகளைப் பொறுத்தவரையில், அத்தனை பேரும் வாங்கிய கடன்கள் ரத்து செய்யப்பட வேண்டுமென்று எல்லா அரசியல் கட்சிகளும் எவ்வளவு வேகமாகக் கோஷம் போட முடியுமோ அந்த அளவிற்குப் போடுகிறார்கள். அதேபோன்று நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று யாரும் கேட்கவில்லை. யாராவது கேட்க மாட்டார்களா என்று பார்க்கிறேன். ஆனால் யாரும் கேட்கவில்லை. 10, 20 ஆண்டுகளுக்கு நெசவாளர்கள் வீடு கட்ட கொடுக்கப்பட்ட கடன்கள், அந்த வீடுகள் இன்று விழுந்துவிட்ட நிலையில் கூட, ரத்து செய்யப்பட வேண்டுமென்று கேட்கக்கூடிய உணர்வு இன்றையதினம் நெசவாளர்களுக்கு வருவதில்லை. அவன் வாங்கிய கடனை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்க மாட்டான். நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன், திருப்பித் தர வேண்டுமென்ற உணர்வு நெசவாளர்களுக்கு இருக்கிறது. அவர்களை அரசியல்வாதிகள் தூண்டிவிட்டாலும் அவர்கள் வெளியே வரமாட்டார்கள். அவர்கள் நிழலிலேயே இருந்து பழக்கப்பட்டவர்கள். வெய்யிலுக்கே வராததால், அந்த வேகம் அவர்களுக்கு வருவதில்லை. பாவு கூட்டக் கூட நிழல் இருக்கும் இடத்திலேயே கூட்டுவார்கள், அதனால் அவர்களுக்குப் போராடும் மனோபாவம் வருவதில்லை. அவர்களுக்கு அதிகமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி முயற்சி எடுக்கும் நேரத்தில், எவ்வளவு மூலதனம் போட்டுச் செய்தாலும், நிச்சயமாக அந்தப் பணம் அரசாங்கத்திற்குத் திரும்பி வரும். நெசவாளர்களுக்கு வீடு கட்டும் பணியை நெசவாளர் அமைச்சர் மட்டும் செய்ய வேண்டுமென்பதில்லை. இன்றைக்கு வீட்டு வசதித் துறையை வைத்திருக்கிற அமைச்சரவர்கள் வியாசர்பாடியில் நூற்றுக் கணக்கான வீடுகளைக் கட்டித் தந்திருக்கிறார்கள். வீட்டு வசதி என்ற அடிப்படையிலே கட்டிக் கொடுத்துள்ள வியாசர்பாடியில் உள்ள வீடுகளில், நெசவாளர்கள் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வாடகை அதிகம். மற்றும் சில பிரச்சினைகள் இருக்கின்றன என்றாலும், அதை நேரிலே அமைச்சரவர்களிடத்தில் சொல்லிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட வசதிகளைப் பல்வேறு கிராமங்களில் உண்டாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்குப் பல்வேறு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாகிகள் இல்லை. அங்கே இருக்கும் அதிகாரிகள்தான் அந்தச் சங்கங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள், அதை உடனடியாக மாற்றி, அங்கேயுள்ள நெசவாளர் உறுப்பினர்களை இயக்குநர்களாக்கி. அவர்களே கூட்டுறவுச் சங்கங்களை நடத்த வசதிகளை உடனடியாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர் குடும்பத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்குள்ள நிலைமை என்ன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். 12 வயதுப் பையன்கூட வேலை செய்ய ஆரம்பித்துவிட்டான் என்று, செலக்ட் கமிட்டியில் அவர் இருந்ததால், சொன்னார்கள். இந்த மன்றத்திலே நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்; பாக்டரியில் வேலை செய்யும் பையன்களை, அதிகாரிகளை வைத்துத் தடுத்தாலும், நெசவாளர்கள் வீட்டிலே வேலை செய்யும் குழந்தைகளைத் தடுப்பதென்பது முடியாத காரியம். இன்றைக்குள்ள நிலைமை, கல்வித்துறையிலே பின் நோக்கிச் செல்வது யார் என்றால், தமிழ்நாட்டிலே உள்ள நெசவாளர்கள்தான். இந்தத் தொழிலுக்கு அதிக வாய்ப்புகளை உண்டாக்கி. நெசவாளர்களுக்கு அதிகமாக வசதிகளைச் செய்ததால், அவர்கள் குழந்தைகள் படிக்கும் நிலை மாற்றப்பட்டு 5, 6 அல்லது 10 ஆம் வகுப்புவரைகூட நெசவாளர் வீட்டுக் குழந்தைகள் படிக்க முடியாத நிலைமை வளர்ந்துவிட்டது. நான் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு 20 பேர்கள் அந்தக் குடும்பங்களிலிருந்து கல்லூரிக்குப் போனார்கள் என்ற நிலைமை மாறி, இன்று, 10, 12 வயதில் அவனை தறிக் குழியில் இறக்கி, குழியில் இறங்க லாயக்கு இல்லாதவர்களையும் குழியில் இறக்கி வேலை செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொழிலை நாம் வளர்க்கின்ற அதே நேரத்தில், அந்தக் குடும்பங்களில் இருக்கிற படித்தவர்களுக்கு—பரிவோடு கேட்டுக் கொள்கிறேன், அத்தனை பேரும் ஒத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்—வேலை தர உத்தரவாதம் கொடுத்தால்தான், அவர்கள் மேற்கொண்டு படிக்க ஆர்வம் வரும். அந்தத் தெருவிலே பி. ஏ. படித்தவன் ஒருவன் இருந்தால், 'அவனுக்கே வேலையில்லை, ஏன், என்னுடைய குழந்தையைப் படிக்கச் சொல்கிறீர்கள், வீட்டிலே வேலை செய்தால் 2 ரூபாயாவது கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டுமென்றால், நெசவாளர்கள் குடும்பத்தில் படிக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கி, அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் கொடுத்தால், அவர்கள் படிக்க வாய்ப்பு ஏற்படுமென்று கூறி, தலைவரவர்கள் இரண்டாம் முறை மணி அடிக்கும் முன்பு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.





திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, தொழிலாளர் நலம் பற்றிய இந்த அரசின் கொள்கைக் குறிப்பின் மீது சில அம்சங்களை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். முதலாவதாக வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரக்கூடிய அமைப்புக்கள் அல்லது எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் என்று சொல்லுகிறோமே அந்த அமைப்புக்கள் செயல்படுவதிலேயுள்ள குறைபாடுகளைப்பற்றி இதற்கு முன்னதாகவும் நான் இந்த அவையிலே சுட்டிக் காட்டியிருக்கிறேன். பதிவு செய்யப் போகிறவர்கள் சிறிது காலதாமதமாக, அதாவது ஒரு மாதம் கழித்துச் சென்றாலும், அவர்களைப் பதிவு செய்வதிலே வேறுவித நிலைமைகள் இருக்கின்றன. காலம் கடந்துவிட்டது, குறிப்பிட்ட தேதியில் வந்திருக்க வேண்டும், எனவே புதிதாகப் பதிவு செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். பதிவு செய்தவர்களுக்கு வேலை எந்த அளவிற்குக் கிடைத்திருக்கிறது என்பது வேறு விஷயம். அறிக்கையிலே எவ்வளவு பேர்கள் பதிவு செய்தார்கள், எத்தனை பேர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறதென்ற புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பதிவு செய்தவர்களுக்கும், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வேலை வாய்ப்புக்கும் இடையிலே பல தனி முயற்சிகளை, சிறப்பான ஏற்பாடுகளுடன் செய்தால் தான், அந்த அலுவலகங்கள் வேலை வாய்ப்பிற்கு உத்தரவாதம் செய்யும். வேலை காலியிருந்தும் பெயர்களை அனுப்புவதில்லை. அதற்கென்று தனி ஏற்பாடு, வேலை பெற வேண்டுமென்று நினைப்பவர்கள் செய்ய வேண்டும். இந்தக் குறைபாடுகளை அகற்றுவதற்கு ஓரளவிற்காவது அரசு சரியான கண்காணிப்பு, திடீர் சோதனைகள் மூலம் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். இல்லாவிட்டால் இந்த அமைப்பே தொழிலாளர் நல இலாகாவின் வெற்றிக்குப் பதிலாக, குந்தகம் விளைவிக்கும். இப்போது அந்த நிலைமை இருக்கிறது. இந்தக் குறையை நீக்குவதிலே துரிதம் வேண்டும்.

(பிற்பகல் 6-10)

மற்றொன்று. தொழிலாளர்களுக்கு என்று மருத்துவமனைகள், இ.எஸ்.ஐ ஹாஸ்பிட்டல்ஸ் இருக்கின்றன. அங்கே நடக்கின்ற எல்லா விவரங்களையும் நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. இருந்தாலும் அங்கே பலவித தவறுகள் நடைபெறுகின்றன. அந்த மருத்துவமனைகளிலே தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய சில நன்மைகள் தொழிலாளி என்ற காரணத்தாலேயே கிடைக்காமல் அவர்கள் அலட்சியப்படுத்தப்படுகிற போக்கு இருக்கிறது. இதையும் இந்த இலாக்காவினர் மருத்துவத் துறை மூலம் அபிவிருத்தி செய்ய வேண்டும். இதில் மாறுதல் செய்ய வேண்டும். எனக்குத் தெரிந்தவரையில், இப்போதும் சில விவரங்களை நான் நேரடியாகக் குறிப்பிட்டுக் கூற முடியும். சில தொழிலாளர்கள் நோய் காரணமாக அங்கே அனுமதிக்கப்பட்டு,

[திரு. ப. மாணிக்கம்]

சரியான கவனிப்பு இல்லாமல் மேலும் நிலைமை மோசமடைந்து, பிறகு வெளியே சிகிச்சை பெற வேண்டிய நிலை இருக்கிறது. இம்மாதிரி அமைக்கப்பட்டிருக்கக்கூடிய மருத்துவ மனைகள் தொழிலாளர்களுக்காகவே அமைக்கப்பட்டிருப்பவை. அங்கே இப்படிப்பட்ட நிலைமைகள் வரக்கூடாது. ஆகவே அரசு இதிலே மாறுதல் செய்ய வேண்டும். அரசு என்று நான் குறிப்பிட்டுச் சொல்லக் காரணம் அரசு நிர்வாகம் என்று சொல்லும்போது பரந்த நிர்வாகத்திலே அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கோளாறுகள், குறைகள் இருக்கத் தான் செய்யும். இருந்தாலும் அரசின் சார்பில் நான் இதைச் சொல்லக் காரணம் இரண்டிலும் கோளாறு இருப்பது தான்.

அடுத்து, ஒரு விஷயத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் குறிப்பிட்டார். அது ஸ்கிரீனிங் கமிட்டி பற்றியதாகும். அதுபற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்படவில்லை. அது இப்போது செயல்படத் தொடங்கியிருக்கும் என்று நான் நினைக்கிறேன். அரசு நிர்வாகத்திலே வேலை நிறுத்தம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், தொழிலாளர் நலன் சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்களின் மூலம் அவர்களுக்கு நிவாரணம் தேடிக் கொடுப்பதற்குப் பதிலாக அவற்றை மறுக்கக் கூடிய வாய்ப்பு இதன் மூலம் இன்றையதினம் இருக்கிறது இந்த ஸ்கிரீனிங் கமிட்டி வேண்டுமா வேண்டாமா என்று கேட்டால், அது இருக்கலாம். ஆனால் அரசினுடைய நலனைப் பாதுகாப்பதற்காக இருக்கலாம் என்று கூட சொல்லலாம். ஆனால் அதுவே தொழிலாளர் நலனுக்கு பாதகமாக இருக்குமானால், அப்படி இல்லாதவாறு அரசு இதைப் பரிசீலிக்க வேண்டும். தொழிலாளிகளின் நலனை, உரிமையைப் பறிப்பதாக இருந்தால், அது செயல்பட வேண்டிய அவசியமில்லை. இரண்டு அம்சங்களையும் நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், நடைமுறையில் இந்த ஸ்கிரீனிங் கமிட்டி அரசு ஊழியர்கள் மீது சுமத்தப்பட்ட நடவடிக்கையை உறுதி செய்வதும், பழிவாங்குதலும் நியாயம் என்கிற முறையில் போய்விடக்கூடாது. அப்படிப்பட்ட ஆபத்து இன்றைக்கு நாட்டில் இருக்கிறது. ஆகவே அதுபற்றி அவசியம் அரசு யோசிக்க வேண்டும். கொள்கை விளக்கக்குறிப்பிலே இது பற்றி இல்லாவிட்டாலும் கூட வாழ்க்கையிலே, நடைமுறையிலே நாட்டிலே இது இருக்கிறது. சில இலாக்காக்களிலே நடந்த வேலை நிறுத்தம் காரணமாக, அதன் காரணமாக ஏற்பட்ட தீர்ப்புகள் காரணமாக, அவர்கள் வேலைக்குச் செல்வதில் தடங்கள் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரசு இதைப் புனர்பரிசீலனை செய்ய வேண்டும். அதைச் செயல்படுதத்துவதிலே என்ன 'கைட் லைன்ஸ்' பின்பற்றப்படுகின்றன என்பது தெரியவில்லை. அரசின் நலனைப் பாதுகாத்தல் என்கிற பெயரில் தொழிலாளர் நலனுக்கு எதிராக அது செயல்படக்கூடாது. சென்னையை அடுத்துள்ள நான் குடியிருக்கும் பகுதியிலே இந்திரா காட்டன் மில் என்கிற ஒரு மில் இருக்கிறது. அதுபற்றி நான் குறிப்பிடாமல் இருக்க

 [திரு. ப. மாணிக்கம்]

முடியாது. தமிழ்நாடு பூராவும் நடந்த தொழிலாளர்கள் போராட்டம் காரணமாக அங்கும் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. பிறகு ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதிலே சிக்கல் ஏற்பட்டது. சாதாரண ஆலைகளில் உள்ள சலுகைகளைக் கூட நிர்வாகத்தினர் அங்கே நிறைவேற்றாததால், எல்லையற்ற நிலையிலே அங்கே வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அதற்கு முன்பு என்னுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் அங்கே சங்கம் வைத்திருக்கவில்லை. அவர்களையெல்லாம் வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். என் கட்சியைச்சேர்ந்தவர்களும் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்காக நான் வாதாடுகிறேன் என்பதல்ல பிரச்சினை. அங்கே எல்லையற்ற அளவுக்கு நிர்பந்தம் காரணமாக வேலை நிறுத்தம் ஏற்பட்டது. பேச்சுவார்த்தை நடத்தக் கூட நிர்வாகத்தினர் வர மறுக்கிறார்கள். பேச்சுவார்த்தை நடத்த தொழிலாளர்கள் தயாராக இருந்தும், பேச்சுவார்த்தைக்கு நிர்வாகம் முன்வரவில்லை, பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டவில்லை. அப்படிப்பட்டவர்கள் மீது அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு சட்டத்திற்கு உட்பட்டு அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசின் சார்பில் அந்த கய ஒரு நிலை இன்னும் வரவில்லை. அப்படி ஏற்கெனவே முன் வந்திருந்தால் முன்னாலேயே அந்த வேலை நிறுத்தம் முடிவு அடைந்திருக்கும். தொழிலாளர்கள் இதை சீக்கிரம் முடிவுக்குக் கொண்டுவரத்தான் காத்திருந்தார்கள். எல்லையற்ற நிலையில், நிர்பந்த நிலையில் தான் அவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினார்கள். பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர அவர்கள் தயாராக இருந்தும், நிர்வாகம் அதை ஒத்துக் கொள்ளவில்லை. அவர்களை சட்டத்தின் மூலம் கட்டுப் படுத்தவோ அல்லது பேச்சுவார்த்தைக்கு இணங்கவோ இலாகா நிர்வாகத்தினரை வலியுறுத்தியிருக்க வேண்டும். இதில் அரசின் நிலை என்ன என்பதைப் பற்றி அறிவிக்க வேண்டும். இல்லாவிட்டால், தொழிலாளர் நலனுக்கு என்று இருக்கின்ற சட்ட திட்டங்களின் மீது தொழிலாளர்களுக்கு இருக்கின்ற நம்பிக்கை அறவே போய்விடும். அரசின் பேரில் அவர்களுக்கு உள்ள நம்பிக்கையைக் கூட இழக்க வேண்டியிருக்கும்.

அடுத்து, நீண்ட காலமாக மூடப்பட்டிருக்கக்கூடிய தொழிற் சாலை குரோம் லெதர் பேக்டரி ஆகும். இரண்டு மூன்று முறை இந்த அவையிலே அதுபற்றி நான் பேசியிருக்கிறேன். நான் குடியிருக்கின்ற குரோம்பேட்டையில் இந்தத் தொழிற் சாலை இருந்தாலும் கூட, அந்த முறையில் என்னுடைய ஊரைப்பற்றி இந்தப் பிரச்சினையைக் கிளப்பவில்லை என்கிற கருத்தினை நான் முதலிலே தெரித்துக்கொள்கிறேன். அப்படி மாண்புமிகு உறுப்பினர்களும் நினைக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். சுமார் 500 பேர்தான் அங்கே நிரந்தரத்

தொழிலாளர்களாக இருந்தார்கள். 600 பேர் டெம்பரரி.
அந்தப்பிரச்சினை வேறு தன்மையுள்ளது. அந்தத் தொழிற்
சாலை நீண்ட காலமாக மூடிக்கிடக்கிறது. அங்கே தோல்
இருக்கிறது.. சாதனங்கள் இருக்கின்றன, தொழிலாளர்களுக்குக்
கூலி, சம்பள பாக்கி இருக்கிறது. இன்றைக்கு அங்கே இருக்கக்
கூடிய பல பொருள்களை ஏலத்திற்கு விட்டாவது அவர்களுக்குக்
கூலியை தரலாம். பல பொருள்கள் பயன்படுத்தப்படாமல், பயன்
படாமல், தோல்கள் எல்லாம் கெட்டு, சீரழிந்து யாருக்கும் பயன்
படாமல் போய்விடக் கூடிய நிலை இருக்கிறது. அந்தத்
தொழிலாளர்களுக்கு இப்படி நிவாரணம் தரக்கூட அரசு
முன்வரவில்லை. இது வருத்தத்திற்குரியது. வங்கியில் வாங்கிய
கடன் நிர்வாகம் கட்ட முடியாமல் அது மூடியிருக்கிறது என்று
காரணம் சொன்னாலும் கூட, அதைத் திறந்து தொழிலாளர்
களுக்கு நிவாரணம் தர அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று
நான் இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.
மாநிலத்திலேயே பெரிய தோல் தொழிற்சாலை அது.

இன்னொரு விஷயத்தையும் நான் அரசின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன். சென்ற காலத்திலே நடைபெற்ற
தொழிலாளர் போராட்டங்களில் தொழிலாளர்கள் மீது பல
வழக்குகள் போடப்பட்டன. அந்தத் தொழிலாளர்கள்
வேலையிழந்து நிற்கிறார்கள். வழக்கும் நடத்தாமல் வாபசும்
ஆகாமல் இருக்குமானால், எனக்கு இதில் சந்தேகம் எற்படுகிறது.
இந்த நிலையை மாற்ற அரசு உறுதியான நடவடிக்கைகளை
மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, நெசவாளர்கள் பிரச்சினைபற்றி ஒன்றிரண்டு
அம்சங்களை மட்டும் கூறுகிறேன். நெசவாளர்களுக்கு இன்றுள்ள
நிலையில் பல பிரச்சினைகள் இருக்கின்றன, பிரைவேட்
சொசைட்டிகளில் நிறைய ஸ்டாக் இருக்கிறது. ஸ்டாக் கொள்
முதல் ஆகவில்லை. புதிதாக உற்பத்திக்கான வாய்ப்பும் இல்லை.
நிதி வசதிக்கும் ஏற்பாடு செய்யவில்லை. நூல் விலை ஏறியிருக்
கிறது என்பது பொதுப் பிரச்சினை. அதுமட்டுமல்ல பிரைமரி
சொசைடிகளிடமிருந்து வாங்கி மாநில சொசைட்டிகளுக்கு
விற்கும்போது, 15 சதவிகிதம் வித்தியாசம் இருப்பதாகக்
கூறுகிறார்கள். இந்த 15 சதவிகித ஏற்றம் மிக மிக அதிகம்.
இதைக் குறைத்து 5 சதவிகிதம் அதிக பட்ச வித்தியாசம் என்று
சொன்னால், மிக நன்றாக இருக்கும். பிரைமரி சொசைட்டியி
லிருந்து வாங்குவதற்கும் மாநில சொசைட்டியில் விற்பதற்கும்
15 சதவிகிதம் வித்தியாசம் என்று இருப்பது சரியல்ல. இதைப்
புனர்பரிசீலனை செய்து நான் சொல்லியபடி மாற்ற வேண்டும்.
அப்படிச் செய்தால் நேரடியாக நெசவாளர்களுக்கு நிவாரணம்
தருவதற்கான வாய்ப்பாக அது இருக்கும். ஸ்டாக் அதிகமாக
இருக்கிறது. அதை வாங்கி அவர்களுக்கு நிவாரணம் தரவேண்டும்.



அப்படிச் செய்தால் விரைவில் எல்லாவற்றையும் விற்க முடியும்.
ஸ்டாக் அதிகமாக இருந்தால், அதை வாங்கி மார்க்கெட்டிங்
வசதியைச் செய்ய அரசு கடமைப்பட்டிருக்கிறது என்று
கொள்கை விளக்கக் குறிப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.
அவற்றைக் கொள்முதல் செய்வதற்கும், காலா காலத்தில்
கடனைத் தருவதற்கும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.
இப்போது உற்பத்தியே பாதிக்கப்படுகிறது.

அடுத்து, அவர்களுக்கு வீட்டு வசதியைச் செய்ய வேண்டும்.
மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களும் ஒன்றைக்
குறிப்பிட்டார்கள். பல இடங்களில் எனக்கே அதுபற்றித்
தெரியும். ஆரணியில் வீடுகட்டியபோது ஆட்களைத் தேடிக்
கண்டுபிடித்து குடிபுக வைத்தார்கள். ஆனால் தவணையைக்
கட்டவில்லையென்று சொல்லி அவர்களை வெளியேற்றி
விட்டார்கள். அதுபோல் காஞ்சியில் பாதிக்குமேல் தொகையைக்
கட்டிவிட்டார்கள். சொசைட்டியில் என்ன நடந்ததோ
தெரியாது. அங்கே ஏதோ கோளாறு நடந்து அவர்களும்
வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 6—20]

எனவே, நெசவாளர்களுக்குத் தரப்படும் இந்த வீட்டை
அவர்கள் அனுபவிக்கக்கூடிய முறையிலே—அவர்கள் தவணை
கட்டுவதில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் அவர்களுக்கு
வாய்ப்புத் தந்து அவர்கள் தொடர்ந்து அங்கேயே இருக்கும்
நிலைமையை உருவாக்க வேண்டும். பலபேர் இன்றைக்கு
அவர்களுடைய வீட்டிலே நுழைய முடியவில்லை. அவர்கள்
வெளியேற்றப்படுகிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை நிறை
வேற்றும்போது, கோளாறு வருகிறது. இதில் அரசு தக்க
நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது தேர்தல் இல்லாததால், பல இடங்களில் பல
நெசவாளர் சொசைட்டிகளில் நியமனம் செய்யும்போது, கட்சி
மாச்சரியங்கள் ஏற்படுகின்றன. நியமனங்களிலேயும் பல
தவறுகள் நடக்கின்றன. பொதுவாக நிர்வாகத்திலே என்ன
ஏற்படுகின்றது என்று சொன்னால், மாநிலத்திலே உள்ள ஆளும்
கட்சியைச் சார்ந்தவர்களை அனுசரித்துப் போகக்கூடிய
ஒரு போக்கு அரசியல் பண்பாடாக மாறியிருக்கிறது.
அந்த நிலைமைகள் ஏற்படும்போது, சில தவறுகள் நிகழ்கின்றன.
ஆகவே, நியமிக்கும்போது, பலரையும் கலந்து ஆலோசித்துப்
போட வேண்டும். மேலும் தேர்தல் சீக்கிரம் வருவது மிகவும்
நல்லது. அதற்கு எல்லா ஏற்பாடுகளையும் அரசு செய்ய
வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே,
நம்முடைய தொழிலாளர் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக்
குறிப்பைப் பொறுத்த வரையில், இந்தத் துறையிலே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகள்,
அதனுடைய விளைவுகள் எதுவாக இருந்தாலும் கூட, அவர்

எடுத்திருக்கின்ற போக்கும், அனுசரிப்பு முறையும் ஓரளவுக்கு வரவேற்க வேண்டிய ஒன்றாக அமைந்திருக்கிறது என்பதை ஆரம்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பிறகு தொழில் துறையைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், நமக்கு இருக்கின்ற பொறுப்பை நாம் உணர்ந்தாக வேண்டும். தொழிலாளர்களுக்கான சட்ட முறைகள், பாது காப்புகள், உரிமைகள் எந்த அளவுக்கு மிக மிகத் தேவை என்று பார்த்து அவைகளைப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை. தொழிலாளர்களுக்கு அந்த உரிமைகள் கொடுக்கப் படாததால், சில நேரங்களிலே நம்முடைய பொருளா தாரத்தையே பாழ்படுத்துகின்ற அளவுக்கு நிலைமைகளைக் கொண்டு செல்லும் சூழ்நிலைகளை நாம் தடுத்தாக வேண்டும். இந்தக் கருத்தை எந்தப் பொறுப்புள்ள ஆட்சியும், கட்சியும் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரங்களைப் பார்த்தோம். அவர்கள் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரங்களைப் பார்த்தால், இன்றைக்கு இருக்கும் நிலைமையில் கொஞ்சம் ஏமாந்தால் நிலை மைகள் எந்த அளவுக்குச் செல்லும் என்பதை நாம் எண்ணி ஏங்கும் அளவுக்கு அவைகள் இருக்கின்றன. யார் மீது குறை என்ற நிலைக்கு நான் பின்னாலே வருகிறேன். 1978-ஆம் ஆண்டில் மொத்தமாக 2155675 உழைப்பு நாட்கள் இழந்திருக்கிறோம் என்று செல்லியிருக்கிறார்கள். 1979-ஆம் ஆண்டிலே 8273236 உழைப்பு நாட்கள் இழக்கப்பட்டிருப்பதாக இருக்கிறது. ஓராண்டுக்கு அடுத்த ஆண்டு 4 மடங்காக இந்த இழப்பு நாட்கள் உயர்ந்திருக்கின்றன என்பதோடு மட்டுமல்ல, எந்த அளவுக்கு அது தேசீய மூலதனத்தை பாதித்திருக்கிறது, அதனால், நாம் என்ன இழந்திருக்கிறோம் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். உற்பத்தி இழப்பு எவ்வளவு என்பதையும் பார்க்க வேண்டும். இந்தியா பெரிய பொருளாதார வளமையிலே இருந்து கொண்டு மற்றவர்களுக்கு தானம் கொடுக்கவில்லை. நம்மைச் சீரமைத்துக் கொள்ள நாம் மிகுந்த சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதுபோன்ற நிலைமைகள் மூலம் உற்பத்தியைப் பாதிக்கின்ற அளவுக்குக் கொண்டு செல்வதும், மிகத் தேவையான தொழில்களிலே வேலை நிறுத்தங்களை முடுக்கி விட்டுவிட்டு, அதன் விளைவாக தேசீயப் பொருளா தாரத்தைச் சீரழிக்கும் தன்மையும் ஏற்பட்டுவிடுகின்றன. இதை நான் இங்கே சுட்டிக்காட்டியாக வேண்டும். சில தொழில்களைப் பொறுத்தவரையில், ஒரு நாள் வேலை நிறுத்தத்தின் காரணமாக பல கோடி ரூபாய் அல்லது பல நூறு கோடி ரூபாய் என்ற அளவுக்கு நஷ்டத்தை ஏற்படுத்த முடியும். அப்படிப்பட்ட தொழிற்சாலைகளிலே வேலை நிறுத்தங்களை ஊக்குவிப்பதும், அந்த வேலை நிறுத்தங்களை மிகவும் சாதாரண காரியங்களுக்காக தொடர்ந்து ஏற்படுத்துவதும் என்ற நிலைமை இன்று



கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. நமக்குத் தேவை ஏற்படும்போது, பணம் தேவைப்படும்போது, மத்திய அரசோடு போராடுவோம், சண்டையிடுவோம் என்று சொல்லப்பட்டி ருக்கிறது. பெரிய நிறுவனங்களிலே பல நூறு கோடி ரூபாய் நஷ்டம் வருமளவுக்கு வேலை நிறுத்தம் ஏற்படும்போது, அதிக ஆர்வம் காட்டும் போக்கு வரும்போதுதான் கொஞ்சம் சங்கடம் ஏற்படுகிறது. இதிலே தெளிவான நிலைமைகள் இல்லை. இதைத் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை வந்திருக்கிறது என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது என்று நான் நம்புகிறேன். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சமீபத்திலே கூட்டிய தொழிலாளர்—சங்கத் தலைவர்கள் கூட்டத்திலேகூட மிகுந்த உரிமையோடு வலியுறுத்தி யிருக்கிறார்கள். ஆனால், இந்த நாட்டிலே ஒன்றை நான் மிகவும் வேடிக்கையாகப் பார்க்கிறேன். இங்கே அ. தி. மு. க. வெற்றிபெற்று வந்துவிட்டால், மக்கள் சக்தி பெரியது, மக்கள் எங்களை அனுப்பியிருக்கிறார்கள், நாங்கள் செய்வதெல்லாம் சரியே, சொல்வது எல்லாம் நியாயம் என்றும், திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்தக் கட்சியைவிட மிகப் பெரிய சக்தியாக வெற்றி பெற்று விட்டார் என்றவுடனே எதேச்சாதிகாரம் வெற்றி பெற்றுவிட்டது என்றும் சொல்கிறார்கள். நாம் நடத்துகின்ற தொழிற் சங்கங்கள் கூட இந்த முறையிலே தான் நடத்தப்படுகின்றன. தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுடைய குறைகளைப் போக்கும் முறையில், அணுகு முறையில் மாற்றம் வேண்டும், அரசியல் கட்சிகள் இன்றைக்கு தொழிற் சங்கங்களை ஆட்டிப்படைக்கின்ற நிலை வளர்ந்து கொண்டே வருகிறது. நாட்டிலே இருக்கும் அரசியல் கட்சிகள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு உறவு வைத்துக் கொள்ள வேண்டாம் என்ற நிலை வரும்போது, இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, தொழிலாளர் விரோதப் போக்கைக் கொண்டது, தொழிலாளர் விரோத கொள்கை கொண்டது என்ற குரலைக் கேட்க முடிகிறது. நாளைக்கு அவர்களுடன் உறவு வேண்டும் என்ற நிலை வந்துவிட்டால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இல்லை என்றால் இந்த நாட்டிலே சர்வாதிகாரம் தலைதூக்கி விடும் என்று சொல்கிறார்கள். இந்தப் போக்கு தொழிலாளர் களுடைய நலனைப் பாதுகாக்கும் தன்மையை அழிக்கிறது. அதனாலேதான் அவர்களை எப்படிப் பயன்படுத்துவது என்ற எண்ணம் வரும்போது எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும் என்ற நிலையும், அதன் மூலம் சில நிர்ப்பந்தமான சூழ்நிலைகளை உருவாக்கி, எந்த அரசாக இருந்தாலும்— அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாக இருந்தாலும், காங்கிரஸ் அரசாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக அரசாக இருந்தாலும்—அவர்களின் நிர்ப்பந்தம் மிக்க சில போக்குக்கு உடன்பட்டாக வேண்டும்என்ற நிலைமை

இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தோல்வி காண்கிறார்களா இல்லையா என்பதைவிட, இந்த நிலைமைகளை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை நான் அவர்களிடம் தனிப்பட்ட முறையிலே பேசியதிலிருந்து தெரிந்து கொண்டேன். இன்றைக்கு இருக்கின்ற மற்ற நிலைமைகளைப் பொறுத்த வரையில், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே குழந்தைகள் வேலைக்கு வைப்பதைத் தவிர்க்க முடியாத அளவிலே சூழ்நிலைகள் இருக்கின்றன. குழந்தைகளை வேலைக்கு வைக்கவில்லை என்று அதிகார பூர்வமாகச் சொன்னால் கூட, உண்மையில் வேலைக்கு வைக்கும் நிலைமை இருக்கிறது. தீப்பெட்டித் தொழிற்சாலை, முந்திரி உடைக்கக் கூடிய தொழிற்சாலைகளிலே குழந்தைகள் வேலை செய்கிறார்கள். இதைத் தடைசெய்வதற்கும், முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் முடிந்த அளவு முயற்சிகளைச் செய்தாக வேண்டும். அப்படி முயற்சிகளை நாம் மேற்கொண்டாலும், தெரிந்தேகூட அனுமதிக்கும் கட்டாயமும் சில நேரங்களிலே ஏற்படுகிறது. எனவே அவர்களுக்கான வேலைப் பாதுகாப்புகளை நாம் அதிகப் படுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சட்டபூர்வமாக நாம் (Recognise) செய்ய முடியாது என்ற காரணத்தால், அவர்கள் எப்படி வேண்டுமானாலும் அவதிப்படட்டும், முதலாளிகள் அவர்களை (எக்ஸ்பிளாய்ட்) (Exploit) பண்ணட்டும் என்று சொல்லும் அளவுக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது.

அடுத்தபடியாக, கான்ட்ராக்ட் லேபர், (Contract labour) கேஷுவல் (casual) லேபரைப் பொறுத்தவரையில், அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்தாக வேண்டும். அதிலே அரசு கெடுபிடியான நடவடிக்கை எடுத்தாக வேண்டும். 'கான்ட்ராக்ட் லேபர்' என்ற காரணத்தினாலே, 'கேஷுவல்' (லேபர்) என்ற காரணத்தினாலே, அவர்கள் தொழிற் சங்கங்கள் வைத்து பிரதிநிதிகள் மூலமாக அவர்களுடைய குறைகளைச் சொல்ல முடியாது என்ற காரணத்தால், எந்த அளவுக்கு அவர்களுடைய ஊதியத்தைக் குறைக்க முடியும் என்று குறைக்கிறார்கள். அந்த நிலைமைகள் ஏற்படாத அளவுக்கு அவர்களுக்குப் பணி மற்றும் ஊதிய உத்தரவாதம் அளிக்க வேண்டும். மேலும், இப்போது தொழிற்சாலைகளிலே கூட அடிப்படை சுகாதார வசதிகள் இல்லை. இப்போது நாம் ஊருக்கெல்லாம் சுகாதார வசதிகளைத் தருகிறோம். ஓட்டல் களில் இருக்கின்ற சமையல் கூடங்களிலே வேலை செய்பவர் களுக்கு சுகாதார வசதி இல்லை. இதையெல்லாம் மனதிலே கொண்டு, அதற்கான பொறுப்பை ஏற்று அரசு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



[பிற்பகல் 6.30]

தையல் தொழிலைப் பற்றி ஓரிரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கைத்தறி ஆடைகள் தயாரிக்கும் பணியிலும் அதனை ஏற்றுமதி செய்யும் பணியிலும் பலர் ஈடுபட்டு பெருமளவுக்கு வியாபாரம் நடக்கிறது. அந்தத் தொழிலில் பெருமளவுக்கு இலாபம் வருகிறது. ஆண்டுக்காண்டு பலருடைய பெயரில் அந்தத் தொழிலையே நடத்துவது போலக் காட்டி, அவர்கள் தங்களுடைய லாபத்தைக் குறைத்துக் காட்டிக் கொண்டு வருகிறார்கள். சட்ட பூர்வமாக நாம் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலை இருந்தாலும், அங்கே நடைபெறுகிற கொடுமையை ஓரளவுக்காவது தடுத்தாக வேண்டும். சென்னை போன்ற நகரங்களில் நாள் முழுவதும் பெண்களை மிகக் கடினமான தையல் வேலைக்கு ஆளாக்கி விட்டு, கடைசியில் தினக்கூலியாக ரூ.3 கையிலே கொடுத்து அனுப்புவது என்பது எவ்வளவு மிருகத்தனமான உணர்வு என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு மனிதாபிமான உணர்வோடு பாதுகாப்புத் தரவேண்டும்; என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கைத் தறித் தொழிலாளர்களின் நிலையை நன்கு உணர்ந்தவர்கள். தமிழகம் முழுவதும் சுற்றி அவர்கள் கூட்டு ஆய்வுக் குழுவோடு இருந்து கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினைகளையும் நிலைமைகளையும் நேரடியாகக் கண்டு அறிந்தார்கள். எனவே அதுபற்றிய சட்டம் கொண்டு வருகிறபோது, மாண்புமிகு கைத் தறித் துறை அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் யோசனையையும் ஏற்றுச் செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். அந்த வகையில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, Powerlooms பற்றி இந்த அரசின் தெளிவான கொள்கை என்ன என்பது அறிவிக்கப்பட வேண்டும். இந்தியா முழுவதும் மிகப் பெரிய பிளாக் மார்க்கெட்டையும் ஒரு பெரிய சிக்கலையும் இந்த பவர் லூம்ஸ்தான் உருவாக்கிக் கொண்டிருக் கின்றன. பிற மாநிலங்களைப் பொறுத்த வரையில், பவர் லூம்களுக்கு அதிகமாக லைசென்சை வழங்கிவிட்டு அவர்கள் கைத்தறிக்குரிய அத்தனை சலுகைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய பவர் லூம்களைத் தமிழகத்தில் குறைப்பது என்று முடிவுக்கு வந்தால், அதன் காரணமாக வேறு மாநிலங்கள் அதன் பயனை அனுபவிக்கும் நிலை உருவாகிவிடுகிறது. அனுமதிப்பது என்று வந்தால், நமது மாநிலத்தில் உள்ள நெசவாளர்கள் அதன் காரணமாக அவதி படுகிற நிலை உருவாகிறது. ஆகவே இந்தப் பிரச்சினைக்கு ஒன் சரியான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இந்த அரசு ஒரு முடிவான முடிவுக்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி

ரு முடிவு மேற்கொள்ளும்போது, தமிழகத்திற்கு நன்மை ற்படுகிற முறையில் அது அமைய வேண்டும் என்றும் கேட்டுக் காள்கிறேன்.

இறுதியாக கோ-ஆப்டெக்ஸ் பற்றி ஒன்றை மட்டும் குறிப்பிட ரும்புகிறேன். இன்றைக்கு அதிகமான அளவுக்கு ரிபேட் காடுப்பதன் மூலம் நாம் அந்தத் துறையை வளர்ச்சியடையச் சய்து கொண்டிருக்கிறோம். என்றாலும் அந்தத் துறைக்குத் தவையான விளம்பரம் செய்யப்படாமலிருக்கிறது என்பதையும் ாம் உணர வேண்டும். அதுமட்டுமல்ல. சென்ற ஆண்டு னக்கு விநோதமான அனுபவம் ஏற்பட்டது. கா—ஆப்டெக்ஸ் சார்பில் சென்ற ஆண்டு கைத்தறிக் ண்காட்சியில் மிகப் பெரிய விற்பனை நிலையம் மைக்கப்பட்டது. பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள ணிகள் நாளொன்றுக்கு விற்பனை செய்யப்பட்டது. தாடர்ந்து நான் 4, 5 நாட்களுக்குச் சென்றிருந்தேன். னால், 2 நாளில் அங்கே மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம் ாரணமாக அந்த விற்பனை நிலையம் மூடப்பட்டது. ஒரு க்கத்திலே அந்தத் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் ளுக்கான ஊதிய உயர்வு போன்றவைகளுக்காக நாம் பாராடிக் கொண்டிருக்கும்போது, அதிகமான லாபம் வரும் கையில் விற்பனை நடந்து கொண்டிருக்கும்போது, அங்கே ள்ள தொழிலாளர்கள் நிர்பந்தத்தைக் கொண்டு வந்து ற்பனை நிலையத்தை மூடும்படியான நிலையை உருவாக்குவது ல்லதல்ல என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதோடு, மிழகத்தின் கைத்தறித் துணிகள் இந்தியா முழுவதும் பரிய அளவில் விற்கப்படுகின்றன. அந்த ளவுக்கு கோ-ஆப்டெக்ஸ் விற்பனையில் வற்றியைக் கண்டிருக்கிறது. விற்பனைக்கான வாய்ப்புகள் ன்னும் அதிகமாகப் பெருகிக் கொண்டிருக்கின்றன என்பதை ான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை லையங்களைப் பொறுத்த வரையில், அந்தக் கடைகளில் சய்யப்படும் (Display) பேன்றவைகள் மக்களைக் கவர்ந்து ர்க்கக் கூடியவைகளாக இல்லை. மற்ற தனியார் றுவனங்களோடு போட்டி போடக்கூடிய முறையில் அவைகள் ல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சால்ல வேண்டுமென்றால், சென்னை மயிலையில் உள்ள லஸ் ார்னரில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனை நிலையம் ன்று இருக்கிறது. அதை வந்து பார்வையிட வேண்டும் ன்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே தியாகராய கரில் உள்ள தனியார் நடத்தும் ''இந்தியன் ஹாண்ட் லூம் ஹவுஸ்' ன்ற கைத்தறித் துணிகளையே மட்டும் விற்பனை செய்யும் லயத்தையும் வந்து பார்க்க விரும்புகிறேன். கோ—ஆப்டெக்ஸ்



விற்பனை நிலையத்தில் மிக நல்ல தரமான, மலிவான, மக்களுக்குத் தேவையான துணிகள் விற்கப்பட்டாலும், ஓரளவு நல்ல முறையில் விளம்பரம் இல்லாத காரணத்தால், விற்பனை குறைவாக இருப்பதைப் பார்க்கிறோம். எனவே இதையெல்லாம் வியாபார ரீதியாகச் சிந்தித்து விற்பனையை அதிகரிக்கத் தக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, கைத்தறித் துறையில் பாலியஸ்டர் துணி நெய்வதைப் புகுத்தியதன் மூலமாக நல்ல மாற்றத்தை உருவாக்கியிருப் பதற்காக இந்த அரசைப் பாராட்டி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலக் கொள்கைக் குறிப்பு மற்றும் கைத்தறி, கைத்தறி நெசவாளர் குறித்த கொள்கைக் குறிப்பு ஆகியவைகள் அவையின் முன்னால் வைக்கப்பட்டு விவாதிக்கப் படுகின்றன. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தொழிலாளர் சங்கத்தில் ஈடுபட்டு, தொழி லாளர்களுக்காகப் போராடி, இதற்கு முந்தைய அரசிலும் தொழிலாளர் நல அமைச்சராகப் பணியாற்றி, இப்போதும் தொடர்ந்து தொழிலாளர் நல அமைச்சர் பொறுப்பையேற்று, இன்றைக்கு இந்தக் கொள்கைக் குறிப்பை சமர்ப்பித்திருக் கிறார்கள்.

இவ்விரு துறைகளும் நாட்டிலுள்ள பெரும் பகுதியினருடைய பிரச்சினையைத் தங்கள் கையிலே ஏந்திக் கொண்டிருக்கின்றன என்ற உணர்வோடு செயல்படும் என்று நம்புகிறேன். செயல்பட வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது புதிதாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால் தொழிலாளர் களுடைய பிரச்சினைகளில் எப்படி நடந்து கொண்டது என்பது நமக்குத் தெரிந்த ஒன்றாகும். தொழிலாளர்களின் அடிப்படை உரிமையை—தங்களுடைய பிரச்சினைகளுக்காகப் போராடுகிற உரிமையை—அவர்கள் கோரியபோது அந்தத் தொழிலாளர்களின் பிரச்சினைகளில் அண்ணா தி.மு.க. அரசு எந்தக் கண்ணோட்டத் தோடு அணுகியது என்பதை நான் இங்கே சொல்லத் தேவை யில்லை. அந்தத் தொழிலாளர்கள் தங்கள் உரிமையை வெளிப் படுத்தியபோது, அரசு எத்தகைய போக்கை மேற்கொண்டது என்பதை நாம் அறிவோம். தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடியபோது, இப்போது தொழிலாளர் நல அமைச்சராக இருப்பவரே அப்போதும் அந்தத் துறையின் பொறுப்பை மேற்கொண்டு அதற்கு எதிராகச் செயல்பட்டார். தொழிலாளர் கொள்கையில் இந்த அரசின் போக்கு கண்டிக்கத் தக்கது என்று ஒரு நாடு தழுவிய முறையில் கடையடைப்புப் போராட்டம் துவக்கப்பட்டபோது, இந்த அரசு அப்போது அதை எப்படி அணுகியது; எந்தக் கோணத்தில் அதைப்

பார்த்தது என்பதையெல்லாம் நாம் அறிவோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே வானொலியில் பேசி அதை ஒரு பெரிய சவாலாக ஏற்றுக்கொண்டு, மாநிலம் முழுவதும் அப்போது அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்களைக் கொண்டு அவரவர்களின் தொகுதிகளில் அந்தக் கடையடைப்பு வெற்றி பெறாத நிலையை உருவாக்க என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ அவைகளையெல்லாம் மேற்கொண்டார். டிரான்ஸ்போர்ட் பஸ்களில் போவதற்கு இவர்களுக்குப் பாஸ் கொடுத்து 10, 20 பேர்களை வைத்துக்கொண்டு என்னென்ன காரியங்களை நடத்தினார்கள் என்பதையெல்லாம் நான் சொல்லத் தேவையில்லை. அதெல்லாம் நாடறிந்த உண்மை. அந்தப் போக்கு இப்போது மாற வேண்டும். மாறும் என்று நம்புகிறேன். ஏனென்றால் தொழிலாளர்களின் நலனில் அதிக அக்கறை கொண்ட கட்சிகளை நண்பர்களாகப் பெற்றிருப்பதால், அவர்கள் அருகில் இருந்து அத்தகைய உணர்வுகளை ஊட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். இங்கே அவைக்கு வந்து அறிவுரை சொல்லாமல், அங்கேயே அவர்களைச் சரியான முறையில் நெறிப்படுத்திச் செல்வார்கள் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறேன். அந்த நம்பிக்கை வெற்றி பெறும் என்று கருதுகிறேன். வெற்றி பெறுமா இல்லையா என்பதை இரண்டாண்டுகளுக்குப் பிறகு நாம் மேற்கொள்ள இருக்கும் விவாதத்தின்போது சொல்வதுதான் நியாயம்.

திரு. ப. மாணிக்கம்: தொழிலாளர் சம்பந்தமான கொள் கையைப் பொறுத்தவரையில் எந்த அரசும் ஒரே நிலையில் இருப்பதில்லை. எங்களைப் பொறுத்தவரையில், தொழிலாளர் களின் நலனை அடிப்படையாகக் கொண்டு அதனைக் காக்க எந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய் வோம் என்று எங்கள் சார்பாகச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

[பிற்பகல் 6-40]

திரு. ம. சங்கரலிங்கம்: நான் அதற்கு மாறுபட்ட கருத்தைச் சொல்லவில்லை. உறுதுணையாக இருந்து அவர்களை தொழி லாளர் நலனுக்குப் பக்கத்திலே அழைத்துச் செல்ல வேண்டு மென்ற நல்ல கருத்தைத்தான் நான் சொல்லுகிறேன். எனவே தொழிலாளர்கள் தங்களுடைய அடிப்படை உரிமைகளை எடுத்துச் சொல்லுவதற்குரிய ஒரு நல்ல சூழ்நிலையை நாம் உருவாக்கவேண்டும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நல்லசிவன் அவர்கள் மிக அழகாக இரண்டு பகுதியை எடுத்துச் சொன்னார்கள். தொழிலாளர் நலக் கொள்கை என்று வருகிறபோது என்ன சொன்னோம், போலீஸ் துறை என்று வருகிறபோது என்ன சொல்லப்பட்டது என்பதைப்பற்றிச் சொன்னார்கள். தொழிலாளர்களுக்குப் போராட்ட உணர்வு வராமல் பார்த்துக்கொள்வது போலீஸ்காரர்களுடைய கடமை என்று சொல்லப்பட்டிருக்கிறது போலீஸ் மானியத்தில் என்றார்.



அதே நேரத்தில் தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று தொழிலாளர்களுக்குச் சொல்லப்பட்டது. இதுதான் நான் புரிந்து கொண்டது. இந்த இரண்டும் சேர்ந்து நடந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒன்பது ஆயிரம் நெசவாளர்கள் கடந்த ஒரு மாத காலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் நெசவாளர்கள் அல்ல; மாஸ்டர் வீவர்கள் நடத்துகிற தொழிலில் உள்ள தொழிலாளர்கள் அவர்கள். ஜூன் மாதம் 23 ஆம் தேதி அன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சங்கத்தின் சார்பிலும், கம்யூனிஸ்ட் கட்சியின் சங்கத்தின் சார்பிலும் முதலில் போராட்டம் நடந்தது. முதலிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. தங்களுடைய கோரிக்கைகளை பேச்சுவார்த்தையின் மூலம் வற்புறுத்திவிட்டு தொழிலுக்குப் போனார்கள். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியையும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சேர்ந்த சங்கங்கள் வேலை நிறுத்தத்தைச் செய்தார்கள். பிறகு வேலை நிறுத்தம் செய்யாதவர்களைப் பார்த்து ஐந்தாம் படை என்று சொன்னார்கள். ஆகவே அவர்களும் 29 ஆம் தேதியன்று போராட்டத்திலே இணைந்தார்கள். 29 ஆம் தேதி முதலாளிகள் சங்க அலுவலகத்திற்கு முன்னால் தி.மு.க. தொழிலாளர்—தொடர் உண்ணாவிரதம் இருந்தார்கள். இன்று வரை அந்தப் போராட்டம் நடக்கிறது. நேற்று கூட கோட்டையிலுள்ள அமைச்சர்களுடைய அறையில் இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடந்ததாக அறிகிறேன். அந்தப் பேச்சு வார்த்தைக்கு தொழிலாளர்களின் பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள். முதலாளிகளின் பிரதிநிதிகள் வரவில்லை. கலெக்டர் முன்பு நடந்த பேச்சு வார்த்தையின்போது கூட, முதலாளிகளின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டோம் என்று சொல்லிவிட்டு, பிறகு தனியாக கலெக்டரைக் கண்டு பேசி, தங்களுடைய நிலையைச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள், இந்த நிலையில் தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர் சங்கங்கள்; முதலாளிகள் சங்க அலுவலகத்திற்கு முன்னால் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன. குறிப்பிட்ட காலகட்டத்திலே பிரச்சினை தீராவிட்டால், தொடர் உண்ணாவிரதத்தை நிறுத்திவிட்டு காலவரையின்றி உண்ணாவிரதம் இருப்பார்கள் என்று அறிகிறேன். கம்யூனிஸ்ட், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர் சங்கங்கள் நான்கைந்து தினங்களுக்கு முன்னால், தொழிலாளர்கள் வேலை செய்யக் கூடிய ஆலைகளின் முதலாளிகளின் வீட்டுக்கு முன்னால் போராட்டம் என்று

அறிவித்து, போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். போலீஸ் கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிற தத்துவத்தின்படி, போராட்டம் என்ற உணர்வே அவர்களுக்கு வராதபடி அவர்களை அனுப்பியிருக்கிறார்கள். தொழிலாளர்கள் முதலாளிகளின் வீட்டுக்குக் முன்னால் போராட்டத்தை நடத்தியபோது, ''போராட்டம் என்ற உணர்வே வரக்கூடாது; அது நாட்டிற்கு ஆபத்து'' என்று போலீஸ் மானியத்தில் குறிப்பிட்டிருக்கிற மாதிரி தடையுத்தரவைப் பிறப்பித்து தொழிலாளர்களிடமிருந்த போராட்ட உணர்வை அகற்றியிருக்கிறார்கள். அரசினுடைய கொள்கை இவ்வாறு இருக்கக் கூடாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். நான் நடந்த நிகழ்ச்சியைச் சொல்கிறேன். ஆகவே இந்த நிலையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் போராட்டத்திலே எது நியாயம் என்பதை அரசு அறிவிக்க வேண்டும். தொழிலாளர்களும் சில இடங்களில் அதிகமாகக் கோரிக்கைகளை வைத்துப் போராடலாம். நான் இல்லை என்று சொல்லவில்லை. முதலாளிகளும் தொழிலாளர்களுடைய நியாயமான உரிமைகளை மறுக்கலாம், இந்த இரண்டையும் அறிந்து கொள்ளுகிற அதிகாரிகளைக் கொண்டிருக்கிற அரசு இதில் எது சரியென்பதை அறிவிக்க வேண்டும். அந்தத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 10 ரூபாய் பெறுகிறார்கள். அதுவும் அவர்களுக்கு 30 நாளைக்கும் வேலை கிடைப்பதில்லை. பாவு கிடைக்கவில்லை, அது கிடைக்கவில்லை, இது கிடைக்கவில்லை என்று சொல்லி 15 நாட்களுக்கு மேல் நிரந்தரமாக வேலை கொடுப்பதில்லை. மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் ஊதியம் பெறுகிற அந்தத் தொழிலாளர்கள் மேலும் 50 சதவீதம் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். 50 சதவீதம் முடியாவிட்டாலும், 20 சதவீதம் அல்லது 25 சதவீதமாவது கொடுக்கலாம் என்று பேச்சு வார்த்தையிலே பேசி முடிவெடுக்கலாம். ஆனால் பேச்சுவார்த்தைக்கே முதலாளிகள் வரத் தயாராக இல்லை. ஒன்பது சதவீதம் போனஸ் தருகிறார்கள். எங்கள் பகுதியில் ஓணம் பண்டிகையின்போது போனஸ் தருவார்கள். மதுரையில் சித்திரை திருவிழா நாட்களில் கொடுப்பார்கள். இது வருஷத்திற்கு ஒரு முறை வழங்குவது. இதை 20 சதவீதம் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இருபது சதவீதம் இல்லாவிட்டாலும், 12 அல்லது 15 சதவீதமாவது தரலாம் என்று பேச்சுவார்த்தையில் முடிவு செய்யலாம். ஆனால் முதலாளிகள் பேசுவதற்கே வரமாட்டேன் என்கிறார்கள். பேச்சு வார்த்தைக்கு வரமாட்டேன் என்று சொல்லும் முதலாளிகளுக்குப் பலத்த பாதுகாப்பு. ஆனால் தொழிலாளர்களுக்குப் போராட்டம் என்ற உணர்வே வராத அளவிற்குச் சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்கள், இப்படிப்பட்ட நிலைமை இருக்கலாமா? பேச்சுவார்த்தைக்கு வராவிட்டால், உங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க முடியாது என்று முதலாளிகளிடம் அரசு சொல்ல



வேண்டாமா? கன்னியாகுமரியிலிருந்து ஐந்நூறு மைல்களுக்கு அப்பால் இருக்கும் சென்னைக்கு எல்லாத் தொழில் சங்கத்தையும் சேர்ந்த பிரதிநிதிகளும் வந்திருக்கிறார்கள். அவர்கள் அங்கு பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஒன்றரை மாதமாகப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. இப்படி பிச்சை எடுத்து அதிலே வரும் பணத்தைக் கொண்டு கஞ்சி காய்ச்சிக் குடித்துவிட்டு அதிலே உள்ள மிச்சத்தை தங்களுடைய வீட்டுக்கும் கொண்டு போகிறார்கள். அந்த அளவிற்கு வறுமையில் உள்ள தொழிலாளர் பிரதிநிதிகள் போனஸ் கேட்டு பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் முதலாளிகள் வரவில்லை. வராவிட்டாலும் தங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்குமென்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது. இந்த நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—தொழிலாளர்களுக்காகப் போராடிய அவர், அதற்காகச் சிறை சென்றிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்—பொறுப்பேற்றிருக்கிற காலத்திலே இருக்கலாமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தொழிலாளர் நலத் துறையைப் பற்றி அடுத்த ஆண்டு விரிவாகப் பேச வேண்டுமென்ற தத்துவத்தின்படி இதோடு விட்டுவிடுகிறேன்.

அடுத்தாற்போல், கைத்தறித் துறையைப்பற்றிப் பேச விரும்புகிறேன். அத்துறையின் அமைச்சர் அவர்கள் அந்தப் பொறுப்புக்குப் புதியவர். ஆனாலும் பல நல்ல அறிவிப்புக்களைக் கொடுத்திருப்பதற்காக நான் அவருடைய நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறேன். அந்தத் துறையிலே இலட்சக்கணக்கான மக்கள், அதாவது ஏறக்குறைய 30 இலட்சம் மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தத் துறை சீராக நடைபெற நாம் செய்கிற முயற்சியெல்லாம் இந்த நாட்டினுடைய பொருளாதார நிலையை ஊக்குவிக்கிற முயற்சியாகும். நான் ஏற்கெனவே சொன்னேன். ஒன்பதாயிரம் தொழிலாளர்கள், நெசவாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சருக்கு மட்டுமல்ல. நெசவாளர்களின் துறையைப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் அவர்களும் போலீஸ் துறையை வைத்திருக்கக் கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதிலே அக்கறை காட்டித் தீர்க்க வேண்டும்.

கைத்தறித் துணிகள் எல்லா இடங்களிலும் இப்போது தேங்கிக் கிடப்பதாகச் சொன்னார்கள். அமைச்சர் அவர்களும் அதை ஒப்புக் கொள்கிறார்கள். எனக்குக் கிடைத்த புள்ளி விவரங்களின்படி, தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் 5 கோடி ரூபாய் அளவில் துணி தேங்கிக் கிடப்பதாக அறிகிறேன். கோவாப்டெக்சிலிருந்து இதற்கு முன்னால் 9 சதவீதம் லாபம் கொடுத்து வாங்கியதாகவும், இப்போது அதைக் குறைத்து 3 சதவீதம் லாபம் கொடுத்து வாங்குவதாகவும், தகவல்

கிடைத்திருக்கிறது. அது உண்மையானால், இப்படி இலாபத்தைக் குறைப்பதால் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட முடியாத நிலையில் வந்துவிடும் என்பதைச் சொல்லி, தேங்கியுள்ள துணிகளை விற்பனை செய்வதற்காக 25 சதவீதம் ஊக்க போனஸ் அல்லது ரிபேட்டைக் கொடுத்து விற்பனை செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதெல்லாம் வெளிநாடுகளுக்குக் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்கிறோம். உள்நாட்டில் எவ்வளவு செலவழியுமோ அவ்வளவுதான் செலவழியும். ஒரு வேட்டி 25 ரூபாய் என்றால், 3 வேட்டி வாங்க வேண்டியவர் கூட ஒரு வேட்டியைத்தான் வாங்குவார். இது பொருளாதாரத் தத்துவம். இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். வாங்குபவர்கள் தங்கள் சக்தியைப் பார்த்துக் கொண்டு போவார்கள். ஒரு வேட்டி 15 ரூபாய் இருக்குமென்று போவார்கள். 12 ரூபாயாக இருந்தால் 4 வேட்டியை வாங்கு வார்கள். 25 ரூபாயாக இருந்தால் ஒரு வேட்டியோடு வந்து விடுவார்கள். இதுதான் பொருளாதாரத் தத்துவம். வேட்டியின் விலை அந்த அளவுக்கு 25 ரூபாய் என்ற அளவிற்கு ஏறிவிட்டது. விலையேற்றத்திற்கு நாம் காரணமல்ல. அந்த ஆராய்ச்சியில் நான் போக விரும்பவில்லை. இப்படி விலை ஏறக்கூடிய நேரத்தில், பஞ்சை உற்பத்தி செய்கிறவர்களுக்கு அதிக லாபம் இடைக்கிறதா என்றால், இல்லை. இதிலே இடையிலே உள்ள தரகர்கள்தான் ஆதாயம் அடைகிறார்கள். வியாபாரத்தைப் பொறுத்த வரையில், உற்பத்தியாளருக்கும் பலன் இல்லை, உபயோகிப்பாளருக்கும் பலன் இல்லாமல், இடைத்தரகர்கள்தான் லாபம் அடைகிறார்கள். இது ஒரு பெரிய பிரச்சினை. இதை விவரமாக விவாதிக்க நேரம் இல்லை. ஆகவே இவற்றை யெல்லாம் சிந்தித்துப் பார்த்துச் செயல்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். உள்நாட்டிலே வாங்குகிற சக்தி இல்லை என்பதால், துணிகளை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். சிறப்பாக ஏற்றுமதி செய்ய வேண்டிய முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டியிருக்கிறது. தேவையானால் மாண்புமிகு அமைச்சர் அவர்களே வெளிநாடுகளுக்குச் சென்று ஆர்டர்களை வாங்கி வந்து ஏற்றுமதி செய்தால், இங்கே உள்ள தேக்க நிலையைக் குறைக்க முடியும். நாம் இரண்டு வழிகளில் ஏற்றுமதி செய்கிறோம். ஒன்று, அரசு நியமிக்கக் கூடிய வாரியத்தின் வழியாக ஏற்றுமதி செய்கிறோம். மற்றொன்று தனியார் ஏற்றுமதி செய்கிறார்கள். தனியார் ஏற்றுமதி செய்கிற போது ஏற்படுகிற தவறுகளின் காரணமாக, அரசு செய்யும் ஏற்றுமதி பாதிக்கப்படுகிறது. ஆகவே தனியார் அனுப்பும் துணிகளையும் அரசே கொள்முதல் செய்து அரசுத் துறையில் உள்ள வாரியத்தின் வழியாக அனுப்பினால், நலமாக இருக்கும். எந்த மாதிரியைக் கொடுத்து ஆர்டர் வாங்கினார்களோ அதன் படியே ஏற்றுமதி செய்தால் நிரந்தரமான வெளிநாட்டுச் சந்தை நமக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



[பிற்பகல் 6.50]

இப்போது கார்மென்ட்ஸ் என்று சொல்கிறார்கள். அந்த ஆடைகள் ரொம்ப நல்ல முறையிலே வெளிநாட்டிற்கு போய்க் கொண்டிருக்கின்றன. நாளைக்கு ரூ. 3 கூலி கொடுத்து நிறைய பெண் தொழிலாளர்களை 12 மணி நேரம்கூட வேலை வாங்கு கிறார்கள். அந்த ஆடைகளை நிறைய தைத்து அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கோடிக்கணக்கான ரூபாய்களை சம்பாதித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள் கிறேன். மாஸ்டர் வீவர்ஸ் 9 ஆயிரம் தொழிலாளர்களைப் பட்டினி போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு முதலாளியின் வீட்டிற்கும் சென்று பார்த்தால் இது தெரியும். அவர்கள் அமெரிக்காவிலேயிருந்து சம்பாதித்து விட்டு வந்து வீடுகட்டி யிருப்பதைப் போல இருக்கிறது. ஒரு தொழிலை வைத்து அவ்வளவு பணம் சம்பாதித்திருக்கிறார்கள். 'அன் அக்கவுண்டட் மணி' நிறைய வைத்திருக்கிறார்கள். அவ்வளவு பணம் வைத்திருப் பவர்கள் தொழிலாளர்களுக்குக் கொடுக்கத் தயாராக இல்லை. அதை உணர்ந்து அரசு செயல்பட வேண்டும் என்று குறிப்பாக இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். கைத்தறித் துணிகள் எல்லாம அங்கே போவதற்குக் காரணம் இருக்கிறது. இந்தியாவிலே விலை ஏறியிருக்கிறது என்று நாம் சொல்கிறோம். உண்மையிலேயே நாம் தான் குறைந்த விலைக்கு உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். உலகத்திலேயே நாம் தான் குறைந்த விலை யில் உற்பத்தி செய்கிறோம். இங்கே சட்டை ரூ. 7-க்கு உற்பத்தி யாகிறது. அங்கே அதற்கு விலை அதிகமாகக் கிடைக்கிறது. உற்பத்தியாளர்கள் சட்டை தைத்து விலை ரூ. 30-க்குக் கொடுக் கிறார்கள். பிறகு அதன் விலை ரு. 70, 80-க்கு விற்கிறார்கள். அதே துணி வெளிநாடுகளில் ரு. 200க்குப் போகிறது. இந்த நிலையில் அரசே மேற்கொண்டு அந்த விலைக்கு விற்று லாபத்தை உற்பத்தி செய்கின்ற தொழிலாளர்களுக்கு, இங்கே இருக்கின்ற நெசவாளர்களுக்கு கொடுக்கின்ற அளவில் ஒரு வழிவகை செய்யவேண்டும். இண்டர்மீடியரீஸ் என்று சொல்லக்கூடிய இடைத் தரகர்கள் அதிகமாக சம்பாதித்துக் கொண்டு போக விடக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நூல் கட்டு 1975-76 லே இருந்த விலைக்கும் இப்போதுள்ள விலைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. 1975-76-ல் 20ஆம் நெம்பர் நூல் ரு. 69. இப்போது ரு. 97 என்று விற்கிறது. 40ஆம் நெம்பர் நூல் ரு. 79-க்கு இருந்தது, இப்போது ரூ. 143. 60ஆம் நெம்பர் நூல் ரு. 84-க்கு இருந்தது, இப்போது ரூ. 191, 80ஆம் நெம்பர் நூல் ரு. 154-க்கு இருந்தது, இப்போது ரூ. 273. 100ஆம் நெம்பர் நூல் ரு. 219-க்கு இருந்தது, இப்போது ரூ. 339. இப்படி விலை ஏறி இருக்கிறது. இந்த அளவுக்கு

விலை ஏறியிருக்கிறது. இந்தத் துணியை நெசவு செய்கின்ற தொழிலாளி இருக்கிறானே அவன் வீட்டிலே இரண்டு வேஷ்டி இருக்கிறதா என்று பார்த்தால், அவன் உடுத்துவதற்கு இரண்டு வேஷ்டி இருக்காது. அவன் பணம் கொடுத்து வாங்க முடியாத நிலையில் இருக்கிறான். அப்படிப்பட்ட நிலையை மாற்றுவது எப்படி என்று பார்க்க வேண்டும். ஆலை முதலாளிகள் எல்லாம் இவ்வளவு பெரிய கட்டிட வசதிகளுடன் இருக்கிறார்கள். டெல்லியிலே ஒரு ஆபீஸ், இன்னும் வேறு இடங்களிலே ஆபீஸ் என்று நிறைய இடங்களில் ஆபீஸ் வைத்திருக்கிறார்கள். நிறைய பணம் சம்பாதிக்கின்றார்கள். அப்படி சம்பாதித்து வைத்துக் கொண்டிருப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரம் இல்லை. அவர்கள் இஷ்டம் போல் வேலை கொடுக்கிறார்கள். நாம் கூட்டுறவு ஆலைகள் வைத்திருக்கிறோம். அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கிறோம். நம் நாட்டிலே அரசாங்கப் பொறுப்புக்கு உட்பட்ட கூட்டுறவு ஆலைகள் இருக்கின்ற காரணத்தினாலேதான, இந்த விலைக் காவது நூல் கிடைக்கிறது. எனவே இந்தத் துறையிலே அரசு எவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு எடுக்க வேண்டும். எவ்வளவு கட்டுப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டும். தொழிலாளர்களுக்கு நன்மைகள் எந்தெந்த அளவுக்குப் பண்ண முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இந்த நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளும் அரசுக்குப் பின் பலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். முதலாளிகளுக்கும் ஆதரவாக, தொழிலாளிகளுக்கும் ஆதரவாக இருக்க முனைந்தால், அதை நீண்ட நாட்கள் நம்மால் பொறுக்க முடியாத நிலை ஏற்படும் என்பதைச் சொல்லி இந்த சந்தர்ப் பத்தில் அதிக நேரம் எடுத்துக்கொள்ள முடியாது என்று எண்ணி என் உரையை முடிக்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர்கள் சொன்ன கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் நான் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலை நிறுத்தம் அதிகமாக நடத்தப்பெற்று, 'மேன் டேஸ்' அதிகமாக இழக்கப் பட்டிருக்கிறது என்பதைப் பற்றி எல்லா உறுப்பினர்களும் கவலை தெரிவித்திருக்கிறார்கள். 1979ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம் நடந்த காரணத்தினால், பஞ்சாலைத் தொழி லாளர்கள் 1¼ லட்சம் பேர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந் தார்கள். 55 நாட்கள் வேலை நிறுத்தத்தில் இருந்தார்கள். அதுதான் மிகப் பெரிய வேலை நிறுத்தமாக இருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலை நிறுத்தம் நடக்கிறது என்ற காரணத்திற்காக நாங்கள் அதிலே கோபம் கொள்வதில்லை. மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் அதற்காக ஆத்திரம் கொள்ளக்கூடாது என்று சொல்கிறார்கள். தொழிலாளர்



களுக்கு வேலை நிறுத்தம் செய்யும் உரிமை உண்டு. தொழி லாளர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் சலுகைகளைப் பெற முயற்சித்து, பின்னால் அந்தச் சலுகைகள் கிடைக்கவில்லை என்றால், அவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபடுகிறார்கள். அப்போது அரசு இரு சாராரையும் அழைத்து வைத்து பேச்சு வார்த்தை நடத்தி, எப்படியாவது ஒரு சமரசம் அவர்களிடையே கொண்டுவர வேண்டுமென்ற முயற்சியிலே ஈடுபடுகிறது. அந்த முயற்சியிலேதான் தமிழக அரசு தீவிரமாக ஈடுபடுகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரண்டொரு முறை கூட்டி வைத்துப் பேசி யிருக்கிறார்கள். டாலு கார்டெண்ட் விஷயத்திலும் மாண்புமிகு முதல்வர் அவர்களே அழைத்து வைத்துப் பேசினார்கள். அதற்கு என்று ஏதாவது ஒரு சட்டத் திருத்தம் புதிதாகக் கொண்டு வரலாமா என்று தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையிலும்கூட, லேபர் ஆபிசர், அசிஸ்டெண்ட் லேபர் கமிஷனர், டீ.சி.எஸ்., ஜாயிண்ட் கமிஷனர், கமிஷனர் என்று விட்டுவிடாமல் நானும் அழைத்துப் பேசியிருக்கிறேன். இன்னும் ஒரு வாரத்திற்குள் நிரம்ப நிறுவனங்களை எல்லாம் அழைத்திருக்கிறேன். பேசி எப்படியாவது சுமுகமான உறவுகளைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான். மாண்புமிகு அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதுபோல, நேற்றையதினம், கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தமாகப் பேசவேண்டுமென்று ஆசைப்பட்டு அதற்காகக் காத்துக்கொண்டிருந்தோம். தொழி லாளர்கள் எல்லாம் அங்கேயிருந்து வந்திருக்கிறார்கள். எப்படி வந்தார்களோ? அவர்கள் கடன் வாங்கி வந்தார்களோ என்னவோ. முதலாளிகளின் பிரதிநிதிகள் யாரும் வரவில்லை. எங்களுக்கு எப்படி ஆத்திரமாக இருக்கும் என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டியதாக இருக்காது. ஒருவேளை ரயில் லேட்டாக ஆகிவிட்டதோ, அதனாலே வரவில்லையோ என்று 11 மணிக்குக் கூட்டம் என்று இருந்ததை 3 மணிக்கு மாற்றி வைத்தோம். அவர்கள் வருவார்கள் என்று 3 மணியிலிருந்து 4½ மணி வரையில் காத்துக் கொண்டிருந்தோம். ஆனால் அவர்கள் வரவில்லை. பிறகு கலெக்டருக்குப் ஃபோன் செய்து, நடந்ததைச் சொல்லி விரைவிலே பிரச்சினையை முடிக்க வேண்டும் என்று சொல்லிச் செய்திருக்கிறேன். அநேகமாக அந்த முயற்சிகள் வெற்றிபெற்றுவிடும். அதாவது இரண்டு, மூன்று தினங்களுக்குள் நன்றாக நடந்துவிடும். வெற்றிபெறுவோம் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, குறிப்பாக மினிமம் வேஜஸ் பற்றி வலியுறுத்தி னார்கள். அகில இந்திய மகாநாட்டிலே அது வலியுறுத்தப் பட்டது. இந்த அரசைப் பொறுத்த வரையிலே, எவ்வளவு அதிகமான தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க

முடியுமோ அவ்வளவு அதிகமான தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்துக்கொண்டு வருகிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் விரைவில் முடிக்க விரும்புகிறேன். படிக்க விரும்பவில்லை. 6 தொழில்களுக்கு குறைந்தபட்சம் ஊதியம் நிர்ணயிப்பதற்காக ஷெட்யூலில் அதைச் சேர்த்திருக்கி றோம். 3 தொழில்களுக்கு புதிதாகவே குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்திருக்கிறோம். 8 தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை மாற்றி அமைத்திருக்கிறோம். இன்னும் மிக விரைவாகச் செயல்பட விரும்புகிறோம். என்னைப் பொறுத்த வரையில், இது கூட போதாது என்றுதான் கருதுகிறேன். இன்னும் வேகமாக ஷெட்யூலில் இருக்கக்கூடிய தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் கொண்டுவருவோம். ஷெட்யூலில் இல்லாத தொழில்களுக்கு ஷெட்யூலில் சேர்த்துக்கொண்டு வருகிறோம். அங்கெல்லாம் கொண்டுவர முயற்சி செய்ய இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காண்ட்ராக்ட் லேபர்பற்றிச் சொன்னார்கள். காண்ட்ராக்ட் லேபர் ஏர்படுத்தி முடிக்கப்படவேண்டிய ஒன்று. இந்த 2½ ஆண்டுக்கால அனுபவத்திற்குப் பின்னால், காண்ட்ராக்ட் லேபரை எவ்வளவு விரைவிலே ஒழிக்க வேண்டுமோ அதைச் செய்யும். இந்த அரசு அட்வைசரி போர்ட் சப்-கமிட்டி நியமித்திருக்கிறது. பல கமிட்டிகள் இன்ஜினியரிங், சிமெண்ட், டெக்ஸ்டைல் தொழில்கள் இவைகளைப் பரிசீலித்து வருகிறது. டெக்ஸ்டைல்ஸைப் பொறுத்த ரிப்போர்ட் வந்திருக்கிறது. அட்வைசரி போர்ட் இதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அவர்கள் அதைப் பரிசீலனை செய்து நம்முடைய அரசுக்கு அனுப்பிய பிறகு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அந்த அட்வைசரி போர்டில்கூட உறுப்பினர்கள் மேலும் இருவர் இடம் பெறவேண்டுமென்று விரும்பிய காரணத்தினால், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை முடியும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பொதுவாக இந்த அரசு தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு தரக்கூடிய சட்டங்கள் நிரம்ப கொண்டுவந்து விடவேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்பு தருவதற்காக சட்டங்கள் நிரம்ப கொண்டுவந்து அதை 'எபக்டிவ்' ஆக இம்பிளிமெண்ட் செய்ய வேண்டும் என கருதுகிறது. இந்த அரசு அதைத் திறமையாகச் செயல்படுத்த வேண்டும் என்பதிலே அக்கறை கொண்டுள்ளது. நான் டெல்லி மகாநாட்டில் நிரம்ப சட்டங்கள் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். பல்வேறு சட்டங்கள் கொண்டு வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள்



எல்லாம் இருக்கின்றன. கடைசி நேரத்தில் திருத்தங்கள் செய்து, அது பேப்பரில் வந்துள்ளது. 'மினிட்ஸ் ஆப் தி மீட்டிங்' வந்த பிறகு அதைப்பற்றிப் பேசுவது நல்லது என்று சொல்லிக் கொள்கிறேன். தொழிலாளர்கள் சட்டத்தைப்பற்றிப் பேசும்போது, ஒரு வார்த்தை விட்டுவிட்டாலும்கூட, அதற்கு வேறு அர்த்தம் வந்துவிடும். பொதுவாக தொழிலாளர்கள் முன்னேற்றத்தில் அக்கறை கோண்ட அரசு இது. ஸ்டாண்டிங் ஆர்டர் ஆக்டிலே, பேமெண்ட் ஆப் கிராஜுவிடி ஆக்ட்லே எல்லாவற்றிலும் பல திருத்தங்கள் கொண்டுவருவதற்கு மத்திய அரசு இந்த மகாநாட்டைக் கூட்டியது. மிக்க நல்ல வேளையில் இந்த மகாநாட்டைக் கூட்டினார்கள். அதற்தாக மத்திய அரசுக்கு என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு கருத்தையும் சொன்னேன். இங்கே சட்டத்தைத் திருத்திக்கொண்டிருங்கள். அதே நேரத்தில் மாநில அளவில் வருகின்ற சட்டத் திருத்தத்திற்கு விரைவிலே 'கன்கரன்ஸ்' அளிக்கவேண்டுமென்று மத்திய அரசு தொழிலாளர் அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டேன். அவர்கள் ''அதற்கென்ன விரைவிலே அனுப்பி வைத்து விடுகிறோம்'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 7.00]

இந்த அரசைப் பொறுத்தவரையில் முக்கியமாகக் கொண்டு வந்துள்ள இரண்டு சட்டங்களைப் பற்றி நான் இங்கே சொல்லியாக வேண்டும். ஒன்று, கேஷுவல் லேபர் என்று சொல்லுகிறார்களே, அவர்களைப் பற்றியதாகும். 5, 6, 7 ஆண்டுகளுக்கு கேஷுவல் லேபராகவே அவர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஒரு நாள் வேலையில்லை என்று சொல்லி அனுப்புகிறார்கள். அதனால் அவன் தவிக்கிறான். 17, 18 வயதில் கேஷுவல் லேபராக வேலைக்குப் போனால், 25 வயதாகியும் பெர்மனன்ட் ஆகாமல், என்றைக்கு வேலை போகுமோ என்று நினைத்து, கஷ்டப்படும் தொழிலாளி அவன். அப்படிப்பட்ட தொழிலாளியை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பெர்மனன்ட் செய்ய வேண்டுமென்று 'பில்' கொண்டு வந்திருக்கிறோம். முதலமைச்சரின் கையெழுத்தாகிவிட்டது. மத்திய அமைச்சருக்கு அனுப்ப இருக்கிறோம். மத்திய அமைச்சர்கூட, அதை இதழில் படித்துவிட்டு, ''Confirmation after two years! A good Bill, Mr. Raghavanandam'' என்று சொன்னார்கள். 7, 8 ஆண்டுகள் தவித்து, கடைசியில் பெர்மனன்ட் ஆகுமா என்று சந்தேகப் பட்டுக்கொண்டு, ஒரு நாள் வேலையை விட்டுப்போக வேண்டிய நிலைமையில் இருப்பவர்கள் அந்தத் தொழிலாளிகள். அவர்கள் நலனுக்காக புரட்சித் தலைவர் ஆட்சி இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. அதைப்போல தொழிலாளர்கள் சஸ்பென்ஷனில் இருந்தால், ஊதியம் கொடுப்பதற்கான விதிமுறை, ஸ்டேன்டிங் ஆர்டரில் இருந்தால்தான

அவர்களுக்குத் தருவார்கள். மாடல் ஸ்டேண்டிங் ஆர்டரில் எப்படிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதை எடுத்து யாரும் 'இன்கார்ப்பரேட்' செய்து கொள்வதில்லை. சஸ்பென்ஷனில் இருக்கும் தொழிலாளிக்கு சில இடங்களில் குறைவாகக் கொடுக்கிறார்கள். சில இடங்களில் ஒன்றுமே கிடைக்காமல் இருக்கிறது. இப்போது திருத்தியுள்ள சட்டப் பிரகாரம் முதல் 90 நாட்களுக்கு 50 சதவிகிதமும், 90க்கு மேல் 180 நாட்கள்வரை 75 சதவிகிதமும், 180 நாட்களுக்கு மேல் ஆகி விட்டால் முழுச்சம்பளமும் கொடுக்க வேண்டுமென்று செய்திருக் கிறோம். முதலமைச்சரின் கையெழுத்தாகிவிட்டது. அது மத்திய அரசுக்குப் போக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், தொழிலாளர்களின் நன்மைக்காக சட்டங்களைக் கொண்டுவந்து செயல்படுத்துவோம். 'இம்ப்ளிமென்டேஷன் மெஷினரி'— அதைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். அந்த மெஷினரியைத் தீவிரமாக்கி, காரியங்கள் ஒழுங்காக நடக்க முயற்சிகள் செய்வோ மென்று சொல்லிக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இது போதாது என்று சொல்லி, தனியாக ஒரு குழு அமைத்திருக்கிறோமென்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். சட்ட திட்டங்களுக்கு மாற்றம் குறித்து பரிந்துரை செய்வதற்காக ஒரு குழு அமைத்திருக்கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் குழு,

Dafrt Bill for the repeol and rebenactment of the Tamil Nadu Shop nd Establishment Act, 1947

Draft of the Tamil Nadu Establishments (Conferment of Permanent Status to Workmen) Bill 1977;

The Payment of Wages Act, 1936;

Employment of Children Act, 1938;

The Minimum Wages Act, 1948;

The Tamil Nadu Catering Establishments Act, 1958;

The Tamil Nadu Industrial Establishments (National and Festival Holidays) Act, 1958;

The Payment of Bonus Act, 1965;

The Tamil Nadu Labour Welfare Fund Act, 1972;

The Equal Remuneration Act, 1976;

The Employees State Insurance Act, 1948.



ஆகியவற்றில் தன்னுடைய பரிந்துரையை அரசுக்குக் கொடுத்திருக் கிறது. அரசு அதைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கைகளை எடுக்கும். ஒன்று என்னால் சொல்ல முடியும். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் அதிகமாக புதிய சட்டங்களை தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காகக் கொண்டு வந்தார்கள் என்பதை என்னால் நிலைநிறுத்த முடியும். அப்படிக் கொண்டு வந்த சட்டங்களைச் உண்மையாகச் செயல் படுத்துவதற்கு, We want to go all out to impl ment it. எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு பணியாற்ற வேண்டும். அதற்குத் தொழிற் சங்கத் தோழர்களும், எதிர்க் கட்சியில் உள்ள உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இருக்கக்கூடியவர்கள், தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள மதுரையில் உள்ள டி. சி. எல். இடம்தான் வர வேண்டும். இப்போது திருநெல்வேலியில் ஒரு டி. சி. எல். போடுவதாக இருக்கிறோம். அதேபோல சேலம் ஏரியாவில் இருக்கக் கூடியவர்கள் கோயம்புத்தூர் டி. சி. எல்.—இடம்தான் போக வேண்டும். இப்போது சேலத்தில் ஒரு டி.சி.எல். போடுவதாக இருக்கிறோம்.

ஏற்கெனவே தொழிற்சாலையில் வேலை செய்கிறாரா என்பதற்கு அடையாளக் கார்டு இல்லாமல் இருந்தது. நாங்கள் தொழிற்சாலை விதிமுறைகளை மாற்றி, ஒவ்வொரு தொழி லாளருக்கும் டைம் கார்டு இருக்க வேண்டுமென்று சட்டம் இயற்றியிருக்கிறோம். இப்போது சொன்னார்களே, வரவில்லை என்று—கூப்பிட்டால் வரவில்லை என்று— அதற்கான சம்மனிங் பவரை. கன்சிலியேஷனுக்குக் கூப்பிடுவதற் கான சம்மனிங் பவரை லேபர் ஆபீசர்களுக்குக் கொடுக்க சட்டங்களைத் திருத்த இருக்கிறோமென்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அன்-ஆர்கனைஸ்டு லேபருக்காகச் சட்டம்கொண்டு வந்து, அவர்களுக்கு உதவி செய்ய இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் அருமையான கருத்துக்களைச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நல்ல யோசனைகளை மனதிலே வைத்து, அரசு நல்ல பெயர் வாங்கு மளவிற்குக் காரியங்களைச் செய்யுமென்று தெரிவித்துக் கொள் கிறேன். நன்றாக வேலை செய்கிறார்கள். தொழிலாளர்களின் நன்மைக்காகச் செய்கிறார்கள். எந்தத் தொழிற் சங்கப் போராட்டத்திலும் தலையிட்டு, உடனடியாக அதைத் தீர்க்க முயற்சி செய்கிறார்கள் என்ற பெயரை எதிர்க்கட்சிகளிடமிருந்து வாங்கும் அளவிற்கு இந்த அரசு காரியங்களைச் செய்யுமென்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில நெசவாளர்களின் துயர் துடைக்கவும், அவர்களின் எதிர்கால நல்வாழ்விற்காகவும் பல அறிய கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நெசவாளர்களின் நல்வாழ்விற்காகப் புதிய கருத்துக்கள் ஏதாவது கொடுத்திருக்கிறார்களா என்று பார்க்கும் போது, பழைய கருத்துக்களையேதான் இப்போதும் சொல்லியிருக்கிறார்கள். அரசின் கொள்கைப்படி, நெசவாளர்களை கூட்டுறவு இயக்கத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று பெரு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். தனியார் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கும் நெசவாளர்கள் கடினமான வாழ்க்கையைக் கொண்டிருப்பதோடு, பாதுகாப்பற்று இருக்கிறார்கள் என்ற கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்திக் கூறினார்கள். தனியார் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற நெசவாளர்கள், கூட்டுறவுத் துறையில் இருக்கிற நெசவாளர்களுக்குக் கிடைக்கும் பலன்களைப் பார்த்து, தங்களுக்கும் அப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்கிக்கொள்ளலாமா என்ற எண்ணத்தின் அடிப்படையிலே என்னிடம் மனுச் செய்திருப்பதை நான் அறிகிறேன். அவர்களையும் கூட்டுறவுத் துறைக்குக் கொண்டு வருவதோடு, தனியார் துறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கிற நெசவாளர்களுக்குச் சரியான பாதுகாப்பு கொடுக்க அரசு வழி வகைகளை எடுத்துக் கொண்டிருக்கிறதென்பதை நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெசவாளர்களுக்கு நிலையான வேலையில்லை, நூல் கிடைப்பதில்லை என்ற குறையைக் கூறினார்கள். இந்தக் குறையைத் தீர்ப்பதற்காக அரசு மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டு, மாவட்டத்திற்கு ஒரு நூற்பாலையை உருவாக்கத் திட்டமிட்டு, 2 நூற்பாலைகளை ஏற்கனவே தொடங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நூற்பாலைகளை புதுக்கோட்டை மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும் நிறுவ உத்தேசித்துள்ளது. இதுபோல் தனியார்களும் நூற்பாலைகளை உருவாகக் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 7—10)

ஆகவே தொடர்ச்சியாக குறைந்த விலையில் நிலையான விலையில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க ஆதரவான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். அதைப் போல தேக்கத்தைப்பற்றி இங்கே அக்கறையோடு ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி பேசும்போது, 3 சதவிகிதத்திலே கொள்முதல் செய்கிறார்கள். அது பற்றாது என்று கூறினார். 2, 3 வாரத்திற்கு முன்புள்ள நிலையைப்பற்றி மாண்புமிகு



உறுப்பினர் பேசினார். ஆனால் தற்சமயம் அதற்கென்று ஒ
குழு அமைக்கப்பட்டு 9 சதவிகிதத்திலே கொள்முதல் செ
கிறோம் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் தி
இராமமூர்த்திக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது மாநிலத்
கைத்தறித் துறையைப்பற்றி, அதன் முன்னேற்றத்தைப்பற்
வெளிநாட்டவர்களும் அறியும்படி அவற்றை வெளிநாட்டு
ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகளைக் கையாள வேண்
மென்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்க
அதன்படி மதுரை, சேலம் முதலிய இடங்களில உற்பத்தி செ
கின்ற துணி ரகங்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்
கொண்டிருக்கிறோம். இன்னமும் வெளிநாடுகளிலே கைத்தறி
துணிக்கு கிராக்கி இருப்பதால், இந்தத் துணிகளையெல்லா
சென்னையிலிருந்து ஏற்றுமதி செய்வதை விட தூத்துக்கு
துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டால் நெல்லை
இராமநாதபுரம், கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களிலுள்
நெசவாளர்களுக்கு அது உற்சாகத்தைக் கொடுப்பதோடு உற்பத்
யையும் அதிகரித்து வெளிநாட்டிலும் இருக்கின்ற கிராக்கி
ஓரளவுக்கு பூர்த்தி செய்யக்கூடிய நிலையை உருவாக்கிக் கொடு
பார்கள் என்கிற எண்ணத்தில், தூத்துக்குடி துறைமுகத்தி
இருந்து ஏற்றுமதி செய்ய வேண்டிய ஆலோசனையை இந்த அ
எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தி
கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நெசவாளர்களின் குடும்பத்திலே அதன் தலைவ
இறந்துவிட்டால், அவர்களுக்கு இதுவரை 500 ரூபா
கொடுத்து வந்ததை 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்த இந்த அ
திட்டமிட்டிருக்கிறது. தனியார் துறையிலே வேலை பார்க்கின்
நெசவாளர்களுக்கோ தனிப்பட்ட முறையில் தொழிலை நடத்தி
கொண்டிருக்கும் நெசவாளர்களுக்கோ இது கொடுக்கப்படு
தில்லை. கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற நெசவாளர்களுக்கு
குறிப்பாக அவர்களில் இன்சூரன்ஸ் செய்து கொண்ட நெசவாள
களுக்கும் மட்டுமே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது
நெசவாளர்கள் அவர்களுடைய ஊதியத்திலிருந்து 6 பைசாவை
சந்தா தொகையாகக் கொடுக்கிறார்கள். அரசு ரூபாய்க்கு
பைசா வீதம் மானியமாகக் கொடுக்கிறது. அதோடு அரசு
சதவிகிதம் வட்டியையும் கொடுத்து அவர்களுக்கு உதவி செ
கிறது. அவர்கள் இறந்துவிட்டால், காப்புத்தொகையாக அவ
களுடைய குடும்பத்திற்கு 3 ஆயிரம் கிடைக்கிறது. 66 ஆயிர
நெசவாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகிறார்கள். இந்
எண்ணிக்கையை கூட்டித் தர நெசவாளர்கள் மிகவும் ஆர்வ
தோடு இருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தி
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதுபற்றி இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்கள். அதிலே தற்சமயம் அறிவிக்கப்பட்ட காலத்திற்கும், நடைமுறைக்கு வருகின்ற இன்றைக்கும் உள்ள சூழ்நிலையில் கட்டடம் கட்டுவதற்குரிய தொகையை கூட்டிக் கொடுத்தால்தான், கட்டடத்தை முடிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நாம் நேரிலேயே பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறோம். எங்களுக்கு வந்த மனுக்களைப் பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் நெசவாளர்களுக்குக் கண்டிப்பாக உதவ வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் ரூ.5 ஆயிரமாக இருந்த தொகையை ரூ 6 ஆயிரமாக நாங்கள் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்குக் கைத்தறித் துணியை காக்கிதுணியாகக் கொடுக்கின்ற நேரத்திலே மத்திய அரசிலே வேலை செய்கின்ற ஊழியர்களுக்கும் இந்தப் பலன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கமும் மற்றும் பல மாண்புமிகு உறுப்பினர்களும் கூறினார்கள். அதற்கான முயற்சியை இந்த அரசு தொடர்ந்து செய்து வருகிறது என்பதையும் மத்திய அரசை அணுகி இதைக் கேட்டு வருகிறது என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல நெசவாளர்கள் உற்பத்தி செய்கின்ற பாலியஸ்டர் துணிகளை காக்கி துணிகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே ஒரு கருத்தினைக் கேட்டார்கள். பாலியஸ்டர் துணிகளை உற்பத்தி செய்வதில் கூட மத்திய அரசு புரோசசிங் என்கிற நிலையிலே வரி விதித்து எக்சைஸ் டியூட்டி வசூலிக்கிறார்கள். அதை மத்திய அரசு நீக்கினால், நிச்சயமாக இப்போது உள்ள விலையை விட குறைந்த விலைக்கு பாலியஸ்டர் காக்கி துணிகளை பொதுமக்கள் வாங்கி பயனடைவதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கலாம். அதே துணிகளை நமது ஓட்டுநர்கள் மற்றும் அரசு ஊழியர்களும் மத்திய அரசிலே வேலை செய்கிற ஊழியர்களும் பெறுகிற சூழ்நிலையை உருவாக்க நாம் மத்திய அரசிடம் இதுகுறித்து தொடர்பு கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கொடுத்த ஆலோசனைகள் மிகவும் பயனுள்ள ஆலோசனைகள். அவை எனக்கு மிகவும் உதவியாக இருக்கும். நெசவாளர்களுடைய பிரச்சினைகளை நான் நேரிலே சென்று பார்த்துப் புரிந்துகொள்வதை விட மாண்புமிகு உறுப்பினர்களுடைய பகுதிகளிலே உள்ள நெசவாளர்களுடைய பிரச்சினைகளை நேரிலே கண்டறிந்து. புரிந்து இங்கே எனக்கு அவர்கள் ஆலோசனைகளாகத் தெரிவித்த கருத்துக்கள் மிகவும் பயனுள்ள கருத்துக்கள் என்பதையும் நாம் அவற்றில் ஓரளவு சிலவற்றை நிறைவேற்றியிருக்கிறோம், இன்னும் நிறைவேற்ற வேண்டியவைகளையும் நிறைவேற்றுவோம் என்று இந்த சந்தர்ப்பத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன, அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்,

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7–15)

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

61. Annual Financial Statement for 1980—81 and Supplementary Financial Statement for 1979—80 of the Tamil Nadu Electricity Board. [Laid on the table of the House under section 61 (3) of the Electricity Supply Act, 1948 (Central Act, 54 of 1948)].

62. Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1977—78. (English & Tamil) [Laid on the table of the House under section 75 (1) of the Electricity Supply Act, 1948 (Central Act, 54 of 1948)].

### B. Reports, Notifications and Other Papers.

* 71. Industrial Policy and Programmes, 1980—81 (English and Tamil).

* 72. Performance Budget on Industries, 1980—81 (English and Tamil).

* 73. Policy Note on Road Transport Services and Shipping, 1980—81 (English and Tamil).

* 74. Note on Review of Performance of Transport and Shipping Corporations, 1980—81. (English and Tamil)

* 75. A Review of the Road Transport in Tamil Nadu, 1979—80 (English and Tamil).

* 76. Policy Note on Motor Vehicles Acts—Administration 1980—81 (English and Tamil).

## இணைப்பு I.

[12... ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

அரசாங்க இராயப்பேட்டை மருத்துவமனையில் அன்றாட அத்தியாவசியமான பணிகள் தடைபடாமல் நடக்க (சுற்று சுகாதாரம், மற்றும் சிகிச்சை) மாற்றுப் பணியாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் செவிலிப் பணியாளர்கள், பெருக்குநர், சுகாதார ஊழியர்கள், லஸ்கர் மற்றும் அடித்தளப் பணியிலுள்ளோர்

* Circulated to all M.L.Cs. on 24th July 1980.

எவரும் திடீரென பணிக்கு வராமல் நின்றுவிடும் சமயத்தில் அவர்கள் குறுகிய கால விடுப்பில் செல்லும்போதும் தடங்கலின்றி பணிகள் நடக்க இம்மாற்றுப் பணியாளர்கள்பதிலிகளாக நியமிக்கப் படுகிறார்கள். இவர்கள் அவ்வாறு வேலை செய்த நாட்களுக்கு மட்டும் மாத சம்பள அடிப்படையில் ஊதியம் தரப்படுகிறது. இந்த ஊதியம் வேலை செய்த மாதத்தில் அடுத்த மாத இரண்டாவது வாரத்தில் அவர்களுக்கு வழங்கப்படுவது வழக்கம்.

தற்சமயம் 55 ஆண்ஊழியர்களும் 34 பெண் ஊழியர்களும் அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் பணியாற்றுகிறார்கள். அவர்கள் மாதம் முழுமையும் பணி செய்யாமலிருப்பதாலும், அவர்கள் நிலையான பணியாளர் திடீரென விடுப்பில் செல்லும் காலத்தில் பதிலிகளாக மட்டுமே பணியாற்றுவதாலும், அவர்களின் பணியினை நிரந்தரமாக்க வாய்ப்பு இல்லை. புதிய பதவிகள் உருவாக்கப்படும்போது முன்னுரிமை வரிசைப்படி நிரந்தரமாக வேலையில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். கடந்த 5 வருடங்களாக மாற்றுப் பணியாளர் ஆஜர் பட்டியலில் அவர்கள் இருந்து வருகிறார்கள்.

3. இம்மாற்றுப் பணியாளர்களின் ஊதியம் மார்ச் 1980 வரை முன்பே வழங்கப்பட்டு விட்டது. அரசாங்க ஆணை 1259 (பி.&ஏ.ஆர்.) நாள் 14—11—1980, மேலும் அரசு குறிப்பாணை எண் 109618/ஏ/79, பி.& ஏ.ஆர். நாள் 10—3—1980-ன் படி, 30 நாட்களுக்கு குறைந்துள்ள விடுப்பில் பதிலாட்களை நியமித்தால், இவர்கள் நியமனம் பற்றி மேலிடத்திலிருந்து உத்தரவு வாங்கி அதற்கான சான்றிதழும் சம்பளப்பட்டியலுடன் இணைக்கப்படவேண்டும் என்று கூறி ஏப்ரல் மாதத்திற்கான சம்பளப்பட்டியல்கள் சம்பளக் கணக்கு அலுவலகத்திலிருந்து திருப்பியனுப்பப்பட்டு விட்டன. ஆகவால், இதற்கான உத்தரவு வழங்குமாறு மருத்துவக்கல்வி இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். இச்செயற் குறிப்பு நிதித்துறையுடன் கலந்து ஆலோசனையிலுள்ளது.

4. அரசின் பின்னேற்பு ஆணையை எதிர் பார்த்து, திருப்பியனுப்பப்பட்ட சம்பளப்பட்டியல்கள் மருத்துவக் கல்வி இயக்குநரின் ஆணை பெற்று, சம்பள கணக்கு அலுவலகத்திற்கு மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன,



## இணைப்பு II.

[14..ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்.

தமிழ்நாட்டில் 1979ஆம் ஆண்டில் எல்லாப் பகுதிகளிலும் தொழில் அமைதியும், நட்புறவும் பொதுவாக நிலவின. அரசு ஏற்கெனவே மேற்கொண்ட கொள்கையில் மாறுதல் எதுவும் இல்லாததே இதற்குக் காரணம்.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் துணி ஆலைகளில் அமைதியின்மை நிலவியது. தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள வேலை நிறுத்தங்களில் ஈடுபட தொழிற் சங்கங்களுக்கு உள்ள உரிமையை அரசு அங்கீகரித்தது. துணி ஆலைகளில் நடந்து முடிந்த வேலை நிறுத்தத்தின் விளைவாக, அரசு தொழில் நடுவர் மன்றத்தின் முன் வைக்கப்பெற்று ஓர் இறுதி உடன்பாடு ஏற்பட்டது. நியாயமான ஊதியத்தைத் தொழிலாளர்களுக்கு வழங்குதல், தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல், தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்ய உள்ள உரிமையை அங்கீகரித்தல், அவ்வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதினால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதகங்களைக் கருத்தில் கொண்டு தக்க சமயத்தில் அரசு தலையிடுதல், இணக்கம் செய்வித்தல், சுமுகமான உடன்படிக்கை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வேலை நிறுத்தம் தொடர்ந்து நீடிக்கா வண்ணம் பார்த்துக் கொள்வது என்ற அரசின் கொள்கை காரணமாக மாநிலம் முழுவதும் ஒரு சுமுக நிலை நிலவியது. தொழில் அமைதியைக் கட்டிக் காக்கும் முயற்சியில் நிருவாகத்தினரும், தொழிற்சங்கங்களும் நல்கிய ஒத்துழைப்புக்கு அரசு தம் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.

தமிழ்நாட்டில் பெரும்பான்மையோராக உள்ள, தொழிற்சங்க அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குக் குறைந்த அளவு ஊதியமும், நல்ல வாழ்க்கைத் தரமும் கிடைப்பதை உறுதி செய்யும்பொருட்டு, சட்டபூர்வமான அறிவிப்பின் மூலம், சிறப்பு நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு தனிக் கவனம் செலுத்தியது. அவ்வாறு பலவகைப்பட்ட

சட்டங்களின் வாயிலாக தொழிலாள வர்க்கத்திற்காக வழங்கப் பட்ட நன்னோக்கு நடவடிக்கைகளின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ள பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் அரசு குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயித்தது; குறைந்த அளவு ஊதியத்தை திருத்தியமைத்தது. இவ்வாண்டில் குறைந்த அளவு ஊதியம் வழங்குதல் சட்டத்தின் அட்டவணையில் மேலும் பல வேலை களைச் சேர்த்தது ஆகியவைகளைச் சிறப்பு அம்சங்களாக இங்கு குறிப்பிடலாம். பத்துபேருக்கு அதிகமாகவும், 20 பேருக்கு குறைவாகவும் தொழிலாளர்கள் பணிபுரியும் எல்லா நிறுவனங் களிலும் ஊதியக் கொடை வழங்கும் பயனை இவ்வரசு நீட்டித் துள்ளது. தொழிலாளர்கள் தங்களின் தொழில் பணியாற்று வதற்கான சொந்த ஆவணச்சான்று இருக்கவேண்டியதின் அவசியத்தைக் கருதி, பணிப்பதிவேடு (அல்லது) கால அடையாள அட்டைகள் தொழிலாளர்களுக்கு இருக்கும்படி வகைசெய்து அரசு பல சட்டங்களில் விதித்துறைகளைச் சேர்த்துள்ளது. தொழிற்சாலைகளில் தொழிலாளர் நலனைக் காப்பதற்காக, பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களில் உள்ள நல நடவடிக்கை கள் அமுல்படுத்தப்பட்டு வருவதைச் கண்காணிக்க அரசு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மாநிலத்தில் தொழிலாளர் நிர்வாகம் பற்றி இவ்வறிக்கையில் கீழ்க்காணும் வகைப்பாடுகளின் கீழ் ஆய்வு செய்யப்படுகிறது :—

(1) தொழில் தகராறுகள் சட்டம்.
(2) கடைகள்-நிறுவனங்கள் பற்றிய சட்டம்.
(3) ஊதியங்கள் சட்டம்.
(4) சமூகப் பாதுகாப்புச் சட்டம்.
(5) தொழிலாளர் நல நடவடிக்கைகள்.
(6) எடை-அளவைகள் சட்டம்.

இவற்றோடு, வேலைவாய்ப்புப் பணி, கைத்தறிப் பணியாளர் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துதல் தொடர்பான பணி குறித்து தனி அத்தியாயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.



## I. தொழில் தகராறுகள் சட்டம்.

### 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

இவ்வாண்டில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கை யும் அவை தீர்த்து வைக்கப்பட்ட விவரங்களும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| | 1978 | 1979 |
|---|---|---|
| (a) வரப்பெற்ற புகார்கள் தகராறுகள் ஆகியவற்றின் எண்ணிக்கை .. | 8,204 | 7,808 |
| (b) புலனாய்வு செய்யப்பட்ட புகார்கள், தகராறுகள் எண்ணிக்கை. (ஏற்கெனவே முடிவு செய்யப்படாமல் உள்ளவை உட்பட.) | 8,741 | 8,643 |
| (c) இணக்க முறையில் தீர்க்கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 2,184 | 1,826 |
| (d) நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. | 722 | 719 |
| (e) சமரசத்திற்கு விடப்பட்ட தகராறு களின் எண்ணிக்கை .. | 31 | 10 |

மேற்சொன்ன (c), (d), (e) பிரிவுகளின் கீழ் வராதவை, தனிப்பட்ட விதத்தில் இணக்கமான முறையில் அல்லது சம்பந்தப் பட்ட தரப்பினருக்கு உரியவாறு, தகுந்த ஆலோசனை வழங்கி தீர்த்து வைக்கப்பட்டவையாகும் அல்லது மேற்கொண்டு நட வடிக்கை எடுக்க வேண்டியதோ அல்லது நடுவர் தீர்ப்புக்குவிட வேண்டியதோ அவசியமில்லை என்று கருதப்பட்டவையாகும்.

[1980 ஜூலை 25

## வேலையை நிறுத்தி விடுதல்.

அறிக்கை ஆண்டிலும் முந்திய ஆண்டிலும் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்புமை விவரங்கள் பின்வருமாறு :—

| | 1978 | 1979 |
|---|---|---|
| (a) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை. | 378 | 331 |
| (b) இழந்த உழைப்பு நாட்கள் .. | 21,55,675 | 82,73,236 |

தொழில்வாரியாக நடந்த வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள் வருமாறு :—

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை. | ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | இழந்த உழைப்பு நாட்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1978— | | | |
| 1. துணி ஆலைகள் .. | 153 | 74,719 | 9,38,367 |
| 2. பொறியியல் .. | 75 | 36,897 | 6,15,968 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள். | 5 | 654 | 11,496 |
| 4. புகையிலை, பீடித் தொழில் .. | 5 | 3,327 | 7,591 |
| 5. மலைத் தோட்டத் தொழில்கள் .. | 19 | 12,871 | 1,13,648 |
| 6. ஏனையவை .. | 121 | 41,197 | 4,68,605 |
| மொத்தம் .. | 378 | 1,69,665 | 21,55,675 |



1980 ஜூலை 25]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1979— | | | |
| 1. துணி ஆலைகள் .. | 135 | 1,86,289 | 63,77,315 |
| 2. பொறியியல் .. | 67 | 25,161 | 9,59,051 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 1 | 28 | 56 |
| 4. புகையிலை, பீடித் தொழில் .. | 3 | 3,714 | 32,493 |
| 5. மலைத் தோட்டத் தொழில்கள் .. | 21 | 17,661 | 2,02,481 |
| 6. ஏனையவை .. | 104 | 42,295 | 7,01,840 |
| மொத்தம் .. | 331 | 2,75,148 | 82,73,236 |

1979ஆம் ஆண்டில் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்துத் தீர்வு காணப்பட்ட வழி முறைகள் வருமாறு :—

| | |
|---|---|
| (a) நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலம் .. | 92 |
| (b) தாமாகவே முன்வந்து வேலை தொடக்கப் பட்டவை .. .. .. .. | 30 |
| (c) தொழிலாளர் நலத்துறை/அரசு அதிகாரிகள் தீர்த்து வைத்தவை .. .. .. | 198 |
| (d) காலவரையறை அற்றவை .. .. .. | .. |
| (e) நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டவை .. | .. |
| (f) மூடப்பட்டவை .. .. .. .. | 2 |
| (g) ஆண்டின் இறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை .. .. .. .. | 9 |
| மொத்தம் .. | 331 |

## நடப்பு ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட சில முக்கிய உடன்பாடுகள்.

### 1. தமிழ்நாட்டில் துணி ஆலைகளில் பொது வேலை நிறுத்தம்:

தமிழ்நாட்டில் துணி ஆலைகளைச் சார்ந்த சுமார் 1,50,000 தொழிலாளர்கள், 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் நாள் பல கோரிக்கைகள் குறித்து வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றை முன்வைத்து, 1979 ஆம் ஆண்டு மே 25 ஆம் நாள் முதல் பொது வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். சமரச முயற்சி தோல்வியுறவே, அரசு இத் தகராறை தனி தொழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பிற்கு விட்டது. அதன் பிறகு, 1979 ஜூன் 22-ம் நாளிலிருந்து ஆரம்பித்து பல நாட்களில் நிர்வாகத்தின் பிரதிநிதிகளும் தொழிலாளர் பிரதிநிதிகளும், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர். தென்னிந்திய ஆலைகள் சங்கம் அனேக தனியார் ஆலைகளின் சார்பிலும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குனர், கூட்டுறவு ஆலைகளின் சார்பாகவும் 1979 ஆம் ஆண்டு ஜூலை 17-ம் நாள் அன்று உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். 1979 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் நாள் அன்று தேசிய துணி கூட்டுறவு ஆலை சார்பில் ஓர் உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். இந்த உடன்படிக்கையின் பயனாக தொழிலாளர்கள் தங்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுவிட்டு, 1979 ஆம் ஆண்டு ஜூலை 19-ம் நாளிலிருந்து வேலைக்குத் திரும்பினர். அந்த உடன் படிக்கைகளின் அடிப்படையில், 1979 ஆம் ஆண்டு ஜூலை 28 அன்று சென்னை, தனித் தொழில் நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கியது.

### 2. தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை தொழிற்சாலைகளில் மாநில அளவிலான உடன்படிக்கை:

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ், 1975 ஆம் ஆண்டு, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கும், கநிருவாகத்தினருக்கும் இடையே ஏற்பட்ட



உடன்பாடு, 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள் அன்று முடிவுற்றது. எல்லா சர்க்கரை ஆலைகளைச் சார்ந்த தொழிலாளர்கள் கூட்டு நடவடிக்கைக் குழு ஒன்றை அமைத்து பல கோரிக்கைகளை முன்வைத்து, வேலை நிறுத்த அறிவிப்பினை கொடுத்தனர். தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் தலையீட்டின் விளைவாக, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், 1979 ஆம் ஆண்டு மே 28 ஆம் நாள் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன் விளைவாக, இம் மாநிலத்தில் சர்க்கரை ஆலையில் பயிற்சி பெறாத தொழிலாளி ஒருவர், குறைந்த பட்ச ஊதியமாக, ரூ. 383.40 பெறுவார். இது ஆந்திரப் பிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தை விட அதிகமானதாகும்.

### 3. பீடித் தொழிலில் உடன்பாடு—திருச்சிராப்பள்ளி மாவட்டம்:

திருச்சிராப்பள்ளியில் பீடித் தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து பீடித் தொழில் அதிபர்களுடன் 13 கோரிக்கைகளை எழுப்பினர். திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நல அதிகாரியின் முன்னிலையில் சமரச முயற்சி தோல்வியுற்றதன் விளைவாக, அச் சமரச முயற்சியில் விவாதிக்கப்பட்டு முடிவு ஏற்படாத 11 கோரிக்கைகள் உள்பட 17 கோரிக்கைகளை வலியுறுத்தி அத் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தனர். 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். அதன்பின், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் 7-10-1979 அன்று ஒரு உடன்பாடு ஏற்பட்டது. 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 8 ஆம் நாள் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர்.

### 4. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இரப்பர் தோட்டங்கள்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தோட்டங்களில் ஈடுபட்டுள்ள சுமார் 4,030 தொழிலாளர்கள், ஊதிய உயர்வு அளித்தல், அகவிலைப்படி அளித்தல், வீட்டு வாடகைப்படி அளித்தல், தொழிற்சாலைச் சட்டம் இத் தொழிற்சாலைக்குப்

பொருந்தும் என்பது, ஆகியவைகள் அடங்கிய பல கோரிக்கைகளை வலியுறுத்தி 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 11 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், தனியார் இரப்பர் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் நாள் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி, தனியார் இரப்பர் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை உடனடியாகக் கைவிட்டனர். அரசு இரப்பர் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தனர். 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 4 ஆம் நாள் அன்று சென்னை, தொழிலாளர் நல துணை ஆணையாளர் முன்பாக, 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், ஓர் உடன்பாடு ஏற்பட்டதன் பயனாக, தொழிலாளர்கள் உடனடியாக வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, வேலைக்குத் திரும்பினர். இவ்வுடன்பாட்டின் விளைவாக ஒரு தொழிலாளி, நாளொன்றுக்கு ரூ. 2 அதிகம் பெறுவார்.

சிறு இரப்பர் தோட்டத் தொழில்களில் ஏற்பட்ட தனிப்பட்ட உடன்படிக்கைகள் தவிர, 23 சிறிய இரப்பர் தோட்டத் தொழில்களைப் பொறுத்தமட்டில், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் நாளன்று, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

5. எண்ணெய் ஆலைகள், ஈரோடு:

ஈரோடு, 'டான்சி' நிறுவனமும் பொதுத் தொழிலாளர் ஒன்றியங்களும் இவ்வாலை நிர்வாகத்தை எதிர்த்து ஊதிய உயர்வு, அக விலைப்படி ஆகியவை உட்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் நாளன்று வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தனர். பின்னர், சுமார் 21 எண்ணெய் ஆலைகளில் பணிபுரியும் சுமார் 224 தொழிலாளர்கள் மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தி 1979ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். சமரசப் பேச்சுவார்த்தையின் விளைவாக,



1979ஆம் ஆண்டு, ஆக்டோபர் 27 ஆம் நாளன்று கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளர் முன்பாக, 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

6. (i) ஸ்ரீ பாலசுப்பிரமணியா ஆலை, கோயம்புத்தூர்:

இந் நிறுவனத்தைச் சார்ந்த சுமார் 600 தொழிலாளர்கள் சில தொழிலாளர்களை தயார் நிலையிலுள்ள தொழிலாளர்கள் என அறிவிக்கக் கோரி, 1979 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்பாக ஓர் உடன்பாடு ஏற்பட்டதன் பயனாக, தொழிலாளர்கள், 1979 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் நாள் அன்று வேலைக்குத் திரும்பினர்.

(ii) மேட்டூர் பியர்ட் செல் லிமிடெட், மேட்டூர் அணை:

இந்நிறுவனத்தைச் சார்ந்த சுமார் 500 தொழிலாளர்கள் ஊதியத்தைத் திருத்தியமைக்கும்படியும் நூல் நூற்புத் துறையில் பணி ஒதுக்கீடு செய்யும்படியும் கோரி 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 9 ஆம் நாள் நடு இரவிலிருந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். 1979 ஆம் ஆண்டு மார்ச்சு 2? ஆம் நாள் அன்று தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்பாக, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டதன் விளைவாக, தொழிலாளர்கள், 1979 ஆம் ஆண்டு மார்ச்சு 30 ஆம் நாள் வேலைக்குத் திரும்பினர்.

(iii) கிருஷ்ணவேணி நூற்பு ஆலை, கோயம்புத்தூர்:

இந் நிறுவனத்தைச் சார்ந்த பொது மேலாளரை 'கெரோ செய்ததனால், சில தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இதனை எதிர்த்து சுமார் 400 தொழிலாளர்கள் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். சென்னை தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னிலையில் விவாதம் நடைபெற்றதன் பயனாக, 1979ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4 ஆம் நாள் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

(iv) தென்னிந்தியத் துணி ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்:

இந் நிறுவனம் இரு நபர்களை நிர்வாகப் பொறுப்பினில் அமர்த்தியதை எதிர்த்தும் சில தொழிலாளர்களுக்குப் பதவி பெயர் கோரியும் இந் நிறுவனத்தைச் சார்ந்த சுமார் 180 தொழிலாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை, தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முயற்சி எடுத்துக் கொண்டதின் பேரில், 1979 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் நாளன்று, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன்படி, தொழிலாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளன்று வேலைக்குத் திரும்பினர்.

(v) ஸ்ரீசாரதா ஆலை, கோயம்புத்தூர்:

கோயம்புத்தூர் மாவட்டத் தேசிய துணி ஆலை தொழிற்சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்கள், 1979 ஆம் ஆண்டு மார்ச்சு 20 ஆம் நாள் வேலை நிறுத்த அறிவிப்பில் எழுப்பிய சில கோரிக்கைகள் குறித்து, 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் செய்தனர். 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் நாளன்று, சென்னைத் தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னிலையில் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

(vi) கோயம்புத்தூர் 'பயோனீர்' ஆலை லிமிடெட், A மற்றும் B ஆலைகள், கோயம்புத்தூர்:

1978-79ஆம் ஆண்டுக்கு ஊதியக் கொடை கொடுப்பது குறித்து இந் நிறுவனங்களைச் சார்ந்த 'பயோனீர்' 'A' ஆலைத் தொழிலாளர்கள் சுமார் 600 பேர் 16-10-1979 ஆம் நாள் முதற்கொண்டும், 'B' ஆலைத் தொழிலாளர்கள் 15-10-1979 ஆம் நாள் முதற்கொண்டும் வேலை நிறுத்தம் செய்தனர். இரு தரப்பினருடன் தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் பேச்சு வார்த்தை நடத்தியதன் பயனாக, 1979ஆம் ஆண்டு



நவம்பர் 22ஆம் நாள் அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1979ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

7. (i) ''கெமிக்கல்ஸ்'' மற்றும் ''பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட்'', மேட்டூர் அணை:

இந்நிறுவனத்தைச் சார்ந்த கெம்பிளாஸ்ட் தொழிற்சங்கத்தில் பங்கேற்றுள்ள சுமார் 400 தொழிலாளர்கள், இந்நிறுவனத்தின் மேலாண்மை பாதுகாப்புப் பணியை பாதுகாப்பு துப்பறியும் துறையிடம் ஒப்படைப்பது குறித்து எதிர்ப்புத் தெரிவித்து, 1979ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல அமைச்சர் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆகியோர்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதன் பயனாக, 1979ஆம் ஆண்டு பிப்ரவரி 1ஆம் நாளன்று அமைதி ஏற்பட்டது. அதனடிப்படையில், வேலை நிறுத்தம் செய்த காலத்தில் எழுப்பப்பட்ட கோரிக்கைகளை சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்னிலையில் பேசித் தீர்ப்பதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன்படி, பேச்சு வார்த்தை நடைபெற்று 1979ஆம் ஆண்டு மார்ச் 3ஆம் நாளன்று அவர் முன்னிலையில் 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

(ii) ''தாரங்கதாரா கெமிக்கல்ஸ் ஒர்க்ஸ் லிமிடெட்'', சாகுபுரம்:

அடிப்படை ஊதியத்தைத் திருத்தியமைத்தல், அகவிலைப்படி அளித்தல், ஊர்திப்படி அதிகரித்தல், இரவு வேலைப்படி அளித்தல், பால் வழங்குப்படி, சலவைப்படி அளித்தல் ஆகியவை உட்பட பல கோரிக்கைகள் குறித்து, இந்நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும் நிருவாகத்தினருக்கும் இடையே தொழில் தகராறு ஒன்று ஏற்பட்டது. 1979ஆம் ஆண்டு மே 31ஆம் நாள் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்பு

1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. சுமார் 900 தொழிலாளர்கள் இவ்வுடன்படிக்கையினால் பயனடைந்தனர்.

(iii) "மேட்டூர் கெமிக்கல்—இன்டஸ்டிரியல் கார்ப்பரேஷன் லிமிடெட்", மேட்டூர் அணை :

தொழிலாளர்கள் மெதுவாகப் பணி செய்ததன் காரணமாக, இந நிறுவன நிர்வாகம் 1979ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 24ஆம் நாளன்று கதவடைப்பு செய்தது. ஏற்கனவே, தொழிலாளர்கள் சம்பளத்தைத் திருத்தியமைத்தல், அகவிலைப்படி அளித்தல், ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றை 1979ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22ஆம் நாளன்று கொடுத்திருந்தனர். தனது முன்னிலையில் இருதரப்பினரிடையேயும் கருத்தொற்றுமை ஏற்பட்டதின் விளைவாக 1979ஆம் ஆண்டு செப்டம்பர் 4ஆம் நாளன்று தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர், ஆலோசனை நல்கினர். அந்த ஆலோசனையின் பயனாய், 1979ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் நாள் அன்று கதவடைப்பு நீக்கப்பட்டது. ஊதியத்தை திருத்தியமைப்பது குறித்து 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் 1979ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன் பயனாய் 1,400 தொழிலாளர்கள் பயனடைந்தனர்

8, (i) டி.வி.எஸ். குரூப் கம்பெனிகள் :

இந்நிறுவனத்தைச் சார்ந்த (1) லூகாஸ் டி.வி.எஸ். லிமிடெட் பாடி, (2) வீல்ஸ் இந்தியா லிமிடெட், (3) சுந்தரம் கிளேட்டன் லிமிடெட், பாடி, (4) சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் லிமிடெட், பாடி (5) பிரேக்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை ஆகிய பிரிவுகளி[ல்] உள்ள தொழிலாளர்கள் ஊதிய வீதத்தைத் திருத்தியமைக்கு[ம்] படியும் அகவிலைப்படி வழங்கும்படியும் ஏனைய கோரிக்கை[க]ளையும் கோரினர். இது தொடர்பாக நிர்வாகத்தினருக்கு[ம்] தொழிலாளர்களுக்குமிடையே எழுந்த தகராறை, சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் தீர்த்து வைத்தார். அதன்ப[டி]



1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டுக்கு 1—9—1978-லிருந்து செயல் வடிவம் கொடுக்கப்பட்டது. சுமார் 6,000 தொழிலாளர்கள் இதனால் பயனடைந்தனர்.

(ii) சிம்கோ மீட்டர் லிமிடெட், திருச்சிராப்பள்ளி :

இந்நிருவாகத்தினருக்கு எதிராக சிம்கோ மீட்டர் தொழிற் சங்கமும் சிம்கோ மீட்டர் பணியாளர் சங்கமும் ல கோரிக்கைகளை எழுப்பின. சுமார் 1,200 தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி, 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதன் பிறகு நிருவாகத்தினர் 1978ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் நாளிலிருந்து கதவடைப்பு செய்வதாக அறிவித்தனர். சிம்கோ மீட்டர் தொழிற் சங்கத்தினரும் அநேக தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் வேண்டுகோள் விடுத்ததன் பேரில், 1978 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் நாளன்று நிர்வாகத்தினர் கதவடைப்பை நீக்கினர். ஆனால் சிம்கோ மீட்டர் பணியாளர் சங்கத்தை சார்ந்த தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்தை தொடர்ந்து மேற்கொண்டதால், அந்நிறுவனத்தில் அமைதியின்மை நிலவியது. தொழிலாளர் நலத் துணை ஆணையாளர், தொழிலாளர் நல இணை ஆணையாளர் ஆகியோருடன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதோடு மட்டுமல்லாமல் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 24, 25 ஆகிய நாட்களில் தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையிலும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றன. ஆனால், நிறுவனத்தில் பதட்ட நிலை நிலவியதன் காரணமாக 1979ஆம் ஆண்டு மார்ச்சு 6ஆம் நாளன்று நிர்வாகத்தினர் மீண்டும் கதவடைப்பு செய்தனர். 1979ஆம் ஆண்டு மார்ச்சு 8ஆம் நாளன்று முதலமைச்சர் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடனும் தொழிற்சங்கத் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். மேலும் முதலமைச்சரும் தொழிலாளர் நல அமைச்சரும் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் பயனாக, இத்தகராறில் தீர்வு ஏற்பட்டு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப வழி ஏற்பட்டது. அதன்படி, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நல அதிகாரி, 15—3—1979 அன்று பேச்சுவார்த்

...தைகளை நடத்தினார்; அதன் விளைவாக ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின் பயனாய், 1979 ஆம் ஆண்டு மார்ச்சு 16ஆம் நாளன்று கதவடைப்பு நீக்கப்பட்டதோடு தொழிலாளர்கள் 16—3—1979 அன்று வேலைக்குத் திரும்பினர்.

## (iii) சிம்சன் குரூப் கம்பெனிகள் :

இந்நிறுவனத்தைச் சார்ந்த சிம்சன் மற்றும் குரூப் கம்பெனிகள் தொழிலாளர் சங்கமும் மேலும் சிம்சன் குரூப் கம்பெனிகள் பணியாளர் சங்கமும் கூட்டாகப் பல கோரிக்கைகள் குறித்து நிர்வாகத்தினருக்கு எதிராக 1979 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளன்று வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தனர். மேலும் அவர்கள் இந்த அறிவிப்பு கிடைத்த பதின்மூன்று நாட்களில் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், காலவரையறையற்ற வேலை நிறுத்தம் நடத்தப் போவதாக அறிவித்தனர். 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் நாளன்று முதலமைச்சரின் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பயனாக, இருதரப்பினருக்கிடையிலும் 1979 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதனால் தொழிற்சங்கங்கள் 1979 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளிட்ட வேலை நிறுத்த அறிவிப்பை ரத்து செய்ய ஒப்புக் கொண்டனர். அதைத் தொடர்ந்து தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் 1947–ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

1979 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் பல கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் குறித்து மீண்டும் தொழிலாளர்கள் நிர்வாகத்தினருக்கு எதிராகத் தொழிற் தகராறு செய்தனர். தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதது குறித்து தொழிலாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் நாளிலிருந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். தொழிலாளர் நல ஆணையாளர், தொழிலாளர் நல அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விளைவாகவும், அவர்கள் கூறிய ஆலோசனைகளின் பேரிலும் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 ஆம் நாளன்று



இருதரப்பினரிடையேயும் ஓர் இணக்கம் ஏற்பட்டது. அதன்படி 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் நாளன்று நிறுவனத்தின் எல்லா பிரிவுகளும் உற்பத்தியைத் தொடங்கின. இது 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் நாளன்று 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடாக மாறியது.

## (iv) இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம், சென்னை-32.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தில் சுமார் 1,900 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்கள் கொடுத்த பல கோரிக்கைகளை நிறைவேற்றும்படி கோரி நிர்வாகத்திற்கு எதிராக 1979 ஆம் ஆண்டு மார்ச்சு 12 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர். சென்னையிலுள்ள தொழிலாளர் நலத் துணை ஆணையாளருடனும் (I) தொழிலாளர் நல இணை ஆணையாளருடனும் பல்வேறு நாட்களில் பேச்சுவார்த்தைகள் நடந்தன. அப்பேச்சு வார்த்தைகளால் பலன் கிடைத்ததன் காரணமாகப் பணியாளர்கள் 30—5—1979 அன்று வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். இறுதியில் சென்னையிலுள்ள தொழிலாளர் நலத் தனித்துணை ஆணையாளர் இத்தகராறு குறித்து விவாதித்தார். பின்னர் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு 8 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

## (v) என்பீல்டு இந்தியா லிமிடெட், அணைக்கரைப்பட்டி, சிங்கம்புணரி.

இந்நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1978-79 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை வழங்கல் மற்றும் பல கோரிக்கைகள் குறித்தும், 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதன் பயனாய், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதோடு 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் நாள் அன்று தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பினர்.

(vi) இந்தியா சிமிண்ட்ஸ் லிமிடெட் (பவுண்டரி டிவிஷன்), சென்னை-89.

தொழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பை அமுல்படுத்தாதிருந்தது குறித்து இந் நிறுவனத்தினருக்கும் இந் நிறுவனத்தைச் சார்ந்த இந்தியா சிமிண்ட்ஸ் லிமிடெட் (பவுண்டரி டிவிஷன்) தொழிலாளர் சங்கத் தொழிலாளர்களுக்கும் இடையே தொழிற் தகராறு எழுந்தது. அடுத்து 1979 ஆம் ஆண்டு ஜுலை 23 ஆம் நாளிலிருந்து இந்நிறுவனம் கதவடைப்பு செய்தது. பேச்சு வார்த்தைகள் ஏற்பட்டதின் பயனாய், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14 ஆம் நாளன்று துணை தொழிலாளர் நல ஆணையாளர் II முன்பு ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன் பயனாய் நிருவாகம் கதவடைப்பை நீக்கியது. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

(vii) டன்லப் இந்தியா லிமிடெட்.

டன்லப் பேக்டரி தொழிற் சங்கத்தைச் சார்ந்த சுமார் 2,863 தொழிலாளர்கள், அந்நிறுவனம் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகளை அறிமுகப்படுத்துதல் குறித்து எழுந்த தகராறு ஒன்றின் விளைவாக 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24 ஆம் நாளில் இருந்து வேலை நிறுத்தம் செய்தனர். அந்நிறுவனம் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25 ஆம் நாளன்று கதவடைப்பு செய்ததாக அறிவித்தது. தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் II சென்னை முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் விளைவாக 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் நாளன்று 1947 ஆம் ஆண்டு தொழில் தக்ராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன் பயனாகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 18 ஆம் நாளன்று கதவடைப்பு நீக்கப்பட்டது.

9. போர்ட் டிரஸ்ட், சென்னை.

சென்னை துறைமுக தொழிலாளர்கள் சங்கம் இயந்திரக் கலப்பை இழுவை உரிமையாளர்கள் சங்கத்தினர் (சென்னை) இளையிடம் ஊதிய உயர்வு கோரினர். தொழிலாளர் நல ஆணை



யாளர், தொடர்ச்சியாக அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். இருதரப்பினருக்கிடையிலேயும் நடைபெற்ற பேச்சு வார்த்தை தோல்வியுறவே, 1978 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் நாளிலிருந்து ஓட்டுநர்களும், துப்புரவாளர்களும், இயந்திரக் கலப்பை இழுவை உரிமையாளர்கள் சங்கத்தினால் துறைமுகத்தின் பணியில் அமர்த்தப்பட்ட இதர பணியாளர்களும் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் இடர்ப்பாட்டைக் கருதி தொழிலாளர் நல ஆணையாளர் போராட்டத்தைக் கைவிடும்படி அச்சங்கத்தினருக்கு அறிவுரை கூறியதோடு, போராட்ட காலத்திற்கு முன்பிருந்த நிலையில் உள்ளவாறு தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும்படியும் நிர்வாகத்தினரிடம் கேட்டுக் கொண்டார். மேலும் அவர்கள் கோரிக்கைகளின் அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் தொடரும் எனவும் அறிவித்தார். தொழிலாளர் நல ஆணையாளரின் வேண்டுகோளுக்கிணங்க தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 3ஆம் நாள் அன்று நிலைமை சீரடைந்து தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். இந்த வேலை நிறுத்தத்தால் சுமார் 200 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

10. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்.

இந்நிறுவனத்தைச் சார்ந்த சுமார் 3,500 தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, 1977-78 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை, மற்றும் ஊக்கத் தொகை அளித்தல் ஆகிய பல கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரினர். இதன் விளைவாக, 1979 ஆம் ஆண்டு மார்ச்சு 27 ஆம் நாளிலிருந்து அக்கழகத்தின் மூன்று பிரிவுகளில் கதவடைப்பு செய்தது. தொழிலாளர் நல தனி துணை ஆணையாளர் இருதரப்பினரையும் அழைத்து பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் பயனாக 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் நாளன்று, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன் அடிப்படையில் 1979 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து இதர சலுகைகளுடன் தொழிலாளர்கள் தங்கள் ஊதியத்தில் நாளொன்றுக்கு 60 பைசா கூடுதலாக பெறுவர்.

## 11. இராயபுரம் சரக்குக் கொட்டகை, சென்னை

இச்சரக்குக் கொட்டகையில் சரக்குகளை காலி செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள், வியாபாரி ஒருவர், தொழிலாளர் ஒருவரை தாக்கியதைக் கண்டித்து, 1979 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதன்பிறகு, பலதரப்பட்ட பிரிவுகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு ஊதியத்தை மாற்றியமைக்கும் கோரிக்கை ஒன்றை தென்னிந்திய ரெயில்வே பாரந்தூக்கும் பாரம் இறக்கும் மஸ்தூர் சங்கம் அனுப்பியது. 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு 1ஆம் நாளன்று ஏற்பட்ட பேச்சு வார்த்தையின் பயனாய் தொழிலாளர்கள் ஊதிய கோரிக்கையை தனியாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள ஒப்புக்கொண்டு வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். தங்கள் ஊதிய கோரிக்கைக்கு விரைவில் தீர்வு காணும்படி வலியுறுத்தி தொழிலாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு 18 ஆம் நாளன்று மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர் நலத்துணை ஆணையாளர்-I, சென்னை முன்னிலையில் ஏற்பட்ட பேச்சு வார்த்தையின் விளைவாக ஊதிய கோரிக்கைக்குத் தீர்வு காணப்பட்டது. தொழிலாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு 21 ஆம் நாளிலிருந்து வேலைக்குத் திரும்பினர்.

## 12. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவுநீர் அகற்று வாரியம்.

இவ்வாரியத்தில் கழிவுநீர் அகற்றல் மற்றும் நீரேற்று நிலையப் பிரிவுகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்கள், தொழிலாளர்களை வேலையில் நிரந்தரமாக்குதல் போன்ற பல கோரிக்கைகளை வலியுறுத்தி 1979 ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் நாள் முதல் தொடர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். நீண்ட பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (தலைமையிடம்) மற்றும் தொழிலாளர் நல ஆணையாளர், முன்னிலையில் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் நாள் அன்று உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. அந்த உடன்பாடு 1975 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் அன்றுள்ளவாறு இவ்வாரியத்தின் பதிவேட்டிலுள்ள அத்தனை தொழிலாளர்களையும் வேலையில் நிரந்தரமாக்க வகை செய்கிறது. இதன்படி சுமார் 190 தொழிலாளர்கள் பயனடைகிறார்கள்.



## 13. டெக்கான் சர்க்கரை மற்றும் அப்காரி கம்பெனி லிமிடெட். புகளூர் (ஈ.ஐ.டி. பாரி குரூப்).

டெக்கான் சர்க்கரை மற்றும் அப்காரி கம்பெனி லிமிடெட், புகளூர் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்குமிடையே 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம் 12 (3) பிரிவின் கீழ் 1975 ஆம் ஆண்டு மே திங்கள் 18, 19 ஆம் நாட்களில் ஏற்பட்ட உடன்படிக்கைகள் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாளில் முடிவடைந்தன. இச்சர்க்கரை ஆலையில் உள்ள சங்கங்கள், கூட்டு நடவடிக்கை குழு ஒன்றை அமைத்து, ஊதியத்தை திருத்தியமைத்தல் மற்றும் அகவிலைப்படி வழங்குதல் ஆகிய பல கோரிக்கைகள் அடங்கிய பட்டியலுடன் வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தனர். 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் நாள் அன்று, தொழிலாளர் நல இணை ஆணையாளர் (சென்னை) முன்னிலையில் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

## மூடப்பட்ட பிரிவுகளை திறத்தல், சவுத் இந்தியா கிளாஸ் மற்றும் இனாமல் ஒர்க்ஸ் லிமிடெட். சேலம்.

இந்நிறுவனம் 487 தொழிலாளர்களையும், 14 பணியாளர்களையும் வேலைக்கமர்த்தியுள்ள ஒரு பொது நிறுவனமாகும்.

இயந்திரங்களில் அதிக மூலதனம் முடங்கியதாலும் 1972 ஆம் ஆண்டு ஆலையிலுள்ள உலை எண்ணெய் விலை திடீரென உயர்ந்ததாலும் அந்நிறுவனம் போதிய மூலதனத்தைச் சேர்க்க முடியாமல் ஆனதினால் ஓரளவு தானியங்கும் இயந்திரங்களுக்குரிய தேவையான நல்ல ரக கச்சாப் பொருட்களை பெறமுடியாமல் போயிற்று. இதன் விளைவாக உற்பத்தியின் தரம் குறைந்து உற்பத்தித் திறனும் குறைந்தது. உற்பத்தியான பொருட்கள் விற்பனையாகாமல் இருந்தன. நிறுவனத்தின் பொருளாதார நிலை மோசமடைந்ததால், பணிநிலைமையும் சீர்கெட்டது. எனவே 1976 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு அரசு, 1969 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் தனிவிதித் துறைகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 21/1969) இத்தொழிற்சாலையை நிவாரண நிறுவனமாக அறிவித்தது.

1. தென் இந்தியா கண்ணாடி, இனாமல் வேலை பணியாளர் சங்கம்.

2. தென் இந்தியா கண்ணாடி, இனாமல் வேலை தேசிய பணியாளர்கள் சங்கம்.

3. சேலம் மாவட்ட கண்ணாடி தொழிற்சாலை தொழிலாளர் சங்கம் (சேலம்).

ஆகியவைகள் அரசுக்கு விடுத்த வேண்டுகோளின் பேரில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து, 330 நிரந்தர தொழிலாளர்களுக்கு தலா ரூ. 100 வீதம் வழங்கிட அரசு ஆணை பிறப்பித்தது. 1977 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் நாள் அத்தொகை தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது.

சென்னை, தமிழ்நாடு தொழில் கடன் வழங்கு கழகம் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவர், இந்தியன் வங்கி ஆகியோருடன் அரசு கலந்தாலோசித்ததின் பேரில் நிர்வாக இயக்குநர், டாசில் (TACEL) மற்றும் கண்ணாடி நுணுக்க வல்லுநர் ஆகியோரிடமிருந்து தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கையைப் பெற்ற பிறகு அத்தொழிலகத்தை திறப்பதற்கு அரசு வழிவகைகளைக் கண்டறிந்தது. அதன்பிறகு 1977 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம் நாள் அன்று மேலாளர், இந்தியன் வங்கியுடன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அதன் அடிப்படையில் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், 1979 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் நாள் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் நாள் அன்று அத்தொழிற்சாலை செயல்படத் தொடங்கியது.



## முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி உதவியளித்தல்:

தொழில் தகராறுகளுக்கு தீர்வு காணப்பட்டதோடு மட்டுமல்லாமல், தொழிற்சாலைகள் மூடப்பட்டதின் விளைவாக தொழிலாளர் அடையும் துயரைப் போக்க அரசு கீழ்க்காணும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிதியுதவி அளித்திருக்கிறது:—

### 1. குரோம் தோல் தொழிற்சாலை, குரோம்பேட்டை, சென்னை:

இந்நிறுவனம் சுமார் 17 மாத காலமாக செயல்படவில்லை. இந்த நிறுவனத்தின் பொறுப்பை அரசு ஏற்கக் கோரியும் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக் கோரியும் ஏராளமான மனுக்கள் அரசுக்கு வந்தன. தொழிற்சாலை மூடப்பட்டதின் விளைவாக வேலையிழந்த தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும் என முதலமைச்சர் சட்டமன்றத்தில் உறுதியளித்தார். அதன் அடிப்படையில் 390 தொழிலாளர்களுக்கு ரூ. 78,000 முதலமைச்சர் நிதியிலிருந்து அரசு வழங்கியது. அத்தொகை, தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 200 வீதம் வழங்கப்பட்டது.

### 2. பைலட் பேனா கம்பெனி, சென்னை:

சுமார் 218 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள இந்நிறுவனத்தில் 1978 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் வேலை நடைபெறவில்லை. மேலும், இந்நிறுவனத்தின் பொறுப்பை அரசு ஏற்கக் கோரி ஏராளமான மனுக்கள் அரசுக்கு வந்தன. இந்த நிறுவனத்தை மூடிவிடும்படி சென்னை உயர் நீதி மன்றம் ஆணை பிறப்பித்ததால், தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை இழந்தனர். தொழிலாளர்களின் வேண்டுகோளின் பேரில், அரசு வேலையிழந்த ஒவ்வொரு தொழிலாளருக்கும் தலா ரூ. 200 முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டது. இவ்வகையில் மொத்தம் வழங்கப்பட்ட நிவாரண நிதி ரூ. 43,600 ஆகும். இத்தொகை 218 தொழிலாளர்களுக்கு, 1980 ஆம் ஆண்டு சனவரி 14 பொங்கல் திருநாள் அன்று வழங்கப்பட்டது.

## நடுவர் தீர்ப்பு.

1979 ஆம் ஆண்டில் 10 வழக்குகள் தனிப்பட்ட முறையில் நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டன.

## நீதிமன்றத் தீர்ப்பு

1978–79 ஆம் ஆண்டுகளில் சென்னை தொழில் நடுவர் மன்றம் தொழிலாளர் நீதி மன்றங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பப் பட்ட வழக்குகள், அவை அளித்த தீர்ப்புகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் பின்வருமாறு:—

| | தீர்ப்புக்காக அனுப் பப்பட்ட தகராறு களின் எண்ணிக்கை. | | தீர்ப்பளிக்கப் பட்ட வழக்கு களின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | 1978. | 1979. | 1978. | 1979. |
| தொழில் நடுவர் மன்றம், சென்னை. | 80 | 52 | 77 | 85 |
| தொழிலாளர் நீதி மன் றங்கள். | 642 | 667 | 945 | 494 |

மேற்சொன்ன வழக்குகள் தவிர, தொழிலாளர் நீதி மன்றங் கள் 1947 ஆம் ஆண்டு 'தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-சி(2) பிரிவின்கீழ் தொழிலாளர்கள் தாக்கல் செய்த 1,096 மனுக்களை விசாரணை செய்து தீர்ப்பு கூறியுள்ளன.

## வசூல்.

1979 ஆம் ஆண்டில் 56 தகராறுகளில், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-சி (1) ஆம் பிரிவின்கீழ் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பாக்கி ரூ. 1,65,469.58 வசூல் செய்யுமாறு அரசு ஆணையிட்டது.



## தொழிற்சங்கங்கள்.

1979 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் நாளன்றுள்ள நிலவரப்படி 2,764 பதிவு பெற்ற தொழிற்சங்கங்கள் இருந்தன. நடப்பு ஆண்டில் 535 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 269 தொழிற்சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டது. இரண்டு சங்கங்களின் பதிவு ரத்து நீக்கிவிடப்பட்டது. ஒரு சங்கம் கலைக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டு இறுதி நிலவரப்படி பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 3,031.

## தொழிற்சாலையில் ஒழுங்குமுறை விதிகள்.

தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சி யின் பயனாக 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் நிலவரப்படி 3,034 தொழிற்சங்கங்கள், 326 நிர்வாகங்கள், 24 உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவை எழுத்து மூலமாக ஒழுங்குமுறை விதிகளை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டுள்ளன.

## 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம்.

1978-79 கணக்காண்டுக்குரிய வருமானத்தில் 8.33 சதவீதம் என்ற குறைந்த அளவு ஊதியக் கொடை வழங்குவதற்கு வகை செய்து இந்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட ஒரு அவசரச் சட்டம் ஒன்றின் மூலம் 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

## சிறு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் பொருந்துவண்ணம் இச்சட்டத்தை நீட்டித்தல்.

1977 ஆம் ஆண்டில் எந்த ஒரு நாளிலும் 20 தொழிலாளர் களுக்குக் குறைவாகவும் ஆனால் 10 தொழிலாளர்களுக்குக் குறையாமலும் வேலைக்கு அமர்த்தியுள்ள அல்லது அமர்த்தி யிருந்த பின்வரும் வகுப்புக்களைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு, 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின் விதித் துறைகள் ஏற்கனவே பொருந்தச் செய்யப்பட்டுள்ளன:—

(1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 63/1948) 2 ஆம் பிரிவு (m) பகுதியைச் சேர்ந்த (i) உட்பகுதியின் பொருள் விளக்கத்திற்குள் வரும் தொழிற் சாலைகள்.

(2) தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்—நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1947) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (6) உட்பிரிவின் பொருள் விளக்கத்திற்குள் வரும் நிறுவனங்கள்.

(3) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1961) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (g) பகுதியின் பொருள் விளக்கத்திற்குள் வரும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள்; மற்றும்

(4) மலைத் தோட்டங்கள், அதாவது, தேயிலை, காப்பி, ரப்பர், சின்கோனா அல்லது ஏலக்காய் ஆகியவற்றைப் பயிரிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்பட்டுள்ள ஒரு நிலம்.

தொழிலாளர் நலன்—வேலை வாய்ப்புத் துறையின் 1980 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 24 ஆம் நாளிட்ட 133 ஆம் எண்ணுள்ள அரசாணையின் மூலம் அரசு 1978 ஆம் கணக்கு ஆண்டில் எந்த ஒரு நாளிலும் 20 தொழிலாளர்களுக்குக் குறைவாகவும், ஆனால் 10 தொழிலாளர்களுக்குக் குறையாமலும் வேலைக்கு அமர்த்தியுள்ள அல்லது அமர்த்தியிருந்த பின்வரும் வகுப்புகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு, 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின் விதித் துறைகள் நீட்டிக்கப்பட்டுள்ளன:—

(1) 1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் (மத்திய சட்டம் 32/1966) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (h) பகுதியின் பொருள் விளக்கத்திற்குள் வரும் நிறுவனங்கள்.

(2) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின் பொருள் விளக்கத்திற்குள் வரும் உணவகங்கள்.

(3) 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் (பணி நிலைமைகள்) பல்வேறு விதித்துறைகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 65/1955) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (d) பகுதியின் பொருள் விளக்கத்திற்குள் வரும் பத்திரிகை நிறுவனங்கள்.



1965 ஆம் ஆண்டு ஊதிய கொடை வழங்கல் சட்டத்தின்கீழ் விதிவிலக்கு வேண்டி, 1979 ஆம் ஆண்டில் நிருவாகங்களிடமிருந்து நான்கு விண்ணப்பங்கள் வரப்பெற்றன. இதில் மூன்று விண்ணப்பங்கள் அரசால் நிராகரிக்கப்பட்டன. ஒரு விண்ணப்பத்தில் நிருவாகம் பின்னர் ஊதியக் கொடை வழங்கியது.

1979ஆம் ஆண்டில் ஒரு நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு, அந்த நிறுவனத்திடமிருந்து அபராதத் தொகையாக ரூ. 50 பெறப்பட்டது.

முத்தரப்பு ஆலோசனைக் குழுக்கள் :

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் உள்ள சட்ட விதித்துறைகளைச் செயல்படுத்துவதுடன், தொழிலதிபர்கள், தொழிலாளர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் அரசு பெருமளவு பெற்றுள்ளது. ஆகவே, அவர்கள், இதற்காக, பல்வேறு தொழிலாளர்கள் நலச் சட்டங்கள் செயற்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்கும், அவற்றைச் சிறந்த முறையில் செயல்படுத்தும் பொருட்டு அவ்வப்போது ஆலோசனைகளை நல்குவதற்கும் பல குழுக்களை அமைத்தனர். இக்குழுக்கள் இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன :—

1. சட்ட அடிப்படையில் அமைந்த குழுக்கள் (Statutory Bodies).

2. மற்ற குழுக்கள் (Non-Statutory Bodies).

சட்ட அடிப்படையில் அமைந்த குழுக்கள்.

(1) குறைந்த அளவு ஊதிய (மாநில) ஆலோசனைக் குழு:

அரசு நியமித்த குழுக்களின் பணியை ஒருங்கிணைப்பதற்கும், குறைந்த அளவு ஊதிய வீதங்களை வரையறுப்பதில்/திருத்துவதில் ஆலோசனை அளிப்பதற்கும், 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 7ஆம் பிரிவின்படி இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு, தொழிலாளர் நல ஆணையாளரின் தலைமையின்கீழ், ஆறு தொழிலதிபர்களின்

பிரதிநிதிகளையும், ஆறு தொழிலாளர்களின் பிரதிநிதிகளையும், மூன்று அரசு அதிகாரிகளையும் உறுப்பினர்களாய்ப் பெற்றுச் செயலாற்றுகிறது. இக்குழு இவ்வாண்டு மும்முறை கூடியது ; மலைத்தோட்டங்கள், புகையிலை (பீடி தயாரிப்பு உட்பட) தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு வழங்கப்படும் குறைந்த அளவு ஊதிய வீதங்களைத் திருத்துவது குறித்து இக்குழு பரிசீலனை செய்தது.

(2) மலைத் தோட்டத்தொழிலாளர் (வீட்டு வசதி), ஆலோசனைக் குழு :

இக்குழு, 1955ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தைச் சேர்ந்த 53, 54 ஆம் விதிகளின்கீழ் அரசால் அமைக்கப்பட்டது. இக்குழுவில் மலைத் தோட்டத் தொழிலாளர், தொழிலதிபர்கள் பிரதிநிதிகள் நால்வரும், அரசு அதிகாரிகள் நால்வரும் உறுப்பினர்களாக உள்ளனர். சென்னை தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையின் அரசுச் செயலாளர் இக்குழுவின் தலைவராவர். வீட்டுவசதிக் குறித்து விவாதிப்பதும், வீட்டுவசதி தொடர்பான மலைத் தோட்டத் தொழிலாளர்கள் நலச் சட்டத்தின் விதித்துறைகளை முறையாகச் செயல்படுத்துவதற்கு வழிவகைகளைக் கூறுவதும் இக்குழுவின் முக்கிய பணியாகும். இக்குழு 1979ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 6ஆம் நாள் அன்று உதகமண்டலத்திலும், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14ஆம் நாளன்று ஏற்காட்டிலும் கூடியது. இக்கூட்டங்களில் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுத்தல், பழங்குடி மலைசாதி வகுப்பைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு ஆண்டு தோறும் ஒரு தொகையை வழங்குதல், தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி அளித்தல், பயிற்சிபெற்ற தொழிலாளர்களுக்குச் சிறந்த குடியிருப்புகளை வழங்க வகை செய்தல், ஆதிவாசி குடியிருப்புகளைச் சீராக வைத்திருக்க ஒரு மொத்தத் தொகையை வழங்குதல், தொழிலாளர்கள் குடியிருப்புகளைப் பழுது பார்த்தல், தொழிலாளர்களின் குடியிருப்புகளில் கண்ணாடிச் சன்னல்கள் அமைத்தல் ஆகியவை குறித்து பரிசீலிக்கப்பட்டது.



3. மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக் குழு :

1970ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் நீக்குதல்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் இச்சட்டத்தை நிருவகிப்பது குறித்து அரசுக்கு ஆலோசனை அளிப்பதற்காக, தொழிலாளர் நலன்–வேலைவாய்ப்புத் துறையின் அரசுச் செயலாளர் தலைமையின்கீழ் இக்குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவில் நான்கு தொழிலதிபர்களின் பிரதிநிதிகளும், நான்கு தொழிலாளர்களின் பிரதிநிதிகளும், இரண்டு அரசு அதிகாரிகளும் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு துணி, சிமெண்ட், காகிதத் தொழில்கள் குறித்து அமைக்கப்பட்ட துணைக் குழுக்களின் அறிக்கைகளுடன் விவாதித்து முடிவு செய்வதற்காக அறிக்கையாண்டில் 1979ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13ஆம் நாளன்று கூடியது.

4. 1976ஆம் ஆண்டு சம ஊதியச் சட்ட ஆலோசனைக் குழு:

1976ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டத்தை சேர்ந்த 6(1) பிரிவின் விதித்துறைகளையொட்டி அரசு, இச்சட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய நிறுவனங்களில் அல்லது பணிமனைகளில் எந்த அளவிற்குப் பெண்கள் வேலையில் அமர்த்தப்படலாம் என்பது குறித்து ஆலோசனை நல்குவதற்காக, அரசு, மாநில அளவிலான ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு தொழிற்சாலைகளின் தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், ஆகியோரின் பிரதிநிதிகளும், பெண் பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும் உட்பட இக்குழுவில் 19 பேர் உள்ளனர். தொழிலாளர் நல இணை ஆணையாளர் இக்குழுவின் தலைவராகவும், தொழிலாளர் நல துணை ஆய்வாளர் (ஆய்வுகள்) செயலாளராகவும் உள்ளனர். இக்குழு 1979ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5ஆம் நாளன்று சென்னையில் கூடி பல நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புகளைப் பற்றி விவாதித்தது.

## மற்ற குழுக்கள்.

### 1. மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு :

இக்குழு மாநில அளவிலான முதல்நிலை ஆலோசனைக் குழுவாகும். தொழிலாளர் சம்மந்தப்பட்ட கொள்கை குறித்த எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஆலோசனை பெறுவதற்கு அக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இக்குழுவிற்கு தொழிலாளர் நல அமைச்சர் தலைவராவர். இக்குழுவில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் ஆறுபேரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஏழுபேரும், அரசு அதிகாரிகள் ஐவரும், சட்டமன்ற உறுப்பினர்கள் நான்கு பேரும் உறுப்பினர்களாக உள்ளனர். தொழிலாளர் நல ஆணையாளர் இக்குழுவின் செயலாளராவர். இக்குழு 1979ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள், 1979ஆம் ஆண்டு சூலை திங்கள் 23ஆம் நாள், 1979ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19ஆம் நாள், கடைசியாக 1980ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23ஆம் நாள் ஆகிய நாட்களில் கூடி தொழில் உறவுகள் சம்பந்தமான பல்வேறு பொருட்கள் குறித்து விவாதித்தது.

### 2. மாநில மதிப்பீடு செயல்படுத்தும் குழு:

இக்குழுவில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் ஏழு பேரும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஏழு பேரும் உறுப்பினர்களாய் உள்ளனர். தொழிலாளர் நல இணை ஆணையாளர் இக்குழுவின் தலைவராகவும், தொழிலாளர் நல தனித்துணை ஆணையாளர் இதன் செயலாளராகவும் உள்ளனர். தொழிற்சாலைகளில் ஒழுங்குமுறை விதிகளைச் செயல்படுத்துவது குறித்தும், தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பது குறித்தும் தீர்மானிப்பதே இக்குழுவின் முக்கிய பணியாகும்.

இக்குழு 1979ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ஆம் நாள், 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29ஆம் நாள் ஆகிய நாட்களில் இருமுறை கூடி தொழிற்சாலைகளில் ஒழுங்குமுறை விதிகளை பற்றிய ஐந்து வழக்குகளை விசாரணை செய்ததோடுமட்டுமல்லாமல், ஐந்து தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிப்பதற்கும் பரிந்துரை செய்தது.



### 3. மாநில நடுவர் மன்ற மேம்பாட்டுக் குழு:

பணியிலிருந்து ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின்கீழ் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய நிறுவனங்களில் தொடர்பு கொண்டுள்ள தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் ஐந்துபேரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஐந்துபேரும், தொழிலதிபர்களையோ தொழிலாளர்களையோ சாராத தனிப்பட்ட உறுப்பினர்கள் இருவரும் உள்ளனர். இக்குழுவிடம் பின்வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:—

(அ) தொழிலதிபர்களும், தொழிலாளர்களும், மன்றத்திற்கு தாங்களாகவே முன்வந்து நடுவர் இணக்கத்தீர்ப்பின் மூலம் தீர்த்துக் கொண்ட வழக்குகள் தொடர்பாக குறித்த காலத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்தல் ;

(ஆ) பல்வேறு பகுதிகளிலும், தொழிற்சாலைகளிலும் நடுவர்களாகப் பணியாற்றத் தகுந்த நபர்களின் நாளது வரையிலான பெயர்ப் பட்டியல்களைத் தொகுத்து வைத்துவருதல், அவர்களுக்கு கொடுக்க வேண்டிய கட்டணங்களைக் குறித்தல்;

(இ) நடுவர்கள், வழக்கு சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள், பின்பற்றுவதற்கான கொள்கைகள், விதிமுறைகள், நடைமுறைகள் ஆகியவற்றை வகுத்தல்;

(ஈ) கருத்து வேறுபாடுகள் அல்லது தகராறுகளைத் தீர்த்து வைக்கும் நடுவர் மன்றத் தீர்ப்பினை ஏற்றுக் கொள்ளுமாறு முக்கியமான வழக்குகளில் கட்சிக்காரர்களுக்கு ஆலோசனை நல்குதல், அதன் மூலம் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்வதை தவிர்த்தல் ;

(உ) நடுவர் மன்றத்தின் மூலம் தகராறுகளை விரைவில் முடிப்பதில் கட்சிக்காரர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தேவையான வழக்குகளில் நடுவர் மன்ற நடைமுறைகளைத் துரிதப்படுத்துதல் ;

(ஊ) முத்தரப்புக்குழுவின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு நடுவர் மன்றத்தால் பொதுவாகத் தீர்ப்பளிக்கப்படும் தகராறுகளின் வகைகளை அவ்வப்போது குறிப்பிடுதல் ; குறிப்பாக இக்குழு எந்தெந்த தகராறுகளை நேரடியாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்பது குறித்தும் பெருத்த அளவிற்குப் பாதகமான விளைவுகளை அல்லது அதிகச் செலவோடு புதிய உரிமைகளை ஏற்படுத்தக் கூடியவை எவை என்பதையும் தீர்மானிப்பதற்குரிய விதிமுறைகளை வரையறுக்கலாம்;

(எ) தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் தாங்களாகவே முன்வந்து வழக்குகளை இணக்கமாகத் தீர்த்துக் கொள்வதற்கு வேண்டிய மனப்பக்குவத்தை ஏற்படுத்த அரசால் எடுக்கப்படும் சிறப்பு நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை நல்குதல்.

இக்குழுவின் உறுப்பினர்கள் மத்திய நிறுவனங்களின் சார்பில் உறுப்பினர்களாய் உள்ள தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தபின் நடுவர்களின் பட்டியலை மாற்றி அமைப்பது குறித்து இக்குழு 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 ஆம் நாளன்று கூடி முடிவு செய்தது.

## 4. மலைத் தோட்டத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு :

1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் நல சட்டத்தின் விதித்துறைகள் 1955 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் விதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்துவது குறித்து அரசுக்கு ஆலோசனை நல்கும் பொருட்டு இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு மலைத்தோட்டத் தொழிற்சாலை தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் ஏழு பேரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஏழு பேரும், தொழிலதிபரையோ, தொழிலாளர்களையோ சாராத தனிப்பட்ட நபர் ஒருவரையும் உறுப்பினராகக் கொண்டுள்ளது. தொழிலாளர் நல ஆணையாளர், இக்குழுவின் தலைவராவார். கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளர் (மலைத் தோட்டங்கள்) இதன் செயலாளராவார். இக்குழு 1979 ஆம் ஆண்டு சூன் 7 ஆம் நாள் அன்று உதகமண்டலத்திலும், 1979 ஆம் ஆண்டு டிசம்பர்



14 ஆம் நாள் ஏற்காட்டிலும் கூடியது. இக்கூட்டங்களில் ஏனையவற்றுடன் பின்வரும் முக்கியமான பொருட்கள் குறித்து இக்குழு விவாதித்தது:—

(1) வீட்டு வாடகைப்படியை அதிகரித்தல், ஆதிவாசிகளின் குடிசைகளை பராமரித்து வருதல்;

(2) உயர்தர மருந்துவகைகளை அளித்தல்;

(3) தொழிலில் பணியாற்றுவோருக்கு மழை அங்கிகளை அளித்தல்;

(4) மலைத் தோட்டங்களைப் பிரித்தல்.

## 5. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தைச் செயல்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஆலோசனை கூறும் முத்தரப்பு நிலைக்குழு :

1961 ஆம் ஆண்டு மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தையும், அச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கு ஆலோசனை கூறும் பொருட்டு இக்குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. மோட்டார்ப் போக்குவரத்து நிறுவனங்களின் தலைமை ஆய்வாளரான தொழிலாளர் நலத்துறை ஆணையாளரே (ஆய்வுகள்) இக்குழுவின் தலைவராவர். போக்குவரத்து தொழிலைச் சார்ந்துள்ள தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஐவரும், தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் ஐவரும் இக்குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம் நாள், 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 27 ஆம் நாள் ஆகிய நாட்களில் கூடி இச்சட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்துவது குறித்தும், மோட்டார் போக்குவரத்து பணியாளர்களுக்கு பயன் அளிக்கும் நல நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் விவாதித்தது.

## 6. 1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளை கவனிக்கும் முத்தரப்புக்குழு:

பீடி தொழில் நிறுவனங்களின் தலைமை ஆய்வாளராகிய தொழிலாளர் நல துணை ஆணையாளரே (ஆய்வுகள்) இக்குழுவின்

தலைவராவார். பீடித் தொழில் சார்பாக, தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் நான்கு பேரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் நான்கு பேரும் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். 1979 ஆம் ஆண்டு மார்ச்சு 12 ஆம் நாள், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் நாள் ஆகிய நாட்களில் இக்குழு கூடி இச்சட்டத்தையும் அதன் விதிகளையும், வீட்டில் இத்தொழில் செய்யும் தொழிலாளர் களுக்குச் செயல்படுத்துவது குறித்து விவாதித்தது.

## 7. தொழிலாளர் நலச் சட்டங்களுக்கான குழு :

சட்டப் பிரிவுகளில் விதித்துறைகளை ஏற்படுத்துவதன் வாயி லாகத் தொழிலாளர்களுக்கு எல்லா நலன்களும் பாதுகாப்பும் கிடைக்கும்படி வகை செய்வதே அரசின் கொள்கையாகும். இதனை எய்துவதற்கு, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னணித் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர்களை உறுப்பினராகக் கொண்டு முதன் முறையாக அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு "தொழிலாளர் நலச் சட்டங்களுக்கான குழு" எனப்படுகிறது. தொழிலாளர்களின் உரிமைகள், கடமைகள், அவர் களது வாழ்க்கை நிலை ஆகியவற்றைப் பாதிக்கும் தொழி லாளர்கள் நலச் சட்டங்களை ஆய்வு செய்யும் பொறுப்பு இக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்குழு 13 முறை கூடி, கீழ்காணும் தொழிற் சட்டங்கள் குறித்து அதன் கருத்துக்களைக் கூறியுள்ளது :

(1) தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தை ரத்து செய்வதற்கும் மீண்டும் சட்டம் இயற்று வதற்குமுரிய வரைவுச் சட்ட முன் வடிவு.

(2) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம்.

(3) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய விழாக்கால விடுமுறை நாட்கள்) சட்டம்.

(4) தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நலநிதிச் சட்டம்.



(5) 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.

(6) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்.

(7) 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம்.

(8) 1938 ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் சட்டம்.

(9) 1976-ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம்.

(10) 1961 ஆம் ஆண்டு பேறு கால நலச் சட்டம்.

இக்குழு தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்கள் நிலையை உறுதி செய்தல) சட்ட முன் வடிவு மீதான வரைவுச் சட்ட முன் வடிவையும் 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் நல ஈட்டுறுதிச் சட்டத்திற்கு மத்திய அரசு செய்யக் கருதியுள்ள திருத்தங்களையும் பரிசீலனை செய்தது.

## சிறந்த தொழில் உறவுக்கான பரிசு வழங்கும் திட்டம் :

சிறந்த தொழில் உறவுகளை வைத்து வரும் நிர்வாகத்தினருக் கும் தொழிற் சங்கங்களுக்கும் சிறப்புப் பரிசுகளை வழங்குவதன் மூலம், நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்குமிடையே சிறந்த தொழில் உறவை ஏற்படுத்தி அதைத் தொடர்ந்து பாதுகாத்து வரவும் ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு அரசு 1978 ஆம் ஆண்டில் சிறந்ததொரு நடவடிக்கையை எடுத்தது.

இத்திட்டத்தின் கீழ் 1978 ஆம் பரிசு ஆண்டில் பரிசு பெறு வதற்கு உரியோரைத் தேர்ந்தெடுக்க, உயர்நீதி மன்றத்தின் ய்வு பெற்ற நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்டு, தாழிலதிபர்கள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எழுவர்

அடங்கிய தேர்வுக்குழு ஒன்றை அரசு அமைத்தது. பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் தொழிலாளர் நல தனித்துணை ஆணையாளரைத் தலைவராகக் கொண்டு முக்கியகுழு உறுப்பினர்களிலிருந்து தொழிலாளர்களின் பிரதிநிதிகள் இருவரையும், தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் இருவரையும் கொண்ட துணைக் குழுவால் வகைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்று 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18 ஆம் நாளன்று நடைபெற்ற இக்குழுவின் இரண்டாம் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. ஒரு நிறுவனமோ அல்லது ஒரு சங்கமோ தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பரிசு பெற்றால் அப்பரிசுப் பொருளை அவர்களுக்கே நிலையாக அளிக்கப்பட வேண்டுமென அக்குழுவால் முடிவு செய்யப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 16 ஆம் நாள் 18 ஆம் நாள், செப்டம்பர்த் திங்கள் 1 ஆம் நாள், 4 ஆம் நாள் ஆகிய நாட்களில் நடைபெற்ற துணைக் குழுக் கூட்டங்களில் பெற்றுக் கொண்ட மனுக்களைப் பரிசீலனை செய்து, வெற்றி பெற்றவர்களைத் தெரிந்தெடுத்தது, 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் நாளன்று சிறந்த தொழில் உறவுக்கான பரிசுத் திட்டக்குழு கூடியது. 1978 பரிசு ஆண்டிற்கான பரிசு பெற வெற்றி பெற்றவரை ஒரு மனதாகத் தெரிந்தெடுத்தது.

1978 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் நாள் ராஜாஜி மண்டபத்தில் பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. அவ்விழாவில் 1978 ஆம் பரிசு ஆண்டிற்குரிய சிறந்த தொழில் உறவுக்கான பரிசுத் திட்டத்தின்கீழ் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## II. நிறுவனங்கள் சட்டம்.

### 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்.

தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் உடல் நலத்துக்கும் பாதுகாப்புக்கும் நலனுக்கும் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள நல நடவடிக்கைகளைத் திறம்படவும் கண்டிப்பாகவும் செயல் படுத்துவதற்காகத் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் அடிக்கடித் தொழிற்சாலைகளில் ஆய்வு நடத்துகிறது



இதற்காக, இச்சட்டம், விதிகள் ஆகியவற்றின் விதித்துறைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்துமாறு நிர்வாகத்தினருக்கு அறிவுரை வழங்கி ஆய்வுகள் மிகவும் கவனமாக மேற்கொள்ளப்படுகின்றன. நிர்வாகத்தினர் தொடர்ந்து, தவறும்போது அவர்கள் மீது வழக்குத் தொடரப்படுகிறது. இந்நடவடிக்கை தண்டனை வழங்கி திருத்துகின்ற நடவடிக்கையாக அமைகிறது.

1979 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 8,799 தொழிற்சாலைகள் இருந்தன. ஆனால் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 9,139 தொழிற்சாலைகள் இருந்தன. கூடுதலாக 992 தொழிற்சாலைகள் ஏற்பட்டுள்ளன. அதே நேரத்தில் 652 தொழிற்சாலைகள் நீக்கப்பட்டுள்ளன.

பதிவேட்டில் காணப்பெறும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை.

| | 1978. | 1979. |
|---|---|---|
| பிரிவு 2 m (1) .. .. .. | 8,251 | 8,598 |
| பிரிவு 2 m (2) .. .. .. | 548 | 541 |
| பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 5,60,976 | 5,72,713 |

1979 டிசம்பர் 31 ஆம் நாள் வரையில் உரிமக் கட்டணமாக ரூபாய் 48,60,246.20 வசூலிக்கப்பட்டுள்ளது.

### ஆய்வுகள் :

1979 ஆம் ஆண்டில், தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்களாலும் ஆய்வாளர்களாலும் 8,954 தொழிற்சாலைகள் ஒரு முறை ஆய்வு செய்யப்பட்டன. 6,881 தொழிற்சாலைகள் இரு முறை ஆய்வு செய்யப்பட்டன. 222 தொழிற்சாலைகள் மும்முறை ஆய்வு செய்யப்பட்டன. 1979 ஆம் ஆண்டில் 22.938

ஆய்வுகள் நடத்தப்பட்டன. மேற்சொன்னவற்றோடு, 1,048 ஞாயிறு ஆய்வுகளும், 2,349 சிறப்பு ஆய்வுகளும், 683 திடீர் ஆய்வுகளும், 861 இரவு ஆய்வுகளும், 4,347 சோதனை ஆய்வுகளும் நடத்தப்பட்டன.

வழக்குகள் தொடர்தல் :

இவ்வாண்டில் தொழிற்சாலைகள் சட்ட விதித் துறைகளை மீறியதற்காகத் தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது 2,958 வழக்குகள் தொடரப்பட்டன. இந்த ஆண்டில் 2,491 வழக்குகள் குறித்து முடிவெடுக்கப்பட்டது. 2,05,985 ரூபாய் அதாவது வழக்கு ஒன்றுக்கு சராசரி 82 ரூபாய் என்னும் வீதத்தில் அபராதம் வசூலிக்கப்பட்டது.

விபத்துக்கள் :

1978, 1979 ஆம் ஆண்டில் நடைபெற்ற விபத்துக்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு | உயிர் இழப்பு ஏற்படாத விபத்துக்கள். | உயிர் இழப்பு ஏற்பட்ட விபத்துக்கள். |
|---|---|---|
| 1978 .. .. .. .. | 30,507 | 39 |
| 1979 .. .. .. .. | 28,486 | 57 |

சிவகாசியிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலையில் நடைபெற்ற தீ விபத்து காரணமாகவும், சென்னை, பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 18 பேர் இறந்ததன் காரணமாகவும் உயிரிழப்பு ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும் தொழிற்சாலை ஆய்வகத்தின் ஒருங்கிணைந்த முயற்சியால் தொழிற்சாலைகளில் உயிர் இழப்பு இல்லாத விபத்துக்கள் குறைந்துள்ளன.



இம்மாநிலத்தில் உயிர் இழப்பில்லாத விபத்துக்களில் பெரும் பகுதியாக ஏற்படும் விபத்துக்கள் பெரும் துணி ஆலைகளிலுள்ள நூற்புத்துறையில் மரத் தறிகளைக் கொண்டு நெய்வதால் ஏற்படுகிறது. அத்துணி ஆலைகளின் மரத்தறிகளுக்குப் பதில் பிளாஸ்டிக் தறிகளை பயன்படுத்துமாறு நிர்வாகத்தினரைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. தொழிற்சாலை ஆய்வாளர்களும், தொழிற்சாலை கண்காணிப்பு ஆய்வாளர்களும் திடீர் ஆய்வுகளை தொழிற்சாலைகளில் மேற்கொண்டு, தொழிலதிபர்களிடம் பிளாஸ்டிக் சிட்டங்கள் பயன்படுத்தக் கேட்டுக் கொண்டதினால் துணி ஆலைகளில் விபத்துக்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்திருக்கிறது.

இவ்வாண்டில் அதிகமாக விபத்துக்கள் நடைபெற்ற தொழிற்சாலைகளில் அவ்வதிக விபத்துக்கள் நடைபெற்றதன் காரணங்களை அதிக கவனமான முறையில் ஆராய்வதற்கு தொழிற்சாலை ஆய்வாளர்களும், தொழிற்சாலை மேற்பார்வை ஆய்வாளர்களும் அத்தொழிற்சாலைகளை பார்வையிட்டனர். அவ்விபத்துக்கள் நிகழாவண்ணம் எடுக்கவேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கூறப்பட்டு பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தொழிற்சாலை ஆய்வகத்தால் இதுகுறித்து எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கையின் பயனாக தொழிற்சாலைகளில் விபத்துக்களின் எண்ணிக்கை குறைந்தன.

21 நாட்களும் அதற்கு அதிகமாகவும் வேலை செய்ய இயலாமல் போன தொழிலாளர்கள் தொடர்பான பெரும் விபத்துக்களை ஆய்வாளர்கள் ஆய்வு செய்து அத்தகைய விபத்துக்கள் மீண்டும் நடைபெறாவண்ணம் தடுப்பதற்கு வேண்டிய பரிகார நடவடிக்கை குறித்து நிர்வாகத்தினருக்குக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் விதித்துறைகளுக்கு முரண்பாடாக செயல் பட்டதனால் தொழிற்சாலைகளில் உயிர் இழப்புகள் அல்லது பெரும் உடல் ஊறுகள் ஏற்பட்டதின் காரணமாக அத்தகைய தொழிற்சாலை அதிபர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன.

எல்லாப் பெரும் தொழிற்சாலைகளிலும், 50 தொழிலாளர்
களுக்கு அதிகமாக வேலைக்கு அமர்த்தியுள்ள தொழிற்சாலை
களிலும், ஆண்டொன்றில் பத்து விபத்துக்களுக்கும் அதற்கதிக
மாகவும் விபத்துக்கள் நடைபெறும் தொழிற்சாலைகளிலும்,
''பாதுகாப்புக் குழுக்களை'' அமைக்கும்படி கேட்டுக் கொள்ளப்
பட்டனர். 279 தொழிற்சாலைகளில் இத்தகைய பாதுகாப்புக்
குழுக்கள் அமைக்கப்பட்டு, அவை திறம்படச் செயல்பட்டு
வருகின்றன.

## சிரமவீர் பரிசுகளும் (SHRAM-VIR AWARDS) மாநிலப் பாதுகாப்புப் பரிசுகளும்.

விபத்துக்களைத் தடுக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைகளை
எடுக்கவும் தொழிற்சாலைகளையும் அதன் தொழிலாளர்களையும்
ஊக்குவிக்கும் நோக்கத்தில் விபத்துக்கள் இல்லாத தொழிற்
சாலைகளுக்குத் தனி பரிசுகள் கொடுக்க அரசு தீர்மானித்தது.

1977 ஆம் சாதனை ஆண்டிற்கான பரிசுகளை சென்னை
ராஜாஜி மண்டபத்தில் 1979 ஆம் ஆண்டு சனவரி 19 ஆம்
நாளன்று நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டன.

1977 ஆம் சாதனை ஆண்டில் மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள்
பெறுவதற்குரிய 692 விண்ணப்பங்களும், சிரமவீர் பரிசுகள் பெறு
வதற்குரிய 69 விண்ணப்பங்களும் பெறப்பட்டன.

1978 ஆம் சாதனை ஆண்டில் மாநிலப் பாதுகாப்புப் பரிசு
களைப் பெற 785 விண்ணப்பங்களும், சிரமவீர் பரிசுகளைப்
பெற 70 விண்ணப்பங்களும் பெறப்பட்டன.

1978 ஆம் ஆண்டிற்குரிய மாநிலப் பாதுகாப்புப் பரிசுகளை
யும் சிரமவீர் பரிசுகளையும் பெறத் தகுதியுள்ளவர்கள் தெரிந்
தெடுக்கப்பட்டனர். 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம்
நாள் ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பரிசுகள்
வழங்கப்பட்டன.

1979 ஆம் ஆண்டிற்குரிய மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள்
சிரமவீர் பரிசுகள் ஆகியவை பெறுவதற்கான விண்ணப்பங்கள்
[illegible] போட்டியிடுவதற்காகத் தொழிற்சாலை



### பாதுகாப்புப் பாடமுறைகள்:

1979-ல் தொழிற்சாலைப் பாதுகாப்பு குறித்து 19 பாட
வகுப்புகள் தொழிலாளர்களுக்கும், மேற்பார்வையாளர்
களுக்கும் நடத்தப்பட்டுள்ளன. இப்பாட வகுப்பில் 590 பேர்
பயனடைந்துள்ளனர்.

### திரைப்படங்கள்:

திரைப்படங்களின் வாயிலாகவும், பொருட்காட்சியின் வாயி
லாகவும், தொழிலாளர்களின் ஆரோக்கியத்திற்கும் பாதுகாப்
பிற்கும் தகுந்த பிரச்சாரங்களை நடத்த இத்துறையும்,
ஏனைய முகவரமைப்புகளும் எடுத்துக் கொண்ட முயற்சியைக்
குறிப்பிடலாம்.

ஒவ்வொரு ஆண்டும் பாதுகாப்பும், ஆரோக்கியமும் குறித்த
திரைப்படச் சுருள்கள் இத்துறையால் வாங்கப்படுகிறது.
தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் தற்போது இது
குறித்து 29 திரைப்படச் சுருள்கள் இருக்கின்றன. அவை
பாதுகாப்பு வகுப்புகள் நடத்தப்பட்டபோது திரையிடப்பட்டன.
தொழிற்சாலைகளுக்கு தொழிலாளர்களின் நலனைக் கருதி
அவற்றைத் திரையிடுவதற்கு அவர்களுக்குக் கொடுக்கப்
படுகிறது.

### உற்பத்தித் திறன்:

தமிழ்நாட்டில், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி,
கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில்
ஆறு உற்பத்தித் திறன் குழுக்கள் உள்ளன. இக்குழுக்களுக்கு,
முந்திய ஆண்டில் இக்குழுக்கள் சந்தா தொகையாக வசூலித்த
தொகையில் 50 சதவீதத்திற்கு நிகரான தொகையை ஆண்
டொன்றுக்கு 3,000 ரூபாய் என்ற உயரளவிற்கு உட்பட்டு
பொதுமானியத்தின் மூலம் இக்குழுக்களுக்கு ஆண்டுதோறும்
நிதி உதவி வழங்கப்படுகிறது.

1978–79, 1979–80 ஆம் ஆண்டுகளுக்கு இந்த ஆறு உற்பத்தி
திறன் குழுக்களுக்கு ரூபாய் 30,840 பொது மானியமாக
வழங்கப்பட்டன.

மேற்சொன்ன நிதி உதவியோடு உற்பத்தித் திறனை
அதிகரித்தல் என்னும் கொள்கையை வளர்ப்பதற்காக, ''தரம்,
நம்பத்தகுந்த தன்மை'' என்னும் பொருள் குறித்து, 1970 ஆம்
ஆண்டு ஆசிய உற்பத்தித் திறன் பற்றி இத்துறையில் செய்தித்
திரைப்படம் ஒன்றும் எடுக்கப்பட்டது.

உற்பத்தித்திறன் குறித்த திரைப்படங்களைக் கொண்டுள்ள திரைப்பட நூலகம் ஒன்றும் உள்ளது. தொழிலாளர்களின் பயனுக்காகத் திரையிட்டு காட்டுவதற்குத் தேவைப்படுகின்ற, தொழிற்சாலைகள், உற்பத்தித் திறன் குழுக்கள் கல்வி நிலையங்கள் ஆகியவற்றிற்கு இச்செய்தித் திரைப்படங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

சுகாதாரம்:

மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் தொழிற்சாலைச் சுகாதாரம் ஆரோக்கிய ஆய்வுக்கூடம் இணைந்த பிரிவை அரசு நிறுவி உள்ளது.

இந்த ஆய்வுக்கூடத்தை நிர்வகிக்கும் பொறுப்பை மருத்துவத் தலைமை அதிகாரி (தொழிற்சாலைகள்) மேற்பார்வையில் விடப்பட்டுள்ளது. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் மருத்துவ தலைமை அதிகாரி (தொழிற்சாலைகள்), தொழிற்சாலைகளை சோதனைச் செய்யும் மருத்துவ அதிகாரியாக அறிவிக்கப்பட்டார். இம்மருத்துவ அதிகாரி, தொழிலாளர்கள் தொழில்சார்ந்த நோய்களுக்கு ஆட்படக்கூடிய குறிப்பாக ரசாயனம், கல்நார், உரம், அச்சுத்தொழில், ரப்பர், முந்திரி தொழிற்சாலைகள் ஆகியவற்றை ஆய்வு செய்கிறார். அவர், அபாயகரமான பணியிலும்,அபாயத்தன்மை வாய்ந்த இரசாயனத் தொழிலிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களைப் பரிசோதித்தும் அத்தொழிலாளர்கள் தொழில்சார்ந்த நோய் எவற்றாலும் பாதிக்கப் பட்டுள்ளார்களா என்றும் ஆய்வுக் கூடத்திப் பரிசோதனை நடத்தி வருகிறார். அப்பரிசோதனையின் அடிப்படையில், அந்நோய்களில் இருந்து விடுபடுவதற்காக மருத்துவ வழிமுறைகளையும் தனிநபர் பாதுகாப்பு நடவடிக்கைப் பயன்களையும் இம்மருத்துவ அதிகாரி கூறி வருகிறார். இந்த அதிகாரி தொழிற்சாலைத் துப்புரவு தொழில் சார்ந்த நோய்கள் ஆகியவற்றை விளக்குவதற்காகப் பல்வேறு தொழிற்சாலைகளில் நடத்தப்படும் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் தொழிலாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் விளக்கவுரைகள் நிகழ்த்தி வருகிறார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு முந்திரி எண்ணெயினால் ஏற்படும் தோல் அழற்சி நோயை ஆழ்ந்து பகுப்பாய்வு செய்யும் பொருட்டு, நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை அரசு 1979 ஆம் ஆண்டு அமைத்தது. இந்நிபுணர் குழுவில், தொழிற்சாலை ஆய்வகத்தின் மருத்துவ தலைமை அதிகாரி (தொழிற்



சாலைகள்) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் உள்ள சிறப்பறிஞர்கள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இக்குழு, ஆழ்ந்த பகுப்பாய்வுக்குப் பிறகு தனது அறிக்கையை துறையின் தேவையான பரிந்துரைகளுடன் அரசுக்கு அனுப்பியது. அரசு இவ்வறிக்கையைப் பரிசீலித்து, எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் எந்நேரங்களில் முடியுமோ அந்நேரங்களிலெல்லாம் பின்வரும் வசதிகளைத் தொழிலாளர்களுக்குச் செய்து கொடுக்கும்படித் தொழிலதிபர்களைக் கேட்டுக்கொள்ளுமாறு தொழிலாளர் நல ஆணையாளருக்கு அறிவுரை வழங்கி உள்ளது.

1. தோலை மென்மைப்படுத்த தேங்காய் எண்ணெய் உபயோகித்தல்;

2. ரப்பர் பாதுகாப்பு கை உறைகள், தடுப்புத் தன்மை வாய்ந்த மென்மைப் பசைகள் ;

3. சோப்பு வழங்குதலும் சுத்தம் செய்யும் வசதிகளும்.

4. உடற்பகுதிகளில் முந்திரி, முந்திரி எண்ணெய் தெறிப்பதிலிருந்து தடுப்பதற்கு முழுக்கை கொண்ட பருத்தி மேலங்கி துணியில் செய்த முகமூடியும் வழங்குதல்.

தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம்.

1979-ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் வரும் கடைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, அவற்றில் வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| இச்சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை. | 2.11,720 |
| வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை .. | 2.08,079 |

தமிழ்நாடு 1947ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளை செயல்படுத்துவதில், எல்லா நிறுவனங்களுக்கும் சென்று பார்வையிடுவது, தொடக்க அறிவிப்பினைக் கொடுத்து, அதன் வாயிலாக தொழிலாளர்களின் உரிமைகளைப் பற்றியும், நிர்வாகத்தின் கடமைகளைப் பற்றியும்

கடைச் சொந்தக்காரர்களுக்கு எடுத்துரைத்து அறிவுறுத்துவது என்னும் போக்கினை இத்துறை மேற்கொண்டுள்ளது. தொழிலதிபர்கள் தங்களது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தக் குறைபாடுகளைத் திருத்துவதற்குக் கவனம் செலுத்துவார்களேயானால் அவர்கள் மீது மேல் நடவடிக்கை எடுப்பது கைவிடப்படுகிறது. விதிகளை மீறுகின்ற தொழிலதிபர்களுடைய நிறுவனங்களின் மீது அடிக்கடி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தொழிலதிபர்கள் தங்கள் குறைகளைத் திருத்திக்கொள்ளும் வரையில் அவர்கள் மீது அடிக்கடி வழக்குகள் தொடரப்படும்.

இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள், 3,53,402 முறையான ஆய்வுகளையும், 11,968 திடீர் ஆய்வுகளையும், 29,791 விடுமுறை ஆய்வுகளையும், 3,077 சிறப்பு ஆய்வுகளையும், 8,199 இரவு ஆய்வுகளையும் நடத்தினர்.

1979ஆம் ஆண்டு தொடக்கத்தில் 3,618 வழக்குகள் முடிவுறாத நிலையில் இருந்தன. 10,572 வழக்குகள் இவ்வாண்டு அனுமதிபெற்றன. 14,190 வழக்குகளில், 11,067 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. 22 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 2 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. 27 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 1979ஆம் ஆண்டில் அபராதத் தொகையாக ரூ. 3,15,026 வசூலிக்கப்பட்டன. அதாவது வழக்கு ஒன்றுக்கு சராசரியாக ரூ. 30 அபராதம் விதிக்கப்பட்டது. இவ்வாண்டின் இறுதியில் 3,072 வழக்குகள் முடிவுறாத நிலையில் உள்ளன.

இச் சட்டத்தின் 41ஆம் பிரிவின் கீழ் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகள் பற்றியும், மேல் முறையீடுகள் ஒரு வகை செய்யப்பட்டது பற்றியும் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.—

| | |
|---|---|
| ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறா நிலையில் இருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 223 |
| இவ்வாண்டில் வரப்பெற்ற மேல்முறையீடுகளின் எண்ணிக்கை. | 168 |
| மேல்முறையீடுகளின் மொத்த எண்ணிக்கை .. | 391 |



| | |
|---|---|
| இவ்வாண்டில் முடிவு பெற்ற மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | |
| இவ்வாண்டு முடிவில் முடிவுறா நிலையில் உள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 168 |

1979-ஆம் ஆண்டில், நிலையான விதிவிலக்கு ஒன்றும் தற்காலிக விதிவிலக்குகள் 4-ம் அரசு வழங்கியது. (பொருட்காட்சிகள், திருவிழாக்கள் நீங்கலாக) 20 தற்காலிக விலக்குகளையும், மூன்று இனத்தைப் பொறுத்த மட்டில் பொருட்காட்சிகள் திருவிழாக்களுக்குரிய தற்காலிக விலக்கினையும் தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் வழங்கியுள்ளார்.

தொழிலாளர் நல துணை ஆணையாளர் 106 இனங்களில் தற்காலிக விலக்குகளை அளித்துள்ளார். 21 இனங்களில் இச்சட்டம் செயல்படுவதைத் தற்காலிகமாக தள்ளிவைக்க அனுமதித்துள்ளார்.

இவ்வாண்டின் இறுதியில், இச்சட்டத்தின் 51-ஆம் பிரிவின் கீழ் இரண்டு விண்ணப்பங்கள் தொழிலாளர் நல ஆணையாளருக்கு வரப்பெற்று முடிவுறாத நிலையில் இருந்தன.

திருத்தம் :—

தமிழ்நாடு 1948-ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் விதிகளில் 16எ என்ற விதிக்குப்பின்னர் 16எஎ (பணிப்பதிவேடு வழங்கலும், பராமரித்தலும்) என்ற ஒரு புது விதியை தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையின் 1979-ஆம் ஆண்டு ஜூன் 28-ஆம் நாளிட்ட 1,074-ஆம் எண்ணுள்ள அரசாணையின் மூலமாகக் கொண்டுவந்தது.

## தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம்.—

1980-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாளன்றுள்ளபடி 67,106 தொழிலாளர்களைக் கொண்ட 19,958 உணவகங்கள் இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இவைகளி 10,165 நிறுவனங்கள் தொழிலாளர்களைக் கொண்டிருந்தன. 3 நிறுவனங்கள் தொழிலாளர்கள் இல்லாமல் இருந்தன

1979-ஆம் ஆண்டில் பதிவுக் கட்டணமாக (தற்காலிகமானது) ரூ. 2,79,646-30 பெறப்பட்டது.

இந்த ஆண்டில், ஆய்வாளர்கள், இச்சட்டத்தின் கீழ் 39,027 முறையான ஆய்வுகளையும், 845 திடீர் ஆய்வுகளையும், 818 விடுமுறைநாள் ஆய்வுகளையும், 272 தனி ஆய்வுகளையும் செய்தனர்.

1979-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இச் சட்டத்தின் விதித்துறைகளையும், விதிகளையும் மீறியது குறித்த 1,211 குற்ற வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன. 2,166 வழக்குகள் இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டன. அவற்றில், 2,575 வழக்குகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டன; 3 வழக்குகள் விடுதலையில் முடிந்தன; 8 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன; 2 வழக்குகள், தள்ளுபடி செய்யப்பட்டன; 1979-ஆம் ஆண்டில் 99,065 ரூபாய் அபராதத் தொகையாகப் பெறப்பட்டது. அதாவது, வழக்கு ஒன்றுக்கு சராசரி 39 ரூபாய் என்னும் வீதத்தில் அபராதம் வசூலிக்கப்பட்டது. ஆண்டு இறுதியில் 789 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன.

ஆண்டுத் தொடக்கத்தில், உணவகங்களில் உள்ள தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியது அல்லது அகற்றப்பட்டதை எதிர்த்து, இச்சட்டத்தின் 19-ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட 43 மேல்முறையீடுகள், மேல்முறையீட்டு அதிகாரிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல அதிகாரிகளிடம் முடிவு செய்யப்படாமலிருந்தன. இந்த ஆண்டில், 88 மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த ஆண்டில், 99 மேல்முறையீடுகள் முடிவு செய்யப்பட்டன. ஆண்டின் இறுதியில் 32 மேல் முறையீடுகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன.

1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்,—

1979 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 93,413 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திக் கொண்ட 423 மலைத் தோட்டங்கள் இருந்தன. 1979 ஆம் ஆண்டு ஜனவரி 1-ம் நாள் முதல் 1979-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாள் வரையில் உள்ள கால



அளவில் 1,432 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியிருந்த 14 மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. 4,554 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியிருந்த 18 மலைத் தோட்டங்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் 419 மலைத் தோட்டங்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாளன்றுள்ளவாறு தோராயமாக 90,291 தொழிலாளர்கள் பணியாற்றினர்.

இந்த ஆண்டு தொடக்கத்தில், 17 வழக்குகள் நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படாமல் இருந்தன. இந்த ஆண்டில் 93 வழக்குகள் அனுமதிக்கப்பட்டன. 50 வழக்குகளுக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. ரூ. 7,085 அபராதம் விதிக்கப்பட்டது. அதாவது சராசரியாக வழக்கு ஒன்றுக்கு ரூ. 141 அபராதம் விதிக்கப்பட்டது. எந்த வழக்கும் விடுதலையில் முடியவில்லை. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் நீதிமன்றங்களில் 60 குற்ற வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன.

மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரிடம் ஏற்பளிப்பைப் பெற்ற பின்னர், மலைத் தோட்ட அதிபர்கள், மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டும் கம்பளி ஆடைகளையும் கனப்பு அடுப்பிற்கு முன் போடப்படும் தரை விரிப்புகளையும் வழங்கினர்.

1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் இலவசமாக மருத்துவ வசதிகளுக்கு வகை செய்ய வேண்டியது மலைத் தோட்ட அதிபர்களின் கடமைகளில் ஒன்றாகும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

மலைத் தோட்டங்களிலுள்ள தோட்ட மருத்துவமனைகளிலும் மருந்தகங்களிலும், இச்சட்டத்தின் கீழ் சுகாதாரம் குறித்த விதித் துறைகளைச் செயல்படுத்துவதற்கு, மலை தோட்டத் தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இரண்டு மருத்துவ அதிகாரிகள் உதகமண்டலம், நாகர்

கோவிலைத் தலைமையிடங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர். 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழி லாளர்கள் சட்டத்தின் தொடர்புடைய விதித்துறைகளின் கீழ் அறிக்கை ஆண்டில் இவர்கள் 489 முறையான ஆய்வுகளையும் 6 திடீர் ஆய்வுகளையும் நடத்தினர்.

உதகமண்டலம், குன்னூர், கூடலூர், வால்பாறை, ஏற்காடு, திண்டுக்கல், நாகர்கோவில் ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்ட ஏழு ஆய்வாளர்களும், மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின் கீழ் பணி புரிகின்றனர். அவர்கள் இச் சட்டத்தையும் அதன்கீழ் இயற்றப் பட்டுள்ள விதிகளையும் செயல்படுத்தி வருகின்றனர். அவர் கள் 1,091 முறையான ஆய்வுக்ளையும், 76 தனி ஆய்வுகளையும், 70 திடீர் ஆய்வுகளையும் 138 ஞாயிற்றுக்கிழமை ஆய்வு களையும் நடத்தினர்.

## 1966 ஆம் ஆண்டு பீடிசுருட்டுத் தொழிலாளர் பணி நிலை நிலைமைகள் சட்டம்.

செயல்படுத்தும் பணியாளர் அமைப்பு—

1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின்படி; தொழிலாளர் நல ஆணையாள ரின் கீழ், தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளர் (ஆய்வுகள்) தொடர்ந்து முதன்மை ஆய்வாளராகப் பணி யாற்றி வருகிறார். மாநிலத்தில் 12 தொழிலாளர் நல ஆய்வாளர்கள் 28 தொழிலாளர் துணை ஆய்வாளர்கள், 206 தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் இச்சட்டத்தை அமுல்படுத்தி வருகிறார்கள். வட்டாரத் தொழிலாளர் நலத் துறை துணை ஆணையாளர்களும் தங்களது அதிகார வரம்பின் கீழ் வரும் இடத்தில் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இச் சட்டத்தின்படி தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுகளை நடத்தி வருகின்றார்கள்.

பதிவு செய்தல்:

தமிழ்நாட்டில் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் வளாகங்கள் 1,514 ஆகும். அவற்றில் 705 வளாகங்கள் வணிகக்குறியிட்ட உரிமையாளர்களுடையதாகும்



அறிக்கையாண்டில் இந்தத் தொழில் வளாகங்களில் 14,260 பணியாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். சுருட்டு தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளவர்களில் இரண்டு இலட்சம் பேர் அப்பணியை வீடுகளில் இருந்தவாறே பணிபுரிந்து வருகிறார்கள்.

1,514 தொழில்வளாகங்களில் 1,311 தொழில் வளாகங்கள் தங்களது உரிமங்களைப் புதுப்பித்துக்கொள்ள விண்ணப் பித்துள்ளன; 203 தொழில் வளாகங்கள் உரிமம் கோரி இன்னும் விண்ணப்பிக்கவில்லை. தவறு புரிந்தோரின்மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு உரிமக்கட்டண வகையில் ரூபாய் 24,708 வசூலிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுகள்:

1979 ஆம் ஆண்டு 2,746 முறையான ஆய்வுகளும், ஏழு விடுமுறை ஆய்வுகளும், 70 திடீர் ஆய்வுகளும், 6 தனி ஆய்வு களும் ஆய்வாளர்களால் நடத்தப்பட்டன.

வழக்குத் தொடர்தல்:

வழக்குத் தொடர்தல் தொடர்பான புள்ளி விவரங்களுடன் மனநிறைவு அடைந்து விடாமல், சட்டத்தின் விதிகளின் அனுகூலங்கள் தொழிலாளர்களைச் சென்றடையக் கூடிய முறையில் இச்சட்டத்தை செயல்படுத்த இயலும் வகையில் ஆய்வாளரகம் சீரமைக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் அனுகூலங்கள், தொழிலாளர்களுக்குக் கிடைக்கு மாறு நீட்டிக்கப்பட்டிருக்காத இடங்களில், காணப்படுகின்ற தவறுகளை ஆய்வு ஆணை மூலமாகவும், அல்லது காரணம் காட்டுமாறு கேட்டும் அறிவிப்புகள் மூலமாகவும் தொழில் அதிபர்களுக்குச் சுட்டிக்காட்டி, ஆணையில் கண்டுள்ளவற்றை நிறைவேற்றுவதற்கு அத் தொழில் அதிபர்களுக்கு இரண்டு வார கால அவகாசம் தருமாறு ஆய்வாளர்களுக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது. அப்படியும் கூட, தொழில் அதிபர்கள் சட்டத்திற்கும், விதிகளுக்கும் இணங்கி நடக்கத் தவறுவார் களேயானால் அப்போதுதான் அவர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். 1979-ம்

ஆண்டு தொடக்கத்தில், 76 வழக்குகள் நீதிமன்றத்தில் முடிவுறாத நிலையில் இருந்தன. 1966 ஆம் ஆண்டு பீடி-சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், விதிகளை மீறியதற்காக தொழில் அதிபர்கள் மீது 119 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்த 195 வழக்குகளில், 117 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஐந்து வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ஒரு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இரண்டு வழக்குகள் நீதி மன்றத்தில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டன. 1979 ஆம் ஆண்டின் இறுதியில் 70 வழக்குகள் முடிவுறாமல் நிலுவையில் இருந்தன முடிவுற்ற 117 வழக்குகளில் விதிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை ரூபாய் 8,880 ஆகும். அதாவது ஒவ்வொரு வழக்கிலும் சராசரியாக சுமார் 76 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

<u>சட்டத்தையும் விதிகளையும் செயற்படுத்துவதற்குரிய பொறுப்பு:</u>

இச்சட்டத்தையும் விதிகளையும் செயல்படுத்துவதற்கு வணிகக் குறியிட்ட உரிமையாளர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று அரசு விரும்பியது. இந்த நோக்கத்துடன் ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது துணை ஒப்பந்தக்காரர்களாகவோ தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தாலும் உரிமம் எடுக்க வேண்டியது வணிகக் குறியிட்ட உரிமையாளர்களின் கடமையாகும் என்ற வகையில் சட்டத்தைத் திருத்தக்கோரி இந்த அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. கோயம்புத்தூரில் உள்ள வணிகக் குறியிட்ட உரிமையாளர்கள், தொழிலாளர்கள் நல துணை ஆணையாளர் (ஆய்வுகள்) முன்னிலையில் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி தாங்களே உரிமம் எடுக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

<u>பீடித் தொழிலாளர் நலன்:</u>

பீடி-சுருட்டு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் நலன் கருதி, மத்திய அரசு, மேல்வரி (செஸ்) வசூலிப்பதுடன், அவர்களுக்கு நல நடவடிக்கை மேற்கொள்வதற்காக



ஒரு நிறுவனத்தையும் ஏற்படுத்தி உள்ளது. அந்த நிறுவனத்தின் மூலமும் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் உதவி ஒத்துழைப்பின் பேரிலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழிலாளர் நலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

(1) 1979 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர் மாவட்டம், பெருந்துறையில் உள்ள ராமலிங்கம் காச நோய் மருத்துவமனையில் பீடி தொழிலாளர்களுக்காகவும் அவர்களைச் சார்ந்திருப்போர்களுக்காகவும், 10 படுக்கைகளை ஒதுக்குவதற்கும் ஒவ்வொரு நோயாளிக்கும் ஏற்படுகின்ற செலவுத் தொகைகளை அவர்கள் ரசீது (பில்ஸ்) கொடுத்தவுடன் ஏற்பதற்கும் வசதி செய்யப்பட்டது.

(2) மேலும் ஒரு மருந்தகத்திற்கு மத்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. அது வேலூரில் அமைக்கப்படவிருக்கிறது.

(3) திருநெல்வேலியில் பீடித் தொழிலாளர்களுக்கென கட்டப்படவிருக்கும் மருத்துவமனைக்கு இடம் தெரிந்தெடுக்கப்படுவதற்கு மத்திய அரசு ஒரு குழுவை நியமித்துள்ளது.

(4) 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்படி பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 1979–80 ஆம் ஆண்டில் உதவிப்பணம் வழங்க மத்திய அரசு வகை செய்துள்ளது. உதவிப்பணம் வழங்கக்கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் பெங்களூரில் உள்ள பீடித் தொழிலாளர் நல ஆணையாளரால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன:

<u>1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்—செயல்படுத்துப் பணியாளர்கள்:</u>

தமிழ்நாட்டில் தொழிலாளர் நலத்துணை ஆணையாளர் (ஆய்வுகள்) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின்படி தொடர்ந்து தலைமை ஆய்வாளராக இருந்து வருகிறார். இம்மாநிலத்தில் இச்சட்டம் 12

தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், 28 தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களாகவும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தொடக்க ஆய்வுகளை தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களும் தொழிலாளர் நல ஆய்வாளர்களும் செய்து வருகின்றனர். மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் 5 சதவீத சோதனை ஆய்வுப் பணிகளைத் தொழிலாளர் நலத்துணை ஆய்வாளர்கள் செய்ய வேண்டியுள்ளது.

பத்திரப்பதிவு.

ஐந்து தொழிலாளர்களுக்கும் மேற்பட்டு வேலை பார்க்கின்ற மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. 1979 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 1,539 பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இருந்தன. 151 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் புதிதாக செய்யப்பட்டன. இதனால் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 1,690 ஆக உயர்ந்தது. இந்த 1,690 நிறுவனங்களில், 147 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இந்த ஆண்டு பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டன பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனத்தின் எண்ணிக்கை இந்த ஆண்டின் இறுதியில் 1,543 ஆக இருந்தது இவ்வாண்டின் இறுதில் பணியில் அமர்த்தப் பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 49,550 ஆக இருந்தது.

1979 ஆம் ஆண்டில் உரிமைக் கட்டணமாக ரூபாய் 80,335.14 வசூலிக்கப்பட்டது.

வழக்கு தொடர்தல்.

சட்டவிதி முறைகளின் நலன்களைத் தொழிலதிபர்கள் முழு மனதுடன் தொழிலாளர்களுக்கு வழங்கி வருகின்றார்களா என்பதை அரசு அக்கறையுடன் கவனித்து வருகின்றது. 1979 ஆம் ஆண்டில் தொடக்கத்தின் 100 வழக்குகள் தீர்வு காணப் படாமல் நிலுவையாக இருந்தன. சட்டத்தையும், அதன் விதிகளையும் தொழிலதிபர்கள் செவ்வையாகச் செயல்படுத்தப் படாமைக்காக 280 வழக்குகள் 1979 ஆம் ஆண்டு தொடரப் பட்டன. 1979 ஆம் ஆண்டு 243 வழக்குகளில் குற்றம் சாட்டப்



பட்டவர்கள் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது. அபராதத் தொகையாக ரூ. 27,155 வசூலிக்கப் பட்டது; அதாவது வழக்கு ஒன்றுக்கு சராசரியாக 111 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மூன்று வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஒரு வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர் கண்டித்து விடப்பட்டனர். நான்கு வழக்குகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. 1979 ஆம் ஆண்டு இறுதியில், 129 வழக்குகள் முடிவுறாமல் நிலுவையாக இருந்தன.

ஆய்வுகள்.

1979 ஆம் ஆண்டு 3,828 முறையான ஆய்வுகளும், [illegible] முறை ஆய்வுகளும், 348 திடீர் ஆய்வுகளும், 103 தனி ஆய்வுகளும், ஆய்வாளர்களால் நடத்தப்பட்டுள்ளன.

1955-ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர் (பணி நிலைமைகளும் பல்வேறு விதித்துறைகளும்) சட்டம்:

இச்சட்டத்தின்கீழ் 'ஆய்வாளர்கள்' என அறிவிக்கப்பட்ட 12 தொழிலாளர் நல ஆய்வாளர்கள், 28 தொழிலாளர் நலத் துறை ஆய்வாளர்கள் இச்சட்டத்தின் விதித்துறைகளைச் செயல் படுத்தி வருகின்றனர், 1979 ஆம் ஆண்டில் இறுதியில் 3,155 தொழிலாளர்களைப் பணிக்கமர்த்தி 46 நிறுவனங்கள் இருந்தன.

1976 ஆம் ஆண்டு விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்கள் (பணிநிலைமைகள்) சட்டம்.

மருந்துத் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ள இச்சட்டம், 1976-ம் ஆண்டு மார்ச்சு 6-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. தொழிலாளர் நல ஆணையர், தொழிலாளர் நலத் துணை ஆணையர் (ஆய்வுகள்) தொழிலாளர் நல வட்டாரத்துணை ஆணையர், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத்துணை ஆய்வாளர்கள், தொழிலாளர்கள், தொழிலாளர் நலத்துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள்

ஆகியோர் இந்தச் சட்டத்தின் 8-வது பிரிவின்கீழ் 'ஆய்வாளரா அறிவிக்கப்பட்டுள்ளனர். மற்ற சில தொழில்களுக்கு இ சட்டத்தை நீட்டிப்பது குறித்த செயற்குறிப்பு மத்திய அரசி பரிசீலனையில் உள்ளது.

**1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத் தலும் நீக்கலும்) சட்டம்.**

தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகத்தில் பணி புரியும், தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள் தொழிற் சாலைகள் நீங்கலாக மற்றத் தொழில் நிறுவனங்களைப் பொருத்தமட்டில்' பதிவு செய்யும் அதிகாரிகளாகவும், தொழிற் சாலைகளைப் பொறுத்தமட்டில், தொழிற்சாலைகள் மேற் பார்வை ஆய்வாளர்கள் பதிவு செய்யும் அதிகாரிகளாகவும், தொழிற்சாலைகள் நீங்கலாக மற்ற தொழிற் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலை ஆய்வாளர்கள் உரிமம் வழங்கும் அதிகாரிகளாகவும், 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதலும் நீக்கலும்) சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலை ஆய்வாளர்கள் உரிமம் வழங்கும் அதிகாரிகளாக வும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அதிகாரிகள் யாவரும், அதாவது தொழிற்சாலை ஆய்வாளர் கள் தொழிலாளர் நல ஆய்வாளர்கள், மலைத் தோட்ட ஆய் வாளர்கள், தொழிலாளர் நலத்துணை ஆணையாளர்கள், தொழி சாலைகள் உதவி ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் அனைவரும் இச்சட்டத்தின்படி, ஆய்வாளர்களென அறிவிக்கப்பட்டுள்ளனர். தவிரவும், வட்டாரங்களில் உள்ள, தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்களும், தொழிலாளர் நல உதவி ஆணையாளர்களும், தொழிற்சாலை மேற்பார்வை ஆய்வாளர்களும், தலைமையிடங்களிலுள்ள தொழிலாளர் நல ஆணையாளரும், தொழிற்சாலைத் தலைமை ஆய்வாளர்களும் தொழிற்சாலைகள் துணைத்தலைமை ஆய்வாளர்களும்,



தொழிலாளர் நலத் துணை ஆணையாளரும், (ஆய்வுகள்) இச் சட்டத்தின் கீழ் ஆய்வாளர்களென அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர் நல ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (ஒப்பந்தத் தொழிலாளர் கள்) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப் படுத்துதலும் நீக்கலும்) சட்டம் தொடர்புடைய பணியைக் கவனித்து வருகிறார்.

தொழிற்சாலை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல ஆய்வாளர் கள் முறையே தொழிற்சாலைகளையும், தொழிற்சாலை அல்லாத மற்ற நிறுவனங்களையும் பொறுத்தமட்டில் இச்சட்டத்தை அமுல்படுத்ததும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறார்கள்.

இச்சட்டத்தின் கீழ் 599 பேர் பிரதான தொழில் அதிபர் களாகவும், 1,542 பேர் ஒப்பந்தக்காரர்களாகவும் 1979 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டனர். 1,194 ஆய்வுகள் சார்நிலைப் பணியாளர்களால் நடத்தப்பட்டுள்ளன.

வழக்குகள்

இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியதற்காக அறிக்கை ஆண்டில் நிர்வாகங்களின் மீது 7 வழக்குகள் தொடரப்பட்டன. பத்து வழக்குகளில் தண்டனை கொடுக்கப்பட்டன. இவ்வாண்டு இதன் வாயிலாக ரூபாய் 1,400 அபராதத் தொகை வசூலிக்கப் பட்டது. இவ்வாண்டின் இறுதியில் 2 வழக்குகள் முடிவுறாமல் நீதி மன்றத்தில் நிலுவையாக இருந்தன.

**1946 ஆம் ஆண்டு தொழில் வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம்.**

1979 ஆம் ஆண்டில், 37 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகள், சான்றளிக்கும் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டன. 15 இனங்களைப் பொறுத்தமட்டில் இந்த நிலை ஆணைகளில் திருத்தங்களும் இந்த ஆண்டில் சான்றளிக்கப்பட்டன. மேல் முறையீட்டு அதிகார மன்றங்களாக உள்ள தொழிலாளர் நல நீதி மன்றங்கள் இவ்வாண்டில் இச்சட்டத்தின்கீழ் ஒரு மேல்முறை யீட்டை முடிவு செய்துள்ளது.

<u>தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய விழா விடுமுறைகள்) சட்டம்.</u>

சட்டம், தொழிற்சாலைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (m) பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள ''தொழிற்சாலைகள்'' அனைத்திற்கும் பொருந்துகின்றது அல்லது சட்டத்தின் 85 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ் ஒரு தொழிற்சாலையாகக் கருதப்படுகின்ற எந்த இடத்திற்கும் பொருந்துகிறது. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (f) பகுதியில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள மலைத் தோட்டங்களுக்குப் பொருந்துகிறது. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (6) பகுதியில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளவாறு கடைகள்—நிறுவனங்கள் அனைத்திற்கும் பொருந்துகிறது. மேலும் 1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் [பணி நிலைமைகள் சட்டத்தின் 2(h)] ஆம் பிரிவின்கீழ் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அனைத்திற்கும் 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் அட்டவணையிடப்பட்ட வேலைகளுக்கும் இச் சட்டத்தின் விதித் துறைகள் பொருந்தும்.

இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியமைக்காக ஆய்வாண்டில் தொழிற்சாலை நிர்வாகங்களுக்கெதிராக 3,325 வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றில் 3,805 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. மூன்று வழக்குகள் விடுதலையில் முடிந்தன. ஆறு வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. இவ்வாண்டில் அபராதமாக 87,585 ரூபாய் வசூலிக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் 1,198 வழக்குகள் முடிவுறாமல் நீதிமன்றங்களில் இருந்தன.

இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள், இவ்வாண்டில் 1,47,228 ஆய்வுகளை நடத்தினர்.

## III ஊதியங்கள் குறித்து சட்டமியற்றுதல்.

<u>1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்:</u>

1979 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் வேலைகளுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை அரசு திருத்தியமைத்துள்ளது.

(1) பொது மோட்டார் போக்குவரத்தில் வேலை.

(2) வேளாண்மை, வேளாண்மையைச் சார்ந்துள்ள வேலை.



கீழ்க்காணும் வேலைகள் குறித்து குறைந்த அளவு ஊதிய விதங்களை நிர்ணயிப்பதில் அரசுக்கு ஆலோசனை வழங்க, குறைந்த அளவு ஊதியங்கள் ஆலோசனைக்குழு அமைக்கப் பட்டுள்ளது.

(1) செயற்கை வைரம் தீட்டும் தொழில் வேலை.

(3) பாட் இலை (Bought Leaf) தேயிலைத் தொழிற்சாலைகளில் வேலை.

கீழ்க்காணும் வேலைகள் குறித்து, குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயிக்க திருத்தியமைக்க குறைந்த அளவு ஊதியங்கள் ஆலோசனைக் குழுக்கள் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

(1) திரைப்பட தொழில் (தயாரிப்பு, விநியோகம், விளம்பரம் உட்பட) வேலை,

(2) வெட்டுமரத்தொழிலில் வேலை.

(3) கைத்தறித்துணி நெசவுத் தொழிலில் வேலை.

(4) கைத்தறிப்பட்டு நெசவுத் தொழிலில் வேலை.

(5) தையல் தொழிலில் வேலை.

(6) (அரசு மருத்துவ மனைகள், தொழிலாளர் காப்புறுதி மருத்துவ மனைகள், மருந்தகங்கள் அல்லாத) ஏனைய மருத்துவ மனைகள் தனியார் மருத்துவ மனைகளில் வேலை.

(7) வீட்டிற்கு வேண்டிய தட்டுமுட்டுப் பாத்திரங்கள் செய்தல் தொழிலில் வேலை.

(8) வெளுத்தல், சாயம் தோய்த்தல் தொழிலில் வேலை.

(9) காப்பிக்கொட்டை பதப்படுத்தல் தொழிலில் வேலை.

பின்வரும் தொழில்களில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயிக்கும் நோக்கத்துடன், அரசு அவற்றை 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்க்க உத்தேசித்துள்ளது.

(1) வளத்தொழிலில் வேலை.

(2) சோப்பு செய்யும் தொழில் வேலை.

இச்சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்டுள்ள ஆய்வு அதிகாரிகள் இவ்வாண்டு 43,921 ஆய்வுகள் செய்துள்ளார்கள். இச்சட்டத்தையும் விதிகளையும் மீறியமைக்காகத் தொடரப்பட்ட வழக்குகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| (1) | ஆண்டின் தொடக்கத்தில் நீதி மன்றங்களில் விசாரணை முடியாமல் இருந்த வழக்குகள் .. | 421 |
| (2) | இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் .. .. | 316 |
| (3) | தண்டனை வழங்கப்பட்டு முடிந்த வழக்குகள் .. .. | 839 |
| (4) | விடுதலையில் முடிந்த வழக்குகள் .. | 3 |
| (5) | திரும்பப் பெறப்பட்ட வழக்குகள். | 2 |
| (6) | ஆண்டின் இறுதியில் விசாரணை முடியாமல் இருந்த வழக்குகள் .. | 393 |
| (7) | அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூபாய் .. .. | 35,000 |

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் ''அதிகாரிகள் என்று அறிவிக்கப்பட்ட தொழிலாளர் நீதிமன்றங்களில் தலைமை தாங்கும் அதிகாரிகள்'' இவ்வாண்டில் குறைந்த அளவு ஊதியம் கொடுக்கப்படாதது பற்றித் தாக்கல் செய்த 58 கோரிக்கை மனுக்களை தீர்த்து வைத்தனர்.

## 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்:

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகமும் ஏனைய தொழிற் நிறுவனங்களைப் பொறுத்தவரை தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகமும் இச்சட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றன.

இச்சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காகத் தொடரப்பட்ட 977 வழக்குகளில், தொழில் அதிபர்கள் மீது வழக்கு தொடர அனுமதி வழங்கப்பட்டது. 1,278 வழக்குகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. (ஆண்டுத் தொடக்கத்தில் விசாரணை முடிவாகாமல் இருந்த வழக்குகளும் இதில் அடங்கும்) இரண்டு வழக்குகள் விடுதலையில் முடிந்தன. ஒரு வழக்கு திரும்பப்பெறப்பட்டது. 410 வழக்குகள் விசாரணை முடிவாகாமல் உள்ளன. ரூ. 27,470 அபராதமாக வசூலிக்கப்பட்டது.



ஊதியங்கள் கொடுப்பது குறித்த 320 கோரிக்கைகள் ஆண்டுத் தொடக்கத்தில் விசாரணை முடிவாகாமல் இருந்தன. 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ், தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக உதவி ஆணையாளரிடம் 404 உரிமைக் கோரிக்கைகள் இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில், இந்த ஆண்டில் 520 உரிமைக் கோரிக்கைகள் குறித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டு இறுதியில், 204 உரிமைக் கோரிக்கைகள் விசாரணை முடிவாகாமல் இருந்தன.

இச்சட்டத்தின் கீழ் வரும் தொழில் நிறுவனங்களில் ஆய்வாளர்கள் 50,311 ஆய்வுகளை மேற்கொண்டனர்.

## 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் :

இச்சட்டம், ஆண், பெண் தொழிலாளர்களுக்கு ஒரே விதத்தில் ஊதியம் வழங்குவதற்கும், வேலை வாய்ப்பில் ஆண், பெண் என்ற அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கவும் வகை செய்கிறது.

இச்சட்டத்தின் 9-வது பிரிவின் கீழ் ஆய்வாளர்களையும், 7-வது பிரிவின் கீழ் அதிகாரிகளையும் அரசு நியமித்துள்ளது.

இந்த ஆண்டில், இச்சட்டத்தின் 7 (ஏ) பிரிவின் கீழ் தொழிலாளர் நல அதிகாரிகளுக்கு 24 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. இதைத் தவிர, ஆண்டின் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த 24 விண்ணப்பங்கள் மீது தொழிலாளர் நல அதிகாரிகளால் முடிவெடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் இச்சட்டத்தின் 7 (பி) பிரிவின் கீழ் ஒரு மேல்முறையீட்டைத் தொழிலாளர் நலத்துணை ஆணையாளர் தீர்த்து வைத்தார்.

## IV. சமூகப் பாதுகாப்பு

### 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல வகை விதித்துறைகள் சட்டம் :

தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி வடிவில ஓய்வு கால நன்மைகளும், அவர்கள் கடமையாற்றும்போது இறந்துவிட்டால் அவர்களைச் சார்ந்துள்ள நெருங்கிய உறவினர்களுக்கு

1979 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் நிலவரப்படி பெறப் பட்ட/இறுதியாக முடிக்கப்பட்ட/திருப்பப் பட்ட எஞ்சியுள்ள கோரிக்கைகள் குறித்த விவரங்கள் காட்டும் விவர அட்டவணை வருமாறு :—

**1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம்.**

| | |
|---|---|
| இறுதியாக முடிக்கப்பெறாமல் இருந்தகோரிக்கைகள் | 41,308 |
| இறுதியாக்கப்பட்ட கோரிக்கைகள் .. .. | 25,386 |
| தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் தவறுகளை திருத்தும்படி திருப்பப்பட்ட கோரிக்கைகள். | 9,175 |
| முடிவு பெறாமல் நிலுவையாக இருந்த கோரிக்கைகள் | 6,747 |

இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருங்கால வைப்பு நிதியில் பணம் செலுத்தியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகைகளின் விபரம் வருமாறு :—

| இறுதியாகத் தீர்த்துவைக்கப் பட்ட கோரிக்கைகளின் வகைப்பாடு. | இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | கொடுக்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| (1 | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1. இறப்பு .. .. .. | 1,742 | 67·04 |
| வயது முதிர்வு பெற்றமை | 3,750 | 341·22 |
| நிரந்தரமாக இயலாமை யுற்றமை. | 322 | 22·80 |
| 4. பதவி விலகல் .. .. | 15,429 | 238·94 |
| 5. ஆட்குறைப்பு .. .. | 3,874 | 101·19 |
| 6. இடம் பெயர்தல் .. .. | 16 | 0·66 |
| 7. பல்வகை .. .. .. | 253 | 7·75 |



**1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதிய திட்டம்**

| | |
|---|---|
| 1. 1—4—1979 முதல் 31—12—1979 வரை இறுதியாக முடிக்கப்பெறாமல் இருந்த கோரிக்கைகள். | 28,20 |
| 2. இறுதியாக்கப்பட்ட கோரிக்கைகள் .. | 12,20 |
| 3. தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் தவறுகளைத் திருத்தும்படி திருப்பி அனுப்பப்பட்ட கோரிக்கைகள். | 11,69 |
| 4. இறுதியாக்கப்படாமல் நிலுவையாக இருந்த கோரிக்கைகள். | 4,30 |

*தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்காக கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 21·80 இலட்சம் ஆகும்.

**1976 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வைப்பீட்டுத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டம்.**

| | |
|---|---|
| இறுதியாக முடிக்கப்பெறாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை (1—4—1979 முதல் 31—12—1979 நிலவரப்படி) .. .. | 1,65 |
| இறுதியாக்கப்பட்ட கோரிக்கைகள் .. .. | 57 |
| தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் தவறுகளைத் திருத்தும்படி திருப்பி அனுப்பப் பட்ட கோரிக்கைகள் .. .. .. | 73 |
| இறுதியாக்கப்படாமல் நிலுவையாக இருந்த கோரிக்கைகள் .. .. .. .. | 33 |

*தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்காக கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 25·20 இலட்சம்.

இச்சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட முன் பணம்.

1—4—1979 முதல் 31—12—1979 வரை 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் சந்தாதாரர்களுக்கு அவர்களுடைய வைப்பு நிதிக் கணக்கில் இருந்து அவர்கள் திரும்பச் செலுத்தாத வகையில் கீழ்க்கண்ட இனங்களுக்கு முன் பணம் கொடுக்கப்பட்டது :—

| | முன்பணம் கொடுக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை. | கொடுக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| | (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| குறைந்த வருவாய் தொகுதியினருக்கான வீடு கட்டும் திட்டம். | 2,071 | 57·33 |
| 15 நாட்களுக்கு மேல்பட்டு கதவடைப்பு செய்யப்பட்ட அல்லது மூடப்பட்ட நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள். | 2,816 | 12·68 |
| சந்தாதாரர்கள்/அவர்களது குடும்பத்தினருக்கு மருத்துவச் செலவு. | 251 | 2·60 |
| மகள் திருமண/சந்தாதாரர் குழந்தைகளின் மெட்ரிகுலேஷன் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு. | 3,493 | 64·60 |
| எதிர்பாராத நிலநடுக்கம் வெள்ளம் போன்ற நிலைமைகள். | 16,646 | 71·48 |

வட்டார வைப்பு நிதி ஆணையர்களால் இச்சட்டத்தின்படி பாக்கித் தொகை செலுத்தத் தவறியவர்களிடமிருந்து அவர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை மாநில வருவாய்த் துறை அதிகாரிகளின் மூலம் வரி வசூல் சட்டத்தின்கீழ் நிலவரி வசூலிப்பதைப்போல வசூலிக்கத் தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1980 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் அன்று இறுதி நிலவரப்படி பல்வேறு மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமும் 531 இனங்கள் நிலுவையாக உள்ளன.



784 வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் முடிவடையாமல் உள்ளன. வட்டாரக் குழு (தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி) இரண்டு முறை கூடியது. அக்குழு, மத்திய அறங்காவலர் குழுவிற்கும், மத்திய அரசுக்கும், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள சந்தாதாரர்களின் தேவைகளை ஈடுசெய்ய மேலும் ஒரு துணை வட்டார அலுவலகத்தை மதுரையில் ஏற்படுத்தவும் பரிந்துரை வழங்கியுள்ளது. இத்திட்டம் மத்திய அறங்காவலர் குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மதுரையில் துணை வட்டார அலுவலகம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம்.

1948 ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டத்தின்படி தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டு சனவரி தொடக்கத்தில் தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம், தற்போது தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்றெல்லா மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டம், மின்விசையைப் பயன்படுத்தி இயங்குவனவற்றில் 10 பேர்களும் அதற்கு மேலும் பணிபுரிகின்றவர்களையும், மின்விசையைப் பயன்படுத்தாதவற்றில் 20 பேர்களும் அதற்கு மேலும் பணிபுரிகின்றவர்களையும் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல் ஊதியம் பெறுகின்ற தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இத்திட்டத்தின்கீழ் பின்வரும் உதவிகள் அளிக்கப்படுகின்றன:—

(1) மருத்துவ உதவி (மருத்துவப் பொருள் வடிவில்).

(2) நோய்க்கால உதவி (பணமாக).

(3) பேறுகால உதவி (பணமாக).

(4) இயலாமையுற்றோருக்கு உதவி (பணமாக).

(5) சார்ந்துள்ளவர்கள் நல உதவி (பணமாக).

(6) இறுதிச் சடங்குகளுக்கான செலவுத் தொகை (பணமாக).

மேற்கூறப்பட்ட உதவித் திட்டங்களில் முதலாவது இனம் தவிர பிறவற்றிற்குப் பணமாகக் கொடுக்கப்படும் இவ்வைந்து திட்டங்களும் நீங்கலாக தொழிலாளர் நல மாநிலக் காப்புறுதிக் கழகத்தால், நாடு முழுவதும் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் நேரடிப் பார்வையில் இயங்கி வருகின்றன. மருத்துவ உதவியளிக்கும் திட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பு மாநில அரசைச் சார்ந்ததாகும். மருத்துவ உதவியளிக்கும் திட்டத்தில் மருத்துவச் செலவு 1:7 என்ற விகிதத்தில் முறையே மாநில அரசும் தொழிலாளர் நல காப்புறுதி நிறுவனமும் பகிர்ந்து கொள்ளுகின்றன. ஆயினும் தொழிலாளர் நல மாநில காப்புறுதிக் கழகம் பகிர்ந்து கொள்ளத்தக்க செலவிற்கு ஓர் குறிப்பிட்ட தொகையை வரையறுத்துள்ளது.

1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து செலவுத் தொகை கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | விரிவாக்கப்பட்ட மருத்துவக் கவனிப்பு. | ஒரு தொழிலாளியின் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 85. |
| 2. | முழு மருத்துவக் கவனிப்பு | ஒரு தொழிலாளியின் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 115. |

1979 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதியிலிருந்து இம்மாநிலத்தில் இத்திட்டம் அமுலாக்கப்பட்ட 44 மையங்களில் காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் குடும்பங்கள் அனைத்திற்கும் முழு மருத்துவக் கவனிப்பு வசதிகள் கிடைக்குமாறு வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் ஒரு



தொழிலாளியின் குடும்பத்திற்கு 1—5—1979 முதல் ஒரு ஆண்டிற்கு ரூ. 115 இத்திட்டத்தின் கீழ் செலவழிக்கலாம் என வரையறுக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய திட்டத்தைத் தவிர மருந்துகள் மற்றும் இதர மருத்துவ வசதிக்கான செலவுகள் வகையில் ஒரு தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 25 -க்கும் அதிகமாகவும் ரூ. 50-க்கும் மிகாமல் ஏற்படும் செலவு உச்ச வரம்புக்கு மேல் அனுமதிக்கப்படும். இச்செலவையும் மாநில அரசும் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகமும் 1:7 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும்.

இந்த மருத்துவச் செலவு அனைத்தும் முதலில் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. பின்னர் இந்தச் செலவு தமிழ்நாடு மாநில கணக்காய்வாளர் II கொடுக்கும் சான்றிதழின் பேரில் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தினரிடம் இருந்து மீண்டும் பெறப்படுகிறது.

தற்போது சென்னையிலுள்ள அயனாவரம், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகள் உள்ளன. தொழிலாளர் நலக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் நிலையான 107 மருந்தகங்களும், ஒன்பது நடமாடும் மருந்தகங்களும், மூன்று பயன்பாட்டு மருந்தகங்களும், இரண்டு பகுதி நேர மருந்தகங்களும், மூன்று மத்திய மருந்துப் பண்டக சாலைகள் மற்றும் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் ஒரு சித்த மருத்துவ மனையும் செயல்பட்டு வருகின்றன.

நான்கு தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகளில் உள்ள படுக்கையின் எண்ணிக்கை வருமாறு :—

| | |
|---|---|
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, சென்னை. | 625 |
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, மதுரை. | 202 |
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, கோயம்புத்தூர். | 500 |
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை. | 206 |

கலைஞர் கருணாநிதி நகரிலுள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை நாளடைவில் 500 ஆக உயர்த்தப்படும்.

சென்னை வட்டாரத்தில் காப்புறுதி செய்து கொண்டவர்களின் குழந்தைகள் ஒரு இலட்சம் பேர்களுக்கு ஆண்டொன்றுக்கு 1,38,500 ரூபாய் செலவில் முத்தடுப்பு ஊசி குத்தும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

அய்க்கிய நாடுகள் சங்கத்தின் நிதி உதவியுடன் எட்டு முதல் வகுப்பு குடும்ப நல அறுவைச் சிகிச்சை நிலையங்கள் 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து தொடங்கப்பட்டுள்ளன. மூன்று தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளிலும் சைதாப்பேட்டையிலுள்ள இரண்டாவது தொழிலாளர் நலக்காப்புறுதி மருந்தகத்திலும் குடும்ப நல அறுவைச் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன.

இத் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் இம்மாநிலத்தில் செயற்படுத்தப்படுகின்ற ஹோட்டல்களிலும், கடைகளிலும் சினிமா கொட்டகைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்களும் பயன் பெறும் பொருட்டு பல புதியநிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

1978-ஆம் ஆண்டு பிப்ரவரி 12-ம் தேதி முதலும் மே திங்கள் பதினான்காம் தேதி முதலும் இத்திட்டம் பல புதிய நிறுவனங்களுக்கு இரண்டு கட்டங்களில் மேற்கூறிய நாட்களில் புதிய பல நிறுவனங்களுக்கு நீட்டிக்கப்பட அரசு வகை செய்துள்ளது. மேலும், 1978-ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள் முதல், ஆறு படுக்கைகள் கொண்ட சித்த வைத்தியப் பிரிவு கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளில் தொடங்கப்பட்டுள்ளது.

1979-ஆம் ஆண்டு அக்டோபர் 21-ஆம் நாள் முதல் இத் திட்டம் அரக்கோணம், சங்கரி, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தை குமாரபாளையம், திருவரம்பூர், மானாமதுரை, சிவகாசியின் சுற்றுப்புற பகுதி ஆகிய இடங்களுக்கும் நீட்டிக்க அரசு பரிசீலனை செய்து வருகிறது.



சென்னையிலுள்ள நடமாடும் தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகத்தை இரண்டாகப் பிரிக்கவும், ஆர்.வி. நகர் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ வசதி அளிக்கும் பொருட்டு கொடுங்கையூரில் நிலையான ஓர் மருத்துவமனையைத் திறக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது. ஏற்கனவே இத்திட்டம் அமுலாக்கப்பட்ட இடங்களில் நடமாடும் மருந்தகங்கள் வழக்கம் போல் இயங்கி வரும்.

கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனையில் தீவிர இதய மருத்துவக் கவனிப்பு (Intensive Cordiac Care) பிரிவு ஒன்று திறப்பதற்கான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் உள்ளது. 1980-ஆம் ஆண்டு ஏப்ரல் இருபத்தொன்பதாம் நாள் முதல் தாம்பரத்திலுள்ள தொழிலாளர் நல காப்புறுதி மருத்துவமனை புதிய கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நலக் காப்புறுதி மருததுவமனையொன்று வேலூரில் புதிதாகக் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. இக்கட்டிடத்தின் கட்டுமானப் பணி முடிவடைந்துவிட்டது. இக்கட்டிடம் விரைவில் திறக்கப்படும்.

இரண்டும் அதற்கு மேற்பட்ட மருத்துவர்களுடன், வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வரும் 46 தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்களுக்குச் சொந்தமாக கட்டிடம் கட்டுவதற்கு தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது. தனியார் வாடகைக் கட்டிடங்களில் அமைந்துள்ள இந்த 46 மருந்தகங்களுக்குக் கட்டிடம் கட்ட நிலம் கையகப்படுத்தல் பல்வேறு நிலைகளில் தீவிரமாக உள்ளது.

சந்தா வசூல்.—

1979-80 ஆம் ஆண்டில் 14,04,21,056 ரூபாய் சந்தாக வசூலிக்கப்பட்டது.

பண உதவிகள்.—

1979-80ஆம் ஆண்டில் காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கு ரூ. 6,40,58,394 பணம் உதவியாக கொடுக்கப்பட்டது.

வழக்குகள் :—

1979-80 ஆம் ஆண்டில் உள்ள சந்தாத் தொகையை வசூலிக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

| | |
|---|---|
| தொடரப்பட்ட வழக்குகள் .. .. .. | 29 |
| தண்டிக்கப்பட்டவை .. .. .. | 12 |

அபராதம் மூலம் தண்டிக்கப்பட்ட வகையில் ரூபாய் 780.

## 1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீடுச் சட்டம்.

1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் கீழ்க்கண்ட சமயங்களில் இழப்பீட்டுத் தொகை வழங்க வகை செய்கிறது :—

(அ) தொழிற்சாலைகளில் வேலை காரணமாகவும் வேலை செய்யும் போதும் ஏற்படுகின்ற விபத்துக்கள் :

(ஆ) மரணத்தை உண்டாக்குகின்ற அல்லது பணியாற்ற இயலா வண்ணம் செய்து விடுகிற தொழில் சார்ந்த சில நோய்கள் இது தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மலைத் தோட்டங்கள், போக்குவரத்து கட்டுமான பணிகள், இரயில்வே, அபாயம் விளைவிக்கிற சில குறிப்பிட்ட தொழில்கள் ஆகியவற்றில் பணி புரிகின்ற தொழிலாளர்களுக்கு (தொழிலதிபரின் வாணிபம் அல்லது தொழிலுக்கு அன்றி வேறு விதத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நாட்கூலி பெறும் தொழிலாளர்கள் நீங்கலாக) ஏனைய தொழிலாளர்களுக்கு இது பொருந்தும்.

1979 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாளன்றுள்ளபடி 589 வழக்குகள் முடிவுறாத நிலையிலிருக்கின்றன. இந்த ஆண்டில் 855 வழக்குகள் வரப்பெற்றன. மொத்தம் 1,444 வழக்குகளில் 995 வழக்குகள் மீது முடிவெடுக்கப்பட்டன.

இவ்வாண்டு இறுதியில் 449 வழக்குகள் முடிவுறா நிலையில் இருக்கின்றன.



## தொழிற்சாலை விபத்துக்கள்—துயர் துடைப்பு நிதி.

ஆண்டொன்றிற்கு 15,000 ரூபாய் தொடர்மானியத்துடன் அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல் உடைத்தல், வெடி வைத்து தகர்த்தல், கிணறு தோண்டுதல் அல்லது பிற தொழில்களில் பணிபுரியும் போது காயமேற்பட்டு அதனால் என்றுமே பணியாற்ற இயலாமற்போன தொழிலாளர்களுக்கு அல்லது மரணமடைந்த தொழிலாளரைச் சார்ந்துள்ளவர்களுக்கு இந் நிதியிலிருந்து உதவியளிக்கப்படும். 1923 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்கு நிதி வசதி இல்லாத தொழிலதிபர்களின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அல்லது வேறு காரணங்களுக்காக இழப்பீடு பெற இயலாத தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோருக்கு இந் நிதியிலிருந்து துயர் துடைப்பு உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப் போதுமான நிதிவசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் இந் நிதியிலிருந்து தொகை பெறுவர். 1979'ல் இந் நிதியிலிருந்து இரண்டு பேருக்கு 3,000 ரூபாய் துயர் துடைப்பு நிதி அனுமதிக்கப்பட்டது.

1972 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டம்:

இச்சட்டத்தின் கீழ், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர்கள் நல உதவி ஆணையாளர்கள் அவரவர் பகுதிகளில் கட்டுப்பாட்டு அதிகாரிகளாக இருப்பர் என்றும், தொழிலாளர் நல துணை ஆணையாளர்கள் அவரவர் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளில் மேல் முறையீட்டதிகாரிகளாக இருப்பர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு அதிகாரிகள் 1,413 வழக்குகளை முடிவு செய்துள்ளனர். மேல் முறையீட்டதிகாரிகள் அறிக்கையாண்டில் 408 மேல் முறையீடுகளை முடிவு செய்துள்ளனர்.

## V. தொழிலாளர் நல நடவடிக்கைகள் :

தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம் (அரசு உதவி பெறுவது) தனியார் தொழிலாளர் திட்டம்:

மாநில சமூக நலக் கொள்கையைக் கருத்தில் கொண்டு பெருகிவரும் தொழிலாளர்களுக்குப் பாங்குடைய வசதியான வீடுகள் கட்டிக் கொடுப்பது தவிர்க்க முடியாததாகிறது. ஏனெனில், பெரும்பாலோருக்குச் சொந்தமான வீடுகள் வைத்துக் கொள்ள வசதியிருக்காது அல்லது அவர்கள் பணியிடத்திலிருந்து வெகு தொலைவில் வசிக்கின்றனர். சில தொழிலதிபர்கள் தங்களுடைய பணியாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் குடியிருப்பு வசதி அளித்துள்ளனர். ஆனால் இது பிரச்சினையைச் சிறிது கூட தீர்ப்பதாக இல்லை. எனவே. பணியிடங்களுக்கு அருகில் வசதியுள்ள இடங்களில் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க உதவித் தொகை பெறும் வீட்டு வசதித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களின் நன்மைக்காக வீடுகள் கட்ட பொதுத் துறை, கூட்டுறவுத் துறை, தனியார் துறை ஆகியவற்றிற்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகின்றது இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (இரண்டடுக்கு மாடி கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 5,350 ரூபாயும், இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (பல அடுக்கு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 6,050 ரூபாயும், வழக்கமான இரு அறைகள் கொண்ட வீடு (இரண்டு மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 7,600 ரூபாயும், வழக்கமான இரண்டு அறைகள் கொண்ட வீடு (பல மாடிக் கட்டிடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 8,500 ரூபாயும் நிதியுதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1979-80 ஆம் ஆண்டில் புதிய வீட்டு வசதித் திட்டம் எதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. எனினும் 1978-79 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு கடனாக 1,60,500 ரூபாயும் உதவித் தொகையாக 1,60,500 ரூபாயும் வழங்கப்பட்டன.



## மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்:

இத் திட்டம் மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் தங்களது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதை நோக்கமாகக் கொண்டதாகும். 1979 ஆம் ஆண்டில் ஓர் அறை கொண்ட குடியிருப்பு ஒவ்வொன்றும் 4,000 ரூபாய் உச்சவரம்புச் செலவில் கட்டப்படுகின்றன. அத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும் 37·5 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படும். வாட்டர்ஃபால் அஞ்சலில் உள்ள சக்தி எஸ்டேட் நிருவாகத்திற்கு உத்தேசிக்கப்பட்ட 24 குடியிருப்புக்களுக்காக கடன் தொகையாக 48,000 ரூபாயும், உதவித் தொகையாக 36,000 ரூபாயும் அரசு வழங்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | வீடுகள் தேவைப்படுகின்ற தனித் தொழிலாளர்கள் உட்பட குடும்பங்களின் பொத்த எண்ணிக்கை. | 36,028 |
| 2. | வழங்கப்பட்ட தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை. | 34,608 |
| 3. | வழங்கப்படவிருக்கும் தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை. | 1,420 |
| 4. | தற்போதுள்ள தரமற்ற வீடுகளின் மொத்த எண்ணிக்கை. | 928 |

## தமிழ்நாடு மலைத்தோட்டத் தொழிலாளர் விதிகளில் 51(2) விதியின்கீழ் உள்ள வழக்குகள் :

இந்த ஆண்டில் இந்த விதித் துறையின்கீழ் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம், தொழிலதிபர்கள் தாக்கல் செய்த 18 விண்ணப்பங்களைத் தீர்த்து வைத்தது.

## தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் :

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. இதில் தொழிலாளர் நல அமைச்சர் தலைவராகவும், அரசு, தொழிலதிபர், தொழிலாளர்கள் ஆகியோர் [illegible]

உறுப்பினர்களாகவும் உள்ளனர். தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் நலனுக்காக இந்த வாரியம் அநேக நலத் திட்டங்களை மேற்கொண்டது. தற்போது உள்ள நல நடவடிக்கைகள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## 1. தொழிலாளர் நல நிலையங்கள்:

இவ்வாரியம் தற்பொழுது (1) அம்பத்தூர் (சென்னை), (2) செம்பியம் (சென்னை), (3) குடியாத்தம், (4) வாணியம்பாடி (5) கோயம்புத்தூர், (6) ஒத்தக்கல் மண்டபம், (7) திருப்பூர், (8) மதுரை, (9) திண்டுக்கல், (10) சிவகாசி, (11) கோவில்பட்டி ஆகிய இடங்களில் 11 தொழிலாளர் நல நிலையங்களை நடத்தி வருகிறது. இவற்றில் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 2½ முதல் 5 வயது வரையிலான பாலர் வகுப்புகளும் பெண் தொழிலாளர்களுக்கும் தொழிலாளர்களின் மனைவியருக்கும் தையல் வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. தையல் வகுப்பில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. கேர் நிறுவனத்தின் உதவியுடன் குழந்தைகளுக்குப் பாலஹாரும், பாலும் இவ்வாரியத்தால் வழங்கப்படுகிறது.

## 2. தொழிலாளர்களுக்கு விடுமுறை ஓய்வு இல்லம்:

இவ்வாரியம், மாமல்லபுரம், குற்றாலம், உதகமண்டலம் ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கு விடுமுறை ஓய்வு இல்லம் நடத்தத் தீர்மானித்துள்ளது. தற்போது ஏற்காட்டில் விடுமுறை ஓய்வு இல்லம் நடைபெற்று வருகிறது. இங்கு ஒரே சமயத்தில் 20 நபர்கள் தங்கலாம். கணவர் மனைவி ஆகிய இருவர் அடங்கிய குடும்பம் ஒன்றுக்கு ரூ. 2·50 வீதமும் பனிரெண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தை ஒன்றுக்கு ரூ. 1 வீதமும் நபர் ஒருவருக்கு ரூ. 1·50 வீதமும் சாதாரணமாக வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. குற்றாலத்தில் விடுமுறை ஓய்வு இல்லம் கட்டப்படுவதற்கு ரூ. 11,25,000 கான திட்டத்திற்கும் மதிப்பீட்டிற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாமல்லபுரத்தில் விமுறை ஓய்வு



இல்லம் ரூ. 8,13,000 செலவில் கட்டுவதற்காக திருத்திய திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளன. 0·25 ஏக்கர் நிலத்தில் உதகமண்டலத்தில் ஓய்வு இல்லம் கட்டுவதற்காகத் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கும் காச நோய் வார்டுகள்:—

இவ்வாரியம், தாம்பரம் காச நோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்குத் தனியாக 26 படுக்கைகள் கொண்ட காச நோய் வார்டைக் கட்டியுள்ளது.

## 4. படிப்பகங்கள்:

இவ்வாரியம் பெரம்பூர் (சென்னை), தண்டையார் பேட்டை (சென்னை), மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு படிப்பகங்கள் நடத்தி வருகிறது. வாசகர்களின் பயனுக்காக செய்தித்தாள்கள், வார மாதாந்திர இதழ்கள் வழங்கப்படுகின்றன. படிப்பகங்களில் அறிவியல் கணிதப் பாடங்களில் பார்வைப் புத்தகங்கள், தொழில் தகராறு சட்டப் புத்தகங்கள் ஆகியவற்றைக் கொண்ட சிறு நூலகம் ஒன்று அமைக்கப்படலாம் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 5. பல மாடிக் கட்டிடங்கள்:

இவ்வாரியம், தேனாம்பேட்டையில் ரூ. 40 இலட்சம் செலவில் பல மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டியுள்ளது. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர் நலத் துறையின் அலுவலகங்கள் இந்தக் கட்டிடத்தில் செயல்படுகின்றன. வாடகையாக வசூலிக்கப்படும் தொகை இவ்வாரியத்தின் நிதி வசதிகளைப் பெருக்க உதவும்.

6. குழந்தைகள் காப்பு நிலையம்:

சென்னையில் திரு. வி. க. நகரிலும், சென்னை, பாரக்ஸ் லைன் வில்லேஜ் காலனியிலும் உள்ள மகளிர் மன்றங்களும் கோயம்புத்தூர் எல்.ஐ.எச்.எஸ். தொழிலாளர் மகளிர் மன்றமும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திடமிருந்து மன்றம் ஒன்றுக்கு பெறும் ரூ. 8,000 ஆண்டு மானியத்துடன் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த மன்றத்தில் குழந்தைகள் காப்பு நிலையம் நடத்தப்படுகிறது. இங்கு 5 வயதிற்கு உட்பட்ட 50 குழந்தைகள் அனுமதிக்கப்படுகின்றனர். இங்கு இலவசமாகக் கல்வி கற்பிப்பதோடு பால் ரொட்டி போன்றவையும் இலவசமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

7. தொழிற்சங்க தலைவர்களும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் சென்னையில் தங்குவதற்கான இடவசதிகள்:

தொழிலாளர்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகச் சென்னைக்கு வரும் தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் குறைந்த செலவில் தங்குவதற்குப் போதுமான வசதி மிக்க அறைகளைக் கட்டுவதற்கு 7·33 லட்ச ரூபாய் செலவு செய்ய வாரியம் முடிவெடுத்துள்ளது. இதற்கான ரூ. 2 இலட்சத்தை மானியமாகவும் 5 மனைகள் மற்றும் 1,539 சதுர அடி கொண்ட நிலத்தைக் கொடையாகவும் தமிழ்நாடு அரசு அளித்துள்ளது. ஓய்வு இல்லம் கட்டும் வேலை நடந்து வருகிறது.

8. புத்தக வங்கிகள்:

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகள், பள்ளிகளில் படிக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உதவும் வகையில் புத்தக வங்கிகள் இயக்கும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. புத்தகங்கள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் தொழிலாளர்களிடமிருந்து வேண்டப்பட்டுள்ளன.



9. தொழிலாளர்களின் பிள்ளைகள் தட்டெழுத்து, சுருக்கெழுத்து கற்றுத்தேற படிப்புக் கட்டணம் தேர்வுக் கட்டணம் செலுத்துதல்:

வாரியம் முடிவு செய்துள்ளபடி தொழிலாளர்களின் பிள்ளைகள் தட்டெழுத்து சுருக்கெழுத்து கற்றுத் தேர்வு எழுத மேற்படி வகுப்புக்களை நடத்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்குப் படிப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் செலுத்துவதற்கான விண்ணப்பங்கள் அனுப்புமாறு தொழிலாளர்களின் பிள்ளைகளிடமிருந்து கேட்கப்பட்டுள்ளது.

10. விளையாட்டு:

தொழிலாளர்களிலும் அவர்களைச் சார்ந்துள்ளவர்களிலும் வீரப்போட்டி மற்றும் விளையாட்டு ஆகியவைகளில் முன்னணியில் நிற்பவர்களை ஊக்குவிக்க வாரியம் முடிவு செய்துள்ளது. அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் மற்றும் இணை வட்டார அளவிலும் ஆண்டு விளையாட்டுப்போட்டிகள் நடத்த முடிவு செய்துள்ளது. வட்டார அளவில் உள்ள போட்டி ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்களிலும் இணை மண்டல (அல்லது) மாநில அளவில் உள்ள போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி திங்களிலும் சென்னையில் நடக்கும். மேலும், ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் பெண்டிரையும் தொழிலாளர்களின் பிள்ளைகளையும் சேர்த்துக்கொள்ள வாரியம் முடிவு செய்துள்ளது.

11. பார்வைக் கோளாறினால் அவதிப்படும் தொழிலாளர்களுக்கு இலவசமாகக் கண்ணாடி வழங்குதல்.

திங்கள் ஒன்றுக்கு ரூ. 750ம் அதற்கும் குறைவான ஊதியம் பெற்று பார்வைக் கோளாறினால் அவதியுறும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூபாய் 50-க்கு மேற்படாத அளவில் இலவசமாகக் கண்ணாடிகள் வழங்குவதற்கு வாரியம் முடிவு எடுத்துள்ளது.

**12. திரைப்படம் காட்டும் கருவி:**

தொழிலாளர்களைச் சுற்றியுள்ள இடங்களிலும், தொழிலாளர் நல நிலையங்கள் உள்ள இடங்களிலும், தொழிலாளர்களுக்கான கல்வி வகையில் அமைந்த திரைப்படங்களை காட்டுவதற்காக திரைப்படம் காட்டும் கருவி (16 மி.மீ) ஒன்றை வாரியம் வாங்கியது.

**13. தையற்பயிற்சி நிலையம், கூடலூர்:**

அரசால் இயக்கப்பட்டு வந்த தையற்பயிற்சி நிலையம் ஒன்றை வாரியம் நடத்துவதற்காக ஏற்றுக் கொண்டுள்ளது.

**14. படிப்புதவித் தொகையும் நிதி உதவியும்:**

(அ) தொழிலாளர் நல நிதிக்குப் பங்குத் தொகை செலுத்தும் தொழிலாளர்களின் ஆண், பெண் குழந்தைகள் 10+2 வகுப்புகளில் முறையே முதல் மற்றும் இரண்டாவது மாணவர்களாக வருபவர்களுக்கு வழங்குவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு படிப்புதவித் தொகைகள் அளிக்க வாரியம் முடிவு எடுத்துள்ளது.

(ஆ) மாநில முழுவதும் உள்ள தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த 15 பொறியியல் படிப்பு, 10 மருத்துவப் படிப்பு, மாணவர்களுக்கு நிதி உதவி அளிக்க வாரியம் முடிவு செய்துள்ளது.

(இ) இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு சட்டக் கல்லூரியிலும் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த 3 சட்ட இயல் படிப்பு மாணவர்களுக்கு நிதியுதவி அளிக்கவும் வாரியம் முடிவு செய்துள்ளது.

**15. ஏற்று நடத்த இருக்கும் மற்ற திட்டங்கள்:**

(1) கிண்டி, ராஜபாளையம், விக்ரமசிங்கபுரம், தூத்துக்குடி மற்றும் மணப்பாரை ஆகிய இடங்களில் தொழிலாளர் நல நிலையங்களை ஏற்படுத்துதல்.



(2) கூடுதலாக எட்டு குழந்தைகள் காப்பு நிலையங்களை தமிழ்நாடு முழுவதும் திறக்க இருக்கின்றன.

(3) இயல்பான தொகை வசூல் செய்து திருமணம், காதணி விழா மற்றும் இதர சமுதாயச் சடங்கு விழாக்களை நடத்துவதற்காக சென்னை நகரில் சமுதாயக் கூடம் ஒன்று கட்டுதல்.

(4) தேனாம்பேட்டையில் உள்ள அலுவலகக் கட்டிடத்தில் ஒரு நூலகத்தைத் தொடங்குதல்.

(5) ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும் பணி தொடர்பான செலவிற்கு மானியம் வழங்குதல்.

(6) குன்னூரிலும் திருநெல்வேலியிலும் உள்ள தேயிலைத் தோட்டப் பகுதிகளிலும் தையற் பயிற்சி நிலையங்களை நடத்துதல்.

(7) தொழிலாளர்கள் குடியிருப்புகள், தொழிலாளர்கள் நிறைந்துள்ள பகுதிகள் ஆகிய இடங்களில் தொழிலாளர்களிடையேயுள்ள குடிப்பழக்கங்களினால் விளையும் கேட்டினை நீக்குவதற்காக மனமகிழ் மன்றம், கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்

(8) வால்பாறையில் ஓர் ஓய்வு இல்லத்தைத் தொட ்த

**ட்ட உதவி:**

தொழிற்சங்கங்கள் உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு அல்லது ரிட் முறையீடு தாக்கல் செய்வது தொடர்பாக ஏற்படும் சட்டம் சம்பந்தமான செலவுகளுக்காக ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டு ரிட் மனு அல்லது ரிட் மேல் முறையீடு ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் நிதியுதவி வழங்கும் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சட்ட நிதி உதவிக்கு அனுமதி வழங்க தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில், நிவாரணம் வேண்டி ஒரு கோரிக்கை வந்தது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 150 வழங்கப்பட்டது.

தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகையைக் கோரும் தகுதி வாய்ந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000–ஐ அரசு ஒதுக்கியுள்ளது. காயமுற்ற தொழிலாளர்கள் கோரிய இழப்பீடு குறித்து கூடுதல் ஆணையாளர் பிறப்பித்த ஆணைகளுக்கெதிராக நிர்வாகத்தினர் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும்போது, அத் தொழிலாளர்களும் உயர்நீதி மன்றத்தில் தங்கள் தரப்பை எடுத்துரைக்க சட்ட உதவி பெறுவதற்கு தகுதி வாய்ந்தவராவர். ஆனால், தொழிலாளர் இழப்பீடு குறித்து கூடுதல் ஆணையாளரின்முன் உள்ள நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு இந்த சட்ட உதவி அளிக்கப்பட்டிருக்கவேண்டும். நடப்பாண்டில் சட்ட உதவி அளிப்பதற்காக ரூ. 50 வழங்க ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.

## தொழிலாளர் சட்ட ஆலோசனைப் பிரிவுகள்:

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று பிரிவுகள் செயல்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் ஓய்வு பெற்ற நீதித் துறை அதிகாரியாலும், ஓய்வு பெற்ற ஓர் தொழிலாளர் நல அதிகாரியாலும் நிர்வகிக்கப்படுகின்றன. போதிய நிதி வசதியில்லாத மக்களுக்குச் சட்ட உதவியை வழங்குவதற்குரிய திட்டமொன்றினை வகுப்பது பற்றி ஆய்வு செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஒருநபர் குழு செய்த பரிவுரைகளின் பேரில் அரசு இப்பரிவுரைகளை அமைத்துள்ளது.

இப்பிரிவுகள் தொழிலாளர்களின் முறையீடுகளை கனிவோடும் பரிவோடும் கேட்டறிந்து, அவர்கள் தம் குறைகளைக் களைவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், பல்வேறு தொழிலாளர்கள் சட்டங்களின்கீழ் நிவாரணம் பெறுவதற்குரிய முறைகள் ஆகியவை குறித்து கருத்துத் தெரிவிக்கின்றன. 1979ஆம் ஆண்டில் இம்மூன்று பிரிவுகளும் 274 முறையீடுகளை விசாரணை செய்தன.



## தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம்.

இம்மாநிலத்தில் தொழிலாளர்களின் பயனுக்காக 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் குடும்பங்களிலுள்ள பள்ளிக்கு செல்லும் வயது அடையாத குழந்தைகளும் கருவுற்ற மகளிரும் பாலூட்டும் தாய்மார்களும் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர். இத்திட்டத்தின் கீழ் 95 தொழிற் பிரிவுகளைப் பொறுத்தமட்டில் (தமிழ்நாடு தொழிலாளர் நல குழுவின் நல நிலையங்கள் உட்பட), தற்போது 31,027 பேர் பயன் அடைகின்றனர். தற்போதுள்ள தொழிலாளர் சத்துணவுத் திட்டத்தோடு ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத் திட்டத்தையும் செயற்படுத்த வேண்டியது அவசியம் என உணரப்பட்டுள்ளது. இதனால் வழங்கப்படும் சத்துணவிற்கேற்ப மருத்துவ உதவியையும் இத் தொழிலாளர்கள் பெறுவர்.

## சென்னை—10, தமிழ்நாடு தொழிலாளர் நல ஆய்வு நிறுவனம்;

நல்ல, சிறந்த தொழிற்சங்க அமைப்புகளின் வளர்ச்சி, நிருவாகத் திறமையை பெருக்குவதற்கும், திறமையான தொழிலாளர் நிர்வாகப் பணியை உருவாக்குவதற்கும் தமிழ்நாடு அரசு தென்னிந்தியாவிலேயே தமிழ்நாடு தொழிலாளர் ஆய்வு நிறுவனத்தை 1973, மார்ச்சு திங்களில் அமைத்தது. தென் இந்தியாவிலேயே இத்தகைய நிறுவனங்கள் முதன் முதலாக இங்குதான் நிறுவப் பட்டுள்ளது. மேற்கூறிய நோக்கங்களை எய்த இந்நிறுவனம் பின்வரும் திட்டங்களை உள்ளடக்கியுள்ளது :—

(1) பொதுத்துறை, தனியார் துறை தொழில் நிறுவனங்களில் பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு (உடலுழைப்பாளர்கள், எழுத்தர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள்) தொழிலாளர் நலச் சட்டத்தின் அனைத்து அம்சங்களை அறிந்து அறிவுறுத்துதல். அவர்களை தொழிற்சங்கங்களுக்குத் தலைமை வகிப்பது பற்றி சிறப்பாக வலியுறுத்துதல்.

(2) தொழிலாளர் நலம் குறித்த மனப்பான்மையில் மாற்றங்களைக் கொண்டு வருதல், தொழிற் சாலையில் சுமுகமான உறவை ஏற்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் உள்ள தொழிற் சாலைகளில் நிர்வாகத் தரத்தில் பணியாற்றும் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

(3) தொழிலாளர் சட்டங்களை செயல்படுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும் பொறுப்புள்ள தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

(4) கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றின். தொழிலாளர்கள்—பணியாளர்கள் ஆகியோரின் நலனைக் கவனிக்கிற அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல். இந்த நிறுவனம் இதுவரையில் 68 வகுப்புகளையும், 6 கருத்தரங்குகளையும் நடத்தியது. இதனால் 2,256 பேர் பயனடைந்தனர்.

<u>அண்டை மாநிலத்திலுள்ள அதிகாரிகளுக்கு தொழிலாளர் சட்டங்கள் பற்றிய பயிற்சி வகுப்புகள் :</u>

வெளி மாநிலத்திலிருந்து அதாவது மத்திய அரசின் நேரடியாட்சிப் பகுதியான பாண்டிச்சேரியிலிருந்து, அரசு முகமையில் அனுப்பிய அதிகாரிகளுக்கு முதன் முறையாக இந்த நிறுவனம் 1979-இல் பயிற்சி வகுப்பை நடத்தியது. இவ்வகுப்பு வெகுவாகப் பாராட்டப்பட்டது.

<u>தொழிலாளர் நல சட்டப் பத்திரிகை;</u>

இந் நிறுவனம், 'உழைப்பவர் உலகம்' என்ற தலைப்பில் ஒரு புதிய தொழிலாளர் சட்டப் பத்திரிக்கையையும் தமிழில் வெளியிட்டு வருகிறது. இதனுடைய முதற் பதிப்பு அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான 1978 செப்டம்பர் 15 ஆம் நாளன்று முதல் அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இப் பத்திரிக்கை, துறையில் புகழ்மிக்க வல்லுநர்கள் எளிய தமிழில் எழுதிய கட்டுரைகளையும் தொழிலாளர் நீதிமன்றம், உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவை தொழில் தகராறு குறித்து எடுத்த முடிவுகளின் விவரங்களையும் வெளியிடுகின்றது. தொழிலாள



ருக்கான தொழில் மனக் கோட்பாடு, வாழ்க்கை குறியீட்டு எண்கள் கொண்ட பயனுள்ள புள்ளி விவரங்கள், வேலை நிறுத்தம், கதவடைப்புகள், சமரச ஒப்பந்தங்கள் ஆகியவை அடங்கிய விவரங்கள், குறைந்த அளவு ஊதியங்கள் குறித்த அறிவிப்புகள் தற்காப்பு நடவடிக்கைகள் ஆகியவை இதில் வெளியிடப்படுகின்றன. சுருங்கக் கூறின், தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல் சமுதாயத்தில் பெரும்பாலோருக்கும் பயனுள்ள முக்கிய தகவல்களை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலாளர்களுக்கு எல்லா வகையிலும் பயனளிக்கும் வினா விடைப் பகுதி ஒன்றும் இதில் அடங்கியுள்ளது.

<u>தொழிலாளர் நிர்வாகத்தில் பகுதி நேர டிப்ளமோ வகுப்புகள் :</u>

இந்த நிறுவனம் தொழிலாளர் நிர்வாகம் பற்றிய பட்ட மேற்படிப்பு பட்டய வகுப்புகளை நடத்துவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. தொழிலாளர் நிர்வாகத்தில் டிப்ளமோ வகுப்பை தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் அன்று தொடங்கி வைத்தார். இந் நிறுவனத்தின் முன்னேற்றத்தில் இது மற்றொரு சிறப்பாகும்.

<u>பிற நடவடிக்கைகள் :</u>

தொழிலாளர் கல்வி இயக்குநர் அலுவலகம் போன்ற பிற அமைப்புகளின் ஒத்துழைப்புடன் விவசாய மற்றும் முறைப்படுத்தப்படாத தொழில் வகையைச் சேர்ந்தவர்களுக்கு பயன்படும் வகையில் கிராமிய முகாம்கள் நடத்தப்பட்டன.

தொழிலாளர்களின் பயனுக்காக தொழிலாளர் நல சட்டங்களை, பயனுள்ள வழக்குகள் சட்டக் குறிப்புகளுடன் பதிப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>VI. எடைகள்—அளவைகள் சட்டம்—தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்—அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டம்.</u>

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு எடை அளவை, (செயற்படுத்தல்) சட்டமும், எடைகள்-அளவைகள் சட்டமும், அவைகளின் விதிமுறைகளும் தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும் தொழி

லாளர் நல துணை ஆய்வாளர்களாலும் தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்களாலும் மற்றும் சென்னை மாநகர், செங்கற்பட்டு மாவட்டம் ஆகியவற்றிலுள்ள முத்திரை ஆய்வாளர்களாலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. துணைத் தொழிலாளர் நல ஆணையரே (ஆய்வுகள்) எடைகள்—அளவைகள் செயல்படுத்தல் சட்டத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியுமாவர். சென்னை மாநகருக்கும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் நியமிக்கப் பட்டிருக்கும் இரு துணைத்தொழிலாளர் நல ஆய்வாளர்களும் இவரது கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றனர்.

1979 ஆம் ஆண்டு ஜூலை திங்களில், பணி உதவியாளர்களோடு 15 தொழிலாளர் நல ஆய்வாளர்களை சென்னை மாநகருக்கும், 5 தொழிலாளர் நல ஆய்வாளர்களை செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் முற்றிலும் முத்திரையிடும் பணிக்காக தற்காலிகமாக ஓராண்டிற்கு செயலாற்ற அரசு ஆணை பிறப்பித்தது. மேலும் சென்னை மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 2 தொழிலாளர் நல துணை ஆய்வாளர் பதவிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. சென்னை மாநகரிலும் செங்கற்பட்டு மாவட்டத்திலும் முத்திரையிடும் பணிக்காகவே ஆய்வாளர்களை நியமிப்பதனால் வணிகர்கள் தங்களின் எடைகள்—அளவைகளை உரிய காலத்தில் முத்திரையிடுவதில் இடர்ப்பாடு எதுவும் அவர்களுக்கு இருக்காது.

எடைகள் அளவைகள் உபயோகப்படுத்துவதில் உள்ள முறைகேடுகளை ஒழிப்பதற்காக கிராமப்புற ஆய்வுகள் உட்பட குறித்த காலச் சோதனைகள், திடீர் சோதனைகள், கூட்டுச் சோதனைகள் ஆகியவற்றின் மூலம் இத்துறை செம்மையான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1979 ஆம் ஆண்டில் எடை—அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறி நடந்துகொண்டதற்காக 16,789 வழக்குகள் தொடரப்பட்டன. முன்பு நிலுவையிலுள்ள வழக்குகள் உட்பட இதுவரை 17,229 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. ரூபாய்





7,33,803 அபராதமாக விதிக்கப்பட்டது. (1979 ஆம் ஆண்டில் மீண்டும் சரிபார்த்து முத்திரையிடும் கட்டணம் உள்ளிட்ட முத்திரைக் கட்டணமாக ரூ. 34,51,973.25 வசூலிக்கப் பட்டது.)

1979 ஆம் ஆண்டில், 613 விற்பனையாளர்கள் 403 பழுது பார்ப்போர்கள் மற்றும் 125 உற்பத்தியாளர்களுக்கு எடைகள் அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியால் உரிமங்கள் வழங்கப் பட்டன.

1978, 1979 ஆம் ஆண்டுகளுக்கான விவரம் வருமாறு :—

| ஆண்டு. | பழுது பார்ப்போர். | விற்பனையாளர். | உற்பத்தியாளர். |
| --- | --- | --- | --- |
| 1978 .. .. | 353 | 646 | 71 |
| 1979 .. .. | 403 | 613 | 125 |

1979 ஆம் ஆண்டில், உரிமக்கட்டணங்களாக ரூ. 1,46,202·05 வசூலாகியது.

எடைகள்—அளவைகள் சட்டத்தின் விதித்துறைகளைச் செயற் படுத்தும் பணியை மறு ஆய்வு செய்து எடைகள்—அளவைகள் கட்டுப்பாடு அதிகாரி, மாவட்டத்தில் உள்ள சார்நிலை அதிகாரிகளுடன் குறித்த கால முறைக் கூட்டங்களை நடத்தி வருகிறார். இவர் பார்வையிடும் போது திடீர் சோதனைகளையும் மேற்கொண்டார்.

1979 ஆம் ஆண்டில், மாநிலம் முழுவதிலும் 1,613 சோதனைகள் நடத்தப்பட்டன. 58,484 வணிகர்கள் சோதனை செய்யப்பட்டனர். இதனால் 5,552 வணிகர்கள் மீது வழக்கு

தொடரப்பட்டன. கிராமங்களில் எடைகள்—அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதை தீவிரப்படுத்த, முறையான வாலாய நடைமுறைச் சோதனைகள், சார்பு அதிகாரிகளால் நடத்தப்பட்டன. 1979 ஆம் ஆண்டில் 52,082 வணிகர்கள் குறித்து 10,151 கிராமச் சோதனைகள் சார்நிலை அதிகாரிகளால் நடத்தப்பட்டன.

கூட்டுச் சோதனைகள் மற்றும் ஆய்வுகளின் விளைவாக வெவ்வேறு அளவுகள் கொண்ட சுமார் 21,541 எடைகளும் வெவ்வேறு அளவுகளில் உள்ள அளவைகள் சுமார் 18,601 அளவைகளும் அளவுக் கருவிகள் சுமார் 1,445 கருவிகளும் அளவைக் கருவிகள் சுமார் 863 கருவிகளும் போலியான, தரமில்லாத, முத்திரையிடப்படாத காரணங்களுக்காக கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட பொருள்களை பொறுத்த மட்டில், நீதிமன்றத்தில் நடவடிக்கைக்கு உட்பட்டவை என்பதால் நீதி மன்றங்களின் தீர்ப்புகளின்படி மேல் நடவடிக்கை எடுக்கப் படுகின்றன. கைப்பற்றப்பட்ட இதர பொருள்களின் மீது, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தின் விதித் துறைகள் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் ஆகியவற்றிற்கிணங்க நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது.

**தேசிய வேலை வாய்ப்புப்பணி:**

1. வேலை வாய்ப்புகள் :—தமிழ் நாட்டில் 34 வேலை வாய்ப்பகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் அம்பத்தூர் ஆலங்காயம், திண்டுக்கல், காஞ்சீபுரம், கரூர், மண்டபம், ஓசூர், நாகப்பட்டினம், பரமக்குடி, சங்கராபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் 11 துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களும் தொழில் மற்றும் நிருவாக அனுபவம் பெற்றவர்களுக்காகவும் மற்றும் உடல் ஊனமுற்றோர்களுக்காகவும் தனியாக சென்னையில் இயங்கும் இரண்டு தனி வேலை வாய்ப்பகங்களும் மற்றும் சென்னை, மதுரை அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் இயங்கும் மூன்று பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்களும் அடங்கும்.



இவ்வாண்டில் தமிழ் நாட்டில் வேலைக்காகப் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள், வேலை அளிக்கப்பட்டவர்கள் மற்றும் வேலைக்காக வேலை வாய்ப்பகங்களின் பதிவேட்டில் காத்திருப் போர், அறிவிக்கப்பட்ட வேலை காலியிடங்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பகங்களைப் பயன்படுத்திய வேலை அளிப் போர்களின் அரசுத் துறை, தனியார் துறைகள் எண்ணிக்கை விவரங்களும் மற்றும் இதே காலத்தில் சென்ற ஆண்டிற்கான விபரங்களும் வருமாறு :—

| தொடர் எண்ணும் விவரங்களும். | (1-4-1979 முதல் 31-3-1980 முடிய) அறிக்கையாண்டில். | (1-4-1978 முதல் 31-3-1979 முடிய) முந்தைய ஆண்டின் நிகரான காலத்தில். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 பதிவு செய்த விண்ணப்ப தாரர்கள் .. | 4,19,951 | 4,19,761 |
| 2 வேலையில் அமர்த்தப்பட்டவர்கள் .. | 56,786 | 40,235 |
| அறிவிக்கப்பட்ட வேலை காலியிடங்கள் .. | 79,602 | 57,506 |
| 4 வேலை வாய்ப்பகங்களைப் பயன்படுத்திய வேலை யளிப்போர் .. | 21,599 | 17,408 |
| 5 ஒவ்வோராண்டும் மார்ச் 31-ம் நாள் நிலவரப் படி வேலைக்காகப் பதிவு செய்து உயிர் பதிவேட்டில் காத்திருந் தவர்கள் .. | 10,05,880 | 9,68,314 |

2. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பகம், சென்னை.—சென்னையில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பகம் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் வசிக்கும் பார்வையிழந்தோர், காது கேளாதோர்களையும் சென்னையில் வசிக்கும் உடல் உறுப்பு ஊனமுற்றோர்களையும் பதிவுசெய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஊனமுற்றோர்களுக்காக வேலை அளிக்க தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள மாவட்ட வேலை வாய்ப்பு நிலையங்களில் ஊனமுற்றோர்களுக்காக தனிப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகத்தில் ஒரு இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் அந்தந்த மாவட்டங்களில் உள்ள எல்லா ஊனமுற்றோர்களையும் பதிவு செய்து அவர்களை வேலையில் அமர்த்துவதற்கான பணியினை மேற்கொண்டு வருகிறார். இவர் மாவட்ட வேலை வாய்ப்பக உதவி இயக்குநரின் கீழ் பணியாற்றுகிறார். இதர வேலை வாய்ப்பகங்கள் உடல் உறுப்பு ஊனமுற்றோர்களை மட்டும் (Orthopaedically hancicapped) பதிவு செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடி அளிக்கின்றன.

இந்த உடல் ஊனமுற்றோர்களுக்கான சிறப்பு வேலை வாய்ப்பகங்களில் பணி குறித்த புள்ளி விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :—

| அலுவலகம். | பதிவு செய்யப் பட்டவர் களின் எண்ணிக்கை. | வேலையில் அமர்த்தப் பட்டவர் களின் எண்ணிக்கை. | 31-3-1980 நாள் நிலவரப் படி உயிர் பதிவேட்டில் உள்ள எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உடல் ஊனமுற்றோர்கள் சிறப்பு வேலை வாய்ப்பகம்— | | | |
| 1 சென்னை .. .. | 1,576 | 459 | 4,636 |
| 2 மதுரை .. .. | 153 | 25 | 943 |
| 3 கோயம்புத்தூர் .. | 272 | 63 | 965 |
| 4 சேலம் .. .. | 160 | 25 | 613 |
| 5 திருச்சி .. .. | 149 | 14 | 946 |



3. தொழில் மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பகம்.—இந்த அலுவலகம் உயர்ந்த தொழில் அனுபவம், அறிவியல், பொறியியல், நிருவாகம் மற்றும் மேற்பார்வைப் பணிக் கல்வித் தகுதியுடையவர்களைப் பதிவு செய்து, பொதுத் துறை மற்றும் தனியார் துறையில் வேலைவாய்ப்பு அளிப்போர்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்களைத் தகுந்த வேலையில் அமர்த்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ் வறிக்கை ஆண்டில் இந்த அலுவலகம் 8,861 தொழில் மற்றும் நிர்வாகத் தகுதியுடைய மனுதாரர்களைப் பதிவு செய்தது. 3,530 மனுதாரர்களை வேலையில் அமர்த்தியது. 1980-ம் ஆண்டு மார்ச்சு இறுதியில் இவ்வலுவலகத்தின் பதிவேட்டில் மொத்தம் 14,592 மனுதாரர்கள் வேலை வாய்ப்பிற்காகக் காத்திருந்தார்கள்.

4. பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள்.– (சென்னை, மதுரை, அண்ணாமலை பல்கலைக் கழகம்).—சென்னை, மதுரை, மற்றும் அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் பல்கலைக்கழகங்களில் படித்த பட்டதாரிகளுக்கும் மற்றும் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும், வேலை வாய்ப்பு விவரங்கள் வழிகாட்டுதல் பணியினைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. இது தவிர தொழில் மற்றும் உயர் பட்டதாரிகளையும் வேலை வாய்ப்பிற்காகப் பதிவு செய்கின்றன.

இந் நிலையங்களின் அறிக்கையாண்டில் பணி குறித்த புள்ளி விவரங்கள் வருமாறு :—

| பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையத்தின் பெயர். | பதிவு செய்யப் பட்டவர் எண்ணிக்கை. | வேலையில் அமர்த்தப் பட்டவர் எண்ணிக்கை, | 31-3-80 நிலவரப் படி உயிர் பதிவேட்டில் இருந்தவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 சென்னை .. .. | 218 | 28 | 306 |
| 2 மதுரை .. .. | 1,581 | 395 | 2,603 |
| 3 அண்ணாமலை நகர். | 356 | 125 | 554 |

5. <u>வேலை நிலவரத் தகவல் திட்டம்.</u>—இத்திட்டத்தின்கீழ் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள (வேளாண்மை உட்பட) எல்லாத் தனியார்த்துறை நிறுவனங்களிலிருந்தும், அனைத்து பொதுத் துறை நிறுவனங்களிலிருந்தும், வேலை நிலவரத் தகவல் காலாண்டுக்கொருமுறை சேகரிக்கப் படுகிறது.

இந்த அறிக்கை ஆண்டில் வேலை நிலவரத் தகவல் சேகரிப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள 16 களப் பிரிவுகளின் மூலம் நான்கு காலாண்டுகளாகிய மார்ச்சு 1979, ஜூன் 1979, செப்டம்பர் 1979, மற்றும் டிசம்பர் 1979 ஆகிய காலாண்டுகளில் நான்கு ஆய்வுகள் நடத்தப்பட்டன.



கீழ்க்கண்ட அட்டவணை நான்கு காலாண்டுகளில் தகவல் கேட்ட நிறுவனங்கள், தகவலை அளித்த நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை மற்றும் அதன் சதவீத விவரங்கள் வருமாறு :—

| முடிவடைந்த காலாண்டு. | தகவல் கேட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | தகவல் அளித்த நிறுவனங்களின் எண்ணிக்கை. | விழுக்காடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) (சதவீதம்.) |
| 31–3–79 .. .. | 18,889 | 16,529 | 87·4 |
| 30–6–79 .. .. | 19,065 | 16,957 | 88·2 |
| 30–9–79 .. .. | 18,897 | 16,102 | 85·9 |
| 31–12–79 .. .. | 19,511 | 16,963 | 86·9 |

1979 மார்ச்சு, 1979 ஜூன், 1979 செப்டம்பர், 1979 டிசம்பர் திங்களுடன் முடியும் காலாண்டுகளில் இம்மாநிலத்தில் வேலையிலிருப்பவர்களின் துறை வாரியான விவரம் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:—

| அன்றைய நாள் நிலவரப்படி. | வேலையில் இருப்போர்களின் மொத்த எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார்த் துறை. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 31–3–79 .. .. | 11,75,868 | 6,43,140 | 18,19,00[illegible] |
| 30–6–79 .. .. | 11,84,023 | 6,53,921 | 18,37,944 |
| 30–9–79 .. .. | 11,01,266 | 6,60,505 | 17,61,7[illegible]1 |
| 31–12–79 .. .. | 11,30,699 | 6,57,865 | 17,88,564 |

சம்பள விதங்களுக்கிணங்க மத்திய/மாநில/மத்திய அரசு/ஓரளவு மாநில அரசு போன்ற/சார்ந்த உள்ளாட்சி நிறுவனங்களில் வேலையிலிருப்பவர்களின் ஆண்டுப் புள்ளி விவரச்சேகரிப்பு.

31—3—1979 ஆம் நாள் நிலவரப்படி மத்திய அரசு/மாநில அரசு/மத்திய அரசு/ஓரளவு மாநில அரசு போன்ற உள்ளாட்சித் துறை அரசு நிறுவனங்களில், வேலையில்ருப்பவர்களின் சம்பள வித அடிப்படைகளின் புள்ளி விவரங்கள் கொண்ட விவர அறிக்கைகளைச் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பணியாளர்களின் வேலை-கல்வித்தகுதி குறித்து இரண்டாண்டுகளுக்கொருமுறை நடத்தப்படும் ஆய்வு.—30—9—1978 ஆம் நாளுடன் முடிவடையும் கால அளவில் பொது நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் வேலை-கல்வித் தகுதி குறித்து இரண்டாண்டுகளுக்கொருமுறை நடத்தப்படும் ஆய்வு முடிவுற்றது. தனியார் நிறுவனங்களில் 30—9—1979 ஆம் நாளுடன் முடிவடையும் கால அளவிற்கான ஆய்வு நடைபெற்று வருகிறது.

ஆழ்ந்தாய்வுப் பிரிவு.—அறிக்கை ஆண்டில் பின்வரும் ஆய்வுகள் முடிக்கப்பட்டன. தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பகங்களில் நிலுவையாக உள்ள காலியிடங்கள் குறித்து ஆய்வு.

1978 டிசம்பர் முதல் 1979 நவம்பர் வரையில் அறிவிக்கப்பட்ட, நிரப்பப்பட்ட, ரத்து செய்யப்பட்ட மற்றும் நிலுவையாக உள்ள காலியிடங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் வேலை வாய்ப்பகங்களிலிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. வேலை நிரப்பப்படாமல் காலியாக இருந்த கால அளவு ஒரு மாதம் முதல் 12 மாதம் வரையிலாகும். வேலை காலியிடங்கள் அறிவிக்கப்பட்ட காலியிடங்களில் 30·25 சதவீதம் ஆகும். அவைகள் முறையே :—

| | |
|---|---|
| 1. காலியிடங்கள் அறிவித்தது .. .. .. | 76,960 |
| 2. காலியிடங்கள் நிரப்பியது .. .. .. | 42,060 |
| 3. காலியிடங்கள் ரத்து செய்தது .. .. .. | 9,115 |
| 4. தகுதியுடையவர்கள் இல்லை எனச் சான்றிதழ் அளிக்கப்பட்ட காலியிடங்கள். | 2,502 |
| 5. நிலுவையாக உள்ள காலியிடங்கள் .. .. | 23,283 |



ஆழ்ந்த ஆய்வுக்குப்பின் வேலை காலியிடங்களின் நிலுவைக்கு அறிவிக்கப்பட்ட காரணங்கள் வருமாறு :—

1. வேலை வாய்ப்பகங்களில் போதிய தொடர் நடவடிக்கை எடுக்காமை.

2. வேலை அளிப்பவர்கள், தேர்வுபற்றிய முடிவுகளை அனுப்பிய போதிலும் வேலை வாய்ப்பகங்கள் அவற்றை உடனுக்குடன் கணக்கில் கொள்ளாமை.

3. வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் விவரங்களை குறித்த நேரத்தில் வேலை அளிப்போர்கள் அனுப்பாமை.

(ஆ) மெட்ரிக்குலேசன் தேறியவர்களும் அதற்கும் குறைவான கல்வித்தகுதி உடையவர்களும் காத்திருக்கும் கால அளவை அறிய மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

வேலை வாய்ப்பு அலுவலகங்களின் செல்லுபடி பதிவேட்டில் காத்திருக்கும் மனுதாரர்களில் அதிகமாக உள்ளவர்கள் மெட்ரிக்குலேசன் மற்றும் அதற்கும் குறைந்த கல்வித் தகுதி உள்ளவர்கள். அவர்கள் செல்லுபடி பதிவேட்டில் 2/3 பாகமாக உள்ளார்கள். அவர்கள் பள்ளி தேர்ச்சியுற்று அனுபவமற்றவர்கள் ஆவார்கள். 1/3 (32·69%) பகுதியினர் மெட்ரிக்குலேசன் தேறியவர்கள் ஆவார்கள். 1/4 (23·44%) பகுதியினர் நடுத்தரப்பள்ளி வரை படித்து வேலைக்காகப் பதிவு செய்த மனுதாரர்கள் ஆவர். 1/12 (8·8/1/8%) பகுதியினர் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் (1·34%) பகுதியினர் படிக்காதவர்களாகவும் உள்ளனர். மெட்ரிக்குலேசன் தேறியவர்களில் பாதிக்கு மேல் (55·5%) மூன்றாண்டுகளுக்கும் குறைவாக வேலைக்காகக் காத்திருப்பவர்களாகவும், மற்றும் 1/4 பகுதியினர் ஐந்தாண்டு

களுக்குக் குறைவாகக் காத்திருப்பவர்களாகவும் உள்ளனர். மெட்ரிக்குலேசன் முடித்த எட்டு நபர்களில் ஒரு நபர் (13·72%) ஐந்து முதல் ஏழு ஆண்டு வேலை வாய்ப்புக்காகக் காத்திருப்பவர்கள் ஆவர்.

நடுத்தர பள்ளிப்படிப்பு படித்தவர்களில் 58·33 சதவிகிதத்தினர் மூன்றாண்டுக்குக் குறைவாக காத்திருப்பவர்கள் ஆவார். 1/4 பகுதியினர் (23·91%) மூன்றிலிருந்து ஐந்தாண்டுகளாக காத்திருப்பவர்கள். அவர்களில் எட்டில் ஒரு நபர் (12·77%) ஐந்தாண்டுக்கு மேல், ஆனால் 7 ஆண்டிற்கு குறைவாகக் காத்திருக்கிறார்கள். எழுதப்படிக்கத் தெரிந்தவர்களில் 2/3 பாகத்தினர் மூன்று ஆண்டு காத்திருக்கிறார்கள். அவர்களில் 1/5 பாகத்திற்கு சற்று கூடுதலானவர்கள் மூன்று ஆண்டு முதல் ஐந்து ஆண்டு வரை காத்திருக்கிறார்கள். 10-க்கு ஒரு நபர் ஐந்து ஆண்டுக்கு மேல் ஏழு ஆண்டுக்குள் காத்திருக்கிறார்கள்.

படிக்காதவர்களில் 3/4 பாகத்திற்கு மேல் (79·81%) மூன்றாண்டுக்கு குறைவாகக் காத்திருக்கிறார்கள். 1/10 பாகத்தினர் (10·99%) மூன்று ஆண்டுக்கு மேலும் ஐந்து ஆண்டுக்குக் குறைவாகவும் காத்திருக்கிறார்கள். அண்மைக் காலத்தில் பின்வரும் ஆய்வுகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. வேலை வாய்ப்பகங்களின் செல்லுபடி பதிவேட்டிலுள்ள தேசிய தொழிற் பயிற்சி சான்றிதழ்/தேசிய தொழில் பழகுவோர் சான்றிதழ் பெற்றவர்களைப்பற்றி ஆய்வு.

2. வேலை வாய்ப்பகங்களின் செல்லுபடி பதிவேட்டிலுள்ள ஏற்கனவே வேலையிலுள்ள மனுதாரர்களின் விகிதாசாரத்தை அறியும் மாதிரி ஆய்வு.

<u>(ஆ) புள்ளி விவரத் தொகுப்பு நிலையம்.</u>—1979–80 ஆம் ஆண்டில் கீழ்கண்ட வேலைகள் புள்ளி விவரத் தொகுப்புப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டன.



31—3—1979, 30—6—1979, 30—9—1979 மற்றும் 31—12—1979 ஆகிய காலாண்டுகளில் மத்திய அரசு/மாநில அரசு/ஓரளவு மத்திய அரசு நிறுவனங்கள்/ஓரளவு மாநில அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் (அனைத்திலும்) தனியார்துறை (பெரிய நிறுவனங்கள்), தனியார் துறை (சிறிய நிறுவனங்கள்), தனியார்துறை (அனைத்திலும்), வேலை வாய்ப்பு நிலைகளில் உள்ள மாற்றங்கள் குறித்த பட்டியல் தயாரிக்கப்பட்டது.

தேசீய வேலை வகைப்பாட்டின்படி, வேலை வாய்ப்பக நடப்புப்பதிவேட்டில் உள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, தேசீய வேலை வகைப்பாட்டின்படி அறிவிக்கப்பட்ட, நிரப்பப்பட்ட, நிலுவையாக உள்ள காலியிடங்கள், முன்னாள் தொழில் பயிற்சியாளர்கள் செய்த பணி, உரிய தகுதிபடைத்தவர்கள் இல்லை என்பதற்கான சான்றிதழ்கள் முதலியவை போன்ற வேலை, வாய்ப்பகப் புள்ளி விவரங்களும் அட்டவணையிட்டுத் தயாரிக்கப்படுகின்றன.

<u>பட்டுத்திரை அச்சுப் பிரிவு Silk Screen Printing.</u>—இந்த அறிக்கை ஆண்டுக் காலத்தில் சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு—பயிற்சி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள பட்டுத் திரை அச்சுப் பிரிவு பின்வரும் பணிகளை மேற்கொண்டது :—

| | | |
|---|---|---|
| 1. | பட்டுத்திரை முறை அச்சிடுவதற்காகத் தேவைப்படும் ஸ்டென்சில் தாள்கள். | 21 |
| 2. | தயாரிக்கப்பட்ட மாதிரி வரைபடங்கள் .. | 4 |
| 3. | தயாரிக்கப்பட்ட விளக்கப்படங்கள்/வரைப் படங்கள்/துண்டுவெளியீடுகள். | 190 |
| 4. | அச்சடிக்கப்பட்ட உரைத்தாள்கள்/சுவ ரொட்டிகள். | 1,425 |
| 5. | அச்சிட்ட பட்டுத்திரைகள் .. .. | 5 |
| 6. | பெயர்ப்பலகை போன்ற ஏனைய சிறப்புப் பணிகள். | 21 |

வேலை வாய்ப்பகங்களின் பணியை கணக்கிடுதல் பொறி மூலம் செய்வது.—வேலைவாய்ப்பகப் பணிகளைத் துரிதப்படுத்தவும், புகார்கள் வராமல் தவிர்க்கும் பொருட்டும், வேலைவாய்ப்பகப் பணிகளை கணக்கிடு பொறி மூலம் செய்யும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியது. ஆய்வாண்டில், முதன்முறையாக தொழில் நிர்வாகப்பணி வேலைவாய்ப்பகத்தில் கணக்கிடு பொறி வசதி செய்து கொடுக்கும் பணியை அரசுப் புள்ளிவிவரத் தொகுப்பு நிலையம் மேற்கொண்டது. வேலைக் காலியிடங்களுக்கு மனுதாரர்களைத் தேர்வு செய்ய தேவையான தகவல் படிவம் அரசுப் புள்ளிவிவரப் பிரிவின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டது. வேலைவாய்ப்பகச் செல்லுபடிப் பதிவேட்டில் உள்ள தொழில் நிர்வாக வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள 4,000 பேர்களின் தகவல்கள் குறித்த புள்ளிவிவரங்கள் துளையிடப்பட்டு அரசுப் புள்ளி விவரத் தொகுப்பு நிலையத்தில் மூலக்கோப்பு தயாரிக்கப்பட்டது. தேர்வுத்திட்ட முறையைச் சோதனை செய்து பார்ப்பதற்காக ஒரு மாதிரித் தேர்வு நடைபெற்றது. தொழில் நிர்வாகப் பணி வேலைவாய்ப்பகத்தின் செல்லுபடிப் பதிவேட்டில் எஞ்சியுள்ள நபர்கள் பற்றிய தகவல்களை வகைமுறைப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

6. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டுதலும், வேலைவாய்ப்பு ஆலோசனை அளித்தலும்.—வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவுகள் தமிழ்நாட்டில் நீலகிரி, தருமபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக பிற மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள்தொடர்ந்து தொழில் வேலைவாய்ப்பு பயிற்சி பெறுவதற்கான வசதிகள் ஆகியவை பற்றிய தொழில் பழகு வசதிகள் விவரங்களை வேலை தேடுவோரிடையும், மாணவர்களிடையேயும், விண்ணப்பதாரர்களிடையேயும் பரப்பி வருகின்றன. மாணவர்கள் பதிவு செய்தவர்கள் இவர்களுக்கான வழிகாட்டுதல் சம்பந்தமான கூட்டங்கள் நிகழ்த்தப்பட்டன. வேலை வாய்ப்பகங்களிலுள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவு காலாண்டுதோறும் மாணவர்கள், வேலை தேடுவோரின் பயனுக்காக செய்தி அறிக்கைகள் தயாரித்து பள்ளிகள் மற்றும் நூலகங்களுக்கு அனுப்புகின்றது.



1979 ஏப்ரல் முதல் 1980 மார்ச் வரையில் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டுப் பிரிவுகளால் பயனடைந்த விண்ணப்பதாரர்கள் வேலை தேடுவோர், மாணவர்கள் ஆகியோர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | மேற்கொள்ளப்பட்ட (வழிகாட்டுதல்) கூட்டுக் கூட்டங்களின் எண்ணிக்கை. | 3,113 |
| 2. | பதிவு செய்து வழிகாட்டும் தகவல் மூலம் பயன் பெற்றவர் எண்ணிக்கை. | 9,967 |
| 3. | கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டவர் எண்ணிக்கை. | 57,379 |
| 4. | வேலை, பயிற்சி, தொழில் பழகுதலில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 1,426 |
| 5. | பள்ளிகள்/கல்லூரிகளில் நிகழ்த்திய வாழ்க்கை தொழில் பற்றிய சொற்பொழிவுகளின் எண்ணிக்கை. | 317 |
| 6. | தொழில் பழகுவோருக்கான உதவித்தொகை/மேற்படிப்பிற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 11,001 |

சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு—பயிற்சித்துறை இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த மாநில வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவு, மாவட்டங்களில் உள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க, மேற்பார்வை செய்து, சீரமைத்து பரிசீலனை செய்து வருகிறது. 31 தொழில் பயிற்சி நிலையங்களிலும், கிண்டியில் உள்ள மாதிரிப் பயிற்சிப் பள்ளிகளிலும் ஏறத்தாழ 33,000 விண்ணப்பதாரர்களுக்கு திறனாய்வுத் தேர்வு நடத்தப்பட்டது. ஆவடியில் உள்ள கனரகத் தொழிற்சாலையில், தொழில் திறன் உள்ளோரைத் தேர்ந்தெடுக்க திறனாய்வுத் தேர்வு நடத்தப்பட்டது.

10—7—1979 முதல் 31—7—1979 முடிய பல்கலைக்கழக பழைய மாணவர்களுக்காக தகவல் கூடம் நடத்த

சென்னை-5-ல் உள்ள பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் நிலையத்தின் துணைத் தலைவர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

1979 நவம்பரில் வேலூரில் ஹூரிஸ் கல்லூரி கூட்டு முயற்சியுடன் வாழ்க்கை தொழில் தகவல் கண்காட்சி நடத்த சென்னை பல்கலைக்கழகம் வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையத் துணைத் தலைவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

பொருளாதாரம், இரசாயனம் மற்றும் வணிக இயல் படித்த பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு விவர கையேடு ஒன்று தயாரிப்பில் உள்ளது.

நாகர்கோயில், மதுரை மாவட்டங்களிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் முறையே 1980 ஜனவரி, மார்ச்சு மாதங்களில் வாழ்க்கைத் தொழில் பொருட்காட்சி நிறுவப்பட்டது.

7. மாநில தொழில் தகவல் பிரிவு.—தொழில் தகவல் பிரிவு, வாழ்க்கைத் தொழில் குறித்து சிறு நூல்கள், வாழ்க்கை தொழில் பற்றிய சிற்றேடு, கட்டுரைகள் ஆகியவற்றைத் தயாரித்தல், திருத்தியமைத்தல் ஆகிய பணிகளையும், புது டில்லியிலுள்ள வேலைவாய்ப்பு-பயிற்சித் துறைத் தலைவரிடமிருந்து வரப்பெற்ற சிறுவெளியீடுகள்/கையேடுகள் ஆகியவற்றை சார்நிலை அலுவலர்கள் தங்களது பகுதிகளிலுள்ள நூலகங்கள்/பள்ளிகள்/கல்லூரிகளுக்கு வழங்கும் பணிகளையும் மேற்கொண்டது.

பேருந்து போக்குவரத்துத் துறையில், தொழில்-வேலைவாய்ப்புத் தகவல் சேகரிக்கும் சிறப்பு ஆய்வுத் திட்டம் முடிவுற்று அறிக்கை தயாரிக்கப்படுகிறது.

மேற்கண்ட வேலைகளுடன் எதிர்காலத்தில் (1980-81) இம் மாநிலம் முழுவதும், தொழில் தகவல்-கல்வி பயிற்சி வசதிகள் பற்றிய இந்நாளது வரையிலான விபரங்களைச் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட கருதப்பட்டுள்ளது.

8. துறையின் வேலைவாய்ப்புப் பிரிவில் பணியாளர் பயிற்சிப் பிரிவு.—வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை இயக்ககத்தின் வேலைவாய்ப்பு பிரிவில், இயங்கி வரும் பணியாளர் பயிற்சிப் பிரிவு வேலைவாய்ப்புக் கொள்கைகள் நடைமுறைகள் ஆகியவற்றில் பணியாளர்களுக்கு, பயிற்சி அளிக்கப் பொறுப்பு வகிக்கிறது.



தேசீய வேலைவாய்ப்புப் பணியைச் சேர்ந்த நிர்வாகப் பணியாளர்களுக்கு 5 பணியாளர் பயிற்சி வகுப்புகள், 1—4—1979 முதல் 31—3—1980 முடிய நடத்தப்பட்டன. பயிற்சிப் பிரிவில் 55 நிர்வாகப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

9. இத்துறையின் வேலைவாய்ப்புப் பிரிவில் உள்ள ஆய்வுப் பிரிவு.—வேலைவாய்ப்புப்-பயிற்சித் துறை இயக்ககத்தைச் சேர்ந்த வேலைவாய்ப்புப் பிரிவில் உள்ள ஆய்வுப் பிரிவு 2—6—1969-ம் நாளன்று அமைக்கப்பட்டது. இப்பிரிவு சென்னை வேலைவாய்ப்புப்-பயிற்சித் துறை இயக்குநரின் ஒப்புதலோடு இம் மாநிலத்திலுள்ள சார்நிலை அலுவலகங்கள் அனைத்தையும் ஆய்வு செய்ய திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இவ்வியக்கத்தைச் சேர்ந்த பல்வேறு அதிகாரிகளால் 33 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இக்கால அளவில் ஆய்வு செய்யப்பட்டன. சம்பந்தப்பட்ட ஆய்வு அதிகாரிகளால் சார்பு அலுவலகங்களை முடிவாக ஆய்வ செய்ய வசதி அளிக்க இவ்வறிக்கைக் கால அளவில் மேற்சொன்ன அலுவலகங்கள் தொடர்பாக தொடக்க ஆய்வுக் குறிப்புகளை ஆய்வுப் பிரிவின் பணியாளர்கள் தயாரித்ததோடு கிளை அலுவலகங்கள் அனைத்திடமிருந்தும் வரப்பெற்ற சரிசெய்தல் அறிக்கைகளையும் ஆய்வு செய்தனர்.

சார்நிலை அலுவலகங்களை ஆய்வு செய்தல், அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்ட ஆய்வு அறிக்கைகள் மீது கள அதிகாரிகள் அனுப்பி வைத்த இணக்க அறிக்கையின் மொழியாக்கத்தைக் கண்காணித்தல் ஆகிய பணிகளை 1980-81ஆம் ஆண்டிலும் இப்பிரிவு தொடர்ந்து நிறைவேற்றிவரும்.

10. துறையின் வேலைவாய்ப்புப் பிரிவில் வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகத்தின் பணிகள்.—இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு, பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பி,

யோரின் புது வாழ்வுக்காகச் செயல்பட்டு வருகிறது. ஸ்ரீலங்க விலிருந்து தாயகம் திரும்பியோரின் புது வாழ்வுக்காக மண்ட பத்தில் துணை வேலைவாய்ப்பகம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

1—4—1979 முதல் 31—3—1980 முடிய உள்ள கால அளவில் வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு சம்பந்தமான புள்ளி விவரங்கள் பின்வருமாறு:—

| தொடர் எண்ணும் விவரங்களும். | பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர். | இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. வேலைவாய்பிற்காக பதிவு செய்யப்பட்டவர்கள். | 850 | 4,360 |
| 2. வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டவர்கள். | 273 | 408 |
| 3. வேலைவாய்ப்பிற்காக தற்போதைய பதிவேட்டில் எஞ்சியுள்ளவர்களின் எண்ணிக்கை (31—3—1980-ம் நாள் நிலவரப்படி). | 2,315 | 10,045 |

இந்த அறிக்கை கால அளவில் வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலக பிரிவால் கீழ்க்கண்ட முக்கிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

தாயகம் திரும்பியோரில் 154 பேர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அனுமதிக்க தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டனர். மேலும் இப்பிரிவின் முயற்சி



யால் தாயகம் திரும்பியோரில் 44 பேர் புகுமுகத் தொழில் நுட்ப பயிற்சி படிப்பிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். பயிற்சிகள் முடிந்ததும் அவர்கள் நிரந்தர தொழில் பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டார்கள். 1979-ம் ஆண்டு தாயகம் திரும்பியோரில் 6 பெண்கள் வட ஆற்காடு, வேலூர் ஆடைகள்—தூக்குப்படுக்கைகள் தயாரிக்கும் அரசு நிலையத்தில் இளநிலைத் தர சான்றிதழ் பயிற்சி வகுப்பில் சேர்க்கப் பட்டனர். நாகப்பட்டினம், குளச்சல் மீனவர் பயிற்சி நிலையங்களில் தாயகம் திரும்பியோரில் முறையே 6,2 பேர் நவீன மீன் பிடிக்கும் பயிற்சிக்காக சேர்க்கப்பட்டனர். மேலும் இவ்வாண்டு மீனவர் பயிற்சிக்காக கடலூர், தூத்துக்குடி மீனவர் பயிற்சி நிலையங்களுக்கு தாயகம் திரும்பியோரை பரிந்துரை செய்யுமாறு தெரிந்து எடுக்கப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

மத்தியப்பிரதேச ரெய்ப்பூரிலுள்ள மானா க்ருப் ட்ரான்சிட் நிலைய முதன்மை கமாண்ட் அவர்களிடம் தாயகம் திரும்பியோரை தொழிற்பயிற்சிக்காக பரிந்துரை செய்து அனுப்புமாறு அனைத்து வேலைவாய்ப்பு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

மேலும் தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பகங்களில் தொழிற்பயிற்சி பெற்று பதிவு செய்துள்ள தாயகம் திரும்பியோரின முழு விவரத்தை மாநிலத்திலுள்ள தனியார் துறை நிறுவனங்களுக்கு அனுப்பி அவர்களை முடிந்தவரை வேலையில் அமர்த்திக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு இம்மாநிலத்தில் பெரிய தொழிலதிபர்கள் அனைவரும் தத்தம் தொழில் பணிமனைகளில் தொழிற்பயிற்சி வேலைவாய்ப்பு நிறுவனங்கள் அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டுள்ள நிறுவனர் பயிற்சி பெற்றவர்கள் ஆகியோரது விவரங்களை அளித்து அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டு கடிதங்கள் எழுதப் பட்டன.

இராமநாதபுரம் மத்திய வேலைவாய்ப்புப் பிரிவு இது வரையில் புரிந்து வந்த பணிகளில் சில இப்பிரிவிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக வேலைக் காலி யிடங்கள் தொழில் பழகுவோர் பதவிக் காலியிடங்கள் ஆகியவை குறித்து இப்பிரிவுக்குத் தெரிவிக்கப்படும்போது அவ்விடங் களில் தாயகம் திரும்பியோரை நேரடியாக நியமிக்க வசதி அளிக்கும் வண்ணம் வேலைவாய்ப்பு தொடர்பு அலுவலகப் பிரிவில் சிறிய அளவில் அமைந்த பதிவேடு ஒன்று வைத்து வரப்படுகிறது. இராமநாதபுரம் மத்திய வேலைவாய்ப்புப் பிரிவு மூடப்பட்டதன் விளைவாக தென்னிந்தியாவில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து வேலைக் காலியிடங்கள் பற்றி இப்பிரிவுக்குத் தெரிவிக்கப்படுகிறது. இயன்றவரையில் தாயகம் திரும்பியோர்களில் எத்தனை பேரை நியமிக்க முடியுமோ அத்தனை பேரை நியமிக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வறிக்கைக் கால அளவில் தாயகம் திரும்பியோரில் ஏழு பேரின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்வதற்காகப் பின் வரும் தொழிலதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன:—

1. செயலாளர், விசாகப்பட்டினம் துறைமுகப் பொறுப்புக் கழகம், விசாகப்பட்டினம்.

2. இந்திய கப்பல் கழகம் (லிமிடெட்), பம்பாய்-21.

3. மேலாளர் (பி.டி.ஆர்.) ஆல்டியா டாக் காம்பௌக்ஸ் போர்ட் ஹெவுஸ், கல்கத்தா (Haldia Dock Complex Port House, Calcutta).

4. பொது மேலாளர், பாரத கனரக மின் நிறுவனம் (லிமிடெட்), பெங்களூர்.

5. பொது மேலாளர், பாரத கனரக மின் நிறுவனம், சென்னை-35.

6. திட்ட மேலாளர், குத்ரேமுக் இரும்புத் தாதுத் திட்டம், கர்நாடகா.





இவ்வறிக்கைக் கால அளவில் தாயகம் திரும்பியோரில் 40 கைவினைஞர்கள் தொழில் பழகுவோர் பயிற்சி பெறுவதற்காக திருச்சி பாரத் ஹெவி எலக்ட்ரிகல் பணியாளர் நியமன அதிகாரிக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளனர். தாயகம் திரும்பியோரில் 18 பேர்கள் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழக இயக்குநர் அவர்களுக்கு தொழிலாளர் வேலைக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டனர். மேலும் தாயகம் திரும்பியோரில் தொழிற் பயிற்சி நிலைய பயிற்சி பெற்ற 40 பேர் பெங்களூர் இந்துஸ்தான் மெசின் டூல்ஸ் லிமிடெட்டின் பணியாளர்களாக நியமன மேலாளர் அவர்களுக்கு பணி இயல் பயிற்சி தொழில் நுட்ப வேலை பழகுநர் பயிற்சிக்காக பரிந்துரை செய்து அனுப்பப் பட்டனர். திருவனந்தபுரத்திலுள்ள ரிசர்வு வங்கி நிர்வாக அலுவலருக்கு 'போராஸ் தண்ணீர் கொடுப்பவர்' வேலை காலியிடங்களுக்கு தாயகம் திரும்பியோரில் 114 பேர் குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது. புனலூர் கொல்லத்திலுள்ள நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு புதுவாழ்வு மலைத் தோட்ட ''விவசாய மேஸ்திரி'' ''உதவி விவசாய மேஸ்திரி'' பதவிக்காலி இடங்களுக்கு தாயகம் திரும்பியோரின் பிறிதொரு விவரப்பட்டியல் அனுப்பப் பட்டது.

இந்த அறிக்கைக் கால அளவில் கொச்சியிலுள்ள ''ஃபாக்ட்'' நிறுவனத்தில் 4 பேர் தொழில் பழகுநர்களாகவும் பெங்களூரில் உள்ள இந்துஸ்தான் மெசின் டூல்ஸ் நிறுவனத்தில் 8 பேர் தொழில் பழகுநர்களாகவும் அனுப்பி வைக்கப்பட்டனர். 2 பேர் திருச்சியிலுள்ள பாரத கனமின் நிலையத்தின் பாதுகாவலர்களாக வேலையில் அமர்த்தப்பட்டனர்.

11. தொழில் பழகு பயிற்சித்திட்டத்தை செயல்படுத்துவதற்குரிய தனிப்பிரிவும் அதன் பணிகளும்: தொழில் பழகும் பயிற்சித் திட்டத்தில் தொழில் பழகுவோரை நியமிக்கும் நடவடிக்கைகளை இப்பிரிவு ஒருங்கிணைக்கிறது.

இத்துறையின் பயிற்சிப் பிரிவு தொழில் பழகு பயிற்சிக்கான எல்லா இடங்களையும் அறிவிக்கிறது. அவ்வித தகவல் கிடைத்தவுடன் தொழிலதிபர்களுக்கு வேலை நாடுவோர்களை அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்பு அலுவலர்களுக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

[1980 ஜூலை 25

இந்த அறிக்கைக் கால அளவில் வேலை வாய்ப்பகங்கள் மூலம் 9,405 விண்ணப்பதாரர்கள் தொழில் பழகு பயிற்சியில் அமர்த்தப்பட்டனர்.

அமர்த்தப்பட்ட தொழில் பழகுவோர் குறித்த விரிவான புள்ளி விவரங்கள் பின் வருமாறு:—

| | பயிற்சியிடங்களின் எண்ணிக்கை, | | |
|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். |
| 1—4—1979 .. | 3,335 | 7,264 | 10,599 |
| 31—3—1980 .. | 3,289 | 7,477 | 10,766 |

| | பயன்படுத்தப்பட்ட பயிற்சி யிடங்களின் எண்ணிக்கை. | | | எய்திய சதவீதம். |
|---|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். | |
| 1—4—1979 | 2,615 | 7,146 | 9,761 | 92.09 |
| 31—3—1980 | 2,591 | 7,330 | 9,921 | 92.14 |

12. <u>மாநில இயக்ககத்திலுள்ள பொது மக்கள் தொடர்பு தகவல் பிரிவு.</u>—இத்துறையின பொது மக்கள் தொடர்பு தகவல் விளமபர பிரிவு பணிகளின் முக்கிய அம்சங்கள் கீழே அறிவிக்கப்பட்டுள்ளன:—

(1) "சுய வேலைவாய்ப்புக்கான நூறு வழிகள்" என்ற நூலின் பிரதிகளை மாவட்ட தொழில் நிலையங்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

(2) பணியாளர்களின் தேர்வுக் கழகத்தில் இருந்து வரும் வேலை வாய்ப்பு விளம்பர நகல்களை தமிழ் நாட்டில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலர்கள் மூலமாக தகுந்த விளம்பரம் கொடுக்கப்படுகிறது.



1980 ஜூலை 25]

(3) மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவிட மிருந்து வரப்பெற்ற விண்ணப்பங்கள் இம்மாநிலத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதோடு உரிய முறையில் விளம்பரப்படுத்தப்பட்டன.

(4) பல்வேறு வேலை அளிப்போர்களிடம் இருந்து வந்த வேலைக் காலியிடங்கள் குறித்து எல்லா வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக தகுந்த விளம்பரம் கொடுக்கப் பட்டது.

(5) வேலைவாய்ப்பு பயிற்சித் துறை தலைமை இயக்கு நரிடமிருந்து வரப்பெற்ற விளம்பரங்களை தமிழ்நாட்டில் உள்ள எல்லா வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் உரிய முறையில் விளம்பரம் கொடுக்கப்படுகிறது.

(6) வேலைவாய்ப்பகங்களின் செயல்கள் குறித்து சிறு விளம்பர அறிவிப்புத்தாள் வடிவமைக்கப்பட்டது.

(7) வேலைவாய்ப்பகங்களின் நிர்ணயிக்கப்பட்ட செயல் முறைகளும் அவைகள் ஆற்றும் பணிகளும் மற்றும் குறைகளை யாரிடம் தெரிவிப்பது என்பன குறித்து தகவல் சுவரொட்டிகள் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன.

(8) சார்நிலை அலுவலர்களின் வானொலிப் பேச்சுகளின் வரைவுகள் பரிசீலனை செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டன.

(9) 1979 ஜூன், ஜூலையில், சென்னைப் பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் வழி காட்டும் நிலையத்தால், நடத்தப்பட்ட 1979-ம் ஆண்டு தகவல் கண்காட்சிக்கு (INFORMEX—1979) உதவிகள் அளிக்கப்பட்டன.

(10) மாவட்டங்களில் வாழ்க்கைத் தொழில் பொருட் காட்சிகள்' கருத்தரங்குகள் நடத்த உதவிகள் அளிக்கப்பட்டன.

(13). 1959-ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகச் சட்டத்தை வேலை காலியிடங்கள் குறித்து கட்டாயமாகத் தெரிவித்தல், (செயல்படுத்தல்):—1959ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலை காலியிடங்கள் குறித்து கட்டாயமாகத் தெரிவித்தல் சட்டமும், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் 1960 ஆம் ஆண்டு இடைக்காலத்தில் செயலுக்கு வந்தன. எல்லா பொதுத்துறை நிறுவனங்களுக்கும் (எத்தனை அளவு இருப்பினும்) 25-ம் அதற்கு மேலும் ஆட்களைக் கொண்ட எல்லா தனியார் துறை நிறுவனங்களுக்கும் இச்சட்டம் பொருந்தும்.

1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் முடிவுற்ற காலாண்டில் இச்சட்டத்தில் அடங்கிய நிறுவனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | |
|---|---|
| (அ) பொதுத்துறை .. .. .. | 35,378 |
| (ஆ) தனியார் துறை .. .. .. | 14,253 |
| மொத்தம் .. | 49,631 |

இந்த அறிக்கை கால அளவில் வேலைவாய்ப்பகங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட வேலை காலியிடங்களின் மொத்த எண்ணிக்கை 60,235 அதில் 5,329 தனியார் துறை நிறுவனங்களாலும் 54,906 பொதுத்துறை நிறுவனங்களாலும் அறிவிக்கப்பட்டன. இக்கால அளவில் நிரப்பப்பட்ட 42,683 வேலை காலியிடங்களில் 40,535 பொதுத்துறை நிறுவனங்களிலும் 2,148 தனியார் துறை நிறுவனங்களிலும் இருந்தன.

1959 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலக (வேலை காலியிடங்கள் குறித்து கட்டாயமாகத் தெரிவித்தல்) சட்டத்தின் விதித்துறைகளின்கீழ், காரணம் காட்டுமாறு அறிவிப்பு ஏதும் எந்தவொரு நிறுவனத்திற்கும் வழங்கப்படவில்லை.



14. இயக்ககத்தில் உள்ள அரிசனப் பழங்குடியினர் ஆகியோருக்குரிய தனிப்பிரிவு.—அரிசனங்கள்/பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட வேலைக் காலியிடங்களில் அவ்வகுப்புகளைச் சேர்ந்தோரை நியமிக்கவும், அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கவும் துறை இயக்குநர் பதவியோடு இயக்குநர் அலுவலகத்தில் மேற்சொன்ன வகுப்பினருக்காக தனிப்பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து இயங்கி வருகிறது.

வேலைவாய்ப்பில் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு சமமாக வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கோடு சோதனை அடிப்படையில் 2—10—1979 ஆம் நாளிலிருந்து சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஒவ்வொரு சமூகத்தை சேர்ந்தவர்களுக்கும் வேலை ஒதுக்கீடு பற்றிய ஒருங்கிணைந்த பதிவேடுகளை பராமரிக்கும் பணி தொடர்பான முன்னோடித் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

15. இக்கால அளவில் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்.—1978–79, 1979–80 ஆகிய ஆண்டு காலங்களில் கீழ்க்கண்ட திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

1. கிராமப்புற மனுதாரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு திருச்சி மாவட்டத்திலுள்ள கரூரிலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடியிலும், தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓசூரிலும் முறையே துறை வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்றை நிறுவுதல்.

2. திருச்சி, சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. அப்பிரிவுகளை அந்தந்த மாவட்டத்திலுள்ள ஊனமுற்றோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவர்களுக்கான புதுவாழ்வு உதவிகளை செய்வதற்கும் நிறுவுதல்.

3. வேலைவாய்ப்பகங்கள் செம்மையாக இயங்குவதற்காக 10 இளநிலை உதவியாளர்கள், மற்றும் 10 பதிவேட்டு எழுத்தர்கள் ஆகிய கூடுதல் பணியாளர்களைக் கொண்டு வேலை வாய்ப்பகங்களை வலுப்படுத்துதல்.

4. மாநில இயக்குநரகத்தில் அரிசனம், பழங்குடியினருக்கான தனிப் பிரிவு அமைத்தல்.

அனுமதி வழங்கப்பட்டு செயல் படுத்தப்பட்ட இதர திட்டங்கள்.—கோயம்புத்தூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு பெரியார் மாவட்டம் உருவாக்கப்பட்டதால் ஈரோட்டிலுள்ள துணை வேலை வாய்ப்பகம் மாவட்ட வேலை வாய்ப்பகமாக 3—10—1979 ஆம் நாளிலிருந்து நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

பழங்குடியினருக்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட காலி இடங்களை நிரப்புவதற்கும் வாழ்க்கைத் தொழில் வழிமுறை மூலம் அவர்களின் திறனை அதிகரிக்கவும், போட்டித் தேர்வு எழுத அவர்களுக்கு பயிற்சியளிக்கவும் நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினருக்கான தனி வாழ்க்கைத் தொழில் வழிமுறை நிலையம் ஒன்று பழங்குடியினரின் மேம்பாட்டுக்குரிய நடவடிக்கை என்னும் திட்டத்தின் கீழ் உதகமண்டலம் மாவட்ட வேலைவாய்ப்பகத்தில் அமைக்கப்பட்டுள்ளது! இப்பிரிவு 1980 மார்ச்சிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது.

சென்னை மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள வேலை வாய்ப்பகங்களின் பணிகளை கம்ப்யூட்டர் மூலம் செய்வதற்கு முழு நேரத் தனிப் பிரிவு ஒன்று 17—5—1980 ஆம் நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது.

16. துறையின் வருங்காலத் திட்டங்கள்.— திருச்சி மாவட்டத்தில் பெருகி வரும் கனரக தொழிற்சாலைகளைக் கருத்தில் கொண்டும், அம்மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தொழில் நுட்ப மனுதாரர் மற்றும் இதர வேலை நாடுவோர் குறித்த பணிச்சுமை பெருகியுள்ளதைக் கருத்தில் கொண்டும் இம்மாவட்டத்திலுள்ள தொழில் நுட்ப மனுதாரர்களை நுட்பமாகக் கவனிக்கும் பொருட்டும் 1980—81 நிதியாண்டில்



தனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் நுட்பம்) ஒன்றைத் திருச்சிராப்பள்ளியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான காலியிடங்கள் குறித்த அறிவிப்புகளின் எண்ணிக்கை பெருகி வருவதையும் மேலும் பணிச் சுமையையும் கருத்தில் கொண்டு 1980–81 நிதியாண்டில் சென்னையில் உள்ள தொழில்-நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு கூடுதல் பணியாளர்களை நியமித்து இவ்வலுவலகத்தை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பகங்களின் செல்திறன் பதிவேட்டிலுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவு அட்டைகளைப் பாதுகாப்பான முறையில் பராமரிக்கும் பொருட்டு 1980–81 நிதியாண்டில் 19 பெரும் வேலைவாய்ப்பகங்களுக்கு விண்ணப்பதாரர்களின் பதிவு அட்டைகள் வைப்பதற்கான 12 அறைகள் கொண்ட இரும்பு அலமாரிகள் வழங்கப்படவிருக்கிறது.

மேலும், வேலை நிலவரத் தகவல் திட்டத்தைச் சார்ந்த பணிகளில் பெருகிவரும் தட்டச்சு வேலைகளை கவனிக்கும் பொருட்டு வேலை வாய்ப்பகங்களிலுள்ள வேலை நிலவரத் தகவல்கள் பிரிவுகளுக்கு கூடுதலாக ஒரு தட்டச்சர் பதவி வீதம் ஆறு தட்டச்சர்களை 1980–81 நிதியாண்டில் நியமனம் செய்ய அனுமதி வழங்கப்படவிருக்கிறது. இதேபோல் இயக்குநர் அலுவலகத்தில் பெருகி வரும் தட்டச்சு வேலைகளைக் கவனிக்கக் கூடுதலாக இரண்டு தட்டச்சர்கள் நியமனம் செய்ய 1980–81 நிதியாண்டில் அனுமதி வழங்கப்படவிருக்கிறது.

கைவினைஞர் பயிற்சித் திட்டம்.

தொழில் வளம் பெருக தொழில் நுட்ப பயிற்சிப் பெற்ற கைத்திறப் பணியாளர் அதிக அளவில் தேவைப்படுகின்றனர். இத்தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்தியாவில் பல பகுதிகளிலும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டன. பயிற்சியை செம்மையாக அளிப்பதற்கு இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணி

மனைகள் உருவாக்கப்பட்டன. கைத்திறக் கைவினைஞர் பணியாளர் பயிற்சித் திட்டத்திற்கு இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்கள் முதுகெலும்பாக உள்ளன. ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையமும் முதல்வரின் பொறுப்பில் இயங்கி வருகிறது. மாநில அளவில் எல்லாத் தொழில் பயிற்சி நிலையங்களும் வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநர் மேற்பார்வையில் இயங்குகின்றன. கைத்திறப் பணியாளர் பயிற்சித் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட வகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

(1) தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற் கல்விப் பயிற்சி.

(2) 1961 ஆம் ஆண்டு தொழிற் பழகுவோர் சட்டத்தின் கீழ் தொழிற் பழகு பயிற்சி.

(3) தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்.

(4) தொழிற் பள்ளிகளுக்கான விதிக் கோவையின் கீழ் மானிய உதவி பெறும் தனியார் தொழிற் பள்ளிகளில் கைத்திறப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(5) வேலை இழந்த பொற்கொல்லர்கள், யாதிரி வடிவமைப்புத் தயாரிப்பாளர், கைத்தறி நெசவாளர்கள் ஆகியோருக்கு தொழில் பயிற்சி நிலையங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களில் (பகுதி நேரத்) தனிப் பயிற்சித் திட்டம்.

(6) தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களைக் காலத்திற்கேற்ப மாற்றி அமைத்தல்.

(7) அம்பத்தூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பணியாளர் பயிற்சித் திட்டம்.

(8) கிராம இளைஞர்களுக்குப் பயிற்சித் திட்டம்.

1. தொழிற் பயிற்சி நிலையங்கள்.—1967–68 ஆம் ஆண்டுத் திட்டத்தின் இறுதியில் 13,112 இருக்கைகள் கொண்ட 31 தொழிற் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் இருந்தன. ஆனால் 1968–



1969 முதல் 1976–77 வரை தொழிற் பயிற்சி நிலையங்கள் எதுவும் புதிதாகத் திறக்கப்படவுமில்லை. இருந்த தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாக்கப்படவுமில்லை.

கம்மியர் (பொது மின் அணுவியல்) துறையில் பெருகிவரும் தேவையைப் பூர்த்தி செய்ய, அடையாறு மின் அணுக்கூடத்தில் தொழிற் பயிற்சி நிறுவன பகுதி ஒன்று 1977–78-ல் தொடங்கப்பட்டது. 16 மாணவர்கள் வீதம் இரண்டு குழுக்களாக 32 மாணவர்கள் 1977 மற்றும் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இத்தொழிற் பயிற்சிப் பள்ளிகளில், 29 பொறியியல் பிரிவுகளிலும் 6 பொறியியல் அல்லாத பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. 16 தொழிற் பிரிவுகளின் பயிற்சிக் காலம் ஓராண்டாகவும், ஏனைய 19 தொழில் பிரிவுகளின் பயிற்சிக் காலம் இரண்டாண்டாகவும் உள்ளது. மகளிர்க்கென தனியான தொழிற் பயிற்சி பள்ளி ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது. ஆண்டுக்கு ஒருமுறை தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் பயிற்சியாளர்கள் சேர்க்கையில் இட ஒதுக்கீடு விதிகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் ஒதுக்கப்பட்ட இடங்களின் சதவீதம் சேர்க்கப்பட்ட பயிற்சியாளர்களின் சதவீதம் குறித்து புள்ளி விவரங்கள் வருமாறு:—

| | இட ஒதுக்கீட்டின் சதவீதம். | சேர்க்கப்பட்ட பயிற்சியாளர்களின் சதவீதம். |
|---|---|---|
| (1) அரிசனங்கள்-பழங்குடியினர் .. | 18 | 19 |
| (2) பின்தங்கிய வகுப்பினர் .. .. | 31 | 56 |
| (3) அகதிகள் .. .. .. .. | 5 | 2·8 |

உடல் ஊனமுற்றோர்க்கென தனியான ஒதுக்கீடு இல்லையெனினும் பயிற்சி பெறத் தகுதி உடைய 127 உடல் ஊனமுற்றவர்கள் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டனர்.

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சித்திறனை செம்மையாக்கவும் திறமையான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவும் திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் துணை இயக்குநர்கள் தலைமையில் மூன்று வட்டார அலுவலகங்கள் நிறுவப்பட்டன. 1980–81-ல் நான்காவது வட்டாரத் துணை இயக்குநர் அலுவலகம் நிறுவக் கருதப்பட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டு வரை 18 பொறியியல் தொழிற் பிரிவுகளில் பயிற்சியில் சேர்வதற்கு குறைந்த அளவு கல்வித் தகுதி 9-வது வகுப்புவரை படித்திருக்கவேண்டும் என்று கருதப்பட்டது. பயிற்சியின் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் இக்குறைந்த அளவுக் கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருக்க வேண்டும் என்று மாற்றப்பட்டது.

இம்மாநிலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தினை கீழ்க்கண்டவைகளிலிருந்து அறியலாம். ஏற்கெனவே நடைபெற்ற 15 அனைத்திந்திய திறமைப் போட்டிகளில் இம்மாநிலம் 8 முறைகள் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடந்த திறமைப் போட்டியிலும் நமது மாநிலம் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கென குடியரசுத் தலைவரின் சுழற்கேடயத்தை 8-வது முறையாகப் பெறும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்து அனைத்திந்திய தொழில் பயிற்சியாளர்கள் தேர்வு எழுதும் சம்பந்தப்பட்ட விடைத்தாள்களை திருச்சி, மதுரை, கோவை, சென்னை ஆகிய வட்டார மைய இடங்களில் திருத்த ஏற்பாடு செய்யப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் 16 தொழிற் பிரிவுகளில் இம்முறைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. பயிற்சியாளர்கள் இன்னாரெனத் தெரியாவண்ணம் அவர்கள்



தேர்வு எண்களுக்கு மாற்று எண்கள் அளிக்கப்பட்டன. இத்திட்டம் அநேக ஆண்டுகளாக தொழில் நுட்ப கல்வி இயக்குநர் அலுவலகத்தில் நடைமுறையில் உள்ளது. இவ்வாறு மதிப்பீடு செய்தும், 90 விழுக்காடுகளுக்கு மேலாக பயிற்சியாளர்கள் அனைத்திந்திய இறுதியாண்டு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியது. 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஒன்று, இரண்டு ஆண்டுப் பயிற்சியுடைய 35 தொழில்களுக்கும் இத்திட்டம் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. 1961 ஆம் ஆண்டு தொழிற் பழகுவோர் பயிற்சித் திட்டம்.—1961 ஆம் ஆண்டு தொழிற் பழகுவோர் பயிற்சித் திட்டம் 1963 ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின் விதித்துறைகளின்படி, குறிப்பிட்ட எண்ணிக்கை பயிற்சியாளர்களுக்குக் குறிப்பிட்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிப்பது தொழிலதிபர்களின் கடமையாகும். இப்பயிற்சித் திட்டம் தொழிற் பயிற்சிப் பள்ளிகளுக்கு அளிக்கும் நிறுவனப் பயிற்சியின் தொடர்ச்சியாகும். தொழிற் சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்ய போதிய அளவுக்குப் பயிற்சி பெற்றவர்களைக் கைவினைஞர்களை தேசிய அளவில் உருவாக்கி அவர்களின் திறமையை வளர்ப்பதும், இந்தியா முழுவதும் ஒரே சீரான பயிற்சி வசதியை முறைப்படுத்திச் செயல்படுத்துவதும், இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழில் பழகுவோருக்கு பயிற்சியின்போது அடிப்படைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதைப்போலவே இத்தகைய வசதிகள் இல்லா சிறு நிறுவனங்களில் பயிற்சி பெற நேரிடையாகச் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கு அடிப்படைப் பயிற்சியையும், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் அளித்து வருகிறது. பயிற்சியின் கால அளவு அந்தந்த தொழிலைப் பொறுத்து 6 மாதம் முதல் 4 ஆண்டுகளாகும். தொழிற் பழகுவோர், பயிற்சியின் இறுதியில் அனைத்திந்திய ஆண்டு திறமைப் போட்டிகளில் பங்கேற்கின்றனர். தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு தொழிற் பழகுவோர் பயிற்சி தேசியச் சான்றிதழ் அளிக்கப்படுகிறது.

இன்றுள்ளவாறு தொழில் பழகுவோர் சட்டத்தின் கீழ் 103 தொழில்கள் பயிற்சிக்கென குறிப்பிடப்பட்டுள்ளன. 9,803 தொழில் பழகுவோர் தனியார் நிறுவனங்களிலும் மாநில அரசுத் துறைகளிலும் மாநில அரசு நிறுவனங்களிலும் பயிற்சி பெறுகின்றனர். 3,688 தொழில் பழகுவோர்க்கு மத்திய அரசு துறைகளிலும் அவற்றைச் சார்ந்த நிறுவனங்களிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறாக 13,491 தொழில் பழகுவோர் பல்வேறு பொது, மற்றும் தனியார் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர். எல்லா தொழில் பழகுவோருக்கும் பயிற்சிக்கால அளவைப் பொறுத்து தலா ரூ. 130 முதல் ரூ. 200 வரை மாதப் பயிற்சி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் அன்றுள்ளபடி தனியார் மற்றும் தமிழக அரசுத் துறையிலும், நிறுவனங்களிலும் 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டம் செயல்படுத்தப்படும் நிறுவனங்கள் 1,215 ஆகும். குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தில் குறிப்பிட்ட தொழிலில் தொழில் பழகுவோர் பயிற்சியை முடித்தவர்களை அந்த நிறுவனத்தில் வேலை காலி இருந்தால் அந்த நிறுவனத்திலேயே பணிக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், அப்படிச்செய்யுமுன் அந்த நிறுவனம், முன்னர் பயிற்சி பெற்ற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டவர்களிடையே அவ்வேலைக்கு நியமிக்கப் பெற எவருமில்லை என்ற சான்றிதழை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரிடமிருந்து பெறவேண்டும் என்றும், 1979 ஜூலையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

3. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள்.—தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தொழில்துறை அறிவினை மேம்படுத்தி அதன் மூலம் அவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமும், குறிக்கோளும் ஆகும். ஆகையால், தொழிற்சாலை அதிகமாக இருக்கக்கூடிய இடங்களில் இத்திட்டம் தொழிற் பயிற்சி நிலையங்களின் வாயிலாகச் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி கிண்டி, வட சென்னை, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள



தொழிற் பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட மொத்த பயிற்சி இடங்கள் 1,050 ஆகும்.

4. நிதி உதவிபெறும் தொழிற் பள்ளிகள்.—வேலைவாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட, தொழில் பள்ளிகள் ஒழுங்கு முறை விதிக் கோவையின் கீழ் அங்கீகாரம் அளிக்கப்பட்ட 72 தொழிற் பள்ளிகள் தற்சமயம் தமிழ்நாட்டில் உள்ளன. இப்பள்ளிகள் தச்சுத் தொழில், கருமார் தொழில், பொருத்துநர் தொழில், பற்றவைக்கும் தொழில், பூவேலை, பின்னல் வேலை, துணிவெட்டுதல், தைத்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கின்றனர். இப் பள்ளிகளில பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 4,754.

தற்போது 4,326 மாணவர்கள் இப்பள்ளிகளில் பயிற்சி பெறுகிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட எல்லா தனியார் நிறுவனங்களிலும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு எல்லாத் தொழில்களுக்கும் பொதுவான பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டு எல்லாத் தொழில் நிலையங்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1975ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் பொதுவான இறுதி யாண்டுத் தேர்வும் நடத்தப்பட்டு வருகிறது. தொழிற் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறை விதிக்கோவையின் விதித்துறைகளின்படி இப்பள்ளிகள் மானியம் பெறத் தகுதியுடையவை.

5. சிறப்புப் பயிற்சித் திட்டம்.—வேலை இழந்த பொற்கொல்லர்கள், மாதிரி வடிவமைப்புத் தயாரிப்பாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் ஆகியவர்களுக்குப் பொருத்தமான வேலையைப் பெறுவதற்கான சில தொழில் நுட்பப் பயிற்சிகளை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். சேலம், திருச்சி, பேட்டை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு கருமார் தொழில், பொருத்துநர் தொழில், செப்பு வேலைப்பாடு- தகர வேலைப்பாடு ஆகிய இரட்டைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ. 10 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 160 ஆகும்.

6. தொழில் பயிற்சி முறைத்திட்டம் (தொழில் நுணுக்கம் மிகுந்தது).—ஏற்கெனவே தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் தேவைக்கு ஏற்ப, மேலும் நுணுக்கமும் புதுமையும் வாய்ந்த தொழில் பள்ளி கல்வி வகுப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு முதற்படியாக அம்பத்தூர், தொழிற் பயிற்சி நிலையத்தில் இத்திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்டம், அனைத்து நாடுகள் தொழிலாளர்கள் ஸ்தாபனம் ஆகியவற்றின் உதவியுடன் நடத்தப்படுகிறது. கீழ்க்கண்ட தொழில் பிரிவுகள் அம்பத்தூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளன:—

(1) இந்திய தர நிர்ணயம் மற்றும் பொறியியல் வரைபடங்கள் படித்தல்.

(2) உலோகப் பற்ற வைத்தலில் சிறப்புப் பயிற்சி.

(3) கருவி மற்றும் அச்சு வார்ப்பவர்.

(4) கம்மியர் (பராமரிப்பு).

(5) மின்சாரம் (பராமரிப்பு).

இதுவரை 43 பல்வேறு பட்ட தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்பட்ட 274 தொழிலாளர்கள் மேற்கூறிய தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

7. அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்றுநருக்கான பயிற்சித் திட்டம்.—பயிற்சி முறையிலும் ஒலி, ஒளிக் கருவிகளை உபயோகிப்பதிலும் மற்றும் நிர்வாகம் முதலியவற்றிலும் பயிற்றுநர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிற்சித் திட்டம் அம்பத்தூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தொடங்கப்படும். இப்பயிற்சித் திட்டத்தை 1979–80ஆம் ஆண்டு முதற்கொண்டு ஆரம்பிக்க அரசு அனுமதி அளித்திருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள 32 தொழிற்



பயிற்சி நிலையங்களில் பணிபுரியும் கைத்திறப் பயிற்சி ஆசிரியர்கள் 1,000 பேர் மேற்பார்வைஆசிரியர்கள் 150 பேர் இப்பயிற்சி திட்டத்தினால் பயன் அடைவார்கள்.

பயிற்சி முறை நுட்பங்கள் என்பதன் கீழ் கற்பிக்கும் முறையில் பயிற்சி பாடத்திட்டங்களில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள், கற்பிக்கும் முறை குறித்த கோட்பாடுகள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதுடன் இந்த ஆசிரியர்கள் கற்பித்தல் தேர்வு நடத்தி மதிப்பீடு செய்தல், கற்பிப்பதற்கான சாதனங்களை உரிய இடத்தில் காட்டி விளக்கும் முறை ஆகியவற்றையும் தெரிந்து கொள்ளுகின்றனர். நவீன ஒலி-ஒளிக்கருவிகளைப் பயன்படுத்துவதிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

8. கிராம இளைஞர்களுக்கு பயிற்சித் திட்டம்.—கிராமப்புறக் கைவினைஞர்கள் திறமையுடன் தம் தொழிலை செவ்வனே செய்ய உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுவரையில் கைத்திறனில் போதிய தேர்ச்சி அடையாதவர்களுக்குத் தேர்ச்சி அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப்புறப் பகுதிகளில் எந்த தொழில்களில் கைத்திறன் மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமோ அந்தத் தொழில்களில் கைத்திறன் அதிகரிக்கச் செய்வதையும் அதன் மூலம் திறமை மிக்க கைவினைஞர்கள் நகர்ப்புறச் சேரிகளுக்கு குடி பெயர்வதைத் தடுத்து அவர்களது கிராமப்புறங்களிலேயே அவர்கள் தொழில் புரிவதை ஊக்குவிப்பதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

குறிப்பிட்ட கிராமப்புறங்களில் தேவைப்படும் தொழில் திறன்களைக் கண்டறிய அந்தந்தப் பகுதிகளிலேயே விவரமான கணக்கெடுப்பு செய்யப்பட்டது. இந்த கணக்கெடுப்பு ஒவ்வொரு வளர்ச்சித் திட்டப் பகுதிகளிலும் 5 கிராமங்கள் வீதம் மொத்தம் 66 வளர்ச்சித் திட்டப் பகுதிகளைச் சார்ந்த 330 கிராமப்புறங்களில் நடத்தப்பட்டது. கைவிசை மூலம்

இயக்கப்படும் சிறு இயந்திரம் தொடங்கி நவீன முறையில் இயக்கப்படும் பெரிய இயந்திரங்கள் வரை, கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதைப்போலவே, பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் நிறுவனங்கள் குறித்து விவரங்களும் தயாரிக்கப்பட்டன. நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் பொறிகளின் எண்ணிக்கையையும் அவற்றைப் பழுது பார்க்கும் வசதியையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் தற்போதுள்ள பழுது பார்க்கும் நிறுவனங்களை மேலும் விரிவாக்கவேண்டியது அவசியம் என்றுத் தெரிகிறது. பண்ணை அடிப்படையாய்க் கொண்ட பணிகள் தவிர, சைக்கிள் பழுது பார்த்தல், இரு சக்கர வண்டி பழுது பார்த்தல், மின்சாரக் கம்பி வேலை, மின் சாதனங்கள் பழுது பார்த்தல் தச்சு வேலை, கருமார வேலை போன்ற கிராமப்புறங்களுக்கு இன்றியமையாத கைத்தொழில்கள் பல இருப்பதும் தெரிய வந்தது. எனவே, தெளிப்பான் சீர் செய்தல், மற்றும் பழுது பார்த்தல் இயந்திரங்கள் டீசல் மற்றும் மின்சார பல்புகள் பழுது பார்த்தல் நீங்கலாக இரு சக்கர வண்டிகள் பழுது பார்த்தல், வானொலி பழுது பார்த்தல், எளிய மின்கம்பி இடுதல், மின்சார சாதனங்களைப் பழுது பார்த்தல், தச்சு வேலை, கருமார வேலைபோன்ற தொழில்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேலூர், திருவண்ணாமலை, கடலூர், உளுந்தூர் பேட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், அரியலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி-கூடலூர், மேட்டூர் அணை, கோயம்புத்தூர் ஈரோடு, தாராபுரம், ஓசூர், தூத்துக்குடி, திருச்செந்தூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய ஊர்களில் உள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாள் முதல் இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பயிற்சிக் காலம் மூன்று மாதமாகும். இப்பயிற்சி ஓய்வு நேரமாகிய மாலை வேலைகளில் ஆறு முதல் ஒன்பது மணிவரை அளிக்கப்படும். இதன்காரணமாக ஏற்கனவே வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள், அவர்களுடைய ஊதியத்தை இழக்காவண்ணம் வகை செய்யப்பட்டுள்ளது.



பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 75 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில், ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் ரூ. 100 மதிப்புள்ள ஒரு கருவிப்பெட்டி, அதன் அடிப்படை விலையில் பாதி விலைக்கு வழங்கப்படுகிறது. 1979-80 ஆண்டில் இப்பயிற்சித் திட்டத்தினால் 2,200 மாணவர்களுக்குக் பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் தொழிற் பயிற்சிக்கான தேசியச்குழு வகுத்துள்ள ஆசிரியர் முறையை அறிமுகப்படுத்துதல்,— பயிற்சியின் தரத்தை மேம்படுத்தவும், பயிற்சியாளர்கள் தொழிற்சாலைகளில் மேலும் பலதிறப்பட்ட வேலை வாய்ப்புகளை பெறும் வகையிலும் இவ்வரசு தமிழ் நாட்டிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவன்ங்களில், தொழிற் பயிற்சிக்கான தேசியக்குழு வகுத்துள்ள ஆசிரியர் முறையினை அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளது.

9. வேலூர் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் தோல் தொழில்கள் இரண்டைத் தொடங்குதல்.—இத்துறையில் இப்போதுள்ள பயிற்சி நிறுவனங்கள், இத்தொழிலில் போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான தேவையை முழுவதும் நிறைவு செய்யவில்லை? இதற்கு வழிகாண இத்தொழிற் பயிற்சி நிறுவனங்களும் குறிப்பிடத்தக்க பணியாற்றலாம். ஆசிரியர்கள் பற்றாக் குறையை தீர்த்து வைப்பதுடன் மட்டுமின்றி காலணி தயாரிப்பி மையப் பயிற்சி நிலையம், தோல் மைய ஆராய்ச்சி நிறுவனங்கள் தோல் தொழில் நுட்பவியல் நிறுவனம் ஆகிய பயிற்சி நிலையங்கள் இவ்வகையில் மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு உறுதுணையாகவும் தொழிற்பயிற்சி நிலையங்கள் பணியாற்றலாம். இதனைக் கருத்தில் கொண்டு 1980-81-ல் வேலூர் தொழில் பயிற்சி நிறுவனத்தில் "காலணிகள், தோல் பெட்டிகள், ஏனைய தோல் தயாரிப்புப் பொருள்கள் தொடர்பான தோல் தயாரிப்புத் தொழில்கள் இரண்டு தொடங்கப்படவிருக்கின்றன.

குடிசைப்பகுதி மக்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம்.— இத்திட்டம் சென்னை மாநகரில் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூன்றின் வழியாக குடிசைப்பகுதி மக்களுக்குப் பயிற்சியளிப்

பதற்கு ரூபாய் 2.5 லட்சம் செலவில் உலக வங்கியின உதவியுடன் சென்னை பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்தால் தொடங்கப்பட்டது. பல்வேறு வகையான சுய வேலை வாய்ப்புத் தொழில்களில் குடிசைப் பகுதிவாசிகள் 540 பேருக்கு பயிற்சியளிக்கப்படும். பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் பயிற்சிக் காலத்தில் திங்கள் தோறும் பயிற்சி உதவித் தொகையாக 50 ரூபாய் அளக்கப்படும். இப்பயிற்சி வட சென்னை, கிண்டி, அம்பத்தூர் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் 1-12-1979-ல் இருந்து அளிக்கப்படுகிறது.

கோரிக்கை 57, பல்வகை மூலதனச் செலவு 495 ஏனைய சமூக சமுதாய நடப் பயகள் குறித்த மூலதனச் செலவு-ஏ ஏனைய சமூக சமுதாய நடப் பணிகள் குறித்த மூலதனச் செலவுகள் — ஏபி. வேலை வாய்ப்பு

கைத்திறப் பணியாளர் பயிற்சித் திட்டம் குறித்த மூலதனச் செலவுக்கான மானியக்கோரிக்கை, ‘‘கோரிக்கை 57, பலவகை மூலதனச் செலவு’’ என்பதன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

கைத்திறப் பணியாளர் பயிற்சித் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக கீழக்காணும் துணைத் திட்டம் பணிகள் குறித்த மூலதனச் செலவுக்காக 1980–81 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 2,96 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1. சிறப்புத் திட்டத்திற்காக (பகுதி-நேரம்) கருவிகள் சாதனங்கள் வாங்குதல்.—வேலை இழந்த பொற்கொல்லர்களுக்கும் மாதிரி வடிவமைப்புத் தமாரிப்பவர்களுக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கும் உதவுவதே, இத்திட்டத்தின் நோக்கமாகும் இத்திட்டம் சேலம், திருச்சி, பேட்டை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்குத் தேவைப்படு1 சாதனங்களைப் புதுப்பிப்பதற்கும் வாங்குதற்காக 1980–8



ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினம், திட்டத்தில் சேராத பணிகள் என்ற தலைப்பின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது.

2. தொழிற் பயிற்சி நிறுவனப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள்.— இம்மாநிலத்திலுள்ள 25 தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களில் தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு நிலையான குடியிருப்புகள் உள்ளன. 1980–81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

3. தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் விடுதி கட்டிடங்களைக் கட்டுதல்.—இம்மாநிலத்திலுள்ள 24 தொழிற் பயிற்சி நிலையங்களில் நிலையான மாணவர் விடுதி கட்டிடங்கள் உள்ளன. 1980–81 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

4. தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்.—பிளேட்டுகள் தயாரித்தல், லிதோ ஆப்செட் இயந்திர இயக்குதல் ஆகிய புதிய தொழில்களில் கிண்டி தொழில் பயிற்சி நிறுவனத்தில் அடிப்படை பயிற்சி வசதிகள் செய்து கொடுக்க, ஏற்கனவே ஒதுக்கிய 2,000 ரூபாயுடன் 1980–81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,00,000 தொகை இப்போது ஒதுக்கப்பட்டுள்ளது.

5. மேலும் பல்வகைத் தொழிற் பயிற்சிகளை அறிமுகப்படுத்துதல்.- தொழில் பயிற்சி நிலையத்தில் இரண்டாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட சில் தொழில்களுக்கு மக்கள் ஆதரவு அவ்வளவாகக் கிடைக்கவில்லை. குறிப்பிட்ட பகுதியில் அத்தொழில்களுக்கு வேலை

வாய்ப்பு கிடைக்காததே இதற்குக் காரணமாகும். அதன் விளைவால், அத்தொழில்களில் சேருவதற்கு மாணவர்கள் முன்வரவில்லை. தொழில் பயிற்சி வசதிகள் வீணாவதைத் தடுக்கும் பொருட்டு, ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையத்திலும் அனுமதிக்கப்பட்ட இடங்கள் முழுவதையும் பயன்படுத்தவும், மக்களிடையே குறைந்த ஆதரவு பெற்ற தொழில்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக அதிக வேலை வாய்ப்பளிக்கும் தொழில்களை புதிதாகக் கொண்டுவருவதன் மூலம், பல்வகைத் தொழிற் பயிற்சிகளை அறிமுகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1970–71 முதல் 1975–76 வரையில் தமிழ்நாட்டில் தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள 768 இருக்கைகள் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டன. கோயம்புத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தற்போது பொருத்துநர் (ஃபிட்டர்) தொழிலில் உள்ள 32 இருக்கைகள் குறைக்கப்பட்டு மக்கள் ஆதரவு பெற்ற கம்மியர் (குளிர் பதனம்-சீர்வளி வசதி) தொழிலுக்காக அவை ஒதுக்கப்பட்டு, 16 பயிற்சி பெறுபவர்களுக்கு ஒரு பிரிவு என்ற வீதத்தில் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, 1978 ஆகஸ்ட் மாதம் முதல் அப்பிரிவுகளில் மாணவர்கள் சேர்ந்து பயிற்சி பெற அரசு அனுமதி வழங்கியது. 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், கருவிகள் சாதனங்கள் வாங்குவதற்காக, ரூ. 1,000 அடையாள நிதியொதுக்கமும் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 1,000 அடையாள நிதியொதுக்கமும் செய்யப்பட்டுள்ளது. சில புதிய தொழிற்சாலைகளை அறிமுகப்படுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

6. சாதனங்கள் வாங்குதல்.—பல்வேறு தொழில்களுக்காக, மத்திய அரசு வரையறுத்த கருவிகள் சாதனங்கள் குறித்த தரப்பட்டியலைத் திருத்தியமைத்ததனால், கம்மியர் (மோட்டார் வாகனங்கள்), கம்மியர் (குளிர்பதனம்-சீர்வளி வசதி), கருவிகளும், சாதனங்களும் வாங்கவேண்டியுள்ளது. இதற்காக 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 42,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.





7. தொழில் பயிற்சி நிலையங்களை மேம்படுத்தல்.—31 தொழில் பயிற்சி நிறுவனங்கள் நிலையங்கள் அனைத்திலும் உயர் அழுத்த மின்சாரத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல் பணிப்பட்டறைக் கட்டிடங்கள், வகுப்பு அறைகள் முதலியவற்றைக் கட்டுதல், பராமரித்தல் ஆகியவற்றிற்காக 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 32,000 தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு மேற்பார்வையாளர்களின் பயனுக்காக, இயந்திரத்தை வாங்க, 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

8. கம்மியர் தொழில் (பொது மின்னணுவியல்) பயிற்சி.—கம்மியர் (பொது மின்னணுவியல்) தொழில் பயிற்சி அளிப்பதற்காக, அடையாறு மின்னணுக் கருவிகள் தொழில்வளாகத்தில் தொழில் பயிற்சி நிலையப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. பயிற்சி பெறுபவர்களுக்கு சுற்றுப்புற வசதிகள் இருக்குமாதலால், அடையாறு மின்னணுக் கருவிகள் வளாகத்தில் இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. புதிதாகத் தொடங்கப்பட்ட தொழிலுக்குத் தேவைப்படும் இயந்திரமும், சாதனமும் வாங்குவதற்காக, 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 10,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

9. தொழிற் பயிற்சி நிலையங்கள் காலத்திற்கேற்ப மாற்றி அமைத்தல்.—நவீனக் கருவிகளை அதிகமாக பயன்படுத்துவது தொழில் நுட்பவியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவற்றைக் கருதி ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் அனைத்து நாடுகள் தொழிலாளர் அமைப்பின் உதவியுடன் அம்பத்தூர் தொழில் பயிற்சி நிலையத்தில் வாழ்க்கை தொழில் மேம்பாட்டுப் பயிற்சி பிரிவு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. 'AVTS' இத்திட்டத்தின் கீழ், கீழ்க்காணும் தொழில்கள் அம்பத்தூரில் தொடங்கப்பட்டுள்ளன.

(1) இந்தியத் தர நிர்ணயம் மற்றும் பொறியியல் வரைப்படங்கள் படித்தல்.

(2) பற்றவைப்போர் சிறப்புப் பயிற்சி.

(3) கருவி மற்றும் அச்சு வார்ப்பவர்.

(4) கம்மியர் (பராமரிப்பு).

(5) கம்மியர் (மின்சாரப் பராமரிப்பு).

இதுவரை 43 தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்பட்ட 274 தொழிலாளர்கள், மேற்கூறிய தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர். இதற்காக, ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள நிதியொதுக்கத்தைத் தவிர, நவீனப்படுத்தும் திட்டத்தைச் செயலாக்குவதற்காகவும், வேலூர் தொழில் பயிற்சி நிலையத்தில் (1) காலணிகள் தயாரிப்பதற்கான பிரிவையும், (2) தோல் பெட்டிகள் ஏனைய தோல் சரக்குகள் தயாரிக்கும் பிரிவையும் தொடங்குவதற்கு 1980-81 வரவு-செலவுத் திட்டத்தில், கூடுதலாக ரூ. 1,67,000 சேர்க்கப்பட்டுள்ளது.

10. ஊரக இளைஞர்களுக்குப் பயிற்சித் திட்டம்.—கிராம இளைஞர்களுக்குப் பல்வேறு தொழில்களில் குறுகிய கால பயிற்சித் திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பயிற்சித் திட்டம் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ஆம் தேதியிலிருந்து, 19 தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டம் கிராமப்புற கைவினைஞர்களிடையே கைத்திறனை வளர்த்து அவர்களது தொழிலை இன்னும் செவ்வனே செய்ய உதவி செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுவரையில் பயிற்சி அற்றவர்களுக்குச் கைத்தொழிலில் பயிற்சி அளிப்பதையும் இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட, கிராமப்புறப் பகுதிகளில் தேவைப்படும் தொழில்களில் கைத்திறனை மேம்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்கென, கடப்பு நிதியாண்டில் ரூ. 1,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தைச் செயலாக்குவதற்கென சிறுகருவிகள்-உபகரணங்களைக் கொள்முதல் செய்யும் பொருட்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அண்மையில் 80,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



## இணைப்பு—III

## கைத்தறி மற்றும் பஞ்சாலை கொள்கையும் திட்டங்களும் 1980–81

முன்னுரை :

1, கைத்தறித் தொழிலானது பழங்காலந் தொட்டு இருந்து வரும் கிராமத் தொழிலாகும், அது பொது மக்களின் துணித் தேவைகளை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதுதவிர, கைத்தறித் துணியின் ஏற்றுமதிக்கான வாய்ப்பு கணிசமான அளவு உயர்ந்துள்ளது. விவசாயத்திற்கு அடுத்து இத்தொழில் வேலை வாய்ப்பு அளிப்பதில் முன்னணியில் உள்ளது.

2. தமிழ்நாட்டில் 5.56 லட்சம் கைத்தறிகள் உள்ளன. இது சுமார் 10 லட்சம் நெசவாளர்க்கு வேலை வாய்ப்பும் வசதியும் மேலும் இத்தொழிலைச் சார்ந்த 30 லட்சம் பேருக்கு வாழ வழி வசதியும் அளிக்கிறது. நமது மாநிலத்தின் கைத்தறித் தொழில் வளர்ச்சித் திட்டங்கள் யாவும் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்த வேலை வாய்ப்பை அளிக்கும் நோக்கிலேயே செயல்படுத்தப்படுகின்றன. நம் நாட்டில் உற்பத்தியாகும் 2,300 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணியில் நமது மாநிலத்தில் 600 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்படுகிறது. தேசிய அளவில் மார்ச் 1985—ம் ஆண்டு இறுதிக்குள் மொத்தம் 3,700 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணி உற்பத்தி செய்வதற்குத் திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட இலக்கை எட்டும் வகையில் நமது மாநிலத்திலும் கைத்தறித் துணி உற்பத்தியை ஆண்டு ஒன்றுக்கு 700 மில்லியன் மீட்டர்களாக அதிகரிக்கும் வகையில் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### II கைத்தறித் தொழில் வளர்ச்சித் திட்டம்.

நம் மாநிலத்தின் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலையும் நிரந்தர ஊதியமும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்னும் நோக்குடன் அரசு கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றி வருகிறது:

1. அதிகமான கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வர, நெசவாளர்களுக்கு நிதியுதவி அளித்து தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக்குதல் (1984–85ல் 75 சதவீதம் ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது)

2. நலிந்துள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்ளுக்கு நிதியுதவி மற்றும் விற்பனை வசதிகளை அளித்து பராமரித்தல்.

3. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தை அதிகப்படுத்தி அவற்றுக்கு விற்பனை வசதி செய்து கொடுத்தல்.

4. கூட்டுறவுத் துறையின் கீழ் வருகின்ற கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான இடு பொருட்களான பருத்தி நூல், பட்டு, செயற்கைப்பட்டு, சரிகை, சாயம் மற்றும் ரசாயனப் பொருட்களை நியாயமான விலையில் அளித்தல்.

5. வடிவமைப்பு (டிசைன்) நிலையங்களை அமைத்தல், நெசவாளர்களுக்குப் பயிற்சியளித்தல், கைத்தறித் தொழில் நுட்ப முறைகளை மாற்றியமைப்பதன் மூலம் கைத்தறிப் பொருட்களின் தரத்தை உயர்த்துதல், பலதிறப்படுத்துதல் ஆகிய திட்டங்களைச் செயற்படுத்துதல்.

6. கைத்தறியில் உற்பத்தியாகும் பருத்தி ரகத் துணிகளுக்கும், செயற்கைப் பட்டு, பாலியஸ்டர் துணி ரகங்களுக்கும் தேவையான செய்முறை வசதிகளைச் செய்து கொடுத்தல்.

7. நாட்டின் அன்னியச் செலாவணியை அதிகரிக்க கைத்தறி துணிகளின் ஏற்றுமதியை அதிகப்படுத்தல்,

8. கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வுக்கென கூட்டுறவு நெசவாளர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் போன்ற நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல்

( )கைத்தறித் தொழிலின் நன்மைக்கென நிறைவேற்றப்படும் திட்டங்கள் பின்வருமாறு :—

(i) அதிக அளவிலான கைத்தறிகளை கூட்டுறவு அமைப்புகளின் கீழ் கொண்டு வருதல்:



கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கான முன்னேற்ற திட்டங்கள் யாவும் நெசவாளர்களை இடைத்தரகர்கள் சுரண்டாத ஒரு தன்மையினைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்கிற முறையில் கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வருதல் சிறப்புக்கு வழி கோலும் என்ற உண்மையைக் கடந்த இருபதாண்டுகளின் அனுபவம் நமக்கு உணர்த்தியது. மேற்கண்ட கொள்கையில் முழு நம்பிக்கை வைத்து 1985-ம் ஆண்டிற்குள் 75 சதவீத கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில், 2.40 இலட்சம் கைத்தறிகள், 31–3–1980, வரையில் 1052 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 1979–80-ல் 20,500 கைத்தறிகள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, 20,000 தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினராகச் சேருவதற்காக கைத்தறி நெசவாளர்கட்கு வழங்கப் பெறும் பங்கு மூலதனக் கடன் தொகை வகையில் ரூ. 16 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. மேலும், 25 புதிய தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்காக, அரசு ரூ. 80 இலட்சம் அனுமதித்துள்ளது. 83 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் 30 தொழில் கூட்டுறவுச் சங்கங்களையும் புதிதாக அமைப்பதன் மூலம் 21,500 தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருவதே 1980–81ம் ஆண்டின் திட்டமாகும். 1980–81ம்ஆண்டில் நெசவாளர்களுக்குப் பங்கு மூலதனக் கடன் தொகை வழங்குவதற்கு ரூ. 17 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தும் திட்டத்திற்காக 1980–81ம் ஆண்டின் திட்ட ஒதுக்கீடாக ரூ. 146.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்குமூலதனத் தொகையை வலுப்படுத்தவென 1979–80 ம் ஆண்டில் ரூ. 20 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 1980–81ம் ஆண்டிற்காக, "நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் மாநில அரசின் பங்கு" என்ற திட்டத்திற்கென ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, 1979–80-ம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி 93 மில்லியன் மீட்டராக இருந்தது. 1980–81 ஆம் ஆண்டில் உற்பத்தியை 100 மில்லியன் மீட்டராக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(ii) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை. வீதத்தில் நிதி உதவி.**

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வங்கி வட்டி வீதத்தை விட 2½ சதவிகிதம் குறைந்த வட்டி வீதத்தில் அளிக்கும் ரிசர்வ் வங்கியின் சலுகை வீத நிதியுதவித் திட்டம் 1980-81-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுகிறது. 1979-80 ம் ஆண்டில் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தலைமைச் சங்கமாகிய கோ-ஆப்டெக்ஸ்க்கும் ரிசர்வ் வங்கி அனுமதித்துள்ள மொத்த கடன் வரம்புகளும், தொகையும், 1980-81ம் ஆண்டிற்கு அச்சங்கங்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ள கடன் வரம்புகளும் வருமாறு:—

(ரூ. கோடியில்)

| | 1979-80 அனுமதிக்கப் பட்டது. | 1980-81 பரிந்துரைக்கப் பட்டது. |
|---|---|---|
| தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் | 16.95 | 22.58 |
| தலைமைச் சங்கம் | 12.00 | 12.00 |

நிதி வழங்கும் வங்கிகள் ரிசர்வ் வங்கியின் 6½ சதவிகிதம் வட்டி வீதத்திலான நிதியை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தலைமைச் சங்கத்திற்கும் வழங்க ஏதுவாக இருக்கும் பொருட்டு வட்டி உதவித் தொகையாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 3 சதவிகிதமும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கு 1 சதவீதமும் வழக்கம்போல் வழங்கப்படும். மேற்கண்ட காரணத்திற்காக 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 54.22 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் 1980-81ம் ஆண்டிற்கு ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு மத்திய வங்கிகளால் வழங்கப்பட்ட நடைமுறை மூலதனக் கடன் வசூலிக்கப்படாததன் விளைவாக ஏற்படும் நஷ்டத்தில் 90 சதவிகிதம் வரை அரசாங்கத்தாலும் மீதமுள்ள தொகை அந்தந்தக் கூட்டுறவு மத்திய வங்கிகளாலும் ஈடுசெய்யப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் அரசாங்கம் ரூ. 10 இலட்சம் இத் திட்டத்தின் கீழ் செலவுத் தொகையாக அனுமதித்துள்ளது. 1980-81 லும் அதே அளவுத் தொகை ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.



**III. கைத்தறித் தொழில் நுட்பத்தின் தரத்தை உயர்த்துவதற்கான திட்டம் :**

மாறிவரும் மக்களின் ரசனைக்கேற்பவும், நுகர்வோரின் விருப்பத்திற்கு ஏற்பவும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வளர்ந்துவரும் தேவைகளை ஈடு செய்யவும் கைத்தறித் தொழில் புதிய தொழில் உத்திகளைக் கையாள வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு கைத்தறி நெசவாளர் சங்கங்கள் தறிகளைப் புதுப்பிக்கவும்/நவீனப்படுத்தவும் அல்லது புதிய நவீன கைத்தறிகளை வாங்கவும் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்கென 1979-80-ம் ஆண்டில் ரூ. 15.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1980-81-ம் ஆண்டிற்கும் இதே அளவு தொகையாகிய ரூ. 15.50 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கைத்தறியில் புதிய தயாரிப்புகளையும், புதிய மாதிரிகளையும் உருவாக்க இயலும் வண்ணம் கோ-ஆப்டெக்ஸ் மாதிரி வடிவமைப்புப் பணி நிலையங்களை ஏற்படுத்தி வருகிறது. 1977-78-ம் ஆண்டில் ஏற்கெனவே மதுரையில் இது போன்ற "வடிவமைப்பு பணி நிலையம்" ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1979-80 ல் அனுமதிக்கப்பட்ட மற்றொரு வடிவமைப்பு பணி நிலையம் திருச்சியில் அமைக்கப்பட்டு வருகின்றது. இது போன்ற இரண்டு நிலையங்கள் 1980-81-ம் ஆண்டில் ரூ. 7 இலட்சம் செலவில் சேலம் மற்றும் கோவையில் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

**IV கைத்தறித் தொழிலுக்கான இடு பொருள்கள் வழங்குதல்**

**(அ) பருத்தி நூல்—**

இம்மாநிலத்தில் உள்ள 3.14 இலட்சம் கதிர் திறன் கொண்ட 12 கூட்டுறவு நூற்பாலைகள், கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கென திங்களொன்றிற்கு 7,000 பேல்களைக் கொண்ட பல வகையான பருத்தி நூல்களை உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), கூட்டுறவு நூற்பு ஆலைகள் உற்பத்தி செய்யும் நூலைக் கொள்முதல் செய்து, 21 நூல் விற்பனை நிலையங்கள் மூலம் மாநில முழுதுமுள்ள 1,052 தொடக்க நெசவாளர்

கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குகிறது. கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்பொரேஷன் ஆலைகளின் உபரிநூலை தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு விற்கவென மதுரை, சேலம் ஆகிய இரு இடங்களில் இரண்டு பொது நூல் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் தொடர்ந்து நூல் கிடைத்து வருவதனால் எல்லாத் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நியாயமான விலையில் தரமான நூல் எப்போதும் கிடைப்பது உறுதியாயிற்று, 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நூல்களின் விலையில் அபரிமிதமான ஏற்றம் ஏற்பட்டிருந்தும் கூட்டுறவு நூற்பு ஆலைகள் 1979 ஆம் ஆண்டு மே திங்களில் நிலவி வந்த ஆலை வாயில் விலையிலேயே நூலை விற்பனை செய்தன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு இந்த விலை மிகக் குறைந்த விலையாகும். இவ்வாறு குறையான விலையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கூட்டுறவு நூற்பாலைகள் நூலை விற்றதனால் அதை இலாபத்தின் ஒரு பகுதியை இழக்க நேரிட்டது. 1979-ம் ஆண்டில் கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்த ரூ. 3370·69 இலட்சம் மதிப்புள்ள 149.36 இலட்சம் கிலோ நூலில் ரூ. 2,791.40 இலட்சம் மதிப்புக்கு 131.12 இலட்சம் கிலோ நூல் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ–ஆப்டெக்ஸ் மூலம் விற்பனை செய்யப்பட்டது. கூட்டுறவு நூற்பு ஆலைகள் கோ-ஆப்டெக்சுக்கு நூல் விலையில் அளித்த சலுகையினால் கோ-ஆப்டெக்சுக்கு விலைச் சலுகையாக ரூ. 50.55 இலட்சம் கிடைத்தது; கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினரல்லாத தனியார் துறையில் உள்ள நெசவாளர்களைப் பொறுத்தமட்டில், கைத்தறித் துணி நூல் துறை மேற்கொண்ட நடவடிக்கையினால் கோவையிலுள்ள தென் இந்திய ஆலைகள் சங்கம், தனது சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள ஆலைகள் மூலம் 1979 செப்டம்பர் திங்களில் 3,674 பேல்கள் நூல் நியாயமான விலையில் வழங்க ஏற்பாடு செய்தது. ஆலைகள் தாமே முன் வந்து, குறைந்த விலையில் நூல் விற்பனை செய்ய மத்திய அரசு அறிவித்த திட்டத்தின் மூலம், 1979 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 1980 ஜனவரி திங்கள் வரை மொத்தம் 12,903 பேல் நூல் தனியார் துறை நெசவாளர்கட்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் தேசிய ஜவுளி கார்ப்பொரேஷன் ஆலைகள்



மற்றும் தென் இந்திய ஆலைகள் உற்பத்தியாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள ஆலைகள் மூலம் நியாய விலையில் விற்பனை செய்யப்பட்டது.

(ஆ) சுத்தமான பட்டு மற்றும் சரிகை

நமது மாநிலத்தில் தற்போது 11,600 தறிகளைக் கொண்ட 57 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களுக்கு மாதம் ஒன்றுக்கு முறையே 14,000 கிலோ கோரா பட்டும் 5,000 மார்க்குகள் சரிகையும் தேவைப்படுகின்றன. இம் மாநிலத்தில் உள்ள அனைத்துப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றுக்குத் தேவையான கச்சாப் பட்டு நூல் பெரும்பாலும் பெங்களூரிலுள்ள தனியார் நிறுவனங்களிலிருந்தும், சரிகையை சூரத் உற்பத்தியாளர்கள் மூலமும் முன்பு வாங்கி வந்தனர். பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கும் ஒரே தரமான பட்டின் விலையில் அதிகமான விலை மாறுபாடுகள் இருந்தன. இதைப் போன்றே சரிகை விலையிலும் ஒரு நிரந்தரத் தன்மை இல்லை. பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்ல தரமான பட்டையும், தங்கச் சரிகையும் நியாயமான விலையில் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன், 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் மத்திய கச்சாப் பட்டு மற்றும் சரிகைக் கொள்முதல் குழு ஒன்று அமைக்கப்பட்டது. கோ–ஆப்டெக்சின் தனி அலுவலரைத் தலைவராகவும், காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம் ஆகிய இடங்களிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளை அங்கத்தினர்களாகவும் கொண்ட இக்குழு தற்பொழுது நல்ல தரமான பட்டினை நியாயமான விலையில் கொள்முதல் செய்து வருகிறது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கச்சாப் பட்டினைப் பயன்படுத்த ஊக்குவிக்கும் வகையில், இக்குழு காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு பட்டு விற்பனைக் கூட்டமைப்பிலிருந்து அதிக அளவு கச்சாப் பட்டை கொள்முதல் செய்து வருகிறது. அடுத்தபடியாக கர்நாடக பட்டு விற்பனைக் கூட்டமைப்பிலிருந்தும் பட்டு விற்பனை வாரியத்திலிருந்து கச்சாப்பட்டை வாங்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதைப்போலவே காஞ்சிபுரம் தமிழ்நாடு சரிகை லிமிடெட்டில் உற்பத்தியாகும் சரிகை அனைத்தும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச்

சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதற்கு மேல் தேவைப்படும் சரிகை சூரத் சரிகை வியாபாரிகள் சங்கத்தின் மூலம் மத்திய கொள்முதல் குழுவால் வாங்கப்படுகிறது.

**(இ) செயற்கைப் பட்டு இழை:**

செயற்கைப் பட்டு இழை இறக்குமதி கொள்கையை மத்திய அரசு தளர்த்தியுள்ளது. இதற்கிணங்க, ஓ.ஜி.எல், திட்டப்படி கைத்தறி நெசவாளர் சங்கங்களும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் உண்மையான உபயோகிப்பாளர் என துறையின் சரக அலுவலர்கள் வழங்கும் சான்றிதழின் அடிப்படையில், செயற்கைப் பட்டு இழையை இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இதைத் தவிர, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்காக கோ—ஆப்டெக்ஸிற்கு, மாதம் ஒன்றுக்கு 30 டன் அளவு விஸ்கோஸ் செயற்கைப்பட்டு இழை வழங்க தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர, தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்திடமிருந்து மரக்கூழினை பெற்று ரயான் நூலை நூற்றுவரும் பிற மாநிலத்தவரிடமிருந்து வருடத்திற்கு 420 டன் விஸ்கோஸ் செயற்கைப்பட்டு இழையைக் கொள்முதல் செய்து தனியார் துறை நெசவாளர்கட்கு விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) சாயப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்:**

தனியார் துறையிலிருக்கும் கைத்தறி நெசவாளர்கள், தங்களுக்குத் தேவையான முழு அளவு சாயப் பொருட்களையும் இரசாயனப் பொருட்களையும் வெளிச் சந்தையிலிருந்து பெற்று வருகின்றனர். சொந்தத்தில் சாயச் சாலைகளை வைத்துள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சிலவும் அவற்றிற்குத் தேவையான சாயம் மற்றும் இரசாயனப் பொருட்களை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்தும் அவர்களது முகவர்களிடமிருந்தும் பெற்று வருகின்றனர். அண்மையில் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனமும், சாயப் பொருட்களை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்று நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குவழங்க ஏற்பாடு செய்துள்ளது. தரமான சாயப் பொருட்களையும் இரசாயனப் பொருட்களையும் நியாயமான விலையில் பெற, கோ.ஆப்டெக்ஸ் தனிஅலுவலர், ஈரோட்டில் உள்ள தமிழ்நாடுதுணி



பதனிடும் ஆலையின் மேலாளர் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகளையும் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அமைப்பின்கீழ் இயங்கும் நெசவாளர்கட்குத் தேவையான சாயப் பொருட்களையும், இரசாயனப் பொருட்களையும் மொத்த அளவில் வாங்கி தமது விற்பனை நிலையங்கள் மூலமாக வழங்க இக் குழு கருதியுள்ளது.

சாய, இரசாயன பொருட்களைத் தயாரிக்கும் பொருட்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், கூட்டுத் துறையில், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கடலூரில் "வானவில் சாய இரசாயனப் பொருட்கள் நிறுவனம்" என்ற ஓர் அமைப்பை நிறுவியுள்ளது. கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் இந்த அமைப்புக்கு ரூ. 10 இலட்சம் பங்கு மூலதனமாகச் செலுத்தும். இந்த நிறுவனம் உற்பத்தியை ஆரம்பித்தவுடன், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் கோ ஆப்டெக்ஸ் மூலம் கிடைக்கும்.

**(V) கைத்தறி வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவியளித்தல்.**

மத்திய அரசு நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசு, நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களை காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மதுரை ஆகிய இடங்களிலும், கரூர், குறிஞ்சிப்பாடி, ஆகிய இரு இடங்களில் இரண்டு ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களையும் அமைத்துள்ளது. இத் திட்டங்களில் இதுவரை மொத்தம் 12,300 கைத்தறிகள் சேர்க்கப்பட்டுள்ளன 1979–80ஆம் ஆண்டில் ரூ. 7.56 இலட்சம் குறிஞ்சிப்பாடி திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 1980–81–ல் மேலும் 5,700 கைத்தறிகளை இத் திட்டங்களில் சேர்த்து மொத்தம் 18,000 கைத்தறிகளாக அதிகரிக்கப்படும். இத் திட்டத்தின்கீழ் சேலம் மற்றும் மதுரையில் உள்ள தீவிரக் கைத்தறி வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் மற்றும் மானியத் தொகையான ரூ. 88.57 இலட்சத்தை 1980–81–ல் வழங்கக் கருதப்பட்டுள்ளது. முதலில் கைத்தறி அபிவிருத்திக் கழகத்தின் கிளை நிறுவனங்களாக அமைக்கப்பட்ட இத்திட்டங்கள் அனைத்தும் பின்னர் கூட்டுறவுத் திட்டங்களாக மாற்றப்பட்டு, கோ–ஆப்டெக்ஸ் உடன் இணைக்கப்பட்டுள்ளன.

128/160—28

(vi) கைத்தறி தொழிலுக்கு விற்பனை வசதி உதவி.

'கோ ஆப்டெக்ஸ்' என்று அழைக்கப்படும் தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுத் தலைமைச் சங்கம், அதனுடன் இணைந்த தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சுமார் 50 சதவிகித உற்பத்திக்கு விற்பனை வசதி செய்து கொடுக்கிறது. 1979–80–ம் ஆண்டில் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி மதிப்பு ரூ. 52 கோடி ஆகும். 1979–80 ஆம் ஆண்டில் "கோ ஆப்டெக்ஸ்" நிறுவனம், தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து ரூ.29கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து ரூ. 35 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளது.

(a) கைத்தறித் துணி விற்பனையின் மீதான தள்ளுபடி.

கைத்தறித் துணி விற்பனையைப் பெருக்குவதற்காக அரசு மேற்கொண்ட பல நடவடிக்கைகளில் நுகர்வோருக்கு கைத்தறித் துணி விற்பனையில் தள்ளுபடிச் சலுகை அளிப்பதும் ஒன்றாகும். கடந்த இரு ஆண்டுகளாக மத்திய அரசு, 30 நாட்களுக்கு 20 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி மத்திய அரசும், மாநில அரசும் சம அளவில் ஏற்றுக் கொள்வது என்ற அடிப்படையில், வழங்கி வருகிறது. இது தவிர, கைத்தறித் துணி விற்பனைக்கு மாநில அரசு 25–லிருந்து 30 நாட்களுக்கு 10 சதவீதம் தள்ளுபடி அளிக்கிறது. 1979–80ஆம் ஆண்டில் தள்ளுபடி வகையில் ரூ. 350 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது இத்திட்டத்தின்கீழ் 1980 81ஆம் ஆண்டிற்கென ரூ. 250 இலட்சம் தற்காலிக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. எனினும் 1980–81 ஆம் ஆண்டில் இச்செலவினம் ரூ.450 இலட்சம் வரை உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

(b) நெசவாளர் கூட்டுறவு தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தைப் பெருக்குதல்.

தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுக்க இயலும் வகையில் நெசவாளர் கூட்டுறவுத் தலைமைச் சங்கத்தின் கடன் பெறும் அளவை உயர்த்தும் பொருட்டு 1979–80 ஆம் ஆண்டில் அரசு, கோ–ஆப்டெக்ஸ் பங்கு மூலதனத்தில் ரூ. 2.57 கோடி முதலீடு செய்துள்ளது.



(c) புதிய விற்பனை நிலையங்கள் அமைக்கவும் தற்போது உள் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தவும் தலைமைச் சங்கத்திற்கு நிதியுதவியளித்தல்.

கோ ஆப்டெக்ஸ், மாநில தலைநகரங்களிலும், முக்கிய நகரங்களிலும் புதிய விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கும், மற்றும் முக்கியமான நகரங்களில் தற்போதுள்ள விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துவதற்குமான திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

இதற்காக 1979–80 ஆம் ஆண்டில் கோ ஆப்டெக்ஸிற்கு ரூ. 56.25 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

(d) வட்டார ஏற்றுமதிக் கிடங்கைக் கட்டுவதற்குத் தலைமைச் சங்கத்திற்கு நிதியுதவி அளித்தல்.

ரூ. 36 இலட்சம் செலவில் சென்னையில் விற்பனைக் காட்சி அரங்குகளுடன் வட்டார ஏற்றுமதி கிடங்கைக் கட்டுவதற்காக கோ ஆப்டெக்ஸுக்கு 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 25.50 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(e) சிறந்த ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.

சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 1979–80 ஆம் ஆண்டில் ரூ.0.09 இலட்சம் செலவிடப்பட்டது.

(vii) பட்டு, செயற்கைப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்தல்:

பட்டு நெசவாளர் புதிய கூட்டுறவுச்சங்கங்களை அமைக்க பங்கு மூலதனம், நவீன உபகரணங்கள், மரச்சாமான்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. பட்டுத் துணிகளின் தேவை அதிகரித்து வருவதால் 1980–81 ஆம் ஆண்டில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாகத் தொடங்கப்படும். 1979–80 ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 25 பட்டுநெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபாய் 1.31 இலட்சம் கடனாகவும் மானியமாகவும் செலவிடப்பட்டுள்ளது. 1980–81–ம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(viii) நலத்திட்டங்கள்:

(a) சேமிப்பு பாதுகாப்புத் திட்டம்

கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனை முன்னிட்டு தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்பு பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், ஆயுள் தொகுப்பு ஈட்டுறுதித் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் இதுவரையில் சுமார் 66,000 கைத்தறி நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இத் திட்டத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொரு நெசவாளரும் தான் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் 6 காசைச் சந்தாத் தொகையாக கொடுக்கின்றனர். அந்த ஒரு ரூபாய்க்கு அரசு 3 காசு மானியமாக கொடுத்து, அந்த மொத்தச்சேமிப்பு ஒரு தனி நிதிக் கணக்காக வைக்கப்படுகின்றது. இதற்கு 7% வட்டி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர் ஒருவர் இறந்து போனால் அவரது நியமனதாரர் அவருடைய சேமிப்புக்கணக்கில் உள்ள தொகைக்குச் சமமான தொகையையோ அல்லது குறைந்த பட்சம் ரூ. 500-ஐ ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெறுகிறார். 1-3-1980-லிருந்து இத்தொகையை ரூ. 3000-த்திற்கு உயர்த்த ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1980-81 ஆம் ஆண்டிற்கு ரூ. 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(b) நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டம்

1962-ம் ஆண்டிற்குப் பிறகு நிறுத்தப்பட்டுவிட்ட நெசவாளர் வீட்டு வசதித்திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, 1979-80-ம் ஆண்டிலிருந்து மாற்றி அமைக்கப்பட்ட புதிய நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாற்றி அமைக்கப்பட்ட நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின்படி வீட்டிற்குரிய மொத்தச்செலவு ரூ. 5000; அதில் மாநில அரசால் ரூ. 1,000 உதவித்தொகையாகவும், மீதியுள்ள ரூ. 4,000 வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தால் கடனாகவும் அளிக்கப்படுகிறது. கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனை முன்னிட்டு 1979-80-ம் ஆண்டில் 350 வீடுகள் கட்ட ஏற்கனவே நடவடிக்கைகள்



எடுக்கப்பட்டுள்ளன. 1979-80-ம் ஆண்டில் 350 வீடுகள் கட்ட அரசு மொத்தம் ரூ. 3.50 இலட்சம் உதவித்தொகை அளித்துள்ளது, 1980-81-ம் ஆண்டில் 1,650 வீடுகள் கட்டப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1980-81 ஆம் ஆண்டிற்கு ரூ. 16.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(III) கைத்தறி துணிநூல் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்கள்:

கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டிற்காகவும், வளர்ச்சிக்காகவும் இடுபொருட்கள், மூலப்பொருட்கள் ஆகியவற்றை வழங்குதவற்காகவும், கைத்தறித் தொழிலின் சீரான வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வதற்காகவும், கூட்டுறவு/பொதுத்துறையில் தமிழக அரசு கைத்தறித் தொழில் பிரிவுகளையும், நிறுவனங்களையும் அமைத்தது. அவைகளில் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனையில் உதவும்பொருட்டு கோஆப்டெக்ஸும், கூட்டுறவு அமைப்பின் கீழ்வராத நெசவாளர்களுக்கு உதவி செய்யும்பொருட்டு தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகமும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தரமான நூல்களை நியாயமான விலையில் வழங்க கூட்டுறவு நூற்பு ஆலைகளும், ஜரிகை வழங்க தமிழ்நாடு ஜரிகை நிறுவனமும், கைத்தறித் துணிகளைச் செய்முறைப்படுத்துவதற்கென்றே தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் செய்முறைப்படுத்தும் ஆலையும் செயல்பட்டு வருகின்றன. இவை இத்துறையின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்களாகவும் பணிபுரிகின்றன. இவற்றின் செயல்முறைகளும் வருங்காலத் திட்டங்களும் பின்வருமாறு :

(i) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் (கோஆப்டெக்ஸ்).

கோஆப்டெக்ஸ் என்று எல்லோராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், தலைமைச் சங்கமாகும். இதனுடன், இம்மாநிலத்திலுள்ள நெசவாளர்கள் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இச்சங்கத்தின் பங்கு மூலதனத்தை அதிகப்படுத்துவதற்கு தமிழக அரசு 1977-78-ம் ஆண்டில் 220 இலட்சமும் 1978

79-ம் ஆண்டில் ரூ.3 கோடியும், 1979-80-ம் ஆண்டில் ரூ. 2.57 கோடியும் முதலீடு செய்துள்ளது. கோஆப்டெக்ஸின் செலுத்திய பங்கு மூலதனம் ரூ. 8.53 கோடி ஆகும். அதில் 31-3-80ஆம் நாளன்றிருந்தவாறு தமிழக அரசு அளித்துள்ள தொகை ரூ. 7-92 கோடி ஆகும். நூல், தூய பட்டு, ஜரிகை, சாயப்பொருட்கள், ரசாயனப் பொருட்கள் போன்ற மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்து, நெசவாளர் கூட்டுறவுத் தொடக்கச் சங்கங்களுக்கு வழங்குவதும், அவற்றால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறித்துணிகளுக்கு விற்பனை வசதி அளிப்பதும் கோஆப் டெக்ஸின் முக்கிய நோக்கமாகும். 1979-80-ம் ஆண்டின் நடைமுறை மூலதனத் தேவைக்காக, ரிசர்வ் வங்கி, மாநில அரசின் உத்திரவாதத்தின்பேரில் சலுகை வட்டிவீதத்தில் மொத்தம் ரூ. 12 கோடி கோஆப்டெக்சுக்கு ரொக்கக்கடன் வழங்கியுள்ளது.

மூலப்பொருட்களை வழங்குவதற்காக, கோஆப்டெக்ஸ் 21 நூல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. இவற்றின் மூலம் 12 கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல், நெசவாளர்கள் தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. கோஆப்டெக்ஸ்க்குத் தமிழ்நாட்டில் 240 சில்லறை விற்பனை நிலையங்களும், இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களில் 180 விற்பனை நிலையங்களும் உள்ளன. இத்துடன் முகவரமைப்பு அடிப்படையில் கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய 126 தனியார் வியாபாரிகளையும் நாட்டின் பல பாகங்களில் நியமித்துள்ளது. கோஆப்டெக்ஸ், 1978-79-ம் ஆண்டில் நெசவாளர் கூட்டுறவுத் தொடக்கச் சங்கங்களிடமிருந்து கைத்தறித் துணிகளை ரூ. 27.51 கோடிக்கு கொள்முதல் செய்து, ரூ. 34.80 கோடிக்கு விற்பனை செய்தது.

1977-78ஆம் ஆண்டில் 18·31 கோடிக்கு கொள்முதல் செய்து ரூ. 23.01 கோடிக்கு விற்பனை செய்தது. 1979 80ஆம் ஆண்டில் ரூ. 29.00 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கோஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து ரூ. 35.00 கோடிக்கு விற்பனை செய்தது.

கோஆப்டெக்ஸ் தற்போது நெசவாளர் கூட்டுறவுத் தொடக்க சங்கங்களின் 50 சதவீதம் உற்பத்தியைக் கொள்முதல் செய்கிறது. தற்போதைய இதே கொள்முதல் அளவை கோஆப்டெக்ஸ் தொடர்ந்து செய்துவர வேண்டுமெனில், அடுத்துவரும் மூன்றாண்டுகளுக்குள், ஆண்டொன்றுக்கு ரூ. 50கோடி மதிப்புள்ள



கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்ய வேண்டிய நிலையில் அது இருக்க வேண்டும். விசைத்தறித் துணிகள், ஆலைத்துணிகள் ஆகியவற்றின் கடும்போட்டிக்கிடையே கைத்தறி துணிகளை பெருமளவில் விற்பனை செய்வதென்பது சிரமமானதாகும். இப்பணியை நிறைவேற்றுவதற்காக கோஆப்டெக்ஸ், பல திட்டங்களைச் செயற்படுத்திவருகிறது. இதற்காக கோஆப் டெக்ஸ் எடுத்துள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு :

(a) புதிய விற்பனை நிலையங்களைத் திறத்தலும், ஏற்கனவே உள்ளவற்றை நவீனப்படுத்துதலும் :

அடுத்துவரும் மூன்றாண்டுக் காலத்தில் ரூ. 300 இலட்சம் செலவில் 250 புதியவிற்பனை நிலையங்களைத்திறக்கவும் ஏற்கனவே உள்ள 150 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தவும் கருதப் பட்டுள்ளது. அரசிடமிருந்து ரூ. 60 இலட்சம் நிதியுதவி பெற்று, இது வரை 41 புதிய விற்பனை நிலையங்களைத் திறந்துள்ளது; ஏற்கனவே உள்ள 45 விற்பனை நிலையங்களை நவீனப் படுத்தியுள்ளது. மாநில அரசு மூலமாக தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 56.25 இலட்சம் நிதியுதவி பெற்று, 1979-80, 1980-81ஆம் ஆண்டுகளில் மேலும் 88 புதிய விற்பனை நிலையங்களைத் திறக்கவும், ஏற்கனவே உள்ள 57 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

(b) மாதிரி வடிவமைப்பு பணி நிலையங்களைத் தொடங்குதல்

புதிய மாதிரிகளை அறிமுகப்படுத்தும் பொருட்டும், மக்களின் தற்போதைய விருப்பங்களுக்கேற்ப கைத்தறிகளில் உற்பத்தியாகும் துணிகளின் ரகங்களில் மாற்றம் செய்யவும், அரசிடமிருந்து ரூ. 3.50 இலட்சம் நிதி உதவிபெற்று, மதுரையில் ஒரு மாதிரி வடிவமைப்புப் பணி நிலையத்தை கோ ஆப்டெக்ஸ் தொடங்கி யுள்ளது. 1979-80-ம் ஆண்டில் திருச்சியில் ரூ. 3·50 இலட்சம் செலவில் மாதிரி வடிவமைப்பு பணி நிலையம் ஒன்றை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது ரூ. 3.50 இலட்சம் செலவில் திருச்சியில் அமைக்கப்பட்டு வருகிறது. 1980-81ஆம் ஆண்டில் ரூ. 7 இலட்சம் செலவில் மேலும் இரண்டு மாதிரி வடிவமைப்பு நிலையங்கள் சேலத்திலும், கோவையிலும் அமைக்கப்படும்.

(c) பாலியஸ்டர் துணி உற்பத்தி

1978 ஆம் ஆண்டு தீபாவளியின்போது பாலியஸ்டரில் பிரிண்டெட் சட்டைத் துணிகளை கோ ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தியது. தற்போது, 1,500 தறிகளில் பாலியஸ்டர் பிரிண்டெட், காம்ரிக்ஸ் போன்ற துணி வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தற்போது ஆண்டொன்றுக்கு இந்த ரகங்களின் உற்பத்தி 10.50 லட்சம் மீட்டர்களாகும்.

(d) ஜனதா துணி உற்பத்தி

ஜனதா ரக வேஷ்டிகள், புடவைகள், லுங்கிகள் முதலியவற்றை உற்பத்தி செய்வதில் சுமார் 10,000 கைத்தறிகள் ஈடுபட்டுள்ளன. 1979–80ஆம் ஆண்டில் 111.58 இலட்சம் சதுர மீட்டர் ஜனதா ரகத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மக்கள் விரும்பும் ரகங்களைஅறிமுகப்படுத்தும்பொருட்டும், மூலப்பொருட்கள் விலையேற்றம், கூலி உயர்வு இவற்றின் காரணமாக ஜனதா ரகங்களுக்கு அளிக்கும் மானியத்தை அதிகப்படுத்தும் பொருட்டும் மத்திய அரசுக்குச் செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெறும் வகையில் பொருளாதார வகையில் நஷ்டத்தைத் தராத ரகங்கள் மட்டும் ஜனதா ரகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

(e) ஆயத்த ஆடை தயாரிப்புப் பிரிவுகள் :

1979–80-ம் ஆண்டில் சென்னையில் 120 தையல் இயந்திரங்கள் கொண்ட ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் பிரிவு ஒன்றை கோ.ஆப்டெக்ஸ் நிறுவியுள்ளது.

(f) ஏற்றுமதி :

கோஆப்டெக்ஸ் "கோ ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்" என்ற பெயரில் ஒரு ஏற்றுமதிப் பிரிவை அமைத்துப் படிப்படியாக ஏற்றுமதியை அபிவிருத்தி செய்துவருகிறது. ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் முன்னேற்றம் கண்டிருப்பதுடன், 1979–80ஆம் ஆண்டில் ரூ. 2.60 கோடி மதிப்புள்ள கைத்தறித்துணிகளை ஏற்றுமதி செய்துள்ளது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் கோ.ஆப்டெக்ஸ் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி ஆண்டுக்கு ரூ. 4 கோடி இலக்கை அடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



(g) கடன் விற்பனைத் திட்டம் :

அரசுப் பணியாளருக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் கோஆப்டெக்ஸ் மூலமாகக் கடனில் கைத்தறித் துணி விற்பனை செய்வதை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கடன் விற்பனைக்கு நல்ல ஆதரவு இருப்பதுடன், இவ்வாண்டில் கடனில் கைத்தறித்துணிகள் விற்பனை ரூ. 8 கோடி அளவிற்கு உயர்ந்து விட்டது.

(h) கொள்முதல் நடவடிக்கைகள் :

தொடக்க சங்கங்களிடமுள்ள துணித் தேக்கத்தைக் குறைக்கும் பொருட்டு கோ ஆப்டெக்ஸின் கொள்முதல் நடவடிக்கைகள் சீர்படுத்தப்பட்டுள்ளன. கோஆப்டெக்ஸ் ஒவ்வொரு காலாண்டிற்கும் தேவையான துணி வகைகளை வழங்குவதற்கும் சங்கங்களிடம் முன்பாகவே தேவைக் குறிப்புக் கொடுத்து, அவற்றை சங்கங்கள் உற்பத்தி செய்து தேவைக்குறிப்பில் குறிப்பிட்டுள்ள அளவுக்கு ஆடைகள் வழங்கும்படி செய்துள்ளது. ஆண்டிற்கு ரூ. 5 லட்சம் அல்லது அதற்குக் குறைவான உற்பத்தித் திறனுள்ள சங்கங்களைப் பொருத்தவரையில், அது முழு உற்பத்தியையும் கொள்முதல் செய்து அச்சங்கங்கள் தொடர்ந்து இயங்க உதவி செய்கிறது.

(ii) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு கைத்தறி நிதி உதவி வர்த்தகக் கழகம் என்பது, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, கூட்டுறவு அமைப்பின்கீழ் வராத கைத்தறி, விசைத்தறி, உபதொழில்களுக்குத் தொடர்ந்து கடன் நிதி உதவி செய்து வருகிறது. 1978ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தால் வழங்கப்பட்ட கடன் ரூ. 119.30 இலட்சம் ஆகும். 1979ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் ரூ. 205.97 இலட்சமாகும். தற்போது சலுகை வட்டிவீதத் திட்டத்தின்கீழ் ரூ.1000 வரை 15½ சதவீதம் வட்டிவீதத்தையும், அதற்குமேல் உள்ள கடன்களுக்கு 18½ சதவீதம் வட்டி வீததத்தையும் வசூலித்து வருகிறது. கூட்டுறவு அமைப்பின்கீழ் வராத நெசவாளர்களுக்கு, 1980 ஆம் ஆண்டிற்கு ரூ. 250 இலட்சம் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(iii) கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் :

இந்திய அரசின் நிதி உதவியுடன் இம்மாநிலத்தில் நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களையும் இரண்டு ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களையும் அரசு நிறுவியுள்ளது. நெசவாளர்களுக்கு நூல் வழங்குதல், தறிகள் நிறுவப்படுவதற்கு முன்பும் தறிகள் நிறுவப்பட்ட பின்பும் தேவையான வசதிகளை அளித்தல், கடன் உதவி செய்தல், விற்பனை வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகியவற்றை ஒரே அமைப்பின்கீழ் ஏற்படுத்தித் தருவதன் மூலம் ரூ. 300 அளவிற்கு மாத வருமானம் தரக்கூடிய அளவிற்குத் தொடர்ந்து, வேலைவாய்ப்பினை நல்கிடும் வகையில், சிவராமன் குழுவின் பரிந்துரைகளின் படி இத்திட்டங்கள் தொடங்கப்பட்டன.

இத்திட்டங்களுக்கு அரசு அனுமதித்த திட்டச்செலவு, நிதியுதவி ஆகியவை பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| திட்டத்தின் பெயர். (1) | அனுமதியளிக்கப்பட்ட தறிகளின் எண்ணிக்கை. (2) | திட்டத்தின் மொத்தச் செலவு. (3) | அரசினால் வழங்கப்பட்ட நிதி உதவி. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், காஞ்சிபுரம் | 5,000 | 79.45 | 79.45 |
| 2. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், ஈரோடு | 5,000 | 106.00 | 105.80 |
| 3. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், சேலம் | 5,000 | 86.00 | 55.49 |
| 4. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம் மதுரை. | 5,000 | 120.00 | 61.85 |
| 5. ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், கரூர். | 1,000 | 40.75 | 40.75 |
| 6. ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், குறிஞ்சிப் பாடி | 1,000 | 32.12 | 32.12 |
| | 22000 | 464.32 | 375.46 |



இத்திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட தறிகள் மற்றும் உற்பத்தி விவரங்கள் வருமாறு :—

| திட்டத்தின் பெயர். | ஆண்டு இறுதியில் திட்டத்தில் சேர்க்கப்பட்ட தறிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 1977 | 1978 | 1979 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், காஞ்சிபுரம் .. | 1,700 | 3,066 | 3,695 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், ஈரோடு .. | 600 | 1,218 | 2,531 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், சேலம் .. | .. | 613 | 1,664 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், மதுரை .. | .. | 586 | 1,441 |
| ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், கரூர் .. | 526 | 701 | 781 |
| ஏற்றுமதி உற்பத்தித் திட்டம் குறிஞ்சிப்பாடி .. | 169 | 703 | 1,222 |
| | 2,995 | 6,887 | 11,334 |

| திட்டத்தின் பெயர். | உற்பத்தி விவரம் உற்பத்தி அளவு இலட்சம் மீட்டரில் | | |
|---|---|---|---|
| | 1977 | 1978 | 1979 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், காஞ்சிபுரம் .. | 5.94 | 10.11 | 20.00 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், ஈரோடு .. | 5.71 | 6.00 | 10.00 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், சேலம் .. | .. | 1.94 | 8.50 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், மதுரை .. | .. | 1.17 | 5.00 |
| ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், கரூர் .. | 3.40 | 4.10 | 4.00 |
| ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், குறிஞ்சிப்பாடி .. | 0.14 | 1.74 | 4.00 |
| | 15.19 | 25.06 | 51.50 |

ஆறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் 31-3-80 ஆம் நாளன்று 12,300 கைத்தறிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அடுத்த மூன்று ஆண்டுகளில் இதன் எண்ணிக்கை 22,000 தறிகளாக அதிகரிக்கப்படும். தங்கள் பகுதிகளில் உள்ள வலுவற்ற செயலிழந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தறிகளை ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. தறி உரிமையாளர்களால் கைவிடப்பட்ட நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, ஈரோடு கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், சென்னிமலை, திருச்செங்கோடு; பவானி மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் துணை நிலையங்களைத் தொடங்கியுள்ளது. மற்ற கைத்தறி வளர்ச்சித் திட்டங்களும் கீழ்க்கண்ட இடங்களில் துணை நிலையங்களைத் தொடங்கியுள்ளன.

| திட்டத்தின் பெயர். | துணை நிலையத்தின் பெயர். |
|---|---|
| 1. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், காஞ்சிபுரம் | 1. பொதட்டூர்பேட்டை<br>2. தக்கோலம்<br>3. பனப்பாக்கம்<br>4. அம்மையார் குப்பம்<br>5. அனகாபுத்தூர் |
| 2. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், ஈரோடு | 1. சென்னிமலை<br>2. திருச்செங்கோடு<br>3. பவானி<br>4. திருப்பூர் |
| 3. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், சேலம். | 1. பாப்பாரப்பட்டி<br>2. புதுச்சத்திரம்<br>3. தொளசம்பட்டி<br>4. வேலகவுண்டம்பட்டி |
| 4. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், மதுரை | 1. நாகர் கோவில்<br>2. கடையநல்லூர் |
| 5. ஏற்றுமதி உற்பத்தித்திட்டம், கரூர் | |
| 6. ஏற்றுமதி உற்பத்தித்திட்டம், குறிஞ்சிப்பாடி. | 1. புவனகிரி<br>2. நடுவீரப்பட்டி<br>3. அன்னியூர்<br>4. திட்டக்குடி<br>5. சிறுப்பாக்கம் |



முதலில் மதுரையில் கூட்டுறவு அடிப்படையில் கைத்தறி வளர்ச்சித் திட்டம் தொடங்கியபொழுது, காஞ்சிபுரம், ஈரோடு, கரூர், சேலம், குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தும் பணி, தமிழ் நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கோஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மேம்பட்ட விற்பனை ஏற்பாடுகளையும் இத்திட்டங்களின் நீண்டகால வளர்ச்சியையும் கருத்தில்கொண்டு, அனைத்து கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டங்களையும் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களையும் கூட்டுறவுத் திட்டங்களாக மாற்ற முடிவெடுக்கப்பட்டது. இதற்கிணங்க, காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், குறிஞ்சிப்பாடி ஆகிய கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டங்கள் ஏற்கெனவே கூட்டுறவுச் சங்கங்களாக பதிவு செய்யப்பட்டன. கரூர் திட்டமும் கூட்டுறவுத் திட்டமாக பதிவு செய்யப்பட்டு வருகிறது, கூட்டுறவு அமைப்புகளாக இத்திட்டங்கள் மாற்றப்பட்டதைக் கருத்தில்கொண்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் துணி விற்பனைக்கு அரசு வழங்கும் சிறப்புத் தள்ளுபடியைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் இத்திட்டங்கள், உற்பத்தியாகும் கைத்தறித் துணியை தற்போது விற்பனை செய்யலாம். இதனால், பிற தொடக்க நிலை நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைப் போல், இத்திட்டங்களிலிருந்து கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்து, விற்பனை வசதிகளைச் செய்து கொடுக்க இயலும்.

## (iv) கூட்டுறவு நூற்பு ஆலைகள்.

### (எ) செயல்முறையும், திட்டங்களும் :

இந்த மாநிலத்தில் உள்ள 12 கூட்டுறவு நூற்பு ஆலைகள் 20 ஆம் எண் முதல் 120 ஆம் எண் வரை பல்வேறு ரக நூல்களை உற்பத்தி செய்து வருகின்றன. ரூபாய் 12 கோடி செலவிலான விரிவாக்கத் திட்டத்தை எடுத்துக்கொண்ட ஒன்பது கூட்டுறவு நூற்பாலைகள் திட்டப் பணிகளை முடித்துள்ளன. விரிவாக்கப்

பட்ட உற்பத்திப் பிரிவுகள் உற்பத்தியைத் தொடங்கி விட்டன. தற்போது 12 கூட்டுறவு நூற்பாலைகளின் நிறுவுத்திறன் 3.14 இலட்சம் கதிர்கள் ஆகும். கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த கூட்டுறவு நூற்பு ஆலைகள் செயல் திறன் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(ரூபாய் லட்சத்தில்.)

| | 1977 | 1978 | 1979 |
|---|---|---|---|
| 1. உற்பத்தி (மதிப்பு) | 2778.23 | 3337.17 | 3370.69 |
| 2. விற்பனை (மதிப்பு) | 2728.14 | 3423.56 | 3284.26 |
| 3. மொத்தம் (ஆதாயம்) | 90.41 | 442.75 | 745.99 |
| 4. வட்டி | 123.42 | 142.78 | 142.71 |
| 5. தேய்மானங்கள் | 80.99 | 99.04 | 124.23 |
| 6. நிகரஆதாயம் | (—) 114.00 | (+)200.91 | (+)479.05 |
| 7. பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 8160 | 8794 | 9646 |

இதர நூற்பாலைகளுடன் விரிவாக்கும் திட்டத்தினை மேற்கொள்ளாத தென்ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை இந்த ஆண்டு ரூ, 1,50 லட்சம் செலவில் 13,760 கதிர்திறனிலிருந்து 25,000 கதிர் திறனாக அதிகரிக்கும் விரிவாக்கும் திட்டத்தினைமேற்கொண்டுள்ளது. இந்த திட்டத்தினை புதுடில்லியிலுள்ள தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக்கழகம் ஏற்கெனவே அங்கீகரித்து தேவையான நிதி உதவியினை தமிழ்நாடு அரசிற்கு வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு ரூ. 51.45 இலட்சத்தை பங்கு மூலதனமாக இந்த நூற்பாலையில் முதலீடு செய்துள்ளது. மேலும் தமிழக அரசு மூலமாக விரிவாக்கும் திட்டத்திற்காக ரூ. 90 இலட்சம் கால கடன் உதவி கோரி இந்திய தொழில் நிதி உதவிக் கழகத்திடம் இந்த நூற்பு ஆலை மனு செய்துள்ளது. இந்த நூற்பாலை இதற்குத் தேவையான இயந்திரங்களுக்கு இயந்திர வினியோகஸ்தர்களுக்கு நிறுவன தேவைக்குறிப்பு ஆணைகளை அனுப்பியுள்ளது. 1980-ம் வருடத்தில் இந்த திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்கள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1979-80-ம் ஆண்டில் கன்னியாகுமரி, தஞ்சாவூர், தென் ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலைகளில் ரூ. 24.00 இலட்சம் பங்கு மூலதனமாக அரசினால் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 160 அகதிகளின் வேலைவாய்ப்பினைக் குறித்த திட்டமும் முடிக்கப்பட்டது. உற்பத்தித் திறனையும் நூல் தரத்தினையும் உயர்த்தும் வகையில் ரூ. 6 கோடி முதலீட்டுச் செலவில் இயந்திரங்கள் நவீனமாக்கும் திட்டத்தினை 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளும் மேற்கொண்டுள்ளன. நவீன மயமாக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.4 கோடி எளிய கடனாக 12 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பம்பாய் இந்தியத்தொழில் வளர்ச்சி வங்கியினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆலைகளுக்கு நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் தேவையான இயந்திரங்களுக்குத் தேவைக் குறிப்புகள் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளன. இயந்திரங்கள் பெறப்படுவதைப் பொறுத்து நவீனமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

சேலம் கூட்டுறவு நூற்பாலையில் 25,000 கதிர்திறன்களுடைய கூடுதல் பிரிவு ஒன்றை 1980-81-ம் ஆண்டில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1981-82-ல் 25,000 கதிர் திறன்களுடைய கூடுதல் பிரிவு ஒன்றை வடஆற்காடு கூட்டுறவு நூற்பு ஆலையில் நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அடுத்து மூன்று ஆண்டுகளுக்குள் தமிழ்நாட்டின் பின் தங்கிய பகுதிகளில் பருத்தி வளர்ப்போருக்கென ஒரு கூட்டுறவு நூற்பு ஆலையும் செயற்கை நூல் உற்பத்தி செய்ய ஒரு கூட்டுறவு ஆலையும் ஆக இரு கூட்டுறவு நூற்பாலைகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## (பி) சேலம் கைத்தறி பாவு கஞ்சி போடும் இயந்திரம்:

உற்பத்தியை மாற்றியமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக ரூ. 21 இலட்சம் அரசின் நிதிஉதவியுடன் கைத்தறி பாவு, கஞ்சி போடும் இயந்திரம் ஒன்றினை பதப்படுத்தப்பட்ட ஒடல் பாவுகளை கைத்தறிகளுக்கு வழங்கும் வகையில் சேலம் கூட்டுறவு நூற்பாலை நிறுவி வருகிறது. இந்த கைத்தறி பாவு கஞ்சி போடும் பிரிவு கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள தறிகளுக்குத் தேவையான பதனிடப்பட்ட பாவுகளை வழங்கும். இந்தத் திட்டம் விரைவில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(சி) நவீன சாயச்சாலைகள்:

ரூ. 90 இலட்சம் மொத்தத் திட்டச் செலவில் அரசின் நிதியுதவியுடன் சேலம், திருநெல்வேலி, ஸ்ரீவில்லிப்புத்தூர், வேலூர் திருச்சி, கோவை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நவீன சாயச் சாலைகள் நிறுவும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த சாயச்சாலைகள் ஈரோட்டிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவுத் துணி செய்முறை ஆலையின் கிளைகளாக தற்பொழுது அமைக்கப்பட்ட போதிலும் மேற்படி நவீன சாயச்சாலைகள் அந்தந்த மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகள் வசமே மாற்றப்படும் என்பதே இறுதி நோக்கமாகும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சாயமிடப்பட்ட நூலை, பலதிறப்படுத்தும் திட்டத்தின் கீழ் கூட்டுறவு நூற்பாலைகளே வழங்கும் வகையில் உள்ள திட்ட நோக்கத்தின் அடிப்படையில் சேலம், வேலூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் கட்டிடத்திலேயே நவீன சாயச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை தங்களது பணிகளை விரைவில் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதர சாயச் சாலைகள் 1980–81-ல் முடிக்கப்பட்டு செயல்படத் துவங்கும்.

(v) தமிழ்நாடு ஜரிகை நிறுவனம், காஞ்சிபுரம்.

தமிழ்நாடு ஜரிகை நிறுவனம் சுத்தமான பொன்னிழைகளை தொடர்ந்து உற்பத்தி செய்து கோஆப்டெக்ஸ் மூலமாக அனைத்து பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் விநியோகித்து வருகிறது. மொத்தமுள்ள 20 நூற்பு இயந்திரங்களில் சில தொழில் நுட்பச் சிக்கல்கள் காரணமாக 10 இயந்திரங்கள் மட்டுமே முன்பு இயங்கி வந்தன. அத்தொழில் நுட்பச் சிக்கல்கள் தற்பொழுது தீர்க்கப்பட்டு 20 நூற்பு இயந்திரங்களும் இயங்கி வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் ஜரிகை உற்பத்தி விவரங்கள் பின்வருவாறு :—

| வருடம். | உற்பத்தி (மார்க்குகள்). | விற்பனை (மார்க்குகள்). | விற்பனை (மதிப்பு ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| 1977–78 | 1411 | 1426 | 6.58 |
| 1978–79 | 1640 | 1645 | 9.79 |
| 1979–80 | 2540 | 2387 | 10.39 |



உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1-12-1979 முதல் இரண்டாவது முறை மாற்றுப்பணி ஆரம்பிக்கப்பட்டு 1979 டிசம்பர் திங்களிலிருந்து மாத உற்பத்தி 150 மார்க்கிலிருந்து 500 மார்க்காக அதிகரித்துள்ளது. மொத்த உற்பத்தியும் கோஆப்டெக்ஸ் மூலமாக பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்கப்படுகிறது.

(vi) தமிழ்நாடு கூட்டுறவு துணி பதனிடும் ஆலை, ஈரோடு

இவ்வாலையில் கீழ்க்காணும் தயாரிப்பு முறைகள் உள்ளன:

1. வெளுப்பாக்குதல், சாயமிடல் :

பலதரப்பட்ட முறைகளின் உற்பத்தித்திறனை சமமாகப் பயன்படுத்தி ஒரு மாதத்திற்கு 5லட்சம் மீட்டர் உற்பத்தியை 10லட்சம் மீட்டருக்கு அதிகப்படுத்த வேண்டி தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ.22.50 இலட்சம் நிதியுதவியுடன் விஸ்தரிப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்தியுள்ளது. துணிகளில் அச்சிடும் பிரிவும் (Screen printing) அமைக்கப்பட்டுள்ளது. விரிவாக்கத் திட்டம் முடிவடைந்தவுடன் இதன் மாத செயல் திறன் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. வெளுப்பாக்குதல் | .. | ஒரு மாதத்திற்கு 10 இலட்சம் மீட்டர்கள். |
| 2. சாயமிடுதல் | .. | ஒரு மாதத்திற்கு 5 இலட்சம் மீட்டர்கள். |
| 3. துணிகளில் அச்சிடுதல் | .. | ஒரு மாதத்திற்கு 50,000 மீட்டர்கள். |
| 4. சிட்ட நூல் சாயமிடல் | .. | ஒரு மாதத்திற்கு 250 பேல்கள். |

துணி பதனிடும் ஆலையின் செயல்படுமுறை விவரம் பின்வருமாறு:—

| வருடம். | பதனிடப்பட்ட துணியின் அளவு (மீட்டர் இலட்சத்தில்.) | சாயமிடப்பட்ட நூலின் அளவு (எண்ணிக்கை கட்டுகளில்.) |
|---|---|---|
| 1977–78 | 17.15 | 15,569 |
| 1978–79 | 28.27 | 13,000 |
| 1979–80 | 35.00 | 26,800 |

பல இடங்களிலுள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் பாலியெஸ்டர் இழை சேர்ந்த துணிகள், சட்டைத் துணிகள், சூட்டிங் துணி வகைகள், புடவைகள் போன்றவற்றை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டன. அவைகள் சந்தையில் நல்ல விலைக்கு ஏராளமாக விற்பனையாகின்றன. கைத்தறிகளில் உற்பத்தியாகும் துணிகளை செய்முறைப்படுத்துவதற்கு இப்போது பம்பாய்க்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இதனால் போக்குவரத்து மற்றும் இதர செலவுகள் அதிகமாகியுள்ளன. எனவே பாலியெஸ்டர் இழை சேர்ந்த துணிகளை செய்முறைப்படுத்த ரூ. 31 இலட்சம் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தும் பிரிவு ஒன்றை அமைப்பதற்குரிய திட்டத்தை ஆலை நிறைவேற்றி வருகிறது. இதற்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்குரிய ஆணைகள் கொடுக்கப்பட்டு, கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 31–12–80–க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் முடிவடைந்தவுடன் இப்பிரிவில் நாளொன்றுக்கு சுமார் 10,000 மீட்டர் பாலியெஸ்டர் துணிகளை செய்முறைப்படுத்தப்படும்.

(vii) தமிழ்நாடு துணி ஆலை நிறுவனம்.

புதுக்கோட்டையில் 25,200 நூற்பு கதிர்கள் திறனுள்ள காவேரி நூற்பு நெசவு ஆலையையும், 13,260 நூற்பு கதிர்கள் திறனுள்ள சோமசுந்தரம் சூப்பர் நூற்பு ஆலையையும் தமிழ்நாடு துணி ஆலை நிறுவனம் எடுத்துக் கொண்டு அவற்றை நடத்தி வருகின்றது. மேற்கண்ட ஆலைகளுக்கு தமிழ்நாடு அரசு ரூ.87.71 இலட்சம் நிதியுதவிக்கு உத்தரவாதம் அளித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த நிறுவனத்தின் செயல்முறை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வருடம். | வட்டியும் இதர வருமானங்களும். | வட்டியும் இதர செலவினங்களும். | இலாபம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1977–78 | 42.47 | 39.41 | 3.16 |
| 1978–79 | 36.02 | 33.03 | 2.99 |
| 1979–80 | 14.41 | 8.47 | 5.94 |



12 கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கும் மேற்கண்ட இரு ஆலைகளுக்கும் பஞ்சு வாங்கி விநியோகிக்கும் பொறுப்பை, தமிழ்நாடு துணி ஆலை நிறுவனத்தின் பஞ்சு கொள்முதல் பிரிவு ஏற்று நடத்தி வருகிறது. இந்த ஆலை ரூ. 8.25 இலட்சம் செலவில் பருத்தி நூல் பரிசோதனை செய்யும் பரிசோதனை கூடத்தை கோவையில் அமைத்து வருகிறது. தமிழகத்தில் பிற்பட்ட பகுதிகளான அருப்புக்கோட்டை, ஈரோடு, சிவகிரி, திருச்செங்கோடு, தளவாய்புரம், ஜெயங்கொண்டசோழபுரம், ஜக்கம்பட்டி, சங்கரன்கோயில், ராசிபுரம், குடியாத்தம், தாராபுரம் ஆகிய 10 இடங்களில் ரூ. 175 இலட்சம் மூலதனச் செலவில் விசைத்தறி கூடங்கள் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது. இவைகள் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 15 கோடி மதிப்புள்ள பல்வகை நவீனரகத்துணிகளை உற்பத்தி செய்து படிப்படியாக முன்னேறி இயந்திர ஆலைகளின் உற்பத்தியுடன் போட்டியிடும் நிலைக்கு உயரும். 1980–81-ம் ஆண்டில் 4 விசைத்தறிக் கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

IV. மூடப்பட்ட துணி ஆலைகளை மீண்டும் திறத்தல் ;

பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் மூடப்பட்டிருந்த 16,365 தொழிலாளர்கள் பணிபுரியும் 10 ஆலைகளுக்கு அரசு வணிக வங்கிகளின் பெயருக்கு உத்திரவாதம் அளித்ததன் காரணமாக இவ்வாலைகள் 1976, 1977–ல் மீண்டும் திறக்கப்பட்டு செயல்படத் தொடங்கின. இவ்வகையில் 10 ஆலைகள் திறக்கப்படுவதற்கு அரசு 304.33 இலட்சத்திற்கு நிதி உத்தரவாதம் அளித்துள்ளது. தமிழ்நாடு, 1969 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (தனிவிதிகள்) சட்டத்தின்கீழ் தமிழக அரசு 7 ஆலைகளை நிவாரண நிறுவனங்களாக அறிவித்துள்ளது. அரசு அளித்த உத்திரவாதத்தின் பேரில் திறக்கப்பட்ட ஆலைகள் தாமாகவே தேவையான நிதியை ஈட்ட வேண்டும் என்றும் தொடர்ந்து அரசு உத்தரவாதத்தையோ கடனையோ நம்பி செயல்படக் கூடாது என்றும் அரசு கருதியது. ஆகவே இத்துணி ஆலைகளின், செயல்முறைகள் குறித்தும் அவற்றின் நீண்டகால அடிப்படையில் சீரமைப்பது குறித்தும் ஆய்ந்து உகந்த திட்டங்கள் பரிந்துரைக்கும் பொருட்டுத் தமிழக அரசு, டாக்டர் அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரியைச்சேர்ந்த, டாக்டர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களை தலைவராகக் கொண்ட குழு ஒன்றை அமைத்தது. இக்குழு அரசு உத்தரவாதத்துடன் மீண்டும் திறக்கப்பட்ட இவ்வாலைகளின்

தற்போதைய செயல்முறைகள் பற்றி ஆராய்ந்து தனது பரிவுரைகளை அரசுக்குத் தெரிவித்துள்ளது. அரசு உத்தரவாதத்தின் பேரில் திறக்கப்பட்ட இவ்வாலைகள் கடந்த இரண்டாண்டுகளில் அவற்றின் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் ஆதாய விகிதத்தையும் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக அரசு இவ்வாலைகளுக்கு அளித்த நிதி உத்தரவாதத்தை நிறுத்திவிட முடிவு செய்துள்ளது. பிரகாஷ் ஆலை, ரவீந்திரா ஆலை, கோவை மற்றும் சக்தி ஆலை ஆகியவற்றிற்கு அளித்த நிதி உத்தரவாதம் ஏற்கனவே நிறுத்தி விடப்பட்டது. கோவையிலுள்ள கமலா ஆலைக்கு அளிக்கப்பட்ட உத்தரவாதம் விரைவில் நிறுத்தப்படும். கோவையிலுள்ள ஜனார்த்தனா ஆலை, மது ஆலை ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் அவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ள உத்தரவாதத்தை பெயரளவுத் தொகைக்கு மட்டும் உத்தரவாதத்தைத் தொடர்ந்து அளிக்கவும், வெளிக் கடன்காரர்கள் மேற்படி ஆலையின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதைத் தடுக்கும் பொருட்டு தொடர்ந்து கடன் தவணை கால நீடிப்பு அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. லோட்டஸ் ஆலைக்கும் கொடுக்கப்பட்டுள்ள அரசு உத்தரவாதத்தை நிறுத்தி விடுவது பற்றி சம்பந்தப்பட்ட வங்கியுடன் கலந்தாலோசிக்கப் பட்டு வருகிறது.

மேலே குறிப்பிட்ட ஆலைகள் தவிர சென்னையில் உள்ள பின்னி, நிறுவனத்திற்கும் மதுரையில் உள்ள ஸ்ரீ மீனாட்சி ஆலைக்கும் அரசு உத்தரவாத உதவி அளித்துள்ளது. 1977-ஆம் ஆண்டு அடைமழை மற்றும் வெள்ளத்தினால் பின்னி ஆலை மூடப்பட்ட பொழுது பாரத ஸ்டேட் வங்கி ஒரு கோடி ரூபாய் கடனாக இவ்வாலைக்கு கொடுத்தது. இந்தத் தொகைக்கு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. மேலும் மாநில அரசும், மத்திய அரசும் இந்தக் கடன் மீதான வட்டியை 3 ஆண்டுகளுக்கு சம விகிதத்தில் கொடுக்க இசைந்துள்ளனர். இந்திய தொழில் அபிவிருத்தி வங்கி இந்நிறுவனத்திற்கு சீரமைப்பு போன்ற திட்டங் களுக்காக ரூ. 3 கோடி கடனுதவி அளித்துள்ளது. இந்தக் கடன் மீதான வட்டியையும் மாநில அரசும் மத்திய அரசும் 3 ஆண்டு களுக்கு சம அளவில் கொடுக்க இசைந்துள்ளன. இந்தியத் தொழில் நிதி உதவிக்கழகம் ஸ்ரீ மீனாட்சி ஆலைக்கு கொடுத்த ரூ. 55 லட்சம் கடனுக்கு மாநில அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. ஸ்ரீ மீனாட்சி ஆலை சொத்துக்களை மேற் குறிப்பிட்ட கழகத்திற்கு அடமானம் செய்தவுடன் அரசின் உத்தரவாதம் நீங்கிவிடும்.



## V. தனியார் துறையில் துணி தயாரிக்கும் ஆலைகள் புதிதாக அமைத்தல் தனியார் ஆலைகளை விரிவுபடுத்தல்.

புதிய நூற்பு ஆலைகளை நிறுவுவதற்கு உரிமம் வழங்குவது ரத்து செய்யப்பட்டதன் விளைவாக துணிநூல் ஆணையாளர், புதிய நூற்பாலைகள் நிறுவவும் ஏற்கனவேயுள்ள நூற்பாலைகளை விரிவுபடுத்தவும் சம்பந்தப்பட்ட மாநில அரசின் பரிந்துரையின் பேரில் அனுமதி வழங்குகிறார். இந்திய அரசு உரிமம் வழங்கும் கொள்கையை ரத்து செய்துவிட்டதன் காரணமாக நமது மாநிலத்தில் புதிய நூற்பாலைகள் நிறுவவும் ஏற்கனவே யுள்ள நூற்பாலைகளை விரிவுபடுத்தவும் அதிக தொழிலதிபர்கள் முன் வந்துள்ளனர். பின் தங்கிய பகுதிகளில் புதிய நூற்பாலைகள் நிறுவ ஊக்கமளிப்பது மாநில அரசின் கொள்கையாகும். 1979-ம் ஆண்டு கைத்தறி துணிநூல் இயக்குநர் அலுவலகம் 60 விண்ணப்பங்களுக்கு (19 ஆலைகளை விரிவுபடுத்துவதற்கான விண்ணப்பங்கள், 41 ஆலைகள் புதிதாக நிறுவ விண்ணப்பங்கள்) பரிந்துரைத்து அவற்றைத் துணிநூல் ஆணையாளருக்கு அனுப்பியது. அவற்றில் ஏற்கெனவே உள்ள 16 நூற்பாலைகளை விரிவுபடுத்தவும் 36 நூற்பாலைகளை புதிதாக நிறுவவும் துணிநூல் ஆணையாளர் 1979-ல் அனுமதி வழங்கியுள்ளார். இந்த புதிய நூற்பாலைகளினாலும் விரிவாக்கத் திட்டங்களினாலும் சுமார் 19,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

## VI. சட்ட ரீதியான பாதுகாப்பு.

கைத்தறித் தொழிலாளர்களின் வேலை நிலைமைகளை முறைப்படுத்த ''தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்)சட்டமுன்வடிவு, 1979 28-4-79 அன்று சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இச்சட்ட முன் வடிவினை கூட்டு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்காக சட்ட மன்றம் அனுப்பிவைத்தது. இக்குழு ஏறக்குறைய எல்லா மாவட் டங்களிலும் சுற்றுப்பயணம் செய்து சாட்சியங்களைப் பதிவு செய்தது. ஆனால் சட்ட மன்றம் கலைக்கப்பட்டதின் காரண மாக இக்குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்க முடியவில்லை. மேற்கண்ட சட்ட முன்வடிவும் காலாவதியாகிவிட்டது. மேற்கண்ட குழுவின் முன், கூறப்பட்ட ஆலோசனைகளையும், மைய அரசு இந்தச் சட்ட முன் வடிவின் மீது கூறியுள்ள கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்ட சட்ட முன்வடிவு

ஒன்றினை மீண்டும் சட்டமன்றத்தில் கொணரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

முடிவுரை :

மூலப் பொருட்களை தொடர்ந்து வழங்குதல், விற்பனை வசதி செய்து கொடுத்தல், தொழில் நுட்ப முறையை உயர்த்தி உற்பத்தியில் முன்னேற்றம் காணல், தேவையான செய்முறை வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு மாநிலத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு கைத்தறி தொழில் வளர்ச்சித் திட்டங்கள் காரணமாக தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் பாமர மக்களுடைய துணித் தேவையை நிறைவு செய்வதுடன் கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும்.



கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறையின்கீழ் இயங்கும் சார்பு நிறுவனங்களின் வளர்ச்சி.

| | 1977–78. | 1978–79. | 1979–80. | 1980–81 (எதிர்பார்க்கப்படுதல்). |
|---|---|---|---|---|
| (தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்— | | | | |
| நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை .. .. | 946 | 993 | 1052 | 1135 |
| தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. | 2.07 | 2.19 | 2.40 | 2.62 |
| உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) .. | 42,14.55 | 44,85.50 | 52,00.00 | 56,00.00 |
| விற்பனை ( ,, ) | 44,28.12 | 53,42.51 | 60,00.00 | 65,00.00 |
| பயன்படுத்தப்பட்டுள்ள நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்). | 14,86.71 | 16,96.71 | 16,95.00 | 22,58.00 |
| கோ-ஆப்டெக்ஸ்— | | | | |
| கொள்முதல் (ரூபாய் இலட்சத்தில்). | 18,31.00 | 27,51.00 | 29,00.00 | 30,00.00 |
| விற்பனை ( ,, ). | 23,01.00 | 34,80.00 | 35,00.00 | 38,00.00 |
| பயன்படுத்தப்பட்டுள்ள நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்) | 750.00 | 900.00 | 12,00.00 | 13,00.00. |
| கூட்டுறவு நூற்பாலைகள்— | | | | |
| கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.37 | 2.62 | 3.14 | 3.26 |

| | | | | |
|---|---|---|---|---|
| போட்ட முதலீடு (ரூபாய் இலட்சத்தில்). | 17,14.95 | 20,23.80 | 20,63.27 | 22,50.00 |
| உற்பத்தி ( ,, ). | 27,78.23 | 33,37.17 | 33,70.69 | 35,00.00 |
| விற்பனை ( ,, ). | 27,28.14 | 34,23.56 | 32,84.26 | 36,00.00 |
| பயன்படுத்தப்பட்டுள்ள நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்). | 775.00 | 925.00 | 935.00 | 10,00.00 |
| கூட்டுறவு நூற்பாலைகளின் ஆதாயம் .. .. .. | —114.00 | +200.91 | +479.05 | — |
| வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை .. | 8,160 | 8,794 | 9,646 | 9,800 |
| **தமிழ்நாடு கூட்டுறவு துணி செய்முறைப்படுத்தல் ஆலை, ஈரோடு—** | | | | |
| துணிகளை வெளுப்பாக்குதலும், சாயமிடுதலும் (இலட்சம் மீட்டரில்). | 17.15 | 28.27 | 35.00 | 40.00 |
| **தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி நிறுவனம்—** | | | | |
| வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை .. .. | 1,429 | 1,742 | 2,253 | 2,500 |
| வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்). .. .. | 93.37 | 119.30 | 205.97 | 250.00 |
| **தமிழ்நாடு ஜரிகை நிறுவனம், காஞ்சிபுரம்—** | | | | |
| சரிகை உற்பத்தி (மார்க்குகளில்). | 1411 | 1640 | 2540 | 5000 |
| விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). | 6.58 | 9.79 | 20.39 | 41.00 |

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## FIFTY-EIGHTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*21st to 25th July* 1980.

VOLUME CLXIX (Nos. 1-5)

## A.


PAGES.

ADJOURNMENT MOTION *Re*.

Annamalai University, closure of—due to boycott of examinations by University teachers ... 10–19

Theagarajar College of Engineering, Madurai, strike in—and indefinite closure of ... ... ... 587–590

ADMINISTRATION OF JAILS IN TAMIL NADU, 1980–81—

Demand No. 14, laid on the table ... ... 283

ADMINISTRATION OF JUSTICE—

Policy Note on—, laid on the table ... ... 283

AGRO ENGINEERING AND SERVICE CO-OPERATIVE FEDERATION LIMITED—

Review of—for 1979–80, laid on the table ... 94

AGRO INDUSTRIES CORPORATION LIMITED—

Review of—for 1979–80, laid on the table ... 94

PAGES.

A—*cont.*

ANANDAM, THIRU V. V. V.—
Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... ... 606–610, 611

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—
Adjournment motion *re*—
Annamalai University, closure of—due to boycott of examinations by University teachers ... 15–19
Theagarajar College of Engineering, Madurai, strike in—and indefinite closure of ... ... 588–589
Bifurcated Course Instructors of T. A. Ramalingam High School, Coimbatore, statement *re* removal of 591–592
Gazetted Headmasters posted as Headmasters of Government Higher Secondary Schools in July 1978, statement *re* revision of ... ... ... 289–290
Policy Note on Education, discussion on ... 23, 33, 40, 48–49, 66, 69–70, 263, 264, 270–281

ARUNACHALAM, THIRU K.—
Policy Note on Education, discussion on ... 239–244

B

BEEDI AND CIGAR WORKERS (CONDITIONS OF EMPLOYMENT) RULES, 1968—
Amendment to—, notification laid on the table ... 660

BILLS—
Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980—
Considered and passed .. ... ... ... 298–334
Message from the Assembly *re* ... ... ... [illegible]



PAGES

B—*cont.*

Bills—*cont.*
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1980—
Considered and passed ... ... ... ... 292–298
Message from the Assembly *re* ... ... ... 288
Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980—
Considered and passed ... ... ... ... 335–355
Message from the Assembly *re* ... ... ... 288

BILLS, AS PASSED BY THE ASSEMBLY, LAID ON THE TABLE—
Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 ... ... ... ... ... [illegible]
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1980 ... .. ... ... ... [illegible]
Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... ... 95

BRAIN FEVER (ENCEPHALITIS)—
Death of some children in South Arcot district due to—, Minister's attention called to ... ... 20–22

BUDGET ESTIMATES OF REVENUE—
Detailed—, 1980–81, laid on the table ... ... [illegible]4

BUSINESS ADVISORY COMMITTEE—
*See* Committees

C

CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH, SANITATION AND WATER SUPPLY—
Supplement to Demand No. 55 (1980–81), laid on the table ... ... ... ... ... ... 94

PAGES.

C—*cont.*


CHAIRMAN, MR.—

Adjournment motion *re*—

Annamalai University, closure of—due to boycott of Examinations by University teachers ... 10, 11, 12, 15, 19

Theagarajar College of Engineering, Madurai, strike in—and indefinite closure of ... ... 587, 588, 590

Announcement *re*—

Business Advisory Committee's decision ... ... 19–20

Message from the Assembly *re*—

Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 ... ... ... ... ... 288

Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1980 .. ... ... 288

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... 288

Questions, expediting answers to ... ... 703

Questions, receipt of answers from Departments 9–10

Bills—

Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 ... ... ... ... ... 323–333

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 .. ... ... ... 342, 344, 347, 349, 351, 352

Home Committee, election of Members to ... 594




PAGES.

C—*cont.*


CHAIRMAN, MR.—*cont.*

Policy Note on Education, discussion on ... 22, 23, 31, 37, 45, 48, 55, 58, 59, 66, 77, 79, 81, 86, 195, 201, 207, 209, 216, 217, 218, 225, 226, 227, 252, 254, 259, 260, 264

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... .. ... 595, 600, 601, 603, 604, 610, 620, 656, 660

Policy Note on Labour and Handlooms, discussion on ... ... ... ... ... ... 708, 710, 711, 713, 714, 715, 766

Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on ... ... ... ... ... 357, 359, 381, 382, 383, 384, 409, 417, 427, 428, 436

Privileges Committee, election of Members to ... 592–593

CINCHONA DEPARTMENT—

Commercial Budget on—, 1980-81, laid on the table 93

Performance Budget, 1980–81, laid on the table ... 93

Policy Note on—1980–81, laid on the table ... 93

COLLEGES—

Adjournment motion *re* Theagarajar College of Engineering, Madurai, strike in—and indefinite closure of ... ... ... ... ... 587–590

PAGES

C—*cont.*

COMMITTEES—

Business Advisory Committee, decision of ... 19–20

House Committee, election of Members to ... 593–594

Privileges Committee, election of Members to ... 592–593

CO-OPERATION—

Apex Co operative Institutions booklets on working of—, laid on the table ... ... ... ... 93

Policy Note on—, 1980–81, laid on the table ... 93

COPY WRITERS LICENCE RULES, 1971—

Amendment to—, notification laid on the table ... 95

D

DAIRY DEVELOPMENT DEPARTMENT AND MILK SUPPLY SCHEMES –

Policy Note on—, laid on the table ... ... 283

DAM—

Question *re* Mullai Periyar—, week state of ... 1–9

DAMODARAN, THIRU A. R.—

Bills—

Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 ... ... ... ... 301–304

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... ... 336–340, 344

Policy Note on Education, discussion on ... 41, 194, 195, 209, 213–216, 263, 264, 265

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 601, 617–623





PAGES

D—*cont*

DAMODARAN, THIRU A. R.—*cont.*

Policy Note on Labour and Handlooms, discussion on ... ... ... ... ... 727

Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on ... ... ... ... 389–395

DEATH—

Death of 5 members of a family in Veerappanpalayam near Erode by setting fire to their dwelling house after locking it from outside, Minister's attention called to ... ... ... ... 590–591

DEBT CHARGES AND PUBLIC DEBT REPAYMENT—

Detailed Demands for Grants, 1980–81, laid on the table ... .. ... ... ... 94

DEBT RELIEF RULES, 1980—

Making of—, notification laid on the table ... 443

DEMANDS FOR GRANTS—

Certain Detailed—1980–81, laid on the table ... 94

DOSS, THIRU A. J.—

Bill—Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... 346–347

E

EDUCATION—

Collegiate—, Performance Budget, 1980–81, laid on the table ... ... ... ... ... 93

Medical—, Performance Budget, 1980–81, laid on the table ... ... ... ... ... 282

Policy Note on—, discussion on ... ... 22–91, 188–281

Policy Note on—, laid on the table ... ... 93

School—, Performance Budget, 1980–81, laid on the table ... ... ... ... ... ... 93

E—*cont.* PAGES

EDUCATION—*cont.*

Technical—, Performance Budget, 1980-81, laid on the table ... ... ... ... ... 93

ELECTRICITY BOARD, TAMIL NADU—

Annual Administration Report of—for 1977-78, laid on the table ... ... ... ... ... 773

Annual Financial Statement for 1980-81 and Supplementary Financial Statement for 1979-80, laid on the table .. ... ... ... 773

ELECTROCUTION—

Question *re* death of children due to—while descending into a well in Adaikkapattu village, Tiruttani taluk in April 1979 ... ... ... 5-7

EMPLOYMENT AND TRAINING SUBORDINATE SERVICE—

Inclusion of post of Trade Instructor in—within the Commission's purview, notification laid on the table ... ... ... ... ... ... 92

ERADHA, THIRU S. R.—

Bills—

Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 ... ... ... ... 298-301, 305, 306

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... 348-349, 352

Policy Note on Education, discussion on ... 225

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... 627

Policy Note on Labour and Handlooms, discussion on ... ... ... ... ... 739-741, 742-746

Policy Notes on 'Medical' and 'Public Health' discussion on ... ... ... ... ... 382-389,



PAGES.

F

FLOODS—

Floods in Cauvery River due to overflow in Mettur Dam, Minister's attention called to damage caused to riverside huts due to ... ... ... 185-187

FOOD SITUATION IN TAMIL NADU—

Policy Note on—, laid on the table ... ... 413

FOREST DEPARTMENT—

Policy Note on—, laid on the table ... ... 283

FORESTS—

Performance Budget, 1980-81, laid on the table ... 283

G

GRANTS—

Detailed Demands for—for 1980-81 (Demand Nos. 1, 5, 41, 46, 25, 45, 54, 2 47, 4, 12 and 17), laid on the table ... ... ... ... 93

GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES (DEMAND NO. 4)—

Laid on the table ... ... ... ... 92

GENERAL SALES TAX RULES, 1959—

Amendment to—, notification laid on the table ... 282

H

HANDLOOMS—

Policy Note on—, discussion on ... ... ... 708-772

HANDLOOMS AND TEXTILES—

Performance Budget, 1980-81, laid on the table 661

Policy and Programmes on—, 1980-81, laid on the table ... ... ... ... ... ... 661

H—*cont.* PAGES

HANDE, THE HON. DR. H. V.—

"Brain Fever" (Encephalitis), statement *re* death of some children in South Arcot District due to 21

Casual labourers in Government Royapettah Hospital, statement *re* non-payment of salaries to—and non-regularisation of services with five years' service ... ... ... ... 706, 707

Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on ... ... ... ... ... 355, 373, 374, 417, 428–443

HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS ACT, 1959—

Administration of—(Demand No. 12), laid on the table ... .. ... ... ... 93

HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (AMENDMENT AND SPECIAL PROVISIONS) AMENDMENT BILL, 1980—

*See* Bills

HOSPITALS (AND DISPENSARIES)—

Casual labourers in Government Hospital, Royapettah, Minister's attention called to non-payment of salaries to—and non-regularisation of services of—with five years' service ... ... ... ... 706–707

HOME (PROHIBITION AND EXCISE) DEPARTMENT—

Review of activities of—, 1979–80, laid on the table 93

HOUSE COMMITTEE—

*See* Committees

**HOUSING—**

**Policy Note on—, 1980–81, laid on the table ...** [illegible]



PAGES

I

INAM ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) ACT, 1963—

Amendment to—, notification laid on the table. 91

INAM ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) ACT, 1963—

Constitution of Tribunals with jurisdiction over certain areas, notification laid on the table ... 281

INDIAN MEDICINE—

Performance Budget, 1980–81, laid on the table. 283

Policy Note on—, laid on the table .. ... 282

INDUSTRIES—

Industrial Policy and Programme, 1980–81, laid on the table ... ... ... ... 773

Performance Budget on—, 1980–81, laid on the table ... ... ... ... ... ... 773

INFORMATION *RE*—

Buses for Members of Legislature from Legislators Hostel, plying of separate ... ... ... 703–706

INFORMATION, TOURISM AND FILM TECHNOLOGY—

Policy Note on—1980–81 (Demand No. 47), laid on the table ... ... ... ... ... 93

J

JEPPIYAR, THIRU—

Bill—Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... 344–346

Policy Note on Education, discussion on ... 48

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... ... 632

JUNIOR ENGINEERS—

Question *re* non-regularisation of services of Diploma-holders working as—in Public Works Department ... ... ... ... 287

PAGES

K

KANNAPPAN, THIRU KADUVETTI—

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 613–617

Policy Note on Labour and Handlooms, discussion on ... ... ... ... ... ... 708–710, 711–712

KHADI AND VILLAGE INDUSTRIES BOARD—

Policy and Programmes for 1980–81, laid on the table ... ... ... ... ... 94

KOLANDAIVELU, THE HON. THIRU P.—

Bill—Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... 335, 352–354

" Parthenium " weed, statement *re* health-hazard in many places in Madurai district due to spread of ... ... ... ... ... 291, 292

L

PAGES

LABOUR—

Policy Note on—, discussion on ... ... ... 708–772

Policy Note on—, laid on the table ... ... 661

LAKSHMIKANDHAN, THIRU C. R.—

Adjournment motion *re*—

Annamalai University, closure of—, due to boycott of Examinations by University teachers. 13–14

Theagarajar College of Engineering, Madurai, strike in—and indefinite closure of ... 587–590

Gazetted Headmasters posted as Headmasters of Government Higher Secondary Schools in July 1978 calling Minister's attention to reversion of. 289, 290

Information *re* Buses for Members of Legislature from Legislators' Hostel, plying of separate ... 703–704



PAGES

Policy Note on Education, discussion on ... 46–48, 49–50, 51–58, 59–60

Policy Note on Labour and Handlooms discussion on ... ... ... ... ... 735–739

LAND REFORMS (FIXATION OF CEILING ON LAND) AMENDMENT BILL, 1980—

*See* Bills

LAND REFORMS (SURPLUS LAND OF SUGAR FACTORIES) RULES, 1980—

Making of—, notification laid on the table ... 661

LAND REVENUE—

Policy Note on—, 1980–81, laid on the table ... 93

LEPROSY BEGGARS REHABILITATION PROGRAMME—

Policy Note on—, 1980–81, laid on the table ... 94

LEVY OF RYOTWARI ASSESSMENT ON FREEHOLD LANDS RULES, 1980—

Making of—, notification laid on the table ... 282

LOANS—

Question *re* Crop—to Government servants for purchase of foodgrains during harvest season, sanction of ... ... ... ... ... 585–587

LEELAVATHI, SELVI A.—

Adjournment motion *re* Theagarajar College of Engineering, strike in—and indefinite closure of 587–590

Bill—Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... 335–336

Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on .. ... ... ... 364–366

PAGES

M

MADRAS CITY MUNICIPAL CORPORATION (AMENDMENT) BILL, 1980—
See Bills

MADRAS UNIVERSITY AND MADURAI-KAMARAJ UNIVERSITY (SECOND AMENDMENT) ACT, 1979—
Date of coming into force of—, notification laid on the table ... ... ... ... ... ... 28[illegible]

MANDAKINI KRISHNAMURTHI, THIRUMATHI—
Bill—Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... 340–34[illegible]
Policy Note on Education, discussion on ... 198–20[illegible]
Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 611–61[illegible]
Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on ... ... ... ... 359–361, 41[illegible]

MANICKAM, THIRU P.—
Adjournment motion re Annamalai University, closure of—due to boycott of examinations by University teachers ... ... ... ... 12–1[illegible]
Policy Note on Education, discussion on ... 82–9[illegible]
Policy Note on Labour and Handlooms, discussion on ... 747–751, 75[illegible]

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—
Bifurcated Course Instructors of T. A. Ramalingam High School, Coimbatore, calling attention to removal of ... ... ... ... ... 591–59[illegible]
"Brain Fever" (Encephalitis), calling attention to death of some children in South Arcot district due to ... ... ... ... ... 20–2[illegible]
Casual labourers in Government Hospital, Royapettah, calling attention to non-payment of salaries to—and non-regularisation of services of—with five years' service ... ... ... 706–70[illegible]



PAGES

M—*cont.*

[M]ATTER OF URGENT PUBLIC IMPORTANCE—*cont.*
Death of 5 members of a family in Veerappanpalayam near Erode by setting fire to their dwelling house after locking it from outside, calling attention to ... ... ... 590–591
Floods in Cauvery River due to overflow in Mettur Dam, calling Minister's attention to damage caused to riverside huts due to ... ... 185–187
Gazetted Headmasters posted as Headmasters of Government Higher Secondary Schools in July 1978, calling attention to reversion of ... 289–290
Selection Grade Teachers in Harijan Welfare Department Schools, calling attention to separation of Teacher couples due to compulsory service as Warden for 3 years ... ... ... ... 187–188
"Parthenium" weed, calling attention to health hazard in many places in Madurai district due to spread of ... ... ... ... ... 291–292

[M]EDICAL—
Policy Note on—, laid on the table ... ... 282
Policy Notes on—and 'Public Health', discussion on ... ... ... ... ... 355–443

[M]EDICAL SERVICES AND FAMILY WELFARE—
Performance Budget 1980–81, laid on the table 282

[M]EENAKSHISUNDARAM, THIRU K.—
Adjournment motion re Annamalai University, closure of due to boycott of examinations by University teachers ... ... ... 11
Casual labourers in Government Royapettah Hospital, calling Minister's attention to non-payment of salaries to—and non-regularisation of services of—with five years' service ... 706, 707
Policy Note on Education, discussion on ... 65–69, 70–81, 277

M—*cont.*

| | PAGES |
|---|---|
| MEENAKSHISUNDARAM, THIRU K.—*cont.* | |
| Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on ... ... ... ... | 355–359 |
| Selection Grade Teachers in Harijan Welfare Department Schools, calling Ministers attention to separation of teacher couples due to compulsory service as Warden for three years ... ... | 187 |
| MEMBERS OF LEGISLATURE— | |
| Returns of Assets of certain Members of Council, laid on the table ... ... ... ... | 95 |
| MIDDAY MEALS SCHEME— | |
| Question *re* extension of—to High Schools ... | 695–700 |
| MOTOR VEHICLES ACTS— | |
| Policy Notes on—Acts, laid on the table ... | 773 |
| MOTOR VEHICLES RULES, 1940— | |
| Amendment to—, notification laid on the table ... | 91 |
| MOTOR VEHICLES TAXATION RULES, 1974— | |
| Amendment to—, notification laid on the table | 92 |
| MUNICIPAL GENERAL SERVICE RULES, 1970— | |
| Amendment to—, notification laid on the table | 92 |
| MUNICIPAL MEDICAL SERVICE RULES, 1970— | |
| Amendment to—, notification laid on the table ... | 91 |
| MUTHIAH CHETTIAR, DR. M. A.— | |
| Policy Note on Education, discussion on ... | 60–61 |
| MUTHUSWAMY, THIRU S.— | |
| Adjournment motion *re* Annamalai University, closure of—due to boycott of Examinations by University teachers ... ... ... ... | 10–11 |



| | PAGES |
|---|---|
| MUTHUSWAMY, THIRU S.—*cont.* | |
| Policy Note on Education, discussion on ... | 23–30, 31, 32–36, 37–38 |
| Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on ... ... ... ... ... | 406–410 |
| Walk out by—protesting against non-admission of adjournment motion ... ... ... ... | 705–706 |

N

| | |
|---|---|
| NALLASIVAN, THIRU A.— | |
| Adjournment motion *re* Annamalai University, closure of—due to boycott of examinations by University teachers ... ... ... ... | 11, 12 |
| Bills— | |
| Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1980 ... ... ... | 293–294 |
| Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 .. ... ... ... | 319 |
| Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... | 341–343 |
| Death of five members of a family in Veerappanpalayam near Erode by setting fire to their dwelling house after locking it from outside, calling Minister's attention to ... ... ... | 590–591 |
| Floods in Cauvery River due to overflow in Mettur Dam, calling Minister's attention to damage caused to riverside huts due to ... ... ... | 186 |
| "Parthenium" weed, calling Minister's attention to health hazard in many places in Madurai district due to spread of ... ... ... ... | 291 |
| Policy Note on Education, discussion on ... | 217–218, 224–228 |

N—*cont.* PAGES

NALLASIVAN, THIRU A.—*cont.*

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... 597–606, 619–620, 633

Policy Note on Labour and Handlooms, discussion on ... ... ... ... ... ... 722–735, 742

Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on ... ... ... ... ... 367–375, 391

NEDUNCHEZHIYAN, THE HON. DR. V. R.—
Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 594, 599, 640–660

NEELA NARAYANAN, THIRU
Bill—Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... 347–352
Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... 623–627, 628–631

Selection Grade Teachers in Harijan Welfare Department Schools, calling Minister's attention to separation of teacher couples due to compulsory service as Warden for three years ... 188

## P

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—
Administration of Jails in Tamil Nadu, 1980-81. Demand No. 14 ... ... ... ... 283

Agro-Engineering and Service Co-operative Federation Limited, Review of—for 1979-80 ... ... 94

Agro-Industries Corporation Limited, Review of—for 1970–80 ... ... ... ... ... [illegible]



P—*cont.* PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE —*cont.*

Beedi and Cigar Workers (Conditions of Employment) Rules, 1968, amendment to—(G.O. Ms. No. 1886, Labour and Employment, dated [illegible] November 1979) ... ... ... ... 669

Bills, as passed by the Assembly—
Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 ... ... ... 95
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1980 ... ... ... 95
Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... ... 95

Capital Outlay on Public Health, Sanitation and Water Supply—Supplement to Demand No. 55 (1980–81) ... ... ... ... ... 94

Cinchona Department—Commercial Budget on—, 1980–81 ... ... ... ... ... 93

Cinchona Department, Performance Budget, 1980–81 93

Co-operation Booklets on working of Apex Co-operative Institutions ... ... ... ... 93

Copy Writers Licence Rules, 1971, amendment to (G.O. Ms. No. 1841, Commercial Taxes and Religious Endowments, dated 18th December 1979). 95

Debt Relief Rules, 1980, making of—(G.O. Ms. No. 1067, Revenue, dated 21st April 1980) .. 443

Detailed Budget Estimates of Revenue, 1980–81 ... 94

Detailed Demands for Grants (Debt Charges and Public Debt Repayment), 1980–81 ... ... 94

Detailed Demands for Grants, 1980–81 (Certain Demands) ... ... ... ... ... 94

Detailed Demands for Grants, 1980–81 (Demand Nos. 1, 5, 41, 46, 25, 45, 54, 2, 47, 4, 12 and 17). 93

P—*cont.* PAGES

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE —*cont.*


Details of works for Public Works Buildings and Capital Outlay on Public Works Buildings, 1980–81 ... ... ... ... ... 94

Details of Works for Demands, Roads and Bridges and Capital Outlay on Roads and Bridges, 1980–81. 95

Education—

School Education, Collegiate Education and Technical Education, Performance Budget, 1980–81 ... ... ... ... ... 93

Electricity Board, Tamil Nadu—

Annual Administration Report of—for 1977-78 ... 773

Annual Financial Statement for 1980–81 and Supplementary Financial Statement for 1979-80 773

Employment and Training Subordinate Service, inclusion of post of Trade Instructor in—within the Commission's purview [G.O. Ms. No. 1334, Personnel and Administrative Reforms (Personnel-M), dated 12th December 1979] .. ... 92

Food situation in Tamil Nadu, Policy Note on .. 443

Forests—Performance Budget, 1980–81 ... ... 283

General Sales Tax and Other Taxes and Duties (Demand No. 4) ... ... ... ... ... 92

Handlooms and Textiles—Performance Budget, 1980–81 ... ... ... ... ... 661

Policy and Programmes on—, 1980–81 ... ... 661

Hindu Religious and Charitable Endowments Act, 1959 Administration of (Demand No. 12) ... 93

Home (Prohibition and Excise) Department, Review of activities of, 1979–80 ... ... ... ... 93

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963—

Amendment to—(G.O. Ms. No. 226, Commercial Taxes and Religious Endowments, dated 13th March 1980 ... ... ... ... ... 91




PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE —*cont.*


Constitution of Tribunals with jurisdiction over certain areas (Letter No. 30903/VIII-2/79-15, Commercial Taxes and Religious Endowments, dated 29th April 1980) .. ... ... 281

Indian Medicine, Performance Budget, 1980–81 ... 283

Industries, Performance Budget on 1980–81—

Industrial Policy and Programme, 1980–81 ... 773

Khadi and Village Industries Board, Policy and Programmes, for 1980–81 ... ... ... 94

Labour, Policy Note on ... ... ... ... 661

Land Reforms (Surplus Land of Sugar Factories) Rules, 1980, making of—(G.O. Ms. No. 81, Revenue, dated 21st January 1980) ... ... 661

Levy of Ryotwari Assessment on Freehold Lands Rules, 1980, making of—(G.O. Ms. No. 341, Commercial Taxes and Religious Endowments, dated 15th April 1980) .. ... ... ... 282

Madras University and Madurai-Kamaraj University (Second Amendment) Act, 1979, date of coming into force of—(G.O. Ms. No. 545, Education, dated 22nd March 1980) ... ... ... ... 282

Medical Education, Performance Budget, 1980–81 282

Medical Services and Family Welfare, Performance Budget, 1980–81 ... ... ... ... 282

Motor Vehicles Rules, 1940, amendment to—(G.O. Ms. No. 1269, Home, dated 23rd April 1980) ... 91

Motor Vehicles Taxation Rules, 1974, amendment to—[G.O. Ms. No. 1159, Home (Transport I), dated 11th April 1980] ... ... ... ... 92

Municipal General Service Rules, 1970, amendments to—(G.O. Ms. No. 1860, Rural Development and Local Administration, dated 24th November 1979) 92

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE —*cont.*

Municipal Medical Service Rules, 1970, amendments to—(G.O. Ms. No. 149, Rural Development and Local Administration, dated 28th January 1980) ... ... ... ... ... ... 91

Policy Note on—

Administration of Justice, 1980-81 ... ... 283
Cinchona Department, 1980-81 ... ... 93
Co-operation, 1980-81 ... ... ... 93
Dairy Development Department and Milk Supply Schemes ... ... ... ... 283
Education ... ... ... ... ... 93
Forest Department ... ... ... 283
Housing, 1980-81 ... ... ... ... 93
Indian Medicine ... ... ... ... 282
Information, Tourism and Film Technology, 1980-81 (Demand No. 47) ... 93
Land Revenue, 1980-81 ... ... ... 93
Leprosy Beggars Rehabilitation Programme, 1980-81 ... ... ... ... ... ... 94
Medical ... ... ... ... ... ... 282
Motor Vehicles Acts, 1980-81 ... ... ... 773
Public Health, 1980-81 ... ... ... 282
Registration Department ... ... ... 282
Road Transport Services and Shipping, 1980-81 ... 773

Primary Health Centres, Public Health and Preventive Medicine, Performance Budget, 1980-81 ... 283

Returns of Assets of Certain Members of Council ... 95

Revenue Department, Performance Budget, 1980-81 ... 90





PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE— —*cont.*

Road Development Programme in Tamil Nadu, 1979-80 and Programmes for 1980-81, Review of ... 443

Road Transport, Review of 1979-80, laid on the table ... ... ... ... ... ... 773

Sales Tax, reduction of rate of—payable by any dealer on sale of chipboards manufactured by Thiruvalargal Madras Chipboards Limited, Rajapalayam (G.O. Ps. No. 189, Commercial Taxes and Religious Endowments, dated 3rd March 1980) ... 92

Sales Tax Rules, 1959, amendments to—notification laid on the table ... ... ... ... 282

Sewerage and Water Supply, Supplement to Demand No. 19 (1980-81) ... ... ... ... ... 94

Slum Clearance Board Last Grade Service Rules, 1972, amendments to—(G.O. Ms. No. 2123, Housing and Urban Development, dated 26th November 1979) ... ... ... ... 282

Stamps Administration (Demand No. 5) ... ... 92

State Farms Corporation Limited, Review of—for 1979-80 ... ... ... ... ... ... 94

Statement of Posts and Scales of Pay, 1980-81 94

Stationery and Printing Department, Policy Note on working of ... ... ... ... ... 661

Tamil Nadu Dairy Development Corporation Limited, Review of activities of—during 1979-80 ... 283

Transport and Shipping Corporations, Note on Review of performance of—, 1980-81 ... ... 773

Welfare Fund Rules, 1973, amendment to—(G.O. Ms. No. 143, Labour and Employment, dated 25th January 1980) ... ... ... ... ... 661

"PARTHENIUM" WEED—

Health hazard in many places in Madurai district due to spread of—, Minister's attention called to 201-202

PAGES

P—*cont.*

POLICY NOTE ON—
Administration of Justice, laid on the table ... 283
Dairy Development Department and Milk Supply Schemes. laid on the table ... ... ... 283
Education, discussion on ... ... ... 22-91, 188-281
Forest Department, laid on the table ... ... 283
Indian Medicine, laid on the table ... ... 282
Labour, laid on the table ... ... ... 661
Labour and Handlooms, discussion on ... ... 708-772
Medical and Public Health, discussion on ... 335-443
Medical, laid on the table ... ... ... 282
Public Health, laid on the table ... ... ... 282
Registration Department, laid on the table ... 283
Stationery and Printing Department, laid on the table ... ... ... ... ... ... 661

POSTS AND SCALES OF PAY—
Statement of—, 1980-81, laid on the table ... 94

PRAWNS—
Question *re* quantity of—procured annually from the sea adjoining Tamil Nadu and quantity exported from ports in Tamil Nadu ... ... ... 183-185

PRIMARY HEALTH CENTRES. PUBLIC HEALTH AND PREVENTIVE MEDICINE—
Performance Budget on—1980-81, laid on the table 283

PUBLIC HEALTH—
Policy Note on—, laid on the table ... ... 282

PUBLIC WORKS BUILDINGS—
Details of works for—and Capital Outlay on—1980-81, laid on the table ... ... ... 94



PAGES

P—*cont.*

PRIVILEGES COMMITTEE—
*See* Committees

PUBLIC HEALTH—
Policy Notes on 'Medical' and—, discussion on 355-443

PULAMAIPITHAN, PULAVAR—
Policy Note on Education, discussion on ... 201-207, 208-209, 213-267
Policy Note on Labour and Handlooms, discussion on ... ... ... ... ... ... 714

Q

QUESTIONS AND ANSWERS—
Announcement *re* expediting answers to questions 703
Lakshmikandhan, Thiru C. R.—
Question *re*—
Crop Loans to Government servants for purchase of food grains during harvest season, sanction of ... ... ... ... ... 585-587
Headmasters of Higher Secondary and High Schools under Harijan Welfare Department, delegation of more powers to— ... ... 701-702
Midday Meals Scheme, extension to High Schools 695-700
Leelavathi, Selvi A.—
Question *re*—
Crop Loans to Government servants for purchase of foodgrains during harvest season, sanction of
Midday Meals Scheme, extension to High Schools ... ... ... ... ... ... 585-587
Questions, receipt of answers to—from Departments 9-10

PAGES

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Sankaralingam, Thiru M.—

Question *re*—

Electrocution, death of children due to—while descending into a well in Adaikkapattu village, Tiruttani taluk, in April 1979 ... 5–7

Junior Engineers in Public Works Department, non-regularisation of services of Diploma holders ... ... ... ... ... 287

Mullai Periyar Dam, weak state of ... ... 7–9

Prawns, quantity produced annually from the sea adjoining Tamil Nadu and quantity exported from ports in Tamil Nadu ... 183–185

Swaminathan, Thiru G.—

Question *re* levy sugar for Pharmaceutical Industry, representation of Pharmaceutical Manufacturers Association of Tamil Nadu *re* allotment of ... 1–5

Venkatesan, Thiru E. S.—

Question *re* Sub-way in Arcot Road, Kodambakkam, Madras, construction of ... ... 288

R

RAGHAVANANDAM, THE HON. THIRU S.—

Policy Note on Labour, discussion on ... 708 764–769

RAJA MOHAMED, THE HON. THIRU K.—

Death of 5 members of a family in Veerappanpalayam near Erode by setting fire to their dwelling house after locking it from outside, statement *re* ... ... ... ... 590–591

House Committee, election of Members to ... 593

Information *re* Buses for Members of Legislature from Legislators' Hostel, plying of separate 701–705



PAGES

R—*cont.*

RAJA MOHAMED, THE HON. THIRU K.—*cont.*

Policy Note on Education, discussion on ... ... 216

Privileges Committee, election of Members to ... 592

RAJENDRAN, THE HON. THIRU S.—

Policy Note on Handlooms, discussion on ... 708, 770–772

RAMALINGAM, THIRU C.—

Policy Note on Labour and Handlooms, discussion on ... ... ... ... ... ... 716–722

RAMAMOORTHY, THIRU K.—

Adjournment motion *re* Annamalai University closure of—due to boycott of Examinations by University teachers ... ... ... ... 12

Bills—

Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 ... ... ... ... 305–310, 319, 320, 323, 329, 333

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... 345

Policy Note on Education, discussion on ... 228–239

Policy Note on Food situation in Tamil Nadu discussion on ... ... ... ... 615, 628, 631–640, 656, 659

Policy Note on Labour and Handlooms, discussion on ... ... ... ... ... ... 751–757

Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on ... ... ... ... 388, 398–406

REGISTRATION DEPARTMENT—

Policy Note on—, laid on the table ... ... 283

REVENUE DEPARTMENT—

Performance Budget on—, 1980–81 laid on the table 93

PAGE

RETURNS OF ASSETS—
See Members of Legislature

ROAD DEVELOPMENT PROGRAMME IN TAMIL NADU, 1979-80 AND PROGRAMMES FOR 1980-81—
Review of—, laid on the table ... ... ... 443

ROAD TRANSPORT SERVICES AND SHIPPING—
Policy Note on—, 1980-81, laid on the table ... 773

ROADS AND BRIDGES—
Details of Works on Demands—and Capital Outlay on—, 1980-81, laid on the table ... ... 95

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—
Adjournment motions re.—
Closure of Annamalai University due to boycott of examinations by Annamalai University Teachers—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Education ... ... ... ... 10-19
Strike in Thiagaraja College, Madurai, indefinite closure of the College and the need to reopen it – consent to raising of the matter withheld after the statement of the Minister for Education 587; 588, 590

Call Attention Notice—
Only those who have given the notice may seek the clarification after the statement of the Minister and not others ... ... 292

Debate—
Interruption—When a Member's speech is misrepresented by another Member, then interruption is permissible ... ... ... 55

Notices—
Notices not admitted in the Chamber of the Chairman should not be referred to in the House 357



PAGES

S

SALES TAX—
Reduction of rate of—payable by any dealer on sale of chipboards manufactured by Thiruvalargal Madras Chipboards Limited, Rajapalayam, notification laid on the table ... ... ... 92

SANKARALINGAM, THIRU M.—
Adjournment motion re Annamalai University, closure of—due to boycott of examinations by University teachers ... ... ... ... 14

Bills—
Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 ... ... ... ... 310-316, 321-322, 326-327, 330
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1980 ... ... 294-296

Floods in Cauvery river due to overflow in Mettur Dam, calling Minister's attention to damage caused to riverside huts due to ... 186

Policy Note on Education, discussion on ... 244-263, 267, 273

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 657

Policy Note on Labour and Handlooms, discussion on ... ... ... ... ... ... 757-758, 764

SEETHAPATHY, THIRU R. D.—
Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... 610, 628
Policy Note on Labour and Handlooms, discussion on ... ... ... ... ... 713-714

SEWERAGE AND WATER SUPPLY—
Supplement to Demand No. 19 (1980-81), laid on the table ... ... ... ... ... 94

PAGES

S—*cont.*

SLUM CLEARANCE BOARD LAST GRADE SERVICE RULES, 1972—

Amendments to—, notification laid on the table ... 283

SOMASUNDARAM, THE HON. THIRU S. D.—

Bill—Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1980 ... ... ... 292, 296-297

Floods in Cauvery river due to overflow in Mettur Dam, statement *re* damage caused to riverside huts due to ... ... ... ... ... 186, 187

STAMP ADMINISTRATION (DEMAND NO. 5)—

Laid on the table ... ... ... ... ... 92

STATE FARMS CORPORATION LIMITED—

Review of—for 1979-80, laid on the table ... 34

STATIONERY AND PRINTING DEPARTMENT—

Policy Note on the working of—, laid on the table 661

SUB-WAY(S)—

Question *re* construction of a—in Arcot Road, Kodambakkam, Madras ... ... ... 288

SUGAR—

Question *re* levy—for Pharmaceutical Industry, representation of Pharmaceutical Manufacturers Association of Tamil Nadu *re* allotment of ... 1-5

SWAMINATHAN, THIRU G.—

Policy Note on Education, discussion on ... 41, 188-193, 194, 213, 225, 232, 233, 242

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... 600



PAGES

S—*cont*

SWAMINATHAN, THIRU G.—*cont.*

Policy Note on Labour and Handlooms, discussion on ... ... ... ... ... ... ... 710

Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on ... ... ... ... 375-382, 416, 427

T

TAMIL NADU DAIRY DEVELOPMENT CORPORATION LIMITED—

Review of activities of—during 1979-80, laid on the table ... ... ... ... ... 283

TARA CHERIAN, THIRUMATHI—

Bill—Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 .. ... ... ... 333-334

Policy Note on Education, discussion on .. 38-46, 47, 50, 51, 207

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... 595-596, 614

Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on ... ... ... ... ... 395, 398, 440

TRANSPORT—

Information *re* buses for Members of Legislature from Legislators Hostel, plying of separate 703-706

Note on Review of Performance of—and Shipping Corporations, 1980-81, laid on the table 773

Review of Road—, 1979-80 ... ... ... 773

TEACHERS—

Adjournment motion *re* Annamalai University, closure of—due to boycott of examinations by University teachers ... ... ... ... 10-19

T—*cont.* **PAGES**


TEACHERS—*cont.*

Bifurcated Course Instructors of T. A. Ramalingam High School, Coimbatore, Minister's attention called to removal of ... ... ... ... 591–592

Gazetted Headmasters posted as Headmasters of Government Higher Secondary Schools in July 1978, Minister's attention called to reversion of 289–290

Question *re* Headmasters of Higher Secondary and High schools under Harijan Welfare Department, delegation of more powers to ... ... ... 701–702

Selection Grade—in Harijan Welfare Department Schools, Minister's attention called to separation of teacher couples due to compulsory service as Wardens for three years ... ... ... ... 187–188

THOMAS, THIRU P. R.—

Adjournment motion *re* Theagarajar College of Engineering, Madurai, strike in—and indefinite closure of ... ... ... ... ... 588

Bifurcated course Instructors of T. A. Ramalingam High School, Coimbatore, calling Minister's attention to removal of ... ... ... 591–592

Policy Note on Education, discussion on ... 217

**U**

UNIVERSITIES—

Adjournment motion *re* Annamalai University, closure of—due to boycott of examinations by University teachers ... ... ... 10–19

**VASANTHA PAI, THIRU G.—**

Policy Note on Education, discussion on ... 193–194, 195–197

Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on ... ... ... ... ... 361–364




D

V—*cont.* VA11,32 N80 PAGE

N81.16932


VEERAPPAN, THE HON. THIRU R. M.—

Bills—

Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1980 ... ... ... ... 349

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1980 ... ... ... ... 298–317, 333–334


12197


VEERASWAMI, THIRU ARCOT N.—

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 655–656

Policy Notes on 'Medical' and 'Public Health', discussion on ... ... ... ... 410–427

VENKATESAN, THIRU E. S.—

"Brain Fever" (Encephalitis), calling Minister's attention to death of some children in South Arcot district, due to ... ... ... ... 20

VICE-CHAIRMAN (PULAVAR PULAMAIPITHAN)—

Policy Note on Education, discussion on ... ... 240

VICE-CHAIRMAN (TARA CHERIAN, THIRUMATHI)—

Policy Note on Food situation in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 628

VIJAYASARATHI, THE HON. THIRU M.—

Selection Grade Teachers in Harijan Welfare Department Schools, statement *re* separation of teacher couples due to compulsory service as Wardens for three years ... ... ... 187, 188

**W**

WALK-OUT—

Protesting against non-admission of adjournment motion given notice of by Muthusami, Thiru S. 705–706

WELFARE FUND RULES, 1973—

**Amendment** to—, notification laid on the table 561

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### *In Madras City.*

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Co., Madras-4.
3. Higginbothams (Private) Ltd., Madras-2.
4. P. Varadachary & Co., Madras-1.
5. C. Subbiah Chetty & Co., Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitaraman & Co., Madras-14.
8. Mohan Pathippagam & Book Depot., Madras-5.
9. C. Venkatesam Chetty & Co., No. 8-C, Pycrofts Road, Madras-5.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelvelly) Ltd., Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Ltd., Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### *In Moffussil of Tamil Nadu.*

1. A. Venkatasubban A[illegible]., Vellore (North Arcot District).
2. Bharathamatha Book [illegible]pot., Thanjavur (Thanjavur District).
3. P. V. Nathan & Co., [illegible]mbakonam (Thanjavur District).
4. Appar Book Stall, [illegible]javur.
5. Palaniappa Bros., Tiru[illegible]rappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction
8. B. Aruldass, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Book Sellers, No. 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. V. B. Ganesan, Villupuram (South Arcot District).
11. Mercury Book Co., No. 20, Karuppa Gounder Street, Coimbatore-1
12. S. M. Jeganathan, Book House, P. S. No. 327, No. 35, Nandhi Koil Street, Tiruchirappalli-2.
13. Ganesh Stores, South Car Street, Sivakasi.
14. Mary Martin, Book Sellers, Kotagiri (The Nilgiris).
15. A. K. Chandriah Chettiar and Sons, Salem.
16. Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem
17. Meenakshi Pathippagam, Pudukkottai.
18. K. V. Narayana Iyer Sons. Dindigul (Madurai District).
19. Jayakumari Stores, Nagarcoil (Kanyakumari District).
20. Babu Stores, Book Sellers, Villupuram (South Arcot District).
21. Dinamani Stores, No. 8/1, Old Post Office Road, Coimbatore-18.
22. Bharathi Puthaganilayam, Publishers and Book Sellers, No. 1-B, Town Hall Road, Madurai-1.
23. Kumaran Book Depot, Book Sellers, Erode-1.
24. Vela Book Company, No. 4, Annaji Rao Street Erode-1.
25. Radhamani Stores, No. 6-A, Raja Street, Coimbatore-1.
26. Ajantha Book Centre, Salem.
27. Sri Vidya, No. 63, Tennore High Road, Tiruchirappalli-17.

### *In other States.*

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. Firma. K. L. Mukhopadhyay, Calcutta-12.
4. The Book Syndicate, Hyderabad-1.
5. Labour Law Publications, Hyderabad.
6. Puthaghalayam, Pondicherry.
7. Prabhu Book Service, Gurgaon, Haryana.
8. K. P. Bagchi & Company, No. 285, B. B. Ganguli Street, Calcutta-12

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.